JL
V2 1194:19(3[illegible]),m
N39
N41
69400

## புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசரம்] 1941-ம் வருஷம் மார்ச்சு மீ 29உ [ந. 37.

பிரலங்கம் **XXXVII.**

## பிரிடனுக்காக இரண்டாவது யுத்தம்.

### முதல் பாகம்.

இந்த யுத்தத்தின் துவக்கத்தில் ஹிட்லர் தன்னுடைய விமானப்படையும், யந்திரபலம் கொண்ட சேனையும் ஒத்துழைக்கும்படி உபயோகித்ததால், ஹிட்லருக்கு ஜயம் கிடைத்தது. பிரிடனின் பேரில் ஹிட்லர் செய்த முதல் போரில் ஹிட்லர் தோல்வியடைந்ததற்குக் காரணம் ஜெர்மன் பீரங்கிமோட்டார்கள் சமுத்திரத்தில் மிதக்கமுடியாததும், ஜெர்மன் மூழ்கி விமானங்களுடன் மோட்டார் பீரங்கிகள் ஒத்துழைக்க முடியாததுமே. ஆங்கில வானவீரர்கள் மூவாயிரம் ஜெர்மன் விமானங்களை வீழ்த்தினார்கள். பாக்கி விமானங்கள் விரைந்து தங்களூரை நோக்கி ஓடிவிட்டன. வானத்தில் ஆங்கில விமானங்களில்லாது ஒழித்து விடுகிறோம் என்று ஜெர்மன் சொல்லிக் கொண்ட பெருமையும் வீண் பெருமையாகி விட்டது. இப்பால் வரும் ஜெர்மன் விமானங்கள் முன்போல் நூற்றுக்கணக்காக கர்வங்கொண்டு வருகிறதில்லை. ஒன்றாகவும், இரண்டாகவும் மேகங்களுக்குள்ளிருந்து பாய்வதும் சரியாக குறிவைத்து வெடிகளை எறியாமல் அவசரமாகத் தள்ளிவிட்டு இங்கிலீஷ் கால்வாயைத் தாண்டி வீட்டுக்கு விரைந்து செல்வதுமாகயிருக்கிறார்கள்.

பிரிடனை எதிர்த்து இரண்டாவது போர் இப்பொழுதுதான் துவங்கினதாகத் தோன்றுகிறது. ஆயினும் பிரிடனுக்கு ஒரு எதிரி குறைந்து விட்டான். இதாலியின் ஆபிரிக்கா சாம்ராஜ்ஜியம் நாசமாகிவிட்டதென்றே சொல்லலாம். இதாலியில் சர்வாதிகாரமும் குன்றிக்கொண்டிருக்கிறது. இதாலியக் கப்பற்படையும், கப்பல்களின் எண்ணிக்கையாலும், வேகத்தாலும் மதிக்கப்பட்டு வந்ததில் அதன் பாதிபலம் குன்றிவிட்டது. மத்தியதரைக்கடல் ஒருபொழுதும் இதாலிய ஏரியாக

இருந்ததில்லை. ஆங்கிலர் அக்கடலின் இரண்டு வாயில்களையும் காத்து அக்கடலை அட்லாண்டிக் சமுத்திரத்திற்கும் பஸிபிக் சமுத்திரத்திற்கும் பொதுச்சாலையாக நிர்வகித்து வரும்வரை அது இதாலிய ஏரியாக ஆகமாட்டாது. ஆகையால் ஹிட்லரைப்பற்றியும் ஜெர்மனியைப்பற்றியும் நாம் இப்பொழுது கவனிக்க வேண்டும்.

69400

ஹிட்லரும் அவனுடைய பரிவாரங்களும் மின்னல்போரிலேயே நம்பிக்கை கொண்டவர்கள். மின்னல் போர் என்றால் ஒரு குறித்த க்ஷணத்தில் குறித்த லக்ஷ்யத்தின் பேரில் முடிந்தமட்டும் பலத்துடன் தாக்குவது. ஆகையால் காலமும் தேசமும் வரம்பிற்குள் இருந்தாலும் பிரயோகிக்கப்படும் பலமானது வரம்பற்றதாக இருக்கும். இந்த உபாயம் சென்ற மாரி காலத்தில் இங்கிலாந்தின் மேல் செல்லவில்லை.

தற்பொழுது ஹிட்லரின் உபாயங்கள் என்ன? அவன் உத்கோஷம் செய்திருக்கும் வஸந்தகால தாக்குதலால் இங்கிலாந்து இன்னும் கடலில் ஆதீனம் கொண்டிருப்பதைத் தடுக்க, ஆங்கிலக் கடற்படையின் மேல் ஒரு மின்னல் போர் புரிவான். மின்னல்போர் என்பது பல யுத்தஆயுதங்கள் ஒத்துழைப்பது என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். ஜெர்மானிய ராணுவ, கடற்படை, விமான ஆராய்ச்சி நிபுணர்கள் ஸாங்கோபாங்கமாக சர்ச்சை செய்தும் நிலப்போரில் எவ்வாறு மோட்டார் பீரங்கிகளும் வெடிவிமானங்களும் ஒத்துழைக்கின்றனவோ அவ்விதம் கடல் மின்னல் போருக்குரிய உபாயம் சிருஷ்டிக்க முடியவில்லை. ஜெர்மானிய கடற்படைப்பதி ரீடரும் அவருடைய உத்தியோகஸ்தர்களும் நீர்மூழ்கிக்கப்பல்களையும் பீரங்கிப்படகுகளையும் வெடி விமானங்களுடன் ஒத்துழைக்கும்படி அனுப்புவதைக்காட்டிலும் ஏனைய தந்திரங்களை கண்டு பிடிக்க முடியவில்லை.

மேற்சொன்ன ஸாதனங்கள் வெற்றிதரும் தாக்குதல்களுக்குரியதல்ல வென்பது தெளிவு. நீர்மூழ்கிக்கப்பல்கள் வியாபாரக் கப்பல்களின் சாபமாக யிருக்கலாம். ஆனால் பிரிடிஷ் கப்பற்படையிலுள்ள யுத்தக் கப்பல்களை அவைகள் தாக்குவதரிது. ஏனெனில் பிரிடிஷ் கப்பற்படையும் விமானப்படையும் நீர்மூழ்கிகளைப்பிடிப்பதற்காக இடைவிடாது கவனித்துக்கொண்டிருக்கின்றன. நடுக்கடலில் பெரிய கடல்யுத்தத்திற்கு பீரங்கிப்படகுகள் உபயோகமாகாது. அவைகள் அருகிலிருக்கும் நில ஸ்தாபனங்களிலிருந்து உபயோகப்படக்கூடிய உபகரணங்கள் தான். நடுக்கடலின் திக்கற்றவெளிகளிலும் கொடும் புயல்களிலும் யுத்தக்கப்பல்கள் தான் யுத்தக்கப்பல்களை எதிர்க்கமுடியும்.

நடு சமுத்திரத்தில் கப்பற்படையை எதிர்க்க ஜெர்மன் வெடி விமானங்கள் சமர்த்தமாகமாட்டா. ஏனெனில் வெடி விமானங்களுக்கு உதவியாக இருக்கக் கூடிய யுத்தக் கப்பல்கள் எதிரிக்குக் கிடையாது. அம்மாதிரி உபபலமில்லாமல் விமானத் தாக்குதல் மட்டும் மின்னற்போராகமாட்டாது. மேலும் விமானங்களும் வெகு தொலையிலுள்ள ஸ்தாபனங்களிலிருந்து புறப்பட்டு வரவேண்டியிருப்ப



தாலும் அவைகளிலுள்ள எண்ணெய் சேகரங்களும் வெகு தூரத்திற்கு எண்ணெய் கொடுக்கக்கூடிய அளவிற்கு இல்லாமையாலும் அவைகள் பலமுள்ள சாதகமானதில்லை.

மற்றொரு முக்கியமான சாதகம் என்னவென்றால் நடுக்கடலில் விமானங்கள் போர் புரிய உதவுவதற்கு சாதகமாக விமானந்தாங்கி கப்பல்கள் ஜெர்மனிக்கு கிடையாது. ஆகையினால் தான் வெகு நேரம் புரியக்கூடிய கடல்போரை ஏற்படுத்திக்கொள்ளவில்லை.

இதற்கு விலக்காக மத்தியதரைக்கடலில் ஒருதபா வெடி விமானங்கள் பிரிடிஷ் கப்பற்படையை தாக்கின. அந்தச் சமயம் ஜெர்மன் விமானங்களும் அருகிலுள்ள ஸிஸிலித்தீவிலுள்ள கடாணியா என்ற ஊரில் இருக்கும் விமான ஸ்தாபனங்களிலிருந்து வேலை செய்தன வென்பதை நாம் ஞாபகம் வைத்துக் கொள்ளவேண்டும். அந்த யுத்தத்திலிருந்து நாம் தெரிந்துகொண்ட விஷயம் என்னவென்றால் பிரிடிஷ் விமானம் தாங்கியான ஆர்க்ராயல் போன்ற ஒரு வெகு அகலமுள்ளதும் மந்தவேகமுள்ளதுமான குறியை ஏழு மணி அடிக்க யத்தனித்தும் எதிரி விமானங்களால் முடியவில்லை என்பது. ஆகையால் எதிரிகளுக்கு முதல் தர யுத்தக் கப்பல்களும் விமானம் தாங்கிகளும் இல்லாதவரை கடல் மின்னல் போர் என்பது அசாத்தியம். ஆகையால் எதிரி உத்கோஷம் செய்யும் வஸந்த கால தாக்குதலானது பிரிடன் தேசத்திற்கு ஏற்றுமதி செய்யப்படும் ஆகாரங்களையும் யுத்த தளவாடங்களையும் நீர்மூழ்கியால் தாக்குவதை அதிகரிக்கலாமென்றும் எதிரியிடமிருக்கும் நீஸ்நேளவ் ஷார்ன்ஹார்ஸ்ட் என்ற இரண்டே யுத்தக் கப்பல்களைக்கொண்டு துணைக்காவலுடன் செல்லும் சாமான் கப்பல்களை வழிமறிக்கச் செய்வதாலும்தான் என்று ஊகிக்கப்படுகிறது. ஆயினும் பிரிடிஷ் முதல்தர கப்பல்களோடு ஒருமகத்தான கடல் போரில் அகப்பட்டுக்கொள்ள அவகாசம் கொடுக்காமல் வேலை கொடுக்கவேண்டும். பிரிடிஷ் கடற்படை இலாகாவும் அவ்விருகப்பல்களையும் வெகு ஜாக்கிரதையாக கவனித்துக்கொண்டு வருகின்றனவென்று இரண்டு நாட்களுக்கு முன் வந்த செய்தியிலிருந்து தெரிய வருகிறது. பிரிடிஷ் கடற்படை இலாகா சாதாரணமாக விவரங்கள் பிரசுரம் செய்வது கிடையாது. ஆகையால் அவ்விரு ஜெர்மானிய கப்பல்களைப் பற்றி ஏற்பட்ட செய்திகளை நாம் கூடிய சீக்கிரம் கேட்கலாம். அச்செய்தியும் அவ்விரு கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டனவென்றே இருக்கும் என்று நாம் நம்புவோமாக.

ஆனால் கதை அதோடு முடிந்துவிடாது. இந்த வியாசமும் இப்பெரும் போரில் மற்ற அமர்க்களங்களைப்பற்றி சொல்லுவதாக இல்லை. ஹிட்லர் ஆபிரிக்கா, பால்கன்ஸ், துருக்கி பிரதேசங்கள் இவைகளையும் பிரிடனையும் தோற்கடிக்கவேண்டிய அமர்க்களங்களாகச் செய்யலாம். இப்பொழுது பிரிடிஷ் தீவுகளை ஒருபெரும் தாக்குதலுக்குள்ளாக்க ஹிட்லர் முயலுவதைப்பற்றித்தான் நாம் இப்பொழுது கவனிக்கவேண்டும். பிரிடனுடைய கடற்கரைகளை ஜயிப்பதற்காக ஹிட்லர் தன்னிடமிருக்கும் ஒவ்வொரு கப்பலையும், ஒவ்வொரு ஸ்தாபனத்தையும்

ஒவ்வொரு மனிதனையும் ஒவ்வொரு விமானத்தையும் வீசுவான். "யுத்தபூமி" என்ற வார்த்தை பழம் பஸலி வார்த்தையாகப் போய்விட்டது. சமுத்திரமும், பூமியும் அந்தரிக்ஷமும் போர்வீரக்கூட்டங்களால் நிரம்பியிருக்கும்போது, மனிதனுடைய மனம், தேகம், ஆத்மா இவைகளின் சுதந்திரமா அல்லது அடிமைத்தனமா மீதப்படுவதென்ற பெரும் பிரச்னை முடியப்போகும் கம்பீர ஸம்பவத்தை ஒரு மஹா கவிதான் சரியாக வர்ணிக்கமுடியும்.

ஆயினும் நாம் திருடமான சித்தத்துடன் நிற்கிறோம். பிரிடன் சற்று காயப்பட்டிருப்பினும் அஞ்சாமலும், யுத்தத் துவக்கத்திலிருந்ததைக் காட்டிலும் வெகு பலத்துடனும் நிற்கிறது. வெகுநாட்களாக தயங்கிக்கொண்டிருந்த அமெரிக்க ஐக்கிய ஸமஸ்தானங்கள் இன்று பிரிடனுடனும், பின்னும் நிற்கிறது. மனிதர்கள், தளவாடங்கள், கப்பல்கள் எல்லாவற்றிற்கும் மேலாக விமானங்களிலும் தன் பூர்ண பலத்தை ஒழுங்கு செய்துகொண்டு நிற்கிறது. பிரிடிஷ் விமானப்படை தன் 3,500 மைல் வீச்சுள்ள விமானங்களுடன், தென் அமெரிக்கா, ஸைபீரியா, வடக்கு பஸிபிக் சமுத்திரம் இந்த பிரதேசங்களைத்தவிர மீதமுள்ள பிரதேசங்களை வியாபிக்கக்கூடியதாக இருக்கிறது. விமானந்தாங்கிகளால் விமானப் படையின் வீச்சுக்கப்பால் உள்ள பிரதேசங்கள் விமான வீச்சுக்குட்படுத்தப் படுகின்றன. 6,000 மைல் வீச்சுள்ள வெடி விமானங்களும் உபயோகப்படுத்தப் பட்டால் விமானப்படையின் பலமும் அதிகமாக இருக்கும். இப்போதைக் காட்டிலும் பெரியவெடிகளை அதிகமாக ஏற்றிப் போகக்கூடிய விசாலத்துடனும் அதிகமாக தாக்கக்கூடிய சக்தியுடனும் அதிக வீச்சுடனும் அதிக நேரம் பறக்கும் சக்தியுடனும் புதியமாதிரியான விமானங்கள் இப்பொழுது உபயோகப்படுத்தப் படுகின்றன. ஏற்கனவே கியாதிபெற்ற ஹேம்டன் விமானங்களும் இப்பொழுது இன்னும் கனமான ஆயுதங்களாலும் அதிக சக்தியுள்ள யந்திரங்களாலும் ஏற்றப்பட்டிருக்கின்றன என்று ஸின்க்ளேர் பிரபு அவர்கள் சில நாட்களுக்குமுன் சொன்னார். மான்செஸ்ட்டர், ஸ்டெர்லின், ஹாலிபாக்ஸ், முதலிய வெகு வேகமுள்ள பெரிய வெடி விமானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்றும் சொன்னார். இப்பொழுது சபதம் செய்துகொண்டு நண்பராக ஆகியிருக்கிற அமெரிக்க ஐக்கிய ஸமஸ்தானங்கள் தன்னுடைய புத்தப்புதிய வெடிவிமானமான டக்ளஸ் பாஸ்டன், பத்தொன்பது என்ற விமானத்தை அனுப்பியிருக்கிறது. அது ஒரே மூச்சில் 18 டன்கள் வெடிகளைத் தூக்கிக்கொண்டு அட்லாண்டிக் ஸமுத்திரத்தைக் கடந்து வந்து திரும்பிப் போகக்கூடியது. நீர்மூழ்கிக்கப்பலைத் தவறாது கண்டுபிடித்து வேட்டையாடக்கூடிய சூக்ஷ்ம யந்திரங்கள் செய்யப்படுகின்றன. பிரிடிஷ் நீர் விமானங்களும் நாசகாரிகளும் நீர்மூழ்கியிருப்பதைக் காட்டக்கூடிய வெள்ளை குமிழிகளின் கூட்டங்கள் அகப்படுகின்றனவா என்று கடல்களை கவனித்துக் கொண்டிருக்கின்றன. சென்ற திங்கட்கிழமையன்று மூன்று நீர்மூழ்கிகள் நாசமடைந்தது இன்னும் வரப்போகிற வெற்றிக்கு ஒரு நல்ல சூசகமாக ஆகும். அதனால்தான் பிரதம மந்திரியாரும் அதை ஒரு பெரிய சம்பவமாகக் கொண்டாடினார்.

எதிரியின் பெரிய கப்பல்களான நீஸ்நேளவ் ஷான்ஹார்ஸ்ட் என்ற இரண்டு கப்பல்களும் உச்சத்துக்கு 42 ரேகைதள்ளி மேற்கே நடு சமுத்திரத்தில் வேலை



செய்துகொண்டிருப்பதைக் கவனித்தால் இந்த அட்லாண்டிக் போரை ஹிட்லர் தன்னுடைய கடைசி பிரயத்தனமாக நினைக்கிறான் என்று தெரிகிறது. உலகம் நினைப்பதுபோல ஹிட்லரும் அமெரிக்கன் பிரதிநிதி சபை பிரிடனை உதவிசெய்ய செலுத்தின சட்டமானது இந்த யுத்தத்தின் போக்கையே மாற்றிவிடும் என்று ஒப்புக்கொள்ளுகிறான் என்று நிரூபிக்கப்படுகிறது. அமெரிக்க உதவியால் பிரிடன் முடிவான வெற்றிபெறாமல் தடுப்பதற்காக ஹிட்லர் அவ்விருயுத்தக்கப்பல்களையும் அனுப்பி இருக்கிறான் என்று நாம் ஞாபகம் வைத்துக்கொள்ளல்வேண்டும். அவைகள் மூன்று வாரங்கள் மறுபடி எண்ணெய் போட்டுக்கொள்ளாமல் கடலில் இருக்கமுடியும். பிரிடிஷ் கடற்படை இலாகாவுக்கும் தங்கள் காரியங்களை செய்துகொள்ள அது போதிய அவகாசமே. அவைகள் இரண்டும்போனால் ஹிட்லருக்கு கடற்படையே போனதுபோல் ஆகும். ஹிட்லர் தன்னுடைய நீர்மூழ்கிகள்பேரில் இவ்வளவு நம்பிக்கை வைத்திருப்பதால் அவைகளின் பலாபலங்களை கவனிப்போம். இப்பொழுது மூன்று நீர்மூழ்கிகள் மூழ்கடிக்கப்பட்டதை ஒரு பெரிய சம்பவமாகச் சொன்னோம். விஷயம் என்னவென்றால் ஒரு நீர்மூழ்கி நாசமானால் வெகு சூக்ஷ்மமான யந்திரம் நாசமானதாகும். அதற்கு பதிலாக மற்றொன்று செய்ய பல மாதங்கள் பிடிக்கும். அதற்கும் மேலானதாக அந்த நீர்மூழ்கிக்காரர்கள் நாசமாவதே. ஏனெனில் புதிய மனிதர்களை நீர்மூழ்கிகளை ஓட்டுவதற்கு சமர்த்தர்களாக செய்தாலும் ஒரு புதிய நீர்மூழ்கியை வெகு சுலபமாகவும் லாகவமாகவும் பிரயோகிக்கமுடியாது. அவர்கள் தங்கள் கப்பலுடன் நன்றாக பழகி தெரிந்துகொள்ளவேண்டும். 1918-ம் வருஷத்திய ஜெர்மன் நீர்மூழ்கிப் போர் முயற்சியும் அவர்களின் முதல்தரமான ஆசாமிகள் நாசமானதினாலேயே வீணாயிற்று. ஆயினும் இப்பொழுது நார்வே, ஹாலண்டு, பெல்ஜியம், பிரான்ஸ் முதலிய தேசங்களை ஜயித்ததால் எடுத்துக்கொண்ட புதிய ஸ்தாபனங்களினாலும் இப்பெரும் சாபங்களான நீர்மூழ்கிகளை வெகு வேகமாகக் கட்டுவதாலும் எதிரியின் பலம் நாம் மதிக்கத்தக்கதே ஆயினும் நம் விமானப்படையானது அவைகளை வெகு கவனமாகத் தாக்கிக்கொண்டிருக்கிறது.

இந்த பகைக்கத்தக்க வஸ்துக்களை தொலைப்பதற்கு பிரிடன் எல்லாவிதமான பிரயத்தனங்களும் செய்து கொண்டிருக்கிறது. நீர்மூழ்கிகள் சர்வ தேசிய சட்டத்துள்பட்டு நடந்து வந்தால் பிரிடன் குற்றம் சாட்டுவதற்கில்லை. ஆயுதமில்லாத வியாபாரக் கப்பல்களை உடைத்து, வெடிவிமானங்கள், நிராயுதபாணிகளாக அலைகளில் தத்தளிக்கும் ஜனங்களை சுடுவதையும் கவனித்தால் வெகு அநாகரீகமான காலங்களில் கூட பண்டைச் சரித்திரத்தில் கேட்டிராத பெரும் காட்டுமிராண்டித் தனமாகிறது. அதனால்தான் சர்வதேச ராஜநிர்வாகிகளும் இந்த நீர்மூழ்கிகளும் வெடிவிமானங்களும் உலகத்தில் ஏன் கண்டுபிடிக்கப் பட்டனவோ என்று வருந்துகிறார்கள்.

இம்மாதிரியான இச்சாபங்களை நாசம் செய்யவே பிரிடன் தம் கப்பற் படையிலிருந்து துணைக்காவலாக யுத்தக் கப்பல்களை அனுப்புகிறார்கள். துணைக்காவல் ஏற்பாடும் வெகுநன்றாக நடந்துகொண்டிருக்கிறது. ஆயினும், எல்லாக் கப்பல்களுக்கும் எல்லா சமயங்களிலும் துணைக்காவல் அளிப்பது என்பது அசாத்தியம்.

ஆகையால் பதுங்கிக்கொண்டிருக்கும் நீர்மூழ்கிகளுக்கும் வட்டமிடும் விமானங்களுக்கும் கடற்பரப்பில் சஞ்சரிக்கும் ஜெர்மன் வழிப்பறிக் கப்பல்களுக்கும் கொஞ்சம் பலி கிடைப்பது சம்பாவிதம். ஆயினும், பிரிட்டிஷ் அமெரிக்க கப்பற் சாலைகளிலும் புதிய கப்பல்கள் வேகமாகச் செய்யப்படுகின்றன. சென்ற வருஷம் 480 புதிய கப்பல்கள் பிரிடிஷ் கப்பற்சாலைகளில் செய்யப்பட்டிருக்கின்றன. புதிய அமெரிக்க திட்டத்தால் மீண்டும் 400 கப்பல்கள் சேர்க்கப்படலாம். ரக்ஷகப்படைகள் விருத்தி செய்யப்படுகின்றன. அமெரிக்கா ஐக்கிய சமஸ்தானங்களும் பெருத்த எண்ணிக்கைகளில் நாசகாரிகளை பிரிடிஷ் கப்பற்படைக்கு கொடுத்துக்கொண்டிருக்கின்றன. அமெரிக்காவிலிருந்து வரும் தளவாடங்கள் அமெரிக்க யுத்தக்கப்பல்களின் துணைக்காவலுடன் அனுப்பப்பட வேண்டும் என்று அமெரிக்க பொது நோக்கம் இருக்கிறது என்று கேள்விப்படுகிறோம். நாஸியத்தை தடுக்க யுத்தத்திலே அமெரிக்கா நேர்முகமாக கலந்துகொள்வதாக இக்காரியம் முடியுமாகையால் அதற்கு சட்டபூர்வமான அங்கீகாரம் எதிர்பார்க்கப்படும். ஹிட்லரின் இப்புதிய பயமுறுத்தலை தனியாக கவனித்து பைசல் செய்யவேணுமென்று பிரிடன் தீர்மானித்திருக்கிறது என்று இப்பொழுது பிரசுரிக்கப்பட்டிருக்கும் ஒரு உத்தியோகத்திலிருந்து தெரிகிறது. மார்ச்சு௴ 22௳ ஒலிபரப்பிலிருந்து அட்மிரல் ஸர். பெர்ஸி. நோபிள் என்பவர் மேற்கித்திய அருகாமைகளுக்கு ஒரு சேனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று தெரியவருகிறது. ஆகையால் அட்லாண்டிக் சமுத்திர ரக்ஷணம் என்ற போர் முயற்சியும் இப்பொழுது ஒரே ஆதீனத்தில் இருக்கின்றது. கடற்படை வட்டாரங்களில் ஸர். பெர்ஸி அவர்கள் பெரிய யுத்த தந்திரி என்று பெயர்கொண்டவர். இச்செய்தியையும் மேற்குப் பாகங்களில் புதிய விமானசாலைகள் ஏற்படுத்தப்பட்டதாக வந்திருக்கும் விவரமற்ற செய்திகளையும் சேர்த்து கவனித்தால் பிரிடனும் இமைகொட்டாது காத்துக் கொண்டிருக்கிறது என்று விளங்கும். பிரிடனுடைய இரண்டாவது யுத்தம் என்ற விஷயத்தில் தற்காப்பைப் பற்றியே அதிகமாகச் சொல்லியிருக்கிறோம் என்று நினைக்கலாம். காலத்தின் சுருக்கமே இதற்கு காரணம். நார்வேயிலுள்ள லெபோடன் தீவுகளை சென்றவாரம் தாக்கியதும், ஹாலண்டிற்கு பக்கத்திலுள்ள பிரஷியன் தீவுகளை இந்தவாரம் தாக்கினதும் சென்ற சில நாட்களாக ஆஸ்டெண்ட், ராட்டர்டாம் நீர்மூழ்கி ஸ்தாபனமான லோரியான் முதலிய துறைமுகங்களை கனமான வெடிகளால் தாக்கினதும் ஹாம்பர்க், பிரமன், இவைகளை நொருக்கினதும் இங்கிலாந்தில் முன்னேறித்தாக்கும் உணர்சி பரவியிருக்கிறதென்பதைக் காட்டும். இப்பொழுது ஒரு மகத்தான தருணம் கிட்டுகிறது. நியாயமான கொள்கை, அதாவது இறைவனுடைய கொள்கை, அதர்மமான கொள்கையை அகற்றி வெற்றிபெறும் தருணம் கிட்டுகிறது. உதயத்திற்குமுன் அந்தகாரம் ஜாஸ்தியாகவே இருக்கும். நேஸ்பி என்ற இடத்தில் யுத்தம் புரிவதற்கு முன்னால் ஒரு கியாதிபெற்ற வீரன் உச்சரித்த பிரார்த்தனையை உத்தமமான பிரார்த்தனையாக் நாமும்கொண்டு இன்று உச்சரிப்போமாக.

இறைவனே! இன்று உங்களை தியானிக்கமுடியாதவாறு வேலையில் ஈடுபட்டிருப்பேன்; ஆயினும், தாங்கள் என்னை மறக்கலாகாது.



அநுபந்தம்.

---

# கிரீஸ் தேசத்துக்கு வந்தனம்.

---

## 25—3—1941.

உலகத்தில் முக்கியமான இரண்டு வார்த்தைகள் இருக்கின்றன. இந்நூற்றாண்டில் அவைகளுடைய மதிப்பு பெரும்பாலும் குறைந்து விட்டது. அவைதான் **சுதந்திரம், கௌரவம்** என்பவை. ஆயினும் அவ்வார்த்தைகளின் ஆபிரம்பத்தையும், கண்யத்தையும், அர்த்த புஷ்டியையும் சென்ற ஆறுமாதங்களில் மீட்டுக் கொடுத்த ஒரு தேசமிருக்கிறது. அதன் பெயர் கிரீஸ்.

அப்பண்டைகால மனிதர்களையும், அவர்களுடைய முன்னோன் பலத்தையும், அவர்களுடைய இந்த வம்சத்தியரையும் நினைத்தால், இத்தகையவர்கள் இக்கொள்கைகளின் தூய்மையை நிதர்சனம் செய்து அவைகளே விலையில்லா மாணிக்கங்களென மாண்புடன் போற்றுகிறார்கள். அற்ப வயஷு உள்ள தேசத்தவர்கள் அக்கொள்கைகளைக் கொள்கிறார்கள், பெருமை பேசி உலகத்துக்கு உத்கோஷம் செய்கிறார்கள், பிறகு கடலில் பிரட்டித்தள்ளி விடுகிறார்கள். அதாவது அவர்களுடைய நோக்கங்களுக்கு தக்கவாறு அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஸ்வயநலத்துக்குறியவாறு அக்கொள்கைகளை பூஜிக்கிறார்கள் அல்லது தூஷிக்கிறார்கள். நூற்றி ஐம்பது வருஷங்களுக்கு முன்னால் ஐரோப்பா தேசங்களில் எவருக்கு சுதந்திரம் என்ற பதத்திற்குப்பொருள் தெரியும்?. ஜெர்மனி அக்காலத்தில் ஒரு தேசமாக ஆகவில்லை. இதாலி ஒரு தேசமாகவில்லை. அவைகள் தேசங்களாக ஆனபிறகு சுதந்திரத்துடன் அதிகப்பழக்கமில்லை. ஜெர்மனிக்கு அந்த வாசனையே கிடையாது. இதாலி ஸ்வல்பம் 50 வருஷங்களுக்கு சுதந்திரத்துடன் விளையாடி பிறகு அதை விடுத்தது. (கௌரவத்தைப்பற்றியோ, அந்த தேசங்களுடன் அந்த உயர் வார்த்தையைச் சேர்த்தெழுதத் தயங்குகிறோம்). ருஷ்யாவும், ஸ்பெயினும், பல்கேரியாவும், ஸ்வீடனும் சுதந்திரத்தைப்பற்றி என்ன நினைத்தன? "வேலை, நிறுத்தங்கள், கலகங்கள், உள்நாட்டுக் கலகங்கள்" இவைகளை சுதந்திரத்தின் பெயரால் உண்டாக்கி—அந்நிய தேசங்களால் ஆண்டப்பட்டோ, தடுக்கப்பட்டோ—கடைசியில் ஸமயோசிதம்போல் திருத்திக் கொள்வதே.

ஆனாலோ, ஐரோப்பிய ஜாதியார்களில் சிலருக்கு அதுவும் வெகு சில நாடுகளாலேயே, சுதந்திரமும் கௌரவமும் சிறந்த கைவிடப்படாத கொள்கைகளாக கருதப்பட்டு வருகின்றன. சமயத்துக்கு மட்டில் கையாளக்கூடியவை என்று மட்டில் கருதப்படவில்லை. அதாவது அத்தேசத்தவர்கள் உயிர்துறக்கக்கூட சம்மதிப்பார்கள். அக்கொள்கைகளை கைவிட ஒத்துக்கொள்ளமாட்டார்கள். அப்பேர்க்கொத்த தேசங்களில் பிரிடன் ஒன்று, ஸ்விட்ஸர்லாந்து ஒன்றாக இருக்கலாம். பிரான்ஸ்—அந்தோ!—ஒன்றாயிருந்தது, மற்றொன்று கிரீஸ்.

2,500 வருடங்களுக்கு முன்னர் கிரேக்கர்கள் கலைகளையும், ராணுவ பயிற்சிகளையும் மதித்தது போலவே சுதந்திரத்தையும் கண்ணியத்தையும் மேலாகக் கருதினார்கள். பெர்ஷியா தேசத்தவர்கள் சுதந்திரத்தை எதிர்ப்பதின் கஷ்டத்தைக் கற்றனர்; துருக்கியர்கள் சரியாய் 120 ஆண்டுகளுக்கு முன்னர் இதைக் கற்றனர். இன்றைக்கு இதாலியர்கள் இதையே தெரிந்துகொண்டு வருகிறார்கள். கிரேக்கர்களுக்கோ "சுதந்திரமும் கௌரவமும்" வெறும் வார்த்தைகள் அல்ல. சந்தேகத்தில் ஆழ்ந்து கிடக்கும் இவ்வுலகத்தினரை ஆச்சரியத்துக்குள்ளாக்கவும், இந்த லக்ஷியங்களுக்காகவே போர் செய்யத் தக்கவையாயும் உயிர் மாய்க்கக்கூடிய லக்ஷியங்களாகவும் இருக்கின்றன.

இதைப்பற்றி ஹிட்லர் சிந்திக்கவில்லை. முஸோலினி நினைக்கவுமில்லை— இந்தப் பொருளையே பின்பற்றும் இவ்வுலகில் யார்தான், எந்த ஜாதியாரும் இந்த லக்ஷியத்துக்காக உலகத்துடன் சண்டையிட முற்படுவார்கள் என்று எண்ணக் கூடும். இந்நாட்களில் ஜனங்கள், நிச்சயமாக, நாடு சேர்க்கவும், வியாபாரம் பெருக்கவும் வெற்று அதிகாரம் அடையவும் மாத்திரமே சண்டையிடுகிறார்கள்.

கிரேக்கர்களுக்கு இம்மாதிரி எதையும் ஜயித்துக்கொள்ள ஒரு நோக்கமும் இல்லை. ஆனாலோ தோற்கவே இடம்—இது எதைப்போலவெனில் தவீது போன்ற ஒரு பலஹீனன் கோலியத் போன்ற ஒரு பலத்த பீமனுடன் போரிடத் தலைப்பட்டதை ஒக்கும். பீமன் ஒருவன் அல்ல—அவனுக்கு உதவிசெய்ய ராக்ஷஸர்கள் பலர். தாவீதுடைய கவண்கற்கள் நேராயும் நேர்மையாயும் விரைந்து சென்றன. பலர் பிரமித்து தடியன் தத்தளித்து வீழ்வதை பார்த்தார்கள். ராக்ஷஸ படைகள் திரள் திரளாய் எதிர்த்துவந்தபோதிலும் தாவீது சுதந்திரத்துக்கும் கௌரவத்துக்குமே போரிடுவதால் பதட்டமன்னியில் ஸாவதானமாய் அவன் கவணில் இன்னொரு கல்லைப்பொறுத்துகிறான். பயங்கரமான முடிவை எதிர்பார்த்து காத்திருக்கிறான்.

"கரும்பறவை கிரேக்கனுக்கு இப்பாட்டை பாடுகிறது, 'தம்பி, தம்பி, நீ பாடுகிறது இதுவே கடாசிப்பாட்டாய் இருந்தால், நன்றாய் பாடிவிடு ஏனெனில் இனி நீ பாடாமல் போகும்காலம் வரலாம்.—தம்பி பாட்டைபாடு."

கிரீஸுக்கு வந்தனம்,



# வார யுத்தச் செய்திகள்.

(20—3—41 லிருந்து 26—3—41 வரை).

**யூகோஸ்லாவியாவின் துர்க்கதி.**—மதராஸ் மெயில் சொல்கிறபடி இந்த தேசத்தவர்கள் அடிமைகளாகவும், பண்ணைக்காரர்களாகவும் போய்விட்டார்கள். ஜெர்மானியர்களுடைய ராஜ்ஜியதந்திரத்தாலும், பொருளாதார பலவந்தத்தாலும், ராணுவ பயத்தாலும், ஸர்வஜனங்களுக்கும், சொந்த சைனியத்துக்கும் விரோதமாக, அங்கிருந்த சில அதிகாரிகள் யூகோஸ்லாவியாவின் ஸ்வதந்திரத்தைத் தொலைத்துவிட்டார்கள். அதன் மந்திரிகள், மார்ச்சு 25-ம் தேதி, வியென்னாவுக்குச் சென்று மூவரசு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார்கள். அவமானமே தோன்றாதிருப்பதற்காக யுகோஸ்லாவியா, ஜெர்மனியின் அடிமை நாடுகளில் ஒருதனி வகுப்பில் வைக்கப்பட்டிருக்கிறது. இதற்காக, ஒப்பந்தமும் இரண்டு பாகங்களாக எழுதப்பட்டு, வெளிப்படையான பாகத்தில், அதனுடைய ஸ்வதந்திரத்தைக் காப்பதாகச் சொல்லிவிட்டு, மற்றொரு ரகஸ்ய பாகத்தில், அதன் ரயில் மார்க்கமாக யுத்தத் தளவாடங்களைக் கொண்டுபோக ஜெர்மனிக்கு சுவாதீனமுண்டு என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பொருளாதார காரியத்தில் ஒத்துழைப்போடு, யுத்த காரியங்களில், யூகோஸ்லாவியா தனித்து நிற்கலாமென்றும் ஷரத்துக் கண்டிருக்கிறதாம். இப்பொழுது இந்த ஏற்பாட்டினால் யூகோஸ்லாவியாவுக்கு சௌகரியமுண்டென்று தோன்றினாலும், போகப்போக என்ன விபரீதம் வருமென்று தெரியவில்லை. அச்சுநாட்டுச் சிநேகமெல்லாம் அடிமைத்தனத்தில்தான் முடியும்.

இந்த விபத்தைத் தடுக்கவேண்டிய எச்சரிக்கைகளும் முன்னாலேயே கொடுக்கப்பட்டன. யூகோஸ்லாவியாவானது பிரிடனால் முன்னுக்கு வந்த தேசம்; அங்கு வசிக்கும் ஸர் ரோனால்ட் என்ற பிரிடிஷ் மந்திரி கையொப்பமிடுமுன் எச்சரிக்கை செய்தார். யூகோஸ்லாவியா மந்திரிகளில் மூவர்கள் ராஜீனாமாச் செய்தார்கள். அச்சு நாடுகளிலிருந்து லஞ்சம் வாங்கிக்கொண்ட சிலர்களைத் தவிர, ஸர்வஜனங்களும் வேண்டாமென்றார்கள். ஆனால் காரியம் நடந்துவிட்டது. இப்பொழுது சைனியம், சிப்பாய்கள், உத்தியோகஸ்தர்கள், குடியானவர்கள், நகரவாஸிகளனைவரும் ஒன்றுகூடி ஆக்ஷேபிக்கிறார்கள். தலைநகரம் போலீஸாரால் பந்தோபஸ்து செய்யப்பட்டிருக்கிறது. கலகத்தை அடக்க ஜெர்மனி வரப்பார்க்கிறது. கடைசியாக வந்திருக்கும் செய்திகளிலிருந்து, சைனிய பலத்தால், யூகோஸ்லாவியாவில் திடீரென்று அரசாங்கம் மாறிவிட்டதாகத் தெரிகிறது. ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட பிரதம மந்திரிகள் கைது செய்யப்பட்டு, ரீஜண்டாயிருந்த பால் ஊரைவிட்டோடி, இளவரசராகிய பீடர் தலைமை வகித்து, ஸ்வெட்கோவிட்ச் என்ற விமானப்படைத் தலைவரை மந்திரியாக அமைத்துக்கொண்டு விட்டார். இவ்விதமாக, யூகோஸ்லாவியாவின் மானம்

காப்பாற்றப்பட்டு இனி ஜெர்மனியோடு செய்துகொண்ட மூவரசு ஒப்பந்தமெல்லாம் குப்பைத் தொட்டிக்குப் போகவேண்டியதுதான். மிஸ்டர் சர்ச்சிலும், வேண்டிய உதவிகளைக் கொடுப்பதாக வாக்களித்துவிட்டார்.

ஒரு லாபமுமில்லாமல் யூகோஸ்லாவியா தன் ஸ்வதந்திரத்தைத் தோற்ற அன்றைக்கே கிரீஸானது தன் ஸ்வதந்திரத்தைக் கொண்டாடிற்று. அதன் பிரதம மந்திரி புதிதாய் ஜெர்மனியால் வந்திருக்கும் விபத்தை எதிர்க்கப்போவதாய் உறுதிமொழி கொடுத்தார். பிரிடிஷ் பிரதம மந்திரியாகிய மிஸ்டர் சர்ச்சில் அதே சமயத்தில் கிரீஸைப் புகழ்ந்தார். 120 வருஷங்களுக்குமுன் கிரீஸின் ஸ்வதந்திரத்தைக் காக்க பிரிடன் முன் வந்தது. இப்பொழுதும் வந்திருக்கிறது. ஆனால் இப்பொழுது எதிரியின் பலமதிகம். கிரீஸின் தைரியத்துக்குக் குறைவில்லை: முடிவில் வெற்றிக்கும் சந்தேகமில்லை.

ருஷ்யாவும், துருக்கியும் பரஸ்பர சிநேக உடன்படிக்கை யொன்றைச் சமீபத்தில் செய்து கொண்டிருப்பதைக் கேட்க சந்தோஷமாயிருக்கிறது. தனது கீழ்புறத்தில் ருஷ்யாவினால் விபத்து வருமென்ற பயம் துருக்கிக்கு இனியிருக்க வேண்டாம்.

**அட்லாண்டிக் யுத்தம்.**—அமெரிக்காவிலிருந்து பிரிடனுக்கு வரும் கப்பல்களைத் தடுப்பதற்காக ஜெர்மனியானது, ஷார்ன்ஹார்ஸ்ட், நெயிஸ்நா வென்ற தனது யுத்தக் கப்பல்களை அட்லாண்டிக் சமுத்திரத்தில் மூன்றிலிரண்டு பங்கு தூரம் அனுப்பியிருக்கின்றது. பிரிடிஷ் கரையை யணுகியதும் கப்பல்களையும் எதிர்க்கின்றது: ஆனால் இவைகளைத் தடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியைக்கொண்டு புதிய கருவிகளும் தயாரிக்கப் படுகின்றன. மலயா, நெல்ஸன் வகுப்பைச் சேர்ந்த பெரிய பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் எதிரியை சமுத்திரத்தில் விரட்டிக்கொண்டிருக்கின்றன. மார்ச்சு 15-ம் தேதியோடு முடிவான வாரத்தில் பிரிடிஷ் கரைக்கருகாமையில் வந்த 44 ஜெர்மன் விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. விமானப்படை சேனாபதி கோடார்ட் சொன்னமாதிரி, ஜெர்மானியர் படிக்கும் பாடம் திருப்பிச்சொல்லி, சமுத்திர சண்டையிப்பொழுது ஜெர்மனியின் கைவசமிருக்கும் அட்லாண்டிக் துறைமுகங்களிலேயே நடக்கிறது. லோரியான் துறைமுகங்கள் இந்த வாரத்தில் இருமுறை தாக்கப்பட்டன. இவை இந்த யுத்தத்தில் 48, 49-ம் முறையாகும். மூன்று எதிரி நாசகாரிகளும் சமீபத்தில் அழிக்கப்பட்டன.

மத்தியதரைக்கடலில் வழக்கம்போல் பிரிடிஷ் கப்பற்படையானது எதிரிக்கு ஆபிரிக்காவிலும் அல்பேனியாவிலும் தளவாடங்கள் போகாது தடுத்துக் கொண்டு, பிரிடிஷ் நேயர்களுக்கு உதவிப்பொருள்களைக் கொண்டுபோகும் கப்பல்களைக் காப்பாற்றி வருகிறது.

லோபோடன் தீவுகளை எதிர்த்ததிலிருந்து, எதிரிக்குப் பயமேற்பட்டு, நார்வேயின் அருகாமையிலிருக்கும் தீவுகளிலெல்லாம் ஜெர்மன் துருப்புகள் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டு வருகின்றன.



## ஆபிரிக்காவில் யுத்தம்.

**லிபியா-ஜரபூப் பிடிபட்டது.**—சற்றுத் தாமதப்பட்டு, இப்பொழுது ஜரபூப் கைவசமாயிற்று. தாமதத்துக்குக் காரணம் அங்கிருக்கும் புண்ணிய ஸ்தலங்களைப் பழுது செய்யாதிருப்பதற்காவே யொழிய எதிரியின் எதிர்ப்பு பலத்தாலில்லை. ஜரபூப்பிலிருந்த இதாலிய சைனியத்தைக் காட்டிலும் எதிர்த்த பிரிடிஷ் படை சிறியதாகும். ஆயினும், முதலெதிர்ப்பிலேயே ஜரபூப் பிடிபட்டுவிட்டது.

**ஸோமாலிலாண்ட்-ஹார்கெயிஸா பிடிபட்டது.**—பெர்பரா பிடிபட்ட சமாசாரம் சென்றவார அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இதைப் பிடிக்க நில, நீர், ஆகாயப்படைகள் ஒன்று சேர்ந்து ஒத்துழைத்தன. முதலாவதாக விமானப்படை வேவுபார்த்து, குண்டுகளைப் போட்டது. பிறகு கப்பற்படை எதிர்த்து முடிவில் நிலப்படை நுழைந்தது.

பெர்பரா பிடிபட்டதிலிருந்து ஸோமாலிலாண்ட் யுத்தம் முடிவுக்கு வந்து விட்டதாகச் சொல்லலாம். இன்னும் சில ஸ்தலங்களைப் பிடித்து முடியுகட்ட வேண்டியதுதான் பாக்கி.

இந்த வாரத்தில் அபிஸீனியாவுக்குப்போகும் எல்லைப் புறத்திலிருக்கும் ஹார்கெய்ஸாவும், மற்றொரு ஸ்தலமாகிய ஸீலாவும் பிடிக்கப்பட்டன. மிஜர்டின் சுல்டான் சமஸ்தானத்தில் கலகம் கிளம்பி விட்டது.

**அபிஸீனியா ஜிக்ஜிகா, நேகலி, ஹாரார் பிடிபட்டன.**—முதலிரண்டு ஸ்தலங்களைப் பிடித்துக்கொண்டு சைனியங்கள் மார்டா கணவாயின் வழி முன்னேறி, கடைசியாகக் கிடைத்திருக்கும் ரேடியோ செய்திப்படி ஹாராரையும் கைப்பற்றி விட்டன.

மார்ச்சு 25-ம் தேதியன்று பிரபுக்கள் சபையில் யுத்த உதவி மந்திரி க்ராப்ட் பிரபு சொல்லியபடி, பிரிடனுக்கு ஆபத்து வந்த சமயத்திலும்கூட, எகிப்தைக் காப்பாற்ற உள்நாட்டுத் துருப்புகள் பிரிடனிலிருந்து நீர் மூழ்கிகளின் அபாயம் நிறைந்த கடல் வழி வெகுதூரம் அனுப்பப்பட்டது, தேச சரித்திரத்தில் கேள்விப்படாத ஒரு ஆச்சரியமாகும். இப்பொழுது கிழக்கு-ஆபிரிக்காவில் சைனியங்கள் 2,500 மைல் சுற்றளவுள்ள ஒரு வட்டமாக நிற்கின்றன. இதன் மையம் அடிஸ் அபாபாவுக்கு 200 மைல் தென்கிழக்கே இருக்கிறது. கடியாரத்தில் 11, 9, 8, 7, 6, 5, 4, 2 மணிகளைக் காண்பிக்கும் இலக்கங்கள் போட்டிருக்கும் இடங்களுக்குச் சரியான திக்குகளிலிருந்து பிரிடிஷ் சைனியங்கள் இதாலிய கிழக்கு ஆபிரிக்காவை இப்பொழுது தாக்கிவருகின்றன.

**எரிட்ரியா.**—கெரென் பிடிபட்டது.

**அல்பேனியா.**—வஸந்தகாலம் பிறந்தவுடன் அல்பேனியாவில் செய்த எதிர்ப்பெல்லாம் வீணாய்ப்போய், முஸோலினி மனமுடைந்து இதாலிக்குத் திரும்பி விட்டார். மனோவியாதி பிடித்து, தூக்கமில்லாது, பயித்தியக்காரனைப்போல் பேத்துகிறாராம். ஆனால் சண்டையை நிறுத்தியபாடில்லை. கடைசியாக ஆலூஸ் கதிக்கரையில் ஒரு எதிர்ப்பை ஆரம்பித்து, மற்றொரு முறை தோற்றுவிட்டது.

**எதிரி வசப்படுத்தாத பிரெஞ்சு பாகம்.**—இந்த மாதம் 15-ம் தேதியன்று கிரினேபிலிருந்து ஒலிபரப்பி, தன் பிரஜைகளுக்கு ஏற்பட்டிருக்கும் பஞ்சத்தைத் தெரிவித்து, பிடேன், அமெரிக்க உதவியைக் கோரினார். அமெரிக்கா இனமாகக் கொடுத்த மாவை இரண்டு கப்பல்கள் ஏற்றிக்கொண்டு வருவதற்கு, பிரிடனும் சம்மதித்து, வழிவிட்டிருக்கிறது. இது அனுதாபத்தைக் காண்பிக்கச் செய்த காரியம். ஆனால் பிரான்ஸிலிருந்து யுத்த தளவாடங்களும் உணவும் ஜெர்மனிக்குப் போய்க்கொண்டுதான் இருக்கின்றன. உதாரணமாக, லயன்ஸில் ஜெர்மன் விமானக் குடைகளுக்கு வேண்டிய பட்டு நெய்யப்படுகிறது. வட ஆபிரிக்காவிலிருந்து மார்ஸெய்ல்ஸுக்கு வந்து இறங்கும் விளைபொருள்களில் 100-க்கு 80 பங்கு ஜெர்மனிக்குப் போய்விடுகின்றன.

**ஜெர்மனி கைவசப்படுத்தியிருக்கும் நாடுகள்.**—ஐரோப்பாவுக்கு வேண்டிய உணவு வெகுதரமாய் ஐரோப்பாவிலேயே விளைகிறது. நாஸிகள் கொள்ளையடிப்பதால்தான் பஞ்சம் வருகிறது. உதாரணமாக, நார்வேயிலிருந்து மீனும், டென்மார்க்கிலிருந்து கால்நடையும், ஹாலண்டிலிருந்து வெண்ணெயும், பிரெஞ்சு வட ஆபிரிக்காவிலிருந்து தானியம், பழம், காய் கறி, எண்ணெய் முதலியவைகளும் கொண்டுவரப்படுகின்றன.

பணமாக, வருஷத்துக்குக் கீழ் கண்ட தொகைகள் வசூலிக்கப்படுகின்றன:—

| | | | |
|---|---|---|---|
| **நார்வே.**— | 6,80,00,000 பவுன்கள் | தலைக்கு 25 | பவுன் வீதம். |
| **டென்மார்க்.**— | 2,60,00,000 | ,, 8 | ,, |
| **பெல்ஜியம்.**— | 7,50,00,000 | ,, 8 | ,, |
| **ஹாலண்ட்.**— | 5,40,00,000 | ,, 6 | ,, |
| **பிரான்ஸ்.**— | 82,70,00,000 | ,, 20 | ,, |

மற்ற நாடுகளைவிட நார்வே கட்டும் கப்பம் அதிகம். இதோடு இந்த ஒவ்வொரு தேசமும் தன் விளைபொருள்களை ஜெர்மனிக்கு விற்று பதிலாக செலாவணியாகாத மார்க்நோட்டுகளைத்தான் பெற்றுக்கொள்ளவேண்டும்.

**அமெரிக்கா.**—பிரிடனுக்கு உதவி செய்ய ஏற்படுத்தியிருக்கும் சட்டத்தின்படி நடவடிக்கையெடுத்துக்கொள்ள யுனைடட் ஸ்டேட்ஸ் சபை 70,000 லக்ஷம் டாலர்களைச் செலவு செய்ய அனுமதித்திருக்கிறது. 50 வியாபாரக்கப்பல்களை உடனே கொடுக்கவும், புதிதாக 400 வியாபாரக்கப்பல்களைக் கட்டவும் ஏற்பாடுகளாய்க்கொண்டிருக்கின்றன.

யுனைடட் ஸ்டேட்ஸில், சமீபத்தில், 20 தொழிற்சாலைகளில் வேலை நிறுத்த மேற்பட்டிருக்கிறது. அவைகளில் 8, யுத்ததளவாடங்கள் செய்பவை. பெத்தல்ஹம் எஃகு கம்பெனி தொழிற்சாலையில் ஏற்பட்ட தொழில் நிறுத்தத்துக்குக்காரணம் சமக்-குடியரசு (கம்யூனிஸ்ட்) கக்ஷிக்காரர்களாயிருக்கலாமென்று அமெரிக்க-விரோதி இயக்கங்களை கவனிக்கும் இலாகாத் தலைவராகிய மிஸ் மார்டின் டைஸ் அபிப்பிராயப்படுகிறார்.

அமெரிக்க ஸ்தானிகராகிய மிஸ்டர் விணன்ட் இந்த வாரத்தில் முதல் முதலாக பிரிடனில் பிரஸங்கம் செய்தார். அப்பொழுது நாஸிகள் வெறிபிடித்தலையும்



இந்த சமயத்தில் பிரிடன் உலகத்தைப் பாதுகாத்து நிற்பதை புகழ்ந்து கொண்டு, ஆனால் பிரிடன் தனியே நிற்காது, அமெரிக்காவும், காரியத்தில், உதவி செய்வதாயும், அமெரிக்க தொழிற்சாலைகளிலும், கப்பற் கட்டுத்துறைகளிலும், வயல்களிலும் வேலை செய்யும் ஒவ்வொருவரும் ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றுகிறவர்களாவார்களென்றும் எடுத்துக்காட்டினார்.

யாத்திராதிகள் சங்கத்தில், மார்ச்சு 25-ம் தேதி பிரிடிஷ் ஸ்தானிகரான ஹாலிபாக்ஸ் பிரபு பேசும் போது, பிரிடனுக்கு உதவி யளிக்கும் அமெரிக்கச் சட்டம் பிரிடனுக்கு தைரியத்தையும், ஜெர்மனிக்கு அதைரியத்தையும் கொடுத்து விட்டதாகச்சொன்னார். சென்ற மகாயுத்தத்தில், ஆரம்பத்தில் இரு கக்ஷிகளும் சம பலமாயிருந்து, பிறகு அமெரிக்கா சேர்ந்ததிலிருந்து, பிரிடன் கை ஏறிவிட்டது. இந்த யுத்தத்தில் ஆபிரிக்காவையும், ஆசியாவையும் எதிரி கைவசப்படுத்தப்பார்க்கிறான். அப்படிச்செய்து விட்டால், முடிவில், டாக்காரிலிருந்து, சுலபமாக, அமெரிக்காவுக்கு வந்து, அமெரிக்கர்கள் ஆயுதபாணிகளாவதற்குள் தாக்கி விடுவானென்றார்.

**விமானப் போர்.**—இந்த வாரத்தில், 20, 30 ஆயிரம் சுடல்களை வீசி எதிரியான வன் பிளைமவுத்தை இரண்டு முறை தாக்கி, பல வீடுகளும், 3 கோவில்களும், 2 ஆஸ்பத்திரிகளும், 2 ஸினிமாக்களும் பழுதுபட்டன. பிரிடிஷ் விமானங்கள் படையெடுத்து லோரியன், பிரமென், வில்ஹெல்ம்ஸ்ஹேவன், கொலோன், கீல், எம்டன் முதலிய விடங்களைத் தாக்கியதோடு, பெர்லினையும் இருமுறை எதிர்த்தன. இதில் ஒருமுறை 10,000 கொள்ளிகள் வீசப்பட்டன. பெர்லினை பிரிடிஷ் விமானங்கள் அடிக்கடி தாக்குவதிலிருந்து, தலைநகரை ஹிட்லர் வியென்னாவுக்கு மாற்றப்போவதாக ஒரு வதந்தி யேற்பட்டிருக்கிறது. ஹாம்பர்க் நகரத்திலிருந்து மட்டும், இதுவரையில், 59,000 குழந்தைகள் விமான விபத்துக்குப் பயந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

**தூரக்-கிழக்கு நாடுகள்.**—கயயோன், ஹாட்ஸன், ஹான்காயோ முதலிய இடங்களை ஜப்பானியர்கள் பிடித்துவிட்டதாகவும், பயாஸ்-பே ஸ்வாடோவில் துருப்புகளை இறக்கிவிட்டதாகவும், எதிராக சீனர்கள் கயோஷானைத் திருப்பிப் பிடித்துவிட்டதாயும் செய்தி கிடைத்திருக்கிறது. 4 பறக்கும் கோட்டைகளுள்பட, 40 விமானங்கள் அமெரிக்காவிலிருந்து சைனாவுக்கு வந்திருக்கின்றன. ஜப்பான் அயல்நாட்டு மந்திரி மாஸ்கோவில் ஸ்டாலினையும், மொலடாவ்லவையும் பார்த்துவிட்டு, பெர்லினுக்கு வந்திருக்கிறார்.

| தேதி. | பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும். படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **17—3—41.** (திங்கட்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | இரவில்.—கப்பல் துறைகள், தொழிற்சாலைகளிருக்கும் பிரதேசங்கள்.-ப்ரமன் (Bremen), வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven). | ...... | தகர்க்கப்பட்டன. |
| | பெட்ரோல் சேகரித்து வைத்திருக்கும் தொட்டிகள்.—ராட்டர்டாம் (Rotterdam), எம்டன் (Emden), ஓல்டன் பர்க் (Oldenburg). | நஷ்டமில்லை. | தீக்கிரையாயின. 1 விமானம். |
| | ஒரு பெரிய சாமான் கப்பல்.—ப்ரிஸியன் (Frisian) தீவுகள். | நஷ்டமில்லை. | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விமான நிலயம்.—ஹவாஷ் (Hawash). | ...... | சேதமாயிற்று. |
| | ஒரு ரயில்வண்டி.—ஹவாஷை (Hawash) நோக்கிப் போய்க்கொண்டிருக்கையில். | ...... | வண்டி நின்று விட்டது. |
| | ஒத்தாசை—அபிஸீனியாவில் (Abyssinia) ராணுவ நடவடிக்கை. | நஷ்டமில்லை. | ...... |
| **18—3—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—விரோதியின் கப்பல்கள்.-டச்சு (Dutch)க் கடற்கரை | 1 விமானம் | பல கப்பல்களின் மேல்குண்டு விழுந்தது. |
| | இரவில்.—கப்பல்துறைகள், தொழிற்சாலைகள்.—கீல் (Kiel). | ...... | வெடிகளும், தீயும் கிளம்பின. |
| | கப்பல் துறைகள், தொழிற்சாலைகள்.—வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven). | ...... | பல இடங்களில் தீப்பிடித்தன. |
| | எண்ணெய் தொட்டிகள்.—ராட்டர்டாம் (Rotterdam). | ...... | தீப்பிடித்தன. |
| | கப்பல் துறைகள்.-எம்டன்(Emden) டெக்ஸெல் (Texel). | ...... | ...... |
| | 2 விமான நிலயங்கள்.—ஹாலந்து (Holland). | நஷ்டமில்லை. | சேதமாயின. |



| தேதி. | பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **18—3—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | டிராஸோ.—(Durazzo). | ...... | வெடிகளும், தீயும், கிளம்பின. |
| | மோட்டார் வண்டிகள்.—டெபெலேனி(Tepeleni)க்கு வடக்கே. | நஷ்டமில்லை. | நேரே குண்டு வீழ்ந்தது. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துருப்புகள்.—கெரேன் (Cheren)ச்சுற்றி. | ...... | சுடப்பட்டனர். |
| | ஒத்தாசை.—பிரிடிஷ் சைனியங்கள். | ...... | ...... |
| **19—3—41.** (புதன்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | இரவில்.—ஸப்மரைன் நிலயம்.—லோரியான் (Lorient). | ...... ...... | எங்கும் பெருந் தீ சூழ்ந்தது. |
| | போக்குவரத்து சாதனங்கள், தொழிற்சாலைகள் இருக்குமிடங்கள்.—ரைன்(Rhine) நதியின் கிழக்குக்கரை. | ...... | கட்டடங்கள் தகர்க்கப்பட்டன. |
| | எண்ணெய் தொட்டிகள்.—ராட்டர்டாம் (Rotterdam). | ...... | தீப்பிடித்தன. |
| | 3 விமான நிலயங்கள்.—நெதர்லண்ட்ஸ் (Netherlands). | நஷ்டமில்லை. | சேதமாயின. |
| | விமான நடவடிக்கை.—விரோதி ஆக்ரமித்திருக்கும் நாடுகள். | 1 விமானம் | ...... |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | ராணுவ முக்கியமுள்ள இடங்கள், மோட்டார் வண்டிகள்.—டெபெலேனி (Tepeleni). | நஷ்டமில்லை. | பலத்தசேதம்; எங்கு பார்த்தாலும் தீப்பிடித்தது. |
| | **இதாலிய ஆபிரிக்கா—(Africa).** | | |
| | விரோதி சைனியங்கள்.—கெரேன் (Cheren)ச் சுற்றியுள்ள மலைகள். | ...... | ...... |
| | மோட்டார் வண்டிகள்.—கெரேன் (Cheren) அஸ்மாரா (Asmara) ரஸ்தா. | ...... | பலத்த நஷ்டம். |

| தேதி. | பிரிடிஷ் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 19—3—41. (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa)—தொடர்ச்சி.** | | |
| | தந்தி ஆபீஸ், பியட் (Fiat) தொழிற்சாலைகள், ரயில்வே ஸ்டேஷன்.—அஸ்மாரா (Asmara) டெஸ்ஸி (Dessie). | ...... | ...... |
| | விரோதி விமான நிலயங்கள்.—ட்ரிபோலிடானியா (Tripolitania). | ...... | சேதமாயின. |
| | துறைமுகம், ராணுவ சாமான் கிடங்குகள்.—ட்ரிபோலி (Tripoli). | ...... | பல கப்பல்களில் தீப்பிடித்தது. பல இடங்களில் தீப்பிடித்தது. |
| | தரையிலிருக்கும் விமானங்கள்.—டெமெட் (Temet). | நஷ்டமில்லை. | பல நாசமாயின. |
| 20—3—41. (வியாழக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | ஜெர்மன் ஸப்மரைன் (Submarine) நிலயம்.—லோரியான் (Lorient). | ...... | வெடித்தும், தீயும் கிளம்பின. |
| | பல ஜெர்மன் ஈ (E) படகுகள், ஒரு ஜெர்மன் துணைக்காவல் கப்பல்.—ப்ரிஸியன் (Frisian) கடற்கரை. | ...... ...... | ...... ...... |
| | ஒரு ஜெர்மன் சாமான் ஏற்றிச் செல்லும் கப்பல்.—நார்வே (Norway). | 1 விமானம். | ...... |
| | வேவு பார்த்தல்.— ஆக்ரமிக்கப்பட்டிருக்கும் பிரான்ஸ் (France). | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | இதாலியத் துருப்புகள்.—கொரன (Cheren)ம், கெரெனைச் (Cheren)ச் சுற்றியும். | ...... | பலத்த நஷ்டம். |
| | மோட்டார் வண்டிகள்.—ட்ரிபோலிடானியா (Tripolitania) விலுள்ள மிஸுராடா (Misurata)விற்கும், ஸர்டி (Sirte)க்கும் நடுவிலுள்ள ரஸ்தா. | ...... ...... | ...... ...... |



| தேதி. | பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 21—3—41. (வெள்ளிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—ஒரு விரோதி எண்ணெய் கப்பல்.—பெல்ஜியன் (Belgian) கடற்கரை. | ...... | தீக்கிரையாகியது. |
| | விரோதி யுத்தக் கப்பல்கள், சாமான் கப்பல்கள்.—ப்ரிஸியன் (Frisian) தீவுகள், ஹெலிகோலாண்டு பைட் (Heligoland Bight). | ...... | சேதமாயின. |
| | சாமான் கப்பல்கள்.—நார்வே (Norway) கடற்கரை. | ...... | சில மூழ்கடிக்கப்பட்டன. |
| | சிறிய துறைமுகம்—எகர்ஸண்ட் (Egersund). | | |
| | மோட்டார் படகுகள், விமான கட்டடங்கள்.—நார்வே (Norway). | நஷ்டமில்லை. | ...... |
| | இரவில்.—ஸப்மரைன் (Submarine) நிலயம்—லோரியான் (Lorient). | ...... | வெடித்தும், தீயும் கிளம்பின. |
| | கப்பல் துறைகள்.-ஆஸ்டெண்ட் (Ostend). | 2 விமானங்கள். | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விரோதி சைனியங்கள்.—கெரென் (Cheren). | ...... | ...... |
| | ரயில்வே பாதை—கெரெனு (Cheren)க்கருகே. | ...... | சேதமாயிற்று. |
| | சாமான் கிட்டங்கிகள்.—அஸாப் (Assab). | ...... | ...... |
| | ரயில்பாதை—அடிஸ் அபாபா (Addis-Ababa)வுக்கும், டிரிடாவா (Diredawa)வுக்கும் மத்தியில். | ...... | சீர் குலைந்தது. |
| | ரயில்வே ஸ்டேஷன்—டிரிடாவா (Diredawa). | ...... | ...... |
| | 3 ரயில் வண்டிகள்.-ஹவாஷு (Hawash)க்கும், டிரிடாவா (Diredawa)வுக்கும் மத்தியில். | ...... | " சுடப்பட்டன. |

| தேதி. | பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **21—3—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa)—தொடர்ச்சி.** | | |
| | மோட்டார் வண்டிகள்-ஹவாஷு (Hawash)க்கும், டிரிடாவா (Diredawa)-வுக்கும் மத்தியிலுள்ள ரஸ்தா. | ...... | பலத்த நஷ்டம். |
| | எண்ணெய்க் கிடங்கு—பயோ கபோபா (Biyo Kaboba) பிரதேசம். | நஷ்டமில்லை. | தீப் பிடித்தது. பல இடங்களில் |
| | சாமான் கிட்டங்கி, கட்டடங்கள்—கோண்டார் (Gondar)ல் சைனியங்கள் தங்குமிடம். | நஷ்டமில்லை. | தீப்பிடித்தன. |
| | ராணுவ சாதனங்கள்—ஹாரார் (Harar), டிரிடாவா (Diredawa). | ...... | ...... |
| | மோட்டார் வண்டிகள்—ஹாரார் (Harar), டிரிடாவா (Diredawa). | நஷ்டமில்லை. | சேதமாயின. |
| **22—3—41.** (சனிக்கிழமை). | | | |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | ஒத்தாசை—அல்பேனியா (Albania)விலிருக்கும் கிரேக்க சைனியம். | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விரோதி சைனியங்கள்.—கெரென் (Cheren) பிரதேசம். | ...... | பலத்த நஷ்டம். |
| | ரயில்வே ஸ்டேஷன்.—அஸ்மாரா (Asmara). | ...... | 5 விமானங்கள். |
| | சைனியங்கள் வசிக்குமிடம், சாமான் கிட்டங்கிகள்.—கோண்டார் (Gondar) பிரதேசம். | ...... | கட்டடங்கள் தீக்கிரையாகின. |
| | ரயில் வண்டிகள்.—ஜிபுடி (Jibuti), அட்டிஸ் அபாபா (Addis Ababa) ரயில் பாதை. | ...... | ஒரு ரயில்வண்டி எரிந்துபோயிற்று. |
| | ரயில்வண்டித் தொடர்கள்.—ஆப்டெம் (Afdem), கோடா (Gota). | ...... | சுடப்பட்டன. |
| | மோட்டார் வண்டிகள்-ஹவாஷு (Hawash)க்கும், உர்ஸோ (Urso)வுக்கும் மத்தியில். | ...... | தகர்க்கப் பட்டன. |
| | விரோதி சைனியங்கள்.—மார்டா (Marda) கணவாய். | ...... | ...... |



| தேதி. | பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **23—3—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—ஜெர்மன் சைன்யங்கள் வசிக்குமிடம்-குல்பிரான் (Quilberon) துறைமுகம். | ...... | ...... |
| | ஸ்மரைன் (Submarine) நிலயம். பிரிட்டனி (Brittany). | ...... | தகர்க்கப்பட்டது. |
| | விரோதி துணைக்காவல் கப்பல்.—ப்ரெஸ்ட் (Brest). | நஷ்டமில்லை. | நேரே குண்டு விழுந்தது. |
| | இரவில்.—சாமான் கிட்டங்கிகள், ஆலைகள், முக்கியமான ரயில்வே ஸ்டேஷன்கள், மற்றும் முக்கியமான ராணுவ சாதனங்கள்.—பெர்லின் (Berlin). | ...... | பர்லின் நகரம் ஒரே தீமயம்; பலத்த சேதம். காயம்பட்டவர்களும் அதிகம். |
| | கப்பல்துறைகள்.—செர்பாக் (Cherbourg). | ...... | சைனியங்கள் வசிக்குமிடம் தகர்க்கப் பட்டது. |
| | கடற்படை நிலயம்.—கீல் (Kiel). | ...... | ...... |
| | ஜெர்மனியின் முக்கியமான ரயில்வே ஜங்ஷன், பல இடங்களுக்கு நடுவான இடம்.—ஹனோவர் (Hanover). | நஷ்டமில்லை. | ...... |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | விமான நிலயம், தரையிலிருந்தும் விமானங்கள்.—பேராட் (Berat). | ...... | 2 விமானங்கள் தீக்கிரையாகின. பல விமானங்கள் சேதமாயின. |
| | விமானச் சண்டை.—அல்பேனியா (Albania). | ...... | 2 விமானங்கள் நாசம். பல சேதமாயின. |
| | சைனியங்கள் தங்குமிடம்.—டெபெலேனி (Tepeleni) பிரதேசம். | நஷ்டமில்லை. | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விரோதி ரஸ்தா, ரயில் பாதைகள்.—டிரிடாவா (Diredawa), ஹவாஷ் (Hawash). | ...... | சேதமாயின. |

| தேதி. | பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள் | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **23—3—41.** (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa)—தொடர்ச்சி.** | | |
| | ஒரு சாமான் ஏற்றிச்செல்லும் ரயில்.—உர்ஸோ (Urso). | ...... | குண்டு நேரே ரயிலின் மேல் வீழ்ந்தது. |
| | ஒரு ரயில் வண்டிகள்.—மியெஸ்ஸோ (Miesso)வுக்கருகில். | ...... | பல சாமானேற்றும் வண்டிகள் கவிழ்ந்து விட்டன. |
| | 20 சாமான் ஏற்றும் வண்டிகள், சைனியங்கள்.—அடிஸ் அபாபா (Addis Ababa) வுக்கு சமீபத்தில். | 2 விமானங்கள். | சுடப்பட்டன. |

---

| தேதி. | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **18—3—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—விமானத் தகராறு.—பிரிடிஷ் (British) கடற்கரை. | 2 விமானங்கள். | நஷ்டமில்லை. |
| | இரவில்.—லண்டன் (London) பிரதேசம். | ...... | பலத்தசேதம். |
| | சில பட்டணங்கள்.—தெற்கு, வடகிழக்குக் கடற்கரைகள். | ...... | சில ஜனங்கள் கொல்லப்பட்டனர். |
| | பிரிடிஷ் கப்பல்கள், கப்பல் துறைகள்.—ஹல் (Hull). | ...... | சில கட்டடங்கள் இடிந்தன. எங்கும் தீப்பிடித்தது. |
| **19—3—41.** (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—லண்டன் (London) பிரதேசம் தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம் தெற்குக் கடற்கரை. | ...... | கட்டடங்கள் இடிந்தன. தீப்பிடித்தது. காயம்பட்டவர்கள் அதிகமில்லை. காயம்பட்டவர்களும் சேதமும், சொற்பம் |



| தேதி | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள் | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **20—3—41.** (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில் ஒருபட்டணம்.—கெண்ட் (Kent) கடற்கரை | ...... | வீடுகளுக்குச் சேதம் |
| | இரவில்.—ப்ளிமத் (Plymouth) கிழக்கு ஆங்கிலியா (Anglia). | ...... | பலமான படையெடுப்பு சொற்பச் சேதம்; |
| | ஒரு தென்கிழக்கு கடற்கரைப் பட்டணம்.—லண்டன் (London). | ...... | சிலருக்குக் காயம். |
| **21—3—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—நார்பக் (Norfolk) கடற்கரை கெண்ட் (Kent) கடற்கரை. | ...... | சொற்பச் சேதம் சிலருக்குக் காயம். |
| | இரவில்.—ப்ளிமத் (Plymouth). | ...... | பலத்தசேதம், பலருக்குக் காயம். |
| | ஒரு பட்டணம்.—தென்மேற்கு இங்கிலாந்து (England) | ...... | ...... |
| | மற்றும் சிலஇடங்கள்.—இங்கிலாந்து (England). | ...... | சிலருக்குக் காயம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | ...... | விரட்டியடிக்கப் பட்டன. |
| **22—3—41.** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—கிழக்கு ஆங்கிலியா (Anglia). | ...... | சேதமில்லை. |
| | இரவில்.—இங்கிலாந்தி (England)ல் அங்குமிங்குமாக சில இடங்களில் விமான நடமாட்டம் கொஞ்சம் இருந்தது. | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | ... 1 விமானம். | 3 விமானங்கள். |

| தேதி. | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **23—3—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—ஒரு கப்பல்—வடக்கு ஸ்காத்லாந்து (Scotland)க் கடற்கரை. | சேதமில்லை. | 1 விமானம். |
| | தெற்கு இங்கிலாந்து (England). ... | ...... | சொற்பச் சேதம். |
| | ஒரு பட்டணம்.—தென்மேற்கு இங்கிலாந்து (England). | ...... | ...... |
| | இரவில்.—விமான நடமாட்டமே இல்லை. | ...... | ...... |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | பிரிடிஷ் விமான நிலயம்.—மேற்கு கிரீஸ் (Greece). | ...... | சொற்பச் சேதம் சிலருக்குக் காயம். |
| | **கிரேக்கர் ஆக்ரமித்திருக்கும் அல்பேனியா (Albania).** | | |
| | கிரேக்க சைனியம்.—அயாஸ் (Aoos) நதி. | ...... | சேதமில்லை. |
| **24—3—41.** (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—தென்மேற்கு இங்கிலாந்து (England), வேல்ஸ் (Wales). | ...... | சொற்பச் சேதம். |
| | இரவில்.—தென்கிழக்கு கெண்ட் (Kent). | 1 விமானம் | சேதமேயில்லை. |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

## செல்வத்தால் தர்ம சங்கடம்.

பொது மக்கள் பிரீதியென்றால் லேசல்ல! இந்த எண்ணம் நமது பேச்சுக் காரர்கள் மனதில் நேற்று சாயங்காலம் தோன்றியிருக்கும்! எங்கள் 2 ஸினிமா யந்திரங்களில் ஒன்று வேலை செய்துகொண்டிருந்தது. இந்தப் படங்களில் ஜனங் களுக்கு ரொம்ப ஆசை; இதனால் படமில்லாமல் வெறும் பேச்சுமட்டும் ஏற்பாடா யிருந்த ஒரு கிராமத்தார் எங்கள் வண்டியை நிறுத்தி படம் காட்டவேணும் என்று வற்புறுத்தினார்கள்; படம் வேறு ஒரு கிராமத்தில் ஒருதரம் ஏற்கனவே காட்டப்பட்டிருந்தும் இந்தக் கிராமத்தில் காட்டவேண்டுமென்றார்கள். சரி ஆகட்டும், எங்கள் பேச்சாளர் விடுகல் போய்ச்சேர நடுநிசியானாலும் ஆகட்டும்; ஜனங்கள் இஷ்டப்படி படம் காட்டப்படும்! இன்னுமொரு யந்திரம் வந்து விட்டது, ஆகையால் வேண்டியவரை படங்கள் பார்க்கலாம்.



## சமாசாரமும், சமாசாரமும்.

செய்தியென்றால் நார்த்கிளிப் பிரபு சொன்னது இக்காலத்திற்கு ஒத்ததல்ல. அவர் சொன்னார், ஒரு நாய் ஒரு மனிதனைக் கடித்தால் அதில் விசேஷமில்லை, ஆனால் ஒரு மனிதன் நாயைக்கடித்தால் அது செய்தியாகும் என்றார்!. இந்நாளிலோ செய்திகள் வெகு சிக்கலானவை; படிக்கும் செய்திகளை சரிவர மனதிற்கு வாங்குகிறவன் புத்திமான். இந்தப் போருக்குமுன் முதல் பத்திரிகை விஷயங் களில் ஈடுபட்ட ஒருபேர்போன பத்திரிகை நிருபர் சொல்லும் விஷயங்களிலிருந்து சில குறிப்புகள் இங்கே எழுதுகிறேம். அவர் சொல்லுகிறார், செய்திகள் நான்கு விதமானவை. முதலாவதாக, நியாயமான செய்திகள், இரண்டாவது ஜாடை மாடையாக சொல்லவேண்டிய செய்திகள், மூன்றாவது 'ஒழுகும்படி' இடங் கொடுத்து வெளிவரும்படி செய்து உடனே மறுக்கப்பட்ட செய்திகள், நான்கா வது தாஸ்தவேஜு பலமன்னியில் தலைவர்கள், பத்திரிகைக்காரர்கள் கூட்டங்களில் சொல்லுவதும், ஆனால் வெளியில் ஜாடையாகக்கூட விடக்கூடாததான செய்திகள்.

பிரிடனிலோ, எல்லோரையும்பற்றி, அதாவது எல்லாவித தொழில்கள், விளையாட்டுகள், உடம்பாடு, கொலை, விமானம், தம்பதிகள் விலகுதல் இவை களைப்பற்றியெல்லாம் பத்திரிகைகள், ரேடியோ, ஸினிமா, பிரசங்கங்கள் மூலம் செய்தி பிரவாகம் உண்டு. ஆகையால் செய்தியைப் பற்றிய செய்திகள் என்று வருந்து அமெரிக்கர்கள் சொல்லுவதை நாம் மன்னிக்கலாம்! நமது நாட்டில் பத்திரிகை செய்திகள் சம்பந்தமாக இவ்வளவு தந்திரம் கிடையாது. இருக்கத் தேவையுமில்லை.

## அதிர்ஷ்டமுள்ள பத்திரிகைகள்.

நம்பப்பட்ட அமெரிக்கப் பத்திரிகை நிருபரென்றால் சவுலாகத்தானிருக்கும். அவர்களிடம் எல்லோருக்கும் நம்பிக்கையிருக்கிறது. மேலே நான் பிரஸ்தா பித்த நிருபர் சொல்லுகிறார், அமெரிக்க நிருபர்களுக்கு ஆச்சரியகரமான சமா சாரங்கள் வெளிவர பல நாட்களுக்கு முன்னமேயே தெரிந்தபோதிலும், எவ்வித சித்திரவதை செய்தாலும் சொல்லமாட்டார்கள்! சில தினங்களிற்குமுன் தலைவர் ரூஸ்வெல்ட் தலைமை வகித்த ஒரு மந்திரிசபை நடைபெற்றபோது மேலே சொன்ன நிருபர் இருந்தாராம். கொஞ்சமும் மறைக்காமல் நேர் கேள்வியாக ஒருவர் தலைவரை ஒரு கேள்வி கேட்டாராம். நேர் பதில் கிடைத்திருந்தால் தற்போதய ஸ்திதியில் வெகு சிக்கலான நிலைமை ஏற்பட்டிருக்கும். தலைவர் கோபமன்னியில், கொஞ்சம் அக்கரமான முகத்துடன் மெதுவாய்ச் சொன்னார், "உமது கேள்விக்குப் பதில் 'ஆமா' வென்று உமக்கே நன்றாய்த் தெரியும். ஆனால் அவ்விதம் நான் பதில் சொல்ல முடியாதென்றும் உமக்குத் தெரியும். சமா சாரத்தை வெளிவிடாதேயும்." பிறகு விஷயம் முழுவதும் சொன்னார். பத்திரிகை யில் வரக்கூடிய தடபுடலைக்காட்டிலும் அவர் சொன்னது ரஸமாக விருந்தது; ஆயினும் அது ஒன்றும் பிரசுரப்படுத்தவில்லை.

"அதனினும் விசேஷம் சிங்கப்பூர் சமாசாரமும் பஸிபிக் சமுத்திரக் கப்பல் நிலயங்களை ஒருவழிப்படுத்தும் சம்பந்தமாக பலமுறை பிரஸ்தாபிக்கப்பட்ட

உடன்படிக்கை. சென்ற மூன்று மாத காலமாக இந்த உடன்படிக்கை சமாசாரம் தெரியும். ஆயினும் இதைப்பற்றி கப்பல் படை இலாகா பெரிய அதிகாரி ஒருவரிடம் இதைப்பற்றி நான் சொன்னபோது, அவர் தலையைச் சொரிந்து கொண்டு, சிங்கப்பூரைப்பற்றி ஏதோ பத்திரிகையில் படித்ததுபோலும், ஆனால் சிங்கப்பூர் எங்கே இருக்கிறதென்று தெரியாததுபோலும் பதில் சொன்னார்."

## கரடியின் உருமல்.

பால்கன் நடப்புகளைப்போல் இதைப்பற்றியும் நடப்பு தெரிந்தால் ரஸமாயிருக்குமல்லவா? யூகோஸ்லாவியா புதிரிலிருந்து என்ன தெரியவருகிறது, ஹிட்லர் விமானமூலம் அங்காராவுக்கு அனுப்பிய தூதனுக்கு தலைவர் இனோனு என்ன பதிலளித்தார்? பல்கேரியாவை ஒரு போடு போட்டார்களே ஸோவியட்டார், அது என்ன? இது வெளிவந்ததுமுதல் பற்பல வியாக்கியானங்கள் செய்கிறார்கள். ஆயினும் உண்மை யாருக்கேனும் தெரிந்துதானிருக்கவேணும். அந்த அமெரிக்க நிருபர் என்கிட்ட இப்போ இருக்கக்கூடாதா? இருந்த போதிலும் இது வெகு ரஸமான சமாசாரம், அதன் அம்சங்களில் சிலவற்றைப் பற்றி சர்ச்சை செய்து பார்க்கலாம்.

பால்கன் நாடுகளில் ஜெர்மன் நோக்கங்கள் புலப்படுகின்றன :—

(1) ருஷ்யாவை வசமாக்கவேண்டியது.

(2) துருக்கி நடுநிலைமை வகிக்கும்படி பார்க்க வேண்டியது.

(3) கிரீஸுடன் தனியாக சமாதானம் செய்துகொண்டு, இதாலிக்கு சௌகரியம் செய்ய வேண்டியது.

(4) பால்கன் நாடுகள் பூராவும் நாஸி ஆதிக்கம் வலுத்து ஜெர்மனிக்கு முக்கிய சாமான்கள் வருவதை ஜாஸ்தி பண்ணுவது.

(5) அங்கே பிரிடன் எதிர்க்காமல் முன் ஜாக்கிரதையாகவிருப்பது.

இது இப்போதைக்குப் போதும். இவை கைகூடின பிறகு மேற்கொண்டும் பார்க்கலாம். ஆனால் இவைகளை முதலில் கவனிக்கவேண்டியது. மேலேகண்டவைகளில், முதலாவதைப்பற்றி "பல்கேரியாவால் ஜெர்மன் துருப்புகள் வருவதால் பால்கனில் அமைதி ஜாஸ்தியாகுமென்று ஸோவியட் நம்பவில்லை." மேலும் "பல்கேரியாவின் காரியத்தால் சண்டை ஜாஸ்தியாகி பல்கேரியாவும் சண்டையில் மாட்டிக்கொள்ளும்; இதை ஸோவியட் ஆதரிக்கமுடியாது." இந்த கண்டனமான பேச்செல்லாம் பல பாஷைகளில் பிரசுரப்படுத்தப்பட்டன; அதற்கு ஹிட்லரும் மரியாதையுடன் எதிர்பேச்சு விட்டான். "பிரிடனுடன் சண்டையில் சேராத ஸோவியட்டைப்போன்ற கவர்ன்மெண்டுகள் ஜெர்மனிக்கு மாறான அபிப்பிராயங்கள் கொண்டிருந்தால் கொள்ளட்டும்; ஆனால், பிரிடனை தோற்கடிக்க ஜெர்மன் அவசியமாகக் கருதும் காரியங்களை யாரும் தடுப்பதைப் பொறுக்கமாட்டோம்" என்றான் ஹிட்லர்.



சில வாரங்களுக்கு முன் இவ்வித பேச்சுக்களுக்கெல்லாம் என்ன மதிப்பு வைத்திருந்தாலும் சரி, மேற்கண்ட தேசத்தார் அபிப்பிராயங்களைப்பற்றி "பார்த்தீர்களா" என்று சொல்லலாம். மேலும் நாம் கவனிக்கவேண்டியவை.

(a) யூகோஸ்லாவியா இன்னும் அச்சைச் சேரவில்லை.

(b) சமாதான பேச்சிற்கு கிரீஸ் இன்னம் இடங்கொடுக்கவில்லை.

(c) துருக்கி தயாரான நிலையில் இருந்துகொண்டு வருகிறது.

## கவலைகொண்ட அங்காரா.

வெகு சிக்கலான நிலைமையில் துருக்கியின் நடவடிக்கையை நாம் வெகுமானிக்காமலிருக்க முடியாது. அதன் நிலை ருஷ்யாவுடன் பிணைக்கப்பட்டு இருக்கிறது. ருஷ்யா நாஸி பயமில்லாமல் சாவதானமாயிருக்கிறதென்றால் துருக்கியும் அப்படியே. ஆயினும், எந்த நடுநிலைமை தேசம் நமக்கு சிநேகமென்று எந்த நடுநிலைமை தேசத்திற்குத் தெரியும்? மனதில் ஆசைதான்; ஆனால் பீரங்கிகளும், குண்டுகளும், விமான நிலயங்களும் சூழ, சரீர பயம் கொஞ்சம் ஏற்படுவது இயல்பு. துருக்கி, தலைவலி வந்தவன்போல், ஒருவழிக்கும் போகாமல் நடுநிலைமை வகிப்பது உயர்வு என்று தீர்மானித்ததாகக் காட்டுகிறது; நடுநிலைமையார்களில் யார் தனக்கு சிநேகம் யார் இல்லையென்று சந்தேகப்பட்டாலும், போரில் சேர்ந்த நாடுகளில் எது துருக்கிக்கு சிநேகம் உள்ளது என்று அத்தேசத்தார் நினைப்பது Mr. ஈடனுக்கும், ஸர் ஜான் டில்லுக்கும் அவர்கள் செய்த வரவேற்பிலிருந்து தெரிகிறது.

69400

## மேற்கொண்டும் பிதற்றல்.

விஷயங்கள் மும்மரிக்கும்பொழுது ஜெர்மானியருடைய மிரட்டல் உருட்டல் எல்லாம் ரேடியோ மூலம் பரவுகின்றன. இது அவர்கள் கைவரிசை முறை; இது உலகத்தாருடைய நம்பிக்கையை பெறுவதற்காகவல்ல. தங்கள் ஜனங்களையே உற்சாகப் படுத்துவதற்காகத்தான் அப்படிச் செய்வது. ஆயினும் இச் செய்திகள் இந்தியர்கள் காதுக்கும் எட்டுகிறது. அறியாமையாலோ அல்லது அதிருப்தியாலோ இவைகளைக் கேட்டு பேசவும், முனகவும் சிலர் தயாராக விருப்பதால் சென்ற சுமார் 1 மாத காலத்தில் நடை பெற்ற ஜெர்மானிய பிரசாரத்தைக் கொஞ்சம் அலசிப் பார்ப்போம். ஜெர்மானியர் நோக்கங்களாவன :—

(1) ஜெர்மானியர் ஆசைகளை அதிகரிக்கச் செய்வது.

(2) இதாலியரை தூக்கிவிடுவது.

(3) கிரீஸை பயமுறுத்துவது.

(4) துருக்கியையும் யூகோஸ்லாவியாவையும் பயங்காட்டுவது.

(5) அச்சு தேசத்தார் சார்பாக ஏதேனும் ஒருவகையாய் மாட்டிக் கொள்ளும்படி ஜப்பானை பயமுறுத்துவது.

(6) அமெரிக்காவை அதைரியப்படுத்தி ஒற்றுமை குறையச் செய்கிறது.

இவைகளை மனதிற்கு வாங்கிக்கொண்டு நாம் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

JL
V2;194:19(3M)M,N39
NH1

முக்கியமாக, நமது அரசியல் தலைவர்களும் ராணுவத் தலைவர்களும் முதலில் காரியத்தை நடத்துகிறார்கள், பிறகு பேசுகிறார்கள். பிறகு கவனியுங்கள்.

(1) பிரிடன் சமயத்திற்குத் தகுந்தபடி நடக்கும் சக்தியுடையது; எங்கிருந்து எவ்விதம் தாக்கப்பட்டாலும் எதிர்க்கும் சக்தியுடையது.

(2) தானே எதிரியை எதிர்க்க சக்தியுண்டென்று காட்டிவருகிறது.

(3) ஆக்கிரமித்த நாடுகளில் ஜெர்மனிக்கு வம்பும் வழக்கும் ஜாஸ்தியாகிறது.

(4) அமெரிக்கா முழுப்போடாக உதவி புரியும் கொள்கையை கையாளுகிறது, அத்துடன் அச்சுதேசத்தார் மிறட்டலை கண்டு மயங்காமல் துருக்கியும் கிரீஸும் நிலைத்து நிற்கின்றன.

---

## உலக நாடகத்தில் மாறும் ஸீன்கள்.
## நாடகத்தில் ராட்சஸனின் செய்கைகள்.
## யூகோஸ்லாவியா நாஸிகளின் நிர்ப்பந்தத்தைத் தாங்குமா?

விக்ஹாம் ஸ்டீட் பீ. பீ. ஸீ. யில் பேசியது.

இந்த யுத்த நாடகத்தின் அரங்கு வட கிழக்கு ஆபிரிக்காவிலிருந்து திடீரென்று பால்கன்ஸுக்கும் தூரக் கிழக்குக்கும் மாறிவிட்டதென்று சில நாட்களுக்கு முன் பேசினேன். சென்ற சில நாட்களாக இந்த ஸீன்கள் அப்படியே நிலைத்து நிற்கின்றன; அவைகளில் கதை மட்டில் விருவிருப்பாக முன் செல்கிறது.

நான் மேற்கொண்டிருப்பது இந் நாடகத்தின் விமரிசனம். ஆனதால், ஒவ்வொரு நடிகனும் உலக அரங்கில் அப்போதைக்கப்போது தோன்றும் பொழுது அவன் அவனைப்பற்றி பேசுகிறேன். அதனால் என்ன என்ன நடந்திருக்கிறது என்பதைத் தொடர்ச்சியாகக் கூறுவது எளிது. அதிலிருந்து கதையும் என்னமாக முடியும் என்பதும் ஊகிக்கக் கிடக்கும்.

பால்கன்ஸில் ஒரு விநோத நிகழ்ச்சி துருக்கியும் பல்கேரியாவும், மற்ற தேசங்களுக்கும் அவைகளுக்கும் இருக்கும் ஒப்பந்தங்களுக்கு குந்தகமன்னியில், அனேக விஷயங்கள் சம்பந்தமாக ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றன என்பது.

இதில் முக்கிய அம்சங்கள் இவை:— துருக்கி, பல்கேரியா இவைகளின் மாறாத அந்நிய நாட்டுக் கொள்கை அவை ஆக்கிரமணம் செய்கிறதில்லை என்பது; இரண்டு நாடுகளுக்கும் இடையே பரஸ்பர சிநேக பாவம் இருக்கிறது என்பது; இந்தப் பரஸ்பர நம்பிக்கையையும் நெருங்கிய அண்டை வீட்டுக்காரன் மனப்பான்மையையும் இவ்விரு தேசங்களும் மேன்மேலும் விருத்தி செய்ய விரும்புகின்றன என்பது; வியாபார உறவுகளை அவைகள்



விருத்திசெய்ய விரும்புகின்றன என்பது; அவைகளின் பத்திரிகைகளும் இதே நம்பிக்கையுடனும் சிநேகத்துடனும் நடந்துவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பது.

### அந்நியரின் மனப்பான்மை.

ஜெர்மனி ஏராளமான துருப்புகளை பல்கேரியா மூலம் கிரீஸுக்கு விரோதமாக அனுப்ப ருமேனியாவில் திரட்டி நிறுத்தாமலிருந்தால், சென்ற சில காலமாக பல்கேரியாவுக்குள் ஜெர்மன் தொழில் நிபுணர்கள் ஒருவர் பின் ஒருவராக நுழையாமலிருந்தால், துருக்கி பல்கேரிய ஒப்பந்தத்தைப் பார்க்க சப்புச் சவக்கு என்று தோன்றலாம். வாஸ்தவத்தில் அது சப்புச்சவக்காகவே இருக்கலாம்.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் இந்த ஒப்பந்தம் ஏககாலத்தில் துருக்கித் தலைநகராகிய அங்காராவிலும், பல்கேரியா தலைநகராகிய சோபியாவிலும், பெர்லினிலும் வெளியிடப்பட்டது. ஹிட்லரின் பத்திரிகைகள் இதை ஒரு பெரும் ஜெர்மன் ஸ்தானிக வெற்றி என்று புகழ்கின்றன. ரிப்பன்ட்ராப்பின் அந்நிய இலாகா இவ்வளவு மும்மரமாக இல்லாமல் சற்றுக் குறைவாகவே, இந்த ஒப்பந்தத்தை அதன் விளைவால்தான் நிறுத்துப் பார்க்க வேண்டும் என்று கூறியது.

துருக்கியர்கள் அதில் சந்தோஷமடைந்தனர். கிரேக்கர்கள் அதை நன்று என்றனர். லண்டனில் எல்லோரும் கேட்டார்கள்—நமது கவர்ன்மெண்டும் அங்காராவுக்குச் சமீபத்தில் சென்ற பிரிடிஷ் ஸ்டாப் ஆபீஸர்களுக்கும் இதெல்லாம் முன்பே தெரியுமா, அல்லது அது அவர்களிடமிருந்து ஒளிக்கப்பட்டதா? இதற்கு சீக்கிரம் பதில் அளிக்கப்பட்டது: நம்மடவர்களுக்கு இது முன்பே தெரியும், அவர்களும் அதை ஒப்பினர். சமீபத்தில் பால்கன்ஸ் நாடுகளை அனுஷ்டிக்கும்படி வின்ஸ்டன் சர்ச்சில் புத்திமதி கூறின ஒற்றுமை, தற்காப்பு, இவைகளை இது விருத்தி செய்வதாகும்.

இதில் சந்தேகாஸ்பதம் ஒன்றுதான். இந்தப் பேச்சுகள் முடிவடைய இவ்வளவு நாள் பிடித்திருப்பதேன்? இந்த ஒப்பந்தம் பல்கேரியா, ஜெர்மன் நிர்ப்பந்தத்தை எதிர்த்து நிற்க முடியாது என்பது தெளிவானமேல் இது வெளியிடப்படுவதேன்.?

### துருக்கியும் கிரீஸும் ஒத்துப் போர் செய்யுமா?

ஆனதால்தான் ஜனங்களின் கேள்வி:" துருக்கி, பல்கேரியா ஒப்பந்தத்தில், துருக்கி பல்கேரியாவைத் தாக்கப் போவதில்லை என்பதை உத்தியோக முறையில் விளம்பரம் செய்வதை விட, இதில் ஏதாவது அர்த்தம் உண்டா? ஆனால் பால்கன்ஸ் போக்கை கவனிக்கும் ஒவ்வொரு புத்திசாலிக்கும் இது விளங்கும் விஷயம். ஆனால் ஒப்பந்தம் துருக்கிக்கு ஏற்கனவே இருக்கும் பொறுப்புகளை வற்புறுத்துகிறது—அதாவது, துருக்கிக்கும் கிரீஸுக்கும், துருக்கிக்கும் பிரிடனுக்கும் தற்காப்பு சம்பந்தமாக. ஆகையால் கிரீஸ் பல்கேரியர் மூலம் தாக்கப்பட்டால், துருக்கியும் கிரீஸும் நெருங்கி வேலை செய்வதை இது தடுக்கவில்லை.

பல்கேரியா ஜெர்மன் நிர்ப்பந்தத்திலிருந்து மீளும் என்று நான் யாதொரு பெருந்தொகையும் பந்தயமாக வைக்கத் தயாராக இல்லை." அவ்வாறு பந்தயம் வைப்பதாயிருந்தால் பெர்லின் மிறட்டல்களுக்கு பல்கேரி

யாவைக் காட்டிலும் யூகோஸ்லாவியா அவ்வளவு எளிதில் இணங்காது என்று கொஞ்சம் தொகையை பந்தயம் வைப்பேன்.

### யூகோஸ்லாவியாவின் பழைய சரித்திரம்.

பெர்க்டெஸ்காடெனில் ஹிட்லரை யூகோஸ்லாவியா பிரதம மந்திரியும் அந்நிய நாட்டு மந்திரியும் சந்தித்து சில நாட்களாகின்றன. யூகோஸ்லாவியாவுக்கு ஹிட்லர் அளிப்பதாகக் கூறின சலுகைகளைக் குறித்து ஜெர்மன் துவாரா பல கதைகள் பரவப் பட்டிருக்கின்றன. ஆயினும் நாளது வரை யூகோஸ்லாவியா அவைகளை அங்கிகரிக்கும் என்றாவது, அல்லது அந்நாட்டின் கொள்கையில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்றாவது யாதொரு சின்னமும் தெரியவில்லை.

பால்கன் ஒற்றுமை சம்பந்தமாக 1913 முதல் பல்கேரியாவின் சரித்திரம் நன்றாக இல்லை. பழைய ஸர்பியா, புதிய யூகோஸ்லாவியாவின் சரித்திரம் நன்றாக இருந்திருக்கிறது. 1913-ல் ஆஸ்ட்ரியா ஹங்கேரி, ஜெர்மனி இவைகளால் பல்கேரியா தன் பால்கன் கூட்டாளிகளான ஸர்பியா, கிரீஸைத் தாக்கும்படி தூண்டிவிடப் பட்டது. இரு நாடுகளும் ஒன்று சேர்ந்து பல்கேரியாவுக்கு ஒரு கடுமையான பாடம் கற்பித்தன.

1914-ல் ஜெர்மன் பிரேரணையின் பேரில் ஆஸ்ட்ரியாஹங்கேரி ஸர்பியாவைத் தாக்கிற்று. ஸர்பியன் துருப்புகள் ஆஸ்ட்ரியா ஹங்கேரியப் படைகளை ஏகாங்கியாக நின்று தோற்கடித்தது. அடுத்த வருஷத்தில் ஆஸ்ட்ரியர்கள், ஜெர்மானியர்கள், பல்கர்கள் எல்லோரும் அளவில்லாத சைனியங்களை அனுப்பிய மேல் தான் தோற்றார்கள்.

### புதிய நாட்டின் உற்பத்தி

தோற்ற ஸர்பியன் சைனியத்தின் மீதம் கிரீஸை நோக்கி ஓடிற்று. கிரேக்கர்களும் அடுத்தாற்போல் யுத்தத்தில் பிரான்ஸுடனும் பிரிடனுடனும் சேர்ந்தார்கள். 1918-ல் திருத்தி அமைக்கப் பட்ட ஸர்பியன் சைனியம் யூகோஸ்லாவியா வாலண்டியர்களுடன் ஸலோனிகாவிலிருந்து படையெடுப்பை ஆரம்பித்தது. முன்பு ஆஸ்ட்ரியா ஹங்கேரிக்குச் சொந்தமான யூகோஸ்லாவியா பிரதேசத்துடன் ஸர்பியா இணைந்து புது ராஜாங்கம் ஒன்று நிறுவப்படுவதற்கு இந்த சைனியம் அஸ்திவாரம் போட்டது.

இந்த யுத்தத்தில் கிரேக்கர்களின் தைரியத்தின் கண்காட்சி இன்றியே, இம்மாதிரி யூகோஸ்லாவியர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் யுத்தத்தில் பிறந்த சகோதரத்வ உணர்ச்சி இருந்து வருகிறது.

யூகோஸ்லாவியாவின் வடபாகம், ஸாவா, திராவா என்ற நதிகளிடையே உள்ள அகன்ற சமதரைகள், தற்போதைய யந்திர தாக்குதலுக்கு, ஸர்பியாவின் மலைப்பிரதேசங்களைப் போல, அவ்வளவு காபந்தில்லை என்பது வாஸ்தவம். இந்த சமவெளிகளில் உள்ளவர்கள் பெல்கிரேடில் உள்ள யூகோஸ்லாவியன் கவர்ன்மெண்டு நன்றாக நடத்தாத குரோஷியர்கள் என்பதும் வாஸ்தவம்.

### ஜெர்மானியர்களுக்கு குரோஷியர்களின் எதிர்ப்பு.

இதெல்லாம் இருந்தும் தற்போதைய கவர்ன்மெண்டிலிருக்கும் குரோஷிய பிரதிநிதிகளும்ஜெர்மன் கோரிக்கைகளை அங்கீகரிப்பதை எதிர்க்கிறார்கள் என்று



எனக்கு நம்பத்தக்க முகாந்திரங்கள் இருக்கின்றன. யூகோஸ்லாவியப் படையில் ஸர்பியர்களும் எதிர்ப்பு மனப்பான்மையுடன் இருக்கிறார்கள் என்றும் நம்புகிறேன்.

தவிர ஜெர்மன் ஆதிக்கம் என்றால் என்னவென்பதை அனுபவரீதியாக யூகோஸ்லாவியர்கள் அறிந்தவர்கள். அவர்கள் ஜனநாயகக் கொள்கை நிரம்பியவர்கள். தங்கள் விஷயங்களில் தங்கள் மனதை கூசாமல் சொல்லுபவர்கள். தற்போதைய நெருக்கடியில் தங்கள் லாப நஷ்டங்கள் என்னவென்பதைப்பற்றி அவர்களுக்குத் தெரியும். ஜெர்மனியை எதிர்க்காவிட்டால் அவர்கள் கதி என்னவாகும் என்றும் தெரியும்.

ஹிட்லர் எவ்வளவு தந்திரமாக தான் வேண்டுவது கிரீஸை ஜெர்மானியர்கள் தாக்கும்பொழுது யூகோஸ்லாவியா சும்மா இருக்கவேண்டியது மட்டில் என்று குளிமையாகச் சொன்ன போதிலும், அவ்வாறு இணங்கினால் தங்கள் நாடு பிற உதவியற்று கையற்று விடும் என்பதை அவர்கள் அறிவார்கள்.

கிரீஸை, அதிலும் முக்கியமாக ஏஜியன் கடலிலிருக்கும் ஸலோனிகாவைத் தாக்க ஜெர்மன் துருப்புகளுக்கு இரண்டு மார்க்கங்கள் உண்டு. முதல் பாதை, பல்கேரியாவில் ஸ்ட்ருமா நதிக்கரை ஓரமாக; இது கடினமானது. மற்றொரு பாதை ஸர்பிய நாட்டு நடுவே, மொராவா நதி ஓரமாக; இது எளிய பாதை. ஜெர்மானியர்கள் தங்கு தடையின்றி இவ்விருபாதைகள் மூலம் செல்ல முடிந்தால் பால்கன்ஸில் அவர்கள் கை ஓங்கி நிற்கும். துருக்கியை கிரீஸிலிருந்து தங்கள் சைனியங்களை நடுவே நிறுத்தி அவர்கள் பிரிக்கலாம்.

### மத்திய கிழக்குச் சம்பாஷணைகள்.

இவ்வாறெல்லாம் ஜெர்மானியர்களை தங்கள் இஷ்டம்போல் செய்ய கிரேக்கர்களும் துருக்கர்களும் விட்டு விடமாட்டார்கள். இதை எதிர்க்க அவர்களுக்கு பிரிடிஷ் படைகளின் ஒத்தாசையும் கிடைக்கும்,

இது ஏற்கனவே தெளிந்த விஷயம். அந்நியஇலாகா மந்திரி ஆந்தனி ஈடனும் இம்பீரியல் ஜெனரல் ஸ்டாபின் தலைவர் ஸர்ஜான் டில்லும் மத்திய கிழக்குக்கு வந்திருப்பது இதை இன்னும் தெளிவாக்குகிறது. ஈடனுக்கும், டில்லுக்கும் மத்திய கிழக்கு புதிதல்ல. அங்கு இதற்கு முன் அவர் சென்றிருக்கிறார்கள். சமீபத்தில் ஆதன்ஸுக்கு சென்றிருந்த ஜெனரல் வேவலுடன் அவர்கள் ஆலோசனை செய்திருக்கிறார்கள்.

லிபியாவிலிருக்கும் ஆஸ்ட்ரேலியப் படைகளைப் பார்த்துவிட்டு இங்கிலாந்தில் இப்பொழுதிருக்கும் ஆஸ்ட்ரேலியப் பிரதம மந்திரி மென்ஸீஸைப் போல, ஈடனும் டில்லும் ஹிட்லரின் திட்டங்களைத் தவிர்க்க ராணுவ தந்திர திட்டம் ஒன்றை வகுக்க உதவி செய்வார்கள்.

### பெரும் பந்தயம்.

ஹிட்லரின் நோக்கம் வெளிப்படை. அல்பேனியாவை விட்டு கிரேக்கர்கள் முஸோலினியை அடித்து விரட்டு முன் கிரேக்கர்களுக்கு ஒரு நல்ல சூடு போடுவது. அவனுக்கு மற்றொரு நோக்கமுமுண்டு—பிரிடனுக்கு மத்திய தரைக் கடல், வட ஆபிரிக்கா, மத்திய கிழக்கு இங்கெல்லாம் தொந்தரவு விளைவிக்க வேண்டி ஏஜியன் கடலிலோ அல்லது அதனருகிலோ, தன் விமானப்படைகளுக்குக் கொத்தளங்கள் சம்பாதிப்

பது.

ஹிட்லர் ஆடுவது பெரும் பந்தயத்துக்கு. அது அவனுக்குத் தெரியும், நமக்கும் தெரியும். கிரீஸ், துருக்கிகளுடன் ஒப்பந்தங்களாலும், வட ஆபிரிக்காவில் நமது வெற்றிகளாலும், அவன் எளிதில் பந்தயத்தில் ஜயிக்க முடியாமல் நாம் பார்த்து எதிர்க்கக் கூடிய அனுகூல ஸ்திதியில் இருந்து வருகிறோம். பந்தயத்தில் பரிசு இவ்வளவு பெரிதாயிருப்பதால் தான் ஹிட்லர் தன்னால் இயன்றவரை சண்டை எல்லைகளை விஸ்தரித்து நமது சர்வ சக்திகளையும் ஆட்டி வைக்க முயலுவான்.

---

## யுத்தத்தைப்பற்றி அமெரிக்காவின் அபிப்பிராயம்.
## நேச நாடுகளுக்கு உதவி செய்யவேண்டிய அவசியம்.
## பிரிடிஷ் தொழிலாளர்களின் தலைவரின் எண்ணங்கள்.
## ஐக்கிய நாடுகளில் ஒருவகைப்பட்ட பொதுஜன நோக்கங்கள்.

*பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயத்திலிருந்து ஸர். வால்டர் ஸிட்ரின் பேசியது.*

ஐக்கிய நாடுகளுக்கு விஜயம் செய்து விட்டு சில நாட்களுக்கு முன் திரும்பி வந்த பிரிடிஷ் தொழிலாளிகள் கூட்டத்தின் பொது காரியதரிசியான ஸர் வால்டர் ஸிட்ரின் அவருடைய சுற்றுப் பிரயாணத்தைப் பற்றி பின்வருமாறு ஒலிபரப்பினார்.

அமெரிக்காவிலுள்ள தொழிலாளிகள் கூட்டத்தாரால் அனுப்பப்பட்ட அழைப்புக்கிணங்கி சென்ற நவம்பர் மாதத்தில் நான் ஐக்கிய நாடுகளுக்குச் சென்றேன். நியூஆர்லியன்ஸில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு நான் ஒரு பிரசங்கம் செய்யவேண்டியிருந்தது. அதன் பின் ஐக்கிய நாடுகளிலுள்ள அநேக நகரங்களுக்குச்சென்று பலவகையான கூட்டங்களுக்கு பிரசங்கம் செய்யவேண்டியிருந்தது.

அவர்கள் என்னை இரண்டு காரியங்களைச் செய்யும்படி விரும்பினார்கள். தொழிலாளிகள் சங்கத்தைச் சேர்ந்த நாங்கள் யுத்த நிலைமையைப் பற்றித் தெரிந்து கொண்டதை, ஒன்றையும் மழுப்பாமலும், உள்ளதை உள்ளபடிக்கும் நான் அவர்களுக்குச் சொல்ல வேண்டுமென்பது ஒன்று. யுத்தத்துக்கு உதவி செய்ய பிரிடிஷ் தொழிலாளர் சங்கம் என்ன முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறதென்று சொல்வது மற்றொன்று.

நான் விரிவாகச் சுற்றுப் பிரயாணம் செய்தேன். நான் நியூஆர்லியன்ஸிலுள்ள சபையில் மட்டும் பேசவில்லை. பிறகு ஐக்கிய நாடுகளிலுள்ள ஒவ்வொரு நகரங்களையும் பார்த்தேன். நான் தெற்கேயிருந்து புறப்பட்டு கிழக்கு பாகத்திற்கும், அங்கிருந்து மத்திய மேற்கிலிருக்கும், சிகாகோ, ஓமாஹாவிற்கும் சென்றேன். அதன் பிறகு, ஓமாஹாவிலிருந்து பெரிய கண்டத்தின் வழியாக நிவாடா, டென்வர், ஸான் பிரான்ஸிஸ்கோவுக்கும், கனடாவிலிருக்கும் தொழிலாளிகள் சங்கத்தின் அழைப்பின் பேரில் கனடாவிற்கும் சென்றேன்.



ஆகையால் நான் சொல்லப்போகும் அபிப்பிராயங்களெல்லாம் மூன்றரை மாதத்தில் நான் அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்து அறிந்து கொண்ட விஷயங்களாகும்.

### தப்பான அபிப்பிராயங்கள்.

என்னுடைய முதல் அபிப்பிராயம் என்னவென்றால், பிரிடனின் நிலைமையைப் பற்றி அமெரிக்காவிலுள்ள பொதுஜனங்கள் தவறான அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்களென்பது. நான் மதித்தமட்டில் அமெரிக்க பத்திரிகைகளின் நிருபர்கள் எழுதிய பிரகாரம் பத்திரிகைகள் சமாசாரங்களை வெளியிடுகின்றன. ஆகிலும் அவைகள் சமாசாரங்களை மிகையாகவே விளக்குகின்றனவென்று என்னுடைய அபிப்பிராயம்.

நாம் மிகவும் சிரமமான நிலைமையிலிருப்பதாகவும், இந்த யுத்தத்தை இனிமேல் நம்மால் நடத்த முடியாதென்றும், சமீபகாலத்திலேயே நாம் சரண்புக வேண்டி வருமென்றும் ஐக்கிய நாடுகளிலுள்ள அநேகர் நினைக்கிறார்களென்று அறிய மிகவும் வியப்படைந்தேன்.

இந்த பிரமையைப் போக்க நான் முயன்றேன். நான் கண்ட மற்றொரு தப்பு அபிப்பிராயமென்னவென்றால், அவர்களால் கூடிய வரையில் ஐக்கிய நாடுகள் நமக்கு உதவி செய்ய தீர்மானித்துவிட்டால், அவர்களுடைய எல்லா ஐச்வர்யங்களையும் யுத்த தளவாடங்களை உண்டு பண்ணுவதில் உபயோகப்படுத்தும்படி செய்வது ரொம்பவும் சுலபமான காரியமென்பது: சமாதானமிருக்கும்போது ஜனங்களுக்கு வேண்டிய பாதரக்ஷைகளும், துணிமணிகளும், மோட்டார் வண்டிகளும், வீடுகளும், சாதாரணமாக ஜனங்களுக்கு உபயோகப்படக்கூடிய எல்லா சௌகரியங்களையும் ஏற்படுத்துவதில் முயலும் ஒரு தேசத்தை, விமானங்கள், பீரங்கிகள், டாங்கிகள், யுத்தக்கப்பல்கள் கட்டுவதிலும் யுத்தத்துக்கு வேண்டிய முஸ்தீபுகளையும் ஏராளமாக உண்டு பண்ணச் செய்வேண்டுமானால் சிரமமான காரியம்தானென்று, என்னால் கூடியவரையில் அவர்களுக்குச் சொல்ல முயன்றேன்.

நான் செய்த இந்தப் பெரிய சுற்றுப் பிரயாணத்தால், பிரிடன் சரண்புகுரக் கூடிய நிலைமையிலிருக்கும் என்று நினைக்கிறவர்கள், பிரிடிஷ் ஜனங்களோடு கலந்து கொள்ளாதவர்கள் தானென்றும் நான் வற்புறுத்தினேன். அவர்கள் பிரிடிஷ் மக்களுடைய குணாதிசயங்களை அறிந்துகொள்ளாதவர்கள்.

### யுத்த நோக்கத்தில் பூர்ண நம்பிக்கை.

நான் பிரிடிஷாரின் குணங்களைப் பற்றி பீத்திக்கொள்ளவில்லை. அமெரிக்காவிலுள்ள பொதுஜனங்கள் நம்முடைய மக்களைப்பற்றி ஸ்தோத்திரம் செய்வதையும், சிலாகிப்பதையும் கௌரவத்துடன் மதிப்பதையும் கண்டு உண்மையாக நான் கர்வமடைந்தேன்.

நம்முடைய ஜனங்கள் தீரர்களாகவே அமைக்கப்படவில்லையென்றும், அவர்கள் சாதாரண பொதுமக்களென்றும், ஆபத்துக்காலத்தில் தைரியத்துடனும், வீரத்துடனும் அவர்கள் சண்டை செய்யத் தயாராக விருப்பவர்களென்றும் நான் சொன்னேன். நாம் இந்த விபத்தை சகித்துக்கொள்ளுவதற்கு, முதலில் நம்முடைய யுத்த நோக்கத்தில் நமக்கு ஆழ்ந்த நம்பிக்கை

யிருக்கிறதென்றும் அறிவித்தேன். நாம் யுத்தத்தில் புகுராமலிருப்பதற்கு 25 வருஷங்களுக்கு முன்னால் ஏற்பட்ட கோரமான புசல் காற்றில் உலகம் மறுபடியும் மாட்டிக்கொள்ளக் கூடாதென்றும், நாம் யுத்தத்தில் இறங்கும்படி நேர்ந்து விட்டால், நமக்கு வேறு கதி ஒன்றுமில்லையென்றும் நினைத்தேன். இரண்டாவதாக நம்முடைய ஜனங்களின் தேசீய ஒத்துமையானது, நமது சரித்திரத்தில் இதுவரையில் காணப்படாதபடி அதிகமாக வலுவடைந்து விட்டதென்றும் சொன்னேன். முக்கியமாக, ஐக்கிய நாடுகளிலிருந்தும் அமெரிக்கா கண்டத்திலிருந்தும் இந்த மகா யுத்தத்தில் பிரிடனுக்குக் கிடைக்கப்போகும் உதவியைப் பற்றி பிரிடிஷ் மக்களுக்கு பூர்ண நம்பிக்கையிருக்கிறதென்றும் சுட்டிக் காட்டினேன்,

ஏற்கனவே நம்முடைய ஜனங்களைப் பற்றி எப்படி அமெரிக்காவிலுள்ளவர்கள் சிலாகித்துப் பேசுகிறார்களென்று சொன்னேன். இதைப்பற்றி அதிகமாக விஸ்தரிக்கவேண்டியதில்லை. அமெரிக்க ஜனங்களுக்கு இது பெரிய தீரச்செய்கை என்று தோன்றும்படியாக தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களையும் கொடுமைகளையும் உத்ஸாகத்துடனும் தைரியத்துடனும் சகித்துக் கொண்டுவரும் பிரிடிஷ் மக்களின் ஒரு சிறிய பிரதிநிதி என்று என்னை மதித்து எனக்கு அவர்கள் செய்த மரியாதைகளை மட்டும் நான் சொல்லக்கூடும்.

நம்முடைய யுத்த நோக்கத்தின் நியாயத்தை அமெரிக்க ஜனங்கள் நன்றாய் அறிந்திருக்கிறார்களென்று சொல்வது பிசகல்ல. நாஸிகள் முன்னேற்றத்தை எதிர்ப்பதில் நாம் நியாயமான யுத்தம் செய்கிறோமென்பதை அவர்கள் சந்தேகிக்கவேயில்லை. ஒவ்வொருவரும் அதேமாதிரி அபிப்பிராயப் பட்டார்கள். தனிப்படையாகவும், கூட்டுறவாகவும், யுத்தத்தில் தீவிரமாய்ப் புகுராமல் நமக்கு வேண்டிய எல்லா விதமான உதவிகளையும் செய்ய அவர்கள் தயாராகயிருந்தார்கள். நான் ஒவ்வொருவரும் என்று சொன்னது கொஞ்சம் தவறுதல். அவர்களில் சில விலக்குகள் சகஜமாகயிருக்கக் கூடும். ஆனாலும் அமெரிக்காவிலுள்ள பொதுஜனங்களின் அபிப்பிராயத்தைப் பற்றித்தான் நான் சொல்லுகிறேன்.

## பிரிடனுக்கு ஒத்தாசை செய்யத் தீர்மானம்.

பிரிடனுடைய க்ஷேமத்துக்கு மட்டுமல்ல, அமெரிக்காவின் க்ஷேமத்திற்கும், இந்த உலகத்தின் க்ஷேமத்திற்கும் அவர்களால் முடிந்த அளவு எவ்வகையிலும் நமக்கு அவர்கள் உதவி செய்ய வேண்டியது அவசியமென்று அமெரிக்க ஜனங்கள் தீர்மானம் செய்து விட்டார்களென்று நான் மறுமுறையும் சொல்லுகிறேன்.

யுத்தத்தில் கலந்துகொண்டு யுத்தம் செய்வதாக அவர்களுக்கு நோக்கமில்லை. ஆனாலும் யுத்தத்துக்கு அவசியமான ஒவ்வொரு முறையிலும் நமக்கு உதவ அவர்கள் தீர்மானித்து விட்டார்கள். என்னுடைய பிரசங்கங்களில் நமக்கு வேண்டியவைகள், விமானங்கள், விசேஷமாக வெடிகுண்டு வீசும் விமானங்கள், கப்பல்கள், விமான எதிர்ப்பு பீரங்கிகள், இன்னும் இதர சாமான்களும் தேவையென்று வற்புறுத்தினேன். இந்த உதவிகள் எவ்வளவு வேண்டுமென்றும் எவ்வளவு அவசியமென்றும் அவர்கள் நன்கு



உணர்ந்தார்கள்.

உங்களுக்குத் தோன்றக் கூடிய ப்ரச்னைகள் என்னவென்றால், இந்தத் தேவைகளை அவர்கள் எப்படிக் கொடுக்கப் போகிறார்கள், எம்மாதிரியான உதவிகளை அவர்கள் அனுப்பப்போகிறார்கள் என்றுதான். அமெரிக்காவிலுள்ள விமான உற்பத்திசாலைகளில் அநேகத்தைப் பார்க்க எனக்கு சந்தர்ப்பம் ஏற்பட்டது. இதைப்பற்றி நான் சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

அமெரிக்காவின் உற்பத்திகள் சாவதானத்துடன் மேலும் மேலும் விருத்தியடைந்து வருகின்றன. சென்ற ஜூலை மாதத்தில் விமான உற்பத்தி தொழிற்சாலைகளில் 78,000 மனிதர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். இப்பொழுது 2,50,000 ஜனங்கள் வேலை செய்கிறார்கள். ஜூன்மீ வாக்கில் இந்த சங்கியை ஐந்து லக்ஷத்துக்கு அதிகரித்து விடும். அமெரிக்காவின் விமான உற்பத்தி தொழில்கள் நம்பத்தகாதவண்ணம் விரிவடைந்து வருகின்றன.

அதிகமாகவே தொழிற்சாலைகளும் கட்டப்பட்டு வருகின்றன. இம்மாதிரி நிர்மாணம் செய்யப்படும் ஒரு சாலையை நான் பார்த்தபொழுது இந்த வேலையில் அமெரிக்காவிலுள்ளவர்களுக்கு இருக்கும் உத்ஸாகத்தைக் கண்டு நான் வியப்படைந்தேன்.

அமெரிக்காவில் சிறிது வேலையில்லாத்திண்டாட்டமிருக்கிறது. இது நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது. நான் அங்கே யிருந்தபொழுது 80 லக்ஷம் ஜனங்கள் வேலையில்லாமலிருந்தார்கள். இப்பொழுது அம்மாதிரியான ஜனங்கள் 50 லக்ஷம் தான், அதுவும் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது.



இவர்களை விமான உற்பத்திசாலைகளில் ஏன் அமர்த்தக்கூடாது என்று அநேகர் கேட்கிறார்கள்.

ஆனால் சில ஜனங்களைக் கொண்டு போய் ஒரு சாலையில் அமர்த்தி விமானங்களைச் செய்யச் சொல்ல முடியாது. அவர்களுக்கு வேண்டிய சிக்கலான யந்திரங்களும் ஆயுதங்களும் தயாராகவிருக்கவேண்டும். இவைகளைத் தயாரிப்பதற்கு அநேக நாட்கள் வேண்டும். இவைகளுக்கு வேண்டிய எல்லா முஸ்தீபுகளை தயாரிக்க வேண்டும் இதற்கும் காலதாமதமாகும். சிக்கனங்களைத் தள்ளிவிட வேண்டும். அவர்களுக்குத் தேவையானவைகள், யந்திரங்களும் ஆயுதங்களும், அலுமினிய உலோகமும், தகரமும், தேர்ச்சிபெற்ற வேலையாட்களும்.

அமெரிக்காவின் உற்பத்தி இலாக்கா அதிகாரிகள் இந்த ப்ரச்னைகளைப் பூர்த்தி செய்ய ஏற்பாடுசெய்து வருகிறார்கள். நான் அவர்களுடன் கலந்து பேசினேன். நான் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டுடனும் பேசினேன். அவர் ரொம்பவும் ரோஷிக்கக்கூடிய சக்தி பெற்றவர், பச்சாதாபமுள்ளவர். ஒவ்வொரு விஷயத்திலும் ஈடுபடக் கூடியவர்.

நான் யுத்த முஸ்தீபுகள் தயாரிப்பு இலாகா தலைவரான நூட்ஸன் என்பவருடனும் அவருடைய பிரதிநிதியும், தொழிலாளர் இயக்கத்தில் என்னுடன் ஒத்துழைத்தவருமான மிஸ்டர் ஸிட்னி ஹில்மானுடனும் பேசினேன். இவ்விருவர்களும் எதிர் காலத்தில் நமக்கு நன்மை உண்டாகுமென்று பூர்ண நம்பிக்கையுள்ளவர்கள். ஆனாலும் அவர்கள் விஷயவாதிகள், மிதமான அபிப்பிராயமுள்ளவர்கள்.

### தொழிலாளிகளின் நல்ல ஆசி.

ஐக்கிய நாடுகளில் இம்மாதிரி அதிக உற்பத்திக்குத் தேவையானது முக்கியமாக தொழிலாளிகள் சங்கத்தின் நல்ல ஆசிகள்தான். அமெரிக்காவில் இரண்டு சங்கங்களிருக்கின்றன. அமெரிக்க தொழிலாளிகளின் சங்கமென்றும், தொழிலாளிகள் சங்கங்களின் சமாசமென்றும் இரண்டு உண்டு. சி. ஐ. ஓ. என்று சிறிய பெயருண்டு. இந்த இரண்டு சங்கங்களின் தலைவர்களும் தங்களாலியன்ற அளவு அரசாங்கத்தாருடன் ஒத்து உழைக்கத் தயாராகயிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இவர்களுக்கு அரசாங்கத்தார் போதுமான அளவு மதிப்புக் கொடுக்க வேண்டுமென்று அவர்களின் அபிப்பிராயம். இது ஒரு நியாயமான வேண்டுகோளென்று நான் நினைக்கிறேன்.

பத்திரிகைகளில் ஐக்கிய நாடுகளில் வேலை நிறுத்தம் உண்டாகிறது என்று நாம் கேள்விப்பட்டோம். ஆனாலும் இந்த வேலை நிறுத்தத்தைப் பற்றி மிகையான அபிப்பிராயங்கள் கொள்ள வேண்டாம். இவைகள் சொல்பமானவை, வெவ்வேறு தூரதேசங்களில் ஏற்பட்டவை, அமெரிக்காவின் தொழில் அபிவிருத்தியை இவைகள் பாதிக்கக் கூடியவையுமல்ல. இதோடு ஐக்கிய நாடுகள் யுத்தத்தில் இறங்கவில்லை என்பதையும் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். அவர்களுக்கு உள்ள உரிமையை விட்டுவிட வேண்டுமென்று ஜனங்களை வற்புறுத்துவது ரொம்பவும் சிரமசாத்யம்.

ஆனாலும் அமெரிக்காவின் அரசாங்கத்தார், வழக்குகளைத் தீர்ப்பதற்கு லாயக்கான ஒரு ஏற்பாட்டைச் செய்வார்களேயாகில் நாங்கள் மேலே சொல்லிய வேலை நிறுத்தம் உள்ள உரிமையை இழந்துவிடத் தயாராக இருக்கிறோமென்று அமெரிக்க தொழிலாளிகளின் கூட்டுச் சங்கத்தின் தலைவர்கள் வெளியிட்டார்களென்று எனக்குத் தெளிவாக ஞாபகத்திற்கு வருகிறது.

---

## புதிதாக யூ-படகுகளால் எதிர்ப்பை ஆரம்பிப்பதற்கு ஜெர்மனிக்கு இருக்கும் வலிமை.

## உபயோகப்படுத்தக்கூடிய நீர்மூழ்கிகளின் சங்கியை.

## ஜெர்மானிய கப்பல் கட்டும் சாலைகளின் சக்திகள்.

## எதிர்முறையான ஏற்பாடுகளில் திருப்திகரமான மாறுதல்கள்.

ஸண்டே டைம்ஸ் பத்திரிகையின் கடல் நிருபர் எழுதுகிறார்.

உலகம் முழுவதும் உண்டாகியிருக்கும் ப்ரச்னைகளில் முக்கியமான ஒன்று என்னென்றால் :—"நம்முடைய கடற்படையைத் தாக்க எவ்வளவு யூ-படகுகளை ஜெர்மனி உபயோகப்படுத்தக் கூடுமென்பதுதான்". சென்ற வாரத்தில் ஹிட்லர் சொன்னதெல்லாம் வாஸ்தவமென்று எடுத்துக்கொள்ளலாம். ஒரு புதிய எதிர்ப்பு ஏற்படப் போகிறதென்றும் அது சமீபத்தில் மார்ச்சு அல்லது ஏப்ரல் மாதத்தில் நடைபெறலாமென்றும் ஹிட்லர் பேசினான்.



இங்கே நாம் இந்த எதிர்ப்பு மார்ச்சு மாதத்துக்கு முன்னதாகவே துவக்கப்படுமென்றும் எதிர்பார்த்தோம். ஆனாலும், கப்பல்களின் நஷ்டத்தைப்பற்றி சமீபத்தில் வெளிவந்த கணக்குகளைப் பார்த்தால் டிஸம்பர் மாத ஆரம்பத்தில் இருந்ததைவிட சென்ற இரண்டு வாரங்களில் அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் எதிர்ப்பு அதிகமில்லையென்றும், நமக்குத் தொந்தரவு ஏற்படக்கூடியதாக இருந்த போதிலும், நமக்கு ஏற்பட்ட கப்பல் நஷ்டங்கள் யுத்தத்தின் 17 மாதத்திய சராசரி நஷ்டங்களுக்குக் குறைவாகவேதான் இருக்கிறதென்றும் வெளியாகுகிறது. இதிலிருந்து எதிர்ப்பின் வலிமை குறைந்துவிட்டதென்றும், இந்த சேதம் யூ-படகுகள் சம்பந்தப்பட்டமட்டிலுமல்ல, பின்னும் மேற்கு பிரான்ஸிலிருந்து புறப்பட்டு யுத்தம் செய்யும் விமானப்படைக்கும், வடகடலிலிருக்கும் விமானப் படைக்கும், ஆகாயத்திலிருந்து கண்ணிகள் போடுவதிலும் ஏற்பட்டிருக்கிறதென்றும் விளங்குகிறது. நம்முடைய கடல் மார்க்கத்தில் சம்பவிக்கக்கூடிய அபாயங்களை மதிக்க வேண்டுமானால் இம்மூன்று அம்சங்களையும் கவனிக்க வேண்டும். நம்முடைய அநுபவத்துக்கு எட்டிய மட்டில் நீர்மூழ்கிகளால்தான் நமக்கு முக்கியமாக அபாயம் நேரிடக்கூடும்.

ஜெர்மனியின் கப்பல் கட்டும் நிலயங்களில் புது மாதிரியான யூ-படகுகள் தயாரிப்பதைப்பற்றி கணக்குகளை மிகையாகவே அநேகமாக பெர்லின் நகரத்திலிருந்து பிறரை பயமுறுத்துவதற்காக, வெளியிடுகிறார்கள். ஆனாலும் இந்த மிகையான கணக்குகள் பாரபக்ஷமில்லாத நடுநிலைமை வகிக்கும் நாடுகளிலிருந்துதான் உற்பத்தியாகிறதென்று நினைக்கலாம். 600 முதல் 1,000-க்குள்ளான புதிய கப்பல்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்று அவர்கள் பலதடவை சொல்லியிருக்கிறார்கள்.

இம்மாதிரியான கணக்குகள் பொய்யென்றும் பன்னிரண்டு மாதத்திய பிரயத்னத்தில் ஜெர்மனியின் கப்பல் கட்டும் நிலயங்களின் மொத்த உற்பத்தியை ஐந்து மடங்காகவோ அல்லது பத்து மடங்காகவோ அதிகப்படுத்திச் சொல்லுகிறார்களென்றும் திடஸ்தமாகச் சொல்லலாம்.

நீர்மூழ்கிகளில், 400 டன் இடையுள்ள சிறிய வகுப்பைச் சேர்ந்தவைகளையும் கூட சிறிய மோட்டார் வண்டிகளைப் போலவும் அல்லது இப்போதைய யுத்தத்துக்கு லாயக்கான உடுப்புகளைப் போலவாவது ஏராளமாக உற்பத்தி செய்ய முடியாது. சாமான்களின் இருப்புக்குத் தகுந்தபடி கப்பலின் முக்கியமான பாகங்களையும் யந்திரங்களையும் ஏராளமாய் உண்டுபண்ணிவிடலாம். ஆனால் இவைகள் நீர்மூழ்கிகள் கட்டுவதற்கு அடிப்படையான சாதனங்கள் மட்டும்தான். மிகவும் ஜாக்கிரதையுடன் உண்டாக்க வேண்டிய நுட்பமான பாகங்களடங்கிய யந்திரங்கள் அநேகமிருக்கின்றன. இவைகளை ஒன்றோடு சேர்த்துப் பூட்டுவதற்கு, மேதானிகளின் சொல்படி செய்யக்கூடிய புத்திசாலிகளும், பொறுமை வாய்ந்து வருமான கைத்தொழிலாளர்கள் தேவை. தெடிஸ் என்னும் நீர்மூழ்கியைப் பற்றி விசாரணை நடந்த காலத்தில் ஏற்பட்ட சாக்ஷியங்களிலிருந்து ஒரு ஸப்மரீனுக்கு பாதுகாப்புக்கும், சமுத்திரத்தில் செல்ல லாயக்காகயிருப்பதற்கும்

என்னென்ன அம்சங்கள் முக்கியமானவை என்று நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளலாம்.

நீர்மூழ்கிகள் கட்டுவதில் சாமர்த்தியம் வாய்ந்த தொழிலாளிகள் மற்ற எல்லா இடங்களிலிருப்பது போல ஜெர்மனியிலும் கணக்காகத்தானிருக்கின்றார்கள். டென்மார்க், நார்வே, ஹாலந்து இவைகளில் வெகு வருஷங்களாக நீர்மூழ்கிகள் கட்டப்பட்டு வருகின்றன. இவைகளிலிருந்து இம்மாதிரியான தொழிலாளிகளில் அநேகரை ஜெர்மானியர்கள் வேலைக்கு அமர்த்தியிருக்கிறார்கள் என்பதற்கு ஒருவிதமான சாக்ஷியமும் கிடையாது.

பின்னும் இடவசதியைப்பற்றி ஒரு பிரச்னை உண்டாகிறது. நீர் மூழ்கி என்பது ஒரு தள்ளு படகு அல்ல, சிறிய மோட்டார் படகுமல்ல. 200 அல்லது 300 அடி நீளமுள்ள கப்பல்களை வைப்பதற்குத் தேவையான கப்பல் கட்டும் சாலைகள் ஜெர்மனிக்கு எவ்வளவு யிருக்கின்றனவென்று பிரிடிஷ் கப்பல் கட்டும் நிபுணர்களுக்கு நன்றாய்த் தெரியும். இத்துடன் ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் நாடுகளிலுள்ள கப்பல் கட்டும் சாலைகளையும் சேர்த்துக் கணக்கிட்டாலும், சென்ற பன்னிரண்டு அல்லது 17 மாதங்களாக உற்பத்தி செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் 600 புதிய கப்பல்களுக்குத் தேவையான இடவசதி ஏற்பட்டிருக்கவே முடியாது.

தாராளமாகவே கணக்கிட்டாலும் சென்ற சில மாதங்களில் 150 புதிய படகுகளை ஜெர்மனி உற்பத்தி செய்திருக்கக்கூடும். அமெரிக்காவிலுள்ள கடற்படையைச் சேர்ந்த ஒருவர் இவைகள் 180 என்று அபிப்பிராயப்பட்டார். இந்த எண்ணிக்கை எழுத்து மூலமாக ஏற்பட்டிருக்கலாம். எழுத்து மூலமாயுள்ள கணக்குக்கும் கடலில் உலாவும் கப்பல்களின் சங்கியைக்கும் வித்தியாசங்கள் ஏற்படக் கூடும். இம்மாதிரி வித்தியாசம் ஜெர்மனிக்கு சென்ற யுத்தத்தில் ஏற்பட்டது. எழுத்து மூலமாக உற்பத்தி செய்யும்படி ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்துக்கு மாறாக அரை திட்டம்தான் படகுகள் உற்பத்தி செய்யப்பட்டன.

ஆகையால் கடல் மார்க்கமாய் போகிற வியாபாரத்தை ஒழிக்க ஆறு அல்லது நூற்றிருபது படகுகள் உள்ள ஒரு பலத்தைத்தான் ஹிட்லர் உபயோகிக்கப் போகிறானென்று நாம் எதிர்பார்க்கலாம்.

முதலெடுப்பில் இந்த சங்கியை பயங்கரமாயிருக்கிறது. ஆகிலும் முன்னணியாக உபயோகப்படுத்தக்கூடிய கப்பல்களின் சங்கியை குறைச்சலாகத்தான் இருக்கும். ஆகையால் கணக்கிலிருந்து சிலவற்றைக் குறைத்து எழுத வேண்டிவரும்.

கில்கால்வாயிலிருக்கும் நீர்மூழ்கிகள் பள்ளிக்கூடத்திற்கு புதிய கப்பலோட்டிகளைத் தயார் செய்ய அநேகம் படகுகள் தேவை. நீர்மூழ்கிகளை ஓட்டுகிற வேலைகளைக் கற்றுக் கொள்வதற்காக இடைவிடாது 4,000 நபர்கள் பயிற்சி செய்து வருகிறார்கள். இவர்களில் ஆயிரம் பேர்களுக்கு சமுத்திரத்தில் சென்று ஒரு வாரம் பழக்கம் செய்யவேண்டுமானால், சண்டைப் படையிலிருந்து



20 படகுகளை உண்டாக்கி, பால்டிக் கடலில் பயிற்சிக்காக இவைகளை உபயோகப்படுத்த வேண்டும். இந்தக் கணக்கு அனுமானத்தின் பேரிலல்ல. 1917-18-ம் வருஷத்தில் நடந்த யுத்தத்தில் இந்தப் பள்ளிக்கூடத்திற்கு சொந்தமாயிருந்த பயிற்சிப் படகுகளின் சங்கியை இதுதான்.

மேலும் சண்டைக்கு லாயக்கான படகுகள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் சமுத்திரத்தில் வைத்திருக்க முடியாது. கடலிலிருக்கும் படகுகள், ஓய்வு பெற்றிருக்கும் படகுகள், ரிப்பேர்கள் செய்யப்படும் படகுகள் இவைகள் மாறி மாறிக்கொண்டே யிருக்கவேண்டும்.

நாம் நன்றாய் ஆலோசித்துப்பார்த்தால் அட்லாண்டிக் சமுத்திரத்தில் மூன்று வாரங்கள் உலாவிய பிறகு, கப்பலிலிருக்கும் மனிதர்களுக்கும் கப்பலின் யந்திரங்களுக்கும் ஓய்வு தேவையென்பது நிச்சயம். வைத்திய நிபுணர்கள் ஒவ்வொரு ரோந்து முடிந்தவுடன் மனிதர்களுக்குப் பத்து நாள் ஓய்வு தேவையென்று அபிப்பிராயப்படுகிறார்கள். நாஸித் தலைவர்கள் வைத்திய சாஸ்திரிகளின் அபிப்பிராயத்தை மீறி தங்கள் வேலைக்காரர்களை அதிக காலம் வேலை செய்யச் செய்தாலும், அவர்கள் பன்னிரண்டு மாதங்களுக்கும் முப்பது நாட்களும் வேலை செய்யக்கூடிய தொகுதியாரைத் தேர்ந்தெடுக்க முடியாது.

சொந்த அநுபவத்தைப் பார்த்தால் சுமாராக கப்பல்களின் மூன்றில் ஒரு பாகம்தான் ஒரு வாரத்தில் நன்றாய் வேலை செய்யக்கூடுமென்றும், மற்றொரு பாகம் சிரம பரிகாரம் செய்யவேண்டுமென்றும், மூன்றாவது பிரிவுக்குத் தேவையான சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டுமென்றும் விளங்கும். ஆகையால் ஜெர்மானியர்கள் புதிதாக உற்பத்தி செய்யக் கணக்கிட்டிருக்கும் நீர்மூழ்கிகள் 150 என்று வைத்துக்கொண்டால், ஒரே சமயத்தில் 50 நீர்மூழ்கிகள்தான் எதிர்க்கக்கூடும். இந்த சங்கியையை இன்னும் குறைத்துச் சொல்லலாமென்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகிலும் நம்முடைய எதிர்கால நிலையைப்பற்றி நாம் கவலையோடுதான் யோசிக்கவேண்டியிருக்கிறது.

இந்த அபிப்பிராயமானது நம்முடைய நீர்மூழ்கி எதிர்ப்புக் கப்பற்படையிலிருக்கும் உத்ஸாகமுள்ள, சுறு சுறுப்புள்ள மனிதர்களுக்கு சந்தோஷத்தைக்கொடுக்கும். ஏனென்றால், 1939-ம் வருஷம் ஸெப்டம்பரில் இருந்தது போல், எதிர்ப்பதற்கு ஏராளமான லக்ஷியங்கள் இவர்களுக்குக் கிடைக்கும். நஷ்டமான கப்பல்களின் கணக்குகளைப் பார்த்தால் மாரிகாலம் முழுவதும் கடலிலுலாவும் யூ-படகுகளின் சங்கியை சொல்பமென்று வெளியாகிறது. ஏனென்றால், நஷ்டத்தின் ஒரு பாகமானது விமானப்படையின் எதிர்ப்பினாலும் கண்ணிகளாலும் ஏற்பட்டவை என்று சொல்லலாம். சென்ற சில வாரங்களாக ஜெர்மானிய நீர்மூழ்கிகளுக்கு ஏற்பட்ட நஷ்டங்களைப்பற்றி பகிரங்கமாக ஒன்றும் வெளியிடப்படாத போதிலும், நம்முடைய பிரதம மந்திரி கூறிய பிரகாரம் ஒவ்வொரு வாரமும் இரண்டு அல்லது நான்கு நீர்மூழ்கிகள் நாசமடைந்தன என்று சொல்ல முடியவில்லை. இதற்குக் காரணம் லக்ஷியங்களின் குறைவே ஒழிய நம்முடைய நீர்மூழ்கிகளின் எதிர்ப்பு ஏற்பாடுகளின் சக்திக்குறைவல்ல.

யுத்த ஆரம்பத்தில் யூ-படகுகளை நாம் திடீரென்று தாக்கிய ஏற்பாடுகளுக்கு எதிர் முயற்சியாக, சில தந்திரங்களை ஜெர்மானிய சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கலாம். அவர்களுடைய மின்சாரக் கண்ணிகளை ஒழிக்க நாம் வெகு சீக்கிரமாக ஒரு உபாயத்தைக் கண்டுபிடித்தோம். அதேபோலவே அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு முறைகளை ஜெர்மானியர்களும் கண்டுபிடித்திருக்கக்கூடும். ஆனாலும் யுத்த காலத்தில் சாஸ்திரங்களின் அபிவிருத்தி வெகு வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. பதினேழு மாதங்களுக்கு முன் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் யூ-படகுகளின் எதிர்ப்பை முதல் முதலில் தகர்க்க ஆரம்பித்த பொழுது நாம் கைக்கொண்ட முறைகளையே இன்னும் நாம் உபயோகப்படுத்தப் போகிறோமென்று சொல்லமுடியாது.

முடிவாக, அதிக தீவிரமாக நீர்மூழ்கிகளைக் கொண்டு கடல் மார்க்கமாக நமக்குக் கொண்டுவரப்படும் சாமான்களை தாக்கப் போவதாகச் சொல்லும் ஹிட்லரின் வெருட்டலிலிருந்து, முன்னொரு காலத்தில், அதாவது 1917-ல் கெய்ஸரின் தங்குதடையில்லாத எதிர்ப்பினால் உண்டான பயத்தைவிட ஜாஸ்தியான பயம் நமக்கு ஏற்படுமென்று நினைக்க முடியாது. நாம் தயாராகவில்லாத சமயத்தில் நம்மை அவர்கள் எதிர்த்தார்கள். இந்த புதிய எதிர்ப்பினால் ஆரம்பத்தில் சில வாரங்களில் அதிகக் கஷ்டமான நிலைமை ஏற்படக்கூடும். ஆனாலும் கடைசியில் 1918-ம் வருஷத்தில் நடந்தது போல் வெற்றி நமக்குத்தான் கிடைக்கப்போகிறது.

---

## வட ஆபிரிக்காவில் பிரிட்டிஷாருக்குக் கிடைத்த வெற்றிகளின் பலன்கள்.

## குடியேறு நாடுகள் யுத்தத்தில் இறங்குமா?

## சமாதான தூதுகளின் நடவடிக்கைகளில் மாறுதல்.

## தளகர்த்தர் வேகாண்டு அதிகாரத்துக்குட்பட்ட விமானங்களும், யுத்தக் கப்பல்களும்.

டெயிலி டெலிகிராப்பின் லிஸ்பனிலுள்ள நிருபர் மார்ச்சு மீ 6உ தந்திமூலம் தெரிவிக்கிறதாவது:—

இதாலியர்களிடமிருந்து பிரிட்டிஷாருக்குக் கிடைத்த வெற்றிகளும், சுயேச்சை பிரெஞ்சுப் படைகள் செய்திருக்கும் அரிய வேலைகளும், வட ஆபிரிக்காவில் உள்ள பிரெஞ்சு நாடுகள் பூராவும் சந்தோஷத்தையும், சமீப காலத்தில் வெற்றி நம்பிக்கையையும் பரவச் செய்திருக்கிறது.

எங்கே பார்த்தாலும் ஜனங்களெல்லோரும் நாம் எப்பொழுது மறுபடியும் யுத்தம் செய்ய ஆரம்பித்து பிரான்ஸ் தேசத்தை சுயேச்சை அடையும்படி செய்யப் போகிறோமென்று ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.



நேசதேசங்களின் படைகள் லிபியா எல்லைச் சரகத்தில் இறங்கியவுடன் பிரெஞ்சு வட ஆபிரிக்கா பூராவிலும் ஒரு பொதுக் கலவரம் ஏற்படக்கூடுமென்றும், அச்சுநாடுகளின் சமாதான கோஷ்டியாரைத் தூரத்தியடிக்கும் தருணம் வந்துவிடுமென்றும் சிலர் நம்புகிறார்கள். இன்னும் சிலர்கள் டினிஸியா, அல்ஜீரியா, மொராக்கோ கடற்கரையில் பிரிட்டிஷ் துருப்புகள் இறங்கக்கூடுமென்று எதிர்பார்க்கிறார்கள். மேற்குப்பக்கமாக நோக்கும் கஸாப்ளாங்காவில் அமெரிக்காவின் ராணுவப் படை இறங்கக்கூடுமென்று வதந்தி உலாவுகிறது. கூடிய சீக்கிரத்தில் ஐக்கிய நாடுகளும் யுத்தத்தில் சேர்ந்த ஒரு தேசமாக மாறிவிடுமென்று ஒவ்வொருவரும் நம்புகிறார்கள்.

கடற்கரை வழியாக வெகு தூரம் பிரயாணம் செய்த ஒருவர் இப்பொழுது இருக்கும் நிலைமையைப்பற்றி முதல்தரமான விருத்தாந்தம் சொல்லியிருக்கிறார். அவர் அபிப்பிராயப்படி வட ஆபிரிக்காவிலுள்ள ராணுவத்தாருக்கும், சாதாரண ஜனங்களுக்கும், ஹிட்லருடைய சாக்கிருகளுக்கும், பிடேன் மறுதளிப்புகளுக்கும் காரணமானது இனிமேல் ஆபிரிக்கா தேசத்தைப்பற்றி ஏற்படாதென்று உணர்ச்சி உண்டாகிவிட்டது.

குடியேற்ற நாடுகளின் சேனைகள் மார்ஷல் பிடேனிடமிருந்து உத்தரவு கிடைத்த அளவில் யுத்தம் செய்யத் தயாராக இருக்கிறார்களென்றும், விஷியிலிருந்து வரும் உத்தரவுகள் எப்படியிருந்தாலும் சரி, அவர்கள் எந்நிலைமையிலும் யுத்தம் செய்யப் போகிறார்களென்றும் அவர் நம்புகிறார்.

மேலும், ஜெர்மனியோடு ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒப்பந்தத்தின் ஷரத்துக்களை வட ஆபிரிக்காவிலுள்ள பிரெஞ்சு நிலயங்களைக் கொடுப்பதன் மூலம் அதிகப்படுத்த விஷி அரசாங்கத்துக்கு அதிகாரமுமில்லை. எவ்வளவு பலவந்தம் ஏற்பட்டாலும் அம்மாதிரியான ஒரு ஒப்பந்தத்தில் பிடேன் கையெழுத்துச் செய்யமாட்டாரென்று எல்லோரும் நினைக்கிறார்கள். வட ஆபிரிக்காவிலுள்ள பிரெஞ்சு தேசத்தின் பெரும்பான்மை ஜனங்களும், சைனியங்களும், கீழ் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களும் எப்பொழுது மறுபடியும் யுத்தத்தைத் துவக்கப்போகிறோமென்று எதிர்பார்க்கும்பொழுது தளகர்த்தர் வேகாண்டும் மேல் அதிகாரிகளும் ரொம்பவும் சரியான நடுநிலைமையை வகித்து வருகிறார்கள்.

விஷி அரசாங்கத்தாரின் உத்தரவை அவமதிக்கும்படிக்காவது, அல்லது சமாதான உடன்படிக்கையின் ஷரத்துக்களை நிராகரிக்கக்கூடியதாகவாவது, ஒரு விதமான வார்த்தைகளையாவது அல்லது செய்கைகளையாவது வேகாண்டு நிகழ்த்தவில்லை. அவர் தன்னுடைய துருப்புகளை உன்னதமான தேர்ச்சியைப் பெறும்படிக்குத் தயார்கள் செய்துகொண்டு இருக்கிறார். அவருக்கு அந்தரங்கமான சில உத்தியோகஸ்தர்களின் கூட்டங்களில் அவர்களுக்கு மனோதைரியம் ஏற்படும்படிக்கும், அவர்கள் தயாராகவே இருக்கும்படிக்கும் இடைவிடாது இவர் பிரசங்கங்கள் செய்து வருகிறார். ஆனாலும், வாலிபர்களான உத்தியோகஸ்தர்கள் பிரிட்டனிடம் அவர்களுக்கு இருக்கும் அனுதாபத்தை வெளிப்படையாக அறிவிக்கிறார்கள். அநேக தடவைகளில் பிஸர்ட்டாவிலிருக்கும்

விமானங்களைத் தாக்கக்கூடிய பீரங்கிகளை பிரிடிஷ் விமானங்களைச் சுட்டுத் தள்ளும்படி கட்டளையிட்டபொழுது அங்கிருந்த உத்தியோகஸ்தர்கள் கீழ்ப் படிய மறுத்துவிட்டார்கள்.

ஓரானில் நடந்த கடல் யுத்தத்திற்குப் பிறகு பிரிடிஷாரிடம் ஜனங்களுக்கு அருவருப்பு உண்டாகியபோதிலும் இதேமாதிரியான சம்பவங்கள் ஏற்பட்டன வென்று என்னுடைய நேயர் அறிவித்தார்.

கடற்கரைமேல் பிரிடிஷ் விமானங்கள் பறந்தபொழுது அவைகளை சுட்டு வீழ்த்த உத்தரவு சாதாரணபொழுது, விமான எதிர்ப்பு பீரங்கிகளை ஓட்டும் உத்தியோகஸ்தர்களைக் குறிப்பன்னியில் சுடும்படி கஸாப்ளாங்காவிலுள்ள வாலிப உத்தியோகஸ்தர்கள் வேண்டிக்கொண்டார்கள்.

பிரெஞ்சு ஆபிரிக்காவிலுள்ள சமாதான கோஷ்டியின் வேலை, இதாலியின் தோல்விகளால் விசேஷமாக பாதிக்கப்படுகிறது. கஸாப்ளாங்காவில் இதாலியைச் சேர்ந்த சமாதான கோஷ்டியார் தானாகவே அவர்களுடைய தலைமுகாமாகிய ஹோட்டல் ஆம்பா என்னுமிடத்தில் கைது செய்யப்பட்டு பகலும் இரவும் போலீஸ் பந்தோபஸ்துடன் இருந்து வருகிறார்கள்.

இந்தக் கோஷ்டியார் முதல் முதலில் வேலை துவக்கியபொழுது இவர்கள் தங்கள் உடுப்புகளை போட்டுக்கொண்டு தெருக்களில் அடிக்கடி போய்க்கொண்டும் நகரத்திலுள்ள போஜன சாலைகளில் சாப்பிட்டுக் கொண்டும் திரிந்தார்கள்.

இப்பொழுது அவர்கள் பொது ஜனங்கள் போல் ஆடை அணிந்து கொண்டிருக்கிறார்கள். அநேகமாய் வெளியில் புறப்படுவதில்லை. அவர்கள் இருக்கும் இடத்திலேயே சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் கோஷ்டியின் தலைவர் தனக்காகவும், தன்னுடைய ஆபீஸர்களின் உபயோகத்துக்காகவும் ஒரு விமானம் வைத்திருந்தார். ஒரு சமயம் இந்த விமானம் கஸாப்ளாங்கா ராணுவ விமான நிலயத்திலிருந்தபொழுது இரண்டு பிரெஞ்சு உத்தியோகஸ்தர்களும், ஒரு யந்திர வேலை செய்பவனும் அதில் ஏறிக்கொண்டு புறப்பட்டார்கள். இந்த விமானம் திரும்பி வரவேயில்லை. ஆனாலும், அவர்கள் ஜிப்ரால்டருக்குப் பறந்து சென்றுவிட்டார்களென்று ஊகிக்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சிக்குப் பதிலாக ஒரு நடவடிக்கையும் இந்தக் கோஷ்டியார் எடுத்துக்கொள்ளவில்லையென்பது கவனிக்கத்தக்கது. அவர்களுக்கு இருந்த மதிப்பு முற்றிலும் குறைந்துவிட்டது. ஆகையால் போலீஸ் அதிகாரிகளும் மற்ற உத்தியோகஸ்தர்களும் அவர்கள் விடுவிக்கும் உத்தரவுகளையாவது அவர் களுடைய கக்ஷிகளையாவது கவனிக்கிறதில்லை.

ஓரானில் இந்தக் கோஷ்டியார் "ஹோட்டல் காண்டினென்டல்" என்னும் இடத்தில் வசித்து வந்தார்கள். இதாலியர்கள் தவிர இந்தக் கோஷ்டியில் அநேக ஜெர்மன் உத்தியோகஸ்தர்களிருக்கிறார்கள். இங்கிருக்கும் கோஷ்டி கஸாப்ளாங்காவிலிருக்கும் கோஷ்டியைப்போல அவ்வளவு கெடுதியடையவில்லை.



ஆகிலும், பிரெஞ்சுக்காரர்களின் கீழ்தர உத்தியோகஸ்தர்களும், சிறிய வேலைக்காரர்களும், தங்கள் வேலைகளைச் செய்யும் விஷயத்தில் இந்தக் கோஷ்டி யாருக்கு மனதார இடையூறுகள் செய்வதோடு, வேலைகளுக்குக் கெடுதல் ஏற்படும் படி சதியாலோசனை செய்தும் வருகிறார்கள்.

ராஜீய நிலைமையைப் பார்த்தால்- மொராக்கோவானது பிரெஞ்சுக்காரரைச் சேர்ந்த வட ஆபிரிக்காவிலுள்ள மற்ற எல்லா தேசங்களைக் காட்டிலும் ஜெர்மனி, இதாலி இவைகளின் கட்டாயத்தை அதிகமான வலுவுடன் எதிர்க்குமென்று தெரிகிறது. ஜனங்களிடம் அதிக வியாபகம் வாய்ந்த ஸுல்தான் விஷி துரைத் தனத்தாருக்கு எச்சரிக்கை அனுப்பியிருக்கிறார். அச்சு வல்லரசர்களை ஸ்தாபிக் கிறதையாவது, கடல் நிலயங்களை அளிப்பதையாவது, அல்லது அதிகார வர்க்கத்தாரை மாற்றுவதையாவது ஒப்புக்கொள்ளமாட்டோமென்று அறிவித் திருக்கிறார். இம்மாதிரியான ஏற்பாடுகள் ஏதாவது ஆரம்பிக்கப்பட்டால் ஐக்கிய நாடுகளின் உதவியை அவர் நாடுவாரென்றும் அறிவித்தார்.

பிரெஞ்சு வட ஆபிரிக்காவில் யுத்த ஏற்பாடுகள் செய்வதிலிருந்து அச்சு வல்லரசர்களுக்கு சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. எல்லா பாதுகாப்புகளையும் கலைத்துவிட்டு பிரெஞ்சு தலைநகரங்களில் சாமான்கள் சேமிப்பதையும், யுத்த தளவாடங்களை ஏற்றுமதி செய்வதையும் தடுத்துவிட்டால் பிரிடிஷாருக்கு உதவி செய்யக்கூடிய ஒரு படை அங்கே வந்து இறங்க வழிகாட்டியதாக ஆகி விடுமென்றும், மத்தியதரைக்கடலில் இதாலிய கடல்பலம் சின்னாபின்னப் பட்டிருக்கும் இந்த சமயம் அது சுலபமாக நேரிடக்கூடுமென்றும் அவர்கள் பயப்படுகிறார்கள்.

அல்ஜீரியாவிலும், மொராக்கோவிலும் நடந்து வரும் விமானங்களின் அணி வகுப்பைப்பற்றி என்னுடைய நேயர் நல்ல அபிப்பிராயம் கொண்டதாக அறி வித்தார். ஜெனரல் வேகாண்டிடம், கடற்கரையில் ரோந்து செய்யக்கூடிய படை களும், சாரண வேலைக்கு லாயக்கான விமானப் படையும், இவைகளில் கர்டிஸ், டி. வாயிடின், மொரான்ஸ் 406 இவைகளோடும் கூடிய அநேக படைகளும் இருக்கின்றன.

நமது பிரயாணி அநேக குண்டு வீசக்கூடிய விமானங்களையும் கண்டாராம். இவைகள்தான் டக்லஸ், க்ளென் மார்டின், போடெஸ் (63), ப்ருகெட் (690) என்பவைகள். இந்த விமானங்கள் அடிக்கடி ரோந்து சுற்றிக்கொண்டும் ஒவ்வொரு நாளும் கஸாப்ளாங்கா விமானப் பொட்டலில் கடுமையான பயிற்சி களைச் செய்துகொண்டுமிருப்பதனால் பெட்ரோல் எண்ணெய்க்குக் குறைவே இல்லை என்று வைத்துக்கொள்ளலாம்.

கஸாப்ளாங்கா துறைமுகத்தில் அநேக கப்பல்கள் சேர்த்து வைக்கப் பட்டிருக்கின்றன. இவைகளில் மிகவும் பெரிதானது ஜீன் பார்ட் என்னும் 35,000 டன் இடையுள்ள சண்டைக் கப்பல்.

சமாதானம் பேச ஆரம்பித்தபொழுது இதை சத்துருக்கள் எடுத்துக் கொள்ளுவதற்கு முன்னாகவே அறை குறையாக கட்டப்பட்டிருந்தபொழுது

ஸெயின்ட் நாஸரே என்னுமிடத்திலிருந்து இதை இழுத்துக்கொண்டு வந்துவிட்டார்கள்.

இந்தக் கப்பலில் வேலைக்காரர்கள் இடைவிடாது பகலும் இரவும் வேலைசெய்து அதை பூராவும் கட்டிவிட்டார்கள். ஆனாலும், இதற்கு பீரங்கிகள் தேவை. இதனுடைய பீரங்கிகள் ஜெர்மன் அதிகாரத்துக்குள்பட்ட தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டு வருகின்றன. ஃஸாப்ளாங்கா துறைமுகத்திலும் லேசான க்ரூயிஸர்களும், நாசகாரிகளும், நீர்மூழ்கிக் கப்பல்களின் ஒரு கூட்டமும் இருக்கின்றன. இவைகள் தவிர அநேக சாமான் ஏற்றிச் செல்லக்கூடிய கப்பல்களும், போக்குவரவுக்கு சாதகமான கப்பல்களும், 10,000, 12,000 டன்கள் இடைமானமுள்ள அநேக கப்பல்களுமிருக்கின்றன. இந்த வியாபாரக் கப்பல்களும், யுத்தக் கப்பல்களும் அடிக்கடி நன்றாய் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

---

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

---

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

---

### த்வனிக்கிறதாம்.

கிரீஸை சமயத்தில் கைவிட பிரிடன் தீர்மானித்து விட்டதாக மார்ச்சு 9-ம் தேதியன்று மிஸ்டர் வெர்னன் பார்ட்லெட் செய்த ஒலிபரப்பிலிருந்து த்வனிப்பதாகச் சொல்லிப் பாசாங்கு செய்து, ஜெர்மனி தன் சொந்த ஆசையை வெளிப்படுத்துகிறது.

பார்ட்லெட் அவ்விதம் சொல்லியிருக்க மாட்டாரென்பது சொல்லாமலே விளங்கும். அச்சுநாடுகளுக்கு இம்மாதிரியாகப் பொய் பேசுவது புதிதொன்றுமில்லை. இதாலியானது படையெடுத்தபோது கிரீஸுக்கு பிரிடன் உதவி செய்யாதென்று ஜெர்மனி கட்டிவிட்டது; ஆரம்பத்தில் இதாலியும் அதே சங்கை ஊதிற்று. பிறகு, அதை மாற்றிக்கொண்டு, இதாலியானது "கிரேக்க சைனியம் பிரிடிஷார்களால் அமைக்கப்பட்டிருக்கிறது—பிரிடிஷ் பீரங்கிகளைக் கொண்டு சண்டை செய்யப்படுகிறது, விமானங்களெல்லாம் பிரிடிஷ் விமானங்கள்தான், தலைமை வகிப்பவர்களும் பிரிடிஷ் சேனாதிபதிகள்," என்று சொல்லிக் கொண்டது.

ஜெர்மானியர்கள் இவ்விதம் அவதூறு பேசுவதற்கு மற்றொரு காரணமும் இருக்கலாம்: நம்பினவர்களை கைவிடுவது இவர்களுடைய வழக்கம். கிரேக்கர்கள் முஸோலினியை கிரீஸிலிருந்து அடித்துத்துரத்தும் போதெல்லாம் சும்மாயிருந்துவிட்டு, மிஞ்சிய, இந்த சமயத்தில், ஜெர்மனி உதவி செய்ய யோசிக்கிறது. இதாலியைப்போன்ற ஒரு பெரிய தேசத்தை கிரீஸ்போன்ற ஒரு சிறிய தேசம் இதுவரையில் இவ்வளவு கேவலமாய் அவமானப்படுத்தியதில்லை. ஜெர்மனியின்



உதவியும் பயன்பட்டதாகக்காணோம். பிரிடிஷ் துணைகொண்டு கிரீஸுக்குப் போகும் கப்பல்களை ஸிஸிலியில் வைக்கப்பட்டிருக்கும் ஜெர்மன் விமானங்கள் தடுக்க முடியவில்லை; கிரீஸுக்கும், பல்கேரியாவுக்கும் பொதுவான எல்லையில் ஜெர்மன் படைகள் பலமாய் வைக்கப்பட்டிருந்தும், முஸோலினியே நேரில் வந்து சண்டை செய்தும், சென்ற வாரத்தில் இதாலியர்களுடைய படையெடுப்பையெல்லாம் கிரேக்கர்கள் தடுத்து விட்டார்கள்.

### பொய் ஜோஸ்யம்.

இந்த வருஷம் முடிவதற்குள் ஜெர்மனி யுத்தத்தை வெற்றிகரமாய் முடித்துவிடுமென்று டாக்டர் கோயபல்ஸ் ஸ்பெயின் பத்திராதிபர்களுக்குச் சொன்ன பொய் ஜோஸ்யத்தைத் திருப்பிச்சொல்லி ஜெர்மன் ரேடியோ பிரமாதப்படுத்துகிறது.

இவர் யேற்கனவே சொல்லிய ஜோஸ்யங்களெல்லாம் பலிக்காமல் போயின. இவைகளில் சில கீழே காணலாம்:—

1. இங்கிலாந்தை வென்று, 1940, ஆகஸ்டு 15-ம் தேதியன்று பக்கிங்ஹாம் அரண்மனையில் தன்னிஷ்டப்படி சமாதானம் பிரகடனம் செய்யப் போவதாக சொன்ன பேச்சு வீணாயிற்று.

2. "டன்கர்க்கிலிருந்து பிரிடிஷ் சைனியங்களை அப்புறப்படுத்த முடியாதென்றார்கள்." (1940 மே 28. ஒலிபரப்பு)—ஆனால் படைகள் அப்புறப்படுத்தப்பட்டன.

3. "பிரிடிஷ் வியாபாரக் கப்பல்களையெல்லாம் இரண்டே மாதங்களில் அமிழ்த்தி விடுவதாகச் சொல்லப்பட்டது." (1940 ஆகஸ்டு 7. ஒலிபரப்பு); ஒன்றையும்காணோம்.

4. "60 நாட்களுக்குள்ளாக இங்கிலாந்து தோல்வியடையுமென்றார்கள்," (1940 ஆகஸ்டு 15) : பிரிடனுக்கு ஒரு குறைவும் ஏற்படவில்லை.

மேற்சொன்ன 60 நாட்கள் கழிந்தவுடன், 1940 அக்டோபர் 12-ல், ஹாஹா பிரபுவே சொன்ன சில வார்த்தைகளை நாம் இப்பொழுது கோயபல்ஸுக்கு புத்திமதியாகச் சொல்லலாம். "சமீபத்தில் நிறைவேறக் கூடிய காரியங்களைப் பற்றி ஜோஸ்யம் சொல்லாதே: ஜோஸ்யம் பலிக்காது போய் ஜோஸ்யனுக்கு அவமானம் வந்துவிடும்."

### உணவைப்பற்றிய ஒரு குறிப்பு.

பெல்ஜியமானது ஜெர்மனியால் பிடிக்கப்பட்டதிலிருந்து பஞ்சத்தால் கஷ்டப்படுகிறது. இதற்காக மிஸ்டர் ஹூவரென்பவர் உணவுப்பொருள்களை பெல்ஜியத்துக்கனுப்ப இங்கிலாந்தின் அனுமதியைக் கோருகிறார். வரும் உணவை

ஜெர்மனி பிடுங்கிக் கொள்ளுமென்று இங்கிலாந்து மறுக்கிறது. பெல்ஜியத்துக்கு உணவைத் தேடுவதில் ஜெர்மனி கவலை கொண்டிருப்பதினால் அது பெல்ஜியத்துக்கு வரும் உணவை அபகரிக்காதென்று ஹூவர் சொல்லுகிறார். பகைவன் படும் கவலையையெல்லாம் தீர்த்துவைப்பது இங்கிலாந்தின் கடமையில்லை.

---

## B—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

---

### பிரிடிஷ் விமானங்களின் யந்திர உயர்வு.

ஜெர்மனிக்கும், இதாலிக்கும் பிரிடனைக்காட்டிலும் விமான பலமதிகமாதலால் மால்டாவின்மேல் அச்சுநாடுகளெடுத்திருக்கும் படையெடுப்பை பிரிடனால் தடுக்க முடியாதென்று மார்ச்சு 11-ல் இந்துஸ்தானியிலும், அராபியிலும் ஜெர்மனி ஒலிபரப்பிற்று. எண்ணிக்கையில் அச்சுநாடுகளுக்கு அதிக விமானங்களிருந்த போதிலும், யந்திர அமைப்பிலும், விமானிகளின் தைரிய, வீரியங்களிலும் பிரிடிஷ் விமானப்படை உயர்ந்தது. சென்ற 17 மாதங்களாக நடந்த சண்டையில் 4,250 ஜெர்மன், 700 இதாலிய விமானங்களை பிரிடிஷ் விமானப் படை சுட்டுத் தள்ளிவிட்டது. அதற்குச் சேதம் 1,800 விமானங்கள்தான்.

மால்டா எதிர்ப்பை பிரிடனுக்குத் தடுக்க முடியவில்லையென்று சொல்லுவதெல்லாம் பொய். இது வரையில் 400 முறை யெதிர்த்தும் மால்டாவை அசைக்க முடியவில்லை. மார்ச்சு 5-ல் ஜெர்மானியர்கள் 100 விமானங்களைக் கொண்டு மால்டாவைப் படையெடுத்தார்கள். இவைகளில் 16 விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன: பிரிடனுக்கு ஒரு விமானம்தான் சேதம்.

### உள்நாட்டுக்கொரு பிரசாரம், அயல் நாட்டுக்கு மற்றொரு பிரசாரம்.

இவ்விதம் பொய் சொல்லுவது அச்சுநாடுகளுக்கு வழக்கமாய்ப் போய் ஒரு சாஸ்திரமாய்க் கொண்டுவிட்டன. இந்தியா, பாலஸ்தீனம், எகிப்து, ஸூடான் முதலிய தேசங்களைப் பிடித்து பல வருஷங்களானபோதிலும் பிரிடிஷ்காரர்கள் கைதிகள்போல், கம்பிகள் போட்ட வீடுகளில் வசித்து, இராக் காலங்களில் வெளியேபோக பயப்படுகிறார்களென்று சமீபத்தில் மால்டாவுக்கு இதாலி ஒலிபரப்பிற்று, ஆனால் இதே சமாசாரத்தை இந்தியாவுக்கு ஒலிபரப்பவில்லை.

### பிரிடனுடைய ஆகார நிலைமை.

ஜெர்மன் கடல்முற்றுகையால் பிரிடனில் உணவுப் பஞ்சமேற்பட்டுவிட்டதாக மார்ச்சு 13-ல் இந்துஸ்தானியில் ஜெர்மனி ஒலிபரப்பிற்று. என்ன பொய்! மார்ச்சு 9-ல்தான் பிரிடிஷ் உணவு இலாகா மந்திரி உணவு திட்டங்களை அதிகப்படுத்தியிருப்பதாகப் பிரசுரித்தார்.



பெங்காஸியைப் படையெடுத்தபோது வியாபாரக் கப்பல்கள் மத்தியதரைக் கடலுக்கு அனுப்பப்பட்டு உணவை ஏற்றிவரக் கப்பல்கள் குறைந்ததால், இங்கிலாந்தில் இறைச்சியின் திட்டம் சற்று அப்பொழுது குறைக்கப்பட்டது. இப்பொழுது இந்த திட்டம் வழக்கம்போல் அதிகப் படுத்தப்பட்டு விட்டது. முன்னைக்காட்டிலும் இப்பொழுது காய்கறி, முட்டை திட்டங்கள் அதிகப் படுத்தப்பட்டிருக்கின்றன. இறைச்சி திட்டத்தோடு வெண்ணெய் திட்டமும் அதிகமாக்கப்பட்டிருக்கிறது.

### மத்ஸூவோகாவின் பயணத்தைப்பற்றி ஜப்பானில் கவலை.

பெர்லினுக்கும், ரோமுக்கும் மிஸ்டர் மத்ஸூவோகா வருவது பெரிய சம்பவமென்று ஆடம்பரம் செய்து, அதிலிருந்து, அச்சுநாடுகளுக்கு முடிவில் வெற்றி கிடைக்கப் போவதாக மார்ச்சு 12-ல் ஜெர்மன் ரேடியோ சொல்லிக் கொண்டது. ஆனால், உண்மையில், அஸஹி ஷிம்பன் பத்திரிகை யெழுதுகிறபடி, மத்ஸூவோகா தீர்க்காலோசனை செய்து, அமைதியாக, ராஜ்ஜிய காரியங்களை முடிக்க வேண்டுமே யென்று ஜப்பான் கவலைப்படுகிறது.

# முக்கியமான விளம்பரம்.

## யுத்த சம்பந்தமான புகைப்படங்கள்.

ஸா-தர்பார் அவர்கள் உத்தரவின் பேரிலும், அவர்களின் அன்பார்ந்த உதவியின்பேரிலும், புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயத்தின் மெம்பர்கள் இதுமுதல் பிரசங்கங்களுக்கு வெளியூர்களுக்குப்போகும் காலத்தில் யுத்தத்தின் வெவ்வேறு அம்சங்களை விளக்கிக்காட்டக்கூடிய புகைப் படங்களின் கோர்வைகளையும் எடுத்துக்கொண்டு போய் ஜனங்களுக்குக் காண்பிக்க வசதி ஏற்பட்டிருக்கிறதென்று யுத்த அறிக்கை நிலயம் சந்தோஷத்துடன் அறிவிக்கிறது.

இந்த நிகழ்ச்சிகள் யுத்தம் நடக்கும் பிரதேசங்களில் 'இருபதாவது நூற்றாண்டு பாக்ஸ் பிலிம் கம்பெனி'யாரால் எடுக்கப்பட்ட புகைப்படங் களும், பம்பாய் துரைத்தனத்தாரைக்கொண்டு இந்திய கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கும் ஒரு சங்கத்தாரால் இந்தியா சம்பந்தமான சில விஷயங்களைப்பற்றி தயாரிக்கப்பட்ட புகைப்படங்களும் சேர்ந்தவைகள். ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் மூன்று தனித்தனிப் படங்கள் காட்டப்படும். இந்தப் படங்கள் காண்பிப்பதால் யுத்த அறிக்கை நிலயத்தின் பிரசங்கங்களுக்கும், மேற்படி நிலயத்தின் வாரப்பதிப்பு புஸ்தகத்துக்கும் அதிக மதிப்பு ஏற்படக்கூடுமென்று யுத்த அறிக்கை நிலயம் நம்புகிறது.

புதுக்கோட்டையின் யுத்த நிதிக்காக உழைத்துவரும் கமிட்டியார் யுத்த அறிக்கை நிலயத்திற்கு ஒரு மோட்டார் வண்டியை நன்கொடை அளித்திருக்கிறார்கள். இந்த வண்டியில் புகைப்படம் காண்பிக்கக்கூடிய யந்திரங்களையும், திரைகளையும், புகைப்படங்களையும் பிரசங்கம்செய்யும் ஸ்தலங்களுக்கு எடுத்துச்செல்ல சௌகரியமாயிருக்கும். ஆனால், இம்மாதிரி புகைப்படங்களோடுகூடிய பிரசங்கங்களைச்செய்ய வசதி ஏற்படுத்திக் கொள்ளவும், ஒவ்வொரு இடத்திலும் மாதாமாதம் ஒவ்வொரு புதிதான படக்கோர்வையைக்காண்பிக்கவும், பிரசங்க ஸ்தலங்களை அறுபது இடங் களுக்கு அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டை ஸமஸ்தான வாசிகள் முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டியவைகள் என்னவென்றால் :—

(a) பிரசங்கங்கள் சாதாரணமாக **மாலை 6** அல்லது **6-30 மணிக்குத்** துவக்கப்படும்.

(b) யுத்த அறிக்கை நிலயத்தின் மோட்டார் ஒருநாளில் இரண்டு ஊர்களுக்குச்செல்ல வேண்டியிருப்பதால் பொதுஜனங்கள் **தவறாமல் குறிப்பிட்ட டயத்தில்** பிரசங்கம் செய்யப் போகுமிடத்தில் ஆஜராகியிருக்க வேண்டும்.

இந்தப்படங்களை ஆயிரம் பேர்களுக்குக்குறையாமல் சௌகரியமாய்ப் பார்க்கக்கூடுமென்று அனுபவத்தில் தெரிகிறது. ஆகையால் உங்கள் கிராமத்தில் பிரசங்கம் செய்யப்படுமென்று பிரசுரம் செய்த அளவில்,

**அந்த இடத்தில் கூடுங்கள்,**

**சரியானபடி குறிப்பிட்ட டயத்தில் வாருங்கள்.**



# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் XXXVII.

| | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| 1941— | | | | | |
| | 29, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 30, ஞாயிற்றுக்கிழமை. | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | | ,, | 5.00 |
| | | திருவரங்குளம் | ... | ,, | 5.30 |
| | | கொத்தகோட்டை | ... | ,, | 6.30 |
| | 31, திங்கட்கிழமை ... | குளவாய்ப்பட்டி | ... | , | 6.00 |
| | | வெண்ணாவல்குடி | ... | ,, | 6.30 |
| ஏப்ரல் ... | 1, செவ்வாய்க்கிழமை. | கடயக்குடி | ... | ,, | 6.00 |
| | | பிரட்டிநிலை | ... | ,, | 6.30 |
| | 2, புதன்கிழமை ... | மேலூர் | ... | ,, | 6.00 |
| | | பில்லமங்கலம் | ... | ,, | 6.30 |
| | 3, வியாழக்கிழமை. | புதுக்கோட்டை டவுன் உபாத்தியாயர்கள் சங்கம். | | ,, | 3.30 |
| | | வெள்ளனூர் | ... | ,, | 6.00 |
| | | செம்பாட்டூர் | ... | ,, | 6.30 |
| | 4, வெள்ளிக்கிழமை... | ஒடுக்கூர் | ... | ,, | 6.00 |
| | | நாங்குப்பட்டி | ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் XXXVIII.

| | | | | |
|---|---|---|---|---|
| 5, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| 6, ஞாயிற்றுக்கிழமை. | நார்த்தாமலை | ... | ,, | 6.30 |
| 7, திங்கட்கிழமை ... | நார்த்தாமலை | ... | ,, | 6.30 |
| 8, செவ்வாய்க்கிழமை. | அரிமளம் | ... | ,, | 6.00 |
| | கீழாநிலை | ... | ,, | 6.30 |
| 9, புதன்கிழமை ... | கீரனூர் | ... | ,, | 6.00 |
| | நாஞ்சூர் | ... | ,, | 6.30 |
| 10, வியாழக்கிழமை ... | பெருங்களூர் | ... | ,, | 6.00 |
| | ஆதனக்கோட்டை | ... | ,, | 6.30 |
| 11, வெள்ளிக்கிழமை... | பூவரசகுடி | ... | ,, | 6.00 |
| | வேங்கடக்குளம் | ... | ,, | 6.30 |

புதுக்கோட்டை ஸமஸ்தானம்

யுத்த நிதிக்காக போடப்படும்

# அதிர்ஷ்டச் சீட்டு.

(ஸ்ரீ-தர்பாரவர்கள் உத்தரவின்பேரிலும் ஆதரவின்
பேரிலும் புதுக்கோட்டை யுத்தநிதி என்டெர்
டெயின்மெண்ட் கமிட்டியாரால்
நடத்தப்படுகிறது.)

---

இந்த யுத்த நிதியை ஆதரியுங்கள்

டிக்கெட்டுகளை வாங்குங்கள்

முடிவு தேதி 15—6—41

சீட்டு குலுக்கும் தேதி 23—6—41

---

நமது மன்னர் அவர்களின் வருஷவர்த்தனை தினத்தன்று
அதிர்ஷ்டசாலிகளுக்கு ஏராளமான பரிசுகள்.

300 பரிசுகள்.

| | | | |
|---|---|---|---|
| 1-வது பரிசு | ரூபாய் | 7,500 | |
| 2-வது பரிசு | ,, | 5,000 | |
| 3-வது பரிசு | ,, | 2,500 | |
| 2 பரிசுகள் | ,, | 1,000 | விதம் |
| 5 ,, | ,, | 500 | ,, |
| 90 ,, | ,, | 100 | ,, |
| 100 ,, | ,, | 50 | ,, |
| 100 ,, | ,, | 15 | ,, |

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—29-3-41.



புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம௵ ஏப்ரல்௴ 5௳ [நெ. 38.


பிரஸங்கம் XXXVIII.

## மத்தியதரைக் கடலைப்பற்றிய சமாசாரங்கள்.

(இல்லஸ்டிரேடட் வீக்லி ஆப் இந்தியாவிலிருந்து எடுக்கப்பட்டது.)

---

### I

### மத்தியதரைக் கடலில் பிரிடிஷ் ஆதிபத்தியம்.

இதாலியானது யுத்தத்தில் சேர்ந்த காலத்திலிருந்து பிரிடனுடைய கப்பற் படைகள் மத்தியதரைக்கடலில் யுத்த காரியங்களை நடத்தி வருகின்றன. இதாலியானது கிரீஸைப் படையெடுப்பதற்கு முன்னமே இக்காரியங்கள் துவக்கப்பட்டதனால், இப்பொழுது அல்பேனியாவில் நடக்கும் யுத்தத்துக்கு, இவைகள் சாதகமாயின. பிரிடிஷ் நிலப்படைகளையும், பீரங்கிகளையும், விமானங் களையும் கிரீஸிலிறக்கி, இவைகள் செய்யக்கூடிய உதவியைக் காட்டிலும் கப்பற் படையைக்கொண்டு கிரீஸுக்குச் செய்து வரும் உபகாரம் அதிகப் பலனைக் கொடுக்கிறது.

பிரிடிஷ் கப்பற்படை இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, மத்தியதரைக் கடலின் கீழ் பாகத்தில் ஒன்றும், மேல் பாகத்தில் மற்றொரு பகுதியும், நிற்கிறது. இப்படைகள் இங்கில்லாவிட்டால் இதாலிய கப்பற்படை மத்தியதரைக்கடல் முழுவதும் வியாபித்துக்கொண்டு நேயர்களுடைய வியாபாரக் கப்பல்களையும், நடுநிலை நாடுகளின் கப்பல்களையும் இக்கடலுக்குள் வாராது தடுத்து, இதாலிய

கப்பல்களையும், இதாலியத் துருப்புகளையும், சாமான்களையும் தடையில்லாது போகும்படி செய்திருக்கும்.

இது மட்டுமல்ல. இதாலிய யுத்தக் கப்பல்கள் படையெடுத்து வட ஆபிரிக்காவில் பிரான்ஸுக்குச் சொந்தமான ராணுவ நிலயங்களைப் பிடித்திருக்கும். மேலும், இதாலிய கப்பற்படைக்குப் பயந்து, அயோனியன் தீவுகளிலும், கிரீட்டிலும், இஜீயனிலும், தனக்குச் சொந்தமான கப்பல் நிலயங்களையும், விமான நிலயங்களையும் கிரீஸ் கொடுத்திருக்கும். கிரீஸுக்கு இந்த ஆக்கிரமத்தைத் தடுத்திருக்கமுடியாது.

மத்தியதரைக் கடலிலிருக்கும் பிரிடிஷ் கப்பற்படை இரவும் பகலுமாக இடைவிடாது பாதுகாப்பதினால் இதாலியக் கப்பல்கள் இக்கடலில் தலைகாட்ட முடியாமல் போயிற்று. இக்காரியத்தில் கடலுடைய கீழ் பாகத்தில் நிற்கும் பிரிடிஷ் கப்பல்கள் விசேஷமாக வேலை செய்கின்றன. இவைகளின் தலைவர் ஸர் அண்ட்ரூ கன்னிங்ஹாம்.

ஜூலை 9உயன்று ஸிஸிலித் தீவுக்குக் கிழக்கே நின்ற இதாலிய கப்பற்படை விரட்டப்பட்டது. ஜூலை 19-ம் தேதி கிரீட் தீவுக்கு வடமேற்கில் பார்த்தலோமியோ கொலியம் என்ற கப்பல் ஸிட்னி என்ற பிரிடிஷ் கப்பலால் அமிழ்த்தப்பட்டது. டோடெகனீஸ் தீவுகள் பலமுறை பிரிடிஷ் கப்பல்களாலும், விமானங்களாலும் தாக்கப்பட்டன. லிபியா, ஸார்டீனியா, முதலிய இடங்களிலுள்ள இதாலிய கப்பல் நிலயங்களும், விமான நிலயங்களும், சைனியங்களும் எத்தனையோ தடவைகள் தகர்க்கப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து மத்தியதரைக் கடலில் பிரிடனுக்கிருக்கும் ஆதிபத்தியம் நன்கு விளங்கும். இதற்குப் பயந்து இதாலியக் கப்பல்கள் சண்டைக்கு வராது பதுங்கிவிட்டன.

கடலுடைய கீழ்பாகத்தில் பிரிடிஷ் கப்பற்படையில்லாமல் போயிருந்தால் இதாலிய சைனியங்கள் ஸிரியாவைப்பிடிக்க கடல்வழி சென்றிருக்கும்; துருக்கியை வளைத்துக்கொண்டிருக்கும். ஜெர்மனியும், இதாலியும் சேர்ந்துகொண்டு ஐரோப்பாவின் தென்கிழக்கிலுள்ள நாடுகளையெல்லாம் வசப்படுத்தியிருக்கும்.

அல்பேனியாவில் இப்பொழுது நடக்கும் யுத்தத்தில் பிரிடிஷ் கப்பற்படை பேருதவி செய்கிறது: ஆனால் வெளிப்படத் தெரியாது.

பிரிடிஷ் கப்பற்படை தடுக்காதிருந்தால், இதாலியர்கள் தங்களுடைய யுத்தக் கப்பல்களின் உதவியைக்கொண்டு, பாட்ராஸ் வளைகுடா, காரிந்து வளைகுடா ஸலோனிகா, கிரீட் முதலியவிடங்களில் தங்கள் சைனியங்களைக் கொண்டு வந்திருப்பார்கள்.

பிரிடிஷ் கப்பற்படை இடைவிடாது போர்க் காரியங்களைச் செய்துவருகிறது. அது செய்திருக்கும் சில்லரைக்காரியங்களெத்தனையோ, பெரிய காரியங்களில் சிலவற்றைச் சொல்லுவோம். கிரீஸுக்கருகாமையிலுள்ள மால்டிஸானுவென்ற



இதாலிய கிலயத்தை பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் ஏற்றிவரும் விமானங்கள் தகர்த்தன. அதேமாதிரி, ஸார்டீனியாவில் காக்ளியாரியாவும், பீராஸில் லாகியும், லிபியாவில் திரிபோலியும் எதிர்க்கப்பட்டன. மேலும், டாரன்டோவில் இதாலியக் கப்பற்படை சேதப்படுத்தப்பட்டு, மகத்தான வெற்றி கிடைத்தது.

ஸிடிபரானி, மக்திலா, பார்டியா முதலியவிடங்களை பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் தகர்த்தன. ஒட்ரான்டோ வென்ற ஜலசந்தியிலும், மற்றவிடங்களிலும் இதாலிய கப்பற்படைத் துணையோடு சென்ற சாமான் கப்பல்களை சிறிய பிரிடிஷ் சண்டைக் கப்பல்களும் நீர்மூழ்கிகளும் எதிர்த்து, சேதப்படுத்திவிட்டன. நவம்பர் 27-ல் ஸார்டீனியாவுக்கு மேற்கே பிரிடிஷ் கப்பல்களும் இதாலியக் கப்பல்களும் போர் செய்தன. ஆனால் நின்று போர் செய்யாது இதாலியக் கப்பல்கள் ஓடி ஒளிந்தன.

ஏற்கனவே சொன்னபடி, இவ்விதமாக, பிரிடிஷ் கப்பற்படை கிரீஸுக்கு அல்பேனிய யுத்தத்தில் செய்துவரும் உதவியானது மகத்தானதாகும். பிரிடிஷ் சைனியங்கள் கிரீஸுக்கனுப்பப்பட்டிருந்தால்கூட இவ்வளவு உதவி கிரீஸுக்குக் கிடைத்திராது. கிரீஸும், அல்பேனியாவும் மலை நாடுகள்: அங்கு சாமான்களும் உணவுப்பொருள்களும் கொண்டுபோவது கஷ்டமான காரியம்.

சுருக்கிச்சொல்லுமிடத்து, இதாலியானது பயந்து தன் யுத்தக் கப்பல்களைத் துறைமுகங்களிலிருந்து வெளியே கொண்டுவந்து யுத்தம் செய்ய அஞ்சுகிறது. பிரிடிஷ் கப்பற்படையோ கடலாதிபத்யத்தோடு எதிரியை கடல்வழி வராது விரட்டிக்கொண்டிருக்கிறது. இதனால் ஐரோப்பிய தென்கிழக்கு பிரதேச முழுவதிலும் யுத்தநிலை மாறிவிட்டது: உலகத்திலேயும் யுத்தநிலை மாறிவிட்டது. பிரிடிஷ் கப்பலுதவியில்லாவிட்டால் கிரீஸ் எடுத்துக்கொண்டிருக்கும் காரியம் வெகு கஷ்டமாய்ப் போயிருக்கும்.

## II

## மால்டா எதையும் லக்ஷியம் செய்யாது ஏற்கும்.

இதாலிய ஜெர்மன் ஆகாயப் படையெடுப்புக்கு எதிரே மால்டா காட்டிவரும் தீவிர தற்காப்பு உலகத்துக்கே வியப்பை அளித்திருக்கிறது. கப்பற்படை வீரர் நெல்ஸன் பிரபுவின் காலமுதல் மத்யதரைக்கடலில் பிரிடிஷாரின் முக்கிய ஸ்தலமாக இருந்துவரும் மால்டா தீவு இதாலிக்கு வெகு சமீபத்தில் இருப்பதின் காரணமாக பெரும் தாக்குதல்களுக்கு உள்படுத்தப்படும் என்பது எதிர்பார்த்ததேயாம். மால்டா தீவும் இதாலிய விமான எதிர்ப்பினின்றும் தீவிரமாக தற்காப்பு செய்துகொண்டு வருகிறது.

இத்துடன் கொஞ்சகாலத்துக்குமுன் முதல், இத்தீவின் முக்கிய துறைமுகமும், பிரதம பட்டணமுமான 'வாலெட்டா', 55 மைல் தூரத்திலிருக்கும் 'ஸிஸிலி' தீவிலிருந்து தாக்கப்படும் எதிரிகளின் விமானப்படை எடுப்புக்கும் உள்படுத்தப்பட்டிருக்கிறது.

இதுவரை 400 தடவைகளுக்கு மேலேயே இவ்விதம் எதிரிகளால் தாக்கப் பட்டிருந்தும் ஏறக்குறைய 95 சதுர மைல் விஸ்தீரணமுள்ளதும் 2,52,000 ஜனத் தொகை கொண்டதுமான இச்சிறு தீவிற்கு பொருள்படுத்தக்கூடியதான சேதம் ஏற்படவில்லை. ஒரு சிறு சேனை வீரர்களும் பொது மக்களில் சிலரும் இறந்தோ காயம்பட்டோ இருக்கின்றனர்.

யுத்தம் தங்கள் மத்தியிலிருந்தும் இத்தீவு வாசிகளின் வாழ்க்கை அனாயாச மாகவே நடந்துவருகிறது. பல வருஷங்களாகவே பிரிடிஷ் ராணுவ அதிகாரி களின் குடும்பத்தார்களால் வாசஸ்தலங்களாக செய்துகொள்ளப்பட்டிருக்கும் இத்தீவின் பல பாகங்களும் சீமையின் பாகங்களாகவே ஆகிவிட்டது. இதுதான் இத்தீவு வாசிகளின் உற்சாகத்துக்கும், ஊக்க உணர்ச்சிக்கும் காரணமாகும். இது காரணம்பற்றியே இத்தீவும் பிரிடிஷ் சமுத்திரப்படையைச் சேர்ந்த பெரியதொரு கப்பல் என்று கூறப்படுகிறது.

## புகழுக்குகந்த தற்காப்பு.

பிரதி தினமும் எதிரிகளின் விமானப் படையெடுப்புக்குள்பட்டிருக்கும் மால்டா சாரின் தீவிர பாதுகாப்பை மெச்சி பிரதம மந்திரி கனம் சர்ச்சில் அவர்கள் இத் தீவின் கவர்னருக்கு விடுத்த செய்தி பின்வருமாறு "தீவின் படை அணிகளும் பொது மக்களும் எவ்வாறு விடா முயற்சியுடன் எதிரிகளின் படை யெடுப்பை தடுத்து தற்காப்பு செய்துவருகிறார்கள் என்பதை மந்திரி சபையார் உற்சாகத் துடன் கவனித்து வருகிறார்கள். தீவின் சரித்திரத்திலும், பிரிடிஷ் ராணுவ சரித்திரத்திலும் புகழுடன் உங்கள் 'தற்காப்பு' பதியப்படும் என்பதை நான் நம்புகிறேன்."

கனம் சர்ச்சில் அவர்கள் தங்களிடம் வைத்திருக்கும் இந்த நம்பிக்கையை அத்தீவினர் நன்கு மதித்துப் பாராட்டியிருக்கின்றனர். அதை தீவின் கவர்னரான ஜெனரல் டாபி என்பவர் தன் மறு மொழியில் இவ்விதம் குறிப்பிட்டிருக்கிறார்.

"தெய்வ ஒத்தாசைகொண்டு எவ்விதமும், பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்தின் பகுதி யான இத்தீவை காப்பாற்றுவோம். யுத்தம் நீடித்தகாலம் நடப்பதானாலும், விரைவில் முடிவடைந்தாலும் வெற்றி நம்முடையதே."

மால்டா ஜனங்களால் பெரிதும் புகழப்படும் பிரிடிஷ் ஆகாய விமான படையினால் உதவி செய்யப்படும் பிரிடிஷ் ராணுவத்தின் ஒரு பெரும் பகுதியும், மால்டாவின் பீரங்கிப் படையும், தீவின் பாதுகாப்புக்கு ஆதாரமான சைனிய மாகும். ஜெர்மன், இதாலிய வெடிகுண்டு வீசும் விமானங்களை எங்கு கண்டாலும் பிரிடிஷ் போர் விமானங்கள் எதிர்த்து துரத்தியடித்தும் வீழ்த்தியும் விடுகிறார்கள். இந்த நிகழ்ச்சிகளில் எதிரிகளுக்கு ஏராள நஷ்டமேற்பட்டிருக்கிறது. சென்ற இரண்டு மாதங்களுக்குள்ளாகவே 61 எதிரி விமானங்கள் சுட்டு விழ்த்தப்பட்டிருக் கின்றன. அவைகளில் பெரும்பாகம் ஜெர்மன் விமானங்களாகும்.



## எதிரியின் வீறுப்பு.

பல முறை தாக்குதல்களுக்குள்படுத்தப்பட்டும் ராணுவ தளவாட முக்கிய ஸ்தலங்களுக்கு விசேஷ சேதமில்லை. ஏதோ பெரியதும், முக்கியமானதுமான ரயில் பாதையை முழுவதும் நாசம் செய்துவிட்டதாய் சிறிது காலத்துக்கு முன் எதிரிகள் வீறுப்புப் பேசினார்கள். ஆனால், அது பழைய தலைநகருக்குச் செல்லும் சிறியதான பாதை. பிரிடிஷ் போர் விமானங்களின் திறமையான ஒத்தாசையை நன்கு உணர்ந்திருக்கும் இத்தீவினர்கள் ஆயிரக்கணக்கான பவுன் நாணயங்களை, போர் விமானங்கள் சேர்ப்பதற்காக சுயமாகவே அளித்திருக்கின்றனர்.

கி. பி. 1565-ம் ௵ துருக்கியை முறியடித்த ஞாபக தினம் பிரதி வருஷம் செப்டம்பர் ௴ 8௳ இத்தீவில் கொண்டாடப்படுகிறது. காலம் சென்ற பிரிடிஷ் கலோனியல் மந்திரி 'லாயிட்' பிரபு மேற்படி தினக்கொண்டாட்ட பிரயுக்தத் தில் கூறினதாவது: "இந்நாள் மால்டாவிலுள்ள ஒவ்வொருவனுடைய ஹிருதயத் திலும் பெரும் உணர்ச்சியை எழுப்புகிறது. இன்றைக்கு ஏறக்குறைய 400 வருஷங்களுக்கு முன் தன் முழு பலத்துடன் இத்தீவை தகர்க்க துருக்கியால் செய்யப்பட்ட பெரும் யுத்த முயற்சி வீணாக்கப்பட்டது. தன்னை ஒத்த சீமைத் தீவுடனும், பிரிடிஷ் ஏகாதிபத்தியத்துக்குள்பட்ட பல ஜனநாயக நாடுகளுடனும் சேர்ந்த 'மால்டா' வுக்கு இப்போதும் எதிரியின் படையெடுப்பைத் தடுத்துக் கொள்ளும்படி ஏற்பட்டிருக்கிறது."

## பழைய சரித்திரம்.

மத்தியதரைக்கடலின் நடுவில் இருக்கும் 'மால்டா' பொயனீஷியர்களிடம் இருந்து கிரேக்கர் வசமும், திரும்ப 'கார்த்தேஜ' க்குள்பட்டும், மறுபடியும் ரோமர்கள் ஆதிக்கத்திலும், பிறகு 'வாண்டல்', கள் 'காத்' கள் இவர்களிடமும், மறுமுறை ரோமர்கள் வசமும், இவ்விதமாக பலர் ஆதிக்கத்திலும் மாறிமாறி இருந்து வந்தது. ஆபிரிக்காவில் முகமதிய மதம் பரவிய சமயம் இதில் 'சாரசன்ஸ்' என்பவர்கள் ராஜ்ஜியம் ஸ்தாபித்திருந்தார்கள். ஸிஸிலியில் குடி ஏறியிருந்த 'நார்மன்' களால் 'சாரசன்ஸ்' என்பவர்கள் துரத்தப்பட்டனர். அதன்பின், இதைப் பிடித்துக்கொண்ட ஸ்பானியர்கள் வசம் இது கி. பி. 1530 வருஷம் வரை இருந்தது. அப்போது 'ரோட்ஸ்' தீவிலிருந்து வெளியேற்றப் பட்ட செயிண்ட் ஜான்ஸ் சங்கத்து வீரர்களுக்கு இத்தீவு ஸ்பானிஷ் மன்னர் ஐந்தாம் சார்லஸ் என்பவரால் அளிக்கப்பட்டது.

கி. பி. 1565-ம் ௵ எவ்விதமும் இச்சங்கத்து வீரர்களை விரட்டி அடிக்க வேண்டுமென்று துருக்கியால் எழுப்பப்பட்ட பெரும் போர் முயற்சியில், கொஞ்சமும் இடங்கொடுக்காது அவ்வீரர்களும், அத்தீவின் மற்ற வாசிகளும் 4 ௴ காலம் விடாமல் தற்காப்பு செய்து கொண்டார்கள். செயிண்ட் எல்மோ என்ற புதிய கோட்டையிலிருக்கும் சிலாசாஸனத்தில் 'தங்கள் மதத்துக்காகவும், தங்கள் தேசத்துக்காகவும், தங்கள் பெரியோர்களின் பக்கத்தில் நின்று உயிர் துறந்த சிறுவர்களின் ஞாபகார்த்தம்' என்று பதித்திருப்பதைப்பற்றி 'டைம்ஸ்'

பத்திரிகை நிருபர் அந்தப் போரின், தீவு வாசிகளே, வெற்றியில் பெரும் பங்குக்கு பாத்திரர்கள் என்று கூறியிருக்கிறார்.

### வீரர்கள் சங்கம் கலைவு.

துருக்கியர்கள் துரத்தியடிக்கப்பட்ட பின், எகிப்தின் பேரில் போர் தொடர்ந்து சென்ற 'நெபோலியன் போனபார்ட்' அங்கு வரும் வரை மால்டா தீவில் செயிண்ட் ஜான்ஸ் சங்க வீரர்கள் ஆட்சி செய்து வந்தார்கள். உள்நாட்டு புரட்சியின் காரணமாக தீவை கைப்பற்றிய 'போனபார்ட்' அங்கு தங்கின ஒரு வாரத்துக்குள் பிரக்கியாதி பெற்ற அந்த செயிண்ட் ஜான்ஸ் சங்க வீர கோஷ்டியினரை கலைத்துவிட்டார். இதன் பின்னர் பிரிடிஷாரால் கைப்பற்றப் பட்ட அந்தத் தீவு, தீவு வாசிகளின் அபிப்பிராயப்படிக்கே அன்று முதல் பிரிடிஷ் ஆதிக்கத்தில் இருந்து வருகிறது.

இதாலிய விமானப் படையெடுப்பினால் தீவினுடைய ராணுவ முஸ்தீபு ஸ்தலங்களுக்கு விசேஷ சேதமில்லாவிட்டாலும், பொது மக்களுக்கு ஏகதேசம் கஷ்டமும், பொருள் நஷ்டமும் ஏற்பட்டிருந்தாலும், உயிர் சேதம் மிகவும் குறைவே. எதிர்காலத்திலும் அவர்கள் அதிக கஷ்டத்துக்குள் படுத்தப்படலாம் என்பதும் எதிர்பார்க்கக்கூடியதாகும். ஆனால் மால்டா எதற்கும் அஞ்சாது எதையும் ஏற்கும்.

---

# வார யுத்தச் செய்திகள்.

---

(26—3—41-லிருந்து 2—4—41-வரை).

### மடாபானில் நடந்த கடற்சண்டை: பிரிட்டனுக்குப் பெரிய வெற்றி.

இதுவரையில் நடந்த கடல் சண்டைகளைவிட இது மிகப் பெரியதாகும் இதனால் இதாலிக்கேற்பட்டிருக்கும். நஷ்டத்திலிருந்து இதை ட்ரபால்கார் வெற்றிக்கு ஒப்பிடக்கூடும். இது அயோனியன் கடலில் மடாபானுக்கப்பால் மார்ச்சு 28-ல் நடந்தது. அதற்கு முதல் நாள் இந்தவிடத்தில், விட்டோரியா வகுப்பைச் சேர்ந்த ஒரு யுத்தக்கப்பலும், மற்றும் சில இதாலியக் கப்பல்களும் எகிப்திலிருந்து கிரீஸுக்குப் போகும் வியாபாரக் கப்பல்களைத் தடுக்க நின்று கொண்டிருப்பதை பிரிடிஷ் விமானங்கள் வேவு பார்த்தன. சண்டையானது 28-ம் தேதி நடந்து, 12-மணி நேரம் 200-மைல் எதிரிக் கப்பல்கள் துரத்தப் பட்டு, முடிவில் எதிரிக்கு 7 சண்டைக் கப்பல்களும், 4,000 பேர்களும் நஷ்டம். விட்டோரியா வகுப்புக் கப்பலும் அதிகமாகப் பழுதுபட்டது. பிரிடிஷ் கப்பல்களுக்கும், ஆட்களுக்கும் சேதமில்லை; கப்பல்களுக்குச் சிறிது பழுதுகூட கிடையாது; ஒரு விமானம்தான் நஷ்டம்.



மறுநாள் காலையில் முழுகிய கப்பல்களிலிருந்து 850 ஆட்களையும், 55 உத்தியோகஸ்தர்களையும் கிரேக்கிய நாசகாரிகளின் உதவியைக்கொண்டு பிரிடிஷ் கப்பல்கள் கரையேற்றின. இன்னும் நூற்றுக்கணக்கானவர்களை தப்புவிக்கப் பிரயத்தனிக்கும்போது ஜெர்மன் விமானங்கள் உபகாரம் செய்யும் கப்பல்களைத் தாக்க, இதாலிகடற்படை இலாகா அதிகாரிகளுக்கு ஆஸ்பத்திரிக் கப்பலை யனுப்பச் செய்தியனுப்பிவிட்டு பிரிடிஷ் கப்பல்கள் விலகிக்கொண்டன.

இந்தச் சண்டையில்தான், முதல்முதலாக, விமானங்களைக்கொண்டு கப்பல்களின் வேகத்தைத் தடுத்தது; இதில்தான் முதல்முதலாக, எதிர்க்கும் கப்பல்களுக்குச் சேதமேயில்லாது எதிரிக்கு பலத்த நஷ்டமேற்பட்டது.

சண்டைக்குவந்த இதாலியக் கப்பல்களில் அநேக ஜெர்மானியரிருந்ததிலிருந்தும், ஜெர்மன் விமானங்கள் சண்டையில் கலந்துகொண்டதிலிருந்தும் இதாலி களைத்துப்போய் ஜெர்மனியை நம்பியிருப்பது நன்றாய் வெளியாகிறது.

### அல்ஜீரியாவின் கடற்கரைக்கருகே நடந்த சம்பவம்.

பிடேனுடைய வேண்டுகோளுக்கிணங்கி கடல்முற்றுகையைத் தளர்த்தி, உணவுப் பொருள்களை பிரான்ஸுக்குள் வர பிரிடன் சம்மதித்திருக்கும் இந்தச் சமயத்தில் இங்கிலாந்துக் கப்பல்களை பிரான்ஸ் தாக்கியதானது கோபத்தை உண்டாக்கக்கூடிய காரியம்தான். சென்ற ஞாயிற்றுக்கிழமை பிரெஞ்சுத் துணையோடு ஜிப்ரால்டருக்கு வந்த நான்கு வியாபாரக் கப்பல்களில் யுத்த சாமான்களிருப்பதாகச் சந்தேகப்பட்டு, சோதனைபோட பிரிடிஷ் கப்பல்கள் அவைகளை நிற்கச் சொல்லின. உடனே, பக்கத்தில் அல்ஜீரியாவின் கரையில் வைக்கப் பட்டிருக்கும் பிரெஞ்சு பீரங்கிகள் பிரிடிஷ் கப்பல்களைப் பார்த்துச்சுட, இவைகளும் திருப்பிச்சுட்டன. பிரிடிஷ் கப்பல்கள் கடைசியாக ஜிப்ரால்டருக்குத் திரும்பும்போது பிரெஞ்சு விமானங்களும் தாக்கின.

வேலையைவிட்டு விலகிக்கொண்ட லவாலைப் போலவே, வேலையிலிருக்கும் பிரெஞ்சுக் கடல்மந்திரி டார்லானும் மோசக்காரராயிருப்பாரென்று தோன்றுகிறது. பிரான்ஸுக்குப் பிரிடன் காட்டும் இரக்கமும் வீணாகும்போலிருக்கிறது. பிரெஞ்சுக் கப்பற்படையை, டார்லான் இஷ்டப்பட்டாலும், ஜெர்மனிக்குக் கொடுத்துவிட முடியாது. இப்பொழுது பிரிடன் போட்டிருக்கும் கடல் முற்றுகையை எய்த்துவிட்டு, சாமான்களைக்கொண்டுவர நினைப்பது நம்பிக்கைத் துரோகமுமாகும். ஒரு பக்கத்தில், பிரான்ஸில் பஞ்சமென்று சொல்லிக் கொண்டு உணவுப்பொருள்கள் வேண்டுமென்று கெஞ்சுகிறார்கள். மற்றொரு பக்கம், பழங்கள் முதலிய செல்வர்களுக்கு வேண்டிய பொருள்கள் இரண்டு கப்பல்களில் கொண்டுவரப்பட்டு, ஜிப்ரால்டரில் பிடிக்கப்படுகின்றன. சமீபத்தில் ஜெர்மனி கோதுமையை பிரான்ஸுக்கு இனாமாகக்கொடுத்ததாகச் சொன்னதெல்லாம் பொய். உண்மையில் இதற்கு பதிலாக யுத்த சாமான்கள் பண்டமாற்றப்படுகிறது. பிரிடிஷ் பொருளாதார யுத்த மந்திரி டாக்டர் ஹியூ டால்டன் சமீபத்தில் எடுத்துக்காட்டியபடி, டிஸம்பர் ஜனவரி இரண்டு

மாதங்களுக்குள் 450 கப்பல்கள் 5 லக்ஷம் டன் சாமான்களை மார்ஸெயில்ஸி இறக்கியிருக்கின்றன. இவைகளில் பாதிக்குமேல் ஜெர்மனிக்கும் இதாலிக்கும் அனுப்பப்பட்டன.

தனக்கேதோ அக்கிரமம் செய்துவிட்டாற்போல அல்ஜீரியாவுக்குச் சமீபத்தில் நடந்த அக்கப்போரைப்பற்றி விஷி கவர்ன்மெண்ட் ஆக்ஷேபித்து பிரிடிஷ் கவர்ன்மெண்டுக்கு எழுதியிருக்கிறது. முற்றுகையைப்பற்றி அமெரிக்காவும், பிரிடனும் கலந்து பேசிக்கொண்டிருக்கின்றன. ஆனால் டார்லான் செய்த காரியம் நம்பிக்கைத் துரோகம். முற்றுகை இனி தளர்த்தப்படமாட்டாது.

**துரோகம்.**—அமெரிக்கத்துறைமுகங்களில் நிற்கும் அச்சுநாட்டுக் கப்பல்களின் சிப்பந்திகள் கப்பல்களைக் கொளுத்தியும், யந்திரங்களை யுடைத்தும் கப்பல்களை உதவாது செய்யும் பிரயத்தனங்கள் அடிக்கடி செய்துகொண்டிருக்கிறார்கள். இம்மாதிரியான 69 கப்பல்களைப்பிடித்து அதிலிருந்து 100 ஜெர்மன், 75 இதாலிய, வேலைக்காரர்களைக் கைதுசெய்து, கப்பல்களைச் சேதப்படுத்த முயற்சித்தவர்கள் மேல் சட்டப்படி நடவடிக்கை யெடுத்துக்கொள்ள யுனைடெட் ஸ்டேட்ஸ் அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது. பிடிக்கப்பட்ட கப்பல்களை யுனைடெட் ஸ்டேட்ஸினுடைய சொந்த உபயோகத்துக்கு வைத்துக்கொண்டு, தன் கப்பல்களை பிரிடனுக்குக் கொடுக்கலாம். இதைப்பற்றி அச்சு அரசாங்கங்கள் ஆக்ஷேபித்திருக்கின்றன.

**அட்லாண்டிக் சண்டை.**—வெற்றியானது சீக்கிரத்தில் வருமென்று மிஸ்டர். சர்ச்சில் கொடுத்திருக்கும் தைரிய வார்த்தைகள் பலிக்க ஆரம்பித்து விட்டால் போலிருக்கிறது. முந்திய நான்கு வாரங்களைக்காட்டிலும் சென்ற வாரத்தில் ஏற்பட்ட பிரிடிஷ் வியாபாரக்கப்பல்களின் நஷ்டம் வெகு குறைவானது.

**யூகோஸ்லாவியில் நடந்த அரசியல் மாற்றம்.**—இந்த யுத்தத்தில் எதிர்பார்க்காத காரியங்களெத்தனையோ உண்டு; ஆனால் சமீபத்தில், யூகோஸ்லாவியாவில் நடந்த மாறுதலுக்குச் சமமாகவொன்றையும் சொல்லமுடியாது. எல்லாம் சில மணி நேரத்திற்குள் நடந்துவிட்டது. மார்ச்சு 27-ல் இரவு இரண்டு மணிக்கு பீடர், ரீஜண்டுகளின் ராஜீனாமாவைப் பெற்றுக்கொண்டு ராஜரீகம் வகித்து, உடனே, ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட மந்திரிகளைக் கைதுசெய்து காலை 7-மணிக்கு பிரஜைகளுக்குப் பிரசுரம் செய்ய, ஸர்வ ஜனங்களும் அரண்மனை வாசலிலும், பிரிடிஷ் மந்திரியின் ஜாகைக்கு முன்னும் சந்தோஷத்தை ஆரவாரத்தோடு காண்பித்து, ஜெர்மன், இதாலிய காரியஸ்தர்களிருக்குமிடங்களில் வம்பு செய்தார்கள். இச் சமாசாரத்தைக்கேட்ட பிரிடிஷ் சக்ரவர்த்தியும், பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டும் தங்கள் சந்தோஷத்தை இளைய அரசராகிய பீடருக்குத் தெரிவித்தார்கள். ஜெனரல் ஸ்மட்ஸ் சொல்லியபடி, பீடர் ஒரே நிமிஷத்தில் கீர்த்திவானாய் விட்டார். ஹிட்லர், கோயபெல்ஸ் முதலான அசுரர்களைப் பொறி கலங்கச்செய்து விட்டார். உண்மையில், வட ஆபிரிக்காவிலும், அல்பேனியாவிலும் இதாலியத் தோல்விக்குப்பிறகு, இதுவே பெரிய சந்தோஷச்செய்தியாகும்.



இதைக் கேட்டவுடன் ஜெர்மானியர் திகைத்துப்போய், உள்நாட்டு மாறுதலே ஒழிய, அயல்நாட்டுக்குச் சம்பந்தமில்லையென்று சொல்லிக்கொண்டார்கள். அப்படியிருந்தால், கையொப்பமிட்ட மந்திரிகளைக் கைதுசெய்யக் காரணமென்ன? ஜெர்மன், இதாலியக் காரியஸ்தர்களின் மாளிகைகளுக்குமுன் சச்சரவு ஏற்படுவானேன்?

வழக்கம்போல், இப்பொழுது, ஜெர்மனி யூகோஸ்லாவியாவைப் பயமுறுத்த ஆரம்பித்திருக்கிறது. ஜெர்மானியர்களை ஹிம்சை செய்வதாயும், பெண்பிள்ளைகளை அடிப்பதாயும், ஆண்பிள்ளைகளைக் கொலை செய்வதாயும் கட்டிவிடுகிறார்கள். மேலும், அங்கு வசிக்கும் குரோட் ஜாதியார்களைத் தூக்கிவிட்டு, ஸெர்பியர்களோடு சேராதிருக்கக் கலகத்தைக் கிளப்புகிறார்கள். ஜெர்மானியருக்குப் புரட்சியாலேற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்து, மூவரசு ஒப்பந்தத்தை அனுமதித்து, மறுமுறை அதைப் பிரசுரம் செய்து, சைனியங்களையும் கலைத்துவிடக்கேட்டு, ஒரு இறுதிக் கடிதத்தை ஜெர்மானியர் அனுப்பியிருப்பதாக வதந்தி. யூகோஸ்லாவிய அரசாங்கம் மூவரசு ஒப்பந்தத்தை ஆராய்ந்துகொண்டிருக்கிறதாம். ஆனால் ஒன்றையும் கவனியாது கீழ்படியவேண்டுமென்று ஜெர்மனி சொல்லுகிறது.

**கெரேன் பிடிபட்டது, அஸ்மாரா வீழ்ந்தது.**—சென்ற வாரத்தில் அறிவிக்கப்பட்ட கெரேன் வெற்றியானது வெகு ஆச்சரியமானது. கேட்பவர்களுக்கு மயிர்க்கூச்சலை உண்டாக்கக்கூடியது. 52 தினங்களாக இதாலியர்கள் அதைப் பாதுகாக்கப் பிரும்மப்பிரயத்தினம் செய்தார்கள். 15 நாட்கள் கோரயுத்தம் செய்து, செங்குத்தான மலைகளைத்தாண்டி பிரிடிஷார்கள் ஊரைப்பிடித்தார்கள். இந்தச் சண்டையில் இந்தியர்கள் வெற்றிகரமாய் வீரத்தனமாய் போர்புரிய, ஹிஸ் மாஜெஸ்டி சக்ரவர்த்தியவர்கள், எதிரிகள் அதிகமாயிருந்தும் கெரெனில் இந்தியர்கள் சண்டை செய்து கீர்த்தியடைந்ததை மெச்சி அறிக்கை விடுத்திருக்கிறார்.

கெரெனைப் பிடித்த 5 தினங்களுக்குள் அஸ்மாராவென்ற எரிட்ரியாவின் தலைநகரும் பிடிபட்டுவிட்டது. இனி முக்கியத் துறைமுகமாகிய மஸாவாவை நோக்கிப் போகவேண்டியதுதான்.

பிரிட்டிஷ் துருப்புகள் விட்டு விட்ட எல் அகீலிய என்ற ஸ்தலத்தை, சில ஜெர்மானியர் கொண்ட ஒரு எதிரிப்படை பிடித்துக்கொண்டது. இதில் விசேஷம் ஒன்றுமில்லை.

ஸூடான் எல்லைப்புறத்திலுள்ள காம்பீலாவும், மொகாடிஷுவிலிருந்து அடிஸ் அபாபாவுக்குப் போகும் பாதையிலிருக்கும் நேகலியும், அடிஸ் அபாபா—ஜிபூடி—ரெயில் பாதையிலிருக்கும் டிரடாவும், ஹாராருக்கு 20 மைலுக்கப்பாலுள்ள கார்ஸாவும் அபிஸீனியப் பிரதேசத்தில் பிடிக்கப்பட்டன.

அல்பேனியாவில் கிரேக்கியர்கள் மறுபடி முன்னேற ஆரம்பித்திருக்கிறார்கள். சமீபத்தில் அநேக இதாலிய சிப்பாய்களிறந்து போக, அவர்களைப் புதைக்க, இதாலி சண்டையை சிறிது நிறுத்த, கிரீஸைக் கேட்டுக்கொண்டது.

**ஆகாயப்போர்.**—சமீபத்தில் நடந்த எதிர்ப்பில் பெர்லினில் தரைக்குக் கீழ் ஓடும் ரயில் பாதைகள் பலமாகச் சேதப்பட்டன. பிரிஸியன் தீவுகளிலிருந்து லா ரொஷேல் வரையில் நின்ற ஜெர்மன் கப்பல்கள் எதிர்க்கப்பட்டன. கொலோன், டன்கர்க், கலே முதலிய இடங்களும் எதிர்க்கப்பட்டன. பிரமனில் 1,000 பேர் இறக்கவும், 7,000 பேர் காயப்படவும் நேரிட்டது.

பிரிடன்மேல் விமானப்போர் ஸ்வல்பம்தான். இந்த வாரம் முழுவதும் லண்டன்மேல் படை யெடுக்கவில்லை. இதற்குக் காரணம், குளிர்காலமென்று சொல்லப்படுகிறது. இதை முழுவதும் நம்புவதற்கில்லை. இதைவிடக் கேவலமாய் சீதோஷ்ண ஸ்திதியிருந்தபோதெல்லாம் படை யெடுத்திருக்கிறார்கள். இரவில் வரும் விமானங்களை பிரிடிஷ் படைகள் த்வம்ஸம் செய்துவிடுவது ஒரு காரணமாயிருக்கலாம்—மற்றொரு காரணம் பால்கனில் படையெடுக்க விமானங்களைச் சேர்த்துக்கொண்டிருக்கலாம்.

**அமெரிக்கா.**—இங்கிருக்கும் ஜெர்மானியர்களை அப்புறப்படுத்துவதாகத் தெரிகிறது. அமெரிக்காவோடு சிநேகத்தை ரத்து செய்வதற்காகவிருக்கலாம்.

டைஸ் கமிட்டி பரிசோதனையிலிருந்து, யுத்த தளவாடங்களின் உற்பத்தியை இதாலிய காரியஸ்தர்கள் தடுப்பதாக வெளியாகிறது.

காலக் கணக்குப்படி, யுத்த சாமான்கள் விரைவாகச் செய்யப்படவில்லையென்று 100-க்கு 53 பேர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்; அதில் 52 பேர்கள் தொழில்-நிறுத்தம் காரணமென்றும் அதைச் சட்ட பூர்வமாக அடக்கவேண்டுமென்றும் சொல்லுகிறார்கள்.

“நாஸிகள் “சமாதானம், சமாதானம்” என்று சொல்லுகிறார்கள். ஆனால், உண்மையில் சண்டையைக் கிளப்புகிறார்கள். இது வேதத்தை மேற்கோள் கொடுத்து துஷ்டர்கள் அக்கிரமம் செய்வதுபோலிருக்கிறது. நாஸிகள் பயமுறுத்தப்பார்க்கிறார்கள். ஆனால், அதிலிருந்து மன உறுதி நமக்கதிகப்படுகிறது” என்று மார்ச்சு 30-ல் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் ஒலிபரப்பினார்.

அட்லாண்டிக்கில் பிரிடனுக்குச் சொந்தமான யுத்த நிலயங்களைக் குத்தகைக்கு அமெரிக்கா விட்டு அதற்கு வேண்டிய பத்திரம் மார்ச்சு 27-ல் லண்டனில் கையொப்பமிடப்பட்டது.

**மத்ஸுவோகாவின் சுற்றுப்பிரயாணம்.**—மாஸ்கோவில் ஸ்டாலினையும், பெர்லினில் ஹிட்லரையும் சந்தித்துவிட்டு இப்பொழுது, மத்ஸுவோகா ரோமில் முஸோலினியைச் சந்தித்தார். இவர் பெர்லினுக்கு வந்தசமயத்தில் யூகோஸ்லாவியில் அரசு மாறிற்று; ரோமுக்குவந்தவுடன் அயோனியன்கடலில் இதாலிக்குத் தோல்வியேற்பட்டது. வந்தகாரியம் புரியவில்லை. எல்லாம் ரகஸ்யமாயிருக்கிறது. சீனாவுக்குச் சாமான்களனுப்புவதை நிறுத்திக்கொள்ள



ருஷ்யாவைக்கேட்கலாம். அனாக்கிரமண ஒப்பந்தமொன்றை ருஷ்யாவோடு செய்து கொண்டு, மஞ்சூரியாவில் நிற்கும் ஜப்பானிய சைனியங்களை தென்பிராந்தியங்களுக்கனுப்பலாம். பெர்லினிலும், ரோமிலும் நேரே கவனித்து, அச்சுக்கு வெற்றிவரும் போலிருந்தால், ஹிட்லர் ஐரோப்பாவில் படையெடுக்கும்போது ஆசியாவில் தானும் வம்பு செய்யப்பார்க்கலாம். இல்லாவிடில் மூவரசு ஒப்பந்தத்தை ரத்துசெய்துவிட்டு, பிரிடனோடு சேர்ந்துகொண்டு, சீனாவை அமுக்கப் பார்க்கலாம். மத்ஸுவோகா கபடஸ்தன்.

**ஜெர்மன் கைவச நாடுகள்.**—ஜெர்மன் சிப்பாய்களை ரகஸ்யமாய்க் கொலைசெய்வது ஹாலண்டில் சகஜமாய்ப் போய்விட்டது. தந்தி, டெலிபோன் கம்பிகளை அறுத்துவிடுகிறார்கள். சமீபகாலத்தில் ஜெர்மன் நீர்மூழ்கியொன்றிலிருந்த டச்சு வேலைக்காரர்கள் கப்பலை பிரிடனுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டார்கள். ஆஸ்திரியாவில் கலகம். நார்வேயில் ராணுவ-அரசியல் அமைக்கப்பட்டிருக்கிறது.

## *சில்லரைச் சமாசாரங்கள்.*

(1) **ஸிரியா.**—ஸிரியாவில் கலகமேற்பட்டு டமாஸ்காஸ், அலெப்போ நகரங்களில் சிப்பாய்கள் கலகத்தையடக்கி வருகிறார்கள். ஸ்வதந்திரமென்ற கொள்கையை ஒப்புக்கொண்டு பிரதிநிதி சபையொன்று அமைக்கப்படப்போகிறது.

(2) **சிலி.**—சிலி தேசத்தில் ஜெர்மானியர் செய்யும் புரட்டுகள் வெளிப்படுகின்றன. ஏற்கனவே ஹாலண்டிலிருந்தபடி ஐந்தாம்படை ஸ்தாபிக்கப்பட்டு, லஞ்சம் கொடுக்கவும், மனதை மாற்ற வேடிக்கைகள் நடத்தவும், அளப்பறியவும், பிரசாரம் செய்யவும் இது அமைக்கப்பட்டிருக்கிறது.

(3) **டாங்கியர்.**—டாங்கியரில், மொராகோ ஸுல்தான் காரியஸ்தரை விலக்கி காரியஸ்தரிருப்பதால் பாதகமில்லையென்று காமன்ஸ்சபையில் மிஸ்டர் பட்லர் தெரிவித்தார்.

---

| தேதி. | பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **24—3—41.** (திங்கட்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | பகலில்.—கப்பல்கள்—டச்சு (Dutch)க் கடற்கரை. | 1 விமானம் | 1 கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. |

| தேதி. | பிரிடிஷ் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**24—3—41.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி.

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | சைனியங்கள்.—கெரென் (Cheren), கெரெனைச் சுற்றியுள்ள இடங்கள். | ...... | பலத்த சேதம். |
| | அடிஸ் அபாபா.—(Addis Ababa)—ஜிபுடி (Jibuti) ரயில்பாதை.— அவாஷு (Awash)க்கும், டிரிடாவா (Diredawa) வுக்கும் மத்தியில். | நஷ்டமில்லை. | ...... |
| | ராஜாங்க கட்டடங்கள், துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli) | நஷ்டமில்லை. | வெடிகளும், தீயும் கிளம்பின. |

**25—3—41.** (செவ்வாய்க்கிழமை).

### இதாலிய டோடிகானீஸ் (Dodecanese).

| | | | |
|---|---|---|---|
| | விமான நிலயம், தரையிலிருக்கும் விமானங்கள்.— ஸ்கார்பாண்டோ (Scarpanto). | ...... | பல விமானங்கள் படு சேதமாயின. |
| | விமான நிலயம்.—கலாடோ (Calato). | ...... | ...... |
| | கப்பல்கள்.—ஆஸ்ட்ரோபாலியா (Astropalia) தீவு. | நஷ்டமில்லை. | குண்டு நேரே விழ்ந்தது. |

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | விரோதி சைனியங்கள்.—கெரென் (Cheren). | ...... | பலத்த சேதம். |
| | ரயில்பாதை.—அடிஸ் அபாபா (Addis Ababa)வுக்கும், டிரிடாவா (Diredawa) வுக்கும் மத்தியில். | ...... | ரயில் வண்டிகள் பாலங்கள், ஸ்டேஷன்கள் சேதமாயின. |
| | மோட்டார் வண்டிகள்.—அடிஸ் அபாபா (Addis Ababa)வுக்கும், டிரிடாவா (Diredawa)வுக்கும் மத்தியில். | ...... | சுடப்பட்டன. |
| | விரோதி சைனியங்கள் தங்குமிடம்.—கோண்டாரு (Gondar)க்கு வடக்கே. | நஷ்டமில்லை. | கட்டடங்கள் பல இடிந்தன. |



| தேதி. | பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**26—3—41.** (புதன்கிழமை).

### அல்பேனியா (Albania).

| | | | |
|---|---|---|---|
| | ஒந்தாரை.—எல்லா அணிகளிலும் சண்டை செய்யும் கிரேக்க சைனியத்துக்கு. | ...... | ...... |

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | விரோதி சைனியங்கள்.—கெரென் (Cheren). | ...... | தகர்க்கப்பட்டன. |
| | விமானச் சண்டை.—கெரென் (Cheren) பிரதேசம். | நஷ்டமில்லை. | 2 விமானங்கள். |
| | ரயில் தண்டவாளங்கள், ரயில் வண்டிகள், பாலங்கள்.—அடிஸ் அபாபா (Addis Ababa) ஜிபுடி (Jibuti) ரயில் பாதை. | ...... | கடுமையான சேதம். சுடப்பட்டன. |
| | மோட்டார் வண்டிகள்.—கோண்டாரு (Gondar)க்கருகில். | ...... | ,, |
| | ரயில் தொடர்கள்.—அவாஷ் (Awash) ஸ்டேஷன். | ...... | ,, |
| | போக்குவரத்து சாதனங்கள்.—ஹாரார் (Harar)ரஸ்தாவில். | நஷ்டமில்லை. | ...... |

**27—3—41.** (வியாழக்கிழமை).

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| | பகலில்.—ஹிம்சை செய்தல் பிரிஸியின் (Frisian) தீவிலிருந்து லாராகெல் (Lerochelle)வரையுள்ள விரோதி கப்பல்கள். | ...... | ...... |
| | சாமான் கப்பல்.—ஆல்டெர்னி(Alderney) துறைமுகம். | ...... | ...... |
| | இரவில்.—ரயில் சாமான்கள் வைத்திருக்கும் கிட்டங்கி, கொலோன் (Cologne). | ...... | பெருந் தீக்கள் கிளம்பின. |
| | ரைன் (Rhine)நதிக்கு கிழக்கே தொழிற் சாலைகள் இருக்குமிடம் பிரதான ரயில்வே ஸ்டேஷன்.—டஸ்ஸல்டார்ப்(Dusseldorf). | ...... | எங்கும் ஒரே குண்டு மயம்; எங்கு பார்த்தாலும் ஒரே தீ. |

| தேதி. | பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**27—3—41.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.

| பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| கப்பல் துறைகள்.—டன்கர்க் (Dunkirk), கலே (Calais). | ...... | சேதமாயின. |
| கடற்படை நிலையம்.—ப்ரெஸ்ட் (Brest). | 5 விமானங்கள். | ...... |

### இதாலிய டோடிகானீஸ் (Dodecanese) தீவுகள்.

| பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| கட்டடங்கள், பெட்ரோல் தொட்டிகள்.— டோடிகானீஸ் (Dodecanese) தீவுகள். | நஷ்டமில்லை. | தீப் பிடித்தன. அதிகச் சேதம். |

### அல்பேனியா (Albania).

| பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| இதாலிய சைனியங்கள்.—பல முன்னணிகளிலும். | ...... | தவிடுபொடியாக்கப் பட்டன. |

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| காம்ப் (Camp)—ருடால்ப் (Rudolf) ஏரி, அடிஸ் அபாபா (Addis Ababa)—ஜிபுடி (Jibuti) ரயில் பாதை. | ...... | கட்டடங்கள் இடிந்தன. |
| சைனியமேற்றிச் செல்லும் ரயில் வண்டி-அபிஸீனிய (Abyssinian) தலைநகருக் குக் கிழக்கே. | நஷ்டமில்லை. | சுடப்பட்டன. |

**28—3—41.** (வெள்ளிக்கிழமை).

### இதாலி (Italy).

| பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| தரையிலிருக்கும் விமானங்கள், விமான நிலயம்—இதாலி (Italy)ன் தெற்கு கோடியிலிருக்கும் லெச்சே (Lecce). | ...... நஷ்டமில்லை. | விமான நிலயம் சேதமாயிற்று. சில விமானங்கள் தீக்கிரையாயின. பல விமானங்கள் சேதமாயின. |

### மத்தியதரைக்கடல் (Mediterranean).

| பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| இதாலிய யுத்தக் கப்பல்கள்—கிழக்கு மத்தியதரைக்கடல் (Mediterranean)—பிரிடிஷ் யுத்தக் கப்பல்களும் சேர்ந்து கொண்டன. | ஒருவருக்கும் காயமில்லை. 1 விமானம். | 7 யுத்தக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. பலருக்குக் காயம். |



| தேதி. | பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**28—3—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.

### அல்பேனியா (Albania).

| பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| படையெடுப்பு.—யுத்தம் நடக்குமிடங்கள். | ...... | ...... |

### இதாலிய ஆபிரிக்கா (Africa)

| பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| மோட்டார் வண்டிகள், துருப்புகள்.—அஸ்மாரா (Asmara) ரஸ்தா. | ...... | 250 மோட்டார் வண்டிகள் சேதமாயின. பலருக்குக் காயம். |
| ராணுவக் கட்டடங்கள்.—டெக்ளிஸின் (Teclesin) | ...... | பல கட்டடங்கள் இடிந்தன. |
| பீரங்கிகள் பொருத்திவைக்கப்பட்டிருக்கும் இடங்கள், பாலம்.—அஸ்மாரா (Asmara) பிரதேசம். | ...... | ...... |
| ரயில் தொடர்கள், ரயில் பாதைகள், ஸ்டேஷன்கள்.—டிரிடாவா (Diredawa)—அடிஸ் அபாபா (Addis Ababa) ரயில் பாதை. | ...... | போக்குவரத்து தடைப்பட்டன. |
| 4 ரயில் தொடர்கள்.—டிரிடாவா (Diredawa)விற்கும், அவாஷு (Awash)க்கும் மத்தியில். | ...... | 1 ரயில் வண்டி தீக்கிரையாகியது, மற்ற மூன்றும் சேதமாயின. |
| ஸ்டேஷன் கட்டடங்கள், சாமான் கிட்டங்கி.—மியஸ்ஸோ (Miesso). | நஷ்டமில்லை. | கட்டடங்கள் கொழுந்துவிட்டு எரிந்தன. |
| மோட்டார் வண்டிகள்.—டிரிடாவா (Diredawa), அவாஷ் (Awash) ரஸ்தா; ருடால்ப் (Rudolf), ஏரிக்குச்சமீபத்தில். | ...... | குண்டுகள் சரமாரியாய்ப் பொழிந்தன. |
| கப்பல்கள், தந்தியில்லாக் கம்பி ஆபீஸ், முக்கியமான எலெக்டிரிக் உற்பத்திசாலை, துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli). | ...... நஷ்டமில்லை. | ...... |

| தேதி. பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**29—3—41.** (சனிக்கிழமை).

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—விமான நிலயங்கள், ரஸ்தாக்கள், ரயில் பாதைகள், கப்பல்கள்.—பெல்ஜியம் (Belgium), வட பிரான்ஸ் (France). | நஷ்டமில்லை. | பலத்த சேதம். |
| இரவில்.—விமானஞ்சுடும் பீரங்கி வைத்திருக்கும் கப்பல், சாமான் கப்பல்.—டச்சு (Dutch)க் கடற்கரை. | ...... | குண்டுகள் நேரே வீழ்ந்தது. சுடப்பட்டன. |
| ஸப்மரைனை (sub-marine)க் கவிழ்க்கும் கப்பல்.—லோயர் (Loire) முகத்துவாரம். | ...... | மூழ்கடிக்கப்பட்டது. |
| ஜெர்மன் படையெடுப்பு துறைமுகங்கள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | நஷ்டமில்லை. | வெடிகளும், தீயும் கிளம்பின. |

### இதாலிய அல்பேனியா (Albania).

| | | |
|---|---|---|
| சாமான்கள், வெடி மருந்துகள், கிட்டங்கிகள்.—இதாலிய அணிகளுக்குப் பின்னால். | நஷ்டமில்லை. | தீயும், வெடிச் சத்தமும் கிளம்பின. |
| படையெடுப்பு.—பேராட் (Berat), டூகாய் (Dukai), டூகாடி (Dukati). | நஷ்டமில்லை. | ...... |

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| பட்டணம், பிரதான ஸ்டேஷன், கட்டடங்கள், ரயிலில் சாமான் வண்டிகள், ரயில் பாதைகள், மோட்டார் வண்டிகள் நிறுத்தும் இடம்.—அஸ்மாரா (Asmara) பிரதேசம். | நஷ்டமில்லை. | எங்கு பார்த்தாலும் தீயும், வெடிகளும் கிளம்பின. பலத்த சேதம். பலருக்குக் காயம். |
| மோட்டார் வண்டிகள், துருப்புகள்.—அஸ்மாரா (Asmara) பிரதேசம். | ...... | பல வண்டிகள் சேதம். பல முற்றிலும் நாசம். |
| விரோதி சைனியங்கள் தங்கியிருக்குமிடம்.—கெரன் (Cheren)க்கும் அஸ்மாரா (Asmara)வுக்கும் நடுவில். | ...... | ராணுவ கட்டடங்கள் இடிந்தன. |



| தேதி. பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**29—3—41** (சனிக்கிழமை)—தொடர்ச்சி.

### இதாலிய ஆபிரிக்கா (Africa)—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| மோட்டார் வண்டிகள்.—அவாஷ் (Awash) பிரதேசம். | ...... | சுடப்பட்டன. |
| ரயில்வே ஸ்டேஷன்.—மேடாஹாரி (Metahari). | ...... | ரயில்பாதை சேதமாயிற்று. |
| மோட்டார் வண்டிகள் கட்டடங்கள்.—நாகி (Nagi) பிரதேசம். | நஷ்டமில்லை. | ...... |

**30—3—41.** (ஞாயிற்றுக்கிழமை).

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| 2 ஜெர்மன் யுத்தக் கப்பல்கள்.—ஷாரன்ஹார்ஸ்ட் (Scharnhorst), நீஸ்சேள (Gneisenau).—ப்ரெஸ்ட் (Brest) துறைமுகம். | ...... நஷ்டமில்லை. | கப்பல்களின் பக்கத்தில் குண்டுகள் வீழ்ந்தன. |

### இதாலிய அல்பேனியா (Albania).

| | | |
|---|---|---|
| ராணுவ முக்கியமான இடங்கள்.—எல்பாஸானு (Elbasan)ம், அதன் சுற்றுப் புறங்களும். | ...... | கட்டடங்கள் இடிந்தன. எங்கும் தீப்பிடித்தது. |
| படையெடுப்பு.—டெபெலெனி (Tepeleni) | நஷ்டமில்லை. | ...... |

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| கப்பல் துறைகள், முக்கியமான துறைகள், பெட்ரோல் ஸ்தாபனங்கள்.—ட்ரிபோலி (Tripoli). | ...... | தீப்பிடித்தது. சேதம் அதிகம். |
| விரோதி மோட்டார் வண்டிகள்.—டெஸ்ஸி (Dessie), அலோமாடா Alomata). | ...... நஷ்டமில்லை. | மோட்டார் வண்டிகள் தீக்கிரையாயின. |
| விமான நிலயம்.—ஜிக் ஜிகா (Jig Jiga). | 2 விமானங்கள். | ...... |

| தேதி. | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **25—3—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—கடற்கரை பிரதேசங்கள் துணைக்காவல் கப்பல்கள்—வடகடல் (North Sea). | ...... | குண்டுகள் விழவில்லை. சேதமுமில்லை; ஒருவருக்கும் காயமில்லை. |
| **26—3—41.** (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—ஒரு பட்டணம்—மேற்கு இங்கிலாந்து (England). | ...... | வீடுகள் சேதமாயிற்று. |
| | இரண்டு பட்டணங்கள்.—தெற்கு இங்கிலாந்து (England), தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம். | 1 விமானம். 1 விமானம். | தொழிற்சாலைகள் இடிந்தன. |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | ...... | சொற்பச்சேதம்; ஒருவருக்கும் காயமில்லை. |
| **27—3—41.** (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—ஒரு தென்கிழக்கு கடற்கரைப் பட்டணம். | ...... | வீடுகளுக்குச் சேதம். |
| | தென்கிழக்குக் கடற்கரைப் பிரதேசம். | ...... | சிலருக்குக் காயம். |
| | துணைக்காவல் கப்பல்கள்.—பிரிஸ்டல் (Bristol) கால்வாய். | 1 விமானம். | ...... |
| | இரவில்.—படையெடுப்பே யில்லை. | ...... | ...... |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | விமானச் சண்டை.—கிரீஸ் (Greece). | 2 விமானங்கள். | ...... |



| தேதி. | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **28—3—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—பீச்சி ஹெட் (Beachy Head) க்கு தெற்கில். | ...... | சேதமில்லை. |
| | இரவில்.—விமான நடமாட்டமே இல்லை. | ...... | ...... |
| **29—3—41.** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—சில இடங்கள்.—கிழக்கு இங்கிலாந்து (England). | ...... | சொற்பச் சேதம் சிலருக்குக் காயம். |
| | ஓடிக் கொண்டிருக்கும் ரயில்வண்டி.—தெற்கு இங்கிலாந்து (England). | ...... | ...... |
| | இரவில்.—லண்டன் (London) ... | ...... | குண்டுகள் விழவில்லை. |
| **30—3—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—அங்குமிங்கும் சில இடங்கள்.—கிழக்கு இங்கிலாந்து (England), கிழக்கு, தென்கிழக்கு ஸ்காத்லாந்து (Scotland). | ...... | சேதமேயில்லை. ஒருவருக்கும் காயமில்லை. |
| | இரவில்.—விமான நடமாட்டமே இல்லை. | ...... | ...... |
| **31—3—41.** (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ...... | சேதமில்லை. |
| | இரவில்.—ஒரு வடகிழக்குக் கடற்கரைப் பட்டணம். | ...... | சொற்பச் சேதம். சிலருக்குக் காயம். |
| | தெற்கு, தென் மேற்கு இங்கிலாந்து (England). | ...... | ...... |
| | தென் வேல்ஸ் (Wales). ... | ...... | ...... |

# யுத்தக் குறிப்புகள்.

## பிரசித்தமான ஒரு வெற்றி.

சில நாட்களுக்குமுன் அமெரிக்கப் பத்திரிகை ஒன்று மத்தியதரைக்கடலில் நடந்த பெரும் யுத்தத்தை, இதாலியன் டிரபால்கர், (லார்டு நெல்ஸன் பிரெஞ்சுக் கடற்படையை அடியோடு முறியடித்தது) என்று கூறிற்று. சென்றவாரம் இப் பத்தியில் அமெரிக்கப் பத்திரிகைகள் பின் வரப்போவதை முன்னறிவதைப்பற்றி எழுதினோம். அதற்கு உதாரணம் இப்பொழுது கிடைத்திருக்கிறது. ஏனெனில் 36 மணிகள் முழுவதும் சென்றபிறகுதான் இந்த யுத்தம் ரொம்ப டிரபால்கரைப் போல இருந்தது என்று வர்ணிக்கப்பட்டது—யுத்த தந்திரத்தில் ஒருகால் அல்ல. ஆனால் குறி எல்லையிலும், முடிவுகட்டுவதிலும். பிரமாண்டமான பீரங்கிகள், பயங்கரமான வெடிகள், 10 அல்லது ஜாஸ்தி மைல்களிலிருந்து சண்டை இவைகள் நடைபெறும். இந்நாட்களில் இரண்டு கப்பல்படைகள் 1000, 2000 கஜத் தூக்குள் நின்று ஒன்றின்மேல் ஒன்று பக்கவாட்டு பீரங்கிகள் முழுவதையும் சுடும் படியான நிலைமையில் சண்டை நடக்கும் என்று யார்தான் எதிர்பார்க்கமுடியும்! ரேடியோவில் வர்ணனைக்கேட்டபொழுது கிரேக்க ரோம நாட்களில்போல 'ஒரு எதிரி கப்பலில் பிணைக்கும் கொக்கிபோட்டு, எதிரிக்கப்பலில் தாவி சண்டை இடும் மாலுமிகளே, அதில் ஏறுங்கள்,' என்ற கூச்சலைக்கூட எதிர்பார்த்தோம், நான் என் கண்ணால் ஒரு யுத்தக்கப்பல் முழுகுவதைப் பார்த்தேன். அதனால் கன்னிங்ஹாம் கடற்படையின் சிறந்த மாலுமி தந்திரம், குறி இவைகளில் நான் அடைந்த பெருமிதம், இதாலியர்களின் கதியை நினைத்தால் எனக்கு ஏற்படும் நடுக்கத்தையும் அனுதாபத்தையும் தடுக்கமுடியவில்லை. நீங்கள் அந்த பெரும் இதாலிய யுத்த கப்பலிலிருந்த 1,700 சொச்சம் மாலுமிகளில் ஒருவன் என்று சற்று எண்ணிப்பாருங்கள். நீரிலிருக்கும் அதன்பாகம் குண்டால் சேதமடைந்தது. இருண்ட கடலில் மைலுக்கு மைல் அது தரையை நோக்கி விரைந்து செல்ல முயலுகிறது; ஆனால் மைலுக்கு மைல் அதன் வேகம் குறைகிறது. தலைக்கு மேல் சத்ருவின் பாம்பர் விமானங்கள். நீர்பிடித்து கொஞ்சம் கொஞ்சமாக கப்பல் ஒருபுறம் சாய்கிறது. கொஞ்சம் நேரத்துக்கெல்லாம்... அந்த இதாலியன் க்ரூய்ஸர்களில் இருந்த ஆபீஸர்கள், மாலுமிகள் இவர்கள் கதிதான் என்ன! வேகமாகச் செல்லும் புதுக் கப்பலில் யுத்தப் பயிற்சிபெற்றார்கள். கன்னிப் போரில் பிரிடிஷ் 'வார்ஸ்பைட்' 'வேலியண்டை'யா எதிர்க்கவேண்டும்! மீகாமன்கள், இஞ்சினியர்கள், பீரங்கிக்காரர்கள், டார்பிடோ ஆள்கள், இஞ்சின்கள், பீரங்கிகள், காண்தகு கப்பல்,—எல்லாம் ஒரு பதில் குண்டு சுடாமலா அழிய வேண்டும்!

## சோதனையின் விளைவு.

"கடல் ஆதிக்கம்" யுத்தத்துக்கு முன்பும், தற்பொழுதும், சரித்திரத்திலும் மனிதர் சொல்லில் எழும் எவ்வளவு அர்த்த புஷ்டியான சொல்தொடர்! ஆபத்து நிறைந்த நாட்களில் நமக்கு 'கடல் ஆதிக்கம்' இருக்கிறது என்ற



நம்பிக்கையைத் தழுவினோம். ஒவ்வொரு நடுநிலைமை வகிக்கும் நாடும் எண்ணிற்று; 'பிரிடிஷாருக்கு வாஸ்தவத்தில் 'கடல் ஆதிக்கம்' இருக்கும் பட்சத்தில், ஜெர்மானியர் எவ்வளவு உக்கிரமாகத் தாக்கினாலும் பிரிடிஷார் ஒருகால் அதிலிருந்து மீளலாம்' என்று. ஜெர்மானியர்கள் எண்ணினார்கள்: 'கடல் ஆதிக்கம்' என்ற ஒன்றும் வாஸ்தவத்தில் கிடையாது. அப்படி ஏதாவது ஒன்று உண்டென்று வைத்துக்கொண்டாலும் அந்த பாத்தியம் நமது நீர்மூழ்கிபடைக்கு சித்தித்து விட்டது. பாருங்கள்! நமது ஒத்தாசைக்கு ஒரு பெரிய, வேகமான இதாலியப் படை இருக்கிறது. அது பிரிடிஷ் படைக்கு ஓயாத தொல்லை விளைவிக்கும். பிரிடிஷ் படையின் பாதியை மத்தியதரைக்கடலில் பிரித்து நிறுத்தும்படி அது செய்யும். பிரெஞ்சுப் படை மிச்ச சொச்சம்தான் லேசா என்ன? அதுவும் நம்முடையதுதானே. ஐக்கிய அமெரிக்கா ஏதாவது தாக்குத் தகரார் செய்தால் ஜப்பானியர்களின் படைதான் எவ்வளவு பலமானது."

ஒவ்வொரு யுத்தத்திலும் பிரிடிஷாருக்கு வெற்றி அளித்தது கடற்படை என்ற ஐதீகம் உண்டு. இதிலும் அது ஜயிக்கும் என்று உணர்ந்தோம். ஆயினும் அதை நிலை நிறுத்த வேண்டியதாயிற்று; அதுவும் பிரான்ஸும் விழுந்த பிறகு. முஸோலினி மத்தியதரைக்கடலை 'எங்கள் கடல்' என்றபொழுது அதை இழிவு செய்து சிரித்தோம். ஆயினும் அவருடைய வேகம் மிகுந்த, பலமான கவசம் பூண்ட யுத்தக் கப்பல்களும், க்ரூயிஸர்களும், அவைகளின் நூற்றுக்கணக்கான சில்லரைக் கப்பல்களும் எட்ரியாடிக் கடலில் இங்கும் அங்கும் செல்லுகையில், 'மத்தியதரைக் கடலில் பிரிடிஷ் ஆதிக்கம்' என்பது ஒப்புதலையாகச் சொல்லலாமே ஒழிய, அதை தீர்மானமாகக் கூறமுடியவில்லை. நமது மத்தியதரைக்கடல் படைக்கு வேறு பகுதிகளிலிருந்து ஒத்தாசைக்கு கப்பல்கள் அனுப்பவேண்டி ஏற்பட்டது. இதனால் இதர பகுதிகளில் நமக்குக்காபந்து குறையாவிட்டாலும் நமக்கு இருந்த பிடிமானமான ஆதிக்கம் சற்று குறையத்தான் குறைந்தது. மத்தியதரைக்கடல் படையின் தொழில் இது ஆயிற்று:— நமது பெரும் கடற்படையில் ஒரு பகுதி ஓயாமல் நீண்ட தூரம் சத்ருப்படையை தேடித்திரிந்து கட்டுக்கண்ணாமூச்சி விளையாடவேண்டியதாயிற்று; சாமான் கப்பல்களுக்கு துணை செல்லவேண்டி வந்தது; ஒரு 'கடற்படையுடைய பெரும் வல்லரசு' என்று சொல்லிக்கொண்ட இதாலியக் கடற்படையின் கொடுக்கைப்பிடித்து அதை சண்டைக்கு இழுக்க பெரும் முயற்சிகள் செய்யவேண்டி வந்தது. பிரிடிஷ் கடல்ஆதிக்கத்தை அன்வய முறையில் கூற முடியவில்லை; வியதிரேக முறையில் கூறவேண்டியிருந்தது.

வெற்றி அத்தியாயத்தை டாரான்டோ திறந்தது. ஜினோவா ஒரு பக்கவாட்டு. தற்போதைய நிச்சந்தேகமான வெற்றி பிறர் கடல்ஆதிக்கம் வெறும் பேச்சுத்தான், எல்லார் கடல்ஆதிக்கமும் பிரிடிஷ் கடல்ஆதிக்கத்தில் ஒடுங்கி விட்டது என்பதை நிரூபிக்கிறது. இதன் விளைவுகள் அபாரம். மத்தியதரைக் கடலிலிருந்து இனி பெரும் கப்பல்களில் அநேகத்தை வேறு இடங்களுக்கு தைரியமாக நகர்த்தலாம். அங்குஸ்தி இங்குஸ்தி என்று இருக்கிற மிச்சம்

பிரெஞ்சுப்படை அநேக விஷயங்களை எண்ணிப்பார்க்கவேண்டும். மதில்மேல் பூனைபோல் இருக்கும் அநேக நாடுகள் பிரிடிஷாரை விடு வேறு ஒருவரும் கடல் வியாபாரம், கான்வாய்கள், சப்ளைகள் இவைகளையும் நிர்வகிக்கமுடியாது, தரைப் படைகளை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு கொண்டுபோகவும் முடியாது, என்பதை உணருவார்கள். அச்சு நாடுகள் வீணில் பல்லைக்கடித்து துடித்து என்ன நேருமோ என்ற பயத்தில் வாழ்ந்துவரும்.

## ருதுவுடன் ஒரு பந்தயம்.

2, 3 வாரங்களுக்கு முன் ஒரு போட்டி—முக்கியமான ஒரு போட்டி—நடப்பதை எல்லோரும் அறிந்தார்கள். அது ஜெனரல் வேவலின் கிழக்கு ஆபிரிக்க சைனியங்களுக்கும், ஆபிரிக்க பருவகால மழைக்கும், இதாலியன் சாம்ராஜ்ஜியத்துக்கும் முடிவு கட்டுவது எளிது. ஆயினும் இது பிரிடிஷாரின் பெருமைக்கு மட்டில் அவசியமானதல்ல. அடைமழை பிடித்துக்கொண்டால் 5, 6 மாதங்களுக்கு ஒன்றுமே செய்யமுடியாது. அதற்குமுன் துருப்புகள், யந்திர சாதனங்கள், விமானங்கள் அங்கிருந்து நீங்குவதும் அவசியம். அந்தப் பந்தயத்தில் ஜயித்து விட்டோம் என்று தோன்றுகிறது. சேதம் கொஞ்சம் ஜாஸ்தி; இறந்து காயம்பட்ட இந்தியரின் லிஸ்டு இதை காட்டுகிறது. ஆனால் இதன் விளைவின் பெருமையை உணர்ந்த அவர்கள் அதை பொருட்படுத்தியிருக்கமாட்டார்கள். ஹாரார், கெரென், திரேதாவா, இன்று அஸ்மாரா—எல்லாம் ஒரு வாரத்துக்குள். எதிரிடை என்ன கஷ்டங்கள் தெரியுமா? பிரிடிஷ், இந்தியப் படைகளை சரியாக தலைமை வகித்து அவர்களும் புகழ்பெறும்படி நடந்து கொண்டதால் கஷ்டங்கள் கடக்கப்பட்டு, அல்பமாகத் தோன்றுகிறது. பர்க் எழுதிய சின்னப் புஸ்தகத்தில் ஜெனரல் வேவலின் அடையாள வாக்கியம் என்னவென்பதை நான் தேடிப் பார்க்க வில்லை. ஆயினும் அவனுடைய பரம்பரைக்கு 'வேவல் வெற்றி பெருவான்' என்பது தகும் என்று எண்ணுகிறேன்.

---

# பிரிடன் பேசுகிறது.

*இன்று போலந்தைப்பற்றிப் பேசுவதாக மிஸ்டர் நோயல் பேகர் உத்தேசிக்கிறார்.*

யுத்தம் நடந்து கொண்டிருக்கும் பொழுது உண்மையை உரைப்பது அவ்வளவு உசிதமல்ல. செய்திகள் எவ்வாறு உண்டுபண்ணப்பட்டவை என்பதைப்பற்றி சென்ற யுத்தத்தின் ஆரம்ப காலத்தில் நடந்த ஒரு கதையைச் சொல்லப் போகிறேன். ஜெர்மனி, பிரான்ஸ், பிரிடன், இதாலி, இவைகளின் பத்திரிகைகளில் ஒன்றின் பின் ஒன்றாக வெளிவந்த செய்திகளைப் பூராவும் சொல்லப் போகிறேன். கொலோனிலுள்ள கோல்நிஷி ஸீடங் பேபரில் "ஆண்ட்வெர்ப் விழுந்துவிட்டதென்ற செய்தி வெளி வந்தவுடன், மாதாக் கோவில்களின் மணிகள் கோஷித்தன" என்று வெளி



வந்தது. அதாவது ஜெர்மனியிலுள்ள கோவில்களின் மணிகள் என்று அர்த்தம். பிரான்ஸில் வெளியாகும் மாடின் பத்திரிகையில் "கோல்நிஷி ஸீடங் பத்திரிகையில் கண்டிருப்பதுபோல் ஆண்ட்வெர்ப்பிலுள்ள பாதிரிகள், ஆண்ட்வெர்ப் பிடிக்கப்பட்டபொழுது கோவில் மணிகளை அடிக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டார்கள்" என்று சொல்லப்பட்டது. லண்டனில் வெளியாகும் டைம்ஸ் பத்திரிகையில் "கொலோனிலிருந்து தெரிந்துகொண்டதை மாடின் பத்திரிகை வெளியிட்ட பிரகாரம், ஆண்ட்வெர்ப் பிடிக்கப்பட்டபொழுது, மாதாக் கோவில் மணிகளை சப்தம் செய்ய உத்தரவிட்டு மறுத்த பெல்ஜியப் பாதிரிகள் அவர்களிடங்களிலிருந்து விரட்டப்பட்டார்கள் என்று பிரசுரம் செய்திருக்கிறது. யிலானில் வெளியாகும் காரியரி டெல்லா சேரா என்னும் பத்திரிகையில் "கொலோனிலிருந்து பாரிஸ் பத்திரிகை மூலமாக அறிந்து டைம்ஸ் பத்திரிகையில் வெளியிட்டபடி, ஆண்ட்வெர்ப் பிடிபட்ட காலத்தில் கீழ்படிய மறுத்த பாதிரிகளைக் கடினமான வேலைகளைச் செய்யும்படி தண்டித்துவிட்டார்கள்" என்று வெளியிட்டிருக்கிறார்கள். பாரிஸிலுள்ள மாடின் பத்திரிகையில் "கொலோனிலிருந்து லண்டனுக்குக் கிடைத்த தகவல்படி வெளியிட்ட காரியரிடெல்லா சேரா பத்திரிகைப் பிரகாரம், ஆண்ட்வெர்ப்பைப் பிடித்த குரூரமான சத்துருக்கள் தைரியமாக கீழ்ப்படிய முடியாதென்று மறுத்த பாதிரிகளை, தலைகீழாகக் கட்டி உயிருள்ள கத்தரிக்கோல்கள்போல் தொங்க விட்டிருந்தார்கள் என்று" வெளியிடுகிறார்கள். கோரமான கட்டுக்கதையை எவ்விதம் உண்டாக்கலாம் என்பதற்கு இது ஒரு அறிய உதாரணமாகும்.

முன்னாளில் கோரச்செய்கையைப் பற்றிப் பேசுவது யுத்த முறைகளில் ஒரு அம்சம் என்று கருதப்பட்டது. இந்த முறையானது யுத்த முறைகளில் ஒரு இழிவான அம்சமென்று நான் கருதுகிறேன். சதாகாலமும் யுத்தத்தின் கொடுமைகளைப்பற்றியும், யுத்தத்தில் ஏற்பட்ட முக்கியமான செய்கைகளைப்பற்றியும் அடிக்கடி பேசுவதினால் தான் ஜனங்களுக்கு அருவருப்பு ஏற்பட்டு புதிதாக யுத்தங்கள் ஏற்படுகின்றன. இந்த யுத்தத்தில் இங்கிலாந்தில் இம்மாதிரியான கொடுமை வியாபாரி ஒருவருமில்லை என்று நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன். நம்முடைய அரசாங்கத்தாராவது, நம்முடைய பத்திரிகைகளாவது, நம்முடைய இதரப் பிரசாரம் செய்பவர்களாவது நாஸிகளைப் பற்றியும் பாஸிஸ்டுகளைப்பற்றியும் இழிவாகச் சொல்லவேயில்லை. இதுவரையில் நம்முடைய சத்துருவைப்பற்றி உண்மையைக்கூட நாம் வெளிவிடவில்லை. யுத்தம் ஆரம்பமாகி 18 மாதங்களாகியும் ஹிட்லரின் கொடுமை என்பது என்ன என்று பலருக்குத் தெரியாது. ஹிட்லருடைய பு. உ. அமைப்பின் பிரகாரம், அவன் ஆக்ரமித்திருக்கும் நாடுகளின் நாகரீகத்துக்கும், படிப்புக்கும், ஐரோப்பாவின் மேன்மைக்கும் என்ன செய்திருக்கிறானென்று யாராவது தெளிவாய்ச் சொல்லக்கூடுமா? ஆகிலும், ஒவ்வொரு சுதந்திரமுள்ள மனிதனும், ஸ்திரீ ஜனமும் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயம் யாதெனில், ஹிட்லரின் திட்டப்படி உலகம்

பூராவையும் தன் வசமாக்கிவிட்டால் ஹிட்லரிடமிருந்து ஏற்படக்கூடிய பீதியும், கொடுமையும் எவ்வகையாய் இருக்கக்கூடுமென்பதுதான்.

கொஞ்ச நேரத்திற்குமுன் ஜெர்மானியர்கள் தங்கள் தேசத்திற்கு என்ன செய்திருக்கிறார்களென்றும், சேனையிலும், வீட்டிலுமுள்ள ஒவ்வொரு ஜெர்மானியனுடைய தேகம், புத்தி, ஆத்மா, எல்லாவற்றையும் ரகசியப் போலீஸார் எவ்விதம் ஈவு இரக்கமன்னியில் கவர்ந்துவிட்டார்களென்பதையும் உங்களுக்குச் சொன்னேன். இவைகளுக்கு அத்தாக்ஷி நான் நன்றாய் அறிந்த ஜெர்மானியர்களிடமிருந்தும், ஸத்யவாதிகளும், கௌரவமுள்ளவர்களும், தேச விஸ்வாசமுள்ளவர்களுமான ஜனங்களிடமிருந்தும் கிடைத்திருக்கிறது. அம்மாதிரியாக பாதுகாப்புடன் உள்ள முகாமில் கைது செய்து வைக்கப்பட்டிருந்து அங்கு ஏற்பட்ட கொடுமைகளின் பயனாக லண்டனிலிருந்த என் சிநேகிதர் ஒருவர் இறந்துவிட்டார்.

இன்றையதினம் போலந்தில் நாஸி தத்வத்தின் போக்கைப்பற்றிப் பேச விரும்புகிறேன். இதுவும் நம்பக்கூடிய சாக்ஷியங்களைக்கொண்டு தான் சொல்லப்போகிறேன். சில வாரங்களுக்கு முன் என்னுடைய நண்பர் ஒருவர் போலந்திலிருந்து தப்பி வந்துவிட்டார். அவர் பொது உடமை ஜனநாயக கக்ஷியைச் சேர்ந்தவர். இப்பொழுது தலைமை வகிப்பவர். வியாபார சங்கத்தைச் சேர்ந்தவர். அந்நிய நாடுகளின் க்ஷேமத்தைக் கோருபவர், போலந்துக்கும் உலகிலுள்ள மற்ற தேசங்களுக்கும் நட்பும் நல்ல உடன்படிக்கையுமிருக்கவேண்டுமென்று பிரயத்தனம் செய்பவர். அவர் போலந்தைவிட்டுப் புறப்படுமுன், தேசம் பூராவும் சுற்றி தேசத்தின் நிலைமையைப்பற்றி முதல் தரமான தகவல்களை அறிந்துகொண்டு போலந்திலுள்ள நாஸி அதிகார வர்க்கத்தார் வாஸ்தவமாக என்ன செய்திருக்கிறார்களென்று மதிக்க முயன்றார். போலந்து ராஜ்ஜியத்தை அடியோடு ஒழித்துவிடவேண்டுமென்றும் போலந்தில் கல்வியின் அபிவிருத்தியையும், படிப்பையும், தேசீய வாழ்வையும் அழித்துவிடவேண்டுமென்றும், ஜனத்தொகையை கொலையாலும் பட்டினி போட்டும் குறைத்து விடவேண்டுமென்றும், பாக்கிப்படும் லக்ஷக்கணக்கான ஜனங்களை கதியற்ற அடிமைகளாகவும் செய்துவிடவேண்டுமென்றும் ஹிட்லரின் மனதார்ந்த நோக்கமென்று அவர் சொன்னார். மனிதர்களுடைய சரித்திரத்தில் எதிர்பாராதவண்ணம் இரக்கமன்னியில் ஜனங்களுக்கு இம்ஸை உண்டுபண்ணியும் துன்பம் விளைவித்தும் வருகிறான். நாஸிகள் அபிப்ராயத்தில் மூன்று வகைப்பட்ட போலந்து ஜனங்களிருக்கிறார்கள். அதாவது ஜெயிலுக்கு ஏற்கனவே சென்றவர்கள். ஜெயிலிலிருப்பவர்கள். ஜெயிலுக்குக் கூடிய சீக்கிரம் அனுப்பக்கூடியவர்கள் என்று போலந்தில் வதந்தி இருக்கிறது. ஒவ்வொரு ராஜீயக் கக்ஷியும் ஒவ்வொரு தேசீயக் கூட்டமும் கலைக்கப்பட்டுவிட்டது. ஒவ்வொரு தொழிலாளிகள் இயக்கமும் ஒழிக்கப்பட்டு விட்டது. அவர்களுடைய சொத்துக்கள் ஜெர்மன் தேசத்துக்கு வசமாயின. குடியானவர்களும் நகரங்களிலுள்ள வேலைக்காரர்களும் தொந்தரவு செய்யப்படுகிறார்



கள். கல்விப் பயிற்சி உள்ளவர்கள் நடுநடுங்குகிறார்கள். புகழ் பெற்ற போலிஷ் படிப்பாளர்களில் அநேகர் அவர்களுக்கு ஏற்பட்ட ஹிம்சையால் மாண்டு விட்டார்கள். எல்லா சர்வகலாசாலைகளும், யந்திர கலாசாலைகளும், பயிற்சி சாலைகளும், சிறிய வகுப்புகளுள்ள பள்ளிக்கூடங்களும் சாத்தப்பட்டுவிட்டன. கண்காக்ஷி சாலைகளுக்கும், புத்தகசாலைகளுக்கும், சாஸ்திர ஆராய்ச்சி சாலைகளுக்கும் இதே கதிதான். படிப்பு, கல்வி, ஆராய்ச்சி இவையெல்லாம் இனிமேல் போலந்து ஜனங்களுக்குக் கிடையாதாம்.

தங்கள் வீடுகளிலிருந்து எவ்வளவு போலந்து ஜனங்கள் துரத்தியடிக்கப்பட்டார்களென்றும், எவ்வளவு ஜனங்கள் தொழிற்சாலைகளிலும், கொட்டாரங்களிலும் வேலைசெய்து வருகிறார்களென்றும் நமது நிருபர் கணக்கிட்டுச் சொல்லவில்லை. ஆனாலும், அவர் அனுமானமாகச் சொன்னார். சுமாராக பத்து லக்ஷம் ஜனங்கள் புதைகுழியிலும், ஜெயில்களிலும், தொழிற்சாலைகளிலும் கட்டாயத்தின்பேரில் வேலைகளிலும், மறைந்து விட்டார்களென்றும், 15 லக்ஷம் ஜனங்கள் தங்கள் சொத்து சுகங்களை இழந்து ஈவு இரக்கமன்னியில் ஆகாரமன்னியில் பலதேசங்களுக்குத் துரத்தபட்டு ஆகாரத்திற்கும் வேலைகளுக்கும் கதியன்னியில் திரிகிறார்களென்றும் அறிவிக்கிறார். இவைகளின் அர்த்தம் என்னவென்று யோசித்துப் பாருங்கள். மற்றொரு சாக்ஷி, இவர் வார்ஸாவில் ஸெப்டம்பர் மாதம்வரை வசித்தவர், அறிவிப்பதாவது: "ஜெர்மானியர் எல்லா தெருக்களிலும் நுழைந்து, அங்கிருந்த குடும்பத்தாரை சின்னாபின்னம் செய்துவிட்டார்கள். பிறந்து சில மாதங்களாகிய குழந்தைகளை விட்டுவிட்டு தாயார்கள் போகும்படியாயிற்று. ஆண்பிள்ளைகள், பெண்பிள்ளைகள், குழந்தைகள் எல்லோரும் ஐம்பது அறுபது நபர்களாக ரயில் சாமான் வண்டிகளில் ஏற்றிப் பூட்டப்பட்டு, உஷ்ணத்துக்குவேண்டிய ஏற்பாடுகளும், ஆகாரமும், தண்ணீரும் இல்லாமல் செய்து, ஐந்து அல்லது ஆறு நாட்கள் கொண்ட பிரயாணங்களில் அனுப்பப்பட்டார்கள். இது மாரிகாலத்தில் 50 டிகிரி குளிர்ச்சியுள்ள மூடுபனியிருக்கும்போது நடந்ததால் இந்த மூடு வண்டிகளைத் திறந்த பொழுது பாதிப்பேர்கள் மாண்டுவிட்டார்கள், பாக்கி யிருப்பவர்கள் குளிரால் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தார்கள்."

ஒழுங்காகவும் நீதிமுறையாயும் இருந்துவரும் நமது தேசத்தில் இம்மாதிரியான சம்பவங்கள் நேருவது அசம்பாவிதம். ஆகிலும் இவைகள் நாஸித்தலைவர்களின் முக்கியமான நோக்கங்கள் என்று நாம் அறியக்கூடும். போலந்தில் வெளியாகும் ஜெர்மன் பத்திரிகையில் போலந்திலுள்ள நாஸி அரசாங்கத்தாரின் தலைவர் ஒருவர் பேசியதை வெளியிட்டு இருக்கிறார்கள். அவர் சொல்லுவதாவது "நாங்கள் எஜமான்கள். எஜமான்கள் போலவே நடிப்போம். போலந்தைச் சேர்ந்தவர்கள் எங்களுடைய சேவகர்கள். அவர்கள் மறுபடியும் கலகம் செய்ய ஆரம்பம் செய்யக்கூடும். அவர்கள் தலையில் வலுவாக ஆணிகளை அறைந்துவிடவேண்டும். போலிஷ் ஜனங்கள் மறுபடியும் கலகம் செய்வார்களென்ற

எண்ணத்தையே ஒழித்துவிட வேண்டும்.”

நாஸிகள் மிகவும் கல்நெஞ்சமுள்ளவர்கள். தங்களுக்கு ஏற்படக்கூடிய எதிர்ப்பையும் போலிஷ் ஜனங்களின் உணர்ச்சிகளையும் அப்புறப்படுத்த போலிஷ் தலைவர்களுக்கும், ஜனங்களுக்கும் தயையன்னியில் ஜெர்மானியர்கள் கொடுமை விளைவிக்கிறார்கள். ஒரு சமயம் சிப்பாய்களின் பெருந்தன்மையைப்பற்றி ஹிட்லர் பேசியிருக்கிறான். வார்ஸாவை அதன் நகரசபைத்தலைவரான ஸ்டாவின்ஸ்கி தீரத்துடன் பாதுகார்த்ததுபோன்ற ஒரு செய்கை இந்த யுத்த சரித்திரத்தில் இருந்திருக்க முடியாது. நாஸிகள் வார்ஸாவுக்குள் புகுந்தபொழுது ஸ்டாவின்ஸ்கியை டாச்சாவிற்கு அனுப்பிவிட்டார்கள். அவர் இன்னும் திரும்பி வரவில்லை. அவருடைய ஸ்நேகிதர்கள் அவருக்கு ஏற்பட்ட கொடுந்துன்பங்களிலிருந்து அவர் இறந்துவிட்டாரென்று அபிப்பிராயப்படுகிறார்கள்.

ரூர் பிரதேசத்திலுள்ள ஜெர்மன் தொழிற்சாலைகளில் பிரிட்டனுடைய விமானங்கள் வெடிகுண்டுகள் போட ஆரம்பித்தவுடன், நாஸிகள் போலந்திலுள்ள ஆயுதசாலைகளை வேலைசெய்ய ஆரம்பித்தார்கள். ஒரு தொழிற்சாலையில் தேசிய துரோகி ஒருவன் ஒத்தாசை செய்தான். மறுநாள் காலையில் தொழிற்சாலையின் முகத்வாரத்தில் அவன் கொலையுண்டு கிடந்தான். இதற்குப் பதிலாக ஜெர்மானியர்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களில், 300 நபர்களை ஒரு காட்டிற்குக் கொண்டுபோய், மனிதர்கள் சஞ்சாரமில்லாத ஒரு இடத்தில் ஒரு பெரிய பள்ளத்தை வெட்டி, அவர்களை பீரங்கிகளால் சுட்டுத்தள்ளி, அவர்கள் வெட்டிய குழிகளில் அவர்களைப் புதைத்து, புதைகுழியின் சின்னங்களை தெரியாத வண்ணம் செய்துவிட்டார்கள். ஆனால் சமாசாரம் வெளிப்பட்டுவிட்டது. கொலையுண்டவர்களுக்குத் தலைவர் நமது சிநேகிதருக்கு நண்பன். அவர் நமது சிநேகிதரை ரகசியமாய் அந்தப் புதைகுழிக்கு அழைத்துச் சென்று அங்கிருந்து ஒரு கூடை மண் எடுத்துவந்தார். அது இப்பொழுது இங்கிலாந்திற்கு வந்து விட்டது. இதே மாதிரி அநேகம் நிகழ்ச்சிகளை அவர் தெரிவித்தார். அவைகளையும் நான் உங்களுக்குச் சொன்னால் உங்களுக்கு அருவருப்பு உண்டாகிவிடும்.

இம்மாதிரி காட்டுமிராண்டிபோல் கொடுமை விளைவித்தபோதிலும் ஹிட்லரால் போலந்து ஜனங்களின் தைரியத்தைப் போக்கடிக்க முடிந்ததா? போலந்திலிருந்து இதற்கு அத்தாக்ஷி கிடைக்காத போனாலும், ஹிட்லரால் இந்த வேலை மட்டும் செய்ய முடியவில்லையென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். பிரிட்டனில் அநேக போலிஷ்காரர்களிருக்கிறார்கள். தெற்கு இங்கிலாந்திலுள்ள யுத்த விமானப்படையின் அதிகாரியான ஒருவர், போலிஷ் விமானிகளின் ஒரு பகுதியார் ஒரு மாதத்திற்குள் 103 ஜெர்மன் விமானங்களைச் சுட்டு வீழ்த்திவிட்டார்களென்று அறிவித்தார். அவர்களுடைய தீரமும் புத்தி விசாலமும் மெச்சத்தக்கதென்று அவர் சொன்னார். இரண்டு வாரங்களுக்குமுன் பிரான்ஸிலுள்ள சில ஜெர்மன் விமான நிலயங்களைப் பகலில் தாக்குவதற்காக அவர்களை



அனுப்பினான். அவர்களில் ஒருவன் தன்னுடைய லக்ஷியத்தைப் பார்த்துக் கொண்டே கீழே வந்ததில் விமானத்தில் வால் பாகத்தில் 25 அடி நீளமுள்ள அதிகமான காந்த சக்தியுள்ள கம்பிகளால் சுற்றப்பட்டு அதிலிருந்து மீண்டும் வெளியேறினான். இன்னொரு விமானி கீழாக வந்து ஒரு பீரங்கி நிலயத்தைத் தாக்கியபொழுது மண் மேட்டில் அடிபட்டு இறக்கைகளில் அரைச்சாக்கு மண்ணுடன் உயரக் கிளம்பினான். போலந்திலிருக்கிற போலிஷ் ஜனங்களும் இங்கிலாந்திலிருப்பவர்கள் போல் தைரியசாலிகள்தான். இதற்குப்போதுமான அத்தாக்ஷியிருக்கிறது. அவருடைய சுற்றுப்பிரயாணங்களில் சமாதானம் செய்வதாக ஒரு போலந்து மனிதனுக்கும் அபிப்பிராயமில்லையென்று என் சிநேகிதர் அறிவித்தார். இது இப்படி என்றால் சரண் புகுவதைப்பற்றிக் கேட்பானேன். ஒவ்வொரு புருஷனும் ஸ்திரீயும் ஜெர்மானியர்களை முறியடித்துவிட வேண்டுமென்றும் போலந்தின் சுயேச்சையையும் நம்பிக்கையையும் நிலைநாட்ட வேண்டுமென்றும் தீர்மானம் செய்திருக்கிறார்கள். போலந்திலுள்ள ஒவ்வொரு ஜனங்களுக்கும் தைரியம் உண்டாகிவிட்டது. இப்பொழுது அவர்கள் எதிர்க்க ஆரம்பித்துவிட்டார்கள். அவர்கள் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் நாஸிகளைத் தடுப்பதற்கும் தொலைத்து விடுவதற்கும் சதியாலோசனை செய்கிறார்கள். நான் மேலே சொன்ன தொழிற்சாலையில் இந்த சதியாலோசனை நடந்து வருகிறது. 600 முதல் 1,000 வரையில் ஜனங்கள் மாண்டுவிட்டார்கள். அவர்களுடைய நாட்டை பந்தத்திலிருந்து விடுவிக்க நமக்கு ஒத்தாசை செய்ய எப்பொழுது தருணம் வாய்க்குமென்று அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். தேசமெல்லாம் ரகசியமாக அனுப்பப்பட்டிருக்கும் ஒரு துண்டு பிரசுரத்தை என் சிநேகிதர் என்னிடம் கொடுத்தார். அவைகள் ரொம்பவும் மனதைக் கவரக்கூடிய பத்திரிகைகள். அதில் போலந்தில் மறுபடியும் சுயேச்சையும் ஜன நாயக ஆக்ஷியும் ஜனங்களுக்கு நியாயமும் கிடைக்கும் வரையில் ஒவ்வொரு போலந்து மனிதனும் சண்டை செய்யவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறது. அதில் புதிய போலந்து ராஜ்ஜியத்தின் பரராஜ்ஜிய சம்பந்தங்கள், உலகத்தின் நாடுகளோடு ஒத்துழைப்பும் ஆழ்ந்த அறிவும் உள்ளதாக இருக்கவேண்டுமென்றும் விசேஷமாக போலந்துக்குப் பக்கத்திலுள்ள நாடுகளோடுதான் இவை முக்கியமென்றும் அறிவிக்கப்படுகிறது. இந்தப் பிரசுரத்தில் கடைசியில் பின் வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. “நாம் போலந்தின் சுயேச்சைக்காக மட்டும் பாடுபடவில்லை. எங்களுடைய சுயேச்சைக்கும் உங்களுடைய சுயேச்சைக்கும் என்ற பெருந்தன்மையான நோக்கத்துடன் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிற எல்லா தேசங்களின் முன்னேற்றத்துக்காகவும் சண்டை செய்கிறோம்.” இந்தப் பத்திரிகைகள் வெளிவந்த காலத்தில் ஜனங்களுடைய பரிதாப நிலைமையைக் கவனியுங்கள். இவ்வளவு பெருமை வாய்ந்த போலந்து வீரர்கள் உலக சம்பவங்களில் தைரியமாகச் சண்டை செய்திருப்பார்களென்பதில் கொஞ்சமேனும் சந்தேகப்படவேண்டாம்.

## யுத்தத்தைப்பற்றி ஐக்கிய அமெரிக்கா பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்.

## தற்கால சரித்திரத்தில் முஸோலினியின் பங்கு.

## மத்தியதரைக் கடலில் பிரிடனின் நிலைமை.

## போலிஷ் எதிர்ப்பு நீடிக்கிறது.

27—2—41 முதல் 6—3—41 வரை யுத்தத்தைப்பற்றி ஐக்கிய அமெரிக்கப் பத்திரிகைகளில் பின்வருமாறு வெளிவந்தன :—

ஐரோப்பாவிலிருந்து 27—2—41-ல் 'எஸ். எஸ். ஸிபோனி' என்ற கப்பலில் சில அமெரிக்கர்கள் திரும்பி வந்தார்கள். பிரான்ஸில் நாஸி ஆட்சிக்கு ஏற்பட்டிருக்கும் எதிர்ப்பைக் கண்ணாரக்கண்டவர்கள். வில்லியம் மாக் என்ற ஒரு மாணுக்கன் கூறினுன். "ஜெர்மானியர்களுக்கும் அவர்களுக்கு உடந்தையாகவுள்ள பிரெஞ்சுக்காரருக்கும் விரோதமாக கிளர்ச்சி வலுத்துக்கொண்டே வருகிறது. பிரெஞ்சு டிகால், பிடேன், ரூஸ்வெல்ட், இவர்களை மரியாதை செய்ய விளம்பரங்களை ஒட்டுகிறுர்கள். நாஸிகள் அவைகளைக் கிழித்து எரிகிறுர்கள். லவாலை எப்பொழுதும் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. தன்னைக் கொன்று விடுவார்கள் என்று சதா அவனுக்கு பயம். 5—12—40-ல் அவனைக் கொன்றுவிட்டதாக ஒரு வதந்திகிளம்பிற்று. நாஸிகள் பாரிஸிலிருந்த எல்லா இங்கிலீஷ் பெண்களையும் பிடித்து சிறைக்கு அனுப்பினுர்கள். பிரெஞ்சு 100-ல் 90 பேர் இங்கிலாந்து ஜயிக்கும் என்று நம்புகின்றனர்."

பாரிஸிலுள்ள பெண்டிக்ஸ் கார்பரேஷனில் வேலையிலிருக்கும் ஹாரி கவான் என்பவன், போர்டோவுக்கு சமீபத்திலுள்ள மெரிக்னக் நாஸி விமானக்கொத்தளத்தில் ஒரு தந்திரத்தால் 437 விமானமோட்டிகளும் வேலைக்காரர்களும் சுடப்பட்டோ அல்லது காயப்பட்டதையும், 17 விமானங்கள் நொருக்கப்பட்டதையும், விமானந்தாங்கிகள் எரிக்கப்பட்டதையும் பற்றிச்சொன்னுர். "டிஸம்பரில் ஒரு இரவு ஐந்து மனிதர்கள் கமாண்டெண்டு வீட்டுக்கு வந்தார்கள். தாங்கள் ஸ்டாப் ஆபீஸர்கள் என்று சொல்லிக்கொண்டு அதிகாரக்கடிதங்களைக் காட்டினுர்கள். இரண்டு சண்டை விமானங்களைப் பரீக்ஷிக்க ஒரு உத்தரவையும் காட்டினுர்கள்.

கமாண்டெண்டு இந்தக் கதையை நம்பினுன். வந்தவர்கள் விமானங்களில் ஏறி கடலை நோக்கிப் பறந்தார்கள். ஒரு மணி கழித்து அவர்கள் திரும்பிவந்து இறங்கும் இடத்தில் வெளிச்சங்களைக்காட்டும்படி ஸிக்னல் செய்தார்கள். பெரும் எலெக்டிரிக் வெளிச்சங்கள் போடப்பட்டன. ஆனுல் விமானங்கள் இறங்காமல் பறந்து சென்றன. அவைகளின் பின் ஆர். ஏ. எப். படை ஒன்று வந்தது. கொத்தளத்தின் மீது பாம்களைப் பொழிந்தது. நாஸிகள் பின்பு கமாண்டெண்டை சுட்டுத் தள்ளினுர்கள்."



## பெட்ரோல் புள்ளிகள் முக்கியம்.

'டிட்ராயிட் ந்யூஸ்' என்ற பத்திரிகை 4—2—41-ல் இஞ்சினியரிங் ஸொஸைடி என்ணெய் இலாகாவில் டைரக்டராகயிருக்கும் டாக்டர் ராபர்டு வில்ஸன் என்பவரின் ஒரு பேச்சை பிரசுரித்திருந்தது. அவர் சொன்னதாவது : "இங்கிலாந்து விமானங்கள் உபயோகிக்கும் பெட்ரோல் 100-க்கு 100 ஆக்டேன் வாயுவை உற்பத்தி செய்கிறது. நாஸிகள் உபயோகிக்கும் எண்ணெயில் 90 தான் உற்பத்தியாகிறது. இந்த வித்தியாசத்தால் பிரிடிஷ் விமானங்களின் வேகம் மணிக்கு 35 மைல் அதிகரிக்கிறது. நாஸிகளுக்கு 24,000 விமானங்கள் இருக்கின்றன. ஒரே நாளில்அவர்கள் 8,000 விமானங்களை தாக்குதலுக்கு உபயோகித்தால் அதற்கு 60, 70 லக்ஷம் காலன் பெட்ரோல் செலவழியும். இதனுல் நாஸிகள் சேமித்து வைத்திருக்கும் பெட்ரோல் மிகவும் குறைந்து அவர்களுக்கு அபாயம் ஏற்படும்."

## எண்ணிக்கைக்கு ஈடு.

அந்த பத்திரிகை இதைக் குறித்து பின்வருமாறு தலையங்கம் எழுதியது; "பிரிடிஷார் தங்களுக்கிருக்கும் கடலாதீனத்தை நிலைநிறுத்தி, தங்கள் நாடுகளிலிருந்தும் ஐக்கிய அமெரிக்காவிலிருந்தும் எங்கு வேணுமோ அந்த இடங்களுக்கு எண்ணெய்களை கொண்டு போகமுடியுமானுல், நாஸிகளுக்கு இருக்கும் விமான எண்ணிக்கை மிகுதியை அது ஈடு செய்யும். அநேக பிரிடிஷ் விமானங்களின் தாக்குதல்கள் பெட்ரோல் வடிக்கட்டும் இடங்கள் என்ன, டெபோக்கள் என்ன, இவைகளைக்குறி வைத்தன. இவைகளால் அநேக ஜெர்மன் மர்மஸ்தானங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன."

## சூதாடியின் காயுருட்டல்.

27—2—41-ல் 'காதலிக் ஜெர்னலில்' 'நாடோடி' எழுதுகிறுன் :—"பால்கன் நாடுகள் பூராவையும் சண்டையில் இழுத்து, இரண்டு போர் முகங்களில் ஒரு பயங்கர யுத்தத்தை ஹிட்லர் நடத்தவேண்டி வந்தது, இதாலி பிரிடிஷாரிடம் இருந்தும் அவர்களுடைய கிரேக்க கூட்டாளிகளிடமிருந்தும் நிச்சயமாக தோற்பதை விலக்கவேண்டித்தான். இதாலியர்களுக்கு ஆஸ்டிரியர்களைக்கண்டால் பிடிக்காது. பிறவியில் ஆஸ்ட்ரியனுகிய தன்னைக்கண்டால் இதாலியர்களுக்குப் பிடிக்காது என்பது ஹிட்லருக்குத்தெரியும்; இதாலியின் படுதோல்வியும் அதனுல் ஜெர்மனிக்கு ஏற்பட்ட கஷ்டங்களும் முஸோலினியின் வாயிலிருந்தே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. சில மாதங்களுக்குமுன் இதாலியர்கள் தோற்று வருகிறுர்கள் என்று பிரிடிஷார் உலகத்தாரிடம் புளுகுவதாக முஸோலினி கூறித்தார். நவீன ராஜ தந்திரிகளுள் முஸோலினி செய்த பிரசங்கத்தைவிட இழிவானது ஒன்றுமில்லை. முஸோலினி ஒரு மலையைப் புரட்டினுன். அதுவே இப்பொழுது அவன் தலையில் விழுந்து அவனை நசுக்கிவிடும் என்று தோன்றுகிறது. ஜெர்மனியில் பத்திரிகைகள் உள்ளதை பிரசுரிக்கமுடியாது; சர்க்கார் கட்டுப்பாட்டின்படிதான் பிரசுரிக்கவேண்டும். இதாலியைக் குறித்து ஜெர்மனியின்

உண்மை இதுவரை மூடிவைக்கப்பட்டது. முஸோலினி வெளியிட்டது ஜெர்மானியர்களுக்கு பயங்கரமாக இருந்திருக்கும். 'பிளிட்ஸ் க்ரீக்—மின்னல் தாக்குதல்' என்பது ஜெர்மானியர்கள் கண்டுபிடித்ததுமல்ல, அவர்கள் மட்டில் உபயோகிக்கக்கூடியதுமல்ல. மத்தியதரைக் கடலில் பிரிடனின் பிடி அசைக்க முடியாதது.

## போலிஷ் எதிர்ப்பு நீடிக்கின்றது.

மார்ச்சு மாத 'காதலிக் உலகம்' என்ற பத்திரிகையில் கவுண்ட் அந்தோனி டார்னௌஸ்கி எழுதுகிறார்:—போலந்து தேசம் ஜெர்மானியர் வசமும் ருஷ்யர் வசமும் இருந்து வருகிறது. ஆயினும் போலந்து ஜனங்கள் சண்டை போட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். நாஸி ஆக்கிரமிப்பை எதிர்க்கும் ஒவ்வொரு தேசப் படைகளுடனும் போலிஷ் துருப்புகள் தோளுக்குத் தோள் நின்று சண்டை போடுகின்றன. இன்று அதன் சிப்பாய்கள் பிரிடிஷார் பக்கத்தில் இங்கிலாந்து, ஸ்காத்லாந்து, எகிப்து, கிரீஸ், இவைகளில் சண்டை போடுகிறார்கள். தேசப் பிரம்சத்திலும் போலிஷ் கவர்ன்மெண்டு தன் சட்டஸ்தானத்தை வகித்துவருகிறது. தங்கள் நாடு தங்களுக்குத் திரும்பும்வரை போலிஷார் உறுதியாக நின்று ஜெர்மனியையும் ருஷ்யாவையும் எதிர்க்கத் தீர்மானங்கொண்டிருக்கிறார்கள்.

28—2—41-ல் 'பபலோ எக்கோ' என்னும் பத்திரிகை எழுதுகிறது:—இந்த வியவகாரத்தில் ரத்தக்களரிவேண்டும் என்பது ஒருவருடைய விருப்பமுமல்ல. கானடியனுக்கோ இங்கிலீஷ்காரனுக்கோ யுத்தம் தர்மத்தை ஸ்தாபிக்க ஒரு வழி. சண்டைபோடும் பிரிடனுக்குத் தோல்வி அவன் கலாசாரத்தின் அழிவாகும். டோடாலிடேரியன்கள் கோரும் எந்த 'புதிய ஏற்பாட்டையும்' காட்டிலும் பிரிடிஷ் மனிதன் ஒவ்வொருவனும் அவன் நம்பும் கலாசாரம் விரும்பத்தக்கது என்று நம்புகிறான்.

## பிரிடன் ஜயிக்கும்.

3—2—41-ல 'போஸ்டன் டிரான்ஸ்கிரிப்டு' பத்திரிகை எழுதுகிறது:—கீலிலுள்ள ஜெர்மன் கடற்படை ஸ்டாப் காலேஜில் முன்பு உபாத்தியாயராக இருந்த டாக்டர் பெர்பெர்ட் ராஸின்ஸ்கியும், அவருக்கு உதவியாகயிருந்த ஜெனரல் கார்ல் ஹாஷோபெனும் சொல்லுகிறார்கள்: "பிரிடிஷ் படையும் அவர்களுடைய குணவிசேஷங்களும் இந்த யுத்தத்தை முடிவு கட்டும். என்றால் எவ்வளவு நம்பமுடியுமோ அவ்வளவு, பிரிடன் ஜயிக்கும், அபாரமாக ஜயிக்கும், என்று நம்புகிறேன்."

5—3—41-ல் 'நியூ யார்க் உலகத் தந்தி' என்ற பத்திரிகையில் ரேமண்டு கிளாபர் எழுதுகிறார்:—ஐரோப்பாவில் 'புது ஏற்பாடு' செயலற்ற நாடுகள் மீது வெளியிடமுடியாத அவ்வளவு வெட்கவேண்டிய முறைகளால் பலாத்காரமாக கட்டப்படுகிறது. போலந்தை அழித்த பயங்கர முறைகளைப் பற்றி இங்கு உத்தியோகஸ்தர்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. 10,00,000



போலிஷாரை ஜெர்மனியில் கூலிவேலை செய்ய ஜெர்மானியர்கள் கொண்டு போனார்கள். அமெரிக்க உத்தியோகஸ்தர்கள் இதை மிருகத்தனமான இருள் கால அடிமைக்குச் சமானம் என்று கருதினார்கள். போலந்தில் படித்தவர்களை ஒழிக்க ஜெர்மானியர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். தேகக்கொடுமைகளைப் பற்றி செய்திகள் கிடைத்திருக்கின்றன. ஆயினும் தக்க சாக்ஷியம் இல்லாததால் உத்தியோகஸ்தர்கள் அவைகளை நம்பவில்லை. அவர்கள் மனதில் ஆழ்ந்து பதிந்தது, போலிஷ் தேசத்தாரின் திட்டம் போட்டு நிறைவேற்றிய படுகொலையும் அதன் ஜனங்களை அடிமைகளாக்கியதும் தான்.

---

**கெரன் பிரதேசத்தைப் பிடிக்க ஆவல்.**

**பிரிடன், இந்தியா இவைகளின் துருப்புகள் இடைவிடாது ரோந்துசெய்கின்றன.**

**140-டிகிரி சீதோஷ்ணஸ்திதியிலும் உத்ஸாகத்தோடு இருக்கிறார்கள்.**

---

## யுத்தகளத்திலிருக்கும் ஒருவனுடைய அபிப்பிராயம்.

[மார்ச்சுமீ 10-ந்தேதியன்று ஸ்டேட் கவுன்ஸிலில் ஆபிரிக்காவிலுள்ள இந்திய துருப்புகளைப் பற்றி சிலாகித்துப்பேசும் காலத்தில் மேன்மை தங்கிய தளகர்த்தர், இந்தியத் துருப்புகளின் அரிய செய்கைகளை மெச்சி ஜெனரல் வேவல் அனுப்பிய ஆசியையும் ஞாபகப்படுத்தி இந்தியத் துருப்புகள் கஸ்ஸாலாவிலிருந்து கெரனுக்குப் பின்வாங்கின துருப்புகளை துரத்தித்துரத்தி அடித்துவிட்டார்களென்று சொல்லுகிறார்.]

இங்கு செய்திகளை நேர்முகமாக நோக்கிய ஒரு வரலாற்றைக் கூறுவோம். மேற்கு பாகத்திலுள்ள ஒரு உன்னதமான மலையிலிருந்த பார்வை ஸ்தானங்களிலிருந்து பார்க்கும்கால் கெரன் என்பது அழகு வாய்ந்தவும் விருத்தி அடைந்து கொண்டுமிருக்கிற ஒரு ராணுவஸ்தலம், வியாபார ஸ்தலமும்கூட. அது ஸ்ட்ராடா பள்ளத்தாக்கில் போக்கு வரவு ஸாதனங்களின் மத்தியில் இருக்கிறது. இதிலிருந்து எரிட்ரியாவின் தலைநகரான அஸ்மாராவுக்கும், அகார்தாத்துக்கும், பாஹண்டுவுக்கும், இப்பொழுது நம் வசமாகியிருக்கும் டெஸ்ஸனெயிக்கும் செல்லலாம்.

எரிட்ரியாவின் துறைமுகமாகிய மஸ்ஸாவாவிலிருந்து அகார்தாத்துக்கு மேற்கே 20-மைலுக்கு அப்பாலிருக்கும் பிஸ்கியாவுக்குச் செல்லும் இருப்புப் பாதை மேல் கெரன் இருக்கிறது. இன்னும் பாரகா, எயின்ஸேபா நதிகளுக்கு

மத்திய பிரதேசத்திலிருப்பதோடு வட எரிட்ரியா பூராவையும் இதிலிருந்து நோக்கலாம். கெரன் நகரமானது அஸ்மாராவை நோக்கி கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து செல்லும் சமவெளியிலிருக்கிறது. இதாலியர்கள் வசமிருக்கும் ராணுவ ஸ்தானங்களில் கெரன் ரொம்பவும் சுலபமாக தற்காப்புச் செய்துகொள்ளக்கூடிய இடம்.

கஸ்ஸாலாவிலிருந்து இதாலியர்கள் ஓட ஆரம்பித்தபொழுது கெரு என்னும் இடத்திலுள்ள மலைகளையும் ஆக்கிரமித்து ஸ்தாபித்துக்கொள்கிறதென்று உத்தேசித்திருந்தார்கள். ஆனால் இந்தியத் துருப்புகள் அவர்களைப் பின்னாடித் தாக்கியவுடன் அவர்கள் ஓடிவிட்டார்கள். அடுத்தபடி அகார்தாத் என்பது அழிக்க முடியாத கோட்டை என்று இதாலியர்கள் கருதினார்கள். பிரிட்டிஷ் சேனைத் தலைவரின் புத்திசாலித்தனமான ஏற்பாட்டின் பிரகாரம் இந்தியத் துருப்புகள் புத்திசாலித்தனமாய் வேலை செய்து சத்துருக்களைத் துரத்திவிட்டார்கள். பிப்ரவரி௴ 3-ம் தேதி முதல் சத்துரு கெரனுடைய மலைப்பிரதேசங்களை ஆக்கிரமித்து வருகிறான்.

## இடைவிடாது ரோந்துகள்.

முற்றுகை ஆரம்பமானபொழுது கெரனுக்கு மேல் பாகத்திலும் நகரத்துக்கு வரக்கூடிய முக்கியமான ரஸ்தாவையும் ரக்ஷிக்கக்கூடிய காமிரான் என்னும் மலையிலிருந்து இதாலியர்கள் வெளியேறிவிட்டார்கள். ஆகிலும் இதாலியர்கள் பாக்கி ஸ்தானங்களை ஊக்கத்துடன் பாதுகாத்துவருகிறார்கள். இவைகள் நம்முடைய ஸ்தானங்களுக்குக் கெடுதல் விளைவிக்கக்கூடியவை. பீரங்கிகளும், கலவங்களும் ஏராளமாக உருமுகின்றன. ஆகையால் இடைவிடாது ரோந்துசெய்தல் அவசியம். மனித சஞ்சாரமில்லாததும், செங்குத்தானதும், புதருகளுள்ள தரைகளும், பெரிய மண்கட்டிகளும், மரங்களும் நிறைந்ததுமான இந்தப் பள்ளத்தாக்கை மஹாராஷ்டிரத்தைச் சேர்ந்ததும், பிரிட்டிஷாரைச் சேர்ந்ததுமான துருப்புகள் முக்கியமாக ரோந்துசெய்துவருகிறார்கள். சில சமயங்களில் எதிராளியின் ரோந்துக்காரர்களுடன் சச்சரவுகள் நேரும். அவைகளில் நம்முடைய துருப்புகள் அபரிமிதமான வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

காமிரான மலை உச்சிக்கு ஆட்கள் மூலம்தான் சாமான்கள் கொண்டுபோக வேண்டும். சில இடங்களில் மலைச்சரிவுகள் பூமியிலிருந்து 45 டிகிரி அல்லது அதற்கு அதிமாக செங்குத்தாகயிருக்கின்றன. இருந்தாலும் சாமான் கொண்டு போகிறவர்கள் ஆயாச மன்னியில் தங்கள் வேலைகளைச் செய்துவருகிறார்கள். சாதாரண வேகத்துடன் சென்றால் இரண்டு மணி நேரத்தில் மலையின் உச்சிக்குச் செல்லலாம்.

ஆனால் சூரிய வெப்பம் ரொம்பவும் அதிகமாயிருக்கிறது. இதை சகித்துத்தான் செல்லவேண்டும். நடுப்பகலில் உஷ்ணத்தின் பரிமாணம் 140-க்கும் 160-டிகிரிக்கும் மத்தியில் அளவிடப்படுகிறது.



## இதாலிய சைனியங்களிலிருந்து ஓடுகிறவர்கள்.

சத்துருவின் படைகளில் இருக்கும் ஆபிரிக்காவைச் சேர்ந்தவர்களின், பெரும்பாலும் அபிஸீனியர்களின், மனோதைரியம் குறைந்துவிட்டதென்பதில் சந்தேகப்படவேண்டியதில்லை. நேசதேசத்தாரின் சைனியங்களுடன் அபிஸீனியாவின் சக்ரவர்த்தி தன்னுடைய தேசத்தில் புகுந்த உடன் இதாலிய குடியேற்ற நாடுகளிலுள்ள பட்டாளங்கள் நழுவ ஆரம்பித்துவிட்டன. கெரனிலிருந்து அநேகர் வந்துவிட்டார்கள் ஆனாலும் கடைசிவரையில் தைரியமாய் அவர்கள் சண்டை செய்தார்கள். இதைத் தடுக்க ஆங்காங்கு உள்ள கிராம ஜனங்களுக்கு இதாலியர்கள் ஆயுதங்களைக் கொடுத்தும் தப்பி ஓடுகிறவர்களைப் பிடித்துக்கொடுப்பவர்களுக்கு ஏராளமான பரிசும் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள்.

எரிட்ரியாவில் நாம் யுத்தம்செய்ய ஆரம்பித்தபிறகு 6,000 நபர்களுக்கு அதிகமான கைதிகளை நாம் பிடித்திருக்கிறோம். இவர்களில் மூன்று ஜெர்மானியர்களும் சேர்ந்து இருக்கிறார்கள். இந்த ஜெர்மானியர்கள் அங்கிருக்கும் ஜெர்மன் ஒத்துழைப்பு கோஷ்டியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் 1939-ம்௵ செப்டம்பர்௴ ஆரம்பத்தில் மஸ்ஸாவாவில் ஒளிந்துகொண்ட ஜெர்மன் கப்பல்களிலிருந்தவர்கள். இவர்கள் இதாலிய சைனியங்களில் சேர்ந்துகொண்டிருக்கிறார்கள். பிடிபட்ட மூன்று ஜெர்மானியர்களும் லேசான ஒரு டாங்கியிலிருந்தவர்கள். அகார்தாத்தில் சண்டை நடந்தபொழுது நம்முடைய டாங்கிகள் இந்த சிறிய டாங்குகளைத்தாக்கி உபயோகமில்லாமல் செய்துவிட்டன.

ஒலிபரப்பு மூலமாயும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் முஸோலினிக்கு ஆபிரிக்காவிலுள்ள சாம்ராஜ்ஜியம் குறைந்துகொண்டேவருகிறதென்று எரிட்ரியாவிலுள்ள இதாலிய சேனைகளுக்குச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. மேலும் மேலும் இதாலிய சேனையிலிருந்து துருப்புகள் விலகிவருகிறார்கள்—ஒரு நாளைக்கு சுமாராக 200 பேர்களிருக்கும்.

## விழித்துக்கொண்டும் ஆச்சர்யப்படும்படி சந்தோஷகரமாயுமிருத்தல்.

சென்ற சில நாட்களாக, காமிரான் மலைப்பிரதேசத்தில் யுத்தம்செய்த இந்தியத் துருப்புகள் களைப்பாறுவதைப் பார்த்தேன். ஒரு பட்டாளம் மலைப் பிரதேசத்தில் சோர்வில்லாமல் உஷாராகவே பத்து நாட்கள் காவலிலிருந்தது. அவர்கள் இப்பொழுது இளைப்பாறுகிறார்கள். பஞ்சாபிகள், ஜாட்கள், ரஜபுத்ரர்கள், ஸீக்கர்கள், மகாராட்டாக்கள்—எல்லோரும் கெரன் பிரதேசத்தைப் பிடிக்கத் தங்களுக்கு எப்பொழுது தருணம் வாய்க்குமென்று காத்திருக்கிறார்கள். ஸ்ட்ராடா பள்ளத்தாக்கு வழியாக சாயங்காலம் ஒருவர் சென்று இந்தத் துருப்புகளைக் கவனித்தால் இந்தியத் துருப்புகளின் உத்ஸாகத்தை நன்கு அறியலாம். ஒரு பட்டாளமிருக்குமிடத்தில் பாண்டு சப்தமும் நூதனமாக உண்டுபண்ணப்பட்ட கருவிகளைக்கொண்டு இந்தியப் பாட்டுகளும் கேட்கின்றன. பெட்ரோல் தகரங்களை மத்தளங்களாக உபயோகிக்கிறார்கள்.

டெல்ஹியிலிருந்து உருது பாஷையில் ஒலிபரப்பப்படும் செய்திகளை இந்தியத்துருப்புகள் கவனத்துடன் கேழ்க்கிறார்கள். செய்திகள் லண்டனில் ஒலிபரப்புவதுபோல் தெளிவாயுமிருக்கின்றன. செய்திகள் அவ்விடத்தில் மாலை 5-மணிக்கு ஒலி பரப்பப்படும். எல்லா சிப்பாய்களும் ஒலிபரப்பு யந்திரத்தைச் சுற்றிலும் உட்கார்ந்து விடுவார்கள். யுத்தச் செய்திகள் மலைப்பிரதேசத்திற்கு தண்ணீர் கொண்டுபோகிறவர்களாலும், வெடிமருந்து கொண்டுபோகிறவர்களாலும், ஆள் தூக்கி சாதனங்களைக்கொண்டு போகிறவர்களாலும் அங்கிருப்பவர்களுக்கு அனுப்பப்படுகின்றன.

## ரஸ்தா மூடப்பட்டது: சத்துருக்களின் வேலைகள்:

இந்தச் சண்டையில் பிரிடனுடைய விமானப்படை முக்கியமாக வேலை செய்கிறது. நம்முடைய பீரங்கி வேலைக்காரர்களுக்கு சத்துருவின் பீரங்கி வைப்பு ஸ்தானங்களைப்பற்றித் தகவல்கள் கொடுப்பதில் விமானிகள் அதிக ஒத்தாசை செய்கிறார்கள். நம்முடைய பீரங்கிகளும் விமானப்படையும் ஒத்துழைப்பதன் மூலம் சத்துருவின் அநேக பீரங்கிகள் உபயோகமற்றதாகச் செய்யப்பட்டு விட்டன. சத்துருக்களின் பீரங்கிகளும் சும்மாவிருக்கவில்லை. ஆகையால் நம்முடைய சுரங்கமறுப்பவர்கள் முக்கியமான ரஸ்தாவில் சேனைகளின் முன்பக்கத்தில் "ரஸ்தாக்கள் மூடப்பட்டுவிட்டன: சத்துருக்கள் வேலை செய்கிறார்கள்" என்று விளம்பரங்கள் போட்டிருக்கிறார்கள். சத்துருக்களிடமிருந்து வரும் குண்டுகள் தொந்தரவு அளிக்கின்றனவே ஒழிய அபாயம் ஒன்றும் விளைவிக்கக் கூடியதல்ல. சத்துருவின் குண்டுகளால் நமது மனிதர்களுக்கும் கவசம் பூண்ட துருப்புகளுக்கும் சொல்பச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய பீரங்கிகளின் பிரயோகத்தினால் விசேஷ பயன் ஏற்பட்டு சத்துரு ஒரு மலைப்பிரதேசத்திலிருந்து ஓடிவிட்டான்.

எல்லாத் துருப்புகளும் ஆரோக்கியமாயும், யுத்தம் செய்ய தயாராகவும், ஆவலுள்ளவர்களுமாகயிருக்கிறார்கள்.

ஜெனரல் ப்ளாட்டின் துருப்புகள் வட பாகத்தில் எதிர்த்து யுத்தம் செய்தது ரொம்பவும் ஸ்வாரஸ்யமானது. இதாலியத் துருப்புகள் எரிட்ரியாவில் கெரனில் மஸ்ஸாவா கடற்கரையிலிருந்து அகார்காத்துக்குச் செல்லும் இருப்புப்பாதையைக் காபந்து செய்து வருகிறார்கள். கெரனுடைய ஸந்நிவேசத்தின் பலத்தை இதாலியர்கள் அறிந்திருக்கிறார்கள். அது மலைப்பிரதேசங்களுக்கு மத்தியில் ஒரு முடிச்சு மாதிரியிருக்கிறது. அதிலிருந்து மேற்குப்பக்கத்திற்கு தொண்டைக் குழிபோல் ஒரு வழியிருக்கிறது. இதற்கு இருபக்கத்திலும் சுலபமாய்த் தாண்ட முடியாத பிரதேசங்களிருக்கின்றன.

இந்த பிரதேசத்தில் அயோஸ்டா பிரபு இரண்டு அல்லது மூன்று தொகுதிகளடங்கிய துருப்புகளை வைத்திருக்கிறான். அகார்தாத்திலிருந்து துரத்தியடிக்கப்பட்ட பொழுது துருப்புகள் வேகமாகப் பின் வாங்கி இந்த கெரனில் நிலைத்துக் கொண்டார்கள். சமீப காலத்தில் இவ்விடத்தில் வடமேற்குக் கரை வழியாக



வந்து செங்கடற்கரையில் மெர்ஸடாக்ளே என்னும் இடத்தில் இறங்கிய சேனையும் அங்கிருந்து தெற்கே முன்னேறிய சேனையும் ஒன்று சேர்ந்து விட்டன. கப் கப் என்னும் இடத்தைக் கைப்பற்றுவதற்கு சுயேச்சை பிரெஞ்சு துருப்புகள் அதிக ஒத்தாசை செய்தன. இந்த சேனையானது கெரனுக்கு வடக்கே 15 மைல் தூரத்திலிருக்கும் இதாலிய பாதுகாப்பு ஸ்தானங்களை அடைந்திருக்கிறது. இவ்விடத்திலிருக்கும் சேனாதிபதி வடகிழக்கு மூலையாகத் துருப்புகளை அணிவகுத்து வைத்திருக்கிறான். அவனுடைய ஆதிக்கத்துக்குள்பட்ட சேனா பலத்தைக் கொண்டு, சேதமன்னியில் இதாலிய பலத்தை ஜெனரல் ப்ளாட் தகர்க்க முடியாது.

---

## பிரான்ஸு தேசத்திற்கு ஆகாரம் அனுப்பும் விஷயமாய் ஆங்கில அமெரிக்க ஆலோசனைகள்.

## பொதுவான கொள்கை வரை பெறப்போகின்றது.

## அச்சுக்கு உதவி செய்யாமலிருப்பதின் ஆவசியகம்.

டெயிலி டெலகிராப் பத்திரிகையின் ராஜ தந்திர நிருபர் எழுதுகிறார்.

ஜெர்மனியால் வியாபிக்கப்படாத பிரெஞ்சுப் பிரதேசங்களுக்கு ஆகாராதிகள் கப்பல்களில் கொண்டுபோவதற்கும், அவ்வாறு கடல் தடைப்பாட்டை சற்று விலக்குவதற்கும் ஒரு பொது கொள்கையை நிச்சயிப்பதற்காக பிரிடனும் அமெரிக்க ஐக்கிய ஸமஸ்தானங்களும் ஏற்பாடு செய்கின்றன. இரு தலைநகர்களும் ஒருவருக்கொருவர் கலந்து பேசிக்கொள்ளுகிறார்கள். சாதாரணமாக பிரெஞ்சு வட ஆபிரிக்காவுடன் பிரிடன் தேசத்தைக்காட்டிலும் ஐக்கிய ஸமஸ்தானங்கள் ஸம்பந்தம் பெறுதல் ஸுலபம். ஏனெனில் விஷியில் அமெரிக்காவினுடைய ஸ்தானீகர் இருக்கிறார். இந்த விஷயம் கவனிக்கத்தக்கது.

ஆகையால் 400 லக்ஷம் ஜனங்களை விடுவிப்பதற்காக கடற் தடைப்பாட்டை எதிர்க்கவேணுமானாலும் எதிர்ப்பேன் என்று பிரெஞ்சுக் கடற்பதி டார்லான் என்பவர் சொன்னதிலிருந்து கிளம்பிய பிரச்னைகளை பிரிடிஷ் கவர்ன்மெண்டார் அமெரிக்க நோக்கங்களை ஒட்டியே பைஸல் செய்வார்கள் என்று தெரிகிறது.

அந்தப் பிரச்னை விஷயமாய் ஒரு முடிவான தீர்மானம் லண்டனிலும் வாஷிங்டனிலும் அடுத்த வாரத்திற்குள் ஏற்பட்டுவிடும் என்றும் அதில் ஒரு முடிவான கொள்கையை ஏற்படுத்துவார்களென்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

அது விஷயமாய் தற்கால நிலையைப்பற்றி சிகாகோ டெயிலி நியூஸ் என்ற பத்திரிகையின் லண்டன் நிருபர் அப்பத்திரிகைக்கு எழுதுகிறதாவது:—

"வாஷிங்டனில்லாவிட்டால், பிரெஞ்சுக் கடற்படை டார்லான் பிரிடிஷ் கடற் தடைப்பாட்டை முறித்துக்கொண்டு பிரெஞ்சுக் கப்பல்களை கொண்டுபோக முடியும் என்று சொன்ன வாய்மதத்தை பிரிடிஷ் அடக்கிவிடுவார்கள்.

"பிரான்ஸுக்கு அமெரிக்க கப்பல்கள் மூலம் ஆகாரத்தை அனுப்பி ஜெர்மன் ரஞ்சகர்களாகவும் பிரிடிஷுக்கு எதிரிகளாகவும் இருக்கிற விஷி ஆக்ஷிக்காரர்களை ஸமாதானம் செய்யலாமென்ற ஒரு வியர்த்தமான எண்ணத்தை வாஷிங்டன் ஆழமாகக் கொண்டிருக்கிறது.

"ஐக்கிய ஸமஸ்தானங்களுக்கு பிரிடிஷ் சர்க்கார் ஒரு அளவுக்குமேல் விவரிக்க முடியாத நிலையிலிருப்பதால், யுத்த தந்திர நிலையில் அவசியமான ஜவாப்பை கடற்படை டார்லானுக்கு கொடுக்காமலிருக்கிறார்கள். அமெரிக்காவும் பிரான்ஸுடன் தகவல் போக்குவரத்து நடத்திக்கொண்டிருப்பதாலும், "சற்றுமெள்ளப் போங்கள்' என்று அமெரிக்கா லண்டனுக்குச் சொல்லுவதாலும், அதற்கு ஒப்புக்கொள்வதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை.

"ஜெர்மானியருக்குப்போகாமல் பிரெஞ்சுக்காரருக்குப் போவதாயிருந்தால் ஆகாரத்தை அனுமதிக்க பிரிடிஷ் ஸர்க்காரும், ஜனங்களும், தம்முயிருள்ள வரை போர் புரிவோம் என்று இறங்கியிருக்கிற இந்த யுத்தத்தில்கூட இஷ்டப்படுகிறார்கள். தம் குடியேற்ற நாடுகளிலிருந்தோ இதர தேசங்களிலிருந்தோ வரும் ஆகாரத்தின் பெரும் பான்மையும் ஜெர்மனிக்கும் இதாலிக்கும் போய் விடுகிறது.

"பிரெஞ்சுக்காரர் இறக்குமதி செய்யும் ஆகாரம் பிரெஞ்சுக்காரரையே சேரும்படி ஐக்கிய ஸமஸ்தானங்கள் பார்த்துக் கொள்வதாயிருந்தால் யாதொரு விதமான ஆக்ஷேபணையுமில்லை.

தற்பொழுது ஸ்பெயினுக்குப்போகும் ஆகாரம் இதாலிக்காவது, ஜெர்மனிக்காவது செல்லவில்லை என்று தெரிவதால் பிரிடன் அதை அனுமதிக்கிறது. இப்பொழுது பிரான்ஸுக்கு செல்லும் ஆகார இறக்குமதிகளை ஜெர்மானியர் வெகுகவனமாக மேல்பார்த்து நூற்றுக்கு 20 அல்லது 30 தான் பிரெஞ்சுக்காரருக்குக் கொடுக்கிறார்கள்.

---



# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

---

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### ஹாஹா பிரபுவின் ஆச்சரியம்.

தொழில் இலாகா மந்திரி மிஸ்டர் எர்னஸ்ட்பெவின் யுத்தத்தொழில் சேவைக்காக பிரிடிஷ் ஸ்திரீகளின் சங்கியையின் கணக்கெடுக்க உத்தரவிட்டிருக்கிறார். போர் முனையில் பெண்களை நிறுத்தியது ஆச்சரியப்படத்தக்கதென்றும், பழய வழக்கங்களை அனுசரிக்கும் பிரிடிஷ் மந்திரிகள்கூட இந்தக் கேவலமான காரியத்துக்குத் துணிந்துவிட்டார்களென்றும் மார்ச்சு 18-ல் ஹாஹா ஒலிபரப்பியிருக்கிறார். மிஸ்டர் எர்னஸ்ட்பெவின் பழய நோக்கமுள்ளவரல்ல: ஜெர்மன் விமானங்களால் பிரிடனில் இதுவரையில் 10,000 பிரிடிஷ் ஸ்திரீகள் இறந்திருக்கிறார்கள். ஆகையால் ஸ்திரீகளைப் போர்முனையில் நிறுத்தி அவர்கள் உயிரை மாய்த்த பாவம் ஹிட்லரைத்தான் சேரும்.

தேசத்தின் க்ஷேமத்துக்காகவும், நாஸித்வத்தைத் தொலைப்பதற்காகவும் பிரிடிஷ் ஸ்திரீகள் எந்த சேவைக்கும் தயாராயிருப்பது ஹாஹாவுக்கு ஆச்சரியத்தைக்கொடுக்கக்கூடியதுதான். ஆனால், ஜெர்மனி திகைக்கும்படியான அநேக காரியங்களை பிரிடன் சமீபத்தில் செய்துவிட்டது: இனியும் செய்யப்போகிறது.

### "இருபது நாசகாரிகள் தானும்"

யுத்தம் ஆரம்பித்ததுமுதல் பிரிடனில் புதிதாக 20 நாசகாரிகள்தான் கட்ட முடிந்தது என்று மார்ச்சு 20-ம் ஒலிபரப்பில், ஜெர்மன் ரேடியோ பரிகாசம் செய்கிறது. ஆனால் இந்த இகழ்ச்சி சரியல்ல, ஜேன்ஸினுடைய சண்டைக் கப்பல்கள் என்ற புத்தகத்தின் கடைசிப் பதிப்பில் இந்தத் தொகை கொடுத்திருப்பது உண்மையே. இந்த 20 கப்பல்களும், 1939-ம் வருஷத்தில் கட்ட ஆரம்பித்து 18 மாதங்களுக்குள் கட்டி முடிந்தது ஆச்சரியமான காரியமல்லவா? இதோடு அமெரிக்காவிலிருந்து கிடைத்திருக்கும் 50 நாசகாரிகளைச் சேர்த்துச் சொல்ல ஏன் மறந்துவிட்டார்கள். இதைப்பற்றி ஓய்வு ஒழிவில்லாமல் ஜெர்மன் பிரசாரம் வாரக்கணக்காய் நடந்ததே.

### பல்கேரியாவின் கூட்டுறவு.

நாஸிகளின் புது அரசியலைப்பற்றி, பல நற்சாக்ஷிப் பத்திரங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. அவைகளில், 'சமத்துவத்தையும், நீதியையும் அடிப்படையாகக் கொண்ட இந்த உயர்தரமான புது அரசியலில் ஒத்துழைக்க பல்கேரிய மக்கள் முயற்சிக்கிறார்கள்' என்று மார்ச்சு 18-ல் பல்கேரியாவின் ரயில்வே மந்திரி சொன்ன பேச்சு ஒன்றாகும்.

இந்த புது அரசியலுக்குச் சரியான சாக்ஷியை ஜெர்மானியர் தேடிப்பிடித்தார்கள். மேற்சொன்னபடி பேசிய 48-மணி நேரத்துக்குள் ஜெர்மன் அதிகாரத்துக்குள்பட்டு பல்கேரியாவில் நடத்தப்படும் ரயில்பாதைகளில் இரண்டு வண்டித்தொடர்கள் தண்டவாளங்களைவிட்டு நகர்ந்துபோய், சில பாலங்களும் உடைந்துபோயின.

## டச்சுக்காரர்களை ஏய்க்க முடியாது.

பொதுஜனங்களைப் பயமுறுத்துவதற்காக பிரிடிஷ் விமானங்கள் ஹாலண்டின்மேல் படையெடுப்பதாக ஆம்ஸ்டர்டாமில் உத்தியோக வட்டங்கள் அபிப்பிராயப்படுவதாக மார்ச்சு 20-ல் பெர்லின் அபிப்பிராயப்படுகிறது. ஹாலண்டில் வெகுவாய் எல்லோரும் பிரிடனுக்கு அபிமானிகள்தான் ; 100-க்கு 100 பெயர்கள் ஜெர்மன் விரோதிகள். ஆகையால் டச்சு மக்களை பிரிடன் பயமுறுத்தக் காரணமில்லை. மேலும், நாஸிகள் ஹாலண்டில் ஏற்படுத்தியிருக்கும் ராணுவ ஸ்தலங்களைத்தான் பிரிடிஷ் விமானங்கள் குறிபார்த்துச் சுடுகின்றனவென்று டச்சு மக்களுக்குத்தெரியும். இதற்காக சென்ற வாரத்தில் 5 நாட்கள் இடைவிடாது ராட்டர்டாமிலிருக்கும் எண்ணெய் டாங்கிகள் எதிர்க்கப்பட்டன. பிரிடன்மேல் பழி சுமத்துவதற்காக ஜெர்மன் விமானங்கள் டச்சு வாசஸ்தலங்கள்மேல் குண்டுகளைப்போட்டு; அவை பிரிடிஷ் விமானங்களுடைய குண்டுகளென்று பொய் சொல்வதும் டச்சு மக்களுக்குத் தெரியும். இதெல்லாம் நாஸிகளுக்குள் வழக்கமான சூழ்ச்சி. இதனால் டச்சு மக்கள் ஏமாந்துவிடமாட்டார்கள்.

# B—ஆசியா பாஷையில் ஒலிபரப்பு

## பிரிடனுடைய செல்வ நிலைமை.

பணமில்லாதுபோய் பிரிடன் உலகமெங்கும் பிச்சையெடுப்பதாக மார்ச்சு 26-ம் ஒலிபரப்பில் ஜெர்மனி இந்துஸ்தானியில் பிரசாரம் செய்திருக்கிறது. பிரிடனுக்கு பணக்குறைவேயில்லை. ஜனவரி முதல்தேதியிலிருந்து பிப்ரவரி 15-க்குச் சரியான 46-நாட்களில் பிரிடனுக்குச் செலவு 5,595 லக்ஷம் பவுன் ; வரவு 5,625 லக்ஷம் பவுன் ; செலவுக்குமேல் வருமானம் ; 1939 நவம்பரிலிருந்து 1941, பிப்ரவரிக்குள்ளாக 200-லிருந்து 250 லக்ஷம் ஏழைகள் யுத்த சேவைக்காக தாங்களாகவே கூடுதல், 6,030 லக்ஷம் பவுன் ஸேவிங்ஸ் பாங்கியில் போட்டிருப்பதே பிரிடனுடைய செல்வநிலையில் பொது ஜனங்களுக்கிருக்கும் நம்பிக்கையைக் காண்பிக்கிறது.

## ஜெர்மன் மேற்கோள்கள்.

பிரிடனிலிருக்கும் 20 பெரிய நகரங்களைச் சுற்றிப்பார்த்ததிலிருந்து பிரிடனில் தொழில் பிரதேசங்கள் பல பாழாய்க்கிடப்பதாக ஸ்வீடன் தேசத்து ஸ்வென்ஸ்கா டாக்ப்ளாட்ட் நிருபர் ஒருவர் சொன்னதாக ஜெர்மனி, இந்துஸ்தான், பெர்ஸியன்,



அராபி பாஷைகளில் மார்ச்சு 21-ல் ஒலிபரப்பிற்று. பிரிடனில் பத்திரிகைகளுக்கு வாய்பூட்டு அதிகமென்று ஸ்வீடனில் நியாய இலாகா மந்திரி சொன்னதாக மார்ச்சு 10-ல் இதே ரேடியோ ஒலிபரப்பிற்று. இவைகளில் எது உண்மை, எது பொய். சமாசாரம் சுலபமாய் வெளிவர வேண்டுமானால், பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டிருக்கக்கூடாது. இல்லையேல், ஸ்வீடன் பத்திராதிபர் எழுதியதாகச் சொல்லப்படும் மேற்கோளெல்லாம் ஜெர்மனியில், பொய் பிரசாரத்துக்காகத் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

---

# முக்கியமான விளம்பரம்.

## யுத்த சம்பந்தமான புகைப்படங்கள்.

ஸ்ரீ-தர்பார் அவர்கள் உத்தரவின் பேரிலும், அவர்களின் அன்பார்ந்த உதவியின்பேரிலும், புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயத்தின் மெம்பர்கள் இதுமுதல் பிரசங்கங்களுக்கு வெளியூர்களுக்குப்போகும் காலத்தில்யுத்தத்தின் வெவ்வேறு அம்சங்களை விளக்கிக்காட்டக்கூடிய புகைப் படங்களின் கோர்வைகளையும் எடுத்துக்கொண்டு போய் ஜனங்களுக்குக் காண்பிக்க வசதி ஏற்பட்டிருக்கிறதென்று யுத்த அறிக்கை நிலயம் சந்தோஷத்துடன் அறிவிக்கிறது.

இந்த நிகழ்ச்சிகள் யுத்தம் நடக்கும் பிரதேசங்களில் 'இருபதாவது நூற்றாண்டு பாக்ஸ் பிலிம் கம்பெனி'யாரால் எடுக்கப்பட்ட புகைப்படங்களும், பம்பாய் துரைத்தனத்தாரைக்கொண்டு இந்திய கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கும் ஒரு சங்கத்தாரால் இந்தியா சம்பந்தமான சில விஷயங்களைப்பற்றி தயாரிக்கப்பட்ட புகைப்படங்களும் சேர்ந்தவைகள். ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் மூன்று தனித்தனிப் படங்கள் காட்டப்படும். இந்தப் படங்கள் காண்பிப்பதால் யுத்த அறிக்கை நிலயத்தின் பிரசங்கங்களுக்கும், மேற்படி நிலயத்தின் வாரப்பதிப்பு புஸ்தகத்துக்கும் அதிக மதிப்பு ஏற்படக்கூடுமென்று யுத்த அறிக்கை நிலயம் நம்புகிறது.

புதுக்கோட்டையின் யுத்த நிதிக்காக உழைத்துவரும் கமிட்டியார் யுத்த அறிக்கை நிலயத்திற்கு ஒரு மோட்டார் வண்டியை நன்கொடை அளித்திருக்கிறார்கள். இந்த வண்டியில் புகைப்படம் காண்பிக்கக்கூடிய யந்திரங்களையும், திரைகளையும், புகைப்படங்களையும் பிரசங்கம்செய்யும் ஸ்தலங்களுக்கு எடுத்துச்செல்ல சௌகரியமாயிருக்கும். ஆனால், இம்மாதிரி புகைப்படங்களோடுகூடிய பிரசங்கங்களைச்செய்ய வசதி ஏற்படுத்திக் கொள்ளவும், ஒவ்வொரு இடத்திலும் மாதாமாதம் ஒவ்வொரு புதிதான படக்கோர்வையைக்காண்பிக்கவும், பிரசங்க ஸ்தலங்களையும் அறுபது இடங்களுக்கு அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டை ஸமஸ்தான வாசிகள் முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டியவைகள் என்னவென்றால் :—

(*a*) பிரசங்கங்கள் சாதாரணமாக **மாலை 6** அல்லது **6-30 மணிக்குத் துவக்கப்படும்.**

(*b*) யுத்த அறிக்கை நிலயத்தின் மோட்டார் ஒருநாளில் இரண்டு ஊர்களுக்குச்செல்ல வேண்டியிருப்பதால் பொதுஜனங்கள் **தவராமல் குறிப்பிட்ட டயத்தில்** பிரசங்கம் செய்யப் போகுமிடத்தில் ஆஜராகியிருக்க வேண்டும்.

இந்தப்படங்களை ஆயிரம் பேர்களுக்குக்குறையாமல் சௌகரியமாய்ப் பார்க்கக்கூடுமென்று அனுபவத்தில் தெரிகிறது. ஆகையால் உங்கள் கிராமத்தில் பிரசங்கம் செய்யப்படுமென்று பிரசுரம் செய்த அளவில்,

**அந்த இடத்தில் கூடுங்கள்,**

**சரியானபடி குறிப்பிட்ட டயத்தில் வாருங்கள்.**



# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் XXXVIII.

1941—

| | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| ஏப்ரல் ... | 5, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 6, ஞாயிற்றுக்கிழமை. | நார்த்தாமலை | ... | ,, | 6.30 |
| | 7, திங்கட்கிழமை ... | நார்த்தாமலை | ... | ,, | 6.30 |
| | 8, செவ்வாய்க்கிழமை. | அரிமளம் | ... | ,, | 6.00 |
| | | கீழாநிலை | ... | ,, | 6.30 |
| | 9. புதன்கிழமை ... | கீரனூர் | ... | ,, | 6.00 |
| | | காஞ்சூர் | ... | ,, | 6.30 |
| | 10, வியாழக்கிழமை ... | பெருங்களூர் | ... | ,, | 6.00 |
| | | ஆதனக்கோட்டை | ... | ,, | 6.30 |
| | 11, வெள்ளிக்கிழமை .. | பூவரசகுடி | ... | ,, | 6.00 |
| | | வேங்கடக்குளம் | ... | ,, | 6.30 |

## பிரஸங்கம் XXXIX.

| | | | | |
|---|---|---|---|---|
| 12, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | ,, | 6.30 |
| 13, ஞாயிற்றுக்கிழமை. | திருவப்பூர் | ... | ,, | 5.00 |
| | வயலோகம் | ... | ,, | 6.00 |
| | குடுமியாமலை | ... | ,, | 6.30 |
| 14, திங்கட்கிழமை ... | திருமயம் | ... | , | 6.00 |
| | கோனாபட்டு | ... | ,, | 6.30 |
| 15, செவ்வாய்க்கிழமை. | நச்சாந்துபட்டி | ... | ,, | 6.00 |
| | விராச்சிலை | ... | ,, | 6.30 |
| 16, புதன்கிழமை ... | ராஜகிரி | ... | ,, | 6.00 |
| | விராலிமலை | ... | ,, | 6.30 |
| 17, வியாழக்கிழமை. | பனையப்பட்டி | ... | ,, | 6.00 |
| | ராங்கியம் | ... | ,, | 6.30 |
| 18, வெள்ளிக்கிழமை... | புதுப்பட்டி (பொன்னமராவதி). | | ,, | 6.00 |
| | வேந்தம்பட்டி | ... | ,, | 6.30 |

புதுக்கோட்டை ஸமஸ்தானம்

யுத்த நிதிக்காக போடப்படும்

# அதிர்ஷ்டச் சீட்டு.

(ஈ-தர்பாரவர்கள் உத்தரவின்பேரிலும் ஆதரவின் பேரிலும் புதுக்கோட்டை யுத்தநிதி எண்டெர் டெயின்மெண்ட் கமிட்டியாரால் நடத்தப்படுகிறது.)

இந்த யுத்த நிதியை ஆதரியுங்கள்

டிக்கெட்டுகளை வாங்குங்கள்

முடிவு தேதி 15—6—41

சீட்டு குலுக்கும் தேதி 23—6—41

நமது மன்னர் அவர்களின் வருஷவர்த்தனை தினத்தன்று அதிர்ஷ்டசாலிகளுக்கு ஏராளமான பரிசுகள்.

300 பரிசுகள்.

| | | |
|---|---|---|
| 1-வது பரிசு | ரூபாய் 7,500 | |
| 2-வது பரிசு | ,, 5,000 | |
| 3-வது பரிசு | ,, 2,500 | |
| 2 பரிசுகள் | ,, 1,000 | வீதம் |
| 5 ,, | ,, 500 | ,, |
| 90 ,, | ,, 100 | ,, |
| 100 ,, | ,, 50 | ,, |
| 100 ,, | ,, 15 | ,, |


Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—5-4-41.


புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ஞு ஏப்ரல் மீ 12உ [ந. 39.


பிரஸங்கம் XXXIX.

## இந்தியாவும், அது யுத்தத்தில் எடுத்துக் கொள்ளவேண்டிய பங்கும்.

### மூன்று யுத்தங்கள்.

சென்ற ஞாயற்றுக்கிழமை, நகரவாசிகள் முழுவதும் மாதாக்கோவிலில் தொழும் பொழுது பெல்கிரேடை ஜெர்மானியர்கள் புயல்போல் தாக்கினார்கள். அப்பொழுது எரியும் வீடுகளிலிருந்து தப்பி ஓட முயன்ற பெண்கள் குழந்தைகளை மெஷின் பீரங்கிகளால் சுட்டது யுத்தக் கோரங்களுக்கு இன்னும் முடிவில்லை என்பதை பயங்கரமாக நமக்கு எச்சரிக்கிறது. ஔரத்தீகள்போல் தீகளுடன் ஆரம்பிக்கப் பட்ட பால்கன்ஸ் யுத்தம் இப்போரின் மூன்றாவது அத்தியாயத்தை துவக்குகிறது. ஏற்கனவே, பிரான்ஸ் போரானது, பிலாண்டர்ஸில் துரோகம், பயங்கரம் இவை களுக்கிடையே துவக்கி, அப்பெரும் தேசத்தின் ஒடுக்கத்தில் முடிந்தது. இதன் பின் பிரிடனைப் பிடிக்க யுத்தம் நடைபெற்றது. புயல்போல் ஜெர்மானியரின் ஆகாய தாக்குதல்கள் எல்லாம் ஆர் ஏ. எப்.ன் மீறமுடியாத எதிர்ப்பால் நிலை குலைந்தன. கடலிலும் போர்கள் நடந்தன—மத்தியதரைகடல், அட்லாண்டிக்—இவைகளில். ஆனால் சமீபத்தில் பெல்கிரேடில் ஜெர்மானியர்கள் புது இனுசில் செய்த அட்டூழியங்கள் போரில் அதன் மூன்றாவது பகுதியில் தீர்மானமாக பிரவேசித்திருப்பதையும், எங்கு பார்த்தாலும் இருள் சூழ்ந்து வருவதையும் நமக்கு நிச்சந்தேகமாக காட்டுகிறது.

### நமது கடமை.

ஆனதால் நாம் உலகின் எதிர்காலத்தை—நன்மைக்கோ, கெடுதலுக்கோ,—பாதிக்கக்கூடிய அவ்வளவு ரொம்ப முக்யத்வம் வாய்ந்த நாட்களில் வாழுகிறோம்,

இத்தருவாயில் இந்தியாவின் கடமை என்ன? இதற்குபதில் ஒன்றே ஒன்றுதான். **யுத்தத்தை பிரிடன் ஜயிக்க உதவிசெய், அதனால் தனக்குந்தானே உதவிசெய்து கோள்.** இதனினும் மிக்க மந்திரமில்லை.

## சத்தியாக்கிரஹம்.

இப்படிக்கெல்லாம் இருந்தும், லட்சக்கணக்கான, வாயில்லாப் பிரஜைகளின் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்ளும் ஒரு சாரார் யுத்த முயற்சியில் இந்தியாவின் மனது ஈடுபடவில்லை என்று கோஷிக்கிறார்கள். இது எப்படியிருப்பினும், ஒத்துழையாமை இயக்கத்தைப்பரவ சத்தியாக்கிரஹம் செய்துவருகிறார்கள். அவர்கள் தலைவர் மகாத்மா காந்தி தற்போது சத்தியாக்கிரஹ இயக்கம் தனி நபர்கள் மூலமாகவே இருக்கவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார்கள். அவர் ரொம்ப கெட்டிக்காரர். அவர் இந்த திட்டம் வகுத்ததில் ஒரு மர்மம் இருக்கிறது. ஏனெனில், இயக்கம் பொதுவாக இருந்தால் அது படுதோல்வியில் முடியும், அதனால் ஜனங்களின்மீது அவருக்குச் செல்வாக்கு இருக்கிறது என்ற பாத்தியம் பொய் என்று நிரூபிக்கப்படும், என்பது அவருக்குத்தெரியும். ஜனங்களுக்கு, காங்கிரஸ் வகுப்பாரிடம் சுமார் 2 வருஷங்களுக்குமேல் நிர்வாகத்தை ஒப்புவித்ததின் பயனாக, புளிப்புத்தட்டிவிட்டது. காங்கிரஸ் அங்கத்தினர்களின் சங்கியை இறங்கிவிட்டது அதற்கு ஒரு சூசகம். ஆயினும் அவர்கள் தங்கள் பெரும்பழைமைகளைப் பாராட்டி ஜனங்களின் சார்பாக, யாதொரு சுயமரியாதையுடைய இந்தியனும் யுத்த முயற்சிகளில் பங்கு எடுத்துக்கொள்வதைக் கண்டிப்பார்கள்.

## கோடி திருநாள்.

கோடியை எட்டிய திருவிழாவை மதராஸ் சென்ற திங்களன்று மிக்க பெருமையுடன் கொண்டாடியது. இந்தியா முழுவதிலும் மதராஸுக்கு இக்கௌரவஸ்தானம் வாய்க்கவேண்டும் என்று ஓயாமல் பாடுபட்ட பெருமைவாய்ந்த கவர்னர் அவர்களுக்கு இது ஒரு பெரும்வெற்றியாகும். இப்பெருந்தொகையின் ஒவ்வொரு சிறு பகுதியும், மதராஸ் ஜனங்களால் மனதார ஒப்பிக்கொடுத்த நன்கொடை என்பது எனக்கு நன்குதெரியும். தேசத்தின் ஹிருதயநாடி சரியான வழியில் ஓடுவதை இது பெரிதும் எடுத்துக்காட்டுகிறது. இது அனுபவசித்தமாகவும், நிதர்சனமாகவும் காங்கிரஸ் கக்ஷிக்காரர்கள் கொண்டாடும் பாத்தியங்கள் பிசகு என்பதை நிரூபித்துவிட்டது.

## சாசுவதமான உபதேசம்.

ஆனாலும் அவர்கள் இயக்கத்துக்கு ஏதாவது அங்கீகரிக்கத்தக்க மூகாந்திரங்கள் இருக்கின்றனவா என்பதைப் பார்ப்போம். அவர்கள் கூறும் முக்கியமான மூகாந்திரம் இது:—யுத்தம் என்றாலே இயற்கையிலேயே அது இம்சை; காங்கிரஸ்காரர்கள் அகிம்சை கங்கணம் கட்டிக்கொண்டவர்கள்; ஆனதால் அவர்கள் எவ்வித யுத்த முயற்சியிலும் சேரக்கூடாது. அவர்களில் முக்கியமான தலைவர்களில் ஒருவர் 'கண்ணன் காட்டியவழி' என்ற ஒரு நூல் எழுதியிருக்கிறார். மகாபாரதத்தால் பிரசித்திபெற்ற குருக்ஷேத்திரத்தில் அர்ச்சுனனுக்கு பகவான் ஸ்ரீகிருஷ்-



ணன் செய்த உபதேசம் அவர்செய்த உபதேசங்களுள் மிகப்பெரிது. பாண்டவர்களின் பெரும்படையும் கௌரவர்களின் பெரும்படையும் எதிருக்கு எதிர் யுத்தத்துக்கு ஆயத்தமாய் அணிவகுத்து நிற்கின்றன. அர்ச்சுனன் மனதில் ஒரு மஹத்தான சந்தேகம் உதிக்கின்றது:—தனக்கு எதிரில் நின்ற பெரும்படையை ராஜ்ஜிய ஆகாங்க்ஷைக்காக அழிப்பது தர்மமா? பகவான் கிருஷ்ணன் அந்த மஹாயுத்தத்தில் அர்ச்சுனனுக்கு சாரதி. அவர் அவனுக்கு ஒரு உபதேசம் செய்தார். அந்த உபதேசம் இன்றும் என்றும் பின்பற்றத்தக்கது. பகவான் சொன்னார்:—பாவமும் அதர்மமும் உலகில் தலையெடுக்கும் போதெல்லாம் அவைகளை அனுசரிப்பவர்களுடன் எல்லாவிதங்களிலும் போராடி அவர்களை அழித்து தர்மத்தையும் நீதியையும் ஸ்தாபிப்பது ஒவ்வொரு தர்மாத்மாவின் கடமையாகும்—என்று. பாண்டவர்களின் கட்சி தர்மமானது, ஆனதால் அவர்களுக்கு எதிரே நின்ற கௌரவப்படை முற்றிலும் அழியினும் அதன் மூலம் தர்மம் நிலைநிறுத்தப்படவேண்டும், என்றார் பகவான் கிருஷ்ணன். ஹிந்துக்கள் கடவுளின் அவதாரம் என்று கொண்டாடும் ஸ்ரீ கிருஷ்ணனின் அழியாத உபதேசம் இதுவாகும். கிருஷ்ணனின் உபதேசம் இவ்வாறிருக்க, 'கண்ணன் காட்டிய வழி'யை இயற்றிய ஆசிரியர் அதனைத் தான் பின்பற்றார்; சத்தியாகிரஹம் செய்தார். அதனால் அவர்கள் நடவடிக்கைகளில் யாதொரு கொள்கையும் இருப்பதாகத் தெரியவில்லை.

## நாம் அருகதையுள்ளவர்களாவோம்.

மற்றொரு காரணமும் அடிக்கடி வற்புறுத்தப்படுகிறது:—அதாவது பிரிடன் இந்தியாவுக்கு உரிமைகளை மறுத்து விட்டது: இந்தியாவுக்கு எப்பொழுது என்ன சீர் திருத்தங்களை பிரிடன் அளிக்கத் தயாராயிருக்கிறது என்று வெளியிடும்வரை சுயமரியாதை படைத்த யாதொரு இந்தியனும் யுத்த முயற்சியில் சேரக்கூடாது என்று. பிரிடன் ஒரு மஹாயுத்த பிரளயத்திடையே மாட்டிக்கொண்டிருக்கிறது; அதனுடைய ராஜதந்திரிகள் இராப்பகலாக சத்துருவை எதிர்த்து நின்று அவனை சாய்க்கும் வேலையில் ஈடு பட்டிருக்கின்றனர். இந்த இக்கட்டான நிலைமையில் பேரம் பேசுவதா காங்கிரஸின் தர்மம்? இஃது தர்மம் ஆயின் இம்மாதிரி தர்மத்தினின்று நம்மை கடவுள் அருள் புரிவாராக! பொறுப்பாட்சி கவர்ன்மெண்டு, சுயேச்சை, இவைகள் ஒரு நாட்டினரால் மற்றொரு நாட்டினருக்கு அளிப்பவைகள் அல்ல. இவைகளுக்கு நாம் தகுதி யுறுவோமானால் பிரிடனுக்கு அது பிடித்தமானாலும் அல்லாவிட்டாலும், நாம் இவைகளைப் பெறுவோம்.

## யுத்தத்தில் ஜயிக்க பிரிடனுக்கு உதவி செய்.

ஆகையால் நாம் இந்தப்பெரும் தருவாயைப் பயன்படுத்திக் கொள்வோமாக! அதற்குத்தகுதி உடையோமாகுக! ஹூணர்களிடமிருந்து நமது தேசம் காபந்தாயிருப்பது நமது பொருள் செருக்காலல்ல, 'நமதுபடை பலத்தாலுமல்ல; நிச்சயமாய் அகிம்சையின் பலனாலுமல்ல; பிரிடன் அவர்களை ஐரோப்பாவில் தாக்கி போருக்கு இழுத்து வைத்திருப்பதால் தான். நமது வீடுவாசல்களுக்கு ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் சத்துருக்களைத் தாக்காட்டியிருக்கும் பிரிடனின்

உதவிக்கு விரைந்து செல்லுவதுதான் நமக்கு புத்திசாலித்தனமல்லவா? அந்தத் தொலையிலேயே எதிரியுடன் வெற்றிகரமாகப் போராடி அவனை அழிக்க நம்மால் இயன்ற அளவு நமது தார்மிக உணர்ச்சி உதவி, பொருள் உதவி அளிப்பதுதான் நமக்கு புத்திசாலித்தனம் அல்லவா? அல்லது நாம் தனித்துநின்று ஈவிரக்க மில்லாத ஹிட்லர் ஒருகால் பிரிடனை ஐரோப்பாவில் தோற்கடித்து (கடவுள் இதை நிறைவேறாமல் செய்குக!) அவனுடைய கொடுமை பட்டாளங்களை நம திடையே புகவிடுவது புத்திசாலித்தனமாகுமா? இது விஷயத்தில் இருபட்சங் களுக்கு இடமில்லை; பட்சம் ஒன்றுதான்:—கடைசியில் சொன்னதை எவ்விதத் திலும் தடுப்பது. இக்கோர விபத்திலிருந்து மீள ஒரேவழி, அதனுடைய யுத்த முயற்சிகள் எல்லாவற்றிலும் மனதாரவும், தாராளமாகவும் ஒத்துழைப் பதால் பிரிடன் இந்தச் சண்டையில் ஜயிக்கும்படிசெய்வதே. கடவுள் அதற் கருள் புரிவாராக.

இது வரையில் யுத்த சம்பந்தமாய் இந்தியாவிலுள்ள சில ஜனங்களின் மனோ நிலையைப்பற்றி என்னுடைய அபிப்பிராயத்தை வெளியிடவேண்டுமென்று நினைத்துச் சொல்லியிருக்கிறேன். இந்தியாவிலுள்ள ராஜவிசுவாசிகள் நான் மற்றொரு இடத்தில் சொல்லியிருக்கும் நோக்கங்களை அடைவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்களென்று இப்பொழுது சுருக்கமாய் சொல்லப்போகிறேன்.

## சுதேச மன்னர்களும் பொது மக்களும்.

இந்தியாவின் யுத்த முயற்சி ஊக்கத்தையும், உதாரத்துவத்தையும் காட்டுகிறது. இப்பெரும் முயற்சிக்கு தனது எல்லை கடந்த பொக்கிஷத்திலிருந்து ஏராளமான தளவாடங்களும், செல்வமும், மனுஷ ஒத்தாசையும் செய்திருக்கிறது. யுத்தம் ஆரம்பித்த உடன் காலத்திலேயே சுதேச மன்னர்களும், சிற்றரசர்களும் தங்களை யும் தங்களுடைய யாவற்று சொத்து சுகங்களையும் சக்கிரவர்தியாருக்கு அர்ப்பணம் செய்து இருக்கின்றனர். தங்களுள் இருந்து வந்த வேற்றுமை தாழ்வுதனை எல்லா சமூகத்தினரும் ஜாதியினரும் ஒரு புறம் தள்ளிவைத்து ஏகமனப்பான்மை கொண்டு நாஸிகளை வெறுப்பதாகக்கூறி இப்பெரும் காரியத்தில் ஈடுபட்டிருக் கின்றனர். எல்லா திக்குகளிலிருந்தும் ஜனங்கள் போட்டியிட்டுக்கொண்டு வந்து சைனியங்களில் சேர்ந்து இருக்கின்றனர்.

## பொருள் உதவி.

"வைஸ்ராய் அவர்களின் யுத்தநிதி"க்கும், "செயிண்ட் டன்ஸ்டன் நிதி"க்கும், "இந்தியன் ரெட் கிராஸ் நிதி"க்கும், "செயின் ஜான்ஸ் ஆம்புலன்ஸ் நிதி"க்கும், "லார்ட் மேயரது நிதி"க்கும் சுயமாக கிடைத்திருக்கும் பொருள் உதவி குறிப்பிடத்தக்கது. பரம்பரை வழக்கத்தை காட்டும் விதம் சுதேச மன்னர்கள் ஏராளமாக தொகைகள் கொடுத்திருக்கிறார்கள். நிஜாம் ஒரு தனி விமானப்படையை நிருவவும், அதை நடத்தவேண்டிய செலவை தானே பொறுத் துக்கொள்வதாயும், அதில் சேதமாகும் விமானங்களுக்கு பதிலாக புதுவிமானங் கள் சேர்ப்பதற்கும் ஏராளமாய் பொருள் கொடுத்திருப்பது சுதேச மன்னர்களின் மனப்பான்மையைக் காட்டும் உதாரணமாகும்.



இவ்விதப் பொருள் உதவி செல்வந்தர்களிடமிருந்துமட்டும் கிடைக்கவில்லை. செல்வந்தர்கள் ஆயிரக்கணக்கான ரூபாய்களாகவும், ஏழை மக்கள் அணாக் கணக் காகவும் சுயச்சையாய் தங்களால் இயன்றவரை கொடுத்திருக்கிறார்கள். இந்த முயற்சியில் மதராஸ் ராஜதானி இதர ராஜதானிகளுக்கு முன்னணியில் நின்று, தான் கோடி ரூபாய்க்குமேல் சேகரம் செய்திருப்பதில், வழிகாட்டியாய் இருக் கிறது.

## இந்திய ராணுவ உத்தியோகங்கள்.

இந்திய சாம்ராஜ்ஜியத்தின் முக்கிய எல்லை ஸ்தலங்களுள். "ஸூயஸ்" ஐயும், "சிங்கப்பூரை" யும் இந்தியத் துருப்புகள் பாதுகாக்கின்றன. ஆஸ்ட்ரேலியாவை ஒத்த மற்ற பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்தின் பிரதேசங்களிலிருந்து வந்திருக்கும் இதர சைனியங்களுடன் தோளோடு தோள்சேர்ந்து நமது இந்தியப்படை தங்கள் தைரியத்தையும், வீரத்தையும், 'ஸிடிபரானி,' 'கசாலா' 'காகபட்' முதலிய விடங்களில் நிகழ்ந்த போர்களில் காட்டி கியாதிபெற்று இருக்கின்றனர். தனது சொற்பொழிவில் பிரதம மந்திரியார் சர்ச்சில் இவ்விதம் இந்தியப்படையைப்பற்றி புகழ்ந்து பேசி இருக்கிறார். "எரிட்ரியாவில் நடந்த எல்லா யுத்த நிகழ்ச்சி களிலும், ஹிந்துஸ்தான் மக்களின் தொன்றுதொட்டுவரும் வீரத்தை விளங்கச் செய்து, எல்லா சந்தர்ப்பங்களிலும், முன்னணியில் இருந்தது, நமது இந்தியப் படையேயாம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## இந்திய ராணுவ விஸ்தரிப்பு.

சமாதான காலங்களில் இந்தியப் படையின் மொத்தக் கணிக்கை 1,60,000. யுத்தத்தை உத்தேசித்து இது தற்காலத்திய ராணுவ யந்திர தளவாடங்கள் கொண்டதாயும் 5,00,000, பேர்களைக் கொண்டதாயும் விஸ்தரிக்கப்பட்டிருக் கிறது. யுத்தப் பயிற்சி அளிக்கக்கூடிய ஆசிரியர்கள் குறைவினாலும், தளவாடங் கள் குறைவினாலும் முதலாவதாக 1,00,000 பேர்கள்தான் பயிற்சி அளிக்கப் பட்டிருக்கிறார்கள். சென்னை ராஜதானியில் ஒரு படை நிருவப்பட்டு வருகிறது. ராணுவ பயிற்சி பெற்று தரைப் படை, நீர் படை உத்யோகஸ்தர்களும் தயாராகி யிருக்கின்றனர்.

## இந்திய விமானப்படை.

இந்திய விமானப்படை விசேஷ கடற்கரையோர ரோந்துகள் செய்து வருகிறது. யுத்தம் ஆரம்பமான உடனேயே விமானப்படை முன்னிலும் நான்கு பங்கு அதிகமாக நிருவப்பட்டிருக்கிறது. இது இப்போது பூர்த்தி செய்தாகி விட்டது. இந்திய விமானப்படைக்கு விமானிகள், உத்யோகஸ்தர்கள், விமான நிலய இஞ்ஜினியர்கள் இவர்கள் பயிற்சி செய்விக்கப்பட்டிருக்கிறார்கள். விமான நிலயங்கள் பெரிதும் விஸ்தரிக்கப்பட்டு, தற்காலத்திய புதிய விமானங்களையும் உடையனவாய் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலேயே விமானங்கள் கட்டுவதற்கும், விமான உபயோகத்துக்காக எண்ணெய் சுத்தப்படுத்தவும் பலத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

## இந்திய கடற்படை.

தனக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் கடமைகளுள் :—கடற்கரை பாதுகாப்பு, கடற் சுரங்க முஸ்தீபு, தளவாடங்களையும் கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிப்பது இதுபோன்ற வேலைகளை தளர்ச்சியின்னியில் செய்துவருகிறது. இதனுடைய பாதுகாப்பின் காரணமாய் ஏராளமான சைனியங்களும், தளவாடங்களும், ஆகார வகைகளும், எவ்வித சேதமுமன்றி அனுப்பப்பட்டு வந்திருக்கின்றன. கடற் படையும் விஸ்தரிக்கப்பட்டுவருகிறது. இந்தியாவிலேயே நீர் சுரங்கங்களை அப்புறப்படுத்துவதற்கான கப்பல்கள் கட்டப்பட்டு வருகின்றன.

## யுத்த தளவாடங்கள்.

தோட்டாக்கள் குண்டுகள் செய்வதற்கு இந்திய சைனிய வெடிமருந்து சாலைகள் தீவிரமாக ஓய்வின்றி வேலை செய்கின்றன. இப்போது இந்தியாவின் செல்வுகளைத்தவிர கடலேரி அனுப்பிவைக்கவும் போதுமான குண்டுகள் செய்யப் பட்டிருக்கின்றன. யுத்த தளவாடங்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கும் 40,000, ஐட்டங்களில் 20,000-க்கு மேலேயே அதாவது, துப்பாக்கிகள், தோட்டாக்கள், 6 இன்சு பீரங்கிகள், டாங்குகள், குண்டுகள், சேணங்கள், கம்பளிகள், உடைகள் இவைகள்போன்ற பலவகைகளும் இந்தியாவிலேயே செய்யப்பட்டு வருகின்றன

## பொருளாதாரக் கொடை.

ஆகாயப் பொருள்கள், எண்ணெய்கள், கொழுப்புகள், சணல், ரப்பர், மரம், தோல், கயிறு, தேயிலை, மாங்கனீட், மைக்கா இவைகள் இந்தியாவின் பொருளாதார கொடைகளில் விசேஷமானவை.

## ரோஜர் பிரசார கோஷ்டியும், கீழ்நாட்டு கூட்டுறவும்.

திறமையும் கியாதியுமுள்ள 'ரோஜர்' அவர்களின் தலைமையின்கீழ் யுத்தத் தேவைக்கு அவசியமான பொருள் சேகரத்தைப்பற்றி வேலை செய்துவரும் கோஷ்டி தீவிரமாக வேலை செய்துவருகிறது. "ஸூயஸு"க்கு தென்கிழக்கிலுள்ள பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்துக்குள்பட்ட ஜனநாயக நாடுகளின் முக்கியஸ்தர்கள் சென்ற டிஸம்பர் மாதம் டில்லியில் கூடி, கிழக்குப் பிராந்தியத்திலுள்ள படை களின் பாதுகாப்பைப் பற்றியும், அவைகளின் உபயோகத்துக்காக ஆதார தளவாட வசதி ஏற்பாடுகள் செய்வது பற்றியும், எவ்விதம் இந்த நாடுகள் ஒத்து உழைக்க வேண்டுமென்பதுபற்றி பரிசீலனை செய்தார்கள். இதன் காரணமாக புது தொழில் முறைகள் உண்டாக்கி யிருப்பதுடன் பழைய முயற்சிகளும் பெரிதும் விசால மாக்கப்பட்டிருக்கின்றன. இப்போது இந்தியத் தொழிற்சாலைகள், மிஷின் சாமான் கள், எலெக்ட்ரிக் தந்திக்கம்பிகள், கந்தக திராவகம், கோல்தார், சிமிண்ட், ரப்பர் வகையறுக்களை உற்பத்தி செய்கின்றன. அலுமினியம் உற்பத்தி செய்ய புதுச் சாலைகள் ஏற்படுத்தப்பட்டும், இரும்புச் சாலைகள் விசாலப்படுத்தப்பட்டும் இருக்கின்றன.

கெடுதலிலிருந்து நன்மை உண்டாவதுமுண்டு. யுத்தத்தின் காரணமாக இந்திய தொழிற்சாலைகள் விருத்தி அடைந்து வருகின்றன.



இந்தியாவில் இதுவரை ஏராளமாக யுத்த முயற்சிகளில் பங்கெடுத்துக் கொள்ளப்பட்டிருந்தும் இனிமேலும் அதிக முயற்சிகள் செய்யப்பட வேண்டிய தாய் இருக்கிறது. அதுவும் நாஸிகளின் ஆக்கிரமிப்பு ஒழியும் வரை ஓய்வுக்கோ, முயற்சியில் தளர்ச்சிக்கோ இடமில்லை. கோடி ரூபாய் சேகரத்தைப்பற்றி கொண்டாடப்பட்ட தினத்தன்று மேன்மைதங்கிய கவர்னர் அவர்களும் "வருகிற மாதங்களிலும் நமது முயற்சிகளை இரட்டிப்பாகவும், நான்கு பங்கு அதிகமாகவும் செய்வோம். நமது முயற்சிகளும், தெய்வ வணக்கமும், தர்ம ஸ்பானத்துக்கும் விடுதலைக்கும் நம்மைகொண்டு செல்லட்டும்" என்று கூறியிருக்கின்றார்.

---

# வார யுத்தச் செய்திகள்.

---

(31—3—41-லிருந்து 9—4—41-வரை).

**பால்கன் யுத்தம்.**—மார்ச்சு 6-ம் தேதியன்று கிரீஸ் மேலும், யூகோஸ்லாவியா வின் மேலும் ஜெர்மனி யுத்தம் துவக்கி விட்டது.

இது எதிர்பார்த்ததுதான். பிரிடன்மேல் படையெடுக்க முடியாது போய், முஸோலினிக்கு உதவி செய்யும் அவசிய மேற்பட்டு, மற்றொரு போர்முனையில் சண்டைப்பட வேண்டிய கட்டாயம் ஜெர்மனிக்கு ஏற்பட்டு விட்டது. ஆனால், ஹிட்லருக்கு இரண்டு முனைகளில் சண்டை செய்வதில் அச்சமுண்டு: அவ்விதம் செய்துதான் சென்ற மகாயுத்தத்தில் ஜெர்மனி தோல்வியடைந்தது. ஆகவே ருமேனியாவையும், பல்கேரியாவையும் பயமுறுத்திக் கைவசமாக்கிக் கொண்டார். இதே மாதிரியாக யூகோஸ்லாவியாவையும் கைக்கொள்ளப் பார்த்தார். இந்தக் காரியமும் பலித்துவிடும் போலிருந்தது. யூகோஸ்லாவியாவின் மாஜி மந்திரிகள் மூவரசு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார்கள். ஆனால் கடவுளுக்குச் சம்மத மில்லை போலும், யூகோஸ்லாவியாவில் அரசாங்கம் புரண்டது. பிறகு சில வாரங்களாக யூகோஸ்லாவியர்கள் அக்கிரமங்கள் செய்து விட்டதாக பிரசாரம் நடந்தது. ஆனால் ஹாப்லானுவென்ற மாகாண காரியஸ்தரான டாக்டர் ஹான்ஸ் போராஷ் என்ற ஒரு நாஸியே இவைகளெல்லாம் பொய்யென்று எடுத்துக்காட்டி விட்டார். யூகோஸ்லாவியாவில் வசிக்கும் குரோட் ஜனங்களைக் கிளப்பிவிட்டு, அவர்கள் ஸெர்ப் ஜனங்களோடு சேராது பிரித்துவிடப் பார்த்தார்கள். இதுவும் முடியவில்லை. குரோட் தலைவரான டாக்டர் மாட்செக் புது அரசியலில் டிப்டி பிரதம மந்திரித்வத்தை யேற்றுக்கொண்டு விட்டார். இதன்பிறகு, முஸோலினி, தனக்கு ஏற்கனவேயுள்ள கஷ்டத்தோடு, அல்பேனியாவில் கிரேக்கியர்களால் தோல்வியடைந்த சமயத்தில் யூகோஸ்லாவியா மற்றொரு பகைவனாக யேற்படப் போகிறதென்று பயந்து மத்தியஸ்தம் பேசி யூகோஸ்லாவியாவுக்கும் ஜெர்மனிக் கும் சண்டையை நிறுத்தப் பார்த்தார்; முடியவில்லை. யூகோஸ்லாவியா தன் மானத்தையும், ஸ்வதந்திரத்தையும் பெரிதாக நினைத்தது. ஜெர்மனி, சரணாகதி செய்யச்சொல்லிற்று.

மத்தியில் ருஷ்யாவானது யூகோஸ்லாவியின் புதுஅரசை அங்கீகரித்து விட்டுப் புதிதாக ஒரு ஐந்து-வருஷ ஒப்பந்தத்தைச் செய்துகொண்டு, வேறு யாராவது எதிர்த்தால் ருஷ்யா யூகோஸ்லாவியோடு சிநேகமாயிருக்கச் சம்மதித்தது.

ஆனால் ஜெர்மன் ஆக்ரமம் நிற்கவில்லை. மேற்சொன்ன ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட மசி உலருவதற்குள்ளாகவே ஜெர்மனி யூகோஸ்லாவியை மட்டுமல்ல, கிரீஸையும் படையெடுத்து விட்டது.

**ஹிட்லர் சொல்லும் காரணம்.**—படை யெடுத்ததற்குக் காரணம் ஒன்றுமில்லை, ஹிட்லர் காரணமாகச் சொல்லுவதெல்லாம் கோணக்கக்ஷி: வார்த்தைகளும் அநாகரீகம். பிரிடனுக்கு சண்டைப்படுவதுதான் வேலையாம். யூகோஸ்லாவியின் புது அரசாங்கத்தார் துஷ்டர்களாம், கொலைபாதகர்களாம்: அவர்கள் அக்கிரம மாக அரசாங்கத்தைப் பிடித்துக்கொண்டார்களாம்: பிரிடனிடமிருந்து லஞ்சம் வாங்கிக்கொண்டார்களாம். அது நிற்க, யூகோஸ்லாவியா சைனியங்களைக்கூட்டி, மூவரசு ஒப்பந்தத்துக் கிணங்காததுதான் அதுசெய்த பிசகு: பிரிடிஷ் துருப்பு களை உள்ளேவர சம்மதித்ததுதான் கிரீஸ்செய்த பிசகாம். ஆனால், உண்மையில், பல்கேரியாவில் ஜெர்மன் துருப்புகள் வந்திறங்கிய பிறகுதான் கிரீஸில் பிரிடிஷ் படைகள் இறக்கப்பட்டன.

யூகோஸ்லாவியாவும், கிரீஸும் யுத்தத்துக்குச் சம்மதித்து விட்டன. ஜெர்மனி படையெடுத்த விவரம் பாம் (Palm) ஞாயிற்றுக்கிழமையன்று ஆலயத் தில், ஆராதனை செய்யும் சமயத்தில் ஆதன்ஸுக்குக் கிடைத்தது. இதாலியர்களை வென்றதுபோல் ஜெர்மானியரையும் வெல்லக் கடவுள் கிருபை செய்யவேண்டுமாய் ஜனங்கள் பிரார்த்தித்தார்கள்.

**பிரிடிஷ், அமெரிக்கா சகாயம்.**—பிரிடன் சைனியங்களைக்கொண்டும், அமெரிக்கா யுத்த தளவாடங்களைக்கொண்டும் உதவி செய்ய சம்மதித்து விட்டன. அமெரிக்கா வாக்களித்த தினமாவது சென்ற யுத்தத்தில் 1917-ல் அமெரிக்கா யுத்தத்தில் சேர்ந்துகொண்ட நாளாகும். யூகோஸ்லாவியாவுக்கு பிரிடன் கொடுத்திருக்கும் வாக்குறுதி பெருந்தன்மையானது: அது பின்வருமாறு:—

‘ஒரு வித காரணமுமின்றி சும்மாயிருந்த யூகோஸ்லாவியை ஜெர்மனி எதிர்த்தது மிருகத்தன்மையாகும். ஸெர்பியர்களும், குரோட்டுகளும், ஸ்லோவீனி களும் வீரர்களானதால் பிரிடிஷ் சாம்ராஜ்ஜியமும் அவர்களோடு சேர்ந்து கொள்ளும்.’

அவர்கள் நமது சகோதரர்களாவார்கள். இவர்கள் சென்ற யுத்தத்திலும் நம்முடைய கக்ஷியில் நின்று யுத்தம் செய்தவர்கள். இப்பொழுதும் அவரோடு சேர்ந்து நாம் வெற்றி பெறுவோம்.

‘தர்மம், நீதி, சட்டம் ஆகிய இவைகளை நிலை நாட்டிய பிறகுதான் யுத்தம் நிறுத்தப்படும்.



**பிரிடிஷ்-படையெடுப்புச் சைனியம் வந்துவிட்டது.**—மத்தியதரைக்கடலில் இதாலிய சண்டைக் கப்பல்கள் திருட்டுத்தனமாய் நிற்கின்றன. ஜெர்மன் விமா னங்கள் இங்கு சஞ்சரிக்கின்றன. ஆயினும் பிரிடிஷ் கப்பற்படையின் துணை கொண்டு, பிரிடிஷ், ஆஸ்திரேலியா, நியூஸீலண்டு சைனியங்கள் கிரீஸில் இறக்கப் பட்டிருக்கின்றன. இங்கு வைத்திருக்கும் பிரிடிஷ் விமானப்படையும் பலப் படுத்தியாய்விட்டது. ஆபிரிக்காவில் வெற்றி பெற்ற வேவல் தலைமை வகிப்பார். மேற்கொண்டும், சைனியங்கள் வரும். அநேக சைனியங்கள் வட ஆபிரிக்காவிலும், பாலஸ்தீனத்திலும், இராக்கிலும் தயாராயிருக்கின்றன.

**ஹிட்லரின் உதவியாளர்கள்.**—இதாலி, பல்கேரியா, ருமேனியா, ஹங்கேரி நாடுகள் ஜெர்மன் கக்ஷியில் சேர்ந்திருக்கின்றன; இதாலி ‘ஒத்துழைக்கு’மாம். பல்கேரியா ‘சும்மா பார்த்துக்கொண்டி’ருக்குமாம். யூகோஸ்லாவியாவைச் சேர்ந்த பானத் பிரதேசத்தை ஹங்கேரிக்கு லஞ்சமாகக் கொடுக்கப்படுமாம். ஹங்கேரியின் மாஜி பிரதம மந்திரி கவுன்ட் டெலிகி இந்த யுத்தத்தில் ஈடுபடு வதைக் காட்டிலும் இறப்பதே நலமென்று தற்கொலை செய்துகொண்டு விட்டாராம்.

**ஹிட்லருக்குப் படையெடுப்பிலிருக்கும் கஷ்டங்கள்.**—பிளாண்டர்ஸில் சுலப மாகச் செய்த சண்டையைப் போல் பால்கனில் முடியாதென்று ஹிட்லருக்கே தெரியும். ஜெர்மன் ரேடியோக்களே எச்சரிக்கை செய்திருக்கின்றன. பால்க னென்பது மலைப்பிரதேசம். இங்கே ரஸ்தாக்களும் ரயில் பாதைகளும் ஸ்வல்ப மானதால், துருப்புகள் விரைவாக முன்னேற முடியாது. சில விடங்களில் பாறையை உடைத்துப் பாதை செய்துகொள்ளவேண்டும். யூகோஸ்லாவியர்கள் சுத்த வீரர்கள். எதையும் தாங்கிக் கொள்வார்கள். கடைசிவரையில் சண்டையை நிறுத்தமாட்டார்கள். இந்த யுத்தமாரம்பமாய்விட்டதாகக் கேட்டவுடன், இவர்கள் ‘எங்களுடைய கல்யாணத்துக்குப் போவதுபோல் சண்டைக்குப் போவோமெ’ன்றார்கள்.

அட்லாண்டிக் சமுத்திரக் கரையில் 200 மைல்கள் விஸ்தீரணத்துக்கு ஜெர்மனி தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். லொபோடன் தீவை பிரிடன் படையெடுத்ததிலிருந்து எந்த இடத்தில் பிரிடன் எதிர்த்துவிடுமோவென்ற பயம் ஜெர்மனிக்குண்டு. பிடித்த தேசங்களில் கலகம் வராது பார்த்துக்கொள்ள அநேக ஜெர்மன் சைனியங்கள் அனுப்பியாய்விட்டது. ருஷ்யாவுக்கு ஜெர்மனி செய்யும் காரியங்கள் பிடிக்கவில்லை; ஜப்பான் தயங்குகிறது. பிரிடிஷ் படைகள் பால்கனில் நிலைத்துக்கொண்டால் ஜெர்மனியின் தென்கீழ் பாகங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும். ஜெனரல் வெய்காண்டு ஒரு சமயம் சொன்னமாதிரி இந்த யுத்தம் கடைசியாக வியன்னாவில் நடந்து பிரிடன் வெற்றிபெறக்கூடும்.

**அப்புறப்படுத்தியாய்விட்டது.**—பிளாண்டர்ஸில் பொது ஜனங்கள் ரஸ்தாக் களை அடைத்துக் கொண்டதால் யுத்த முயற்சிகள் தடைப்பட்டன. இதை நிவர்த்திக்க கிரீஸினுடைய பாகங்களாகிய மாஸிடோனியாவிலும், திரேஸிலும் 10 லக்ஷம் பொதுமக்கள் அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

**பெல்கிரேட் தகனம்.**—நாஸிகளின் மின்னலெதிர்ப்பு இரண்டு தேசங்களிலும் ஒரே காலத்தில் துவக்கப்பட்டது. பெல்கிரேடானது பாதுகாப்பில்லாத நகரமாயினும் விமானப்போர் இங்கு துவக்கப்பட்டு, நான்கு முறை நடத்தப்பட்டு, இரண்டு நாட்கள் ஓயாமல் எதிர்க்கப்பட்டது. நூற்றுக்கணக்கான ஜனங்கள் இறந்து, 3,000 பேர்களுக்குக் காயமேற்பட்டது. பெல்கிரேட் அழிந்து விட்டது. தந்தி தபால் கிடையாது. அரசாங்கம் விராணிகோவுக்கும், கடாக்குக்கும் மாற்றியாய் விட்டது. பெல்கிரேட் படையெடுப்பின் மிருகத்தன்மையைப்பற்றிப் பின் வருமாறு யூகோஸ்லாவிய ராஜாங்கம் தெரிவிக்கிறது :—

"பலவந்தமாய் எங்களைச் சண்டைக்கிழுத்து ஜெர்மனியானது பயங்கரத்தோடு செய்திருக்கும் அநியாயங்கள் நாகரீக உலகத்தார் அறியவேண்டும்.

"நாங்கள் முன்னதாகவே பெல்கிரேட் நகரமானது பாதுகாப்பில்லாத ஸ்தலமென்று பிரசுரம் செய்தும், படையெடுக்கப்போவதாக எச்சரிக்கைகூட கொடுக்காமல், ஜெர்மானியர் விமானங்களைக்கொண்டு தாக்கினார்கள்.

"அக்கினி குண்டுகளையும், வெடிகளையும் ஏராளமாய் வருஷித்து, வாசஸ்தலங்களை நாசமாக்கி விட்டார்கள். கிழவர்கள், ஸ்திரீகள், குழந்தைகளின் பிரேதங்கள் தெருக்களிலெல்லாம் நிறைந்து கிடக்கின்றன.

"நீதியும், இரக்கமுமில்லாது, ஆஸ்பத்திரிகள், ஆலயங்கள், பள்ளிக்கூடங்கள் மற்ற கல்வி ஸ்தாபனங்கள், பட்டப் பகலில் அழிக்கப்பட்டிருக்கின்றன. 30 வெடிகளைக் கொண்டு அரண்மனை அழிக்கப்பட்டது.

"தனிஜாகைகளையும் எதிர்த்து ஸ்லோவீன் தலைவராயும், மந்திரியாயுமிருந்த டாக்டர் குலோவெட்ஸ் கொல்லப்பட்டார்.

"படையெடுத்தபோது கோர சம்பவங்கள் பல நடந்தன. தீப்பற்றி எரியும் வீடுகளிலிருந்து வெளியேறி, உயிருக்கோடும்போது, ஸ்திரீகளும், குழந்தைகளும் சுடப்பட்டார்கள். வீடுகளில் தங்கியவர்களும் நூற்றுக்கணக்காய் பலியானார்கள்."

**படையெடுப்பு திட்டம்**—ஆஸ்திரியாவிலிருந்தும், ஹங்கேரியிலிருந்தும், ருமேனியா, பல்கேரியாவிலிருந்தும் ஒரே சமயத்தில் யூகோஸ்லாவியா எதிர்க்கப்பட்டிருக்கிறது. யூகோஸ்லாவிய சைனியத்தை இரண்டாய்ப் பிரித்து, கிரேக்கிய சைனியத்தோடு சேரவிடாது தடுப்பது ஜெர்மனியின் உத்தேசம். ஸ்ட்ருமா பள்ளத்தாக்கில் ஜெர்மன் சைனியங்கள் ஸலோனிகாவை நோக்குகின்றன.

**ஸலோனிகாவைப் பிடித்து விட்டார்கள்.**—கடைசியாக வந்திருக்கும் செய்திகளின்படி ஸலோனிகாவை எதிரிகள் பிடித்திருக்கிறார்கள். கிரேக்கியர்களும், இதைத்தடுக்க வீரப்போர் செய்தார்கள். பெரிதோடி கோட்டையைப் பிடிக்கும்போது எதிரியை ஏராளமாகக் கொன்றார்கள். ரூபல், அகிடா, வீஸாகோட்டைகள்மேல் எடுத்த பயங்கர எதிர்ப்பெல்லாம் எதிர்க்கப்பட்ட பிறகு பிடிபட்டன. விஸ்டிபே, கில்கிச்பா கோட்டைகள் அழிந்த பிறகுதான் எதிரிக்கு அவைகளுக்குள் நுழைய முடிந்தது.



**நவீன தர்மாபிலி.**—கிரீக் சைனியம் தகுந்த விடத்துக்குப்போய் நின்று கொள்ள சாவகாசம் கொடுப்பதற்கு, முன்னேறி வரும் ஜெர்மன் துருப்புகளை சற்றுத் தடுத்துக்கொள்ளவேண்டிய அவசிய மேற்பட, அதற்காக 150 கிரேக்கர்கள், இறப்பது நிச்சயமென்று தெரிந்தும், அஞ்சாது, முன்வந்து, கடவுளை பிரார்த்தித்துவிட்டு, பாலமொன்றையுமுடைத்துவிட்டு முடிவில், எதிரிகளால் நிர்மூலமானார்கள். முன்காலத்தில் கிரீஸில் லியானிடாஸ் வீரரோடு நானூறு பேர்கள் சென்று போர்முனையில் உயிர்துறந்த வீரத்தை இது ஞாபகப்படுத்துகிறது.

**நிஸ், ஸ்கோப்யா, பிடிபட்டன.**—இந்த இடங்களையும் ஜெர்மானியர் பிடித்து விட்டார்கள். யூகோஸ்லாவிய சைனியம் தென் ஸெர்பியாவில் பின்வாங்க கிரேக்க சைனியத்தின் இடது பார்சம் ஆதரவற்று நிற்கிறது.

**யூகோஸ்லாவியாவின் படையெடுப்பு.**—பல்கேரியா, ருமேனியா, ஹங்கேரி நாடுகளில் யூகோஸ்லாவியா விமானங்களைக்கொண்டு தாக்கியிருக்கிறது. ருமேனியாவில் டார்ஸோவா, ஆராத், டிமிஸோரா வென்ற இடங்கள் எதிர்க்கப்பட்டன. பியூம், ஸாரா, ஸ்குடாரியை யூகோஸ்லாவியா பிடித்திருக்கிறதாக சொல்லப்படும் செய்தி, ஊர்ஜிதமாகாதோடு, இதாலியர்களும் மறுக்கிறார்கள்.

**இதாலி சும்மாவிருக்கிறது.**—இதாலிய சைனியம் அல்பேனியாவில் சண்டை செய்யாமல் நிற்கிறது. ஜெர்மன் படை அங்குவந்தால், அதோடு சேர்ந்து, லாபத்தில் பங்கு கேட்கலாமென்று நினைக்கிறது. யூகோஸ்லாவியைச்சேர்ந்த ஸ்பினிட், கோடாரென்ற துறைமுகங்களைப் பிடித்துக்கொண்டதாகவும் சொல்லிக் கொள்ளுகிறது.

**பிரிடன் கொடுத்திருக்கும் சகாயம்.**—பிரிடிஷ் விமானங்கள் ஸோபியாவிலிருக்கும் ஜெர்மன் சைனியங்களையும், ஸ்ட்ருமா பள்ளத்தாக்கில் செல்லும் ஜெர்மன் தளவாடங்களையும் தாக்கின. பிரிடிஷ் சைனியம் இன்னும் ஜெர்மனியோடு கைகலக்கவில்லை.

## ஆபிரிக்கப் போர்முனை.

**அபிஸீனியா—அடிஸ்அபாபா பிடிபட்டுவிட்டது.**—பால்கன் போர் துவக்கியதிலிருந்து, கீழ் ஆபிரிக்காவில் பிரிடனுக்குக் கிடைத்திருக்கும் பெரிய வெற்றிகள் கவனத்துக்கு வரவில்லை. அடோவாவில் 1896-ல் இதாலியர்கள் படுதோல்வியடைந்தார்கள். இந்த இடத்தை, இப்பொழுது, பிரிடிஷ் சைனியங்கள் பிடித்துக் கொண்டு, ஏவாஷ் நதியைக்கடந்து சென்ற சனிக்கிழமையன்று, அடிஸ் அபாபாவைக் கைப்பற்றின. அங்கிருந்த இதாலியப் படைகள் தாங்களாகவே விலகிக் கொண்டன. அதன் தலைவரான டியூக் அயோஸ்டா அங்கிருந்த பொதுஜனங்களைப் பாதுகாத்ததற்காக பிரிடிஷ் சேனாபதிக்களுக்கு வந்தனம் செலுத்தியிருக்கிறார்.

இதிலிருந்து கீழ் ஆபிரிக்க யுத்தம் முடிந்ததாகக் கொள்ளலாம். மதராஸ் மெயில் பத்திரிகை எடுத்துக் காட்டியிருக்கிறபடி, கீழ் ஆபிரிக்க யுத்தமானது பெரிய ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடியது. இந்தக் கீர்த்தியில் சேனாபதிகளிலிருந்து வண்டிக்காரர்கள் வரையிலும், பிரிடிஷ், இந்திய, தென், கீழ், மேற்கு ஆபிரிக்க, ஸூடான், ஸோமாலி அராபியா, ஸ்வதந்திரபிரெஞ்சு, அபிஸீனிய—தேசாபிமானிகளுக்கெல்லாம் பங்குண்டு. பாலைவனங்களிலும், வனங்களிலும் தண்ணீரற்றப் பொட்டல்களிலும், செங்குத்தான மலைகளிலும், குளிரிலும், வெய்யிலிலும், ஒருவிடத்திலும் தோற்காது, ஒவ்வொரு இடத்திலும் முன்னேறி, இதுவரையில் இல்லாத வேகத்தோடு, வந்து யுத்தம் வெற்றிகரமாய் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

முஸோலினியின் ஸாம்ராஜ்ஜியத்துக்கு அந்திய காலம் வந்துவிட்டது. கோண்டார், டெஸ்ஸி முதலிய சில விடங்கள்தான் பிடிக்கப்படவேண்டிய பாக்கி.

**டேப்ரா—மார்காஸ் பிடிபட்டது.**—அபிஸீனிய தேசாபிமானத் துருப்புகள் டெப்ராஸ்-மார்காஸைப் பிடித்ததிலிருந்து, கொஜ்ஜம் மாகாண முழுவதும் கைவசமாயிற்று.

**மஸாவா பிடிபட்டது.**—மஸாவாவென்பது ஒரு முக்கிய துறைமுகம்: இதுவும் இந்த வாரத்தில் பிடிபட்டது. அஸ்மாரா வீழ்ச்சிக்குப் பிறகு மஸாவாவில் சண்டையே அனாவசியம். ஆனால் துறைமுகத்தையும், அதில் நின்ற 40 இதாலியக் கப்பல்களையும் சேதம் செய்வதற்காக அதை விட்டுவிட இதாலியர்கள் சம்மதிக்கவில்லை. அதற்குப் போகும் பாதையையும் கற்களால் அடைத்தார்கள். ஆகவே பிரிடிஷ் சைனியங்கள் பாதைகளைப் பிரித்துக் கொண்டு, சென்று, இந்த வாரத்தில் மஸாவாவைப் பிடித்தன.

**லிபியா—பெங்காஸி காலிசெய்யப்பட்டது.**—பெங்காஸி காலிசெய்யப்பட்டு, அங்கிருந்த பிரிடிஷ் படைகள் டொப்ரூக்கில் அணிவகுக்கப்பட்டிருக்கின்றன. இதற்குக் காரணம் ஜெர்மன் படையின் முன்னேற்றமும், சைனியத்தில் ஒரு பாகம் கிரீஸுக்கு அனுப்பியதுமாகும். இதனால் பெங்காஸியிலிருந்த நல்ல விமான நிலயங்களை நாம் விட்டுவிட நேரிட்டது. ஆனால், சர்ச்சில் எடுத்துக் காட்டியிருக்கிறபடி வெற்றிக்கு அவசியமானபடி ராணுவ காரியங்களைச் செய்ய வேண்டுமேயொழிய, கௌரவத்தையும் பொதுஜன அபிப்பிராயத்தையும் பார்க்கும் சமயமிதுவல்ல.

இவ்விடத்தில் ஜெர்மானியர் முன்னேறுவதற்குக் காரணம் அவர்களுடைய யந்திர சாதனம் பெற்ற துருப்புகள்தான். இவைகள், இதாலியத் துறைமுகமான ஸாலர்னோவிலிருந்து புறப்பட்டு, ஸிஸிலி வழியாக, ட்ரிபோலிக்குவந்து இறங்கியிருக்கவேண்டும். இவைகள் சேதப்படாது, கடலைத்தாண்டி யிருக்க முடியாது. இந்த வருஷம் ஆரம்பத்திலிருந்து மத்தியதரைக்கடலில் சேதப்பட்ட எதிரிக் கப்பல்கள் 1,09,000 டன்களாகும்: இவைகளில் ஒரு பாகம் ட்ரிபோலிக்குப் போக நினைத்த கப்பல்கள்.



**பிரான்ஸின் மோசக்கருத்து.**—ஜெர்மனி இனமாக கோதுமையை பிரான்ஸுக்குக் கொடுத்துவிட்டதாகப் பாசாங்கு செய்து, அதற்காக ஜெர்மனியைப் புகழ்ந்து, பிரிடன் மேல் குற்றம் சாற்றி, அமெரிக்காவைக் கேட்டுக்கொள்ள, இரண்டு கப்பல்கள் கொண்ட கோதுமை அமெரிக்காவிலிருந்து பிரான்ஸுக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால் ஜெர்மனி இனமாகக் கோதுமையைக் கொடுக்கவில்லையென்றும், ஏற்கனவே கொள்ளையடித்ததில் ஒரு பாகத்தைப் பண்டமாற்றுதல் செய்திருப்பதாயும் வெளிவந்து விட்டது.

மேலும், மற்றொரு விஷயத்திலும் பித்தலாட்டமிருக்கிறது. தண்ணீரில் மிதக்க இடுப்பில் கட்டிக் கொள்ளும் கச்சைகளும், தொப்பக் கட்டைகளும், ரயில் வண்டிகளும் பிரான்ஸ் செய்து கொடுக்கிறது. கேட்டால், உயிர் வாழ ஏதாவது தொழில் செய்ய வேண்டாமா வென்றும், பிரான்ஸில் நடந்த யுத்தத்தில் சேதமான ரயில் வண்டிகளுக்குப் பதிலாக புது வண்டிகள் கட்டிக்கொண்டு இருப்பதாயும் சொல்லுகிறார்கள்.

தான் நடுநிலைமை நாடென்றும் சொல்லிக்கொள்ளுகிறது. ஆனால் அதற்கு சுய அதிகாரம் கிடையாது. எடுத்ததற்கெல்லாம் ஜெர்மனியைக் கேட்டாக வேண்டும். ஜெர்மனி சொன்னதெல்லாம் செய்யவேண்டும். ஆகவே திருட்டுச் சாமான்களையேற்றிவந்தால் பிரெஞ்சுக் கப்பல்களை, மற்ற நடுநிலைமை வகிக்கும் நாடுகளின் கப்பல்களைப் போலவே சோதனை போட்டுத்தானாகவேண்டும்.

சென்ற அக்டோபரிலிருந்து, அட்லாண்டிக், இந்திய சமுத்திரங்களில் 1,00,000 டன் கொண்ட பிரெஞ்சு சாமான்கள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன.

லயான்ஸில், ஏப்ரல் 7-ம் தேதி, மார்ஷல் பிடேன் செய்திருக்கும் ஒலி பரப்பும் சந்தேகத்துக்கிடம் கொடுக்கிறது. 'தனக்கு நண்பராயிருந்த பிரிடிஷ்காரர்களுக்கு துரோகம் செய்யக்கூடாது' என்று சொல்லுவதெல்லாம் சரி. ஆனால், டார்லானிடத்தில் பூர்ண நம்பிக்கையென்று சொல்லுவதுதான் பித்தலாட்டமாயிருக்கிறது. இப்பொழுது நடக்கும் சூழ்ச்சிக் கெல்லாம் டார்லான் தான் காரணம்.

**அமெரிக்கா.**—(1) அமெரிக்கத் துறைமுகங்களில் நிற்கும் அச்சு நாட்டுக் கப்பல்களை அமெரிக்கா பிடித்துக்கொண்டதற்கு அச்சு நாடுகள் செய்த ஆக்ஷேபனையை அமெரிக்கா அடியோடு நிராகரித்து விட்டது. இடம் கொடுத்த துறைமுகங்களையே நாசம் பண்ண நினைத்துச் செய்யும் மோச காரியங்களுக்கு ஒரு சட்டமும் இடங்கொடாதென்று சொல்லிவிட்டது.

(2) அமெரிக்கத் துறைமுகங்களில் நின்ற இதாலியக் கப்பல்களை உடைத்துக் கவிழ்த்துவிட புரட்சி செய்ததின் நிமித்தம் யுனைடட் ஸ்டேட்ஸிலிருக்கும் இதாலிய கப்பற்படை இலாகா காரியஸ்தரை இதாலிக்குத் திரும்பிவிட வேண்டுமென்று அமெரிக்கா சொல்லி விட்டது. இதேமாதிரியான நடவடிக்கை ஜெர்மன் காரியஸ்தர்மேலும் எடுத்துக்கொள்ளுவதாகவிருக்கிறது.

(3) பிரிடிஷ் வியாபாரக் கப்பல்கள் மந்திரிக்குக் காரியதரிசியான ஸர் ஆர்தர் ஸ்லேடர், யுனைடட் ஸ்டேட்ஸில் கடலோரங்களில் கப்பலுக்குப் பதிலாக ரயில் பாதையை உபயோகித்துக்கொண்டு, கரையோரங்களில் ஓடும் கப்பல்களை பிரிடனுக்கு சாமான்களை எடுத்துச் செல்ல அனுப்பலாமென்று யோசனை சொல்லியிருக்கிறார்.

(4) பிரிடனுக்கு வேண்டிய சாமான்களை அமெரிக்கக் கப்பற்படை உதவியைக்கொண்டு அனுப்ப ஏற்பாடுகளாய்க் கொண்டிருக்கின்றன.

**பிரிடனுடைய வரவு-செலவு திட்டம்.**—இந்த மாதம் 27-ம் தேதியன்று கஜானா மந்திரி ஸர் கிங்ஸ்லிவுட் வரவு-செலவு திட்டத்தை காமன்ஸ் ஸபையில் சமர்பித்தார். அபாரமானதொகைகள் கண்டிருக்கின்றன. 1941-42-ல் செலவு திட்டம் 42,070 லக்ஷம் பவுன். இதில் ஒரு பாகத்தை சரிக்கட்ட, வரும்படி வரியானது 10 ஷில்லிங்காக உயர்த்தப்பட்டு, வருஷ வரும்படியும் 120 பவுனிலிருந்து 110 பவுனுக்கிறக்கப்பட்டிருக்கிறது. இதனால் 20 லக்ஷம் பேர்கள் புதிதாக வரி போடப்படுவார்கள். சொந்தச் செலவைக் குறைத்துக்கொண்டு, முடிந்த வரையில் ஸர்க்காருக்குக் கடன் கொடுக்கவேண்டுமென்பதே இந்த திட்டத்தின் நோக்கம். வேடிக்கை விநோதங்களுக்குப் பணம் மிஞ்சாது. 'என்னவானாலும் வெற்றிக்காக வேண்டியதைச் செய்ய இந்தத் திட்டம் போடப்பட்டிருக்கிறது' என்று மந்திரி சபையில் சொல்லும்போது சபை கரகோஷம் செய்தது.

**விமான எதிர்ப்பு.**—இந்த வாரத்தில், ஜெர்மனியில் ப்ரெமன், எம்டன், பிரெஸ்ட். கீல் முதலானவிடங்கள் எதிர்க்கப்பட்டன.

17 இரவுகளாக லண்டன் மேல் படையெடுப்பு கிடையாது. ஏப்ரல் 8-ல் லண்டனிலிருந்து ஸ்காட்லண்ட் வரையிலும், வட அயர்லாந்திலும் பலவிடங்களை ஜெர்மன் விமானங்கள் படை யெடுத்தன.

**ஸிரியா.**—ஸிரியாமுழுவதிலும் அமைதியில்லை. இதற்கு ராஜீய காரணங்களும், பொருளாதாரக் காரணங்களுமுண்டு. அங்கே பஞ்சம் வந்து விட்டது. 1936-ல் பிரெஞ்சுக்காரர்கள் ஸிரியாவுக்கு ஸ்வதந்திரம் கொடுப்பதாய் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். இப்பொழுது ஸ்வதந்திரக்கொள்கையை ஒப்புக்கொள்ளுவதாகச் சொல்லுவதெல்லாம் கண்ணைத்துடைக்கத்தான்.

**இராக்.**—இங்கேயிருந்த ரீஜண்டைத் தள்ளிவிட்டு, ஸய்யித் ரஷீத் அலி ராணுவ-மந்திரி சபை ஒன்றை அமைத்துக்கொண்டிருக்கிறார். இவர் அச்சுநாட்டு சிநேகம் கொண்டிருப்பதால், பிரிடனுக்கு, உடன்படிக்கைப்படி, உண்மையாயிருப்பதாகச் சொன்னாலும் இவரை நம்புவதற்கில்லை. ஆகையால் இந்தப் புது அரசாங்கத்தை அங்கீகரிக்க பிரிடன் மறுத்துவிட்டது.

**மத்ஸுவோகாவின்.** சுற்றுப் பிரயாணங்கள் இன்னும் முடிந்தபாடில்லை. ரோமிலிருந்து பெர்லினுக்குத் திரும்பி வந்து, இப்பொழுது மாஸ்கோவுக்கும் ஒரு



முறை போய் ஸ்டாலினோடும், மாலடோவோடும் சம்பாஷித்துக்கொண்டிருக்கிறார். 'மூவரசு ஒப்பந்தம்,' உலகப் புது-அமைப்பு முதலிய 'ஸர்வலோக ஒற்றுமை' களைப்பற்றி விவரிப்பார் போலும்.

**இந்தியா.**—இந்திய ராஜதானிகளுக்குள் முதன் முதலாக ஒரு கோடி ரூபாய் யுத்த நிதிக்குக் கொடுத்த பெருமை சென்னை ராஜதானிக்கு வந்துவிட்டது. கோடி தினக்கொண்டாட்டமானது 6-ம் தேதி கொண்டாடப்பட்டது. அப்பொழுது மேன்மைதங்கிய சென்னை கவர்னர் சொன்னதாவது :—

'நாம் இதில் பெருமை பாராட்டுவது நியாயமே. ஒன்பது மாதங்களுக்குள்ளாக ஒரு கோடி சேர்த்துவிட்டோம். இதர மாகாணங்களுக்கு முன் சென்று விட்டோம். இந்தப் பணம் எல்லாம், ஆண் பெண், பல ஜாதிகளும், மதஸ்தர்களும், ஏழை, பணக்காரர்களும் அவர்களாகவே கொடுத்திருக்கிறார்கள். இனி எதிர்காலத்திலும் உங்கள் ஊக்கம் அதிகமாக வேண்டும். சென்னை ராஜதானி எப்பொழுதும் முதலாவதாயிருக்கவேண்டும். இன்னும் அதிக விமானங்களை அனுப்பி, பிரிடனுடைய விமான-பலத்தை பூர்த்திசெய்யுங்கள். மேலும், மனதாலும், காரியத்தாலும், பிரார்த்தனையாலும், ஸ்வதந்திரத்துக்கும் நியாயத்துக்கும் வெற்றிவர முயற்சி செய்யுங்கள்.

---

| தேதி. | பிரிடிஷ் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ் விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **31—3—41.** (திங்கட்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | பகல்.—மின்னல்போல் படையெடுப்பு, இங்கிலீஷ் கால்வாய் (English Channel), ஜெர்மனி (Germany) ஆக்கிரமித்திருக்கும் பிரெஞ்சுத் (French) துறைமுகங்கள். | நஷ்டமில்லை. | பலத்த சேதம். |
| | ஒரு ஜெர்மன் (German) நாசகாரி.—ப்ரிஸியன் (Frisian) தீவுகளுக்கு அப்பால். | ... | குண்டுநேரே வீழ்ந்தது. |
| | பீரங்கி வைத்திருக்கும் இடங்கள், உல்லாச நடைபோடும் ஜெர்மன் சைனியங்கள்.—ஆம்லாண்டு (Ameland), டெர்செல்லிங் தீவுகள். | ... | பலருக்குக் காயம். உல்லாச நடை கலைந்தது. |
| | விரோதி சாமான் ஏற்றிச் செல்லும் கப்பல்.—வடகடல் (North Sea). | 2 விமானங்கள். | கப்பல் மேல் குண்டு வீழ்ந்தது. |

| தேதி. | பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ் விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**31—3—41.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி.

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| இரவில்.—கப்பல் கட்டும் துறைகள்.—ப்ரமன் (Bremen). | ... | ...... |
| தொழிற்சாலைகள் இருக்குமிடம்.—எம்டன் (Emden). | ... | தீப்பிடித்தன. |
| பெட்ரோல் தொட்டிகள், இரண்டு விமான நிலயங்கள்.-ராட்டர்டாம்(Rotterdam), ஒல்டன்பர்க் (Oldenburg). | 1 விமானம். | ... .. |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| விரோதிக் கப்பல்கள், கப்பல் துறைகள்.-ட்ரிபோலி (Tripoli). | ... | ...... |
| விரோதி விமான நிலயங்கள், மோட்டார் வண்டிகள்.—ட்ரிபோலிடானியா (Tripolitania). | ... | தரையிலிருக்கும் விமானங்கள், மோட்டார் வண்டிகள் சேதமாயின. |
| விரோதி சைனியங்கள்.—டெக்ளிஸான் (Teclesan). | ... | ...... |
| ரயில்வேஸ்டேஷன்.-அஸ்மாரா(Asmara) | நஷ்டமில்லை. | பலவிடங்களில் தீப்பிடித்தது. |
| மோட்டார் வண்டிகள்.-டெஸ்ஸி (Dessie)க்கும் அஸ்ஸாபு (Assab) க்கும் மத்தியில். | | |
| சாமான் டிப்போ —டாண்டிஹோ (Tandeho). | | |
| பெட்ரோல் தொட்டி.—டெஸ்ஸி (Dessie)க்கு வடகிழக்கே. | | தீப்பிடித்தது. |
| சைனியங்கள் வசிக்குமிடங்கள், ராணுவ, கட்டடங்கள்.—தெற்கு அபிஸீனியா (Abyssinia)வில் சில கிராமங்கள். | 1 விமானம். | கட்டடங்கள் தீக்கிரையாயின. |

**1—4—41.** (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—விரோதிக் கப்பல்—டச்சு (Dutch)க் கடற்கரை. | | மூழ்கடிக்கப்பட்டது. |
| சிறிய யுத்தக் கப்பல்கள், பீரங்கிகள் பொருத்திவைக்கப்பட்டிருக்கும் இடங்கள்.—பிரஞ்சு (French), ஹாலந்து (Holland), பெல்ஜிய (Belgian) கடற்கரைகள். | நஷ்டமில்லை. | சுடப்பட்டன. |



| தேதி. | பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ் விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**1—4—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| விரோதி விமான நிலயங்கள்.—ட்ரிபோலிடானியா (Tripolitania) ... | | சேதமாயின. |
| ஒத்தாசை.—எரிட்ரியா (Eritrea)விலிருக்கும் பிரிடிஷ் காலாட்படைகள். | | |
| விமான யுத்தம்.—அஸ்மாரா (Asmara). | | 2 விமானங்கள். |
| விரோதிகளின் போக்குவரத்து சாதனங்கள், தற்காப்பு சாதனங்கள், பலவித மான வண்டிகள் —அவாஷ் (Awash)க்கும் அடாமா (Adama)வுக்கும் மத்தியிலும், இன்னும் மற்ற இதர இடங்களிலும். ... | 1 விமானம். | பலத்த சேதம். |

**2—4—41.** (புதன்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—விரோதி விமான நிலயங்கள்.—மாபர்டேயிஸ் (Mapertuis), கேயன் (Caen), ஹாம்ஸ்டெட் (Hamstead). | | சேதமாயின. |
| ஆயுதந்தாங்கிய விரோதி வியாபாரக் கப்பல்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரை. | | ஒரு கப்பல் மூழ்கடிக்கப்பட்டது, மற்றொன்றின் மேல் குண்டு வீழ்ந்தது. |
| கம்பியில்லாத் தந்தி ஆபீஸ்.—ஆக்ரமிக்கப்பட்டிருக்கும் பிரான்ஸ் (France). | 2 விமானங்கள். | கட்டடங்கள் இடிந்தன. |

இதாலிய அல்பேனியா (Albania).

| | | |
|---|---|---|
| சைனியங்கள் வசிக்குமிடம், கட்டடங்கள், சாமான்கள் சேகரித்து வைத்திருக்கும் இடங்கள்.—டெபெலேனி (Tepeleni). | நஷ்டமில்லை. | எங்கு பார்த்தாலும் தீபரவிற்று. |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| விரோதி மோட்டார் வண்டிகள்.-அஸ்மாரா (Asmara) விலிருந்து பின்னடைந்து கொண்டிருப்பவைகள். | | பலத்த நஷ்டம். |
| விரோதி சைனியங்கள் தங்கி இருக்குமிடங்கள்.—அடோவா (Adowa) ரஸ்தா. | | |
| மோட்டார் வண்டிகள்.—டெஸ்ஸி(Dessie) அஸாப் (Assab) ரஸ்தா. | | சுடப்பட்டன. |
| துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli). | | |
| விரோதி மோட்டார் வண்டிகள்.—ராஸ் லானுப் (Raslanuf). | நஷ்டமில்லை. | மோட்டார் வண்டிகள் நாசமாயின. |

| தேதி. | பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ் விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**3—4—41.** (வியாழக்கிழமை).

ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| இரவில்.—விமானம் இறங்குமிடத்தில் இருக்கும் விளக்குகள், விமானங்கள்.—பிரான்ஸி (France)யிலிருக்கும் விரோதி விமான நிலயம். | | 1 விமானம். |
| கடற்படை நிலயம், ஜலமில்லாத கப்பல் துறைகள், விரோதி யுத்தக் கப்பல்கள்.—ப்ரெஸ்ட் (Brest). | | தீயும், வெடிச் சத்தமும் கிளம்பின. |
| எண்ணெய்த் தொட்டிகள்.—ராட்டர்டாம் (Rotterdam). | | தீப்பிடித்தன. |
| கப்பல் துறைகள்.—ஆஸ்டெண்ட்(Ostend). | 4 விமானங்கள். | ...... |

இதாலிய அல்பேனியா (Albania).

| | | |
|---|---|---|
| ராணுவக் கட்டடங்கள்—பேராட் (Berat), அதைச் சுற்றியுள்ள இடங்களும். | ...... | ...... |

இதாலிய ஆபிரிக்கா (Africa)

| | | |
|---|---|---|
| விரோதி மோட்டார் வண்டிகள்—மெர்ஸா (Mersa) ப்ரகா (Brega) பிரதேசம் (லிபியாவில்), | ...... | பல வண்டிகள் சேதமாயின. |
| துறைமுகம், விரோதிக் கப்பல்கள்—ட்ரிபோலி (Tripoli). | ...... | ...... |
| பின்னடையும் இதாலியர்கள்.—அடிஸ் அபாபா (Addis Ababa)—டெஸ்ஸி (Dessie) ரஸ்தா. | ...... | பலருக்குக் காயம். |
| மோட்டார் வண்டிகள்—டிரிடாவா (Dire-dawa)—அடிஸ் அபாபா (Addis Ababa) ரஸ்தா. | ...... | சுடப்பட்டன. |

**4—4—41.** (வெள்ளிக்கிழமை).

ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—இறங்குமிடங்கள், விமானக் கட்டடங்கள், தரையிலிருக்கும் விமானங்கள்—வட பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium). | ...... 1 விமானம். | தீயும், வெடிச்சத்தமும் கிளம்பின. பலத்த சேதம். |
| இரண்டு சிறிய யுத்தக் கப்பல்கள், கடற்கண்ணிகள் அகற்றும் கப்பல்கள்—பிரான்ஸி (France)ன் மேற்குக் கடற்கரை. | ...... 1 விமானம். | 1 சிறிய யுத்தக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. |



| தேதி. | பிரிடிஷ் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ் விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**4—4—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.

ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| இரவில்.—கடற்படை நிலயம், இரண்டு ஜேர்மன் யுத்தக் கப்பல்கள், எண்ணெய் தொட்டிகள், சாமான் கிட்டங்கிகள்—ப்ரெஸ்ட் (Brest). | ...... | ஒரே குண்டு மயம். எங்கு பார்த்தாலும் ஒரே தீ |
| எண்ணெய்த் தொட்டிகள்.—ராட்டர்டாம் (Rotterdam). | | தீப்பிடித்தன. |
| தொழிற்சாலைகள்—ரூர் (Ruhr). | 1 விமானம். | ...... |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| விரோதி சைனியங்கள், மோட்டார் வண்டிகள்—மேற்கு ஸிரினெய்கா (Cyre-naica) வில் மூஸ் (Msus), அகெடாபியா (Agedabia) பிரதேசங்கள். | ...... | 6 விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன பல விமானங்கள் நாசமாயின; |
| ராஸ் லானுப் (Raslanuf)புக்குப் போகும் ரஸ்தா. | | நஷ்டமில்லை. |
| ட்ரிபோலி (Tripoli). | | பல இடங்களில் தீப்பிடித்தது. |
| ஒத்தாசை.—இதாலிய கிழக்கு ஆபிரிக்கா (Africa)விலுள்ள பிரிடிஷ் சைனியங்கள். | ...... | ...... |
| மெடஹாரா (Metahara) ஸ்டேஷன்.—அடிஸ் அபாபா (Addis Ababa)விற்குத் தெற்கே. | ...... | ...... |
| மோட்டார் வண்டிகள்.—அவாஷ் (Awash) நதிக்கருகில். | ...... | ...... |
| இதாலிய கப்பற்படை.—எரிட்ரியா (Erit-rea)விலிருக்கும் மஸாவா (Massawa) துறைமுகம். | ...... | 5 நாசகாரிகள் மூழ்கடிக்கப்பட்டன. |

**5—4—41.** (சனிக்கிழமை).

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| விமான நிலயம், தரையிலிருக்கும் விமானங்கள்.—அடிஸ் அபாபா(Addis Aba-ba). | ...... | 4 விமானங்கள் சுடப்பட்டன. பல விமானங்கள் சேதமாயின. |
| மோட்டார் வண்டிகள்.—அடாமா(Adama) விற்கு மேற்கே; அடிஸ் அபாபா(Ad-dis Ababa)விற்கு தென் கிழக்கே. | ...... | பெட்ரோல் லாரிகள் நாசமாயின. |
| துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli). | ...... | வெடிச் சத்தங்கள் கேட்டன. |

| தேதி. பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ் விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **6—4—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| பகலில்.—இரண்டு ஜெர்மன் நாசகாரிகள்.—பிரான்ஸி (France)ன் வடமேற்குக் கடற்கரை. | ...... | 1 நாசகாரி மூழ்கடிக்கப்பட்டது, மற்றொன்று சேதமாயிற்று. |
| உலைகள்.—ஹாலந்தி (Holland)லிருக்கும் எமுய்டன் (Ymuiden). | ...... | ...... |
| ஜெர்மன் சைனியங்கள், விமான நிலயங்கள், மோட்டார் வண்டிகள், பீரங்கிகள் பொருத்திவைக்கப்பட்டிருக்கும் இடங்கள்.—ஆக்ரமிக்கப்பட்டிருக்கும் பிரான்ஸ் (France). | 3 விமானங்கள். | 1 விமானம். வெகு பலத்த சேதம். |
| இரவில்:—கடற்படை நிலயம்.—ப்ரஸ்ட் (Brest). | 1 விமானம். | கடுமையான சேதம். |
| **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| இதாலிய, ஜெர்மன் மோட்டார் வண்டிகள்.—ஸிரினெய்கா (Cyrenaica) விலிருந்து எல் அகிலா (El Ageila)பிரதேசம். | ...... | பலத்த சேதம். |
| தரையிலிருந்தும் விமானங்கள்.—கொம்பொல்ச்சா (Kombolcha). | ...... | 8 விமானங்கள். பல இதர விமானங்கள் சேதமாயின. |
| ஒத்தாசை.—எரிட்ரியா (Eritrea)வில் முன்னேறும் ஸைனியங்கள். | ...... | ...... |
| **இதாலிய அல்பேனியா (Albania).** | | |
| ராணுவ முக்கியமான இடங்கள்.—பேராட் (Berat). | நஷ்டமில்லை. | ...... |
| **பல்கேரியா (Bulgaria).** | | |
| பிரதான ரயில்வே ஸ்டேஷன், ராணுவங்கள் சாதனம் செய்யுமிடங்கள், ரஸ்தா சந்திப்புகள், மோட்டார் வண்டிகள், கடைகள், ஆலைகள்.—பல்கேரியா (Bulgaria)வின் தலைநகரமான ஸோபியா (Sofia). | ...... | தகர்க்கப்பட்டன. பலத்த சேதம். பெருந் தீக்கள் கிளம்பின. |
| **ருமேனியா (Rumania).** | | |
| டார்ஸோவா (Dorsova) ... | ...... | ...... |
| ஆராட் (Arad) ... | ...... | ...... |
| டிமிஸோரா (Timisora) ... | ...... | ...... |



| தேதி. விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **1—4—41.** (செவ்வாய்க்கிழமை). | | |
| **பிரிடன் (Britain).** | | |
| பகலில்.—இங்கிலாந்தி (England)ன் தெற்கு, கிழக்குக் கடற்கரைகளில் சில இடங்கள். | 2 விமானங்கள். | சொற்பச் சேதம். சிலருக்குக் காயம். |
| இரவில்.—தென்மேற்கு இங்கிலாந்தி (England)ல் ஒரு இடம். | ..... | சேதமேயில்லை. |
| **2—4—41.** (புதன்கிழமை). | | |
| **பிரிடன் (Britain).** | | |
| பகலில்.—சில இடங்களில் சொற்ப விமான நடமாட்டம் இருந்தது. | 1 விமானம். | ...... |
| இரவில்.—இங்கிலாந்தி (England)ன் கிழக்குக் கடற்கரை, ஸ்காத்லாந்து (Scotland), கிழக்கு ஆங்கிலியா (Anglia). | ...... | சொற்பச் சேதம். சிலருக்குக் காயம். |
| **கிரீஸ் (Greece).** | | |
| வோலோ (Volo). | 3 விமானங்கள். | சேதமேயில்லை. |
| **3—4—41.** (வியாழக்கிழமை). | | |
| **பிரிடன் (Britain).** | | |
| பகலில்.—ஒரு பட்டணம்-தென் கிழக்குக் கடற்கரை. | 3 விமானங்கள். | 1 விமானம். |
| கப்பல்கள்.—தென் மேற்குக் கடற்கரை. | | ...... |
| இரவில்.—மேற்கு இங்கிலாந்தி (England) ல் ஒரு பட்டணம்; தென் வேல்ஸி (Wales) ல் ஒரு பட்டணம்; மேற்குக் கடற்கரைப் பிரதேசங்கள்; மிட்லண்ட்ஸ் (Midlands). | ...... 1 விமானம். | சொற்பச் சேதம். சிலருக்குத்தான் காயம். |
| **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| ஒரு விமான இலாகாவின் மோட்டார் படகு.—மால்டா (Malta)த் தீவுக்கப்பால். | ...... | ...... |
| **கிரீஸ் (Greece).** | | |
| விமானச் சண்டை.—ப்ளாரினு (Florina). | 2 விமானங்கள். | நஷ்டமில்லை |
| **4—4—41.** (வெள்ளிக்கிழமை). | | |
| **பிரிடன் (Britain).** | | |
| பகலில்.—கடற்கரை பிரதேசங்களில் மட்டும் சற்று விமான நடமாட்டம் இருந்தது. | ...... | ...... |
| இரவில்.—மேற்கு, தென்மேற்கு இங்கிலாந்து (England) ; தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம்; கிழக்கு ஆங்கிலியா (Anglia). | 3 விமானங்கள். | சேதம் அதிகமில்லை. காயம்பட்டவர்களும் சொற்பந்தான். |

| தேதி. | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும், படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **5—4—41.** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—இங்கிலாந்தி (England)ல் இரண்டு பிரதேசங்கள்; வடகிழக்கு ஸ்காத்லாந்து (Scotland). | ...... | ...... |
| | இரவில்.—தெற்கு, மேற்கு இங்கிலாந்து (England). தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம், கிழக்கு ஆங்கிலியா (Anglia). | 1 விமானம். | சொற்பச் சேதம். சிலருக்குக் காயம். சேதம் சொற்பந் தான். |
| **6—4—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—அங்குமிங்கும் சற்று விமான நடவடிக்கை இருந்தது. | ...... | ...... |
| | இரவில்.—விமான நடமாட்டமே இல்லை. | ...... | ...... |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | பட்டணங்கள், கிராமங்கள்.—கிரீஸ்(Greece). | ...... | பல பொதுஜனங்கள் கொல்லப்பட்டோ, காயப்பட்டோ ஆனார்கள். |
| | ஸலோனிகா (Salonika). | ...... | ...... |
| | **யூகோஸ்லாவியா (Yugoslavia).** | | |
| | யூகோஸ்லாவியா (Yugoslavia) விற்கு தலைநகரான பெல்கிரேட் (Belgrade). | ...... | பலருக்குக் காயம். சேதம் அதிகம். |
| | துருப்புகள் ஏற்றிச்செல்லும் ரயில்தொடர்.—டான்யூப் (Danube) நதி பிரதேசம். | ...... | ...... |
| **7—4—41.** (திங்கட்கிழமை) | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—லண்டன் (London) பிரதேசம். ஸ்காத்லாந்தி (Scotland)ல் பல ஜில்லாக்கள், ஒரு கிழக்கு ஆங்கிலிய (Anglian)ப் பட்டணம், மேற்கு, வடமேற்கு இங்கிலாந்துகள் (England). | ...... | பலருக்குக்காயம். பலத்த சேதம். எங்கும் தீ மயம். ஆனால் சீக்கிரம் அணைக்கப்பட்டு விட்டது. |
| | வட ஐயர்லாந்தி (Ireland)லிருக்கும் அல்ஸ்டர் (Ulster)பிரதேசம். | ...... | ...... |



# யுத்தக் குறிப்புகள்.

## அப்பா குதிருக்குள் இல்லை.

நாஸிகள் கொள்கைகள் முறைகள் உண்மையில் எப்படி என்று சென்ற இரண்டு வாரங்களாக வெளிவருகின்றன.

(i) ஹங்கேரி பிரதம மந்திரி கௌண்ட் டெலெகி (Count Teleki) யோக்கியர்; நாஸி உத்தரவுகளுக்குக் கீழ்படிவது சாத்தியமாகவில்லை. அப்படிக் கீழ்படிவதினும் இறப்பது மேன்மையெனக் கருதி தன்னைத்தானே சுட்டுக் கொண்டார்.

(ii) வழக்கம்போல் உங்கள் கடமைகள் செய்ய காலையில் விழித்துக்கொண்டு, திடீரென்று உங்கள் சொத்து சுதந்தரமெல்லாவற்றையும் விட்டு அந்நியநாட்டு யுத்தக் கப்பலில் புறப்பட்டுப்போக நீங்கள் தயாராக இருப்பீர்களா? புதிய முறையைப் பற்றி அவர்கள் அபிப்பிராயம் என்னவென்று காட்ட, சுமார் 200 லயோடன் தீவு ஜனங்கள் பிரிடிஷ் கப்பற்படையொன்று மேற்படி தீவுகளைத் தாக்கியபொழுது மேலே கண்டவிதம் செய்தார்கள்.

(iii) பிரான்ஸ் பசியால் வருந்துவதாகவும் பிரிடிஷார் தடைமுறை அக்கிரமமென்றும் அட்மிரல் டார்லான் (Admiral Darlan) கதைபண்ணி வந்தார். ஆனால் சில ருஜுக்கள் வந்தன. ஜெர்மனியிலிருந்து நன்கொடையென்று பேர் வைத்து லட்சம் டன் கோதுமை ஆக்கிரமிக்கப்படாத பிரான்ஸுக்கு வந்தது; இது நன்கொடை யல்லவென்றும் பேரமென்றும், அதாவது மாதக்கணக்காக கொட்டைமுத்து, தாவரங்கள் ரகசியமாக விஷி கவர்ன்மெண்டார் ஜெர்மனிக்கு அனுப்பி அதற்குப் பிரதியாக கோதுமை வரவழைக்கப்பட்டது என்றும் பலமான ருஜு ஏற்பட்ட பிறகு டார்லான் அசட்டு விழி விழித்தார். அவர் "பிரிடிஷாரைக் காட்டிலும் ஜெர்மானியர்கள் தாராளசித்த முள்ளவர்கள்" என்று சொல்லி பிரெஞ்சுக்காரரை ஏமாற்றினார். சே! வாந்தியெடுக்க வருகிறது!

(iv) நாஸிமுறை பால்கன் நாடுகளில்தான் கையும் களவுமாக அகப்பட்டுக் கொண்டது. பால் ராஜகுமாரரும் (Prince Paul) அச்சமயம் யூகோஸ்லாவியாவில் மந்திரியாயிருந்தவர்களும் கேவலமான உடன்படிக்கை செய்துகொண்ட சமயம் பெர்லினிலிருந்து நயவஞ்சகமாக சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கிறதா? யூகோஸ்லாவியா புது முறையை அங்கீகரித்து விட்டதாகவும் பிரிடிஷாரின் கபடமெல்லாம் தெரிந்துகொண்டதால் நாட்டில் அமைதி ஏற்பட்டு விட்டதாகவும், போரில்கலந்து கஷ்டமில்லாமலும் ஜெர்மானியர் உண்மை சிநேகிதர்களென்று நம்பலாமென்றும் சொன்னார்கள் அல்லவா?

ஒரு நாள் கழிந்தபின்! பீடர் மன்னன் (King Peter) சிம்மாஸனம் ஏறினார்—உடன்படிக்கையை நாடுமுழுதும் புறக்கணித்தது—ஒரு சமயம்

நிஷ்டூரங்கள்கொண்டு அடங்காதிருந்த க்ரோட் (Croat) ஜனங்கள் உள்பட எல்லோரும் அப்படி புறக்கணித்தார்கள்; இப்படி ராஜதந்திரத்தில் ஹிட்லர் முகம் உடைபட்டது. ஆயினும், ஒரு தேசத்தின் சுதந்திரத்தை சில துஷ்டர்களும் அயோக்கியர்களும் பயங்காளிகளுமாகச் சேர்ந்து இழக்கும் விதமாக உடன்படிக்கைகளில் இந்நாளில் கையெழுத்துப்போட, தயாராகவிருப்பதை நினைத்தால் மனது திடுக்கிடுகிறது!

## நிசி பயங்கரம்.

இரவில் குண்டுபோடுவது ராக்ஷஸ வேலை; ஆயினும் இதை எதிர்க்க நாம் செய்யும் வேலை பயனுள்ளதென்று ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது. எதிரி விமானங்களிருப்பிடத்தை அறிந்து எதிர்ப்பது வெகு கடினமாகவிருந்தபோதிலும் ஜெர்மன் விமானங்களுக்கு பிரிடிஷார் ஜாஸ்தி சேதம் விளைவிக்கிறார்கள். மார்ச்சு 12-ல், புதிய பிரிஸ்டல் போ (Bristol Beaus)க்களைக்கொண்டும், போல்டன்பால் டிபையண்ட் (Boulton Paul)களைக்கொண்டும் பிரிடிஷ் விமானிகள் 9 ஜெர்மன் குண்டுபோடும் விமானங்களை வீழ்த்தினார்கள்; இது அகஸ்மாத்தல்ல, மறுநாள் இரவு 13 விமானங்களை வீழ்த்தினார்கள். முன்னே ஒன்று, இரண்டு விமானங்களை வீழ்த்தினோம்; அதை பார்க்க இப்போது விசேஷம். நமது விமானிகளும் வெகு தூரம் சென்று ஜெர்மனியில் தாக்கி ஜெர்மானியரே ஒத்துக் கொள்ளுகிறபடி "கட்டடங்களுக்கு ஏராளச்சேதம்" விளைவிக்கிறார்கள். நமது கன குண்டுகள் ஜெர்மானியருக்கு பிடித்தமாயில்லை; நமது விமானிகள் அடுத்தடுத்து போய் தாக்குவதும், இவர்கள் தாக்குமிடங்களின் முக்கியதையும், இவர்கள் தப்பாமல் குறிவைத்தடிப்பதையும் கண்டு ஜெர்மானியர்கள் கலங்குகிறார்கள்.

## சிறு பிள்ளையும் அரக்கனும்.

சென்ற பெரிய வெள்ளிக்கிழமை (Good Friday) யன்று (அலங்காரமாக சொல்லுவதானால்) 80 லக்ஷம் கிரேக்கர்கள் 4½-கோடி இதாலியருடன் போர் புரிய கிளம்பினார்கள். இப்போது 8½-கோடி ஜெர்மானியரால் எதிர்க்கப்படுகிறார்கள். தைரியமும், தயாரிப்பும், புராதன பெருமையும் படைத்த ஜனங்கள் கேவலம் ஆள் கூட்டத்தைக்கண்டு மயங்கமாட்டார்களென்பதற்கு அத்தாட்சியாக "ஜோகிமெரினி" என்ற கிரேக்கப் பத்திரிகையின் ஆசிரியர் ஒருவர் ஹிட்லருக்கு விடுத்த மார்ச்சு 9௳யுள்ள பகிரங்கக் கடிதத்தை படித்துப் பாருங்கள். (இக்கடிதத்தை இந்தப் பதிப்பில் மற்றொரு இடத்தில் பிரசுரித்திருக்கிறோம்) தைரியம் கொண்ட பொது மக்களை இக்கடிதம் உற்சாகப்படுத்தியது; "டைம்ஸ்" நிருபர் சொன்னபடி அரசியல்சவுக்கு என்ற இடத்தில் நாள் முழுதும் ஜனங்கள் திரள் திரளாக திரண்டு வந்தார்கள். புத்துயிர் கிளம்பியிருக்கும் கிரீஸ் தேசத்திற்கே மார்ச்சு 9௳ ஒரு முக்கிய தினமென்பது அக்ராபொலீஸ் குன்றின் அடி வாரத்தில் வசிக்கும் ஜனங்கள் எப்படி ஒன்றுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் என்ற மர்மம் அறிந்தவர்களுக்குத்தான் தெரியும்.



## சட்டி உடைந்த சரித்திரம்.

இதாலி கிரீஸின்பேரில் படையெடுத்தபோது, அது அக்கிரமமென்றும் கபடமற்ற ஜெர்மானியர் அதை நினைத்து வருந்துவதாகவும் ஆதென்ஸிலுள்ள ஜெர்மன் ஸ்தானிகத்தார்கள் பலவிதமாக ஜாடை காட்டினார்கள். இதாலியரை செம்மையாக தகர்த்து அல்பேனியா பக்கம் துறத்தவும், ரிப்பன்டிராப் ராஜி பண்ணுவதாகச் சொல்லி முன் வந்தார். கண்யமான சமாதானம் செய்து வைப்பதாகவும், கிரேக்கர் எல்லைப்புறத்தைக் காபந்தாக வைப்பதாகவும் (என்ன வார்த்தை!) சொன்னார்—ஆனால் கிரீஸிலிருந்து பிரிடிஷாரை அப்புறப்படுத்த வேணுமென்றார்.

இதாலியர் நிலை கெடுதலாகஆக கிரேக்கர் நிலைக்கும் அபாயம் உண்டாகிறது; ஸலோனிகாவிலிருந்து 60 மைல் தூரத்தில் ஒரு வலுத்த ஜெர்மன் படை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது!

கிரேக்கர் என்ன செய்கிறார்கள்? Mr. ஈடனையும் (Mr. Eden) ஸர் ஜான் டில் (Sir John Dill)லையும் ஆதன்ஸுக்கு அழைக்கிறார்கள்; ஒரு பத்திரிகை நிருபரின் கடிதத்தையே தங்கள் தேசிய கொள்கையாகக் கொண்டு போர் புரிகிறார்கள்! இதனால் நமக்கு ஏற்படும் சந்தோஷத்தை ஹிந்துஸ்தான் பாஷையில்தான் சரிவர வெளியிடலாம். சபாஷ்!

## மறுபடியும் ஐந்தாம் படை.

பிரெஞ்சு இந்தியாவிலும் போர்ச்சுகீஸ் இந்தியாவிலும் அக்கிரம நாஸி பிரசாரம் நடப்பதைப்பற்றி பெரிய அச்சில் போடப்பட்ட ஒரு லண்டன் ஆங்கில பத்திரிகை வந்திருக்கிறது. சிம்லாவிலுள்ள அதிகாரிகளுக்கு இது பழங்கதை; ஆயினும் இந்த இரண்டு மாகாணங்களும் நமக்கு சமீபமானவை. ஆகையால், கொஞ்சம் கவனத்துடனிருங்கள்! யுத்த சமாசார நிலயத்தார் நீங்கள் எதை கவனிக்கவேணுமென்றும் ஏதேனும் நேர்ந்தால் என்ன செய்யவேணுமென்றும் உங்களுக்கு சொல்லியிருக்கிறார்கள். வான் பேபன் (Von Papen) மாதிரி ஒரு பேர்வழியை புதுக்கோட்டை ஆள் யாரேனும் ஒருவர் பிடிக்கும்படி நேரிடலாம்!

இதே மாதிரி, இந்தியா சம்பந்தமாக ஜப்பான் ரேடியோ மூலம் வேலை செய்கிறது! உதாரணமாக, ஆங்கில—சீன சம்பந்தமாக டோகியோவிலிருந்து வந்த சில செய்திகள் குறிப்பிடுகிறோம். சிலவைகளில் அணு முந்திரி நிஜமிருக்கலாம். அப்படி சேர்ப்பது தான் அவர்கள் தந்திரம். இந்தியாவில் ஜப்பானியருக்கு அக்கரை திடீரென்று ஏற்பட்டிருக்கிறது என்பதும், அவர்கள் முறை ஜெர்மன் முறையை ஒத்திருக்கிறதென்றும், அதிலும் இந்தச் செய்திகள் கடலுக்கு அப்பாலுள்ள நாடுகளுக்கு பரப்பப்படும் செய்திகளில் வழக்கமாக சேர்க்கப்படுகிறது என்பதும் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய விஷயங்கள்.

(1) மலாய் நாட்டிலுள்ள இந்தியத் துருப்புகள் ஒழுங்காயில்லை யென்றும், அவர்களுக்கும் மலாய் துருப்புகளுக்கும் சச்சரவுகள் ஏற்பட்டன வென்றும், ஆஸ்திரேலியத் துருப்புகள் நடவடிக்கை சரியில்லை யென்றும் செய்தி. (மார்ச்சு 4, 6, 11-ல்).

(2) சிங்கப்பூரில் கலவரை யென்றும், மலாய் நாட்டில் இந்தியத் துருப்புகள் சிலர் பட்டாளத்தை விட்டு ஓடிவிட்டார்கள் என்றும் செய்தி. (பிப்ரவரி 25, 28, மார்ச்சு 4).

(3) ஆங்கில—சீன "உடன்படிக்கை" பற்றியும், பர்மாவில் சீன துருப்புகளைப் பற்றியும், ஷான் நாடுகளைப்பற்றியும் சிங்கப்பூரைப் பற்றியும் தகவல்கள் (பிப்ரவரி 28, மார்ச்சு 1, 2, 4).

(4) பிரிடிஷ் கப்பல்கள் பெரும்பாலும் தூரக் கீழ் நாடுகளுக்குப் போவதாக செய்தி (மார்ச்சு 4).

(5) நவம்பர் முதல் பிப்ரவரி வரை 4 மாதங்களில் 26,37,000 டன் வரை பிரிடிஷ் கப்பல் சேதமென்று, ஜெர்மன் செய்தியிலிருந்து எடுத்துரைக்கப்பட்ட தகவல் (மார்ச்சு 4).

மேலேகண்டவைகளில் எது ரொம்ப விசித்திரமானதென்று நீங்களே பொருக்கிப் பாருங்கள்.

மஹாராஜா அவர்கள் காலேஜில் பதியும்படி பேசவேணுமானால் யுத்த நிலய பேச்சுக்காரர்கள் தங்கள் பேச்சு வன்மையை ஜாஸ்திப் படுத்திக்கொள்ள வேணும். டவுன் ஹாலிலும், இச்சமஸ்தான பெரிய கிராமங்களிலும் அவர்கள் நன்றாய்த்தான் பேசுகிறார்கள்; ஆனால் 36 பிரசங்கம் செய்தும் காலேஜிலுள்ள படித்தவர்கள் மனதில் பதியும்படி இவர்கள் பேசவில்லையென்று நினைக்கவேண்டியிருக்கிறது; ஏனென்றால், காலேஜ் பத்திரிகையில் காலேஜ் சம்பந்தமான வேலைகளைப்பற்றியும் காலேஜுக்கு வெளியே நடந்த வேலைகளைப்பற்றியும் படிப்பு முறைகளைப் பற்றியும் ஏராளமான விளம்பரங்கள் போடப்பட்டிருந்தும், ஒன்பது மாதகாலமாக யுத்த நிலயத்தார் காலேஜிலுள்ளவர்களை திருப்திப்படுத்த செய்த வேலைகளைப்பற்றி ஒரு எழுத்துக்கூட இல்லை!

யுத்த நிலயத்து பொருப்பாளிகளே, கவலைப்படாதீர்கள். ஒரு பைபிள் (Bible) புஸ்தகத்தை எடுத்து, மத்தேயுவில் 7-வது அத்தியாயத்தில் 6-வது வாசகத்தை படித்து ஆறுதலடையுங்கள்.



# பிரிடன் பேசுகிறது.

---

"காலின் கூட்"

அமெரிக்க ஐக்கிய தேசம் நமக்குச் செய்யக்கருதும் உதவி, காலங்கடந்ததாயும் குறைவாகவும் இருக்கும் என்றும் அதனால் உதவி செய்வதில் பயனில்லை என்றும் ஜெர்மனி சொல்லிக்கொண்டே இருக்கிறது. இதைக்கேட்டு நீங்கள் எவரும் ஏமாந்துபோய் இருக்கமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். பிரிடிஷார், தங்கள் சண்டைகளைப் பிறரைக்கொண்டு நடத்துவதில் பிரியமுள்ளவர்கள் என்று ஜெர்மனி பிறட்டாக கூறுகிறது வழக்கம். அதற்கு "சென்ற மஹாயுத்தத்தில் மடிந்த 10,00,000 பிரிடிஷ் ராணுவவீரர்களின் சமாதியே" போதிய பதிலாகும். ஆயினும் நான் ஐக்கிய அமெரிக்க தேசத்தவனாயிருந்தால், என் ஒத்தாசை நாடுபவர்கள் தம்மைத்தானே ஒத்தாசை செய்து கொள்ளுகிறார்களா என்று அறிய விரும்புவேன். அமெரிக்க ஐக்கிய நாடுகள் பிரிடனுக்கு எத்துணை உதவி புரிய விரும்புகிறது என்பது அறிந்ததே. ஆகையால் பிரிடனும் தனுக்குத்தானே எவ்வித முயற்சிகள் செய்து வருகிறது என்பதை அறிய விரும்புவீர்கள். நான் அவ்விஷயம் பூறுவும் சொல்ல இயலாது. ஏன் என்றால், அதை ஹிட்லரும் அறிய விரும்புவான். ஆனால் பிறர்களே எங்களை காப்பாற்ற வேண்டும் என்றும் நாங்கள் சோம்பித்திரியவில்லை என்றும் நிரூபிக்கத்தக்க சிலதை மட்டும் எடுத்துக் காட்டுகிறேன்:

**எங்கள் செலவுகணக்கு.**—முதலில் செலவு கணக்கை எடுத்துக்கொள்ளுவோம். கஜானா புள்ளி விவரப்படி தினம் ஒன்றுக்கு 1,23,00,000 பவுன் அதாவது $6\frac{1}{2}$ மிலியன் டாலர்கள் செலவாகிறது. அதாவது வருஷம் ஒன்றுக்கு 4,56,50,00,000 பவுன்கள் செலவு செய்யப்படுகிறது. இதில் 4,00,00,00,000 பவுன்கள் யுத்தப் பிரயுக்தமாக செலவிடப்படுகிறது. 1938 ஆண்டில் எதிர்பார்த்த மொத்த வருஷ வருமானத்தில் முக்கால் பாகத்துக்கு மேற்கொண்டதொகை இப்போது முதல் தொகையிலிருந்தும் யுத்த தளவாடங்கள் வாங்க செலவு செய்யப்படுகிறது. பணக்காரர்களிடமிருந்து அவர்கள் வருமானத்தில் பவுனுக்கு 17 ஷில்லிங் வரி வசூலிக்கப்படுகிறது. ஒரு டாலருக்குமேல்பட்ட வருமான முள்ளவனும் இதே விகிதவரி செலுத்துகிறான். இவ்விதம் உயர்ந்தவரி விதிக்கப்பட்டும், சென்ற வருஷத்தில் ஜனங்கள் தாமாகவே கஷ்டத்தை பொருட்படுத்தாமல் 1,60,00,000, பவுன்கள் நன்கொடையாகவும் யுத்தக் கடனாகவும் அளித்திருக்கிறார்கள். எங்களை "நெப்போலியன்" 'வணிகர்கள்' என்று கூறினான். அது முதல் அயல் நாடுகளில் எங்களைப்பற்றி நாங்கள் சுயநலம் கருதுபவர்கள் என்ற பழிச்சொல் வழங்கப்படுகிறது.

மேலே கண்ட புள்ளி விபரங்களை சற்று கவனிக்க வேண்டுகிறேன். தனக்கு மிஞ்சியது ஐந்தில் ஒரு பாகம்

தான் என்றும் எஞ்சியது சுயநலத்திற்கன்றி வேறு துரைகளுக்கானவை என்று கருதுவது துலங்கும். இச்சந்தர்ப்பத்தில் பிரிடனால் பெறப்பட்டிருக்கும் சகல யுத்த தளவாடங்களும் கைக்குமெய்யாக ரொக்கம் கொடுத்து வாங்கப்பட்டவை என்று கூறுவது நியாயமாகும்.

**எங்கள் போர் முறை.**—அடுத்ததாக தேக பிரயத்தனத்தை குறிப்போம். ஸ்திரீகளும் இதில் பங்குள்ளவர்கள். ஜனங்களில் 18 முதல் 41 வயது உள்ளவர்கள் சைனியத்தில் சேர கடமைப்பட்டிருக்கிறார்கள். அதில் 19 முதல் 36 வயது வரை உள்ளவர்கள் சேர்க்கப்பட்டும் பதிவு செய்யப்பட்டும் இருக்கிறார்கள் என்பது நீங்கள் அறிவீர்கள். ஆனால் எங்கள் படைகளில் எம்மட்டும் ஜனங்கள் கட்டாயப்படுத்தப்படாமல் தாமாகவே வயது நிர்ணயம் அன்றி சேர்ந்திருக்கிறார்கள் என்று தெரிந்திருக்க முடியாது. விமானப் படையிலுள்ளவர்கள் தாமாகவே சேருபவர்கள், ஏனெனில் சிறு வயது முதல் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் போதே 16 வயது உள்ள சிறுவர்கள் கூட விமானம் ஓட்ட பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறார்கள். விமானப் படை எப்போதும் தாமாக சேர விரும்புவர்களையே கொண்டு விளங்கும். ஆயிரக்கணக்காக யுவர்கள் இதில் சேர்ந்து வருகிறார்கள். எங்கள் கப்பற் படையைப்பற்றி ஜெர்மானியரும்கூட கப்பல்கள், பலவந்தம் செய்து சேகரிக்கப்பட்டவர்களைக் கொண்டு, நடத்தப்படவில்லை என்று ஒப்புக்கொள்வார்கள். எங்கள் ராணுவத்தில் சுயேச்சையாய் சேருபவர்கள் தான் பூராவும். சிறு வயதினரைச் சேரும்படி கோரின போது வயது சென்றவர்களும் போட்டியிட்டு தங்களை சேர்த்துக் கொள்ளும்படி வந்ததே இதற்கு பெரிய அத்தாக்ஷியாகும். மேலும் அங்கங்கே தனித்தனியாக ஒவ்வொரு பிரதேசத்திலும் நிருவப்பட்டிருக்கும். எங்கள் "உள்நாட்டுப் பாதுகாப்பு சேனை" என்பதில் $1\frac{1}{2}$ மிலியன் பேர்களுக்குமேலேயே சேர்ந்திருக்கிறார்கள். இந்த ஒவ்வொருவருடைய மனப்பான்மையை உங்களுக்கு எடுத்துச் சொல்வது அரிது ஆயினும் ஒரு உதாரணம் சொல்லுகிறேன். இவர்களில் எவனிடமும் ஜெர்மனி சென்ற சில நாளாய் பிரிடனுக்குள் புகுந்து சண்டை செய்யப்போவதாய் சொல்கிறதே என்று சொன்னால் அவன் உடனே "எங்கே வந்து பார்க்கட்டும், வர முயலட்டும்" என்று சொல்வான்.

**எங்கள் வேலை திட்டம்.**—ஆனால் எங்களில் எல்லோருமே போர்முனைக்கு செல்ல முடியாது. மற்றொரு ஜனநாயக நாடு ஒத்தாசை செய்ய முன் வரும் வரை, யுத்த தளவாடங்கள் செய்வதற்கும், யுத்த தளவாடங்கள் வாங்க பொருள் ஈட்டுவதற்காக அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய சாமான்கள் பல செய்யவும், ஆகார சேகரம் செய்யவும், எங்களில் பெரும் சங்கியை அந்த வேலைகளை செய்ய உபயோகிக்க வேண்டியிருக்கிறது. இதற்காக "முக்கிய தொழில்கள்" என்ற ஒரு ஏற்பாட்டைச்செய்துகொண்டிருக்கிறோம். அதாவது சுரங்க வேலை செய்பவன் இன்ன வயது சென்ற மேல்தான் ராணுவத்தில் சேரலாம் என்றும், விவசாயி என்ன, மற்றும் பல



தொழிலிருப்பவர்களும், இன்ன வயதுக்குள் இருந்தால்தான் ராணுவத்தில் சேரலாம் என்று திட்டம் செய்திருக்கிறோம். காலம் செல்லச் செல்ல அவர்களை ராணுவத்தில் சேர்வதற்கு அனுமதிக்கப்படும். ஸ்திரீகளோ என்றால் அவர்கள் தங்களால் ஆன உதவி செய்ய முன் வந்துக்கொண்டிருக்கின்றனர். நேர்முகமாக போரில் கலந்து கொள்வது என்பது ஒன்றைத் தவிர, ராணுவ உத்தியோகங்களிலும் அதற்கு தகுந்த உடுப்புக்களுடன் பல ஸ்திரீகள் கோஷ்டியினர் இருந்து வருகிறார்கள். தொழிற்சாலைகளிலும் கைத்தொழில்களிலும் பங்கெடுத்துக் கொள்ள ஸ்திரீகள் ஆயிரக்கணக்காக சேர்ந்து வருகிறார்கள். ஆயிரக்கணக்காக ஸ்திரீகள் நிலத்தில் பாடுபடுகின்றனர். அவரவர்களுக்குத் தகுந்த வேலையில் அவரவர்கள் புகுத்தப்பட்டிருக்கிறார்களென்று சொல்வது சிரமமாகும். ஆனால் 2 சங்கதிகள் சொல்லக் கூடும். முதலாவதாக, சென்ற மஹா யுத்தத்தில் எவ்வளவு மும்முறமாக யுத்த தளவாடங்கள் உண்டாக்கப்பட்டனவோ அதைப்போல பன்மடங்கு அதிகமாகவே இப்போது உண்டாக்கப்படுகிறது. இரண்டாவது, வேலையில்லாதவர்களின் கணிக்கையில் ஏற்பட்டிருக்கும் பிழை சென்ற ஜனவரிமீ த்தில் 7,00,000 பேர்கள் வேலையில்லாமல் இருந்தார்கள் என்று நீங்கள் வாசித்திருக்கக்கூடியதற்கு நிர்வாகக் குறைவோ, முயற்சி இன்மையோ, பொருள் ஆதார சிக்கனமோ, காரணம் என்று நீங்கள் எண்ணலாம். அவ்வெண்ணம் பெரும் பிழையாகும். வேலையற்றிருப்பவர்கள், எனக்கூறப்படும் இவர்களில் பெரும்பாலோர் ஒரு திட்டத்தினின்றும் மறு வேலைக்கு மாற்றப்பட்டவர்களும், மற்றும் சிறிது காலத்துக்குமுன் தங்கள் படிப்பை நிறுத்தி வேலைக்குபுக வந்தவர்களும் ஆவார்கள். இவர்களைத் தவிர வேறு சிலர், பலபெரும் பட்டணங்களில் மற்ற தேசங்களிலிருந்து நாளடவில் வந்து சேர்ந்திருக்கும், வேலைக்கு சேர்த்துக் கொள்ள அருஹதை அற்றவர்களும், மேலும் திடீரென்று யுத்தத்தை உத்தேசித்து சமாதான காலங்களில் பொது மக்களின் உபயோகத்துக்காக பல சாமான்கள் செய்யப்படுவதை நிறுத்தப்பட்டிருப்பதிலும் வரி உயர்த்தப்பட்டதின் காரணமாக பொது ஜனங்கள் சிக்கனத்தை அனுஷ்டிக்க நேரிட்டிருப்பதிலும், இதுமாதிரி காரணங்களால் தாத்காலிகமாய் வேலை நிறுத்தமும் வேலையில்லா திண்டாட்டமும் ஏற்பட்டிருக்கிறது.

**எங்கள் ஜயம்.**—நாங்கள் எங்கள் பூரா பலத்தையும், பூரா செல்வத்தையும், பூர்ண யந்திர பலத்தையும் உபயோகப்படுத்தவில்லை என்று கருதினால் கீழ்வருபவற்றை நினைப்பூட்டுகிறேன். மாதக்கணக்காய் பிரயாசைப்பட்டு சேர்த்த தளவாடங்களையும் ஆகார குவியல்களையும் விடுத்து 9 மாதத்துக்கு முன் "டங்கர்க்" கிலிருந்து மிஞ்சிய பிரிடிஷ் ராணுவம் திரும்பி வந்தது ஞாபகமிருக்கும். இதற்குபின் எங்கள் தொழிற்சாலைகள் உள்ள பெரியபட்டணங்களெல்விதம் ஜெர்மன் ஆகாய விமானங்களால் தாக்கப்பட்டவை என்பதும், எங்கள் வியாபாரக் கப்பல்கள் எதிரிகளின் நீர்மூழ்கி கப்பல்களாலும், நீர் சுரங்கங்களாலும், விமானப்படைகளாலும் அவதிப்

பட்டனவென்பதும் நீங்கள் அறிவீர்கள். ஆயினும் இந்த மார்ச்சு மாதத்தில் நாங்கள் எவ்விதம் இதுவரை 3,150 ஜெர்மன் விமானங்களையும் 1,000 இதாலிய விமானங்களையும் நாசம் செய்திருக்கிறோம் என்றும், 3,000 மைல்களுக்கப்பால் தரைப்படையை ஓட்டி எதிரியை போர்களத்தில் துரத்தி அடித்திருக்கிறோம் என்றும், ஆபிரிக்கா கண்டத்திலிருந்த இதாலிய சாம்ராஜ்ஜியத்தை அழித்து இருக்கிறோம் என்றும் அறிவிக்காமலிருக்க முடியவில்லை. மேலும் ஹிட்லர் அவசியம் எங்கள் தேசத்தின்பேரில் படையெடுக்கவேண்டுமென்றும் படையெடுப்பதை எதிர்பார்க்க விரும்புகிறோம் என்றும் துணிந்து மனத்திருப்தியுடன் சொல்கிறேன்.

**எதிர்கால வேலைத்திட்டம்.**—எங்கள் நேயர்கள், தங்களைத்தாமே கவனித்துக்கொள்ளாத சோம்பல் மிகுந்தவர்களுக்கு, ஒத்தாசை செய்பவர்கள் ஆகார், என்பதற்குத்தான் நான், இவ்விதம் எடுத்துக்காட்டியது. "இவர்கள் தான் போதுமானவரை தங்களுக்கு வேண்டியவைத செய்து கொள்ளுகிறார்களே" என்று நேயர்கள் கூறலாம். அதனால் எங்களைப்பற்றி மிகவும் தாரிப்பாக எண்ணுபவர்களை இதற்கு மாறான விஷயங்களையும் கவனிக்கவேண்டுகிறேன். அவர்கள் என்ன வினவுகிறார்கள்? ஜெர்மன் இதாலிய தேசங்களை ஒத்தையாக நின்று எதிர்த்தலையும், நேசமற்ற மனப்பான்மையுள்ள ருஷ்யாவை சாஷிப்பதையும், ஒளிமறைவாக தீச்செயல் செய்யும் ஜப்பானை தன் வரம்பினுள் நிறுத்திவைத்தலையும், பிரிடனிடம் எதிர்பார்க்கிறார்கள். எங்களை, ஏக தேசத்தில் பூலோகத்திலேயே மிக்க வல்லமைகொண்ட இரண்டு பெரிய தேச சைனியங்களையும், அவைகளின் விமானப்படைகளையும் எதிர்த்து போராடும்படிக்கும், இது சுலபமானகாரியம் என்று கருதி, இதற்கு மேலும் பூலோகத்திலுள்ள எல்லாக் கடல்களையும் காபந்து செய்யும் படிக்கும் விரும்புகிறார்கள். இவ்விதம் எங்களிடம் எதிர்பார்ப்பது மகா பெரியகாரியம் என்பது துலங்கும். பிறர் மறந்தாலும் நாங்கள் இதை மறக்கமுடியாது. அதாவது இன்னும் நாங்கள் ஜெர்மானிய தரைப்படையுடன் கைகலக்கவில்லை. ஜெர்மனி இதாலிய ஆகாய விமானங்களுக்கு சேதமேற்படுத்தியிருந்தும் அவைகளை பூராவும் நாசம் செய்திருக்கவில்லை. ஜெர்மன் நீர்மூழ்கி கப்பல்களின் பாதையை ஒழிக்கவில்லை. ஆகவே நெடும் போரை எதிர்ப்பார்க்க வேண்டியவர்களாகவே இருக்கிறோம். எக்காலம் வரை போர் நிகழும் என்பதை நாங்கள் நிச்சயமாய் கூறமுடியாது. அனுயாசமான மனப்பான்மை உள்ளவர்களினுடைய "இப்போர் நெடுங்காலம் நடக்குமா" என்ற கேள்விக்கு, நான் சிறிது காலத்துக்கு முன் ஐரோப்பாவில்தோன்றிய கொடுங்கோன் மன்னனின் பலம் குன்ற நிகழ்ந்தபோர் 23 வருஷங்ள் நடைபெற்றதை ஞாபகமூட்டுவேன். ஆகையால் எவரும் போரை சீக்கிரமே முடிக்கும்படி எங்களை கேட்பார்களானால் அவர்கள், நாங்கள் அவ்விதம் செய்ய யுத்த தளவாடங்கள் பெறவிரும்பக் கூடாது என்று நினைக்கலாகாது. இவ்விதம் ஒரு மகத்தான காரியசித்தியை உத்தேசித்து ஜனங்கள் ஒரே மனப்பான்மை கொண்டு மலைபோல் தற்



காப்பு செய்துகொள்வது தேச சரித்திரங்களில் முதல் தடவையல்ல. மிக்க நெருக்கடியான காலத்திலும், எவ்வித ஒத்தாசையும் எதிர்ப்பார்க்கமுடியாத பொழுதும், விடாமுயற்சியுடனும் ஊக்கத்துடனும் போர் செய்த ஸ்காட்சியர்களிடம் நல்லுணர்ச்சி ஏற்பட்டது எவரும் அறிவர். கவியரசர் ஸர். வால்டர் ஸ்காட் பெருமானுர் மேற்சொன்னதுபோன்ற ஒரு நிகழ்ச்சியை வர்ணித்திருப்பது ஞாபகமிருக்கும்.

சுழல் ஒத்த கத்தி வீச்சினிடத்தும்
இடைவிடா அணிவகுப்பு
புறங்காட்டாவேல் கம்பர் பின்வாங்கார்
நெருக்கமுற்ற வனமரங்கள் போன்று
விழுந்தவன் இடத்தைவிஜயன் அடைந்து
விளங்குவன் தக்கணமே.

அவர் சொன்ன காட்டுமரங்களை ஒத்தோர் இன்னும் இருக்கிறார்கள். அதற்கு ஏற்க பிரதம மந்திரியார் கனம். சர்ச்சில் "எங்களுக்கு ஆயுதங்களை கொடுத்து உதவுங்கள், நாங்கள் எடுத்த காரியத்தை முடிக்கின்றோம்" என்று சொல்லியிருக்கிறார்.

## பிரிடிஷ் ஆகாய விமானங்கள் சுரங்கங்கள் வைப்பதற்காக 12,50,000 மைல்கள் பறந்தன.

### "கீல்" கால்வாய் முழுக்கப்பட்ட கப்பலால் தடைசெய்யப்பட்டது.

### ஜெர்மானியர்களின் விசித்திரமான சமாதானம்.

பிரிடிஷ் விமானங்கள் சுரங்கக்கண்ணிகள் வைக்க 12,50,000 மைல்கள் பறந்திருக்கின்றன. அப்படி உண்டாக்கப்பட்ட சுரங்கங்களின் மூலம் எதிரிகளின் ஆயிரக்கணக்கான டன்கள் உள்ள கப்பல்கள் நாசம் செய்யப்பட்டு சமுத்திரத்துக்கு இரையாக்கப்பட்டன. அவ்விதம் நாசம் செய்யப்பட்ட கப்பல்கள், சுரங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ள இடங்களின் பரப்பின் 10-ல் 1-பாகத்துக்கு, 100-க்குமேல் ஆகும். யுத்தச் சிறு கப்பல்களும், துருப்புகள் செல்லும் கப்பல்களும் நாசம் செய்யப்பட்டவைகளின் ஒரு அம்சமாகும்—ஜெர்மானியருக்கு இதன் மூலம் ஏராளமான நஷ்டம் உண்டாகி இருக்கிறது.

பிரிடிஷ் ஆகாய விமானங்கள் இடும் சுரங்கங்களுக்கு தப்பிய ஜெர்மன் துறைமுகங்கள் ஒன்றும் இல்லை. நம் பிரிடிஷ் விமானங்களுக்கு தூரமும், எதிரியின் எதிர்ப்பும் லெக்ஷியமாகமாட்டா. பால்டிக்கில் அநேக கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன—ஆகையால் நார்வேயிலிருந்து ஜெர்மனிக்குச் செல்லும் பாதுகாப்புக் கப்பல்கள் கடல்கரையை ஒட்டி இருட்டுத்தனமாகச் செல்வதுடன் ஜெர்மனிக்கு சுருக்குப்பாதை வழியாக செல்கின்றன.

ஜெர்மனியின் சக்திவாய்ந்தவும் சுறுசுறுப்பானவும் தற்காப்புப் படைகள் இருந்த போதிலும் அவைகளை லக்ஷியம் செய்யாது பிரிடிஷ் ஆகாய விமானங்கள் கீல் கால்வாயில் அபரிமிதமான சுரங்கக் கண்ணிகள் இடுகின்றன. இதனுடைய பலன் தெரிய சில நாட்கள் செல்லும். உதாரணமாக ஸெப்டம்பர் மாதத்தில் இடப்பட்ட சுரங்கக் கண்ணிகளின் பலனாக எதிரியின் ஏழு கப்பல்கள் மிகவும் சேதமடைந்து சின்னாபின்னம் ஆக்கப்பட்டு கால்வாயின் ஓரத்தில் காணப்பட்டன என்று நவம்பர் மாத இறுதியில்தான் தெரியவந்தது. இடைவிடாது கீல் கால்வாயில் சுரங்கக் கண்ணிகள் வைப்பதால் எதிரியின் ராணுவ வியாபாரக் கப்பல்கள் எங்கும் செல்ல முடியாமல் திக்குமுக்காடச் செய்யப்பட்டன என்பது நிச்சயமான விஷயம்.

## கரைகள் சிதைவுபட்டு அழிந்தன.

மேலே சொல்லப்பட்ட அழிவு சம்பந்தமாக முதல் முதலாக தனிச் சார்பு உள்ள மாஸ்கோ ஒலிபரப்பு மூலம் 1940-ஞு ஜூலை மீ 29உ உள்ள யாதாஸ்தில் கீல் கால்வாய் நிரம்பவும் சேதமடைந்து விட்டது என்றும், கப்பல்கள் மேற்படி கால்வாய் வழியாக செல்லுவது மிகவும் சிரமசாத்தியமானதென்றும் அவ்விதம் செல்லுவதும் நீண்ட தாமதமானதாகவும் இருப்பதாக வெளிவந்தது. இக் கஷ்டங்கள் ஆகஸ்டு ஸெப்டம்பர் மாதங்களிலும் நீடித்திருந்தன. நவம்பர் மீ இடப்பட்ட சுரங்கக் கண்ணிகளின் பயனாக அமுக்கப்பட்ட கப்பல் ஒன்றினால் கீல் கால்வாயில் கப்பல் போக்கு வரத்து மிகவும் மெதுப்பட்டு பலவித இடைஞ்சல்களுக்கு உள்பட்டதாகவும் இருந்தது.

பிறகு டிஸம்பர் மாதத்தில் இரும்பு சுமந்துசென்ற ஒரு கப்பல் மேற்படி கால்வாயில் மூழ்கடிக்கப்பட்டது. ஆகாய விமான வேவு இத்தடைகளை வெளியாக்கிற்று. மூழ்கின கப்பலை எடுப்பது உரை பனி மிகுதியானதால் தடைப்பட்டது. மேலும் இந்த சந்தர்ப்பங்களில் இரும்பு ஏற்றி சென்ற கப்பல் மூழ்கியதில் அதை எடுப்பதைவிட வேறு பெரிய கஷ்டம் யாது இருக்கலாம்? இக்காலங்களில், அதாவது கால்வாய் முற்றிலும் தடைசெய்யப்படாத காலங்களிலும் சிறிது கப்பல்கள் செல்ல மட்டுமே வஸதி இருந்தது. கால்வாயின் அடிபாகம் கப்பல் மூழ்கியதால் சேதமாக்கப்பட்டு ஒரு கரை தகர்ந்து விட்டது.

இயற்கையாக ஜெர்மானியர்கள் மேலே சொல்லப்பட்ட நஷ்டங்களை ஒத்த விஷயங்களைப்பற்றி வாய்திறவாமலிருப்பதே வழக்கம். ஆனால் கீல் கால்வாயில் போக்கு வரத்து தடை பெற்ற விஷயம்பற்றி மட்டும் ஜெர்மானியர்கள் பல்வேறு சமாதானங்கள் சொன்னார்கள். ஒரு சமயம் கப்பல் மோதியதுபற்றி குற்றம் சுமத்தப்பட்டது. பொதுவாக கீல் கால்வாய் போக்கு வரத்து சம்பந்தமாக தகுந்த முன் எச்சரிக்கைகள் கையாளப்படுவதுடன் கப்பல்களும் மெதுவாகவே செல்கின்றன. கப்பல்கள் மோதுவது சாத்தியமாக இருந்தாலும் அது மெதுவாகவே நேர்நேராகவே மட்டும் இருந்திருக்கும். இம்மாதிரியாக கப்பல்கள் மூழ்கவும் இடம் இராது. பின்னால் சேதங்களுக்குக் காரணம் அக்ரம அழிப்பு



என்று ஜெர்மானியர்கள் சொன்னார்கள். இறுதியாக கால்வாய்மேல் உள்ள ஒரு பாலம் இடிந்து விழுந்து ஒரு கப்பல் மூழ்கடிக்கப்பட்டது என்ற வகையாய் ஜெர்மானியர்கள் ஒரு ஆச்சரியமான சமாதானம் சொன்னார்கள்.

## ஆகாய விமானத்திலிருந்து விடப்பட்ட சுரங்கக் கண்ணிகள்.

ஆகாயத்திலிருந்து கண்ணிகள் போடுவது ஒரு நூதன ஆயுதம். சில காலம் அது ஒரு ரகஸ்ய ஆயுதமாகவும் இருந்தது. ஜெர்மானியர்கள் இது விஷயம் தெரிவதற்கு முன் இதன் பயனாக அனேக கப்பல்களை இழந்தார்கள். கப்பல் துறைமுகங்களில், கண்ணியிடும் கப்பல்கள் போகமுடியாத குறுகல் பாதைகளிலும் கூட, ஆழமில்லாத கால்வாய்களிலும் கூட ஆகாய விமானத்திலிருந்து கண்ணிகள் போடப்பட்டிருக்கின்றன. அவைகள் அசாதாரணமான வேகத்துடன் கண்ணிகள் வீசுகின்றன. ஒரு சமயம் பிரிடனிலிருந்து 600 மைலுக்கு அப்பாலுள்ள ஜெர்மானியர் வசம் இருந்த ஒரு கால்வாயில் உடனே கண்ணிகள் போடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. கண்ணி போடும்படி சாயங்காலம் 6 மணிக்கு உத்தரவு இடப்பட்டது. நடு இரவுக்குள் கண்ணி போட்டு முடிந்தது. என்னதுரிதம். பிரமிக்கத் தக்கதாக இருக்கிறது!

கண்ணிகள் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பாக போடவேண்டியது அவசியம். இல்லையேல் அது நன்மையை விளைவிப்பதற்குப் பதிலாக தீமை உண்டாக்கும். கப்பல் போக்குவரத்து உள்ள கால்வாயில் குறிப்பிட்ட இடத்தில் கண்ணிகள் போடப்படாவிட்டால், சர்வதேச கட்டுப்பாட்டுக்கு முரண்படுவதுடன் பிரிடிஷ் கப்பல் போக்குவரத்துக்கே ஆபத்தாகவும் முடியலாம்.

மேலே சொல்லப்பட்ட விபத்துகளை தவிர்க்க ஒவ்வொரு மாலுமிக்கும் வழிப் படத்தில் ஒரு குண்டுசி குறியிட்டு அந்தக் குறியில் கண்ணிகளை வீசும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது. பொதுவாக இரவிலேதான் கண்ணிகள் போடுவது வழக்கம். இல்லையேல் எதிரிகள் எந்த இடத்தில் கண்ணிபோடப்படுகிறதென்று தெரிந்துகொண்டு ஜாக்கிரதையாகிவிடுவார்கள். இவைகளை எல்லாம் மிகவும் சாதுர்யத்துடன் மாலுமிகள் செய்யவேண்டும். அவர்களுக்கு கண்ணியிடும் விஷயமாக முற்றிலும் போதுமான பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறது. கண்ணியிடுவதற்குமுன் அவரவர்கள் கண்ணியிடவேண்டிய இடங்களுக்குப் பறந்துசென்று, கண்ணி இடவேண்டிய இடங்களையும், வழிகளையும், இடங்களின் அமைப்பு விசேஷங்களையும், கடற்கரையோர விசேஷங்களையும் தெரிந்துகொள்ள போதுமான சௌகரியங்களும் பயிற்சியும் பெற்றிருக்கிறார்கள். அதற்குப் பிறகுதான் அவர்கள் அவ்வேலைக்கு பொருக்கப்படுகிறார்கள்.

## எதிரியின் எதிர்ப்பு.

சுரங்கக் கண்ணிகள் குழாய் போல உள்ளவை. டார்பிடோ (Torpedo) போல் வெடிக்கும் வேகமுள்ளவை. அவைகள் பெரும் கப்பல்களை நசுக்கவும், தண்ணீரில் அமுக்கவும் சக்தியுள்ளவை. பால்டிக்கில் அவைகள் 10,000 டன்

கப்பல்கள் அநேகத்தை அமுக்கியதாகவும் தெரியவருகிறது. சுரங்கக் கண்ணிகள் வெடிகுண்டு அறையிலிருந்து தள்ளப்பட்டு, மடக்கு கதவுகளால் பியூசிலேஜ்க்கு கீழ்புறம் சுற்றப்பட்டு இருக்கின்றன. ஒரு பாரசூட்டும் (Parachute) அதனுடன் தொகுக்கப்பட்டிருக்கிறது. சுரங்கக் கண்ணி கீழேவிழ ஆரம்பித்தவுடன் பாரசூட் திறந்துகொண்டு, கண்ணியை ஜாக்கிரதையாக அதனுடைய மிருதுவான உருப்புகள் கெடா வண்ணம் கீழே மெதுவாக நழுவ விடுகிறது.

சுரங்கக் கண்ணியிடுவது சாதாரணவேலை எனினும் எதிரியின் எதிர்ப்பினால் அவ்வேலை சில சமயம் ருசிப்பிக்கப்படுகிறது. சுரங்கக் கண்ணி வீசும் ஒரு இடத்தில் ஒரு சமயம் யுத்தக் கப்பல் ஒரே தொடர்ச்சியாக அக்கினி குண்டுகளை (Tracer shells) அனுப்பியதாகவும், அதனால் சுரங்கக் கண்ணி இடும் வேலை சிறிது தடைப்பட்டது என்றும் ஆனால் வேலை மறுபடியும் ஆரம்பிக்கப்பட்டு கண்ணி வீசப்பட்டதென்றும் ஒரு மாலுமியால் சொல்லப்படுகிறது.

அதே இரவில் மற்றொரு சுரங்கக் கண்ணி அதே யுத்தக் கப்பலுக்கு மேல் 600 அடியில் கடந்ததாகவும் தெரிகிறது. அப்பொழுது அக்கினி குண்டுகள் தங்களுக்கு ஏக தொந்தரவு கொடுத்ததாகவும் ஆனால் அதனால் தங்களுடைய வேலைக்கு தடை ஏற்படவில்லையென்றும், கடைசியாக கண்ணிகள் வீசவேண்டிய சரியான இடத்தில் அந்த யுத்தக் கப்பல் போகும் வழியில் கண்ணிகள் வீசியதாகவும் அதே மாலுமியால் சொல்லப்படுகிறது. இறுதியில் அந்த சண்டைக் கப்பல் சுரங்கக் கண்ணியில் சிக்கியிருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

---

# முற்றுகை தளர்த்துதல்.

---

## கடல் வியாபார திரவிய வினியோகத்தில் பிரிடனுக்கு மட்டிலாவது, அல்லது ஐக்கிய நாடுகளுடன் சேர்ந்த இங்கிலாந்துக்காவது அதிகாரம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற யோசனை.

## ஸ்பெயின் தேச சம்பந்தமாயும் இதே முறை கையாளப் படலாம்.

("ந்யூஸ் கிரானிகள்" என்ற பத்திரிகையில் Mr. வெர்னன் பார்டலட் என்பவரால் எழுதப்பட்ட கட்டுரை).

கிழக்கு மத்தியதரைக்கடல் பிரதேசங்களில், நாம் முக்கியமான விஷய மாறுதல்கள், எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது, அதே கடலின் மேற்குப் புற எல்லையில் ஏற்படக்கூடிய விஷயங்களில், லண்டனிலுள்ள அயல்நாட்டு ஆபீஸும், வாஷிங்டனிலுள்ள ஸர்க்கார் இலாகாவும் விசேஷமான கவனத்தை வெகுவாய்ச் செலுத்தி வருகிறார்கள்.



சர்வ ஜனங்களுக்கும் ஈகையுடன் நடந்துகொள்ளவேணுமென்ற வாதத்தை வெகு தந்திரமாய் உபயோகம் செய்து, ஜெர்மானியர்கள் பிரிடிஷாரின் முற்றுகையை ஒடித்துவிடலாம் என்று நம்புகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. கடற்படை சேனாதிபதி டார்லான் என்பவரும், சமீபத்தில் விஷியில் அமெரிக்க பேப்பர் காரர்களுக்கு பேட்டி அளித்துப் பேசியதிலும்கூட "தான் இந்த விஷயத்தில் ஹிட்லரின் ஏஜெண்டுதான்" என்று ஸ்பஷ்டமாக்கிவிட்டார்.

உண்மையில் கடல் தளபதி டார்லான் பேட்டி கொடுக்குமுன், ஜெர்மானியர்களும், ஜெர்மானியர்களால் கண்காணிக்கப்பட்ட பாரிஸ். நகரத்தைச்சேர்ந்த ஜெர்மானியருக்குப் பரிந்து பேசுவோரும், டார்லான் எதைச் சொல்லுவாரென்று பஹிரங்கமாய் வெளியிட்டிருந்தார்கள். அந்த பேட்டியில் டார்லான் பிரெஞ்சு யுத்தக் கப்பல்களை வியாபாரக் கப்பல்களுக்கு ரக்ஷிப்புத் துணைகளாய் உபயோகிக்கப் போவதாய் மிரட்டினார்.

அனுக்கிரமிப்பு பிரஞ்சு தேசத்திற்கும், ஸ்பெயின் தேசத்திற்கும் உணவுப் பொருள்கள் போகும் விஷயத்தில் பிரிடிஷார் இதுவரை காட்டிவந்த ஒவ்வொரு சலுகையும் விஸ்வாஸத்துடன் ஏற்றுக்கொள்ளப்படாமலிருப்பது ஒருபுறமிருக்க, பிரிடிஷாரின், முற்றுகையைப்பற்றி விசேஷ ஆரவாரத்துடன் எதிர்த்துப் பேசப் படுகிறது என்பது குறிப்புக்கு வந்திருக்கிறது.

## எதிரியால் ஸ்வாதீனப்படுத்தல்.

ஜெர்மானியர்கள் முற்றுகை ஒருக்காலும் தளராது என்று எதிர்பார்த்தார்கள் என்பதற்கும், நாம் முற்றுகையில் காட்டும் ஒவ்வொரு மாறுதலையும் தங்களால் கூடுமானவரை ஸ்வப்பிரயோஜனப்படுத்திக்கொண்டுவருகிறார்கள் என்பதற்கும் போதுமான ஹேஷ்யங்களிருக்கிறது. ஆதலால், எவ்விதமாய் முற்றுகையை நன்றாய் இடைவெளியன்னியில் இறுக்கமுடியும் என்பதை பிரிடிஷ் ஸர்க்கார் தீர்மானிக்கவேண்டியது மிகவும் அவசியமாகிவிட்டது.

இத்தருவாயில், பெறுமதியுள்ள எண்ணெய்களும், உலோகங்களும், பாஸ்பேட்ஸ் வகையறுக்களும் பிரெஞ்சு குடியேற்ற நாடுகளிலிருந்து அனுக்கிரமிப்பு பிரெஞ்சு தேசத்திற்கு வந்து சேர்ந்துகொண்டிருக்கின்றன. அவைகளை ஜெர்மானியர்களும், இதாலியர்களும் தங்கள் சொந்த உபயோகத்திற்காகவே, பிரெஞ்சுத் துறை முகங்களிலேயே அதிகாரதோரணையில் ஸ்வீகரித்துவிடுகிறார்கள்.

விஷி ஸர்க்காருடன் பிரிடிஷ் ஸர்க்கார் இது சம்பந்தமாய் தகரார்செய்ய இஷ்டப்படாமலிருந்ததால், ஜிப்ரால்டர் ஜலசந்தி வழியாக, மேலே சொல்லப்பட்ட விலைபெற்ற பொருள்களை ஏற்றிச்செல்லும் கப்பல்கள் போகும்படிக்கு அனுமதிக்கப்பட்டுவருகின்றது.

வெகுவாய், அட்லான்டிக் சமுத்திரப் பிரயாண கப்பல்கள் மட்டில்தான் தடுக்கப்படுகின்றன.

இந்தக் கப்பல்களும்கூட தடங்கலின்றியில் ஜலசந்தியைக் கடக்க அனுமதிக்கப்படவேண்டுமென்று, கடல் தளபதி டார்லான் இப்பொழுது பாத்யம் கொண்டாடுகிறார். விரைவில் ஜயம் ஏற்படவேணுமென்ற அபிப்பிராயத்தைவிட ஜீவகாருண்ய வாதத்தில் ஈடுபட்ட அபிப்பிராயத்தைக்கொண்ட அமெரிக்கரின் மனதைப் புண்படுத்தக்கூடாதென்ற நோக்கத்துடன், டார்லானுடைய மிரட்டலை, பிரிடிஷ் கவர்ன்மெண்டார், அலக்ஷியம் செய்யாமல், அதற்கு கவனம் காட்டி வருகிறார்கள்.

## அனுக்கிரமிப்பு பிரான்ஸ் நடுநிலைமை வகிக்கிறதா ?

அனுக்கிரமிப்பு பிரான்ஸுக்கு உணவுப் பொருள் அனுமதிக்கவேண்டுமென்ற வாதத்தில் இந்த யுத்தத்தில் அது நடுநிலைமை வகித்துவிட்டது என்பதுதான் முக்கியம். ஆனால் நடப்பை கவனித்தால் ஆக்கிரமிப்பு பிரான்ஸிலுள்ள ஜெர்மானியர்களின் பிரயோஜனத்திற்காக மேற்படி பிராந்தியத்திலுள்ள உற்பத்தி சாலைகள் வேலைசெய்யும்படி கட்டாயப்படுத்தப்படுகின்றன; தவிரவும் எவ்வளவு உணவுப்பொருள்கள் அனுக்கிரமிப்பு பிராந்தியத்திற்கு போகும்படி பிரிடிஷார் அனுமதிக்கிறார்களோ, அவ்வளவையும் ஜெர்மானியர்கள் தங்களுக்கென்று சூறையாடிக்கொள்ளக்கூடும். இருந்தபோதிலும் நடுநிலைமைதேசம், ஆதலால் அனுப்பவேணும் என்று வாதிக்கிறார்கள்.

விஷி ஸர்க்காரின் ஆதிக்கத்திலுள்ள ஆபிரிக்கக் குடியேற்ற நாடுகளில் ஜெர்மானியர்கள் இறங்கி வருகிறார்களென்பதற்கு போதுமான சாக்ஷியங்கள் குவிந்துகொண்டு வருகின்றன, பிரிடிஷார் ஏதாவது உணவுப்பொருள் விஷயமாய் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடனிருக்கப் பிரியப்பட்டால், இப்படி ஜெர்மானியர்கள் அந்த நாடுகளுக்குள் இறங்குவதை தடுக்கவேண்டியது முக்கியம். எப்படிச்சொல்லினும், நாஸிகளுக்கு இந்தச்சலுகையால், வெகுவான பிரயோஜனமும் நன்மையும் ஏற்படும்படிக்குத்தானிருக்கிறது.

## பொருள் விநியோகக் கட்டுப்பாடு.

பிரிடிஷ் ஸர்க்கார், இப்படி மேன்மேலும் சலுகைகாட்டி, அக்கரைச்சீமைகளிலிருந்து வரும் உணவுப்பொருள்கள் கொண்டுவரும் கப்பல்களை அனுமதிக்க இஷ்டப்பட்டால், இந்தப்பொருள்கள் விநியோகம் செய்யப்படும் விதத்தில் பிரிடிஷார் மட்டிலுமாவது, அல்லது ஐக்கிய நாடுடன் சேர்ந்த இங்கிலாந்துக் காவலது அதிகாரம் அவசியமாகயிருக்கவேணும். இதே அதிகாரம் பிரெஞ்சு குடியேற்ற நாடுகளிலிருந்து பிரெஞ்சு துறைமுகங்களுக்குவரும்பொருள்கள் சம்பந்தமாயும் பிரயோகிக்கவேண்டும்.

அதாவது, ஜெர்மானியரின் உத்தரவுகளுக்கிணங்கி ஜெர்மனி சம்பந்தமான முற்றுகையை உபரியாக தளர்த்த எண்ணம் கொண்டிருக்கும் கடல் தளபதி டார்லான் நாஸிகளின்பேரில் ஏற்பட்டிருக்கும் முற்றுகையை இறுக்கிவிடலாம்.



அனுக்கிரமிப்பு பிரெஞ்சு தேசத்திற்கு இறக்குமதியாகும் ஜீவாதாரமான உணவுப் பொருள்கள் சம்பந்தமாய் தற்பொழுது விதிக்கப்பட்டிருக்கும் கட்டுவிதிகளை டார்லான் ஒருக்கால் கொஞ்சம் தளர்த்தும்படிக்கு சாதித்துக்கொள்ளலாம்.

## ஸ்பெயின் தேசத்திற்கும் அன்வயிப்பு.

இம்மாதிரி விதிவிலக்குகளுடன், இம்மாதிரி ஸ்பெயின் தேசத்திற்கும் உணவுப் பொருள்கள் சலுகைகாட்டி அனுமதிக்கப்பட்டால், இரண்டு சாதகம் ஏற்படக் கூடும். ஒரு குற்றமுமறியாத சண்டையில் சேராத நபர்களுக்கு உணவுப்பொருள் அளித்தல்வேணுமென்ற ஜீவகாருண்ய உணர்ச்சியால் சிலர் உதவிசெய்யப்பிரியப்படுவதிலிருந்து, நாஸிகள் அந்த உணர்ச்சியை அக்கிரமமாய் ஸ்வப்ரயோஜனம் செய்து கொள்ளுவது சாத்யமில்லை.

இரண்டாவதாக, அதே சமயத்தில் யுத்தத்தில் சேராத ஸிவிலியன்களுக்கு ஏற்படும் கஷ்ட நிஷ்டூரங்களுக்கு ஜெர்மானியர்தான் ஜவாப்தாரி, பிரிடிஷார் அல்ல என்பது தெளிவாகிவிடும்.

இந்தமாதிரி சமரஸ பாங்கு உண்டு செய்ய எத்தனிக்கவே, பிரிடிஷ் ஸர்க்கார் வாஷிங்டன் ஸர்க்காருடன் நெருங்கிய சம்பந்தம்வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த சமரஸப்பாங்கினால் பிரிடிஷ் கடற்படைக்கும், பிரெஞ்சுக் கடற்படைக்கும் த்வந்த்வம் வராமல் தடுக்கக்கூடும்; அனுக்கிரமிப்பு பிரான்ஸ் மூலம் நாஸிகளுக்குச் செல்லும் பொருள்களை மட்டுப்படுத்தவும் கூடும்.

---

**"உலகத்தார் எவ்விதம் வாழ்நாளை உபயோகப்படுத்த வேண்டுமென்று புகட்டிய பிறகு, உலகத்திலுள்ளவர்கள் எப்படி உயிர்துறக்க வேண்டுமென்று கிரீஸ் கற்பிக்கப் போகிறது."**

## ஹிட்லருக்கு பகிரங்கமாக எழுதிய கடிதத்தின் விவரங்கள்.

**"நம்மை சேனைகளைத் திரட்டக்கூடாது என்று ஜெர்மனி புத்திவாதம் கூறிற்று. நாம் அப்படியே செய்தோம்."**

**படையெடுப்பு வெருட்டல். "சரித்திரத்தில் கியாதிபெற்ற ஒரு ராணுவப்படை இம்மாதிரியான இழிவான ஒரு காரியத்தைச் செய்து தன்னுடைய பெயரைக் கெடுத்துக் கொள்ளுமென்று நாம் நம்பவில்லை."**

மார்ச்சுமீ 9உ வெளிவந்த டைம்ஸ் பத்திரிகையின் ஆதென்ஸிலிருக்கும் நிருபர் அனுப்பிய தந்தியில், கிரீக் பத்திரிகையான ஜோஹிமேரினி என்பதில் அதன் ஆசிரியர் எம். வ்ளாசாஸ் என்பவரால் ஹிட்லருக்கு பகிரங்கமாக எழுதியிருக்கும் கடிதத்தின் பிரசுரத்தில்கண்ட சில முக்கியமான விஷயங்கள், கண்டி

ருக்கின்றன. இந்தக் கடிதத்தைப் படித்தவுடன் கிரீஸ் ஜனங்களுக்கு அதிக உற்சாகம் உண்டாகிவிட்டது. இந்தப் பத்திரிகையை மறுபடியும் மூன்று தடவை அச்சிட்டார்கள். இது மிகவும் ஆச்சரியமான விஷயம். ஏனென்றால், சாதாரணமாக கிரேக்க பத்திரிகைகளை சிலர்தான் படிப்பார்கள்.

கடிதத்தின் போக்கு.—

மேன்மைதங்கிய ஹிட்லரே!

இந்த யுத்தத்தில் சேர்ந்துகொள்ள வேண்டாமென்பது கிரீஸின் அபிப்பிராயம் என்று உங்களுக்குத் தெரிந்த விஷயம். யுத்தம் ஆரம்பித்தபொழுது, கிரீஸ்தேசமானது அந்நியநாட்டு யுத்தங்களிலிருந்தும், உள்நாட்டுக்கலகங்களிலிருந்தும் உண்டான சீர்கேட்டிலிருந்து முன்னேற்றமடைந்துகொண்டிருந்தது. கிரேக்கர்கள் யுத்தத்தில் சேர இஷ்டமில்லையென்று வெளிப்படும்படியாக அனேக சொற்பொழிவுகளும், பிரசுரங்களும், இன்னும் அனேகவிதமான தஸ்தாவேஜிகளும் இருக்கின்றன. அவைகளை நாம் பொருட்படுத்தவேண்டாம். ஒரு விஷயத்தை மற்றும் சொல்லுகிறேன். டெனுஸ் துறைமுகத்தில் ஹெல்லி என்னும் க்ரூயிஸரை இதாலியர்கள் மூழ்கடித்தபொழுது, வெடி குண்டுகளின் சிதல்கள் இதாலியர்களைச் சேர்ந்தவைகளென்று தெரிந்த அளவில், அவைகளை கிரேக்கர்கள் மறைத்துவிட்டார்கள்.

இதைச் செய்திராவிட்டால், கிரீஸ் தேசமானது இதாலியர்களோடு சண்டை செய்ய ஆரம்பிக்கவேண்டிவரும். இம்மாதிரி யுத்தத்தைத் தனிப்பட்டோ அல்லது பால்கன் நாடுகள், பிரிடிஷார் இவர்களுடன் சேர்ந்துகொண்டோ துவக்குவதில் கிரீஸுக்கு அபிப்பிராயம் இல்லை. ஐரோப்பாவில் ஒரு மூலையிலிருக்கும் இந்தச் சிறிய தேசத்தில் அமைதி வேண்டுமென்பது அதன் விருப்பம். கிரீஸின் தேசஅமைப்பிலிருந்து தரையில் ஜெர்மனியின் விரோதத்தையாவது, கடல் பக்கத்தில் பிரிடிஷாரின் எதிர்ப்பையாவது விலைக்கு வாங்குவதாக கிரீஸுக்கு உத்தேசமில்லை.

## இரண்டு கையொப்பங்கள்.

அமைதி அபிப்பிராயங்கள் வீண், இதாலியிடமிருந்தும், பிரிடிஷாரிடமிருந்தும் கிரீஸின் க்ஷேமத்தைப் பாதுகாக்கிறோம் என்று உறுதிமொழிகள் எழுத்து மூலமாய் கிடைத்திருந்தன. ஆகிலும் இதாலியர்கள் சமீபத்தில் கிரீஸைத் தாக்கப் போகிறார்கள் என்று, தெளிவான அடையாளங்கள் கிரீஸுக்குக் கிடைத்தும் கையொப்பங்களில் ஒன்று பிரயோசனமற்றதென்று அதற்கு நன்றாய்த் தெரிந்தும், அது வேறுபக்கம் நோக்கவில்லை. அப்பொழுதும் நீங்கள் அறிந்த வண்ணம் உங்களைத்தான் அணுகிற்று.

உங்களுடைய ரக்ஷணையை கிரீஸ் வேண்டிக்கொண்டது. உங்களுடைய மறுமொழி என்ன என்று ஸ்பஷ்டமாக எனக்குத் தெரியவில்லை. ஆகிலும் எங்களுடைய கீர்த்திவாய்ந்த தலைவரான ஜெனரல் மெடாக்ஸாஸ் அறிவித்தபடி, நாங்கள் இதாலிக்குக் கோபம் உண்டாகும்படியாக மேன்மேலும் நடந்துகொள்ளக்கூடா



தென்றும் விசேஷமாக சைனியங்களை ஒன்று சேர்க்கக்கூடாதென்றும் எங்களுக்கு ஜெர்மனி பதிலளித்தது என்று தெரியவருகிறது. ஆகையால் நாங்கள் கோபம் மூட்டவில்லை. நாங்கள் சைனியங்களை ஒன்றுகூட்டவில்லை. நாங்கள் அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தோம். இதாலிய மந்திரி அவருடைய இறுதி உத்தரவை அனுப்பிய முதல் நாள்தான் அவர் எங்களிடம் வந்து அவர் கொடுக்கும் விருந்தை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார்.

## நீங்கள் அக்டோபர்மீ 28உயன்று ப்ளாரென்ஸிலிருந்தீர்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் நாங்கள் யாரை நாடுகிறதென்று உங்களுடைய அபிப்பிராயம். இதாலியர்கள் யுத்தம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். நீங்கள் அன்று காலை, அதாவது, அக்டோபர் 28-ந் தேதியன்று, ப்ளாரென்ஸில் வந்திருந்தீர்கள். கிரீஸ் தனிமையாக உதவியன்னியில் இருந்திருக்கமுடியுமா? அதற்கு கடற்படையுமில்லை; விமானப்படையுமில்லை; தளவாடங்களுமிலலை; ஐச்வரியங்களுமில்லை. ஆகையால், மற்றொரு வாருப்தாராகிய பிரிடனை கிரீஸ் நாடிவிட்டது. அவர்கள் நாடு முழுவதும் நெருப்புக் குண்டுகளால் நாசமாக்கப்பட்டு, அவர்களுடைய தற்காப்புக்கே போதுமான முஸ்தீபுகளில்லாதிருக்கும்பொழுது கூட பிரிடிஷார் எங்களுக்கு உதவ முன்வந்தார்கள்.

அவர்கள் யாதொருவிதமான எழுத்து மூலமான ஒப்பந்தங்கள் செய்துகொள்ளவேண்டுமென்று கேட்கவுமில்லை; விரும்பவுமில்லை. கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, பிரிடிஷ் விமானிகளோடு சேர்ந்துகொண்டு கிரேக்க சைனியங்கள், இதாலியர்களுடைய முரட்டுத்தனமான எதிர்ப்புள்ள யுத்த முனையில் யுத்தம் செய்ய ஆரம்பித்தார்கள்.

பிறகு என்ன ஆயிற்று என்பது உங்களுக்கும், எல்லா உலகத்துக்கும் வெளிப்படையாகத் தெரியும். இதாலியர்கள் ஒரு சிறிய பலமில்லாத எங்கள் கையில் அபஜெயமடைந்து வருகிறார்கள். ஆனாலும் போர் முனையில் பிரிடிஷார்கள் இதாலியர்களைத் தாக்கவில்லை. பிரிடிஷ் துருப்புகள் அல்பேனியாவில் இன்னும் கால் நாட்டவில்லை. அவர்களுக்கு ஒருவிதமான உயர் நோக்கங்களும் இல்லை, அவர்களுக்கு மனதில் கெட்ட எண்ணமுமில்லை. இதை இங்கு சொல்லவேண்டிய அவசியமுமில்லை. ஏனென்றால் நீங்களே வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருப்பதாக உத்தேசமென்று அறிவித்திருக்கிறீர்கள். "இது இதாலி சம்பந்தமானது. ஸலோனிகாவில் பிரிடிஷ் துருப்புகள் இறங்கினாலொழிய நான் இதில் தலையிட்டுக் கொள்ளமாட்டேன்" என்றும் சொன்னீர்கள்.

## இதாலியர்கள் அவர்களை முட்டாளாக்கிவிட்டார்கள்.

"ப்ளாரென்ஸில் நீங்கள் வந்திருந்தீர்களே? எதற்காக. இதாலியர்கள் எங்களைத் தாக்கிய தினத்தன்று நீங்கள் ஆர்னோ நதிக்கரையில் இதாலியர்களுடன் பேசினீர்களே? அந்த சமயம் கிரீஸ் தேசத்தை இதாலியர்களிடம் ஒப்புவிக்கவில்லையா?" என்று நாங்கள் கேட்டிருக்கலாம். ஆனாலும் அம்மாதிரியான

கேள்விகளை நாங்கள் கேட்கவில்லை. எங்களில் இங்கிதம் தெரியாத சிலர் எங்களை ஞாபகப்படுத்தியபொழுது, "இதாலியர்கள் அவர்களை முட்டாளாக்கிவிட்டார்களென்று" தான் நாங்கள் பதிலளித்தோம்.

இதுவும் எங்களுக்குச் சாதகமாகத்தான் ஆயிற்று. வருஷப்பிறப்பன்று ஆதென்ஸ் நகரில் உங்கள் அந்நிய நாட்டு மந்திரி நிலயத்தில் ஜெர்மனியின் கொடிகள் பறந்தன. ஜெனரல் மெடாக்ஸாஸ் அத்யாவஸ்தையிலிருக்கும் தருவாயில் அந்தக் கொடி பாதி கீழே தணித்துக் கட்டப்பட்டிருந்தது. உங்களுடைய மந்திரி, எங்கள் தேசத்து புது மந்திரிக்கு நல்வரவு உபசாரங்கள் அனுப்பினார். இரு தேசத்தாருக்குமுள்ள வர்த்தக நடவடிக்கைகள் மறுபடியும் புதுப்பிக்கப்பட்டன. நீங்களே ஒரு சமயம், அதாவது, அல்பேனியாவில் ஜெர்மனியின் மோட்டார் பீரங்கி வண்டிகள் வந்துவிட்டன என்று ஒரு அமெரிக்கப் பத்திரிகை வெளியிட்டபொழுது, கடுமையாக ஆக்ஷேபித்திருக்கிறீர்கள். எல்லாம் நல்லதுதான். பிரிடிஷ்காரர்கள் எங்களுக்கு விமானங்களும், கடற்படையும் கொடுத்து ஒத்தாசை செய்தார்களே தவிர வேறில்லை. இங்கு ஒரு விஷயம் அறிவிக்க விரும்புகிறேன். ஸலோனிகா என்னுமிடத்தில் ஒரு பிரிடிஷ் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டபொழுது, பிரிடிஷ்காரர்கள் அதை எடுத்து அப்புறப்படுத்தக் கூடாதென்று நாங்கள் எச்சரித்துவிட்டோம். ஏனென்றால், பத்து பிரிடிஷ் துருப்புகள் அவ்விடத்தில் இறங்கினாலும், உங்களுக்குக் கோபம் உண்டாகி விடுமோவென்று நாங்கள் பயந்தோம்.

## கிரீஸின்மேல் படையெடுக்கவேண்டிய அவசியம்.

ருமேனியாவிற்குள் ஜெர்மன் துருப்புகள் புகுந்ததையும், பிறகு பல்கேரியாவிலுள்ளவர்கள் உடன்கையின்பேரில் பல்கேரியாவுக்குள் பிரவேசித்ததையும், கடைசியாக கிரீஸின் எல்லைச் சரகங்களில் அவர்கள் வந்திருப்பதையும்பற்றி கிரேக்கர்களுக்கு சந்தேகம் உண்டாகியிருக்கிறதென்று அந்த நிருபர் எழுதுகிறார். கடிதத்தில் பின்னும் உள்ள விஷயங்கள்.

தந்திக் கம்பிகள் இல்லாத சாதனத்தின் மூலமாக ஜெர்மானியர்கள் கிரீஸின் மேல் படையெடுக்க யோசனை செய்கிறார்களென்று பிரசாரம் செய்யப்பட்டது. ஏன் அப்படி படையெடுக்கவேண்டுமென்று நாங்கள் கேட்கிறோம். அச்சுநாடுகளின் மேன்மைக்கு கிரீஸின்மேல் யுத்தம் அவசியம் என்று ஆரம்ப காலத்தில் தெரிந்திருந்தால், ஜெர்மானியர்களும், இதாலியர்களும் சேர்ந்து கிரீஸைத்தாக்கியிருக்கலாம். அப்படி ஏற்படாததிலிருந்து கிரீஸைத்தாக்குவது அச்சு நாடுகளுக்கு அவசியமில்லையென்பது நிச்சயம். இப்பொழுது என்ன அவசியமென்று பார்ப்போம்.

## 450 லக்ஷம் ஜனங்களுக்கு உதவி தேவை.

ஜெர்மனிக்கு எதிராக பால்கன் நாடுகளில் ஒரு ஏற்பாட்டைச் செய்யாதவண்ணம் தடுப்பதற்காகவா? ஸெர்பியாவிலும், துருக்கியிலும் யுத்தத்தைப் பரவும்படி செய்ய ஒரு முகாந்திரமுமில்லையே.



ஒருக்கால் அல்பேனியாவிலுள்ள இதாலியர்களைக் காப்பாற்றவேண்டியிருக்கலாம். ஆனால் ஜெர்மன் துருப்புகள் கிரீஸ் தேசத்துக்குள் நுழையுமுன் இதாலியர்கள் நன்றாகவும், மீளமுடியாதபடியும் தோற்கடிக்கப்பட்டுவிடுவார்கள். 80 லக்ஷம் சங்கியையுள்ள கிரேக்கர்களை 450 லக்ஷம் ஜனங்கள் தாக்கி, பின்னும் 850 லக்ஷம் ஜனங்களுள்ள ஒரு தேசத்தின் உதவியைத் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள அழைக்கிறதென்று உலகத்தார்கள் இகழமாட்டார்களா?

இதற்குப் பதிலாக "என்ன, உங்களுக்கு பிரிடிஷார் உதவி அளிக்கவில்லையா.' என்று நீங்கள் சொல்லக்கூடும். இவர்களை நாங்கள் அழைக்கவில்லையே. பிரிடிஷார் இங்கு வந்ததற்கு இதாலிதான் காரணம். அவர்களைப் போய்விடும்படி நாங்கள் உத்தரவு செய்யவேண்டுமென்கிறீர்களா? நாங்கள் அப்படியும் சொல்லிப் பார்க்கிறோம். நாங்கள் யாரைச் சொல்லுவது. உயிருடன் இருப்பவர்களையா? நிச்சயமாய் மலைச்சரிவுகளில் விழுந்துஇறந்தவர்களையும், அட்டிகாவில் காயம் அடைந்து இங்கே உயிர்துறந்தவர்களையும், தங்கள் வீடுகள் நெருப்புப் பிடித்து எரிந்துகொண்டிருக்கும்பொழுது, ஊரைவிட்டு இங்குவந்து மாண்டு போய் இவ்விடத்தில் புதைந்து கிடக்கிறவர்களையும்திரும்பிப்போகச் சொல்ல முடியாது.

## எபிரஸ் மலையில் தைரியமாய் நின்றதுபோல் திரேஸிலும் நிற்போம்.

மேன்மைதங்கிய ஹிட்லரே, நீங்கள் செய்திருப்பதுபோல் நாங்கள் அட்டூழியங்கள் செய்யவில்லை. நாங்கள் செத்துப்போனவர்களையாவது, அல்லது உயிரோடிருப்பவர்களையாவது தள்ளிவிடமாட்டோம். நாங்கள் நல்லகாலம் வரும்வரையிலும், இந்த புசல்காற்று ஓய்ந்துவிடும் வரையிலும் அவர்களைப்பாதுகாத்துவிடுவோம்.

உங்களைப்பற்றியோவென்றால், நீங்கள் கிரீஸுக்குள் புகுந்துவிடுவீர்களென்று அவர்கள் சதாகாலமும் சொல்லிக்கொண்டேயிருக்கிறார்கள். சரித்திரத்தில் கியாதிபெற்ற ஒரு ராணுவப்படை இம்மாதிரியான ஒரு இழிவான காரியத்தைச் செய்து தன்னுடைய பெயரைக் கெடுத்துக்கொள்ளுமென்று நாம் நம்பவில்லை.

ராணுவப்படைக்கும், பீரங்கிப்படைக்கும் பதிலாக கிரீஸ்தேசமானது, எல்லைப்புறங்களிலிருக்கும் சதுரவ்யூக சேனைக்கு காயம்பட்டவர்களும், காலில்லாதவரும், கையில்லாதவரும், ரெத்தவெள்ளம் பெருகிக்கொண்டும், சிகிச்சைக்காக கட்டுகள் கட்டிக்கொண்டுமிருக்கும் நபர்களடங்கிய 20,000 ஜனங்களை அனுப்பி உங்களை வரவேற்கும்படி செய்தால் உங்கள் சேனைகள் என்னசெய்யும்.

இப்பேர்ப்பட்ட ஒரு சேனையை நொருக்க ஒரு ஜெர்மன் சேனை தேவையா? எங்களுடைய சிறிய, ஆனால் தைரியம் வாய்ந்த துருப்புகள், எபிரஸ் மலைப் பிரதேசத்தில் ஊக்கத்துடன் எதிர்த்ததுபோல் திரேஸிலும் சண்டை செய்யும். அங்கேயே உயிரை மாய்த்துக்கொள்ளத் தயாராகவிருக்கும். இவ்விடத்தில் உங்களுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டேயிருக்கும். நீங்கள் தான் ஐந்து

வருஷங்களுக்குமுன் பெர்லினைவிட்டு ஓடிவந்து கிரீஸில் தேர்ச்சிபெற்று மறுபடியும் பெர்லினுக்குச்சென்று இப்பொழுது பெர்லின் பூராவும் ஒரு கிளர்ச்சியை உண்டுபண்ணி எங்கள் தேசத்துக்கும், தேசத்திலுள்ளவர்களுக்கும் அழிவு உண்டுபண்ண திட்டம் செய்திருக்கிறீர்கள். எங்கள் தேசம் சிறிதானபோதிலும் மிகவும் கீர்த்தி பெற்றுவிட்டது. எவ்விதமாக உலகத்திலுள்ளவர்கள் வாழ் நாட்களைக்கழிக்கவேண்டுமென்று கற்பிப்பதோடு எவ்விதம் நாங்கள் உயிர் துறக்கத் தயாராகவிருக்கிறோமென்றும் காண்பிக்கப்போகிறோம்.

---

## டானவனுடைய முக்கியமான அபிப்ராயங்கள்.

ஐரோப்பாவிலும் மத்திய கிழக்கிலும் நீடித்த சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு ஆங்காங்கு உள்ள தகவல்களை நன்றாய் அறிந்துகொண்ட கர்னல் டானவன் நியூ யார்க்குக்குத் திரும்பிவந்த பிறகு மார்ச்சுமீ 26-ம் தேதியன்று பகிரங்கமாக ஒலிபரப்பி சில விஷயங்களை வெளியிட்டார்.

**பிரிடன்.**—தங்களுக்கு யுத்தத்திலிருந்து அபாயமே நேரிடாதவர்கள்போல் பிரிடனில் ஜனங்கள் தங்களுடைய சொந்த அலுவல்களை நடத்திவருகிறார்கள் என்பதை கவனித்து வியப்படைந்தேன். நான் உங்களுக்கு அறிவிப்பதென்னவென்றால், பிரிடிஷ் ஜனங்களுடைய ஊக்கமும், தைரியமும், நெஞ்சொறப்பும் நம்பிக்கையைப் பற்றியும் திரு. சர்ச்சில் சொல்லியிருப்பது உண்மைதான்.

**ஆபிரிக்கா.**—பிரிடிஷார்கள் இங்கு ஒரு அறிய வேலையைச் செய்திருக்கிறார்கள். இந்த வேலையை உலகத்தார் கண்டுபிடிக்கவில்லை. இங்கு பிரிடிஷாருக்குக் கிடைத்த ஜயத்துக்குக் காரணம் இதாலியர்களின் திறமை குறைவினாலல்ல. பிரிடிஷ் சேனைத்தலைவரின் மேதாவித்தனத்தினாலும், யுத்த தந்திரத்தினாலும் ஏற்பட்டது தான்.

**ஜிப்ரால்டரும் மால்டா தீவும்.**—நான் ஜிப்ரால்டருக்குச் சென்றேன். அந்த மலையானது எவ்வளவு வலுவாக பலப்படுத்தப்பட்டிருக்கிறதென்று அறிந்து கொண்டேன். பிறகு மால்டா தீவுக்குச் சென்றேன். இரண்டு வாரங்களுக்குள் மால்டா தீவு விழுந்துவிடுமென்று இதாலியர்கள் சொன்னதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். ஆனாலும் 120 தடவை குண்டுகளால் அடிக்கப்பட்டும் அது இன்னும் தலை நிமிர்ந்து நிற்கிறது. இன்னும் உபயோகமுள்ளதாகவே இருக்கிறது.

**கிரேக்கர்கள்.**—பிரிடிஷார்கள் கிரேக்கர்களுக்கு பலமான பீரங்கிகளும் மோட்டார் பீரங்கிகளை தாக்கக்கூடிய பீரங்கிகளும் கொடுத்ததைத் தவிர கிரேக்கர்களிடம் தற்கால யுத்தத்துக்கு வேண்டிய ஆயுதங்கள் ஒன்றுமேயில்லை. இருந்தபோதிலும் அவர்கள் தைரியமாக யுத்தம் செய்ய ஆரம்பித்தார்கள்.

**துருக்கி.**—துருக்கி பிரிடனுடனிருக்கும் ஒரு நேசநாடு. சாத்துக் கதவு போலிருக்கும் பிரதேசத்தைப் பாதுகாக்கப் போகிறோம் என்ற எண்ணத்தினால் அவர்கள் கர்வமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.



**ஜெர்மன் யுத்தம்.**—இந்த யுத்தம் இங்கிலாந்துக்கும் ஜெர்மனிக்கும் தான் நடக்கிறதென்று அநேக ஜனங்கள் எண்ணுகிறார்கள். நாஸிகள் அபிப்பிராயப் படி இந்த யுத்தம் அப்படி நினைக்கத்தக்கதல்ல. ஜெர்மனியின் உலக ஆதிக்கத்துக்கு இடையூறாகயிருப்பவர்களில் இங்கிலாந்து ஒன்று. தன்னால் ஜயிக்கப் பட்ட ஒவ்வொரு தேசத்தினின்றும் ஜெர்மனிக்கு இரண்டு பலன்கள் கிடைக்கின்றன. ஜெர்மனிக்கு ஒரு ராஜ்ஜியம் சேர்ந்து விடுகிறது. அதன் மூலம் அடுத்த படியாக அபிவிருத்தியடைய சாதகமேற்படுகிறது.

இவைகளுக்கெல்லாம் இங்கிலாந்து தான் முக்கியமான முட்டுக்கட்டை. இங்கிலாந்து விழுந்துவிட்டால் ஜெர்மனிக்கு ஐரோப்பாவிலாவது மத்திய கிழக்கு பிரதேசத்திலாவது யாதொருவரிடமிருந்தும் பயப்படவேண்டியதில்லை. சாவகாசம் ஏற்பட்டபொழுது ருஷ்யாவைத் தாக்கக்கூடும். ஆனால் இங்கிலாந்து அபஜயமடையவில்லை. டங்கர்க் விழுந்த பிறகு 1940-ம் வருஷ வேனிர் காலத்தில் இருந்ததைவிட அது மிகவும் வலு அடைந்து விட்டது.

ஒவ்வொரு வாரமும் அதன் ஸ்திதி விருத்தியடைந்து வருகிறது. ஆனாலும் 1942-ம் வருஷம் தான் இங்கிலாந்தின் முஸ்தீபுகள் பூர்ணமாகத் தயாராகிவிடும். இவ்வருஷம் மிகவும் கஷ்டமானது. அபாயகரமானது. ஆனாலும் இங்கிலாந்து தைரியமாகத்தானிருக்கிறது.

## விஷயங்களை அமெரிக்கர்கள் கவனித்து வருகிறார்கள்.

ஐக்கிய நாடுகளில் வெளியாகும் டைம் பத்திரிகையில் பின்வருமாறு வியாக்யானமிருக்கிறது :—

பிரிடனுக்கு இப்பொழுது கப்பல்களின் அவசியம் அதிகமாக யேற்பட்டிருக்கிறது. ஆகிலும் ராஜவிசுவாசமுள்ள துலுக்கர்கள் மெக்காவுக்கு பிரிடிஷ் கப்பல்களில்தான் சமீபத்தில் பிரயாணமானார்கள். இவைகளுக்கு பிரிடிஷ் கடற்படை துணையாகச் சென்றது. இந்த பிரயானத்துக்கு அவர்கள் யுத்தத்துக்கு முன்னால் ஏற்பட்ட சத்தத்தைதான் கொடுத்தார்கள். கப்பல் முதலாளிகளுக்கு ஏற்படக்கூடிய நஷ்டங்களுக்கு அரசாங்கத்தார் நன்கொடை மூலம் ஈடுசெய்து விடுகிறார்கள்.

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

---

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### ஜோடிப்பு.

பெர்லின் தெருக்களில் ஜனங்கள் லக்ஷம் லக்ஷமாக நின்றுகொண்டு, ஆரவாரம் செய்து மத்ஸுவோகாவை வரவேற்றதாகச் சொல்லப்படுகிறது. இதன் உண்மை ஏற்கனவே டோக்கியோவுக்குச் செய்த மற்றொரு ஒலிபரப்பிலிருந்து வெளியாகிறது. பெர்லின் நகரத்தாரனைவரும் மத்ஸுவோக்காவை வரவேற்க வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டு, தொழிலாளிகளுக்கெல்லாம் அன்று பிற்பகல் விடுமுறை கொடுக்கப்பட்டது. ஆகையால் அனைவரும் வந்துதான் தீர வேண்டியிருந்தது.

### ஒலிபரப்பில் பித்தலாட்டம்.

மார்ச்சு 24-ம்தேதியன்று மால்டாவைப் படையெடுத்த ஜெர்மன் விமானங்களுக்கதிக நஷ்டமேற்பட்டது. அதை மறைக்கும் விதத்தைப் பாருங்கள் :—

ஒலிபரப்பு : 12-30 மணிக்கு : நமது ஸ்டுகோ விமானங்கள் சண்டை-விமானங்களோடு சேர்ந்து சென்றன. எதிரி விமானங்கள் எதிர்படவில்லை. ஆகையால் ஜெர்மன் விமானங்கள் திரும்பிவிட்டன.

ஒலிபரப்பு: 5-30 மணிக்கு : நமது அனுபவம்வாய்ந்த விமானிகள், தடுக்க வந்த பிரிடிஷ் விமானங்களைத் துரத்தி விட்டார்கள். 4 பிரிடிஷ் விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன.

ஒலிபரப்பு : 7-30 மணிக்கு : 6 ஜெர்மன் விமானங்கள் திரும்பவில்லை. இதற்குக் காரணம் இதாலிய விமானங்கள் துணை சென்றதுதான்.

உண்மையில், 14 ஜெர்மன் விமானங்கள் அன்று அழிக்கப்பட்டு மேலும் 6 விமானங்கள் பலமாய் பழுதுபட்டன. பிரிடிஷ் விமானங்களுக்குச் சேதமே கிடையாது.

### வியன்னாவும் நாஸிகளும்.

மார்ச்சு மாதம் 26-ம் தேதியன்று யூகோஸ்லாவியாவின் மாஜி மந்திரிகள் மூவரசு—ஒப்பந்தத்தில் கையொப்பமிடவந்த சமயத்தில் ஹிட்லரும் அங்கு வந்தபோது, ஆயிரக்கணக்கான ஜனங்கள் தெருக்களில் அவரை வரவேற்றதாயும், மற்றும் அநேகம் பேர்கள், அவரைப்பார்க்க அவர் ஜாகைக்கருகாமையில் மணிக்கணக்காகக் காத்திருந்ததாயும் ஒலிபரப்பப்பட்டிருக்கிறது.



சென்ற வாரம் வியென்னாவிலிருந்து, திரும்பி வந்திருக்கும் நியூயார்க் ஹெரால்ட் டிரிப்யூனின் நிருபர் சொல்லுவதிலிருந்து உண்மை வெளியாகிறது. ஆஸ்திரியத் துருப்புகளுக்கும், பொது ஜனங்களுக்கும் அமைதியில்லையாம். கலகம் வருமோ வென்று அநேகவிடங்களில் துருப்புகள் நிற்க வைக்கப்பட்டிருக்கின்றனவாம். உள்நாட்டு துருப்புகளை அப்புறப்படுத்திவிட்டு ப்ரஷிய, ஜெர்மானியத் துருப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றனவாம்.

இதிலிருந்து ஹிட்லரிடத்தில் வியன்னாக்காரர்களுக்கு அபிமான மில்லாதது தெரிகிறது.

ஒரு சமயம் கோயரிங்கின் மனைவி வியன்னா நாடகசாலைக்கு வந்து அரசருக்கான விடத்தில் இருந்தபோது 'உன் கணவனிருக்குமிடத்துக்குத் திரும்பிப்போ. உனக்குக்கிரீடமேது : எங்கே அதை திருடினாய்' என்று ஜனங்கள் கேட்டுப் பரிகசித்தார்கள்.

### யூகோஸ்லாவியாவைப்பற்றிய ஜெர்மன் பிரசாரம்.

யூகோஸ்லாவியாவில் ஏற்பட்ட ராஜாங்க புரட்சியைப்பற்றி இந்தியாவுக்குச்
செய்த வெள்ளிக்கிழமை நடுப்பகல் ஒலிபரப்பு அடக்கமாயிருந்தது. யூகோஸ்
லாவியின் அரசியல் மாறுதல் உள் நாட்டு சமாசாரமென்றும், வெளி நாட்டுச்
சிநேகத்தை பாதிக்காதென்றும் சொல்லப்பட்டது. அதே மாலையில் வெளிவந்த
ஒலிபரப்பில், ஜெர்மானியருக்கு விரோதமாக கலகமேற்பட்டிருப்பதாயும்,
பெல்கிரேடிலிருக்கும் ஜெர்மன் ஸ்திரீகளும், குழந்தைகளும் ஜெர்மன் ஸ்தானி
கருடைய கட்டடத்தில் அடைக்கலம் புகுந்ததாயும், இதைப்போன்ற மற்றச்
செய்திகளையும் சொல்லிற்று. இது அடிக்கடி திருப்பித் திருப்பிச் சொல்லப்
பட்டது.

யூகோஸ்லாவியாவில் அரசாங்க மாறுதலேற்படுவதற்கு முன், மூவரசு
ஒப்பந்தத்தில் யூகோஸ்லாவியா கையொப்பமிட்டது பிரிடனுக்குப் பெரிய
தோல்வியென்றும், இதாலிய ஏஜென்ஸியா ஸடிபாணி எழுதியபடி ஐரோப்பாவை
ரணகளமாக்கி, தான் அரசாள பிரிடன் கொண்ட எண்ணத்தை ஐரோப்பா
தடுத்து விட்டதற்கு அடையாளம் யூகோஸ்லாவியா கையொப்பமிட்டதென்றும்
ஒலிபரப்பிக்கொண்டிருக்கிறது.

### அட்லாண்டிக்கில் திரியும் ஜெர்மன் யுத்தக் கப்பல்கள்.

ஆர்க்ராயல் முதலிய பிரிடிஷ் யுத்தக்கப்பல்கள் பத்திரமாயிருக்கும்போதே
நாஸிகள் அவைகளைக்கவிழ்த்து விட்டதாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.
பிரிடனும் அதே மாதிரியாக ஜெர்மன் யுத்தக்கப்பல்களாகிய ஷார்ன் ஹார்ஸ்டும்,
நியஸ்னாவும் பத்திரமாய் அட்லாண்டிக்கில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும்போதே
அவைகள் அழிந்து விட்டதாக பிரிடன் கட்டி விடுவதாக மார்ச்சு 23-ல்
ஒலிபரப்பியிருக்கிறது.

பிரிடனுக்கு அந்த வழக்கமே கிடையாது. உண்மை பின் வருமாறு :—

## ஷார்ன் ஹார்ஸ்ட்

அழிந்துபோனதாக பிரிடன் இதுவரையில் சொன்னதில்லை. 1940-ஏப்ரல் 9-ல் நார்விக்குக்கப்பால் ஷார்ன் ஹார்ஸ்டின்மேல் பிரிடிஷ் கப்பல் ரினௌன் இரண்டு குண்டுகளைப்போட்டது. ஆனால் புகை மறைவில் நாஸிக்கப்பல் ஓடி விட்டதாகவும் சொல்லப்பட்டது. ஜுன் 22-ல் டிராண்டீம் பியர்டில் சுடப் பட்டதாக மறுமுறைசொல்லப்பட்டது. அப்பொழுது இரண்டு ஜெர்மன் டிஸ்டிராயர்களுடைய உதவியைக்கொண்டு, தடுமாறிக்கொண்டு, இந்தக்கப்பல் திரும்பியதாயும், அப்பொழுது பிரிடிஷ் விமானங்கள் துரத்தியதாயும், ஆனால், பிறகு கீல் துறைமுகத்துக்கு இது செல்ல, அங்கும் பிரிடிஷ் விமானங்களால் தாக்கப்பட்டதாயும், அப்போதைக்கப்போது நடந்த விவரங்கள் பிரசுரிக்கப்பட்டன.

ஏப்ரல் 9-ல் ஆஸ்லோபியர்டில், கரை பீரங்கிகளைக்கொண்டு நீயஸ் நாவை முழுகடித்ததாகச்சொன்னது உண்மையே. ஆனால், அப்பொழுதே முழுகடித்த கப்பலின் பெயரைப்பற்றிச் சந்தேகமேற்பட்டுவிட்டது. ஜெர்மானியர்களே நஷ்டமானகப்பலின் பெயர் ப்ளூஷர் என்றார்கள். இந்த விஷயமும் பிரிடிஷ் அறிக்கைகளிலும் இடைவிடாது குறிக்கப்பட்டது.

## பரஸன் தீவுகள்.

செங்கடலில் ஈமன்கரைக்கப்பாலுள்ள பரஸன் தீவுகளை பிரிடன் பிடித்துக் கொண்டதாயும், அதனால் ஸவுதி அராபியர்களுக்கு அதிகக்கோபமென்றும் மார்ச்சு 29-ல் இந்துஸ்தானியில் ஜெர்மனி ஒலிபரப்பிற்று. இத்தீவுகளை பிரிடன் பிடித்துக்கொள்ளவில்லையென்றும் இதைப்பற்றி ஸவுதி அரேபிய அரசாங்கம் ஆக்ஷேபிக்கவில்லையென்றும் கெய்ரோவிலிருக்கும் ஸவுதி அராபிய ஸ்தானிகர் மறுத்துவிட்டார்.

## ஜெர்மனியின் பயம்.

கடல் வழியாகச் சாமான்கள் வராததால், பிரிடனை விட, ஜெர்மனி நீடித்து சண்டை செய்ய முடியுமென்று ஒரு பிரஸீல் பத்திரிகை சொல்லுவதாக, இந்துஸ்தானியில், மார்ச்சு 25-ல் ஜெர்மனி ஒலிபரப்பிற்று. நீடித்த சண்டையென்றால் ஜெர்மனிக்கு பயம். இதற்காகவே ஸ்பெயின் பத்திராதிபர்களோடு பேசுகையில் டாக்டர் கோயபில்ஸ் யுத்தத்தை 1941-லேயே முடித்து விடுவதாக வாக்களித்தார். "நன்றாய் பழக்கப்பட்ட சிப்பாய்களும், உயர்தர யுத்த தளவாடங்களும் இப்பொழுது நமக்கிருக்கின்றன. சண்டை நீடித்தால் இந்த உயர்வு போய்விடும், நமது திட்டப்படி சண்டை செய்யமுடியாது" என்று பிரெஸ்லா நாக்ரிக்டன் என்ற நாஸிபத்திரிகையே எச்சரிக்கிறது.



## அமெரிக்காவுக்கு பிரிடிஷ் ராணுவ நிலயங்களின் குத்தகை.

அட்லாண்டிக் சமுத்திரத்திலுள்ள சில பிரிடிஷ் நிலயங்களை யுனைடட் ஸ்டேட்ஸுக்கு குத்தகைக்கு விட்டிருப்பதை பிரிடிஷ் சாம் ராஜ்ஜியம் இவைகளை ஏலம் போட்டதாக மாற்றி, மார்ச்சு 27-ல், ஜெர்மனி ஒலிபரப்பிற்று. அமெரிக்காவிலிருந்து வாங்கும் சாமான்களுக்கு விலை கொடுக்கச் சிலவற்றை விற்பது நாணயமாகும், ஆனால் மேற்கு இண்டீஸிலோ மற்ற எந்தவிடத்திலோ பிரிடிஷ் பிரஜைகளொருவராவது மற்றொரு அரசாங்கத்துக்கு மாற்றப்பட வில்லை. மேலும் எதிர்காலத்தில் வரக்கூடிய ஆபத்தை முன்னிட்டு, பிரிடனும், யுனைடட் ஸ்டேட்ஸும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள, யுனைடட் ஸ்டேட்ஸுக்கு இம்மாதிரி வசதிகளைச் செய்து கொடுப்பதும் அவசியமாகும்.

# முக்கியமான விளம்பரம்.

## யுத்த சம்பந்தமான புகைப்படங்கள்.

ா-தர்பார் அவர்கள் உத்தரவின் பேரிலும், அவர்களின் அன்பார்ந்த உதவியின்பேரிலும், புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயத்தின் மெம்பர்கள் இதுமுதல் பிரசங்கங்களுக்கு வெளியூர்களுக்குப்போகும் காலத்தில்யுத்தத்தின் வெவ்வேறு அம்சங்களை விளக்கிக்காட்டக்கூடிய புகைப் படங்களின் கோர்வைகளையும் எடுத்துக்கொண்டு போய் ஜனங்களுக்குக் காண்பிக்க வசதி ஏற்பட்டிருக்கிறதென்று யுத்த அறிக்கை நிலயம் சந்தோஷத்துடன் அறிவிக்கிறது.

இந்த நிகழ்ச்சிகள் யுத்தம் நடக்கும் பிரதேசங்களில் 'இருபதாவது நூற்றாண்டு பாக்ஸ் பிலிம் கம்பெனி'யாரால் எடுக்கப்பட்ட புகைப்படங் களும், பம்பாய் துரைத்தனத்தாரைக்கொண்டு இந்திய கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கும் ஒரு சங்கத்தாரால் இந்தியா சம்பந்தமான சில விஷ யங்களைப்பற்றி தயாரிக்கப்பட்ட புகைப்படங்களும் சேர்ந்தவைகள். ஒவ் வொரு நிகழ்ச்சியிலும் மூன்று தனித்தனிப் படங்கள் காட்டப்படும். இந்தப் படங்கள் காண்பிப்பதால் யுத்த அறிக்கை நிலயத்தின் பிரசங்கங்களுக்கும், மேற்படி நிலயத்தின் வாரப்பதிப்பு புஸ்தகத்துக்கும் அதிக மதிப்பு ஏற் படக்கூடுமென்று யுத்த அறிக்கை நிலயம் நம்புகிறது.

புதுக்கோட்டையின் யுத்த நிதிக்காக உழைத்துவரும் கமிட்டியார் யுத்த அறிக்கை நிலயத்திற்கு ஒரு மோட்டார் வண்டியை நன்கொடை அளித்திருக்கிறார்கள். இந்த வண்டியில் புகைப்படம் காண்பிக்கக்கூடிய யந்திரங்களையும், திரைகளையும், புகைப்படங்களையும் பிரசங்கம்செய்யும் ஸ்தலங்களுக்கு எடுத்துச்செல்ல சௌகரியமாயிருக்கும். ஆனால், இம்மாதிரி புகைப்படங்களோடுகூடிய பிரசங்கங்களைச்செய்ய வசதி ஏற்படுத்திக் கொள்ளவும், ஒவ்வொரு இடத்திலும் மாதாமாதம் ஒவ்வொரு புதிதான படக்கோர்வையைக்காண்பிக்கவும், பிரசங்க ஸ்தலங்களையும் அறுபது இடங் களுக்கு அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டை ஸமஸ்தான வாசிகள் முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டியவைகள் என்ன வென்றால் :—

(*a*) பிரசங்கங்கள் சாதாரணமாக **மாலை 6** அல்லது **6-30 மணிக்குத் துவக்கப்படும்.**

(*b*) யுத்த அறிக்கை நிலயத்தின் மோட்டார் ஒருநாளில் இரண்டு ஊர்களுக்குச்செல்ல வேண்டியிருப்பதால் பொதுஜனங்கள் **தவராமல் குறிப்பிட்ட டயத்தில்** பிரசங்கம் செய்யப் போகுமிடத்தில் ஆஜராகியிருக்க வேண்டும்.

இந்தப்படங்களை ஆயிரம் பேர்களுக்குக்குறையாமல் சௌகரியமாய்ப் பார்க்கக்கூடுமென்று அனுபவத்தில் தெரிகிறது. ஆகையால் உங்கள் கிராமத்தில் பிரசங்கம் செய்யப்படுமென்று பிரசுரம் செய்த அளவில்,

**அந்த இடத்தில் கூடுங்கள்,**
**சரியானபடி குறிப்பிட்ட டயத்தில் வாருங்கள்.**



# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் XXXIX.

| 1941— | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| ஏப்ரல் | ...12, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... மாலை | 6.30 |
| | 13, | ஞாயிற்றுக்கிழமை. | திருவப்பூர் | ... ,, | 5.00 |
| | | | வயலோகம் | ... ,, | 6.00 |
| | | | குடுமியாமலை | ... ,, | 6.30 |
| | 14, | திங்கட்கிழமை ... | திருமயம் | ... , | 6.00 |
| | | | கோனாபட்டு | ... ,, | 6.30 |
| | 15, | செவ்வாய்க்கிழமை. | நச்சாந்துபட்டி | ... ,, | 6.00 |
| | | | விராச்சிலை | ... ,, | 6.30 |
| | 16, | புதன்கிழமை ... | ராஜகிரி | ... ,, | 6.00 |
| | | | விராலிமலை | ... ,, | 6.30 |
| | 17, | வியாழக்கிழமை. | பனையப்பட்டி | ... ,, | 6.00 |
| | | | ராங்கியம் | ... ,, | 6.30 |
| | 18, | வெள்ளிக்கிழமை... | புதுப்பட்டி (பொன்னமராவதி). | ,, | 6.00 |
| | | | வேந்தம்பட்டி | ... ,, | 6.30 |

## பிரஸங்கம் XL.

| | | | | |
|---|---|---|---|---|
| 19, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... மாலை | 6.30 |
| 20, | ஞாயிற்றுக்கிழமை. | கீரப்பழனி | ... ,, | 6.00 |
| | | ஆலூர் | ... ,, | 6.30 |
| 21, | திங்கட்கிழமை ... | வாளரமாணிக்கம் | ... ,, | 6.00 |
| | | ஏம்பல் | ... ,, | 6.30 |
| 22, | செவ்வாய்க்கிழமை. | அன்னவாசல் | ... ,, | 6.00 |
| | | கீழக்குறிச்சி | ... ,, | 6.30 |
| 23, | புதன்கிழமை ... | கோட்டைக்காடு | ... ,, | 6.00 |
| | | காரம்பக்குடி | ... ,, | 6.30 |
| 24, | வியாழக்கிழமை ... | குழிபிறை | ... ,, | 6.00 |
| | | சுந்தரம் | ... ,, | 6.30 |
| 25, | வெள்ளிக்கிழமை... | ஆலங்குடி | ... ,, | 6.00 |
| | | ராசியமங்கலம் | ... ,, | 6.30 |
| 26, | சனிக்கிழமை ... | ராமச்சந்திரபுரம் | ... ,, | 6.00 |
| | | ராயவரம் | ... ,, | 6.30 |

புதுக்கோட்டை ஸமஸ்தானம்

யுத்த நிதிக்காக போடப்படும்

# அதிர்ஷ்டச் சீட்டு.

(ஸ்ரீ-தர்பாரவர்கள் உத்தரவின்பேரிலும் ஆதரவின்
பேரிலும் புதுக்கோட்டை யுத்தநிதி எண்டெர்
டெயின்மெண்ட் கமிட்டியாரால்
நடத்தப்படுகிறது.)

---

## இந்த யுத்த நிதியை ஆதரியுங்கள்

டிக்கெட்டுகளை வாங்குங்கள்

**முடிவு தேதி 15—6—41**

**சீட்டு குலுக்கும் தேதி 23—6—41**

---

நமது மன்னர் அவர்களின் வருஷவர்த்தனை தினத்தன்று
அதிர்ஷ்டசாலிகளுக்கு ஏராளமான பரிசுகள்.

## 300 பரிசுகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1-வது பரிசு | | ரூபாய் | 7,500 | |
| 2-வது பரிசு | | ,, | 5,000 | |
| 3-வது பரிசு | | ,, | 2,500 | |
| 2 பரிசுகள் | | ,, | 1,000 | விதம் |
| 5 | ,, | ,, | 500 | ,, |
| 90 | ,, | ,, | 100 | ,, |
| 100 | ,, | ,, | 50 | ,, |
| 100 | ,, | ,, | 15 | ,, |

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—12-4-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் வருஷம் ஏப்ரல்மீ 19உ [நெ. 40.

பிரஸங்கம் XL.

## நாஸிகளின் பிரசாரம்.

நாஸிகளின் உயிர் மூச்சுக்காற்று பிரசாரமாகும். நாஸிகள் அதிகாரத்திற்கு வந்ததும், அதை நிலை நிறுத்தி வருவதும் பிரசாரத்தாலேயே. உலகம் முழுவதும் தங்கள் கொடுக்குகளை வீசி அதை பரவச்செய்வது பிரசாரம் மூலமேயாகும். தங்கள் நடத்தையின் ஆரம்பகாலத்திலேயே, நாஸிகள் வேறு எதைக் காட்டிலும் பிரசாரமே தங்கள் அமைப்பின் விருத்திக்கும், பலத்திற்கும், பரவலுக்கும் நிச்சய வழியாக இருந்துவருவதை உணர்ந்தார்கள். அவர்கள் பிரசாரத்தை ஒரு நுண்ணிய சாஸ்திரமாக ஒழுங்குப்படுத்தி விரியச் செய்துவருகிறார்கள். தற்சமயத்தில், அநேகமாய் பார்க்கப்படாமலும் சந்தேகிக்கப்படாமலும், ஜெர்மானியர், அமைப்பில், பிரசாரமில்லாத ஒரு மூலையும் உலகத்தில் இராதென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

### இதன் அடிப்படையான அம்சங்கள்.

2. நாஸிகளின் தத்துவங்களை அடியில் வருமாறு சுட்டிச்சொல்லி விடலாம்:—

(a) அவர்கள் (ஜெர்மானியர்கள்) உலகத்தில் மற்ற எல்லா மனிதர்களையும் விட எல்லா பாகத்திலும் சந்தேகமில்லால் உயர்ந்தவர்கள் என்பதும்,

(b) அவர்களே உலகத்தை ஆள நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள், மற்றெவர்களும் அவர்களுக்கு அடிமைகளாவார்கள் என்பதும்,

(c) இந்த எண்ணத்தைப் பூர்த்தி செய்வதில் ஒரு சங்கைக்கும் இடங் கொடுக்கவேண்டாம் என்பதே.

"முடிவே வழிகளை நியாயப்படுத்துகிறது" என்ற பழமொழி இவர்களின் மேற்கோள் என்று நாம் நிச்சயமாக சொல்லச் செய்யலாம்.

## தேசீய பிரசாரம்.

3. நன்றாக ஆளப்படும் சுயேச்சையுள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் வெளி நாடுகளில் நடக்கும் சம்பவங்களைப்பற்றி நிஜமான விதம் விஷயங்களைத் தெரிந்து கொள்ள ஒருவித ஏற்பாடு அவசியமென்பது ஒப்புக்கொள்ளத் தக்கதே. அயல் நாடுகளுக்கு ஸ்தானீகர்களையும் மந்திரிகளையும் அனுப்பச்செய்வது மூலம் இந்தக் காரியத்தை சித்தித்துக்கொள்வது சாதாரண வழியாகும். ஆனால் நாஸிகளோ சாதாரண மார்க்கங்களுடன் திருப்தியடையக் கூடியவர்களல்ல.

## "ஐந்தாம் படை" மூலஸ்தானம்.

4. ஜெர்மன் ராஜாங்கத்தில் வெளிநாட்டு பிரசாரத்தை பரிபூர்ணமாய் நடத்தச்செய்ய ஒரு மத்திய அமைப்பு இருந்துவருகிறது. ஜெர்மன் ராஜாங்கத்தின் இந்த பாகம் மிகவும் பெரிதாய், வெளிநாட்டு இலாகா, சண்டை இலாகா, ஜெஸ்டாபோ இவைகளை அற்பமாக காட்டச் செய்கிறதென்று உண்மையாகச் சொல்லலாம். ஜெர்மனியில் ஹிட்லர் அதிகாரத்திற்கு வந்தது பெரும்பாலும் நன்றாக ஏற்பாடு செய்யப்பட்டதும், தந்திரமானதும், அடாது நடத்தச் செய்த பிரசாரத்தாலேயேயாகும்.

## பிரசாரம் பெரிய "பி" உடைந்தது.

5. டாக்டர் கோயபல்ஸின் வருதிப்படி நடத்தப்பட்டுவரும் பிரசார மந்திரி சபை ஜெர்மனியின் அபிப்பிராயத்தை ஒரு வழிப்படுத்துவதுடன், உலகத்தின் எல்லா பாகங்களிலுமுள்ள பத்திரிகை நிருபர்களை அடக்கிக்கொண்டுவரும் தொழிலையும் கொண்டிருக்கிறது. "பற்பல அன்னிய நாடுகளிலுமுள்ள 300-க்கு மேற்பட்ட ஜெர்மன் பத்திரிகைகளை அது அடக்கியாளுவதாகச் சொல்லப்படுகிறது; தூரக்கி-ழக்கு, தென் அமெரிக்கா போன்ற தள்ளிக்கிடக்கிற இடங்களிலுள்ள பத்திரிகைகளுக்கும்கூட தன் சொந்த பத்திரிகை நிருபர்கள் மூலம் விஷயங்களை நிரப்பச் செய்துவருகிறது. டச்சுக் கிழ இந்தியா வரை சமாசாரங்களை அனுப்புவதற்கு விசேஷ முயற்சி எடுக்கும் அநேக ஒலிபரப்பு ஆலயங்களை அது கட்டளையிட்டுவருகிறது. ரீச்சுக்குச் சொந்தமான எல்லா நீராவிக் கப்பல்களையும், மற்றும் ஏராளமான பிரயாண காரியாலயங்களையும் அது உபயோகப்படுத்திக்கொள்ளுகிறது." அந்நிய நாடுகளிலுள்ள ஜெர்மன் பத்திரிகைகளின் நிருபர்கள் அங்கங்கேயுள்ள எல்லா ஜெர்மன் ஸ்தானீக காரியாலயங்களுக்கு முக்கிய சேர்மானமாகயிருப்பதுடன், மேற்படி காரியாலயங்களும் ஜெர்மனியிலுள்ள பிரசார மந்திரி சபையால் அடக்கியாளப்பட்டுவருகிறது. இந்த சங்கம் துஷ்டபிரசாரங்களை தவிர்க்கவும், அந்நியநாட்டு பத்திரிகாசிரியர்களை கைவசப்படுத்தவும், அந்நிய பத்திரிகைகளை ஜாக்கிரதையாக கவனிக்கச் செய்து,



அவைகளில் "ஏதாவது வேண்டாத சமாசாரங்கள் இருக்குமானால், ஜெர்மனிக்கு வந்தவுடன் அவைகளை ஜப்தி செய்து கைப்பற்றிவிடவும் கருத்துடையதாக இருக்கிறது."

## நெசவு.

6. அந்நிய நாடுகளில் ஒரு விசாலமானதும் பின்னல் வலைபோன்ற சங்கங்களை துவக்கியிருப்பதுடன், இவைகள் அந்தந்த இடங்களில் நாஸிதத்துவங்களை சரிவர பரவச்செய்யும் காரியங்களை மேற்கொண்டிருக்கிறது. அந்நிய நாடுகளில் பிரசார காரியங்களை நடத்த மனிதர்களை தயார் செய்வதற்கு ஜெர்மனியில் அநேக விசேஷ காரியாலயங்களிருக்கிறது. பெர்லினில் ஒரு பள்ளிக்கூடம் டாக்டர் ரோஸன்பர்க்கு என்பவர் ஆதீனத்தில் இருந்துவருகிறது. ஒரு துறைமுகத்தொழில் சங்கத்தின் கப்பலோட்டி பாகம் நாஸிக் கல்வியை வெளிநாடுகளில் திருட்டுத்தனமாய் கொண்டு சேர்க்கவும், ஜெர்மனிக்குள் விரோதமான கல்வி பிரசாரங்கள் வராமலிருக்கும்படி தடுக்கவும், ஜெர்மன் கப்பல்களிலுள்ள பிரயாணிகளை கவனிக்கச் செய்து, தன் ராஜாங்கத்தின் கோபத்திற்கு ஆளான ஜெர்மானியனை வழிமறித்து பிடித்து தன் தாய் நாட்டிற்கு சிக்ஷைக்காக திருப்பிக்கொண்டுவரவும் வேலை செய்துவருகிறது. ஜெர்மன் வியாபாரக் கப்பல் கூட்டம் பூராவும், மற்றும் ஜெர்மன் கடற்படையும், இந்த காரியங்களுக்காக ராஜ்ஜியத்தின் ஹவாலில் இருந்துகொண்டுவருகிறது ஜெர்மனியில் மத்திய அதிகார சங்கம் "வர்பிண்டங் ஸ்டாப்" என்ற பெயருடன் ஒன்றிருக்கிறது. அதன் முக்கிய தலைவர்கள் டாக்டர் கோயபல்ஸ், ஹர்வான் ரிப்பன்டிராப், டாக்டர் ரோஸன்பர்க் ஆவார்கள், அவர்கள் வருதிக்குள் ஒரு சைனியம் 25,000-துக்கு மேல்பட்ட காரியஸ்தர்கள் சம்பளத்துடனும் சம்பளமில்லாமலுமிருந்துவருகிறார்கள். 1937-ம் வருஷத்தில் இந்த இலாகாவின் செலவு 210 லக்ஷம் பவுன்கள். இதில் ஜெர்மனிக்குள் நடத்தப்படும் பிரசாரத்தின் செலவு 120 லக்ஷம் பவுன்கள் அடங்கியதல்ல.

## இறுதி அபிப்பிராயம்.

7. இந்த எல்லாப் பிரசாரங்களின் கருத்து ஜெர்மனிக்கு சாதகமான தத்துவங்களை உண்டாக்கி, பரவச்செய்து நிலைநிறுத்துவதேயாகும். பொதுவாக இதன் தாத்பரியம் என்னவென்றால், ஜெர்மானியர்கள் பூரா உலகத்தையும் அடக்கி ஆளுவதுடன், ஜெர்மனல்லாத மற்றவர்களை கேவலமான அடிமை நிலைக்குத் தள்ளச் செய்வதுதான்.

8. இந்தத் தத்துவத்திற்கு தேசாசார ஸர்வ ஜன ஆஸ்தி சமக்கொள்கை என்று பட்டயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ஏகாதிபத்தியத்தின் க்ஷேமங்களையும், குடியரசு ஆக்ஷியின் கெடுதல்களையும், "ஆரிய" ஜாதியின் மேன்மையையும், நார்டிக் புராணத்தின் ரக்ஷக சௌந்தரியத்தையும், ப்யூரர் (Fuehrer)-ரின் தவறுதலின்மையையும், எல்லாவற்றிற்கும் மேலாக யூதர்களுடைய துர்நடவடிக்கைகளையும் பறையறையச் செய்கிறது. யூதர்களையே ராஜீய தந்திரத்தின் அதிருப்திக்கும், பொருளாதார நெருக்கடிக்கும், மற்றும் உலகத்தின் எல்லா பெரிய சங்கடங்களுக்கும் காரணமாக தூற்றச் செய்கிறது.

## வழிகள்.

9. தங்களுடைய காரிய சித்தியை உத்தேசித்து, உளவறிதல், பலாத்காரமாய் தூக்கிப்போதல், கொலை இக்காரியங்களை பிரசார சங்கங்கள் செய்யப் பின்வாங்குகிறதில்லை. மற்ற நாடுகளுக்கு ஜெர்மனி மூலம் செல்லும் கடிதங்கள் நாஸி அதிகாரிகள் திறந்து பார்க்க ஹேதுவாகும். எதிர்ப்பவர்களைப் பலாத்காரமாய் தூக்கிப்போவது ராஜாங்க ரீதிப்படி அனுமதிபெற்ற காரியமாகும். இது ஹாலண்டு, ஸ்விட்ஸர்லாண்டு, ஆஸ்திரியா, ஸெக்கோஸ்லோவோகிய, போன்ற அன்னிய நாடுகளில் நடந்துகொண்டுவருகிறது. யூதப் பத்திரிகை யாசிரியர் பர்த்தால்-டுஜாகப் என்பவர் ஸ்டிராஸ் பர்க்கிலிருந்து பேஸிலுக்கு ஏற்றிக்கொண்டு போகப்பட்டு, பிறகு 1935-ல் ஜஸ்டாபோ ஏஜெண்டு ஹான்ஸ் வீஸ்மன் என்பவரால் ஜெர்மனிக்கும் பலாத்காரமாய் தூக்கிப் போகப்பட்டார். ஹான்ஸ் வீஸ்மானின் அருந்தொழிலில் ஜெர்மன் ராஜாங்கத்தின் பல பகுதிகளும் உடந்தையாக ஒத்தாசை செய்தன. ஜோஸப் ஷிமிட் என்பவர் ஸெகோஸ்லோவேகியாவிலிருந்து ஜெர்மன் எல்லை பிராந்தியங்கள் வழியாக தூக்கிச்செல்லப்பட்டார். ருமேனியன் பிரதம மந்திரி எம். டியுகாவும் ஆஸ்டிரியன் பிரதம நியாயாதிபதி டாக்டர் டால்பஸ்ம் கொல்லப்பட்டதைப் போன்ற கொலைகள் எல்லாம் இவர்களின் யோஜனையின் பாகமாகும்.

## இதுவரை இதன் முடிவுகள்.

10. இந்த மந்திரி பிரசாரமே முதலில் ஆஸ்திரியா பேரிலும் பின்னிட்டு ஸெகோஸ்லோவேகியா பேரிலும் நாஸிகளுக்கு அடக்கியாள சாத்தியமுறச்செய்தது. சமீபத்தில் இந்தப் பிரசாரம் மூலியமாய் நாஸிகள், ருமேனியா, பல்கேரியா இவைகளில் உட்புகுந்த விதத்தை நாம் அறியச்செய்திருக்கிறோம். இருக்கும் ஏகாதிபத்திய ஆக்ஷியோ, அல்லது பயங்கர ஆக்ஷியோ (ருமேனியாவிலிருக்கும் இரும்புக்காவல்போல) பிரசாரமூலமே தூண்டப்பட்டும், ஜெர்மனியின் பணஉதவியால் கெட்டிப்படுத்தப்பட்டும், ஆங்காங்குள்ள ராஜ்ஜியங்களில் கலகமுண்டு பண்ணச்செய்தும், முடிவுநிலைமையில், நாட்டை ஜெர்மானியர் கைப்பற்றும்படி விட்டுவிடவும் செய்கிறது.

11. பால்கன் தீபகல்பத்தில் நாஸி பிரசாரமும் எப்பொழுதும் ஜெர்மானியர்களின் பொருளாதார சிக்கனத்தையே அனுசரித்ததாக இருக்கிறது. நாஸிகளால் உண்டாக்கப்பட்ட "பால்கன்" போன்ற சமாசாரப் பத்திரிகைகள் ருமேனியாவில் ஆரம்பம் செய்யப்படுகின்றன. இது மாதிரியான "நியூ ஆதீனர் ஸீடங்" என்ற மற்றொரு சமாசாரப் பத்திரிகை 1934-ம் ஆண்டில் கிரீஸில் ஆரம்பம் செய்யப்பட்டது. வெளி தேசங்களிலிருக்கும் ஜெர்மானியர்கள் ஜனத்தொகை எவ்வளவு குறைவாக இருந்தாலும் அவர்கள், சங்கீத சபை, விளையாட்டு சங்கங்கள் என்பது போல இன்னும் பல தோஷமற்ற சங்கங்களின் அங்கத்தினர்களாக ஒன்று சேர்க்கப்பட்டு அத்தேசத்தின் ராஜாங்கத்திற்கு விரோதமாக புரட்சி செய்யும்படி ஜெர்மனியிலிருந்து பூர்ண சகாயத்துடன் தூண்டப்படுகிறார்கள்.



ஐரோப்பாவில் பால்டிக் நகரங்கள், ஸ்காண்டிநேவியா, ஹாலந்து, பெல்ஜியம் பிரான்ஸ், ஸ்விட்ஸர்லாந்து, ஸ்பெயின், இதாலி, முதலிய தேசங்கள் இத்தகைய பிரசங்கங்களால் வெற்றிகரமாகவே அழிக்கப்பட்டிருக்கின்றன, இப்பிரசங்கத்தினால் மிகவும் குறைவாக பாதிக்கப்பட்ட தேசம் இங்கிலாந்து என்றே சொல்லலாம். இருந்தபோதிலும் இங்கேயும் பிரிமன்மிட் பாண்ட்ஸ், மாஸ்லிஸ் போன்றவர்களிருக்கிறார்கள். இந்த நாஸிகளின் நீண்ட கொடுக்குகள் ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு தேசங்களிலும், இன்னும் அமெரிக்கா, ஆபிரிக்கா முதலிய கண்டங்களிலும் வியாபித்திருக்கின்றன. ஜஸ்டாபோவின் இருப்பிடமான பெர்லினில், ஜெர்மனிக்கோ அல்லது தேச சர்வ ஜன சமத்துவக் கொள்கைக்கோ நாளது வரையும் விரோதமாக இருப்பவர்களின் ஜாபிதா ஒன்று விவரமாக பரிபாலிக்கப்பட்டு வரப்படுகிறது. இது போலவே நாஸிகளுக்கு யார் நேசர்களோ அல்லது யாருடைய உதவியை அவர்கள் அடைய முடியுமோ, அவர்களுடைய ஜாப்தா ஒன்றும் அங்கே பரிபாலிக்கப்பட்டு வரப்படுகிறது.

## ஐரோப்பாவிற்கு வெளியில்.

12. எகிப்து, அரேபியா, பாலஸ்டைன் இவைகளில் ஜெர்மானியர்களின் பிரசாரம் அதிக செல்வாக்குள்ளதாக இருப்பதாகத் தெரிகிறது. தென் ஆபிரிக்காவில் ஒரு நாஸி சங்கம் ஏற்படுத்தப்பட்டு அதின் அங்கத்தினர்களிடம் அடால்ப் ஹிட்லருக்கு ராஜ பக்தி பாராட்டவேண்டுமென்றும், அவனால் நியமிக்கப்பட்ட தலைவர்களுக்கு கீழ்படிய வேண்டுமென்றும் உறுதிமொழி வாங்கப்படுவதாக தெரிகின்றது. இந்தச் சங்கமானது இவ்வளவு வெளிப்படையாகவும், சிறந்ததாகவுமிருந்ததால் இதன் விரோதமான நடவடிக்கைகளை ஒழிக்க ஒரு விசாரணை கோஷ்டி ஏற்படுத்தும்படி நேர்ந்தது.

## அமெரிக்கா.

13. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இந்த நாஸி பிரசாரம் 1934-ம் ஆண்டின் துவக்கத்திலேயே அதி விஸ்தாரமானவும், பயங்கரமானவுமான நிலைமையை அடைந்துவிட்டபடியால் பிரதிநிதி சபையார் ஒரு தனி கோஷ்டி இப்பிரசாரத்தின் தீய நடவடிக்கைகளை விசாரிக்க ஏற்படுத்தினார்கள். இந்த கோஷ்டி விடுத்த அறிக்கையிலிருந்து வெளியான விஷயமென்னவெனில், "புது ஜெர்மனி நேசர்கள்" "வெள்ளிச் சட்டைகள்" என்பது போன்ற அநேகம் வெளிக்குக் குற்றமற்றதாகத் தோன்றும் சங்கங்களின் உதவியோடு அங்கங்கேயுள்ள நாஸி ஏஜண்டுகள் வேலை செய்து வருவதாகவும், ஜெர்மன் பாஷையிலுள்ள சமாசாரப் பத்திரிகைகளுக்கு வேண்டிய பொருளுதவியை ஜெர்மன் நீராவிக் கப்பல் கம்பேனியாரும், ஜெர்மன் ரயில்வே கம்பெனியாரும் ஏதோ தாங்கள் தொழிலின் விளம்பரத்தை மேற்படி பத்திரிகைகளில் வெளியிடுவதற்காக பணம் கொடுப்பது போல் கொடுத்து உதவுகிறார்களென்றும்; நாஸி துப்பறிவாளிகள் வர்ஷிங்டனில் உள்ள ஜெர்மன் ஸ்தானீக காரியாலயத்துடனும், சில வெளியூர் ஜெர்மன் மந்திரிகளுடனும் சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கிறார்களென்றும், தெரியவருகின்றது.

டாக்டர் டிக்ஸ்டீன் என்பவரால், ஐக்கிய நாடுகளில் ஒரு நூறு ஜெர்மன் வேவுக்காரர்கள் தேசத்திற்கு விரோதமாக ஒரு துராலோசனை செய்துவருவதாகவும், இந்த பிரசார ஏஜெண்டுகளுக்கு முக்கிய தலைவர் ஒரு ப்ரிட்ஸ் கன் என்பரென்றும், இவருடைய ஆதீனத்தில் ஒரு 40 லக்ஷம் பவுன்கள் இருக்கிறதென்றும், இவரால் ஒரு ஜெர்மன் அமெரிக்க உடன்படிக்கை சங்கம் ஏற்படுத்தப்பட்டு அதன் அங்கத்தினர்களிடம் ஹிட்லருக்கு ரகசியமாக உதவி புரியும்படி வாக்குத் தத்தம் வாங்கப்பட்டிருப்பதாகவும், வெளியிடப்பட்டிருக்கிறது. இதைவிட இன்னும் பெரிய குற்றமாக நியூயார்க் பீடரல்கோர்ட்டு ஜூரிமார்களால் ஒரு 18 பேர்வழிகள் ஜெர்மன் கவர்ன்மெண்டாருக்கு உதவியாக வேவு பார்த்ததாக தண்டிக்கப்பட்டதாக வெளியாகிறது. இக்குற்றவாளிகளில் இரண்டுபேர்கள் ஜெர்மன் யுத்த மந்திரி சபையைச் சேர்ந்தவர்கள். இவர்களை தண்டிக்க முடியவில்லை.

மெக்ஸிகோவிலும், தென் அமெரிக்காவிலும் நாஸி பிரசாரம் சீக்கிரமாகவும், தீர்க்கமாகவும் பறவியிருக்கிறது. தென் அமெரிக்காவில் முக்கியமாக ப்ரேஸில், ஆர்ஜன்டைன் தேசங்களில் பெரிய ஜெர்மன் குடியேறு நாடுகளிருக்கின்றன. நாஸி சங்கங்களும், கூட்டுறவுகளும் தென் அமெரிக்காவின் ஒவ்வொரு பாகத்திலுமிருந்துவருகின்றன. அமெரிக்காவுக்கு வரும் ஒவ்வொரு ஜெர்மன் கப்பலிலும் அனுப்பப்படும் அநேகம் பத்திரிகைகள் மூலமாகவும், நாஸி பிரசங்கங்கள் மூலமாகவும், சினிமாக்கள் மூலமாகவும், ரையோ-டி-ஜெனீரோ, மற்ற தேசங்கள் இவைகளிலுள்ள ஜெர்மன் ஒலிபரப்பு ஸ்தலங்கள் மூலமாகவும், ஜெர்மனியிலிருந்து ஸ்பெயின் போர்ச்சுகள் பாஷைகளில் குருகிய அலைகள் மூலமாய் வெளியிடப்படும் சமாசாரங்கள் மூலமாகவும் இச்சங்கங்கள் பரிபாலிக்கப்பட்டு வருகின்றன.

14. இத்தகைய கபடமும், துராலோசனையும் ஜெர்மன் கவர்ன்மெண்டாரால் ஜாதித் துவேஷத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு கையாடப்பட்டு வருகின்றன. இவைகளை கையாடும்முறையில் ஒரு நீதியோ, கௌரவமோ இல்லாமலிருப்பதுடன் அடிக்கடி அநாகரீகமானதும், பலவந்தமானதும் மூர்க்கத்தனமானதுமான வழிகள் கையாடப்படுகின்றன. மானிட சுயேச்சை, ஜாதி மதக்கொள்கை, பொது நியாயம், பிரதிநிதி சபா பிரஜாபிரபுத்துவம், பரதேச சட்டம் இவைகள் யாவும், தங்களுடைய நோக்கங்களை மற்ற மானிட கோடிகளுக்கு புகுத்தவேண்டிய பிரயாசையில் நாஸி அதிகாரிகளாலும், நாஸி தர்ம சாஸ்திர கர்த்தாக்களாலும் நசுக்கப்பட்டு வருகின்றன.

---

## வார யுத்தச் செய்திகள்.

(10—4—41-லிருந்து 16—4—41-வரை).

**பால்கன் சண்டை.**—திடீரென்று சண்டையைத் துவக்கி விட்டதால் ஜெர்மனிக்கு பால்கன் சண்டையில் ஒரு அனுகூலமேற்பட்டு ஜெர்மன் படைகள்



யூகோஸ்லாவியாவில் பரவி விட்டன. மேலும், ஸலோனிகா, கொரிட்ஸா முதலிய முக்கிய ஸ்தலங்களைப் பிடித்துக்கொண்டு, மொனாஸ்டிர் கணவாயைப் பிளந்துகொண்டு, ஜெர்மன் சைனியங்கள் தெற்கே முன்னேறிக்கொண்டிருக்கின்றன. மலைச்சாரலை அணுக அணுக, இவர்களுடைய யந்திரப் படைகள் வேகமாய்ச் செல்லாது தடுக்கப்படுகின்றன. பிரிடிஷ் படைகளும் நேயப் படைகளும் பின்னே நகர்ந்துகொண்டு, ஒலிம்பஸ் மலைக்கும், கொரிட்ஸாவுக்கும் மத்தியில் குறுக்கே நிற்கின்றன. அல்பேனியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட கிரேக்கப் படைகள் இடது பார்சத்திலும், பிரிடிஷ் படைகள் ஸர் ஹென்றி-மெய்ட்லண்டு வில்ஸன் தலைமையின் கீழ் வலது பார்சத்திலும் அணிவகுக்கப்பட்டு நிற்கின்றன. போக்கு வரத்து ரஸ்தாக்களையும், ஸோபியாவிலிருக்கும் ஜெர்மன் சைனிய நிலயத்தையும் பிரிடிஷ் விமானப் படை தாக்கியொழித்து வருகிறது. பிரியூஸ் துறைமுகம் பகைவனால் எதிர்க்கப்படுகிறது. உபரி பிரிடிஷ் சைனியங்கள் வந்துகொண்டிருக்கும் போதே பிரிடிஷ் படைகளை அப்புறப்படுத்துவதாக ஜெர்மானியர் பொய்ச் செய்திகளைக் கட்டிவிடுகிறார்கள்.

குரோஷ்யா, ஸ்லொவீனியா, பானத் என்ற சமவெளிகளை விட்டுவிட்டு, பாஸ்நியா, ஹெர்ஸிகோவினாவென்ற மலைச்சாரல்களுக்கு யூகோஸ்லாவியர்கள் போய்விட்டார்கள். அவர்கள் ஒன்று சேர்ந்து செய்யக்கூடிய யுத்தம் நின்றுவிட்டது. இனித்தனி அணிகளாக, பாதைகளில் நின்றுகொண்டு ஜெர்மன் துருப்புகளை எதிர்த்துக்கொண்டிருப்பார்கள்.

கீழ்-ஸ்டிரியா, கரின்தியா, கார்னியோலாவென்ற பிடிபட்ட யூகோஸ்லாவிய பாகங்களுக்கு ஜெர்மன் கவர்னர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஸாக்ரீப் பிடிபட்டதிலிருந்து, குரோஷ்யா ஒரு தனி போலி ஸ்வதந்திர ஸமஸ்தானமாக்கப்பட்டு, க்வெடமிக்கென்ற ஒருவன் அதற்குத் தலைவனாக்கப்பட்டிருக்கிறான். 1934-ல் அலெக்ஸாண்டர் மன்னரைக் கொலை செய்ய ஏற்பாடு செய்தவர்களில் இவன் ஒரு முக்கியமான குற்றவாளி.

ஹங்கேரியாவின் துருப்புகள் டிரேவ், டான்யூப் நதிக்கரைகளுக்கு முன்னேறின. ஹங்கேரியின் ரீஜண்டு அட்மிரல் ஹார்த்தி என்பவர், சென்ற யுத்தக் கடைசியில் செய்யப்பட்ட டிரையானன் ஒப்பந்தத்தின்படி இழக்கப்பட்ட தன் நாடுகளைத்தான் பிடித்துக்கொண்டதாக யூகோஸ்லாவியாவில் சில பாகங்களைக் கைப்பற்றிவிட்டார். யூகோஸ்லாவியாவோடு நிரந்திர சிநேகமென்று உடன்படிக்கை சமீபத்தில் செய்துவிட்டு, நான்கு மாதங்களுக்குள்ளாக அதன் மேல படையெடுப்பது ஹங்கேரிக் கழகில்லையென்று ருஷ்யா ஆக்ஷேபித்திருக்கிறது. அதற்கு பல்கேரியா, யூகோஸ்லாவியாவில் அரசியல் மாறிவிட்டதாலும், குரோஷியா தனி ஸமஸ்தானமாகப் பிரிக்கப்பட்டு விட்டதாலும் இனிப்பழைய யூகோஸ்லாவியாவே அழிந்து போய், சிநேக உடன்படிக்கையும் ரத்தாய்விட்டதாகச் சொல்லிவிட்டது.

நாஸிகளின் சூழ்ச்சிகளுமிப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாய் வெளிவருகின்றன. அலெக்ஸாண்டிரா பாலிஸூக்கும், ஸ்ட்ருமா நதிக்கும் மத்தியிலுள்ள திரேஸ் பிராந்தியத்தின் ஒரு பாகத்தை பல்கேரியத் துருப்புக்கள் பிடித்துக்கொண்டிருக்கின்றன. ருமேனியாவானது பனுத் பிரதேசத்தை வேண்டுகிறது. ஸெர்பியாவுக்கு, பொகிமியாவின் கதி வரலாம். இருக்கிற நிலைமையைக் கவனித்தால் சென்ற யுத்தக் கடைசியில் தோற்ற நாடுகளைத் திருப்பியெடுத்துக்கொள்ள ஹங்கேரி முதலிய தேசங்களுக்கு ஆசையை மூட்டி இவைகளைச் சண்டையில் நாஸிகள் சேர்த்திருப்பதாகத்தோன்றுகிறது.

**லிபியாவில் யுத்த நிலை.**—பிரெஞ்சு கவர்ன்மெண்டு ஆதரவைக்கொண்டு ஜெர்மன் துருப்புக்களை திரிபோலியில் இறக்கிவிட்டார்கள். இதே சமயத்தில் வட ஆபிரிக்காவிலிருக்கும் பிரிடிஷ் படைகளின் ஒரு பாகத்தை யூகோஸ்லாவியர்களுக்கும் கிரேக்கர்களுக்கு மனுப்ப நேரிட்டது. ஆகையால் இப்பொழுது பிரிடிஷ் படைகள் வட ஆபிரிக்காவில் குறைந்துபோய், ஜெர்மன் துருப்புகளை இங்கே தடுத்துக்கொண்டு, தொந்தரவு செய்துகொண்டு மட்டுமிருக்கின்றன.

ஏற்கனவே இதாலியர்களின்மேல் லிபியாவில் படையெடுத்தபோது பிரிடிஷ் சைனியங்கள் செய்த சண்டை முறைகளைத்தான் இப்பொழுது ஜெர்மன் படை பின்பற்றுகின்றன. ஆனால் இதில் ஒரு வித்தியாசமுண்டு, பிரிடிஷ் படைகள் ஒவ்வொரு இடத்தையும் சண்டை செய்து பிடித்தன. 2,00,000 இதாலியர்களையும் கைதிகளாக்கினார்கள். ஆனால் இப்பொழுதோ, பிரிடிஷ் படைகள் தாங்களாகவே விலகிக்கொண்ட ஸ்தலங்களில் ஜெர்மானியர் வந்து தங்கிக்கொள்ளுகிறார்கள். பிரிடிஷ் படைகளுக்குச் சேதமும் கிடையாது. 2,000 பிரிடிஷார்களும், 3 ராணுவஸ்தர்களும் பிடிபட்டதுகூட, ஏதோ ஒரு அஸந்தர்பத்தால் தான். டெர்னா ரஸ்தாவிலிருந்து விலகிப்போகும்போது அகஸ்மாத்தாய், இந்த மூன்று உத்தியோகஸ்தர்களும் ஜெர்மன் சைக்கிள் துருப்புக்களால் பிடிக்கப்பட்டார்கள். பிடிபட்ட 2,000 பிரிடிஷார்கள், பாதிக்குமேல் சிப்பாய்களல்ல. இவர்கள் பெங்காஸியிலிருந்து பின்வாங்கியபோது, ஏறிவந்த மோட்டார்கள் ஒடிந்து சிறு சிறு பாகங்களாகத் தனித்தனியே பிடிபட்டார்கள்.

டொப்ருக்கை அணுகாமல், மற்றொரு வழியாய் முன்னேறி ஜெர்மானியர் இப்பொழுது பார்டியா, கபூஸோ, ஸொல்லும் என்ற இடங்களைப் பிடித்துக்கொண்டு எகிப்தை அணுகியிருக்கிறார்கள். டொப்ருக்கையும் ஒரு முறை எதிர்த்திருக்கிறார்கள். பிரிடிஷ் படைகளும் திருப்பியடித்து எதிரியைத் துரத்தியிருக்கின்றன. ஜெர்மானியர்களில் 100 பேர் இறந்து, 200 300 பேர்கள் கைதியானார்கள்.

டொப்ருக்கிலிருக்கும் பிரிடிஷ் சைனியத்தால் ஜெர்மன் போக்கு வரத்துக்கு அபாயமுண்டு. அவர்கள் வரும் ரஸ்தாக்கள் எதிர்க்கப்படும். அவர்களுக்குப் பெட்ரோல் எண்ணெய் குறைவேற்பட்டுவிட்டது. 1,000 மைல் முன்னேறியதிலிருந்து மோட்டார்களும் பழுது பார்க்கவேண்டியிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் பிரிடிஷ் படைகள் ஜெர்மானியர்களை பின் ரஸ்தாக்களில் எதிர்க்கின்றன.



ஜெர்மன் சைனியங்களும், தளவாடங்களும் வந்திறங்கும் திரிபோலி துறைமுகமும் பிரிடிஷ் விமானங்களால் எதிர்க்கப்பட்டது.

**கீழ்-ஆபிரிக்கா.**—ஒன்றும் தெரியாததுபோல், இதாலிய அறிக்கை ஒன்று கீழ் ஆபிரிக்காவைப்பற்றி முக்கிய சமாசாரமொன்றுமில்லை என்று தெரிவிக்கிறது. இதாலிக்கு கீழ்-ஆபிரிக்கா போய் விட்டதால் அதைப்பற்றிய செய்தி சொல்லுவதற்கில்லை யென்றால் உண்மையாயிருந்திருக்கும். சக்கிரவர்த்தி ஹெய்லி ஸலாஸியின் பச்சை, மஞ்சள், சிவப்பு வர்ணங்களமைந்த ஜூடாசிம்மத் துவஜமானது அடிஸ் அபாபாவின் பார்லிமெண்டு கட்டடத்தின்மேல் நாட்டப்பட்டுவிட்டது. பாக்கி நிற்கும் சண்டையைச் செய்து முடிக்க பிரிடிஷ் ராணுவத் தலைவர்களுக்கும் அபிஸீனியத் தலைவர்களுக்கும் அபிஸீனிய சக்கிரவர்த்தி உத்தரவு அனுப்பிவிட்டார்.

ஆரம்பத்தில் இங்கே 1,30,000 பேர்களடங்கிய இதாலிய சைனியமிருந்தது. அதெல்லாமழிந்துபோய் இப்பொழுது, இரண்டு சிறு படைகளுக்கு ஒடுங்கிவிட்டது. ஒன்று, பிரூஷி என்ற எரிட்டிரிய சேனாபதியின்கீழ் அஸ்மாராவிலிருந்து டெஸ்ஸிக்குப் போய்க்கொண்டிருக்கிறது. மற்றொன்று, அயோஸ்டா சேனாபதியின்கீழ் அடிஸ் அபாபாவிலிருந்து ஜிம்மாவுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. இதை எட்டு மார்க்கங்களிலிருந்து துரத்திக்கொண்டு தென் ஆபிரிக்க, பெல்ஜிய, ஸூடானீஸ், அபிஸீனிய தேசபக்த படைகள் பின் போகின்றன. மொகாடிஷூவுக்கு 320 மைலுக்கப்பாலுள்ள ஓபியா சரணமடைந்துவிட்டது. ஜிம்மாவுக்குப் போகும் வயிலிலுள்ள அஸோலெப் பிடிபட்டது. தானே தன் துருப்புகளைக் கூட்டிக்கொண்டு சக்கிரவர்த்தி ஹெய்லி ஸலாஸி அடிஸ் அபாபாவை அணுகுகிறார். பிரிடிஷ் படைகளங்கில்லாவிட்டால், 1915–16-ல் செய்த அக்கிரமங்களுக்காக இதாலியர்களை அபிஸீனியர்கள் பழிக்குப்பழி வாக்குவார்கள் போலிருக்கிறது.

## கடல் யுத்தம்.

**அட்லாண்டிக்-சண்டை.**—அட்லாண்டிக் சண்டை வர வர உக்கிரகமாய்க்கொண்டுவருவதைப்பற்றி காமன்ஸ் சபைக்குச் சமீபத்தில் மிஸ்டர். சர்ச்சில் வியக்தமாயும் ஜாக்கிரதையாயும் எடுத்துக்காட்டினார். பிரிடனுக்கு வியாபாரக் கப்பல்கள் நஷ்டம் எவ்வளவு அதிகமோ அவ்வளவு ஏறக்குறைய புதுக் கப்பல்கள் கட்டியும், பிடித்தும், கிடைத்துக்கொண்டிருக்கின்றன. பிரிடனுக்கு இதுவரையில் 40 லக்ஷம் டன் கப்பல்கள் நஷ்டம்; அதில் 30 லக்ஷம் ஈடாய்விட்டது. ஆனால் நஷ்டம் இந்த வீதம் நீடிக்கக்கூடாதுதான். பிரிடனிலேயே ஏராளமான கப்பல்கள் புதிதாய்க் கட்டப்படுகின்றன. அமெரிக்காவிலிருந்து ஏராளமான கப்பல்கள் சீக்கிரத்தில் கிடைக்கும். அயர்லாந்தும், இனி அங்கே கப்பல்களுக்கு அபாயகரமாக எதிரிகள் தங்கள் விமானங்களைச் செலுத்திப்போவதின் விபத்தையும் தெரிந்துகொள்ளும். அமெரிக்கர்கள் எவ்வளவோ பிரயாசைப்பட்டு யுத்த தளவாடங்களைச்செய்து கொடுக்கிறார்கள். இவைகள் வரும் வழியில் கடலில் நஷ்டமாகாதபடி பார்த்துக்கொள்ளுவதற்கும் அமெரிக்கா வேகமாய்ச் செல்லும்

கப்பல் முதலிய சாதனங்களைக் கொடுக்கத் தயாராயிருக்கிறது. பகைவர்களின் நாசகாரி, கண்ணி, விமானங்களால் ஏற்படும் விபத்துக்களும் தடை செய்யப்பட்டு வருகின்றன. ஆகவே அட்லாண்டிக் சண்டையில் வென்று அமெரிக்காவிலிருந்து சாமான்கள் தடைபடாது வந்து கொண்டிருந்தால், ஹிட்லர் எங்கு சண்டை செய்தாலும் அவரை வென்று தர்மத்தை நிலை நாட்ட முடியும்.

மார்ச்சு 30-தோடு முடிவான வாரத்தில் 77,375 டன் நிறைகொண்ட நேயக் கப்பல்கள் நஷ்டமானதிலிருந்து அட்லாண்டிக் சண்டையின் உக்கிரம் வெளிப்படும். ஆனால் ஜெர்மானியர் சொல்லுகிறபடி அவ்வளவு அதிக நஷ்டமில்லை. அவர்கள் தினசரி கணக்கானது வாரக் கணக்குக் கதிகம், வாரக் கணக்கு மாதாந்திரக் கணக்குக்கு அதிகம். ஒருவாரத்துக்குள் கணக்கு முடிப்பதும் கடினம். தவறுதலேர்பட்டபிறகு அதைத் திருத்தினால், பகைவர்கள் பொய்கணக்குக் கொடுத்தோமென்கிறார்கள். ஏதோ ஒரு வாரத்திலேற்படும் நஷ்டம் பொதுவாக ஏற்படும் நஷ்டத்தைக் குறிக்காது. சற்றுக்குறைந்தால், சந்தோஷத்தையும், சற்று அதிகப்பட்டால் கவலையையுமுண்டாக்கும். வாரக் கணக்கிலிருந்து எதிரிக்கும் நஷ்டவிவரங்கள் கிடைக்கிறது. இது காரணங்களைப்பற்றி இனி பிரிடிஷ் கப்பல் நஷ்ட கணக்கு மாதத்துக்கொருமுறைதான் பிரசுரிக்கப்படும்.

**சில்லரைக்கடல் சம்பவங்கள்.**—இப்பொழுது பிரிடன் கைவசமிருக்கும் அமெரிக்க நாசகாரியொன்று சில நார்வேதேசத்து மாலுமிகளையும், செம்படவர்களையும் ஏற்றிக்கொண்டு, சனிக்கிழமையன்று, ஒரு நார்வே துறைமுகத்திலிறங்கி, அங்கேயிருந்த ஜெர்மானியர்களையும், அவர்களுக்கு பணியப்பட்ட நார்வேயர்களையும், வளைத்துக்கொண்டு, அங்கிருந்த எண்ணெய்ச் சாலையையுடைத்து, துறைமுகக் கட்டடங்களையும் சேதம் செய்துவிட்டு, போனவர்களுக்கு ஒரு விதமான நஷ்டமுமின்றி திரும்பிவிட்டது.

அதர்ஸ்டோன் என்ற மற்றொரு பிரிடிஷ் நாசகாரி 50 ஜெர்மன் விமானங்களால் ஒரு சமயம் எதிர்க்கப்பட்டுப் பழுதாயிற்று. ஜெர்மானியர்கள் அது அசந்துவிட்டதாக நினைத்து, அதன்மேல் மறுபடியும் விமானங்களைக்கொண்டு பாய்ந்தபோது அதர்ஸ்டோனும் மற்றொரு நாசகாரியும் திடீரென்று எதிரி விமானங்களைச் சுட்டுத்துரத்தி, கூடவந்த வியாபாரக் கப்பல்களை பத்திரமாய் போக உதவின. அதர்ஸ்டோனும் இப்பொழுது பழுது பார்க்கப்பட்டாய்விட்டது.

**ருஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் ஒப்பந்தம்.**—தாத்காலிகமாக 5 வருஷங்களுக்கும், வேறுதடையில்லாவிட்டால், 10 வருஷத்துக்கும் இந்த இரண்டு நாடுகளும் நேயர்களாயிருப்பதாக ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டிருக்கின்றன. இந்த தேசங்களின் ஸ்வதந்திரத்தையும், க்ஷேமத்தையும் பரஸ்பரம் ஒப்புக்கொள்ளுகின்றன. மூன்றாவது தேசமொன்று இவைகளிலொன்றை படையெடுத்தால் மற்றொருதேசம் நடுநிலை வகிக்கும். மங்கோலியா, மஞ்சுகோவா தேசங்களின் ஸ்வதந்திரத்தையும் க்ஷேமத்தையும் பரஸ்பரம் ஜப்பானும், ருஷ்யாவும் அங்கீகரிக்கும்.



இந்த ஒப்பந்தத்தைமுடிக்க ருஷ்யத் தலைவரான ஸ்டாலின் நேரே கலந்து பேசினாராம். ஞாயிற்றுக்கிழமையன்று மாஸ்கோவில், ஜப்பான் சார்பாக, மிஸ்டர் மாத்ஸுவோகா ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார்.

1924, 1937-ல் ருஷ்யா, சீனாவோடு செய்துகொண்ட உடன்படிக்கைக்கு இந்த ஒப்பந்தம் விரோதமென்று சைனா வெளி--மங்கோலியா சம்பந்தப்பட்டவரையில் ஏற்பட்டிருக்கும் புது ஒப்பந்தத்தை நிராகரித்து விட்டது. இந்தப் பிரதேசம், ஏற்கனவேயுள்ள உடன்படிக்கைகளின்படி சைனாவுக்குச் சொந்தம்.

ஜப்பானுக்கும் சைனாவுக்கும் நடக்கும் யுத்தத்தில் ருஷ்யா சைனாவுக்கு இதுவரையில் கொடுத்துவரும் சகாயம் இனி நின்றுவிடுமோவென்று கேட்டதற்கு ருஷ்யா அவ்விதமேற்படாதென்று சொல்லியிருக்கிறது.

இந்தப் புது ஒப்பந்தத்தைப்பற்றிப் பலவிதமான அபிப்பிராயங்கள் கொடுக்கப்படுகின்றன. யுனைடட்-ஸ்டேட்ஸ் பிரதிநிதி சபைத்தலைவராகிய மிஸ்டர் ஸால்புளூம், 'இதுவொரு வெற்றுப் பத்திரம்தான். முக்கியமானதில்லை' யென்று சொல்லுவது ஒப்பந்தத்தைக் குறைத்து மதிப்பதாகும். உலகத்துக்கே இதிலிருந்து அமைதியேற்படப்போவதாக ஜப்பானிய மந்திரி சொல்லுகிறது மிகையாகும். இது நடுநிலைமை ஒப்பந்தமேயொழிய அனுக்கிரமவொப்பந்தமில்லை. இவைகளில் ஒருநாடு சண்டைக்குப்போனால், மற்றொரு நாடு என்ன செய்யும்? ஆனால் இந்த ஒப்பந்தத்திலிருந்து ருஷ்யாவுக்கு அதன் கிழ்புற எல்லை நிர்ப்பயமாகி, மேற்புறத்தில் ஹிட்லர் செய்யும் வம்புகளை இனி பலத்தோடு ஆக்ஷேபிக்கமுடியும். சைனாவுக்கு ருஷ்யாவிலிருந்து சாமான்கள் போய்கொண்டிருக்கிறவரையில் இந்த ஒப்பந்தத்திலிருந்து ஜப்பானுக்கதிக சாதகமேற்படாது. கடல் மீன்பிடிக்கும் ஒப்பந்தம், வியாபார ஒப்பந்தம் முதலியவைகளை நாளடைவில் செய்துமுடித்துக் கொள்ளலாம். ருஷ்யாவின் நல்லெண்ணமும் பொதுவாக ஜப்பானுக்கு கிடைத்திருக்கலாம். வேறுகாரியத்திலொன்றையும் காணோம்.

**அமெரிக்கா.** வானது, இந்த வாரத்தில் நான்கு முக்கியமான காரியங்களைச் செய்திருக்கிறது:—

ஏடன் குடாக்கடலும், செங்கடலும் போர் முனைகளிலிருந்து விலக்கப்பட்டன. ஆகவே இனி அமெரிக்க சாமான்கள் தடையின்றி, செங்கடல் வழி எகிப்துக்குப் போகும்.

அமெரிக்க துறைமுகங்களில் சும்மாயிருக்கும் அயல்நாட்டுக் கப்பல்களை உபயோகப்படுத்திக்கொள்ள ஸெனட்டின் அனுமதி கோரப்பட்டிருக்கிறது. அமெரிக்கத் துறைமுகங்களில் நிற்கும் 69, இத்தாலிய, ஜெர்மானிய, டென்மார்க் கப்பல்கள் இனி நேய கக்ஷிகளுக்கு செங்கடல் வழி யுத்த தளவாடங்கள் அனுப்ப உபயோகப்படுத்தப்படும்.

வாஷிங்டனிலிருக்கும் டென்மார்க் மந்திரியாகிய டாக்டர் காப்மனோடு ஒப்பந்தம் செய்துகொண்டு அமெரிக்கா கிரீன்லாந்தை தன் பாதுகாப்புக்குள்

எடுத்துக்கொண்டிருக்கிறது. கொஞ்ச காலமாக ஜெர்மன் விமானங்கள் அதன் மேல் பறந்து செல்லுவதிலிருந்து அதற்கு கிரீன்லாந்தை அபகரித்து விமான நிலயங்களை வைத்துக்கொள்ளும் எண்ணமிருக்குமோ வென்ற சந்தேக மேற்பட்டு விட்டது. இதனால் அமெரிக்க தேசங்களுக்கும் விபத்து நேரிடலாம். அட்லாண்டிக்கில் போய்வரும் கப்பல்களுக்கும் இனி அதிக அபாய மேற்படலாம்.

இப்பொழுது அமெரிக்கா கிரீன்லாந்து விஷயமாக வெடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கை ஏற்கனவேயுள்ள மன்ரோ சித்தாந்தத்துக்கும், லீமா, ஹவானா தீர்மானங்களுக்கும் விரோதமல்ல. கிரீன்லாந்தானது டென்மார்க்குக்குச் சொந்தமாய்த் தானிருக்கும்: டென்மார்க்குக்கு ஸ்வதந்திரம் கிடைத்தவுடன் திருப்பிக் கொடுக்கப்படும்.

நாஸிகள் அதிகாரத்துக்குள்பட்ட டென்மார்க் கவர்ன்மெண்டானது டாக்டர் காப்மனை திரும்பிவரச்சொல்லி, ஒப்பந்தத்தையும் ரத்து செய்துவிட்டது. அமெரிக்க அரசாங்கமும், டாக்டர் காப்மனும் இதற்குச் சம்மதிக்கவில்லை.

போர்முனையைத் தவிர மற்ற விடங்களுக்குப் போகும் அமெரிக்கக் கப்பல்களை யுத்தக் கப்பல்களைத் துணையனுப்பிப் பாதுகாக்க யேற்பாடுகள் செய்யப்பட்டாய்விட்டது. இது கப்பல்களின் க்ஷேமத்துக்காக எடுத்துக் கொண்ட நடவடிக்கையாயிருப்பதோடு, சட்டத்தை அனுசரித்துமிருக்கிறது.

**பிரான்ஸ்.**—உணவு, உடுப்பு, முதலிய அவசியமான சாமான்கள் அமெரிக்காவிலிருந்து எக்ஸ்மவுத் கப்பலில் கொண்டுவந்து, எதிரிவசமில்லாத பிரான்ஸின் பாகத்தில் வசிக்கும் குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட்டன.

**ரயோமில்.**—ரயோமில் நடந்த விசாரணைகள் ஒன்றுமில்லாது போயின. விசாரணைக்குட்படுத்தப்பட்ட மாஜி—மந்திரிகளான டிலாடியரும், ரெய்னாடும் விடுதலை செய்யப்பட்டார்கள். பேருக்குக் காபந்திலிருப்பதாக பாவனை செய்யப்படுகிறது.

**விமானப்போர்.**—ஜெர்மன் துறைமுகமாகிய கீல் இந்த வாரம் இருமுறை தகர்க்கப்பட்டது. முதல் இரவில், நூற்றுக்கணக்கான வெடிகளும், 30,000 கொள்ளிகளும் இதுவரையில்லாதபடி அதிகமாய் போடப்பட்டு, துறைமுழுவதும் தீப்பிடித்தெரிந்தது. பிரெஸ்டும், பெர்லினும் தாக்கப்பட்டன. வடகடலில் ஜெர்மன் பாராக் கப்பல்கள் மூன்று நெருக்கியெதிர்க்கப்பட்டன. பிரிஸியன் கடற்கரைக் கட்டடங்கள் தாக்கப்பட்டன. லோரியனிலிருக்கும் நீர்மூழ்கிக் கப்பல்கள் நிலயமும், மெரிக்நாக்கிலிருக்கும், கப்பல்களை தூரத்தில், எதிர்க்கச் செல்லும், ஜெர்மன் விமானங்கள் நிற்கும் நிலயமும் சோதிக்கப்பட்டன.

பிரிடனிலிருக்கும் கவென்டிரியிலும், பர்மிங்ஹாமிலும் கோர எதிர்ப்பு யேற்பட்டு அதிக நஷ்டம் விளைந்தது.



2,700 அடி உயரத்தில் 300 மைல் வேகத்தோடு செல்லக்கூடிய ஏரே கடையில் 2,450 மைல் பறக்கக்கூடிய விமானக்கோட்டைகள் அமெரிக்காவிலிருந்து பிரிடனுக்கு வந்திறங்கியிருக்கின்றன.

கடைசியாய் கிடைத்திருக்கும் செய்திகளின் படி நான்கு தினங்களாக லண்டன் படையெடுக்கப்படாதிருந்து புதன்கிழமை இரவு வெகுபலமாயும், கோரமாயும் எதிர்க்கப்பட்டதாகத் தெரிகிறது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்ரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேச தேசங்களில் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 7—4—41. (திங்கட்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | பகலில்.—ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்—டென்மார்க் (Denmark), லோ கண்ட்ரீஸ் (Low Countries). கப்பல்கள்.–வடகடல்(North Sea), செர்பர்க் (Cherbourg) கப்பல்துறைகள். விமான நிலயங்கள், மோட்டார் லாரிகள்.—வட பிரான்ஸ் (France). | 1 விமானம். | பல சேதமாயின. சுடப்பட்டன. |
| | இரவில்.—கப்பல், துறைகள் கப்பல் கட்டுமிடங்கள், கப்பல்கள், ஸப்மரைன் (Submarine) கட்டுமிடங்கள்— கீல் (Kiel). துறைமுகங்கள்.-ப்ரமர்ஹாவன் (Bremer-haven), எம்டன் (Emden). | ...... 4விமானங்கள். | ,பலத்த சேதம். பட்டணம் முழுவதும் ஒரே தீமயம். ...... |
| | அல்பேனியா (Albania). | | |
| | ஒத்தாசை.—அல்பேனியா (Albania)விலிருக்கும் கிரேக்க சைனியங்கள். | ...... | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமானநஷ்டமும் படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**7—4—41.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி.

பல்கேரியா (Bulgaria), யூகோஸ்லாவியா (Yugoslavia).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமானநஷ்டமும் படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| மோட்டார் லாரிகள்.—ஸ்ட்ருமா (Struma) பள்ளத்தாக்கு. | | |
| ரயில்வே ஸ்டேஷன்.—கோர்னி ஸீமாயா (Gorni Dzumaya). | ...... | பலத்த சேதம். தீப்பிடித்தது. |
| ரஸ்தா சந்திப்பு, ரயில் சந்திப்பு; மோட்டார் வண்டிகள் சைனியங்கள்.—மற்ருரிடத்தில், பெட்ரிச் (Petritch). | | |
| கவசமணிந்த மோட்டார்கள், மோட்டார் வண்டிகள்.—டாய்ரான் (Doiran) ஏரிப் பிரதேசம், ஸ்ட்ருமிட்ஸா (Strumitza) விற்கும் டாய்ராளு (Doiran)க்கும் மத்தியிலுள்ள பிரதேசங்கள். | நஷ்டமில்லை. | ...... |
| ரயில் பாலம்.—ஜெவ் ஜெலீஜா (Gjev-Gjelija). | நஷ்டமில்லை. | சேதம். |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமானநஷ்டமும் படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| விமான நிலயங்கள்.—பெங்காஸி (Benghzi)க் கருகில். | ...... | ...... |
| மோட்டார் வண்டிகள், சைனியங்கள் பெங்காஸி (Benghazi)க் கருகில். | ...... | ...... |
| விமான நிலயக் கட்டடங்கள்.—டெஸ்ஸி (Dessie). | ...... | கட்டடங்கள் இடிந்தன. |
| மோட்டார் வண்டிகள்.—டெஸ்ஸி (Dessie) ரஸ்தா. | ...... | ...... |

ஹங்கேரி (Hungary).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமானநஷ்டமும் படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| தொழிற்சாலைகள், இருக்கும் பிரதேசங்கள்.—பெக்ஸ் (Pecs). | ...... | ...... |

**8—4—41.** (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமானநஷ்டமும் படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| பகலில்.—கப்பல்கள்—ப்ரிஸியன் (Frisian) தீவுகள். | ... | ...... |
| ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்.—ஆக்ரமிக்கப்பட்டிருக்கும் தேசங்கள். | நஷ்டமில்லை. | ...... |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**8—4—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| இரவில்.—சாமான் கிட்டங்கிகள், கட்டடங்கள், கப்பல் துறைகள்—கீல் (Kiel). | ... | வெகு பலத்த சேதம். பல இடங்களில் தீப்பிடித்தது. |
| துறைமுகங்கள்.—ப்ரமர்ஹாவன் (Bremerhaven), எம்டன் (Emden). | ... | ...... |
| எண்ணெய்த் தொட்டிகள்.—ராட்டர்டாம் (Rotterdam). | ... | தீப்பிடித்தது. |
| படையெடுப்புகள்.—வட பிரான்ஸி (France)லிருக்கும் விமான நிலயங்கள். | 5 விமானங்கள். | விமான நிலயங்கள் சேதமாயின. |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| கூடாரங்கள், இன்னும் இதர ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்—கோண்டார் (Gondar) பிரதேசம் (அபிஸீனியாவில்). | ... | சேதமாயின. |
| விமான நிலயத்தின் கட்டடங்கள்.—கோம்போல்ஸியா (Gombolcia). | | |
| மோட்டார் வண்டிகள்.—ஏஸெல் (Aselle) பிரதேசம். | நஷ்டமில்லை. | பலத்த நஷ்டம். |

யூகோஸ்லாவியா (Yugoslavia), பல்கேரியா (Bulgaria).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| ஜெர்மன் சைனியங்கள்.—தெற்கு யூகோஸ்லாவியா (Yugoslavia). | ... | பலர் மாண்டனர். |
| மோட்டார்கள், கவசமணிந்த மோட்டார்கள்.—ஸ்ட்ருமிகா (Strumica) பிரதேசம். | | |
| வேவுபார்த்தல்.—விரோதி நாடுகள். | நஷ்டமில்லை. | ...... |

**9—4—41.** (புதன்கிழமை).

ஜெர்மனி (Germany).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| பெர்லின் (Berlin) ... | ... | எங்கும் ஒரே தீ. பலத்த சேதம் பலருக்குக் காயம். |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும் ; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**10—4—41.** (வியாழக்கிழமை).

ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| லக்ஷியங்கள் | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம் | எதிரிகளின் விமான நஷ்டமும் ; படையெடுப்புகளால் விளைந்த சேதமும் |
|---|---|---|
| பகலில்.-கடல் விமான நிலயம், கட்டடங்கள், சைனியங்கள் வசிக்குமிடங்கள் —போர்கூம் (Borkum). | | கட்டடங்கள் இடிந்தன. சைனியங்கள் ஓடி ஒளிந்தன. |
| இரவில்.—கடற்படை நிலயம், ஷார்ன் ஹார்ஸ்ட் (Scharn Horst), நீஸ்நா (Gneisenau) என்ற இரண்டு ஜேர்மன் யுத்தக் கப்பல்கள்.—ப்ரெஸ்ட் (Brest). | | கப்பல் துறைகள் சேதமாயின. யுத்தக் கப்பல்கள் மேல் பல குண்டுகள் வீழ்ந்தன. |
| பாக்வுல்ப்(Fockewulf) விமான நிலயம்.—மெரிஞக் (Merignac). | 8 விமானங்கள். | ...... |
| நூர் (Ruhr), ரைன்லாந்து (Rhineland). | | |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| லக்ஷியங்கள் | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம் | எதிரிகளின் விமான நஷ்டமும் ; படையெடுப்புகளால் விளைந்த சேதமும் |
|---|---|---|
| விரோதி சைனியங்கள், விமான நிலயங்கள்—டெர்ணு (Derna) உள்பட ஸிரினேகா (Cyrenaica)வில் பல இடங்கள். | ...... | பலத்த சேதம். டெர்ணுவில் 16 விமானங்களும், மற்ற இடங்களில் இரண்டு விமானங்களும் சேதம். |
| மோட்டார் வண்டிகள்—அக்ரோமா (Acroma) பிரதேசம், கஸாலா (Gazala) பிரதேசம். | ...... | அக்ரோமாவில் பல வண்டிகளும் நாசமாயின ; கஸாலாவில் 8 வண்டிகளும். |
| ஹிம்சை செய்தல்—அபிஸீனியா (Abyssinia)வில் பின்னேறும் விரோதி சைனியங்கள். | 2 விமானங்கள். | |

யூகோஸ்லாவியா (Yugoslavia), பல்கேரியா (Bulgaria)
வட கிரீஸ் (Greece).

| லக்ஷியங்கள் | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம் | எதிரிகளின் விமான நஷ்டமும் ; படையெடுப்புகளால் விளைந்த சேதமும் |
|---|---|---|
| ஜேர்மன் சைனியம்—தெற்கு யூகோஸ்லாவியா (Yugoslavia), வட கிரீஸ் (Greece). | ... | படு நஷ்டம். |
| விரோதியின் யந்திர சாதனப்படை.—மொனஸ்டரு (Monastir)க்கும் ப்ரிலெப் (Prilep)க்கும் மத்தியில். | | பல கவசமணிந்த மோட்டார்கள் த்வம்சம் செய்யப்பட்டன. மற்றும் பல சேதமாயின. |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும் ; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**10—4—41.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.

யூகோஸ்லாவியா (Yugoslavia) பல்கேரியா (Bulgaria)
வட கிரீஸ் (Greece)—தொடர்ச்சி.

| லக்ஷியங்கள் | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம் | எதிரிகளின் விமான நஷ்டமும் ; படையெடுப்புகளால் விளைந்த சேதமும் |
|---|---|---|
| ரயில்வே சாமான்கள் வைத்திருக்கும் கிட்டங்கிகள்—கோகேய்ன் (Kocaine), கெஞலி (Kenali). | ...... | மோட்டார் வண்டிகளும், சைனியங்களும் சுடப்பட்டன. |
| பெட்ரோல் தொட்டிகள்—ப்ரிலெப்(Prilep)புக்குத் தென்மேற்கே. | நஷ்டமில்லை. | |
| துருப்புகள், சாமான் ஏற்றும் மோட்டார் வண்டிகள். | ...... | பலருக்குக் காயம். |
| மோட்டார் வண்டிகள்—மொஞஸ்டர் (Monastir). | ...... | ...... |
| விரோதி சைனியங்கள்—அல்பேனியா (Albania)வை நோக்கி முன்னேறும் சைனியங்கள். | ...... | ...... |
| கிராமங்கள்—வட கிரீஸி (Greece)லுள்ள கில்கிஸ் (Kilkis) பிரதேசம். | ...... | ...... |

**11—4—41.** (வெள்ளிக்கிழமை).

ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| லக்ஷியங்கள் | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம் | எதிரிகளின் விமான நஷ்டமும் ; படையெடுப்புகளால் விளைந்த சேதமும் |
|---|---|---|
| பகலில்.—விரோதி சப்ளைக் கப்பல்—நார்வேயி (Norway)க் சப்பால். | ...... | மூழ்கடிக்கப்பட்டது. |
| 3 விரோதி காவல் கார்க்கும் சிறிய யுத்தக் கப்பல்கள்.—வட கடல் (North Sea). | | ஒரு கப்பலின் மேல் குண்டு வீழ்ந்தது. |
| யுத்த முஸ்தீப்புகள் நிறைந்த கட்டடங்கள்.—வட ப்ரிஸியன் (Frisian) கடற்கரை. | 1 விமானம். | |
| படை யெடுப்புகள்.—வட பிரான்ஸ் (France). | ...... | 1 விமானம். |
| இரவில்.—விமான நடவடிக்கை இல்லை. | ...... | ...... |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| லக்ஷியங்கள் | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம் | எதிரிகளின் விமான நஷ்டமும் ; படையெடுப்புகளால் விளைந்த சேதமும் |
|---|---|---|
| மோட்டார் வண்டிக் கூட்டங்கள்.—டொப்ருக் (Tobruk)—கஸாலா (Gazala) ரஸ்தா. | 2 விமானங்கள். | 100 வண்டிகள் சேதம். 3 விமானங்கள். பலருக்குக் காயம். |
| விமான நிலயம்.—கிம்மா (Gimma), எல் கஸாலா (Gazala). | நஷ்டமில்லை. | 8 விமானங்கள். |
| தொந்தரவு செய்தல்.—ஸிரெனேகா (Cyrenaica) விலிருக்கும் ஜெர்மன் சைனியம். | ...... | ...... |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**11—4—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.

### யூகோஸ்லாவியா (Yugoslavia), கிரீஸ் (Greece), பல்கேரியா (Bulgaria).

| | | |
|---|---|---|
| கவசமணிந்த மோட்டார் படை.—கில்கிஸ் (Kilkis). | ...... | ...... |
| தபால் தந்தி சாதனங்கள்.—கால்லிகாஸ் (Gallikos) பிரதேசம். | ...... | ...... |
| மோட்டார் வண்டிகள், கவசமணிந்த மோட்டார் படை.—மொனுஸ்டரு (Monastir)க்கும் ப்ரிலெப் (Prilep)க்கும் மத்தியில். | ...... | பல மோட்டார் வண்டிகளுக்குச் சேதம். |
| பாலம்.—போலிகாஸ்ட்ரான் (Polykastron). | ...... | பாலம் தகர்க்கப்பட்டது. |

**12—4—41.** (சனிக்கிழமை).

### ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில் முக்கியமான இடங்கள்.—ரூர் (Ruhr) க்கு வடக்கே. | ...... | ...... |
| கப்பல்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரை. | ...... | ...... |
| தொழிற்சாலைகள் நிறைந்த பிரதேசங்கள், மின்சார சக்தி உற்பத்தி செய்யும் இடம்—லெய்டன் (Laiden) துறைகளுக்கு சமீபத்தில். | ...... | சேதமாயிற்று. |
| பெட்ரோல் கிட்டங்கிகள்—ப்ளஷிங் (Flushing). | ...... | தீப்பிடித்தது. |
| படையெடுப்புகள்—வட பிரான்ஸ் (France). | ...... | பல இடங்களில் தீப்பிடித்தது. |
| விமான நிலயம், பீரங்கிகள் பொருத்தி வைக்கப்பட்டிருக்கும் இடங்கள்—லா டொக்வே (Le Toquet). | ...... | சுடப்பட்டன. |
| இரவில்:—கடற்படை நிலயம், இரண்டு ஜெர்மன் யுத்தக் கப்பல்கள்—ப்ரெஸ்ட் (Brest). | ...... | சேதமாயின. |
| ஸப்மரைன் (Submarine) நிலயம்—லோரியான் (Lorient). | ...... | தகர்க்கப்பட்டது. |
| விமான நிலயம்—மெரிஞக் (Merignac). | 3 விமானங்கள். | 2 விமானங்கள். |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**12—4—41** (சனிக்கிழமை)—தொடர்ச்சி.

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| விரோதி சைனியங்கள், விமான நிலயங்கள், மோட்டார் வண்டிகள்—ஸிரினேகா (Cyrenaica). | ...... | சேதம் அதிகம். |
| விரோதி கவசமணிந்த மோட்டார்கள், மற்றும் பல மோட்டார் வண்டிகள்—டொப்ருக் (Tobruk). | ...... | பல வண்டிகள் சேதமாயின. |
| மோட்டார் வண்டிகள்—எல் கஸாலா (El-gazala) பிரதேசம். | நஷ்டமில்லை. | வெடிகளும், தீயும் கிளம்பின. |
| வெடிமருந்துக் குவியல்கள்—எல் கஸாலா (El gazala). | ...... | ...... |
| இதாலிய சைனியங்கள்-டெப்ராமார்காஸு (Debra Markos)க்கும் அடிஸ் அபாபா (Addis Ababa)விற்கும் மத்தியில். | | பலருக்குக் காயம். |
| ஒரு விமான நிலயம், மோட்டார் வண்டிகள், தரையிலிருக்கும் விமானங்கள்—அபிஸீனியா (Abyssinia). | 3 விமானங்கள். | பல விமானங்கள் சேதமாயின. |
| தரையிலிருக்கும் விமானங்கள்—ஸிஸியாமாமா (Scisciamama). | ...... | 4 விமானங்கள். |

### யூகோஸ்லாவியா (Yugoslavia) கிரீஸ் (Greece) பல்கேரியா (Bulgaria).

| | | |
|---|---|---|
| ஜேர்மன் யந்திர ஸாதனப்படை.—மொனுஸ்டர் (Monastir) பிரதேசம். | ...... | வண்டிகள் நாசமாயின. |
| ஜேர்மன் சைனியங்கள்.—எல்லா யுத்த முன்னணிகளிலும். | ...... | ...... |
| நாஸி சைனியங்கள்.—பல்கேரியா (Bulgaria)வின் தலை நகரான ஸோபியா (Sofia). | ...... | பலத்த சேதம். |

**13—4—41.** (ஞாயிற்றுக்கிழமை).

### ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—இரண்டு சாமான் ஏற்றிச் செல்லும் கப்பல்கள், ஜேர்மன் சிறிய யுத்தக் கப்பல், டச்சு (Dutch), ஜெர்மன் (German) கடற்கரைகள். | 1 விமானம். | இரண்டு சாமான் கப்பல்கள் மூழ்கடிக்கப் பட்டன. |
| இரவில்.—விமான நிலயம்—மெரிஞக் (Merignac). | நஷ்டமில்லை. | சேதமாயிற்று. |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும் ; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **13—4—41.** (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| **இதாலிய ஆபிரிக்கா (Africa)** | | |
| **விரோதி போக்குவரத்து சாதனங்கள்.**—ஸிரினேகா (Cyrenaica)வில் பல பிரதேசங்கள். | ...... | சேதமாயிற்று. |
| **விரோதி மோட்டார் வண்டிகள்.**—முஸுஸ (Msus)க்கும், ஸொலூமு (Sollum)க்கும் மத்தியில். | ...... | ...... |
| **விமான நிலயம், தரையிலிருக்கும் விமானங்கள்.**—அபிஸீனியா (Abyssinia) விலிருக்கும் கொம்போலிகா (Komboliha). | ...... | 2 விமானங்கள் தீக்கிரையாகியன. இன்னும் பலசேதமாயின. |
| **மின்சார உற்பத்திசாலை, சுங்கவரி இலாகா, கப்பல்கள், துறைமுகம்.**—ட்ரிபோலி (Tripoli). | ...... | 1 பெரிய கப்பல் எறிந்து போயிற்று. |
| **யூகோஸ்லாவியா (Yugoslavia) கிரீஸ் (Greece) பல்கேரியா (Bulgaria).** | | |
| **ஸோபியா (Sofia).**—பல்கேரியா (Bulgaria)வின் தலைநகர். | ...... | ...... |

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **8—4—41.** (செவ்வாய்க்கிழமை). | | |
| **பிரிடன் (Britain).** | | |
| **இரவில் :**—கவண்ட்ரி (Coventry), இங்கிலாந்தி (England)ல் தென் கிழக்கு, தெற்குக் கடற்கரைகளில் பல ஜில்லாக்கள். | ...... 9 விமானங்கள். | பலருக்குக் காயம். சொற்பச் சேதம். சொற்பச்சேதம். |
| **யூகோஸ்லாவியா (Yugoslavia).** | | |
| தலைநகரான பெல்கிரேட் (Belgrade). | ...... | பலர் மாண்டனர். |
| **கிரீஸ் (Greece).** | | |
| பிரேயஸ் (Piraeus) ... | ...... | நஷ்டமில்லை ; ஒருவருக்கும் காயமில்லை. |



| தேதி. லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **9—4—41.** (புதன்கிழமை). | | |
| **பிரிடன் (Britain).** | | |
| **பகலில்.**—விமான நடவடிக்கையில்லை ... | ...... | ...... |
| **பிரிடிஷ் நாசகாரிகள்.**—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | 2 விமானங்கள். | நஷ்டமில்லை. |
| **இரவில்.**—கடற்கரைகளில் அங்குமிங்கும் விமான நடவடிக்கை சற்று இருந்தது. | ...... | ...... |
| கிழக்கு ஆங்கிலியா (Anglia), பர்மிங்ஹாம் (Birmingham). இங்கிலாந்தி (England)ன் வடகிழக்கு, மேற்கு, வடமேற்குப் பாகங்கள். | 12 விமானங்கள். | சொற்பச் சேதம். சிலருக்குக் காயம். |
| **10—4—41.** (வியாழக்கிழமை). | | |
| **பிரிடன் (Britain).** | | |
| **பகலில்.**—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), கெண்ட் (Kent). நார்த்தம்பர்லண்ட் (Northumberland) கடற்கரை. | 2 விமானங்கள். | சேதமேயில்லை. |
| **இரவில்.**—கவண்ட்ரி (Coventry), பர்மிங்ஹாம் (Birmingham), கிழக்கு மிட்லண்ட்ஸ் (Midlands), கிழக்குத் தெற்கு இங்கிலாந்து (England), இப்பிரதேசங்களில் சில இடங்கள், லண்டன் (London)–(சொற்ப நேரந்தான் படையெடுப்பு) இருந்தது. | ...... 10 விமானங்கள். | பலத்த சேதம். பலருக்குக் காயம். தீப்பிடித்தது. ஆனால் உடனே அணைத்து விட்டார்கள். சேதமில்லை. |
| **கிரீஸ் (Greece).** | | |
| ஆதன்ஸ் (Athens) ... | 2 விமானங்கள். | சொற்பச் சேதம். |
| **11—4—41.** (வெள்ளிக்கிழமை). | | |
| **பிரிடன் (Britain).** | | |
| **பகலில்.**—தென்கிழக்குக் கடற்கரை ... | ...... | ...... |
| **இரவில்.**—மேற்கு இங்கிலாந்து (England), தெற்குக் கடற்கரையில் சில இதர இடங்கள். | 5 விமானங்கள். | சிலருக்குக் காயம். சொற்பச் சேதம். |

| தேதி. லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும், படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **11—4—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| **யூகோஸ்லேவியா (Yugoslavia).** | | |
| பெல்கிரேட் (Belgrade) ... | ...... | ...... |
| **கிரீஸ் (Greece).** | | |
| பிரேயஸ் (Piraeus) ... | 3 விமானங்கள். சில சேதமாயின. | பொது ஜனங்கள் கொல்லப்பட்டனர். |
| **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| மால்டா (Malta) ... | ...... | 1 விமானம் பல விமானங்கள் நாசமாயின. |
| **12—4—41.** (சனிக்கிழமை). | | |
| **பிரிடன் (Britain).** | | |
| பகலில்.—விமான நடவடிக்கை வெகு சொற்பம். | ...... | குண்டுகள் விழவில்லை. |
| இரவில்.—ஒரு கிழக்குக் கடற்கரைப் பட்டணம். | ...... | சேதமேயில்லை. |
| **கிரீஸ் (Greece).** | | |
| வோலோஸ் (Valos) ... | ...... | சொற்பச் சேதம். |
| **13—4—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | |
| **பிரிடன் (Britain).** | | |
| பகலில்.—கார்னிஷ் (Cornish) கடற்கரை. | 1 விமானம். | ...... |
| இரவில்.—கிழக்கு ஆங்கிலியா (Anglia). தென்மேற்கு இங்கிலாந்தி (England)ல் ஒரு இடம். | 1 விமானம் | மிகவும் சொற்பச் சேதம். |
| **யூகோஸ்லாவியா (Yugoslavia).** | | |
| ஸராஜீவோ (Sarajevo). | ...... | ...... |
| **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| மால்டா (Malta). | 1 விமானம். | 1 விமானம். வீடுகள் இடிந்தன. |



| தேதி. லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **14—4—41.** (திங்கட்கிழமை) | | |
| **பிரிடன் (Britain).** | | |
| பகலில்.—வட அயர்லாந்து (Ireland). | ...... | ...... |
| இரவில்.—வடகிழக்குக் கடற்கரை, தெற்கு இங்கிலாந்து (England). | ...... | ...... |
| **கிரீஸ் (Greece)** | | |
| ப்ரவிஸா (Preveza) முதலிய பல கிராமங்கள்.—பிரேயஸ் (Piraeus) பிரதேசம். | ...... | ...... |

---

# யுத்தக் குறிப்புகள்.

## ராணுவ ஜோசியன்.

யுத்தமானது மேற்கு ஐரோப்பாவிலல்ல வியன்னா சமவெளிகளில் ஜயிக்கப் படுமென்று பல வருஷங்களுக்குமுன் சொன்னவர் தளகர்த்தர் வேகாண் (General Weygand) அவர் சொன்னது பலிக்குமென்பது இந்த வாரம் நன்றாய்த் தெரிகிறது. பெரிய ஜெர்மன் துருப்புகள் தற்சமயம் வியன்னாவிலிருந்து வெகு தூரத்திலிருப்பதுடன் தூரம் தள்ளி சென்றுகொண்டிருக்கிறதென்பது உண்மை. ஆயினும் சென்ற இருபது வருஷகாலமாக இல்லாமல் இப்போது பிரிடிஷ் துருப்புகளும் சாம்ராஜ்ஜிய துருப்புகளும் தென்கிழக்கு ஐரோப்பாவில் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. சங்கியை குறைவாயிருந்தும் அபரிமிதமான வேலை சென்ற ஆறு மாதகாலமாக்ச் செய்து வந்திருக்கிற பிரிடிஷ் விமானப்படையும் வந்திருக்கிறது; பால்கன் சண்டையும் இப்போது வெகு மும்மரமாக இருக்கவேணும். நமது விமானிகள் விரோதி விமானிகளைக் காட்டிலும் சமர்த்தரென்று நிரூபித்ததுபோல் நமது யந்திர பலம் பொருந்திய ராணுவமானது ஜெர்மன் படைகளைக் காட்டிலும் தேர்ச்சியுள்ளதென்று ஸ்தாபிக்கும் சமயம் தான் சொன்ன வாக்கு பலிக்கும்படி செய்வதில் தளகர்த்தர் வேகாண்டே பங்கெடுத்துக்கொள்ளுவார்.

## இன்னுமொரு கண்மூடித்தனம்.

ராணுவத்தைச் சேர்ந்தவர் என்ற முறையில் தளகர்த்தர் வேகாண் (General Weygand) எந்த அளவிற்கு கண்யமுள்ளவர் என்பது சமீபத்தில் காரியாம்சையில் பார்த்ததிலிருந்து மேலே குறித்த கடைசி அபிப்பிராயம் நாம் சொல்ல நேர்ந்தது. தங்கள் பழைய நண்பர்களான ஆங்கிலேயருக்கு விரோதமாக தானாவது தான் கொண்டாடிவரும் பிரெஞ்சு ஆபிரிக்கப் படையாவது நடக்கமாட்டார்களென்று அவர் பல முறை சொல்லி வந்தாராம். ஆயினும் அவர் செல்வாக்கு

மிகுதிப்பட்டதாகச் சொல்லப்படும் பிரதேசத்தில்தான் பிரிடிஷாருக்கு எதிர்பாராத பல சங்கடங்கள் ஏற்பட்டன. பிரெஞ்சு கோட்டைகளிலிருந்தும் விமானங்களிலிருந்தும் நமது கப்பல்கள் பேரில் தாக்கல் ஏற்பட்ட விஷயம் இழுத்து மூடப்பட்டது; அத்துடன் மட்டுமல்லாமல் சிரினெய்கா வழியாக பார்டியா பேரிலும் டொப்ருக் பேரிலும் ஜெர்மன் இதாலியப் படைகள் எதிர்த்தன. முக்கியசம்பவங்கள் இதாலிய நாடுகளிலிருந்துதான் நடத்தப்படுகின்றன; பிரிடிஷ் கப்பற் படையின் ஆதிக்கம் மத்தியதரைக்கடலில் குறையாமலிருக்கும் சமயம் ஜயமடைந்த நீலகதிப்படை கொஞ்சம் பதுங்கும்படி நேர்ந்த விஷயம். சம்பந்தமான ரகசியம் கட்டாயம் தளகர்த்தர் வேகாண்டுக்கு தெரிந்து தானிருக்கும்.

## மறுபடியும் கொறடாவேலை.

கொறடாவேலை மறுபடியும் ஜெர்மானியர் செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள் என்பதில் இருக்கிறது விஷயம். இந்த வேலையைப்பற்றி ஆறு மாதங்களுக்குமுன் ரொம்ப கேட்டோம். அது அப்போது பலிக்கவில்லை; இப்போதும் பலிக்காதென்பது திண்ணம். கொறடாவில் ஒரு பக்கம் வட ஆபிரிக்கா வழியாக திரும்பி வருவது; இதை கிழிபட்ட இதாலியப் படையை வைத்துச் செய்வது சிரிப்பிற்கிடமாகும், ஆகையால் தேர்ச்சியடைந்த முதல்தரமான ஜெர்மன் துருப்புகள் இந்த வேலையைச் செய்யப்போகின்றன. நமக்கு மத்தியதரைக்கடலில் பலம் குறையாமலிருந்தும் ஏராளமான துருப்புகளும் சாமான்களும் எப்படியோ ஜெர்மனியிலிருந்து ஆபிரிக்காவிற்கு வந்துவிட்டன.

எல் அகெய்லா (El Agheila) வென்ற 'முக்கியமற்ற' இடத்தை பிரிடிஷ் விட்டகன்றபோது, ஸிஸிலி, பெலியாரிக் தீவுகள், ஸ்பெயின், டாஞ்சியர் பக்கமிருந்த விரோதிக் கப்பல்கள் சில சமயம் தபாய்த்துப் போய்விட்டனவென்று சமாதானத்தைக்கொண்டு நாம் திருப்தியடையவேண்டியதாக விருந்தது. இது இயல்பு—ஏதேனும் இரண்டொரு சமயங்களில். ஆனால் ஏராளமான ஜெர்மன் துருப்புகளும் பீரங்கி வகையராக்களும் வட ஆபிரிக்காவிலிருக்கின்றன வென்பதை பார்க்க, வட ஆபிரிக்காவிலிருந்து மார்ஸெயில்ஸுக்கு திருட்டுத்தனமாக தடைபட்ட சாமான்களை கொண்டுபோய் இறக்கின கப்பல்களில் ஜெர்மன் துருப்புகள் ஏற்றப்பட்டு ஆபிரிக்காவிற்கு கொண்டுவரப்பட்டார்களென்றும், அதற்கு அனுக்கிரமண பிரான்ஸில் அட்மிரல் டார்லனும் (Admiral Darlan) அவர் வகைபேர்வழிகளும் இதை அனுமதித்தார்கள் என்று எண்ணவேண்டியதாகவிருக்கிறது. இது உண்மையானால், இது துணைவர்களாக இருந்தவர்கள் பேரில் ஒரு கவர்ன்மெண்டார் செய்த வெகு இழிவான வேலையாகும். இதைப்பற்றி அந்த "அழகிய வீரர்" வேகாண்க்கு என்ன தெரியுமென்பது தெரிந்தால் ரஸமாகவிருக்கும். ஒன்றுமட்டும் நிச்சயம், சாமான் வருவதை தடுக்கும் விஷயமாய் பிரெஞ்சுக்காரர்கள் ஊளையிடுவதைக்கண்டு பிரிடிஷாராவது அமெரிக்காராவது இனி அனுதாபம் கொள்ளமாட்டார்கள்



## மத்ஸுவோகோ.

மொத்தமாக, மத்ஸுவோகோவிற்கு வேலை ரொம்ப இருக்காது. அவருடைய சாணக்கியத்தை வெறுப்பதா, அல்லது சவடாலை வெறுப்பதா என்று தீர்மானிப்பது சிரம சாத்தியம். ஆனால் இச்சமயம் அவரால் ஒரு பிரயோஜனமுண்டு. அதாவது ஜப்பானில் அதிகாரவர்க்கத்தாரின் போக்கிற்கு இவர் அறிகுறி. மேற்படி அதிகாரிகள் நோக்கங்கள் ஆச்சரியமுண்டாக்கக்கூடியவையல்ல. ஆனால் அதை மறந்துவிடுவது இயல்பு; சரித்திர போக்கை ஞாபகமூட்டிக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஜப்பான் ஆதரிக்கும் விஷயங்களாவன:—நிர்த்தாட்சண்யமான சாம்ராஜ்ஜியத்துவம், மனித வகுப்பைப் பொருத்த அகங்காரம், எளிஞர் ஹிம்சை (அவர்கள் அந்நியர்களாயிருந்தாலும் சரி உள்ளூராராயிருந்தாலும் சரி) பகிரங்கமான, எதிர்ப்பு.

கடைசி சமாசாரத்தை முதலில் கவனிப்போம். 1894-ல் ஜப்பான் சீன முறைகளைக் கைப்பற்றியபின் சீனாவில் பெரும் பகுதிகளை கைவசப்படுத்திக்கொள்ளாமல் ஐரோப்பிய பெரிய தேசத்தார்களால் தடுக்கப்பட்டது. ருஷ்ய-ஜப்பானிய யுத்தத்திற்குப் பிறகு கொரீயாவைப் பிடித்துக்கொண்டது. 1915 முதல் மஞ்சூரியாவிற்கு விரோதமாகவே நடந்துவந்து 1931-ல் அதைப் பிடித்துக்கொண்டது. பிறகு பெரிய தேசத்தார் ஐரோப்பாவில் கவனம் செலுத்திவந்த சமயம் 1937-ல் அக்கிரமமாக சீனாவின் பேரில் படையெடுத்தது. சுருங்கச் சொல்லில், ஜப்பானியரின் ஜாதிக்கொள்கையென்ன, ஆண்டு மாறிப்போன ஸாமுரை பூஜையென்ன, குறைந்த சோறிட்டு, குறைந்த கூலிகொடுக்கப்பட்டு வரும் தொழிலாளிகளைக் கட்டுப்படுத்திவருவதென்ன, இவைகளைக் கவனிக்க ஜப்பானுனது ஹிட்லருடைய நாஸி தத்துவத்தின் மங்கிய உருவமென்பது தெரிகிறது.

## நான் குற்றஞ் சாட்டுகிறேன்.

நமது விரோதிகளுடன் மூவர் உடன்படிக்கை செய்துகொண்டிருந்த போதிலும், ஜப்பான் தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் நடந்துவரும் இந்தப் போரில், பேரளவில் நடுநிலைமை வகித்துவருவதில் இவர்களைப்பற்றி மேலேகண்ட விதமாக பேசுவது கொஞ்சம் நியாயமில்லாமலிருக்கலாம். ஆனால், உண்மையாக அவர்கள் நடவடிக்கையை வைத்துப்பார்க்க அவர்களை நம்பமாட்டோம்! ஜெர்மனி பிரிடன்பேரில் படையெடுக்காததாலும், இதாலி சிதைபட்டதாலும் தான் அமெரிக்கர்கள் ஒரு முடிவிற்கு வருமுன், ஜப்பான் இந்தப் போரில் கலக்கவில்லையென்று உறுதியாய்ச் சொல்லுவோம். முதலில் அமட்டிப் பார்த்தது. பிறகு நிர்ப்பந்த பஞ்சாயம் தென்கிழக்கு ஆசியாவில் செய்தது. போரின் போக்கு இப்படியும், அப்படியுமாகவிருக்கும் இத்தருவாயில் ஐரோப்பிய நிலையை கவனித்துக்கொண்டு யுத்தப் போக்கிற்கு ஏற்றவாறு ரேடியோ மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும் உத்தாண்டம் அதிகரித்தும், குறைத்தும் பேசுகிறார்கள். இன்னும் இரண்டொரு ஜெர்மன் ஜயம் ஏற்பட்டும்; அமெரிக்கரைக் கண்டு பயமாவது, ருஷ்யரிடமுள்ள பயமாவது (ருஷ்யாவுடன் ஏதோ நடுநிலைமை

ஒப்பந்தம் சமீபத்தில் செய்துகொண்டார்களே, அதில் சியாங்-கே-ஷேக்கிற்கு உதவி மேற்கொண்டும் புரிந்துவரும் விஷயமாக ஒரு வார்த்தைகூட இல்லை, இந்த ஒப்பந்தம் என்ன பொரும்?) டோக்கியோவிலுள்ள பணம் பெருத்து, ஆசை வலுத்து, தலை கொழுத்த ராணுவ தலைவர்கள் தங்கள் சிப்பந்திகள் வாயைப்பூட்டி, "ஆசியாவில் புதுமுறை"யென்று சொல்லிக்கொண்டு தெற்கேயும், கிழக்கேயும் சொல்லுவதைத் தடுக்காது.

இக்காரியத்தில் ஜப்பான் எண்ணம் நிறைவேறுமாவென்பதைப் பற்றி நமது யுத்த நிலயத்தில் ஒரு நல்ல புஸ்தகமிருக்கிறது. அதன் காரியத்தால் பிரிட்டனுக்கும், அமெரிக்காவிற்கும் ஆஸ்திரேலியாவுக்கும், இந்தியாவிற்கும்கூட வெகுஇடைஞ்சல் ஏற்படும்; ஆனல் ஜப்பானுக்கு அனர்த்தம் என்பதில் சந்தேகமில்லை. அவர்களுக்குள்ள குறைகளை கவனியுங்கள்; பதில்வெட்டு நாஸிகள்தான் இம்மாதிரி காரியம் செய்யத்தலைப்படுவார்களென்று விளங்கும்.

(a) ஜப்பானுக்கு வடக்கே ருஷ்யாவும், சீனவும் இருக்கின்றன. கிழக்கே அமெரிக்காவும், தெற்கே பிரிடிஷாருக்கு சொந்தமான நாடுகளும் இருக்கின்றன. நாலு வருஷமாகப் போர்புரிந்து வருகிறார்கள். சுமார் 10 லக்ஷம் ஜனங்கள் மாண்டார்கள்.

(b) ஜப்பானின் ஜனத்தொகை அளவுகடந்தது, போதுமான உணவு கிடையாது. இந்த மாதம் முதல் ஜனங்களுக்கு அரிசி சணக்கிட்டு கொடுக்கிறார்கள்.

(c) சாமான்கள் குறைவுள்ளதேசம். எண்ணெய், ரப்பர், தள்ளுபடி இரும்பு, இரும்பு, பஞ்சு, கம்பளம், எருச்சாமான்கள் எல்லாம் வெளி நாடுகளிலிருந்து வரவேண்டியிருக்கிறது.

(d) ஜப்பானிலுள்ள ஜனங்கள் பெரும்பாலாரும் போர் புரிந்து களைத்துப் போனார்கள்; அவர்கள் அமைதியை நாடுகிறார்கள்; இது அங்கே போய்வந்தவர்கள் யாருமே சொல்லுவார்கள். ஆனல் அந்த நாட்டை ஆளுபவர்கள் பரம்பரை பிரபுவர்க்கத்தவர்; ஜனங்கள் கீழ்ப்படிவதும் தேசத்தார் ஆக்கிரமித்து எதிர்ப்பதும் அவசியமென்று கற்றுக்கொடுக்கப்படுகிறார்கள்; ஆகையால் இந்த அப்பாவி ஜனங்கள் சண்டையில் மாட்டிவிடப்படப்போகிறார்கள்; அதில் இருந்து முழுதும் தப்பமுடியாது.

சரக்கில்லாத விரோதிகளுடன் சண்டைசெய்து ஜயமடைந்து இதைவைத்து ஊட்டப்பட்ட ஜனங்கள்; பதில்வெட்டு நாஸி தத்துவம் வினு வேறு ஸ்பஷ்டமான நோக்கமற்றவர்கள்; இத்தகைய மனிதர்கள் உண்மை வீரர்களுடன் சண்டைக்குப்போய் அமெரிக்கர்கள் சொல்லும் விதமாக தலையை மாட்டிக் கொண்டால், எப்படி தப்பமுடியும்?



# ஒரு புதிய ஒலிம்பிக் காக்ஷி.

(கிரீஸின் எல்லைப் புறங்களை ஜெர்மானியச் சேனைகள் பயமுறுத்திக் கொண்டிருந்த அந்த சமயத்தில்தான் கிரேக்கப் பத்திரிகைகள் ஹிட்லருக்குப் பகிரங்கக் கடிதமொன்றை அனுப்பின. சில தினங்களுக்குள்ளாகவே இக்கடிதம் இலக்கிய பிரசித்தி பெற்றுவிட்டது. அது ஓர் எதிர்ப்பு கடிதம். அஞ்சா நெஞ்சர்களான கிரேக்கர்களின் தைரியத்தைப்பற்றியே அது பேசுகிறது. இவர்களைப் பற்றியும், சுதந்திரமாயுள்ள மற்ற நாடுகளுக்கு இவர்கள் தைரியம் அறிவிப்பது என்ன என்பதைப் பற்றியும் பேசுகிறார் **தளபதி வுட்ராபே**).

பெர்லினில் ஒலிம்பிக் விளையாட்டுகளின் திறப்பு விழாவை நான் கவனித்தேன். அது ஓர் அகில உலக நாடகக் காட்சியாகத் தோன்றியது. கூடி இருந்த பெருங் கூட்டத்தைக் கவரும்படி அமைக்கப்பட்டதாக இருந்தது. ஹிட்லர் வருகையானது அந்த ஆயிரக் கணக்கான ஜனக் கூட்டத்தை பரம உத்சாகத்தில் ஆழ்த்தியது. ஆயிரக் கணக்கான புஜங்கள் ஆகாயத்தை நோக்கி தூக்கப்பட்டன. பரம பக்தியுடன் ஆயிரக்கணக்கான குரல்கள் நாஸிப் பாட்டைப் பாடின. வெள்ளை உடை உடுத்தியிருந்த ஒரு மேளக் கூட்டம் சில பாமரமதப் பாட்டுகளை வாசித்தது. பல அணிகள் தத்தம் கொடிகளுடன் நடந்து சென்றன. பெட்டிகளில் ரகசியமாக மறைக்கப் பட்டிருந்த பல புறாக்கள் திடீரென்று வெளியே விடப்பட்டு அவைகள் உயரே பறந்து மறைந்தன. ஐம்பது தேசங்களின் கொடிகள் மனித மாருதத்தில் அந்தி காலத்தில் பறந்து அக்காக்ஷிக்கு பல வர்ணங்களால் ஒரு உயர்வைக் கொடுத்தது. எல்லாம் முரட்டுத்தனமாகவும், பூதாகாரமாகவும், ஹாலிவுட்டில் சினிமாவுக்காகத் தயாரிக்கப்பட்டது ஸ்வப்னக் காக்ஷியோவென்று தோன்றியது. அங்கு நிலவிய பரம நிச்சப்தத்தில் ஒரு சட்டம் போன்ற தேகத்தையுடைய வாலிபன் தன் கையில் சுளுந்து ஏந்தி படிகளின் வழியே ஓடி மற்றொரு கோடியில் இருந்த ஒரு தீபத்தை ஏற்றியது எல்லா காக்ஷிகளைக் காட்டிலும் மனதைக் கவரக்கூடியதாக இருந்தது. விளையாட்டுகள் எல்லாம் முடிந்த பின்னர் ஹிட்லரே அந்தத் தீபத்தை அணைத்தான். அந்த ஒலிம்பிக் ஜ்வாலையை ஏற்றுவதற்காக பல வாரங்களுக்கு முன்னரே கிரீஸிலுள்ள ஒலிம்பியா பட்டணத்திலிருந்த ஜ்வாலையிலிருந்து ஒரு சுளுந்தை ஏற்றிக்கொண்டு மலைகளையும், ஆறுகளையும், சமவெளிகளையும் தாண்டி அஞ்சல் வைத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, கிரீஸிலிருந்து ஒளி வந்திருக்கிறது.

## சுதந்திர இருப்பிடம்.

சென்ற வருஷம் அக்டோபர் மாதம் 28-ல் கிரீஸிலிருந்து மற்றொரு ஒளி வந்தது. பாஸிஸ்டுகள் ஆதென்ஸ் நகரத்தில் பிரவேசிக்கும் பொழுது எவ்வளவு நாட்கள் தாங்குமென்று உலகம் வியந்துகொண்டிருந்த காலத்தில் அந்த ஒளி அந்த பதில்வெட்டு நெபோலியனைக் கொளுத்தியது. யுத்தத்தின் வழியை கிரீஸ் மாற்றியது. அதற்கு முன் தேசத்துக்குப்பின் தேசமாக ஜயிக்கப்பட்டு ஸர்வாதிகாரிகளின்

தேர்க்கால்களின் கீழ் நசுங்கி கிடந்தன. அச்சுநாடுகளை ஜயிக்கமுடியாதென்ற ஒரு பெரிய பூச்சாண்டியை 80-லக்ஷம் ஜனங்களுடைத்த ஒரு தேசமானது போக்கடித்தது. அக்காலத்தில் எகிப்தில் இதாலியப்படையெடுப்பு நின்று விட்டது. மெர்ஸா மாத்ரு கோட்டையில் பிரிடிஷார் இருந்தார்கள்; இதாலியர்கள் அவர்களுடைய கொத்தளங்களுக்குள் இருந்தார்கள். இருவர்களுக்கும் மத்தியில் எரிந்துகொண்டிருந்தது பாலைவனப்பொட்டல். அப்பொட்டலில் இடைவிடாது நம் யந்திர பலங்கொண்ட சேனை. பாடு கொடுத்துக் கொண்டிருந்தது. அச்சமயம் கிரீஸுக்கு எவ்வாறு உதவுவது என்ற பிரச்னை பரிசீலனை செய்யப்பட்டது. இதாலியர்களுக்கு முன்னாலேயே ஸேனாபதி வேவல் இதாலியர்களை முன்னேறித் தாக்கினார். இதாலிய கிராஸியானியை விரட்டி பெங்காஸிக்கப்பால் தள்ளிவிட்டு வந்தார். எகிப்துக்கு, ஆபிரிக்காவின் வடகரையிலிருந்தாவது, தெற்கே ஸூடானிலிருந்தாவது இதாலியர்கள் தாக்குவார்கள் என்ற பயமில்லாமல் செய்துவிட்டார்கள். மேலும் அந்த கலகலத்துப்போன இதாலிய சாம்ராஜ்ஜியத்தின் எல்லா பாகங்களையும் தாக்குவதற்கு ஏற்பாடாயிற்று. மேலும் நம் கடற்படை கிரீட் தீவைப்பிடித்ததிலிருந்து மத்தியதரைக் கடலின் நிலைமையே நமக்கு ஸாதகமாக மாறியது.

## பெரும் கீர்த்தி.

கிரேக்க எதிர்ப்பினால் இன்னும் அநேக பலன்கள் கிடைத்தன. வீழ்ந்து கிடந்த தேசங்களுக்கு புத்துயிரையும் புதிய உணர்ச்சிகளையும் கொடுத்தது. சுதந்திர தேசங்களுக்கு ஒரு மார்க்கதரிசியமாய் விளங்குகிறது. சுதந்திர தாகம் பயத்தால் ஒழியாதென்று நிரூபித்து கிரேக்கர்கள் ஆத்மார்த்தமான பல பொருள்கள் உலகத்திற்குத் தந்திருக்கிறார்கள்; கலைகள், இலக்கியங்கள், தத்வம் முதலியவை தந்திருக்கிறார்கள். ராக்ஷஸாகாரமான நாஜி யுத்த யந்திரம் அதனருகே நெருங்கிக் கொண்டே வருங்காலையில் சில நாட்களுக்கு முன்னர் கிரீஸ் ஒரு ஆச்சரியகரமான காரியத்தை செய்தது. கிரேக்க எல்லையிலேயே ஹிட்லரின் சேனைக் கூட்டங்கள் வந்து சேர்ந்த பிறகும் கூட ஹிட்லரை எதிர்த்து ஒரு பகிரங்க கடிதம் ஒரு கிரேக்க பத்திரிகை அனுப்பியது. இதில் ஒரு சமாதானம் வேண்டுமென்ற பிரார்த்தனையாவது தவித்த முதலை அடிக்கும் பாவியை கெஞ்சுவதாவது கிடையாது. ஜெர்மன் தேசமானது கிரீஸை ஏன் படை எடுக்க வேண்டும்? அதற்கு என்ன நியாயம் இருக்கின்றது. அவ்வாறு இன்று படையெடுப்பதானால் இதாலி படையெடுத்தபோது அது ஜெர்மனியின் வேலை அல்ல. அது இதாலியின் வேலை என்று சொன்னதற்கு பதிலாக தன் நண்பனுடன் தோள்மேல் தோள் உறைந்துகொண்டு அல்பேனியாவுக்குள் அப்பொழுதே பிரவேசித்திருக்கக் கூடாதா? என்றெல்லாம் காரணங்களுடன் கடிதம் எழுதியிருக்கிறார். அதன்பின் ஒரு ரோசமான கேள்வி கேட்கிறார். ஒரு ஜெர்மன் சிப்பாய் கிரீஸ் தேசத்தில் கால் வைத்தால் இதாலி பரிபூர்ண. தோல்வியடைந்ததாக நினைக்க வேண்டியதில்லையா என்று கேட்கிறார். 450 லக்ஷம் ஜனங்களுள்ள தேசமானது 80 லக்ஷம் உள்ள தேசத்தைத் தாக்கி முடியாமற்



போகவே 850 லக்ஷம் ஜனமுள்ள தேசத்தை உதவிக்கு அழைத்ததென்று உலகம் சொல்லாதா? ஆனால் முஸோலினிக்காவது ஹிட்லருக்காவது வெட்கமென்பதே கிடையாது. நல்ல குணங்கள் படைத்தவர்களுக்கல்லவா வெட்கமுண்டு. அந்த பகிரங்கக் கடிதத்தில் கடைசியில் பின்வருமாறு வெகு கம்பீரமாகச் சொல்லுகிறார்: "பெரிதோ சிறிதோ எபெரஸ்ஸில் நின்று இதாலியை எதிர்த்தது போல் திரேஸில் நின்று ஜெர்மனியை எதிர்ப்போம். அங்கே கிரீஸ் இறந்தாலும் இறக்கும்". ஆனால் ஐந்து வருஷங்களுக்குமுன் ஒரு அஞ்சலான் ஒலிம்பியாவிலிருந்து ஏற்றி கொண்டுபோய் பெருந் தீயைக்கிளப்பி அதைக்கொண்டு இந்த ஒலிம்பியத் தூண்டா விளக்கையே கொளுத்த வந்தால் அதில் அக்கினி பிரவேசம் செய்து அழியாப் புகழுடையும் பெருவழியை கிரீஸ் உலகத்திற்குக் காட்டும்.

## உயர்வான பாகப் பிரிவினை.

முன்காலத்திலும், தற்காலத்திலும் வலிவுச் சண்டைக்கு வந்த தேசங்கள் கிரீஸு தேசம் ஒத்துமையின்றி கிடப்பதைக் கண்டிருக்கின்றன. அதுபோல் தற்பொழுதும் கிரேக்கர்கள் விவகாரத்திலும், விவாதத்திலும் ஈடுபட்டவர்களாய் பிளவுகள் ஏற்பட்டுவிடும் என்று நம்பி முஸோலினி தன் சைனியத்தை அனுப்பினான். ஆனால் அவர்களுடைய மன்னரின் கீழும், ஸேனாபதி மெடாக்ஸாஸின் கீழும் ஒரு முகமாக தேசம் நின்றது. அன்று விடியற்காலம் மூன்று மணிக்கு ஸேனாபதி மெடாக்ஸாஸ் இதாலியின் இறுதிக் கடிதத்தை மேஜை மேல் எறிந்துவிட்டு "அப்படியானால் யுத்தம்தான்" என்று சொன்ன குரல் கிரீஸ் தேசத்தின் குரலேயாகும். டவுன்களில் தவிர தனிகர், மத்தியமர்கள் என்று வேற்றுமையில்லா குடியான ஜனங்கள் கொண்டவர்கள் கிரேக்கர்கள். ஆனால் அவர்கள் மேல்மக்கள். ஆனால் அந்த மேன்மை பிறப்பாலாவது வளர்ப்பாலாவது வந்ததல்ல. தாய் நாட்டிலோ, வெளி நாட்டிலோ பணம் சம்பாதித்த கிரேக்கர்கள் தாய் நாடை மறப்பதில்லை. அவர்களுடைய நன்கொடையும் கிழக்கித்தியர்களுடையவைபோல் மஹத்தானது. கம்பீரமானது. உதாரணமாக, ஆதன்ஸில் உள்ள வெளி நாட்டு இலாகா கட்டடங்கள், பாரிஸில் கிரேக்க ஸ்தானீகம், பெரிய பொருட்காக்ஷிசாலை, ஆஸ்பத்திரிகள் இவைகள் எல்லாம் தனிப்பட்ட தர்மிஷ்டர்களின் நன்கொடைகள். சென்ற பால்கன் யுத்தத்தில் ஒரு தேசாபிமானி ஒரு கவசம்கொண்ட ஸஞ்சாரிக் கப்பலை தானம் செய்தார். அதற்கு "கார்காஸ் அவெராப்" என்று பெயர். அதைச் சென்ற சில வருஷங்களுக்குமுன் மத்தியதரைக் கடலில் கண்டபொழுது அதன் புனல்களில் முன் யுத்தத்தில் பெற்ற சில துவாரங்களைப் பார்த்தேன்.

## கஷ்டங்களின் நிவர்த்தி.

சென்ற யுத்தத்திற்குப் பிறகு கிரீஸ் தேசம் குழப்பமாகயிருப்பதாகவும் புரட்சிக்குப் பின் புரட்சியாக வருவதாகவும் வெளியிலிருப்போருக்குத் தோன்றும். ஆனால் அது கடைசியில் ஒன்றுபட்டுவிட்டது. பல நூற்றுஆண்டுகளாக அருக்கியோடிருந்த விரோதத்தை ஒழித்து நட்பு கொண்டது. சிறிய ஆசியாவில் கெமால் ஆடாடுருக்கால் நிலைகுலைக்கப் பட்ட கிரேக்க சைன்யங்கள் ஸ்மிர்னா துறை

முகத்திலிருக்கும்போது நான் பார்க்க நேர்ந்தது. அக்காலத்திலிருந்து இக்காலத்திற்குள் அவர்கள் பெற்றிருக்கும் முன்னேற்றம் ஆச்சர்யகரமானது. அந்த கிரேக்க சைனியத்துடன் சுமார் 12½ லக்ஷம் கிரேக்க குடிகளும் சிறிய ஆசியாவை விட்டு கிரீஸுக்கு வந்தார்கள். ஏற்கனவே 60 லக்ஷம் ஜனம் உள்ள தாய் நாடு அவர்களை இரு கைகளாலும் அணைத்து வரவேற்றது. தற்கால கிரேக்கர்கள் இவ்வளவு கஷ்டங்களிலும் தம் பண்டைகாலத்து மகிமையை மறக்கவில்லை. மாரதான், ப்ளடேயா, ஸலமிஸ் இவைகளை மறக்கவில்லை. அவர்கள் பண்பிலும், வேதாந்தத்திலும் ஐரோப்பா கண்டத்தின் ஆசாரியனாக இருந்ததை மறக்கவில்லை. அக்காலத்தில் ஆங்கிலரும், ஜெர்மானியரும் காட்டில் சஞ்சரிக்கும் அநாகரீக தசையிலிருந்தார்கள். ரோமர்களும் அவ்வாறே நினைக்கப்பட்டார்கள். அமெரிக்கா அப்பொழுது கண்டு பிடிக்கப்படவில்லை. கிரேக்க ஆகாயத்தில் மேகங்கள் சூழ்ந்துகொண்டிருக்கின்றன. எந்த நிமிஷம் பிரளயம் ஆரம்பிக்குமோ தெரியவில்லை. ஆனால் கிரேக்க ஜோதியை எந்த பிரளயமும் அணைக்கமுடியாது. சுதந்தரப் போருக்கு குதூஹலமளித்த ஆங்கில பைரன் கவியின் கல்லறையை கிரேக்கர்கள் இன்னும் மறவாது பாதுகாத்து வருகிறார்கள். பைரன் கவி தன் உயிரைக் கொடுத்து சிரஞ்சீவியானார். அதுபோல் அல்பேனியா மலைகளில் உயிர்துறந்த கிரேக்கக் குடியானவர்கள் சிரஞ்சீவிகள். விமானப் படை, கடற்படையில்லாது, பழைய காலத்து சேனையுடன் கிரீஸ் தேசம் சண்டைக்காரனை எதிர்த்து நிற்கிறது. "அங்கே இறந்தாலும் இறக்கலாம்" என்று கடிதம் எழுதியவர் அறிவிக்கிறார் "கண்யமுடன் சாவதே பெரிதானால் கிரீஸ் தேசத்தின் பண்பையும் பெருமையையும் காக்க உயிர் துறந்தார் என்று உலகமுள்ளளவும் போற்றும் புகழுடம்புடன் கிரீஸ் மரிக்கும். மரித்தும் உயிருடனிருக்கும்" என்று கிரேக்கர்கள் புகழக்கூடும்.

---

## பிரிடன் பேசுகிறது.

[Mr. J. **வாட்ஸன்**, இங்கிலாந்து சுற்றுப்பிரயாணத்தில் சமீபத்தில், உருக்கு நகரம் என்று பிரக்யாதி பெற்ற ஷெப்பீல்டு நகரம் சென்றிருந்தார். அந்த் நகரவாசிகளைப்பற்றிய வர்ணனையும், சென்ற யுத்த சமயத்திலிருந்ததைவிட இந்த டயத்தில் வெகு சுறுசுறுப்பாய் அங்கு நடக்கும் வேலை விபரத்தையும் 5—3—41-ல் அவர் B. B. C. ரேடியோவில் பேசியது]

ஒன்று இரண்டு நாட்களுக்கு முன் **ஷெப்பீல்டு** சென்றிருந்தேன். அதன் வீதிகளில் கிடந்த உறை பனியைப்பார்த்தேன். என்ன அழுக்குடன்சேர்ந்த பனி உறை! அந்நகரத்திய ஜனங்கள் இந்த யுத்தப் பிரயுக்தமாய் எவ்வளவு அயராமல் கடுமையாய் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற அறிகுறிகள் அந்த அழுக்குப்படிந்த உறை பனியில் காணப்பட்டன. ஒரு வாரத்திற்கு 66



மணி வேலை. இது வெகு சாதாரண வேலை! ஐந்து வாரத்திற்கு ஒரு ஞாயிற்றுக்கிழமைதான் விடுமுறை. இதுவும் அப்படியே சகஜமாகிவிட்டது! பதினேழு மாதங்களுக்கு முன், (அதாவது) 1939-ம் வருஷ செப்டம்பர் மாதத்திலிருந்து சில உருக்குசாலை ஆபீஸ்களில் ஒரு க்ஷணம்கூட ஏற்றிய விளக்கு அணைக்காமல் வேலை செய்யப்பட்டு வருகின்றன. ஓய்வு ஒழிவுயில்லாமல் உருக்குசாலைப் பட்டரைகள் உருக்கை திரவப்படுத்தும்படியான உஷ்ணத்துடன் எரிந்துகொண்டேயிருந்துகள். சென்ற யுத்தத்தில்கூட, இத்தனை யுத்த வெடிமருந்து தளவாடங்களை இந்த நகரம் உற்பத்தி செய்யவில்லை. யுத்த தளவாட சாமான்களில், ஏதோ என் கண்ணில் தட்டுப்பட்டதை மட்டிலும் சொல்லுகிறேன் கேளுங்கள். பீரங்கி குண்டுகள், பீரங்கிகள், கவசம் தாங்கிய மோட்டார் சாமான்கள், இன்னும் இதர சாமான்களும் உற்பத்தி செய்யப்பட்டன. நான் நீல மூக்குக்கண்ணாடி போட்டுக்கொண்டு அந்த உருக்கு சாலைப் பட்டரைகளைப்பார்த்தேன். பட்டரைக் கதவுகள்மேலே தூக்கப்பட்டன. ஸ்படிகமயமான ஜலம்போல் கொதிக்கும் தருவாயில் வரும் குமிழிகளை வெளிக்கிளப்பிக்கொண்டு எஃகு கொதித்துக்கொண்டிருந்ததைப் பார்த்தேன். நான் ஒரு யந்திர சாதனமடங்கிய பெரிய கொல்லுப்பட்டரை வழியே நடந்தேன். இங்கே பிரமாண்டமான "க்வீன் மேரி" "க்வீன் எலிஸபெத்" என்ற பெரிய கப்பல்கள் இரண்டும் ஏகோபித்து ஒரே பாகத்தில் வைத்துப்பழுது பார்க்கும் படியான வசதியிருந்தது. உற்பத்திசெய்யப்படும் தருவாயிலிருந்த 3·7 இஞ்சு அளவு முதல் 16 இஞ்சு அளவுவரை பிரமாணமுள்ள பீரங்கிகளை பார்த்தேன். 40 கஜ நீளமுள்ள துவாரம் போடும் கருவிகளிருந்தன; 400 டன் பளுவைத்தூக்கக்கூடிய அவ்வளவு சக்தி வாய்ந்த (கிரேன்கள்) "பாரம்" தூக்கிகளிருந்தன. என்ன பிரமாண்டம்! அவைகளின் உருவே என்னை மசகம்மாதிரி சிறிதாக்கிவிட்டது. அவைகளுக்குள் நான் எங்கேயோ அமுக்கப்பட்டவன்போல் ஒரு உணர்ச்சி ஏற்பட்டது! அதில் வேலை செய்வோர்களுக்கோ; இவைகள் சகஜமாய்ப்போய் விட்டது. அந்தத் தொழிற்சாலைதான் அவர்களுக்கு ஜீவாதாரம். தவிரவும் அவர்கள் வலுவுள்ள மூளையுள்ளவர்கள், உழைப்பாளிகள் எந்த கஷ்டத்திற்கும் சளைக்கமாட்டார்கள். அதனால் தான், ஜெர்மானியரின் மின்னல் போரின் ஜம்பம் அவர்களிடம் பலிக்கவில்லை; அவர்களின் உற்பத்தியையும் ஒருவிதமாயும் பாதிக்கவில்லை.

நான் பார்த்தொழிற் சாலைகளில் இரண்டுகளில் மேன்கூரைகள் அடித்துத்தள்ளப்பட்டிருந்தது. அடுத்த நாள் காலையே மானேஜர்களும், வேலைக்காரர்களும் பழுதுபார்த்தார்கள் சில யந்திரங்களின்பேரில் மரச் சட்டங்களை வைத்து மேன்கூரைகளாக மெழுகு சீலைகளைப் பொருத்தி அமைத்தார்கள். அவைகளைப் பார்த்தால் சிப்பாய்கள் தங்கும் காம்பு(camp) குடிசைகள் போலிருந்தன. அவைகளுக்குள் பனிக்குல்லாய்களையும், பெரிய குளிர் தாங்கும் கோட்டுகளையும், மாரி கால பூட்சுகளும் போட்டுக்கொண்டு இஞ்ஜினீயர்கள் வேலை செய்தார்கள். அங்கே ஸ்திரீ வேலையாட்களுமிருந்தார்கள். கனமான கோட்டுகளை க்ஷணமேனும்

எடுக்காமல் வேலை செய்தார்கள். மூலைக்கு மூலை எங்கேபார்த்தாலும் வேலைதளத்தில், தணல் தட்டுகள் வைக்கப்பட்டிருந்தன. அவைகள்தான் வேலை ஸ்தலத்திற்கு கதகதப்பு அளித்துக் கொண்டிருந்தன. தொழில் மேல் பார்வைபார்த்து வந்த ஒரு ஆபீஸர் என்னிடம் சொன்னார். "உங்களுக்கு ஆச்சரியமாய்த்தானிருக்கும். நான் சொல்லப்போகிறது சாதாரண காலத்தில்விட இந்தக் கஷ்டமான சந்தர்ப்பங்களில் வேலைசெய்யும் இந்தத்தொழிலாளிகள், கடினமாயும் உழைக்கிறார்கள். ஆனால் மிகவும் குறைவாய் அவதிக்குறலிடுகிறார்கள். அவர்கள் நடு யுத்தத்தில், யுத்த அரங்க முன்னணியிலிருப்பதாய் பாவித்துக் கொள்ளுகிறார்கள்."

வாஸ்தவமாகவே அவர்கள் சைனியத்தின் முன்பகுதிதான். உதையும் தான் படுகிறார்கள். இது மட்டும் உண்மைதான். ஜனங்கள் முழுமனதுடன் அவர்கள் வேலையில் ஈடுபட்டுவிட்டார்கள் என்றால் ஆச்சர்யப்படும் விதமாக அவர்களிடம் ஒரு ஜாக்கிரதையும், ஒரு அனாயாசமும் காணப்படுகிறது. டங்கர்க் சம்பவத்திற்குப் பிறகு உடனடியாக, இந்த ஷெப்பீல்டு தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு $11\frac{1}{2}$ மணி நேரம், வாரம் 7 நாளும் வேலை செய்தார்கள். மயிரிழைகூட மனம் கோணவில்லை. இப்படிச் சொன்ன அந்த தொழிற்சாலை மானேஜர் "நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். சாதாரணகாலத்தைவிட 50, 60 சதம் விகிதம் கூடவே நாங்கள் உற்பத்தி வேலைசெய்கிறோம்". என்றார். "அது எப்படி உங்களால் சாத்தியப்படுகிறது?" என்று அவரை நான் கேட்டேன். "அநேக வருஷங்களுக்கு முன்னிருந்ததைவிட நான் சுகமாகத்தானிருக்கிறேன். இதற்கு காரணம் என் மனதில் தோன்றித்தூண்டும் புது ஆர்வம்தான். சண்டை ஆரம்பிக்குமுன், இந்த வேலை எனக்கு கொஞ்சம் ருசி தட்டாமலிருந்தது, என்னவோ கிராமாந்திரத்தில் ஒரு குடிசை, அங்கே ஜாகை அப்படி எல்லாம் ஆசை தட்டியது. இப்பொழுது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புதுவேலை வருகிறது. விமான மந்திரி ஆபீஸிலிருந்து "வரும் திங்களன்று அந்த புது யந்திரங்கள் எங்களுக்குக்கிடைக்கும்படி செய்ய வேணுமே"? "இதே வேலைக்கு தற்போதிய யந்திரத்தின் அளவைவிட கொஞ்சம் ஆகிருதியில் சிறியதாகவும் அதே பகுதி வேலை செய்யக்கூடியதான வேறு புது யந்திரங்களை அமைக்கமுடியுமா" என்றும் டெலிபோன் மூலம் செய்தி கேட்கிறார்கள். நான் என் தொழிற்சாலை ஆபீஸர்களை என் மேஜையண்டை கூப்பிடுகிறேன். யோஜனை செய்து முடிவு செய்கிறேன்" என்று பதில் சொன்னார். பேச்சுடன் பேச்சாய் தன் தொழிற்சாலையில் ஒரு ஆஸ்திரியா தேச ஜாதி ஒருவர் ஆபீஸர் என்றும், அவர் நாஸிகள் தொல்லையால் இங்கிலாந்தில் அடைக்கலம் புகுந்தவர் என்றும், நமது விமானப்படைக்கு மிகவும் உபயோகமுள்ள ஏதோ இரண்டு நூதன சீர்திருத்தங்களைக் கண்டு பிடித்துவிட்டதாகவும் அறிவித்தார்.

அந்த தொழிற்சாலைக்கு வெகு சமீபத்தில் நாள் ஒன்றுக்கு சுமார் 1,600 பேர்கள் பககாலத்தில் இடைபோஜனம் செய்யும்படி வசதிகொடுக்கக்கூடிய முனிஸிபல் சபையால் கண்காணிக்கப்பட்ட சிற்றுண்டிசாலையிருக்



கிறது. இந்த சிற்றுண்டி சாலையும் யுத்தப்பிரயுக்தமான உற்பத்திதான். ஷெப்பீல்டு நகர நடுவிலும் மற்றொன்று இருக்கிறது. 3,500 பேர்கள் இடைபோஜனம் அதில் எடுத்துக்கொள்ளுகிறார்கள். அநேகம் பேர்களுக்கு அதில் டீ வசதியுமிருக்கிறது. இது நகரவிடுதி. இதில் ஒரு பெரிய விருந்தளிக்கலாம். ஒரு பால் டான்ஸ் நடத்தலாம். அத்தனை பெரிது அத்தனை கம்பீரமானது. அதில் அந்நகரின் பல நாடகசபை சங்கீத சபையைச் சேர்ந்த 10 பாடகர்களடங்கிய ஒரு வாத்திய கோஷ்டி சங்கீதம் வாசித்தது. ஊதியத்திற்கு அந்த கோஷ்டி சங்கீதம் வாசிக்கவில்லை. எல்லாம் அன்புக்குத்தான். நான் 3 பென்ஸ்தான் கொடுத்தேன். அதாவது (ஒரு டாலரில் 6-ல் ஒரு பாகம்) அதற்கு ஒரு கப் டீ, ஒரு தட்டு மாமிசம், 2 தட்டு மரக்கறி, ஒரு தட்டு பால் கூழ் இத்தனையும் தந்தார்கள். எல்லாம் பரிசுத்தம். மேஜை விரிப்பு கருப்பும் வெள்ளையும் கலந்த செக் துணி. பரிமாறும் ஸ்திரீகள் நல்ல வெள்ளை உடுப்புத்தரித்திருந்தார்கள். நாம் கேட்பதற்கு "ஆம்" என்று பதில் சொல்லும் அழகும், யாரைப்பார்த்தாலும் ஜனநாயக உணர்ச்சி ததும்புவதும் இதெல்லாம் அங்கு காணப்பட்டன. எனக்கு எதிரில் ஒரு யௌவன தொழிலாளி உட்கார்ந்திருந்தான். நான் அவனைப்பார்த்து, "நாம் கொடுக்கும் பணத்திற்கு எத்தனை மலிவுபார் இல்லையா" என்றேன். அவன் யார்க்கு ஜில்லாவில் வழங்கும் கொச்சை பாஷையில் "ஆம் வாஸ்தவம்தான் ஆனால் நான் ஒவ்வொரு நாளும் ஒருஷில்லிங் செலவழிப்பேன். நான் உருளைக்கிழங்கு, பீன்ஸ் இதை இரண்டு வகை ஆகாரத்துடன் இரண்டு பால்கூழ் தட்டுகளும் வாங்கிக்கொண்டிருக்கிறேன்," என்று மெதுவாகச் சொன்னான். "என்ன அப்பா உன் நிகுதிக்கு மேல் நீ சாப்பிடுகிறாயே?" என்று பரிகாசமாய்க் கேட்டேன். "ஆமா ஐயா நான் ஒரு சுரங்கத்தில் வேலை செய்பவன். நல்ல சாப்பாடு சாப்பிட்டே வழக்கமாகிவிட்டது, பதார்த்தமும் நல்லதாயிருந்தால்தான் எனக்குப்பிடிக்கும்". அவன் இப்படிச் சொன்னதைப்பார்த்தால் ஏதோ சுரங்கத்தொழிலாளி என்றால் அவன் உலகம் தாங்குபவன்போல் நினைத்துக் கொண்டிருக்கிறான் என்று தோன்றியது. "சரி சுரங்கத்தொழிலாளிகள் இந்த யுத்தத்தைப்பற்றி என்ன நினைக்கிறார்கள்?" என்று ஒரு கேள்விகேட்டேன். அதற்கு அவன் "ஹிட்லர் இம்மாதிரி நமக்கு தீங்கு விளைவிக்கும்படி விடப்படாது என்றும் ஹிட்லருக்கு ஒரு சூடு கொடுக்கவேணும் என்றும் தீர்மானித்து விட்டோம்" என்றான்.

நம்முடைய தொழிலாளிகளிடையே உலவிவரும் அமைதியான மனோபாவத்தை உங்களுக்கு எடுத்துரைக்கப் பிரியப்படுகிறேன். நாம் ஜயிப்போம் என்பதில் அவர்களுக்கு கொஞ்சமேனும் சந்தேகம் கிடையாது. ஐயம் எப்படிவரும், எப்பொழுதுவரும் என்பதைதெரிந்துகொண்ட மேதாவிகளாக அவர்கள் காண்பித்துக்கொள்ளவில்லை. இவர்களின் இந்த மனப்பான்மையை பலவழிகளில் தெரிந்துகொள்ளக்கூடும்; முக்கியமாக ஆபத்து சமயத்தில் இந்த மனப்பான்மையின் சக்திகள் தோன்றுகின்றன. ஷெப்பீல்டில் எனக்கு இரண்டு டாக்டர் ஸ்நேகிதர்கள் இருக்கிறார்கள். ஒரு ரயில்வே இஞ்ஜின் டிரைவர் அவரைப் பார்க்க வந்தான். "ஸார்

எனக்கு கொஞ்சம் உபத்திரவம் ஏற்பட்டிருக்கிறது. நான் லண்டன் டெர்மினஸ் ரயில்வே ஸ்டேஷனில் இஞ்ஜினையும் தொடர் வண்டிகளையும் கோர்க்க அப்பொழுதுதான் எத்தனித்தேன். திடீரென்று ஒரு வெடி சப்தம். 50 கஜத்திற்கு அப்பால் ஒரு வெடிகுண்டு விழுந்தது. அதன் அதிர்ச்சியால் கிளம்பிய ஒரு துணுக்கு என் ஜாக்கட்டிற்குள் போய் அதை திருப்பி மடக்கின குடை பலூன் போலச்செய்து என்னை அலக்கத்தூக்கி இஞ்ஜின் டென்டர்மேல் போட்டுவிட்டது. என்ன ஆச்சர்யம்! சுமார் 1-மணி 1½-மணி நேரம் கழித்து நான் அந்த ரயில் வண்டியை 160 மையில் ஓட்டி இவ்வூர் வந்துசேர்ந்தேன்" என்றான். "காதுக்குள் ஒரு "கும்" என்ற சப்தம் ஏற்பட்டதா—உனக்கு" என்று கேட்டார் என் ஸ்நேகிதர் டாக்டர். "ஆமாங்க இன்னும் இருக்குங்க," என்று பதில் சொன்னான். அவனுக்கு உள்ளூர ரத்தக் கொதிப்பு. மூளைக்குள் லேசான ரத்தப் பிரவாகம் எடுத்து யிருந்தது. டாக்டர் ஒரு மருந்துச்சீட்டு கொடுத்து "அதன் சேஷமிருக்கிறது, 2 நாள் ஓய்வு எடுத்துக்கொண்டால் நலமாயிருக்கும்" என்று சொன்னார். "ஐயா நான் ஓய்வு எடுத்துக்கொள்ளமுடியாது. இந்த ரயிலை லண்டனுக்கு இன்று இரவு கொண்டுசேர்க்கவேணும். இந்த வெடிகுண்டுகள் என் வேலையைத் தடுக்கும்படி விடமாட்டேன்" என்று வீரமாக பதிலுரைத்தான். என்ன ஆச்சர்யம்! அவன் அந்த வேலையைச் செய்தே தீர்த்தான். வெடிகுண்டுகள் தொழிலாளிகளை நசுப்படுத்துவதுபோல் தொந்தரவு செய்தது. ஆனால் அவர்களிடையே ஒரு ஆச்சர்யமான சாந்தம் மனோதைர்யத்துடன் கூடியதாக உலவியது.

மின்னல் போர் நடந்துகொண்டிருந்தது. நாலாபக்கத்திலும் வெடிகுண்டு சிதறி விழுகின்றது. இந்த டாக்டர் வீட்டுக் கொல்லைப்புறத்தில் ஒரு சீட்டி சப்தம் கேட்டது. "ஹாய்" என்று ஒருவர் கூப்பிட்ட சப்தம். டாக்டர் கொல்லைக் கதவண்டை போனார். 5-அடி உயரமுள்ள, ஒரு சிறு மனிதனைப் பார்த்தார். "உங்களிடம் ஏதோ கால்பம்பு (Stirrup pump) இருப்பதாகக் கேழ்விப்பட்டேன். தாங்கள் தயவுசெய்து இரவல் கொடுக்கவேணும், அடுத்த வீட்டில் நெருப்பு." என்று சாவதானமாய்ச் சொன்னான் நெருப்பு அடுத்த வீட்டில் மட்டிலும் அல்ல, அதற்கடுத்த வீட்டிலும்தானிருந்தது "ஸார், இதோ வாபஸ் செய்து விடுகிறேன்." என்று சொல்லிப்போனான். ஒருமணி நேரம் சென்றது. முன்பு மாதிரி ஒரு சீட்டி அதே குரல். "இதோ உங்கள் ஸ்டிர்ரப் பம்பைத் தந்துவிட்டேன்" என்றான் அந்த சிறு மனிதன். இதற்குள்ளாக ட்பார், டபீர் என்ற விழுக்காடு சப்தங்கள் நாலா பக்கத்திலும் அதிகரித்தது. வானம் நெருப்பால் ஜோதிர்மயமானது. மின்னல் போர் மகோன்னத கோரத்தையடைந்திருந்தது. 'அப்பா, கொஞ்சம் வீட்டிற்குள் தங்கிப் போகலாமே' என்றார் டாக்டர். 'இல்லைங்க ஸார், இங்கேயே ஒரு நிமிஷம் நிற்கிறேன்' என்று வாசல்படியிலேயே நின்றான்; அவன் மேலும் மிதமான ஆச்சர்யத் தொனியுடன் கேட்டான், 'இந்த இரவு என்ன குமுறல்—இல்லை? டாக்டர்.' இப்படி இவன் கேட்டது ஏதோ மழைக்காக ஒதுங்கியிருப்பவன் சொல்



வது போலிருந்தது.

இந்தத் தொழிலாளர்கள் பேசுவதும் நடந்துகொள்வதும் இவர்களுக்கே ஆச்சரியமாயிருந்ததோ என்னமோ எனக்குத் தெரியாது. ஆனால் எங்களையும் ஏனைய அமெரிக்கர்களையும் பிரமிக்கவைத்தது. அதே ஷெப்பீல்ட் நகரில் ஒரு வயோதிக அமெரிக்கர் வசித்துவந்தார். இந்த விமானப் படையெடுப்பில் அவரது 72-வது பிறந்ததினத்தன்று அவர் வீட்டின் ஒரு பகுதி தகர்ந்துபோய்விட்டது; நெருப்பும் பிடித்துக்கொண்டது, எல்லாம் போச்சு என்று நினைத்துவிட்டார். என் டாக்டர் சிநேகிதர் ஒருவர் அவரைப் பார்த்து 'இன்னும் எத்தனைகாலம் சண்டை நடக்கும்?' என்று கேட்டார். 'இந்த ரீதியில் வெகுகாலம் சண்டை நீடிக்காது' என்று பதில் சொன்னார் அந்தக் கிழவர். அவர், பிறகு 2, 3 வாரம் மனம்போனபடிக்கெல்லாம் விரைவான வாழ்நாட்களை நடத்தினார். ஆனால் நாம் நிச்சயமாய் சண்டையில் ஜயமடைவோம் என்ற ஆர்வமும் நம்பிக்கையும் கொண்டவராக ஆகிவிட்டார். இதற்குமுன் இவ்வளவு ஆர்வம் படைத்தவராக அவர் காணப்படவேயில்லை.

'என்ன நூதன மனிதர்கள் அப்பா! நீங்கள்! 6 மாதத்திற்கு முன் நெக்டை அணிந்த குமாஸ்தாக்கள்; இப்பொழுதோ அதே குமாஸ்தாக்களை ராயல் ஆகாய விமானப்படை வீரர்களாகச் செய்துவிட்டீர்கள். எப்படி இம்மாதிரி நீங்கள் மாற்றிவிடுகிறீர்கள் என்பது எனக்குப் புரியவில்லை ஆச்சர்யமாய்த்தானிருக்கிறது" என்று அதே கிழவர் சொன்னார்.

ஆம். ஆச்சர்யமான விஷயங்கள் நடந்துகொண்டேதான் இருக்கின்றன. 26 வருஷத்திற்குமுன் நானும், மற்றொரு டாக்டரும் சென்ற யுத்தத்தில் ஒரு மெஷின் பீரங்கி படையினராயிருந்தோம். நாங்களிருவரும் இராபோஜனத்திற்கு ஒரேயிடத்தில் சந்தித்துக்கொள்ளுகிறதென்று பேசிக்கொண்டோம். 1919-ம் வருஷத்துக்குப் பிறகு இதுவரை நான் அந்த டாக்டரை பார்க்கவேயில்லை. நல்ல கோட், மடங்காத வெள்ளைக் காலர், கோடுபோட்ட ட்ரௌஸர் இந்த ஆடைகளுடன் ஒரு ஷோக் மனிதராகயிருப்பார் என்று எதிர்பார்த்தேன். என்ன ஏமாற்றம்! காக்கி யுத்த உடையுடனும், ஆர்மி பூட்ஸ் போட்டுக்கொண்டு ஹோம்கார்ட் படையின் யுத்த ஆடையில் பிரசன்னமானார். 2,567 வியாதியஸ்தர்களைப் பார்வையிடவேண்டியவர். அவ்வளவு பேர்களும் தொழிலாளிக் குடியிருப்பைச் சேர்ந்தவர்கள். வருஷக்கணக்காய் ஓய்வு என்பதே கிடைக்காத வேலை. இப்பொழுது வாரத்திற்கு 3 இரவும், ஞாயிற்றுக்கிழமை பூராவும் அந்த ஹோம் கார்ட் படையில் சேவுகம். அவர் வேலை பார்க்கவேண்டிய ஸ்தலத்திற்கு ஒரு காரில் சென்றோம். போகும்போது "உங்களுக்கு ஒரு பெரிய வெடிகுண்டு என்ன பாடு படுத்தியிருக்கிறது—இந்த தொழிலாளிகளின் ஜாலகங்களை—என்று காண்பிக்கப் பிரியப்படுகிறேன்" என்றார்.

பால்போல் நிலவு வீசிற்று—குண்டு வீச்சுக்கு சரியான இரவு—மேகங்களை அடிக்கடி உற்று நோக்கிக்கொண்டே சென்றோம். கொஞ்சம் சுற்றுப்பாதை வழி சென்றோம். ஒரு வீதி கடந்தோம். அந்த வீதியில் ஒரு வீட்டுக்காவது ஜன்னல் கிடையாது. எல்லாம் பறந்து

போய்விட்டது. திரும்பினோம் மற்றொரு வீதியில் பாதி பகுதி பாழாக்கப்பட்டுக்கிடந்தது. வீடுகள் தரையோடு தரை. 5, 6 அடி உயரமுள்ள பாழ் செங்கல் சுவர்கள்தான் மிச்சம். "இவ்வளவும் ஒரு பெரிய வெடிகுண்டு—ஒரே குண்டு—செய்த வேலை" என்று சொல்லிக்கொண்டே வந்தார் அந்த டாக்டர். அந்த டாக்டர் அந்த பிரதேசத்தில்தான் குடியிருந்தார். ஏன் அவர் வீட்டைக் கவனித்துவந்த Mrs. மெல்கின்ஸ் என்ற ஒரு கிழவியைப் பற்றி அவர் என்ன சொன்னார் தெரியுமா? "அவள் தானாகவே சுமார் 100 எரிகுண்டுகளை அவித்திருக்கிறாள், பற்றி எரிந்த 2 வீடுகளையும் கூட அணைத்திருக்கிறாள்" என்றார். என்ன ஸார் அவள் செய்த வேலையைப் பார்த்தால், ஒருக்கால் அரை டஜன் தீ அணைக்கும் (நீல ஜாக்கெட் அணிந்த) உத்தியோகஸ்தர்களை உருட்டித் திரட்டப்பட்டவளோ என்றுகூட நீர் நினைப்பீர். என்ன அவளுடைய படுத்துவம்! தைரியம்! எரி குண்டுகளைப்பற்றி அவளுக்கு என்ன அலட்சிய புத்தி என்று நினைக்கிறீர்? வரட்டும் இன்னொரு மின்னல்போர். ஒரு 5 நிமிஷத்திற்குள் அவள் வேலையைத் துவக்கி விடுவாள். இதற்கு சந்தேகமில்லை" என்று மறுபடியும் சொன்னார். பிறகு நாங்கள் அவர் ட்யூடிசெய்ய வேண்டிய காவல் ஸ்தலத்திற்குப் போனோம். ஒரு குதிரை லாயத்தை அப்படி சௌகர்யமாய் மாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். ஒரு பக்கம் கணப்பு. ஒரு இரும்புக்கம்பிக்கட்டிலில் 2 பேர் தூக்கக் கலக்கத்துடன் உட்கார்ந்திருக்கிறார்கள். இன்னும் 4 பேர் "Whist" என்ற சீட்டுக்கச்சேரி நடத்துகிறார்கள். சுவரை ஒட்டி ஒரு பலகைப்படி அலைகளில் கைத்துப்பாக்கிகள் அடுக்கிட்டு வைக்கப்பட்டிருந்தன. ஒரு யௌவன ஆபீஸர் உள்ளே நுழைந்து பார்க்கிறான். அவன் ஏற்கனவே Cold stream guard-ல் ஸார்ஜென்டு உத்தியோகம் வகித்தவன். மற்றொருவன் தொழில்சாலை ஒன்றில் ஆட்களை கண்காணிக்கும் உத்தியோகத்திலிருந்தவர். அங்கிருந்த மற்றவன் ஒரு நேர்த்தியான கைத்தொழில் காரிய நிர்வாகி ஒருவருக்கொருவர் என்ன பரிகாசம் என்ன குஷியான புரளி, கேளிக்கை.

பிறகு நாங்கள் வெளியில் சென்றோம். அந்த லாயம் ஒரு எலிஸபெத் காலத்திய வீட்டைச் சேர்ந்தது. நாலா பக்கத்திலும் கவனிக்கவேண்டியதற்காக அமைக்கப்பட்டுள்ள உன்னத ஸ்தலத்திலிருந்து பார்த்தோம். ஷெப்பீல்டுக்கு வெளிப்புரத்திலுள்ள வயல்களை நாங்கள் நன்றாய் பார்க்க முடிந்தது. அது நடுநிசி வேளை. எல்லாம் நிசப்தமாயிருந்தது. முந்தி Cold stream guard ஆகயிருந்த அந்த ஆபீஸர் "நாம் நிச்சயம் வெற்றியடைவோம். சந்தேகமில்லை" என்றார். ஆம் அருகேயுள்ள ஷெப்பீல்டு நகரத்தில் ஓய்வு ஒழிவு இல்லாமல் உருக்குப்பட்டறைகள் நெருப்பைக் கக்கிக்கொண்டும் குமிழியுடன் சேர்ந்த எஃகு உருக்குதல் எக்காலத்திலும் நடந்துகொண்டும், தங்கள் வேலையைச் செய்துகொண்டிருந்தன. மின்னல்போர் இவைகளின் போக்கில் ஒரு மாறுதலையும் செய்யவில்லை. ஏதாவது கொஞ்ச கிஞ்சம் ஏற்பட்ட சிறுகெடுதல்களும் உடனடியில் பழுது பார்க்கப்பட்டதாகவே இருந்தது.

உங்களுக்கு நல் இரவு!



# பத்து லக்ஷம் டன் பிரிடிஷ யுத்தக் கப்பல்கள் கட்டப்படுகின்றன.

## கப்பல் கட்டுபவர்கள்.

ஸ்காத்லாந்தில் ஒரு நதி உண்டு, இங்கிலாந்தில் மற்றொன்று உண்டு, வட அயர்லாந்தில் ஒரு குடா உண்டு. இவைகள் மூன்றிலும் பிரிடனின் கடல் ஆதிக்கத்தின் ரகசியம் அடங்கிக்கிடக்கிறது. ஏனெனில் அவைகளின் கரைகளின் ஓரங்களிலும், கிராமங்களில், நகரங்களில், உலகினில் எல்லாம் கப்பல் கட்டும் தேசங்களில் ஒரே மூச்சில் பெரும் அலைபோன்ற முயற்சியால் ஏககாலத்தில் 10 லக்ஷம் டன் யுத்தக் கப்பல்கள் கட்டக்கூடிய இஞ்சினீயர்கள், டிராப்ட்ஸ்மென், ரிவெட் அடிக்கிறவர்கள், பாயிலர் செய்பவர்கள், வர்ணம் பூசுகிறவர்கள்—இவர்கள் வசிக்கிறார்கள்.

## கடலாதீனத்தின் அவசியம்.

இன்று பிரிடனுக்கும் தோல்விக்கும் இடையே நிற்பது கடலாதீனம்; நாளை அது பிரிடனை ஜயத்துக்குக் கொண்டு போகப்போகிறது. எல்லாம் நஷ்டமாகி விட்டதென்று தோன்றியபோது, இக்கடலாதீனம் சாம்ராஜ்ஜியத்துக்கு டன்கர்க்கில் மூச்சுவிட அவகாசம் அளித்தது. அது மத்திய கிழக்கில் பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்துக்கு படுதோல்வி நேரிடாமல் கார்க்கிறது.

## புது திட்டங்கள்.

பிரிடனின் பெருத்த கப்பற்சாலைகள் அதன் கடல் பலத்துக்கு முட்டுக் கொடுக்கின்றன; கப்பல்களுக்கு ஏற்பட்ட காயங்களை ஆற்றுகின்றன; நஷ்டங்களுக்கு ஈடு செய்கின்றன; மாதாமாதம், வாராவாரம்—ஏன். மணிக்குமணி—அதன் பலத்தை வளர்த்து வருகின்றன. மூனிச் ஒப்பந்தத்துக்குப்பின் இங்கிலாந்தின் உணர்ச்சி மகாயுத்தத்துக்குப்பின் 1939-ல் யுத்தக் கப்பல்கள் சம்பந்தமாக பெரும் செலவுகள் செய்யும்படி தூண்டிற்று. ஐரோப்பாவில் பிளவுகள் ஜாஸ்தியாக ஜாஸ்தியாக, யுத்தம் ஏற்படுவது நிச்சயமாக நிச்சயமாக, யுத்தக் கப்பல்கள் கட்டும் வேகம் அதிகரித்தது, செலவு திட்டங்களும் அதற்கேற்ப அதிகரித்தன. ஸெப்டம்பரில் அனுமதிக்கப்பட்டதும் ஆரம்பிக்கப்பட்டதும் திமிங்கலம் பிடிக்கிற ரகத்தில் 56 ரோந்து கப்பல்கள், 107 டிராலர்கள், 20 கண்ணி விலக்கிகள், 22 துணைக் கப்பல்கள், 16 நாசகாரிகள், 7 பெரும் யுத்தக் கப்பல்கள்.

## பழய திட்டங்கள்.

இவைதான் வருஷத்தின் முதல் 8 மாதங்களின் புது திட்டம். ஆனால் ஏற்கனவே கப்பல்கள் தங்கும் இடங்களிலும், சாலைகளிலும், கொத்தளங்களிலும், துறைமுகங்களிலும் கப்பற்படைக்காக கப்பல்கள் கட்டப்பட்டு வந்தன. தலைப்பில் நின்றன 9 பெரும் யுத்தக் கப்பல்கள். யுத்தத் தாக்குதல்களும் சந்தர்ப்பங்களும்

அவசியமாக்கினல் பழயதுக்கு பர்த்தியாக நிற்கவும், சேதமில்லாவிடில் அளவுக்கு மிஞ்சி படையை பலப்படுத்தவும் சாலைகளில் ஒரு புதிய படையே நின்றது.

## யுத்தக் கப்பல்கள்.

1939 அக்டோபரில் முழுகிய, 'ராயல் ஒக்' என்ற யுத்தக் கப்பல் 1914-ல் கட்டப்பட்டது. அது மிக்க பலம் வாய்ந்தது, ஆனால் பழசு. புதிய யுத்தக் கப்பல்கள் ஐந்தும் பிரமாண்டமானவை. 'ராயல் ஒக்கை'விட 6,000 டன் பெரியன. அதிலுள்ள பீரங்கிகள் 8, இவைகளிலோ 10. பிரிடனுக்கு கப்பற் தொழிலிலிருக்கும் மேதை அவற்றில் ஆவாஹனம் செய்யப்பட்டிருக்கிறது. இவைகளையும் ஈடு செய்ய, இவைகளிலும் விழும் துட்டியை பரிகரிக்க, 40,000 டன்னுள்ள 4 கப்பல்கள், 16 அங்குல பீரங்கிகள் ஏற்றிய ராட்சஸ. யுத்தக் கப்பல்கள், சமுத்திரத்தில் இதுவரை மிதந்த கப்பல்களுள் மிகுந்த சக்திவாய்ந்தவை இருக்கின்றன. 1939 ஸெப்டம்பரில் உருளைகள்மீது மிதக்கக்கூடிய நிலைமையில் ஒரு புதுப்படையே நின்றது, மன்னர் படைக்கு தேவையான ஒவ்வொரு ரகக் கப்பலும்,—யுத்தக்கப்பல்கள், க்ரூய்ஸர்கள், விமானமேற்றிகள், நாசகாரிகள், கார்வெட்கள், ஸ்லூப்கள், கண்ணி விளக்கிகள், மோட்டார் டார்பிடோ கப்பல்கள் 1939 ஸெப்டம்பரில் ஒரு படை இருந்தது எனலாம்; இன்று 12 மாதங்களுக்குப் பின், பல படைகள் கொண்ட ஒரு அர்மடாவே இருக்கிறது எனலாம்.

## நஷ்டங்களும் ஈடும்.

யுத்தம் ஆரம்பமானமுதல் சாம்ராஜ்ஜிய பெரியக் கப்பல்களுக்கு அதிக சேதமில்லை—யுத்தக் கப்பல்களுள் 'ராயல் ஒக்' ஒன்றுதான் மூழ்கியது; ஆரம்ப மாதங்களில் விமானந்தாங்கிகளுள் 'கரேஜியஸ்' ஒன்றுதான் நஷ்டமாயிற்று; நார்வேயிலிருந்து பின்வாங்குகையில் அதுபோன்ற 'குளோரியஸும்' அதன் கதியையே அடைந்தது. ஆனால் 1939 ஸெப்டம்பரில் பிரிடனின் சாலைகளில் 6 வேறு புதிய விமானந்தாங்கிகள் தயாராகிவந்தன—இல்லஸ்ட்ரியஸ், விக்டோரியஸ், பார்மிடபிள், இன்டாமிடபிள், இம்ப்ளாகபிள், இண்டிபாடிகபிள். இம்மாதிரி நஷ்டங்கள் சமனாகவோ--ஏன், ஜாஸ்தியாகவே—ஈடு செய்யப்பட்டன. இந்த திட்டம் முடியும் முன், பிரிடன் அதனுடைய அளவில்லா கப்பற்சாலைகளிலிருந்து தன் கடல் பலத்தை இரட்டித்துக் கொள்ளும்.

யுத்தாரம்பம் முதல் யாதொரு பருமனான க்ரூய்ஸரும் நஷ்டமாகவில்லை. புதிய அழகிய 'ஸௌதாம்டன்' 'எடின்பரோ' ரகங்களையோ, அல்லது பழய 'கவுண்டி' 'யார்க்' ரகங்களையோ, பாம்களோ, டார்பிடோகளோ, அல்லது அவைகளின் பிறவி விரோதிகளாகிய சத்துருக்களின் வேட்டைக் கப்பல்களோ இவைகளில் ஒன்றையும் மூழ்கடிக்கவில்லை.- யுத்தத்தின் அதிர்ச்சியில் ஏதாவது நஷ்டம் விளைவது சகஜமென்று, சாம்ராஜ்ஜிய நாடுகளின் தீவுகள், காலனிகளின் பெயரிடப்பட்ட 'பிஜி' ரகமுள்ள 13 கப்பல்கள் இருக்கின்றன—கினியா, நைஜீரியா, டிரினிடாட், ஸிலான், ஜெமெய்கா, மொரிஷஸ். விமானத்தாக்குதலுக்கென்று திருத்தி அமைக்கப்பட்ட பழய பருமனில்லாத க்ரூய்ஸர்களுள் ஆகாய



விமானத்தினால் உண்டாகும் அபாயத்தை தைரியமாக எதிர்த்து நின்று 3 கப்பல்கள் மூழ்கின. இவைகளால் ஏற்பட்ட வெளிகளை அடைக்க, யுத்தத்துக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட 'டைடோ' ரக கப்பல்கள் 10 இருக்கின்றன—நெய்ட், பீபி, ஸிரியஸ், போனவெஞ்சர் வகையரு கப்பல்கள் கடலில் முதன் முதலில் இறக்கப்பட்டு, உருளைகள் மீது அவைகள் இடம் காலியானதும், புதிய கப்பல்கள் அந்த இடத்திற்கு வந்தன; புதிய கப்பல் உடல்கள் சட்டம் சட்டமாக எழுந்தன; ரிவெட்டர்களின் ஓயாத டக்டக் என்ற சத்தம் கேட்டது; எஃகு யந்திரங்கள் சுழலும் சத்தத்துக்கு ஓய்வு ஒழிவில்லை.

## நாசகாரிகள்.

இவற்றிற்குப்பின் சிறிய யுத்தக் கப்பல்கள். யுத்தத்துக்குமுன் பிரிடன் ஜாதிப் பெயர்கள் புனைந்த 16 அழகிய நாசகாரிகளை நிறுவியது—மோஹாக், ந்யூபியன், கூர்க்கா, காளக்-வமைகயரா—யுத்தமேகங்கள் சூழ ஆரம்பித்த 1939 முழுவதும் அது 'ஜாவிலின்' ரக நாசகாரிகளைக் கட்டிமுடித்தது. மன்னர் கப்பல் இலாகாதான் நாசகாரிகளுக்கு இடும் பெயர் என்ன! ஜினோ, ஜாவிலின், ஜேரஸ், ஜாகுவா, நோபிள், நெஸ்டர், நான்பரீல், பேரே ஒரு பாட்டு. கப்பல்களும், மாலுமிகளும் பலமாக சண்டை போட்டு இப் பெயர்களை மகா காவியமாக்கி விட்டார்கள். சாம்ராஜ்ஜியத்துக்கு நேர்ந்த பெருத்த நஷ்டம் எல்லாம் நாசகாரிகளில் தான். யுத்தத்தின் முழுபளுவும் அவைகளின் கூர்ந்த நுனிகளில் தான்—நார்வேயின் குளிர்மிக்க குடாக்களில் சண்டைகள்; ஹாலண்டு, பெல்ஜியம், டச்சு நதிகள், ஷெல்டு, பெல்ஜியன் துறைமுகங்களில் கட்டுக்கண்ணு மூச்சிகள். கான்வாய்க் கப்பல்களின் இரு புடைகளிலும் நீர்மூழ்கிகளை வேட்டையாடி மிக்க பொறுப்பு வகித்த இவைகள், துறைமுகம் நகரம் எல்லாம் எரிந்துகொண்டிருந்த புலாயினுக்குச் சென்று, அங்கிருந்த பிரிடிஷ் பின்னணியை மீட்டுக்கொண்டு வந்தன. டன்கர்க் கரைகளில் நின்று ஒரு சைனியத்தை மீட்டு வந்தது; டன்கார்க் சமுத்திரக்கரையில் காவல் காத்து ஜெர்மன் கடற் படையின் பயமுறுத்தல்களை போக்கடித்தன. 12 மாதங்களில், 1918-ல் கடலில் இறக்கப்பட்ட "விட்லி" முதல், 1938-ல் மூழ்க்கப்பட்ட "எஸ்கிமோ" ஈறாக பழயதும் புதிதுமாக 30 கப்பல்கள் இழக்கப்பட்டன.

30 கப்பல்களை இழப்பது பெரும் நஷ்டம்தான்—ஆனாலும் அந்த நஷ்டத்தை பிரிடன் ஈடு செய்து விட்டது; "லைட்னிங்" (மின்னல்) வகுப்பில் 16 கப்பல்கள், "ஜாவலின்" வகுப்பில் கடைசிப் பாதியும், இன்னும் பெயர்கள் கூட வெளியிடப்படாத புதிய கப்பல்களும் செய்யப்பட்டிருக்கின்றன. பன்னிரெண்டு மாதங்கள் யுத்தம் நடந்து விட்டது. நார்வே படையெடுக்கப்பட்ட பிறகு சேர்ந்தாப்போல் மூன்று மாதங்கள் ஏராளமான நஷ்டம். இருந்தாலும் ஆரம்பத்திலிருந்ததைவிட சாம்ராஜ்ஜியக் கப்பற்படையிலுள்ள கப்பல்களின் எண்ணிக்கை இப்பொழுது அதிகமாகவே இருக்கிறது. அவைகள் அதிக சக்தி வாய்ந்தனவாகவுமிருக்கின்றன. இழக்கப்பட்டவைகளில் 3-ல் 2 பாகம் பழய கப்பல்கள், பெரும்பாலும் சென்ற யுத்தத்தின் இறுதியிலோ அல்லது அந்த யுத்தம் முடிந்த

உடனேயோ கட்டப்பட்டவைகள். அவைகளுக்குப் பதிலாக இப்பொழுது கட்டப் பட்டவைகளோ முன் இருந்ததைப்போல் இரண்டு பங்கு பீரங்கிகளுடையவை, பெரியவை, அதிகவேகமாய் செல்லக்கூடியவை, இந்த நூதனமுறை யுத்தத்தின் அவசரத் தேவைகளுக்குத் தகுந்தாப் போல் கட்டப்பட்டவைகள். இழக்கப்பட்ட துணைக் கப்பல்களுக்கு பதிலாய் நூற்றுக்கணக்கான புதிய துணைக்கப்பல்கள் கட்டப்பட்டுவிட்டன. பிரிடனுக்கு நஷ்டமான டிராலர்கள், திமிங்கலம் பிடிக்கிகள், நீர்மூழ்கி எதிர்ப்புக்கப்பல்கள் இவைகளை அது பர்த்திசெய்து விட்டது. வெடித்துப்போன ஒவ்வொரு கண்ணி விலக்கிக்கு பர்த்தியாக அது இரண்டு கட்டியிருக்கிறது. அதன் கப்பற்சாலைகள் ஓய்வு ஒழிவன்னியில் நெருக்கங்கொண்டு சுறுசுறுப்பாய் இருக்கின்றன, உருளைகள்மீது புதுக்கப்பல்கள் சரிந்து நிற்கின்றன, ஆறுகள் முழுவதும் கப்பல் கட்டும் ஓசைகள் நிறைந்து நிற்கின்றன, பீரங்கிகள் வார்க்கும் உலைகளில் இரும்பு உருகின வண்ணம் நிற்கிறது. ஜெர்மனி என்ன, அதைச் சுற்றிவரும் அடிமை தேசங்கள் என்ன இவைகள் கட்டும் கப்பல்களைவிட பிரிடன் பன்மடங்கு கட்டமுடியும் ... ... ... ... ... ... அவைகளைக் கடல் யுத்தத்தில் தோற்கடிக்கவும் முடியும்.

---

## ஜெர்மனியின் விமானப்படையின் பலத்தை பால்கன் நாடுகளில் உபயோகப்படுத்தல்.

## பிரிடனில் விமான எதிர்ப்பு இல்லாததின் காரணங்கள்.

## ஜெர்மனியின் விமானப் படைக்கு ஏற்பட்டிருக்கும் சிரமங்கள்.

(டெயிலி மெயில் பத்திரிகையின் விமான நிருபரான நோயல் மாங்க் எழுதுகிறார்.)

ஐரோப்பா கண்டத்தில் காலநிலை சரியாயில்லாததும், பால்கன் நாடுகளில் யுத்தம் ஆரம்பிப்பதற்காக விமானப்படையை அணிவகுத்ததும்தான், தொடர்ச்சியாக பிரிடனில் அநேக இரவுகளில் விமான எதிர்ப்பு இல்லாததற்கும், லண்டன் நகரத்தில் ஒருவாரம் பூராவும் இரவில் எச்சரிக்கையே இல்லாமலிருந்ததற்கும் காரணங்கள்.

மேலும் மத்திய கிழக்கு நாடுகளில் பிரிடிஷ் விமானப்படையின் வலிமையை அவர்கள் சரியாக மதிக்கவில்லையென்று ஜெர்மானியர்களுக்கு திடீரென்று புலப்பட்டிருக்கலாம்.

இத்துடன் தங்களுக்கு உபயோகமுள்ள வகையில் உதவி செய்ய இதாலியப்படை சக்தியற்றதாயிருக்கிறதென்றும் நினைத்து, ஜெர்மன் விமான இலாகா அதிகாரிகள் அநேக குண்டுவீசும் விமானங்களையும் சண்டை செய்யும் விமானங்களையும் தங்கள் திட்டத்துக்கு உபரியாகவே பால்கன் நாடுகளுக்கு அனுப்பிவிட்டார்கள்.



பிரிடனில் நடந்த முதல் யுத்தத்தில் பிரிடிஷ் விமானப்படையின் வலுவை ஜெர்மானியர்கள் சரியானபடி மதிக்காததினுல் அவர்களுக்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டு அதை மாரிகாலம் முழுவதும் சீர்திருத்திக்கொண்டார்கள்.

ஹிட்லர் பால்கன் நாடுகளில் தீவிரமான ஒரு பெரிய எதிர்ப்பை ஆரம்பிப் பதாகத் தீர்மானம் செய்திருக்கிறுன். ஜெர்மானியர்கள் விமானப் படையின் பூர்ணமான ஒத்தாசையில்லாமல் யுத்தம் ஆரம்பிப்பதில்லை. ஆகையால் குறைந்த பக்ஷமாக, முதல்தரமான குண்டுவீசும் விமானங்கள், சண்டை செய்யக்கூடிய விமானஙகளடங்கிய சுமார் இரண்டாயிரம் சங்கியை உள்ள விமானப் படையை ருமேனியாவுக்கும், வியன்னுவுக்கும் மத்தியில் அவன் தயார் செய்து வைத்திருக் கிருன் என்று கருதப்படுகிறது. இது ஜெர்மன் விமானப் படையில் முதல்தர மானவைகளில் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமாகவேயிருக்கும்.

துருக்கியானது பிரிடனுடன் சேர்ந்து யுத்தம் துவக்கினுல், பிரிடிஷ் விமானப் படைக்கு அதிகமான பிரயோஜனம் ஏற்படக்கூடும். இம்மாதிரி பிரயோஜனம் அச்சு நாடுகளின் உதவிக்காக இதாலிய விமானப்படை முயன்றபொழுது ஜெர்மனிக்கு ஏற்படவேயில்லை.

துருக்கியில் நவீனமுறையில் உண்டுபண்ணப்பட்ட பிரிடிஷ் விமானங்களும் உயர்தரமான பிரெஞ்சு சண்டை விமானங்களுமடங்கிய ஒரு வலுவான சக்தி வாய்ந்த விமானப்படையிருக்கிறது. பிரிடனுக்கு உதவிக்காக உத்தேசித்து அனுப்பப்பட்ட அமெரிக்க சண்டை விமானங்களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பிவிட்டதாகச் சொல்லக்கூடும். சிலவைகள் இங்குவந்து சேர்ந்துவிட்டன.

பால்கன் நாடுகளில் காலநிலை மாறுதல் அடைந்துவிட்டது. இத்துடன், இங்கு திரட்டப்பட்டிருக்கும் கிரேக்க, துருக்கி விமானப் படைகளைத் தவிர, ஜெர்மானிய, பிரிடிஷ் விமானப் படைகளும் தயாராகவிருக்கின்றன. இப்பொழுது கடுமையான ஆகாயப்போர் நடக்கக்கூடும்.

போலந்தில் நிகழ்த்தியதுபோல், ஜெர்மன் விமானப் படைக்கு இங்கு எல்லாம் வெற்றிகரமாக முடியாது.

யுத்தம் ஆரம்பித்தது முதல இப்பொழுதுதான் ஜெர்மனியின் முதல்தர விமானப் படைக்கு சிரமம் ஏற்பட்டிருக்கிறது. பிரிடனைத் தாக்குவதற்கு லாயக்கான ஒரு பெரும் படையை அங்கு வைத்திருக்கவேண்டும். ஆனுல் மற்றொரு பக்கத்தில் ஜெர்மனியின் விமானப்படையின் மூன்றில் ஒரு பாகம் யுத்தம் செய்யவேண்டியிருக்கிறது. ஆகையால் ஜெர்மானியர்கள் அவர்கள் படையின் சங்கியையை சரியானபடி சீர்திருத்தி இப்பொழுதுள்ள கால நிலையினின்றும் ஏற்படக்கூடிய நஷ்டங்களின் அளவைக் குறைத்துக்கொள்ள முயலவேண்டும்.

# குளிர் ஜுரம்.

---

*பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயத்திலிருந்து மிஸ்டர் விக்ஹாம் ஸ்டீட் ஒலிபரப்பியதிலிருந்து சில பாகங்கள்.*

டைலீடங்க் என்று பெயர் விளங்கிய ஒரு தினசரி ஜெர்மன் பத்திரிகை லண்டனில் பிரசுரிக்கப்படுகிறது. இந்தப் பத்திரிகையை, ஹிட்லரையும், ஹிட்லருடைய புஸ்தகங்களையும் வெறுப்புடன் நோக்கும் மூன்று ஜெர்மானியர்கள் தயார்செய்து பிரசுரம் செய்கிறார்கள். ஹிட்லரிடமிருந்து ஜெர்மனியின் கீர்த்திக்கு ஏற்பட்டிருக்கும் அவதூறை நிவர்த்திக்கவேண்டுமென்றும் அவர்கள் ஆசைப்படுகிறார்கள்.

ஜெர்மனியிலும், ஜெர்மன் பாஷையைப் பேசிக்கொண்டிருக்கும் மற்ற தேசங்களிலும் பதினான்கு வருஷங்கள் வசித்து அங்கேயே வேலைசெய்த ஒருவனுக்கு, நாகரீகமுள்ள ஜெர்மானியர்களின் அபிப்பிராயங்களைக் கேட்பதென்பது ரொம்பவும் சந்தோஷத்தை அளிக்கும். நாஸி ஜெர்மானியப் பத்திரிகைகளின் அபிப்பிராயங்களைப்பற்றி அவர்களுடைய வியாக்கியானங்கள், அவைகளைப்பற்றி பிரிடிஷார் கூறும் வியாக்கியானங்களைவிட ரொம்பவும் ருசிகரமாயிருக்கின்றன.

## சுயேச்சை ஜெர்மன் பத்திரிகை கூறுவது.

சீக்கிரமாகவோ அல்லது கொஞ்சம் தாமதித்தோ பிரிடிஷார்கள், ஜெர்மானியர்களின் அபிப்பிராயங்களை ஏற்றுக்கொள்ளமாட்டார்களென்றும் அல்லது ஜெர்மானியர்களுக்குப் புலப்படும்படி, ஜெர்மனிக்கு பிரிடிஷார்கள் புகட்டவும் முடியாதென்றும், பிரிடிஷார்கள் அறிந்துகொள்ளுவார்களென்று நம்புகிறேன். பிரசாரம் சம்பந்தமாகவும், ஜெர்மானியர்கள் அபஜயமடைந்துவிடுவார்கள். இப்பொழுது லண்டனிலுள்ள சுயேச்சை ஜெர்மன் பத்திரிகையில் அமெரிக்காவில் சட்டமான, பிரிடனுக்கு தளவாட உதவிச் சட்டத்தைப்பற்றி ஒரு அறிய பதிப்பு வெளிவந்திருக்கிறது.

ஐக்கிய நாடுகளின் உதவி யுத்தப்போக்கை ஒருபொழுதும் பாதிக்கப்போகிறதில்லையென்றும், அமெரிக்காவின் உதவிகள் பிரிடனுக்கு வந்து சேராதவண்ணம் ஜெர்மன் நீர்மூழ்கிகள் நன்றாய்ச் செய்துவிடுமென்றும், ஹிட்லருடைய பத்திரிகைகள் வெளியிட்டபொழுது, 1917, 1918-ம் வருஷங்களில் இதே மாதிரி சொன்னதை ஞாபகப்படுத்திக்கொள்ளக்கூடிய அனேக ஜெர்மானியர்கள் உயிருடனிருக்கிறார்களென்பதை ஹிட்லர் மறந்துவிட்டான் போலும்.

ஜெர்மானியர்களில் அநேகர், ஐக்கிய நாடுகளைப்பற்றியும், அமெரிக்காவின் தொழிற்சாலைகளின் அபரிமிதமான சக்தியைப்பற்றியும் நன்றாய் அறிந்திருக்கிறார்கள். பிரிடனுக்கு தளவாட இரவல் மசோதா நிறைவேறியதைக் கேள்விப்பட்டவுடன், இந்த ஜெர்மானியர்களுக்கு குளிர் ஜுரம் வந்துவிட்டதென்று ப்ராங்க்பர்டர் ஸீடங்க் என்னும் நாஸி பத்திரிகையிலிருந்து வெளியாகிறது. இப்பத்திரி



கையில் ஜெர்மானியர்களின் பெரும் பகுதியோர் இந்த யுத்தத்துக்கும், சென்ற யுத்தத்துக்குமுள்ள வித்தியாசங்களை உணரவில்லையென்று முறையிட்டிருக்கிறது. இப்பத்திரிகை சொல்லுகிறபடி, பிரிடன், ஐக்கிய நாடுகள் இவைகள் இரண்டும் சேர்ந்து உண்டுபண்ணக்கூடிய தளவாடங்களைவிட அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகள், ஐரோப்பாவில் ஜெர்மானியர் ஆதிக்கத்துக்குள்ளிருக்கின்றனவென்று சொல்லி ஜெர்மானிய ஜனங்களை ஒருவாறு சமாதானப்படுத்தலாம்.

## நாஸிகளின் ஆளுகைக்குட்பட்ட ஐச்வர்யங்கள்.

ஆச்சர்யப்படக்கூடியதாயிருந்தாலும், சென்ற யுத்தத்தில் இப்பொழுது நாஸிகள் அதிகாரத்துக்குட்பட்டவைகளைக்காட்டிலும், ஜெர்மனிக்கு ஏராளமான தொழிற்சாலைகளிருந்ததென்றும், சென்ற யுத்தத்தில் நேர்ந்திராதவண்ணம், இப்பொழுது அனேக ஜெர்மன் தொழிற்சாலைகள் நாசமடைந்துவிட்டனவென்றும் உண்மையாய்ச் சொல்லலாம்.

ஸீடங்க் பத்திரிகை அறிவிக்கிறபடி ஜெர்மனியின் தளவாட உற்பத்திக்கு எஃகுதான் முக்கியமான ஸாதனம். உலகத்திலேயே மொத்த விளைவு சுமாராக 1,500 லக்ஷம் டன்கள்தான். இதில் ஹிட்லரின் இரும்பு எஃகு தொழிற்சாலைகள் 300 லக்ஷம் டன்களுக்குமேல் உற்பத்தி செய்யமுடியாது. பிரிடனுக்கு பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டு அனுப்பிய விசேஷ தூதரான, மிஸ்டர் ஹாரிமானின் அபிப்பிராயப்படி, ஐக்கிய நாடுகள் மட்டும் ஒவ்வொரு வருஷமும் 850 லக்ஷம் எஃகுகளை உற்பத்திசெய்ய சக்தியுள்ளவையென்று பொருள்படுகிறது.

ஜெர்மனியின் முதலாளிகளும், பொருளாதார நிபுணர்களும் இதை நன்றாய் அறிவார்களென்றும், இதனால்தான் அவர்களுக்கு குளிர் ஜுரமுண்டாகிவிட்டதென்றும், லண்டனிலிருக்கும் சுயேச்சை ஜெர்மன் பத்திரிகை வெளியிடுகிறது.

---

## கண்ணியமான ஒரு அபிப்பிராயம்.

தேசீய பத்திரிகையான "லீடர்" என்ற பத்திரிகையில் காங்கிரஸ்காரராயிருந்த பெரியார் இவ்விதம் கூறுகிறார் "நம் நாட்டில் ப்ரகிருதம் நடைபெறும் சமூக, ராஜீய நிகழ்ச்சிகளான சத்தியாக்கிரஹம், பாகிஸ்டான் இவைகளின் மத்தியில், கோரே யுத்தமென்ற பெரும் பாலைவனத்தினிடையே செழிப்பான பிரதேசம் போன்று, தன்னந்தனிமையாய், விடாமுயற்சியுடனும், பிரமிக்கதக்க ஊக்கத்துடனும் போர்புரியும் பிரிடனுக்கு ஏற்பட்டிருக்கும் பெரும் கஷ்டத்தைப் பற்றி நம்மில் எவரும் தீர்க்கமாக பரிசீலனை செய்திருப்பார்களா என்று எனக்கு சந்தேகமாய் இருக்கிறது. ரேடியோ செய்திகளில் ஆர்வத்தையும், காலை பத்திரிகைகளைப் படிப்பதில் தூண்டுதலையும், மனதுக்கொவ்வாத வரி உயர்தலும், அன்னிய சாமான்களின் விலை ஜாஸ்தியாவதும், யுத்த நிதிக்கு அளிக்கப்படுவதான இரண்டொரு நன்கொடைகளும், இவைகளே ஒரு யுத்தம் நடந்துவருவதாக நமக்கு உணர்த்தியது. நமக்கு சம்மந்தமில்லாததென்று, சண்டை நிகழ்ச்சிகளைப்

பற்றியும், அதில் மடிந்தவர்களைப்பற்றியும், பத்திரிகைகளில் வாசிக்கப்பட்டன. இக்கொள்கை சீக்கிரமே மாறவேண்டியது மெத்த அவசியம். நாம் குண்டுக் கிரையாகவில்லை என்பதால்மட்டும் யுத்தம் பிறரைச்சேர்ந்தது என்ற மனப் பான்மை பிசகு. யுத்தகாலத்தில், தொழிற்சாலையில் வேலைசெய்பவனும், விவசாயியும், குமாஸ்தாவும், மற்ற எந்த தொழிலிலிருப்பவனும், யுத்தஅரங்கத்தில் முன்னணியில் நின்று சண்டைசெய்யும் போர் வீரனுக்கு சமானமானவனேயாம். இது தேசமக்களுக்கும் மற்றொரு தேசமக்களுக்கும் ஒருமிக்க நேர்ந்திருக்கும் போராகும். ஏதோ இரு படைகளுக்குள் நேரிட்டிருக்கும் சண்டையாகக் கருத முடியாது. இந்த நோக்கம் எவ்வளவு சீக்கிரத்தில் ஏற்படுகிறதோ அவ்வளவு சீக்கிரத்தில் ஜயமும் கிடைக்கும்.

எதிரியின் நோக்கம் தெளிவாய் புலனாகிறது. நாம் ஒவ்வொருவரும் சேர்ந்த தான இந்த பெரும் சாம்ராஜ்ஜியத்தை அழிக்கவே கங்கணம் கட்டியிருக்கிறான். யுத்த தளவாடங்கள் நிறைந்த இடங்களைமட்டில் அவன் எதிர்க்கவில்லை. தான் போர் தொடர்ந்திருக்கும் ஒவ்வொரு தேசத்தின், சமூக, தேசீய, ராஜீய, வாழ்வை சீர் குலைத்து வருகிறான். “5-ம் படை” யைப்பற்றியும், “நரம்புதளரச்செய்தல்” என்ற முறையைப் பற்றியும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். ஒரே அடியில் சாய்ப்பது என்ற தற்கால யுத்த ஆயுதங்களைப்போல் சமவலிவு மேற்சொன்ன இரண்டு நவீன யுத்த முறைகளுக்கும் இருக்கின்றது. நமது பெரியவர்களிடத்தில் வைக்கப் பட்டிருக்கும் நமது நம்பிக்கைக்கே, எதிரியின் பிறட்டும் புறட்டலுமான அறிக்கைகள் நஷ்டமேற்படுத்திவிடுகின்றன.

சமீப காலத்தில் ஏற்பட்டிருக்கும் வெற்றிகள், நம்முள் இருக்கும் ராஜீய வேற்றுமை எண்ணங்களுக்கு இடையே, எல்லோருக்கும் பெரிய சந்தோஷத்தை அளித்திருக்கின்றன. ஆனால் அது நமக்கு நம் குற்றநெஞ்சத்தை வெளிப்படுத் தாமலிருக்கின்றனவா? நம்மவர்கள் ஆயிரக்கணக்காக இந்த போர்களில் கலந்து கொண்டிருக்கிறார்கள். ஒரே இரும்புமயமான மழையையும், வெயிலையும் அனுபவித்து இருக்கிறார்கள். இவர்களில் அநேகர் உயிர்துறந்தனர். எஞ்சியவர் புன்சிரிப்புடனும், பாட்டுகள் பாடிக்கொண்டும் வெற்றியைக் கருதி, உயிர்களை சிந்திக்காமலும், போர்களத்தில் முன்னேறிவருகின்றனர். எதற்காகவேண்டி என்றால் நாம் சுகமே ஜீவிக்கவேணுமென்றேயாம். நம்மைப்போலவே அவர் களும் மாதாந்திரம் ஊதியம், சம்பளம் பெறுகிறார்கள் என்று நாம் சும்மா இருக்கலாமா? எந்த சமாதானகாலங்களில் நாம் இஷ்டப்படி உஜ்ஜீவிக்கலா மென்று நினைத்து. போர்களத்துக்கு வெகுதூரத்துக்கப்பால் வசிக்கும் நாம் நினைக்கிறோமோ, அதற்குத்தானே அவர்களும் போராடுகிறார்கள். அவர்களுக்கும் நமக்குள்ளதுபோன்ற உணர்ச்சிகள் இல்லையா? தங்கள் பெற்றோர்களையும், மனைவிமக்களையும் அவர்கள் நம்போல் நேசிக்கவில்லையா? இதைப்பற்றி நாம் என்ன செய்திருக்கிறோம்? யுத்தமும் நமக்கு எவ்வளவு சொந்தமோ அது போலவேதான் அவர்களுக்கும். ஹிட்லரால் தும்புதரித்து விடப்பட்டிருக்கும் மிருகத்தன்மையான படையினர் வெற்றிபெற்றால் என்ன நேரிடுமென்று ஊகிக்க பெரியபடிப்பும் புத்திசாலித்தனமும் தேவையில்லை.”



மேலும் இத்தேசாபிமானி கூறுகிறார் “மிக்க கஷ்ட நிஷ்டூரத்துக்குட்படுத் தப்பட்டும், எதிர்காலத்தில் க்ஷேமமுண்டென்ற திருட சித்தத்துடன், ஹிட்லரின் முன்னேற்றத்தைத் தடுத்தும், அவனை வெல்லவும் ஊக்கத்துடன் சண்டைசெய்து வரும் அவர்களுக்கு நாம் நம்மால் இயன்ற உதவி புரியவேண்டுமென்பது நமது கடமையல்லவா? இது பணத்துக்காகவும், துருப்புகளுக்கு சிகரெட் சம்பாதிக் கவும் விடுத்த யாசிப்பு கடிதமல்ல, ஒவ்வொரு நிமிஷத்திலும் உலகசரித் திரத்தையே மாற்றி எழுதுவதான இப்பெரும் சந்தர்ப்பத்தில் நாம் ஒவ்வொரு வரும் நமக்கு ஏற்பட்டிருக்கும் கடமைகளை நினைப்பூட்டுவதற்கே. பிரிட்டனுக்கு தற்போது ஏற்பட்டிருக்கும் பெரும் காரியங்கள் என்னவெனில் (1) சுதேச தற்காப்பு, (2) போக்குவரவு பாதைகளை அடைப்பன்றி வைத்துக்கொள்வது, (3) முஸோலினி தன்குளம் என்று கருதும் மத்தியதரைக்கடலிலுள்ள ‘ஜிப்ரால் டர்’ போன்ற முக்கியஸ்தலங்களைகாப்பது, (4) சமீபக்கிழக்கு பிராந்தியங்களை கைவசமிருத்திக்கொள்வதும், ஜப்பானை முன்னேறாமல் தடைப்படுத்துவதும் ஆகும். உள்நாட்டு பிரச்னைகள் அயர்லாந்தையும் இந்தியாவையும் பற்றினவை யாகும். இவைகள் மிகப்பெரிய கேள்விகளாகும், ஆனதுபற்றி யுத்தம் நம்மதல்ல என்ற மனப்பான்மையை ஒழித்து தானே வழி காட்டியாய் தன் நடவடிக்கை களாலேயே ஒவ்வொருவரும், தக்கதியாகம் செய்வதின் மூலமும், ஜனசமூகத்தின், பரஸ்பர அன்பும், நம்பிக்கையும் அடிப்படையாகக் கொண்ட,சிறந்த நாகரீகத்தை நிருவ, முயலவேண்டும்.

---

## மத்ஸுவோகாவின் ஐரோப்பாவின் விஜயத்தினால் ஐக்கிய நாடுகளில் ஏற்பட்ட மாறுதல்கள். ஜப்பானுக்குஅனுப் பக்கூடிய சாமான்களைத் தடைசெய்யும்படி வேண்டு கோள்.

(வெல்டன் ஜேம்ஸ் என்பவர் பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயத்திலிருந்து பேசியது.)

ஐரோப்பாவுக்கு மத்ஸுவோகா விஜயம் செய்ததிலிருந்து ஐக்கிய நாடுகளில் ஒரு பிரயோஜனம் ஏற்பட்டிருக்கிறது. வாஷிங்டனிலுள்ள ஜப்பானுக்கு எதிரியாகயிருக்கும் கோஷ்டிகள் ஜப்பானுக்கு யுத்த தளவாடங்களை ஏற்றுமதி செய்யக்கூடாதென்று ஒரு புதிய ஏற்பாட்டை ஆரம்பித்து விட்டார்கள். இதை எல்லா ஜனங்களும் முழுமனதுடன் ஆதரிக்கிறார்கள். மற்றொரு முக்கியமான சமாசாரமும் வெளியாகுகிறது.

பஸிபிக் சமுத்திரத்தில் யுத்தம் ஏற்படக்கூடுமென்ற பயமிருந்து வருகிற தென்பதை ஐக்கிய நாடுகள் பொருட்படுத்த வேண்டியது அவசியம். ஆகையால் அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் நடக்கப்போகும் யுத்தம் முக்கியமானதால் இதிலிருந்து பத்திரிகைகளின் வியாக்யான நிருபர்கள், பின்வருமாறு எழுதுகிறார் கள். பிரிடிஷ் சாம்ராஜ்ஜியமும் ஐக்கிய நாடுகளும், அவசியமானால் ஜப்பானியர்

களை ஒரு இடத்தில் அடைத்துவிட்டு, இந்த முற்றுகைக்குள்ளேயே ஜப்பானியர்களைச் சுழன்றுவரும்படி செய்துவிட்டு ஹிட்லரைத் தொலைப்பதற்கு முதலில் ஏற்பாடு செய்து, பிறகு தூரக்கிழக்கு நாடுகளில் உண்டாகக்கூடிய பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளப் போகிறார்கள்.

இந்த விஷயத்தில், ரூஸ்வெல்டுக்கு நெருங்கிய சிநேகிதர்களான செல்வாக்கு உள்ள இரண்டு நியூயார்க் பத்திராதிபர்கள், உடன் காலத்திலேயே எண்ணெயும் பெட்ரோலியத்தையும் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாதென்று ஒரு உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று ரூஸ்வெல்டிடம் வற்புறுத்துகிறார்கள்.

விமானங்களுக்கு முக்கியமான பெட்ரோலியத்தை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாதென்று ஏற்கனவே தடை செய்திருக்கிறார்கள். ஆனாலும் பிரிடனுக்கும் சைனாவுக்கும் பூர்ணமாக உதவி அளிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிற அமெரிக்கர்கள் இந்தத் தடையை பூராவும் உபயோகமுள்ளதாகச் செய்ய வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். வரப்போகும் சில நாட்களில் மத்ஸுவோகாவைப் பற்றிய தலையங்கங்கள் அநேகம் இருக்கக்கூடுமாகையால் அவர்களுடைய வாதங்களுக்கு அதிக பிரயோஜனமேற்படக்கூடும்.

---



# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### ஐரோப்பாவில் தொடுத்திருக்கும் புது அதிக்கிரமம்.

ஹாலண்டு, பெல்ஜியத்தின் வழியாகச் சென்று நேயநாடுகள் ஜெர்மனியைப் படையெடுக்கப்போவதாக, 1940 மே மாதம் 19-ம் தேதியன்று சொல்லிவிட்டு, அதைத் தடுக்க ஜெர்மனியானது ஹாலண்டு, பெல்ஜியம், லக்ஸம்பர்கை படை எடுக்க நேரிட்டதாகப் பிரசுரம் செய்தது.

அதேமாதிரி, 1941 ஏப்ரல் 6-ல் ஐரோப்பிய நாடுகள்மேல் மற்றொரு முறை படையெடுத்து பிரிடன் அக்கிரமம் செய்யப்போவதாகச் சொல்லிவிட்டு, அதைத் தடுக்க யூகோஸ்லாவியையும், கிரீஸையும் ஜெர்மனி படையெடுக்கப்போவதாகப் பிரசுரம் செய்தது.

அயல்நாடுகளைப் படையெடுக்கும்போதெல்லாம் நாஸிகள் இவ்விதமே சொல்லிவிட்டு, ரேடியோவில் ராஜ விசுவாச, ராணுவ பாட்டுகளைப் பாடுவதும், ஹிட்லர் கடைசியாகப் பிரஜைகளுக்குச் செய்த பிரசங்கத்தைத் திரும்பிப் படிப்பதும் வழக்கமாய்ப் போய் விட்டது. அதேமாதிரி சென்ற ஞாயிற்றுக்கிழமை ஜெர்மனி பால்கன் நாடுகளைப்பற்றி ஒலிபரப்பிற்று.

சென்ற கிறிஸ்மஸ் பண்டிகையோடு யுத்தம் முடிந்து, சமாதானம் வந்து விடுமென்று வாக்குறுதியை ஜெர்மனி தன் பிரஜைகளுக்குக் கொடுத்ததெல்லாம் வீணாயிற்று. இப்பொழுது புதிதாக இரண்டு நாடுகளோடு சண்டை தொடுக்கப் பட்டிருக்கிறதேயொழிய யுத்தம் முடிந்தபாடில்லை.

### இதுதான் சமாதானமோ?

தான் மிகவும் சாதுவைப்போல் பாசாங்கு செய்து, வெகு அடக்கத்தோடு, ஹிட்லர், பிரிடனை உலகத்திலேயே பெரிய சண்டைக்காரர்களென்று சொல்லியிருக்கிறார். ஆனால் சண்டைக்கிழுப்பதில் ஹிட்லர் அஞ்சியவரல்ல. 1939-ம் ஆண்டு ஸெப்டம்பரிலிருந்து, இதுவரை, நடுநிலைமை வகித்த போலண்டு, நார்வே, டென்மார்க், ஹாலண்டு, பெல்ஜியம், லக்ஸம்பர்க், கிரீஸ், யூகோஸ்லாவியா தேசங்களையெல்லாம் வலுவுச்சண்டைக்கிழுத்து, படையெடுத்திருக்கிறார்.

### பழைய சத்துரு,

ஹிட்லர் சமயத்துக்குத் தகுந்தாறபோல் சாக்குப்போக்குச் சொல்லுவதில் சமர்த்தர்: அதற்கு இரண்டு உதாரணங்கள் கீழே காணலாம்.

“பிரிடன் பிறரைக்கொண்டு தன்னுடைய சண்டைகளைப் போடச் சொல்லுகிறதாம்.” என்ன பொய். ஆனால், உண்மையில், பிரிடிஷ் விமானப்படை மட்டுமே, நாளதுவரையில் 5,000 எதிரி விமானங்களை அழித்திருக்கின்றனவே!

"பிரான்ஸில் சண்டை முடிந்தவுடன், இதாலியரைத் தோற்கடிக்க சாம்ராஜ்ஜியப்படைகளை யெல்லாம் சர்ச்சில் ஆபிரிக்காவுக்கனுப்பிவிட்டாராம்." அப்படியானால் பிரிடனில் படைகளில்லையே? ஏன் பிரிடனைப் படையெடுக்காது பால்கனிலுள்ள இரண்டு சிறு நாடுகளை இப்பொழுது எதிர்க்கவேண்டும்.

## ஏப்ரல் முதல்தேதிப் பேத்தல்.

ஐரோப்பாவின் மேற்கு பாகத்தில் நடக்கும் விமானப்போர் சம்பந்தமாக ஏப்ரல் முதல்தேதி யன்று ஒலிபரப்பும்போது, ஜெர்மனியானது மார்ச்சு 16-லிருந்து 31-ம் தேதி வரையில் 55 விமானங்களும் 11 காற்றுக்கூண்டு வேலிகளும் பிரிடனுக்கு நஷ்டமென்று சொல்லியிருக்கிறது. ஆனால் ஜெர்மனிக்கு 24 விமானங்கள்தான் நஷ்டமாம். உள்ளபடி பிரிடனுக்கு நஷ்டம் 20 விமானங்கள், ஜெர்மனிக்கு நஷ்டம் 57 விமானங்கள்.

சமீபத்தில் நடந்த மத்தியதரைக்கடல் யுத்தத்தைப்பற்றி ஜெர்மன் ரேடியோ, மூன்று இதாலிய க்ரூய்ஸர்களும், இரண்டு நாசகாரிகளும் அழிந்து விட்டதாகச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு, ஆனால் இதாலிய மாலுமிகள் பெருவாராக காப்பாற்றப்பட்டதாக முடிவுகட்டியிருக்கிறது. அன்றையதினம் ஜெர்மன் பாய்ச்சல் குண்டு விமானங்கள் மட்டும், கடலில் விழுந்தவர்களை எடுத்துக்கொண்டிருந்த பிரிடிஷ் சண்டைக் கப்பல்களை எதிர்த்திராதிருந்தால் இன்னும் எத்தனையோ பேர்களைத் தீர்க்கிப் பிழைக்க வைத்திருக்கலாம்.

## நட்பின் முடிவு.

ஹங்கேரியின் பிரதம மந்திரி தற்கொலை செய்துகொண்டார். இதைப்பற்றி, 'கவுண்ட் டெலகியானவர் ஹங்கேரியின் ராஜ்ஜிய காரியங்களை அச்சின் கூட்டுறவோடு, திடமாய் நடத்தினார். இந்த ஆப்த நண்பருடைய மரணத்தை நாம் வருந்துகிறோம்,' என்று ஜெர்மனி ஏப்ரல் 3-ல் ஒலிபரப்பியிருக்கிறது.

தனக்கு இனி அரசியல் கஷ்டமாய் தாங்க முடியாது, சந்தோஷமாய் இனி அதை நடத்த முடியாதென்று ஒரு கடிதத்தை எழுதிவைத்துவிட்டு, கௌண்ட் டெலகி தன் தலையைப்பார்த்துத் தானே சுட்டுக்கொண்டு, உயிர் துறந்தார். இதே சமயத்தில் ஹங்கேரி வழியாக ஜெர்மன் துருப்புக்கள் யூகோஸ்லாவியாவின் மேல் படையெடுத்தன. யூகோஸ்லாவியாவின் நட்பை வெகு காலமாக சிரமப்பட்டு ஹங்கேரிக்கு இவர் சம்பாதித்து வைத்தவர்.

# B.—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

## நாஸிகளுக்கு பிரான்ஸ் உதவிசெய்யும் விதம்.

அல்கீரியக் கடற்கரைக்கப்பால் சென்ற நான்கு பிரெஞ்சு வியாபாரக் கப்பல்களைச் சோதனை போட பிரிடிஷ் கப்பற்படை மறிக்க அதிலிருந்து சிறு சண்டை ஒன்று ஏற்பட்டது. இதைப்பற்றி இந்துஸ்தானியில் மார்ச்சு 31-ல் ஜெர்மனி ஒலிபரப்பும்போது, அரிசி, சர்க்கரை, தானியங்களைத்தான் அல்கீரியாவுக்கிந்தக் கப்பல்கள் ஏற்றிக்கொண்டு போனதாகப் பிரெஞ்சு வட்டாரங்கள் சொல்லிக்



கொள்ளுவதாக பிரஸ்தாபிக்கிறது. சோதனை போடக்கூடாதென்று ஆக்ஷேபித்ததிலிருந்து யுத்த சாமான்கள் போகின்றனவோவென்று சந்தேகம் பிறந்தது. அவைகளில் ஒரு கப்பலில் ரப்பர் ஏற்றிப்போயிற்று. ஜெர்மனிக்கு ரப்பர் குறைவு அதிகம்.

## பிரிடனுக்குக் கடற்சண்டையில் வெற்றி.

கேப் மடபான் சண்டையைப்பற்றி ஒலிபரப்பும்போது ஜெர்மன், இதாலிய ரேடியோக்கள் பிரிடிஷ் வெற்றியை ஒப்புக்கொண்டு ஆனால் பிரிடனுக்கு ஒரு பெரிய க்ரூய்ஸர் அமிழ்த்தப்பட்டதோடு வேறு சில கப்பல்களும் பழுதுபட்டதாகச்சொல்லிக்கொள்ளுகின்றன. இதாலிக்கு ஏற்பட்ட பலத்த நஷ்டத்துக் காற்றுதலாக இந்தப்பொய்யைக் கட்டிவிட்டிருக்கிறார்கள். பிரிடனுக்கேற்பட்ட மொத்தநஷ்டம் ஒரே ஒரு விமானம்தான்.

## நாஸி உண்மை.

ஏப்ரல் 3-ம்தேதி ஒலிபரப்பில் தான் சத்தியவானென்று ஜெர்மனி சொல்லிக்கொள்ளுகிறது. மார்ச்சு 22 தேதியோடு முடிவான வாரத்தில் பிரிடனுக்குக் கப்பல் நஷ்டம் 3,87,000 டன்களென்று சொல்லிற்று. ஆனால் நஷ்டம் 59,141 டன்கள்தான்.

# முக்கியமான விளம்பரம்.

## யுத்த சம்பந்தமான புகைப்படங்கள்.

ஈ-தர்பார் அவர்கள் உத்தரவின் பேரிலும், அவர்களின் அன்பார்ந்த உதவியின்பேரிலும், புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயத்தின் மெம்பர்கள் இதுமுதல் பிரசங்கங்களுக்கு வெளியூர்களுக்குப்போகும் காலத்தில் யுத்தத்தின் வெவ்வேறு அம்சங்களை விளக்கிக்காட்டக்கூடிய புகைப் படங்களின் கோர்வைகளையும் எடுத்துக்கொண்டு போய் ஜனங்களுக்குக் காண்பிக்க வசதி ஏற்பட்டிருக்கிறதென்று யுத்த அறிக்கை நிலயம் சந்தோஷத்துடன் அறிவிக்கிறது.

இந்த நிகழ்ச்சிகள் யுத்தம் நடக்கும் பிரதேசங்களில் ‘இருபதாவது நூற்றாண்டு பாக்ஸ் பிலிம் கம்பெனி’யாரால் எடுக்கப்பட்ட புகைப்படங் களும், பம்பாய் துரைத்தனத்தாரைக்கொண்டு இந்திய கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கும் ஒரு சங்கத்தாரால் இந்தியா சம்பந்தமான சில விஷ யங்களைப்பற்றி தயாரிக்கப்பட்ட புகைப்படங்களும் சேர்ந்தவைகள். ஒவ் வொரு நிகழ்ச்சியிலும் மூன்று தனித்தனிப் படங்கள் காட்டப்படும். இந்தப் படங்கள் காண்பிப்பதால் யுத்த அறிக்கை நிலயத்தின் பிரசங்கங்களுக்கும், மேற்படி நிலயத்தின் வாரப்பதிப்பு புஸ்தகத்துக்கும் அதிக மதிப்பு ஏற் படக்கூடுமென்று யுத்த அறிக்கை நிலயம் நம்புகிறது.

புதுக்கோட்டையின் யுத்த நிதிக்காக உழைத்துவரும் கமிட்டியார் யுத்த அறிக்கை நிலயத்திற்கு ஒரு மோட்டார் வண்டியை நன்கொடை அளித்திருக்கிறார்கள். இந்த வண்டியில் புகைப்படம் காண்பிக்கக்கூடிய யந்திரங்களையும், திரைகளையும், புகைப்படங்களையும் பிரசங்கம்செய்யும் ஸ்தலங்களுக்கு எடுத்துச்செல்ல சௌகரியமாயிருக்கும். ஆனால், இம்மாதிரி புகைப்படங்களோடுகூடிய பிரசங்கங்களைச்செய்ய வசதி ஏற்படுத்திக் கொள்ளவும், ஒவ்வொரு இடத்திலும் மாதாமாதம் ஒவ்வொரு புதிதான படக்கோர்வையைக்காண்பிக்கவும், பிரசங்க ஸ்தலங்களையும் அறுபது இடங் களுக்கு அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டை ஸமஸ்தான வாசிகள் முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டியவைகள் என்ன வென்றால்:—

(a) பிரசங்கங்கள் சாதாரணமாக **மாலை 6** அல்லது **6-30 மணிக்குத்** துவக்கப்படும்.

(b) யுத்த அறிக்கை நிலயத்தின் மோட்டார் ஒருநாளில் இரண்டு ஊர்களுக்குச்செல்ல வேண்டியிருப்பதால் பொதுஜனங்கள் **தவராமல் குறிப்பிட்ட டயத்தில் பிரசங்கம் செய்யப்** போகுமிடத்தில் ஆஜராகியிருக்க வேண்டும்.

இந்தப்படங்களை ஆயிரம் பேர்களுக்குக்குறையாமல் சௌகரியமாய்ப் பார்க்கக்கூடுமென்று அனுபவத்தில் தெரிகிறது. ஆகையால் உங்கள் கிராமத்தில் பிரசங்கம் செய்யப்படுமென்று பிரசுரம் செய்த அளவில்,

**அந்த இடத்தில் கூடுங்கள்,**

**சரியானபடி குறிப்பிட்ட டயத்தில் வாருங்கள்.**



# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் XL.

| 1941— | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| ஏப்ரல் ... | 19, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 20, ஞாயிற்றுக்கிழமை. | நீர்ப்பழனி | ... | „ | 6.00 |
| | | ஆலூர் | ... | „ | 6.30 |
| | 21, திங்கட்கிழமை ... | வாளரமாணிக்கம் | ... | „ | 6.00 |
| | | ஏம்பல் | ... | „ | 6.30 |
| | 22, செவ்வாய்க்கிழமை. | அன்னவாசல் | ... | „ | 6.00 |
| | | கீழக்குறிச்சி | ... | „ | 6.30 |
| | 23, புதன்கிழமை ... | கோட்டைக்காடு | ... | „ | 6.00 |
| | | கரம்பக்குடி | ... | „ | 6.30 |
| | 24, வியாழக்கிழமை ... | குழிபிறை | ... | „ | 6.00 |
| | | சுந்தரம் | ... | „ | 6.30 |
| | 25, வெள்ளிக்கிழமை... | ஆலங்குடி | ... | „ | 6.00 |
| | | ராசியமங்கலம் | ... | „ | 6.30 |
| | 26, சனிக்கிழமை ... | ராமச்சந்திரபுரம் | ... | „ | 6.00 |
| | | ராயவரம் | ... | „ | 6.30 |

## பிரஸங்கம் XLI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 27, ஞாயிற்றுக்கிழமை. | டவுன் ஹால் | ... | „ | 6.30 |
| | 28, திங்கட்கிழமை ... | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | | „ | 5.00 |
| | | செம்மட்டிவிடுதி | ... | „ | 6.00 |
| | | மழையூர் | ... | „ | 6.30 |
| | 29, செவ்வாய்க்கிழமை. | அண்டக்குளம் | ... | „ | 6.00 |
| | | கிள்ளனூர் | ... | „ | 6.30 |
| | 30, புதன்கிழமை ... | காரையூர் | ... | „ | 6.00 |
| | | கீழத்தானியம் | ... | „ | 6.30 |
| மே ... | 1, வியாழக்கிழமை. | புலியூர் | ... | „ | 6.00 |
| | | கண்ணன்குடி | ... | „ | 6.30 |
| | 2, வெள்ளிக்கிழமை... | கொன்னையூர் | ... | „ | 6.00 |
| | | மேல வேகுபட்டி | ... | „ | 6.30 |

புதுக்கோட்டை ஸமஸ்தானம்

யுத்த நிதிக்காக போடப்படும்

# அதிர்ஷ்டச் சீட்டு.

(ஸ்ரீ-தர்பாரவர்கள் உத்தரவின்பேரிலும் ஆதரவின் பேரிலும் புதுக்கோட்டை யுத்தநிதி என்டெர் டெயின்மெண்ட் கமிட்டியாரால் நடத்தப்படுகிறது.)

இந்த யுத்த நிதியை ஆதரியுங்கள்

டிக்கெட்டுகளை வாங்குங்கள்

முடிவு தேதி 15—6—41

சீட்டு குலுக்கும் தேதி 23—6—41

நமது மன்னர் அவர்களின் வருஷவர்த்தனை தினத்தன்று அதிர்ஷ்டசாலிகளுக்கு ஏராளமான பரிசுகள்.

300 பரிசுகள்.

| | | |
|---|---|---|
| 1-வது பரிசு | ரூபாய் 7,500 | |
| 2-வது பரிசு | ,, 5,000 | |
| 3-வது பரிசு | ,, 2,500 | |
| 2 பரிசுகள் | ,, 1,000 | விதம் |
| 5 ,, | ,, 500 | ,, |
| 90 ,, | ,, 100 | ,, |
| 100 ,, | ,, 50 | ,, |
| 100 ,, | ,, 15 | ,, |


Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—19-4-41.


புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ஏப்ரல் 27௨ [நெ. 41.


பிரஸங்கம் XLI.

## அபிஸீனியா

“இதியோபியர்கள் தங்கள் குணாதிசயங்களை மாற்றக்கூடுமோ, சிறுத்தைப்புலி தன்னுடைய தோலின் பொட்டுகளை மாற்ற முடியுமா”—இந்தப் பழைய பழமொழியில் ஒரு முக்கியமான அபிப்பிராயமிருக்கிறது. அதாவது அபிஸீனியா என்று பெயர் விளங்கிய இதியோபியாவிலுள்ள ஜனங்களின் குணங்கள், மாறுதலடையாமலிருப்பது, இயற்கையாகவே மாறுதல்களுக்கு இஷ்டமில்லாதது, ஸ்வபாவமாகவே அதிகமாக பிரகடனம் செய்துகொள்ள அபிப்பிராயமில்லாதது இவைகளைக் குறித்துச் சொல்லுகிறதென்று பொருள்படும்.

இது ஒரு விசித்திரமான நாடு, இதன் சரித்திரம் மிகவும் தந்திரத்தோடு கூடியது, இது மலைகளுக்கு மத்தியிலும் நாகரீகமற்ற ஆபிரிக்கா கண்டத்தின் வடகிழக்கு மூலையிலுள்ள கணவாய்களுக்கும் மத்தியில் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த தேசத்தில் புராதனமான கல்விகளும், சிறிது விருத்தியடைந்த பொருளாதாரங்களும், கருப்பு நிறமுள்ள மனிதர்களும், மத்திய காலத்திலிருந்தவர்களைப் போன்ற ஒரு அரசரும், அநேகமாக கல்வியின்மையும், அடிமைத்தனமும் காணப்படுகின்றன. மேலும் சமீப காலம் வரையில் அபிஸீனியாவானது ஒரு மறைபொருளாகவே விளங்கி வந்தது. சென்ற சில வருஷங்களாக உலகத்திலுள்ள பத்திரிகைகளில் ஒரு முக்கியமான பாகத்தில் இந்த தேசத்தைப் பற்றிய தகவல்கள் அடிக்கடி பிரசுரிக்கப்படுகின்றன. இந்த ஒரு அறியப்படாததும் இதியோபியன் சாம்ராஜ்ஜியத்தின் ஒரு பாகமுமான இந்த ராஜ்ஜியத்தைப் பற்றிய ஒரு விருத்தாந்தம் படிப்பாளர்களுக்கும் சாதாரண ஜனங்களுக்கும் உபயோகப்படக்கூடும்.

ஸோமாலிலாந்து என்ற பிரதேசமடங்கிய இந்த அபிஸீனியாவானது 3,50,000 சதுர மைல்கள் பரப்பும், பிரிடிஷ் நாடுகள், பிரான்ஸ் இரண்டும் சேர்ந்த பரிமாணமுமுள்ளது. இதன் பெரும் பாகம் மலைப்பிராந்தியம். ஆகிலும் மலைப்பிரதேசங்களுக்கும் எரிட்ரியா, ஸோமாலிலாந்து இவைகளின் கடற்கரைப் பிரதேசங்களுக்கும் மத்தியில் விஸ்தாரமான மணல் பாங்குள்ளதும், சேர்களுள்ளதுமான சம வெளிகளிருக்கின்றன. அநேக நதிகளும் ஓடைகளும் பெரிய கணவாய்களையும் பள்ளத்தாக்குகளையும் உண்டுபண்ணியிருக்கின்றன. அதனால் அந்த பிரதேசம் முழுவதும் காடு முரடாயும் செடி கொடிகளுள்ளதாயும் பயங்கரமாயுமிருக்கிறது. மலைகளில் அடர்ந்த காடுகளும் புல்தரைகளுமிருக்கின்றன. பள்ளத்தாக்குகளில் ஒவ்வொரு தாழ்வரைகளிலும் அநேக வகை விளைபொருள்களும் உணவுப்பொருள்களும் உண்டாகுகின்றன. விசேஷமாக, கோதுமை, யவை தானியம், எண்ணெய் விதைகள், ரப்பர், பருத்தி, கரும்பு, வாழை, தேயிலை, புகையிலை, ஆமணக்கு, ஆலிவ் மரம், டொமாட்டோ, கீரைகள், திராக்ஷை முதலியன உற்பத்தியாகின்றன. அபிஸீனியாவில் காப்பா என்னும் பிரதேசத்தைப் பின்பற்றி காபி என்று பெயர் விளங்கிய கொட்டையானது இவ்விடத்தில் தானாகவே அபரிமிதமாக உண்டாகிறது. தென் இந்தியாவிலுள்ளவர்கள் அவர்கள் காலையில் உட்கொள்ளும் பானமானது—இந்தப் பானம் இவர்களை உத்ஸாகப்படுத்துகிறதே தவிர குடி வெறியை உண்டாக்குவதில்லை—இந்தப் பிரசித்தி பெறாத, ஒரு மூலையிலிருக்கும நாட்டிலுண்டானதென்று அறிய மாட்டார்கள்.

உள்ளே சென்றால், மலைகளில் 6,000 அடி உயரமுள்ள பிரதேசத்தில் டானா ஏரி என்று சொல்லக்கூடிய ஒரு விசேஷமான ஜலபாகமிருக்கிறது. இங்கே உலகத்துக்குப் பெரிய இஞ்ஜினியரான ஈஸ்வரன் ஜனங்களின் க்ஷேமத்துக்காக இந்த இடத்தில் சுத்தமான தீர்த்தத்தை சேமித்து வைத்திருக்கிறார். இதைப் பார்த்தால் நமது தலைநகரிலுள்ள புதுக்குளம் போல இயற்கையாக ஒரு ஜலவசதி அபிஸீனியாவிலுள்ளதென்று சொல்லலாம். ஆனால் அதன் விஸ்தீர்ணம் நமது ஸமஸ்தானத்தைவிட அதிகமானது. ஒவ்வொரு வருஷமும் ஏறக்குறைய 3,500 கோடி கன மீட்டர்களடங்கிய ஜல சப்ளை செய்யும் இந்த ஏரியினால்தான் அபிஸீனியாவுக்கு முக்யத்வம் ஏற்படுகிறது.

இந்தப் பெரிய ஏரியிலிருந்துதான் நைல் நதியின் மற்றொரு பாகமான நீலவர்ணமுள்ள "அப்பை" என்னும் நதி உற்பத்தியாகிறது. இந்த நதிதான் ஸூடான் பிரதேசம், எகிப்து இவைகளின் செழிப்புக்குக் காரணம். இதன் காரணமாகத்தான் ஆபிரிக்காவில் ராஜ்ஜியம் வேண்டுமென்று சச்சரவுகள் உண்டாகுகின்றன. அபிஸீனியர்களுக்கு இது பவித்ரமான நதி. இதாலியானது இந்த நதிப் பிரதேசத்தை தன் அமுலுக்குக்கொண்டுவர எண்ணம் கொண்டேவருகிறது. எகிப்துக்கு இது ஏராளமான ஜல ஸப்ளை செய்து வருகிறது. ஸூடானைத் தன் வசமாக்கியிருக்கும் பிரிடனுக்கு இது மிகவும் முக்கியமானது. அமெரிக்கா இது சம்பந்தமாக ஒப்பந்தப்படி பாத்தியங்கள் கொண்டாடுகிறது.



இந்த அபிஸீனியாவானது 20 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவைகளில் முக்கியமானவைகள் டைகர், கொஜ்ஜம், ஹாரார், ஷோவு, ஜிம்மா போன்றவைகள். அங்குள்ள பெரிய நகரங்கள், அடிஸ் அபாபா (புதிய புஷ்பம்) தலைநகரம், ஹாரார், டிரிடாவா என்பவைகள். பழைய தலைநகரங்கள் ஆக்ஸமும், கோண்டாரும், ஆம்ஹாராவும். இந்த மாகாணங்களில் ரேஸஸ் என்று சொல்லக் கூடிய மாகாணத்தலைவர்கள் ஏராளமான அதிகாரம் செலுத்துகிறார்கள். பிரெஞ்சு ஸோமாலிலாந்திலிருக்கும் ஜிபுத்திக்கு அடிஸ் அபாபாவிலிருந்து ஒரு இருப்புப்பாதை இருக்கிறது. இது உள்நாட்டுக்கும் கடற்கரைக்குமுள்ள முக்கியமான போக்குவரவு சாதனம்.

இதியோபியர்களின் நடவடிக்கைகள் பெரும்பாலும் மத விஷயங்களால் பாதிக்கப்படுகின்றன. சடங்கு முறைகளுள்ளதும், பக்திமான்களும், தேவதூதர்களும், குற்றங்களை ஒப்புக்கொள்ளுதலும், பட்டினி நியமமுள்ள கிறிஸ்து மதத்தின் காப்டிக்வகையானது இங்கு உலாவுகிறது. ஜெருஸலத்திலுள்ள கோவில்களுக்கு யாத்திரை செல்லுவது ஒரு புண்தமான காரியமென்று கருதப்பட்டு அதினின்றும் பாவங்கள் தொலைந்துவிடுகிறதென்றும் நம்புகிறார்கள். இந்த மதத்தின் தலைமை அதிகாரி அபூனா என்பவர். இவர் கீழ் 1,00,000 பாதிரிகள் இருக்கிறார்கள். இவர்கள் மத சம்பந்தமாயும் ராஜீய விஷயங்களிலும் ரொம்பவும் செல்வாக்கு உள்ளவர்கள்.

அபிஸீனியாவின் அரசாங்கமுறையில் ஒரு அழுக்கான பாகமென்னவென்றால் அடிமை வேலையாட்களின் மிகுதியிருந்து வருவதுதான். அரேபியா, சைனா, லைபீரியா, ஸெயிராலியோன் முதலிய நாடுகளில் பலவகைப்பட்ட அடிமைத்தனமிருந்துவருகிறதென்பது நிச்சயம். ஆனால் அபிஸீனியாவின் ஜன சமூகத்தின் அமைப்பில் அடிமைத்தனம் என்பது ஒரு முக்கியமான பாகம். ஜனங்களில் ஐந்துக்கு ஒருவர் அடிமைவேலை செய்பவர்கள். அடிமைகள் கூட்டத்தைப் பெறாத அபிஸீனியர்களை அங்கு காணவே முடியாதென்று சொல்லலாம்.

அபிஸீனியாவில் இங்கிலாந்துக்குப் போஷக குருவான ஸெயிண்ட் ஜார்ஜ் என்பவருடைய கொடிதான் நாட்டப்படுகிறது. 1896-ம் ஸு ஸெயிண்ட் ஜார்ஜ் கொண்டாட்ட தினத்தன்று அபிஸீனியர்கள் அடோவா என்னுமிடத்தில் இதாலியை முறியடித்து சரித்திரத்தில் கியாதிபெற்ற வெற்றியைப் பெற்றார்கள். இந்தக் கொடியில் சிகப்பு, மஞ்சள், பச்சை வர்ணங்களும் இவைகளின் பேரில் ஜூடாவின் சிங்கமானது இழைக்கப்பட்டிருக்கிறது. அபிஸீனியாவின் மன்னரின் குடும்பத்தின் ஆதி புருஷர்கள்; ரொம்பவும் புத்திசாலியானவும் டேவிட் அரசனின் குமாரனுமான ஸாலமன் என்ற பெரியாரும், ஸாலமனுடைய புத்தி விசாலத்தைக் கேழ்விப்பட்டு உலகத்தின் கடைசி பாகத்திலிருந்துவந்த ஷேபாவின் ராணியும்தான். அபிஸீனியாவின் புராணப்படி இந்த ராணியானவள் இதியோபியாவின் ராணி. இவர்களுடைய குமாரன் முதல் மானெலெக் என்பவர். புராணத்தில் சொல்லியிருக்கிறபடி, ஒப்பந்தப்படி நிர்மாணம் செய்யப்பட்ட

படகை மானெலெக்தான் தன்னுடைய தகப்பனாரான ஸாலமனைப்பார்த்துவிட்டுத் திரும்பியபொழுது ஜெருஸலத்திலிருந்து தன்னுடன் கொண்டுபோனார். ஸாலமன் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் இதியோபியாவில். நீகஸ் என்ற பெயருடனும் நீகஸ்ஸா, நீகஸாத் என்ற பெயருடனும், அதாவது மன்னர்களென்றும், ராஜாதி ராஜர்களென்றும், ஆண்டுவந்திருக்கிறார்கள். 1930-ம்ஸு சிம்மாசனம் ஏறி ராஜாவாகயிருக்கும் ஹெயிலி ஸெலாஷி என்பவர், அபிஸீனியாவின் மன்னரென்றும், இதியோபியாவின் அரசர்களுக்கு அரசனென்றும், ஜூடா தேசத்து சிங்கமென்றும், ஈஸ்வரனுடைய பிரதிநிதியென்றும் பட்டங்களுடன் ஆண்டுவருகிறார்.

இப்பொழுது இரண்டு கண்டங்களிலும், சமுத்திரங்களிலும், ஆகாயத்திலும் நடக்கும் இந்த மகத்தான யுத்தத்தில் அபிஸீனியா என்ன பங்கு எடுத்துக் கொண்டிருக்கிறதென்று பார்ப்போம். சரித்திரப்போக்கை ஆராய்பவர்கள், ஆறுமாதங்களுக்கு முன்னால் பிரிடனுடையவும் சாம்ராஜ்ஜியத்தினுடையவும் சைனியங்கள் வடக்கு, கிழக்கு ஆபிரிக்காவில் எதிர்ப்பு யுத்தம் ஆரம்பித்த பொழுது, இதியோபியாவும் கூடிய சீக்கிரம் யுத்தத்தில் புகுந்துவிடுமென்றும் எண்ணினார்கள். அதே விதமாக வடகிழக்கு ஆபிரிக்காவில் ஏற்படக்கூடிய ராணுவ எதிர்ப்புகளில் அபிஸீனியாவும் ஒரு முக்கியமான பங்கு எடுத்துக் கொள்ளுமென்பதில் சந்தேகமில்லை.

இதை விள, யுத்தத்தின் காரணபூதமான விஷயங்களில் அபிஸீனியாவும் ஈடுபட்டிருக்கிறது. சென்ற பத்து வருஷங்களில் ஐரோப்பாவிலும், மற்ற இடங்களிலும் ஏற்பட்ட சம்பவங்களைப் பரிசோதித்தால், சரித்திரமெழுதுகிறவர்கள் இந்த யுத்தமானது ஒரு அம்சத்தில் 1931-ம் வருஷமே ஆரம்பித்துவிட்டதென்றும், அப்பொழுது ஜப்பான் மஞ்சூரியாவைத் தாக்கியதென்றும், இதைத் தடுத்துவிடாததால் இதாலி தைரியம்கொண்டு 1935-ல் இதாலிக்கும், அபிஸீனியாவுக்கும் யுத்தம் நடந்ததின்மூலம் தொடரப்பட்டதென்றும், பிறகு ஸ்பெயினில் உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டதென்றும், அதன் தொடர்ச்சியாக ஐரோப்பா முழுவதும் ரைன்லாந்து, ஸெக்கோஸ்லாவாகியா, ஆஸ்திரியா, ஸுடேடன்லாந்து முதலிய தேசங்களைப் பற்றிய பிரச்னைகள் மூலம் ஒரு ராணுவப் புரட்சியேற்பட்டதென்றும், முடிவில் டான்ஸிக், போலந்து நாடுகளின்மேல் ஜெர்மனி படையெடுத்துக் கைப்பற்றிக்கொண்டதோடு முடிந்ததென்றும் எழுதுகிறார்கள். சென்ற ஆறு வருஷங்களாக பிரிடனுக்கும், இதாலிக்கும் உள்ள விரோதத்தின் விருத்திக்கும் அதிலிருந்து இங்கிலாந்துக்கும், பிரான்ஸுக்குமுள்ள சம்பந்தங்களும் மாறுபாடு அடைந்திருப்பதற்கும் இதாலியின் அபிஸீனியா யுத்தமும் அதைப் பிரயோஜனமின்மையில் தேசப்பொதுச் சங்கம் கண்டனம் செய்ததும்தான் காரணமாகும்.

நாம் இன்னும் பழைய சரித்திரத்தை ஆராய்ச்சி செய்வோம். சென்ற சில வருஷங்களில் ஐரோப்பியர்கள் குடியேற்ற நாடுகளைக் கைப்பற்றவேண்டி பிரயத்தனங்கள் செய்தபொழுது, அதிகமாக மேன்மை யடைந்திராத உலகத்திலுள்ள சில பாகங்களெல்லாம், விசேஷமாக ஆபிரிக்கா கண்ட முழுவதும் வெவ்வேறு வல்லரசர்களுக்கு பங்குபோடப்பட்டுவிட்டன. அபிஸீனியா மட்டும்



பாதி சுதந்திரமுள்ளதாகவே யிருந்திருக்கிறது. இதாலியும், பிரிடனும், பிரான்ஸும் இதின் அபிவிருத்தியைப்பற்றிக் கவலையுள்ளவர்கள். ஆகையால் அவர்களுக்குள் ஏற்பட்ட சம்பாஷணைகளுக்கும், ஒப்பந்தங்களுக்கும் அபிஸீனியா தான் காரணமாயிற்று. இதன் பயனாகத்தான் 1896-ம் வருஷத்தில் இதாலி அபிஸீனியாவுடன் யுத்தம் செய்ய நேரிட்டது. அந்த யுத்தத்தில் இதாலி தோல்வியடைந்தது. அபிஸீனியா வெற்றிபெற்றது.

பத்து வருஷங்களுக்குப் பிறகு 1906-ம் வருஷத்தில் பிரிடன், பிரான்ஸ், இதாலி ஆகிய மூன்று வல்லரசர்களும் அபிஸீனியாவின் பூர்ண அமைப்பையும், சுதந்திரத்தையும் நிலைநாட்ட உத்தேசித்து மூவர் உடன்படிக்கை ஏற்படுத்தினார்கள். 1915-ம் வருஷத்தில், முதல் மகாயுத்தம் நடந்துகொண்டிருந்தபொழுது பிரிடனும், பிரான்ஸும் இதாலிக்கு அனேக சௌகரியங்களைக் கொடுப்பதாகவும் அதற்காக ஜெர்மனியின் நட்பை ரத்துசெய்து, அதைத் தங்களோடு சேர்ந்துகொள்ளும்படித் தூண்டினார்கள். இந்த சகாயங்கள் ஆபிரிக்காவிலும், ஏஷியா மைனரிலும் பெயர் சொல்லாத குடியேற்ற நாடுகளை இதாலிக்குத் தரக்கூடும். இதினின்றும் அவர்கள் அபிஸீனியாவைக் கைப்பற்றிக்கொள்ளுவதற்கு தங்களுக்கு அவ்விருவரும் நியாயமான ராஜதந்திர முறைப்படி ஆதரவளிப்பதாக இதாலியர்கள் கருதினார்கள். இதாலிய ஸோமாலிலாந்திலிருந்து, எரிட்ரியாவுக்கு ஒரு இருப்புப்பாதையைக் கட்டுவதற்கு இதாலியும், பிரிடனும் பேச்சுகள் ஆரம்பித்து முடிவடையாதது மூலம் இந்த மனஸ்தாபங்கள் விருத்தியடைந்துவந்தன.

அடுத்தபடியாக 1923-ம் வருஷத்தில் அபிஸீனியாவானது, பிரான்ஸ், இதாலி இந்த இரண்டு நாடுகளின் பூர்ணமான ஆதரவின்பேரில் சர்வதேச பொதுச் சங்கத்தில் ஒரு அங்கத்தினராகச் சேர்ந்துகொண்டது. இவ்விரண்டு நாடுகளும், அபிஸீனியா தேசத்திலுள்ள அடிமைத்தனத்துக்கு எதிரிடையாக பிரிடனில் கிளர்ச்சியுண்டானதிலிருந்து அபிஸீனியாவைப் பிடிக்கவேண்டுமென்று பிரிடிஷார்கள் அபிப்பிராயம்கொண்டிருக்கிறார்களென்று நினைத்து, அபிஸீனியா எடுத்துக்கொண்ட முறையானது, பிரிடிஷாரின் எண்ணத்தை முறியடித்துவிடுமென்று எண்ணினார்கள். சர்வதேசப் பொதுச் சங்கத்திலிருந்த பிரிடிஷ் தூதர் அபிஸீனியாவை அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளுவதில் அபிஸீனியர் தகுந்தபடி நாகரீகம் பெற்றிருக்கிறார்களாவென்று ஆக்ஷேபித்தார். ஆனால் அங்கிருந்த இதாலிய தூதர், அபிஸீனியாவைச் சேர்த்துக்கொள்வதால் சங்கத்துக்கே புகழ் உண்டாகுமென்று சொன்னார். 1923-ம் வருஷத்தில் அபிஸீனியாவானது தன்னால் இயன்றளவு அடிமைத்தனத்தையும், அடிமைகள் வியாபாரத்தையும் ஒழித்துவிட ஏற்பாடு செய்வதாக ஒப்புக்கொண்டதின்பேரில் அதை சங்கத்தில் சேர்த்துக்கொண்டார்கள்.

வெகுநாட்கள் பேச்சு நடந்த பிறகு அபிஸீனியா பிரச்னையைப் பற்றி பிரிடனும் இதாலியும் 1925-ம்ஸு ஒரு முடிவுக்கு வந்தன. இந்த ஒப்பந்தப்படி டானா ஏரியிலுள்ள ஜலசப்ளையைக் கட்டுப்பாட்டில் வைக்க ஒரு அணை

கட்டுவதைப்பற்றியும் டானா ஏரியிலிருந்து ஸூடானுக்குப் போகக்கூடிய ஒரு மோட்டார் ரஸ்தாவை பிரிடன் போட்டுக் கொள்ளவும், இதற்குப் பதிலாக இதாலியானது எரிட்ரியாவிலிருந்து இதாலிய ஸோமாலிலாந்துக்கு ஒரு இருப்புப் பாதையைப் போட்டுக்கொள்ளவும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

இந்த ஏற்பாட்டை அறிந்த அபிஸீனிய சக்ரவர்த்திக்கு அதிகக் கோபம் வந்துவிட்டது. 1926-ம் ௵த்தில் ஸர்வதேசசங்கத்துக்கு ஒரு ஆக்ஷேபனைக் கடிதம் எழுதி 1925-ம் ௵த்தில் ஏற்பட்ட ஒப்பந்தம் அவருக்குத் தெரியாமல் நடைபெற்றதென்றும் ஸர்வதேசப் பொதுச்சங்கத்தின் ஒரு அங்கத்தினரான இதியோபியா மற்ற நாடுகளுடன் ஸமமான அந்தஸ்து உள்ளதென்றும், அதனுடைய உரிமைகளை எல்லோரும் காப்பாற்றவேண்டுமென்றும் அவர் அறிவித்தார். இதற்குப் பதிலுரைக்கும்பொழுது, அபிஸீனியாவிலுள்ள அரசாங்கத்தார் அந்த ஒப்பந்தத்தின் வாசகங்களையும் நோக்கங்களையும் அறிந்துகொள்ளவில்லையென்றும் மேற்படி ஒப்பந்தத்தில் இதியோபியர்கள் பயப்படும்படியான யாதொரு அம்சங்களுமில்லையென்றும் இதாலியர்கள் சொல்லிவிட்டார்கள்.

பிறகு 1928-ம் ௵த்தில் இதாலியும் அபிஸீனியாவும் ஒரு பஞ்சாயத்து உடன்படிக்கையில் கையொப்பமிட்டார்கள். அதன் பிரகாரம் இருதரப்பாரும் அவர்களுக்குள் ஏற்படக்கூடியதும், சாதாரணமாக ராஜ்ஜிய தந்திரமுறைகளால் தீர்மானம் செய்து கொள்ளக்கூடியதுமான சச்சரவுகளை மத்தியஸ்தத்துக்கும் பஞ்சாயத்துக்கும் அனுப்புறதென்று முடிவு செய்யப்பட்டது. இருந்தபோதிலும் இருதரப்பாரும் புகார்கள் செய்து கொண்டேயிருந்தார்கள். இதாலியர்களுக்கு ஏற்பட்ட மனவருத்தமென்னவென்றால் "இதாலியின் உதவியைக் கொண்டு ராஜ்ஜியத்தின் அபிவிருத்திமுறைகளை ஏற்பாடு செய்யாமல், சக்கிரவர்த்தியானவர் நாட்டில் நாகரீகம் உண்டாகும்படிக்கும் ஜனங்களை நவீன முறைகளை அனுஷ்டிக்கும் படிக்கும் பிரயத்தனம் செய்து வருகிறாரென்றும், முக்கியமாக தேசத்தின் பாதுகாப்பை பலப்படுத்த விசேஷ கவனமெடுத்துக்கொள்ளுகிறாரென்றும் தான்."

அடிப்படையாக இம்மாதிரியான பல காரணங்களிருப்பதைப் பார்த்தால், இரண்டு தேசங்களும் யுத்தம் செய்யவேண்டி வருமென்றும், இதாலியானது ஓநாயும் ஆட்டுக்குட்டியும் என்று பெயர் விளங்கிய கட்டுக்கதைபோல, அபிஸீனியாவின் பேரில் பாய்வதற்கு முகாந்திரம் எப்பொழுது ஏற்படுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்ததென்றும் நிச்சயமாய்ச் சொல்லலாம். 1935-ம் ௵ ஜனவரி மாதத்தில், இங்கிலாந்து ஜெர்மனியுடன் ரகசியமாக ஒரு கடல் ஒப்பந்தம் செய்த காரணமாக, பிரிடனுக்கும் பிரான்ஸுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது. பிரான்ஸ் பயமடைந்து முஸோலினியின் சிநேகத்தை நாடிற்று. முஸோலினிக்கு இப்பொழுது ஒரு நல்ல சந்தர்ப்பம் வாய்த்துவிட்டது. இதற்கு வெளிப்படையாக ஒரு காரணம் சம்பவித்தது. அதாவது, எல்லைப்புற நாடுகளில் இதாலியைச்சேர்ந்த ஆபிரிக்காவின் துருப்புகளுக்கும் அபிஸீனியப் படைகளுக்கும் வால் வால் என்னுமிடத்தில் சச்சரவு நேர்ந்தது. இந்த நெருக்கடியை சாதாரணமாக சமாதான முறைகளில் தீர்த்துவிட்டிருக்கலாம். ஆனால் பாஸிதத்வம் மிகுதியான இதாலி-



யானது யுத்தத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந்தது. 1935-ம் ௵ அக்டோபர் ௴ 3 தேதியன்று, யுத்தத்தை ஆரம்பிக்கப் போகிறோமென்று தகவல் கொடுக்காமலேயே, முஸோலினியானவர் அபிஸீனியாவுக்குள் படையெடுத்துச் சென்றார். இருதரப்பாரும் ஸர்வதேச பொதுச் சங்கத்தில் அங்கத்தினர்கள். ரொம்பவும் பரிகசிக்கத் தகுந்த விஷயமென்னவென்றால், இந்த எதிர்ப்பு ஆரம்பமான பொழுது சங்கமானது நடைபெற்று வந்தது. உலகத்தார் நடுக்க முற்றார்கள். அபிஸீனியாவானது சங்கத்துக்கு மனுச்செய்து கொண்டது. இதாலிதான் வலுவுச்சண்டைக்குப் புறப்பட்டதென்று சங்கம் தீர்மானித்து விட்டது. ரொம்பவும் காலங் கிரமித்து பொருளாதாரத் தடைகளை இதாலியின் பேரில், ஏற்படுத்தியது. அதன்படி அங்கத்தினர்கள் இதாலியுடன் அநேக சாமான்கள் கொள்முதல் செய்யக்கூடாதென்று தடுக்கப்பட்டார்கள். இதன் மத்தியில் பிரிடிஷ் பர இலாகா காரியதரிசியான ஸர். ஸாமுயல் ஹோரும், பிரெஞ்சு பிரதம மந்திரியான எம். லவாலும் இதாலிக்கு அபிஸீனியாவின் பெரும் பாகங்களைக் கொடுப்பதன் மூலம் சச்சரவை ஒருவாறு சமாதானம் செய்து முடித்துவிடுகிறதென்று முடிவுசெய்து விட்டார்கள். இதைக் கேள்விப்பட்டவுடன் லண்டனில் பொதுஜன ஆக்ஷேபனை உண்டாயிற்று, ஸர். ஸாமுயல் ஹோர் வேலையை விட்டு அகன்றார். அபிஸீனியர்கள் தைரியத்துடன் சண்டை செய்து வந்தார்கள். ஆகிலும் இதாலியின் ஏராளமான கவசம் பூண்ட துருப்புகளுக்கும் ஆகாயத்திலிருந்து குண்டுமாரிகளையும் விஷப் புகைகளையும் உதவிபெற்ற சேனைக்கு இவர்கள் சேனை எம்மாத்திரம். அபிஸீனியா தோல்வியுற்று நிலைகுலைந்தது. இம்மாதிரியாக அக்கிரமமாக தோற்கடிக்கப்பட்டு 1936-ம் ௵த்தில் அபிஸீனியாவானது இதாலியின் கிழக்கு ஆபிரிக்காவின் ஒருபாகமாக மாறிவிட்டது. அது வரிசைக்கிரமமாக அநேக தேசாதிபதிகளின்—அதாவது மார்ஷல் படாக்கிளியோ, மார்ஷல் கிராஸியானி, அயோஸ்டா பிரபு—ஆளுகைக்குட்பட்டு வந்திருக்கிறது. அச்சமயம் மாஜி மன்னரான ஹெயிலி ஸெலாஸி என்பவர் இங்கிலாந்தில் வசித்துவந்தார். பழிக்குப் பழிவாங்க எப்பொழுது சமயம் வாய்க்குமென்றும் தன்னுடைய நாட்டை மறுபடியுமடைய எப்பொழுது சமயம் ஏற்படுமென்றும் எதிர்பார்த்து வந்தார். 1940-ம் ௵ நவம்பர் ௴ பிரிடிஷ் துருப்புகளும் சாம்ராஜ்ஜியத் துருப்புகளும் வட கிழக்கு ஆபிரிக்காவில் எதிர்ப்பு யுத்தம் துவக்கியபொழுது நல்ல தருணம் வாய்த்தது. டிஸம்பர் மாதம் முதல் கொண்டு நம்முடைய யுத்த அறிக்கை நிலயத்தின் பிரசுரங்களில் அபிஸீனியாவானது பகிரங்கமாக கலகம் செய்ய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதென்று நாம் வெளியிட்டிருக்கிறோம் (14, டிஸம்பர் 1940). அதற்குப்பின் ஏற்பட்டிருக்கும் சம்பவங்களை எல்லாம் கவனித்தால் நாம் எதிர் பார்த்ததெல்லாம் சரியாகவே முடிந்துவிடுகின்றன என்று சொல்லலாம்.

சென்ற இரண்டு மாதங்களில் ஜெனரல் வேவலின் தலைமையின் கீழிருந்த பிரிடன், இந்தியா இவைகளின் துருப்புகளின் முதிர்ந்த ஆலோசனையும் பயனும் உள்ளதுமான எதிர்ப்புக்குமுன்னால் இதாலிய எதிர்ப்பு அடியோடு தொலைந்துவிட்டது.

ஆபிரிக்காவில் ஒரு இதாலிய சாம்ராஜ்ஜியத்தை நிலைநாட்டுவதுதான் முஸோலினியின் அபிப்பிராயம். அதாவது ஒரு பெரிய இதாலி தேசமென்பது. இதாலி அரசனுடைய சக்கிரவர்த்தி என்னும் பட்டமானது அபிஸீனியா ராஜ்ஜியமிருந்தால் தான் ஒவ்வக்கூடும். ஆனால் இதாலியர்களின் வசத்திலிருந்து அபிஸீனியா நழுவிப்போய்விட்டது. டிரிடாவா, ஹாரார், அடிஸ் அபாபா, இன்னும் இதர நாடுகளெல்லாம் ஒவ்வொன்றாக சாம்ராஜ்ஜியத் துருப்புகள், அபிஸீனியத் துருப்புகளால் பிடிக்கப்பட்டுவிட்டன. அங்குள்ள இதாலியப்படைகள் அனேகமாக ஊரைவிட்டு துரத்தியடிக்கப்பட்டுவிட்டன. அங்கிருந்த 1,30,000 இதாலியப் படைகளில் இரண்டு சிறிய பகுதிகள் அயோஸ்டா பிரபுவின் கீழும், ஜெனரல் பிரஸ்ஜியின் அமுலிலும் இருந்து வருகின்றன. அடிஸ் அபாபாவில் சாம்ராஜ்ஜியத் துருப்புகளுக்கு ஏற்பட்ட வரவேற்பு புராணக் கதைபோல் அழகாயிருக்கிறது. பிரிட்டனுக்கும் அபிஸீனியாவுக்கும வருங்காலத்தில் ஏற்படப்போகும் நட்புக்கு இது ஒரு அறிய முன்போக்காக ஆகும். மிஸ்டர். வின்ஸ்டன் சர்ச்சில் சொன்ன பிரகாரம் "ஆபிரிக்காவிலுள்ள முஸோலினியின் சாம்ராஜ்ஜியம் தூளாக்கப்பட்டு விட்டது. இதேமாதிரிதான் காலக்கிரமத்தில், ஸர்வாதிகாரிகளின் முடிவும் ஏற்படப்போகிறது" என்பது நிச்சயம்.

நிற்க, அபிஸீனிய யுத்தம் வெற்றிகரமாக முடிவடைந்துவிட்டதால், அபிஸீனியாவுக்குப் பெரும் கீர்த்தி ஏற்பட்டதுமல்லாமல், ஆபிரிக்காவிலும் மற்ற யுத்தரங்கங்களிலும் இப்பொழுது அத்தியாவசியமாகத் தேவையான சைனியங்களையும் விமானப் படைகளையும் இங்கிருந்து அனுப்ப ஹேதுவாயிருக்கும். நவீன முறையில் உண்டுபண்ணப்பட்ட கவசம் பூண்ட ஆயுதங்களில்லாத போதிலும், அனேகம் யுத்த ஸ்தலங்களில் இதியோபியர்கள் தங்கள் பராக்கிரமத்தை வெளிக் காட்டியிருக்கிறார்கள். பழைய காலத்து மஹாராட்டா சிப்பாய்கள்போல கொள்ளைக்காரர்கள்போல் சண்டை செய்வதற்கு திறமை வாய்ந்தவர்கள்— அதாவது சுலபமாகச் செல்லுகிறது, விடாமுயற்சி, அபரிமிதமான பொறுமை, குறைந்த உணவுப்பொருள்களுடன் திருப்தி பெற்று வசித்து வரக்கூடிய, ஆச்சரியப்படக்கூடிய சக்தி இந்த குணங்களெல்லாம் மலைப்பிராந்தியத்தில் சண்டை செய்யும் சத்துருவுக்கு எதிரிடையாக நின்று எதிராளி ஒழுங்கான யுத்த முறைப்படி யுத்தம் செய்தால், யுத்தம் செய்து, வெற்றிபெற உபயோகமுள்ளதாய் இருக்கும்.

நிற்க, பிரிடிஷ் ராஜதந்திரிகள், பிரிடனுக்கு அபிஸீனியாவைக் குறித்துள்ள மனப்பான்மையை விளக்கிக் காட்டக்கூடியபடி அனேக பிரகடனங்கள் செய்து இருக்கிறார்கள். சில நாட்களுக்கு முன்புதான் காமன்ஸ் மகா சபையில் R. A. பட்லர் பேசியபொழுது "பிரிடனுக்கு அபிஸீனியாவில் ராஜ்ஜியங்களைப் பிடித்து சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற நோக்கங்களில்லை" என்று வெளியிட்டார். இவ்விதமாக அபிஸீனியாவின் சுதந்திரம் காப்பாற்றப்படும், "கெடுதலிலிருந்து தான் நன்மை உண்டாகும்." இதாலியர்கள் ரஸ்தா போடுவதில் சாமார்த்திய சாலிகள். இதாலியின் படையெடுப்பின் பயனாக அபிஸீனியா பூராவும் ஏராளமான நல்ல ரஸ்தாக்களும் மோட்டார் போக்குவரவு சாதனங்களில் நூதனமாக



உள்ள மாறுதல்களோடுகூடிய வண்டிகளும் நிரம்பியிருக்கின்றன. சரி பாதி நாகரீகமற்றதாக இருந்த நாடானது நவீன முறைப்படி நாகரீகமுள்ளதாக அனேக வகைகளில் மாறிவிட்டது.

இதியோபியாவானது சமீபத்தில் கடவுளை நோக்கி கைகளைக் கூப்பிப் பிரார்த்தனை செய்யும் என்று பக்தி கீதங்கள் இயற்றுகிறவர் அனேக நூற்றாண்டு களுக்கு முன்னால் பாடினார். அபிஸீனியாவின் புரட்சிக்கு இந்த பழமொழியானது உத்ஸாகச் சொல்லாக அமைந்துவிட்டது. அடிஸ் அபாபாவைத் திரும்பக் கைப்பற்றிய பிறகும், அபிஸீனியாவின் மற்ற பாகங்களிலும், எரிட்ரியாவிலும் இன்னும் இதர இடங்களிலும் இதாலிய சைனியங்கள் கூட்டம் கூட்டமாக சரணடைந்து நமக்கு வெற்றிகள் ஏற்பட்டிருக்கும் சமயத்திலும் மற்ற யுத்த ரங்கங்களில் முக்கியமான சம்பவங்கள் நடைபெறக்கூடிய தருவாயில், மேதாவி டான ஸாலமனுடைய பிதாவின் வார்த்தைகளுக்கு விசேஷ கௌரவமுண்டு. சக்கிரவர்த்தியான ஹெயிலி ஸெலாஸி சொன்னதாவது, "என்னுடைய பெரிய நேசநாடான பிரிடிஷாருக்கு ஜயம் கிடைக்குமென்பது எவ்வளவு நிச்சயமோ அம் மாதிரியாகவே இதியோபியாவுக்கும் கூடிய சீக்கிரம் விடுதலை ஏற்படப் போகிறது என்று நிச்சயமாய் நம்புகிறேன்."

அவருடைய நம்பிக்கை பரிபூர்ணமாய்ப் பூர்த்தியடையும்படி கடவுள் அருள் புரிவாராக!

---

## வார யுத்தச் செய்திகள்.

(17—4—41-லிருந்து 23—4—41-வரை).

**யுத்தம் செய்துகொண்டு பின்வாங்குதல்.**—யூகோஸ்லாவியாவில் பால் இளவரசர் ரீஜண்டாக இருந்தபோது, அச்சு நாடுகளோடு யூகோஸ்லாவியா சேருமென்று நினைத்து நேயப் படைகள் மத்திய மாஸிடோனியாவில் வைக்கப்பட்டிருந்தன. பிறகு அரசியல்மாறி, யூகோஸ்லாவியா நேயக் கக்ஷியோடு சேர்ந்தவுடன், யூகோஸ்லாவியப் படைகளே இங்கு நிறுத்தப்பட்டன. ஆனால் ஜெர்மனி, தன்முழு ஆயுத பலத்தையும் உபயோகித்து, யூகோஸ்லாவிய சைனியத்தைத் துண்டித்து, மொனாஸ்டிர் கணவாயில் முன்னேறியபோது, நேயத் துருப்புகளின் பின்பக்கமாய் எதிரி வளைத்துக்கொள்ளாது தடுத்துக்கொள்ள, பின்வாங்கி அணிகளை நெருக்கிக் கொண்டு ஒலிம்பஸ் மலைக்கும், அல்பேனியா எல்லைக்கும் நடுவே நின்றன.

இங்கே கோரமான சண்டை நடந்தும், எதிரிக்கு அதிக நஷ்டமேற்பட்டும், எதிரியின் எதிர்ப்பு பலத்தினால், மற்றும் பின்னேற நேரிட்டது. பகைவனும் கலபாகா, கிளிஸூரா, எர்ஸக், ஒலிம்பஸ், திரிகாளா, லாரிஸா, யானினா முதலியவிடங்களைப் பிடித்துக்கொண்டான். இப்பொழுது தெர்மாப்பிலியென்னும போர்முனையில், எதிரியின் எதிர்ப்பை எதிர்பார்த்துக்கொண்டு பிரிடிஷ் சைனியங்கள் நிற்கின்றன.

இவ்விதமாக சண்டை செய்துகொண்டே பின்வாங்குவதென்பது துர்லபமானகாரியம். இதைப்பற்றி டைம்ஸ் பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது :—

'நமக்கதிகச் சேதமில்லாது, எதிரியின் நஷ்டத்தை அதிகப்படுத்திக்கொண்டு, நமது சைனியங்கள் பின்னேறிச் செல்லுகின்றன. ஆனால் இதிலிருந்து எதிரியோடு பிறகு சண்டை செய்வதாயுமில்லை. கவச-வண்டிகளைக்கொண்டும், விமான உதவியாலும் எதிரி முன்னேறப் பார்க்கிறான். நஷ்டத்தைப் பாராட்டவில்லை. அநேக தளவாடங்களையும், விமானங்களையும் கொண்டு எதிரி தாக்குகிறான். நாமும் நம்முடைய விமானங்களைக்கொண்டு எதிரியை விரட்டுகிறோம். ஆனால் அன்னிய தேசத்துக்கு வந்து சண்டை செய்வதால் நமக்கு விமானக்குறைவாயிருக்கிறது. சிறு யந்திரத் துப்பாக்கிகளை டிரக்குகளில் ஏற்றிக்கொண்டு சண்டை செய்கிறோம்.

இரண்டிலொன்று பார்த்துவிடுவதென்று ஜெர்மானியர்கள் வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களை இதுவரையில் நம்மைப்போல் உக்கிரகமாய் எதிர்த்தவர்களும் கிடையாது.

இவ்விதம் எதிர்ப்பது யாரென்று கவனிக்கவேண்டும். முதலாவதாக, நமது சாம்ராஜ்ஜியப் படையின் சிறிய பகுதி யொன்று. மற்றொன்று கிரீஸாகிய சிறிய ஸமஸ்தானத்தியப் படைகள். கிரேக்கர்களுக்கு யந்திர சாதனம் குறைவு. இவர்கள் ஏற்கனவே ஆறுமாதகாலமாகப் பெரிய இதாலிய சைனியத்தைத் தோற்கடித்து அசந்துவிட்டார்கள்.

**கிரேக்க சரணாகதி.**—இது இப்படியிருக்க எபிரஸ், மாஸிடோனியாவிலிருக்கும் கிரேக்க சைனியம் சரணாகதி செய்துவிட்டதாகச் செய்திவந்திருக்கிறது. பின்னால் வந்து வளைத்துக்கொண்டதால் சரணாகதி செய்ய நேரிட்டதாக ஒரு கிரேக்க சைனிய அறிக்கை கூறுகிறது. கிரீஸின் அரசர் இது தனக்கும், தன் சேனாபதிக்கும், அரசாங்கத்துக்கும் தெரியாது நடந்த காரியமென்று சொல்லுகிறார். இவர் ஆதன்ஸைவிட்டு கிரீட்டுக்குச் சென்றுவிட்டார். கிரேக்க சைனியங்கள் அவசரப்பட்டு சரணாகதி செய்துகொண்டிருக்கலாம்: அல்லது அவசியமும் ஏற்பட்டிருக்கலாம். சரணாகதி செய்த சைனியம் 10-லிருந்து 16 படைகள்வரை இருக்குமென்று தோன்றுகிறது. ஆறு மாதமாக யுத்தம்செய்து, முடிவில் சரணாகதி செய்வது துக்கிக்கக் கூடியதுதான். ஆனால் ஏற்கனவே ஏற்பட்ட கீர்த்தியானது கிரீஸுக்கு ஒரு நாளும் மங்காது. இரண்டு பெரிய ராஜ்ஜியங்கள் பின்னே வந்து தாக்கியதால்தான் கிரேக்க சைனியங்கள் சண்டையை நிறுத்த நேரிட்டது.

இதே சமயத்தில் பிரிடிஷ், ஆஸ்திரேலிய நியூஸிலாண்டு சைனியங்களை கிரீஸுக்கு அனுப்பியது அவசியமில்லையென்று சொல்லுபவர்களுக்கு மிஸ்டர். மென்ஸிஸ் கொடுத்த பதில் உசிதமாகும். அபாயத்தை அறிந்தே, கிரேக்கர்களுக்குதவி செய்ய வேண்டுமென்றே இவைகள் அனுப்பப்பட்டன. இந்த சமயத்தில் கிரேக்க சைனியம் அசந்து விட்டது.

யூகோஸ்லாவிய அரசர் ஆதன்ஸிலிருந்து ஜெருஸலத்துக்கு விமானமேறிச் சென்றார். மத்தியதரைக்கடல்வழி செல்லும்போது, எதிரிகள் எதிர்த்து, மந்திரி ஒருவர் கொல்லப்பட்டார்.



அச்சு நாடுகளும், அவைகளைச் சேர்ந்தவர்களும் பிடித்த நாடுகளை, திருடர்கள்போல் பங்கிட்டுக் கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். அவர்களுக்குள் சண்டை வரலாம். இதாலிக்கு டால்மேஷியா கடற்கரை வேண்டுமாம்; பல்கேரியாவுக்கு மாஸிடோனியா வேண்டுமாம். ஹங்கேரிக்கும், ருமேனியாவுக்கும் பானாத் வேண்டுமாம். ரிப்பன்டிராப்புக்கும் சியானோவுக்கும் பேச்சு வார்த்தைகள் நடக்கின்றன.

**லிபியாவில்** நிலைமை மாறவில்லை. மறுபடியும்இருமுறை டொப்ருக்கு தாக்கப்பட்டு, எதிரிகள் விரட்டப்பட்டார்கள். ஸொல்லமானது திருப்பியெதிர்க்கப்பட்டது. பிரிடிஷ் விமானங்கள் திரிபோலி, கபூஸோ, எல்-கஸாலா முதலிய இடங்களைத் தாக்கின. ஏப்ரல் 19-20 இரவன்று பிரிடிஷ் படையொன்று பார்டியாவிலிறங்கி, தளவாடங்களையும், தரை பீரங்கிகளையும் ஒரு பாலத்தையும் சேதப்படுத்தி விட்டு, பெரும்பாலும் திரும்பின.

**அபிஸீனியா** கடைசியாய் வந்த ரேடியோ செய்திப்படி தென் ஆபிரிக்கா சாம்ராஜ்ஜியத் துருப்புகள் டெஸ்ஸியை அணுகிவிட்டன.

அபிஸீனியாவில் அகப்பட்டுக்கொண்ட இதாலியப் பொது ஜனங்களை ரக்ஷிப்பதற்காக இதாலிய சேனாபதியை சரணாகதியடைய கேட்கப்பட்டதற்கு அவர் மறுத்துவிட்டார்.

**அட்லாண்டிக்-சண்டை.**—வஸந்தகாலம் ஏறஏற இந்தக் கடல் யுத்தமும் வலுத்துக்கொண்டு வருகிறது. எதிரி தன் கப்பற்படையை பலிகொடுக்கிறான். எப்படியாவது வெற்றிபெற நினைத்து தனக்கிருக்கும் நாசகாரி முதலான கப்பல்களை அனுப்பி, அமெரிக்காவிலிருந்து வரும் சாமான்களைத் தடுக்கப்பார்க்கிறான். பகல் நேரம் அதிகப்படப்பட, நீர் மேல் போகும் கப்பல்களை அதிகமாக உபயோகப்படுத்துகிறான்.

சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று டாட்டன்ஹாமென்ற ஊரில், கப்பல்படை தலைவர் மிஸ்டர் எ. வி. அலெக்ஸாண்டர், பின் வருமாறு இப்பொழுது நடக்கும் கடல் யுத்தத்தைப் பற்றி எடுத்துக்காட்டினார்:—

"அட்லாண்டிக் சண்டை கடும்போராகும்: அதிக நஷ்டமேற்படக்கூடியதுதான். இரவும், பகலுமாக, இடைவிடாது நாம் யுத்தத்தை நடத்தி வருகிறோம்.

'இதில் தோல்வியும், ஜயமும் மாறிமாறி வரும். ஆனால் நீர்மூழ்கிகளையும், தூரம் செல்லும் விமானங்களையும் கொண்டு, ஜெர்மானியர் தமக்குத் தோன்றியவாறு சேதம் செய்துவிட முடியாது. எதிரியின் நீர்மூழ்கிகளையும், விமானங்களையும் நாம் நாசம் செய்துவருகிறோம் மேலும் நம்முடைய கப்பற்படையும், விமானங்களும் சேர்ந்து போர்புரிந்து, நமது நாசகாரிகளும் பலப்படுத்தப்பட்டு, எதிரிக்கு அதிக நஷ்டத்தை உண்டாக்கி, முடிவில் அட்லாண்டிக் யுத்தத்தில் வெற்றியையும் பெறுவோம்."

வியாபாரக் கப்பல்களைத் துணைகூட்டிச் செல்லுவதற்குப் பதிலாக 50 நாசகாரிகளை லாப்ரடாரிலிருந்து பிரிடன் வரையில் நிறுத்தி, நாள் ஒன்றுக்கு 10 முறை வீதம் ஒவ்வொரு நாசகாரியும் 50 மைல் விஸ்தீரணத்துக்குப் பாராக்கொடுத்து அட்லாண்டிக்கில் பாதையொன்றை யேற்படுத்திவிடலாமென்று யோசனை சொல்லப்படுகிறது.

பாதுகாப்புக்காக எயரிலிருக்கும் துறைமுகங்களை விட்டுக்கொடுக்க எயரி அரசாங்கம் மறுத்துவிட்டது. இதனால் உணவுப் பஞ்சமேற்பட்டாலும், ஸ்வதந்திரத்தை விடக்கூடாதென்று சொல்லிக்கொள்ளுகிறது.

**விமானப்போர்.**—இந்தவாரத்தில், பிரமன், ப்ரெஸ்ட், ஹெலிகோலாண்ட், பொர்க் என்ற எதிரி ஸ்தலங்கள் எதிர்க்கப்பட்டன. அட்லாண்டிக் போருக்காக பிரமனில் கப்பல் கட்டிக்கொண்டிருக்கும் வேலை இதனால் தடைபட்டது. வியாழக்கிழமையன்று பெர்லின் நகரத்துக்குப் புதிதாய் கட்டப்பட்டிருக்கும் நாலு இன்ஜின்கொண்ட 'ஸ்டர்லிங்' விமானங்கள் சென்று புதிதாய் செய்யப்பட்டுள்ள பெரிய வெடிகளை வீசின. நகரின் மத்தியபாகம் தீப்பிடித்தெரிந்தது. அதிக நஷ்டமென்று ஜெர்மானியரே ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

இந்த வாரத்தில் லண்டனும், பிளிமௌத்தும் இருமுறை தாக்கப்பட்டன. புதன்கிழமை நடந்த எதிர்ப்பில, லண்டன் மேற்குபாகமும், சில ஆலயங்களும், ஆஸ்பத்திரிகளும், கடைகளும், கிட்டங்கிகளும் சேதமாயின. ஸென்ட்பால் ஆலயத்தின் வடபாகம் இடிந்துபோயிற்று. ஸிடி டெம்பிள், கை-ஆஸ்பத்திரி, செல்ஸீ ஆலயமும், ஆஸ்பத்திரியும் பழுதுபட்டன.

**ஜப்பான்.**—ருஷ்யாவோடு ஒப்பந்தம் செய்துகொண்டதிலிருந்து தென் சைனாவில் ஜப்பானிய ஆக்கிரமம் அதிகப்பட்டுவருகிறது. சைனாவுக்குக் கடல் வழியும், தரைவழியும் வரும் சாமான்களைத் தடுக்க உடன்படிக்கை துறைமுகப் பட்டணங்களாகிய வென்சோ, பூசோ நிங்போ வென்றவிடங்களைப் பிடித்துக் கொண்டு, பர்மா-ரஸ்தாவில், குங்குவோ என்ற இடத்திலிருக்கும் தொங்கு பாலத்தை தகர்த்திருக்கிறார்கள்.

**பிரான்ஸ்.**—ஏற்கனவே செய்துகொண்ட ஒப்பந்தத்துக்கு அதிகமாக டார்லான் ஜெர்மனிக்கு உதவி செய்துகொண்டிருக்கிறார். ஏராளமான சாமான்கள் விஷியைச் சேர்ந்த ஊர்களிலிருந்து ஜெர்மனிக்குப் போகின்றன. வழக்கம் போல் சந்தேகப்பட்ட கப்பல்களை சோதனை போட்டுக்கொண்டிருந்தபோது ஆல்ஜீரிய கரை-பீரங்கிகளை சுடச்சொன்னது டார்லான்தான்.

சர்வ தேச சபையிலிருந்து பிரான்ஸ் இப்பொழுது விலகிவிட்டது. இதெல்லாம் ஜெர்மனியின் நிர்பந்தம்தான்.

விஷியின் கோட்டைவாசலில் சிப்பாய்களும், தெருக்களில் பீரங்கிகளும் வைக்கப்பட்டு, பிடேனுக்கு விரோதமும், லவாலுக்கு வேண்டியவும், நாஸி சார்பாகவுமுள்ள ராஸம்ப்பிள்மெண்ட்—நாஷனல்-பாபுலேரென்ற கக்ஷிக்காரர்கள் அடக்கப்பட்டுவருகிறார்கள்.



**சில்லரைச் செய்திகள்.**—(1) பாதைகளைக் காப்பாற்றுவதற்காக, இந்தியர்கள் அதிகமாயடங்கிய பிரிடிஷ் படையொன்று பாஸ்ராவில் 17-18-ல் இறக்கப்பட்டது. 1930, ஜூன் 30-வது ஒப்பந்தப்படி இராக்கானது, விமான நிலயங்கள், ரயில்பாதை, துறைமுகம் முதலிய உதவிகளைக்கொடுக்க கடமைப்பட்டது. ஜெர்மானியர்கள் இராக்கில் சூழ்ச்சி செய்யாது தடுத்து, மோஸல் எண்ணெய் நிலயங்களையும், ஸூயஸ்ஸுக்கு அருகாமையிலிருக்கும் ஸ்தலங்களையும் காப்பாற்ற இது சரியான ஏற்பாடாகும்.

2. ஜெர்மன் ஸ்தானிகர் பெர்லினுக்குத் திரும்பியதிலிருந்து, நாஸிகள், துருக்கியோடு, அனுக்கிரம ஒப்பந்தம் செய்துகொள்ளப் போவதாக ஒரு வதந்தி கிளம்பியிருக்கிறது.

3. பெல்ஜியத்துக்கு உணவும், நார்வேயிக்கு தான்யமும், பருத்தியும் கொடுப்பதாக ருஷ்யா ஒப்பந்தங்களைச் செய்துகொண்டிருக்கிறது.

4. இப்பொழுது ஐஸ்லாண்டைக் காப்பாற்றுவதுபோல, இனி கிரீன்லாண்டையும் கனடா காப்பாற்றப் பங்கெடுத்துக்கொள்ளும்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேச தேசங்களில் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 14—4—41. (திங்கட்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | பகலில்.—விமானங்கள், சிறிய யுத்தக் கப்பல்கள் இவைகளோடு கூடிய சாமான் கப்பல்கள்—டச்சு (Dutch)க் கடற்கரை. | ... | ஒரு கப்பல் மூழ்கடிக்கப் பட்டது. |
| | மின்சார உற்பத்தி ஆலை.—ஹார்லெம் (Haarlem). | ... | ...... |
| | மின்சார உற்பத்திச் சாலை, அதைக்காவல் காக்கும் துருப்புகள்.—லேய்டன் (Laeiden). | ... | மின்சார ஆலைக்குச் சேதம். சைனியங்கள் சுடப்பட்டன. |
| | பீரங்கி சுடும் வீரர்கள்.—ஸாண்டி ரூட்டு (Zandyoort)க் கருகில். | 1 விமானம். | சுடப்பட்டார்கள். |
| | இரவில்.—கடற்படை நிலயம், அங்கிருக்கும் இரண்டு ஜெர்மன் கப்பல்கள்.—ப்ரஸ்ட் (Brest). | ... | தகர்க்கப்பட்டன. |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
| --- | --- | --- |

**14—4—41.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி.

பால்கன்ஸ் (Balkans).

| | | |
| --- | --- | --- |
| விரோதி துணைக்காவலுடன் கூடிய சாமான் வண்டிகள்—யானிட்ஸா (Yanitza), டோலிமேய்ஸ் (Ptolemais), கோஸேன் (Kozane), கோர்னி ஜுமாயா (Gorni Dzumaya) பிரதேசங்கள். | ... | விரோதி சைனியத்துக்கும், சாமான்களுக்கும் அதிகச் சேதம். 2 விமானங்கள். |
| விமானச் சண்டை.—வோலோ (Volo) பிரதேசம் டோலிமேய்ஸ் (Ptolemais). | நஷ்டமில்லை. | ...... |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
| --- | --- | --- |
| ராணுவக் கட்டடங்கள், தரையிலிருக்கும் விமானங்கள்.—எல் ஆடம் (El Adem), டெர்ண (Derna), காம்புட் (Gambut). | ... | பெரிய வெடிச்சத்தங்களும், தீயும் கிளம்பின. பல விமானங்கள் சேதமாயின. |
| தரையிலிருக்கும் ஜெர்மன் விமானங்கள் | ... | 3 விமானங்கள். |
| விரோதி மோட்டார் வண்டிகள்—மொனஸ்டிர் (Monastir). | 4 விமானங்கள். | பல மோட்டார் வண்டிகள் நாசமாயின. |
| துறைமுகம், கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli). | ...... | 1 கப்பல் தீக்கிரையாகியது. மற்றும் பல சேதமாயின. |
| விமான நிலயங்கள்.—கிம்மா (Gimma), கோம்போல்ச்சா (Kombolcha). | ...... | 2 விமானங்கள். |

**15—4—41.** (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
| --- | --- | --- |
| பகலில்.—சாமான்கள் ஏற்றப்பட்ட விரோதிக் கப்பல்கள்.—வடமேற்கு பிரான்ஸி (France)ன் கடற்கரை. விரோதிக் கப்பல்.—போர்க்கும் (Borkum) தீவு. | ... | 2 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. இரண்டு குண்டுகள் மேலே வீழ்ந்தன. |
| விமானப் படையெடுப்பு.—இங்கிலீஷ் (English) கால்வாய், வடக்கு பிரான்ஸ் (France). | 2 விமானங்கள். | 3 விமானங்கள். |
| இரவில்.—கப்பல்கட்டும் துறைகள்.—கீல் (Kiel). கப்பல் துறைகள்.—புலாயின் (Boulogne). | 2 விமானங்கள். | ...... |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
| --- | --- | --- |

**15—4—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
| --- | --- | --- |
| சைனியங்கள், மோட்டார் வண்டிகள்.—எல் ஆடம் (El Adem), டொப்ருக் (Tobruk), பார்டியா (Bardia) பிரதேசங்கள். | நஷ்டமில்லை. | பலருக்குக் காயம். பலத்த சேதம். |

பால்கன்ஸ் (Balkans).

| | | |
| --- | --- | --- |
| விரோதியின் போக்குவரத்து சாதனங்கள், சைனியங்கள்.—விரோதி சைனியத்துக்குப் பின்னல். | ...... | தகர்க்கப்பட்டன. |
| ஒத்தாசை.—சாம்ராஜ்ஜிய படைகளுக்கு | ....... | ...... |

**16—4—41.** (புதன்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
| --- | --- | --- |
| பகலில்.—ஹெலிகோலாண்டு (Heligoland) தீவுகள். | ... | சேதம் அதிகம். |
| விமான நிலயம்.—ப்ரெக் (Breck) ... | 1 விமானம். | ...... |
| இரவில்.—கப்பல் துறைகள் ப்ரெஸ்ட் (Brest). | ... | ...... |
| ஜெர்மன் பட்டணங்கள்.—ப்ரமன் (Bremen), ப்ரெஸ்ட் (Brest), வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven), கக்ஸ்ஹாவன் (Cuxhaven), வீஸர்முண்ட் (Wesermunde). | 3 விமானங்கள். | எங்குபார்த்தாலும் அதிகச் சேதம். |

பால்கன்ஸ் (Balkans).

| | | |
| --- | --- | --- |
| கோஸேன் (Kozane), பிடால்ஸ் (Bitolj), டோலிமேய்ஸ் (Ptolemais). | ... | ...... |
| ரயில்பாதை.—கோரினாஸ் (Korinos)க் கருகில். | ... | ...... |
| மோட்டார் வண்டிகள்.—கிட்ராஸ் (Kitros). | ... | ...... |
| ரயில்வே ஸ்டேஷன்.—காடாரிமி (Katarimi)க்கு தென்கிழக்கில். | ... | ...... |
| பல விமான நிலயங்கள் துணைக்காவல் மோட்டார், வண்டிகள்.—ஸலோனிகா (Salonika)வுக்குக் கிழக்கே. | ... | சேதமாயின. |

**16—4—41.** புதன்கிழமை—(தொடர்ச்சி)

## இதாலிய ஆபிரிக்கா (Africa).

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| கடற்படை நிலயம், கப்பல்கள், துறைமுக இயந்திர ஸாதனங்கள்.—ட்ரிபோலி (Tripoli). | ... நஷ்டமில்லை. | பல கப்பல்கள் சேதம். துறைமுகம் நாசமாயிற்று. |
| கவசமணிந்த மோட்டார் துருப்புகள், சைனியங்கள், விமான நிலயங்கள்.—ஸிரினெய்கா (Cyrenaica). | ... | ...... |
| கவசமணிந்த மோட்டார் படை.—கபுஸ்ஸோ(Capuzzo)க்கோட்டை. | ... | பல மோட்டார் வண்டிகள் சேதமாயின. பலருக்குக் காயம். |
| விமான நிலயங்கள்—எல்-கஸாலா (El-Gazala), எல் ஆடம் (El Adem), டெர்ணு (Derna), டெஸ்ஸி (Dessie). | 1 விமானம். | ...... |
| துணைக்காவல் படை.—டெர்ணு (Derna) பிரதேசம். | ...... | ...... |
| விரோதி சைனியங்கள், கூடாரங்கள்.—மதாரா (Madara), ஆல்கி (Alghe) பிரதேசங்கள். | ...... | பலருக்குக் காயம். |

**17—4—41.** (வியாழக்கிழமை).

## ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| பகலில்.-விரோதி வியாபாரக் கப்பல்கள், துறைமுகம், கப்பல் துறைகள்—செர்பார்க் (Cherbourg). | நஷ்டமில்லை. | பலத்த சேதம். பல கப்பல்கள் சேதம். |
| இரவில்.—ஜெர்மனி (Germany)யின் தலைநகரான பெர்லின் (Berlin) பட்டணம். ஹாலந்தி (Holland)ல் ராட்டர்டாம் (Rotterdam) முதலிய பல இடங்கள் கொலோன் (Cologne). பல இடங்கள்.—வடமேற்கு ஜெர்மனி (Germany). | ...... ...... நஷ்டமில்லை. | மிகக் கடுமையான படையெடுப்பு, பல இடங்களில் தீப் பிடித்தது. பலருக்குக்காயம். 2 விமானங்கள். |

## இதாலிய ஆபிரிக்கா (Africa).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| மோட்டார் வண்டிகள், சைனியங்கள், விமான நிலயங்கள், சாமான் கிட்டங்கிகள்—ஸிரினெய்கா (Cyrenaica). தரையிலிருந்தும் விமானங்கள்—டெர்ணு (Derna). | ...... நஷ்டமில்லை. | ...... பலத்த சேதம். பல விமானங்கள் சேதமாயின. |



**17—4—41.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.

## பால்கன்ஸ் (Balkans).

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| போக்குவரத்து சாதனங்கள், சைனியங்கள்—சண்டை நடக்கும் பிரதேசம் முழுவதும். | ...... | தகர்க்கப்பட்டன. |
| வேவுபார்த்தல்.—விரோதி பிரதேசம் முழுவதும். | ...... | ...... |

**18—4—41.** (வெள்ளிக்கிழமை).

## ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| இரண்டு வியாபாரக் கப்பல்கள், துணைக் கப்பல்—ஹெலிகோலாண்டு (Heligo-land)க்குச் சமீபத்தில். | ...... | மூன்றும் தீப்பிடித்து எரிந்துபோயின. |
| 2 கப்பல்கள்.—நார்வே (Norway)க் கடற்கரை. | 8 விமானங்கள். | இரண்டும் மூழ்கடிக்கப்பட்டன. |

## இதாலிய ஆபிரிக்கா (Africa).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| கவசம்மணிந்த மோட்டார், சைனியங்கள்.—ஸிரினெய்கா (Cyrenaica). | ...... | பல வண்டிகள் சேதமாயின. |
| தரையிலிருந்தும் விமானங்கள்.—கோம்போல்சா (Kombolcha). | ...... | 7 விமானங்கள் சேதமாயின. |
| விமான நிலயம்.—ஸியாஸியாம்மன்ணு (Sciasciammanna). | 1 விமானம். | 1. விமானம். |
| கப்பல் துறைகள்.-பென்காஸி (Benghazi). | ...... | 1 கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. |

## பால்கன்ஸ் (Balkans).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| போக்குவரத்து சாதனங்கள், சைனியங்கள், மோட்டார் வண்டிகள்.—எல்லாப் போர் முன்னணிகளிலும். | ...... | தவிடு பொடியாக்கப்பட்டன பலத்த சேதம். |
| படையெடுப்பு.—விரோதி தேசங்கள். | 2 விமானங்கள். | ...... |

**19—4—41.** (சனிக்கிழமை).

## ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| பகலில்.—விரோதிக் கப்பல்கள்—டச்சு (Dutch)க் கடற்கரை. துணைக்காவலில் செல்லும் மற்றும் பல கப்பல்கள்.—வடகடல் (North Sea). | ...... நஷ்டமில்லை. | 5,000 டன் நிறையுள்ள கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. மற்றொன்று சேதமாயிற்று. ...... |
| இரவில்.—படையெடுப்பு—விரோதி நாடுகள். | ...... | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **19—4—41** (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விரோதி சைனியங்கள், மோட்டார் வண்டிகள், கோட்டை கொத்தளங்கள், ராணுவக் கட்டடங்கள்.—டெஸ்ஸி (Dessie)—அலோமாடா (Alomata) பிரதேசம். | ...... | தவிடுபொடியாக்கப்பட்டன. பலத்த சேதம். |
| | மோட்டார் வண்டிகள், எண்ணெய் ஏற்றிச் செல்லும் வண்டிகள்.—டெஸ்ஸி (Dessie)க்கு வடக்கு. | ...... | சேதமாயின; எண்ணெய் வண்டிகள் தீப்பிடித்தெரிந்தன. |
| | மோட்டார் வண்டிகள்.—அக்ரோமா (Acroma), எல் ஆடம் (El Adem), பார்டியா (Bardia). | ...... | பலருக்குக் காயம். |
| | விமான நிலயங்கள்.—டெர்ணு (Derna), பெர்க் (Berck). | ...... | ...... |
| | படையெடுப்பு.—எல் கஸாலா (El Gazala). | ...... | 3 விமானங்கள்; மற்றும் பல சேதமாயின. |
| | கப்பல்கள், கப்பல் துறைகள்.—ட்ரிபோலி (Tripoli). | ...... | குண்டு மாரி பொழிந்தது. |
| | **பால்கன்ஸ் (Balkans).** | | |
| | விரோதி சைனியங்கள் போக்குவரத்து சாதனங்கள்.—வட கிரீஸ் (Greece). | ...... | ...... |
| **20—4—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—கப்பல்கள்—டச்சு (Dutch), நார்வே (Norway) கடற்கரைகள். | நஷ்டமில்லை. | ...... |
| | இரவில்.—கோலோன் (Cologne), டஸ்ஸல்டார்ப் (Dusseldorf), ஆசென் (Aachen). | ...... | பலத்தசேதம். |
| | பல விமான நிலயங்கள்.—ஜெர்மனி (Germany), ஆக்கிரமித்திருக்கும் நாடுகள். | ...... | சேதமாயின. |
| | எண்ணெய்த் தொட்டிகள்.—ராட்டர்டாம் (Rotterdam). | ...... | தீப்பிடித்தன. |
| | கப்பல் துறைகள்.—டன்கர்க் (Dunkirk), ஆஸ்டெண்ட் (Ostend). | ...... | தகர்க்கப்பட்டன. |
| | சிறிய துறைமுகங்கள், கப்பல் துறைகள்.—ப்ரெஸ்ட் (Brest). | நஷ்டமில்லை. | ...... |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **20—4—41.** (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | மோட்டார் வண்டிகள், சைனியக் கூட்டங்கள், விமான நிலயங்கள்.—ஸிரினெய்கா (Cyrenaica). | ...... | பலருக்குக் காயம், பலத்த சேதம். |
| | டெர்ணு.—(Derna), பெங்காஸி (Benghazi), எல்-கஸாலா (El Gazala). | ...... | சேதமாயின. |
| | **பால்கன்ஸ் (Balkans).** | | |
| | விரோதி ஆக்கிரமித்திருக்கும் விமான நிலயங்கள், சைனியங்கள்.—கிரீஸ் (Greece). | ...... | ...... |
| | விமான நிலயம்—காடெரீன் (Katerine). | ...... | பெருந்தீ கிளம்பிற்று. |

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **15—4—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—இங்கிலாந்தி (England)ல் தெற்குக் கடற்கரைப் பட்டணம். சில இடங்கள்.—தென்மேற்கு, வடகிழக்கு இங்கிலாந்து (England). வட அயர்லாந்து (Ireland). | ...... 6 விமானங்கள். | சொற்பச் சேதம். பல ஜனங்கள் கொல்லப்பட்டனர். கட்டடங்கள் இடிந்தன. பலருக்குக் காயம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | ...... | மிகச் சொற்பச் சேதம். |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும் படையெடுப்பால்; விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **15—4—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | பூகம்பத்தால் பீடிக்கப்பட்ட நகரமான.— லாரிஸ்ஸா (Larissa). | 3 விமானங்கள். | பொது ஜனங்கள் கொல்லப்பட்டனர். |
| | ட்ரிக்காலா.—(Trikkala). | ...... | பலருக்குக் காயம். |
| | துறைமுகம்.—பிரேயஸ் (Piraeus). | 8 விமானங்கள் பல நாசமாயின. | சொற்பச் சேதம். |
| **16—4—41.** (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—லண்டன் (London) ஹோம் கவுன்டீஸ் (Home Counties). | ...... | பலத்த படையெடுப்பு. பலருக்குக் காயம். |
| | தேன் இங்கிலாந்தி (England)ல் சில இடங்கள். | ...... 7 விமானங்கள். | ...... சொற்பச் சேதம். |
| | **பால்கன்ஸ் (Balkans).** | | |
| | விமான நிலயம்.—ஹிராக்லயன் (Herak Lion). | 1 விமானம். | சேதமேயில்லே. |
| **17—4—41.** (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—டோவர் (Dover) ஜலசந்தி வடகீழக்கு ஸ்காத்லாந்தி (Scotland)ல். ஒரு பட்டணம். | 2 விமானங்கள். | ...... சேதமேயில்லே. |
| | இரவில்.—வடகிழக்கு இங்கிலாந்து (England). | ...... | ...... |
| | தெற்கு இங்கிலாந்தி (England)ல் ஒரு பிரதேசம். | ...... | ...... |
| | லண்டன் (விமான அபாய எச்சரிக்கை மாத்திரந்தான். | 3விமான்ங்கள் | ...... |
| **18—4—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | விமான நடவடிக்கையே இல்லே | ...... | ...... |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | கிராமங்கள்.—கிரீஸி(Greece)ல் உள்நாட்டில் | ...... | ...... |



| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **19—4—41.** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—லண்டன் (London). | ...... | சொற்பச் சேதம். |
| | இங்கிலாந்தி (England)ல் சிலஇடங்கள். | ...... | பலருக்குக் காயம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா.—(Malta) | ...... | பொதுஜனங்கள் கொல்லப்பட்டனர். |
| **20—4—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—கென்ட் (Kent) கடற்கரை | ...... | ...... |
| | வடகிழக்கு ஸ்காத்லாந்து (Scotland). | ...... | சிலருக்குக் காயம். |
| | இரவில்.-விமான நடவடிக்கையே இல்லே | ...... | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | ...... | சொற்பச் சேதம். |
| | **லிபியா (Libya).** | | |
| | டொப்ருக் (Tobruk). | 1 விமானம். பல நாசமாயின. | ...... |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | தரைப்படைகள், கப்பல்கள்.—கால்கீஸ் (Khalkis). | ...... | 6 விமானங்கள். பல நாசமாயின. |
| | கிரேக்க கிராமங்கள்.—மேலாஸ் (Melos), தெபீஸ் (Thebes), கலமாடா (Kala mata). | ...... | பல விமான்ங்கள் நாசமாயின. |
| **21—4—41.** (திங்கட்கிழமை) | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—தென்கிழக்கு இங்கிலாந்து (England). | ...... | சொற்பச்சேதம். |
| | இரவில்.—ப்ளிமத் (Plymouth), கிழக்கு ஆங்கிலியா (Anglia) வில் சில ஜில்லாக்கள். | ...... | சிலர். கொல்லப் பட்டனர்; சிலருக்குக் காயம். |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | ஆதன்ஸ் (Athens).—கார்ப்பூ (Corfu).— | 7 விமானங்கள். | 22விமாங்கனள். |
| | பல கிராமங்கள்.—கிரீஸ் (Greece). | ...... | ...... |

# யுத்தக் குறிப்புகள்.

## சம்பாவித உணர்ச்சி.

பல போர்க்களங்களுக்குள் எது உயிர் நிலையானது என்பதைப்பற்றி ஜனங்கள் சஞ்சலப்படுவது சகஜம். பால்கன் நாடுகளிலுள்ள சாம்ராஜ்ஜியத் துருப்புகளை பலப்படுத்த நீல நதி சைனியத்திலிருந்து நான் துருப்புகளைக் கொண்டுவந்ததால் போரை இழந்து விட்டோமா? ஜெர்மனிக்கு பின்புறம் நடைபெறும் இந்த யுத்தத்தை பெரிய விஷயமாகக் கருதி அதிலொரு பெரிய வெற்றி பெறப்போகிறோமா? தோல்வியடையப்போவது பிரிடனாய் இருந்தாலும் சரி, ஹிட்லராய் இருந்தாலும் சரி, எந்த இடத்தில் தப்பமுடியாத-அடிவிழப்போகிறது? அட்லாண்டிக் யுத்தத்திலா, அல்லது சாமான்கள் விளைவிக்கப்படும் நிலயங்களைத் தாக்கவேண்டி நடக்கும் வெடிகுண்டு சண்டைகளிலா? ஏனென்றால், இது லண்டனுக்கும் பெர்லினுக்கும் நடக்கும் போரா; இல்லை, பிரிடனுக்கும் ஜெர்மனிக்கும் நடக்கும்போர் என்றுவது சொல்லலாமா? உண்மையில் தளகர்த்தர் புல்லர் (Major General Fuller). சொல்லுகிறபடி சமுத்திர பலம்கொண்ட தேசங்களுக்கும் ஐரோப்பிய கண்டத்தில் உள்ள தேசங்களுக்கும் நடக்கும் சண்டையல்லவா? உலகத்தில் கால்பாகம் அளாவி, அமெரிக்காவின் பொருளாதாரச் சகாயமும் ஆதரவும் அடைந்த பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்திற்கும்; விஸ்லோ நதிக்கு மேற்கில் ஐரோப்பாவில் முக்கால் பாகம் வியாபித்து ருஷ்யா, ஜப்பான் இவர்களின் ஆதரவும் பொருளாதார உதவியும் அடைந்த ஜெர்மனிக்கும் நடக்கும் சண்டை.

* * * * *

இதற்கனுபந்தமாக தளகர்த்தர் புல்லர் ஒரு கணக்குப் போட்டிருக்கிறார். உலகத்தின் சமுத்திர பலத்தின் 6-ல் 5 பாகம் ஒரு பக்கம் சேர்ந்திருக்கிறது; தரை பலத்தில் 6-ல் 5 பாகம் மற்றொரு தரப்பில் சேர்ந்திருக்கிறது. இதை வைத்துப் பார்த்தோமானால் நமக்கு எட்டும்செய்திகள் கேவலம் சாமான்ய சம்பவங்கள்—அவைகளும் சமீபத்தில் முடிவடைவதாகவில்லை.

## சரியான வேலை.

மேலே கண்டதை வாசித்து, அங்கங்குள்ள போர்க்களங்களைப்பற்றி அவ்வளவு முக்கியமில்லை என்று சொல்லலாம், ஆனால் என்னைப்பற்றி என்னவென்று கேட்கக்கூடிய மனிதன் ஒருவர் இருக்கிறார். அவர்தான் தளகர்த்தர் வேவல் (General Wavell). நெபோலியனுக்குப் பிறகு இவ்வளவு பெரியதும் பலவகைப் பட்டதுமான ராணுவ அதிகாரம் இவரைத் தவிர வேறுயாருக்காவது கிட்டியிருக்கிறதா. அவர் செய்யும் வேலையைப் பாருங்கள்.

(1) கிரீஸிலும் பால்கன்களிலும் உள்ள பிரிடிஷ் துருப்புகள், சாம்ராஜ்ஜியத் துருப்புகள் இவைகளுக்கெல்லாம் தலைமை வகிக்கிறார்.

(2) அதே மாதிரி லிபியா, எகிப்து, ஸூடான், கெனியா, எரீட்ரியா, அபிஸீனியா, சோமாலி நாடுகள் என்ற பிரதேசங்களிலும் தலைமை வகிக்கிறார்.



(3) அதே மாதிரியாக சோமாலி நாட்டிலிருந்து ஸிஸிலி வரையுள்ள எட்டு போர்முனைகளிலும் நடைபெறும் பிரிடிஷ் விமான வேலைகளையும் மேல் பார்க்கிறார்.

(4) அதே மாதிரியாக கிழக்கு மத்தியதரைக் கடலிலும் செங்கடலிலும் நடைபெறும் வேலைகளை மேல் பார்க்கிறார்.

## பிரகாசமான வெளிச்சம்.

அமெரிக்காவிலுள்ள பத்திரிகை நிருபர்களுக்கிருக்கும் சௌகரியங்களைப் பற்றி சமீபத்தில் பிரஸ்தாபித்தோம். இவ்வித சௌகரியங்கள் இவர்களுக்கு மட்டுமில்லையென்று அடியில் வருவதைப் பார்க்கத் தெரிகிறது. இதாலிய கைதிகளைப் பற்றிய செய்திகள் சேகரிக்கும் நிருபர்கள் "நியூ டைம்ஸ் அண்டு இதியோபியா நியூஸ்" என்ற பத்திரிகைக்கு இந்த ரஸமான விஷயத்தை அனுப்பி இருக்கிறார்கள்.

## "தலைவலியிலிருந்து அரசன்"

"ரோமில் நம்பிக்கையான அரண்மனை வட்டாரங்களிலிருந்து அடியில்கண்ட விஷயம் வெளிவருகிறது.

"வெகு காலமாக சமாதானத்தையே கொள்கையாகக் கொண்டிருந்து கடைசியாக ஜெர்மனியுடன் சண்டையென்று பிரிடன் சொல்லவே ஹிட்லர் பயந்து போனான். அன்று சாயங்காலமே பிரிடனுடன் சண்டைக்குப் போகும்படி முஸோலினியைச் சொன்னான். மறுநாள் அதிகாலையில் சண்டைக்குப்போக அரசனின் கையெழுத்துவாங்க முஸோலினி இதாலிய அரசனிடம் சென்றான். தீர்மானம் செய்ய அரசன் கொஞ்சம் சாவகாசம் கேட்டார். அரசன் தளகர்த்தர் படோக்ளியோவை யோசனை கேட்டார்; அவர் பிரிடனுடன் சண்டைக்குப் போவது மதியீனம் என்றார்.

"இதாலிய சைனியம் எந்த விதங்களில் பலமற்றது என்பது படோக்ளியோவிற்குத் தெரியும். முஸோலினிக்கு இணங்கக்கூடாது என்று அரசனுக்கு நிரூபித்தார்.

"முஸோலினி மத்தியானம் திரும்பி வந்தார்; அரசன் சண்டைக்குப்போக முடியாதென்று அழுத்தமாய்ச் சொன்னார். சுமார் ½ மணி நேரம் தர்க்கம் நடந்தது; வந்துவிட்டது கோபம் முஸோலினிக்கு, பட்டத்திலிருந்து விலகும்படி அரசனைச் சொன்னார். அரசன் மறுத்தால் கருஞ் சட்டைக்காரர்களைக் கொண்டு அரசனைத் தாக்குவேனென்றார்.

"அரசன் அரைமனதாய் இருந்தார்; படோக்ளியோ இதைப் பார்த்து, தன் கைத் துப்பாக்கியை எடுத்து முஸோலினிக்கு முன் நீட்டி, "வெளியே போ; இல்லாமல் போனால் உன்னைக் கொன்றுவிடுவேன்" என்றார்.

"முஸோலினி பயங்காளி. பதில் பேசாமல் வெளியே சென்றான். ராஜாங்கம் தப்பித்தது. இதாலிக்கு அரசனாகி தேசத்தை தன்னரசு நாடாய் ஆளலாம் என்ற முஸோலினியின் யோசனை பலிக்கவில்லை.

“இந்த சம்பவம் உயர்ந்த ராணுவ அதிகாரிகளுக்குத் தெரிந்த விஷயமானபடியால், தன்னிலும் அரசனிடம் பக்தி சிரத்தை ஜாஸ்தி கொண்ட தளகர்த்தர்கள் சேர்ந்து அரசன் பட்டத்திலிருந்து விலகவேண்டியதுபோக தன்னையே விரட்டி விடுவார்களோவென்று பயந்தான் முஸோலினி.

“முஸோலினியை விரட்டிவிடுகிறதென்றயோசனையானது பேச்சளவிற்தானு அல்லது அதற்கு ஏற்பாடுகளும் நடந்தனவாவென்பது ஒரு வேளை ரகசியமாகவே என்றைக்குமேயிருக்கலாம். மாண்டவர்கள் பேசார்கள்.

“தளகர்த்தர் பால்போ (Marshal Balbo) துர் அதிர்ஷ்டத்தால் அகஸ்மாத்தாக இறந்தார்; சமீபத்தில் இரண்டு இதாலிய தளகர்த்தர்கள் அக்வீ (Acqui)க்கு சமீபம் “அகஸ்மாத்தாக” இறந்தார்கள். படோக்லியோ (Badoglio) வேலையை விட்டுத் தள்ளப்பட்டார். ஏதேனும் ஒருநாள் அவர் கடப்பைச் சொல்ல மாட்டாரா.”

## நிஜப் பண்டம்.

விரோதியின் மின்னல் எதிர்ப்பைப் பற்றி நேருடி பார்த்தவரும் லண்டன் நெருப்பணைக்கும் இலாகாவைச் சேர்ந்தவருமான ஒரு ஸ்திரீ எழுதிய சில விவரங்களை சென்ற ஜனவரி மாதம் பிரசுரித்தோம். அதிலுள்ள ஒரு வேகமும் சிறு சிலுப்பும் மனதைக் கவர்ந்தது. விமானத் தபால் மூலம் கிடைத்திருக்கும் செய்தி மேற்கொண்டும் இங்கு குறிப்பிடுகிறோம். கடிதமும் “கென்ஸிங்டன் நெருப்பு நிலயம்” என்ற இடத்திலிருந்து எழுதப்பட்டிருக்கிறது.

“சமீபத்தில் கொஞ்சகாலமாக லண்டனில் மின்னல் எதிர்ப்புகள் குறைந்திருக்கின்றன. கடைசியாக நம்மை ரொம்ப பாடுபடுத்திய எதிர்ப்பு 11ஆ சனிக்கிழமை நடந்தது. அதனால் கென்ஸிங்டனில் அக்னிவாதை ஏற்பட்டது. எரிபட்ட பல இடங்களில், அழகான வர்ணமிட்ட நாற்காலி, மேஜை வகையறா செய்யும் வியாபாரிகளான ரோலி (Rowley) கடை ஒன்று. ம—வீட்டு நாற்காலி, மேஜைகளை அவர்கள் புதுப்பித்தார்கள்.

லண்டனில் இடிந்துபோன பல கட்டடங்களை முழுதும் இடித்துத் தள்ளுகிறார்கள்; பாழடைந்த கட்டடங்களாக வைத்திருப்பதைக் காட்டிலும் காலி ஸ்தலமாக வைப்பது பார்க்க நன்றாயிருக்கும். பிக்காடில்லி (Piccadilly)யிலுள்ள ‘கிளப்புகள்’ மிகவும் சேதமாயின. “உள்ளும் புறமும்” என்ற ‘கிளப்’பிற்கு வெகு சேதம்; அப்படியே தான் பிக்காடில்லியில் 96-ம் நம்பர் ரிட்ஜ் (Ritz) ஹோட்டல் உள்பட பிக்காடில்லியில் எல்லாக்கட்டடங்களின் ஜன்னல்களெல்லாம் உடைபட்டுப்போயின. கிரீன் பார்க் (Green Park) ஸ்டேஷனுக்கு சமீபமுள்ள கக்கூஸ்கள் ஒரு தரம் குண்டுகளால் இடிக்கப்பட்டு ரிபேர் செய்யப்பட்டிருந்ததில் மறுமுறை தாக்கப்பட்டன. ஸர்க்கார் அறிக்கைகளில் சென்றவாரம் பிரஸ்தாபிக்கப்பட்ட தரைக்கடியிற்செல்லும் ரயில்வே ஸ்டேஷனானது பாங்க் (Bank) ஸ்டேஷன். அங்குள்ள சிப்பந்தி ஒருவர் என்னிடம் சொன்னார், 185-பேர் கொல்லப்பட்டார்களென்று. இதை நான் அம்மாவிடம் சொல்லவில்லை.



பல பேர்களைப்பற்றி கேட்கிறீர்கள். மில்போர்ட் (Milford) அத்தைமார் மில்போர்டிலேயே இருக்கிறார்கள். அவர்கள் தார்சை கெட்டிப்படுத்தினார்கள்; சிலகாலம் கீழே தூங்கினார்கள்; ஆனால் இப்போ வழக்கம்போல் மாடியில் தூங்குகிறார்கள். எல்லோரையும் போலவே சமயத்திற்கேற்றவாறு நடந்து கொள்ளுகிறார்கள். நவம்பர் மாதம் நான் மெய்டன் ஹெட் (Maiden head) போய் வந்ததிலிருந்து 43-ம் நம்பர் வீட்டின் மேல் மாடியில் என் அறையில்தான் நான் ஊரிலிருந்த நாளில் ஒரு இரவுபோக மற்ற நாள் இரவெல்லாம் தூங்கினேன். நான் லீவிலிருந்த இரவுகளிலெல்லாம் நான் வீடு திரும்பி வருமுன் விமான தாக்கல்கள் முடிந்து விட்டன. மும்முரமான தாக்கல்களின்போது நான் நெருப்பு நிலயத்தில் என் ஸ்தானத்தில் இருந்தேன்.

Mrs. ம. (Mrs. M.) இடமிருந்து அம்மாவுக்கு வந்த கடிதத்திற்கு நகல் உனக்கு அனுப்பியிருக்கிறாள். பெக்கன்ஹாமிலிருந்து (Beckenham) ஏன் இடம் மாற்றினாள் என்று எனக்குப் புரியவில்லை. விமானச் சண்டையெல்லாம் தென் கிழக்கு லண்டனில் நடக்கின்றன; ம—வீட்டார் பிரதி ராத்திரியும் தரைக்கடியில் சுரங்கங்களில் உறங்குகிறார்கள்.

சிங்கத்திற்கு இறக்கை உண்டு என்ற படம் பார்த்தீர்களா? இந்தியாவிற்கு வந்திருக்குமென்று எண்ணுகிறேன். லெஸ்லி (Leslie) ஒரு தேசப் படத்தை மேஜைமேல் வைத்துக்கொண்டு விரோதிகள் விமானங்கள் போக்கு வரத்து மார்க்கத்தை கவனிப்பவர்களில் ஒருவன். இது சம்பந்தமான அணியில் அவனுக்கு வேலை; வேலைவெகு ரசமாகவிருக்கிறதாம். தன் சாதாரண வேலையுடன் வாரத்தில் இரண்டு பகலும் இரண்டு இரவும் இந்த வேலை பார்க்கிறான். சாயங்காலம் ‘மாட்டினி’ (Matinee)க்காக மட்டும் சில நாடகசாலைகளிருக்கின்றன; ‘சினிமா’ ஏராளம்; ஆனால் மேற்கு லண்டனில் எல்லாம் 7 மணிக்குள் மூடப்பட வேண்டும்; ஆகையால் எல்லாம் காலை 7 மணிக்கு துவக்குகிறார்கள். அப்போது குறைந்த விலைக்கு இடம் கிடையாது.

என்னுடைய கொளும்பு கிஜார் பழையதாகி வருகிறதென்பதைப் பார்க்க சங்கடமாகவிருக்கிறது. மறுபடியும் எனக்கு அம்மாதிரி கிஜார் எப்போ கிடைக்குமென்பது தெய்வத்திற்குத்தான் தெரியும். சாதாரண சாமான்கள் வாங்குவதுகூட சிரமசாத்தியமாக விருந்தது, சுத்தம் செய்துகொள்ளவும் முகத்திற்குப் போடவும் வேண்டிய சாமான்கள் கடைகளில் இருக்கின்றனவா என்று மாதம் முதல் தேதியிலேயே கவனிக்கவேண்டியதாக இருக்கிறது. ‘லரோலா’ “ஐஸில்மா” பொடி ஒன்றுமே கென்ஸிங்டன் முக்கிய தெரு கடையொன்றிலுமே இப்போது கிடையாது. “லிடியா”வில் Miss எஸ்-ஐ பார்க்கச் சென்றேன். ஜன்னல் உடையாத கடை அந்த வீதியில் அது ஒன்றுதான். அவர்களுக்கு ரொம்ப சிரமந்தான்; ஆனால் எங்கேயுமே வியாபாரம் அப்படித்தான். ‘ஹார்ட்நல்’ (Hartnells) அல்லது அவர்கள்போல் பிரெஞ்சு பெயர்களுள்ள பெரிய வியாபாரிகள் அமெரிக்காவிற்கு ஏராளமாக சாமான்கள் அனுப்புகிறார்களாம். கவர்ன்மெண்ட் அவர்களுக்கு வேண்டிய சகாயம் செய்கிறார்கள். ஏனென்றால்

பிரான்ஸும் சாதாரணமாகச் செய்துவந்த வியாபாரத்தை தாங்கள் அடைந்து அமெரிக்கப்பணம் கூடுமானவரை சம்பாதிக்க வேணுமென்பதால் அப்படிச் செய்கிறார்கள். ஒரு கப்பல்கூட நாம் இழக்கவில்லை.

நான் சாதாரண சகவாசத்திற்கே லாயக்கில்லாமல் மாறி வருகிறேன்; விசித்திரமான வழக்க மானங்கள் வெகு சுலபமாக பழக்கமாகி விடுகின்றன; கத்தியாலும் குத்துக்கரண்டியாலும் மாறிமாறி சாப்பிடாமல் நான் கவனமாகவிருக்க வேண்டியிருக்கிறது. சாப்பாட்டு நேரத்தில் விசித்திர வழக்கங்கள் வராமல் பார்த்துக்கொள்ளவேண்டியிருக்கிறது; நான் சபதப்பேச்சு முறை மீறி பேசுகிறேன். நாகரீகமுள்ளவர் பேசாதவிதம் பேச ஆரம்பிக்கிறேன். படியாதவர் போல் உளரியும், இலக்கணம் பிசகாகவும் பேசுகிறேன். ஆகையால் வெகு நாள் கிரமித்து நான் பேசும் விதத்தைக் கண்டு பிரமிக்காதீர்கள். சில அருமை சிநேகிதர்கள் கிடைத்திருக்கிறார்கள். என் அனுபவங்களைக்கண்டு எனக்கு புஸ்தகம் எழுதவேணும் போலிருக்கிறது. என்னை "ஜோ" "ஜோலைபன்" என்றும், "கண்ணே" "முத்தே" "கற்கண்டே" என்றும் பாங்காரர், வியாபாரக் கப்பல் மாலுமிகள், யுத்தக் கப்பலில் வேலைபார்த்து விலகிய சிப்பந்திகள் என்னை அழைப்பார்களென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. இது சொல்லி சாத்தியப் படாத விந்தை!

கிரிஸ்மஸ் பண்டிகை வெகு ரசம். விமான தாக்கல்களாவது அக்னி வாதையாவது அவ்வளவாக இல்லை, கிரிஸ்மஸ் அன்றைக்கும் மல்யுத்த தினத்தன்றும் சரியானவிருந்து; இரண்டு நாள் ராத்திரியும் கொண்டாட்டம். கிரிஸ்மஸ் இரவு கிராமபோன் இசைக்கு நடனம் செய்தோம். மறு நாள் இரவு பட்டாளத்திலிருந்து 'பியானோ'வும் மிருதங்கமும் வாசிக்க ஆள் வந்தது. விமானியொருவன் ஆட்டத்தொழில்காரன்; ஆகையால் நன்றாகவே ஆடினான்; நெருப்பு அணைக்கும் ஆள்கள் பலரும் அப்படியே. வெகு தமாஷ்; முக்கியமாக மல்யுத்த வேடிக்கை இரவு; போலீஸ்காரர் வகையரா பேர்வழிகள் பலர் நெருப்பு நிலயத்தில் வேடிக்கையென்று இரவு முழுதும் வந்து கொண்டேயிருந்தார்கள். வருஷப் பிறப்பிற்கு முதல் நாள் இரவும் விமான தாக்கல் இல்லாதபடியால் திடீரென்று ஒரு ஆட்டம் காலை 2 மணி வரை நடத்தினோம். என் குழந்தைப் பருவத்திற்குப் பின் இவ்வளவு தமாஷான கிரிஸ்மஸ் நான் அனுபவித்ததில்லை. உணவுப் பொருளில் குறை விருப்பதாகத் தெரியாது. இரண்டு நாளும் வான்கோழி உண்டு. எல்லோருக்கும் ஆளுக்கு ஒரு பீர் பாட்டில் உண்டு. இங்கு வந்த பின் வழக்கமாக பீர் சாப்பிட ஆரம்பித்து விட்டேன். என் கனம் இப்போது 167 பவுண்டு; அதாவது ஜூலை மாதத்திற்கு பின் 11 பவுண்டு ஜாஸ்தி!

இந்தக் குறிப்புகள் எழுதுகிறவர் சென்ற இரண்டு வாரத்துக்கு முந்திய பதிப்பில் கொஞ்சம் வேடிக்கையாக ஒரு துணுக்கு எழுதப் பிரயத்தனப்பட்டார். அந்த வேடிக்கை துணுக்கும் சரளமாக வில்லாமல் கனத்திருந்தது. எழுதினவர் எதிர்பாராதபடி சிலரைப் புண்படுத்தியதாக தெரியவருகிறது. சரியான வேடிக்கைப் பேச்சானது கனமாகவும் இராது, பிறரையும் புண்படுத்தாது;



ஆதலால், அதை எழுதியவர் தான் தாக்கிய காலேஜ் பத்திரிகை பத்திராதிபரையும், இன்னும் அவமதிக்கப்பட்டதாக நினைத்த எல்லோரையும் மன்னிப்பு கேட்டுக் கொள்ளுகிறார்.

[இந்தத் தவறுதல் எழுதியவர் ஒரு சமாதானம் சொல்ல விரும்புகிறார். அவர் ஒரு பழமொழியை உதாரணமாய்ச் சொன்னார். பழமொழியின் முக்யமான பாகமென்னவென்றால், அது உதாரணமாகச் சொல்லுவதே ஒழிய, சொல்லுக்குச்சொல் பொருள்படுத்தக் கூடியதல்ல. நிச்சயமாய் பிரகிருதம் பிரயோகித்திருக்கும் பழமொழியானது சொல்லுக்குச்சொல் வியாக்யானப் படுத்தும் எண்ணத்தோடு பிரயோகிக்கவில்லை. ப.]

---

# இங்கிலாந்திலுள்ள "பிக் பென்" என்று சொல்லும் மணியின் த்வனி.

---

சரித்திரப்போக்குத் திரும்பித்திரும்பி ஒரேமாதிரியாகத்தான் நடைபெறுகிறது என்று ஒரு பழமொழி உண்டு. 1914-ம் வருஷம் கெய்ஸர் தலைமையின் கீழ் இருந்த ஜெர்மானியர்கள், ஆபத்துக்காலத்தில் பிரிடனுடைய சாம்ராஜ்ஜிய நாடுகள் தாய் நாடாகிய பிரிடனைக் கைவிட்டு விடுமென்று தப்பு அபிப்பிராயம் கொண்டார்கள். இப்பொழுது ஹிட்லர் ஆதீனத்திலிருக்கும் ஜெர்மனியும் அதே விதமாக தப்பு அபிப்பிராயத்துடனிருக்கிறது. இதைத்தவிர ஐக்கிய அமெரிக்க நாடுகளில் சுதந்திரத்தைக் கைப்பிடிக்கவேண்டிய ஆசை ஜனங்களுக்கு எவ்வளவு யிருக்கிறதென்பதை ஜெர்மானியர்கள் அறிந்துகொள்ளக்கூடவில்லை. இன்றைய சொற்பொழிவில் தாமஸ் உட்ராப் என்பவர் ஜெர்மானியர்கள் முற்றிலும் தப்பான அபிப்பிராயம்கொண்டவர்களென்று, மறுபடியும் நிரூபிக்கப்படுமென்றும் அறிவிக்கிறார்.

சில நாட்களுக்குமுன் சாம்ராஜ்ஜியத்தின் ஹிருதயம்போன்ற லண்டனிலுள்ள ஒரு ரஸ்தாவில் ஒயிட் ஹாலிலிருந்துவந்து நான் உலாவிக்கொண்டு சென்றேன். வானத்தில் ஒரு பூர்ண சந்திரன் உலாவிற்று. நகர முழுவதும் பகல்மாதிரி பிரகாசமாயிருந்தது. கப்பல் இலாகா ஆபீஸுக்கு முன்னுள்ள தூண்களின் காக்ஷியும், யுத்த ஆபீஸின் நெருக்கடியும், விசாலமும், பர இலாகா ஆபீஸின் அழகான அமைப்பும், எல்லாம் அந்த நிலவில் பிரகாசித்துக்கொண்டு, பகலில் காணப்படாத வண்ணம் கம்பீரமாகவும், அழகாகவும் விளங்கின. அந்த நிலவில் கட்டடங்களின் வேறுபாடுகளும், அமைப்பின் வேறுபாடுகளும் புலப்படவில்லை. ஒரே ஒரு சிற்ப சாஸ்திரி அந்தத் தெருவிலுள்ள கட்டடங்களையெல்லாம் ஒரேமாதிரியாக அமைத்துக் கட்டிவிட்டானோ என்று சொல்லக்கூடியதாயிருந்தது. தெருக்களில் விளக்குகளில்லை, பலமா

கத் திரைகள் போட்டு, மூடப்பட்ட வீடுகளின் ஜன்னல்களின் துவாரங்கள் வழியாகக்கூட வெளிச்சம் வரவில்லை. நான் வெஸ்ட்மினிஸ்டரின் கோபுரங்களின் வழியாக பிக் பென் வைத்திருக்கும் கோபுரத்தை நோக்கினேன். அலைகள் தேம்ஸ் நதிக்கரையில் அந்த நிலவில் சிப்பாய்கள்போல் தெளிவாக நின்றுகொண்டிருக்கின்றன. அச்சமயம் ஜனங்கள் நடமாட்டமில்லை. ஒவ்வொரு சமயம் இரண்டு மினுமினுப் பூச்சிகள் வருவதுபோல் ஒரு மோட்டார் வேகமாகவந்து ட்ரபால்கர் முகத்தில் மறைந்துவிடும். எல்லாம் நிச்சப்தமாகவும், பயங்கரமாகவுமிருந்தன. திடீரென்று பிக்பென் என்னும் கடிகாரம் கால் மணி அடித்தது. அந்த வலுவான மணிச் சத்தம் கிளம்பி எதிரொலியுடன் சப்தமில்லாத நகரத்தில் பரவியது. தூரத்தில் எச்சரிக்கை சங்கங்கள் கோஷித்தன. 'ஆகாச வீதியில் ஜெர்மன் விமானங்கள் ஆரவாரம் செய்தன. சங்கங்களின் சப்தத்துக்கும், விமானங்களின் ஆரவாரத்திற்கும் மேலாக, அவசரமன்னியிலும், சாவதானமாகவும் பிக்பென் மணி அடித்தது. அந்த சப்தத்தைப் பார்த்தால், லண்டன் நகரம் ரொம்பவும் தைரியத்துடனும், தீரமான மனதுடனுமிருப்பதாக வெளியாயிற்று.

நான் வெஸ்ட்மினிஸ்டரை நோக்கிச் சென்றபொழுது ஒலிபரப்பு மூலமாக சாம்ராஜ்ஜியத்திற்கு இந்த பிக்பென் என்ன செய்தியை விடுவிக்கிறதென்று ஆலோசித்தேன். தேம்ஸ் நதிக்கரையில் உன்னதமாயும், யுத்த வீரர்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் சிலைகளுக்கு மேலிருக்கும் சாம்பல் வர்ணமுள்ள வெஸ்ட்மினிஸ்டர் ஆபேயின் ஒரு பக்கத்தில் நின்றுகொண்டு ஹிருதயத்திலிருந்து பரவுவதுபோல் அதன் சப்தமானது வெகுதூரம் வரையில் உலகம் முழுவதும் பரவியது. மனோவேகம் போல் உலகம் பூராவும் அது எதிரொலி அடித்தது. அந்த கம்பீரமான சப்தமானது நியூஸீலாந்திலும், தென் ஆப்ரிக்காவிலுமுள்ள உன்னதமான இடங்களிலும், நகரங்களிலும், ஆஸ்திரேலியாவிலுள்ள ஆடுகள் கிடைகளிலும், பீர்த்திலிருந்து டார்வின் பொட்டலிலும், கனடாவிலுள்ள ப்ரெயிரீஸ் பிரதேசத்திலும், ராக்கீஸ் மலைகள் வழியாகச் சென்று பிரிடிஷ் கொலம்பியாவிலுள்ள வாசஸ்தலங்களிலும் பரவிற்று. வர்த்தகக் காத்துகள் அடித்துக்கொண்டும், பேரிச்சமரங்கள் ஏராளமாயுள்ள தனிப்பட்ட தீவுகளிலும், கன்யாகுமாரி முதல் ஹிந்து குஷ் மலைகளுக்கு நடுவேயிருக்கும் இந்தியாவின் மகாஜனங்களின் மத்தியிலும், கடலிலும், பாலைவனத்திலும், மீன்கள் துள்ளி விளையாடிக்கொண்டு, சமுத்திரத்தில் செல்லும் கப்பல்களிலும், மத்திய ரேகையுள்ள இடங்களிலும், வட அட்லாண்டிக் சமுத்திரத்தில் பனி மூடப்பட்ட இடங்களிலும் அதன் சப்தம் பரவுகிறது. முடிவாக சுதந்திர தாகம் உள்ள ஒவ்வொரு இடத்திலும் "சோர்வு அடையாத தைரியத்தைப் புகட்டுவதுபோல இந்த சப்தம் தோன்றிற்று.

இப்பொழுது உலகம் முழுவதும் சப்தமயமாகயிருக்கிறது. நாஸிகளின் வெறிபிடித்த பிதற்றல் ஒருபுறம், முஸோலினியின் பயித்தியம் பிடித்த அழுகைக்குரல் ஒருபுறம், விஷியின் அடிமைத்தனத்தின் மொனகல் ஒருபுறம், ஜப்பானின் சீற்றலும், பீத்த



லும் ஒருபுறம், இவைகளுக்குமேல் தளவாட இரவல் மசோதாவைப்பற்றியும், அதன் அம்சங்களைப்பற்றியும் துலக்கிச் சொல்லும் ரூஸ்வெல்டின் கர்ஜனை மற்றொருபுறம். சுதந்திரமுள்ள ஒரு தேசமானது, 'தீர்க்காலோசனையின்பேரிலும், சர்ச்சையின்பேரிலும் ஜனநாயகத்துக்கே ஒரு தளவாட நிலயத்தை ஏற்பாடுசெய்யத் தீர்மானித்துவிட்டது. மனப்பூர்வமாக அவர்கள் ஆயுதங்கள், தளவாடங்கள், கப்பல்கள், விமானங்கள், இந்த உலகத்தை யதேச்சாதிகாரிகளின் நோயிலிருந்து விடுவிக்கவேண்டிய எல்லாவிதமான சாதனங்களையும் உற்பத்திசெய்ய முடிவுசெய்துவிட்டார்கள்.

ஜெர்மனியைக் காட்டிலும் மற்ற எந்த தேசமும் சாமான்களை அதிகமாக உற்பத்தி செய்யாது, செய்ய இயலாது என்று ஜெர்மனி பீத்திக்கொள்ளுகிறது. அதன் சார்பில் அநேகமாக ஐரோப்பா கண்டம் பூராவும் வேலை செய்துவருகிறது. ஹிட்லர் சதாகாலமும் நிகழ்த்தியபடி அவன் அடிமைகளடங்கிய வேலைக்காரர்களை உபயோகித்து வருகிறான். 10,00,000 போலந்து ஜனங்கள் தங்கள் வீடுவாசல்களைத் துறந்து ஜெர்மனியில் அடிமைகள் போல் வேலைசெய்து வருகிறார்கள். ஸெகோஸ்லாவியர்கள் தங்கள் தொழிற்சாலைகளில் வேலைசெய்து தங்களை ஹிம்ஸித்து வருகிற ஜெர்மனிக்கு ஏராளமான வெடிமருந்துகளை உற்பத்தி செய்யவேண்டியதாயிருக்கிறது. கபடமில்லாத 2½ லக்ஷம் இதாலியக் குடியானவர்கள், இவர்கள் இதாலியில் உத்ஸாகமாகப் பாடிக்கொண்டிருந்தவர்கள், சந்தோஷமாக இருக்கக்கூடியவர்கள், அவர்கள் தேசத்திலுள்ள திராக்ஷை சாலைகளின் உயர்வை நன்கு மதிக்கக்கூடியவர்கள், இவர்கள் தங்கள் சம்சாரத்தையும், குழந்தைகளையும் விட்டுப்பிரிந்து, நல்ல சூரிய வெளிச்சமில்லாமல், கீதங்கள் இனிது பாட முடியாமல், குளிருள்ள, பனி மிகுந்த, உத்ஸாகத்துக்கு இடமில்லாத வடதேசமாகிய ஜெர்மனியில் பரிசிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆடுமாடுகளைப்போல் இந்தக் கூட்டத்தை ஒவ்வொரு தேசத்துக்கும் விரட்டிச் செல்லுகிறார்கள். உலகத்திற்கே சுதந்திரமளிக்கப்போகிறது என்று எதிர்பார்த்த பிரெஞ்சு தேசத்தில் தொழிற்சாலைகள் இடைவிடாது வேலைசெய்து வருகின்றன. தங்களை முறியடித்தவர்களுடன் வெட்கமன்னியில் ஒத்துழைக்கும் முதுகெலும்பில்லாத, விஷியிலிருக்கும் தலைவர்களின் கட்டளையின்படி யந்திரங்களின் சக்கரங்கள் சுற்றிக்கொண்டேயிருக்கின்றன. இந்த சாலைகளில் உலகத்தில் பாக்கியிருக்கும் சுதந்திர ஸ்தாபனங்களை ஒழித்துவிடுவதற்கு உபயோகப்படக்கூடிய யுத்த தளவாடங்களையும் ஆயுதங்களையும் தயாரிக்கிறார்கள். ஜனங்களுக்குத் தேவையான சாமான்களை ஈவு இரக்கமன்னியில் கொடுக்காததினாலும், தொழிலாளிகளை வேலைக்கு அமர்த்துவதில் உபயோகிக்கும் தந்திர முறைகளாலும், டென்மார்க், நார்வே பெல்ஜியம், ஹாலந்து இவைகளிலுள்ள ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஜெர்மனிக்குச் சென்று ஜீவனோபாயத்துக்காகத் தொண்டுவேலை செய்யவேண்டியதாயிற்று. பிரான்ஸிலுள்ள சாமார்த்தியம் வாய்ந்த குடியானவர்கள் ஜெர்மனியின் உபயோகமற்ற காகிதப் பணத்துக்காக சாகுபடி செய்து வரு

கிறார்கள். சதாகாலமும் பூர்ணமாக இல்லாத உணவுப் பொருள்களையுடைய பால்கன் நாடுகளிலிருந்து, மிகுதியாக இருக்கும் சொல்ப சாமான்களும் ஜெர்மனிக்குக் கொண்டு போகப்படுகின்றன. ஐரோப்பாவில் வடக்கு முனையிலிருந்து பிரனீஸ் மலை வரைக்கும், பிரிடனியிலிருந்து கருங்கடல் வரைக்கும் உள்ள எல்லா தேசங்களும் மனிதர்களும் தொண்டு வேலைசெய்கிறார்கள். பட்டினி போடப்படுகிறார்கள். யாருக்காக, வேலைசெய்கிறார்கள். தங்களுக்காகவும் தங்களைப் பின்பற்றியிருப்பவர்களுக்கும் தங்களுடைய தேசத்துக்காகவுமல்ல, திருப்தி செய்யமுடியாத, ஆதுரமுள்ள ஒரு கொள்ளைக்காரனுக்காகப் பாடுபடுகிறார்கள். இப்பொழுதுதான் ஐரோப்பா ஜனங்கள், தங்கள் நாடுகளில் கறுஞ்சாவு என்று சொல்லக்கூடிய தொத்துவியாதியைவிட அதிக குரூரமான பெரும் வியாதி உலாவுகிறதென்றும், நாஸிகள் கைவைத்த நாட்டுப் புறங்களெல்லாம் தொத்துவியாதியிலிருந்து ஏற்படும் சீர்கேட்டைவிட அதிகமாகப் பாழடிக்கப்பட்டும் சூன்யமாக்கப்பட்டும் இருக்கின்றன என்றும் கண்டுபிடித்து விட்டார்கள்.

ஜெர்மன் அதிகாரத்துக்குப் பயந்து மனிதர்கள் பரிச்சிரமப்படும் இந்த ஆயுதசாலையின் சிலாக்கியமென்ன. இவ்விடத்தில் தொழிலாளிகளுக்கு வைக்கப்பட்டிருக்கும் உணவுப்பொருள்களை அவர்களிடம் வேலை வாங்கும் ஜெர்மானியர்களுக்குப், பகிர்ந்து விடுகிறார்கள். உணவுப் பொருள்கள் குறைவு அடைந்து, அவர்களின் வருங்கால நிலையைப்பற்றி அவர்களுக்குக் கவலையேற்பட்டால் இந்தத் தொழிலாளர்களிடமிருந்து எவ்விதமான வேலையை ஜெர்மானியர்கள் எதிர்பார்க்கக்கூடும். போலந்து ஜனங்களாகிலும், ஸெக் ஜனங்களாகிலும், பெல்ஜியத்தைச் சேர்ந்தவர்களாகிலும், இதாலியர்களாகிலும், ஜெர்மானியர்களாகிலும் சரி, உலக சரித்திரத்தில் திரும்பத் திரும்ப, ஒரு தடவையல்ல, பல தடவைகளில், கட்டாயப்படுத்தி செய்யப்பட்ட வேலையானது, தன்னிச்சையுடன் செய்யப்படும் வேலைத் திறமையோடு ஒரு பொழுதும் பந்தயம் போடமுடியாதென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. சவுக்கடிக்குப் பயந்து ஆயிரக்கணக்கான ஜனங்கள் எகிப்தில் கோபுரங்களைக் கட்டினார்கள். இந்த கோபுரங்களுக்கு அடியில் இருக்கும் பெரிதான புதைகுழி கட்டடங்களில் செய்யப்பட்டிருக்கும் அழகிய சித்திர வேலைகளெல்லாம் அடிமைகளால் செய்யப்பட்டவை அல்ல. அவைகள் அந்த சிற்ப வேலைகளில் அபிமானம் உள்ள சிற்ப சாஸ்திரிகளால் செய்யப்பட்டன. இதைப்பற்றி தங்கள் வம்சத்தார்களிடம் அவர்கள் புகழ்ந்து பேசக்கூடும்.

இம்மாதிரியாக ஐரோப்பாவில் நாஸிகளின் அடிமை வேலைக்காரர்கள் உள்ள தொழிற்சாலைகளுக்கு எதிரிடையாக உலகத்திலுள்ள பாதி ஜனங்கள் வேலைசெய்து வருகிறார்கள். இது வரையில் ஆடுமாடுகளுக்குத் தேவையான மேய்ச்சல் தரைகளை உற்பத்தி செய்வதும் நிலத்தைப் பண்படுத்தி ஜீவனம் செய்துகொண்டுவந்த நியூஸிலாந்து தேசமானது இப்பொழுது சில யுத்த சம்பந்தமான தொழிற்சாலைகளை ஏற்படுத்தப்போவதாக விளம்பரம் செய்திருக்கிறது. ஆஸ்திரேலி



யாவின் பிரதம மந்திரி டாக்டர் மென்ஸீஸ் என்பவர், தன்னுடைய தேசம் என்ன செய்து கொண்டிருக்கிறதென்றும், எவ்விதமாக விமானங்களையும், கப்பல்களையும், பீரங்கிகளையும், எல்லா விதமான முஸ்தீபுகளையும் தயாரிக்கிறதென்றும் வெளியிட்டிருக்கிறார். கனடாவில் கப்பல்களும் விமானங்களும் கட்டி நம்முடைய முக்கியமான ராணுவத்துக்கு வேண்டிய முஸ்தீபுகளையும் அனுப்புகிறார்கள். இந்தியாவிலுள்ள தொழிற்சாலைகளெல்லாம் யுத்தத்துக்கு அவசியமான தளவாடங்களை உற்பத்தி செய்ய ஆரம்பித்துவிட்டன. அதின் சணல்களைக்கொண்டு கித்தான்களும் மணல் மூட்டைக்குத் தேவையான சாக்குப்பைகளும் தயார் செய்யப்படுகின்றன. இந்தியாவின் கடற்படையை விருத்திசெய்ய இந்தியாவில் கப்பல்கள் கட்டி வருகிறார்கள். இந்தியாவில் உண்டுபண்ணப்பட்ட 6 அங்குல வாய்களுள்ள பெரிய பீரங்கிகள் பிரிடனுடையவும் ஐக்கிய நாடுகளுடையவும் பீரங்கிகளோடு சேர்ந்து கர்ஜிக்கப் போகின்றன. அங்கே கவசம் பூண்ட தளவாடங்களும் உண்டுபண்ணப்படுகின்றன. கூடிய சீக்கிரம் இந்தியாவின் மோட்டார் பீரங்கிகளும் கவசம்பூண்ட மோட்டார்களும் லிபியாவில் முறியடித்த இந்தியர்களின் உதவிக்குப் போகக்கூடும். வருகிற ஆறு மாதத்திற்குள்ளாக மூவாயிரம் கவசம்பூண்ட சண்டை செய்யக்கூடிய வண்டிகளைத் தயாரிக்க ஏற்பாடுகள் நடந்துவிட்டன. எஃகு, மரம், இரும்பு மோட்டார் வண்டிகளை எதிர்க்க உபயோகப்படக்கூடிய பீரங்கிகள், ரஸாயன சாமான்கள், மருந்து சாமான்கள், வெடிமருந்துகள், துப்பாக்கிகள், அளவிடமுடியாத தேவையான சாமான்களெல்லாம் அபரிதமாக சேமிக்கப்படுகின்றன. அமைதி காலத்தில் சாதாரணமாக விவசாயத் தொழிலை அபிவிருத்தி செய்யக்கூடிய இந்தியா தேசம் இப்பொழுது தீவிரமாக தொழிற்சாலைகளின் அபிவிருத்தியை ஏற்றுக்கொண்டுவிட்டது.

சமுத்திரத்துக்கு அப்பாலுள்ள இந்திய சைனியமானது லிபியாவிலும் யுத்தம் செய்தது. அபிஸீனியாவில் உள்ள மலைப்பிரதேசங்களிலும் யுத்தம் செய்து வருகிறது. அநேகமாக இதாலிக்குச் சொந்தமாயிருந்த ஆபிரிக்காவிலுள்ள நாடுகள் பூராவிலும் சண்டை செய்கிறது. ஆனால் அதற்கு வேண்டிய உணவுப் பொருள்கள் இந்தியாவிலிருந்து கிடைக்கவேண்டியதல்ல. யுத்தம் சமீபக் கிழக்கு நாடுகளுக்குப் பரவினால் நமக்கு ஏராளமான சாமான்கள் கைவசமிருக்கின்றன. அதாவது இந்தியக் கடலுக்கப்பால் இருக்கும் இந்தியாவிலிருந்து அவற்றைக்கொண்டு வரக்கூடும். இவ்விடத்தில் ஜெர்மானியர்களின் யூப் படகுகளிடமிருந்து ஏற்படக்கூடிய யாதொரு அபாயமும் இல்லை. இந்தியா அதற்குப் போதுமானவைகளைக் காட்டிலும் அதிகமாகவே உண்டு பண்ணக்கூடும். அங்கிருந்து காக்கிச் சட்டைகள் முதல் மின்சார விசிறிகளும், இருப்புப் பாதைக்கு உபயோகப்படுத்தக்கூடிய தகடுகள் முதல் எஃகுனால் செய்யப்பட்ட பெரிய உருளைகளும் ஏற்றுமதி செய்யப்படலாம்.

பிரிடிஷ் சாம்ராஜ்ஜிய நாடுகள் பிரிடனுக்கு ஆபத்து வந்து விட்டது என்று அடையாளம் புலப்பட்ட உடனேயே பிரிடனைக் கைவிட்டு விடும்

என்று 1914-ல் ஜெர்மானியர்கள் திண்ணமாக நினைத்தார்கள். இந்த விந்தையான ஒரு அபிப்பிராயமுள்ள ஜெர்மானியர்கள் வேறு விதமான அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். லண்டனுக்குப் பதிலாக, பெர்லின் தலை நகரை வைத்து அதைப் பின்பற்றி நிர்ப்பந்தமில்லாத சுயேச்சையுள்ள ஒரு சாம்ராஜ்ஜியம் பிரிடனுக்கு இருக்கக்கூடுமென்று அவர்களுக்கு விளங்கவில்லை. சுதந்திரம் உள்ள ஜனங்கள் தங்களுக்குக்கிடைக்கக்கூடிய லாபத்தையும், சுகத்தையும், மேலும் தங்கள் பிராணன்களையும் பொருட்படுத்தாமல் ராஜ விசுவாசத்தையும், அன்பையும் காட்ட முன் வருவார்களென்று ஜெர்மானியருக்குப் புலப்படவில்லை. தங்களுடைய குறுகலான அபிப்பிராயத்தைக் கொண்டு பார்க்கிற ஜெர்மானியர்களுக்கு வேறு விதமான அபிப்பிராயங்கள் தென்படாது. இத்துடன் ஜெர்மானியர்கள் அபிப்பிராயங்களை, அடிக்கடி மாற்றுவதில்லை. யுத்தம் ஆரம்பித்தது முதல் அவர்களுடைய பிரசாரங்களைக் கவனித்தால், இந்த சமயத்தில் சாம்ராஜ்ஜிய நாடுகள் பிரிடனைக் கைவிட்டுவிட்டு தன்னிச்சையாய்க் கிளம்பி விடுமென்று ஜெர்மனி எதிர்பார்த்தது என்று வெளியாகுகிறது—சென்ற யுத்தத்துக்குப் பிறகு வெகு வருஷங்களாகியும் தடித்தனமும் மூட புத்தியுமுள்ள ஜெர்மானியர்கள் தஙகள் அபிப்பிராயங்களை மாற்றிக்கொண்டு சாம்ராஜ்ஜிய நாடுகளுக்குள் உள்ள பாந்தவ்யத்தின் மேன்மையையும், அதன் வலிமையையும் மதிக்கக்கூடவில்லை.

1939-ம் வருஷத்திலும், 1914-ல் கெய்ஸருக்கு இருந்ததுபோல், ஹிட்லரின் துர் மந்திரிகள் அதே மாதிரியான சொர்பனம் கண்டார்கள். கனவு கனவாகவே முடிந்துவிட்டது. சாம்ராஜ்ஜிய நாடுகளில் தொழிற்சாலைகளில் வேலை செய்கிற மனிதர்களும் பெண்பிள்ளைகளும் ஒரே மதஸ்தரல்ல, ஒரே ஜாதியாரல்ல, அவர்களில் உலகத்தில் உள்ள எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களுமிருக்கிறார்கள். உலகத்திலுள்ள எல்லா விதமான பாஷைகளையும் அவர்கள் பேசுகிறார்கள். அவர்கள் வேறுபாடுள்ள சீதோஷ்ண ஸ்திதி உள்ள பிரதேசங்களில் வசிப்பவர்கள். வேறுபாடுள்ள வசதிகளுள்ள இடத்திலிருப்பவர்கள். அவர்கள் வெவ்வேறு பழக்க வழக்கங்களையும் உடுப்புகளையும் பெற்று இருப்பவர்கள், வெவ்வேறு படிப்புகளையும், கலைகளையும் கற்றுக்கொள்ளுகிறவர்கள். மண் பொம்மைகள் போல் ஒரே மாதிரியாக அமைக்கப்பட்டவர்களல்ல. அவர்களுக்கு ஜோடனை செய்யப்பட்ட ஜாதி அபிப்பிராயப் பாடங்கள் கற்றுக்கொடுக்கிறதில்லை. அல்லது கிளிப்பிள்ளைகள் போல் சுத்தரத்தத்தைப் பற்றியும் தேசத்தைப் பற்றியும் உள்ள அபிப்பிராயங்களைத் திருப்பிச் சொல்லும்படி கட்டாயப்படுத்தப்பட்டவர்களுமல்ல. அவர்களிடம், ஜெர்மானியர்கள் ஒருபொழுதும் அறியக்கூடாததும், ஹிட்லரின் வாசஸ்தலமாகிய பெர்காஸ்காடனில் வெளியிட்டால், இது அபாயகரமானது, கெடுதலானது, ரொம்பவும் அசத்தமானது என்று சொல்லக்கூடியதுமானதும், நாஸிகள் அதைக்கண்டு பயப்படக்கூடியதும், வெறுக்கக்கூடியதுமான, சுதந்திரம் என்னும் தாகம் ததும்பியிருக்கிறது.



ஜெர்மனியில் ஒவ்வொருவரும் ராணுவத்தில் பலவந்தமாய் சேர்க்கப்படுகிறார்கள். ஜெர்மானியனுக்கு சிப்பாயின் உடுப்புகளைப் போட்டால்தான் சந்தோஷமுண்டாகும். சுயேச்சையை நிலை நாட்டவும் தங்களுடைய வாழ்நாளைத் தாங்களே திருத்தி அமைத்துக் கொள்ளக்கூடிய சுதந்திரத்தையும் அடைய மனிதர்கள் சிரமப்பட்டு வேலை செய்வதோடு, தங்களுக்குள்ள சுகங்களைத் தியாகம் செய்யவும் அவசியமானால் உயிர் துறக்கவும் தயாராக இருக்கிறார்களென்று அறிய ஜெர்மனிக்குப் போதுமான அறிவில்லை. கண்மூடித்தனமாக யதேச்சாதிகாரிகள் உலகம் முழுவதையும் இடைவிடாது வேலை செய்யும்படி தூண்டி விட்டு விட்டார்கள். அவர்களுக்கு சொந்தமில்லாத அயல் நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒரு வகையாக அவர்கள் ஒழித்து விடுவார்கள். எல்லா திசைகளிலும் தொழிற்சாலைகளிலுள்ள யந்திரங்கள் ஓய்வன்றியில் ஜெர்மனிக்குப் பிரதிகூலமாக வேலை செய்துவருகின்றன. ஜெர்மனியின் புத்தி யின்மையைப் பரிகசிக்கக்கூடிய வகையில் அமெரிக்காவிலுள்ள ஐக்கிய நாடுகள் பிரிடனுடைய ஒத்தாசைக்காக தளவாட இரவல் மசோதாவைச் சட்டமாக்கி விட்டார்கள். இத்துடன் பகிரங்கமாக அமெரிக்காவிலுள்ளவர்கள் ஜெர்மனிக்கு எதிர் முறையாகக் கிளம்பிவிட்டார்கள். இனி மேல் சர்வாதிகார நாடுகளுக்கு உலகத்திலுள்ள இயற்கைப் பொருளாதாரங்கள் போய்ச் சேரமுடியாது. அவர்களுடைய நாடுகளில் திறமைவாய்ந்த தொழிலாளர்கள் விசேஷமாக இல்லை. இதிலிருந்து அவர்களுக்கு நாசகாலம் கிட்டி விட்டதென்று அவர்கள் அறிந்து கொள்ளலாம். அவர்களுடைய தலைக் கர்வத்துக்கும், அவர்களுடைய பிதற்றல்களுக்கும், அவர்களுடைய அபிப்பிராயங்களுக்கும் ஒரு முடிவு ஏற்பட்டு விட்டது. சோம்பேறிகளாயிருந்த ஜனங்களோடு ஐக்கிய நாடுகளிலுள்ளவர்கள் வேலை செய்யமாட்டார்கள். தற்சமயம் உலகம் முழுவதும் ஒரு பெரிய ஆயுதசாலையாகவும் தயாரிப்பு ஸ்தலமாகவும் மாறிவிட்டது. இதற்கு ஹிருதயம் போல பிக்பென் என்னும் மணி கட்டியிருக்கிறது. நியூஸௌத் வேல்ஸிலுள்ள ஒரு ஆஸ்திரேலியா தேசத்தவன் எழுதிய ஒரு கடிதத்தை இன்று காலையில் வெளி வந்த பத்திரிக்கையில் அச்சிட்டிருக்கிறது. அதில் பின் வருமாறு எழுதியிருக்கிறது. "பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயத்திலிருந்து ஒலிபரப்பில் ஒவ்வொரு நாளும் பிக்பென் மணி ஓசையாவது உலகம் பூராவும் பரவி எங்கள் நாட்டிலும் த்வனிக்கும் பொழுது எனக்கும் லண்டனில் பிறந்த என்னுடைய மனைவிக்கும் அளவில்லாத ஆறுதல் உண்டாகுகிறது. உலகம் பூராவுமுள்ள பிரிடிஷ் மக்கள் இதன் சப்தத்தைக் கேட்டு லண்டனில் உள்ள மற்ற நகரவாசிகள் போல பிக்பென்னும் தன் ஸ்தானத்திலேயே இருந்துவருகிறதென்று அறிந்து, உத்ஸாகமடைவார்களென்பது நிச்சயம்."

# கிரீஸின் அழியா ஊக்கம்.

டோரா லீகியார் டொபௌலாஸ் என்பவர் எழுதுகிறார்.

(ஆதன்ஸ் நகரில் சமூகத்திலும் அரசியல் காரியங்களிலும் அந்தஸ்துள்ள ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவரும் இப்போது இந்தியாவில் வசிக்கும் ஒரு அம்மாள் நமது பத்திரிகைக்கு 'ஸ்பெஷல்' விஷயதானம் செய்து கௌரவிக்கிறாள்.

இதில் காணப்படும் உண்மையும், சரித்திர உணர்ச்சியும், தாங்கமுடியாத கோபமும், தைரியம் பொருந்திய உயர்ந்த நோக்கமும், மலைப்பாதைகளை பிரிடிஷ் சாம்ராஜ்ஜிய துருப்புகளுடன் துணையாய்க் காத்து வரும் வீரத்தனமுள்ள தேசத்தாரின் குணங்களை ஒத்தவை. அந்த அம்மாளுக்கும்—அவர்களுக்கும் நன்றி பாராட்டுகிறோம்—பத்திராதிபர்).

நோய் வாயில் வருந்தி சாவுகூட ஏற்படக்கூடிய நிலையில் இருக்கும் ஒரு அருமை குழந்தையின் ஜீவ சரித்திரத்தை ஒரு தாய் எழுதுவதென்றால் எவ்வளவு சிரம சாத்தியமாகவிருக்குமோ அம்மாதிரிதான் கிரீஸ் தேசத்தைப்பற்றி இச்சமயம் ஒரு கிரேக்கர் எழுதுவது.

ஆனால், மற்ற சமயத்தைக் காட்டிலும் உயிருக்கும் ஸ்வதந்திரத்திற்குமே ஆபத்தான இச்சமயத்தில் கிரீஸைப்பற்றி எல்லோருமறியச் சொல்லவேண்டிய தவசியம். ஆகையால் இச்சமயம் என் நாட்டின் ஸ்திதியைப்பற்றி இரண்டொரு விஷயங்கள் சொல்லிப் பார்க்கிறேன். நான் இப்போதிருக்கும் மலைப்பிரதேசம் சாந்தமாகவும் நிம்மதியாகவும் இருக்கிறது. மனதோ கொதிக்கிறது; இந்தக் கொதிப்பால் மலைப்பக்கத்து அமைதி சகிக்கமுடியவில்லை.

கிரீஸாவது என்ன? ஐசுவரிய வழியில் ஒன்றுமில்லை. ஐரோப்பாவில் வெகு சிறியதும் வெகு ஏழ்மைத்தனமான தேசங்களில் ஒன்று. பசுநிறமான மத்தியதரைக்கடலின் அலைகளால் மோதி நிர்த்தாட்சண்யமாக தாக்கப்படும் நாடு; கரடு முரடான மலைகளின் சிகரங்களிலும் அடிவாரத்திலுமுள்ள சில சமவெளிகள் போக மற்ற இடங்களில் தினசரி வாழ்க்கை வெகு பாடுபடவேண்டிய நாடு. ஆனால் மனப்போக்கில் ஐரோப்பாவிலேயே உயர்ந்த நாடு. மனித சரித்திரத்திலேயே இதற்கு சமானமான செயலுள்ள நாடு வேறு எதுவும் இல்லை.

2,000 வருஷத்துக்கு முன் ஐரோப்பாவின் தென்கிழக்கு மூலையிலுள்ள இச்சிறு நாடு திடீரென்று லாவாண்யமென்ன, மாசு மருவில்லாத காரியங்கள் என்ன, இவைகளுக்கெல்லாம் வழிகாட்டியாகியிற்று.

கீழ்நாட்டு நாகரீகம் அழிபட்டுக்கொண்டும், இன்று அடால்ப் ஹிட்லர் பறைசாத்தும் 'நார்டிக்' சொப்பனவஸ்தையால் பாதிக்கப்படும் ஜனங்களின் தாய் நாடு, சேரும் சகதியுமாய் காடாய் கிடந்த சமயத்தில் ஆதன்ஸானது பார்த்தினன்



(Parthenon) போன்ற அழகும் காம்பீரியமும் வாய்ந்த கட்டடங்கள் கட்டிக்
கொண்டும், ஹோமர், (Homer) பாட்டுக்களைப் பாடிக்கொண்டும், ஈஸ் கிலஸ்,
யூரிப்பிடீஸ், ஸோபாக்ளீஸ் (Æschylus, Euripides, Sophocles) தங்கள் காவ்யங்
களின் கதா நாயகர்களின் பெருமையை வெளிப்படுத்தியும் வந்தார்கள்.

அச்சமயம் கிரீஸில் உண்டானது, காலத்தாலாவது, விரோதிகள் படை
யெடுப்பாலாவது, யுத்தத்தாலாவது, நெருப்பாலாவது அழிபடக்கூடியதல்ல;
சரித்திரத்தில் அத்தியாச்சரியமான விஷயம்; மனிதர் மனதில் என்றும் அழியாத
உயர்ந்த உணர்ச்சி ஏற்பட்டது.

அக்காலத்திற்குபின், எனது நாட்டிற்கு பல சுகதுக்கங்கள் சம்பவித்
திருக்கிறது; இடையிடையே வெகுகாலம் படுத்துக்கிடந்தது; அப்படிக்
கிருந்தபோதிலும் பலமுறை புத்துயிர் உண்டாகி தலையெடுத்து, பல கஷ்ட
நிஷ்டூரங்களுக்கு இடையே ஜயபேரிகை அடித்துக்கொண்டு தூர்ச்சம்பவம் நிரம்
பிய 1940-ம் வருஷத்தை அடைந்தது.

அச்சமயம்தான் வெகு சிரமப்பட்டு நாடு சீர்திருத்தத்திற்கும் ஒத்துமைக்
கும் பாடுபட்டு முடிந்திருந்தது. பக்க தேசத்தாருடன் தன் வழக்குகளை
தீர்த்துக்கொண்டே யிருந்தது; தன் வேலையைப் பார்ப்போம் பிறர் வம்பு
வேண்டாமென்று அமர்ந்த சமயம். மேலும் சாதவானமாக தங்களுக்கேற்ற
வாறு வாழ்ந்துவர சிரமப்பட்டுவரும் சமயம், அமைதி வேண்டிய சமயம்,
அமைதியைத் தவிர வேறு ஒன்றும் தேடாத சமயம், கைத்தொழில்கள் சீர்திருத்
தப்பட்டு, சேரும் சகதியுமாயிருந்த நிலங்களை சாகுபடிக்கு லாயக்காக செய்து
வந்த சமயம். ஏழ்மைத்தனத்தையும் வேலையில்லாமல் தவிப்பதையும் குறைக்க
எத்தனித்த சமயம். அப்போது அச்சுதேசத்தார் நேரம் பார்த்து அடித்தார்கள்.
செயலற்றவர்களென்றும் ஒரு நொடிப்பொழுதில் பிணங்களாக மாறுவார்களென்
றும் தப்பெண்ணங்கொண்டு இதாலிய குள்ளநரிகள் அவர்களை தாக்கினார்கள். அந்த
கக்கூஸ் மிருகம் என்ன உதை பட்டதென்று நான் தங்களுக்குச் சொல்லவேண்டிய
தில்லை. வெட்கங்கெட்ட இதாலியர் போர் செய்த வீரத் தன்மையைக் கண்டு
உலகம் பிரமித்தது. ஒரு சிறிய தேசத்தார் ஒத்துமையுடன் இழுத்துக் கட்டிக்
கொண்டு, இது வீண் வீச்சு என்று தோன்றிய காரியத்தை பரிபூரணமான பலன்
கூடிய ஜயமாக மாறியதைக் கண்டு உலகத்தார் முழுமையும் மகிழ்ந்தார்கள்.

ஆனால் குள்ளநரிகளின் சுபாவம் தனிமையில் ஒரு காரியமும் செய்வதில்லை.

70 லக்ஷம் கிரேக்கர் வயிற்றில் பற்றிக்கொண்டு எரிந்த நெருப்பை
தன்னுடைய 400 கோடி துருப்புகளைக்கொண்டு அணைக்க முடியாதென்று
முஸோலினி மனதிற்கு வந்தவுடன், ஹிட்லரைத் தன் 10 கோடி ஹூணர்களை
அழைத்துக்கொண்டு உதவி புரியும்படி வேண்டினான். ஜெர்மனி சம்மதித்தது.
ஜெர்மனி பல அக்கிரமங்கள் ஏற்கனவே செய்திருக்கிறது. மறக்க முடியாத
கொடிய அக்கிரமங்களில் இது ஒன்று.

ஒரு பெரிய விஷ ஜெந்துவைப்போல் தன் விகார ரூபத்தை கன்யமும் பெருமையும் பொருந்திய ஐரோப்பா கண்டத்தின் பேரில் இழுத்துக் கொண்டு, கிரேக்கர் ஜெர்மானியருடைய அட்டல் உருட்டலைக் கண்டு பயப்படமாட்டார்கள் என்று தெரிந்தமேல், கிரீஸின் எல்லைப் புறத்திற்கு ஊர்ந்து வந்து, ஒரு விசேஷ ஞாயிற்றுக்கிழமையன்று தங்கள் யந்திரங்களையும் வெடி குண்டுகளையும் கொண்டு, கிரேக்க சிறுவர்களைத்தாக்கினார்கள். அதேசமயம் தனது அநீத கோபத்தை மற்றொரு சிறிய பக்கநாடாகிய யூகோஸ்லாவியாபேரில் தாக்கினார்கள். யூகோஸ்லாவியா செய்த குற்றம் என்ன வென்றால் கடைசி நிமிஷத்தில் தன்னுடைய பெருமையை விடாமல் பாதுகார்த்ததுதான்.

ஒரு நொடிப்பொழுதில் பால்கன் நாடுகள் பூராவும் சொல்லி சாத்தியப்படாத கஷ்டத்திற்கு உள்ளாக்கப்பட்டன. கிரீஸும் யூகோஸ்லாவியாவும் வெகு நெருக்கடியான நிலைமையை அடைந்தன.

கஷ்டம் இவர்களுக்கு மட்டும் இல்லை. உதைத்துத் தள்ளப்பட்ட தேசங்களை எல்லாம் ஆதரிக்க முன்வந்தது என்ற பெருமையை அடைந்த இங்கிலாந்து கிரீஸுக்குப் பக்கத் துணையாக நின்றது.

சரித்திரம் ஒரு பெரிய சித்திரி. சித்திரங்கள் பெரும்பாலும் விபத்தானதாய் இருந்தபோதிலும் சரித்திரம் சித்திரி என்பதில் சந்தேகம் இல்லை. சில விஷயங்களில் பேதமும் சில விஷயங்களில் ஒரே மாதிரியாயுமிருக்கும் கிரேக்கர்களையும் பிரிடிஷாரையும் கிரீஸின்மலைக் கணவாய்களில் சரித்திரமானது பிணைத்து விட்டது. சூர்யப் பிரகாசம் நிரம்பிய கிரீஸில் ஜனநாயகமும், சுயேச்சையும், மனிதர் பெருமையும், அன்பும், ஆதரவும், தியாகமும், தைரியமும், அழகும் தலைழத்தன. இந்த விரைகள், மூடுபனி மயமான பிரிடனில் விதைக்கப்பட்டு அங்கே நன்றாய் வளர்ந்தன. ஆகையால் மேலே குறிக்கப்பட்ட உயர்ந்த நோக்கங்களுக்காக பிரிடிஷாரும் கிரேக்கர்களும் ஒருவருக்கொருவர் துணைவராய் நின்று போர் புரிவது பொருத்தமே. இடையில் என்ன நேர்ந்தபோதிலும் அவர்கள் பிணைக்கப்பட்டு நிற்பதே கடைசியில் ஜயமடைவர் என்பதற்கு அத்தாக்ஷி. ஹிட்லரோ? ஐரோப்பிய கலாசாரத்திற்கே தாய்போன்ற கிரீஸின் பேரிலும், தங்கள் கலையை உலகம் முழுதும் பரப்பிய சாம்ராஜ்ஜிய தலைவியான இங்கிலாந்து பேரிலும் ஆரியர்களுக்கென்றும், ஐரோப்பாவுக்கென்றும் சொல்லிக்கொண்டு, தன் வடதேசத்துப் பட்டாளத்தை விட்டு ஹிட்லர் தாக்குகிறான்.

இது கொடுமையும் குரூரமுமான விசித்திர சம்பவம்; மறக்கமுடியாத துஷ்க்ருத்யம், இதற்கு தண்டனை ஒருநாள் அவசியம் ஏற்படும். இந்த நம்பிக்கையின் பேரில் கிரேக்கர்கள் அதைரியப்படாமல், 2,000 வருஷங்களுக்கு முன் லியானிடாஸ் (Leonidas) காத்ததுபோல் தங்கள் தேசத்துக் கணவாய்களை தற்கால கிரேக்கர்கள் அதைரியப்படாமல் பாதுகாக்கிறார்கள். சொற்ப ஜனங்களுடன் யந்திர பலம்கொண்ட சைனியங்களை எதிர்க்க இவர்கள் முன்வந்ததே ஒரு மகத்தான வெற்றி, ஸ்தூல மாகவும் லோகோபகாரமாகவும் வெற்றிகளும் பரிசுகளும் பின்னால் வரும்.



பார்த்தினன் (Parthenon) கட்டடத்தின் தூண்கள் கம்பீரமாய் சாந்த ஸ்வரூபமாய் அழகாய் என்றைக்கும் இருந்து உலகத்தாருக்கு திருப்தி கொடுக்கும்; பண்ட மற்ற ஹிட்லர் பிரதாபம் மறைந்து கரைந்துபோவார்.

சாஸ்வதமான நிறைகளே மனிதரின் கவனத்திற்கு யோக்கியமானவை; அவைகளுக்காகப் போர் புரிகிறவர்களைப்பற்றி யாரோ முன்னமேயே பாடியிருக்கிறார்கள்.

“அவர்களுக்கு கோரிக்கு பதிலாக கோவில் பீடம்,
துக்கத்திற்கு பதிலாக ஞாபகம்,
பரிதாபத்திற்கு பதிலாக புகழ்.”

---

## யூகோஸ்லாவியாவின் வாலிப அரசர்.

## பீடர் மன்னரும் அவருடைய பிரஜைகளும்.

## எல்லாவிதமான வகுப்புப் பிள்ளைகளுடனும் கல்வி கற்றவர்.

(பிரிடிஷ் ஒலிபரப்பில் ராபின் டப் என்பவர் பேசினது).

ஒலிபரப்புக் கேட்கிறவர்கள் நன்றாய் அறிந்த யுத்த சமாசாரங்களை வெளியிடக்கூடிய ராபின் டப் என்பவர் யூகோஸ்லாவியாவில் யுத்தம் ஆரம்பிக்குமுன் சென்றிருந்தார். அவர் மன்னர் குடும்பத்தில் குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுத்து வந்தார். அந்த தேசத்தைப் பற்றியும் அதன் புதிய மன்னரும் அவருடைய சிநேகிதருமான பீடரைப் பற்றியும் அவருக்குத் தெரியும். அவருக்குத் தெரிந்த அபிப்பிராயங்களை உங்களுக்கு வெளியிடும்படி நாங்கள் கேட்டுக்கொண்டோம்.

1934-ம் வருஷம் அலெக்ஸாண்டர் மன்னர் கொலையுண்டபொழுது, அவருடைய மூத்த குமாரனான பீடர் என்பவர் இங்கிலாந்தில் பள்ளிக்கூடத்தில் கல்வி கற்று வந்தார். அங்கே வெகு நாட்கள் அவர் இருக்கவில்லை. ஆனால் பள்ளிக்கூட வாழ்நாளைப்பற்றி நன்றாய் ஞாபகம் வைத்திருக்கிறார். ஸ்வபாவமாக அவர் ரொம்பவும் கூச்சமுள்ளவர். ஆகிலும் அதை விலக்க அவர் பிரயத்தனம் செய்தார். அவருடைய சிநேகிதர்களின் ஸமூகத்தை அவர் எவ்வளவு சந்தோஷத்துடன் ஏற்று வந்தாரென்று அவர் அடிக்கடி சொல்லியிருக்கிறார். அவருடைய தகப்பனார் காலஞ்சென்ற பிறகு அவர் இங்கிலாந்தை விட்டுப் புறப்பட நேரிட்டது. ஏனென்றால், யூகோஸ்லாவியாவின் அரசியல் முறைப்படி அத்தேசத்தின் மன்னர் ஊரைவிட்டு வெளியே வசித்துவரக் கூடாது. ஆகையால் அவர் திரும்பி வந்து, பேருக்கு மட்டும் மன்னரென்று விளங்கி வந்தார். அவருடைய சகோதரரான பால் இளவரசரின் தலைமையின் கீழ், ஒரு இளவரசர்களின் மாதிரி சபையானது ராஜ்ஜிய பாரத்தை நடத்தி வந்தது.

மன்னர் பொதுஜனங்களுக்கு மத்தியில் போகிறது கிடையாது. ஆகிலும் ஜனங்களுக்கு, அவருடைய இளமைப் பருவத்தினாலும், தேசத்திலுள்ள பிரபலமான ஜனங்களிடத்தில் அவருக்கு உள்ள அன்பினாலும் அவரிடத்தில் ரொம்பவும் பற்றுதல் உண்டாயிற்று.

அவர் யூகோஸ்லாவியாவுக்கு தன்னுடன் ஒரு ஆங்கில உபாத்தியாயரைக் கூட்டிச் சென்றார். அவ்விருவரும் நெருங்கிய சிநேகிதர்களானார்கள். தெரிந்து கொண்டவைகளில் மக்களின் எல்லா வகுப்பினரைப்பற்றியும் முக்கியமாகத் தெரிந்துகொண்டார். அவருடைய அபிப்பிராயப்படியே, ஸெர்பியர்கள், குரோஷியர்கள், ஸ்லொவீனியர்கள் வகுப்பைச் சேர்ந்த பையன்களோடு கல்வி கற்று வந்தார்.

1939-ம் ஆண்டு இவர்களில் சிலரை நான் கண்டு பேசினேன். அவர்கள் அநேகமாய் எல்லா வகுப்பாருடைய பிரதிநிதிகளாயிருந்தார்கள். மன்னர் அவர்களுடன் மிகவும் நன்றாகவே பயின்று வந்தார். அவர்களும் அவரை நேசித்தார்கள். கௌரவமாகவும் மதித்து வந்தார்கள். அவர்களெல்லோரும் ஒன்று சேர்ந்து வேனிற்காலத்தில் பெரும் பாகத்தை முகாமில் கழித்து வந்தார்கள். அவர்கள் வெகு தூரம் ஓட்டப்பந்தயங்களும் சென்று சைக்கிள்களில் சவாரி செய்வதுமாக காலத்தைப் போக்கினார்கள். தன்னைப்போல அவர்களும் வலுவுள்ளவர்களாக ஆகவேண்டுமென்று மன்னர் வற்புறுத்தினார். அவர்களில் அநேகர் சதாகாலமும் அவருடனிருந்து வந்தார்கள்.

பீடர் மன்னர் ஒரு பலஹீனரென்று அடிக்கடி சொல்லுவதுண்டு. ஐரோப்பாவில் வெகு இடங்களில் படிக்கப்பட்ட ஒரு புத்தகத்தில் இதைப்பற்றி விசேஷமாக வெளியிடப்பட்டிருக்கிறது. மன்னர் ஸெர்பியா தேச பாஷையே நன்றாய்ப் பேசவில்லையென்றும், ஆங்கிலமே தெரியாதென்றும், கபடமற்றவரென்றும், தேச அலுவல்களைப்பற்றி அதிகக் கவலை யெடுத்துக்கொள்கிறதில்லையென்றும் அதில் சொல்லியிருக்கிறது. இவை முற்றிலும் பிசகு. மன்னருக்கு ஸெர்பியா பாஷாக்யானம் பூர்ணமாயுள்ளது. ஆங்கிலத்திலும் அவருக்கு நல்ல பயிர்ச்சியுண்டு, தாராளமாக பிரெஞ்சு பாஷையும் ஜெர்மன் பாஷையும் மன்னர் பேசுகிறார்.

அவருடைய புத்தி கூர்மையைப்பற்றியோ வென்றால், இம்மாதிரி சுறுசுறுப்புள்ள ஒருவரை நான் இதுவரையில் பார்த்ததில்லை. எப்படியாயினும், பீடர் ஒரு நல்ல, மிதவாதமுள்ள, நவீன முறையை அனுஷ்டிக்கும் ஒரு மன்னராகவேயிருப்பாரென்று நான் நம்புகிறேன். அவர் உற்சாகமுள்ளவர், தன்னுடையவும் அவருடைய தேசமக்களின் தேகசௌக்கியம், பொது ஜனங்களின் க்ஷேமம் இவைகளில் அதிகமாக அக்கறையுள்ளவர். ஸெர்பியர்கள், குரோஷியர்கள், ஸ்லொவீனீஸ் இவர்களைப்பற்றித் தெரிந்து கொள்ளவும் அவர்களின் நோக்கங்களை அறிந்து கொள்ளவும் கவலையுள்ளவர்.

மேலும், அவருடைய அலுவல் என்று அவர் அபிப்பிராயப்படும் ஒவ்வொரு விஷயத்திலும் அதிக சிரத்தை எடுத்துக்கொள்ளக்கூடியவர்.



முதலெடுப்பில் அவர் ஆலோசனையில்லாதவர் போலும் விஷயங்களில் பற்றற்றவர் போலும் காணப்படுவார். இவைகளுக்குக் காரணம் மன்னரின் கூச்சம்தான். தேசமக்களிடம் நம்பிக்கையை உண்டுபண்ணி அவர்களுடைய அன்பையும் அவர் வெகு சுலபமாய்க் கவர்ந்து விட்டார். இந்த நம்பிக்கையானது பேருக்குமட்டில் அரசனாகயில்லாமல் வாஸ்தவமாக மன்னராகி அரசியலுக்கு உரிய வேலைகளைத் தெரிந்து கொள்ளுவதற்கு மன்னருக்குச் சாதகமாகயிருக்கும்.

---

## இரவு வான யுத்தங்கள்.

## ரெய்டர்ஸ் (கொள்ளைக் கப்பல்கள்,) இனி தன் இஷ்டம் போல் போதல் முடியாது.

## ஜெர்மன் பாம்பர்களுக்கு ஸ்வர்கமாக இருப்பதைக் காட்டிலும் பிரிடிஷ் சண்டைக் கப்பல்களுக்கு சந்தோஷகரமாக இருக்கும்.

By

*Wing Commander L. V. Fraser.*

சமீபத்தில் பிரிடிஷ் விமானப்படையின் இரவு சண்டை செய்யும் விமானிகள் 19 எதிரி சண்டைக் கப்பல்களை 3 இரவுகளில் சுட்டு வீழ்த்தியதானது கடந்த வேனிற்காலத்தில் பிரிடிஷ் விமானப்படைகள், தாங்கள் பகல்கால வானத்து எஜமான்கள் என்று நடத்தைமூலம் காண்பித்ததற்குப் பிறகு நடந்த சம்பவத்தில் ஒரு போற்றக்கூடியதாக இருக்கிறது.

அது எதிரிகளுக்கு முதல் விழுக்காடாக இருந்தபோதிலும் சாதாரணமானது அல்ல. அந்த யுத்தம் இனிமேல் ஒவ்வொரு பௌர்ணமிக்கும் அதிகப்படும். இது முதற்கொண்டே பிரிடனுக்கு, பௌர்ணமி காலங்கள் பாம்பர்களின் ஸ்வர்க்கமாக இருப்பதைவிட பிரிடிஷ் சண்டைக் கப்பல்களின், சந்தோஷகாலமாக இருக்கும்.

இதற்குள் ஜெர்மனிமீது பறக்கும் பிரிடிஷ் ஆகாய விமானப்படை பாம்பர்கள் தங்களை தடுக்கும் விரோதியின் சண்டைக் கப்பல்களை சுட்டு வீழ்த்துகின்றன. குண்டு வீசும் கப்பல்களின் மாலுமிகள் சண்டைக் கப்பல்களை அடித்து பூமியில் வீழ்த்துவதில் அதன் முடிவை கவனிக்க முடியாமலிருந்தாலும் உத்தேசமாக அதன் ஜன சேதத்தைக் சொல்லக்கூடும். அப்படிச் சொல்லுவதும் நிச்சயமாக இருக்கிறது. பிரிடிஷ் குண்டு வீசும் கப்பல்கள் எதிரியின் சண்டைக் கப்பல்களுடன் எதிர்த்து போர்புரிந்து ஜயிப்பதுடன், சில சமயங்களில் எதிரியின் குண்டுவீசும் கப்பல்களையும் எதிர்த்து போர்புரிந்து ஜயிக்கின்றன.

இரவில் சண்டைபுரியும் கப்பல்களின் மாலுமிகளுக்கு 'பூனைக் கண்கள்' என்று ஏற்கனவே பெயரிடப்பட்டிருக்கிறது. பிரத்தியேகமான பாதக்கணக்கான பயிற்சியினாலும் ஆகாரத்தினாலும் அவர்களுக்கு சாதாரண மனிதர்களைவிட

விசேஷமான கண்பார்வை உண்டாகியிருக்கிறது. அவர்களில் பெரும்பாலோர் சந்திர வெளிச்ச உதவியன்னியில் கூர்மையாகப் பார்க்கக்கூடும். சமீபத்தில் நடந்த ஒரு சண்டையில் இரவில் யுத்தம் செய்த தீக்ஷண்யத்திற்காக D. F. C. பரீக்ஷை பெற்ற ஒரு ஆகாய மாலுமி சந்திரன் மிகவும் பிரகாசமாக இருந்ததாக சொல்லுகிறார். உண்மையில் சந்திரன் பிரகாசம் அதிகமில்லை, அவர் கண் பார்வையின் நேர்த்தியே காரணமானது.

இரவில் சண்டை புரிவதற்கு தனி சாமர்த்தியம் வேண்டும். வேகமாய்ப் பறக்கும் ஒரு இன்ஜின் உள்ள குறைந்த சக்திஉள்ள ஆகாயக் கப்பல்கள் சண்டை புரிவதற்கு காற்று நிலைமை சரிவர இருக்கவேண்டும். அவ்வாறு இருந்தால் கொள்ளை கப்பல்களை (Raiders) சுலபத்தில் கண்டுபிடித்து, பகல் கால யுத்தம் போல் சீக்கிரமாக அவைகளை அழிக்கக்கூடும். ஆனால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ரெட்டை இன்ஜின் உள்ளதும், அதிக சக்தி உடையதும் வேகமுள்ளதுமான ஆகாயக் கப்பல்கள் எந்த இரவு ரெய்டருடனும் (Night Raider) சண்டை புரிந்து தொலைப்பதுடன், ஒரு தீப்பொறி அதை நாசம் செய்யும் என்று நிச்சயிக்கும் வரை சண்டை செய்யவும் முடியும்.

இரவு யுத்தத்தில் எல்லா சமயங்களிலும் நெருப்பு ஒருதரம் வெடிப்பதால், விரோதியின் கப்பல்கள் எரிக்கப்படுகின்றன என்பது ஒரு ஆச்சரியமல்ல. சண்டைக் கப்பல்களின் மாலுமிகளுக்கு அநேக பயங்கள் ஏற்படக் காரணமுண்டு. ஆகாய விமானப்படை எதிர்ப்பினால் உண்டாக்கும் நெருப்பை அபிவிருத்தி செய்தல், குடைக் கப்பல், செய்திக் கம்பிகள், சீதோஷ்ணத்தின் மாறுபாடுகள் இன்னும் இதர இதுபோன்ற விஷயங்களும் அப்பயங்களாவன. ஆனால் எச்சரிக்கையன்னியில் 100 கெஜதூரத்திலிருந்து வரும் சாலை ஒத்த பீரங்கிகளின் நெருப்பைவிட மேலே சொல்லப்பட்டவை எவ்வளவோ மேலானவை.

## பிரிடிஷ் ஆகாய விமானத்தின் நோக்கங்கள்.

பிரிடிஷ் விமானங்கள் இதுவரை பகல் வானங்களில் எதிரிகளுக்கு ஆபத்துகள் விளைவித்து வருகிறதுபோல், இரவு வானங்களிலும் விளைவிக்கவேண்டியது நோக்கமாக இருக்கிறது. இவ்விதமாக ஜெர்மானிய கோயரிங் அனுப்பத் துணியும் கொள்ளை ஆகாய கப்பல்களைக் குறைக்க நேரிடும். அவ்விதம் குறைந்தால், அதுவே ஜெர்மானியப் படைக்கு ஒரு அபஜெயமாகும். ஆகாய கப்பற்படையின் பலம் பூமியின் மேலிருக்கும் கப்பல்களின் எண்ணிக்கையைப் பொறுத்தது அல்ல, ஆகாயத்தில் சண்டையிடும் சக்தியைப் பொறுத்ததே ஆகும். இது சங்கதி தன் சங்கை ஊதும் இதாலிய ஆகாய விமானப்படைக்குத் தெரியும். அது ஒரு தோல்வியடைந்த படையாகும். ஏனென்றால், அது யுத்தத்துக்கு முன்வரத் துணியாது.

இரவு சண்டைபுரியும் ஆகாயக் கப்பல்களின் வேலை சம்பந்தமான விஷயம் விமானிகளிடமிருந்து வரவேண்டும். சமீபத்தில் நடந்த யுத்தங்களிலிருந்து மேற்படியார்கள் ரிபோர்ட்டுகள் கீழே சொல்லப்படுகின்றன.



1. "நான் ஒரு கொள்ளைக் கப்பலால் மூட்டப்பட்டத் தீயைக் காவல்செய்து கொண்டிருக்கும்பொழுது, ஒரு ஆகாய விமானக் கப்பல் தெற்கே செல்வதைப் பார்த்தேன். நான் உடனே அதனுடைய வாலின் கீழ்புறம் வந்தேன். வந்து ஹென்கல் 111 என்று அடையாளம் கண்டுபிடித்துக்கொண்டு உள்ளே சாத்திக் கொண்டேன். அந்த ஆகாய விமானப்படை கண் தூரத்திலிருக்கும்பொழுது இரண்டுமுறை ஒவ்வொன்றுக்கும் 4 செகண்டு நேரம் வெடி வைத்தேன். என்னுடைய இரவு சண்டைக் கப்பலின் தூசி போக்கி கண்ணாடி முழுதும் எண்ணையாகி, யந்திரம் புகையினால் மூடப்பட்டு இருந்தது. எதிரியின் ஹென்கல் போர்டு இன்ஜின் புகையைக் கக்கிக்கொண்டு இருந்தது. போர்டு கீழ்பாகம் கீழே இருந்தது. தனியாகத் தொங்கிக்கொண்டுயிருந்தது. ஆகாய விமானக் கப்பல் மேலே சுத்திக்கொண்டிருந்தது."

ஆகாய விமானி ஹென்கலை உபயோகமற்றதாகப் போய்விட்டது என்று விட்டுவிட்டான். உடனே அது மிட்லண்ட்ஸில் (Midlands) விழுந்து நொறுங்கிற்று.

2. "நான் கால் வாய்க்கு மேலே 8,000 அடி தூரத்திலிருக்கும் பொழுது கீழே ஏதோ பிரதி பிம்பிப்பது போல் சந்திர வெளிச்சத்தில் தெரிந்தது. அது கப்பலில் ஒரு கருமையான இடமாகத் தெரிந்தது. உடனே நான் ஒரு கப்பல் அங்கே என்ன செய்யக்கூடும் என்று கீழே வந்தேன். கீழே 7,000 அடி வந்தவுடன் நான் அதை விரோதியின் பீரங்கிக் கப்பல் என்றும் அது தன் தேசத்துக்கு போகிறது என்றும் தெரிந்துகொண்டேன். இன்னும் கீழே வந்தேன். என்னுடைய இன்ஜின் துப்பாக்கியால் இரண்டு ஒரு செகண்டு சூடுகள் போட்டேன். அதனுடைய குண்டுகள் கொள்ளைக் கப்பலின் முன்புறம் தாக்கினது. எதிரி கீழே சென்றான். நொறுங்கி கடலுக்குள் போய்விட்டது. நான் என்னுடைய படை பயிர்ச்சி செய்து முடிப்பதற்குள் எதிரி அநேகமாக தொலைந்து விட்டான்."

3. "உடனே நான் 50 கெஜ தூரத்தில் ஹென்கல் 111 ஒன்றை திடீரென்று பார்த்தேன். நாங்கள் சுட ஆரம்பித்தோம். ஒரு செகண்டு சூட்டுக்குள் கொள்ளைக் கப்பல் நெருப்பு பற்றிக்கொண்டது. நாங்கள் மேலும் ஆறு ஒரு செகண்டு சூடுகள் போட்டோம். ஹென்கல் இன்ஜின் பூராவும் நெருப்புப்பற்றி வெடித்து பூமியின் மேல் விழுந்தது. அதனுடைய வெடித்த துண்டுகள் நாலு வயலில் சிதறிக் கிடந்தன."

## விஷி கவர்ன்மெண்டின் அமுல்.

## லவாலைப் போல டார்லானும் மோசக்காரனு?

## பிரிடனுடன் கடல் யுத்தக் கனவு.

## பிடேனும் சகபாடிகளும்.

பாரீஸிலும், ஜெர்மானியர் வசமுள்ள பிரான்ஸின் பகுதியிலும், சில நாட்கள் வேவுபார்த்து, அப்போதுதான் "லிஸ்பனு"க்கு திரும்பிவந்த ஒரு கண்ணியமான மனுஷ்யர், தனக்கு அறிவித்ததான கதையை, "டேவிட் ஸ்காட்" என்ற, "நியூஸ் கிரானிகிள்" பத்திரிகையின் "லிஸ்பன்" நகர நிருபர், தான் விடுத்த 21—3—41ட தந்தியில் குறிப்பிட்டிருக்கிறார். தனக்கு சங்கதிகள் தெரிவித்தவர் பின்வருமாறு உரைத்ததாகக் கூறுகிறார். "லவாலைப்போல இப்போது டார்லான் பிரிடனுக்கு அபாயமுண்டாக்குபவராய் இருக்கிறார். உபதலைவராக நியமிக்கப்பட்டதிலும், பிடேனுக்கு வார்ஸாக அங்கீகரிக்கப் பட்டிருப்பதிலும், தன் சுயநலத்தைக் கருதியவனுகவே இருக்கிறார். ஆனுல் இவர் தானுக பிரெஞ்சுக் கடற்படையை ஜெர்மனிக்குக் கைமாற்றிக் கொடுக்கமுடியாது. ஏனெனில், (1) அவ்விதம் செய்வதில்லை என்று பிரிடனுக்கு வாக்களிக்கப் பட்டிருக்கிறது. (2) அவ்விதம் செய்தால் பிரெஞ்சுக் கடற்படை கட்டாயம் கலகம் செய்யும். ஆனுல் இந்தக் காரியத்தை உத்தேசித்தே, ஜெர்மனியின் தூண்டுதலின் பேரிலும், லவாலின் துர்போதனையினுலும் தான், பிரிடனுல் கையாளப்பட்டுவரும் கடல் 'முற்றுகை' முஸ்தீப்புகளுக்குப் புறம்பாக, காரியங் கள் செய்யப்பட்டுவருகின்றன.

"டாக்கர் யுத்தத்திலிருந்து மத்தியதரைக்கடலில் பிரிடிஷ் கடற்படையை பிரெஞ்சுப் படை வெல்லக்கூடும் என்பது டார்லானின் எண்ணம். அவர் ஒவ்வொருவரிடமும் 'பிரெஞ்சு சைனியத்தில், 100-க்கு 95-பேர்கள் பிரிடிஷார் ஜயமடையவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனுல், தாங்கள் நேரில் சண்டை செய்ய இஷ்டப்படவில்லை. பிரிடனை போர்புரியும்படி விட்டு இவர்கள் சும்மா இருக்கிறார்கள்' என்று சொல்லுகிறார்.

"மிச்சமுள்ள 100-ல் 5-பேர், ஜெர்மனியுடன் ஒத்துழைக்கவேண்டுமென்று தீவிரமாக முயற்சிப்பதுடன் இந்த வேனிர் காலத்துக்குள் ஜெர்மனி கட்டாயம் வெற்றிபெறும் என்ற நம்பிக்கையுடன் இருக்கின்றனர்.

"துர்அதிர்ஷ்ட வசத்தால் இந்த 100-க்கு 5 விகிதமுள்ளவர்களே அதிகார வர்க்கத்தினராகவிருக்கிறார்கள்.

"பிரெஞ்சுக்காரர்களின் இவ்வித மாறுபாடு அடைந்த மனப்பான்மை வருந்தத்தக்கதே. இதை நேரில் பார்த்தால்தான் உண்மை விளங்கும். பெரும் பான்மையோர் பிரிடிஷாரின் வெற்றியை விரும்பினுலும், தற்போது யோக்கியதை யற்றவர்களாகவும், ஏது செய்யவும் அசக்தர்களாகவும் இருக்கிறார்கள்.



"லவாலினுடையவும், அங்குள்ள பிரமுகர்களினுடையவும், ஒக்குமத்தின் பேரில், ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள பிரெஞ்சு தேசம் துப்புறவாக அடங்கிக் கிடக்கிறது.

"சில நாளைக்குமுன்தான் "லவால்", ஜனங்களில் பெரும்பாலோர் பிரிடி ஷாருக்கு வேண்டியவர்களாகவே இருக்கிறார்கள் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார். 'ஆனுல் அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. பிரகிருதம் நடை முதலில் பொதுஜன அபிப்பிராயங்கள் பிரயோஜனமற்றன. இதன் உண்மையும் சீக்கிரமே தெரியும். ஜெர்மானியர் பிரான்ஸில் இருக்கும்வரை எங்கள் இஷ்டம்போல் செய்வோம்' என்று அவர் சொல்லுகிறார்.

"சிறிதுகாலமாகவே அல்ப குற்றங்களுக்காக அநேகர் சுடப்பட்டிருக் கின்றனர். நான் பாரீஸ் நகரத்திலிருந்த சமயம், ஒரு பிரெஞ்சு மாஜி போலீஸ் காரன், ஜனங்கள் குறுக்கேபோவதற்கு என்று திட்டப்படுத்தப்பட்டிருந்த இடத்துக்கு அப்பால், ரோடுக்குக் குறுக்கே போனுன். அப்போது ஒரு ஜெர்மன் சிப்பாய் அந்த போலீஸ்காரனை பலவந்தப்படுத்தித் தள்ளிவிட்டான். போலீஸ் காரனும் யோஜிக்காமல் சிப்பாயை அடித்துவிட்டான். இதற்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. மறுநாள் போலீஸ் காரியாலயத்தில் ஒட்டப்பட்ட அறிக்கையி லிருந்து அவன் சுடப்பட்டுவிட்டான் என்ற செய்தி தெரியவந்தது.

"மேல் பதவியிலிருப்பவர்கள் குதூகலமிழந்தவர்களாயும் தங்கள் சுய நலத்தைமட்டில் தேடுபவர்களாயும் இருக்கிறார்கள். பிடேன் மட்டில் தனிமையாக எதிலும் பற்றற்றவராய் விளங்குகிறார். டார்லான் கடற்படை வெற்றிகளைப்பற்றிய கனவு காண்கிறார். மற்ற மந்திரிகள் "கிழவனைச்" சந்தோஷிக்கச் செய்ய அல்பமான காரியங்களை விசேஷமாக்கிக் காட்டி வருகிறார்கள்.

"பிரெஞ்சுக்காரர்கள் 'பிடேன் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் புதிய பிரெஞ்சு நாட்டின் பிரதிநிதி' என்ற நம்பிக்கைகொள்ள முயன்றுவருகிறார்கள்.

"பிடேனின் வார்த்தைகள் சட்டங்களாகவே கருதப்படுகின்றன. ஆனுல் அவனைப்போல் முதிர்ந்த வயதுள்ளவர்களானுலும் அவன் அவ்வளவு யோக்கியதை யற்றவர்கள்தான் காரியங்களை நடத்தி வருகிறார்கள். பிடேன் மனக்கவலை கொண்டால் அவனை திருப்திசெய்ய மந்திரிகள் புதிது புதிதான சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவருகிறார்கள்.

"பிரெஞ்சு ஜனங்களிடமிருந்து அபகரிக்கப்பட்டிருக்கும் "பிராங்கு" நாணயங்களைக் கொடுத்தே சட்ட பூர்வமான நடவடிக்கைபோல பிரெஞ்சு தொழிற்சாலைகளை, ஜெர்மானியர்கள் கைப்பற்றி வருகின்றனர். தினம் ஒன்றுக்கு 40,00,00,000 பிராங்குகள் வீதம் ஜெர்மனிக்கு பிரான்ஸை பாதுகாப்பதற்காக பிரான்ஸ் செலுத்தவேண்டியிருக்கிறது. ஆனுல் ஜெர்மனிக்கு வாஸ்தவத்தில் இதுவிஷயத்தில் ஒரு நாளைக்கு 12,50,00,000 பிராங்குகள்தான் செலவு

பிடிக்கிறது. மீதிப்பணம் பிரெஞ்சு தொழிற்சாலைகளை வாங்குவதற்கு உபயோகப் படுத்தப்படுகிறது. மேலும் அவைகளில் அநேகம் ஜெர்மனியின் தேவைகளுக்காகவே, தளவாடங்களைச் செய்துவருகின்றன."

---

## பிரெஞ்சு தேசத்திலுள்ள ஜெர்மானியத் துருப்புகளின் மனப்பான்மை.

## படையெடுப்புத் துருப்புகளிடையே சில்லரைக் கலகங்கள்.

## ஒரு அமெரிக்க கண்நோக்காளரிடம் படையினர் கூறிய விபரம்.

ஒரு விசேஷ நிருபர் எழுதிய கட்டுரையை "நியூஸ் கிரானிகிள்" பத்திரிகை பிரசுரிக்கிறது. அதில், சமீபகாலம்வரை அனுக்கிரமிப்பு பிரான்ஸ் பிரதேசத்தில் தன்னுடைய சொந்த கிராமப் பண்ணையில் வசித்து வந்த ஒரு அமெரிக்கா தேசத்தவர் தனக்குப் புலப்பட்ட விஷயங்களைக் கண்டிருக்கிறார். ஒரு பிரெஞ்சு ஆபீஸரிடம் ஜெர்மன் ஆபீஸர் "வெகுவேகமாய் இந்த தேசத்தை ஜயித்து விட்டோம். ஆனால் நாஸிகள் திரும்புங்காலம் வரும்பக்ஷத்தில் படு ஓட்டம் பிடிக்கவேண்டிவரும்" என்று கவலைக்குறியுடன் தலையை ஆட்டிக்கொண்டு ரகஸ்யமாய் உற்றாரிடம் சொல்லும் தோரணையில் சொன்னாராம். பிரிடன்பேரில் படையெடுக்க உத்தேசிக்கப்பட்ட ஜெர்மன் துருப்புகளும், அனுக்கிரமிப்பு பிரான்ஸில் வைக்கப்பட்ட இதர ஜெர்மன் துருப்புகளும் என்ன மனப்பான்மையுடனிருக்கிறது என்றும் அந்த அமெரிக்கர் அந்த நிருபருக்குத் தகவல் கொடுத்தார். "அந்தத் துருப்புக்களிடையே ஆழ்ந்த கவலைக்குறிகள் எவருக்கும் தெரியும் விதமாய்த் தோன்றுகிறது. அவர்களுடன் நீங்கள் கலந்து பேசினால், வாரங்கள் கழியக் கழிய, மிகுதியான தொந்தரவுக்குள்ளாகியிருக்கிறார்கள் என்றும் நன்றாய்த் தெரியும்—தவிரவும் அந்தத் துருப்புகளின் ஆபீஸர்களும்கூட ஏது இந்த நாஸி ஆதிக்கம ஒருக்கால் ஒழிந்துவிடுமோ. அல்லது கவலைக்கிடம் தரும்படி பாழாகி விடுமோ என்றுகூட அவநம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்" என்றார்.

### நாஸியின் வீண் பெருமை.

"அவர் ஒரு உதாரணம் சொன்னார். நான் ஒரு சிற்றுண்டி சாலைக்குள் புகுந்தேன். ஒரு நாஸி படையெடுப்பு சிப்பாயைச் சந்தித்தேன். அவன் 'தங்களிடம் உயர்ந்த ரக விமானங்களிருப்பதாயும், இங்கிலாந்தை விமானத்திலிருந்து விடுத்த வெடிகுண்டுகளால் நிர்மூலமாக்கிய பிறகு எப்பொழுது ஹிட்லர் இஷ்டப்படுகிறாரோ அப்பொழுது சேனை இங்கிலாந்தில் புகுந்துவிடும்' என்று பீத்திக் கொண்டான்.

"ஜெர்மன் சிப்பாய்கள் நல்ல குடிகாரர்கள். நாங்களிருவரும் வெகுநேரம் சம்பாஷணை நடத்தினோம். ஏதன்மத்தியில் அவன் நன்றாய்க் குடித்து விட்டான். அவன் அபிப்பிராயங்கள் பூராவும் மாறிவிட்டன. அவன் மெய்நம்பிக்கையுடனும், அழாக் குறையாகவும் என்னிடம் 'எங்கள் வீடு, பெண்டு, பிள்ளைகளை நாங்கள் பார்க்கப்போவதில்லை, இது நிச்சயம். இந்தக் க்ரூர யுத்தம் 10 வருஷ நடக்குமோ 30 வருஷ நடக்குமோ. எப்படிக்கும் நாங்கள் படுகொலைக்காளாகிவிடுவோம். இது நிச்சயம். பிறகு ஹிட்லரும் அவனைச்சேர்ந்த மகாபாதகக் கோஷ்டியாரும் ஓட்டமெடுத்து விடுவார்கள்; நாஸிகள் கொலைசெய்யப்படுவார்கள். ஒரு நாஸியும் தப்பித்துக்கொள்ள முடியாது. நான் இப்பொழுது சொன்ன எல்லாவற்றையும் ஞாபகம் வைத்துக்கொள்' என்று அவன் உள்ளத்தை வெளியிட்டான்.



### பிரசாரத் துணுக்குகள்.

"ஆக்கிரமிப்பு பிரான்ஸிலுள்ள இன்னும் அநேக ஜெர்மானியத் துருப்புகள் இம்மாதிரி மனப்பான்மையைக் காட்டும்படி வார்த்தைகளை என்னிடம் வெளியிட்டிருக்கிறார்கள்" என்றார் அந்த அமெரிக்கன். யுத்தத்தில் பிரமாத ஜயங்கள் ஜெர்மானியனுடையது. இருப்பினும் ஏன் யுத்தம் முடிவடையவில்லை என்பது அந்தச் சிப்பாய்களுக்கு ஒரு புதிர்போலிருந்தது என்றும்; தங்கள் ஊர்களிலிருந்து அவர்களுக்கு வரும் கடிதங்கள், அதாவது, விஷயங்கள், அவர்களைக் கொஞ்சமேனும் குஷிப்படுத்துகிறதில்லையென்றும், பல கடிதக்கூடுகள் உடைக்கப்பட்டு நாஸிப் பிரசாரத்துணுக்கு பேப்பர்கள்தான் அவைகளில் திணிக்கப்பட்டிருக்கிறது என்றும் அவர்கள் தாராளமாய்ச் சொல்லிக்கொண்டார்கள்."

இங்கிலாந்துமேல் படையெடுப்பதற்காக சிலரை பிரிடானி என்ற பிரஞ்சு பிரதேசத்தில் பழக்கி வந்தார்கள். அவர்களிடையே அநேக சிறு கலகங்கள் ஏற்பட்டனவாம். இந்தச் சம்பவங்கள் ஏற்பட்ட விவரம் நம்பத்தகுந்த நபர்மூலம் அவருக்கு வந்த செய்தி.

"பிஸ்கே விரிகுடாப் பக்கத்தில் நிறுத்திவைக்கப்பட்ட ஜெர்மானியத் துருப்புகளில் பலர் பிரின்னிஸ் மலைத்தொடரைத் தாண்டி ஸ்பெயினுக்கு திருட்டுத்தனமாய் ஓடிவிட்டார்கள். இப்படி ஓடிப்போனவர்களின் சங்கியை அதிகரிக்கவே வேறுயிடங்களுக்குத் துருப்புகளை யிட்டுச் சென்றுவிட்டனர்கள். இதிலிருந்து ஜெர்மானியத் துருப்புகளின் மனப்பான்மை எப்படி என்று தெரிகிறது. படையெடுப்பு ஆபத்து, தப்பிப் பிழைப்போம் என்ற ஒரே எண்ணம்தான்.

"நாஸி துருப்பு ஆபீஸர்களின் மனோதைரியமும் ஆடிப்போனதாகத் தெரிகிறது. சமீபத்தில் நான் பலருடன் பேசினேன். தன்பெருமையடித்துக் கொண்டதெல்லாம் பறந்தோடிப்போச்சு. நல்ல சாப்பாடு, நல்ல குடியல் கிடைத்தால் போதும். சாப்பாட்டு விடுதிகளில் வாய்விட்டு சங்கதிகளைச் சொல்லுகிறார்கள். பொதுவாக வரும்காலத்தைப்பற்றி அவர்கள் கவலைப்படுகிறார்கள். ஜெர்மனி இந்த யுத்தத்தை நிறுத்திவிடவேண்டுமென்று அபிப்பிராயத்தை பகிரங்கமாய்ச் சொன்னார்கள். ஒரு ஆபீஸர் "எங்களிடம் உற்பத்திப் பொருள்கள் குறைந்துவிட்டனவே, பெட்ரோல் எண்ணெய்ப் பஞ்சம் வந்துவிட்டதே, அமெரிக்காவும் நமக்கு எதிரியாக வந்துவிட்டார்கள் போலும். நாம் சாகும் காலத்திற்கு அங்குரார்ப்பணமாகிவிட்டது" என்றார்.

"ஒரு ஜெர்மன் ஆகாச விமான ஆபீஸர் இதாலியர்களைப் பற்றிப் பேசுகையில் 'இந்தப் படி முட்டாள்கள் தொடும் எந்தக் காரியமும் துலங்குகிறதில்லை. காரியத்தை சின்னாபின்னப்படுத்துவதில் வெகு சமர்த்தர்கள்! இவர்களை நமது கக்ஷியில் சேர்த்துக்கொண்டதே பிசகு' என்றான்.

"இப்படி இந்த ஜெர்மானியப் படைகளின் மனோபலம், தைரியம் நாளடைவில் குன்றி சுரத்தில்லாமல் போவதற்குக் காரணம் பெரும்பாலும் அந்த ஆக்கிரமிப்பு பிரெஞ்சுப் பிரதேசத்திலுள்ள பிரெஞ்சுக்காரர்கள் வெளிக்காட்டும் தோரணை தான். சமயம்வந்தால் அந்தப் பிரெஞ்சுக்காரர்கள் கைநழுவவிடுகிறதில்லை. ஒரு உதாரணம் கேளுங்கள். ஒரு பிரெஞ்சு ஸ்திரி வீட்டில் ஒரு டஜன் சிப்பாய்கள் தங்கியிருந்தார்கள். அவளிடம் அவர்கள் தங்கள் குழந்தைகளின் புகைப்படங்களை ஒருநாள் சாயந்திரம் காண்பித்தார்களாம். அந்த அம்மாள் கண்ணும் கண்ணீருமாக அவைகளைப் பார்த்துவிட்டு 'என்ன அருமையான குழந்தைகள்! ஐயோ பரிதாபம். அவைகள் கதிதான் என்ன. உங்களைப் பார்த்தால் எனக்கு வருத்தமாயிருக்கிறது. நீங்கள் அக்குழந்தைகளைப் பார்க்க முடியப்போகிறதோ' என்றாள்—அவ்வளவுதான் யாவரும் ஒருங்கே விம்மி விம்மி அழுதார்கள் என்று அவள் என்னிடம் சொன்னாள்.

"கடுமையான நாஸிக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி ஜெர்மன் துருப்புகள் கொஞ்சகாலம் நிலைத்து வேலைசெய்யலாம். ஆனால் அவர்களிடையே தோன்றி வளர்ந்துவரும் அதைரியமே, இந்த யுத்தத்தை அதி சீக்கிரத்தில் முடிப்பதற்கு முக்கிய ஆஸ்பதமாயிருக்கும் என்று நான் திடமாய் நம்புகிறேன்" என்று முடிவாக அந்த அமெரிக்க நிருபர் சொன்னார்.



## ஸிரியாவிலுள்ள பிரெஞ்சுக்காரர்களின் மனோநிலை. டி காலினிடம் அனுதாபம்.

ஆரெப்-ஓரியண்ட் என்னும் பத்திரிகையின் ஏஜெண்ட், ஒரு பிரெஞ்சு உத்தியோகஸ்தரை (அவருடைய பெயரையும் அதிகாரமுறையையும் வெளியிடக்கூடாது) பேட்டிகண்டபொழுது அவர் யுத்தத்தின் போக்கைப் பற்றியும் ஸிரியாவிலுள்ள பிரெஞ்சுக்காரர்களின் மனோநிலையைப், பற்றியும் சில முக்கியமான அபிப்பிராயங்களை வெளியிட்டார்.

பிரான்ஸுக்கு வெளியேயுள்ள நாடுகளில் அமைக்கப்பட்டிருக்கும் பிரெஞ்சுச் சைனியங்கள் சமீப காலத்திலோ அல்லது கொஞ்சம் கிரமித்தோ எதிரிகளுக்கு விரோதமாக யுத்தம் செய்ய ஆரம்பித்துவிடும். இம்மாதிரியான ஒரு இயக்கம் ஏற்கனவே உண்டாகிவிட்டதென்பதற்கு ஹேஷ்யங்களிருக்கின்றன. ஆக்கிரமணம் செய்யப்பட்ட பிரெஞ்சு நாடுகளிலுள்ள ஜனங்களைக் கேவலமாகவும் தராதரமில்லாமல் நடத்துவதும், ஆல்ஸாஸ், லோரனிலுள்ள ஜனங்களை ஊரைவிட்டுத் துரத்தியதும், இந்த இரண்டு பிரெஞ்சு மாகாணங்களை சின்னாபின்னப் படுத்தியதும், பிரான்ஸிலுள்ள சொத்துக்களை ஜெர்மானியர்கள் தவறன்னியில் கொள்ளையடிப்பதும், எல்லாப் போர்முனைகளிலும் பிரிடிஷாருக்கு ஏற்பட்ட திலாக்கியமான வெற்றிகளும், இதாலியின் வீழ்க்காடும், கிரேக்கர்களின் உயர்தரமான வெற்றிகளும், துருக்கியின் தீரமான மனோநிலையும், ஆபிரிக்காவின் போர் முனைகளில் சுயேச்சை பிரெஞ்சு துருப்புகள் கலந்து யுத்தம் செய்ததும், சுயேச்சை பிரெஞ்சு ஜனங்களின் இயக்கத்தை நாம் எல்லோரும் அனுதாபத்துடன் ஆதரிக்கிறதும்—இவையெல்லாம் பிரெஞ்சு ஜனங்களும் பிரெஞ்சு சைனியங்களும் மறுபடியும் யுத்தம் செய்ய ஆரம்பிப்பார்களென்ற என்னுடைய அபிப்பிராயத்தை ஊர்ஜிதப்படுத்துகின்றன.

சமுத்திரத்துக்கப்பாலிருக்கும் பிரெஞ்சு நாடுகளிலிருக்கும் ஜெர்மானிய, இதாலிய, தூதுகோஷ்டிகளைப்பற்றி, ஸிரியாவிலும், லெபானிலும் இதாலிய தூதுகோஷ்டியின் வேலை முற்றிலும் நிஷ்பிரயோஜனமற்றதாகப் போய்விட்டதென்று அந்த பிரெஞ்சு உத்தியோகஸ்தர் அறிவிக்கிறார்.

பிரிடிஷ் அதிகாரத்துக்குட்பட்ட பிராந்தியத்தில் ஒரு பிரதேசத்தில் ஸ்தாபித்துக்கொள்ள ஜெர்மானியர்கள் முயன்றார்கள். அது பயன்படவில்லை. அவர்கள் வட ஆபிரிக்காவுக்குள் புகுந்துவிட்டார்களென்று நாம் அறிகிறோம். ஆனால் பிரெஞ்சு சாம்ராஜ்ஜியத்தின் ஒரு பாகமாகிய அப்பிரதேசத்திலுள்ள தேசபக்தர்களான பிரெஞ்சுக்காரர்கள் ஜெர்மானியர்கள் அதை ஆக்கிரமணம் செய்வதைத் தடுத்துவிடுவார்களென்று நாம் நம்புகிறோம்.

பிரெஞ்சு சாம்ராஜ்ஜியத்தின் அந்தபாகத்திலுள்ள சேனைகளுக்கு ஆசைபிடித்த இதாலியர்களோடு யுத்தம் செய்து டிரிபோலிடானியா, ஸிரினெய்கா

பிரதேசங்களைக் கைப்பற்றிய நிகழ்ச்சியில் கலந்துகொள்ள சந்தர்ப்பமில்லாமல் போய்விட்டதென்பது விசனிக்கத்தக்கது.

இருந்தபோதிலும், ஸிரியாவிலுள்ளவர்களும் லெபானிலுள்ளவர்களும் அவ்விடங்களில் நன்கு பிரசித்திபெற்ற ஜெனரல் டி கால், அவனுடன் ஒத்துழைக்கும் ஜெனரல்களான காட்ரு, டி. லார்மினட் இவர்களிடம் அனுதாபம் காட்டுகிறார்கள். இந்த மனோநிலை அவர்களிடம் சகஜமாகக் குடிகொண்டிருக்கிறது. ஏனென்றால், அவர்களுக்கு சுதந்திரமும் சுயேச்சையும் அடைவதற்கு அதிக ஆசை உண்டு. சுயேச்சை பிரெஞ்சுக்காரர்களின் இயக்கமானது பிரெஞ்சு தேசத்தை விடுவிப்பதற்கும் அதன் சுயேச்சையை மறுபடியும் அடைவதற்கும் தான் ஏற்பாடுசெய்துவருகிறது.

---

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

---

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### பெர்லின்மேல் வெடிகுண்டுகள்.

சில தினங்களாக, இங்கிலாந்தில் செய்யப்பட்டிருக்கும் புது விமானங்கள் பெரிய வெடிகளைக்கொண்டுபோய் ஜெர்மனியில் போட்டு, அதிக நஷ்டத்தை உண்டாக்கிவருகின்றன. ஏப்ரல் 9-ம் தேதியன்று பல வெடிகள் பெர்லின்மேல் விழுந்தன. 'வெடிகள் மச்சில்தான் விழுந்தன, வெட்டவெளியில்தான் விழுந்தன' வென்று இதுவரையில் பழுதுபடாததுபோல் பாசாங்கு செய்துவந்ததையெல்லாம் மறந்து, இப்பொழுது ஜெர்மனி ஊளையிடத் தலைப்பட்டுவிட்டது. அதற்கு அன்று பெர்லின் தவிடுபொடியானதுதான் காரணம். இந்த எதிர்ப்பைப் பற்றி நாஸி ரேடியோ பின்வருமாறு ஒலிபரப்பியிருக்கிறது :—

'பலமாய் வெடிக்கக்கூடிய கொள்ளி வெடிகள் ஏராளமாய் தலைநகரில் போடப்பட்டன. இதிலிருந்து பிரிடிஷ் விமானங்களின் கொடுமை வெளிப்படுகிறது. ஜெர்மானியக் கல்வியாதார, சித்திர, சிற்ப பொருள்களடங்கிய கட்டடங்களெல்லாம் அழிக்கப்பட்டன. அன்டர்-டென்-லிண்டனிலிருக்கும் ஸர்க்கார் நாடகமேடையும், ஸர்க்கார் புஸ்தகசாலையும், கண்காக்ஷி சாலைகளும், இன்னும் பல பேர்போன ஸ்தாபனங்களும் பழுதுபட்டன. ஆஸ்பத்திரி ஒன்று தாக்கப்பட்டு, அதிலுள்ள சோதனைக்கிரகமும், ரஸாயன சாலையும் அழிந்து போயின. வாசஸ்தலங்களில் குண்டுபட்டு, பொது ஜனங்கள் மாண்டார்கள்.'



இவ்விதம் அநியாயம் செய்யப்பட்டு விட்டதாக ஓலமிடும் ஜெர்மானியர்கள் செய்த அக்கிரமங்களைச் சற்று கவனிப்போம். இவர்கள்தான், போலண்டு, பெல்ஜியம், ஹாலண்ட், பிரான்ஸ் தேசங்களில் குழந்தைகளையும், ஸ்திரீகளையும் யந்திர பீரங்கிகளைக்கொண்டு சுட்டது. அம்மாதிரியாக இப்பொழுது பால்கனிலும் செய்திருக்கிறார்கள். சென்ற கோடையில் ராட்டர்டாம் நகரில் இரண்டு மணி நேரத்துக்குள்ளாக 40,000 பொதுமக்களைக் கொன்றார்கள். பிரிடனில் அரண்மனை முதற்கொண்டு வேல்ஸிலுள்ள குடிசை வரையில் வெடிகள் போட்டு, 2,000 ஆலயங்களையும், அநேக பள்ளிக்கூடங்களையும், ஆஸ்பத்திரிகளையும், பூர்வீகமான கட்டடங்களையும் நாசப்படுத்தி விட்டார்கள். ஹிட்லர் ஸமஸ்தானம் போலி ஸமஸ்தானம். அவருடைய தலைநகரத்தில் கட்டடங்கள் இருளடைந்தவை. பிரிடனில் சேதமான கட்டடங்கள் எவ்வளவோ அழகும், பூஜ்ஜியதையுமுள்ளவை.

### நடுநிலை நாடுகளிலிருந்து வந்த செய்தி.

9-ம் தேதி எதிர்ப்பில் பெர்லினிலிருக்கும் முக்கிய ரயில்வே ஸ்டேஷனும், வில்ஹெல்ம் ஸ்டாராஸும் அதைச் சுற்றியும் தீப்பற்றி யெரிந்து, மறுநாள் உச்சிக் காலம்வரையில் அணைத்துக்கொண்டிருந்ததாக நடுநிலை நாடுகளிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. வில்ஹெல்ம்ஸ்டாரஸில் கல்வி, சித்திர நிலயங்களிருக்கின்றன. இவைகளிலிருந்துதான் ஜெர்மன் கல்வியும் நாகரீகமும், ஐரோப்பாவிலும் அதைச் சிறைப்பிடித்த பிறகு, உலகத்திலும் பரவப்போகின்றன. இக் கட்டடங்கள் எல்லாம் சிதைக்கப் பட்டதைப்பற்றி ஜெர்மன் ரேடியோ பிரஸ்தாபிக்கவேயில்லை.

### பெல்கிரேட் கோட்டையாம்.

பெர்லின் விமான எதிர்ப்பைப் பற்றி நாஸிகள் புலம்புவதெல்லாம் கபடமென்பதற்கு அவர்கள் பெல்கிரேட் நகரத்தை வெகுவாக அழித்துவிட்டு அதைப் பற்றி சில வாரங்களாகக் களிப்பதே அடையாளமாகும். தாங்கள் செய்த மிருகத்தனமான காரியத்துக்கு பெல்கிரேட் ஒரு கோட்டை நகரமென்றும் அதிலுள்ள ராணுவ ஸ்தலங்களை சேதப்படுத்தவேண்டிய அவசியமேற்பட்டதென்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

பெல்கிரேடானது எல்லைப்புறத்திலிருப்பதால் பாதுகாப்பில்லாத நகரமென்று யூகோஸ்லாவ் அரசாங்கம் முன்னுகவே பிரசுரித்தது உலகமறியும். பழைய காலத்து அழகிய கோட்டையொன்று பெல்கிரேடிலிருப்பது உண்மையே. ஆனால் நவீன யுத்தத்துக்கு அது லாயக்கானதில்லை. இது டில்லியிலிருக்கும் புராண கிலாவைப்போன்ற ஒரு கோட்டை. இதை யெதிர்க்கவா ஜெர்மானிய விமானங்கள் நூற்றுக்கணக்காய் வந்தன. இதற்காகவா ஊரிலிருந்த குழந்தைகளையும், ஸ்திரீகளையும், கிழவர்களையும் கொன்றார்கள்,

## B.—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

### நொண்டிச் சாக்கு.

1940-ம் வருஷம் நவம்பர் மாதத்திலேயே பிரிடிஷ் துருப்புகள் கிரீஸிலும் அல்பேனியாவிலும் இறக்கப்பட்டதாக டைம்ஸ் பத்திரிகையும், பி. பி. ஸியும் சொல்லியிருக்கிறதாக ஜெர்மனி இந்துஸ்தானியில் ஏப்ரல் 8-ம் தேதியன்று ஒலி பரப்பியிருக்கிறது. 1940-ம் வருஷம் அக்டோபர் 28-ல் இதாலியர்கள் கிரீஸைப் படையெடுத்தபோது பிரிடிஷ் படையொன்று கிரீட் தீவிலிறக்கப்பட்டதுண்டு. ஆனால் ஜெர்மன் படைகள் பல்கேரியாவுக்கு வந்து, ஜெர்மன் படையெடுப்பு ஊர்ஜிதமாகிற வரையில் பிரிடிஷ் படைகள் கிரீஸுக்குள் கொண்டுவரப்பட வில்லை. இதைப்பற்றி ஏப்ரல் 6-ல் விசேஷ அறிக்கை ஒன்றை பிரிடிஷ் ராணுவ இலாகா வெளிப்படுத்தியிருக்கிறது.

### பொய்க்கு மேல் பொய்.

கிரீஸின் மேல் ஜெர்மனி படையெடுத்தது நிஷ்காரணமாகும். இருந்த போதிலும் பிரிடிஷ் படையை இறக்கியது காரணமாக சாக்குச்சொல்லிற்று. இப்பொழுது அதற்கெதிரிடையாக நேயர்களை பிரிடன் கைநழுவ விட்டதாகவும் சொல்லுகிறது. உண்மை எது? சென்ற யுத்தத்தில் இதே சாட்டுமிருண்டிகளை யெதிர்க்கும் போது பிரிடனுன்று கிரீஸ், யூகோஸ்லாவியாவோடு சேர்ந்து கொண்டு யுத்தத்தை நடத்தவில்லையா?

ஜெர்மனியானது பிரிடிஷ் துருப்புகளை பால்கனில் அணுகுவதற்குள்ளாகவே கிரேக்கர்களைப் பார்த்து நியூஸிலண்டு துருப்புகள் சுடுவதாயும், கிரேக்கர்கள் சரணாகதி செய்யக் கட்டாயப்படுத்த பாலமொன்றை பிரிடிஷ் படை உடைத்து விட்டதாயும் பொய்க்கதைகளைக்கட்டி ஏப்ரல் 11-ல் இந்துஸ்தானியில் ஒலிபரப் பப்பட்டிருக்கிறது.

இதெல்லாம் முழுப்பொய்யென்று ஜெர்மானியருக்கே தெரியும். இதைப் பிரசுரிப்பதற்குக் காரணம், இதை மறுப்பதிலிருந்து பிரிடிஷ் படை நிற்குமிடத் தைத் தெரிந்து கொள்ளலாமென்பதுதான்.

### நாஜி 'தெய்வம்'

பிரிடன் ஜெர்மனிமேல் படையெடுப்பதாக யுத்த-விளம்பரம் செய்தபோது ஜெர்மானியர்கள் கடவுளை வழிபட்டுக்கொண்டிருந்தார்களாம். இப்படியாக இந்துஸ்தானியில் ஏப்ரல் 7-ல் ஒரு ஜெர்மனிக்காரர் ஒலிபரப்பியிருக்கிறார்.

1939 ஸெப்டம்பர் 3-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை யன்று பிரிடனும் பிரான்ஸும் ஜெர்மனிமேல் போர்தொடுத்தன. அதே சமயத்தில் போலண்டி லிருந்தவர்களை குடும்பம், குடும்பமாக விரட்டி ஜெர்மானியர் சுட்டுக் கொண்டிருந் தார்கள். இதுதான் அவர்கள் செய்துகொண்டிருந்த கடவுள் வழிபாடு.



### கெரெனில் ஏற்பட்ட சேதம்.

கெரன் யுத்தத்தில் 15,000 இந்திய சிப்பாய்கள் கொல்லப்பட்டதாக ஜர்னல்-டி-இதாலியாவில் சொல்லப்பட்டதாக இந்துஸ்தானியில் ஜெர்மனி ஏப்ரல் 11-ல் ஒலிபரப்பியிருக்கிறது.

இந்தக் கெரன் சண்டையில் பிரிடிஷ் சாம்ராஜ்ஜியப்படைகளுக்கு மொத்த மாக ஏற்பட்ட பழுது 4,000-தான்; இந்தத்தொகையில் காயமடைந்தவர்களும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

# முக்கியமான விளம்பரம்.

## யுத்த சம்பந்தமான புகைப்படங்கள்.

ஸ்ரீ-தர்பார் அவர்கள் உத்தரவின் பேரிலும், அவர்களின் அன்பார்ந்த உதவியின்பேரிலும், புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயத்தின் மெம்பர்கள் இதுமுதல் பிரசங்கங்களுக்கு வெளியூர்களுக்குப்போகும் காலத்தில் யுத்தத்தின் வெவ்வேறு அம்சங்களை விளக்கிக்காட்டக்கூடிய புகைப் படங்களின் கோர்வைகளையும் எடுத்துக்கொண்டு போய் ஜனங்களுக்குக் காண்பிக்க வசதி ஏற்பட்டிருக்கிறதென்று யுத்த அறிக்கை நிலயம் சந்தோஷத்துடன் அறிவிக்கிறது.

இந்த நிகழ்ச்சிகள் யுத்தம் நடக்கும் பிரதேசங்களில் 'இருபதாவது நூற்றாண்டு பாக்ஸ் பிலிம் கம்பெனி'யாரால் எடுக்கப்பட்ட புகைப்படங்களும், பம்பாய் துரைத்தனத்தாரைக்கொண்டு இந்திய கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கும் ஒரு சங்கத்தாரால் இந்தியா சம்பந்தமான சில விஷயங்களைப்பற்றி தயாரிக்கப்பட்ட புகைப்படங்களும் சேர்ந்தவைகள். ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் மூன்று தனித்தனிப் படங்கள் காட்டப்படும். இந்தப் படங்கள் காண்பிப்பதால் யுத்த அறிக்கை நிலயத்தின் பிரசங்கங்களுக்கும், மேற்படி நிலயத்தின் வாரப்பதிப்பு புஸ்தகத்துக்கும் அதிக மதிப்பு ஏற்படக்கூடுமென்று யுத்த அறிக்கை நிலயம் நம்புகிறது.

புதுக்கோட்டையின் யுத்த நிதிக்காக உழைத்துவரும் கமிட்டியார் யுத்த அறிக்கை நிலயத்திற்கு ஒரு மோட்டார் வண்டியை நன்கொடை அளித்திருக்கிறார்கள். இந்த வண்டியில் புகைப்படம் காண்பிவிக்கக்கூடிய யந்திரங்களையும், திரைகளையும், புகைப்படங்களையும் பிரசங்கம்செய்யும் ஸ்தலங்களுக்கு எடுத்துச்செல்ல சௌகரியமாயிருக்கும். ஆனால், இம்மாதிரி புகைப்படங்களோடுகூடிய பிரசங்கங்களைச்செய்ய வசதி ஏற்படுத்திக் கொள்ளவும், ஒவ்வொரு இடத்திலும் மாதாமாதம் ஒவ்வொரு புதிதான படக்கோர்வையைக்காண்பிக்கவும், பிரசங்க ஸ்தலங்களையும் அறுபது இடங்களுக்கு அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டை ஸமஸ்தான வாசிகள் முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டியவைகள் என்னவென்றால் :—

(a) பிரசங்கங்கள் சாதாரணமாக **மாலை 6** அல்லது **6-30 மணிக்குத்** துவக்கப்படும்.

(b) யுத்த அறிக்கை நிலயத்தின் மோட்டார் ஒருநாளில் இரண்டு ஊர்களுக்குச்செல்ல வேண்டியிருப்பதால் பொதுஜனங்கள் **தவராமல் குறிப்பிட்ட டயத்தில்** பிரசங்கம் செய்யப் போகுமிடத்தில் ஆஜராகியிருக்க வேண்டும்.

இந்தப்படங்களை ஆயிரம் பேர்களுக்குக்குறையாமல் சௌகரியமாய்ப் பார்க்கக்கூடுமென்று அனுபவத்தில் தெரிகிறது. ஆகையால் உங்கள் கிராமத்தில் பிரசங்கம் செய்யப்படுமென்று பிரசுரம் செய்த அளவில்,

**அந்த இடத்தில் கூடுங்கள்,**
**சரியானபடி குறிப்பிட்ட டயத்தில் வாருங்கள்.**



# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் XLI.

| | | | | | | மணி. |
|---|---|---|---|---|---|---|
| 1941— | | | | | | |
| ஏப்ரல் ... | 27, ஞாயிற்றுக்கிழமை. | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 28, திங்கட்கிழமை ... | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | | ,, | 5.00 |
| | | செம்மட்டிவிடுதி | ... | ,, | 6.00 |
| | | மழையூர் | ... | ,, | 6.30 |
| | 29, செவ்வாய்க்கிழமை. | அண்டக்குளம் | ... | ,, | 6.00 |
| | | கிள்ளனூர் | ... | ,, | 6.30 |
| | 30, புதன்கிழமை ... | காரையூர் | ... | ,, | 6.00 |
| | | கீழத்தானியம் | ... | ,, | 6.30 |
| மே ... | 1, வியாழக்கிழமை. | புலியூர் | ... | ,, | 6.00 |
| | | கண்ணன்குடி | ... | ,, | 6.30 |
| | 2, வெள்ளிக்கிழமை... | கொனையூர் | ... | ,, | 6.00 |
| | | மேல வேகுபட்டி | ... | ,, | 6.30 |

## பிரஸங்கம் XLII.

| | | | | |
|---|---|---|---|---|
| 3, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | ,, | 6.30 |
| 4, ஞாயிற்றுக்கிழமை. | குளவாய்ப்பட்டி | ... | ,, | 6.00 |
| | வேங்கடக்குளம் | ... | ,, | 6.30 |
| 5, திங்கட்கிழமை ... | திருவரங்குளம் | ... | ,, | 6.00 |
| | வம்பன் | ... | ,, | 6.30 |
| 6, செவ்வாய்க்கிழமை. | மேலூர் | ... | ,, | 6.00 |
| | பில்லமங்கலம் | ... | ,, | 6.30 |
| 7, புதன்கிழமை ... | கடயக்குடி | ... | ,, | 6.00 |
| | பிரட்டுநிலை | ... | ,, | 6.30. |
| 8, வியாழக்கிழமை ... | வெள்ளனூர் | ... | ,, | 6.00 |
| | புத்தாம்பூர் | ... | ,, | 6.30 |
| 9, வெள்ளிக்கிழமை... | ஒலிக்கூர் | ... | ,, | 6.00 |
| | நாங்குப்பட்டி | ... | ,, | 6.30 |

புதுக்கோட்டை ஸமஸ்தானம்

யுத்த நிதிக்காக போடப்படும்

# அதிர்ஷ்டச் சீட்டு.

(ஸ்ரீ-தர்பாரவர்கள் உத்தரவின்பேரிலும் ஆதரவின் பேரிலும் புதுக்கோட்டை யுத்தநிதி என்டெர் டெயின்மெண்ட் கமிட்டியாரால் நடத்தப்படுகிறது.)

## இந்த யுத்த நிதியை ஆதரியுங்கள்

டிக்கெட்டுகளை வாங்குங்கள்

**முடிவு தேதி 15—6—41**

**சீட்டு குலுக்கும் தேதி 23—6—41**

நமது மன்னர் அவர்களின் வருஷவர்த்தனை தினத்தன்று அதிர்ஷ்டசாலிகளுக்கு ஏராளமான பரிசுகள்.

**300 பரிசுகள்.**

| | | |
|---|---|---|
| 1-வது பரிசு | ரூபாய் 7,500 | |
| 2-வது பரிசு | ,, 5,000 | |
| 3-வது பரிசு | ,, 2,500 | |
| 2 பரிசுகள் | ,, 1,000 | வீதம் |
| 5 ,, | ,, 500 | ,, |
| 90 ,, | ,, 100 | ,, |
| 100 ,, | ,, 50 | ,, |
| 100 ,, | ,, 15 | ,, |

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—27-4-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ௵ மே௴ 3௳ [ந. 42.

பிரஸங்கம் XLII.

## யுத்தமும் பஸிபிக் மஹாசமுத்திரமும்.

நாம் இப்பொழுது எடுத்துக்கொண்டிருக்கும் விஷயம் யுத்தமும், பஸிபிக் சமுத்திரமும். இதை அச்சிடுவதற்கு முன்னால் "பஸிபிக் சமுத்திரத்தில் யுத்தம்" என்று நிலைமை மாறினாலும் மாறலாம். இப்பொழுதுகூட அம்மாதிரி வாசிக்கலாம். ஆனால் இப்பொழுது ரத்தம் சிந்தாத போர் நடந்துவருவதோடு அது அதிகரித்துக் கொண்டுவருகிறது. இவ்வளவு விதமான பெரிய கவலைகளுக்கு இடையே இந்த பஸிபிக் சமுத்திரப் பிரச்னை பிரிட்டனுடைய ஏகதேசப் பொறுப்பாக இல்லாமலிருப்பதும் ஒரு அதிர்ஷ்டமே. ஆயினும் அதனுடைய முடிவில் பிரிட்டனுக்கும் பெரிய அக்கரை உண்டு. அந்தப் பிரச்னையில் பொறுப்புள்ள நான்கு ராஜ்ஜியங்களில் மூன்று இன்னும் உலக யுத்தத்தில் கலந்துகொள்ளவில்லை.

பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்தின் அங்கத்தினராகயிருப்பதால் ஆஸ்திரேலியா மட்டும் யுத்தத்தில் ஈடுப்பட்டிருக்கிறது. இதர வல்லரசுகளாவன: ருஷ்யா, ஜப்பான், அமெரிக்கா இம்மூன்றும். இம்முறையில் ருஷ்யா சில கண்டிஷன்கள் பேரில் யுத்தத்தில் இறங்கியிருக்கிறதெனலாம். இதர முக்கியமான கக்ஷிக்காரர்களைப் பற்றிப் பேசுவதற்குமுன் ருஷ்யாவைப்பற்றிச் சுருக்கமாக கவனிக்கலாம். ருஷ்யாவின் கிழ்பிரதேச நோக்கங்கள் ஜப்பானுக்கு ஒரு ஆள்மருட்டியாகவே இருந்து வந்திருக்கிறது. ருஷ்யா ஜப்பானுக்கு ஒரு பஹிரங்கமான சத்துருவாக, இருக்கும்வரை, ஜப்பான் பஸிபிக் சமுத்திரத்தில் தன் தேசிய பிரவிருத்தியை நடத்திக்கொள்ள இயலாது. அது போலவே ஜப்பானுக்கு விரோதமான ருஷ்ய

ராஜ்ஜியக் கக்ஷிகளும் ஜப்பானை அதன் தெற்கிலும், கிழக்கிலுமுள்ள கடலில் யுத்தத்தில் இழுத்துவிட்டுக் களிக்க நினைக்கிறார்கள். ஸ்டாலினும், மத்ஸூவோகாவும் சற்று முன் செய்துகொண்ட நட்பு ஒப்பந்தத்தை நாம் நினைத்துக்கொண்டால், ருஷ்யாவும் பஸிபிக் சமுத்திர சம்பவங்களில் அக்கரை கொண்ட அரசுகளில் ஒன்று என்று நான் சொல்வது தவறல்லவென்று நினைத்து, ஜப்பானைப்பற்றி, கவனிக்க ஆரம்பிப்போம்.

சென்ற நூற்றாண்டு மத்தியில் ஜப்பான் உலகத்தின் முன்னுக்கு வந்தது. மேனாட்டு நாகரீகத்தையும், அதன் தொழில் முறைகளையும் பின்பற்றி அவ்வாறு வந்தது. பின்னர் அம்மேனாட்டுக் கொள்கைகளில் அவ்வளவு சிலாக்கியமில்லாத சில கொள்கைகளைக் கடைப்பிடித்தது. "பலோ ராஜா பிருதிவீ" என்ற முரட்டுக் கொள்கையை சமயத்துக்குத் தக்கவாறும் வெட்கமற்ற சுயநலத்துடனும் அனுஷ்டித்து வந்தது. இந்த விஷயத்தில் இதர ஸர்வாதிகார நாடுகளைப் போலவே நடந்துவந்தது. அவர்களைப்போலவே ஜப்பானும் "ஒரு புதிய திட்டம்" என்று விளம்பரப்படுத்தி, அதற்கு இரையான ஜனங்கள் அந்த திட்டத்தை வரவேற்க வேண்டுமென்றும் எதிர்பார்த்தது.

## பேராசை கொண்ட ஜப்பான்.

சென்ற யுத்தத்தில் ஜப்பான் பிரிட்டனுடன் நேசமாகயிருந்தது. தற்பெருமையால் அவ்வாறு சேர்ந்து கொண்டது. அவ்வாறு சேர்ந்துகொண்டால் தானும் மேனாட்டு வல்லரசுகளுக்கு சமதையாவோமென்று நினைத்துக்கொண்டது. 1915-ம் வருஷத்தில் வெகு அநீதியான 21 அபேக்ஷைகளை சைனாவுக்கு அளிக்கவே எங்கும் அதன்பேரில் சந்தேகமும் அருவருப்பும் உண்டாயிற்று. அதன் சத்துருக்கள் அதைக் கண்டிக்க ஒரு வியாஜமும் கிடைத்தது. ஆகையால் 1921-22-ம் வருஷத்திய வாஷிங்டன் மகாநாட்டில் மேற்படி அபேக்ஷைகளில் பெரும்பான்மையை வாபஸ் வாங்கிக்கொண்டு ஷிங்டா பிரதேசத்தைக் காலி செய்தது. வட பஸிபிக் தீவுகளில் ஆமுல்கொண்டதைத் தவிர வேறு ஒன்றும் கிடைக்கவில்லை. ஆயினும் ஜப்பான்பேரில் அமெரிக்காவிற்குள்ள அவநம்பிக்கை போகவில்லை. 1924-ம் வருஷத்தில் குடியேற்றத்தைத் தடுக்கும் ஒரு சட்டத்தை அமெரிக்கா செய்து, ஜப்பான் குடியேறமுடியாதபடி தடுத்துவிட்டது. இது ஜப்பானைக் கோபமூட்டியது. மற்றொரு இடத்தில் தங்கள் சேஷ்டைகளைக் காட்ட நினைத்து 1927-ம் வருஷத்தில் டனாகா ஞாபகக் குறிப்பு என்று இப்பொழுது உலகமறியும் ஒரு தஸ்தவேஜை ஜப்பான் தயார் செய்தது. அக்குறிப்பில் பின்வரும் வார்த்தைகளை நாம் படிக்கலாம். "இனிமேல் சீனதேசத்தை நாம் ஆதீனப்படுத்த வேண்டுமானால், அமெரிக்காவை நாம் நசுக்கவேண்டும்." சென்ற பத்து வருஷங்களாக ஜப்பான் மேனாட்டு அரசுகளிடம் சிநேக பாவத்தைக் காட்டுவதாகச் சொல்லிக்கொள்ளக்கூட இல்லை. சர்வதேச சங்கத்திற்கு விரோதமாக பகிரங்கமாக நடந்துகொண்டது. 1931-ம் வருஷம் மஞ்சூகுயோ என்ற சீன ராஜதானியை ஜப்பான் வியாபித்துக்கொண்டது. சர்வதேச சங்கத்திலிருந்து 1933-ம் வருஷத்தில் விலகிக்கொண்டது. 1935-ம் வருஷம் முதல் அந்த ராஜீநாமா அமுலுக்கு வந்தது.



அந்தக் காலம் முதலே ஐரோப்பிய அரங்கத்தில் நாஸி ஜெர்மனி பிரவேசித்து ஸர்வாதிகாரத்துவ கொள்கைகளையும் உயிர்வாழ இடம் வேண்டுமாகையால் வியாபித்துக்கொண்ட மட்டும் லாபம் என்ற கொள்கைகளையும் பரப்பி பெரிய குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. பண்டைகால ஜப்பானுக்கு இக்கொள்கைகள் எல்லாம் வெகு ஹிதமாகத் தோன்றின. அந்த சமயம் சைனாவில் அராஜகம் பரவவே ஜப்பானுக்கு ஸர்வாதிகார கொள்கைகளின் ருசி அதிகரித்தது. "தன் விதிப் பயனை அடையவே" என்று சொல்லிக்கொண்டு 1937-ம் வருஷம் ஜூலை மாதத்தில் ஜப்பான் சீனதேசத்தைத் தாக்கிற்று. சர்வதேச சமூகத்தை எதிர்க்கும் கக்ஷியில் 1936-ம் வருஷம் நவம்பர் மாதத்திலேயே ஜெர்மனியுடன் சேர்ந்து கையெழுத்திட்டிருந்தது. புதிய ஜப்பானிய ஸர்க்கார் ஜப்பானில் ஒரு அரசியல் கட்டடம் அமைக்கப்போவதும், சீனதேசப் போரை வெற்றியுடன் முடிக்கப்போவதும், கிழக்கு ஆசியாவில் ஒரு புதிய ஏற்பாட்டை ஸ்தாபிக்கப் போவதும் தன் கொள்கைகளென வெளியிட்டது. இவைகளில் மூன்றாவது கொள்கையைப்பற்றித் தான் இச்சமயம் விவரிக்கப் போகிறோம்.

## வியாபாரப் போட்டிகள்.

இது விஷயம் நன்றாக விவரிக்கக்கூடியதல்ல. ஜப்பானிய பிரதிநிதிகள் அதைத் தெளிவாக விவரிக்கிறார்களில்லை. ராஜதந்திரவாயிலாக அறிய முயன்றதில் "போடப்பட்டிருக்கும் புதிய திட்டவரம்புக்குள் வருகிற தேசங்களைச் சொல்லுவது சற்று இங்கிதக்குறைவாகவும் சிரமமாகவுமிருப்பதால், பின்னர்தான் சொல்ல முடியும்" என்று ஒரு வார்த்தைப் பந்தலின் கீழ் வெட்கத்துடன் ஒளிந்து கொண்டார்கள். "தேசங்கள் காத்திருந்து தெரிந்துகொள்ளட்டும" என்ற பொருள்படும்படி சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. இந்த ஜப்பானியக் கொள்கையால் மேற்கு சமுத்திரத்திலுள்ள பிரதேசங்களில் பணவிஷயமாகவும், பண்ட விஷயமாகவும் ஏராளமான அக்கறைகளுள்ள அமெரிக்கா வெகுவாக பாதிக்கப்படுகிறது. ஜப்பானியரின் பொதுவான விவரமற்ற கொள்கைகளால் அமெரிக்காவில் ஏற்பட்ட கலவரமே உலக காரியங்களில் வரவர முக்கியமான விஷயமாக விளங்குகிறது. சீனம், இண்டோ சைனா, பிலிப்பைன் தீவுகள், டச்சு கீழ் இந்தியத் தீவுகள், மலேயா முதலிய பஸிபிக் சமுத்திரப் பிரதேசங்களிலிருந்து அமெரிக்காவிற்கு வரும் இறக்குமதிகளில் பெரும்பாலும் தகரம், ரப்பர், கொப்பரை, மரக்கறி தைலங்கள், தேயிலை கோராப்பட்டு, தைல வித்துகள், உலோகங்களும், அவைகளில் முக்கியமாக ஆண்டிமனி என்ற உலோகமுமே. டச்சு கீழ் இந்திய தீவுகளில் ஜப்பான் சாதாரணமான வியாபார அக்கரைக்கு மேல் உபரியாக ஒருவாறு சந்தேகம் ஜனிக்கக்கூடியவிதமான ஒரு அக்கரையைக் காட்டுகிறது. ஜப்பானுடைய இறக்குமதியும் அமெரிக்க இறக்குமதியில் பாதிதான். அமெரிக்கா தனம் போடப்பட்டிருப்பது $2\frac{1}{2}$ கோடி டாலர்கள். ஜப்பானுக்கு அதில் பாதிக்கு குறைவே. இந்த வர்த்தகப் புள்ளிகளை உற்று கவனித்தால் டச்சுத் தீவுகளின் எதிர்கால க்ஷேமத்தில் ஜப்பானுக்கு பிரத்யேக அக்கரை இருக்கின்றதென்ற

ஜப்பானியக் கக்ஷிக்கு நல்ல வியாக்கியானம் செய்யமுடியும். அதிலிருந்து இந்த ஜப்பானியர் ஏதோ தர்ம ஸம்ஸ்தாபனத்திற்காகவோ அல்லது நல்ல எண்ணத்துடனோ இந்த பாத்தியங்களைக் கொண்டாடவில்லை. எரிகிற வீட்டில் பிடுங்கின மட்டும் ஆதாயம்" என்ற அமெரிக்காவுக்கு 1899-ம் வருஷத்தில் ஸ்பானிய அமெரிக்க யுத்தத்தில் கிடைத்த பிலிப்பைன் தீவுகளையும், குவாம் தீவுகளையும் தவிர வேறு பிரதேசங்கள் கிடையாது. பிரிடனுக்கு ஹாங்காங்கு, போர்னியோ, ஸரவாக், மலேயா, ஆஸ்திரேலியா முதலிய இடங்களில் பிரதேசங்கள் இருக்கின்றன.

## யுத்த தந்திரங்கள் (கடலில்).

அமெரிக்காவிற்குச் சொந்தமான ஹவாய் தீவுகளுக்கும், பிலிப்பைன் தீவுகளுக்கும் மத்தியில் மார்ஷல் தீவுகள், காரலைன் தீவுகள் என்று பெயர்கள் கொண்ட பல தீவுக் கூட்டங்களில் ஜப்பானுக்கு சர்வ தேசீய சங்கத்தின் ஆக்ஞைப்படி அதிகாரம் கொடுக்கப்பட்டன. அவைகள் ஜப்பானுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் மத்தியிலிருக்கின்றன. பிலிப்பைன் தீவுகளுக்கும் சுதந்திரம் அளிக்கும் வரை தான் அமெரிக்காவிற்கு அங்கு அக்கரை. ஆகையால் ஜப்பானியர், டச்சுக் கிழக்கு தீவுகளை நோக்கி படையெடுத்தால் அது பிலிப்பைன் தீவுகளைப் பாதிக்காமல் இருக்க முடியாது. அதனால் அமெரிக்கப் பிரதேசங்களைச் சுற்றி ஜப்பானிய கடற்படை தளங்களும், ஜப்பானியர் ஹவாலுக்குள் பட்ட பிரதேசங்களும் ஏற்பட்டு, அமெரிக்கரால் தற்காத்துக் கொள்ள முடியாமற்போய்விடும். ஜப்பானியர் இன்னும் முன்னேறி பிரெஞ்சு பிரதேசங்களையும் வியாபித்துக்கொண்டால் அமெரிக்கா அக்கரைகளுக்குள்ள அபாயம் அதிகரிக்கும். ஏனெனில், பிரெஞ்சுப் பிரதேசங்களான மேரியானா தீவுகளிலிருந்து பனாமா கால்வாய் போக்கு வரத்துகளுக்கு ஜப்பான் தீங்கிழைக்கலாம்.

## யுத்த தந்திரங்கள் (அதிகிழக்கே).

முடிவாக, அதிகிழக்கு பிரதேசங்களில் உள்ள பல ஜாதியார்களைக் காக்க வேண்டிய ராணுவ கடமை அமெரிக்காவிற்கு ஏற்பட்டிருக்கிறது. ஷாங்ஹாய் நகரத்து சர்வ தேசீய குடியிருப்பில் பல அமெரிக்கர்களும், சுமார் 3 கோடி பவுன் அமெரிக்கப் பணமும் இருக்கின்றன. அவைகளைக் காப்பாற்றுவதானால் கிழக்கு ஆசியாவின் புழக்கம் அமெரிக்காவிற்கு அத்தியாவசியம். ஊஹூ தீவிலும், பிலிப்பைன் தீவிலும் வெகு முக்கியமான விமான தளங்களும், கடற்படை தளங்களும் அமெரிக்கா கட்டியிருப்பதின் நோக்கம் நமக்கு இப்பொழுது தெரிகிறது. பேர்ல் ஹார்பர் என்ற கடற்படை தளம் கவனிக்கத்தக்கது. அது யோக ஹாமாவிலிருந்து 3.379 மைல்கள் தூரம். பிரிடிஷ் கொலம்பியாவில் உள்ள விக்டோரியாவிலிருந்து 2,436 மைல்கள் தூரம். ஸான்பிரான்ஸிஸ்கோவிலிருந்து 2,100 மைல்களும், பனாமா கால்வாயிலிருந்து 4,685 மைல்களும், டச்சு ஹார்பர் என்ற துறைமுகத்திலிருந்து 2,037 மைல்கள் தூரம். அட்மிரல் மாஹன் என்பவர் ஹாவாய் தீவுகளை பசிபிக் சமுத்திரப் படையின் மத்திய தளமாக பலப்படுத்தவேண்டும் என்று வெகு ஊக்கமாக வற்புறுத்திருக்கிறார்.



பல காரணங்களால் அவருடைய சிபார்சுகள் உடனே அங்கீகரிக்கப்படவில்லை. அமெரிக்க கடற்படை முக்கியமாக கடற்கரை காப்புப் படையாக எண்ணப்பட்டது. வியாபார நோக்கத்திலிருந்து இத்தீவுகள் லாபகரம் என நினைக்கப்பட்டனவே ஒழிய வெகு காலம் அவைகள் படை தளங்களாக உபயோகப்படக் கூடியவையென்று நினைக்கப்படவேயில்லை. சென்ற சில வருஷங்களாக ஜப்பானிய பிடிவாதமான ஒத்துழையாமையால் பசிபிக் சமுத்திரத்தில் ஏற்பட்ட நிலைமையின் மாறுதலாலும், அமெரிக்கா யுத்தக் கப்பல்கள் வரவரப் பெரியதாக கட்டப்படுவதாலும் அவர்களுடைய தேவைகள் ஜாஸ்தியாகவும், பல கிளைகள் உள்ளவைகளாகவும் ஆவதாலும், அமெரிக்கா கடற்பதி மாஹன் சொன்ன சிபார்சுகளை அனுசரிக்க ஆரம்பித்தது. அதன் பலனாக, அமெரிக்கா கடற்படையின் பெரும பாகம் பெரும்பாலும் பசிபிக் சமுத்திரத்திலேயே இருக்கிறது. முக்கியமாக பேர்ல் ஹார்பர் என்ற துறைமுகத்தில் பெரிய நீர் மூழ்கிகளும், நாசகாரிகளும் சூழ்ந்து நிற்கிறது. பல விமானங்கள் தங்கக்கூடிய முதல் தரமான தளங்கள் கட்டப்பட்டிருப்பதுடன் கரை தற்காப்புகளும் சேனையால் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன.

## பிரிடிஷ் அக்கரைகள்.

அமெரிக்கர்கள் மட்டும் உஷாராக இருக்கவில்லை. ஜப்பான் ஸம்பாத்தியத்தில் அகப்பட்டதை வியாபித்துகொள்வதிலும் கவனமாயிருப்பதை சற்று கவலையுடன் பிரிடன் கவனித்து வந்திருக்கிறது. ஸைனா பிரதேசத்திலும் மஞ்சூரியாவிலும் ஸ்தாபித்துக்கொள்ள ஜப்பானை விட்டுவிட்டால், ஒரு மஹத்தான போராட்டம் ஏற்படும் என்பது நிச்சயம். நாம் ஸர்வதேசீய சங்கத்தில் மதிப்பை இழந்ததிலிருந்து ஜப்பான் தைரியங்கொண்டு ஐந்தாறு வருஷங்கள் சில "சம்பவங்களை" சிருஷ்டித்தது. பிறகு சைனா யுத்தம் துவக்கியது. சைனாவிலுள்ள ஒப்பந்த துறைமுகங்களில் உள்ள பிரிடிஷ் அக்கரைகளை ஜப்பான் பகிரங்கமாக எதிர்க்கிறது.

சைனாவுக்குச் சீராக சாமான்கள் போய்கொண்டிருந்த பர்மா ரஸ்தாவை அடைக்கவேணுமென்று ஜப்பான் வற்புறுத்தியபோதுதான் தொந்தரவு அதிகரித்தது. உடனே பிரிடன் அமெரிக்காவை கலந்தது. இரண்டு நோக்கங்கள் வரையப்பட்டன. (1) ஜப்பானின் அபேக்ஷைகளை எதிர்த்து, ஜப்பான்பேரில் ஒரு தடையை ஏற்படுத்துவது (2) ஜெர்மன் தாக்குதல்களை மீறுவதற்குப்போதிய காலம் வரும்வரை ஜப்பானை அமைதியாக வைத்துக்கொள்வதற்காக எவ்வளவு குறைவாக ஜப்பானின் அபேக்ஷகளை திருப்தி செய்யலாமோ அவ்வளவு குறைவாகக் கொடுப்பது. ஜப்பானிய ஆக்கிரமணத்தைக் காட்டிலும், ஜெர்மனியைத் தோற்கடிப்பதே முக்கியமென்று அமெரிக்காவும் தன் அக்கரைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்கு அவசியமென நினைத்தது. அதனால் இந்த முட்டுப்பாடான சமயத்தில் அமெரிக்கா தன் கவனத்தை ஐரோப்பாவிற்கு வெகு தூரத்திற்கு அப்பாலுள்ள விஷயத்தில் செலுத்த விரும்பவில்லை. ஐரோப்பாவில் வெற்றி பெறுதல் ஜப்பானை சாவகாசமாக பின்னர் கவனிக்கலாமென்றும் அறக்கிழக்கு பிரதேசத்தில் வெற்றி பெறுவதாய் ஐரோப்பாவில் தோல்வியுறுவதற்கு ஈடு

கொடுக்க முடியாதென்றும் லண்டன் வாஷிங்டன் இரண்டும் ஒரு முகமாக ஒப்புக்கொண்டன. அதனால் மூன்று மாதங்கள் பர்மாப்பாதையை அடைத்து வைத்து ஜப்பானுடன் சமாதானம் செய்து கொள்ள வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை.

சமாதானம் செய்து கொள்வதற்காக ஏற்பட்ட வெகு சிக்கலையான பேச்சுகளில் ஏற்படும் கஷ்டங்களை நாஸிபிரசாரமும் அதிகரிக்க முயற்சித்தது இயற்கையே. ஆனால் அமெரிக்காவில் யுத்த உத்ஸாஹம் அதிகரித்து பிரிடிஷாருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணமும் உண்டாகி பிரிடனைப் படையெடுக்க ஜெர்மனி செய்த திட்டங்களும் நிலை குலைந்துபோகவே ஜப்பானியரின் மண்ணாசையை எதிர்த்து பிரிடன் உறுதியாக நிற்க முடிந்தது. அறமேற்கு விஷயங்களிலும் அறகிழக்கு விஷயங்களிலும் அமெரிக்காவுக்கும் பிரிடனுக்கும் இன்று சம்பூர்ணமான ஒத்துழைப்பு இருக்கிறது. ஜப்பானியர் சினம் கொண்டிடினும் பர்மா ரஸ்தா திறக்கப்பட்டிருக்கிறது. குவாம் தீவும் யுத்த முஸ்தீப்புகள் செய்யப்பட்டு அமெரிக்க படை கூற்றமாக விளங்குகிறது. அத்தீவு அமெரிக்காவிற்கும் பிலிப்பைன் தீவுகளுக்கும் மத்தியில் வெகு விமரிசையான தளமாக விளங்குகிறது. அது ஜப்பான் தீவுக் கூட்டங்களுக்கு மத்தியில் ஜப்பான் முக்கிய பிரதேசங்களிலிருந்து 1,500 மைல் தூரத்திலிருக்கின்றது.

## இந்தப் பிரச்னையில் சம்பந்தப்பட்ட மற்ற தேசங்கள்.

தாய்லாந்து என்று கூப்பிடப்படும் சையாம் தேசமும் பிரெஞ்சுக்காரரைச் சேர்ந்த இந்தோ சைனாவும் இந்த பஸிபிக் சமுத்திரத்தில் உள்ள யுத்ததந்திர நிலையில் வெகு அதிகமாக சம்பந்தப்பட்டிருக்கிறது. தங்களுடைய சுதந்திரத்திற்கு பிணை கொடுத்தால் அதற்கு கைமாறாக தங்களுடைய பிரதேசத்தில் விமான வெளிகளும் எண்ணெய் ஊற்றும் நிலயங்களும் பிரிடனுக்கும் பிரான்ஸுக்கும் அளிப்பதாக தாய்லாந்து ஸர்க்கார் இந்த யுத்தம் துவக்குமுன் சொல்லிற்று. மேனாட்டில் நடக்கும் கோற சம்பவமே தனக்கு ஒரு பெரிய சாதகம் என்று நினைத்த ஜப்பான் தாய்லாந்தின் உள்நாட்டு நிலை இருந்த குழப்பத்தினால் அதிக ஆசைப்பட்டு பிரவேசிக்க ஆரம்பித்தது. அச்சமயம் தாய்லாந்தில் உள்நாட்டு வெளிநாட்டு இலாகாக்கள், தற்காப்பு, பிரதம மந்திரித்வம் எல்லாவற்றையும் ஒருவரே வகித்த சேனாபதி விபுல சங்கிராமர் என்பவர் தாய்லாந்தில் அதிகாரம் செலுத்தி வந்தார். அவருடைய உக்கிரமான தேசபக்தியை தூண்டுவதுபோல் நயவஞ்சகமான வார்த்தைகளை சொல்லிக்கொண்டு இந்தோசைனா பிரதேசங்களில் தாய்லாந்துக்கு வெகு நாளாக உள்ள பாத்தியங்களைக் கிளப்பிவிட்டு விஷி ஸர்க்காரின் நபும்ஸகத்வத்தை எடுத்துக்காட்டி தாக்குவதற்கு சமயம் வந்துவிட்டது என்று தூண்டிற்று. தாய்லாந்துக்கும் இந்தோசைனாவுக்கும் போர் துவங்கியது. ஜப்பான் தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளிற்று. உண்மையில் இருதிறப்பாருக்கும் இச்சண்டையில் உற்சாகம் இல்லை. ஜப்பான் தயாரித்து வைத்திருந்த மத்யஸ்தம் என்ற பொறியில் இருதிறப்பாரும் விழுந்தார்கள். ஜப்பானின் படு சூழ்ச்சியின் சாமர்த்தியம் அதில் விளங்கிற்று. அதே சமயத்தில் டோகியோவிலும் வார்த்தை படலங்கள் பரப்பினார்கள். கீழ்திசையில் ஒரு புதிய திட்டம்



ஏற்படுத்த ஜப்பான் கிளம்பியிருக்கிறது என்றார்கள். பிலிப்பைன், இந்தியா, பர்மா, மலேயே தீபகல்பம், கீழ்தீவுகள், கொச்சின் சைனா, அன்னாம், முதலிய பிரதேசங்களில் உள்ள 50 கோடி ஜனங்களின் விடுதலையே லக்ஷ்யமாகக் கொண்ட தென் கிழக்கு ஆசியா ஜாதியாரின் விடுதலை சங்கம் என்ற ஒரு சங்கத்தை ஸ்தாபித்தார்.

இந்த பஸபஸப்புகளுக்கெல்லாம் பின்னாடி இருக்கும் வெகு கணக்கான தந்திரமும் திரவமற்று உலகத்தில் வியாபித்துக்கொள்ளச் செயயும் தந்திரங்களும் உலகத்தாருக்கு நன்றாய் தெரியும். பார்மோஸா, ஹைனான் தீவுகளிலும் துருப்புகளை சேகரிப்பதும், இந்தோ சைனாவில் தன் சைனியங்களைக் கொண்டு சன்னம் சன்னமாக வியாபிப்பதும், எல்லாவற்றிற்கும் மேலாக ஸைகோனுக்கு அருகே ஒரு கடற்படை தளம் சிருஷ்டிப்பதும் (ஸைகோனிலிருந்து சிங்கப்பூரும் மனில்லாவும் 850 மைல்கள்தான் தூரம்) இன்று டச்சுக்காரர் பேரில் பொருள்களுக்காக வற்புறுத்துதலையும் நாளை மலேயா தேசத்தில் படிக்கப்போகும் பாடத்திற்கும் ஒரு ராணுவ முகப்பு வைத்ததுபோல் இருக்கின்றன.

தென்கடல்களின் தேசப்படத்தைப் பார்த்தால் ஜப்பானுக்கும் ஜாவா, சுமத்ரா இவைகளிலுள்ள ஐசுவரியங்களுக்கு மத்தியில் மூவாயிரம் மைல் கடல்கள் உள்ள வரை மனில்லா துறைமுகத்தில் அமெரிக்கக் கடற்படை சதுர வ்யூஹங்கள் உள்ள வரை சிங்கப்பூரில் பிரிடிஷ் சாம்ராஜ்ஜியம் பாராகாற்கும் வரை ஜப்பான் புதிய திட்டமும் ஜப்பானிலுள்ள கரும்பறவை நாகசங்கத்தின் பகற் கனவாக இருக்கவேண்டியதுதான். ஏனெனில் முக்கியமாக பிரிடனும் சும்மா இருக்கவில்லை. ஜப்பானுடைய தாந்திரீகமான சேஷ்டைகளை அறிந்து சிங்கப்பூரை அபரிமிதமாக பலப்படுத்தியிருப்பதுடன் கடற்படை தளங்கள் விஷயமாய் அமெரிக்காவும் பிரிடனும் பரிபூர்ணமாக ஒத்துழைப்பதில் ஓஷேனியா என்று கூப்பிடப்படும் பஸிபிக் சமுத்திர கண்டத்திலிருந்து வெள்ளை ஜாதியார்களை வெளியே விரட்டுவதாக ஸ்ரீ மத்ஸுவோகா கொண்டாடும் புதிய பாத்தியமானது நிறைவேறுவது சிரம சாத்தியம்.

## சிங்கப்பூர்.

இந்தியாவிலுள்ள நமக்கு பஸிபிக் சமுத்திரத்தின் முக்கிய வாயில்களில் ஒன்றாக இருக்கிற சிங்கப்பூர் தளமும் தனிப்பட சுவாரஸ்யமுள்ளதாக இருக்கிறது. இந்தியர்களில் பெரும்பாலார் நாஸீயத்தின் கோரமான கொள்கைகளை வெறுக்கிறார்கள். ஆகையால் சர்வாதிகாரத்வத்தை தடுப்பதற்கு சிங்கப்பூர் தளமே இந்தியாவின் முகப்பு கொத்தளம் என்று இந்தியர்கள் நினைப்பது சரியே. அதனால் அந்தப் பெரிய கோட்டைக்கு வேண்டிய சிப்பந்திகளை இந்தியா கொடுத்திருப்பதும் உசிதமே. மலாய் நாட்டின் உயர் கமிஷனராகவும் ஜலசந்தி குடியேற்ற நாடுகளின (Straits Settlement) கவர்னராகவும் இருந்தவரும் ஸர் ஷென்டன் தாமஸ் என்பவர் "1939-1941 வருஷங்களில் மலேயாவிலுள்ள இந்தியத் துருப்புகள்" என்ற புஸ்தகத்துக்கு முகவுரை எழுதியிருக்கிறார். அப்புஸ்தகம் இந்தியத் துருப்பு வரவேற்பு கூட்டத்தாரால் சிங்கப்பூரில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அப்புஸ்த

கத்தில் மலேயா ஆதீனத்திற்குள் இருந்துவரும் இந்திய சைனியத்தின் வேலைகளைப்பற்றிய வியாசங்களும் சித்திரங்களும் இருக்கின்றன. அப்புஸ்தகத்தில் பின்வரும் வாக்கியமும் காணப்படுகிறது. "1786-ம் வருஷம் பினாங்கில் பிரிடிஷ் கொடியை காப்டன் லைட் என்பவர் நாட்டியகாலத்தில் அவருக்கு உதவியாக சில இந்திய வீரர்களும் இருந்தார்கள். அக்காலத்தில் மலேயாவுக்கும் இந்திய சைனியத்துக்கும் ஏற்பட்ட சம்பந்தமானது இன்னமும் தயர்ந்து வருகிறது. அன்றைக் காட்டிலும் இன்றையதினம் அது விஷயத்தில் நாங்கள் பெருமை அடைகிறோம். ஏனெனில் இந்தியாவின் தற்காப்புக்கும் அதனால் கீழ் பிரதேசம் முழுவதிலும் உள்ள பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்திற்கும் முன் கொத்தளமாக மலேயா இப்பொழுது நிற்கிறது. பல வருஷங்களாக மஹிமையுள்ள புகழ்பெற்ற இந்திய சேனை அணிகளும் உலகத்தின் விடுதலைக்காக இந்த அபாயமான நாட்களில் சன்னத்தமாக நிற்பதும் வெகு உயர்வானது." சிங்கப்பூர் எவ்விதமான தற்காப்பு யுத்தத்திற்கும் வேண்டிய பூர்ணமான வசதிகள் ஏற்படுத்தப்பட்ட மகா பலம் கொண்ட ஸ்தாபனம். அதை ஒரு முதல் தரமான கோட்டையாகச் செய்வதற்காக 3½-கோடி பவுன் பிரிடன் செலவழித்திருக்கிறது. அதை கடலிலிருந்து பிரவேசிக்க முடியாது. நிலத்திலிருந்து எவ்வளவு சைனியம் வந்தாலும் எதிர்க்க வல்ல பீரங்கிகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. தற்காப்பிற்கு அத்யாவசியமான விமானப்படைகளும் ஏராளமாக அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. ஜப்பானிய விமானப்படை முழுவதும் வந்தாலும் சிங்கப்பூரில் ஏற்கனவே உள்ள விமானப் படைகளுக்கு ஜவாப்பு சொல்ல முடியும் என்பது நிச்சயமில்லை. ஆஸ்திரேலியா, நியூஸீலாந்து, அமெரிக்கா, முதலிய இடங்களிலிருந்து சேர்ந்திருக்கும் உதவியைக் கொண்டு பிரிடிஷ் கடற்படையையும் அசைக்கமுடியாது என்று சொல்லலாம். பஸிபிக் சமுத்திரத்தில் முன்னேறிச் செல்வதற்கு சிங்கப்பூரை தகர்த்தாலொழிய முடியாது என்று ஜப்பான் நினைத்தாலும் அதை தகற்பதிலிருந்தும் அபாயங்களை கவனித்தால் இவ்வளவு அபாயகரமான காரியத்தில் ஜப்பான் துணியும் என்று நம்பமுடியவில்லை.

ஆகையால் சிங்கப்பூரை கிழக்கு சாம்ராஜ்ஜியத்தின் தலைநகர் போலவும் தன் சாவதானத்தின் பெரிய பாதுகாப்பாகவும் சைனா கடல்களிலும் இந்திய பஸிபிக் சமுத்திரங்களிலும் உள்ள பிரிடிஷ் குடியேற்ற நாடுகளும், தேசங்களும் முக்கியமாக ஆஸ்திரேலியாவும், நியூஸீலாந்தும் கருதுகின்றன. ஆகையால் தான் இந்தியாவின் தற்காப்புக்கே சிங்கப்பூர் முக்கியமானதென்று சில மாதங்களுக்கு முன் ஜெனரல் ஸர் ராபர்ட் கேஸல்ஸ் என்ற சேனாதிபதி அவர்கள் வற்புறுத்தினார்கள் போலும். பிரிடன் சிங்கப்பூரின் முக்கியத்தை அறிந்து கொண்டே விமான பிரதம அதிபதியான ஸர் ராபர்ட் புருக் பாபேம் என்பவரை சிங்கப்பூர் கோட்டைக்கும் அதிலுள்ள துருப்புகளுக்கும் தலைமையை வகிக்கும்படி நியமித்திருக்கிறது போலும். அவர் அமெரிக்க சைனியம் கடற்படை, இவைகளின் தலைவர்களை கண்டும், பஸிபிக் சமுத்திரத்திலும் உள்ள பல தளங்களை பார்வையிட்டும் வருகிறார். அச்சு நாடுகளுக்கு உதவியாகவோ, கீழ் பிரதேசத்திலும், தென் பிரதேசத்திலும் புதிய ஏற்பாடு என்ற விமரிசையான பதங்கொண்ட கொள்கைக்காகவோ



தென் பஸிபிக் சமுத்திரத்தில் ஜப்பான் செய்ய துவங்குமுன் பலதரம் ஆலோசனை செய்யும் என்பது நிச்சயம். பஹிரங்கமாக யுத்தம் செய்யும்படி ஹிட்லர் ஜப்பானை கட்டாயப்படுத்துவானோ என்பது கடவுள் கையில் இருக்கின்றது. அவன் அவ்வாறு கட்டாயப்படுத்தினால் ஜப்பானைப்பற்றி நாம் பரிதாபப்பட வேண்டியதுதான்.

---

அனுபந்தம்.

---

## பஸிபிக் மஹாசமுத்திரத்தின் அர்த்தசாஸ்திர மர்மஸ்தல சந்நிவேசங்கள்.

## டச்சுத் தீவுகளில் கடற்படை ஸ்தாபனங்கள்.

## தூரஞ்செல்லக்கூடிய விமானங்களுக்கு வசதி.

['காப்டன் சிரில் பால்ஸ்' கூறுவது:—பஸிபிக் மஹாசமுத்திரத்தில் தற்போது நிகழும் ராஜீய தந்திரம் என்ன? இந்த பிரச்னை பஸிபிக் மஹாசமுத்திரத்தால் சூழப்பட்டதான ஒவ்வொரு தேசத்திற்கும் அன்வயிக்கும். 'டைம்ஸ்' பத்திரிகையின் யுத்த நிருபர் "சிரில் பால்ஸ்" என்பவர் பஸிபிக் மஹாசமுத்திர பிராந்தியத்தின் பூகோள வர்ணனையுடன் கடற்படை, தரைப்படை, விமானப் படை இவைகளின் வசதி முதலிய முக்யாம்சங்களை துலக்கியிருக்கிறார்.]

மார்ச்சு மீ 24உ சைனாவிலுள்ள ஜப்பானிய பிரமுக யுத்த நிலயத்திலிருந்து ஜப்பானியர் தென் சைனாவிலுள்ளதும், ஹாங்காங்குக்கு சமீபத்திலுள்ளதும், 'குவான்டன்" பிரதேசத்திலுள்ள "குவான் சவ்" என்ற துறைமுகத்தை பிடித்துக்கொண்டிருப்பதாக, ஒரு அறிக்கை வெளிப்பட்டது. "'சங்கிங்'கிலுள்ள சைனா கவர்ன்மெண்டாருக்கு யுத்த தளவாடங்கள்போய் சேரக்கூடாதென்ற "முற்றுகை" விதியை அனுசரித்து இதுவரை தென் சைனா பிரதேசங்களைச் சேர்ந்த துறைமுகப் பட்டணங்கள் ஒவ்வொன்றாக ஜப்பானியரால் கைவசப்படுத்தப்பட்டு வந்திருப்பதில் மேலே கூறப்பட்ட சம்பவம் கடைசியானதாகும்.

நான் அப்பிரதேசங்களில் எங்கெங்கே எத்தனை ஜப்பானிய படைகள் வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை கூற முயலவில்லை. ஏனெனில் அதைப்பற்றி பல பிரட்டான வதந்திகள் உலாவி வருகின்றன. ஆனால் சைனாவிடமிருந்து இரண்டு வருஷங்களுக்கு முன் கைப்பற்றப்பட்டதும், பிரஞ்சு இந்தோசைனாவுக்கு சமீபமுள்ளதுமான "ஹைனான்" என்ற தீவிலும், மேலே குறிப்பிட்ட பிராந்தியங்களிலும் ஜப்பானியர் ஏராளமான படைகளை வைத்திருக்கிறார்கள் என்று நான் சொல்வேன். ஹைனானில் விமான நிலயம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. மேலும் அது தற்போது பெரிதும் விசாலமாக்கப்பட்டிருப்பதாக அறியக்கூடுகிறது. "பார்மோசா" என்ற தீவிலும் ஜப்பானிய சைனியங்கள் இருக்கின்றன.

ராஜ்ஜிய தந்திரங்களுக்கு உகந்தையான வேறு விஷயங்கள் என்னவெனில், (1) "தாய்லாண்டு"க்கும் பிரஞ்சு இந்தோசைனாவுக்கும் உள்ள தகரார். (2) இது விஷயத்தில் ஜப்பான் மத்யஸ்தராக வந்திருப்பது. (3) ஆஸ்திரேலிய துருப்புகளைக்கொண்டு சிங்கப்பூர் ராணுவ நிலயம் பலமடையச் செய்யப்பட்டிருப்பது. (4) தங்கள் ராணியிடம் விசுவாசம் குன்றுதலைகளும், தங்கள் பாதுகாப்புக்குக் காரணமாய் பிரிடனிடம் நேசம் பூண்டவைகளும், செல்வம் நிறைந்தவைகளுமான டச்சுத் தீவுகளின் கதி. (5) அமெரிக்க ஐக்கிய நாட்டினுடைய பசிபிக் மஹாசமுத்திரத்திலுள்ள யுத்த நிலயங்களின் பலம். (6) மேலும் ஜப்பானிய பிரதம மந்திரி "மத்ஸுவோகா"வின் பர்லின் விஜயம்.

நான் பசிபிக் சம்பந்தமாய்த்தான் கூறப்போகிறேன். ஆயினும் சிங்கப்பூரிலுள்ள ஆஸ்திரேலியரைப்பற்றி ஒரு வார்த்தை: அவர்கள் இங்குவந்து ஆறு வாரங்களுக்கு மேற்கொண்டு ஆகிவிட்ட காரணத்தால் என் கதையை காலதாமதமாகிவிட்டதாக நினைக்கவேண்டாம். ஆனால் நான் கூறப்போகும் சங்கதி இதுவரை நான் அறிந்தவரை எவரும் கூறப்பட்டிருக்கவில்லை.

ஆஸ்திரேலிய கவர்ன்மெண்டாரே தங்கள் இஷ்டப்படிக்குத் தான் தங்கள் படைகளை அனுப்பவோ, ஸ்தாபிக்கவோ பாத்தியங்கொண்டவர்கள் என்பது நீங்கள் அறிந்ததே. பொது யுத்த நிலயத்துக்கு, அச்சைனியங்களை எவ்வெவ்விதம் உபயோகிக்கலாமென்று சொல்ல, பிரிடனுக்கு, சுதந்திரம் உண்டெனினும், அவைகளைப்பொறுத்து ஊர்ஜிதமான உத்தரவுகள் பிறப்புவிக்க ஆஸ்திரேலிய கவர்ன்மெண்டாருக்குத்தான் பூர்ண அதிகாரம் உண்டு. இதனால் ஆஸ்திரேலிய கவர்ன்மெண்டார் தாங்கள் மற்ற பிரிடிஷ் ஏகாதிபத்திய நாடுகளுடன் உறவாட்டையும், நட்பையும், போக்குவரத்து சாதனங்களையும் பாதுகாத்துக்கொள்வதற்கு 'சிங்கப்பூர்' முக்கியஸ்தலம் என்று, யுத்த தந்திர விதிப்படி ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்பது விளங்கும்.

யுத்தம் துவக்கமான உடன்காலத்திலேயே இவ்வித மனப்பான்மையை இக்கவர்ன்மெண்டார் காட்டியிருக்கின்றனர். சென்ற மஹா யுத்தத்திலும் அப்படியே தான். மேற்சொல்லப்பட்ட கோட்பாட்டிற்கு இணங்க "ஸூயெஸ்" கால்வாயைப் பாதுகாக்க தங்கள் சைனியங்களை அங்கு அனுப்பியிருக்கின்றனர். பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்தின் அக்கரைக்கு சிங்கப்பூரிலும் ஸூயெஸ் அத்யாவசியம் என்று அவர்கள் அறிந்தே இருக்கின்றனர். இருந்தும் பசிபிக்குக்கும் இந்து மஹாசமுத்திரத்திற்கும் இடையில் இருப்பதும், இரு சமுத்திர போக்குவரவு வழிகளுக்கு குதிரை சேணம் போன்றதுமான சிங்கப்பூர் மிகவும் முக்கியமானது. ஆதலால் மிகவும் பலப்படுத்தப்பட்டிருக்கும் ராணுவ நிலயமாக்கப்பட்டிருக்கிறது.

## தீவுகளின் முக்யத்வம்.

பூகோள படத்தை பார்த்தாலே பசிபிக் சமுத்திரப் பிரதேசம் பல தீவுகளால் பதிக்கப்பட்டிருப்பது நன்கு விளங்கும். எக்காலத்திலும் அவைகள் ராணுவ சாஸ்திரப்படி முக்ய ஸ்தலங்களாகும். அதுவும் தற்கால விமான யுத்தமுறை அனுஷ்டானப்படி அவைகளின் விசேஷம் பதின்மடங்கு அதிகரித்திருக்கிறது.



இவைகளில் எவை எவைகள் அர்த்தசாஸ்திர தந்திரத்தை உத்தேசித்து அரண்களாக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் காட்டும் படம் ஒன்றைப் பார்த்தால் அவைகளின் விசேஷத்துவம் தெரியவரும்.

பூகோள படத்தில் அமெரிக்க ஐக்கிய ராஜ்ஜியங்களின் மேற்கடற்கரையிலுள்ள ராணுவ நிலய ஸ்தானமான 'சான்டீகோ'விலிருந்து நேர் மேற்கே பார்த்துக்கொண்டுவந்தால் பசிபிக்கிலுள்ள தீவுகள் அநேகம் ராணுவ முஸ்தீப்புள்ள நிலயங்கள் என்பது தெரியவரும். அங்கிருந்து சுமார் 2,000 மைல்களுக்கப்பாலுள்ளது 'ஹோனோலுலு', அங்கிருந்து 2,000 மைலிலிருப்பது 'வேக்' தீவு, அதிலிருந்து 1,200, 1,300மைலிலிருப்பது 'குவாம்', அதன்பிறகு 'பிலிபைன்' தீவுகளிலுள்ள 'மனிலா.' இது 'ஹாங்காங்'கிலிருந்து 600 மைலிலிருக்கிறது.

ஒரே நேர் கோட்டிலுள்ள இந்த பசிபிக்கைச் சேர்ந்த நிலயங்கள் மட்டும்தான் விசேஷம் ஆகாது. 'ஹோனோலுலு'வுடனும், 'வேக்'குடனும் சேர்ந்து சமபுஜ முக்கோணத்தை நிருவும் 'மிட்வே' என்று மேற்கண்டவற்றுக்கு வடக்கே ஒரு ராணுவஸ்தலம் இருக்கிறது. இது ஆசியாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஏறக்குறைய நடுமத்தியில் பசிபிக்கில் இருக்கிறது.

இன்னும் வடக்கே ஐக்கிய ராஜ்யங்களைச் சேர்ந்த அலாஸ்கா பிரதேசத்தில் 'டச்சுத் துறைமுகம்' என்ற ஒரு ஸ்தலமிருக்கிறது.

## ஜப்பானின் ஸ்தலங்கள்.

பசிபிக்கில் ஜப்பானுடைய ஸ்தலங்களும் இருக்கின்றன. ஐக்கிய ராஜ்ஜியங்களின் ஸ்தலமான குவாமுக்கு தெற்கிலும், பிலிபைன் தீவுகளுக்கு சமீபமாகவும் நேர் கோட்டில் 'யாப்'பும், 'பாலா' தீவுகளும் உள்ளன. இவை சதுரங்கப் பலகையை நினைப்பூட்டுகின்றன.

பிரிடனுக்கு இவ்வித ராணுவ விமான நிலய ஸ்தலங்கள் பசிபிக்கில் கிடையாது. ஆனால் சிங்கப்பூரை விட ஹாங்காங்கும் சாம்ராஜ்ஜியத் துருப்புகள் வைக்கப்பட்டிருக்கும் பிஜி தீவுகளும் இருக்கின்றன. அமெரிக்க, ஜப்பானிய நிலயங்களுக்குத் தெற்கிலும் தென்மேற்கிலும் டச்சு கிழக்கு இந்தியத் தீவுகள் இருக்கின்றன.

இவைகளில் நியூகினி, போர்னியோ, சுமத்ரா, இந்த மூன்றும் உலகிலேயே பெரிய தீவுகள். நியூகினியில் மூன்றில் இரண்டுபாகமும், போர்னியோவில் சுமார் மூன்றில் ஒருபாகமும் பிரிடிஷாருடையது. இவைகளில் தற்போதைய யுத்த தேவைகளுக்கு அவசியமான பலபொருள்கள் நிறைந்திருக்கின்றன. தற்போது தாய்நாடு அடிமையாயிருப்பதில், பிரிடனுக்கு ஒத்தாசையாய் உள்ள டச்சு சாம்ராஜ்ஜியத்தின் பெரும் பகுதி இவைகள்தான்.

டச்சுத் தீவுகளும், சிங்கப்பூரும், மலாயும், டச்சும், தனித் தனியாக, கடல், தரை, விமான தற்காப்புப் படைகளை உடைத்தாயிருக்கின்றன. ஆனால் நான்

முன்பே கூறியுள்ளபடி, பெரும்பாலும் பிரிடிஷாரின் பாதுகாப்பை வேண்டி நிற்கின்றன. அவைகளில் மேற்கு கடைசியிலுள்ள 'சுமத்ரா' சிங்கப்பூரிலிருந்து கூப்பிடு தூரத்தில்தான் இருக்கிறது.

இந்தவிதம் பசிபிக்கில் ஸ்தலங்கள் நிருவப்பட்டிருக்கும் முறை யுத்த சாஸ்திரத்தில் புதிய மர்ம தத்துவத்தைக் காட்டுகிறது. ஐக்கிய ராஜ்ஜியங்களைச் சேர்ந்த 'மனில்லா'வையும், நமது 'சிங்கப்பூரையும்' தவிர மற்ற ஸ்தலங்கள் சிறிதளவான படைகளையே கொண்டிருக்கின்றன. தீவுகளில் ராணுவ வசதியைக் கருதி, அப்படைகள் பெரும்பாலும் பீரங்கிப் படைகளாகவே உள்ளன. அவ்வசதிகள் என்னவென்றால் (1) யுத்தக் கப்பல்களுக்கும் விமானங்களுக்கும் உபயோகமான எண்ணெய்க் கிடங்குகள். (2) விமான நிலயங்கள். (3) ஆகாரக் களஞ்சியங்கள்.

அரண்களான இந்தத் தீவுகள் அந்வானம் செல்ல வேண்டிய விமானங்கள் அங்கங்கு இறங்குவதற்கு சௌகர்யமாய் இருக்கின்றன. மேல் குறிக்கப்பட்டிருக்கும் பிரகாரம் ஐக்கிய ராஜ்யங்களின் விமானப் படையும், கடற்படையும், பஸிபிக்கில், அதற்குள்ள வியாபாரத்தையும், அக்கரைகளையும் பாதுகாத்து வருகின்றன.

இத்தன்மையான கவனம் இத்தீவுகள் தற்காப்புக்குமட்டில் பிரயோஜனமுள்ளவை என்று புலப்படுத்தும். மேலும் அரணுக்கப்பட்ட தீவுகள் ஜப்பானை நோக்கி அல்லாமல் பிரஞ்சு இந்தோசைனாவையும் டச்சுத் தீவுகளையும் நோக்கியே நேர்கோட்டில் இருப்பது விளங்கும்.

## அமெரிக்காவின் அக்கரை.

டச்சுத் தீவுகளின் சுயேச்சையைப்பற்றி தன் நோக்கங்களை ஐக்கிய ராஜ்ஜியம் பகிரங்கமாகவே காட்டுகிறது. சங்கிலியையொத்த இந்த அரணுள்ள தீவுகளுக்கு கடைசியாய் உள்ள "மனில்லா" எல்லாவற்றையும்விட முக்கியமாய் பதக்கம் போல் விளங்குகிறது. டச்சுத் தீவுகளை வடக்கிலிருந்து பாதுகாக்கிறது 'மனில்லா.' அவைகளுக்கு மேற்கில் சிங்கப்பூரும், தெற்கிலும் தென்-கிழக்கிலும் ஆஸ்திரேலியாவும் பாதுகாப்பாகவிருக்கின்றன.

சிங்கப்பூரைப்பற்றி முக்கியமான கடைசி வார்த்தை. இது மலாய் தீபகற்பத்தின் கடைசியிலும், அதையடுத்த தீவிலும் இருக்கிறது. இது ஜோஹோருடன் சுருக்கு பாலத்தால் பிணைக்கப்பட்டிருக்கிறது. கடற்படை நிலயம் ஜோஹோர் ஜலசந்தியில் சிறிது வடபுறத்தில் சிங்கப்பூர் நகரத்துக்கு நேர் எதிர்புறம் இருக்கிறது.

இந்த நிலயம் 1923-ம் ஆண்டு துவக்கப்பட்டு மறு வருஷமே 'ராம்ஸே மாக்டோனல்'டினுல் வேலை நிறுத்தம் செய்யப்பட்டும், மிதவாத கோஷ்டியினர் அதிகாரம் பெற்றவுடன் அது திரும்ப துவக்கப்பட்டது. இந்த துறைமுகத்தில் 50,000 டன் நிறையுள்ள கப்பல்கள் வசதியாய் தங்கலாம். தற்காப்புக்காக முதல்தரமான பீரங்கிகளுடன்கூடிய பீரங்கிப்படை அங்கு வைக்கப்பட்டிருக்கிறது.



சிறிதுகாலத்துக்கு முன் ஏர் மார்ஷல் சர் ராபர்ட் புருக் பாப்ஹாம் என்பவரை கிழக்கு சைனியங்களுக்கு சேனாதிபதியாக அனுப்பப்பட்டது நீங்கள் அறிவீர்கள். மேஜர் ஜெனரல் டிவீ என்பவர் பொறுக்கண்ட உத்தியோகஸ்தர்.

பசிபிக்கிலும் தென்கிழக்கு ஆசியாவிலும் மேல்கண்டவாறு சந்நிவேசங்கள் அமைந்து இருக்கின்றன. நாம் யுத்தத்தில் கலந்து கொண்டிருந்தும், ஐக்கிய ராஜ்ஜியங்கள் தலையிடாமல் இருக்கிறதானாலும் நம்மிருவருடைய நோக்கங்களும் ஏறக்குறைய ஒரேபான்மையானவைகளே. நாம் எவரையும் மிரட்டவில்லை. நமது நோக்கங்கள் தற்காப்பைப் பற்றினவே. அதாவது வியாபாரவழிகளைப் பாதுகாப்பதும், டச்சுத் தீவுகளை சுயேச்சையுள்ளதாகப் பார்த்துக்கொள்வதுமாகும்.

இதற்குமுன் ஒரு தபா நெப்போலியன் போர் தொடுத்த சமயம் இதேமாதிரி டச்சுத் தீவுகளை பாதுகாக்க நேரிட்டது. நாம் அதுசமயம் பிரஞ்சுப் படைகளை தோற்கடித்தும் நாம் கைப்பற்றிய அத்தீவுகளை கைப்பற்றிக் கொள்ளவில்லை. சமாதானம் ஏற்பட்டவுடன் அவைகளை ஹாலண்டு வசம் ஒப்புவித்து விட்டோம். அது சமயம் நாஸிகளின் கொள்கைகளை ஒத்த அபிப்பிராயம் கொண்ட சிலர் "இவ்விதம் அந்த தீவுகளை சிறியதான தேசத்தினிடம் ஒப்புவிப்பது அபாயமற்றதா" என்றும் "ஸ்டாம்போர்ட் ராபில்ஸ் போன்றவர்களும் வெகு சிரமத்தின்பேரிலும் கைப்பற்றப்பட்ட அத்தீவுகளைப் பாதுகாக்க வேண்டாமா" என்றும் கேட்டதுண்டு. டச்சுத் துருப்புகள் பிரஞ்சுக்காரருக்கு ஒத்தாசையாய் போர் புரிந்தும் அந்த வாதங்கள் உதறித் தள்ளப்பட்டன. அவ்விதம் செய்தது நியாயமே.

இன்னும் இவ்விதமே நாம் அத்தீவுகளின் சுதந்திரத்தைக் காப்பாற்ற சர்வ முயற்சிகளையும் செய்வோம் என்பதிலும், யுத்த முடிவுக்குமேல் அவைகள் எப்போதும்போல் ஹாலந்துடன் சேர்ந்து அவைகளுடைய ராணியின் ஆட்சியின் கீழே சகல சம்பத்துகளையும் அடையும் என்பதிலும் சந்தேகமே கிடையாது.

---

# வார யுத்தச் செய்திகள்.

(24—4—41-லிருந்து 1—5—41-வரை).

## பால்கன் செய்திகள்.

ஆறு மாதங்கள் ஓயாது யுத்தம்செய்து அலுத்துப்போய் கிரேக்க சைனியங்கள் சரணமடைந்ததிலிருந்து, ஜெர்மன்படைகள் தெர்மாபிலிக் கணவாயைத்தாண்டி, ஆதென்ஸ் தலைநகரையும், பெலபானிஸஸ் பிராந்தியத்தையும் பிடித்துக் கொண்டன. பிரிடிஷ் சாம்ராஜ்ஜிய சைனியங்கள், இக்காரணங்களால் பின்வாங்கி, இப்பொழுது, முக்கால்பங்கு கிரீஸிலிருந்து வெளியேறிவிட்டது.

கல்விக்கும், நாகரிகத்துக்கும் பிறவியிடமாகிய ஆதென்ஸ் நகரத்தில் ஜெர்மானியருடைய கொடி பறப்பது துக்கிக்கக்கூடிய சம்பவம்தான். ஆனால் ஜெனரல் ஸ்மட்ஸ், லார்டு ஹாலிபாக்ஸ், மிஸ்டர் சர்ச்சில் முதலானவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறபடி, இந்த மகா யுத்தத்தில், கிரீஸ் தோல்வி, ஒரு சிறு சம்பவமென்றும், இதில் பிரிடனுக்காகப்படபோகும் சண்டைதான் சண்டையாகுமென்றும், முடிவில் பிரிடன் வெற்றியடையப்போவதென்பதையும் நாம் மறக்கக்கூடாது.

கிரேக்க யுத்தத்திலேற்பட்ட லாப நஷ்டத்தை சற்று கவனிப்போம். இதிலிருந்து ஜெர்மனிக்கு கீர்த்தியேற்பட்டு, அதை உபயோகித்து, மற்ற தேசங்களையும், தன் வலையில் சிக்கிக்கொள்ள ஜெர்மனி பிரயத்தனப்படுவது உண்மையே. இதிலிருந்து இதாலியும் கிரேக்கர்கள் கையிலிருந்து விடுபட்டது. ஆனால் இதாலி கிரீஸைத் தோற்கடித்ததாகச் சொல்லுவது மிகக் கேவலமான புளுகு. இப்பொழுது கிரீஸ் சரணமடைந்தாலும், இதிலிருந்து, முடிவில், சற்று யோசித்துப் பார்த்தால் பிரிடனுக்கும் சில லாபங்கள் ஏற்படும். பால்கனில் சண்டையை நடத்தத் தயங்கிய ஜெர்மனியை அங்கு சண்டை செய்ய செய்தாய்விட்டது. ஹிட்லர் போட்ட ஏற்பாடுகளெல்லாம் இரண்டு மாதங்களாக தவக்கப்படுத்தப் பட்டு மாற்றப்பட்டன. பிரிடன் கிரேக்க யுத்தத்தில் கலந்து கொள்ளாதிருந்திருந்தால், யூகோஸ்லாவியாவையும் கிரீஸையும் அறட்டி பவ்யப்படுத்திருப்பதோடு, எதிரிக்கும் சைனியத்திலும், தளவாடங்களிலும் இப்பொழுதைப்போல ஏராளமான நஷ்டமேற்பட்டிருக்க முடியாது: கிரீட் தீவும் பிரிடன் உபயோகத்துக்கு வந்திருக்க முடியாது. இந்த யுத்தமேற்பட்டதிலிருந்து யூகோஸ்லாவியா கிரீஸ் தேசங்களின் விளைபொருள்கள் ஜெர்மனிக்கு வருவது தடைபட்டுவிட்டது. மேலும், இந்த நாடுகளை அடக்கி ஆளவும், போக்குவரத்துகளைப் பழுதுபார்க்கவும் ஜெர்மனியானது கையிலிருந்து செலவு செய்யவேண்டும்.

**வட ஆபிரிக்காவில்** எதிரியானவன் எகிப்து எல்லையைத்தாண்டி ஸொலூமை பிடித்திருக்கிறான். பிரிடிஷ் படைகள் டொப்ருக்கில் பலமாய் ஸ்தாபித்துக் கொண்டிருக்கின்றன. பெங்காஸி, டெர்னு, எல்-கஸாலா முதலிய விடங்களில் பிரிடிஷ் விமானப்படைகள் பலத்த சேதத்தை விளைவித்தன.

அபிஸீனியாவில் சனிக்கிழமையன்று டெஸ்ஸியாவும், ஞாயிற்றுக்கிழமையன்று ஸொகோடோவும் பிடிபட்டன. ஸூடானியப்படைகள் மோடா கோட்டையைப் பிடித்தன. தென் ஆபிரிக்கப் படைகள் அம்மா அலகியை நோக்கிப் போகின்றன. இது டெஸ்ஸியாவிலிருந்து 250 மைலுக்கப்பால் 9,000 அடி உயரத்தில் இருக்கிறது.

## ஆகாயப் போர்.

பிரிடிஷ் விமானப்படைகள் ஜெர்மன் நாடுகளை யெதிர்த்து அதிக நஷ்டத்தை விளைவித்து வருகின்றன. கீல் துறைமுகம் நான்கு இரவுகள் சேர்ந்தார்ப்போல் தாக்கப்பட்டது. வில்ஹெல்ம்ஷேவன், ஹாம்பர்க்கு, பிரெஸ்ட், மான்ஹீம் ஸ்தானங்கள் எதிர்க்கப்பட்டன.



இந்த வாரத்தில் பிரிடனில், எதிரியின் எதிர்ப்பு பிளிமௌத்தில் 3 நாட்கள் விசேஷமாகவிருந்தது. திங்கள்கிழமையன்று 10,000 கொள்ளி வெடிகள் போடப்பட்டன. உள்நாட்டுப் பாதுகாப்பு மந்திரி மிஸ்டர் ஹெர்பர்ட் மாரிஸன் சொன்னபடி, இப்பொழுது கொள்ளிகள்-யுத்தம் நடக்கிறது. இது நடு-கிழக்குப் பிராந்தியத்தில் நடக்கும் டாங்கு சண்டையைப்போலவும், கடலில் கப்பற் சண்டையைப் போலவும் முக்கியமானது, இதைத்தடுக்க 20,00,000, பேர்கள் தாங்களாகவே அமர்ந்து, நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நெருப்பை அணைக்கும் ஸாதனங்கள் 100-க்கு 25 பங்கு அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. 16 வயதிலிருந்து 60 வயது வரை எல்லாப் புருஷர்களும் நெருப்பணைக்கும் வேலைக்கு லண்டன் நகரத்தில் கட்டாயப்படுத்தப்படுவார்கள்.

## அட்லாண்டிக் யுத்தம்.

ஏப்ரல் 27-ல் செய்த பெரிய பிரசங்கத்தில், அட்லாண்டிக் சண்டையைப் பற்றி பேசும்போது, இந்த அபாயத்தைத்தடுக்க வேண்டிய முயற்சிகளையெல்லாம் எடுத்துக்கொண்டிருப்பதாய்ச்சொல்லி, சென்ற, ஆகஸ்டு, ஸெப்டம்பர்மாதங்களில், விமானப்போரில் வெற்றிபெற்ற மாதிரி இதிலும் ஜயம் பெறவேண்டுமென்று மிஸ்டர் சர்ச்சில் சொன்னார்.

கப்பல்களைக்கட்டுவதும், காப்பாற்றுவதும், கஷ்டமேயொழிய, உடைப்பது சுலபமாதலால் ஜயத்தைப்பெற ஏற்பாடுகளைச்செய்துவரும் தனக்கு இந்தக்கடல் யுத்தமே முதற்காரியமாகயேற்பட்டதென்றார்.

ஆகலே, சண்டைக்கப்பல்களைக்கொண்டும், விமானங்களைக்கொண்டும் காவல் காத்து, எதிரிகளினுடைய நாசகாரிகளிருப்பதைப்பற்றி நடுநிலைமைக் கப்பல்களுக்கு எச்சரிக்கைகொடுக்கப்போவதாக ஜனாதிபதி ரூஸ்வெல்ட் கொடுத்த வாக்குறுதியானது மனக்கவலையை சற்றுதீர்த்து விட்டதாகவும மிஸ்டர் சர்ச்சில் எடுத்து உரைத்தார்.

இப்பேருதவியைப்பற்றிய சந்தோஷ அறிக்கைகள் அமெரிக்காவிலிருந்து கிடைத்திருக்கின்றன. யுனைடெட் ஸ்டேட்ஸ் கப்பற்படைத் தலைவர், இவ்வளவு தூரம் முன்வந்தபிறகு, மற்றும் மேற்போகவேண்டுமென்றார். சமஸ்தான மந்திரி கார்டல் ஹல் சாத்தியப்பட்ட அதிக அளவு உதவிசெய்வதோடு அது பிரிடனுடைய கைக்கெட்டும்படியும் செய்ய வேண்டுமென்றார்.

வியாபாரக் கப்பல்களைத் துணைகூட்டிச் செல்லுவதற்கும், கடலில் வேவு பார்த்துப் பாராக் கொடுப்பதற்கும் உள்ள வித்தியாஸத்தை யெடுத்துக் காட்டி, ஜனாதிபதி ரூஸ்வேல்ட் ஒன்றரை வருஷகாலமாக இவ்விதம் 1,000 மைலுக்குப் பாராக் கொடுத்து வருவதாகச் சொல்லி, யுத்த-களமென்பதும், இது இனி அவசிய மேற்பட்டால், விசாலப் படுத்தப்படு மென்றும், ஜெர்மெனி யுத்த களமென்று சொல்லுமிடங்கள் அவ்விதமாகக் கருதப்படா தென்றும் சொன்னார். இதிலிருந்து அமெரிக்கா இனி துணைக் கப்பலனுப்ப ஒருவிதமாகப் பிரயத்தனப்படுமென்று கருதப்படுகிறது.

## ஸ்பெயின்.

நியூஸ் கிரானிகிள் பத்திரிகையிலிருந்து ஸ்பெயின் அச்சு நாடுகளோடு சேர்ந்துகொண்டு, ஜிப்ரால்டரை கேட்கலாமென்று தெரிகிறது. உள்ளூரி லிருக்கும் உணவுப் பஞ்சத்துக்கு பிரிடிஷ் கடற்முற்றுகை காரணமென்று சொல்லிக்கொண்டும், சண்டைக்கு வரலாம். ஜெர்மன் படைகள் பேயன், பிரனீஸ் பிராந்தியங்களில் குழுமியிருக்கின்றன. விஷி கவர்ன்மெண்டு தன் தேசத்தின் வழியாகச் சைனியங்கள் செல்ல உத்தரவு அனுமதி இன்னும் கொடுக்க வில்லையாம்.

இராக்கிலும் வம்பேற்பட்டிருக்கிறது. ஏற்கனவே வந்த துருப்புகளோடு, மற்றும் துருப்புகளை பிரிடன் அங்கு இறக்க விரும்புகிறது. முதலில், வந்த துருப்புகளை அப்புறப்படுத்திவிட்டுத்தான், புதுத் துருப்புகள் உள்ளே வர வேண்டுமென்கிறார்களாம்.

**போர்சுகல்.**—ஏற்கனவே நார்வே, ஹாலண்ட், பெல்ஜியத்தில் செய்த சூழ்ச்சிகளை போர்ச்சுகலிலும் எதிரிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். வழக்கம் போல், பிரிடன் ஆக்கிரமிக்கப் போவதாகச் சொல்லப்படுகிறது. புது அரசியல் முறையில் போர்ச்சுகலைச் சேர்க்க முயற்சிக்கிறார்கள்.

**துருக்கியிலும்** ராஜ்ஜிய தந்திர சூழ்ச்சிகள் பலமாய் நடக்கின்றன.

**ருஷ்யா** ஜப்பானோடு நடுநிலை ஒப்பந்தத்தைச் செய்து கொண்டதிலிருந்து ருஷ்யா மஞ்சூரியாவிலிருந்த சைனியங்களை மேற்கே அனுப்பித்துக் கொண்டிருக்கிறது. இதை மறைக்க அன்னியர்களை மஞ்சூரியாவுக்குள் புக தடை செய்யப்படுகிறது. மத்திய ஆசியாவையும், நடு கிழக்குப் பிரதேசத்தையும் ஆக்கிரமிக்க ருஷ்யா எண்ணுமாம். இரானில் சில மாகாணங்களைக் கேட்பதோடு ருஷ்யா டைபிரிஸ் நதிக்கரையிலும் சைனியங்களைச் சேர்த்திருக்கிறதாம்.

**தூரக்-கிழக்கு பாகம்.**—செகியாங்கு, பூகியன் பிரதேசங்களில் நடக்கும் சண்டையிலிருந்து ஜப்பான் தென்-பஸிபிக்கில் பிரவேசிக்குமென்று நம்பப்படுகிறது.

50,00,000 பவுன் கடன் சைனாவுக்குக் கொடுக்க பிரிடன் சம்மதித்திருக்கிறது.

நாணய சம்பந்தமான உடன்படிக்கையொன்று சைனாவுக்கும் அமெரிக்காவுக்கும் முடிவாயிருக்கிறது.

சைனாவிலிருந்து 1,25,00,000 நோட்டுகளை அமெரிக்கா வாங்கிக்கொண்டிருக்கிறது.



## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேச தேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **21—4—41.** (திங்கட்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | வேவுபார்த்தல்.—விரோதி நாடுகள் ... | ...... | ...... |
| | இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| | விமான நிலயங்கள், தரையிலிருக்கும் விமானங்கள்.—டெர்னு (Derna), எல்-கஸாலா (El Gazala). | ... | தரையிலிருக்கும் பல விமானங்கள் நாசமாயின. |
| | மோட்டார் வண்டிகள்.–பார்டியா (Bardia) காபுஸ்ஸோ (Capuzzo). | ... நஷ்டமில்லை. | தீயும், வெடிகளும் கிளம்பின. |
| | விமானச் சண்டை.—ஸிரெனைகா (Cyrenaica). | 1 விமானத்துக்கு சொற்பச் சேதம். | ...... 1 விமானம். |
| | துறைமுகம், ராணுவக் கட்டடங்கள்.—ட்ரிபோலி (Tripoli). | ...... | பலத்த சேதம். |
| | ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் கிரீஸ் (Greece) | | |
| | விரோதி விமான நிலயங்கள்.—வட கிரீஸி (Greece)லுள்ள ஸெடெஸ் (Sedes) உள்பட பல இடங்கள். | ... நஷ்டமில்லை. | தீப்பிடித்தது. தரையிலிருக்கும் பல விமானங்கள் சேதமாயின. |
| **22—4—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | பகலில்.—நிறைய சாமான் ஏற்றி இருக்கும் சாமான் கப்பல், கடற்கண்ணி அகற்றும் கப்பல்.–நார்வே (Norway) கடற்கரை. | ... நஷ்டமில்லை. | கப்பல் மூழ்கிற்று. கடற்கண்ணி அகற்றும் கப்பல் சேதமடைந்தது. |
| | இரவில்.—பிரெஞ்சு (French) அட்லாண்டிக் (Atlantic) கடற்கரை, இரண்டு. | ...... | பலத்த சேதம். |
| | ஜெர்மன் யுத்தக் கப்பல்கள்.—ப்ரெஸ்ட் | ...... | பலத்த சேதம். |
| | இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| | விமானச்சண்டை.—டொப்ருக் (Tobruk) பிரதேசம். | ...... நஷ்டமில்லை. | 4 விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. பல விமானங்கள் சேதமாயின. |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **22—4—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | இதாலிய ஆபிரிக்கா (Africa)—தொடர்ச்சி. | | |
| | ஜெர்மன் மோட்டார் வண்டிகள், விரோதி சைனியங்கள்—டொப்ருக் (Tobruk) பிரதேசம். | ... | பலருக்குக் காயம். பெருத்த சேதம். |
| | கப்பல்கள், துறைமுகம்—பெங்காஸி (Benghazi). | .. | 2 கப்பல்களுக்குச் சேதம். |
| | பார்ஸி (Barce). | ... | ...... |
| | விமானங்கள் இறங்குமிடம்—அலோமாடா (Alomata). | ... | 3 விமானங்கள் நாசமாயின. |
| | விமானச் சண்டை—டெப்ரா மார்க்கோஸ் (Debra Markos). | ... | 1 விமானம். |
| | டோடிகானீஸ் (Dodecanese) தீவுகள். | | |
| | விமான நிலயம்—கலாடோ (Calato). | ... | சேதமாயிற்று. |
| | முக்கியமான துறைமுகம்—ரோட்ஸ் (Rhodes). | நஷ்டமில்லை. | வெடிகள் கேட்டன. |
| **23—4—41.** (புதன்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | பகலில்.—மின்சார உற்பத்தி ஆலை—இப்டன்ப்யூரன் (Ibbenburen). | ... | பிரதானமான கட்டடத்தில் பெரிய வெடிகள் வீழ்ந்தன. |
| | கம்பியில்லாத் தந்தி ஆபீஸ்—டெர்ஸ்செல்லிங் (Terschelling) என்ற டச்சு (Dutch) த்தீவு. | 1 விமானம். | பக்கத்திலிருந்த சைனியங்கள் சுடப்பட்டனர். |
| | விரோதிக் கப்பல்கள்—டச்சு (Dutch) த்தீவு. | ... | 1 கப்பல் மூழ்கி விட்டது. |
| | இரவில்.—கப்பற்படை நிலயம், 2 ஜெர்மன் யுத்தக் கப்பல்கள்—ப்ரெஸ்ட் (Brest), லாஹார் (Le Havre). | நஷ்டமில்லை. | பெருந்தீகள் கிளம்பின. |
| | இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| | விமானச் சண்டை—டொப்ருக் (Tobruk). | 3 விமானங்கள், 2 விமானிகள் பத்திரம். | 8 விமானங்கள். |
| | கப்பல் துறைமுகம்—ட்ரிபோலி (Tripoli). | ... | கப்பல்களில் மேல் குண்டுகள் வீழ்ந்தன. |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi) ... | ... | பெருந்தீகள் கிளம்பின. |
| | விரோதி விமானங்கள்.—டெர்னு (Derna). | ... | படுசேதம். |
| | விரோதி மோட்டார் வண்டிகள், சைனியங்கள்.—ஸிரெனைகா (Cyrenaica). | ... | சுடப்பட்டன. சேதமுமாயின. |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **23—4—41.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | பால்கன்ஸ் (Balkans). | | |
| | சைனியங்கள், மோட்டார் வண்டிகள், போக்குவரத்து சாதனங்கள்.—சண்டை நடக்கும் எல்லா இடங்களிலும். | ... | பலருக்குக் காயம். |
| **24—4—41.** (வியாழக்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | பகலில்.—விரோதி எண்ணெய்க் கப்பல்—நார்வே (Norway)க் கடற்கரை. | ... | ஒரு கட்டடம் இடிந்து போயிற்று. |
| | தரையிலிருக்கும் ஜெர்மன் விமானங்கள்.—வட பிரான்ஸி (France)லிருக்கும். விமான நிலயங்கள்.— | ... 1 விமானம். | பல விமானங்கள் சேதமாயின. |
| | இரவில்.—கப்பற்படை நிலயம், கப்பல் கட்டும் துறைகள், தொழிற்சாலைகள் நிறைந்திருக்கும் பிரதேசங்கள்.—கீல் (Kiel). | ... | பல இடங்களில் தீயும், வெடிகளும் கிளம்பின. |
| | கடற்படை நிலயம்.—வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven). | 2 விமானங்கள். | ... |
| | கப்பல் துறைகள், இன்னும் மற்ற முக்கியமான இடங்கள்.—நார்வே (Norway), ஹாலந்து (Holland), பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium) கடற்கரைகள். | ... | ... |
| | இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| | சாமான் கிட்டங்கிகள், கடல் விமானம் ... | ... | ... |
| | தங்குமிடம், ராஜாங்க காரியாலயங்கள்.—ட்ரிபோலி (Tripoli) துறைமுகம். | ...... | படுசேதமாயின. |
| | மோட்டார் வண்டிகள்.—பெங்காஸி (Benghazi). | | |
| | மோட்டார் வண்டிகள், கவசமணிந்த படைகள்.—ஸிரெனைகா (Cyrenaica). | நஷ்டமில்லை. | பல வண்டிகள் நாசமாயின. |
| | விரோதி விமானங்கள்.—டெர்னு (Derna), எல்கஸாலா (Elgazala). | நஷ்டமில்லை. | 4 விமானங்கள். |
| | விமான யுத்தம்.—டொப்ருக் (Tobruk). | நஷ்டமில்லை. | 4 விமானங்கள். |
| | மோட்டார் வண்டிகள், பீரங்கிகள் பொருத்திவைக்கப்பட்டிருக்கும் இடங்கள்.—அபிஸீனியா (Abyssina). | ...... | ..... |
| | ஒற்நாசை.—அபிஸீனியா (Abyssinia) விலிருக்கும் சைனியங்கள். | ...... | ...... |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**24—4—41.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.

பால்கன்ஸ் (Balkans).

| | | |
|---|---|---|
| காவல் காரிந்தல்.—கிரீஸ் (Greece) | 1 விமானம். | ...... |

**25—4—41.** (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—சாமான் கப்பல் (10,000 டன் நிறையுள்ளது)—நியூவி (Nieuwe) கால்வாய்க்கு 1 மைல் தூரத்திலுள்ளது. சிறிய கப்பல்கள், ராணுவங்கள் தங்குமிடம்.—டச்சு (Dutch) கடற்கரை. இரும்பு ஆலை.—இஜ்ம்யூடன் (Ijmuiden). இரவில்.—ஆலைகள், தொழிற்சாலைகள்—பால்ட்ரும் (Baltrum) என்ற ஜெர்மன் (German) தீவு. | ...... | மூழ்கடிக்கப்பட்டது. கப்பல்கள் தீக்கிரையாகின. உலைகள் மேல் குண்டு வீழ்ந்தது. |
| ரயில் பாதைகள், கம்பியில்லா தந்தி ஆபீஸ்.—டென்மார்க் (Denmark) | 2 விமானங்கள். | ...... |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | ... | ...... |
| விரோதி துணைக்காவல்படை.—எல் அக்ரூப் (Elagrub). | ... | வெடிச்சத்தங்கள் கேட்டன. |
| மோட்டார் வண்டிகள், விரோதி சைனியங்கள்.—அக்ரோமி (Acrome), டெர்னு (Derna). | ... | பல வண்டிகள் சேதமாயின. |
| விமான நிலயம்.—கொம்போல்ஸியா (Combolcia). | ... | 2 விமானங்கள் நாசம். |
| விரோதி சைனியங்கள்.—ஜிம்மா (Jimma), ஆர்கியோ (Argio). | 1 விமானம். | ...... |
| விமான யுத்தம்.—டொப்ருக் (Tobruk). | ...... | பல விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன. |

**26—4—41** (சனிக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—விமானப் படையெடுப்பு வட பிரான்ஸ் (France), இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | 2 விமானங்கள். | 3 விமானங்கள். |
| இரவில்.—தொழிற்சாலைகள், கப்பல் துறைகள்—ஹாம்பர்க் (Hamburg). | ...... | தீப்பிடித்தது. |
| எம்டன்.—(Emden). | ...... | ...... |
| ப்ரமர்ஹாவன்.—(Bremerhaven). | ...... | ...... |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**26—4—41.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி.

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| குக்ஸ்ஹாவன்.—(Cuxhaven). | ...... | ...... |
| கப்பல் துறைகள்.—லாஹார் (Le Havre), இஜ்ம்யூடன் (Ijmuiden). | ...... | ...... |
| விரோதி சாமான் கப்பல்கள்.—நார்வே (Norway). | ...... | மூழ்கடிக்கப்பட்டன. |
| விமான நிலயம்.—நார்வே (Norway). | ...... | சேதமாயிற்று. |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| எண்ணெய்த் தொட்டிகள், வண்டிகள்—டெர்னு (Derna) விற்கும், பார்ஸி (Barce) க்கும் மத்தியில். | நஷ்டமில்லை. | பலருக்குக் காயம் |
| கோட்டைகள், துருப்புகள்—செல்கா (Chelga), பகர்தார் (Bahrdar). | ...... | ...... |

**27—4—41.** (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—தொழிற் சாலை, கட்டடங்கள்—கொலோனு (Cologne)க்கு சமீபத்தில் | ...... | கட்டடங்கள் இடிந்தன. |
| இரவில்.—ராணுவக்கூடாரங்கள்—கொலோன் (Cologne). | ...... | ...... |
| கப்பல் துறைகள்—இஜ்ம்யூடன் (Ijmuiden). | ...... | சேதமாயிற்று. |
| விமான நிலயம்—டிகாய் (Deekooy) | ...... | ...... |
| எதிரி யுத்தக் கப்பல்—பிரிட்டானி (Brittany) க்கப்பால். | ...... | மூழ்கடிக்கப்பட்டது |
| பீரங்கிகள் வைத்திருக்கும் இடங்கள்—ஒரு ரயில்வண்டி—ஹாலண்டு (Holland). | நஷ்டமில்லை. | தகர்க்கப்பட்டது. |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| விரோதி மோட்டார் வண்டிகள், எண்ணெய்த் தொட்டி—அலோமாடா (Alomata). | ...... | தீப்பிடித்தது. |
| ராணுவக் கட்டடங்கள்-ஜிம்மா (Gimma). | நஷ்டமில்லை. | ...... |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **22—4—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—தென்கிழக்கு இங்கிலாந்து (England). | 1 விமானம். | சேதமில்லை. |
| | இரவில்.—ப்ளிமத் (Plymouth) ... | ...... | பலத்த சேதம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta) ... ... | ...... | சொற்பச் சேதம. |
| **23—4—41.** (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—தென்மேற்கு இங்கிலாந்தி (England)ல் ஒரு பட்டணம். | ...... | சொற்பச் சேதம். |
| | தென்கிழக்கு, வடகிழக்கு இங்கிலாந்தி (England)ல் சில இடங்கள், தென் வேல்ஸ் (Wales). | ...... | சொற்பச் சேதம். சிலருக்குக் காயம். |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | துறைமுகம், கப்பல்கள்—பிரேயஸ் (Piraeus), ஸலாமிஸ் (Salamis), அட்டிகா (Attica), மெக்காரா (Megara). | 1 விமானம். | சில கப்பல்களுக்குச் சேதம். சிலருக்குக் காயம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta) ... ... | ...... | பொது ஜனங்களுக்குச் சேதம். |
| **24—4—41.** (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—விமானச் சண்டை—தெற்குக் கடற்கரை, ஸஸ்ஸெக்ஸ் (Sussex) கடற்கரை. | 2 விமானங்கள். | ...... |
| | இரவில்.—தெற்கு, கிழக்கு, வடகிழக்கு இங்கிலாந்து (England). | ...... | வெகு சிலருக்குக் காயம். |
| **25—4—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில் :—வடகிழக்கு இங்கிலாந்து (England); கிழக்கு, வடகிழக்கு ஸ்காத்லாந்தின் கடற்கரைகள். வடமேற்கு இங்கிலாந்தில் அங்கு மிங்கும் சில இடங்கள். | ...... 1 விமானம். | ...... சிலருக்குக் காயம். சேதம் மிகவும் சொற்பம். |



| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **25—4—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | பிரிடிஷ் விமான நிலயம்.—கிரீஸ் (Greece) | ...... | தரையிலிருக்கும் சில விமானங்கள் நாசமாயின. |
| **26—4—41.** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—வடக்கு இங்கிலாந்து (England); மிட்லண்ட்ஸ் (Midlands). | ...... | சொற்பச் சேதம். |
| | இரவில்.—லண்டன் (London)–(விமான அபாய எச்சரிக்கை மட்டும்தான் இருந்தது). | ...... | ...... |
| **27—4—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | ஒரு பட்டணம்.—இங்கிலாந்தி (England)ன் தெற்குக் கடற்கரை. பட்டணங்கள்.—தென்மேற்கு இங்கிலாந்து (England); ஸ்காத்லாந்தி (Scotland)ன் வடகிழக்குக் கடற்கரை, போர்ட்ஸ்மத் (Portsmouth) | ...... 1 விமானம். | சொற்பச் சேதம். சிலருக்குக் காயம். பலத்த நஷ்டம். |
| **28—4—41.** (திங்கட்கிழமை) | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—ஸ்காத்லாந்தி (Scotland)ன் வடகிழக்குக் கடற்கரை. கிழக்கு, வடகிழக்குக் கடற்கரைகள். | ...... | ...... |
| | இரவில்.—தென்மேற்கு இங்கிலாந்து (England); தென்வேல்ஸ் (Wales) கிழக்கு ஆங்கிலியா (Anglia). | ...... | சொற்பச் சேதம். சிலருக்குக் காயம். |

# யுத்தக் குறிப்புகள்.

## உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள்!

இந்த வாரச்செய்தி சில விஷயங்களில் தவிர மற்றபடி ரொம்பவும் திருப்தி கரம் என்று சொல்ல முடியாது. பால்கன் நாடுகளில் திணறிக்கொண்டு ஹிட்லரின் சைனியங்கள் பிரவேசித்ததின் பயனாக ஹிட்லரின் செல்வாக்கு கொஞ்சம் தூக்கி நிற்கிறது. ஆனால் மனித சங்கியையின் பெருக்காலும், யந்திர பலத்தாலும் ராணுவ நிர்வாகிகளின் நிர்தாட்சண்யமான வேலையாலும் மட்டும் பெருமை யடைந்த ஜெர்மானியச் சிப்பாய்களின் வேலையானது, நெஞ்சுரமும் வீரத்தன்மை யும் படைத்த கிரேக்கர்கள் என்ன, நமது ஆஸ்திரேலியர்கள் என்ன, இவர்கள் முன் நிலையில் நில்லாது. ஆனால் நமக்கு முகம்கோண இடமில்லை; எதிர்காலத்தில் என்ன நேரிடுமோ என்று கவலைப்படவோ, அல்லது கணக்கு மீறி லிபியா (Libya)வி லிருந்து படைகள் கொண்டு போனதற்காவது கிரீஸில் வெற்றி யடையவோ இருபோர் முனைகளிலும் தடைகள் ஏற்படா வண்ணம் போதுமான துருப்புகள் வைத்துக்கொள்ளவில்லை யென்றாவது கோபமோ அதிருப்தியோ அடைய இடமில்லை.

## விசால புத்தியுடன் பாருங்கள்.

இப்போரில், நல்லதும் கெடுதலும் நாம் எதிர்பார்க்கவேணும்; தற்போது ஒருவேளை கெடுதலே சம்பவிக்கக்கூடும்; ஆனால் நாம் மனதில் இறுத்திக்கொள்ள வேண்டிய விஷயம் எதுவென்றால், இப்போரானது பால்கனிலோ, மத்தியதரைக் கடலிலோ, அட்லாண்டிக் மஹாசமுத்திரத்திலோ, இவைகளில் மட்டும் முடிவடை யாது. இந்தப் போர் ஒரு மகத்தான போர்; ஏற்றமும் இறக்கமும் உள்ளது; கடல் பலத்திற்கும் தரை பலத்திற்குமுள்ள போர்; தர்மத்திற்கும் அதர்மத்திற் கும் நடக்கும் போர். இரண்டுவகை பெரும் தத்துவங்களுக்குள் போர்.

பால்கன் யுத்தம் இறங்கு முசமானது. ஹிட்லருக்கு பால்கனில் சண்டை செய்யும் நோக்கமில்லை; யுத்தமில்லாமலே தன் இஷ்டத்தை பூர்த்திசெய்து கொள்ளலாமென்று நம்பினான். போன வருஷம் பிரிடன் படையெடுப்பு நிறை வேறாமல் போகவே, 'புதுமுறை' க்கு விரோதமாக இரண்டு சிறிய தேசங்கள் போரில் புகுந்தால் அவனுடைய செல்வாக்கிற்கும் கொள்கைகளுக்கும் மதிப்பு குறையவே அவன் பால்கனில் சண்டைக்குப்போக நேர்ந்தது. இப்போரில் இச் சமயம் அவனுக்கு எவ்வளவு சாதகமிருந்தபோதிலும், போர்முறையில் இந்த வம்பில் அவனை இழுத்து விட்டது நாமே.

இச்சிறு வியவகாரத்தில் அவனுக்கு வெற்றி கிடைத்தும், கவனித்துக் கொண்டிருக்கிற தேசங்களில் இன்னும் சில "காக்காய்" கள் அவனுக்கு கிடைத்த போதிலும் உடன் காலத்திலேயே முக்கிய தேசமொன்றை அவன் விரோதியாகச் செய்துவிடுகிறான்; பலன், கிரீஸில் சமயத்திற்கு நமக்கு வந்து சேராத அமெரிக்க சகாயமானது இனி வரப்போகிற சண்டைகளில் நமக்கு கிட்டும்.



## திருப்திகரமான ஞாபகம்.

நாம் கீழே தள்ளப்பட்டதாக காணப்படும் சமயத்தில், ஒரு விஷயம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டியது; இது ஹிட்லருக்குத் தெரியும்; அந்த உணர்ச்சி அவனை சங்கடப்படுத்தும்; அதென்னவென்றால், போரில் எதிர் பாராதபடி திடீரென்று மாட்டிக்கொண்ட சமயத்திலிருந்ததைக்காட்டிலும் இப் போது எவ்வளவு அபரிமிதமாக அவன் விரோதிகள் வலுத்துவிட்டார்களென்பது.

1. பிரிடிஷ் 'சாம்ராஜ்ஜிய துருப்புகளின் நிஜ சங்கியை ஸர்க்கார் மூலம் வெளிப்படுத்தப்படவில்லை; இது நியாயம்; ஆயினும் பத்து லக்ஷக்கணக்காக சைனியங்கள் இருக்கின்றனவென்பதும், அவைகளில் கடைந்தெடுக்கப்பட்ட மணியான துருப்புகள் பலர் என்பதும் அவர்களின் சங்கியை அதிகரித்து வருகிற தென்பதும் நிச்சயம்.'

2. பிரிடிஷ் கப்பற்படையின் ஐந்தொகை லாபகரமாகவேயிருக்கிறது; சேதமான கப்பல்களைக்காட்டிலும் புது கப்பல்கள் ஜாஸ்தி; அதன் பிராசீன கீர்த்தி மங்காத விதமாக காரியங்கள் செய்துவந்து ஏழுகடல்களிலும் ஆதிக்கம் கொண்டிருக்கிறது.

3. ஆகாயத்திலோ, போர் துவக்கும் சமயம் நமக்கிருந்த குறைவு அகன்று சமத்துவம் அநேகமாக ஏற்பட்டுவிட்டதுடன், இவ்வருஷம் ஆகாயத்தில் நமக்கு பூர்ண ஆதிக்கம் ஏற்பட்டு விட அனுசரணையாக விமானங்கள் தயார் செய்யப் படுகின்றன. நாம் கணக்கு இல்லாமல் பேசவில்லை. எல்லா தேசத்தாரும் ஒத்துக்கொள்ளும் ஒரு விமான நிபுணர் மிதமானபடியே கொடுத்திருக்கும் கணக்கு குறிப்பிடுகிறோம்.

| | பிரிடன். | சாம்ராஜ்ஜியம். | அமெரிக்கா. | ஜெர்மனி. |
|---|---|---|---|---|
| தற்போது மொத்த லாயம் ... | ? | ? | ? | 35,000 |
| முன் அணி ... | ? | ? | ? | 6-7000 |
| தற்போது மாதாந்திரத் தயாரிப்பு | 1,650 | ? | 800-1,000 | 2,000 |
| ஜூலைக்குப்பிறகு மாதாந்திர தயாரிப்பு. | 1,650-1,800 | ? | 1,600-1,800 | 2,000-1,800 |

முதல் இரண்டு வரிகளிலுள்ள கேள்வி குறிப்பால் பாதகமில்லை; செய்கையில் விரோதியைக்காட்டிலும் நாம் மூன்று மடங்கு உயர்வென்று நமக்குத் தெரியும். கடைசி இரண்டு வரிகளிலுள்ள கேள்விக் குறிப்புகள் நேசதேசத்தாரின் தயாரிப்பு தூக்கி நிற்பதை எடுத்துக் காட்டுகின்றன; ஜெர்மானியர் தயாரிப்பு குறைவதுடன் சீர்தூக்கி காட்டுகிறது.

இத்துடன் இன்னுமொரு விஷயம் கவனியுங்கள் பிரிடனின் முக்கிய இரண்டு விரோதிகளில் ஒன்றான இதாலி அநேகமாக ஆகாயத்திலும் கடலிலும் கீழேவிழுந்து படுத்துவிட்டது!

இந்த ஸ்திதியில், பிரிடிஷ் சாம்ராஜ்ஜிய, அமெரிக்க, மந்திரிகளில் பொறுப்புள்ளவர்களில் ஒருவரேனும் இப்போரில் நாம் தோல்வியடைய முடியாது என்றால் அதில் என்ன ஆச்சரியம்!

## புகட்டலும் நடப்பும்.

அமெரிக்க சாமான் கப்பல்களுக்கு அமெரிக்க பாதுகாப்பு விஷயமாக கர்னல் நாக்ஸ் (Colonel Knox) மிதமாகவும் ஆனால் உற்சாகமூட்டும் விதமாகவும் எதிர் காலத்தில் நடக்கப்போவதைப்பற்றிச் சொன்னதை இப்போதுதான் கேட்டேன். அது மிகவும் திருப்திகரமாகவிருந்தது; ஆனால் அமெரிக்க சமாசாரங்களைப்பற்றியும் செய்கைகளைப்பற்றியும், அமெரிக்க முக்கியஸ்தர்களின் எண்ணங்கள், நோக்கங்கள், அபிப்பிராயங்கள் முதலியவைகளைப்பற்றியுள்ள வித்தியாசங்களை மனதில் வைத்துக்கொள்ளுவது நலம். பின்னால் சொன்னதெல்லாம் அடிக்கடி பார்க்கலாம். தடபுடலாகவிருக்கும்; இவைகளை மட்டும் கவனிப்போர், அமெரிக்கா பேச்சளவிற்கு காரியமில்லையென்று நினைக்கக்கூடும், சுயேச்சை மிகுந்த அந்த தேசத்தில் பொது சர்ச்சைக்கு உள்படாதது ஒன்றுமே கிடையாது. ஜனங்கள் தங்கள் அபிப்பிராயங்களை நிர்பயமாக வெளியிடலாம்; இது அச்சு தேசங்களில் நினைக்க முடியாது; அங்கே தலைவர்கள் ரகசியமாய் செய்த முடிவுகளை மட்டுந்தான் பொதுமக்கள் பறை சாத்தலாம்.

அதனால்தான் நாம் மனதில் வாங்கிக்கொள்ளவேண்டிய அமெரிக்கச் செய்திகள் நான்குவகையுள்ளன:—

(*a*) வெண்டல் வில்கி, ஸெனடர் கிளாஸ், Mr. கென்னெடி போன்றவர்கள் சொல்லும் வார்த்தைகள்—பத்திரிகைகள் பதிப்பிக்கும் வார்த்தைகள். இவைகளெல்லாம் கேவலம் அபிப்ராயம் மட்டுமே.

(*b*) கவர்ன்மெண்ட் அதிகாரிகள், ரூஸ்வெல்ட், ஸ்டிம்ஸன், கார்டெல் ஹல், நாக்ஸன் முதலானவர்கள் பத்திராதிபர் கூட்டங்களிலும் ரேடியோ மூலமும் விடுக்கும் செய்திகள். இவையெல்லாம் கவர்ன்மெண்டின் ஆவலையும் கொள்கைகளையும் மட்டும் துலக்கும். அதன் செய்கைகளை காட்டா.

(*c*) காங்கிரஸில் கொண்டுவரப்பட்ட திட்டங்கள். அவைகள் சட்டமாகலாம், ஆகாமலிருக்கலாம். இரண்டு சபைகளிலும் அவை அரங்கேறவேணும்; அவைகள் அமுலுக்குவருமுன் தலைவர் கையொப்பம் பெறவேணும்.

(*d*) அரசியல் திட்டப்படிக்கும் சட்டபூர்வமாக அளிக்கப்பட்ட 'ஸ்பெஷல்' அதிகாரப்படிக்கும் கவர்ன்மெண்ட் செய்த காரியங்கள்.

## வித்தியாசம்.

ஒவ்வொன்றிற்கும் உதாரணங்கள், (d) வகுப்பை கவனியுங்கள். அப்படிச் செய்தால் மற்ற 3 வகைகள் சம்பந்தமாக ஏமாற்றமடையாமலிருக்கலாம்.

(*i*) குத்தகை-கடன் மசோதா நிறைவேறியவுடன் பிரிடனுக்கு 35-நாசகாரிகள் மாற்றப்படவேண்டியிருந்தது. இது இன்னும் நடைபெறவில்லை; ஏனென்றால் இந்த வாரம் 'பிரஸ்தாபிக்கப்பட்டது'.



(*ii*) 140 அமெரிக்க சாமான் கப்பல்கள் பிரிடனுக்கு மாற்றப்படுமென்றும் 500 கப்பல்கள் பிரிடனுக்காக கட்டப்படுமென்றும் அமெரிக்க ஆதாரங்களால் பலராலும் படிக்கப்பட்டதும் பொறுப்புள்ளதுமான ஸர்க்கார் பத்திரிகையான "வியாபாரப் பத்திரிகை" மார்ச்சில் வெளியிட்டது.

(*iii*) பிரிடனுக்கு சாமான்களை கொண்டுபோகும் கப்பல்களைப் பாதுகார்க்க அமெரிக்க யுத்தக் கப்பல்கள் போகுமென்று ஸெனேடர் கிளாஸ் (Senator Glass) மார்ச்சு 28-ல் சொன்னார்.

ஆயினும் Mr. சர்ச்சில் இன்று செய்த பெரிய பிரசங்கத்தில் இந்தக் காரியங்கள் நடைபெருமென்பதை ஆதரிக்கவில்லை. பல அமெரிக்கர்கள் ஆவலை இவர்கள் காட்டுகின்றனவே ஒழிய, உண்மை நடப்பைத் தெரிவித்ததாகாது.

(*b*) "அமெரிக்க கவர்ன்மென்டார் செய்யவேணும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறவை"களுக்கு உதாரணங்கள்:—

1. பிரிடிஷ் கடற்படைக்கு அமெரிக்கக் கப்பல் நிலயங்களிலுள்ள வசதிகள் கொடுக்கப்படலாம்.

2. முதல்முதலாக கடலின் மேல் பரப்பில் செல்லக்கூடிய படகுகள் பிரிடனுக்கு அமெரிக்கா கொடுக்கும்.

இப்படி நடக்குமென்று கர்னல் நாக்ஸ் (Colonel Knox) சொன்னதானது நடைபெற்றது. ஆனால் வேறு நாமதத்தின் பேரில் நடைபெற்றது.

(*c*) குத்தகை-கடன் மசோதா பிரகாரம் பிரிடனுக்கு பஞ்சு அனுப்பப்படவேண்டுமென்று மார்ச்சு 19-ல் அமெரிக்க காங்கிரஸில் பிரேரேபிக்கப்பட்டது.

இதைப்பற்றி பின்னால் ஏதேனும் பேச்சுண்டா?

(*d*) ஆனால் அமெரிக்கா என்ன செய்திருக்கிறது என்பதை கவனிப்போம்.

(1) குத்தகை-கடன் மசோதா சட்டமாகிவிட்டது. (மார்ச்சு 11). பிரிடனுக்கு உதவிபுரிய செலவிற்காக 900 கோடி டாலர்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(ii) மார்ச்சு 14-ல் ஏராளமான தளவாடங்கள் எடுத்துக்கொண்டு அமெரிக்க கப்பல்கள் பிரிடனுக்குப் புறப்பட்டு ஸாவதானமாய் வந்துசேர்ந்தன. இம்மாதிரி பலமுறை நடந்திருக்கிறது.

(iii) அமெரிக்கத் துறைமுகங்களில் அச்சின் வசமுள்ள கப்பல்களில் 69 கப்பல்கள் பிடிக்கப்பட்டன.

(iv) அமெரிக்காவில் தயார் செய்யப்படும் யுத்த விமானங்களில் பாதி பாகம் பிரிடனுக்கு அனுப்பப்படுகிறது. இப்பொழுது மாதம் ஒன்றுக்கு 1,000 விமானங்கள் தயார்செய்து அனுப்பப்படுகின்றன. ஸெப்டம்பர் மாதத்திற்குள் இந்த எண்ணிக்கை 1,800 ஆகும்.

(V) அச்சு தேசத்தாரைச் சேர்ந்த யூ-படகுகளாலும் கடல் மேல் பரப்பில் செல்லும் படகுகளாலும் ஏற்படக்கூடிய ஆபத்தைப்பற்றி எச்சரிப்பதற்காக வெகுதூரம் வியாபித்த அமெரிக்கக் கடல்களில் அமெரிக்கக் கப்பற்படை பாதுகாக்கப்போகிறது.

ஆம். நாளாவது வகுப்பில்கண்ட அமெரிக்கச் செய்திகளை நாம் கவனிப்பது நியாயம். அதை அப்படித்தான் ஹிட்லரும் முஸோலினியும் செய்கிறார்கள்.

## நமது "அசகாய சூரன்."

ஒருவன் தனிமையில்கொண்ட அபிப்பிராயமானது பொறுப்புள்ளவர்களால் உடன் காலத்திலேயே ஆதரிக்கப்பட்டதென்றால் திருப்தியாகத்தானிருக்கிறது. நான் இந்தக் குறிப்புகள் எழுத ஆரம்பிக்கும்போது பிரிடிஷ் பிரதம மந்திரி ஏப்ரல் 27-ல் ரேடியோ மூலம் பேசப்போகிறாரென்று எனக்குத் தெரியாது. இதில் 3-வது பாராவின் கடைசி வாக்கியத்தை ஆழ்ந்த யோசனையின்பேரில் எழுதினேன். அதே அபிப்பிராயத்தை என்ன மகத்தான நம்பிக்கையுடன் Mr. சர்ச்சில் வெளியிடுகிறார்! "அவர் சொல்லும்போது ஜனங்கள் அதை நம்புகிறார்கள்." இந்த யுத்தத்தை ஹிட்லர் ஒருநாளும் ஜயிக்க முடியாதென்று அழுத்தமாய் சொல்லுகிறார். ஏனென்றால், தர்மக் கட்சியென்ற பலத்தாலும் ஓங்கி நிற்கும் மனித பலத்தாலும், சமுத்திர பலத்தாலும், பொருள்பலத்தாலும், ஹிட்லர் ஜயிக்காதபடி பிரிடன் பார்த்துக்கொள்ளும். உண்மையில், இதற்கு மேல் சொன்னால் வீண் வீச்சாகும்; இதை நம்பாமலிருந்தால் பேதைமையாகும்.

---

# பிரிடன் பேசுகிறது.

(1941-௵ மார்ச்சு௴ 31௳ பி. பி. சி.-யில் பேசியது.)

இன்றிரவு ஜே. பி. ப்ரீஸ்ட்லி அவர்கள் யுத்தத்தின் ஒரு புதிய அம்சத்தைப் பற்றியும் இந்த யுத்தம் எதற்காக நடத்தப்படுகிறதென்பதையும் சொல்ல ஆரம்பிக்கிறார்.

நமஸ்காரம்,

இன்றிரவு நான் சொல்லுவதை சற்று கவனத்துடன் கேழ்க்கும்படி கோருகிறேன். ஏனென்றால் இந்த யுத்த சம்பந்தமாய் ஒரு புது அபிப்பிராயத்தை வெளியிட உத்தேசிக்கிறேன். நான் சொல்லப்போவது உங்களுக்கு சற்று அபூர்வமாயும் ஒப்புக்கொள்ளத் தகாததாயும் தோன்றலாம். ஆனால் அது உங்கள் கவனத்துக்கு அர்கமானது. நான் கேலியாய் பேசவில்லை. நான் முன்பே சொல்லியிருக்கிற பிரகாரம் இந்த யுத்தம் பாஸிஸத்துக்கும் ஜனநாயகத்துக்கும், சுயநலத்துக்கும் ஸ்வதந்திரத்துக்கும் இடையே நடக்கும் யுத்தமாகும். இப்பொழுது இந்த யுத்தத்துக்கு ஒரு புது மாதிரியான ஓர் அடிப்படையான லக்ஷணம் கூற விரும்புகிறேன். அடிப்படையாக இது "வெரும் கூட்டத்துக்கும்" ஜனங்களுக்கும் இடையே நடக்கும் ஒரு யுத்தம்; மனித சமுதாயத்தில் அடிப்படையான வித்தியாசமான கொள்கையையுடைய



இரண்டு வர்க்கத்துக்குள் நடக்கும யுத்தம். இந்த இரண்டு வர்க்கத்தில் ஒன்றை "வெருங்கூட்டம்" என்றும் மற்றொன்றை "ஜனங்கள்" என்றும் இங்கே குறிப்பிடுகிறோம். ஹிட்லர் இந்த வெருங்கூட்டத்தைத்தான் கருதி வருகிறான். இதேதான் அவனுக்கு இதுவரை ஏற்பட்ட ஜயத்துக்குக் காரணம். இதனாலேயே கடைசியாக அவன் தோல்வியடைவான் என்றும் நான் நம்புகிறேன். "வெருங்கூட்டம்" என்பது என்ன? இது இந்த ஆதுனிக உலகத்தின் ஸ்ருஷ்டி. முந்தின யுத்தத்துக்கு முன் அவைகள் இருந்ததில்லை. அவைகள் வீண் ஆவேசங்களாக மாற்றப்பட்ட சில மனிதர்களே. அவர்களுக்கு பெயரும் கிடையாது, பலமும் கிடையாது, ஆத்மபலமும் கிடையாது. வீண் யந்திரங்களால் உழைப்பதும், ஒழிந்து மாண்டபிறகு இவர்கள் கதியென்ன? இவர்களுக்கு ஸ்வர்க்கமும் இல்லை, நரகமுமில்லை. அறவே மறக்கப்படுகிறார்கள். அவர்கள் கடவுளின் குழந்தைகளல்ல. ஏன்! தன் பெற்றோர்களுக்கே அவர்கள் குழந்தைகளல்ல. தங்கள் குழந்தைகளுக்கும் பெற்றோர்களல்ல, ஏனென்றால் அவர்களுடன் அவர்கள் குடும்பத்தின் உயிரும் பாழாகிறது. அவர்களோ தொழிற்சாலைகளிலும் அநேக பொழுதுபோக்கு நிலயங்களிலும் உள்ளும் புறமும் சஞ்சரிக்கும் மூளையில்லாத ஒரு பெருங்கூட்டம். அவர்களுக்கு தைரியம் கிடையாது. நம்முடைய காலத்துக்கு முன் ஒரு தேசத்தின் ஜனங்கள் முழுவதையும் வேர்ப்பிடுங்காகப் பிடுங்கி பஹிஷ்காரம் செய்ய யத்தனிக்கும் எந்த கொடுங்கோல் மன்னனும் ஒரே அடியாய் கண்டிக்கப்பட்டு வந்தான். இதுதான் கொஞ்சமும் இரக்கமற்ற கொடுங்கோன்மையின் சிகரம். இதுதான் ஹிட்லருக்கு பிரியமான தந்திரம். லக்ஷம் ஜனங்களை இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்கும் தூக்கித் தள்ளுவதே அவன் காரியம். ஏன்? தைர்யமற்று, வீடுவாசலன்னியில், எப்பொருளிலும் எக்காலத்திலும் எவ்விதப்பற்றுதலுமற்று, சதுரங்கப்பலகையில் நகத்தப்படும் காய்கள்போல் இங்கும் அங்கும் நகத்துவதற்கு லாயக்கான வெருங்கூட்டத்தோடுதான் பழகுகிறோம் என்று அவன் நன்றாய் உணர்ந்திருக்கிறான்.

ஜனங்களைப்பற்றி ஏராளமாய் அறிந்த ஏப்ரகாம்லிங்கன் எல்லா ஜனங்களையும் எல்லா காலத்திலும் ஏமாற்ற முடியாதென்று நமக்கு எச்சரித்திருக்கிறார். ஆனால் "மெயின்காம்ப்" ஐ படித்தீர்களானால் ஜனங்களை ஏமாற்ற அது ஒரு நல்ல பாடப்புத்தகம் என்று அறிவீர்கள். ஹிட்லரின் அபிப்பிராயப்படி அந்த ஜனங்கள் எப்பொழுதும் தாங்கள் ஏமாற்றப்பட வேண்டுமென்றே விரும்புகிறார்கள். ஜனங்களைப் பற்றி அவன் எழுதுவதிலெல்லாம் அவர்களிடம் அவனுக்கிருக்கும் வெறுப்புத் தெரிகிறது. ஜனங்களை அவன் ஒரு "வெருங்கூட்டம்" என்று நினைத்துக் கொண்டிருக்கும் அளவும் நான் அவனை குறை கூறமுடியாது. இவ்வாறு ஆத்ம சக்தியற்ற மிருகங்களாய் ஒரு கூட்டம் இருக்கக்கூடுமென்று நீங்கள் நம்பினால், உங்களுக்கு அறிவும் ஆத்ம சக்தியும் இருக்குமேயானால், நீங்கள் கூடிய சீக்கிரத்தில் அந்த மிருகத் தன்மையினர்களிடமிருந்து விலகிக்கொண்டு அவர்களை எவ்வளவு தூரம் ஆட்டிவைக்கலாமென்பதை அறிந்து கொள்வீர்கள். மாற்றி அவர்களை பயமுறுத்தியும்

உத்ஸாகப்படுத்தியும் வருவீர்கள். ஒரு சமயம் அவர்களை குஷிப்படுத்தி முன்னேற்றுவீர்கள். மற்றொரு சமயம் ஓச்சல் ஒழிவன்னியில் மேலும் மேலும் அவர்களை விரட்டுவீர்கள். லக்ஷ லக்ஷமாய் அவர்கள் மாண்டால் பரவாயில்லை. ஏன்? அவர்கள் யார்? வெறும் ஆவேசமூட்டைகள், வேறொன்றுமில்லை. இந்தியாவிலும் சீனாவிலும் இவ்வாறான மக்கள் கோடிக் கணக்காயிருக்கிறார்கள். இந்த எஜமானர்கள் ஐரோப்பாவிலுள்ள இவ்விதமான மக்களை உபயோகித்த பிறகு இந்தியாவுக்கும் சீனாவுக்கும் போய் அந்த மக்களை உபயோகப்படுத்த ஆரம்பிக்கலாம். ஹிட்லரைப் போன்ற மனிதர்களின் மனதில் இவ்விதமான பேய் எண்ணம் இருந்து வருகிறதென்று நீங்கள் திண்ணமாய்க் கருதலாம். அவர்கள் இந்த மக்களை வெறும் படங்களில் காண்பதுபோல்தான் நினைக்கிறார்கள். இதை கவனியுங்கள்—தங்களுடன் பிறந்த மக்களை மனிதர்களென்று கருதாமல், தொழிற் சாலை வேலைக்காக ஏற்பட்ட வேலை யந்திரங்களாகவும், ஊருக்கு ஊர் ஏற்றுமதி செய்யப்படும் மாம்சபிண்டங்களாகவும், தன் சொந்த லாபத்துக்காக தீனிபோட்டு வேலை வாங்கப்படும் ஆவேசமாகவும், அவ்வளவு லாபமாகவும், சைனியத்துக்கும் பீரங்கிகளுக்கும் வேண்டிய கேவல மனிதசக்தியாகவும் கருதும் ஜனங்கள் எல்லோருமே எந்த தேசத்தில் இருந்தாலும் நாஸிக் கொள்கைகளை அங்கீகரிக்காமல் இருக்கமுடியாது. ஏனென்றால் அப்பேர்பட்ட மனிதர்கள் நாஸிக் கொள்கைகளுடன் மக்களைப் பொறுத்து நாஸிகளுக்குள்ள கொள்கைகளையும் பங்கிட்டுக் கொள்ளுகிறார்கள்.

இவ்வித கொள்கைகளை அனுஷ்டிப்பதால் அவர்களுக்கு ஒரு நன்மை ஏற்படுகிறது—இரக்கமற்ற வேகத்துடனும் சாமார்த்தியத்துடனும் வேலை செய்யலாம்; அதிகம் பேசவேண்டியதோ வாதம்செய்யவேண்டியதோ இல்லை; த்ரவமற்ற உத்தரவுகள் பிறப்பிக்கலாம்; கொடுங்கோலரசனின் கண்டிப்புடன் தண்டனைகள் விதிக்கலாம்; இந்த ஆவேசங்களைக் கிளப்பிவிட்டு சுலபமாய் யுத்தங்கள் விளைவிக்கலாம்; தேவையானால் இந்த ஆவேசங்களை கெடுதல் வழிகளிலும் இரக்கலாம்; நியாய நியாயங்களைப்பற்றி கவனிக்க வேண்டியதில்லை; எரும்புப் புத்தகக் கலைப்பதில் எவ்வளவு இரக்கம் காட்டப்படுகிறதோ அதைவிட அதிக இரக்கம் காட்டவேண்டிய தேவை இல்லை; எங்கு சென்றாலும் சிநேகிதர்களையோ நாம் பின்னால் விட்டுச் செல்லும் நாடுகளின் நேசத்தையோ காணமுடியாது. ஆனால் எங்கும் இந்த ஆவேசங்களான மக்களைத் தவிர வேறு ஜனங்களைக் கருதாத ஜனங்களினிடையே சதியாலோசனைக்காரர்களையும், தாத்காலிக நேயர்களையும், கையாட்களையும், ஏமாற்றக்காரர்களையும்தான் காணமுடியும். ஆகையினால்தான் நான் சொல்கிறேன்—அவனுடைய ராஜீயக் கொள்கை எப்படிக்கிருந்தபோதிலும், எவன் நாஸிக் கொள்கைகளிலும் அவர்கள் வேலைகளிலும் அனுதாபங்காட்டுகிறானோ, எதிர் காலத்தில் சுயநல அரசாட்சிதான் நடக்கப்போகிறது. எவன் முணுமுணுக்கிறானோ அவனைக் காட்டுங்கள், அவனுடைய மனதில் மக்களைப் பற்றி மேலே சொல்லப்பட்ட நாஸிக் கொள்கைகள் என்ற விஷயம் ஏறி இருக்கிறதென்பதை நான் உங்களுக்குக் காட்டுகிறேன். ஜன



நாயகத்தில் ஏராளமான பரிசுகளை அடையாத சில பிரபலஸ்தர்கள் ஆச்சரியப்படும்படி நாஸிக் கொள்கைகளில் அனுதாபங்காட்டுவதற்கு இதுதான் வியாக்கியானம் ஏதோ ஒரு காரணத்தால் அவர்கள் அனுபவத்தில் ஜனங்கள் வெறும் மக்கள் கூட்டமாக மாறிவிட்டது.

இப்பொழுது நாமிருப்பது இயந்திரங்களின் காலம். சமாதான காலத்தில் நமக்குவேண்டிய பொருள்களை உற்பத்தி செய்து கொடுப்பதன்னியில் இவ்வியந்திரங்கள் நமக்காக யுத்தங்களிலும் சண்டை செய்கின்றன. இந்த மக்களும் இந்த இயந்திர உலகத்தில்தான் சரளமாகப் புழங்குகிறார்கள். அவர்கள் பகலெல்லாம் இயந்திரங்களை விற்கிறார்கள். இரவில் இயந்திரங்களால் சந்தோஷத்தையடைகிறார்கள்; இதைக்காட்டிலும் நல்லதாய் அவர்கள் வேறொன்றும் கேழ்க்கவுமில்லை. எதிர் காலம் இந்த மக்கள் வசமுள்ளதா அல்லது அவர்களை ஆட்டிவைக்கும் துஷ்டர்கள் வசமுள்ளதா? அநேகர் அப்படித்தான் நினைக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் ஜனங்களையே பார்க்கவில்லை; எங்கும் இந்த ஆவேசங்கொண்ட மக்களையேதான் காண்கிறார்கள். அவர்கள் ஸ்வஸ்திகாவை அணியவேண்டியதில்லை; நாஸிகள் சலாம் செய்வதுபோல் கையை தூக்கவேண்டியதில்லை; ஆனாலும் உள்ளூர அவர்கள் எல்லோரும் நாஸிகளே; ஜனங்களைப் பற்றியே எழுதாமல், வெறும் மக்களின் கூட்டத்தின் மத்தியில் விளங்கும் தங்களைப் போன்ற சிலரைப்பற்றி மட்டில் எழுதும் அவர்கள் எல்லாம் நாஸிகள்தான். இதை எல்லாம் எதிர்த்துத்தான் நாம் யுத்தம் செய்கிறோம். நாம் யூனியன் ஜாக்குக்காகவோ, நக்ஷத்திரங்களுக்காகவோ, சண்டையில் வரையப்படும் கோடுகளுக்காகவோ, யுத்தம் செய்யவில்லை; தேசப்படத்தின் வடிவங்களுக்காகவோ, வர்ணங்களுக்காகவோ, மார்க்கெட்டுகளுக்காகவோ, லாபத்துக்காகவோ, சண்டை செய்யவில்லை; ஆனால் ஜனங்கள் நசித்து வீண் ஆவேசக்கூட்டங்கள் அவர்கள் ஸ்தானத்தை வகிக்கக்கூடாதென்பதற்காகவே யுத்தம் செய்கிறோம்.

ஜனங்கள் என்றால் யார்? முதல் முதலில் அவர்கள் எப்பேர்ப்பட்டவர்களில்லையென்று சொல்லி விடுகிறேன். கூலிப்பார்ஸல்கள் போல் இங்குமங்கும் ஏற்றுமதி செய்யப்படும் நாம ரூபமற்ற வெருங்கூட்டம் அல்ல. மாற்றி பயமுறுத்தப்பட்டும் குஷிப்படுத்தப்பட்டும் வரும் வீண் ஆவேசங்களல்ல. சாம்ராஜ்ஜியத்தின் அம்சங்களுமல்ல; அவர்கள் ஜனங்கள்! அவர்களிடமிருந்து என்ன கிடைக்கிறது? அந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்லுகிறேன். ஜனங்களிடமிருந்துதான் எல்லாம் கிடைக்கிறது; அவர்களுக்கு நாம ரூபங்களுண்டு; தனித்தனி மனோபாவங்களுண்டு; ரகசியமான நம்பிக்கைகள், பயங்கள், துஸ்வப்னங்கள், நல்ல ஸ்வப்னங்கள் உண்டு; அவர்களை நீங்கள் ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்களிலும், ரெம்ப்ராண்டின் படங்களிலும், பிதோவனின் சங்கீதத்திலும் காணலாம்—அவர்கள் நமது சகோதர சகோதரிகள்; அவர்கள் கடவுளின் குழந்தைகள். சென்ற எட்டு மாதங்களாய் இந்த தேசத்து மக்கள் எவ்வாறு நடந்துவந்தார்கள் என்று உங்களுக்குத் தெரியும்; நாஸிகள் ஆச்சரியப்படும்படியாய் கஷ்டத்தின் மேல் கஷ்டத்தை அனுபவித்து ஒவ்

வொரு தடவையும் தங்கள் உத்தம குணங்களை வெளிப்படுத்தி கஷ்ட காலத்திலும் தைரியமாயிருக்க வேண்டுமென்பதற்கும் பிறரிடத்தில் நேசமாயும் பிரியமாயுமிருக்க வேண்டுமென்பதற்கும் திருஷ்டாந்த பூதர்களாக இருந்தார்களென்பதும் உங்களுக்குத் தெரியும். நீங்களும் மனதில் நாஸிகளாயிருந்தாலொழிய, ஜனங்களை வெறும் ஆவேசக்கூட்டமாய் கருதினாலொழிய இதில் ஆச்சரியப்படக் காரணமில்லை. ஆனால் இவர்கள் வெறும் ஆவேசக்கூட்டமல்ல; நம் தேசத்தில் அப்படிப்பட்ட கூட்டமே கிடையாது; கடவுள் சம்மதத்தில் ஒரு பொழுதும் இருக்காது.

எதிர் காலம் சுயநல வாதிகளின் கையிலும், நாஸிகளின் கெட்ட ஸ்நேகத்தின் கையிலும்தான் இருப்பதாய் தோன்றுகிறதென்று சொன்னேன். நாஸிகளும், யந்திரங்களும்தான் ஜயிக்குமென்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் இறுதியில் ஜனங்கள்தான் ஜயிப்பார்களென்று நான் நம்புகிறேன்; ஏனென்றால் நம்பிக்கை, விசுவாசம் இவைகளில்தான் வாழ்வின் தத்வம் உள்ளது, இதுதான் என் ரீதியாய் ஜனநாயகமாகும்—பொறுமையுடன் ஒரே ரீதியாய் நாம் சகோதர சகோதரிகளுடன் ஒத்துழைப்பது. ஹிட்லர் மக்கள் பேரில் செலுத்தும் அதிகாரம் பயத்தை அடிப்படையாகக்கொண்டது; ஆனால் பயத்தால் மனிதர்களை பலமாகச் செலுத்தி ஆச்சரியகரமான கெடுதிகளை உண்டுபண்ணக் கூடுமானாலும் அன்பினால் இன்னும் மேலான ஆச்சரிய பலன்களை விளைவிக்கலாம் என்பதை நாம் தெரிந்து கொள்ளத் தவறக்கூடாது. வெறுங்கூட்டத்துக்கு பயம்தான் தெரியும். ஜனங்களுக்கு அன்பு என்பது தெரியும்; ஏனென்றால் அவர்களுக்கு ஹிருதயமும், மனமும், ஆத்மாவும் உள்ளன; ஜயம் எப்பொழுதும் ஜனங்கள் பக்கம்தான் இருக்கும்.

நமஸ்காரம்!

---

## ஜெர்மனியின் விமானப்படையின் வலிமை. விவரமான ஒரு வகுப்பு.

(மேஜர் ஆலிவர் ஸ்டுவர்ட் என்பவரால் அப்ஸர்வர் என்னும் பத்திரிகையில் எழுதப்பட்டது).

[லண்டனிலிருக்கும் விமான யுத்தத்தைப்பற்றிய பிரபல ஒலிபரப்பாளராகிய இவர் செய்திருக்கும் வகுப்புப் பிரிவினைகள் எழுதி இரண்டு மாதங்களாகியும், வெகுநாளாக அடிக்கடி ஏற்பட்டுள்ள பிரச்னைக்கு, இதுவரையில் சரியான மறுமொழி உரைக்கமுடியாமலிருந்ததற்கு, இந்த விருத்தாந்தம் ஒரு முதல் அறிவிப்பாயும் உபயோகமுள்ள விவரங்களுமுள்ளதாயுமிருக்கிறது, பத்திராதிபர்].

ரொம்பவும் நம்பக்கூடிய ஆதாரத்திலிருந்து சென்றவாரத்தில் ஜெர்மனியின் விமானப்படையின் வலிமையைப்பற்றி எனக்குப் புதிய தகவல்கள் கிடைத்திருக்கின்றன. நான் இரண்டு வாரங்களுக்குமுன் இந்தப் பேபரில் சர்ச்சைசெய்து



வந்த விஷயத்தை இப்பொழுது அதிகமாக அறியவும், நமக்கு எதிரிடையாகத் தயார் செய்யப்பட்டிருக்கும் சத்துருவின் விமானப்படையின் சேமிப்புகளைப்பற்றி விஸ்தாரமாகவும், கூடியவரையில் விவரங்களுள்ளதுமான ஒரு வரலாற்றை, உங்களுக்குச் சொல்ல சாதகமாயிருக்கிறது.

முதலாக, தற்காலத்திலுள்ள ஜெர்மனியின் முதல்தர விமானப் படையின் வலிமையானது 5,000 முதல் 6,000 விமானங்கள் என்று நான் மதித்ததற்கு மேலாக நிச்சயமாகயில்லை. அநேகமாய் 5,000-த்துக்குக் குறைச்சலாகவேயிருக்கலாம். இது மற்ற எல்லா மதிப்புகளுக்கும் குறைச்சலாகவேயிருக்கிறது. இருந்தபோதிலும், 4,000 விமானங்களுள்ள ஒரு முதல்தரப் படையானது ஏராளமான சக்தி வாய்ந்த விமானப்படையாக உபயோகப்படக்கூடு மென்பதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இரண்டாவதாக முதல்தர அணி என்றால் சண்டைபோடக்கூடிய படை என்று அர்த்தம். இது ஜெர்மனியிலிருக்கும் விமானப்படையின் பூரா பலமென்று தப்பு அபிப்பிராயம் கொள்ளக்கூடாது. இந்த பூரா பலமென்பது பயிர்ச்சிக்காக உபயோகப்படுத்தும் விமானங்கள், லேசான விமானங்கள், பறந்து செல்லக்கூடிய எல்லாவிதமான விமானங்களும் அடங்கியது. இதன் சங்கியை 35,000 இருக்கும். ஆகிலும் யுத்தத்தில் இந்த சங்கியையினால் அதிகமாக பிரயோஜனம் ஏற்படாது. முதல்தர அணியிலிருக்கும் விமானங்களும் ஒரு நாள் பூராவும் உபயோகமுள்ளதாக வேலை செய்யமுடியாது. இவைகளுக்குப் பழுதுகள் பார்க்க வேண்டிவரும். ஒரு சமயத்தில் படையின் ஒரு பகுதிதான் வேலைக்கு லாயக்குள்ளதாகயிருக்கும்.

தற்பொழுதிருக்கும் ஜெர்மன் முதல்தர விமானப்படையின் சங்கியை 5,000த்துக்குக் குறைந்ததென்று நாம் வைத்துக்கொண்டால், அதைப் பின்வருமாறு பகிர்ந்துவிடலாம். பெரும் பாகம் 1,500 முதல் 1,600 சங்கியையுள்ள வெகுதூரம் சென்று வெடிகுண்டுகள் வீசக்கூடிய விமானங்களுள்ளது. இதற்குக்கொஞ்சம் அடுத்தபடியாக சண்டை விமானங்களின் பகுதி வரக்கூடும். இவைகளின் சங்கியை 1,500. இவைகளில் மூன்றில் இரண்டுபாகம் ஒரு யந்திரத்தைப்பெற்றும் மற்றொரு பாகம் இரண்டு யந்திரங்களைப் பெற்றுமிருக்கிறது.

அடுத்தபடியாக கீழே பாய்ந்து வெடிகுண்டுகள் போடக்கூடிய விமானங்கள் 750 இருக்கின்றன. வேவு பார்க்கக்கூடியதும் வெடிகுண்டுகள் போடக்கூடியதாக உபயோகிக்கக்கூடியதும், வெடிகுண்டுகளை ஏற்றிச் செல்லக்கூடிய சாதனங்கள் உள்ளதுமான விமானங்கள் 450 இருக்கின்றன. இதிலிருந்து ஜெர்மனிக்கு ரொம்பவும் வலுவாக அடிக்கக்கூடிய விமானப்படை உண்டென்றும் இது ஜெர்மனியின் பூரா விமானப்படையின் ஒரு பெரும் பாகமென்றும் அறிந்து கொள்ளலாம்.

வெடிகுண்டுகள் போடுவதற்கு வசதிகள் ஏற்பட்டுள்ள விமானங்களின் சங்கியை 2,700 அல்லது 2,800 என்று சொல்லலாம். இந்தக் கணக்கில் நம்முடைய

சமுத்திரக்கரையோரங்களில் வைத்திருக்கும் பாதுகாப்பு விமானப்படைக்கு ஒப்பிடக்கூடிய ஜெர்மனியைச்சேர்ந்த விமானங்கள் சேர்க்கப்படவில்லை. இவைகள் முன்னூறு அல்லது நானூறு சங்கியை உள்ளது. சைனியங்களோடு ஒத்து உழைக்கும் விமானங்களையும், சிறிது தூரம்சென்று யுத்தம் செய்வதற்கும் தந்திரமாக வெடிகுண்டுகள் போடுவதற்கும் உபயோகப்படுத்தக்கூடும். ஜெர்மனியில் இவ் வகுப்பைச் சேர்ந்த முன்னூறு அல்லது நானூறு விமானங்கள் முதல்தர அணியில் இருந்து வருகின்றன.

ஜெர்மனியின் சைனியத்தோடு ஒத்து உழைக்கும் விமானமானது ஹென்ஷல் 126 வகையைச் சேர்ந்தது. இது நம்முடைய சைனியங்களோடு ஒத்து உழைக்கும். வெஸ்ட்லாந்து லைஸாண்டர் என்னும் விமானத்தோடு அநேக வகைகளில் ஒப்பிடக்கூடிய ஒருவர் ஏறிச் செல்லக்கூடிய சிறகுடையுள்ள விமானம். இதன் அதிகமான வேகம் மணிக்கு 220-மைல் தான். ஆகையால் தரையிலிருக்கும் துருப்புகளோடு ஒத்தாசையாக வேலைசெய்யும்பொழுது முன்னாகவே இறங்கு தரைகளில் யுத்தம் செய்வதற்குத் தகுந்த கீழாகப் பறந்து செல்லக்கூடிய சக்தியைப் பெற்றிருக்கிறது.

ஜெர்மன் விமானப்படையின் முக்கியமான விஷயம் என்னவென்றால் அவர்களிடம் பின்னணியாக ஜாஸ்தி விமானங்கள் இல்லை என்பது. கணக்கிட்டால் இவைகள் 3,000-த்துக்கு மேல் இராது.

ஆகையால் பொதுவாக ஸ்திதியானது நம்பிக்கைக்கு இடமுள்ளதாக இருக்கிறது. பிரிடிஷாரின் உற்பத்திகள் சாவதானமாக அதிகரித்து வருகின்றன. ஐக்கிய நாடுகளின் உதவியும் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. ஜெர்மன் விமானப் படையைப்பற்றி நான் சொல்லியிருக்கும் கணக்குகளை—இது தற்சமயம் நமது நாட்டில் கிடைக்கக்கூடிய உண்மையான தகவல் என்று சொல்லலாம்—ஜனவரி மாதத்தில் பிரசுரித்த "ஏவியேஷன்" என்னும் அமெரிக்கப் பத்திரிகையில் மிஸ்டர் டி. பி. ரைட் என்பவரால் எழுதப்பட்டிருக்கும் ஒரு முக்கியமான புதிய வியாசத்தோடு சேர்த்து படித்துப் பார்க்கலாம்.

மிஸ்டர் ரைட் என்பவர் கர்டிஸ்-ரைட் என்னும் கம்பெனியின் யந்திர சாஸ்திர இலாகாவின் உபதலைவர். மேலும் ஐக்கிய நாடுகளின் தேசீயப் பாதுகாப்பு போதனா கோஷ்டிக்கு யோசனை சொல்லுகிறவர். சென்ற சில மாதங்களுக்கு முன் மிஸ்டர் ரைட், உற்பத்தி விஷயமாக சில ஆராய்ச்சிகளையும், அவைகள் இடவசதிகளாலும் தொழிலாளர்களின் மிகுதியாலும், எப்படி பாதிக்கப்படுகின்றனவென்றும் ஒரு சாரமுள்ள ஒரு அபிப்பிராயம் எழுதியிருக்கிறார். இச்சமயம் விமானப் படையின் பூரா பலத்தின் அமைப்பைப்பற்றியும் உற்பத்திகளின் போக்கைப் பற்றியும் அவருடைய மதிப்பை நமக்கு அறிவிக்கிறார்.

அவர் எப்பொழுதும் பூராவாக எல்லாவிதமான விமானங்களையும், பயிர்ச்சிக்கு உபயோகப்படுத்தப்பட்டவைகளையும், முதல்தர அணியில் இல்லாதவைகளையும் எல்லாவற்றையும் சேர்த்துத்தான் கணக்குகள் சொல்லுகிறது. ஆகையால்



அவருடைய கணக்குகளை ஆராய்ச்சி செய்யும்பொழுது இந்த அம்சத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அவர் இன்று ஜெர்மனியில் மொத்தம் 35,000 விமானங்களும் பிரிடனில் 25,000 விமானங்களும் இருக்கின்றன என்று மதிக்கிறார். ஜுலை மாதத்தில் ஜெர்மனிக்கும் பிரிடனுக்கும் உள்ள சங்கியையின் வித்தியாசங்கள், இதில் இதாலியின்விமான பலத்தை கணக்கிடவில்லை, சரிக்கட்டிவிடும் என்று அபிப்பிராயப்படுகிறார்.

விமான உற்பத்தி வீதத்தைப்பற்றி நாம் ஒரு மாதத்திற்கு 1,650 வீதமும் ஜெர்மனி 2,000 வீதமும் உற்பத்தி செய்கிறோமென்று மிஸ்டர் ரைட் சொல்லுகிறார். ஐக்கிய நாடுகளில் ஒரு மாதத்திற்கு இப்பொழுது 750-க்குமேல் விமானங்கள் உற்பத்தி செய்யப்படுகிறதென்றும் ஜுலை மாதத்தில் 1,600 வீதமும்உற்பத்தி செய்யப்படுமென்றும் அவர் அபிப்பிராயப்படுகிறார். மிகவும் ஜனங்களுக்கு புலப்படும்படியாக அச்சுவல்லரசுகள், பிரிடன், ஐக்கிய நாடுகள் இவைகளின் உற்பத்தி நிலையைக் காட்டக்கூடிய அநேக வளைந்த கோடுகளை அவர் தயார்செய்திருக்கிறார்.

அச்சுநாடுகளின் உற்பத்திக்கோடும் பிரிடிஷ் தொழிற்சாலைகளின் கோடும் உன்னத ஸ்திதியை அடைந்து கீழே இறங்க ஆரம்பித்துவிட்டதென்றும் மிஸ்டர் ரைட் நம்புகிறார். ஐக்கிய நாடுகளின் உற்பத்திக்கோடானது மேல் நோக்கி வேகமாக உயர்வடைகிறதென்றும் இவ்வருஷம் முடிவதற்குள் அச்சுநாடுகளின் உற்பத்தியைத் தாண்டிவிடுமென்றும் அதன்பிறகு அச்சுநாடுகளால் விசேஷ பிரயத்தனம் செய்தும் அடையமுடியாத ஒரு உன்னத ஸ்திதியை அடைந்து விடுமென்றும் அவர் தெரிவிக்கிறார். இந்த அபிப்பிராயமானது அமெரிக்கர்கள் தங்களுடைய பெரிதான உற்பத்தி சாதனங்களைப் பூராவாக வேலைசெய்ய ஆரம் பித்தால் அதிலிருந்து ஏற்படக்கூடிய உற்பத்தியைப்பற்றி நாம் அறிந்துகொண்ட அபிப்பிராயத்தோடு ஒத்திருக்கிறது. விமானங்களின் அமைப்புகளின் உயர்வைப் பற்றி மிஸ்டர் ரைட் எழுதுகிறார். சண்டைபோடும் விமானங்களில் இங்கிலாந்தில் சூபர்மரைன் ஸ்பிட்பையர் என்றும் ஹாகர் ஹரிகேன் என்றும் இரண்டு வகைகள் இருக்கின்றன என்றும், இவைகளில் ·303 பரிமாணமுள்ள இறக்கைகளில் ஏற்றி வைக்கக்கூடிய எட்டு யந்திர பீரங்கிகள் உள என்றும், விக்கர்ஸ் வெலிங்டன் என்ன, இதர வெடிகுண்டுகள் போடக்கூடிய விமானங்கள் இருக்கின்றனவென்றும் இவைகளில் சக்தியால் ஓட்டப்பட்ட யந்திர பீரங்கிகளுள்ள பீரங்கிக்கோபுரங்கள் இருக்கின்றனவென்றும், இவைகள் ஜெர்மன் விமானங்களைக் காட்டிலும் உயர் வானவை என்றும், இந்த உயர்வுதான் பிரிடனையும், உலக நாகரீகத்தையும் காப்பாற்றின பிரிடிஷ் விமானப்படையின் வாலிப விமானிகளின் மேலான மனோ தைரியத்திற்குக் காரணமாயிருந்தது என்றும் அறிவிக்கிறார்.

மிஸ்டர் ரைட் என்பவர் யுத்தம் செய்துகொண்டிருக்கும் நாடுகளின் விமான உற்பத்தியைப்பற்றி ஏற்கனவே சொல்லியிருந்த மதிப்பினால் ஒரு பெரிய குழப்பம் உண்டாயிற்று. அதுமுதல் அநேகம் தடவைகளில் எல்லாவிடங்களிலும் அந்தக் கணக்கை உதாரணமாய்ச் சொல்லுகிறார்கள். அவர் இப்பொழுது வெளியிட்டு

இருக்கும் கணக்கு எல்லோருடைய கவனத்தையும் அதேமாதிரி கவரக்கூடும். ஏனென்றால் அதில் உற்பத்தியில் உள்ள விசேஷமான யந்திர நுட்பங்களைப் பற்றி சுவாரசியமான அபிப்பிராயங்கள் கண்டிருக்கின்றன.

கடைசியாக நாம் சொல்லியிருக்கும் கணக்குகளைப்பற்றி ஒரு எச்சரிக்கை விடுக்க விரும்புகிறோம். இதிலிருந்து ஜெர்மன் விமானப்படையானது நாம் நினைக்காதபடி ரொம்பவும் பலஹீனமானதென்று அர்த்தம் இல்லை. பொது ஜனங்களின் மத்தியில் ஜெர்மனியின் விமான பலத்தை மிகையாகவே சொல்லியிருக்கிறார்கள் என்பதுதான் இதன் பொருள். பிரிடிஷ் விமானப்படையிலிருப்பவர்கள் பொது ஜனங்களின் மத்தியில் விமானப்படையின் பலத்தைப்பற்றிச் சொல்லும் அபிப்பிராயங்களை ஒரு பொழுதும் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை.

நாம் கொடுத்திருக்கும் கணக்கைப் பார்த்தாலே ஜெர்மானிய விமானப்படை ரொம்பவும் வலிவுள்ளது என்று சொல்லலாம்.

ஆகையால் பிரிடிஷ் விமானப்படையின் பலத்தை கூடியசீக்கிரம் அதிகப்படுத்த நாம் ஏராளமான முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம். இதற்காக நம்முடைய தொழிற்சாலைகளில் விமானங்களை உற்பத்திசெய்தும் அமெரிக்காவிலிருந்து அனுப்பும் விமானங்கள் நம் நாட்டிற்கு வந்து சேரும் படிக்கும் செய்யவேண்டியது அவசியம்.

யுத்தத்தில் எக்காலத்திலும் இருந்திராதபடி இப்பொழுது நம்முடைய நாட்டின் சண்டை செய்யும் விமானங்களின் அமைப்பு திருப்திகரமாக இருக்கிறதென்று சொல்லக்கூடும். இதேமாதிரியாக வெடிகுண்டு வீசும் விமானங்களின் நிலைமையும் விருத்தியடைந்து, கப்பல்களைப் பாதுகாக்கும் முக்கியமான அலுவல் உள்ள கடற்கரை ஓரத்தில் இருக்கும் விமானப்படையும் வலுவடைந்துவிட்டால் அதன் காரணமாக எதிராளி எந்தப் போர்முனையில் சண்டை துவக்கினாலும் அவ்விடத்தில் விமானச் சண்டையில் நாம் முன்னேறி எதிர்ப்பு யுத்தம் செய்ய சந்தர்ப்பம் வாய்க்கக்கூடும்.

பிரிடிஷ் விமானப்படைக்கு அநேக அலுவல்கள் உண்டு. அவைகள் மேல் மேலும் அதிகரித்து வருகின்றன. சிங்கப்பூருக்கு நாம் அனுப்பிய சகாயச் சேனைகள் இந்த வேலையின் ஒரு அம்சம். மற்ற பிராந்தியங்களிலும் இம்மாதிரியாக பலமான விமான எதிர்ப்புக்கு வேண்டிய சாதனங்கள் தேவையாயிருக்கும். ஆபிரிக்காவில் ஏற்கனவே பிரிடிஷ் விமானப்படையானது யுத்தம் செய்து வருகிறது. இப்பொழுது அவ்விடம் ஜெர்மானியர்கள் நம்மை எதிர்க்கச்செய்யும் ஏற்பாடுகளைத் தடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய விமானப்படை இதாலிய விமானப்படையை முற்றிலும் பங்கப்படுத்தி விட்டது. அதே மாதிரியாக அந்தப் பிராந்தியத்தில் ஜெர்மன் விமானப்படையையும் முறியடித்துவிடும். ஆகிலும் அதற்கு இடைவிடாது மேலும் மேலும் விமானங்கள் வந்துகொண்டே இருக்கவேண்டும். நம்முடைய உற்பத்தி நிலைமையிலிருந்து இம்மாதிரியான உதவி வந்துகொண்டே இருக்கக்கூடும்.



## ஏப்ரல் மாதம்தான் அமெரிக்காவின் விசேஷமான மாதம். பிரிடனுக்கு உதவி செய்வதில் பின்வாங்குகிறதில்லை.

டான் இட்டான் (Don Iddon) என்பவர் நியூ யார்க்கிலிருந்து டெய்லி மெயில் பத்திரிகைக்கு தந்திமூலம் சொல்கிறதாவது :—

யுனைடட் ஸ்டேட்ஸில் (United States) கடந்த காலத்தில், மற்றொரு தேசத்துடன் உள்ள விரோதத்தைப் பகிரங்கப்படுத்துவதற்கு ஏப்ரல் மாதம் மட்டுமே தகுதியானது என்று சொல்வதினால் அமெரிக்கா இந்த ஏப்ரல் மீ ஜெர்மனி தேசத்துடன் யுத்தம் பொருதப்போகிறதாக நான் சொல்லவில்லை. அதைப்பற்றி நினைக்க வேண்டியதில்லை என்று சொல்லமுடியாது.

ஜெர்மானியர்கள் அட்லாண்டிக் கிலிப்பர்ஸை (Atlantic clippers) இயந்திர துப்பாக்கியினால் சுடுவது, அல்லது அமெரிக்கக் கப்பல்களை தண்ணீரில் அமிழ்த்துவது என்ற முறையை தவறுதலாக கையாடும் பக்ஷத்தில் அமெரிக்காவுக்கு ஜெர்மனி இடத்தில் கோபம் உண்டாகலாம் என்பதில் சந்தேகம் இருக்க இடமில்லை. ஆனால் இது மாதிரி நடக்காது.

எப்படி இருந்தாலும் ஏப்ரல் மீ ஜய அபஜயத்தை முடிவு கட்டுவதற்கு அமெரிக்காவுக்கு ஒரு விசேஷ மாதம் ஆகும். அமெரிக்கா துணைக்கப்பல்கள் அனுப்பும் விஷயமும் இந்த மாதத்தில் முடிவு செய்யக்கூடும். இது சம்பந்தமாக அமெரிக்காவின் உத்தியோகபற்று அற்ற செய்தி மூலம் தெரிகிறது. அமெரிக்காவின் பிரஸிடெண்டுக்கு இது சம்பந்தமாக சட்டம் அமுலுக்கு வராமல் உத்தரவு கொடுக்க அதிகாரம் இல்லாவிட்டாலும் காங்கிரஸ் சபையை இது விஷயத்தில் ஓட் செய்ய அனுமதிக்கப்போகிறார்.

அம்மாதிரி பிரஸிடெண்ட் செய்தால் யுத்தம் நீடித்ததாகவும் பயங்கரமாவும் இருக்கும். ஆனால் அமெரிக்க காங்கிரஸ் லீஸ் அண் லெண்ட் (Lease and Lend Act) ஆக்டில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற அமெரிக்காவின் அன்னிய தேச சம்பந்தப்பட்ட மனோபாவத்துக்கு விரோதமாக அதை மாற்றப் பிரியப்பட்டால் ஒழிய துணைக்கப்பல்கள் (convoys) அனுப்பும் விஷயத்தை ஒத்துக்கொள்ளவே வேண்டும்.

இப்பொழுது பின்வாங்குவது என்பதில்லை. அமெரிக்கா பிரஸிடெண்ட் யுத்த தளவாடங்கள் பிரிடனுக்கு அனுப்பப்படும் என்று உறுதி சொல்லிவிட்டார். மேலும் அந்த சாமான்கள் பத்திரமாக பிரிடனுக்குப் போய்ச் சேருவதற்கு அமெரிக்காச் சண்டைக் கப்பல்கள் அவசியம் இருப்பதாக தெரிந்தாலும் அவைகளும் அனுப்பப்படும் என்றும் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.

## அச்சு நாடுகளின் கப்பல்களை ஐக்கிய நாட்டு ஸர்க்கார் எடுத்துக்கொள்வதற்குரிய பாத்தியம்.

## சென்ற யுத்தத்தில் நடந்த விபரம்.

(சமீபத்தில் B. B. C-ல் ஆசிரியர் A. H. குட்ஹார்ட் பேசியது).

[ஐக்கிய நாட்டைச் சேர்ந்த துறைமுகங்களிலும் தென் அமெரிக்கத் துறைமுகங்களிலும் நின்றுகொண்டிருந்த அச்சுக் கப்பல்களை ஐக்கிய நாட்டு ஸர்க்கார் பாராவில் வைத்து விட்டார்கள். இப்படி அந்தக் கப்பல்களைப் பாராவில் வைத்தது அச்சு நாடுகளுக்கு அது கடும் தலைவலியை உண்டு செய்து விட்டது. இம்மாதிரி செய்வதற்குப் போதுமான முன் சரித்திர ஹேஷ்யங்களிருக்கின்றது என்று ஜெர்மனிக்கும், இதாலிக்கும் தெரிந்த விஷயம் தான். லோகப்பிரசித்தியான சட்ட நிபுணரான A. H. குட்ஹார்ட் என்ற அமெரிக்க ஆசிரியர் சர்வதேச அனுஷ்டான விதிகளின்படி, அமெரிக்கா இப்படிச் செய்தது சட்ட பூர்வகம்தான் என்று அறிவித்திருக்கிறார்].

தற்கால நிலைமையை நன்றாய்ப் புரிந்துகொள்வதற்கு, சென்ற யுத்தகால சங்கதிகளைத் தெரிந்துகொள்ளவேண்டியது அத்யாவசியம். 1914-ம் ௵ ஆகஸ்டு ௴த்தில் சென்ற யுத்தம் ஆரம்பித்தபொழுது பல ஜெர்மானியக் கப்பல்கள் அமெரிக்கத் துறைமுகங்களில் நின்றன.

1917-ம் ௵த்தில் ஐக்கிய அமெரிக்கா யுத்தப் பிரகடனம் செய்தவுடன் அவைகளை, அது பிடித்துக்கொண்டது; ஆனால் பிடிக்கப்பட்ட கப்பல்களின் இன்ஜின்கள் ஏற்கனவே சீர்திருத்தம் செய்யமுடியாத விதமாய் பாழாக்கப்பட்டிருந்தன. இன்னும் சில கப்பல்கள் உபரியாகவும் பாழாக்கப்பட்டிருந்தன. இன்னும் சில கப்பல்கள் ரிபேர் செய்யப்படும் இடங்களில் அடியில் துவாரமிட்டு அமிழ்த்தப்பட்டுப் போய்விட்டன. சில கப்பல்கள் நெருப்புக்கு இரையாயின.

இம்மாதிரியான அக்கிரம அழிப்பு ஏற்படாவண்ணம், 1917-ம் ௵ ஜுன் ௴த்தில் அமெரிக்க காங்கிரஸ் சட்டசபை, "சாரர் சட்டம்" என்று ஒரு சட்டம் எக் காலத்திற்கும் அன்வயிக்கும்படி பிறப்பித்தார்கள். இந்தச் சட்டத்தின்படி "ஐக்கிய நாடு பிரஸிடெண்ட் (அதிகாரி)—எப்பொழுதாவது ராஜ்ஜியத்திற்கு ஒரு அவசர சந்தர்ப்பம் ஏற்பட்டதென்று பிரகடனம் செய்யும் பக்ஷத்தில் உடனே கஜானா செக்ரடரி அமெரிக்காவைச் சேர்ந்த டெரிடோரியல் கடல்களில் காணப்படும் யாவற்று அயல் நாட்டு கப்பல்களையும் ஸர்க்கார் அக்கரையை உத்தேசித்து உடனடியாக கைப்பற்றிக்கொள்ளக்கூடு மென்று" அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதே சட்டத்தின் கீழ்தான் சமீபத்தில் செக்ரடரி மார்கெந்தா என்பவர் அமெரிக்க துறைமுகங்களில் தங்கியிருந்த சுமார் 3 லக்ஷம் டன்கள் நிறையுள்ள 28 இதாலியக் கப்பல்களையும், 2 ஜெர்மன் கப்பல்களையும், 39 டேனிஷ் கப்பல்களையும் தன்னுடைய ஆதிக்கத்தில் எடுத்துக்கொண்டார். இவர் இப்படி



அவைகளைக் கைப்பற்றியிராவிட்டால், அவைகளிலுள்ள மாலுமிகள் நிச்சயமாய் அவைகளைத் திருட்டுத்தனமாய் அழித்திருப்பார்கள். வாஸ்தவத்தில் அம்மாதிரி அழிப்பதற்கு முன்கூட்டி ஏற்பாடும் செய்திருந்ததாக வெளிப்பட்டது.

சரி. இவைகளை எடுத்துக்கொண்டு கப்பல்களை பத்திரப்படுத்தி விட்டார்கள். இனி அவைகளை ஐக்கியநாட்டு ஸர்க்கார் என்ன செய்யலாம்?

இந்தப் பிரச்னை சம்பந்தமாய் மிகவும் முக்கியமான ஒரு கொள்கை பிரயோகிக்க வேண்டியிருக்கிறது. சர்வதேச அனுஷ்டான முறைவிதிப்படி ஒவ்வொரு நாட்டுக்கும் "angary" பாத்தியதை என்ற ஒரு பாத்தியதை சித்தித்திருக்கிறது: இந்த பாத்தியதை என்னவென்றால் யாதாமொரு நாட்டிற்கு அத்தியாவசியமான கப்பல்தேவைகள் ஏற்பட்டால், அந்த நாட்டுக் கடற்கரையோரத்திலிருக்கும் அயல் நாட்டுக் கப்பல்கள் தனக்குத் தேவையென்று கோரலாம். ஆனால் அவைகளை தான் உபயோகப்படுத்திக்கொள்வதற்காக நியாயமான நஷ்ட ஈடுத் தொகை கொடுக்க அந்த நாடு கடமைப்பட்டிருக்கிறது. இதுதான் அந்த பாத்தியதையின் தாத்பரியம்.

சாதாரணமாக—இந்த பாத்தியதையானது சண்டையில் புகுந்த நாடுகளுக்குள்தான் வழங்கும்; ஆனால் யுத்தத்தில் சேராத தேசங்களும், அவைகளின் அக்கரைக்கு மிகவும் அத்யாவசியமென்று தோன்றும் காலத்திலும் இந்த பாத்தியதையைக் கொண்டாடலாமென்றும் ஸ்பஷ்டமாய் யாவரும் (சர்வ தேச சங்கநாடுகளும்) அங்கீகரித்திருக்கிறார்கள்.

ஆதலால் ஐக்கிய நாடு இம்மாதிரி கப்பல்கள் தேவை என்று ஸ்வீகரித்துக்கொண்டது சர்வதேச அனுஷ்டான முறைச் சட்டதிட்டத்திற்கு மயிரிழைகூட மீறாமல் வரம்புக்குட்பட்டுச் செய்த செய்கை.

சென்ற மஹாயுத்தத்தில், யுத்தத்தில் சேராத பல தேசங்கள் ஜெர்மானியக் கப்பல்களைத் தங்களுக்கு அவசியத் தேவையெனக்கோரி எடுத்துக்கொண்டன. விபரம் சொல்லுகிறேன்:—1915-ம் ௵த்தில், ஜெர்மனியும், இதாலியும் சமாதானமாயிருந்தது. இருப்பினும் இதாலி ஜெர்மானியரின் 37 கப்பல்களை இப்படி பாத்தியம் கொண்டாடி எடுத்துக்கொண்டது. 1916-ம் ௵த்தில் போர்ச்சுகல் தேசம் 72 ஜெர்மானியக் கப்பல்களை எடுத்துக்கொண்டது. 1917-ம் ௵த்தில் பிரேஸில் 40 கப்பல்களையும், 1918-ல் பெரு தேசமும், ஸ்பெயின் தேசமும் சேர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு 90 கப்பல்களைக் கைப்பற்றின. ஜெர்மனி இம்மாதிரி கைப்பற்றியது பிசகு என்று கண்டனம் செய்தது. ஆனால் ஸ்பெயின் பெரு தேசங்களின்பேரில் ஜெர்மனி யுத்தம் துவக்கவில்லை. யுத்தம் துவக்குவதற்கு தக்கமுகாந்திரமுமில்லை என்று நினைத்தது போலும்!

ஆகையால்தான், நாஸிகள் பூர்வ சரித்திரப்போக்கை நன்றாய்த் தெரிந்துகொண்டு, தென்அமெரிக்கத் துறைமுகங்களில் யிருந்து வந்த தங்கள் கப்பல்களை அடியில் ஓட்டையிட்டு ஜலத்தில் அமிழ்த்திக்கொள்ளும்படி உத்தரவிட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

ஐக்கிய அமெரிக்க ஸர்க்கார் தென் அமெரிக்கா நாடுகளுக்கும், வழிகாட்டி விட்டது. ஆதலால் தென் அமெரிக்கக் குடியரசுகள், நாஸிகளும், இதாலியர்களும் தங்கள் கப்பல்களை அழித்துவிடும்படி விடமாட்டார்கள் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது.

அந்த தென் அமெரிக்க பிராந்தியங்களில், 56 இதாலியக் கப்பல்களும், 40 ஜெர்மானியக் கப்பல்களும், அச்சு நாடுகளின் ஆதிக்கத்திலுள்ள நடுநிலைமை தேசங்களைச் சேர்ந்த 50 கப்பல்களும், இருக்கின்றன. அவைகள்யாவும் சமுத்திரங்களைக் கடக்கக்கூடிய சக்திவாய்ந்த கப்பல் ரகத்தைச் சேர்ந்தவைகள்.

இந்த உலகத்திற்குள், நாஸிகளால் திணிக்கப்பட்ட கோரயுத்தத்தால் தென் அமெரிக்கக்குடியரசுநாடுகள் அநேக சங்கடங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன. நாஸிக் கப்பல்களை தாங்களே உபயோகித்துகொண்டு அதன்மூலம் அவர்களின் கஷ்ட நஷ்டங்களுக்கு கொஞ்சமாவது ஈடு செய்துகொள்ளலாம். இது சரியான முகாந்திரம் என்பதில் சந்தேகமில்லை.

---

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

---

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### மாயச் சைனியம்.

ஸ்ட்ருமா பள்ளத்தாக்கில் பிரிடிஷ், நியு-ஸீலாண்ட் சைனியங்கள் பலமாய் ஜெர்மன் படைகளை எதிர்ப்பதாக ஏப்ரல் 6-ல் சொல்லிவிட்டு, அதே ஜெர்மன் ரேடியோ பிரிடிஷ் சைனியங்கள் எதிர்படவே காணோம் என்று ஏப்ரல் 14-ல் நெஞ்சஞ்சாது பொய் சொல்லிற்று.

ஸலோனிகாவை பிரிடிஷ் துருப்புகள் பிடித்துக்கொண்டு, அங்கு வசிக்கும் கிரேக்கர்களுடைய உயிருக்கும், சொத்துக்களுக்கும் நாசத்தை உண்டாக்கி, பயங்கரமான முறைகளைக் கைக்கொண்டதாகவும், ஜெர்மன் துருப்புகள் உள் நுழைந்தவுடன், அவர்களை, கிரேக்கர்கள் தங்களை பிரிடிஷ்காரர்களிடமிருந்து விடுவித்த ரக்ஷகர்களென்று தங்களை வரவேற்றதாயும், மற்றொரு ஒலிபரப்பு ஏப்ரல் 15-ல், அதாவது 24-மணி நேரத்துக்குள், செய்யப்பட்டது.

### இட்ட வேலை நன்றாய் செய்யப்பட்டது.

நேயத்துருப்புகள் ஸலோனிகாவை விட்டு பின்வாங்கும்போது, யுத்த அவசியத்தை முன்னிட்டு, எதிரிக்கு வசதிகளைக் குறைப்பதற்காக, அங்கிருந்த



பாலங்கள், ரயில் பாதைகள், யந்திர-சக்தி ஸ்தாபனங்களெல்லாம் அழிக்கப்பட்டன. அக்காரியமும், கிரேக்க ராணுவ அதிகாரிகள் உத்தரவுப்படியும், கிரீக் கவர்ன்மெண்ட் அங்கீகாரத்தோடும் செய்யப்பட்டது.

காயப்பட்ட கிரேக்க நோயாளிகளை லாரிகளில் ஏற்றிக்கொண்டு அப்புறப்படுத்திக் காப்பாற்ற பிரிடிஷ் சைனியம் பாடுபட்டு வீரச்செயல் செய்தது. இவ்விதமாக எடுத்துச்செல்லப்பட்ட நோயாளிகளை இறக்கமின்றி, ஜெர்மானியர் யந்திரத் துப்பாக்கிகளைக்கொண்டு சுட்டார்கள். ஜெர்மன் படைகள் ஊருக்குள் வரும்போதுகூட, பிரிடிஷ், ஆஸ்திரேலியத் துருப்பைச் சேர்ந்த ஸாப்பர் பட்டாளங்கள் தகர்க்கவேண்டிய, இடங்களை சேதம் செய்தன. ஆகவே மேற்கண்ட செய்திகள் கேவலமான பொய்கள். இதற்குக்காரணம், பிரிடிஷ் சைனியங்கள் தங்களுக்கிட்ட வேலையை நன்றாய் செய்து விட்டார்களேயென்ற பொறாமைதான்.

### ஆபிரிக்காவிலேற்பட்ட லாபம்.

பெங்காஸியையும், பார்டியாவையும், ஜெர்மன், இதாலியத் துருப்புகள் பிடித்துக்கொண்டதினால் ஜெனரல் வேவல் ஆபிரிக்காவில் செய்த யுத்தமெல்லாம் வீணாயிற்றென்று ஏப்ரல் 14-ம் தேதி ஒலிபரப்பில் ஜெர்மனி மனக்கோட்டை கட்டி ஒலிபரப்பியிருக்கிறது.

ஜெனரல் வேவலுடைய முக்கிய நோக்கம் எகிப்தின் எல்லையில் குழுமியிருந்த இதாலியர்களுடைய பெரிய சைனியத்தை அழிக்க வேணுமென்பதைத் தவிர, ஸிரெனைகாவை பிடித்துக்கொள்வதல்ல. இந்த நோக்கம் பூராவாக நிறைவேற்றப்பட்டது. இதாலியர்களுக்கு ஏராளமாயேற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்யவே ஜெர்மானியர்கள் அவசரமாய் தங்கள் சைனியத்தை ட்ரிபோலிடானியாவுக்கு அனுப்பினார்கள். 1,70,000 இதாலியரும், கணக்குக்கடங்காத அதிக ஆயுதங்களும் தளவாடங்களும், வெடிமருந்துகளும் எதிரிக்கு நஷ்டமாயின. இதுவே வேவலுக்கு ஏற்பட்ட லாபமுமாகும். இந்த லாபம் பிரிடனுக்கு இப்பொழுதும் இருக்கிறது.

மேலும், ஆபிரிக்காவில் வட பாகத்திலும், கீழ்பாகத்திலும் பிரிடிஷ் ஸைனியங்கள் படையெடுத்தன. இதில், கீழ் பாகத்தில், ஸோமாலிலாண்ட், எரிடிரியா, அபிஸீனியாவில் இதாலியர்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தைப் பற்றியும், பிரிடனுக் கேற்பட்டிற்கும் லாபத்தைப் பற்றியும் முக்கியமாக செங்கடல் திறக்கப்பட்டு, நேயக்கக்ஷிக்கு ஏராளமான சாமான்கள் அமெரிக்காவிலிருந்து வந்திறங்க ஏற்பட்டிருக்கும் வசதிகளை பற்றியும் ஜெர்மன் ரேடியோ பிரஸ்தாபிக்கவேயில்லை.

### பிரிடனைப் பிடிக்க யுத்தம்.

பிரிடனைப் பிடிக்க நடக்கும் யுத்தம் ஜெர்மனியைப்பிடிக்கும் யுத்தமாக மாறிக் கொண்டு வருகிறது. ஆனால், பகல் நேரத்தில் ஜெர்மன் விமானங்கள்

தடையின்றி பிரிடனையெதிர்ப்பதாயும், ஆனல் பிரிடிஷ் விமானங்கள் பகல் வேளையில் ஜெர்மனிக்குள் பிரவேசித்தால் அழிக்கப்படுகின்றனவென்றும் ஏப்ரல் 16-ம் தேதி ஜெர்மனி ஒலிபரப்பிற்று.

இது பொய். ஏப்ரல் 16-க்கு முந்திய 4 நாட்களில் ஒரு ஜெர்மன் வெடியாவது பகல் வேளையில் பிரிடனில் விழவில்லை; அந்த வாரத்து பாக்கி மூன்று தினங்களில் ஏதோ சில குண்டுகள்தான் விழுந்தன. ஆனல், அதே வாரத்தில், ரூரும், பார்கத்திலிருக்கும் ராணுவ நிலயங்களும், ப்ரெஸ்டிலிருக்கும் ஷார்ன் ஹார்ஸ்ட், நெயிஸ்னுக்கப்பல்களும், மற்றும் நார்வே, டென்மார்க், ஹாலண்ட், பிரான்ஸிலிருக்கும் தொழிற்சாலைகள், ரயில் பாதைகள், யந்திரசாலைகள், மற்றுமுள்ள ராணுவஸ்தானங்கள், கப்பல்கள் முதலியவைகளும் பகல் வேளையில் எதிர்க்கப்பட்டு, சேதத்தை அடைந்திருக்கின்றன. இதில் பிரிடனுக்கு 5 குண்டு விமானங்களும், 2 சண்டை விமானங்களும்தான் நஷ்டம். செய்திருக்கும் காரியங்களை யோசித்தால், ஏற்பட்டிருக்கும் நஷ்டம் வெகு ஸ்வல்பம்தான்.

## B.—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

### பிரிடன் நேயர்களுக்குதவி செய்துவருகிறது.

பிரிடன் கிரீஸை கைவிட்டுவிட்டதாகவும், நம்பிக்கை மோசம் செய்துவிட்டதாகவும் ஏப்ரல் 15-ல் ஜெர்மனி ஒரு பொய்யைச்சொல்லியிருக்கிறது. உண்மையில், கிரீஸுக்கு உதவிசெய்யவே பிரிடிஷ் படைகள் ஆபிரிக்காவிலிருந்து கொண்டு வரப்பட்டன. இதைப்பற்றி சமீபத்தில் ஹாலிபாக்ஸ் பிரபு சொன்னது ஞாபகமிருக்கலாம். இதனல் நஷ்டம் வரக்கூடியதென்று தெரிந்துகொண்டே இந்த உதவியை பிரிடன் செய்தது. இவ்விதம் உதவியைச்செய்ய பிறர் தூண்டவில்லை. இப்பொழுது பிரிடிஷ் படைகளும் கிரேக்கப்படைகளும் ஒன்ருய் நின்று சண்டை செய்கின்றன.

### மிஸ்டர் ஸ்பெண்டர் சொன்னது.

பிரான்ஸ் தோற்றுப்போனதிலிருந்து பிரிடன் ஆபத்தில் மாட்டிக்கொண்டதென்று ஆஸ்திரேலிய சைனிய மந்திரி சொன்னதாக பி. பி. ஸி. ஒலிபரப்பியிருப்பதாக இந்துஸ்தானியிலும், அராபியிலும் ஏப்ரல் 16-ல் பொய்யாக ஜெர்மனி ஒலிபரப்பியிருக்கிறது. பொய்யை இட்டுக்கட்டுவதில் ஜெர்மானியர் சமர்த்தர்கள். ஸ்பெண்டர் பிரான்ஸ் தோல்வியிலிருந்து பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்தின் பலத்தைச் சோதிக்கும் தருணம் ஏற்பட்டிருப்பதாயும், ஆறு மாதத்துச்குள் முழு பலத்தோடு சண்டை செய்து பார்த்துவிடுவதென்று ஹிட்லர் யோசித்திருப்பதாயும், ஆனல் இந்தக்கடும்போரின் அந்தியத்தில் அவன் தோற்றுவிடுவானென்றும், சொல்லியிருக்கிருர்.



### எல்லாவற்றையும் விழுங்கிவிடும் சிலந்தி.

நார்வேயிலிருந்த பிரிடிஷ் சைனியத்தை வெளிப்படுத்தி, பிரிடன் எய்த்து விட்டதாக நார்வே ஜனங்கள் இப்பொழுதும் நினைத்துக்கொண்டிருக்கிருர்கள் என்று இந்துஸ்தானி, பாரஸீகம், அராபி பாஷைகளில் ஏப்ரல் 17-ல் ஜெர்மனி ஒலிபரப்பியது.

ஆனல், நார்வேயை அடிமையாக்கிய துரோகிகளை விரட்டி, தேசத்துக்கு ஸ்வதந்திரத்தைத் தேடுவதைத்தவிர மற்ற ஒரு யோஜனையும் நார்வேக்குக் கிடையாதென்றும், இது பிரிடிஷ் வெற்றியடைந்தால்தான் சாத்தியமென்றும் அதற்காக நார்வே மக்கள் உழைத்துவருவதாயும் நார்வே பிரதம மந்திரி சொல்லி விட்டார்.

### லண்டனுக்கு தாங்கிக்கொள்ளமுடியும்.

ஒரு சிறு குச்சி காற்றில் அசைவதுபோல ஜெர்மன் விமானப் படையெடுப்பைக்கண்டு லண்டன் நடுங்கி பயப்படுகிறதென்று இந்துஸ்தானி, பாரஸீகம் அராபி பாஷைகளில் ஏப்ரல் 17-ல் ஜெர்மனி ஒலிபரப்பியிருக்கிறது. ஆனல் லண்டனில் சமீபத்தில் ஏற்பட்ட கடும் விமான எதிர்ப்புக்குப் பிறகு லண்டனைப் பார்த்த யுனைடட் ஸ்டேட்ஸிலிருந்து இங்கிலாந்துக்கு வந்திருந்த ஸ்தானிகரான மிஸ்டர் வினண்ட், தாங்கிக்கொள்ளும் சக்தி லண்டனுக்கு நன்ருயிருக்கிறதென்று பிரத்தியக்ஷானுபவத்தோடு சொல்லியிருக்கிருர்.

# முக்கியமான விளம்பரம்.

## யுத்த சம்பந்தமான புகைப்படங்கள்.

ஈ-தர்பார் அவர்கள் உத்தரவின் பேரிலும், அவர்களின் அன்பார்ந்த உதவியின்பேரிலும், புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயத்தின் மெம்பர்கள் இதுமுதல் பிரசங்கங்களுக்கு வெளியூர்களுக்குப்போகும் காலத்தில் யுத்தத்தின் வெவ்வேறு அம்சங்களை விளக்கிக்காட்டக்கூடிய புகைப் படங்களின் கோர்வைகளையும் எடுத்துக்கொண்டு போய் ஜனங்களுக்குக் காண்பிக்க வசதி ஏற்பட்டிருக்கிறதென்று யுத்த அறிக்கை நிலயம் சந்தோஷத்துடன் அறிவிக்கிறது.

இந்த நிகழ்ச்சிகள் யுத்தம் நடக்கும் பிரதேசங்களில் 'இருபதாவது நூற்றாண்டு பாக்ஸ் பிலிம் கம்பெனி'யாரால் எடுக்கப்பட்ட புகைப்படங் களும், பம்பாய் துரைத்தனத்தாரைக்கொண்டு இந்திய கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கும் ஒரு சங்கத்தாரால் இந்தியா சம்பந்தமான சில விஷ யங்களைப்பற்றி தயாரிக்கப்பட்ட புகைப்படங்களும் சேர்ந்தவைகள். ஒவ் வோரு நிகழ்ச்சியிலும் மூன்று தனித்தனிப் படங்கள் காட்டப்படும். இந்தப் படங்கள் காண்பிப்பதால் யுத்த அறிக்கை நிலயத்தின் பிரசங்கங்களுக்கும், மெற்படி நிலயத்தின் வாரப்பதிப்பு புஸ்தகத்துக்கும் அதிக மதிப்பு ஏற் டககூடுமென்று யுத்த அறிக்கை நிலயம் நம்புகிறபது.

புதுக்கோட்டையின் யுத்த நிதிக்காக உழைத்துவரும் கமிட்டியார் யுத்த அறிக்கை நிலயத்திற்கு ஒரு மோட்டார் வண்டியை நன்கொடை அளித்திருக்கிறார்கள். இந்த வண்டியில் புகைப்படம் காண்பிக்கக்கூடிய யந்திரங்களையும், திரைகளையும், புகைப்படங்களையும் பிரசங்கம்செய்யும் ஸ்தலங்களுக்கு எடுத்துச்செல்ல சௌகரியமாயிருக்கும். ஆனால், இம்மாதிரி புகைப்படங்களோடுகூடிய பிரசங்கங்களைச்செய்ய வசதி ஏற்படுத்திக் கொள்ளவும், ஒவ்வொரு இடத்திலும் மாதாமாதம் ஒவ்வொரு புதிதான படக்கோர்வையைக்காண்பிக்கவும், பிரசங்க ஸ்தலங்களையும் அறுபது இடங் களுக்கு அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டை ஸமஸ்தான வாசிகள் முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டியவைகள் என்ன வென்றால் :—

(a) பிரசங்கங்கள் சாதாரணமாக **மாலை 6** அல்லது **6-30** **மணிக்குத் துவக்கப்படும்.**

(b) யுத்த அறிக்கை நிலயத்தின் மோட்டார் ஒருநாளில் இரண்டு ஊர்களுக்குச்செல்ல வேண்டியிருப்பதால் பொதுஜனங்கள் **தவராமல் குறிப்பிட்ட டயத்தில் பிரசங்கம் செய்யப்** போகுமிடத்தில் ஆஜராகியிருக்க வேண்டும்.

இந்தப்படங்களை ஆயிரம் பேர்களுக்குக்குறையாமல் சௌகரியமாய்ப் பார்க்கக்கூடுமென்று அனுபவத்தில் தெரிகிறது. ஆகையால் உங்கள் கிராமத்தில் பிரசங்கம் செய்யப்படுமென்று பிரசுரம் செய்த அளவில்,

**அந்த இடத்தில் கூடுங்கள்,**
**சரியானபடி குறிப்பிட்ட டயத்தில் வாருங்கள்.**



# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் XLII.

| 1941— | | | | மணி. |
|---|---|---|---|---|
| மே ... | 3, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 4, ஞாயிற்றுக்கிழமை. | குளவாய்ப்பட்டி ... | ,, | 6.00 |
| | | வேங்கடக்குளம் | ,, | 6.30 |
| | 5, திங்கட்கிழமை ... | திருவரங்குளம் ... | ,, | 6.00 |
| | | வம்பன் ... | ,, | 6.30 |
| | 6, செவ்வாய்க்கிழமை. | மேலூர் ... | ,, | 6.00 |
| | | பில்லமங்கலம் ... | ,, | 6.30 |
| | 7. புதன்கிழமை ... | கடயக்குடி ... | ,, | 6.00 |
| | | மிரட்டுநிலை ... | ,, | 6.30 |
| | 8, வியாழக்கிழமை ... | வெள்ளனூர் ... | ,, | 6.00 |
| | | புத்தாம்பூர் ... | ,, | 6.30 |
| | 9, வெள்ளிக்கிழமை... | ஒடுக்கூர் ... | ,, | 6.00 |
| | | நாங்குப்பட்டி ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் XLIII.

| | | | | |
|---|---|---|---|---|
| | 10, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | ,, | 6.30 |
| | 11, ஞாயிற்றுக்கிழமை. | கீரனூர் ... | ,, | 6.00 |
| | | நாஞ்சூர் ... | ,, | 6.30 |
| | 12, திங்கட்கிழமை ... | அரிமளம் ... | ,, | 6.00 |
| | | கீழாநிலைக்கோட்டை ... | ,, | 6.30 |
| | 13, செவ்வாய்க்கிழமை. | பெருங்களூர் ... | ,, | 6.00 |
| | | ஆதனக்கோட்டை ... | ,, | 6.30 |
| | 14, புதன்கிழமை ... | பூவரசகுடி ... | ,, | 6.00 |
| | | கீலழயூர் தெற்கு ... | ,, | 6.30 |
| | 15, வியாழக்கிழமை. | ஒடையாளிப்பட்டி ... | ,, | 6.00 |
| | | கிள்ளுகோட்டை ... | ,, | 6.30 |
| | 16, வெள்ளிக்கிழமை... | நல்லூர் ... | ,, | 6.00 |
| | | மண்டையூர் ... | ,, | 6.30 |

புதுக்கோட்டை ஸமஸ்தானம்

யுத்த நிதிக்காக போடப்படும்

# அதிர்ஷ்டச் சீட்டு.

(ஸ்ரீ-தர்பாரவர்கள் உத்தரவின்பேரிலும் ஆதரவின் பேரிலும் புதுக்கோட்டை யுத்தநிதி என்டெர் டெயின்மெண்ட் கமிட்டியாரால் நடத்தப்படுகிறது.)

## இந்த யுத்த நிதியை ஆதரியுங்கள்

டிக்கெட்டுகளை வாங்குங்கள்

**முடிவு தேதி 15—6—41**

**சீட்டு குலுக்கும் தேதி 23—6—41**

நமது மன்னர் அவர்களின் வருஷவர்த்தனை தினத்தன்று அதிர்ஷ்டசாலிகளுக்கு ஏராளமான பரிசுகள்.

**300 பரிசுகள்.**

| | | |
|---|---|---|
| 1-வது பரிசு | ரூபாய் 7,500 | |
| 2-வது பரிசு | ,, 5,000 | |
| 3-வது பரிசு | ,, 2,500 | |
| 2 பரிசுகள் | ,, 1,000 | விதம் |
| 5 ,, | ,, 500 | ,, |
| 90 ,, | ,, 100 | ,, |
| 100 ,, | ,, 50 | ,, |
| 100 ,, | ,, 15 | ,, |

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—3-5-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் வருஷம் மே மீ 10வ [ந. 43.

பிரஸங்கம் XLIII.

## பர்மா, ஸியாம், இந்தோசைனா.

போர் என்ற பேயானது கொஞ்சம் கொஞ்சமாக இந்தியாவை நோக்கி வர ஆரம்பிக்கிறது என்பதை இனி சந்தேகிக்க முடியாது. ஜப்பானை பலர் கவலையுடன் கவனித்து வந்திருக்கிறோம்; வெகு காலமாக நாஸி காரியஸ்தர்கள் இராக்கிலும், இரானிலும் வேலை செய்து வந்திருக்கிறார்களென்பது தெரிந்த விஷயம்; மேற்படி தேசங்களிலிருந்து கோளாரான தகவல்கள் கிடைக்கின்றன. புரட்சியால் இப்பால் ஏற்பட்ட இராக் கவர்ன்மெண்டானது பிரிடனுடன் இராக் செய்து கொண்டிருந்த ஒரு உடன்படிக்கையின் அர்த்தத்தைப்பற்றி விதண்டாவாதம் செய்து வியவகாரத்தைக் கிளப்பியது; மேற்படி உடன்படிக்கையின் நோக்கத்தைப் பற்றியாவது உள் கருத்தைப்பற்றியாவது இனஸ்தர்கள் மனதில் எவ்வித சந்தேகமும் ஏற்பட இடமில்லை. மறுபடியும் மனமொப்பி ஏற்பட்ட உடன்படிக்கைகள் கேவலம் எட்டுச்சுரைக்காய்களாக கருதப்படுகின்றன; இந்த வழக்கம் 1914-ல் ஜெர்மனியில் ஏற்பட்டு, அது முதற்கொண்டு அந்த தேசத்திலும் அந்த தேசத்தின் மாயையில் சிக்கிக்கொண்ட இதர தேசங்களிலும் வழங்கி வருகிறது. ஹபானியாவிலும், பாஸ்ராவிலும், பிரிடிஷ் துருப்புகளுக்கும் இராக் துருப்புகளுக்கும் சில்லரைச் சண்டைகள் கிளம்பிவிட்டன. ரஷீத் ஆலி ஜெர்மன் உதவி தேடி விட்டார்; பாக்தாதிலிருந்து இவர் ரீஜெண்டை துரத்திய பொழுதே நாஸி வக்ர வேலைப்பாட்டை இவர் கையாடுகிறார் என்று சந்தேகம் ஏற்பட்டது; அந்த முறை கையாளப்பட்டதென்பது இப்போது உலகத்தாருக்கு எடுத்துக் காட்டப்படுகிறது.

கீழ் நாடுகள் பக்கம் முண்டிப் பார்க்க ஹிட்லர் எண்ணுகிறானென்று சகஜமாக நினைக்கப்படுகிறது. என்ன திருசாக வேலை செய்யப்போகிறானென்பது பெரும் பாலரும் எதிர் பார்க்க முடியாது; எகிப்தை படையெடுக்கப்போகிறானென்றும் இந்தியாவின் பேரில் கண் வைத்திருக்கிறானென்றும் சொல்லப்படுகிறது. அவனு டைய யோசனை இப்போதைக்கு எப்படியிருந்தபோதிலும், சமீபத்திலோ, கொஞ்சம் தாமதத்தின் பேரிலோ, கீழ்நாடுகளில்—சமீபக் கீழ் நாடோ, தூரக் கீழ் நாடோ—அடுத்த படியாக சண்டை முக்கியமாக நடைபெருமென்று கருதப் படுகிறது என்பது யாருக்குமே புலப்படும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

இவ்விதம் கீழ்நாடுகள் பேரில் படையெடுப்பதில், அச்சில் கூட்டுக்காரரான ஜப்பானியருடைய தீவிரமான உதவியை ஹிட்லர் எதிர் பார்க்கிறான் என்பது நிச்சயம். ஜப்பானியரும் தயாராகிறார்கள். அவர்களை எந்நேரமும் கவலைக்கிட மாக்கும் ருஷ்யாவுடன் ஏதோ ஒரு விதமான உடன்படிக்கை செய்துகொண்டிருக் கிறார்கள்; ஐந்து வருஷம் வரை அசைக்க முடியாதென்று சொல்லப்பட்டதும் ஒருவரையொருவர் எதிர்ப்பதில்லையென்றதுமான ஒரு உடன்படிக்கை. இதற்கு சரியான தாத்பரியமென்னவென்பதும், சீனு பக்கம் தரையிலும், கடலிலும் ஜப் பான் செய்யும் வேலைகளைப்பார்த்து எவ்வளவு காலம் ருஷ்யர்கள் சகித்துக் கொண்டிருப்பார்களென்பதும், தங்கள் பிரத்தியேகக் கடல் என்று ருஷ்யர்கள் கருதும் டார்டனல்ஸ் (Dardanelles) பக்கம் நாஸிகள் முண்டுவதை ருஷ்யர்கள் எந்த அளவிற்குப் பொருப்பார்களென்பதும் காலக்கிரமத்தில்தான் அறியக்கூடும். இப்போதைக்கு, மேற்படி உடன்படிக்கையின் பயனாக ஜப்பான் சீனாவின் வட பாகம் மட்டுமல்லாமல் இதர திக்குகளிலும், ஒரு கை பார்க்க இடம் ஏற்பட்டு விட்டது.

இராக், இரான், நடவடிக்கைகளால் இந்தியாவிற்கு சஞ்சலம் ஏற்படும். உடன்காலத்திலேயே, இந்தியாவில் கிழக்கு எல்லைப்புறத்திலும் சங்கடங்கள் ஏற்படவேண்டுமென்பதுதான் அச்சு தேசத்தாரின் எண்ணம் என்பதில் சந்தேக மில்லை. இந்தோசைனாவிலும், ஸியாமிலும் ஜப்பானுக்கு. விடுதி ஏற்பட்டிருக் கிறது; அங்கிருந்து தாவி பர்மாவின் பேரில் ஜப்பான் படையெடுக்கவேண்டு மென்று ஏற்பாடாகவிருக்கலாம். சிங்கப்பூரைச் சுற்றியிருக்கும் பிரிடிஷ் கப்பற் படையை எதிர்ப்பது ஜப்பானுக்கு பிடித்தமாகவிராது; ஆகையால் பர்மாவைத் தாக்க எண்ணுவது சம்பாவிதம்.

நமக்குத் தெரியும், பர்மா சமீப காலம்வரை இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்தது. 1935-ல் பிரிவினைக்கு முந்திய காரியங்கள் துவக்கப்பட்டு, 1937 ப்ரல் முதல்தேதி முதற்கொண்டு பர்மா பிரிவினையடைந்தது. பர்மா பிரிவினை யானது இந்தியர்களுக்குப் பிடித்தமேயில்லை; பர்மாவிலும் பலருக்கு அது பிடித்த மில்லை. இந்தியாவிற்கும் பர்மாவிற்கும் வெகுகாலமாக சம்பந்தம்; இது காலமுறை, வியாபார முறைகளால் நாளடைவில் வலுத்தது; அதனால் இருவருக்கும் நல்ல



பயன் உண்டாயிற்று. ஆயினும், பிரிவினை செய்கிறதென்று தீர்மானிக்கப்பட்ட மேல் அது ஒத்துக்கொள்ளப்பட்டது; இந்திய அரசியல் திட்டத்தையே பெரும்பாலும் அனுசரித்த பர்மா அரசியல் திட்டம் நான்கு வருஷங்களாக நடைபெற்றுவருகிறது. அந்த திட்டப்படி சரியாக பர்மாக்காரர் அரசியல் நடத்திவருகிறார்களென்று Mr. பர்டன் லீச் (Mr. Burton Leach) என்பவர் சொல்லுவது நாம் ஒத்துக் கொள்ளக்கூடியது; சமீபத்தில் இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் ஒரு வியாபார உடன்படிக்கை ஏற்பட்டது; அது திருப்திகரமானதென்று இருதிறப்பாலும் ஒத்துக்கொள்ளப்படுகிறது. பூமியின் அமைப்பை கவனிக்க இந்தியாவும், பர்மாவும் ஒன்று என்பது ஞாபகத்தில் வைத்துக்கொள்ளப்படவேண்டிய விஷயம். பார்லி மெண்ட் சபையார் பிரிவினை ஏற்பாடு செய்தபொழுது இதை மறந்துவிட்டார்கள். "இதன் பயனாக, பூமியின் அமைப்பை கவனிக்க, இந்தியா ஒரு அங்கத்தை இழந்தது" என்று ஸர் லூயி லீ பெர்மர் (Sir Louis Leigh Fermor) சொல்லு கிறார். ஒரே மாதிரி அமைப்பானதால் இந்தியாவில் அகப்படும் பொருள்கள் பர்மா விலும் அகப்படுகின்றன. (ஷான் மாகாணம் போல் பூமியின் அமைப்பு மாறின இடங்களில் வெள்ளி ஈயம், தகரம், wolfram, போன்றவை கிடைக்கின்றன; கடைசி இரண்டு வஸ்துக்களால் டெனஸரிமானது மலாய் நாட்டை ஒத்ததாக ஏற்படுகிறது). இனி இந்த முக்கியமான வஸ்துக்கள் இந்தியாவுக்கும், பர்மாவுக்கும் பொதுவான உடைமையென்று கருதமுடியாது. தாதுப் பொருள்களுக்கு போரில் பிரயோஜனமுண்டு. ஆகையால் அவைகளை விருத்தி செய்ய வேண்டியது பர்மாவின் பொறுப்பு. சில தாதுப் பொருள்கள் துணை வேலைகளுக்குப் பிரயோஜன மாயிருந்த போதிலும் சில பீரங்கி முதலானவைகள் செய்யவும் போக்குவரத்து சம்பந்தமாகவும் பிரயோஜனமானவை. Wolfram என்பது உயர்ந்த ஜாதி இரும்பு செய்ய அவசியமான பொருள். பெயர்போன பர்மாத் தேக்கு கப்பல் முதலானவை செய்ய அவசியமானது. பர்மாவில் பெட்ரோல் எண்ணெய் ஏராளம். பர்மா அரிசி பர்மாவிலும், இந்தியாவிலும், சிலோனிலும் பலருக்கு உணவு அளிக் கிறது. உலகத்திலேயே பெயர்போன மாணிக்கச் சுரங்கங்கள் மோகாக் (Mogok) கிலிருக்கிறது. கனன யந்திரங்கள் செய்ய முக்கியமானவை. பர்மிய தகரம் உலோகங்களை உருக்குவதற்கும் உலோக கலவைப்பொருள்கள் செய்யவும் தேவை யானது. பர்மாவில் ஈயம் ஏராளம். அது குழாய்கள், தகடுகள் செய்யவும் பீரங்கி சாமான்கள் செய்யவும் அவசியமான வஸ்து.

ஆகையால், கைத்தொழில் சம்பந்தமாக பர்மா முக்கியமான தேசமென்று வெளியாகும்; இந்த ஸ்திதியில் அதன்பேரில் அச்சுதேசத்தார் கண் வைத்திருக கிறார்களென்றால் ஆச்சரியமல்ல. ஆனால், பிறர் படையெடுப்பைக்கண்டு பர்மாக் காரர் அஞ்சார் என்று தைரியமாகச் சொல்லலாம்; ஏனென்றால் பர்மாக்காரர் தைரியசாலிகள், தங்கள் சுயேச்சையைப் பாராட்டுகிறவர்கள். ஒரு காலத்தில் பர்மாவானது சீனாவிற்குட்பட்ட சிறு ராஜாங்கமாகவிருந்தது; ஆனால் சீன தலை நகரத்திலிருந்து வெகு தூரத்திலிருந்ததாலும், பிரதேசம் காடு முரடானதாலும், சீனரின் சுலபத்தன்மையாலும், சீனரின் மேற்பார்வை தளர்ந்து, பல நூற் றாண்டுகளாக பர்மா சுயேச்சாதிகாரத்துடன் இருக்க நேர்ந்தது. தங்கள்

சுயேச்சை படைத்த பழையகாலத்து நினைப்பும், கலைகளிலும், கட்டடங்களிலும் உயர்வடைய அனுகூலமாக அரசியல் நடத்திய அனுவ்ரதா, கான்ஸிட்டா போன்ற அரசர்கள் நினைவும் பர்மாக்காரருக்கு இப்போது வருகிறது. ஆகையால் பர்மா பாதுகாப்புக்காக வேலைகள் நடந்து வருகின்றன. பர்மாக்காரருக்கு ராணுவ ஐதீகங்கள் இல்லாமற்போனாலும் அவர்கள் போர்க்களத்தில் தைரியமாகவும் உயிரைப்பொருட்படுத்தாமல் போர் புரிவதையும் தெரிந்தவர்கள் எடுத்துரைத்திருக்கிறார்கள். சமீபத்தில் பிரிடிஷ் விமானப்படையில் பர்மா பகுதி ஒன்று ஏற்படுத்தப்பட்டது; அதற்கு அடையாள சிகரமாக பர்மாவின் சின்னமான தோகை விரித்த மயிலை வைத்துக்கொண்டார்கள். பர்மிய விமானிகள் ஏற்படுத்துவது சிரமமல்ல; அவர்கள் ஆகாயம்ளாவிப் பறந்து தங்கள் விமானங்களின் சப்தத்தை, மாரிகாலத்தில் மயில்களின் சப்தத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கிற இடி முழக்கத்துடன் கலப்பார்கள்.

## பர்மா-யூனன் ரஸ்தா.

கொஞ்சகாலத்திற்குமுன் பர்மாவுக்கும் சீன மாகாணமான யூனனுக்கும் ஒரு ரஸ்தா போட்டார்கள். ரஸ்தாவானது லாஷியோ ரயில் முனையிலிருந்து கிளம்பி வெகு சிரமமான பாதை வழி 700 மைல் தூரம் போகிறது. ராணுவ முறையில் அது இரண்டு தேசத்திற்கும் முக்கியமானது, ஏனென்றால் இதன் வழியே ஏராளமான துருப்புகளும் சாமான்களும் அனுப்பலாம்; நடப்பில் இந்த ரஸ்தா சீனாவிற்கு ஜீவாதாரமாக இருக்கிறது. ஜப்பானியர் தாட்சண்யத்திற்கிணங்கி 1940 ஜூன் மாதத்தில் இந்த ரஸ்தாவை பிரிடிஷார் அடைத்தார்கள் இது இந்தியருக்கு வெகு அதிருப்தியாகவிருந்தது; ஏனென்றால் சீனரிடம் நமக்கு அபிமானமுண்டு, அவர்கள் ஜப்பானியரை எதிர்ப்பதில் அவர்கள் பக்கம் நமக்கு அனுதாபம் ஜாஸ்தி. ஆனால் ரஸ்தா அடை பட்டதற்குக் காரணம் ஜப்பான் சீனாவுடன் சமாதானம் செய்துகொள்ளும் என்று ஒத்துக்கொண்டது. அப்படிச் செய்வதில் ஜப்பானுக்கு நோக்கமில்லையென்று வெளியானமேல் பிரிடிஷார் ரஸ்தாவை மறுமுறை திறந்து விட்டார்கள்.

இதில் இங்கிலாந்து, இந்தியா, பர்மா எங்குமே வெகு திருப்தி. ஆனால் ஜப்பானுக்குக் கோபம்; பிரிடனுக்கும் ஜப்பானுக்குமுள்ள கக்ஷிகளில் இது முக்கியமானது; ஆனால் ஜப்பான் இந்த வம்பை தானாக இழுத்துக்கொண்டது.

இந்த ரஸ்தா வழியே இருப்புப்பாதை போடுவதாக யோசனை. இது நடந்தால், நடப்பிலும் ராணுவக் காரியங்களுக்கு வெகு உபயோகமாகவிருப்பதுடன், எதிர்காலத்தில் பர்மாவுக்கும் சீனாவிற்கும் வெகு லாபகரமாகவிருக்கும்.

## ஸியாம் அல்லது தாய்லாந்து.

ஸியாம் அல்லது தாய்லாந்து பிரான்ஸ் தேசத்தின் விஸ்தீர்ணத்தையொத்தது; 14-வது நூற்றாண்டின் மத்திய பாகத்திலிருந்து தன்னரசு நாடாக இருந்து வந்திருக்கிறது. தேசங்களுக்குள் முக்கியமில்லாமல் போனாலும் விசித்திரமான



தேசம்; 1932-வாக்கில் நவீன முறைகளைத் தழுவிற்று. ஜனநாயக முறையைக் கொஞ்சம் ஆதரித்து ஒரு புரட்சி ஏற்பட்டது. அக்காலத்திய அரசன் அதை ஒத்துக்கொண்டார்; பின்னால் தான் சிங்காசனத்தை விட்டு விலகி ஆனந்தா என்ற தன் அண்ணன் மகனுக்கு பட்டத்தைக்கொடுத்தார்; அந்தப் பையன் 'ஸமனர்'; 3 ரீஜெண்டுகள் வைத்து அரசியல் நடந்தது. ஸியாம் செல்வமுள்ள நாடல்ல; கடனில் எப்போதுமே மாட்டிக்கொண்ட உழவர் பெருத்த சீமை; ஆயினும் உள்ள செல்வம் ஜாக்கிரதை யாகப் பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

ஸியாம் எப்போதுமே நடு நிலைமையை வகித்து வந்தது; ஆயினும் பர்மாவிற்கும் சிங்கப்பூருக்கும் இடையே ஒரு கேந்திர ஸ்தானமாயிருப்பதால் அதன் வெளி நாட்டுக் கொள்கையில் பிரிடன், பிரான்ஸ், ஜப்பான் இவர்களுக்கு அக்கரை. ஸியாமிலுண்டாகும் அரிசி, ரப்பர், தேக்கு முதலியவைகளை விருத்தி செய்ய பிரிடிஷார் ரொம்ப முதல் போட்டிருக்கிறார்கள்; மேலும், பர்மாவிற்கும் கீழ் பக்கமுள்ள மற்ற தேசங்களுக்கும் இடையே இருப்பதால் பிரிடனுக்கு நலமாகக் கருதப்பட்டது. பிரிடனுடன் நேசபாவமுள்ள ஸியாம் தேசத்தாருக்கு ஜப்பானியரிடம் வெகு பயம். சிரிக்கலாம், பசப்பலாம், ஆனால் அந்தரங்கத்தில் ஜப்பானியரிடம் நம்பிக்கையே கிடையாது; ஜப்பானியரிடம் ஸியாமார் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள்; பாங்காக் துறைமுகத்தில் ஏராளமான ஜப்பானியக் கப்பல்களிருப்பதுடன் அதை மண் அள்ளி செப்பனிடும் வேலை ஜப்பானியரது. ஜப்பானை ஸியாம் எதிர்ப்பதில் பிரிடிஷ், அமெரிக்க சகாயமிருப்பதுடன், ஸியாமில் குடியிருக்கிற 25 லக்ஷம் சீனர்களும் முக்கிய வேலை செய்கிறார்கள். சமீபத்தில் ஸியாம் ரேடியோ ஜெர்மானியர் வசமாகிவிட்டது. இந்த ஸ்திதியில் அச்சு தேசத்தார் ஸியாமின் மென்னியை அமுக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

ஸியாமிற்கும் பர்மாவுக்கும் இடையே கிரா என்ற பூசந்தி விஷயமாக ஜப்பானியர் நோக்கத்தைப்பற்றி சர்ச்சை நடந்து வந்திருக்கிறது. சிங்கப்பூரைச் சுற்றி வராமல் ஸியாம் வழியாகக் குறுக்கே போக வாய்க்கால் வெட்டப் போவதாக சொல்லப்பட்டது. கேட்க ரஸமாகவிருந்தபோதிலும் வேலை சிரமசாத்தியமானது; இதுவரை வேலையொன்றும் துவக்கியதாக இல்லை.

1940-ம் ௵ ஜூன் மாதத்தில் பிரிடன், பிரான்ஸ், ஸியாம் (இது தாய்லாந்தாக மாறிவிட்டது.) மூவரும் அனாக்கிரமண ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டார்கள். இதனிடையில் பிரெஞ்சு இந்தோசைனா வழியாக சைனாவுக்கு, ஆயுதங்களும், வெடிமருந்துகளும் போகக்கூடாதென்று ஜப்பானியர்கள் வற்புறுத்தினார்கள். இதற்கு போர்டோவிலிருக்கும் பிடேன் அரசாங்கமானது கடைசியில் ஒப்புக்கொண்டது. பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து பதில் கிடைக்கும் முன்னமே தெற்கு சைனாவிலிருக்கும் ஜப்பானியத் துருப்புகள் இந்தோசைனா மார்க்கமாக சைனாவுக்குப்போகும் சாமான்களைப் போகாமல் பலவந்தமாய்த் தடுக்க ஆரம்பித்தார்கள். சைனாவானது, ஜப்பானியர்களின் வேண்டுகோளுக்கு உடன்பட்டு 1930-ல் ஏற்பட்ட சைனோ-பிரெஞ்சு உடன்படிக்கையை

மீறிவிட்டதாக பிரான்ஸுக்குச் சுட்டிக்காட்டியது. அப்பொழுது விஷி அரசாங்கத்தார் சுங்கிங்குக்கு, இந்தோ சைனாவில் ஜப்பானியர்கள் சண்டைபோட ஆரம்பித்தால் பிரெஞ்சுக்காரர்கள் அதை எதிர்ப்பார்கள் என்று தகவல் கொடுத்தது. ஜப்பானியர்களின் முக்கியமான எண்ணமென்னவென்றால், கடற்படை, ராணுவப் படை, விமானப்படை இவைகளுக்கு இந்தோ சைனாவில் நிலையங்களும் பிரெஞ்சு தேசங்கள் வழியாக யூனானுக்குச் சென்று சைனாவைத் தாக்குவதற்குச் செல்ல அனுமதியும்தான் வேண்டியது என்பது ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது.

ஸெப்டம்பர்மீ ஆரம்பத்தில் தாய்லாந்தானது இந்தோசைனாவின் எல்லைப் புறத்திலிருக்கும் சில நாடுகளைத் தனக்குக்கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தியது. இந்தத்தேவையானது ஜப்பானின் தூண்டுதலின் பேரில் ஏற்பட்டது என்பது வெளிப்படையான விஷயம். இதே சமயத்தில் ஸியாம் அரசாங்கத்தார் விஷிக்கு, இந்தத்தேவையை மறுத்தால், அவர்கள் பிரான்ஸுடன் செய்துகொண்டிருக்கும் அனாக்கிரமண ஒப்பந்தத்தைத் தள்ளிப்போடுவதாக எச்சரித்தார்கள். விஷி அரசாங்கத்தார் ஸியாமிகளின் அதிகார வேண்டுதலை மறுதளித்து விட்டார்கள். தாய்லாந்துக்கும் பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்துக்கும் சிநேக பாவமுள்ள சம்பந்தம் ஏற்படுத்த ஒரு நல்லெண்ணமுள்ள தூது கோஷ்டி தாய்நாட்டிலிருந்து கிளம்பிற்று. ஆயினும் ஸியாமானது தான் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்பதைப்பற்றி ஒரு முடிவான அபிப்பிராயத்துக்கு வரவில்லை என்று தெரிகிறது. ஏனென்றால் ஒரு தூது கோஷ்டி இந்தியா, பர்மா, மலேயா, ஆஸ்திரேலியா முதலிய இடங்களுக்குப் புறப்பட்ட பொழுதே, இன்னொரு கோஷ்டி ஜப்பானுக்கு வந்து விட்டது.

இதன் மத்தியில் பிரெஞ்சுக்காரர்களுக்கும் தாய்லாந்தார்களுக்கும் இந்தோசைனா எல்லைப் புறங்களில் சச்சரவுகள் ஏற்பட்டன. ஜப்பானானது பகிரங்கமாக ஸியாமைத் தூண்டி விட்டு மேகாங் நதிக்கு மேற்கேயுள்ள தேசத்தைக் கொடுக்கும்படி கேட்கச் செய்தது. ஸியாமுக்கும் இந்தோசைனாவுக்குமுள்ள மனஸ்தாபங்கள் முற்றி விட்டன. இந்த சமயம் ஜப்பானானது ஸியாமுக்கும் இந்தோசைனாவுக்கும் மத்தியஸ்தம் செய்வதாக சுறுசுறுப்பாக முன் வந்தது. ஜப்பானுடைய காரியம் ஸித்தியடைந்தது. ஆட்டுத்தோலைப் போர்த்திவந்த புலிபோல ஸியாமுக்கும் இந்தோசைனாவுக்கும் ஒரு போலி ஒப்பந்தத்தை அது முடித்து வைத்தது.

மேற்குப்பக்கத்தில் பிரான்ஸின் விழுக்காடும், அதன் காரணமாக அதனுடைய கிழக்குக்குடியேற்றநாடுகளில் பிரெஞ்சு அதிகாரம் வலுக்குறைந்ததும், மேகாங்க் நதிப்பிரதேசத்தில் இந்த சங்கடமான நிலைமையில் ஜப்பான் புகுந்து தனக்கு வேண்டியவைகளைக் கைப்பற்றியதும், பிரிடிஷ்காரர்களை விழித்துக்கொள்ளும்படி செய்துவிட்டது. ஜப்பானை சமாதானப்படுத்துவதற்காக சாவதான அளவை மீறிக்காரியங்கள் செய்து விட்டோமென்று அவர்களுக்குப் புலப்பட்டுவிட்டது. நாம் அறிந்தபடி பிரிடிஷ்காரர்கள் சைனாவுக்குச் சாமான்கள் சப்ளை செய்வதற்காக பர்மா-யூனான் ரஸ்தாவை மறுபடியும் திறந்து விட்டார்கள்.



அந்த ரஸ்தா ரொம்பவும் நன்றாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு நாளைக்கு ஏராள எடைமானமுள்ள சாமான்களைக் கொண்டுபோகக்கூடிய வசதியுள்ளது. இதை மறுபடியும் திறந்ததிலிருந்து சைனாவில் அதிகமான உத்ஸாகமும் திருப்தியுமுண்டாகியிருக்கிறது. இந்த ரஸ்தா வழியாக ஏராளமான தளவாடங்கள் போக்குவரவு நடப்பதின் பயனாக ஜப்பானியர்களுக்கு அதிகக்குழப்பமுண்டாகியிருக்கிறது.

## இந்தோசைனா.

இந்தோசைனாவானது 19-ம் நூற்றாண்டின் பின் பாதியிலிருந்து பிரெஞ்சுக்காரர் ஆளுகைக்குட்பட்டிருக்கிறது. அந்தச் சமயம் சைனாவானது கதியற்றதாகயிருந்தது. அவரவர்களுக்கு வேண்டிய நாடுகளைப் பிடித்துக்கொள்ள ஆசையுள்ள தேசங்களுக்கு ஒரு லகுவான நாடாகவுமிருந்தது. முதலில் பிரான்ஸ் குடியேறி யாதொரு சிரமமன்னியில் கொச்சின் சைனாவையும், கம்போடியாவையும் கைப்பற்றிக்கொண்டது. பிறகு, அன்னான் என்னும் பிரதேசத்தையும் கபளீகரம் செய்து தன்னுடைய சொத்துக்களை ஒருங்கு சேர்த்து, இந்தோ சைனாவில் வலுவாக தன்னை ஸ்தாபித்துக் கொண்டது. இந்தோ சைனாவானது ஐந்து அரசாங்க நிர்வாக வகுப்புகளுள்ளது. ஒவ்வொன்றும் தன்னிச்சையாக வேலைசெய்து வருகின்றன. இதுதான் பிரெஞ்சுக்காரர்களின் அரசாங்கமுறை. பொதுஜன நோக்கங்களில் நயவுள்ளதாயும் நாகரிகமுள்ளதுமான பிரெஞ்சு தேசமானது அரசாங்க நிர்வாகமுறையில், தங்களுடைய கை மேஜோடுகள் வழவழப்பாயிருந்தாலும் உள்ளிருக்கும் கைகள் எஃகுனால் செய்யப்பட்டவைகளாகக் காணப்படுகின்றன. ஆகையால் எப்பொழுதாவது தொழிலாளர் வேலை நிறுத்தம் ஏற்பட்டால் அதை ஈவு இரக்கமன்னியில் அவர்கள் நிராகரித்து விடுவார்கள்.

சைனாவைப் பங்கு போட்டுக்கொள்ளுவதில் ஜப்பானும் மற்ற நாடுகளுக்குப் பின்வாங்கவில்லை. இருந்தாலும் சைனாவிலுள்ள பிரெஞ்சு நாடுகளை ஜப்பான் கடுமையாகவே நோக்கி வந்தது. எப்பொழுதும் பிரெஞ்சு அண்டை வீட்டுக்காரரிடம் அதற்கு சந்தேகம் உண்டாகிக்கொண்டேயிருந்தது. இரண்டு நாடுகளுக்கும் உள்ள சம்பந்தங்கள் எப்பொழுதும் ஒருவரையொருவர் கண் விழிப்புடனே கவனித்துக்கொண்டு வருவதாகத்தானிருந்தது. எப்பொழுதாவது ஜப்பானுடன் சண்டைபோடத்தான் நேரிடுமென்று பிரெஞ்சுக்காரருக்குத் தெரியும். அவர்கள் புத்திக்கெட்டிய பிரகாரம், அதிகமான ஒரு சுங்கவரியை ஏற்படுத்துவதன் மூலம் ஜப்பானியர்கள் பொருளாதார சம்பந்தமாய் உள்புகாதபடி தடுத்துவந்தார்கள். ஆயினும் ராஜீய சம்பந்தமான பிரச்னைகளை இந்த நடவடிக்கை தடுக்கவே முடியாது. மேற்கே ரொம்பவும் பலஹீனமடைந்தும் சீர்கேடடைந்துமிருக்கிற பிரெஞ்சு தேசமானது கிழக்கேயும், சிரம தசையை அடைந்திருக்கிறது.

இந்தோ சைனாவில் ஹைபாங், ஹானாயிக்கும், சைனாவைச் சேர்ந்த யூனான் மாகாணத்தின் தலைநகரமாகிய யூனான்பூக்கும் செல்லக்கூடிய ஒரு சிறிய இருப்புப் பாதை இருக்கிறது. இது பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமானது. அவர்களு

டைய ஆதிக்கத்துக்குட்பட்டது. இந்த இருப்புப்பாதை சைனாவுக்குச் செல்லும் வியாபார சாமான்களுக்கு ஒரு முக்கியமான போக்குவரவு சாதனம். சைனாவின் கடல் வியாபாரத்துக்கும் இது முக்கியமான ஆதாரம். 1939-ம் வருஷத்தில் ஜப்பானானது ஹைனன் தீவைக் கைப்பற்றியபொழுது இந்த இரண்டு நாடுகளுக்குமுள்ள சம்பந்தங்கள் நெருக்கடியான நிலைமையை அடைந்தன. பிரெஞ்சுக்காரர்களுக்கு கோபம் அதிகரித்து, இந்த இருப்புப்பாதை வழியாக சைனாவுக்கு சாமான்கள் ஏராளமாக அவர்கள் அனுப்பினார்கள். ஜப்பானியர்கள் கட்டாயப்படுத்தியும் இந்த இருப்புப்பாதையை அவர்கள் மூடிவிடவில்லை. ஜப்பான் தன் பற்களைக் கடித்துக்கொண்டு, எப்பொழுது தருணம் வாய்க்குமென்று காத்துக்கொண்டிருந்தது. இந்த சந்தர்ப்பம் மேற்கில் பிரான்ஸ் விழுந்துவிட்டபொழுது வாய்த்தது.

ஆகையால் இந்தியாவுக்குக் கிழக்கேயுள்ள ஸ்திதி இம்மாதிரியாயிருக்கிறது. மந்த புத்தியுள்ள சிலர் ஜப்பான் அடிக்காது அல்லது ஜப்பானால் அடிக்க முடியாதென்று நினைக்கிறார்கள். ஆயினும் இன்னொருவனுடைய குடிவெறியால் ஜப்பான் மதிமயங்கி நிற்கிறது. மேற்கில் நாஸிகளுக்கு வெற்றியேற்பட ஜப்பானுக்கு கிறுகிறுப்பு ஜாஸ்தியாகிறது. பஸிபிக் மஹாசமுத்திரத்தில் நேச நாடுகளின் துருப்புகளோடு போர் செய்து மக்னம் அடைந்தாலொழிய ஜப்பான் மறுபடியும் தன் ஸ்வய புத்தியை அடையப்போவதில்லை. இந்த சந்தர்ப்பத்தில் கிழக்கு நாடுகளிலுள்ள ராணுவங்களுக்கு தளகர்த்தரான விமானப்படைத் தலைவர் ஸர் விக்டர் ப்ரூக் போபாம், சிங்கப்பூர் அரணுடைய வலிமையை ஆதாரமாகக் கொண்டு சொல்லியிருக்கும் சிலவைகள் ரொம்பவும் ஆறுதலளிக்கின்றன. சமீபத்தில் அவர் சொன்னதாவது :—

"மலாய் நாட்டின் தற்காப்புகளை அபிவிருத்தி செய்வதை நாம் ஒரு பொழுதும் நிறுத்தப் போவதில்லை. நான் தூங்கப் போவதில்லை, மற்றவரையும் தூங்கும்படி அனுமதிக்கப் போவதுமில்லை. இன்று ஏற்படுத்தியிருக்கும் தற்காப்புகளை நோக்குங்கால், எவருடனும் நாம் யுத்தம் செய்யக்கூடும். நாம் நிச்சயமாக ஜயமடைவோமென்று நான் நம்புகிறேன்."

தாத்காலியமாக ஜப்பானுக்கு எவ்வளவு லாபங்கள் கிடைத்திருந்தாலும், ஜப்பானிய மந்திரிகள் இந்த முக்கியமான சொற்பொழிவை அவசியம் மதித்துப் பார்க்க வேண்டும். இதற்கு கொஞ்ச காலத்திற்கு முன்தான் ஆஸ்திரேலியாவிலும், அமெரிக்காவிலுமுள்ள முக்கியமான மந்திரிகள் அர்த்த புஷ்டியுள்ள அநேக அபிப்பிராயங்களை வெளியிட்டு இருக்கிறார்கள். அவர்களெல்லோரும் இந்த பிரசங்கத்தின் விஷயமான நாடுகளின் பழைய ஸ்திதியை நிலைநாட்ட வேண்டுமென்பதில் அக்கரையுள்ளவர்களென்று வெளியிட்டிருக்கிறார்கள்.

---



# வார யுத்தச் செய்திகள்.

(30—4—41-லிருந்து 7—5—41-வரை).

**இராக்கில் வம்பு.**—இராக்கில் புரட்சியை உண்டாக்கி, ரஷீத் ஆலி அதிகாரத்துக்கு வந்தவுடன், இராக்குக்கும் பிரிடனுக்கும் ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் உடன்படிக்கைப்படி நடந்து கொள்ளுவதாகக் கொடுத்தவாக்கும், பிரிடிஷ் சைனியங்களின் முதல் பகுதியை பாஸ்ராவிலிறங்க அனுமதித்ததும், தனக்கு அநுகூலமான காலம் வருவதை எதிர் பார்த்து, துரோகம் செய்ய நினைத்துச் செய்ததாக இப்பொழுது வெளியாகிறது. ஏனெனில், பிரிடிஷ் துருப்புகளின் இரண்டாம்பகுதி வந்தபோது, முதல் பகுதி வெளியேறிய பிறகுதான் இரண்டாம் பகுதி வரலாமென்றான். ஆனால் ஏற்கனவேயுள்ள உடன்படிக்கைப் பிரகாரம் பிரிடிஷ் படையின் இரண்டாம்பகுதியும் இறக்கப்பட்டது. இதன் பிறகு அருகாமையிலுள்ள ஹபானியாவில் சைனியத்தை கொண்டுவந்து ரஷீத் ஆலி அங்கிருக்கும் விமான நிலயத்தைத்தாக்க, பிரிடிஷாரும் திருப்பி எதிர்க்க நேரிட்டது. பாஸ்ராவிலும் சண்டை நடந்து அங்கிருந்த இராக்கியத் துருப்புகள் விரட்டப்பட்டன. ரஷீத் ஆலி ஜெர்மனியின் உதவியை நாடுவதாகத் தெரிகிறது.

ஏராளமான எண்ணெய் கிணறுகளிருப்பதால் இராக் யுத்தத்தில் வெகு முக்கியமான ஸ்தலமாகும். மேலும் இது ஸிரியஸாக்கருகாமையிலிருக்கிறது.

**பால்கனில்.**—பிரிடிஷ் கப்பற்படையின் பலத்தாலும், பிரிடிஷ் விமான பலத்தாலும், பால்கனிலிருந்து பிரிடிஷ் துருப்புகள், அதிக நஷ்டமென்பதில்லாது வெளியேறிவிட்டன. இது ஆச்சரியப்படக்கூடிய காரியமாகும்.

விமானங்களாலும், விமானக் குடைகளைக்கொண்டும், ஜெர்மானியர் மிதிலினி, கீயாஸ் என்ற தீவுகளில் இறங்கியிருக்கிறார்கள். ஸெபலோனியா, ஸான்டே, லியூகாஸ் என்ற ஐயோனியன் கடலிலுள்ள தீவுகளை தாங்கள் பிடித்துக்கொண்டதாக இதாலியர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

**அபிஸீனியாவில்.**—பார்பார், டெஸ்ஸீ, வால்டியா என்ற இடங்களைப் பிடித்தாய் விட்டது.

**லிபியா.**—டொப்ருக்கில் வெளி-வேலிகளுக்குள் ஜெர்மானியர் பிரவேசித்ததாக முதலில் செய்திகள் வந்தன. இப்பொழுது அங்கிருந்து துரத்தப்பட்டார்கள் என்று தெரிகிறது. டொப்ருக்கானது, கடற்கரையோரமாகப் போட்டிருக்கும் ரஸ்தாவில் பெங்காஸிக்கும், ஸோலமுக்கும் நடுவே நிற்கிறது; இதனால் எகிப்தை நோக்கிச்செல்ல ஜெர்மானியர் செய்யும் பிரயத்தனங்கள் தடைபட்டுவிட்டன.

**தூரக் கிழக்குப் பிரதேசம்.**—இரண்டு வாரங்களுக்குமுன் ஜப்பானியர் பிடித்துக்கொண்ட சீன ஸ்தலங்களாகிய வென்சோவும், ஹைமனும் சீனத் துருப்புகளால் திருப்பிப் பிடிக்கப்பட்டன.

2. பால்கன் நாடுகளை பிடிக்குமுன். அந்த தேசங்களுக்குள் ஜெர்மன் சிப்பாய்கள் கொஞ்சம் கொஞ்சமாய் உள் நுழைந்ததுபோல, இப்பொழுது ஜப்பானியர் தாய்லாந்துக்குள் பிரவேசிக்கிறார்களாம்.

3. இந்து-சைனா சம்பந்தமாக பிரான்ஸுக்கும் ஜப்பானுக்கும் இரண்டு உடன்படிக்கைகள் முடியப்போகின்றன. ஒன்று, வாசஸ்தலங்களையும், கடல்களில் கப்பல்களை ஓட்டும் உரிமைகளையும் நிர்ணயிக்கும். மற்றொன்று, சுங்கம் முதலிய வியாபார-வருவை நிர்ணயிக்கும்.

**விமானப்போர்.**—சீதோஷ்ணஸ்திதி அநுகூலமின்றியிருந்தாலும் பிரிடிஷ் விமானங்கள் இந்த வாரத்தில் கீல், பெர்லின்-பிராந்தியம், டென்-ஹெல்டர் என்ற நீர்மூழ்கிக் கப்பல்-துறை, ப்ரெஸ்டிலிருக்கும் கப்பல் கட்டுமிடங்கள், ஹாலண்டிலுள்ள கப்பல்கள் முதலியவைகளை எதிர்த்தன.

பிளிமத், லிவர்பூல், பெல்பாஸ்ட் (வட-அயர்லாந்து) முதலிய இடங்களை ஜெர்மன் விமானங்கள் தாக்கின.

**அமெரிக்கா.**—(1) 50 எண்ணெயேற்றிச் செல்லும் கப்பல்கள் அமெரிக்காவில் இருந்து பிரிடனுக்கு சீக்கிரம் வரும்.

2. யூகோஸ்லாவியாவுக்கும், கிரீஸுக்கும் யுத்த சாமான்களை ஏற்றி வந்த அமெரிக்கக் கப்பல்கள் இப்பொழுது ஸூயஸுக்கு வந்து விட்டதாகத் தெரிகிறது.

3. பிரிடன் வெற்றியடையப் போவதற்கிருக்கும் நான்கு காரணங்களை அமெரிக்க ராணுவ நிபுணர்கள் 17 பேர்கள் பின்வருமாறு எடுத்துக் காட்டி இருக்கிறார்கள். 1. யுத்தத்துக்கவசியமான தளவாடங்கள் ஜெர்மனிக்கு அக்கரையிலிருந்து வரவேண்டும். அவை பிரிடிஷ் முற்றுகையால் தடைபட்டன. 2. யுத்த தளவாடங்கள் செய்யப்படும் ஜெர்மன் பட்டணங்கள் பிரிடிஷ் விமானங்களால் சேதமாகின்றன. பிரிடனுக்கு உள் நாட்டில் தளவாடங்கள் தயாராவதோடு, அதன் சாம்ராஜ்ஜிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் தயாரிக்கப்படுகின்றன. (3) முடிவான யுத்தம் அட்லாண்டிக் சமுத்திரத்தில்தான் நடக்கவேண்டும். இங்கு பிரிடனுக்கு ஆதிபத்தியமிருக்கிறது. 4. யுனைடெட் ஸ்டேட்ஸுடைய கப்பற்படை எந்த சமயத்திலும் பிரிடனுடன் சேரலாம்: அதனால் பிரிடனுக்கனுகூலமேற்படும்.

பிரிடனுக்கு உதவி செய்யவேணுமென்ற எண்ணம் அமெரிக்கர்களுக்கு பூராவாகவிருப்பதும் தெரிகிறது.

**காலியர்ஸ்-வீக்லி** என்ற பத்திரிகையில் மிஸ்டர் வெண்டல்-வில்கி பின்வருமாறு எழுதுகிறார்:

'நம்முடைய கப்பற்கட்டுத்துறைகளையும், கடற்கரைக் கப்பல்களையும், பிடித்து வைத்திருக்கும் இதரதேசக் கப்பல்களையும், நாம் புதிதாய் கட்டும் கப்பல்களையும் ஏராளமாய், பிரிடனுக்குக் கொடுத்து, எதிரியைத் தோற்கடிக்க



வேண்டும். பிரிடனுக்கு வேண்டிய நாசகாரிகளைக் கொடுத்து, வேண்டுமானால் துணைக்கப்பல்களையும் அனுப்பவேண்டும். நம்முடைய வயல்களிலும், தொழிற்சாலைகளிலும் உற்பத்தியாகும் சாமான்களை அனுப்பவேண்டும். இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா தேசங்களில் கட்டப்படும் விமானங்கள் ஒன்று சேர்ந்தால் 1942-43-ல் நமக்கு ஆகாயத்தில் வலிமை உயர்ந்துவிடும். ஜெர்மனி பிடித்து வைத்திருக்கும் நாடுகளும், ஜெர்மனியும்கூட அப்போது நம்மோடு சேர்ந்துவிடும்.'

'ஜனநாயகத்தைக் காப்பாற்ற அமெரிக்கர்கள் எப்பொழுதும் தயாராயிருக்கிறார்கள்' என்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சமீபத்தில் சொன்னது இதைக் காட்டிலும் முக்கியமானது. காலம் சென்ற வுட்ரோ வில்ஸனுடைய கிரகத்தை தேச ஆலயமாக மாற்றிய பிரமேயத்தில் ரூஸ்வெல்ட் 'ஜனநாயகத்தை கைவிடக்கூடாது. நாம் தனித்து நிற்கக்கூடாது. நாம் அதை முன்னமே ஒருமுறை காப்பாற்றி இருக்கிறோம். மற்றொரு முறை அவசியமானால் காப்பாற்ற நாம் சண்டை செய்யத் தயாராயிருக்கிறோம். இந்த யுத்தத்தில் ஜனநாயகக்கக்ஷி ஜயிப்பதில் சந்தேகமில்லை. பிறரைக் கொலை செய்பவர்கள் முடிவில் தாங்களே கொலைபட்டு மாண்டுபோர்வார்களென்று தேச சரித்திரங்கள் நிரூபிக்கின்றன' என்றார்.

**ஹிட்லர் பிரசங்கம்.**—ரெயிச்ஸ்டாக் சபையில், மே 4-ல் ஹிட்லர் செய்த பிரசங்கத்தில் விசேஷமொன்றையும் காணோம். எல்லாம் சுரம் இறங்கிய பேச்சாயிருந்தது. பால்கன் வெற்றிகளைப்பற்றி பிரஸ்தாபிக்கவில்லை. ஜனநாயக நாடுகள் அக்கிரமம் செய்துவிட்டதாக ஒரு புராணம் வாசிக்கப்பட்டது. சர்ச்சிலைப் பற்றிய தூஷணைக்குக்குறைவில்லை. இதாலியர்களுடைய தோல்வி தாத்காலிகமென்றும் அவர்கள் பட்டபாட்டுக்கு வெகுமதி கொடுக்க வேண்டுமென்றும், பால்கன் நாடுகளைப் பிடித்துக்கொள்ளும் உத்தேசம் தனக்கில்லையென்றும் ஆனால் வியாபார சிநேகத்தை பலப்படுத்திக் கொள்ளுவதாகவும் பிரசங்கத்தில் சொல்லப்பட்டது.

அதே தினத்தில் பிரிடிஷ் மக்களைப் புகழ்ந்து மிஸ்டர். மென்ஸீஸ் பேசியது இதற்கு எதிராகவும், ஹிட்லர் பிரசங்கத்தினுடைய பொய்யும், வீண் பெருமையுமின்றி இருக்கிறது:—

'யோசனையென்பதில்லாமல், உடனே, மனதில்பட்ட பிரிடன் சம்பந்தமான சில பெருமைகளை எடுத்துச் சொல்லச் சொன்னால், நான் முதலில் மிஸ்டர். சர்ச்சிலின் பெருமையை எடுத்துரைப்பேன். பிரிடிஷ் மக்களின் யுத்த ஆவேசமும், திடநெஞ்சமும் இவரிடத்தில் பூராவாகப் பிரகாசிக்கின்றன. இரண்டாவதாக, வெகு நேர்த்தியான, விமானிகளைச் சொல்லுவேன். மூன்றாவது, வீடுவாசல்கள் இழந்தும், தைரியமாய், தொழிற்சாலைகளில் யுத்த தளவாடங்களைச் செய்துவரும், தொழிலாளிகளைச் சொல்லுவேன். ஆனால், இவர்களெல்லோரையும் காட்டிலும் பிரிடிஷ் மாதர்களைத்தான் நான் முதல்படியில் வைப்பேன்.

"இது வரையில், நம்மைவிட ஸ்திரீகள் அபலைகளென்றும், வேலைக்கு நாமும் புலம்புவதற்கு அவர்களென்றும் நினைத்தோம்.

"இனி அதெல்லாம் மாறி, அவர்களும், நம்மைப்போல யுத்த அமைப்பில் ஈடுபட்டு, யுத்தத் தொழிற்சாலைகளில் அபூர்வமாக வேலை செய்பவர்களாக ஆய் விட்டார்கள்.

"இதிலிருந்து ஒரு புது சகாப்தமேற்படப்போகிறது.

வீடு வாசலையிழந்த ஆயிரக்கணக் கானவர்கள் மகாராணியின் புன்சிரிப்பினால், அமைதிகொண்டு சந்தோஷப்பட்டிருக்கிறார்கள். லண்டன் கீழ்பாகத்தில் வசிக்கும் ஏழை மாதர்களும் தங்களாலான சேவையைச் செய்திருக்கிறார்கள்.

"இனி வரும் மாதர்கள் ஆபத்துக் காலத்தில் பயந்து மயங்கி விழமாட்டார்கள். ஆடவர்களையே யுத்தத்துக்கு பலி கொடுக்காது, தாங்களும் ஒத்துழைப்பார்கள். கொடியானது சுவற்றைப் பிடித்துக் கொள்ளுவதுபோல் சுயபலமில்லாது இருக்க மாட்டார்கள். நடை உடைகளில் மாறுதலேற்பட்டு, முகத்தில் மஞ்சள் தடவிக் கொள்ளுவதுபோல், தொழிற்சாலைகளில் வேலை செய்து முகத்திலும், கைகளிலும், கரியும், கொழுப்பும் பட்டுவிடும். இவர்களுக்குப் பிறக்கும் புதல்வர்கள் வீரர்களாயிருப்பார்கள்.

"எதிரியானவன் கிழவர்களையும், மாதர்களையும், குழந்தைகளையும் கொல்லுவதால் யுத்தத்துக்கு முன்னிருந்த கௌரவம் போய்விட்டது.

"பழைய காலத்து மிருக யுத்தத்தை புனருத்தாரணம் செய்து, 'அலைதப்புது உலகியல் என்கிறான்.

"இதில் ஹிட்லர் ஒருவனை மட்டும் வென்றால் போதாது. ஜெர்மானியருக்குப் பிடித்திருக்கும் பிசாசை ஓட்டியாகவேண்டும்.

"நாகரீகத்தை நிலை நாட்டவே இந்த யுத்தம் இப்பொழுது நடக்கிறது.".

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேச தேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 28—4—41. (திங்கட்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | பகல்.—எம்டன் (Emden) ... | ... | பலத்த சேதம். |
| | படையெடுப்பு.—இங்கிலீஷ் (English Channel) கால்வாயின் எதிர்பக்கத்தில். | ... | ...... |
| | விரோதி நாசகாரிகள்.—டச்சு (Dutch)க் கடற்கரை. | 4 விமானங்கள். | 1 நாசகாரி மூழ்கடிக்கப்பட்டது. 1 விமானம். |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 28—4—41. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி. | | |
| | தொழிற்சாலை, ரயில்வண்டிகள் நிறுத்தி வைக்கப்படுமிடங்கள்.—மோப்பல் (Moppel). | ... | ...... |
| | கப்பல் துறைகள்.—டென்ஹெல்டர் ... | ... | ...... |
| | விமான நிலயம்.—டி கூய் (De Kooy) ... | 1 விமானம். | சேதமாயிற்று. |
| | இரவில்.—கடற்படை நிலயம், இரண்டு ஜெர்மன் யுத்தக் கப்பல்கள் நீஸ்நா (Gneisenau), ஷாரன்ஹார்ஸ்ட் (Scharnhorst)—ப்ரெஸ்ட் (Brest). | ... நஷ்டமில்லை. | ...... பலத்த சேதம். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விமான நிலயம்.—பெங்காஸி (Benghazi). | ... | 1 விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது; பல சேதமாயின; பலருக்குக் காயம். பல நாசமாயின. |
| | விரோதி விமானங்கள்.—ஜிம்மா (Gimma) விமான நிலயம். | ... | |
| | மோட்டார் வண்டிகள்.—பாட்டி (Batie)க்கும் காண்டிஹோ (Candeho)வுக்கும் மத்தியில். | ... | பலத்த சேதம். |
| | விரோதி சைனியங்கள், சைனியங்கள் குழி பறித்து உட்கார்ந்திருக்கும் இடங்கள்.—சில்கா (Chilga) பிரதேசம். | ... | ...... |
| 29—4—41. (செவ்வாய்க்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | சாமான் கப்பல்கள்.—பெல்ஜியம் (Belgium), பிரான்ஸ் (France), நார்வே (Norway) கடற்கரைகள். | 3 விமானங்கள். | 5 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. பல சேதமாயின. |
| | இரவில்.—விரோதி விமான நிலயம்.—வட பிரான்ஸ் (Northern France). | | 1 விமானம் சேதமாயிற்று. |
| | பட்டணம், கப்பல் துறைகள்.—மான்ஹீம் (Mannheim). | ...... | ...... |
| | எண்ணெய்த் தொட்டிகள்.—ராட்டர்டாம் (Rotterdam). | ...... | பெருந் தீ சூழ்ந்தது. தீப்பிடித்தது. |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**29—4—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| விரோதி விமானங்கள்.—பெனினு (Benina), டெர்னு (Derna). | ...... | பல விமானங்கள் சேதமாயின. |
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| விமான யுத்தம்.—டொப்ருக் (Tobruk) | ...... | 3 விமானங்கள் |
| மோட்டார் வண்டிகள், வெடிமருந்துக் குவியல்கள், சைனியங்கள்.—அபிஸீனியா (Abyssinia). | ...... | சுதேச துருப்புகளுக்கும், வெள்ளைத் துருப்புகளுக்கும் அதிக நஷ்டம். |
| கட்டடங்கள்.—ஸிபானி (Sifani), டாண்டிஸோ (Tandeso) விமான நிலயங்கள். | 4 விமானங்கள். | கட்டடங்கள் இடிந்தன. |

**30—4—41.** (புதன்கிழமை).

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—கப்பல்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரை. | ...... | பல நாசமாயின. |
| தந்திக்கம்பியில்லா ஆபீஸ்.—நார்வே (Norway) கடற்கரையருகே இருக்கும் ஒரு தீவு. | 1 விமானம். | வேலை செய்யாமல் போய்விட்டது. |
| இரவில்.—பெர்லின் (Berlin). | ...... | பலத்த சேதம். |
| தொழிற்சாலைகள் நிறைந்த இடம்.—ஹாம்பர்க் (Hamburg). | ...... | ...... |
| துறைமுகம்.—எம்டன் (Emden). | நஷ்டமில்லை. | ...... |

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| விரோதி சைனியங்கள், மோட்டார் வண்டிகள்.—ஸிரெனைகா (Cyrenaica). | ...... | ...... |
| மோட்டார் வண்டிகள்.—காம்பூத்(Gambut) பிரதேசம். | ...... | 100 வண்டிகள் சேதமாயின. |
| விமானச் சண்டை.—ஸோபாபி (Sofafi). | ...... | 3 விமானங்கள் |
| மோட்டார் வண்டிகள்.—ஸியாஸியாமன்னு (Sciasciamanna)பிரதேசம், அஸ்ஸாப் (Assab). | ...... | பலத்த சேதம். பலருக்குக் காயம். |
| விரோதி சைனியங்கள் தங்குமிடம்.—மாஜி (Maji)க்கு வடக்கே. | ...... | ...... |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**1—5—41.** (வியாழக்கிழமை).

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—ஜெர்மன் ஸப்மரைன் (Submarine) நிலயம், ஜெர்மன் துருப்புகள் மின்சார உற்பத்திசாலை, சைனியங்கள் வசிக்குமிடம்—டென்ஹெல்டர் (Denhelder). | ... | ...... |
| ஜெர்மன் சைனியங்கள்.—டெக்ஸல்(Texel) தீவு. | ... | ...... |
| எண்ணெய்த் தொட்டிகள்.—விளார்டிங்கன் (Vlaardingen). | ... | ...... தீப்பிடித்தது. |
| கப்பல்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரை | 1 விமானம். | எண்ணெய்க் கப்பல் தீப்பிடித்தது. |
| இரவில்.—கப்பல் துறைகள்—ப்ரெஸ்ட் (Brest). | நஷ்டமில்லை. | பலத்த சேதம். |

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| விரோதி மோட்டார் வண்டிகள், சைனியங்கள்.—அக்ரோம (Acroma) பிரதேசம் (டொப்ருக்குக்கு சமீபத்தில்). | ...... | பலத்த சேதம். பலத்த நஷ்டம். |
| விமானச் சண்டை.—டொப்ருக் (Tobruk) பிரதேசம். | ...... | 3 விமானங்கள். |
| விரோதி சைனியங்கள், போக்குவரத்து சாதனங்கள்.—ஸிரெனைகா (Cyrenaica) | | |
| துறைமுகம், ராணுவ முக்யத்வமுள்ள இடங்கள்.—பெங்காஸி (Benghazi). | | ஒரு கப்பல் தீக்கிரையாகியது. ஒரு வெடி மருந்துக்குவியல் வெடித்தது. |
| விமான நிலயம்.—பெனினு (Benina). | | |
| விரோதி சைனியங்கள்.—அம்பா அலாகி (Amba Alagi), அலோமாடா (Alomata). | | |
| விரோதியின் கோட்டை.—பலாக் (Falag) கணவாய். | 1 விமானம். | தகர்க்கப்பட்டது. |

**2—5—41.** (வெள்ளிக்கிழமை).

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—இரண்டு விரோதி சாமான் கப்பல்கள்—டச்சு (Dutch)க் கடற்கரை | ...... | 1 கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. |
| இரவில்.—கப்பல் துறைகள், தொழிற்சாலைகள் நிறைந்த பிரதேசம்—ஹாம்பர்க் (Hamburg). | ...... | பலத்த சேதம். |
| கப்பல் துறைகள்.—எம்டன் (Emden) | | |
| எண்ணெய்த் தொட்டிகள்.—ராட்டர்டாம் (Rotterdam). | 4 விமானங்கள். | பலத்த சேதம். |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 2—5—41. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விமான நிலயங்கள்.—ஸிரெனைகா (Cyrenaica) | …… | சேதமாயின. |
| 3—5—41. (சனிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | தொழிற்சாலைகள் இருக்குமிடம்.—கோலோன் (Cologne). | …… | …… |
| | நாஸி யுத்தக் கப்பல்கள்.—ப்ரெஸ்ட் (Brest) | | பெருந்தீக்கள் கிளம்பின. |
| | கப்பல் துறைகள்.—செர்பார்க் (Cherbourg) புலாயின் (Boulogne). | …… | …… |
| | **இதாலிய ஆபிரிக்கா.** | | |
| | விமானநிலயம்—பெனிஞ (Benina). | …… | …… |
| | ராணுவ முக்கியத்வமுள்ள இடங்கள்.—பெங்காஸி (Benghazi). | …… | …… |
| | பிரிடிஷ் தரைப்படைகளுக்கு ஒத்தாசை.—அம்பா அலகி (Amba Alagi), ப்ராகா பாஸ் (Fraga Pass) பிரதேசங்கள் (அபிஸீனியாவில்). | …… | பலருக்குக் காயம். சேதம் அதிகம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | விரோதி வியாபாரக் கப்பல்கள்—மத்திய தரைக்கடல் (Mediterranean). | …… | …… |
| | **இராக் (Iraq).** | | |
| | தரையிலிருக்கும் விமானங்கள், ராணுவக் கட்டடங்கள்—பாக்தாத்து (Bagdad)க்கு வெளியிலிருக்கும் இராக் விமான நிலயம். | …… | தரையிலிருக்கும் பல விமானங்கள் சேதம். |
| | விமான நிலயம்—ஹப்பானிய்யா (Habbaniyah). | …… | …… |



## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 29—4—41. (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்,—ப்ளிமத் (Plymouth), தெற்கு, தென்மேற்கு இங்கிலாந்தி (England)ல் சில இடங்கள். | … | சேதமும், காயம் பட்டவர்களும் அதிகம். |
| | கிழக்கு ஆங்கிலியா (Anglia), தென் வேல்ஸ் (Wales). | 10 விமானங்கள். | காயம் பட்டவர்கள் அதிகம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | …… | பொது ஜனங்களின் சொத்திற்கு சொற்பச் சேதம். |
| 30—4—41. (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—விமான நடவடிக்கையேயில்லை. இரவில்.—இங்கிலாந்தி (England)ன் வடகிழக்குக் கடற்கரை. | 1 விமானம். | சேதமேயில்லை. |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | …… | சொற்பச் சேதம். |
| | **பிரிடன் (Britain).** | | |
| 1—5—41. (வியாழக்கிழமை). | | | |
| | பகலில்.—தெற்குக் கடற்கரையில் ஒரு இடம். | …… | காயம் பட்டவர்கள் சொற்பம். |
| | இரவில்.—மர்ஸிஸைட் (Merseyside). | … | சொற்பச் சேதம். |
| | ஒரு பட்டணம்.—மேற்கு இங்கிலாந்து (England). | … | …… |
| | இதர சில இடங்கள்.—இங்கிலாந்து (England). | 1 விமானம். | …… |
| | **எகிப்து (Egypt).** | | |
| | அலெக்ஸாண்டிரியா (Alexandria). | …… | குண்டுகள் விழவில்லை. |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **2—5—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—மர்ஸிஸைட் (Merseyside). | …… | பலத்த சேதம். |
| | ஒரு பட்டணம்.—கிழக்கு ஆங்கிலியா (Anglia). அங்குமிங்கும் பல இடங்கள்.—இங்கிலாந்து (England). | 5 விமானங்கள். | சொற்பச் சேதம். |
| **3—5—41.** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—இங்கிலாந்தி (England)ன் தென்கிழக்கு, தென்மேற்கு கடற்கரைகள். | …… | சேதமேயில்லை |
| | கெண்ட் (Kent). | 1 விமானம். | …… |
| | இரவில்.—மர்ஸிஸைட் (Merseyside), லிவர்பூல் (Liverpool). சில இதர இடங்கள்.—இங்கிலாந்து (England). | 16 விமானங்கள். | பலருக்குக் காயம். சேதம் அதிகம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | … …… | சிலர் கொல்லப்பட்டனர். |
| **4—5—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—மர்ஸிஸைட் (Merseyside). | …… | …… |
| | பல இடங்கள்.—வடமேற்கு இங்கிலாந்து (England),–பெல்பாஸ்ட் (Belfast)-(ஐயர்லாந்திலிருக்கிறது). | …… | …… |



# யுத்தக் குறிப்புகள்

## பொட்டில் அடித்தல்.

சில நாட்களுக்கு முன் யுத்தத்தின் சமீபப்போக்குகளைப்பற்றி படித்தவர்களில் சிலர் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் பிரிடிஷாரல்ல. அங்கிருந்தவர் எல்லோரும் ஹிட்லரின் யுத்த முஸ்தீபுகளின் சிக்கலின்மைக்கும், அவனுடைய ஐந்தாம் படையின் சாமர்த்தியத்துக்கும் அவனைப் புகழ்ந்தனர். பால்கன்ஸில் அவன் வெற்றிப்பாய்ச்சலின் விளைவுகளை—உடன் காலத்தியவை, பின் வரப் போகியவை இவைகளை—ஒருவரும் குறைத்துக்கூறவும் முயற்சிக்கவில்லை. ஆயினும் தூர நின்று கவனித்தவர்களுக்கு ஒன்று வெளிப்படையாயிற்று. விவாதித்தவர்களின் பதட்டமில்லாத தைரியம். ஒருவ்ரும் எதிர்காலத்தைக் குறித்து பயமுறுத்தவில்லை; குற்றம்சாட்ட முயலவில்லை; பிரிடனுக்கும் அதன் கட்சி நாடுகளுக்கும் முடிவில் வெற்றி—தீர்மானமான முழு வெற்றி எனற உறுதியைக்குலைக்கும் ஒரு வார்த்தைகூட இல்லை. யாரோ ஒருவர் சொன்னார்: "யுத்தத்தில் தர்ம அம்சம் பொருள் அம்சத்துக்கு ஒன்றுக்கு மூன்று. இதை யாரோ ஒருவர் கூறியிருக்கிறார்........எந்தச் சனியன் சொன்னான் என்றுமட்டும் யாதில்லை." அங்கிருந்தவர்களில் ஒருவரும் அர்த்த புஷ்டியான அந்த மேற்கோளின் ஆசிரியன் யார் என்று கண்டுபிடிக்கமுடியவில்லை. நெபோலியன், கிளாஸிவிட்ஸ், வான் மால்ட்கி, இவர்கள் என்ன, இவர்கள் பெயரும், யுத்தம் செய்த அநேக இதரர்கள் பெயரும், இதன் ஆசிரியன் என்று அடிபட்டது. உண்மை ஆசிரியன் எவன் ஆனால் என்ன? பொட்டில் அடித்தமாதிரி அவன் உண்மையை விண்டுசொன்னான்.

## லிபியன் யுத்தச் சுருக்கம்.

ஏன்? இதாலியர்கள் மீதுநேசதேச வெற்றிகளின் அரங்கான பாலைவனப்பிரதேசத்தில் இருநூறு மைல்கள் அடித்துச்சென்றபின் எதிரிகளின் ஒரு பலத்த சைனியமானது, சிலகாலமாக எகிப்தில் எல்லைப்புறங்களில் தேக்கப்பட்டது. எதிரிகளின் பலம் அபரிமிதம்—ஏராளமான ஜெர்மன் டாங்குகள், கவச மோட்டார்கள், மோட்டார் சைக்கிள் துருப்புகள். இவைகளுக்கு ஒத்தாசை, லாரிகளில் வந்த முழு ஜெர்மன் அல்லது முழு இதாலியர் காலாட்படைகளும் பீரங்கிகளும்.

**எப்படி?** இந்தப் பத்தியில் முன்பே எவ்வாறு இவ்வளவு முஸ்தீபுடைய ஒரு ஜெர்மன் சைனியம் லிபியாவை அடைந்ததென்பதற்கு காரணம் கூறினோம். ஸிஸிலிக்கும் ட்யூனிஷியாவும் இடையேயுள்ள சமுத்திரத்தின் குறுக்கம், எதிரிகள் தங்கள் தேசகடற்பிரதேசங்களையும் துறைமுகங்களையும் யுத்தகாரியங்களுக்குக் கொடுக்காமலிருப்பதை தடுக்க பிரெஞ்சுக்காரருக்கு மனமின்மை—இவைகள் மத்தியதரைக் கடலில் பிரிடிஷ் கடற்படை நின்றும் ஜெர்மானியர்கள் துருப்புத் தாங்கும் கப்பல்களில் இரவில் செல்லுவதை எளிதாக்கிவிட்டன.

அடுத்த 'எவ்வாறு?' என்ற கேள்வி இது—சத்துருவின் சைனியம் எவ்வாறு பிரிடிஷ் சைனியத்தின் பலத்தை மிதமிஞ்சியது? இதற்கு பதில் எளிது. கிரீஸின் ஒத்தாசைக்கு நாம் போகவேண்டியது அவசியம். இந்தப் பொறுப்பை நல்லெண்ணத்துடனும் சாஹஸத்துடனும் நாம் ஏற்றுக்கொண்டோம்.

எங்கு? சத்துரு எகிப்தைப் பிடிக்கமுயலுவான் என்பது சந்தேகம். அப்படிச் செய்வானாகில் அவனுக்கு எதிர் நிற்கும் முட்டுக்கட்டைகள் பின்வருமாறு:—

(a) எகிப்தின் எல்லைப்புற சாம்ராஜ்ஜிய சைனியங்கள் எரிட்ரியா, அபிஸீனியாவிலிருந்து வெற்றியுடன் திரும்பும் சைனியங்களால் பலப்படுத்தப்படுகின்றன. வேவல் ஆரம்பத்தில் நிர்மித்த கோட்டை கொத்தளங்களை உபயோகிக்கலாம், டொப்ருக்போல் அநேக கோட்டைகள் அங்கே இருக்கின்றன.

(b) எதிரி பலத்த பிரிடிஷ் படைகள் மீது மோதி நிற்கிறான். சமுத்திரத்திலிருந்தும் அவனை நாம் தாக்கலாம்.

(c) இதுவரையிலுமே ஆகாயமூலம் ஸப்ளைகளைக்கொண்டு வந்து சேர்ப்பது சத்துருவுக்கு பெரும்பாடாகிவிட்டது. எகிப்தை தாக்குவதாயிருந்தால் அவன் விமானப்பண்ட வெள்ளமாயிருக்கவேண்டும். கடலிலோ அவனுக்கு ஸப்ளைக் கப்பல்களின் உயிருக்கு ஓயாத ஆபத்து. அவனுக்கு நமது எதிர்ப்பு வலுக்க வலுக்க அடுத்துள்ள கொத்தளங்களிலிருந்து ஸப்ளைகள் ஓயாமல் சரமாரியாக வந்த வண்ணமிருக்கவேண்டும். எதிரி ட்ரிபோலி கொத்தளத்திலிருந்து கிளம்பியிருக்கிறான். அதன் மீது நமது ஆர். ஏ. எப். குண்டுகளை வீசுகிறது. இதனிலும் பெங்காஸி சமீபம்; அதன்மீது நமது குண்டு வீச்சும் அதிகம்.

(d) சத்துருவின் இடச்சாரி கடலிலிருந்து தாக்கப்படலாம். தெற்கே நாம் ஜாராபப், ஸீவா, இவைகளைப் பிடித்திருப்பதால் அவன் வலச்சாரிக்கும் ஆபத்து.

(e) ஜெர்மானியர்கள் எகிப்தை தாக்குவதாயிருந்தாலும் சரி, அல்லது பிரிடிஷ் படைகளை வெளியேற விடாமல் தேக்குவதாயிருந்தாலும் சரி, மேற்கூறிய விஷயங்களை ஜெர்மானியர்கள் கவனிக்கவேண்டும். எகிப்தை தாக்குவதாயிருந்தால் கிரேஸியானியின் முதல் முயற்சியில் மற்றொரு சிறு படையெடுப்புக்கும் திட்டம் இருந்தது—இதாலிய கிழக்கு ஆபிரிக்காவிலிருந்து ஸூடான்மூலம். அது இப்பொழுது அசாத்தியம்.

## மாலடோவ் மத்ஸுவோகா அணைப்பு.

பத்திரிகைகளில் சமீபத்தில் இரு பெரும் ராஜதந்திரிகள் எல்லோரும் பார்க்க அணைந்ததைப்பற்றி ருசிகரமான விவரங்கள் வெளிவந்தன. அது ருஷ்ய ஜப்பானிய உடன்படிக்கையில் 13-4-41-ல் கையெழுத்து ஆனபின் மத்ஸுவோகா மாஸ்கோவிலிருந்து திரும்பும்பொழுது; அணைந்தவர்கள் மாலடோவும் மத்ஸுவோகாவும். இருவர்களில் எவர் சிவாஜியின் புலிநகங்களுக்கு ஜாஸ்தி ஏலம் கேட்டிருப்பாரோ!

உடன்படிக்கையின் விவரங்கள் எங்கும் வெளிவந்திருக்கின்றன. ஷரத்துகளை கவனிப்போம். கோனாய் 'புது சகாப்தத்தைக்குறிக்கும் ஒப்பந்தம்' என்றார் இதை. ஸோல் ப்ளூம் என்பவர் 'சமீபத்தில் பெருகும் அநேக உடன்படிக்கை



களில் இதுவும் ஒன்று' என்று இழிவு செய்தார். இவ்விரு நேர் எதிரிடை அபிப்பிராயங்களை ஒதுக்கி விஷயத்தை கவனிப்போம். ருஷ்யா மஞ்சூகோவை வடக்கிலிருந்து தாக்கும் என்ற பயமில்லாமல் ஜப்பான் தென்கிழக்கே பாயலாம்; ருஷ்யா மேற்கே வலுப்படுத்திக்கொள்ள விரும்பினால் வெளி மங்கோலியாப் பிரதேசத்தில் ஜப்பானிடமிருந்து அது பயப்படவேண்டியதில்லை.

இந்த இரண்டு பந்தோபஸ்துகளுள் எது முக்கியமானது என்பதைப்பற்றி சந்தேகமில்லை. அநேக நூற்றாண்டுகளாக ருஷ்யாவுக்கு இரண்டு பெரும் கொள்கைகள் உண்டு. கிழக்கே ஒன்று, மேற்கே ஒன்று. பீடர் பெரியாரின் நாட்கள் முதல் இதில் ஒன்றையும் அது கைவிடவில்லை. காரியார்த்தமாக அது ஒன்றை சில காலம் ஒதுக்கிவைத்திருக்கலாம். ஹிட்லரின் திருஷ்டியைக்கண்டால் ருஷ்யாவுக்கு தற்பொழுது பிடிக்காததால் கிழக்கித்தியக் கொள்கையை அது சில காலத்துக்கு ஒதுக்கிவைத்திருக்கிறது; அது ஜப்பானின் பயத்தால் அல்ல. இதற்கு மாறாக, ருஷ்யா வடக்கே விரோதமாக நின்றால், ஜப்பான் தெற்கே ஒரு அடிகூட எடுத்துவைக்கமுடியாது. அச்சுக்கசைக்கு பயந்து ஜப்பான் சீக்கிரம் தெற்கே நகரவேண்டிவரும். சுருங்கச் சொல்லில், உடன்படிக்கையால் இரு திறத்தாருக்கும் சௌகரியம். ஆயினும் ஜப்பானின் தேழ்வை ஜாஸ்தி, ருஷ்யாவின் தேழ்வை குறைவு. ஆனதால் பேரத்தில் ருஷ்யாவுக்கு லாபம் ஜாஸ்தி. மற்றொன்றும் உண்டு; ருஷ்யா பிரிடனுக்கு வெளிப்படையான சத்துருவல்ல.

## என். ஈ. ஐ.

இம்மூன்று முதலெழுத்துக்கள் முக்கியமானவை. வர வர இன்னும் முக்கியமாகும். பூகோள சாஸ்திரத்தில் மலேயா ஆர்ச்சிபெலாகோ என்றும், சரித்திரத்தில் வாசனைத் தீவுகள் என்றும், நவீன ராஜதந்திரத்தில் நெதர்லாந்து கிழக்கு இந்திகள் என்றும் குறிப்பிடப்பட்ட பெரிதும் சிறிதும் அடங்கிய ஒரு தீவுக்கூட்டத்தை குறிக்கின்றன. அவைகளின் ஜனத்தொகுதி 7,00,00,000. அதில் பெரும்பாலோர் ஜாவாவில் இருக்கின்றனர். இத்தீவுகளின் இயற்கைப் பொருள் ஆதார வசதிகள் அபரிமிதம். உலகினில் யுத்த சம்பந்தமாக அவைகளின் அமைப்பு மிகவும் முக்கியத்வம் வாய்ந்தது. இந்த இரண்டு அம்சங்களில்தான் நமக்கு இப்பொழுது கவனம். இருந்தபோதிலும், இந்தியாவுக்கும் கிழக்கு இந்திகளுக்குமுள்ள தொடர்பு மிகவும் நெருங்கியது என்று குறிக்கத் தக்கது. அவர்களின் கலாசாரம், மஹாகாவியங்கள், புராணங்கள் தொழில் முறைகள், மனப்பான்மைகள், வீட்டில் பழக்கவழக்கங்கள் இவைகள் எல்லாம் இந்தியாவுக்கு கடன்பட்டிருக்கின்றன. மற்றொரு பிணைப்பு இது—வருஷம் ஒன்றுக்கு மலேயாவிலிருந்து இந்தியாவுக்கு 10,00,000 டன் சர்க்கரையும், விருத்தியாகிவரும் எஃகும், பருத்தி, துணி ஏற்றுமதி ஆகின்றன. முதலில் கூறிய இரண்டு பெரும் அம்சங்களை கவனிப்போம்.

### பொருளாதாரம்.

(1) கிழக்கு இந்திகளும் பிரிடிஷ் மலேயாவும் ரப்பரை ஏகபோகமாக உடையன. ஆனதால்தான் இவற்றில் அமெரிக்காவுக்கு மிக்க அக்கரையுண்டு.

(2) கிழக்கு இந்திகள் வருஷம் ஒன்றுக்கு 75,00,000 டன் வடிகட்டாத மண்ணெண்ணெயை, விளைவிக்கின்றன. உலகினில் இவைகள் தான் கருப்பஞ்சர்க்கரை, தேங்காய் எண்ணெய், புகையிலை, க்வினைன், வாசனைத் திரவியங்கள், இவைகளை இரண்டாவதாக ஜாஸ்தியாக ஏற்றுமதி செய்யும் தேசங்கள்.

(3) யுத்தத்தில் அவசியமான 'பாக்ஸைட்' என்ற பொருளை அவைகள் விளைவிக்கின்றன.

(4) இதுவரை விருத்தி செய்திருப்பதைவிட அவைகளில் எவ்வளவோ பன்மடங்கு ஆதாரங்கள் இருக்கின்றன.

**யுத்த தந்திரம்.**

(1) தூரத்திய கிழக்குக்கும் இந்தியா உள்பட தென் ஆசியாவுக்கும் அவை தான் கோர்வை.

(2) சீனா, ஜப்பான், ஆஸ்திரேலியா, அமெரிக்கா, இந்தியா, மத்தியகிழக்கு, ஐரோப்பாவுக்குக்கூட பிரியும் வியாபார மார்க்கங்கள் இங்கு ஒன்றுகூடி, இங்கிருந்துதான் மறுபடியும் பிரிகின்றன.

(3) இந்தக்கடல் மார்க்கத்துக்கு பதிலாக வேறு மார்க்கங்கள் ஸைபீரியன் ரயில் பாதையும், பர்மா ரோடும்தான். இவைகளின் உபயோகங்கள் மிக்க குறைவானவை; இவைகளின் செலவுகளும் ஜாஸ்தி.

(4) ஆனதால், நெதர்லாந்து கிழக்கு இந்திகளை ஆதிக்கம் கொண்ட வல்லரசு இந்திய மஹாசமுத்திர வியாபாரத்தையும், தூரக்கிழக்கையும், ஆஸ்திரேலியாவையும் ஆதிக்கம் வஹிக்கும் என்று சொல்வதில் மிகையில்லை.

## கொள்ளைப் பார்வை.

ஜப்பானின் தற்போதைய தெற்குப்பாய்ச்சலின் முக்கிய நோக்கம் என்.ஈ.ஐ. என்று இரண்டு கோளங்களிலும் தெரியும். அதை ஜப்பான் ஒளிவுமறைவு செய்யவில்லை. இதை அடைவதில் அநேகந்தடவை அது மக்குணமடைந்தாலும் சமீபத்திய ருஷ்ய ஜப்பானிய உடன்படிக்கை சாம்ராஜ்ஜிய பித்துப்பிடித்த மஞ்சக்காரர்களுக்கு ஒரு உற்சாகமூட்டியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை ஜப்பானின் முக்கிய நோக்கங்கள் இவை:—

(*a*) தன்னிடமில்லாத ரப்பர், எண்ணெய், பாக்ஸைட் இவைகளின் ஸப்ளைகளை என். ஈ. ஐ.-யிலிருந்து அடைவது.

(*b*) தன் தொழிற் சாமான்களுக்கு சந்தை தேசங்கள் அடைவது.

(*c*) தன் உபரி ஜனத்தொகைகளுக்கு இருப்பிடம் அடைவது.

(*d*) தன் நாட்டிலுள்ள பணக்கார பிரத்தியேக வியாபார கடைகளுள் வியாபாரம் செய்து கொள்ள லாபமடைய புது தேசங்கள் அடைவது.

(*e*) இந்திய, பஸிபிக் மஹாசமுத்திரத்திலுள்ள வியாபாரத்தில் ஆதிக்கம் பெறுவது.



இந்த நோக்கங்களும் ஜப்பானுக்கு முன்பே கைகூடியிருக்கும் (1) சிங்கப்பூரில் பெரிய பிரிடிஷ் கோத்தளம் அமைக்கப்பெற்றிராவிடில்; (2) பிரிடனுடன் டச்சுக்காரர் ஒப்பந்தம் செய்து கொண்டிராவிடில்.

ஜப்பான் ஏற்கனவே மூன்று முயற்சிகள் செய்தது:—

(*a*) 1940 ஆரம்பத்தில் ஜெர்மனி ஹாலந்தைப்பிடித்தபொழுது நாஸிகள் என். ஈ. ஐ-யைப்பிடிக்க முயன்று தவறினர்.

(*b*) 1940-ல் பிறகு என். ஈ. ஐ-யை ஜப்பானியர் தங்கள் க்ஷேமவட்டாரத்தில் சேரச்சொன்னார்கள். (இதன் அர்த்தம்—ஜப்பானுக்கு ஏராளமான ரப்பரும் எண்ணெயும் அனுப்பு என்பது.)

(*c*) 1941 பிப்ரவரியில் லண்டனிலிருக்கும் ஹாலந்து கவர்ன்மெண்டைப் புறக்கணித்து, ஜப்பான் நேராடியாக என். ஈ. ஐ-யை உருட்டி மிரட்டி, தனக்கு சுரங்கந்தோண்டும் உரிமை வேண்டும், மீன் பிடிக்கும் உரிமைவேண்டும், ஜப்பான் வியாபாரிகளுக்கு உரிமைகள் வேண்டும் என்று கேட்டது.

சம்பந்தப்பட்ட வல்லரசுகளின் நடவடிக்கைகளும் சுறுசுறுப்பாயிற்று. 13—2—41ல் ஆஸ்திரேலிய யுத்த சபையார் 'மிக்கக்கவலைக்கிடமான நிலைமை ஏற்பட்டிருப்பதாக' வெளியிட்டார்கள். பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் அட்மிரல் நோமூராவிடம் 'பஸிபிக்கில் யுத்தத்தில் இறங்கவேண்டிவரினும் பிரிடனுக்கு அமெரிக்காவின் உதவி நீடிக்கும்' என்று வெளியிட்டார். சிங்கப்பூருக்கு பிரிடிஷ் துருப்புகள் சென்றன. 19—2—41ல் ஆஸ்திரேலியத் துருப்புகளும் அங்கு சேர்ந்தனர்.

பலன்.—சென்ற ஒன்றிரண்டு மாதங்களாக ஜப்பான் தன் பழைய வியாபார உறவுகளுக்கு திரும்பிவிட்டது. தன்நேசபாவ எண்ணங்களை பிரமாதமாக வெளியிடுகிறது. இவற்றிடையே இரண்டு டச்சு மந்திரிகள், டாக்டர் வான் கிளிப்பென்ஸ், எம். வால்டர் இருவர்களும் வாஷிங்டன் வழியாக என். ஈ. ஐ-க்குப் போயிருக்கிறார்கள்.

## பிரெஞ்சுக்காரர்களின் உணர்ச்சி.

## வெற்றிபெற்ற ஜெர்மனியின் “தாராளம்”.

## குயிஸ்லிங்குகளுடையவும் ஜனங்களுடையவும் மனப்பான்மை.

(காலின் கூட் என்பவர் சமீபத்தில் பிரிடிஷ் ஒலிபரப்பில் பேசியது.)

சென்ற வேனிர் காலத்தில் பிரான்ஸ் விழுக்காடு அடைந்ததற்குக் காரணம் எதுவாயிருந்தாலும், பிரான்ஸ் விழுந்துவிட்டதென்பது நிச்சயம். பிரான்ஸுக்கு பூராவானதும், கொரேமானதுமான ராணுவத் தோல்வியும் ஏற்பட்டுவிட்டது. பூராவான யுத்தம் என்றால் அதிலிருந்து மூன்று வகையான பலன்கள்தான் ஏற்படக்கூடும். பூர்ணமான ஜயம், ஓய்வு (இது மத்யகாலத்தில் ஏற்படக்கூடியது) அல்லது பூர்ணமான தோல்வி. பிரெஞ்சு தேசம் பூராவான தோல்வி அடைந்தது.

பிரெஞ்சுக்காரரிடம் பாக்கியிருந்த சக்திகள் பிரெஞ்சுக் கடற்படையும் பிரெஞ்சு சாம்ராஜ்ஜியமும்தான். இவைகளை அது சரியானபடி உபயோகிக்குமா அல்லது அவைகளையும் சங்கடத்தில் மூழ்கடித்து சத்துருக்களால் நசுக்கப்படும்படி செய்யப்போகிறதா?

ஓரானில் நடந்த கெடுதலுக்கு இந்த சந்தேகம்தான் காரணம். ஓரானில் பிரெஞ்சு மத்யதரைக்கடற்படையின் முக்கியமான சதுரவ்யூகத்தை நாம் உபயோகமற்றதாகச் செய்தோம். நாம் ஏற்கனவே இதற்கு வேறுபாடான பல வகைகளைச் செய்து பார்த்தோம். இந்த ஓரான் வைபவத்தின் பொழுது வேறு மார்க்கங்கள் இருந்திருந்தால் இந்த சம்பவத்தை நாங்கள் செய்திருக்கவே மாட்டோம்.

ஆகையால் உத்தரவுகள் விடுத்தவர்களின் மனதில் கொஞ்சமும் சந்தேகமன்னியில் இந்தச் சம்பவத்தின் பலன் விபரீதமாக முடியுமென்றும் பிரெஞ்சு ஜனங்களுக்கு இது பொருக்கமுடியாத அதிர்ச்சியை உண்டாக்குமென்றும் தோன்றிற்று. ஓரான் சம்பவத்தைப் பற்றி, அங்கே பிரெஞ்சுக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டனவென்றும், பிரிடிஷ்காரர்களால் பிரெஞ்சுக்காரர்கள் கொல்லப்பட்டனரென்றும் சொன்னதைத்தவிர அவர்களுக்கு வேறு ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

அதே காலத்தில் “ஓரானை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்” என்று விளம்பர பத்திரிகைகள்மூலம் தேசம் பூராவும் ஜெர்மானியர்கள் பறையறைவித்தார்கள். அன்றிரவே ஜனங்கள் ஓரான் என்னும் வார்த்தையை அழித்துப்போட்டு “ஓரானை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்” என்பதற்கு பதிலாக “ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்” என்ற வார்த்தைகளை மட்டும் மிஞ்சும்படி செய்தது ஜனங்களின் புத்திசாலித்தனத்தை விளக்கிக் காட்டுகிறது.

பிரெஞ்சுக்காரர்களின் அநிச்சயத்தினால் ஏற்பட்ட ஓரான் சம்பவத்தைக் காட்டிலும் தோல்வியின் பயன்கள் வெகுதூரம் எட்டிவிட்டன. பிரெஞ்சுக்காரர்களின் விழுக்காட்டினால் ஏற்



பட்ட ஒரு அழுக்கான கதையின் போக்கு யாதெனில் ஜெர்மனியில் 15 லக்ஷம் பிரெஞ்சுக் கைதிகள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவர்கள் பிரான்ஸின் சேனையில் நன்றாய் யுத்தம் செய்யக்கூடியவர்கள் மட்டுமல்ல. அவர்கள் நல்ல இளமைப் பருவமுள்ளவர்கள். நல்ல தொழிலாளிகள். அவர்கள் பிணையாளிகள். இவர்களைக் காவலில் வைத்திருப்பதிலிருந்து ஜெர்மானியர்கள் பிரெஞ்சு தேசத்தை இப்பொழுதும் வரும் காலத்திலும் ஒடுக்கிவிட வேண்டுமென்று தீர்மானமாக ஏற்பாடுகள் செய்கிறார்களென்பதற்கு இது ஒரு அடையாளம்.

தோல்வியினின்றும் வெளிப்படையாகத் தெரியவருகிற பயனென்னவென்றால், பிரான்ஸ் தேசத்தின் செழிப்பான பாகம் முழுவதையும், அட்லாண்டிக் மஹாசமுத்திரக் கரையோரங்களையும் எதிரிகள் ஆக்கிரமணம் செய்துவிட்டார்கள். இந்நிலைமையானது பிரான்ஸ் பொருளாதார நிலைமையை சீர்படுத்துவதற்கும் தேசீய ஆர்வத்தை உண்டாக்குவதற்கும் செய்யக்கூடிய முயற்சிகளுக்கு இடையூறாக இருக்கக்கூடுமென்பதைப்பற்றி தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம்.

என்னுடைய நிகழ்ச்சியில் அடிப்படையாக மற்றொரு சமாசாரத்தை அறிவிக்க விரும்புகிறேன். நமது நாட்டில் வெளியாகும் பத்திரிகைகளில் பிரெஞ்சுக்காரர்களைப்பற்றி, இவர் பிரிடிஷ் கக்ஷியை ஆதரிக்கிறவரென்றும் இவர் பிரிடிஷ் கக்ஷிக்கு எதிரிடையாகயிருப்பவரென்றும் தலையங்கங்கள் வெளியாகுகின்றன. இவை சரியான பாகுபாடு இல்லையென்று நான் சொல்லுகிறேன்.

அவர்கள் பிரெஞ்சுக்காரரைச் சேர்ந்தவர்களா, அல்லது பிரெஞ்சுக்காரருக்கு எதிரிகளா என்று பரிசோதித்து முடிவுக்குவரவேண்டும். இம்மாதிரி கவனித்தாலும் மேலே சொன்னமுடிவுக்குத்தான் வரக்கூடும். ஏனெனில் முடிவில், பிரெஞ்சுக்காரருடன் நேசமாயிருப்பவர்கள் பிரிடிஷார் சார்பாயுள்ளவர்களாக ஆகிவிடுவார்கள். இது அவர்கள் அபிப்பிராயப்படி இருந்தாலும் இல்லாவிட்டாலும் பாதகமில்லை.

நாம் இப்பொழுது முக்கியமான விஷயத்தைப் பார்ப்போம். பிரான்ஸில் நடக்கும் சம்பவங்கள் விசித்திரமாக ஒன்றுக்கொன்று வேறுபாடாக இருக்கின்றன. உதாரணமாக, பிரான்ஸில் உண்மையாகவுள்ள லவாலும், அவனைச் சேர்ந்தவர்களுமான குயிஸ்லிங்குகளும் ஒரு புதிய வகுப்பை ஏற்படுத்த முயன்றார்கள். இதை ஆதாரமாகக்கொண்டு ஜெர்மானியர்கள் பிரான்ஸ் தேசத்தை உரிஞ்ச ஆரம்பித்து விட்டார்கள்.

ஜெர்மனியின் ஆதிக்கத்தின்கீழ் இந்த வகுப்பு ஏற்படுத்தப்பட்டது. ஆயினும் இதில் 15,000 நபர்கள்தான் சேர்ந்துகொண்டார்கள். மற்றெந்த இயக்கத்திலும் இம்மாதிரியாகக் குறைவாக மெம்பர்கள் இருந்திருக்க முடியாது.

சென்ற வருஷத்தில் திடீரென்று பிடேன் லவாலைத் துரத்திவிட்டார். அவன் தான் சுகமடைவதற்கும் மறுபடியும் தன் வேலையை அடைவதற்கும் ஜெர்மன் சிநேகிதர்களைச் சரண் புகுந்தான். அவனை மறுபடியும் வேலையில் அமர்த்த அவர்களால் இயலவில்லை. இந்த சம்பவம் இக்கதையின் ஒரு அம்சம்.

பிரான்ஸ் ஸமஸ்தானத்திலுள்ள முக்கியமான உத்தியோகங்களுக்கு வரிசையாக ஒரு ஊர்வலம்போல சில கோரமான பிசாசுகள் நியமிக்கப்பட்டார்கள். கடைசியில் கப்பற்படைத் தலைவரான டார்லான் என்பவர் எல்லா இலாக்காக்களுக்கும் மந்திரியாக அவதரித்து, ஒரேகாலத்தில் எல்லா உத்தியோகங்களிலுமமர்ந்து வந்தார். அவர் இப்பொழுது விஷிக்கும் பாரிஸ் நகரத்துக்கும் ஓடிக்கொண்டு, எதிரிகளோடு ஒத்துழைப்பதற்குத் தயாராகிக்கொண்டு வருகிறார். பிரெஞ்சு சாம்ராஜ்ஜியத்திலுள்ள சமாதான கோஷ்டிகளில் இதாலியர்களுக்குப் பதிலாகவோ அல்லது இதாலியர்களோடு சேர்ந்தோ வேலை செய்ய ஜெர்மானியர்களுக்கு அனுமதி கொடுத்து வருகிறார். பகிரங்கமாகவும் பிரிடிஷாரைக்காட்டிலும் ஜெர்மானியர்கள் தாராளமான மனதுள்ளவர்களென்றும், பிரான்ஸிலிருந்து அவர்கள் திருடிப்போன உணவுப்பொருள்களை ஜெர்மானியர் பிரான்ஸுக்குத் திருப்பிக் கொடுத்து விட்டார்களென்றும், பிரிடிஷார்கள் பிரான்ஸ் சம்பந்தமாய் முற்றுகையைக் கைப்பிடித்து விட்டார்களென்றும் அவர் வெளியிடுகிறார்.

வாஸ்தவத்தில் ஜெர்மானியர்கள் ஒன்றையும் திருப்பிக்கொடுக்கவில்லை. பிரான்ஸின் இரண்டு பாகங்களுக்குள் சாமான்களை பரிவர்த்தனை செய்து கொள்ளமட்டும் அவர்கள் இணங்கி இருக்கிறார்கள். பாரிஸில் ஜெர்மன் ஆதிக்கத்துக்குட்பட்ட பத்திரிகையில், மூன்று மாதங்களுக்குமுன் ஆரம்பிக்க உத்தேசித்த லவாலின் நோக்கங்களையே கடற்படை அதிபதியான டார்லான் அனுஷ்டித்து வருகிறானென்றுஎழுதப் பட்டிருக்கிறது.

போராசைகொண்ட டார்லான், தாத்காலிகமாக, காரியங்களைச் சாதித்துக் கொள்ளவேண்டுமானால் ஜெர்மன் எஜமான்களோடு ஒத்துழைக்கவேண்டியதுதானென்று தீர்மானம் செய்துவிட்டானென்பதில் சந்தேகப்பட வேண்டியதில்லை. இந்த நிலை அவர்களுடைய உண்மையான எண்ணங்களுக்கு ஒத்து இருக்கிறதாவென்பது சந்தேகமாயிருக்கிறது. ஆயினும் அவர்களுடைய வெளிப்படையான காரியங்கள், அவர்களில் தைரியமுள்ளவர்களும் அல்லது சாதாரணமாயுள்ளவர்களும் சொல்லுகிறபடி, அவர்களின் அந்தரங்க அபிப்பிராயத்துக்கு வேறுபாடாகவே இருக்கின்றன. விஷி அரசாங்கத்தாரோடு ஒத்துழைக்கும் உத்தியோகஸ்தர்களின் அபிப்பிராயங்களுக்கும் ஜனங்களின் அபிப்பிராயங்களும் தெளிவான வித்தியாசங்கள் இருக்கின்றன.

மார்ஷல் பீடேன் சம்பந்தப்பட்டமட்டில், நாம் மதிக்கக்கூடியபடி, ராஜி ஒப்பந்தத்தில் அவர் கையெழுத்துப் போட்டுவிட்டபடியால் அதன் ஷரத்துகளைப் பூர்த்திசெய்யமட்டும் ஒப்புக்கொள்ளுவாரென்றும், ஜனங்களின் நிலைமையை சீர்திருத்தத் தேவையான பொருளாதார ஏற்பாடுகளைச் செய்வதில்மட்டும் ஒத்துழைப்பாரென்றும், சண்டைபோடும் ஜெர்மானியரோடு ராஜீய விஷயங்களில் கலந்து வேலை செய்ய சம்மதிக்க மாட்டாரென்றும், அப்படி சம்மதித்தால், தான் சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிட்டுத் தடுக்கவேண்டி உத்தேசித்த ரத்தவெள்ளம் மறுபடி உண்டாகிவிடுமென்றும் அவர் அறிந்திருக்கிறாரென்றும் சொல்லலாம்.



இதே மாதிரியான மனோநிலையை கடைசி வரையில் நிலை நாட்டிவிடுவாராவென்று சந்தேகம் உண்டாகிறது. இதில் அவர் இரண்டு அபாயங்களை எதிர்பார்க்கவேண்டும். முதலாவது, ஜெர்மானியர்களின் ஆத்திரம். இது, ஜெர்மானியர்களுக்குக் காரியங்கள் கெடுதலாக சம்பவிக்க ஆரம்பித்தால் கோபமாக மாறிவிடும். இரண்டாவது, தன்னுடன் வேலை செய்பவர்களின் பேராசையும், பழிவாங்கும் எண்ணமும், அல்லது அவர்களின் முட்டாள்தனமும். ஆயினும் இந்த இரண்டு அபாயங்களுக்கும் எதிர் முறைகளிருக்கின்றன.

ஜெர்மானியர்களின் ஆத்திரத்தை எதிர்க்க பிரெஞ்சு கடற்படையையும் பிரெஞ்சு சாம்ராஜ்ஜியத்தையும் கடைசி சாதனமாக உபயோகப்படுத்தலாம். இவ்விரண்டையும், பிரிடிஷ்காரர்களின் மேன்மையினால், ஜெர்மானியர்கள் கைப்பற்றக்கூடவில்லை. இதன் காரணமாகத்தான், இது வரையில் பிரான்ஸில் நடக்கும் நிகழ்ச்சிகளில் தங்கள் பலத்தைப் பிரயோகம் செய்யாமல் ஜெர்மானியர்கள் நிறுத்திவைத்திருக்கிறார்கள். பிரெஞ்சு குயிஸ்லிங்குகளுக்கு எதிராக பிரெஞ்சு ஜனசமூகமிருக்கிறது.

இப்பொழுது இந்த ஜனங்கள் என்ன செய்கிறார்களென்றும், அவர்கள் எவ்விதம் நடத்தப்படுகிறார்களென்றும் கவனிப்போம். பிரான்ஸிலிருந்து வெளிவரும் கடிதங்களிலிருந்தும், ஜனங்களிடமிருந்தும் ஏராளமான சாக்ஷியம் கிடைத்திருக்கிறது. நான் அவைகளின் ஆதாரத்தின்பேரில்தான் உங்களுக்குச் சொல்லப்போகிறேன்.

முதலாவதாக, நல்லநடத்தைகளால் ஜெர்மானியர்கள் பிரெஞ்சுக்காரர்களை சமாதானப்படுத்த முயன்றது பிரயோஜனமில்லாமல் போய்விட்டது. கொள்ளைக்காரன் இப்பொழுது மரியாதையாக நடந்துகொள்ளுகிறான். ஆயினும் அவன் ஏராளமாகக் கொள்ளையடித்து விட்டான். பிரான்ஸில் ஜெர்மானியர்கள் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளின் செலவு திட்டம் ஒரு வருஷத்திற்கு 8,270 லக்ஷம் பவுன்களாகக் கணக்கிடப்படுகிறது. இது பிரான்ஸின் யுத்தத்துக்கு முன்னால் ஏற்பட்ட வரவு செலவு திட்டத்திற்கு இரண்டு மடங்காகவும், யங் (Young) ஏற்பாட்டின்படி நஷ்டப் பூர்த்திக்காக ஜெர்மனி கொடுக்கும்படி ஏற்பட்டு, ஜெர்மனியானது அதிகமாக ஏற்றுமதிகள் ஏற்பட்டாலொழிய தன்னால் கொடுக்க இயலாது என்று சொல்லிய தொகைக்கு மூன்று மடங்குகளுமுள்ளது.

பிரெஞ்சுக்காரர்கள் ஏற்றுமதியிலிருந்து கிடைக்கக்கூடிய மிச்சத்திலிருந்து ஒன்றும் கொடுக்கமாட்டார்கள். ஏனென்றால், அவர்கள் செய்யும் ஏற்றுமதிப் பொருள்களெல்லாம் காணிக்கைகளே தவிர வியாபாரத்துக்கல்ல. ஆக்கிரமணமில்லாத பிரெஞ்சு தேசத்தில் இறக்குமதிச் சரக்குகளைக் கூட அவர்கள் வைத்துக்கொள்ளக் கூடவில்லை. துறைமுகங்களிலிருக்கும் ஜெர்மானிய, இதாலிய கோஷ்டிக்காரர்கள் சாமான்களின் ஒரு சிறிய பாகத்தை மட்டும்தான் அவர்களுக்குக் கொடுக்கிறார்கள்.

பிரெஞ்சுதேசத்திற்கு, முற்றுகையை மீறி நாம் அனுப்பியிருக்கும் இரண்டு கப்பல்கள் நிறைந்த மாவுதான் முழுவதும் போய்ச் சேர்ந்திருக்கிறது.

இந்த மாவுப்பொருள்களை ஆக்கிரமண பிரெஞ்சு தேசத்தில் அமெரிக்காவின் ஆதரவின்கீழ் பங்கிட்டுக் கொடுக்கிறார்கள். ஜெர்மானியர்களின் கொள்ளையாலும், சென்ற வருஷம் பிரான்ஸில் ஏற்பட்ட விளைவின் குறைச்சலாலும், பிரான்ஸின் உணவுப் பொருள்கள் குறைந்து கொண்டே வருகின்றன. இதோடு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருகிறது.

இதிலிருந்து ஜெர்மானியர்கள் மற்றொரு விதமாகத் தொந்தரவு செய்ய ஆரம்பித்து விட்டார்கள். பிரெஞ்சு தொழிற்சாலைகளுக்கு உருக்கப்படாத சாமான்களை அனுப்பி, அவைகளை ஜெர்மனிக்குத் தேவையான சாமான்களைத் தயாரிக்க உபயோகப்படுத்த வேண்டுமென்ற நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சமாதான உடன்படிக்கைக்கு இணங்கியவர்கள், அல்லது இணங்கும்படி செய்யப்பட்டவர்களால் இம்மாதிரியான பொருளாதார அடிமைத்தனம் ஏற்படுமென்று ஒரு பொழுதும் எண்ணப்படவில்லை. ஜெர்மனியால் தோல்வி ஏற்படுவதின் பயன்கள், தோல்வி அடைந்தாலொழிய, முன்னாகவே அறிந்து கொள்ளக் கூடியவையல்ல, அவைகள் சம்பவிக்கும் வரையில் அவைகளை நம்புகிறார்களில்லை. ஒருவரும் இதை மறந்து விடக்கூடாது.

கடற்படை அதிபதி டார்லான் சொன்ன ஜெர்மன் உதாரகுணம் இவ்வளவுதான். அவன் அறிந்து கொள்ளாதபோனாலும் ஜனங்கள் உண்மையை அறிந்து விட்டார்களென்பதற்கு நேரான ருஜு கிடைத்திருக்கிறது. இரண்டாவதாக, ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ள பிரெஞ்சுக்காரர்கள் ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் துறைமுகங்களின் பேரில் வெடி குண்டுகள் போடுவதைப் பற்றி கோபிக்கிறார்களில்லை. இந்தத் தாக்குதலை ஜெர்மானியர்கள் தடுக்கக் கூடவில்லையென்று அவர்களை பிரெஞ்சுக்காரர்கள் பரிகசிக்கிறார்கள். ஜெர்மானியர்களை "கடற்பச்சை விரும்பத் தகாதவர்கள்" என்று அவர்கள் அழைக்கிறார்கள்.

நம்முடைய விமானங்கள் பகலில் பாய்ந்து தாக்குவதைப்பார்த்து அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள். சமாதான உடன்படிக்கைக்குப் பிறகு பிரான்ஸிலிருந்து தப்பி வந்த ஒவ்வொரு பிரெஞ்சுக்காரனும், பிரிட்டிஷ்காரனும் அங்கே நமக்கு உதவி செய்திருப்பதைப்பற்றியும், இதைச்செய்வதற்கு அவர்கள் அனுபவித்த கஷ்டங்களைப்பற்றியும் ஏராளமான கதைகள் சொல்லுகிறான். நாம் வெற்றிபெறப் போகிறோமென்ற நம்பிக்கையின்பேரில் ஒவ்வொருவரும் எவ்வளவு தியாகம் செய்திருக்கிறார்கள் என்று அங்கிருந்து வரும் கடிதங்களில் வெளிப்படையாகவோ அல்லது ஜாக்கிரதையோடுகூடியதாயுள்ள வாக்கியங்களில் காணப்படுகின்றன. இந்தக் கடிதங்கள் ஒரு சிறிய பகுதியின் அபிப்பிராயங்கள்தான். இன்னும் வேறுபாடுள்ள அபிப்பிராயங்களுள்ள அநேக பிரெஞ்சுக்காரர்கள் இருக்கிறார்களென்று நான் சொல்லுவேன்.

தோல்வியடைந்துவிட்டோமே என்று வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுதும், எதிர்க்கவேண்டியது அவசியமென்று தீர்மானம் செய்தவர்கள் சரியான அபிப்பிராயமுள்ளவர்களென்று ஒருவன் நினைக்கும் பொழுதும், ஒருவனுடைய மனோ நிலையானது



சரியான வழியில் செல்லுகிறதில்லை. தங்களுடைய விடுதலையானது மற்றொருவரிடமிருந்துதான் ஏற்படக்கூடுமென்பதை அவர்கள் ஒரு பொழுதும் அங்கீகரிக்கமாட்டார்கள். எதிரியானவன், அடக்குமுறையாலும், அர்த்த பேதத்தாலும், பிரிட்டனிடம் அருவருப்பும், அவமதிப்பும் ஏற்படும்படியாக பிரான்ஸில் இயக்கமுண்டாகும்படி ஸதாகாலமும் செய்து வருகிறான்.

ஆயினும் சத்துருவினால் மறைக்க முடியாத சில விஷயங்களிருக்கின்றன. இவைகளில் முக்கியமாக, நாம் இன்னும் முறியடிக்கப்படவில்லை. நாம் மேலும் மேலும் வலுவாக அடித்துக் கொண்டிருக்கிறோம். ஆகையால், பிரான்ஸின் விழுக்காட்டிற்குப் பிறகு நாமும் தோல்வியடைந்து விடுவோமென்ற சந்தேகத்தின்பேரில் பிரான்ஸில் ஏற்பட்ட நிர்க்கதியான நிலைமையானது இப்பொழுது மாறுதலடைந்தும், ஜனங்களின் தலைவர்களைக்காட்டிலும் ஜனங்களின் மனதிலிருந்து விலகிக் கொண்டும் வருகிறது.

ஆயினும் ரொம்பவும் ஜாஸ்தியாக எதிர்பாராதீர்கள். அங்கே மறைவாக ஆயுதங்களிருக்கலாம். தைரியமுள்ள ஜனங்களுமிருக்கலாம். ஆயினும் ஆயுதங்களும் வெளிவர முடியாது. ஜனங்களும் சத்துருவின் குரவளைப்பிடிப்பு நீங்கினாலொழிய சண்டை செய்ய முடியாது.

சென்ற அக்டோபர் மாதத்தில் பிரெஞ்சு ஜனங்களுக்கு ஒலிபரப்பில் விடுத்த திரு. சர்ச்சிலின் புத்திமதியை ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். "தூங்குங்கள்" என்று அவர் சொன்னார். இந்த வார்த்தையில் விசேஷ அர்த்தமுண்டு. "தூங்குங்கள். காலையில் பூர்ணமான பலத்துடன் எழுந்திருங்கள். ஏனென்றால் பொழுது கண்டிப்பாய் விடியக்கூடும்" என்று சொன்னார்.

நிச்சயமாய் இருள் அகன்று பொழுது விடியப்போகிறது. அது சம்பவிக்கும் பொழுது பிரான்ஸை ஜயித்தவர்கள், பிரான்ஸை பிறர் கையில் காட்டிக் கொடுத்தவர்கள் இவர்களுடைய இழிவான பிரதிபிம்பங்கள் எல்லாம் மறைந்துவிடும்.

---

## எதிரிகளின் போக்குவரத்து சாதனங்களை தடுமாற்றமடையும்படி செய்வது.

## பிரிடிஷ் தாக்குதலின் முக்கிய நோக்கம்.

## போக்குவரத்துக் கால்வாய்களையும், இருப்புப்பாதைகளையும் பிரிடிஷ் ஆகாய விமானங்களால் தாக்குதல்.

[Wing சேனாதிபதி L. V. பிரேசரால் எழுதப்பட்டது.]

நவீன சேனைகள், எந்த தேசத்திலிருக்கின்றனவோ அந்த தேசத்திலுள்ள பொருள்களால்மட்டில் உத்ஜீவித்திருக்க முடியாது. எல்லாவிதமான பொருள்களும், கிரமப்படியும், காலதாமதமன்னியிலும் அந்த யந்திரசாதனம்பெற்ற சேனைகளுக்கு வந்துகொண்டேயிருக்கவேண்டும்.

இந்தக் காரணத்தால் சத்துருக்களின் போக்குவரத்துகளை தடைப்படுத்துவது பிரிடிஷ் தாக்குதலின் முக்கிய லக்ஷியமாகி விடுகிறது. பலன்கள் கண்கூடாக உடனடியாகக் கிடைத்துவிடும் என்பது எதிர்பார்க்க முடியாததுதான்.

ஒரு பெரிய யுத்த தளவாட உற்பத்திச் சாலையைத்தாக்கி எரிப்பதால் ஏற்படும் மகத்தானபலன் மாதிரியும் விளைபொருள்கள் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் ஸ்தலங்கள் தாக்கப்பட்டு,வானமளாவி தீப்பற்றி எரியும்படி செய்வதுபோலவும் நேத்ரானந்தம் கொடுக்காது இவைகளும் முக்கிய இலக்குகள்தான். இருப்பினும் போக்குவரத்து சாதனங்கள் ஜீவாதாரமானவை.

ஜெர்மானிய போக்குவரத்து சாதனங்கள் அடியில்கண்ட கிரமப்படி முக்கியமானவை. கால்வாய்கள், இருப்புப்பாதைகள், ரஸ்தாக்கள், கடல்கள், ஆகாசவீதி. பிரிடனைப்போலல்லாமல், ஜெர்மனியில் பளுவானவும் அழுகாதவுமான பொருள்களை லகுவாய் எடுத்துச்செல்லுவதற்கு லாயக்காக அநேக கால்வாய்களிருக்கின்றன. அவைகள் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு வெகு பிரதேசங்களையும் வியாபித்துக்கொண்டிருக்கின்றன. கால்வாய்களும், மற்ற ஜலப்போக்குவழிகளும், பெரிய நதிகளுடன் இணைக்கப்பட்டு, பெரும் உள்நாட்டு துறைமுகங்களில் சேருகின்றன.

அம்மாதிரி துறைமுகங்களில் டூயிஸ்பர்க் ரூர் துறைமுகம் என்பது மிகவும் பெரியது. அது ஒரு ஆற்றங்கரைத் துறைமுகம். அது டார்ட்மண்ட் கால்வாயும், மித்லாண்டு கால்வாயும், ரைன், ரூர், எம்ஸ், வீசர், இந்த நாலு நதிகளையும், சந்திக்கும் ஸ்தலத்திலிருக்கிறது. ஒரு வருஷத்தில் அந்தத் துறைமுகத்தில் சராசரி 40,000 படகுகள் வந்து போகின்றன. நாளதுவரை நமது ராயல் விமானப்படை 39 தடவை இந்தத் துறைமுகத்தைத்தாக்கி குண்டுகள் வீசியிருக்கின்றன.

ஒரு பள்ளத்தாக்குக்கு குறுக்கே ஒரு கால்வாயைக் கொண்டுபோகும் இடங்களிலெல்லாம் ஜெர்மானியர் ஒரு ஜலக்கணவாய் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் பளுமாக் கால்வாயைப்போல் ஜலத்தைப்பூட்டி திறந்துபோகும் விதமாய் கால்வாய்களை அமைப்பதில்லை. இம்மாதிரி ஜெர்மானியர் செய்வது செலவைக் கம்மிப்படுத்துகிறது, போக்குவரத்தில் தவக்கம் உண்டு பண்ணுகிறதில்லை, மேலே சொல்லப்பட்ட டார்ட்மண்ட் எம்ஸ் கால்வாய், லிப்பே என்ற நதிமேல் போகும்பொழுதும் ஸ்டீவர், எம்ஸ் நதிகளை குறுக்கிடும்பொழுதும் இம்மாதிரி மூன்று ஜலக்கணவாய்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. எம்ஸ் நதிக்குக் குறுக்கே செல்லும் இரட்டை ஜலக்கணவாய்தான் எல்லாவற்றிலும் பெரிது.

ஜெர்மனியின் கால்வாய்ப் போக்குவரத்து அமைப்பு அதன் யுத்த தந்திரத்திற்கே ஒரு முக்கிய அம்சமாக ஏற்பட்டிருக்கிறது. பிரிடிஷ் வெடிகுண்டு விமானங்கள் அவைகளை வெகு குரூரமாய்த் தாக்கியிருக்கின்றன.

டார்ட்மண்ட், எம்ஸ் கால்வாய்—ஜீவாதாரத்தொடர்.



இந்தக் கால்வாய் ஜெர்மனியின் மேற்கு பிரதேசத்திற்கும் கீழ் பிரதேசத்திற்கும் போக்குவரத்துக்கு ஒரு கேந்திரமான தொடர்பு கொடுக்கிறது. ரூர் பிரதேசத்திலிருந்து இன்னும் பத்திரமான பிரதேசம் என்று கருதப்படும் மற்ற பிரதேசங்களுக்கு தங்கள் பெரும் தளவாட தொழிற்சாலைகளை ஜெர்மானியர் மாற்றும் பக்ஷத்தில் ஜலப்பாதைகள் மூலம் எடுத்து செல்லப்படும் சாமான்கள் அதிகரிக்கும். அப்பொழுது இந்தக் கால்வாய்ப் போக்குவரத்தும் மேலும் முக்கியத்வத்தையடையும்.

இந்தக் கேந்திர மத்யஸ்தானத்தின்பேரில் எப்படி விமானத் தாக்குதல் செய்கிறதென்று ஜாக்கிரதையாக யோசனை செய்யப்பட்டு வெகு ஜாக்கிரதையாக பிரிடிஷ் ஆகாச விமானப்படையால் அது தாக்கப்பட்டது. நல்ல நிலா வீசும் இரவில் விமானத் தாக்குதல் செய்யப்பட்டது. ஜலக்கணவாய்களின் பேரிலும், "ஸ்டாப்கேட்" என்ற பாகத்திலும் வெடிகுண்டுகள் வீசப்பட்டன. பிற்பாடு வேவு பார்த்ததில் ஜலக்கணவாய், ஜலமற்று கிடந்தது. படகுகள் சகதியில் பதிந்து கிடந்தன; கால்வாய்களின் பக்கங்களிலுள்ள வயல்களில் படகிலிருந்த பாரங்களை இறக்கிக்கொண்டிருந்தார்கள்.

கால்வாய்ப் போக்குவரத்துகளும் இருப்புப்பாதை போக்குவரத்தும் ஒன்றுக்கொன்று ஆதாரமாயுள்ளன. அவைகளில் யாதொரு சாதனம் பலஹீனமாகப் போகும் பக்ஷத்தில் மற்றொன்றுபேரில் உபரி பளு சுமத்தப்படுகிறது. கால்வாய்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தால் ரயில்வண்டிவழிகளில் வேலை உபரியாகி, போக்குவரத்து நேரம் கூடுகிறது. ரயில் பாதைகள் குதாவடையானால் கால்வாய்களில் படகு நெருக்கம் அதிகரிக்கிறது.

இயற்கையாகவே ஜெர்மனியிலுள்ள ரயில்பாதை சாதனங்களுக்கு யுத்த காலத்தில், கெடுதல்கள் ஏற்படக்கூடியவண்ணம் நிலைமைகள் அமைந்திருக்கின்றன. அந்த தேசத்தின் பூகோள அமைப்பே இதற்கு காரணமாகின்றது. தவிரவும், ஜெர்மானியர் ஏற்படுத்தியிருக்கும் திட்டத்தின்படி இவைகள் ஒன்றுக்கொன்று பிணைக்கப்பட்டிருப்பதால், ஒன்றுக்கு தீங்கு விளைவித்தால் மற்றொன்றுக்கு பலஹீனத்தை அதிகரிக்கிறது.

இம்மாதிரி நிலைமையால் சாமான்கள் போக்குவரத்துகள் சில இடங்களில் வெகுவாய்த் தடைப்பட்டு சொக்கழுத்து நெருக்கம் சில போக்குவரத்து சாதனங்களுக்கு ஏற்பட்டு தாராளமான போக்குகள் தடைபடுகின்றன. இம்மாதிரி சொக்கழுத்து நெருக்கடி ஏற்பட்ட ஸ்தலங்கள் அநேகம் ஏற்பட்டு விட்டன.

## ஹாம் என்ற சாமான் வகுக்கும் ஸ்டேஷன்.

கீழ் திசையிலிருந்தும் மேல் திசையிலிருந்தும் வரும் இருப்புப்பாதைகளைச் சேர்க்கும் முக்கியமான சந்தி இந்த ஹாம் ஸ்டேஷன்...நீர் மேல் செல்லும் வியாபாரத்திற்கு டார்ட்மண்ட் எம்ஸ் கால்வாய் ஜெர்மனிக்கு எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவு முக்கியமானது இந்த ஹாம் ஸ்டேஷன். இந்தச்

சாமான் வகுக்கும் கிடங்குகளில் நடப்பதென்னவென்றால் உள்ளே வரும் பார வண்டிகளை ரகம்வாரி பிரிப்பதைவிடு வேறு பாரம் ஏற்றுவதாவது இறக்குவதாவது கிடையாது. அதனால் அவ்விடத்தில் ஜரூர் ஜாஸ்தி தேவை. அதற்கு வெகு விமர்சையான யந்திர சாதனங்கள் ஜெர்மானியர்கள் ஏற்படுத்தினதிலிருந்து சாதாரண காலங்களில் வேலை நடக்கும் தோரணையை அறிந்து மற்ற இடங்களில் ஏற்படுத்தப்பட்டிருந்த சாமான் வகுப்பு வேலையை இவ்விடத்திற்கே மாற்றி விட்டார்கள். அதனால் பணமும் காலமும் மீதப்படுத்தப்பட்டது. ஆனால் எல்லா முட்டைகளையும் ஒரே கூடையில் போட்டவன் கதிபோல் அபாயம் அதிகரித்தது. கொஞ்சம் சேதம் ஏற்படினும் வரத்துப்போக்கை சுத்தப் படுத்த ஜாஸ்தியான காலதாமதம் ஏற்படுகிறது. வண்டிகள் சேதமாவதோடு இருப்புப் பாதைகளும் அழிக்கப்படுகின்றன.

பிரிடிஷ் விமானப்படை இந்தப் பிரமேயத்தை கைநழுவவிடவில்லை. ஜெர்மனியிலுள்ள வேறு எந்த இலக்கைக் காட்டிலும் இந்த ஹாம் இலக்கு அதிகத் தடவைகள் தாக்கப்பட்டிருக்கிறது. இதுபோலுள்ள இதர இலக்குகளும் ஜெர்மனியில் தாக்கப்பட்டிருக்கின்றன.

மத்திய ஐரோப்பாவின் இருப்புப்பாதை ஏற்பாட்டுக்கு பெர்லின் ஒரு நாபிஸ்தானமாக விளங்குகிறது. ரைன் நதியை இயற்கையாக கடப்பதற்கு சாதாரணமாயுள்ள கோலோன் நகரமும் படையெடுக்கப்பட்ட மற்ற பிரதேசங்களுக்கு மத்தியிலிருப்பதால், அதைத் தொடர்ச்சியாக வெடிகுண்டுகளால் நம்மவர்கள் தாக்கியிருக்கிறார்கள்.

சாதாரணமாக 8-மணி தேசாலத்திற்குள் காலி செய்யக்கூடிய சாமான்கள் ஒரு வார காலதாமதத்தில் காலி செய்யும்படி அவ்வளவு தாமதம் ஏற்பட்டது. இது ரயில் போக்குவரத்து சாதனத்தில் ஏற்படுத்தப்பட்ட கஷ்டம்.

ரஸ்தாப் போக்குவரத்து ஏற்பாடுகளும் அவ்வளவு முக்கியமான இலக்குகள் அல்ல. அவைகளில் ராணுவப் பாராக்களும் துருப்புகளும் நிறைந்திருந்தாலொழிய அவைகளின் பேரில் வெடி வீசுவது அவ்வளவு லாபகரமல்ல. துருப்புப் போக்குவரத்துக்களைப்பற்றி செய்திகள் சேகரித்துக்கொண்டு, பிரிடிஷ் விமானப்படையார் ரஸ்தாக்களை கவனித்து வருகிறார்கள். எப்பொழுதாவது பாலங்களையும் பெரிய ரஸ்தாக்களின் சந்திகளையும் வெடி குண்டுகளால் வீசுகிறார்கள். அடிக்கடி வெடி குண்டுகள் ரோட்டுகளில் வீசப்படுகிறதில்லை.

## வெகு ஸ்வல்பமான கடல் போக்குவரத்துகள்.

வியாபித்துக்கொள்ளப்பட்ட பிரதேசங்களிலுள்ள துறைமுகங்களுக்குள் ஒன்றுக்கொன்று உள்ள லேசான கரையோர போக்குவரத்தும், பால்டிக் கடலிலுள்ள போக்குவரத்தும் தவிர ஜெர்மனிக்கு வேறு கடல் போக்குவரத்துக் கிடையாது. ஸ்வல்பமிருக்கும் போக்குவரத்துகளும் ஆகாசத்திலிருந்து போடப்படும் கண்ணிகளாலும், இயந்திரத் துப்பாக்கி பிரயோகத்தாலும், வெடி குண்டு



களின் வீச்சுகளாலும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பால்டிக் கடலில் கண்ணிகளால் பல ஜெர்மன் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன. இரவுகளில் துணைக்காவல்களுடன்கூட உள்ள கப்பல் கூட்டங்கள் கடல் பிரயாணம் செய்கிறதில்லை. கீல் கால்வாயில் போடப்பட்ட கண்ணிகளால், நீண்ட காலமாய் அது உபயோகப்படாமல் மூடப்பட்டிருக்கிறது. கடல் போக்கு வரத்து ஜெர்மானியருக்கு நஷ்டமானதால் ரயில் போக்குவரத்துக்கு உபரியான வேலை மிகவும் பளுவுடன் அதிகரித்தது. ஒரு உதாரணம் கவனியுங்கள். இதாலிக்கு கடல் மூலம் சென்றுகொண்டிருந்த நிலக்கரி பூராவையும் ரயில் மூலம் ஜெர்மனி அனுப்புகின்றது.

ஜெர்மானியர்கள் ஆகாய விமானங்களில் அதிகமான சாமான்களை ஏற்றிச் செல்லும்படியான அசாத்திய அவசியம் ஏற்பட்டு விட்டது. ஆனால் பளுவான சாமான்களை ஏற்றி விமானத்தில் எடுத்துச் செல்லுவது மிகவும் பணவிரயமாக்கும் முறை. தவிரவும், நல்ல பலனைக்கொடுக்கும் முறையுமல்ல. நார்வேயில் சில பாகங்களுக்கு ஜெர்மானியரின் ஜங்கர் 52 என்ற விமானங்கள் துருப்புகளுக்கு வேண்டிய தேவைகளை ஏற்றிச் செல்ல உபயோகப்படுத்தப்படுகிறது. அந்த தேசத்தில் மற்ற போக்கு வரத்து சாதனங்கள் வெகு ஸ்வல்பம். பெட்ரோல் கூட ஆகாச மார்க்கமாய்த்தான் கொண்டு செல்லவேண்டும்.

போக்குவரத்து சாதனங்கள் ஓயாமல் தாக்கப்படுதலால், ஏராளமான பொருள் நஷ்டங்கள் உண்டு செய்யப்படுகின்றன. வாஸ்தவம்! பொருள்சேதம், காலக்கிரமேண, பழுது செய்து சீர்திருத்தி விடலாம். ஆனால் காலஹரணம் என்பது உண்டாக்கப்படுகிறதே அது ஜெர்மானியர்கள் பழுதுபார்க்க முடியாத பெருநஷ்டம். முக்கியமான தேவைப் பொருள்கள் செல்ல முடியாமல் தேக்கப்படுகின்றன. எண்ணெய் டன் கணக்காய் எரிக்கப்பட்டால் ஜெர்மானியர்களுக்கு நஷ்டம். அம்மாதிரியே வியாபாரப் போக்குவரத்து அடைபட்ட கால்வாயாலும், சின்னபின்னமாய் அலங்கோலப்படுத்தப்பட்ட துறைமுகத்தாலும், சில மணிகளுக்குள் செய்யக்கூடிய ரயில் பிரயாணங்கள் நாள் கணக்காய்த்தான் செய்ய முடியும்படி செய்யப்படுவதாலும், ஏராளமான நஷ்டங்கள் ஜெர்மானியருக்கு ஏற்படுத்தப்படுகின்றது.

---

## இதாலியில் ஜெர்மானியரின் சகஜமான ஆக்கிரமிப்பு. இதுபற்றி பொது மக்கள் அபிப்பிராயங்கள். "சரணம்புகுந்து செலவன்னியில் இந்தியாவைக் காணலாம்." "நாம் சுகமே இருக்கவேணுமானால் தோல்வி அடைய வேண்டும்."

பொது ஜனங்களின் தைரியம் எவ்விதம் யூகோஸ்லாவியாவுக்கு ஏற்பட்ட கஷ்டத்தை நிவர்த்தித்து இருக்கிறது என்பது சகஜமாகவே ஜெர்மானியர் இதாலியில் ஆக்கிரமித்து வருகிற தகவலிலிருந்து வெளியாகிறது. இதாலி தேசத்து வடக்கு பிராந்தியங்களில் உள்ள நகரங்களில் ஜெர்மன் ஐக்கிய உபகார

சங்கங்கள் பிரதிநிதிகளாகவும், உபயதேசங்களுக்குள்ளும் உத்தியோகஸ்தர்களை மாற்றிக்கொள்ளுவது என்ற வியாஜத்தின்பேரில் இதாலியில் அங்கங்குள்ள பெரிய வியாபார, தொழிற்சாலை, நிலயங்கள் இவைகளில் தொழிலாளிகளாகவும், இதாலிய விசேஷ தொழில் ஸ்தாபனங்களிலும் அதாவது டெலிபோன், தந்தி ஆபீஸ்கள், எலக்ட்ரிக் காரியாலயங்கள் இவைகளில் போதகாசாரியர்களாகவும், முக்கிய உத்தியோகஸ்தர்களாகவும், ரோம் நகரிலும் மந்திரி சபைகளில் அங்கத்தினர்களாகவும், (அதுவும் போஜனதார சிக்கன அனுஷ்டிப்பிற்காக, நிருவப்பட்டிருந்த இதாலிய மந்திரி சபைகள், இதாலிய பணக்காரர்களின் அசிரத்தையால் சரிவர நடத்தப்படவில்லை என்று, ஜெர்மானியர் குறைகூறி தாங்கள் அதில் அங்கத்தினர்களாக சேர்ந்திருக்கின்றனர்), எல்லா போலீஸ் நிலயங்களிலும் ஜெர்மன் "ஜெஸ்டாபோ"வைச் சேர்ந்தவர்கள் போலீஸாராகவும், ரோமிலுள்ள போலீஸ் படைக்கு எவ்விதம் சாம்ராஜ்ஜியப் போலீஸ் நடக்கவேண்டுமென்பதை கற்பிப்பதாக ஏராள சிப்பந்திகளாகவும், இவ்விதம் ஆக்கிரமிப்பு சகஜமாக செய்து இருக்கிறார்கள்.

இன்னும், தங்களால், ஜெர்மானிய நோக்கமுள்ள தங்கள் அதிகாரிகளை, நிராகரிக்கக் கூடாதிருந்தாலும், இதாலியப் பொதுமக்கள், ஜெர்மானியரின் ஆதிக்கத்தையும் ஆக்கிரமிப்பையும்பற்றி பல்வேறுவிதமாய் கூறிக்கொள்ளுகிறார்கள். மத்தியஸ்த நாட்டுப் பத்திரிகை நிருபர் ஒருவர் இது விஷயமாய் வெகு ருசிகரமாய் அறிவுறுத்தியிருக்கிறார். "எவ்விதமாய் அஜாக்கிரதையாய் பட்டாள வீரர்கள் கூறிக்கொள்ளுகிறார்கள் என்பது வியப்பை அளிக்கிறது. எனக்கு இத்தகவல் கொடுத்தவர்களில் ஒருவர், சம்பாஷணையில் ஈடுபட்டிருந்த சில இதாலியப் போர் வீரர்களுடன், ரயிலில் பிரயாணம் செய்தார். அவர்களில் சிலர் போர்முனைக்குச் செல்பவர்கள். அவர்களில் ஒருவன் வேறு ஒருவனுடன் சொன்னதாவது 'ஆகச்சே நீ ஆபிரிக்காவுக்கு செல்கிறாயாக்கும். உனக்கு யுக்திதான் தெரியுமே. பிரிடிஷார் இடம் சரண்புகு. அவர்கள் உனக்கு ஒரு தீங்கும் செய்யமாட்டார்கள். ஒருக்கால் செலவு ஒன்றுமில்லாமலே நீ இந்தியாவை காணலாம்.'

ஜெர்மன் ராணுவ உத்தியோகஸ்தர்களின் இருமாப்பைப்பற்றி பல கதைகளும் ராணுவ வீரர்களால் கூறப்படுகிறது. நாகரீகத்துக்கும், புத்திசாலித்தனத்துக்கும் பேர்போன மிலான் என்ன, நல்ல தொழில் நிலயங்கள்கொண்ட 'மீபீயு' என்ன இவைகளில் உள்ளவர்கள் "எங்களை ஜெர்மானியர் பழையதாய்க் கிழிந்த செருப்புகள் போல் உபயோகிக்கின்றனர்" என்று கூறுகிறார்கள். ஜெர்மானியரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தேசங்களில் இதாலிய ரேடியோ நிலய அறிக்கைகளைக்கூட கேட்கமுடியாதபடி தடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது இதாலிய ஜனங்களுக்குத் தெரியும்.

சாப்பாட்டுக் குறைவுக்கு ஜெர்மானியர்தான் காரணம் என்று பகிரங்கமாகவே ஜனங்களால் கூறப்படுகிறது. பல நகரங்களிலும், முடிவான அபிப்பிராயமாகவும், ஜனசமூகத்தினிடையே பொதுவான அபிப்பிராயமாகவும் "சண்டையில் நாம் தோற்றால் ஒழிய நாம் இதாலியில் நன்மை அடைய முடியாது" என்று



சொல்லிக் கொள்ளுகிறார்கள். நம்பிக்கை ஏற்படும்படி நேர்ந்தால் அவர்கள் "நான் இங்கிலாந்து தோற்கும் என்று நம்பவில்லை. உலகத்தின் நல்லுணர்ச்சியை இங்கிலாந்து பெற்று இருக்கிறது. ஜெர்மனி வெறுப்பை அடைந்திருக்கிறது" என்று கூறுகிறார்கள்.

பல ஹோட்டல்களிலும் ஜெர்மனிக்கு விரோதமாகவும், இதாலிய தற்போதைய ஆட்சிக்கு விரோதமாகவும் ஜனங்கள் பேசிக்கொள்ளுகிறார்கள். ஒருவர் ஒரு பிரசங்கமே செய்ய ஆரம்பித்தார். மேஜைகளை விட்டுவிட்டு ஜனங்கள் அவர் சொல்லுவதைக் கேட்க ஆவலாய் குழுமினார்கள். அவருடைய சங்கிரகமான அபிப்பிராயம் "நாம் போரில் தோல்வி அடைந்து "பாஸிஸத்"தை ஒழிக்க வேண்டும்" என்பதே. மற்றவர்களும் "நாம் போரில் ஜயமடையவேண்டும்; இல்லாவிடில் நாம் ஒரு கலகத்தை அடைவோம்" என்றார்கள். ஒவ்வொருவரும் இதாலி இங்கிலாந்துடன் பிரத்தியேகமாய் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தையே கொண்டுள்ளார்கள். இவ்விதம் நேர்ந்தால், ஜெர்மானியரால் பூரா ஆக்கிரமிப்பும் ஏற்படலாம் என்ற பயமும் இருந்துவருகிறது, ஜெர்மானியர் ஜயம் பெற்றால் தங்களுக்கு முக்கியமானவைகளைக் கட்டாயம் இழக்க நேரிடுமென்று இதாலியர் நினைக்கிறார்கள்.

---

## பிடிபட்ட கப்பல்கள் அமெரிக்க வியாபாரக் கப்பல் தொகுதிக்குள் சேர்க்கப்படுமா ?

## பிரிடனுக்கு யுத்த தளவாடங்கள் அனுப்பும் விஷயம்.

## அமெரிக்க நடுநிலைமை பாதுகாப்பு அதிகரிக்கக்கூடும்.

டெய்லி டெலிகிராப் (**Daily Telegraph**) சமாசாரப் பத்திரிகையின் வாஷிங்டன் நிருபர் ஏப்ரல் மீ 8௳ கொடுத்த தந்தி சமாசாரம்.

பிடிபட்ட ஜெர்மானிய இதாலியக் கப்பல்கள் அமெரிக்க வியாபாரக் கப்பல் குழுமியில் சேர்க்கப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அவ்விதம் செய்வதின்மூலம் அமெரிக்கக் கப்பல்கள் பிரிடனுக்கு அனுப்பப்படும். டேனிஷ் கப்பல்களும் அநேகமாக அவ்விதமே பாவிக்கப்படும்.

மிஸ்டர். பாரஸ்டால் (Mr. Forrestal) போன்ற ஒரு முக்கியமான உத்தியோகஸ்தரை இங்கிலாந்துக்கு கப்பல் இலாகா தூதராக அனுப்பத் தீர்மானித்திருப்பதிலிருந்து அமெரிக்கா இங்கிலாந்து சம்பந்தமாக இன்னும் பெரிய சமாசாரங்களையும் கவனிக்கக்கூடும் என்று அனுமானிக்கப்படுகிறது.

கர்னல் நாக்ஸ் என்பவர் யுனைடெட் ஸ்டேட்ஸானது பிரிடிஷ் கப்பல்படைக்கு யுத்த தளவாடங்கள் வாங்குவதிலும் பிரிடிஷ் சண்டைக் கப்பல்களுக்கு ரிபேர் செய்வதிலும் ஈடுபட்டிருப்பதாகச் சொல்லுகிறார். மேலும் "கப்பல்படைக்கு

ஒரே விதமான தயாரிப்புகள் சீக்கிரம் செய்வதற்கும் பிரயத்தனம் எடுக்கப்படுகிறது. அப்படிச் செய்வதன் கருத்து ரிபேர் செய்வதையும், தளவாட சாமான்கள் வாங்குவதையும் துரிதப்படுத்தவே" என்றும் சொல்லுகிறார்.

இங்கிலாந்துக்கு விஜயம் செய்வதற்கு அனுப்புவதன் முக்கியமான நோக்கமென்னவென்றால் ஐக்கிய நாடுகளின் ஆயுதங்களையும் முஸ்தீபுகளையும் பிரிடிஷ் கடற்படையானது உபயோகிக்கக்கூடுமா என்று கவனிப்பதற்குத்தான் ஒன்று ஒரு கப்பல் இலாகா அதிகாரி தெரிவிக்கிறார்.

குடிஅரசுகளின் போர்முனையில் அமெரிக்க யுத்த தளவாட சாமான்களை பத்திரமாகக் கொண்டுபோய் சேர்ப்பதே துரைத்தனத்தாரின் முக்கியமான எண்ணமாக இருக்கிறது. இந்த விஷயம் சம்பந்தாசம்பந்தமுள்ள இரண்டு தனிவகுப்புகளாகும். என்னவென்றால் அட்லாண்டிக் சமுத்திரம்வழியாய் சாமான் கொண்டுபோவற்குப் போதுமான வியாபாரக் கப்பல்கள் தயாரித்தலும் அந்தக் கப்பல்களுக்கு போதுமான பாதுகாப்பைக் கொடுப்பதற்கு முறை வகுத்தலுமே ஆகும்.

பாதுகாத்தலுக்கு சுலபமான வழி என்னவென்றால் அமெரிக்காவின் சிறிய சண்டைக் கப்பல்களை எங்கெங்கு வியாபாரக்கப்பல்களுக்கு உதவி தேவையோ அங்கங்கு அனுப்புவதே. யுத்தத்தில் கலந்து கொள்ளக்கூடாதென்று சொல்லும் கோஷ்டியின் அபிப்பிராயத்துக்கு விரோதமன்னியில் உதவிக் கப்பல்கள் அனுப்புவதன் மூலம் ஐரோப்பாவுக்கு கப்பலில் ஏற்றி அனுப்பப்படும் யுத்த ஆயுதங்கள் சேதமன்னியில் பாதுகாக்கப்பட்டு அனுப்பப்படுதல் கூடும் என்று அரசாங்க நிர்வாகத்தாரால் நம்பப்படுகிறது. ஆனால் அரசாங்க நிர்வாகத்தில் எது சுலபமான முறையோ அதே மிகவும் கஷ்டமானதாக இருக்கும்.

இப்பொழுது மேலே சொல்லப்பட்ட முறை பான்-அமெரிக்கன் ஸேப்டி ஸோனில் (Pan-American Safety Zone) மட்டும் கையாளப்பட்டு வருகிறது. ஆனால் எதிர்ப்பு அன்னியில் இது மேற்கு அரை பூகோளத்தில் அதாவது ஆபிரிக்கா தேசத்தின் துருத்திக்கொண்டிருக்கும் பிரதேசத்துக்கும் தென் அமெரிக்காவுக்கும் நடுவில் உள்ள இடத்திற்கும் இந்த முறையை அமுலுக்கு வரலாம்.

யுத்தத்தை மேற்கு அரை பூகோளத்திற்கு வராமல் தடுக்கத்தகுந்த ஏற்பாடுகள் செய்வது பற்றி தீர்மானித்து விட்டால் அந்த முறையை நிதர்சனத்தில் பிரிடிஷ் உதவிக்கப்பல்கள் அனுப்பும் முறையுடன் ஒத்துவரச்செய்வது சாத்தியமாகும்.

அமெரிக்காவிலிருந்து கப்பல்கள் தூரத்திலுள்ள வடக்குப்பாதை வழியாக மேற்கு அரை பூகோளத்திலுள்ள ஹாலிபாக்ஸ், நியூபவுண்லண்ட், கிரீன்லண்ட், ஐஸ்லண்ட் இந்தத் துறைமுகங்களுக்கு போகுதல்கூடும். ஆகையால் கப்பல் நடுநிலைமை ரோந்தின்மூலம் காக்கப்படும்.



900-மைல் உள்ள பிரயாணத்தின் கடைசி பாகம் பிரிடிஷ் பாதுகாப்புமூலம் செல்லுதல் கூடும். பனிக்கட்டி மலைகளின் ஆபத்தும், பிரயாணத்தின் தூரமும் அதிகமாக இருந்தாலும் நீர்மூழ்கிக்கப்பல்கள் நடுநிலைமை ரோந்தை எதிர்க்கலாம். ஆனால் அது பிரயோஜனமற்றதாகும்.

சாமான் கொண்டுபோகும் சம்பந்தமாய் மற்றொரு பாதி விஷயம் கப்பலின் விஸ்தீர்ணமாகும். அது சம்பந்தமாக பிரிடிஷ் உத்தியோகஸ்தர்களும், அவர்களுக்குத் தலைவரான ஸர் ஆர்தர் ஸால்டரும் (Sir Arthur Salter) அவர்களுடைய அமெரிக்க உத்தியோக சகோதரர்களும் தர்க்கம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்காவில் அதிகமாக கப்பல்கள் செய்வது துரிதப்படுத்தப்படும் என்பதில் கொஞ்சம்கூட சந்தேகமில்லை. ஆனால் அவைகள் அனுப்பப்படும் விஷயம் ஒரு வருஷத்துக்குள் ஆரம்பிக்கப்படமாட்டாது.

இனி வரும் சிலமாதங்களுக்குள் காப்பாற்றப்படும் ஒவ்வொரு டன் கப்பல் இடவசதி ஒரு வருஷத்திற்குப் பிறகு ஒரு டன் காப்பாற்றப்படுவதைவிட அதிக மதிப்புள்ளதாக இருக்குமாதலால் இப்பொழுது இருக்கும் கப்பலின் இடமானங்களைக் காப்பாற்றவேண்டிய முறைகள் சீக்கிரம் எதிர்பார்க்கப்படலாம்.

---

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

---

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### டாக்டர் கோயபல்ஸும் கல் சுவரும்.

நம்பிக்கையோடும், இடைவிடாமலும், முற்றிலும் டம்பமாகவும் டாக்டர் கோயபல்ஸ் இந்த வாரம் முழுவதும் பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்தின் ஏகத்துவத்தில் வெடிப்பு உண்டாகியிருக்கிறதென்று உலகத்துக்கு புகட்டுகிறார். இந்த பிளப்பானது ஒரு பக்கம் ஆஸ்திரேலியாவுக்கும் நியூஸிலாந்துக்கும், மற்றொரு பக்கத்தில் பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்துக்கும் உள்ள ஐகமத்தியத்தைப்பொறுத்து உண்டாகியிருக்கிறதென்று சொல்லுகிறார். அவருடைய கொள்கையை பலப்படுத்த சில விஷயங்களை ஜோடித்திருக்கிறார்.

(a) பால்கன் நாடுகளில் பிரிடிஷாருக்கும் ஆஸ்திரேலிய-நியூஸிலாந்து துருப்புகளுக்கும் ஏற்பட்டிருக்கும் விரோதங்கள்.

(b) கெய்ரோவிலுள்ள, பிரிடிஷ், ஆஸ்திரேலிய-நியூஸிலாந்து அதிகார வர்க்கத்தாருக்குள் உண்டாகியிருக்கும் விரோதங்கள்.

(c) ஆஸ்திரேலிய-நியூஸிலாந்து ஜனங்களுக்குள்ளாகவே பீதியும் அதிருப்தியும்.

கிரீஸிலிருக்கும் பிரிடிஷ், ஆஸ்திரேலிய-நியூஸீலாந்து துருப்புகள் ஏற்பாட்டுடனும் முரட்டுத்தனமாயும் சண்டை செய்து துருப்புகள் பின்வாங்குவதற்கு லாயக்காய் வசதிகள் செய்திருப்பதை கவனித்தால் சாம்ராஜ்ஜிய துருப்புகளுக்குள் பிளவு ஏற்பட்டிருப்பது என்று ஜெர்மனி சொல்லுவது பொய் என்று நன்ருக விளங்கும்.

## வித்தியாசங்களைப்பற்றிக்கிடைத்திருக்கும் விசித்திரமான சாக்ஷியம்.

எஜமானனுடைய உத்தரவின் பிரகாரம் நடிக்கும் ரோமாபுரியிலிருக்கும் ஒலிப்பரப்பானது ஏப்ரல்மீ 23 தேதியன்று, மத்தியக்கிழக்கு நாடுகளிலுள்ள பிரிடிஷ் சைனியங்களின் தலைவருக்கும் ஆஸ்திரேலியத் துருப்புகளின் தலைவருக்கும் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டுவிட்டன என்று கோஷித்தது.

ரோமின் துரதிருஷ்டவசமாக, அதே தேதியில் கெய்ரோவிலிருந்து, ஆஸ்திரேலிய தளகர்த்தரான ஸர். தாமஸ் ப்ளாமி என்பவர், பிரிடிஷ் சேனைகளின் தளகர்த்தரான ஸர். ஆர்க்கிபால்ட் வேவலுக்கு உபஅதிகாரியாக நியமிக்கப்பட்டாரென்று உத்தியோகவர்க்கத்தார்கள் வெளியிட்டார்கள். வேவலுக்கும் அவருடைய ஆஸ்திரேலிய நண்பருக்கும் அபிப்பிராய பேதங்கள் இருந்திருந்தால் இந்த நியமனத்தை ஒரு பொழுதும் அவர் அங்கீகாரம் செய்திருக்கமாட்டார்.

## பிரிடனுடைய போர்களைச் செய்யும்படி கட்டாயப்படுத்தல்.

ஒரு வாரத்துக்கு முன் பிரிடிஷார் அவர்கள் போடவேண்டிய சண்டைகளை கிரேக்கர்களைத் தூண்டிவிட்டு யுத்தம் செய்ய கட்டாயப்படுத்திவிட்டார்களென்று கோயபல்ஸ் அலறினர். சமீப காலத்தில் தன் குரலை மாற்றிக்கொண்டு ஜெனரல் வேவல் கிரீஸுக்கு ஆஸ்திரேலிய-நியூஸீலாந்துத் துருப்புகளை மட்டும் அனுப்பிவிட்டாரென்றும் பிரிடிஷ் துருப்புகளை கெய்ரோவிலேயே மறைந்திருக்கும்படி செய்துவிட்டாரென்றும் குற்றம் சாட்டினர்.

திரு. சர்ச்சில் யுத்தத்தைப்பற்றி விடுக்கும் அறிக்கைகளில் கோயபல்ஸின் புழுகுகளில் சில முக்கியமானவைகளை வெளிப்படுத்துவது வழக்கம். பிரதம மந்திரி சென்ற ஞாயிற்றுக்கிழமை தினம் கிரீஸிலுள்ள பிரிடிஷ், ஆஸ்திரேலிய-நியூஸீலாந்து துருப்புகளின் பங்குகளைப்பற்றி பின்வருமாறு அறிவித்தார்.

"நம்முடைய வாக்குறுதிப்படி நைல் பிரதேசத்திலிருந்த சைனியத்தின் ஒரு முக்கியமான தொகுதியை கிரீஸுக்கு அனுப்பி விட்டோம். அங்கே யுத்தம் செய்வதற்கு லாயக்கானதும் அனுப்பக் கூடியதுமான துருப்புகள் நியூஸீலாந்திலிருந்தும் ஆஸ்திரேலியாவிலிருந்தும் வந்திருந்தவைகள்தான். இந்த விபத்தான ஒரு எதிர்ப்பில் கலந்து கொண்ட துருப்புகளில் பாதிபாகம் பிரிடனைச் சேர்ந்தவைகள்."



## புழுகு தொழிற்சாலை அதிகநேரம் வேலைசெய்கிறது.

ஒரு வாரத்துக்கு மேலாக ஜெர்மானிய, இதாலிய ஒலிபரப்புகளிலிருந்து அச்சு நாடுகளின் விமானங்கள் கிரீஸிலிருந்து வெளியாகும் பிரிடிஷ் துருப்புகளை ஏற்றிச்செல்லும் கப்பல்களைத் தாக்கியதாகவும் அநேக கப்பல்களை மூழ்கடித்துவிட்டதாகவும் இந்தியா பூராவும் பறையறைவித்தார்கள்.

இந்தமாதிரியான பிரசாரம் உலகம் முழுவதும் பரவியிருக்கிறது. ஏனெனில் ஏப்ரல் 25-ம் தேதியில் லண்டன் டைம்ஸ் பத்திரிகையின் ராணுவ நிருபர் இந்தப் புழுகு பிரசாரத்தைப்பற்றி சிலவைகள் கூறியுள்ளார். திங்கட்கிழமையன்று, எதிரியின் ஒரு பிரசுரத்தில் 31,000 டன் எடைமானமுள்ள ஆறு துருப்புகள் கொண்டு போகும் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டனவென்று வெளிவந்திருக்கிறது. மறு நாள் இன்னொரு பிரசுரத்தில் 27,000 டன் எடைமானமுள்ள ஏழு கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டனவென்றும், இன்னும் 12 கப்பல்கள் கெடுதியடைந்துவிட்டனவென்றும், ஸூடா விரிகுடாவில் ஒரு சண்டைக் கப்பலின் பேரில் ஒரு வெடி குண்டு விழுந்ததென்றும்........" வெளியிடப்பட்டது. கட்டுக்கதை அதிகரித்து, கடைசியாக, புதன்கிழமையன்று, நாஸிகள் 30,000 துருப்புகளைக்கொன்றுவிட்டதாகவும் ஆயிரக்கணக்கான சவங்கள் கடற்கரை யோரத்தில் அலைகளால் கொண்டுவரப்பட்டனவென்றும் முடிவடைந்தது. டைம்ஸ் பத்திரிகையின் நிருபர் வியாக்யானம் சொல்லுகிறபடி, தங்கள் புழுகுகளுக்கு ஒத்தாசையாகச் சொன்ன இந்தக் கடைசி விருத்தாந்தமானது கட்டுக்கதையின் ஜோடிப்பை வெளியாக்குகிறது. கொஞ்சமேனும் வாஸ்தவமாக இல்லாவிட்டாலும், கிரீஸிலிருந்து வெளியேறும் பிரிடிஷ் துருப்புகள் நிறைந்த கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டனவென்பது வாஸ்தவம் என்று வைத்துக் கொண்டாலும், எதிரிகளுக்குக் கடற்கரையோரங்களில் சவங்கள் அலைகளால் ஒதுக்கப்பட்டன என்ற விஷயம் தெரிந்திருக்க முடியாது. ஏனென்ருல் அந்த சமயம் எதிரிகள் இந்தமாதிரி பிணங்கள் ஒதுங்கியிருக்கக்கூடிய ஒரு கடற் கரையையும் ஆக்கிரமணம் செய்யவில்லை.

## B.—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

---

## பாஸ்ராவும், பெர்லின் ஸ்வப்னங்களும்.

பிரிடிஷ் இந்தியத் துருப்புகள் பாஸ்ராவில் இறங்கியதைப்பற்றிச் சொல்லுகையில், இது இராக்கின்பேரில் படையெடுப்பு என்று புழுகுவதோடு, ஏப்ரல்மீ 22-ம் தேதியன்று ஹிந்துஸ்தானியில் ஒலிபரப்பியபோது, மற்ற நாடுகளின்மேல் படையெடுப்பதுதான் பிரிடிஷ்காரர்களின் தொழில் என்று டாக்டர் கோயபல்ஸ் வெளியிட்டார். வாஸ்தவமாக 1930-ல் பிரிடிஷாருக்கும், இராக் அரசாங்கத்தாருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தப்படிதான் பாஸ்ராவில் இந்தத் துருப்புகள் இறங்கின. உடன்படிக்கையின் ஷரத்துகளின்படி யாராவது ஒருவர் யுத்தம்செய்ய

நேர்ந்தால், மற்றொருவர் அவருக்கு நேசநாடென்ற ஹோதாவில் ஒத்தாசை செய்ய முன்வந்து, எல்லாவிதமான வசதிகளும், தன்னாலியன்ற அளவு ஒத்தாசையும் செய்து, இருப்புப் பாதைகள், நதிகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள், மற்ற போக்குவரவு சாதனங்கள் இவைகளை உபயோகிக்கவும் அனுமதிக்க வேண்டும்.

பிரிடன் மற்ற தேசங்களின்பேரில் படையெடுக்கும் வழக்கமுள்ளதென்ற புழுகுக்கு, ஜெர்மானியர்கள் போலந்திலும், டென்மார்க்கிலும், நார்வேயிலும் ஹாலந்திலும், பெல்ஜியத்திலும். கிரீஸிலும், யூகோஸ்லாவியாவிலும் படையெடுத்தது எவ்வளவு நியாயமென்பதை டாக்டர் கோயபல்ஸ்தான் விஸ்தரிக்க வேண்டும்.

அச்சு நாடுகள் ஒலிபரப்புகளில் விடாது பிரிடிஷாரின் நடவடிக்கைகளைப் பற்றிப் புழுகிவந்தார்கள். ஏப்ரல் 23-ம் தேதியன்று இராக் அரசாங்கத்தார் நடுநிலைமை வகிக்கும் இராக்கை பிரிடிஷார் தாக்கிவிட்டார்களென்று (இது முற்றிலும் தவறு) ஆக்ஷேபனை செய்தார்களாம் என்று ஒலிபரப்பிற்று. இராக்கில் வெளியிட்ட ஒரு பிரசுரத்தில் இந்த விருத்தாந்தங்கள் முற்றிலும் தவறு என்று எழுதப்பட்டிருந்தது. அதில் ஆங்கில-இராக் உடன்படிக்கையின் ஷரத்துகளின் பிரகாரம் இராக் வழியாக பிரிடிஷ் துருப்புகள் செல்ல அனுமதி பெற்றிருந்ததென்றும் இராக் அரசாங்கமும் இதற்கு சம்மதித்திருந்ததென்றும் வெளிப்படுத்தப்பட்டன.

## மற்றொரு ஜெர்மன் புழுகு.

இரண்டு போர்முனைகளில் கிரேக்கத் துருப்புகள் சரண்புகுந்ததைப் பற்றி ஜெர்மன் தலை நகரத்திலுள்ள ராணுவ ராஜீய கோஷ்டிகளின் வியாக்கியானங்களை ஏப்ரல் 24-ம் தேதியன்று பெர்லினில் ஹிந்துஸ்தானியில் ஒலிபரப்பினார்கள். பிரிடிஷ் துருப்புகள் கடுமையான ஒரு சமயத்தில் கிரேக்கர்களை கைவிட்டு ஓடிவிட்டார்களென்று வியாக்கியானங்களில் சொல்லுகிறார்கள். திரேஸ் போர் முனையில் பிரத்தியேகமாக்கப்பட்ட கிரேக்கர்கள் சம்பந்தமாக, பிரிடிஷ் துருப்புகள் ஒரு பொழுதும் வார்தார் பள்ளத்தாக்குக் கிழக்கேயுள்ள ஸ்தலங்களுக்குச் செல்லவில்லை. ஆகையால் நேச நாடுகளைக் கைவிட்டுவிட்டோமென்ற விஷயமே ஏற்படவில்லை. இதைத்தவிர அங்கிருந்த சைனியம் முழுவதும் சரணடையவில்லை. ஒரு பாகம் சமுத்திர மார்க்கமாக பிரிடிஷ் கடற்படையின் ஆதிக்கத்தினால் வெளியேறிவிட்டது.



ஆறு மாதமாகத் தங்களுடைய மேன்மையை அடிக்கடி நிலைநாட்டிக் காண்பிவித்த அல்பேனியாவில் எபிரஸ் முனையிலுள்ள கிரேக்கத் துருப்புகள் இதாலியர்களின் முன்னால் பின்வாங்க சம்மதிக்கவில்லை. இவர்களைச் சுற்றிலும் ஜெர்மனியைச் சேர்ந்த அதிவேகமான மோட்டார் துருப்புகள் சூழ்ந்து விட்டன. ஆகையால் ஏற்பாடாக இவர்கள் பின்வாங்கக்கூடவில்லை. ஆகையால்தான் சரணடையும்படி நேர்ந்தது.

கடைசியாக, கிரீஸிலுள்ள பிரிடிஷ் துருப்புகளும், கிரேக்க சேனைத்தலைவரான பாபகாஸின் அதிகாரத்தின் கீழ்தானிருந்து வந்தன.

# முக்கியமான விளம்பரம்.

## யுத்த சம்பந்தமான புகைப்படங்கள்.

ஈ-தர்பார் அவர்கள் உத்தரவின் பேரிலும், அவர்களின் அன்பார்ந்த உதவியின்பேரிலும், புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயத்தின் மெம்பர்கள் இதுமுதல் பிரசங்கங்களுக்கு வெளியூர்களுக்குப்போகும் காலத்தில்யுத்தத்தின் வெவ்வேறு அம்சங்களை விளக்கிக்காட்டக்கூடிய புகைப் படங்களின் கோர்வைகளையும் எடுத்துக்கொண்டு போய் ஜனங்களுக்குக் காண்பிக்க வசதி ஏற்பட்டிருக்கிறதென்று யுத்த அறிக்கை நிலயம் சந்தோஷத்துடன் அறிவிக்கிறது.

இந்த நிகழ்ச்சிகள் யுத்தம் நடக்கும் பிரதேசங்களில் 'இருபதாவது நூற்றுண்டு பாக்ஸ் பிலிம் கம்பெனி'யாரால் எடுக்கப்பட்ட புகைப்படங் களும், பம்பாய் துரைத்தனத்தாரைக்கொண்டு இந்திய கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கும் ஒரு சங்கத்தாரால் இந்தியா சம்பந்தமான சில விஷயங்களைப்பற்றி தயாரிக்கப்பட்ட புகைப்படங்களும் சேர்ந்தவைகள். ஒவ்வோரு நிகழ்ச்சியிலும் மூன்று தனித்தனிப் படங்கள் காட்டப்படும். இந்தப் படங்கள் காண்பிப்பதால் யுத்த அறிக்கை நிலயத்தின் பிரசங்கங்களுக்கும், மெற்படி நிலயத்தின் வாரப்பதிப்பு புஸ்தகத்துக்கும் அதிக மதிப்பு ஏற்படக்கூடுமென்று யுத்த அறிக்கை நிலயம் நம்புகிறது.

புதுக்கோட்டையின் யுத்த நிதிக்காக உழைத்துவரும் கமிட்டியார் யுத்த அறிக்கை நிலயத்திற்கு ஒரு மோட்டார் வண்டியை நன்கொடை அளித்திருக்கிறுர்கள். இந்த வண்டியில் புகைப்படம் காண்பிவிக்கக்கூடிய யந்திரங்களையும், திரைகளையும், புகைப்படங்களையும் பிரசங்கம்செய்யும் ஸ்தலங்களுக்கு எடுத்துச்செல்ல சௌகரியமாயிருக்கும். ஆனல், இம்மாதிரி புகைப்படங்களோடுகூடிய பிரசங்கங்களைச்செய்ய வசதி ஏற்படித்திக் கொள்ளவும், ஒவ்வொரு இடத்திலும் மாதாமாதம் ஒவ்வொரு புதிதான படக்கோர்வையைக்காண்பிக்கவும், பிரசங்க ஸ்தலங்களையும் அறுபது இடங்களுக்கு அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டை ஸமஸ்தான வாசிகள் முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டியவைகள் என்னவென்றுல் :—

(a) பிரசங்கங்கள் சாதாரணமாக **மாலை 6** அல்லது **6-30 மணிக்குத்** துவக்கப்படும்.

(b) யுத்த அறிக்கை நிலயத்தின் மோட்டார் ஒருநாளில் இரண்டு ஊர்களுக்குச்செல்ல வேண்டியிருப்பதால் பொதுஜனங்கள் **தவராமல் குறிப்பிட்ட டயத்தில்** பிரசங்கம் செய்யப் போகுமிடத்தில் ஆஜராகியிருக்க வேண்டும்.

இந்தப்படங்களை ஆயிரம் பேர்களுக்குக்குறையாமல் சௌகரியமாய்ப் பார்க்கக்கூடுமென்று அனுபவத்தில் தெரிகிறது. ஆகையால் உங்கள் கிராமத்தில் பிரசங்கம் செய்யப்படுமென்று பிரசுரம் செய்த அளவில்,

**அந்த இடத்தில் கூடுங்கள்,**
**சரியானபடி குறிப்பிட்ட டயத்தில் வாருங்கள்.**



# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் XLIII.

| | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| 1941— | | | | | |
| மே | ...10, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 11, ஞாயிற்றுக்கிழமை. | கீரனூர் | ... | ,, | 6.00 |
| | | நாஞ்சூர் | ... | ,, | 6.30 |
| | 12, திங்கட்கிழமை ... | அரிமளம் | ... | ,, | 6.00 |
| | | கீழாநிலைக்கோட்டை | ... | ,, | 6.30 |
| | 13, செவ்வாய்க்கிழமை. | பெருங்களூர் | ... | ,, | 6.00 |
| | | ஆதனக்கோட்டை | ... | ,, | 6.30 |
| | 14, புதன்கிழமை ... | பூவரசகுடி | ... | ,, | 6.00 |
| | | கீழையூர் (தெற்கு) | ... | ,, | 6.30 |
| | 15, வியாழக்கிழமை. | ஒடையாளிப்பட்டி | ... | ,, | 6.00 |
| | | கிள்ளுகோட்டை | ... | ,, | 6.30 |
| | 16, வெள்ளிக்கிழமை... | நல்லூர் | ... | ,, | 6.00 |
| | | மண்டையூர் | ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் XLIV.

| | | | | |
|---|---|---|---|---|
| 17, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | ,, | 6.30 |
| 18, ஞாயிற்றுக்கிழமை... | திருவப்பூர் | ... | ,, | 5.00 |
| | வயலோகம் | ... | ,, | 6.00 |
| | குடுமியாமலை | ... | ,, | 6.30 |
| 19, திங்கட்கிழமை ... | நச்சாந்துபட்டி | ... | ,, | 6.00 |
| | விராச்சிலை | ... | ,, | 6.30 |
| 20, செவ்வாய்க்கிழமை. | பனையப்பட்டி | ... | ,, | 6.00 |
| | ராங்கியம் | ... | ,, | 6.30 |
| 21, புதன்கிழமை ... | ராஜகிரி | ... | ,, | 6.00 |
| | விராலிமலை | ... | ,, | 6.30 |
| 22, வியாழக்கிழமை ... | திருமய்யம் | ... | , | 6.00 |
| | கோனுபட்டு | ... | ,, | 6.30 |
| 23, வெள்ளிக்கிழமை... | புதுப்பட்டி (பொன்னமராவதி). | | ,, | 6.00 |
| | வேந்தம்பட்டி | ... | ,, | 6.30 |

புதுக்கோட்டை ஸமஸ்தானம்

யுத்த நிதிக்காக போடப்படும்

# அதிர்ஷ்டச் சீட்டு.

(ஈ-தர்பாரவர்கள் உத்தரவின்பேரிலும் ஆதரவின் பேரிலும் புதுக்கோட்டை யுத்தநிதி எண்டெர்டெயின்மெண்ட் கமிட்டியாரால் நடத்தப்படுகிறது.)

## இந்த யுத்த நிதியை ஆதரியுங்கள்

டிக்கெட்டுகளை வாங்குங்கள்

முடிவு தேதி 15—6—41

சீட்டு குலுக்கும் தேதி 23—6—41

நமது மன்னர் அவர்களின் வருஷவர்த்தனை தினத்தன்று அதிர்ஷ்டசாலிகளுக்கு ஏராளமான பரிசுகள்.

## 300 பரிசுகள்.

| | | |
|---|---|---|
| 1-வது பரிசு | ரூபாய் 7,500 | |
| 2-வது பரிசு | ,, 5,000 | |
| 3-வது பரிசு | ,, 2,500 | |
| 2 பரிசுகள் | ,, 1,000 | வீதம் |
| 5 ,, | ,, 500 | ,, |
| 90 ,, | ,, 100 | ,, |
| 100 ,, | ,, 50 | ,, |
| 100 ,, | ,, 15 | ,, |


Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—10-5-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் வருஷம் மேமீ 17உ [ந. 44.

பிரஸங்கம் XLIV.

## அமெரிக்கா தளவாட இரவல் சட்டத்தின் தாத்பரியம்.

இந்த முக்கியமான அமெரிக்க சட்டத்தின் பூர்ண தத்துவங்களை நாம் புரிந்து கொள்ளவேண்டுவதற்கு, "அமெரிக்கா" என்ற தலையங்கத்தில் நமது யுத்த அறிக்கை நிலயத்தின் 15-வது பிரசங்கத்தைப் படித்தால், உபயோகமாக இருக்கும். அதில், இந்த யுத்த ஆரம்ப மாதங்களில், ஏன் அமெரிக்கர்கள் காரியாம்சையில் வெளிப்படையாக சிரத்தை காட்டாமலிருந்தார்கள் என்று அடியில் விவரிக்கப் பட்ட விஷயங்கள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன:—அமெரிக்கா தேசம் ஐரோப்பா கண்டத்திலிருந்து வெகுதூலையிலிருக்கிறது. ஐரோப்பிய ராஜீய விஷயங் களில் அவர்கள் சம்பந்தப்படுத்திக் கொள்ளவில்லை. அத்தேசத்தின் ஜன சங்கியை யில் ஜெர்மானியர் பெரும் தொகுதியாயிருந்து வருகிறார்கள். அந்த தேசத்தில் "தனி நிலைமை" என்றும் "நடுநிலைமை" என்றும் இரண்டு கக்ஷிகள் முன்னணியில் தோன்றியதும், அந்நாட்டினர், தங்கள் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள் என்றதும்—மேலே கண்ட எல்லா விஷயங்களும் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் மேலே சொல்லப்பட்ட எல்லா சங்கதிகளுக்கும் அடிப்படையாக, அமெரிக்கர்களிடம் ஸ்வாபாவிகமாகவும், உருவடைந்தவுமான, ஜனநாயகத் தத்து வம் ததும்பி நிற்கின்றது. இந்த ஜனநாயகத்தத்துவம்தான் உலக நாகரீகமாகிய தீப்பந்தத்திற்கு அவசியமான எரிவஸ்துவைக்கொடுத்து கொழுந்துவிட்டு எரிய வைக்கிறது. அவர்களின் இந்த அடிப்படையான குணரேகைதான், சண்டையில்

பிரிடன் சார்பாக அமெரிக்கர்கள் நாளடைவில் அதிகரிக்கும், மனோபாவத்தைக காட்டும்படி தூண்டுகிறது.

இந்த மனப்பான்மை, அமெரிக்கர்களிடையே, எப்படி அபிவிருத்தியடைந்து வருகிறது என்று பார்ப்போமானால், பிரஸ்தாப "குத்தகையும் கடனும்" என்ற சட்டமானது, இங்கிலாந்து தோல்வியடையாமல் காப்பாற்ற வேண்டியதற்கு என்ன அத்தியாவசியமோ அவைகளுக்குத்தக்க நடவடிக்கை யுத்த சம்பந்தமாய் தாங்கள் செய்யவேண்டுமென்ற அமெரிக்கர்களின் அபிப்பிராயத்திற்கே ஒரு சிகரமாக விளங்குகிறது.

1914—1918-ல் நடந்த மஹா யுத்தத்தின் போக்கு என்ன, வார்செய்ல்ஸில் அதிகார தோரணையில் செய்யப்பட்ட சமாதானம் என்ன, அந்த சமாதானத்திற்குப்பிறகு ஐரோப்பிய ராஜ்ஜியங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் என்ன, அவைகளின் தொடர்பாக அமெரிக்கர்களுக்குச் செல்லவேண்டிய கடன்களை "காமன்ஸ்" சபையார் நிராகரித்தது என்ன, இவைகள் யாவும் அமெரிக்கர்களிடம் ஒரு விரோத மனோபாவமாக உருவெடுத்தது. எப்படியெனில், ஜனநாயகக் கக்ஷியினரும், குடியரசுக் கக்ஷியினரும், ஏகோபித்து, தங்கள் ராஜீய வாதங்களில், "ஐரோப்பா வாதங்களில் தலையிடுகிறதில்லை" என்று அமெரிக்காவின் "மன்ரோ டாக்ட்ரின்" என்ற கொள்கையை அபரிமிதமாய் ஊன்றிக் கொண்டார்கள்.

1935-ம் வருஷத்தில் "தனி நிலைமை" கோஷ்டியார் வெகு பலத்தையடைந்தார்கள். ஹிட்லரின் க்காரியஸ்தர்கள் பிரிடிஷ் பிரெஞ்சுக்காரர்களுக்கு விரோதமாய் செய்த பிரசாரங்களும், ரகசிய சூழ்ச்சிகளும் அந்த கோஷ்டிக்கு உத்வேகம் கொடுத்தது. பிறகு உடனடியில், அபிஸீனியாவின் பேரில் இதாலி தொடுத்த படையெடுப்பும், வல்லரசுகளிடையே இதாலி பேரில் தொடுக்கப்படவேண்டிய "புத்தி புகட்டும் அதிகாரங்கள்" சம்பந்தமாய் ஏற்பட்ட சச்சரவுகளும், உலகம் பூராவும் சர்வதேச சங்கத்தின் பேரில் வைத்திருந்த நம்பிக்கையை இழக்கும்படி செய்து அந்த சங்கத்தின் மதிப்பே அதோகதியாக நசிக்கும்படி செய்துவிட்டது. இதன் விளைவாக அமெரிக்காவிலும் 1935-ம் வருஷத்திலேயே "நடுநிலைமை சட்டம்" என்ற ஒரு சட்டம் ஏற்படுத்தப்பட்டது.

இந்த "நடுநிலைமை சட்டத்தின்" முக்கிய ஷரத்துகள் வெகு கடுமையானது. அதன்படி அமெரிக்காவே, தான் சண்டையில் சேர்ந்த நாடுகளுக்கு யுத்த தளவாடம் எதுவும் அனுப்புகிறதில்லை என்றும்; ஐக்கிய நாட்டு பிரஸிடெண்டால் 'யுத்த அரங்கம்' என்று பிரகடனப்படுத்தப்பட்ட எந்த சமுத்திரத்திற்கும் அமெரிக்கக் கப்பல்கள் செல்லக்கூடாதென்றும்; ரொக்கம் கொடுத்து தாங்களே தங்கள் கப்பல்களில் அமெரிக்கரிடமிருந்து யுத்த தளவாடங்களல்லாத பொருள்களை யுத்த தேசங்கள் பெற்றுப் போகவேண்டியதென்றும், நிஷ்கரிஷித்து தன்னையே கட்டுப்படுத்திக்கொண்டது. தவிரவும் அமெரிக்கர்கள் ஐரோப்பிய நாடுகளின் ராஜீய விஷயங்களில் ஒரு அக்கறையும் எடுத்துக் கொள்ளுகிறதில்லை என்று அழுத்தம் திருத்தமாய்க் காட்டியது. இது "தனி நிலைமை"க் கக்ஷியாருக்கு அமோகமான வெற்றியை அளித்தது; வருங்காலத்தில் தோன்றக் கூடிய ஐரோப்பிய யுத்தத்தில் தங்களை ஒரு விதத்திலும் சிக்கும்படி செய்யாத



ஒரு மகத்தான பாதுகாப்புச் சட்டம் ஏற்படுத்தி விட்டோம் என்று அந்த "தனி நிலைமை" கோஷ்டியார் கொண்டாடினார்கள்.

அமைதி உலவிக் கொண்டிருக்கும் காலங்களில் ஒரு சட்டத்தின் வலிமையைக் கொண்டு தைரியமாயிருப்பது சரிதான். ஆனால் ஏதேச்சாதிகார நோக்கங்களும், முழு ஆதிக்கம் படைத்துக்கொள்ளும் நோக்கத்துடன் சர்வதேசக் கட்டுப்பாடுகளையும், ஷரத்துக்களையும் அழிக்கும்படியான யுத்தம் வந்த காலத்திலும், இந்த சட்டத்தின் பேரில் வைத்திருந்த உத்சாகம் எம்மட்டில் நிலை நிற்கும்? தவிரவும் மின்னல் போரும், ஐந்தாம் படையின் அட்டூழியங்களும், திறந்த நகரங்களை அக்கிரமமாய் தாக்கி அழிக்கும்போது, இந்தச் சட்டத்தின் பேரில் வைத்திருந்த பிரேமை நசித்து விடாதா? நமது உலகத்தின் இரு கோளத்திலுள்ள ஜனநாயக தேசங்களின் ஸ்வதேச உரிமைகளை புறக்கணிக்கும்படி செய்து ஆதிக்கம் அடையவேண்டி ஜெர்மானியர் தொடுத்திருக்கும் யுத்த பயங்கரத்திற்கு எதிரே எவ்வாறு இந்தச் சட்டத்தில் நம்பிக்கை ஏற்படும்?

இந்த "நடுநிலைமை" சட்டமானது ஐக்கிய நாட்டுக்கு முக்கியமான நன்மையை அளித்தது. தென் அமெரிக்காவும், வட அமெரிக்காவும், தங்கள் நிலையைச் சீர் செய்து வைத்துக்கொள்ளும்படி தூண்டிற்று. ஐக்கிய நாட்டுத் தலைமையில் மேல கோளத்திலுள்ள யாவற்று தேசங்களும் ஒன்றுகூடி தங்கள் உறவுகளை கெட்டிப்படுத்திக்கொண்டு கட்டுப்பாடு ஏற்படுத்த இந்தச் சட்டம் உதவிற்று. பெரும்பான்மையானதோர் அமெரிக்க தேசங்கள் சேர்ந்துகூடிய லிமா மகாநாடு, அகில அமெரிக்க ஐக்கியத்தை உருப்படியான பலனைக் கொடுத்தது. அந்த மகாநாடு, நிச்சந்தேகமாக, அமெரிக்கா கண்டத்தின் ஐக்கியத்தையும், கட்டுப்பாட்டையும், வேறு அயல் தேசத்தார் சிதைக்காவண்ணம் காப்பாற்றி பாதுகாத்துக்கொள்ள நிச்சயித்தது என்று தீர்மானித்தது. தென் அமெரிக்காவிலோ, வட அமெரிக்காவிலோ உள்ள எந்த ஒரு தேசத்தினுடைய முகாண்மையில் இம்மாதிரி பாதுகாத்துக்கொள்ளக்கூடும் என்றது அந்தத் தீர்மானம். இதனால் பிரஸிடெண்ட் மன்ரோவால் ஏற்படுத்தப்பட்ட ஒரு தரத்தாரைச் சேர்ந்த, "மன்ரோ டாக்டிரின்" என்ற கொள்கையை ஒவ்வொரு தேசமும் அங்கீகரித்து, அதைக் காப்பாற்ற ஒவ்வொரு தேசமும், தனிமையாகவும் மற்ற தேசங்களுக்கு ஜாமீனாகவும் அதை அமுலுக்குக் கொண்டுவருவதில் விசேஷ சிரத்தை எடுத்துக்கொள்ளும் என்று ஏற்படுகிறது.

இந்தத் தீர்மானம் ஏற்படும்முன் இதற்கு முட்டுக்கட்டை போட ஜெர்மானியர்கள் பகிரங்க சூழ்ச்சியால் அவர்களின் அபாயகரமான செல்வாக்குக்கு ஆதீனப்பட்ட லாதீன்-அமெரிக்கன் ஆர்ஜென்டைன் தேச மெம்பர்களை கலைத்தார்கள். ஆனால் பயன்படவில்லை. தீர்மானம் நிறைவேறியது. இந்த மகாநாட்டு தீர்மானம் கானடா நியூபவுண்டுலாண்டு உள்பட அகில அமெரிக்க தேசங்களுக்குள் ஒரு பொருளாதார ஐக்கியம் ஏற்படுத்தியதுடன் அந்த ஐக்கியத்திற்கு ஐக்கிய நாட்டையே தலைமை வகிக்கும்படி அதிகார தோரணை கொடுத்தது; இந்தத் தீர்மானத்தின் ஆதாரத்தாலேயே மேல் கோளத்தில், கிரீன்லாந்தும், ஐஸ்லாந்தும்,

அடங்கியது என்று பிரகடனப்படுத்த முடிந்தது. மேலும் முன் அணி நிலயங்களாக அமெரிக்க கடல்படைகளுக்கும், விமானப்படைகளுக்கும் நிலய வசதிகளை அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் சம்பாதித்து தன்னுடைய காபந்து நிலைமையை பலப்படுத்திக் கொள்ளவும் அமெரிக்கர்வுக்கு முடிந்தது.

ம்யூனிச் பேச்சு ஆரம்பித்தது, ஒழிந்தது: நாஸிகளின் ஆசைகளைத் தீர்த்து வைக்கிறது என்ற கொள்கை கையாண்டுபார்த்து ஸ்பஷ்டமாய் பிரயோஜனப்படவில்லை திடீரென்று ஆரம்பிக்கப்பட்ட யுத்தத்தில் நாடுநாடாக கீழே வீழ்த்தப்பட்டுப் போய்விட்டது. யாதொருவித தங்குதடையன்னியில் காட்டு மிருண்டித்தனமாய் நடந்து கொள்ளும் ஒரு ஐரோப்பிய வல்லரசு ஏகபோகமாக ஜயமடையும் பக்ஷத்தில் தங்களுக்கு என்ன பேராபத்து சம்பவித்துவிடுமோ என்று அமெரிக்க ஜனங்களும், அமெரிக்க ஸர்க்காரும் தெளிவாய் உணர்ந்து கொண்டார்கள்.

நடுநிலைமைச் சட்டத்தின் கடுமையான ஷரத்துக்களை தளர்த்த வேண்டிய அவசியம் சம்பவித்தது. யுத்த தளவாடங்கள் அனுப்புகிறதில்லை என்றதை உடனே மாற்றி அமைக்கப்படவேண்டியிருந்தது. அமெரிக்காவோ பணக்கார தேசம். இந்த யுத்தமானது பணம் படைக்காத தேசங்களால் பணம் படைத்த தேசத்தின் பேரில் தொடுக்கப்பட்ட விரோத பாவமுள்ள உலகப்புரட்சி என்றும், நிச்சயம்தான் தாக்கப்படும் என்றும் அமெரிக்கா நினைத்தது. தவிரவும் இந்த யுத்தமானது ஜனநாயகக் கொள்கைக்கும், ஏதேச்சாதிகாரக் கொள்கைக்குமுள்ள முரண்பாட்டால் ஏற்பட்டது என்றும் தெரிந்து கொண்டார்கள். இந்த இரு கொள்கைகளும், ராஜீய விஷயத்தில் மட்டுமல்லாமல் பொருளாதாரத்திலும் அடிப்படையான முற்றிலும் மாறுன முரண்களுடையது என்றும் அவர்கள் உணர்ந்தார்கள். தவிரவும் அமெரிக்காவைப் பாதுகாத்து வருவது மஹா சமுத்திரங்களின் பரப்புகளல்ல, பிரிடிஷ் கடற்படைதான் என்றும் நன்றாய் உணர்ந்தார்கள். பிரிடன் மட்டும் நாசமடையும் பக்ஷத்தில்,—ஈசன் நடக்காமல தடுக்க வேண்டும்—தேசங்களின் எல்லைகள் யாவும் மாயமாய்ப் பறந்தோடிப் போகும்.!

ஆதலால் ரொக்கம்கொடுத்து எடுத்துப்போகும்படி, யுத்த தளவாடங்களை யுத்த நாட்டுக்கு அனுமதித்த முதல் காரியத்தை 1939-ம் ௵ நவம்பரில், அமெரிக்கர்கள் சாதித்தார்கள். ஏராளமான வியாபாரக் கப்புல்கள் வைத்துக் கொண்டிருக்கும் பிரிடனுக்கு நன்மையளிக்க வேண்டுமென்ற அமெரிக்கரின் நோக்கம் இதன் மூலம் வெள்ளிடை மலைபோல் தெரிகிறது.

இந்த ஏற்பாட்டின்படி பிரிடன் அமெரிக்காவுக்கு, பெருவாரியான நாணய ரொக்கத்தைக் கொடுக்கும்படி நேர்ந்தது. பிரிடிஷார் பணக்கார தேசம்தான். இருப்பினும், இப்படி அபரிமிதமாய் பணம் அமெரிக்காவுக்குப் போய்விட்டால் அதன் பணப்பை காலியாகிவிடுமே என்ற பயம் வந்துவிட்டது. ஆதலால் நாணயக் கேடுவராவண்ணம், பிரிடன் சார்பாக இன்னும் தடை நிவாரணம் செய்யவேண்டிய



அவசியம உணரப்பட்டது. இது காரணமாகவே ஜனநாயக உணர்ச்சி அமெரிக்காவில் தீவிரமாக உலாவ ஆரம்பித்தது. தலைவரை தேர்ந்தெடுப்பதில் வழக்கப்படிக்கல்லாமல், அயல் நாட்டு வியவகாரப் போக்கை அனுசரித்தே அந்தத் தேர்தல் போட்டி நடந்தது. ரூஸ்வெல்ட் ஜயித்தார். ஜனநாயகம் ஜயித்தது. இந்த ஜயத்தால் நேசக் கக்ஷியாருக்கு இன்னும் ஒத்தாசை செய்யவேணுமென்று அமெரிக்கர் உத்சாஹப்படுத்திக் கொண்டார்கள். பிரிடனுக்கு ஆகாரம், யுத்த தளவாடங்கள் இவைகளின் ஏற்றுமதியை அமெரிக்கர் ரொக்கப்பணம் வாங்கிக் கொண்டு அனுமதிப்பதற்குப் பதிலாக பரிவர்த்தனை நியதியை ஏற்படுத்தி விட்டார்கள். பரிவர்த்தனை நியதியிலேயே ஆச்சர்யமானவும் புத்திசாலித்தனமுள்ள ஒரு யோசனை கையாளப்பட்டது. அமெரிக்க கப்பல் படையைச்சேர்ந்த வயதான ஆனல் யுத்தத் திறமையில் கொஞ்சமும் குறையாத 50 நாசகாரிகள் அமெரிக்கா பிரிடனுக்குக்கொடுத்தது. இவைகளுக்குப் பதிலாக இங்கிலாந்து அமெரிக்காவுக்கு கடற்படைத் தளங்களையும், ஆகாய விமானப்படைத் தளங்களையும் கொடுத்தது. ஐரோப்பா விஷயங்களில் தாங்கள் தலையிடுகிறதில்லையென்று உறுதி கொண்டிருந்தபோதிலும் இந்த யுத்தம், அமெரிக்கா கண்டத்தையே சின்னபின்னம் செய்யக்கூடிய யுத்தம் என்றும், லிமா மகாநாட்டு தீர்மானத்தின்படி நடவடிக்கை எடுக்கவேண்டிய ஆபத்து வந்துவிட்டதென்றும், அமெரிக்கர்களுக்கு ஸ்பூர்த்தியானது.

குடியரசுக்கக்ஷித் தலைவர், தேர்தலில் அபஜயமடைந்த வெண்டல் வில்கி, "தனி நிலைமை"க் கொள்கைகளில் பெரும் பான்மையைப் பிரகடனப்படுத்தி தேர்தல் நடத்தியிருந்தும்கூட, "சண்டையில்மட்டும் மாட்டிக்கொள்ளாமல், எவ்வளவு உபரியான ஒத்தாசை பிரிடனுக்குக் கொடுக்கமுடியுமோ அவ்வளவு ஒத்தாசை அமெரிக்கர்கள் கொடுக்கவேண்டும்" என்று யாவரும் அறிய தைரியமாய் பிரகடனப் படுத்திவிட்டார். அவர் பிரிடனை, ஹிட்லரின் பயங்கரமான "புது உலக அமைப்பு"க்கு எதிரிடையாகப்போராடும் மகத்தான முன் யுத்த அரங்க அணி என்று சொல்லியிருக்கிறார். பிரிடனில் அவர் சுற்றுப் பிரயாணம் செய்து பார்வையிட்டார். பிரிடனுக்கு அமெரிக்கா உதவியளிக்கவேண்டுமென வற்புறுத்தினர். பிரிடனிலுள்ள எல்லா வகுப்பினர்களும், இந்த மின்னல் போரில் காட்டும் மனோதைரியமும், சகிப்பும், அவர்கள் தீவைக் கோட்டையாக மாற்றி அமைத்துக்கொண்டு ஹிட்லர் செய்த எல்லா படையெடுப்பு யோசனைகளையும் அறவே தோல்வியடையும்படி செய்ததும், வெண்டல் வில்கி பிரகடனப்படுத்திய சங்கதியின்பால் பெரும்பான்மையான அமெரிக்கர்களிடம் நிஜமான அனுதாப உணர்ச்சியை உண்டாக்கியது. 1938-ம் ௵த்தில் அமெரிக்க தேசமெங்கும் பரவியிருந்த நிதான மனப்பான்மையும், கொனஷ்டையுடன் ஊன்றி கவனிக்கும் ஸ்வபாவமும் 1940-ம் ௵த்தில் காற்றாய்ப் பறந்துவிட்டது.

மேலே விவரிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில்தான் அமெரிக்கா "குத்தகையும் கடனும்" என்ற சட்டத்தை ஏற்படுத்தவேணுமென்று தீர்மானித்தது. பிரிடனுக்கு, பெருவாரியாகவும்கூட கடனுதவி செய்தால் போதாது என்று நிச்சயம்

செய்துகொண்டார்கள். ஆதலால் இச்சட்டத்தின்படி, அமெரிக்கர் கைவசமிருந்தும், அல்லது, செய்யும்படி உத்திரவிடப்பட்ட 32-கோடி ஐம்பது லக்ஷம் பவுன் பொருமதியுள்ள யுத்த தளவாடங்களை பிரிடனுக்குக் கொடுக்கிறதென்றும், அமெரிக்காவுக்கு சிநேகிதமாயுள்ள வல்லரசுகளுக்கு யுத்த தளவாடங்களை குத்தகைக்கு விடலாமென்றும்; அல்லது இரவலாக கொடுக்கலாமென்றும், அமெரிக்காவுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. சுருங்கச் சொல்லுங்கால், பிரிடனுக்கு உடனடியாக வரையருப்பு வாய்ந்த உதவியை அமெரிக்கா செய்ததுடன் எல்லையற்ற உதவிக்கும் அமெரிக்கா தயார் என்று அங்கீகரிக்கப்பட்டது. இந்த சட்டத்தின் கீழ், பிரிடனுக்கு சாதகமாகவும், ஜெர்மனிக்கு எதிரிடையாகவுமுள்ள மனப்பான்மையுடைய அமெரிக்க பிரஸிடெண்டும் அவர் ராஜ்ஜிய பாரத்தை அமுல் செலுத்தும் ஆபீஸர்களும், சேர்ந்து பிரிடனுடனும் அதன் நேசதேசத்தார்களுடனும் தற்காப்பு உடன்படிக்கை செய்துகொள்ளமுடியும். அவசியமானால் எதிர்ப்பு உடன்படிக்கையும் செய்துகொள்ள இயலும்.

அந்த தேச ஜனங்களின் ஆர்வத்திற்கு உதாரணமாய், பிரிடனுக்கு உதவி அளிக்கும் திட்டம் என்று வகுக்கப்பட்டு, அதற்கே பிரத்தியேகமாய் அமெரிக்க சட்டசபையான காங்கிரஸ் "யுத்த தளவாடங்கள்" என்ற ஐட்டத்திற்குமட்டில் செலவுசெய்ய வோட் செய்யப்பட்ட முழுத்தொகுதித் தொகையான 700 கோடி டாலர்களை அமெரிக்க பிரஸிடெண்ட், அந்தத்திட்டத்திற்கு செலவிட ஒதுக்கி விட்டார் கவனியுங்கள்.

இந்த ஏராளத்தொகை பூராவும் அடியில்கண்ட செலவுகளுக்கு ஒதுக்கப்பட்டது:—ஆகாய விமானம், துருப்புகளின் ஆடைகள், வாகனவசதிகள், வியவசாயப் பொருள்கள், கைத்தொழில் பொருள்கள், கடைசியாக, எந்த தேசத்தின் தற்காப்பு, பிரஸிடெண்ட் அவசியமென்று கருதினால் அந்த தேசத்தின் தற்காப்பு சாமான்களை அமெரிக்காவிலேயே பழுதுபார்த்துக்கொடுக்கும் தேவைகள்: கடைசியாகச் சொல்லப்பட்ட செலவை கவனியுங்கள். இதன்மூலம் அமெரிக்காவின் செலவிலேயே அமெரிக்கத் துறைமுகக் கப்பல்கட்டும் ஸ்தலங்களில் பிரிடனுக்குச் சொந்தமான கப்பல்களை பழுது பார்க்கமுடியும். இது வெகு விசேஷமான அம்சம்.

ராஜீய சம்பந்தமாயும், யுத்த சன்னத்தவிஷயமாகவும், பொருளாதார ஸ்திதி சம்பந்தமாயும், இந்தச் சட்டத்தின் முக்கியத்வம் நாளடைவில் விஸ்தரிக்கும். பிரிடனுக்கு பிரகிருதமுள்ள உணவுப்பொருள், யுத்த தளவாட வசதிகளை அமெரிக்கா ஜாஸ்திப் படுத்தும்படி இந்தச் சட்டம் இடம் கொடுக்கிறது. அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் நடக்கும் யுத்தத்தில் பிரிடிஷ் கடற்படையை பலப்படுத்தமுடியும்; தவிரவும் அமெரிக்க நாட்டின் முன்னணியில் நின்று அவர்கள் போரை பிரிடன் நடத்துகிறதென்று பாவிக்கும்படி அமெரிக்க நாட்டை இச்சட்டம் செய்துவிட்டது. இந்தக் காரணத்தினால் தான் "கருவிகளை எங்களிடம் கொடுங்கள், நாங்கள் வேலையை முடித்து விடுகிறோம்" என்று பிரக்யாதியுடன் பேசிய Mr. சர்ச்சில் (பிரிடிஷ் பிரதம மந்திரி), "அந்தக் கருவிகளை தன் கையில் சேரும்படி செய்து விடுங்கள்" என்று அவசரமாய்க் கேட்கிறார்.



யுத்தக் கருவிகளை அமெரிக்கர்கள் தங்கள் கப்பல்களில் ஏற்றி தங்கள் யுத்தக் கப்பல்களின் துணையைக்கொண்டு, அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தை பத்திரமாய்கடந்து செல்லும்படி செய்யவேணுமென்று அவர்களுக்குத் தோன்றுகிறது. இதன் பயனாக சமீபத்தில் பிரிடனுக்கு அமெரிக்காவிலிருந்து போகும் அட்லாண்டிக் கடல் மார்க்கங்களை அமெரிக்கா ரோந்து பார்க்கும் என்று சமீபத்தில் அது ஏற்படுத்திக்கொண்ட கடமை ஒரு உதாரணம். இந்தச் சட்டத்தின்படி "எல்லையற்ற உதவி"க்கு உதாரணமாய் 2,000-மைல் விஸ்தீர்ணத்திற்கு அமெரிக்காவானது தன்னுடைய ஏற்றுமதிப் பொருள்களை எடுத்துச் செல்லும் கப்பல்களுக்கு துணையளித்து ரக்ஷிப்புக் கொடுக்கும் என்ற ஏற்பாடு. இந்த ஏற்பாட்டின் பயனாக, பிரிடன் அட்லாண்டிக் ரக்ஷிப்பு வேலையில் ஈடுபடுத்தியிருக்கும் யுத்தக்கப்பல்களை மிகவும் அவசரத் தேவையாயுள்ளவும் இதர யுத்த கேந்திர ஸ்தானங்களுக்கு மாற்றிக்கொண்டு பிரிடனுக்கு பெருத்த நன்மையை பயக்கும்படி அவகாசம் ஏற்பட்டுவிட்டது.

இந்த விஷயத்திலும்கூட ஐக்கிய நாட்டின் உதவி இன்னும் அதிகமாய் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. "மேற்கு கோள நாடுகளின்" அக்கரையைக் காப்பாற்றவேண்டிய அவசியம் நேரிடும் பக்ஷத்தில், அமெரிக்கர்களின் கடற்படைகளை, யுத்த பிரதேசங்களில்கூட பிரவேசிக்கும்படி அனுமதிக்க தனக்கு பூர்ண அதிகாரமிருக்கிறதென்று சமீபத்தில் பிரஸிடெண்ட் வெளியிட்டிருக்கிறார். உறுதி கூறி இருக்கிறார்.

இந்தச் சட்டத்தின் பயனாய் அமெரிக்கர்களின் உள்நாட்டு நன்மை வெகுவாய் அதிகரிக்கும். பொருளாதார துறையில் பலன்களை கவனிப்போமானால் லக்ஷக்கணக்கான வேலையில்லா அமெரிக்கர்களுக்கு தொழில் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. இந்த நன்மையால், பிரிடனுக்குப் பாதகமாக அமெரிக்காவில் நடந்துவரும் பிரசாரமும், ஐந்தாம் படையினரின் காரியங்களும் பாதிக்கப்பட்டுவிடும்.

வரும் காலத்தில், இரண்டு மகத்தான ஆங்கிலம் பேசும் நாகரீக நாடுகளுக்குள் ஒத்துழைமையை இந்த சட்டம் நிச்சயமாய் அதிகரிக்கும். தற்காலத்தில், ஏதேச்சாதிகார ஆதிக்க அசுரனை நிர்மூலமாக்குவதில் இரு தேசங்களும் கூட்டாளிகளாக உழைப்பார்கள் என்பதற்கு இது முக்கிய அறிகுறி என்றே சொல்லவேண்டும்.

---

# வார யுத்தச் செய்திகள்.

(8—5—41-லிருந்து 14—5—41-வரை).

## இராக்கின் நிலைமை.

பாஸ்ராவிலும், ஹபானியாவிலும் தற்போதைக்கமைதியேற்பட்டிருக்கிறது. அங்கேயுள்ள சிறு பிரிடிஷ் விமானப்படை இராக் துரோகிகளை விரட்டி அடித்து, கன்டோன்மெண்டில் ஸ்தாபித்து நிற்கிறது. பாஸ்ராவிலுள்ள சைனியங்கள் பலப்படுத்தப்படுகின்றன. அராபித் தலைவர்களெவரும் ரஷீத் ஆலியை

ஆதரிக்கவில்லை. பொதுமக்களும் பிரிட்டனைவிட்டுவிட இஷ்டமில்லை: எண்ணெய்—குழாயின் பக்கத்திலிருக்கும் ருட்பாகோட்டை மே 2-ல் கலகக்காரர்களால் பிடிக்கப்பட்டாலும் மே 9-ல் அதிலிருந்தவர்கள் சரணமடைந்து ரமாதி, பலூஜை நகரங்களுக்கோடிவிட்டார்கள். ஹெட்ஜாஸ் அரசனை, இபின்ஸவுதி ரஷீத்துக்கு உதவிசெய்ய மறுத்துவிட்டார். இரான் அரசாங்கம் ரஷீத் செய்த காரியத்தை கண்டிக்கிறது. துருக்கியும், எகிப்தும் சமாதானம் செய்யப் பார்க்க, ரஷீத் சில நிபந்தனைகளைக் கேட்கிறான். எவ்வளவு பிரிடிஷ்—துருப்புகள் இராக்கிலிருக்கலாமென்பதைப்பற்றி ஒரு பிரிடிஷ் இராக் கோஷ்டி நிர்ணயிக்க வேண்டுமாம். இராக்குக்குள்வந்த பிரிடிஷ் சைனியங்கள் இராக்கிலேயே தங்காது, வெளியேறி போகவேண்டிய இடத்துக்குப் போய்விடவேண்டுமாம். இதெல்லாம் ஏற்கனவே பிரிட்டனோடு செய்துகொண்ட உடன்படிக்கைக்கு விரோதமானதால், ‘இராக்கைப் பிடித்துக்கொள்ளும் எண்ணம் பிரிட்டனுக்குக்கிடையாது: ஆனால் செய்து கொண்டிருக்கும் உடன்படிக்கைப்படி இராக் நடந்துகொள்ளவேண்டும். முதலாவதாக ஹபானியாவிலிருக்கும் இராக் துருப்புகளை அப்புறப்படுத்தி, பொதுவாக பிரிடிஷ் துருப்புகளை யெதிர்ப்பதும் நிற்கவேண்டும்’ என்று பிரிடிஷ் அயல்நாட்டு மந்திரி சொல்லிவிட்டார்.

ஜெர்மனியின் உதவியை ரஷீத் ஆலி நாடுவதாகத் தெரிகிறது. ஆனால் ஜெர்மனியின் உதவி பொய்ப் பிரசாரத்தைத்தவிர வேறொன்றுமில்லை. பாலஸ்தினத்தில் கலகமென்றும், நெப்லூஸா நகரத்தில் பிரிடிஷ் துருப்புகளை அராபியர்கள் யெதிர்த்ததாகவும் ஒலிபரப்பிற்று. ஆனால் ஒலிபரப்பிய அன்றுதான் அராபியர்கள் பிரிடிஷ் சைனியத்தில் சேர்ந்துகொண்டதற்கு நெப்லூஸா பொதுமக்கள் கொண்டாட்டம் ஒன்றைக் கொண்டாடினார்கள்.

துருக்கிக்கு ஜெர்மன் ஸ்தானிகரான வான் பேபன் திரும்பியதிலிருந்து அநேகவிதமான வதந்திகள் பிறந்திருக்கின்றன. ஜெர்மன் துருப்புகளை துருக்கி வழியாகக்கொண்டுபோகவில்லையென்று சொல்லுகிறாராம். ஜெர்மன் விமானங்கள் விஷியின் அனுமதியைப்பெற்று ஸிரியாவில் வந்து இறங்குகின்றனவாம். இதற்கு ஜனாதிபதி ரூஸ்வெல்டின் ஆக்ஷேபனையோடு, இங்கிலாந்து தனக்கு நேயமாயிருந்த பிரான்ஸ் தேசம் இப்பொழுது எதிரியோடு ஒத்துழைப்பதை நோக்கி, மனம் கசந்து பிரான்ஸை சும்மாவிடக்கூடாதென்கிறது. பிரான்ஸானது ஆர்மிஸ்டிஸ் உடன்படிக்கைக்கு விரோதமாக இந்த உதவியைக்கொடுத்திருக்கிறது.

இராக்கோடு, ருஷ்யா ராஜீய சிநேகத்தைப் புனருத்தாரணம் செய்துகொண்டிருக்கிறது. ஆனால் இதிலிருந்து ரஷீத் ஆலியின் கலகத்தை ஒப்புக்கொண்டதாகச் சொல்லமுடியாது.

**மேற்குப் பாலைவனம்.**—இங்கு இருதிறத்தாரும் தளவாடங்களைச் சேர்த்துக்கொண்டு, படைகளை பலப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இருகக்ஷியும் முன்னேறுவதும், பின் வாங்குவதுமாகவிருக்கிறது. போர்க்களத்தில் படுவெய்யில்—(122° F) மணல்-புயல்கள் அடிக்கின்றன. திங்கட்கிழமையன்று ஜெர்மானியர் முன்னேறினார்கள்; இப்பொழுது பிரிடிஷ் படைகள் இங்கும் முன்னேறி, டொப்ருக்கிலும் தாக்குகின்றன. ஜெர்மானியருக்குச் சாமான்கள் வரும் பெங்காஸி, ட்ரிபோலி துறைமுகங்கள் தாக்கப்படுகின்றன. எதிரியானவன் இந்த வாரத்தில் ஸூயஸ் கால்வாயை இருமுறைத் தாக்கினான்.



**அபிஸீனியா.**—இங்கே எமதானி, யுலெடொர்ட், கோரம், அல்கியென்ற இடங்கள் பிடிக்கப்பட்டு, அம்பா அலாகியும் பல முனைகளிலிருந்து தாக்கப்பட்டது. சில தினங்களில் இந்த ஊர் பிடிபட்டுவிடும்.

மே 5-ல் சக்கிரவர்த்தி ஹெயிலிஸலாஸி அடிஸ் அபாபாவுக்குள் பிரவேசித்தார். அவர் தலைநகரைவிட்டுப் புறப்பட்டு 5 வருஷங்களாகின்றன. பிரவேசித்தவுடன் தன் நன்றியை அறிவித்து பிரிட்டனுக்குத் தந்தி கொடுத்து, தன்னுடைய சைனியங்களை பிரிடிஷ் சேவைக்கனுப்புவதாக வாக்களித்திருக்கிறார்.

**கடற்சண்டை.**—மே 12உடயோடு முடிவான வாரத்தில் எதிரியின் கப்பல்கள் இடைவிடாது எதிர்க்கப்பட்டன. பெரிய வியாபார குரூயிஸர்களிலிருந்து, காவல் கப்பல்கள் உள்பட 12 கப்பல்கள் அமிழ்த்தப்பட்டன. மே 8-ல் பெங்காஸியில், 5,000, 6,000 டன்னுள்ள யுத்த வெடிகள் எடுத்துச்சென்ற கப்பலொன்று உடைக்கப்பட்டது. தளவாடங்கள் ஏற்றிச்சென்ற 3,000 டன்கொண்ட மற்றொரு கப்பலும்உடைக்கப்பட்டது ப்ரெஸ்டில் நிற்கும் ஷார்ன்ஹார்ஸ்ட், நீஸ்நௌ குரூயிஸர்கள் கவசத்தைத் துளைக்கும் வெடிகளால் தாக்கப்பட்டன. மே 11-ல் 11,000 டன் கொண்ட கோபர்க் வியாபாரக் கப்பலும், 7,000 டன்கொண்ட கெட்டிபிரோவிக் என்ற எண்ணெய்க் கப்பலும் தடுக்கப்பட்டன. மத்தியதரைக் கடலில் தெற்குத் திசையை நோக்கி துணைக்கப்பல்களோடு சென்ற கப்பல்களும் எதிர்க்கப்பட்டு உடைக்கப்பட்டன.

சென்ற மூன்று மாதங்களில் அமெரிக்காவிலிருந்து சாமான்களை ஏற்றிச் சென்ற 205 கப்பல்களில் 8 கப்பல்கள்தான் சேதமானதாக வான்டெர்பர்க் கொடுத்த கணக்கு சரியல்ல. இந்தக் கணக்கை வான்டெர்பர்க்குக்கு அனுப்பிய லாண்டே அதை பிசகென்று ஒப்புக்கொண்டிருக்கிறார். யுத்த தளவாடங்களை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் மட்டும் பத்திரமாகப் போய்ச் சேர்ந்தால் போதாது. உணவுப் பொருள்களைக் கொண்டுபோகும் கப்பல்களும் போய்ச்சேரவேண்டும். சாப்பிட்டுப் பிழைத்திராவிட்டால், யுத்த தளவாடங்களெதற்கு?

பிரிடிஷ் கப்பல் இலாகாவிலிருந்து கப்பல் நஷ்ட விவரங்கள் கிடைத்திருக்கின்றன. எதிரிக்கு 6,00,000 டன் கப்பல்களும், நேயக் கக்ஷிக்கு 4,88,124 டன் கப்பல்களும் ஏப்ரலில் நஷ்டம். பின் சொன்ன தொகையில் 1,87,254 டன்கள் கிரேக்கக் கப்பல்கள். சைனியங்களை வெளிப்படுத்தியபோது சேதமாயின. அட்லாண்டிக்கில் இந்த மாதத்தில் நஷ்டம் ஸ்வல்பம். கூடுதலில் நஷ்டம் முந்திய மாதங்களைப்போல்தானிருக்கிறது.

## கப்பல்-பாலம்.

ரூஸ்வெல்ட் கப்பல்களைக்கொண்டு கடலில் பாலம் போடுவதாகச் சொல்லுகிறார். இதற்காக இதர தேசத்துக் கப்பல்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன—புதுக்கப்பல்கள் கட்டப்படுகின்றன. வியாபாரப் பாதைகள் மாற்றப்படுகின்றன. சும்மாயிருக்கும் அயல்நாட்டுக் கப்பல்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இவைகளை எடுத்துக்கொள்ள யுனைடெட் ஸ்டேட்ஸ் சபைகள் சம்மதம் கொடுத்துவிட்டன. பெரிய ஏரிகளில் ஓடும் கப்பல்களும் எடுத்துக்கொள்ளப்படும்.

அமெரிக்கக் கடற்கரை சிப்பந்திகளைக்கொண்டு அயல்நாட்டுக் கப்பல்களை, ஓட்டச் சொல்லலாம். இவைகள் சொந்தக் கொடிகளோடு செல்லும்.

அட்லாண்டிக்கில் இங்கிலாந்துக்கும், அமெரிக்காவுக்கும் பொதுவாக ஒரு கப்பற்படை தலைமையுமேற்படலாம்.

## அமெரிக்க, பிரிடிஷ் அபிப்பிராயங்கள்.

அமெரிக்க உதவியைப்பற்றி இந்த வாரத்தில் ஹாலிபாக்ஸ் பிரபு, ஜெனரல் ஸ்மட்ஸ், வெண்டல் வில்கி, கார்டல் ஹல், ஸிடிம்ஸன், விநன்ட் முதலியவர்கள் பேசிய பேச்சிலிருந்து சில பாகங்கள் கீழே மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.

**ஹாலிபாக்ஸ் பிரபு, பிரிடிஷ் ஸ்தாநிகர்.**—யுனைடெட் ஸ்டேட்ஸ் உதவியைக் கொண்டு ஹிட்லர் கொடுமையை பிரிடன் ஒழிக்க முடியும். உலகத்தில் உற்பத்தியாகும் எண்ணெயில் 100-க்கு 70 பாகமும், தாம்பரத்தில் 85 பாகமும், ரப்பரில் 91 பாகமும் பிரிடனுக்குண்டு. இதுவே நமக்கு வெற்றிதரும். எதிரிக்கு இந்த சரக்குகள் போதாதால் அவன் தோற்பது நிச்சயம். ஸர்வாதிகார நாடுகளைக் காட்டிலும் இனி ஸ்வதந்திர நாடுகள் யுத்த தளவாடங்களை இரண்டு பங்கு உற்பத்தி செய்யப்போகின்றன.

**ஜெனரல் ஸ்மட்ஸ், தென் ஆபிரிக்கா பிரதம மந்திரி.**—பிரசாரத்தால் மட்டுமல்லாது, சரியான காரியம் என்ற நம்பிக்கையுடன் அமெரிக்கர்கள் சண்டையில் சேரப்போகிறார்கள். எதிர்காலத்திய க்ஷேமத்தைக் கருதும் ஒவ்வொருவரும் இந்த யுத்தத்தில் ஜெர்மனியை எதிர்க்காதிருக்கமுடியாது.

**வெண்டல் வில்கி.**—நம்முடைய வாழ்க்கை வழியை அழிக்க நினைப்பவர்களோடு நாம் சமாதானம் செய்துகொள்ளமுடியாது. எதிரி நம்மைத்தாக்க நினைத்துக் கொண்டிருக்குமிந்த சமயத்தில் சிலர், சமாதானம் செய்துகொள்ள வேண்டுமென்கிறார்கள். யுனைடெட் ஸ்டேட்ஸ் தளவாடங்களை அதிகமாக உற்பத்திசெய்து, பிரிடனுக்குப்போய்ச் சேரும்படி செய்தால் இங்கிலாந்து ஜயிப்பது நிச்சயம். 'நீர் இது வரையில் எங்களைப்போன்ற எதிரிகளை பார்த்ததில்லை. நேர் யுத்தம் செய்யும்போது உம்மைக்காப்பாற்ற உம்முடைய தெய்வத்தைப் பிரார்த்தித்துக் கொள்ளும். உம்முடைய தெய்வம் ஏதோதெரியாது, நீர்தான் கிருஸ்துமதமல்லவே' என்று நான் ஹிட்லருக்குச் சொல்லுவேன்.



**கார்டல் ஹல், யுனைடெட் ஸ்டேட்ஸ் காரியதரிசி.**—'ஏன் வீண் பயம் பயப்படுகிறீர்கள். 20 மைல் கடலைத்தாண்டி பிரிடனைப்பிடிக்க முடியாத ஜெர்மானியரா அட்லாண்டிக்கில் 3000-மைல் தாண்டி அமெரிக்காவுக்கு எப்படி வந்துவிடுவார்கள்' என்று சிலர் சொல்லுகிறார்கள்.

பிரிடன் பிடிபடாததற்குக் காரணம் பிரிடன் ஒரு கோட்டையாகச் செய்யப்பட்டு, அதை 400 லக்ஷம் வீரர்கள் காப்பாற்றிவருவதுதான்.

ஜெர்மானியர்களை இப்பொழுது தடுப்பது சமுத்திரமல்ல; பிரிடிஷ் மக்களின் மனோதைரியமும், அவர்கள் கப்பல் வலிமையும்தான். இவை போய்விட்டால் அட்லாண்டிக் ராஜபாட்டையாகப்போய் எதிரிகள் மேற்கு திசையை நோக்கி வந்துவிடுவார்கள். நம்முடைய பாதுகாப்பு பலஹீனப்பட்டுவிடும்.

ஆகையால் பிரிடன் தோற்றால், சமுத்திரத்தின் காப்புப்போய், நமக்கே ஆபத்தாய் முடியும். பெரிய சமுத்திரத்தைத் தாண்ட சற்று தாமத மேற்படலாம். ஆனால் நமக்கு முடிவில் ஆபத்துத்தான். ஆகையால் சமாதானத்தில் நோக்கம் கொண்ட இதர தேசங்களோடு சேர்ந்துகொண்டு இப்பொழுது எதிரியைவெல்ல முயலவேண்டும்.

**ஸ்டிம்ஸன், யுனைடெட் ஸ்டேட்ஸ் யுத்த மந்திரி.**—பல வருஷங்களாக நாம் கப்பற்படையைத் திரட்டியிருக்கிறோம். இதன் உதவியைக்கொண்டு இப்பொழுது யுத்த சாமான்களை பிரிடனுக்குச் சேரும்படி செய்தால் நம்முடைய தேச ஸ்வதந்திரம் பாதுகாக்கப்படும்.

பிரிடிஷ் கப்பற்படையோடு சேர்ந்து நம்முடைய கப்பல்கள் கடலில் நாற்புறங்களையும் காக்கும்.

இம்மாதிரியாக நாஸிகளை தடுத்த பின் ஜனநாயக நாடுகள் வெற்றிபெறும். நாஸிகளின் கொடுங்கோலும், அழிந்து உலகில் ஸ்வதந்திரம் மறுபடியும் தலைகாட்டும்.

அவ்விதமில்லாது, பிரிடிஷ் படையின் பலம் குன்றுகிறவரையில் நாம் சும்மாயிருந்தால் நம்முடைய பலமும் குறைந்து போகும்.

இப்பொழுது இருக்கும் நிலைமையில் நாம் சேருகிற கக்ஷியே ஜயிக்கும். நாம் இப்பொழுது சும்மாயிருந்துவிட்டு, பிரிடிஷ் கப்பற்படை அழிந்துவிட்டால் நம்முடைய கப்பற்படைக்கும் முதன்மை போய்விடும். ஆகையால் இதுவே உதவி செய்யும் தருணமாகும்.

**விநன்ட், யுனைடெட் ஸ்டேட்ஸ் ஸ்தாநிகர்.**—இது பிரிடனைச் சேர்ந்த யுத்த மட்டுமல்ல. ஸ்வதந்திரத்தையும், அமைதியையும் நாடும் எல்லோரையும் சேர்ந்தது. உலகத்தின் க்ஷேமத்துக்கு நம்முடைய கப்பற்படைகள் ஒன்றாகவேண்டும். தங்கள் நாகரீகத்துக்காகவும், நாகரீக உலகத்தின் க்ஷேமத்திற்காகவும் இப்பொழுது ஆங்கிலம் பேசும் பிரிடிஷ்காரர்களும் அமெரிக்கர்களும் சேர்ந்திருக்கிறார்கள். நல்லவர்களின் கக்ஷி ஒன்றே ஒன்றுதான். சர்வாதிகாரிகள் ஒரு கக்ஷியில் இறங்கினால் நல்லவர்களெல்லோரும் எதிர் கக்ஷியில்தான் நிற்கவேண்டும்.

## விமானப்போர்.

இந்த வாரத்தில் நிலவு பலத்தால் இராக் காலங்களில் கடும் விமானப்போர் ஏற்பட்டது. ஜெர்மன் பிராந்தியத்தில் மான்ஹீம், ப்ரெஸ்ட் (ஞாயர், புதன்) படையெடுப்புத் தீறைமுகங்கள், ஹாம்பர்க் (சனி, ஞாயர்) ஹெலிகோலாண்ட் முதலிய இடங்கள் தகர்க்கப்பட்டன. பிரிடிஷ் தீவுகளில் பெல்பாஸ்டும், லண்டனும் எதிர்க்கப்பட்டன. லண்டன் எதிர்ப்பில், பார்லிமெண்ட் சபையும், வெஸ்ட் மின்ஸ்டர் கோவிலும், கண்காக்ஷி சாலையும் பழுதுபட்டன. கண்காக்ஷி சாமான்கள் ஏற்கனவே அப்புறப்படுத்தப்பட்டு விட்டன. கோவிலின் முக்கிய பாகங்கள் கெடவில்லை. 'பிக் பென்' என்ற பிரபல கெடியாரம் ஓடிக்கொண்டிருக்கிறது. காமன்ஸ் சபை அடியோடு சிதைந்துவிட்டதால் இனி இச்சபையானது மற்றொரு இடத்தில் கூடும்.

இந்த லண்டன் எதிர்ப்பில் ஜெர்மானியருக்கு 33 விமானங்களும், அதன் விமானிகளும் நஷ்டம்.

கிருஷ்ண பக்ஷம் வரவர விமான எதிர்ப்பு குறைந்து வருகிறது. சென்ற மூன்று ராத்திரிகளாக லண்டன் மேல் படையெடுப்புக் கிடையாது.

மே மாதத்து முதல் 12 தினங்களில் 137 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன.

## சைனாவில் யுத்தம்.

சில மாதங்களில் ஓய்ந்த சண்டை இப்பொழுது வட சைனாவில் மும்முரமாக நடக்கிறது. ஸின்யாங், யிங்ஷான், ஸியுகெய்ஸியன் முதலிய இடங்களிலிருந்து மூன்று ஜப்பானிய சைனியங்களெதிர்க்கின்றன. சைனாவின், யுத்த காலத்திய பிரதான பட்டணமாகிய சுங்கிங் எதிர்க்கப்பட்டது. யுவான்கென், வெய்சாவ், போகியோ, டங்பெங் ஊர்களை பிடித்து விட்டதாக ஜப்பானியர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

மஞ்சூரியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட சைனியங்களைக்கொண்டு தென்-ஷான்ஸ், வட ஹோனான், வட ஹூபே, க்வான்டங் முதலிய இடங்கள் தாக்கப் படுகின்றன.

**ருஷ்யாவில்.**—ஸ்டாலின் ஜனசபைக்கு தலைவராக்வும், பிரதம மந்திரியாகவும், மாலொடோவ், உபதலைவராகவும், முன்போல்; அயல் நாட்டு மந்திரியாகவும் அமைந்திருக்கிறார்கள்.

## உடன்படிக்கைகள்.

1. இந்துசைனா, வியாபார விஷயங்களில் சுங்கம் முதலிய விஷயங்களில் ஜப்பானுக்குத் தள்ளிக்கொடுக்கவும், குறைக்கவும், அதேமாதிரி பதிலாக, ஜப்பான் இந்துசைனாவுக்கு உதவிசெய்யவும், இந்துசைனாவில் விவசாயம், சுரங்கம், நீர்வீழ்ச்சி சக்தி முதலிய தொழில்களுக்கு ஜப்பான் முதல்போட்டு நடத்தவும் ஒரு உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கிறது.



2. பிரான்ஸில் வைக்கப்பட்டிருக்கும் ஜெர்மன் சைனியத்தின் சம்ரக்ஷணைக்காக பிரான்ஸ் கொடுக்கவேண்டிய தொகையை கால்பங்கு குறைத்து ஆக்கிரமிக்கப் பட்ட, ஆக்கிரமிக்கப்படாத பிரான்ஸின் இருபாகங்களின் எல்லைகளை மாற்றி இவ்விரண்டு பாகங்களுக்குள் சாமான்கள் பணம் போக்குவரத்தை சுலபப் படுத்த ஒரு ஒப்பந்தம் விஷிக்கும், ஜெர்மனிக்கும் முடிவாயிருக்கிறது. இதற்கு பதிலாக பிரான்ஸ் எதைச் செய்ய ஒப்புக்கொண்டிருக்கிறதென்று தெரியவில்லை. பிரிடிஷ்—அமெரிக்க தொழிலுக்குப் பேட்டியாக பிரெஞ்சு ஜெர்மன் தொழில் அமைப்பு ஏற்படுமாம். இதற்கு பிரான்ஸிலிருக்கும் பூசத்து உலோகத்தொழில்கள் உபயோகப்படுமாம். ஜெர்மன் டாங்குகளையும், நீர்மூழ்கிகளையும் பழுது பார்க்க பிரான்ஸ் ஒப்புக்கொண்டிருக்கிறதாம். மொராக்கோ, ஸிரியா நிலயங்களையும் ஸரகோஸா—ஸ்பெயின் ரயில்பாதையையும் விட்டுக்கொடுக்கவும் ரகஸ்ய உடன்படிக்கையிருக்கலாம்.

## ருடால்ப் ஹெஸ் மர்மம்.

கிளாஸ்கோவுக்குச் சமீபத்தில் 8 மைலுக்கருகேயுள்ள நியூடன் மியர்னஸ் என்ற கிராமத்தில், மே 10-ம் தேதி, சனிக்கிழமை இரவு ருடால்ப் ஹெஸ் விமானத்தில் வந்திறங்கினார். இவர் ஜெர்மனியின் உப—ப்யூரர், ஹிட்லர், கோயரிங்குக்குப்பின் தலைமை வகிக்கவேண்டியவர். நாஸி அதிகாரிகளில் மூன்றாவது தலைவர். 18 வருஷகாலமாக ஹிட்லரின் ஆப்த நண்பர். மெயின்காம்ப் புஸ்தகத்தின் முதல் பாகத்தை ஹிட்லர் சொல்லி இவர் வரைந்தவர். ஹிட்லரின் 'நிழல்' என்றும், பக்தரென்றும் இவரைச் சொல்லுவதுண்டு. சென்ற மாதம், உத்தியோக முறையில் ஸ்பெயினுக்குப் போனதாகச் சொல்லிப் பிறகு மறுக்கப் பட்டது. ஏப்ரல் 20-ம் தேதியன்று ஹிட்லர் பிறந்தநாள் உத்ஸவத்தில் முக்கியமான பிரசங்கமொன்றைச் செய்தார். அப்படியிருக்க ஊரைவிட்டு, பிரிடனுக்கு வருவானேன்.

சனிக்கிழமை பவேரியாவிலுள்ள, ஆக்ஸபர்கிலிருந்து புறப்பட்டு, 700 மைல் தூரம், சண்டை விமானமொன்றில் வெடிகளில்லாத, தனியாக ஓட்டி வந்து, தனது நண்பராகிய ஹாமில்டன் டியூக்கைப் பார்க்க ஸ்காட்லாண்டு சேர்ந்து, பெட்ரோல் இல்லாது, விமானத்தைக் கவிழ்த்து விட்டு, குடையைக்கொண்டு கீழே இறங்கி, அப்பொழுது, கணைக்காலில் காயப்பட்டு டேவிட் மாக்லீன் என்ற குடியானவனால் அவன் வீட்டில், ஆதரிக்கப்பட்டு, பிறகு, அதிகாரிகளால், கிளாஸ்கோ ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இப்பொழுது லண்டனுக் கருகே ஒரு இடத்தில் கைதியாக வைக்கப்பட்டிருக்கிறார்.

அவர் கொண்டுவந்திருக்கும் படங்களாலும், தெரிந்தவர்கள் பார்வையிட்டதிலிருந்தும் இவர் ருடால்ப் ஹெஸ் என்பது ஊர்ஜிதமாய்விட்டது. ஆனால் வந்த காரணம் புரியவில்லை.

பித்துப்பிடித்துப்போய், புத்திமருட்டத்தின் பேரில் வந்து விட்டதாக ஜெர்மானியர் சொல்லுவது நம்புவதற்கில்லை. பித்துப்பிடித்திருந்தால் அவரை

உத்தியோகத்தில் வைத்திருப்பானேன். அவர்தான், ஜெர்மானியருக்கு பயந்து இங்கிலாந்துக்கு வந்திருப்பாரா. ஜெர்மனியில் சித்திரவதைக்குள்ளாவதைக் காட்டிலும் இங்கிலாந்தில் சிறைப்படுவது நலமென்று வந்துவிட்டார் போலும். அவர் தனியாய் 700 மைல் வந்து, நினைத்த இடத்திலிறங்கியதே அவருடைய புத்தி ஸ்வாதீனத்தைக் காட்டுகிறது:

சமாதானச் செய்தியொன்றையும் கொண்டுவரவில்லை. கொண்டு வந்தாலும் கேட்க பிரிடனில் ஒருவரும் கிடையாது. ஒரு சமயம் ஹாமில்டன் டியூக் மூல்யமாக சமாதானப்பேச்சைப்பேச முயற்சி செய்திருக்கலாம்.

ஜெர்மனியிலிருந்தால் 1934-ல் நடந்ததுபோல் கொலைகளேற்பட்டு தன்னையும் கொல்லுவார்களென்று பயந்து ஓடிவந்திருக்கலாம். இதிலிருந்து ஜெர்மனியால் பிரிடனை தோற்கடிக்க முடியாதென்று அவர் மனதில் பட்டிருக்கவேண்டும். ஜெர்மனியில் கஷ்டமும் பஞ்சமும் அதிகரித்து விட்டதாக இவர் ஸ்காட்லண்டு குடியானவனிடத்தில் சொன்னதாகத் தெரிகிறது. ஜெர்மனியிலிருக்கும் கொடுங்கோலை நிவர்த்திசெய்ய வேண்டுமென்றும் சொன்னாராம்.

இதிலிருந்து நாஸிக் கக்ஷியில் ஏற்பட்டிருக்கும் கலசலும் வெளியாகிறது. ஹாலிபாக்ஸ் பிரபு சொன்னபடி, இதிலிருந்து நாஸிக் கக்ஷிக்கும் அதைச் சேர்ந்த கூட்டத்துக்கும் விநாச காலம் வந்துவிடலாம்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேச தேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

4—5—41. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| | ஒரு சாமான் கப்பல்.—ஸ்காகர் ராக் (Skagerrak). | ... | மூழ்கடிக்கப்பட்டது. |
| | மற்றொரு சாமான் ஏற்றிச்செல்லும் கப்பல். | ... | ...... |
| | கப்பல் துறைகள்.—எகர்ஸண்ட் (Egersund). | ... | ...... |
| | தூரத்தெரியும் லைட்டுகள்.—ஸ்டவாங்கர் (Stavanger). | ... | அணைந்துபோயிற்று. |
| | சைனியங்கள் வசிக்குமிடங்கள், விமான நிலயம்.—க்வர்குவில் (Querqueville). | ... | சேதமாயின |
| | கப்பல் துறைகள்—ஸெண்ட் நாஸேர் (St. Nazaire). | ... | தீயும், வெடியும கிளம்பின. |
| | ஜெர்மன் யுத்த கப்பல்கள், கப்பல் துறைகள்.—ப்ரெஸ்ட் (Brest). | நஷ்டமில்லை. | ...... |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

4—5—41. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | மோட்டார் வண்டிகள்.—மாரோவா (Maraua) பிரதேசம். | ... | மோட்டார் வண்டிகள் நாசமாயின. |
| | விரோதி ராணுவ தலைமைக் காரியாலயம்.—டொப்ருக் (Tobruk)குக்குக் கிழக்கே. | ... | தீப்பிடித்தது. |
| | இதாலிய ராணுவக் காரியாலயம்—அபிஸீனியா (Abyssinia). | ... | ...... |
| | சாமான் கிட்டங்கிகள், தவியல்கள், மோட்டார் வண்டிகள், சைனியங்கள்.—ப்ராகா (Fraga) கணவாயிக்கும், டெஸ்ஸி (Dessie)க்கும் மத்தியில். | 2 விமானங்கள். | பல மோட்டார் வண்டிகள், சாமான் கிட்டங்கிகள் எல்லாம் சேதமாயின. |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| | தரையிலிருக்கும் விமானங்கள்.—பெனினா (Benina). | ...... | 5 விமானங்கள். |

5—5—41. (திங்கட்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| | விமான நிலயங்கள்.—ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பிரான்ஸ் (France). | ...... | சேதமாயின. |

இராக் (Iraq).

| | | | |
|---|---|---|---|
| | இராகி பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கும் இடங்கள், மோட்டார் வண்டிகள் சைனியங்கள்—ஹபானியா (Habbaniyah) விமான நிலயத்துக்கு அருகே. | ...... | பலத்தசேதம். |
| | ராணுவக் கட்டடங்கள்.—திவானியா (Diwaniyah). | ...... | இடிந்துபோயின. |
| | மோட்டார் வண்டிகள்—பல்லூஜா (Falluja). | ...... | ...... |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | விமான நிலயங்கள்.—பெனினா (Benina), டெர்னா (Derna), பார்டியா (Bardia), பெர்க்கா (Berka) முதலிய ஸிரினேகா (Cyrenaica) விலுள்ள பலவிமான நிலயங்கள், பார்ஸி (Barce), பெங்காஸி (Benghazi). | ...... | சேதமாயின. |
| | கவசமணிந்த மோட்டார் வண்டிகள்—பார்டியா (Bardia), எல்ஆடம் (El Adem), காபுஸ்ஸோ (Capuzzo), ஸோலும் (Sollum) பிரதேசங்கள். | ...... | மோட்டார் வண்டிகளுக்கும், துருப்புகளுக்கும் பலத்த நஷ்டம். |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**6—5—41.** (செவ்வாய்க்கிழமை).

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—விரோதிக் கப்பல்கள்—டச்சு (Dutch), ஜெர்மன் (German) கடற்கரைகள். | ... | ஒரு பாராப் படகு மூழ்கடிக்கப்பட்டது. மற்றொன்று தீக்கிரையாகியது. |
| இரவில்.—ஹாம்பர்க் (Hamburg) ராணுவ முக்கியத்வம் வாய்ந்த இடங்கள்—வடமேற்கு ஜெர்மனி (Germany). | ... | பலத்த சேதம். பெருந் தீ கிளம்பியது. |
| கப்பல் துறைகள்.—லாஹவேர் (Le Havre). | ... | சேதமாயிற்று. |
| ராணுவ முக்கியத்வமுள்ள இடங்கள்.—ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளின் கடற்கரைகள். | ... | ...... |
| சாமான் ஏற்றிச் செல்லும் கப்பல்—ப்ரிஸியன் (Frisian) தீவுகள். | 3 விமானங்கள். | மூழ்கடிக்கப்பட்டது. |

### இராக் (Iraq).

| | | |
|---|---|---|
| விமான நிலயம்.—மோவாஸ்கார் ராஷீட் (Moascar Rashid). | ...... | சேதமாயிற்று. |
| கலகக்கார சைனியங்கள், போக்குவரத்து சாதனங்கள்.—இராக் (Iraq). | ...... | தகர்க்கப்பட்டது. |
| ஒத்தாசை.—இராக் (Iraq) கிலிருக்கும் பிரிடிஷ் சைனியங்கள். | ...... | ...... |

**7—5—41.** (புதன்கிழமை).

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—வேவுபார்த்தல்.—விரோதி ஆக்கிரமித்திருக்கும் நாடுகள். | 1 விமானம் | ...... |
| இரவில்.—ஜெர்மன் யுத்தக் கப்பல்கள். | ... | ...... |
| கப்பல் துறைகள்.—ப்ரெஸ்ட் (Brest). | ... | சேதமாயின. |
| ஸப்மரைன் (Submarine) நிலயம்.—ஸெண்ட் நாஸேர் (St. Nazaire). | ... | தகர்க்கப்பட்டன. சாமான் கிட்டங்கி சேதமாயிற்று. |
| கப்பல் துறைகள்.—ப்ரமன் (Bremen). | ... | ...... |
| விரோதிக் கப்பல்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரை. | 2 விமானங்கள். | ...... |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**7—5—41.** (புதன்கிழமை)—தொடர்ச்சி.

### இராக் (Iraq).

| | | |
|---|---|---|
| ராணுவக் கட்டடங்கள் விமான நிலயம்.—பாக்தாத் (Baghdad). | ...... | ...... அதிகச் சேதம். |
| தரையிலிருக்கும் விமானங்கள்.—ஹனையடி (Hanaidi). | ...... | ...... |

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| ராணுவ முக்கியமுள்ள இடங்கள் கப்பல்கள்.—பென்காஸி (Benghazi). | ...... ...... | ...... தீயும், வெடியும் கிளம்பின. |
| விமான நிலயம், தரையில் வைத்திருக்கும் விமானங்கள்.—பெர்க்கா (Berka). | ...... | 2 விமானங்கள் நாசமாயின. |
| தரையிலிருக்கும் விமானங்கள்.—பெனினா (Benina). | ...... | பலசேதமாயின. |
| டேர்னா.—(Derna). | ...... | ...... |
| இதாலிய சைனியங்கள்.—அம்பா அலாகி (Amba Alagi) | | பலருக்குக் காயம் |
| விமானங்கள் இருக்குமிடம்.—கோண்டார் (Gondar). | நஷ்டமில்லை. | ...... |

**8—5—41.** (வியாழக்கிழமை).

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—கப்பல்கள்.—நார்வே (Norway)க் கடற்கரை. | 1 விமானம். | ஒரு கப்பல் தீக்கிரையாகியது. |
| இரவில்.—ஜெர்மன் படையெடுப்பு துறைமுகங்கள்:—இங்கிலீஷ் கால்வாயி (English Channel)க்கு மற்றொரு பக்கத்தில். | ...... | தவிடுபொடியாக்கப்பட்டது. |
| ஜெர்மன் விமானநிலயங்கள்—வட பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium). | ...... | ...... |
| கப்பல் கட்டுமிடங்கள் தொழிற்சாலைகள் இருக்குமிடம்.—ஹாம்பர்க் (Hamburg) ப்ரமன் (Bremen). | ...... | தீயும், வெடியும் கிளம்பின. |
| பெர்லின் (Berlin), எம்டன் (Emden). | ...... | பலத்த சேதம். |
| ராணுவ முக்கியமுள்ள இடங்கள்:—வடமேற்கு ஜெர்மனி (Germany). | ...... | ...... |
| கப்பல்கள்.—ஜெர்மன் கடற்கரை. | ...... | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **8—5—41.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | துணைகாவல் கப்பல்கள்.—மத்தியதரைக் கடல் (Mediterranean). | ...... | 2 கப்பல்களின் மேல் குண்டுகள் வீழ்ந்தது. 1 விமானம். |
| | வேவு பார்த்தல்.—மத்தியதரைக்கடல் (Mediterranean). | ...... | ...... |
| | **இராக் (Iraq).** | | |
| | விமான நிலயங்கள்.—ஷாராபான் (Sharaban), ஹனுய்டி (Hanaidi). | ...... | 4 விமானங்கள் நாசம்; பல சேதமாயின. 5 விமானங்கள். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விரோதி சையனிங்கள்.—அபிஸீனியா (Abyssinia), பெங்காஸி (Benghazi), பெனினு (Benina) டெர்னு (Derna). | ...... | பெருந்தீக்கள் கிளம்பின. |
| **9—5—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—காவல் காத்தல்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | 2 விமானங்கள். | 2 விமானங்கள். |
| | இரவில்.—தொழிற்சாலைகள், சப்பல் துறைகள்.—மான்ஹீம் (Mannheim), லட்விக்ஷாபன் (Ludwigshafen). | ...... | பெருந்தீ கிளம்பியது. |
| | | ...... | பலத்த சேதம். |
| | ராணுவ முக்கியமுள்ள இடங்கள்.—பெர்லின் (Berlin). | ...... | ...... |
| | கப்பல் துறைகள்.—கலே (Calais), ஆஸ்டெண்ட் (Ostend), ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளிலுள்ள இதர துறைமுகங்கள். | ...... 2 விமானங்கள். | ...... 1 விமானம். |
| | கப்பல் துறைகள்.—புலாயின் (Boulogne), யூமய்டென் (Yumiden). | ...... | ...... |
| | துறைமுகம்.—கிரிஸ்டியன்ஸண்ட் (Christiansand). | ...... | ...... |
| | விரோதி விமான நிலயங்கள்,— தென் நார்வே (Norway). | 1 விமானம். | ...... |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம் | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **9—5—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | விரோதி விமான நிலயங்கள்.— வட பிரான்ஸ் (France). | நஷ்டமில்லை. | சேதமில்லை. |
| | **இராக் (Iraq).** | | |
| | ராஷித் ஆலியின் துருப்புகள்.—ஹபானியா (Habbaniyah)வை முற்றுகை போட்டிருக்கும் சைனியங்கள். | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | சைனியங்களை ஏற்றிச்செல்லும் விமானங்கள், விமான நிலயம்.— பெனினு (Benina), ஜெடாபாயா (Jedabaya). | ...... | பல விமானங்கள் நாசமாயின. |
| | விமான நிலயங்கள்.—டெர்னு (Derna), பெங்காஸி (Benghazi). | ...... | தரையிலிருக்கும் பல விமானங்கள் நாசமாயின. |
| | கோட்டைகள், சைனியங்கள்.—அபிஸீனியா (Abyssinia). | 2 விமானங்கள். | ...... |
| | விமான நிலயம்.—எல் கஸாலா (El Gazala). | | 1 விமானம் |
| | **ரோட்ஸ் (Rhodes)** | | |
| | விமான நிலயம்.— கலாடோ (Calato). | ...... | பலத்த சேதம். |
| **10—5—41.** (சனிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | கப்பல்கட்டும் துறைகள், தொழிற்சாலைகள் இருக்குமிடம்.—ஹாம்பர்க் (Hamburg). | | பல இடங்களில் தீப் பிடித்தது. பலத்த சேதம். |
| | துறைமுகங்கள்.—ப்ரமன் (Bremen), எம்டன (Emden) ராட்டர்டாம் (Rotterdam). | | 4 விமானங்கள் நாசமாயின; பல சேதமாயின. |
| | விரோதிக் கப்பல்கள்.—ஜெர்மன் (German) கடற்கரை. | 7 விமானங்கள் | 1 யுத்தக் கப்பல் சேதமாயிற்று 2 கப்பல்கள் சேதமாயின. |
| | விரோதிக் கப்பல்கள், கப்பல் துறைகள், எண்ணெய்த் தொட்டிகள்.—லா பால்லிஸ் (Le Pallice). | | எண்ணெய்த் தொட்டி தீக்கிரையாகியது. கட்டடங்கள் இடிந்தன. |
| | கப்பல்கள்.—டச்சு (Dutch), டேனிஷ் (Danish) கடற்கரைகள். | நஷ்டமில்லை | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**10—5—41.** (*சனிக்கிழமை*)—*தொடர்ச்சி.*

### இராக் (Iraq).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| கலகக்காரர்கள், ஆக்கிரமித்திருக்கும் விமான நிலயங்கள்.—*இராக்* (Iraq). | ...... | *சேதமாயின.* |
| சைனியங்கள் வசிக்குமிடங்கள்.—*அமாரா* (Amara), *திவானியா* (Diwaniya), *நாஸாரியா* (Nasariya), *க்வாராகான்* (Qaraghan). | *நஷ்டமில்லை.* | *சேதமாயின.* |
| சைனியங்கள் வசிக்குமிடங்கள், கட்டடங்கள், மோட்டார் வண்டிகள் நிறுத்திவைக்கப்படுமிடங்கள்.—*மோஸுல்* (Mosul). | ...... | *கட்டடங்கள் இடிந்தன; தீப்பிடித்தது.* |

### ஸிஸிலி (Sicily.)

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| விமான நிலயங்கள்.—*கடானியா* (Catania), *கோமிஸோ* (Comiso). | ...... | *சைனியங்கள் சுடப்பட்டனர்.* |

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| துறைமுகம், மின்சார உற்பத்தி நிலயம்.—*ட்ரிபோலி* (Tripoli). | *நஷ்டமில்லை.* | *தீப்பிடித்தது. வெடிகள் கிளம்பின.* |

**11—5—41.** (*ஞாயிற்றுக்கிழமை*).

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| ப்ளோம் (Blohm), வாஸ் (Voss) துறைகள் உள்பட எல்லா கப்பல்கட்டும் துறைகள், கப்பல் நிற்கும் இடங்கள், தொழிற்சாலைகள்.—*ஹாம்பர்க்* (Hamburg). | ...... | *தீயும், வெடியும் கிளம்பின. பலத்த சேதம்.* |
| கப்பல் துறைகள்.—*ப்ரமன்* (Bremen). எம்டன் (Emden) ... | 4 *விமானங்கள்.* | ...... |
| கப்பல் நிற்கும் துறைகள்.—*ராட்டர்டாம்* (Rotterdam). | ...... | *சேதமாயிற்று.* |
| கப்பல் துறைகள்.—*இஜ்ம்யூடன்* (Ijmuiden). கடல் விமான நிலயம்.—*டெக்ஸல்* (Texel) *தீவு.* | *நஷ்டமில்லை.* | ...... |

### இராக் (Iraq).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| கலகக்காரர்கள் இருக்குமிடங்கள்.— *பல ஜில்லாக்களில்.* | ...... | ...... |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**11—5—41.** (*ஞாயிற்றுக்கிழமை*)—*தொடர்ச்சி.*

### இதாலிய ஆபிரிக்கா (Africa)

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| துறைமுகம், விரோதிக் கப்பல்கள்.—*பெங்காஸி* (Benghazi). | | |
| பெனிரு (Benina). | ...... | 9 *விமானங்கள்.* |
| எல் கஸாலா (El Gazala). | ...... | ...... |
| விமான நிலயம்.—*பெர்க்கா* (Berka) ... | ...... | *கட்டடங்கள் சேதமாயின.* |
| தரையிலிருக்கும் விரோதி விமானங்கள் மோட்டார் வண்டிகள்.—*டெர்ரு* (Derna). | ...... | *பலத்த சேதம்.* |
| கவசமணிந்த மோட்டார்ப் படைகள்.—*டொப்ருக்கு* (Tobruk)*க்கும், டெர்ரு* (Derna)*வுக்கும் மத்தியிலிருக்கும் பல இடங்கள்.* | ...... *நஷ்டமில்லை.* | *பலத்த நஷ்டம். பலருக்குக் காயம்.* 1 *விமானம்.* |
| ஒரு கப்பல்.—*டெர்ரு* (Derna) *துறைமுகம்.* | ...... | *மூழ்கடிக்கப்பட்டது.* |
| விரோதி சைனியங்கள்.— *அபிஸீனியா* (Abyssinia). | ...... | ...... |

---

## *விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.*

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**5—5—41.** (*திங்கட்கிழமை*).

### பிரிடன் (Britain).

| லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| பகலில்.—*இங்கிலாந்தி* (England)*ன் தென்கிழக்குக் கடற்கரை.* | 2 *விமானங்கள்.* | *சேதமேயில்லை. சேதமும், காயம் பட்டவர்களும் அதிகம்.* |
| இரவில்.—*கிளைட்ஸயிட்* (Clydeside), *மர்ஸிஸயிட்* (Merseyside), *வடக்கு அயர்லாந்து* (Ireland). | ...... | *மிகவும் சொற்பச் சேதம்.* |
| பல இடங்கள்.—*கிழக்கு, வடகிழக்கு, தென்மேற்கு இங்கிலாந்து* (England). | 8 *விமானங்கள்.* | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 5—5—41. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **எகிப்து (Egypt).** | | |
| | அலெக்ஸாண்டிரியா (Alexandria) ... | ...... | சேதமுமில்லை; காயம்பட்டவர்களுமில்லை. |
| 6—5—41. (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | 2 விமானங்கள். | 1 விமானம். |
| | ஒரு பட்டணம்.—கெண்ட் (Kent) ... | 2 விமானங்கள். | நஷ்டமேயில்லை. |
| | இரவில்.—க்ளைட்ஸயிட் (Clydeside), மர்ஸிஸயிட் (Merseyside). மற்றும் சில இடங்கள்.—கிழக்கு ஆங்கிலியா (Anglia), வடகிழக்கு, தென்மேற்கு இங்கிலாந்து (England). | ...... 9 விமானங்கள். | பலத்த படையெடுப்பு. சேதமும், காயம்பட்டவர்களும் சொற்பம். |
| 7—5—41. (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—தெற்கு, தென்கிழக்குக் கடற்கரை. | 9 விமானங்கள். | 2 விமானஙகள். |
| | இரவில்.—மர்ஸிஸயிட் (Merseyside), வடமேற்குப் பிரதேசங்கள். | ...... | ...... |
| | ஹம்பர் (Humber) பிரதேசம் ... | ...... | பலத்த சேதம். |
| | பட்டணங்கள்.—வடமேற்கு இங்கிலாந்து (England) பிரிஸ்டல் (Bristol) கால்வாய்ப் பிரதேசம். | ... 24 விமானங்கள். | ... பலருக்குக் காயம். |
| | **எகிப்து (Egypt).** | | |
| | ஸூயஸ் (Suez) கால்வாய்ப் பிரதேசம். | ...... | சொற்பச் சேதம்; ஒருவருக்கும் காயமில்லை. |
| | அலெக்ஸான்டிரியா (Alexandria). | ...... | சேதமேயில்லை. |



| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 8—5—41. (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—இங்கிலாந்தி (England)ன் தெற்கு, தென்கிழக்கு கடற்கரைகள். | 14 விமானங்கள். | சேதம் சொற்பம். |
| | இரவில்.—லண்டன் (London); ஹம்பர் (Humber) பிரதேசம் வடக்கு, மிட்லாண்ட்ஸ் (Midlands). | 13 விமானங்கள். | சேதம் அதிகமில்லை. |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta) ... | 3 விமானங்கள். | சேதமேயில்லை. |
| 9—5—41. (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—விமான நடவடிக்கையேயில்லை | ...... | ...... |
| | இரவில்.—மேற்கு இங்கிலாந்தி (England)ல் ஒரு பட்டணம் | 3 விமானங்கள். | சேதமேயில்லை. |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | கப்பல்கள்.—மால்டா (Malta) துறைமுகம். | ...... | ...... |
| | பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள்.—மத்தியதரைக் கடல் (Mediterranean) | 7 விமானங்கள். | 2 விமானங்கள்; ஒரு யுத்தக் கப்பலாவது சேதமாகவில்லை. |
| | **எகிப்து (Egypt).** | | |
| | ஸூயஸ் (Suez) கால்வாய்ப் பிரதேசம். | ...... | சொற்பச் சேதம். |
| 10—5—41. (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—மிகச்சொற்ப விமான நடமாட்டம் இருந்தது. | ...... | குண்டுகளே விழவில்லை. |
| | இரவில்.—லண்டன் (London); இங்கிலாந்தி (England)ல் அங்குமிங்கும் சில இடங்கள். | 33 விமானங்கள். | பலத்த சேதம்; பார்லிமெண்ட் கட்டடம் சேதமாயிற்று. |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **11—5—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—டார்ஸெட் (Dorset) கடற்கரை, கிழக்குக் கெண்ட் (Kent); தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரப் பிரதேசங்கள். | 3 விமானங்கள். | சொற்பச் சேதம். |
| | இரவில்.—பிரிட்டனி (Britain)ல் அங்குமிங்கும் சில இடங்கள் தெற்குக்கடற்கரை. | 7 விமானங்கள். | சிலருக்குத் தான் காயம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | ... | சில பொதுஜனங்கள் கொல்லப்பட்டனர். |
| **12—5—41.** (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—சில இடங்கள்—தென்மேற்கு இங்கிலாந்து (England), கிழக்கு ஆங்கிலியா (Anglia). | 1 விமானம். | மிகச்சொற்பச் சேதம். |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

## யுத்த ஆயத்தம்.

புதுக்கோட்டை ஸமஸ்தான பட்டாளத்திற்கு இது முக்கியமானது என்றில்லாதபோதிலும், யுத்தமுறை எப்படி மாறிவிட்டதென்பதைப்பற்றி பால்கன் நாடுகளில் சமீபத்தில் நடந்த சண்டையிலிருந்து வெளியாகும் விஷயமொன்று இங்கு குறிப்பிடவேண்டியது அவசியம்.

குதிரை ராணுவத்தைச் சேர்ந்தவனாதலால், நான் சில சமயம் குதிரை ராணுவம் செய்யவேண்டிய வேலையை யந்திரங்களால் செய்யப்படுவதை நினைத்து நான் வருந்துவதுண்டு. யுத்த நிபுணர்களுக்கு பழையமுறைகளை பெயரளவிற்கு வைத்துக்கொண்டு, இந்த புதுமுறையை, "யந்திர பூர்வமான குதிரைப் பட்டாளம்" என்று சொல்லுகிறார்கள். இருந்தபோதிலும், எவ்வளவு வித்தியாசம்! அதிவேகமான 'டாங்குகள்', 'கவசம்பூண்ட,' 'கார்கள்,' 'மோட்டார்-சைகிள்கள்,' முதலியவைகளைக்கொண்டு எதிரியின் படைக்குள் உடைத்துச்சென்றுவிடுகிறோம்;



ஆயினும் முன்காலத்தில் இம்மாதிரி புகுந்துசென்றாலும், விலாப்பக்கம் தாக்கினாலும் குதிரைப் பட்டாளத்தார் வேலையைமுடித்தபிறகு சேர்ந்து, போக்குவரத்து சாதனங்கள், உணவுப்பொருள்கள், சிலசமயம் தண்ணீர் முதலானவைகளுக்காக காத்திருந்து அவை கிடைத்தமேல் எதிரியின் போக்குவரத்து மார்க்கங்களை ஆக்கிரமித்து இடைஞ்சல் செய்ய துவக்கமுடியும். இப்போது எல்லாம் மாறிவிட்டது. எதிரி படைக்குள் உடைத்துச்சென்ற உடன்காலத்தில் கவசம்பூண்ட காலாட்படைகள், பீரங்கிகள், வெள்ளமாகவந்து, விசிறிபோல்விரிந்து பாடுபடுத்துகின்றன. போனயுத்தத்தில் 'மேஸி'(Meuse) ல் இப்படி நடந்தது; அதுவேதான் 'மொனாஸ்டிரி" (Monastir) லும் நடந்தது.

பாதுகாப்பு வழியாக கவனித்தால் இரண்டு கொள்கைகள் காணப்படுகின்றன. (1) படையை உடையவிடுவதைக் காட்டிலும் பின்வாங்குவதே உயர்வு. தாக்கலின்போது எவ்வளவு வேகமாக பின்வாங்கினாலும் தாக்கல் குறைந்த பொழுது அதேவேகத்துடன் முன்னேறலாம்.

(2) எதிரியின் 'யந்திரக் குதிரை ராணுவ'த்தின் தாக்கலால் படை ஏதேனுமொரு இடத்தில் உடைந்தால், உடைப்பில்போட யந்திரத் துருப்புகள் உபரியாக கைவசமிருக்கவேணும். இவ்வளவு பலமும் வேகமும் பொருந்திய பகுதியை நமது பாதுகாப்பு வரிசைகளுக்குப் பின்னால் வியாபித்துவிட இடம் கொடுக்கக் கூடாது. கடைசியாக, ஆள்சங்கியையும் தளவாடங்களும் குறைவாயிருந்தால், இருந்த இடத்தை விட்டகலாமல் காபந்து செய்துகொள்ளவேணும். அதுவும் காபந்துக்கு லாயக்காக பின்னால் இடம் எங்கு இருக்கிறதோ, அந்த இடத்தில் முக்கியமாக காபந்துவேலை செய்யவேணும். ஆழமான பாதுகாப்பு போரில் வெகு அவசியம்.

## பெரும் காரியவாதி.

மே 7-ம் தேதி Mr. வின்ஸ்டன் சர்ச்சில் (Mr. Winston Churchill) பிரிடிஷ் சமூகத்தாரிடம் பேசிய மாதிரி, டியூ (Duce)வாயிருக்கட்டும், தலைவராயிருக்கட்டும், கெயிடா, கோய்பெல்ஸாயிருக்கட்டும், எவரேனும் இதாலியிலாவது, ஜெர்மனியிலாவது பேசமுடியுமா? நடந்த நடப்பை, அதிருப்திகரமான உண்மையை, கொதித்துக்கொண்டிருக்கிற ஜனங்களிடம் ஹிட்லராவது முஸோலினியாவது சொல்லத்துணிவார்களா? நமக்கு இப்போது ஒரு இக்கட்டான நிலை என்றார் Mr. சர்ச்சில். நமது ராணுவத் தலைவர்களில் வெகு நிபுணர்கள் கூட பிசகிவிட்டார்கள். ராஜதந்திர நிபுணர்கள்கூட இரண்டொரு சமயத்தில் பிசகிப்போனார்கள். அமெரிக்க உதவி நமது தேவைக்கேற்க வேகமாய் வரவில்லை; வருகிற உதவியும் எதிர்க்கப்படுகிறது. இந்த வெய்யில் நாள்முழுதும் பதுங்கி இருந்து, இடையிடையே சமயம் பார்த்து எதிரியை அமுக்கவேண்டியிருக்கிறது. அவர்கள் வேகம் குறையும்வரை இப்படிச் செய்யவேணும். இதையெல்லாம் அவர் ஆர அமரச் சொன்னார்; இதைக் கேட்டு பார்லிமெண்ட் சபையிலாவது வெளியிலாவது யாரும் சீறவில்லை, முனகவுமில்லை, ஆனால் தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் உரக்க கரகோஷம் செய்தார்கள்! இவரல்லவோ தலைவர்!

## இன்னுமொரு சோற்றுப்பானை.

23 வருஷங்களிற்கு முன் எனக்குப் பழக்கமுள்ள சில ஊர் பெயர்களைப்பற்றி நான் படிக்கும்போதும், கேட்கும்போதும் மனதில் ஒரு விதமான ஆசை ஏற்படுகிறது. ஹபானியா, ராமாடி, பலூஜா, சென்ற யுத்தத்திற்குப்பின் நான் ஒன்றும் பொருட்படுத்தவில்லை. பாஸ்ரா, பாக்தாத்கூட விஷயமாக நான் கருதவில்லை. நாடோடியாய் திரிந்த பட்டாளக்காரரான என் மனதில் அவைகளைப் பற்றி நினைக்கும்போது சரிவர கட்டப்படாத துறைமுகங்களில் வந்திறங்கும் கோவேறு கழுதைகள், குறுகின ஜலமார்க்கங்களில் கட்டப்பட்ட கட்டடங்களில் தாங்கமுடியாத உஷ்ணமும் பனைமரங்களும் படகுகளும், பாக்தாத் நகரத்தில் தெற்கேயிருந்து வடக்கே நீளமாகச்செல்லும் கிழக்கைக்கொண்ட ராஜவீதியும் (இதுவும் சமீபத்தில்தான் ஹாக்கியே என்ற மாஜி துருக்கி தளகர்த்தனின் கடுமையான உத்தரவால் அப்படியாயிற்று) எனக்கு ஞாபகம் வருகிறது. பரிந்து ஓடவேண்டியிருந்தால் இடைஞ்சல் இல்லாமல் இருக்கவேண்டியே சுமார் 30 கடைவீதிகள் மூலம் நேர் ரஸ்தாவாகச் செய்தார்.

நதிப்பக்கமுள்ள நகரங்கள் ரொம்ப உருமாறியிருக்கவேணும். கான்க்ரீட் ரொம்ப சம்பந்தப்பட்ட புதுக்கட்டடங்கள் உண்டாயிருக்கும். துறைமுகங்களில் கப்பல்கள் வர இடங்கள், துருப்புகள் தங்க இடம், ஆபீஸ்கள், தொழிற்சாலைகள், விமான நிலயங்கள் முதலானவை ஏற்பட்டிருக்கவேணும். முன்னே டைகிரிஸ் (Tigris) நதியின் இடது பக்கமிருந்த ஜெர்மன் ஸ்தானிக நிலயத்தை நாங்கள் தமாஷாய் புழங்கும் ஹோட்டலாக மாற்றினோம்; டைகிரிஸ் நதிபேரில் போட்ட படகு பாலம் பலமாயிருக்கிறதாவென்று பார்க்க மக்கில்வேன் (Mc Ilwaine) தனது குதிரை பீரங்கிகளை விரட்டி ஓட்டிப் பார்த்தான்; அவையெல்லாம் இப்போது இருக்கின்றனவோ இல்லையோ; நகரத்திலிருந்து இரும்பு பாலத்திற்குப்போக ஒரு உயர்ந்த ரஸ்தா இருந்தது; அது வழுக்குமாதலால் ஒட்டகங்கள் கால் வழுக்கி விழுந்து சிலசமயம் சாவதுண்டு; அது எப்படியிருக்கிறதோ.

ஞாபகமூட்டிக்கொள்வதை நிறுத்திக்கொள்ளவேணும்; முக்கிய சம்பவங்கள் நடைபெறுகின்றன. ரஷீத் அலி ஹிட்லரால் ஏமாற்றப்பட்டான்; உடன்படிக்கையிலிருந்து வழுவுவது என்ற வம்பில் ஏன் மாட்டிக்கொண்டோமென்று விழித்துக் கொண்டிருக்கிறான்போலும்!

மேலும் இராக் கவர்ன்மெண்ட் சம்பந்தமாக பிரிடிஷார் எவ்வளவு நேர்மையாக இருக்கிறார்களென்று விரோதி ரேடியோ அபாண்டமான விஷயங்கள் பரப்புகின்றன. சட்டபூர்வமாக இதற்கு பதில் ஆங்கில-இராக் உடன்படிக்கையில் பார்க்கவேணும்; காரியாம்சையில் பிரிடிஷ் விமானப்படையால் நமது சைனியங்கள் வந்திறங்கும் சமயம் செய்யும் வேலையில் பார்க்கலாம். விமான வேலை தினசரிச் செய்திகளில் காண்கிறோம்; உடன்படிக்கை ஷரத்துகளைக் கவனிப்போம்.



எப்போதும் போல தற்சமயத்தில் இராக்கின் முக்கியதைக் காரணமாவன:—

(1) மோசூல் மாகாணத்தில் பெரிய எண்ணெய்க் குளங்கள் இருக்கின்றன.

(2) அதன் வழியே ரோட், ரயில்பாதைகள் பாலஸ்தீனத்திற்கும், துருக்கிக்கும், எகிப்துக்கும் செல்லுகின்றன.

(3) ஐரோப்பிய நாடுகளால் துருக்கி தாக்கப்பட்டால் நேசதேசத்தார் வசம் இந்தியா முதலான இடங்கள் உள்ளவரை இராக் சாமான் கொள்ளுமுதல் செய்ய நல்ல இடம்.

(4) இதே காரணத்தால், இராக் நல்ல விமான நிலயம்.

ஆகையால்........:

1930-ல் பிரிடனுக்கும் இராக்குக்கும் உடன்படிக்கை ஏற்பட்டது. இராக் சர்வதேச சங்கத்தில் சேர்ந்த 1932-ம்௵ முதல் 25 வருஷத்திற்கு அது செல்லுபடியுள்ளது.

அதன் 4-வது ஷரத்துப்படி, இருதிறப்பாரில் யாரேனும் ஒருவர் போரில் மாட்டிக்கொண்டால் மறுதிறப்பார் நேசமுறையில் உதவி புரியவேணும். அப்படி நேர்ந்தால், ரயில்பாதைகள், நதிகள், துறைமுகங்கள், விமான நிலயங்கள், போக்குவரத்து மார்க்கங்கள் முதலானவை சம்பந்தமாக இராக்கில் பிரிடிஷ் சக்கிரவர்த்திக்கு முடிந்தவரை உதவிசெய்யவேணும். மேலும், பிரிடிஷ் துருப்புகள் இராக் வழியே போகவும் வரவும், சாமான், சர்ஜா, தளவாடங்கள் வைத்துக் கொள்ளவும் வேண்டிய சாதனங்கள் பெற பிரிடிஷாருக்கு பாத்தியமுண்டென்று 5-வது ஷரத்தும் 6-வது ஷரத்தும் சொல்லுகின்றன.

பிரிடிஷ் ராஜதந்திர முறைகளைப்பற்றிக் குறைகூறிவரும் இந்நாளில் இதைப் படிப்பது திருப்திகரமாகவிருக்கும். இவைகளை பயனற்றதாய்ச் செய்யவேண்டி ஐந்தாம்படை வேலைசெய்ய ஜெர்மனிக்கு நேர்ந்ததென்றால் இவை எவ்வளவு முக்கியமானவையென்று அறியலாம். ஐந்தாம்படை வேலை பலிக்கவில்லை; இதைக் கேட்க மத்திய கீழ் தேசத்தாருக்கும் இந்திய முஸ்லீம்களுக்கும் கண்யம் வாய்ந்த திருப்தியளிக்கும்.

## உண்மை மற்றொரு விதம்.

ஊர் வதந்திகளைப் பரவச் செய்வதில் கைதேர்ந்த ஒருவரும் ஹர் ருடால்ப் ஹெஸ்ஸினுடைய உண்மையான விருத்தாந்தத்தைத் தன்னுடைய சிருஷ்டனையினால் மறைத்துவிட முடியாது. நாஸிகள் கக்ஷியின் அதிகார வர்க்கத்தில் ஒரு முக்கிய குருவும், ஜெர்மன் தேசத்திற்கு தெய்வம்போலும், தோற்கடிக்க முடியாது என்று நினைக்கும் ஹிட்லரின் ஆப்த நண்பனுமானவர் அதிக தூரம் செல்லக் கூடாத ஒரு சண்டை விமானத்தில் தனிப்படையாகச் சென்றார். அந்த விமானத்தில் ஸ்காத்லாந்துக்குப் போய்ச் சேருவதற்குப் போதுமான பெட்ரோல்

மட்டுமிருந்தது. அவர் இறங்க முடியாமல் தடுமாறி கணுக்காலையும் தன் விமானத்தையும் உடைத்துவிடுகிறார். சகஜமாக தன்னைக் கைது செய்தவர்களிடம் தன்னை அடையாளம் கண்டுபிடிப்பதற்கு வேண்டிய தகவல்களைக் கொடுக்கிறார். ஜெர்மனியின் உள்நாட்டு நிலைமைப்பற்றி என்ன சொல்லியிருப்பாரோ ஈசுவரனுக்குத்தான் தெரியும்.

ஆகிலும் ஆச்சரியகரமான கதைகள் உலாவுகின்றன. வைத்திய சாஸ்திரிகளும், பரதேசஸ்தர்களும் ஹர் ஹெஸ் நல்ல ஆரோக்கியத்துடனிருப்பதுமல்லாமல், எல்லா நாஸிகளையும் போல் நல்லறிவுள்ளவனாகயிருக்கிறானென்றும் சொல்லுவது திருப்திகரமாயிருக்கிறது.

---

## ஐந்து வகைப்பட்ட யுத்தம்.
## கூட்டமாகவும் வேகமாகவும் எதிர்த்தல்.

### பிரதம மந்திரியின் சொற்பொழிவிலுள்ள முக்கியமான குறிப்புகள்.

(விக்ஹாம் ஸ்டீட் என்பவர் பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயத்தில் பேசியது.)

மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் காமன்ஸ் சபையில் அமைதியுடன் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தியதைக் கேள்வியுற்றவர்களும் படித்தவர்களும் இந்த யுத்தத்தின் பூகோள பரிமாணத்தைப் பற்றி யோசித்துப் பார்க்காமலிருக்க முடியாது. வட கிழக்கு ஆபிரிக்கா, இந்தியா, பால்கன் நாடுகள், மத்திய தரைக்கடல், அட்லாண்டிக் மஹா சமுத்திரம், ருஷ்யா, ஐக்கிய நாடுகள், பிரான்ஸ், பிரெஞ்சு ஆபிரிக்கா, துருக்கி, காகஸஸ் மலைகள் இவைகள் எல்லாவற்றையும் பற்றி அவர் பேசினார்.

அவர் ஒருவகை தீர்மானத்திற்கு வந்தார். அவருடைய தீர்மானத்தை ஒருவரும் ஆக்ஷேபிக்கமுடியாது. இந்த யுத்தம் முடிவடைவதற்குள் யுத்தத்தின் பரிமாணம் விஸ்தரிக்கப்படுமேயல்லாது குறைவடையாது என்று அவர் நம்புகிறார். யுத்தத்தின் இரண்டு பரிமாணங்கள் அதாவது நீள அகலம் வெளிப்படையாய்த் தெரிகின்றன. இன்னமும் நாம் அறியக்கூடியபடி மற்ற ஒன்று அல்லது இரண்டு பரிமாணங்களிலும் சண்டை நடந்து வருகிறது. அதாவது உயரத்திலும் ஆழத்திலும், ஆகாயத்தில் அநேக மைல்கள் உயரத்திலும், சமுத்திரத்தில் அநேக காதங்கள் கீழும், தரையிலும், உலகத்திலுள்ள மஹா சமுத்திரத்தில் செல்லக் கூடிய கப்பல்களாலும், சண்டை நடைபெற்று வருகிறது.

ஆகிலும் இதைத்தவிர நான்காவது, ஐந்தாவது பரிமாணமுள்ள சண்டையும் உண்டு. வேகமும் கூட்டமும். தீர்மானம் செய்யக்கூடிய சாதனங்களில் இவைகளைப்பொருட்படுத்துகிறதில்லை.

ஆகையால் இன்று நாம் இவைகளைப் பற்றி சற்று கவனிப்போம். இவைகள் மற்றவைகளில் சிலவற்றை பாதிக்கின்றன. நான் சொல்லும் தாத்பரியத்தை உங்களுக்கு விளக்கிக்காட்ட சென்ற யுத்தத்தின் ஆரம்பத்தில் நடந்த ஒரு



விஷயத்தைப் பற்றி உங்களுக்குச் சொல்லுகிறேன்.

யுத்தத்துக்கு லாயக்கான விமானப் படையை அப்பொழுதுதான் தயாரிக்க ஆரம்பம் செய்து வந்தார்கள். இன்று விளங்கும் சண்டை போடக்கூடிய வேகமான விமானங்களோடு 1915, 1916-ல் இருந்த விமானங்களை ஒப்பிட்டால், அப்பொழுது இருந்தவைகள் மெல்ல செல்லக்கூடியதாயும் ரொம்பவும் பாரமுள்ளதாயுமிருந்தன. முதலில் பிரிடனுடைய ராணுவ விமானப் படையில் ஒருவன் மட்டும் இருந்து கொண்டு துப்பாக்கியோ அல்லது சிறு கைத்துப்பாக்கியோ வைத்துக்கொண்டு அதைத்தன்னால் இயன்ற அளவு உபயோகித்து விமானத்தைப் பாதுகாத்து வந்தான்.

பிறகு பாக்கர் என்னும் ஒரு பிரபல டச்சுக்காரர் கண்டுபிடித்து யந்திர பீரங்கியுள்ளதும் அதிலிருந்து நிமிஷத்திற்கு 200 சுற்றுகள் முன்னுக்குத் தள்ளும் கருவியின் இறக்கைகளுக்கு மத்தி வழியாக அடிக்கக்கூடியதுமான ஒரு விமானத்தை ஜெர்மனிக்குக் கொடுத்தார்.

இந்தப் பாக்கர் விமானப்படை நம்முடைய விமானங்களுக்கு நஷ்டம் விளைவித்தது. நம்முடைய ஸ்திதியானது ரொம்பவும் அதிருப்திகரமாகயிருந்தது.

இங்கிலாந்தில் அப்பொழுது வேலை செய்துகொண்டிருந்த கான்ஸ்டாண்டினெஸ்கு என்ற ஒரு ருமேனிய நிபுணரைக் கூப்பிட்டு இந்தக் கோரமான பாக்கர் விமானங்களைப் பங்கப்படுத்த ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா என்று கேட்டார்கள். அவன் ஒரு கடுகடுப்பான பார்வையுள்ளவன், பாடகன், கணித சாஸ்திரி. இவனுடைய கணித முறைகளை பிரிடிஷ் அதிகார வர்க்கத்தார் ஏற்றுக்கொள்ளவில்லை. இவர் சுரங்கங்களிலும், தெருக்களிலும் சப்தம் செய்துகொண்டு வேலை செய்யும் வாயுவால் ஓடக்கூடிய துளைக்கும் யந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்திருந்தார். அவர் மறுபடியும் வேலை செய்ய ஆரம்பித்து, பாக்கர் விமானத்திலுள்ள யந்திர பீரங்கியைவிட ஐந்து மடங்கு வேகமாக சுடக்கூடிய ஒரு யந்திர பீரங்கியை உற்பத்திசெய்தார். இவைகள் முன் தள்ளும் கருவியின் இறக்கைகளுக்கு மத்தியிலேயே வேலைசெய்யும் படிக்கும் ஏற்பாடு செய்துவிட்டார்.

இதன் பயனாக நம்முடைய துப்பாக்கி, கைத்துப்பாக்கிகளைக் கொண்டு பாதுகாத்த விமானங்களைவிட உயர்வான பாக்கர் விமானங்களைவிட நம்முடைய ராணுவ விமானப்படை அதிக உயர்வடைந்துவிட்டது.

இம்மாதிரி கான்ஸ்டாண்டினெஸ்கு தயாரித்த விமானப்படை தயாரான பொழுது பிரிடிஷ் விமானிபோல் வேஷம் பூண்ட ஜெர்மானிய சாரணன் ஒரு விமானத்தில் ஏறிக்கொண்டு ஜெர்மனிக்கு நேராக சென்றுவிட்டான். நமக்கு திகில் உண்டாயிற்று. ஆகிலும் கான்ஸ்டாண்டினெஸ்கு தோள்களை சிலுப்பிக்கொண்டு, இது பாதகமில்லையென்றும், இந்த விமானம் என்ன முறைகளைக்கொண்டு வேலை செய்கிறதென்பதையும் ஜெர்மானியர்கள் கண்டுபிடித்துவிட முடியாதென்றும் சொல்லிவிட்டார். இது உண்மையாகவே ஆகிவிட்டது.

சென்ற யுத்தத்திற்குப் பிறகு கான்ஸ்டாண்டினெஸ்குவைத் தெரிந்துகொண்டபொழுது இதில் என்ன சூக்ஷ்ம

மிருக்கிறதென்று கேட்டேன். அவர் ரொம்பவும் அலக்ஷியமாக, இது, நான்கு வகை பரிமாணமுள்ள கணித சாஸ்திரத்தின் சமீகரணம் என்று சொன்னார். யந்திர சாஸ்திரிகள் இன்னும் அதிகமாக அபிவிருத்தி அடையவில்லை என்றும் சொன்னார்.

அவர்கள் மூன்று பரிமாணங்களை மட்டும், நீளம், அகலம், கனம் இவைகளை மட்டும்தான் கவனித்து வருகிறார்கள். இவைகளைத் தவிர நான்கு அல்லது ஐந்து பரிமாணங்களையும் நாம் கவனிக்க வேண்டும். இவைகளில் ஒன்று வேகமென்பது. கூட்டமென்பது மற்றொன்று. வேகம் என்னும் பரிமாணத்தை தன்னுடைய பிடில் வாத்தியத்தின் ஸ்வரங்களின் அமைப்பினின்றும் அவர் கண்டுபிடித்தார். யந்திர பீரங்கி செய்வதில் இந்த அனுபவத்தை உபயோகப்படுத்தி, முன் தள்ளும் கருவியின் சுற்றுகளோடு பீரங்கியின் சுடும் வேகத்தை ஒத்து வரும்படி உண்டுபண்ணிவிட்டார்.

இவை என் புத்திக்கு எட்டவில்லை. வேகமும் கூட்டமும் புதிய பரிமாணங்கள் என்று சொல்லும் அவருடைய அபிப்பிராயம் என் மனதில் பதிந்துவிட்டது. இந்த யுத்தம் ஆரம்பித்தது முதல் இவைகளைப்பற்றி பலதடவைகளில் யோசித்துப் பார்த்திருக்கிறேன். ஜெர்மானியர்கள் சொல்லும் பிளிட்ஸ் கிரீக் அல்லது மின்னல் எதிர்ப்பு என்பது முக்கியமாக வேகத்தையும் கூட்டத்தையும் அடிப்படையாயுள்ளது. இந்த விஷயத்தை 1939-ம் வருஷம் இலையுதிர் காலத்திலும் 1940-ம் வருஷம் முதல் 5-மாதங்களிலும் சரியாக நாம் அறிந்து கொள்ளக்கூடவில்லை.

போலந்தின் எதிர்ப்பை ஜெர்மனி மூன்று வாரங்களுக்குக் கொஞ்சம் அதிகமான காலத்தில் ஒழித்துவிட்டதிலிருந்து நாம் இதை அறிந்திருக்கலாம். நமக்கு அப்பொழுது விளங்கவில்லை. ஜெர்மானியர்கள் ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ் இவைகளைத் தாக்குவதற்காக வேகத்தையும் கூட்டத்தையும் பிரயோகிக்க மறுபடியும் தயார் செய்துகொண்டிருந்தபொழுது விசேஷமாக ஒன்றும் நடைபெறுதது போலத் தோன்றிற்று. (phony war) ஐப் பற்றிய ஒரு அபத்தமான சொல் ஒன்று எங்கும் உலாவியது.'

தாழ்ந்த தேசங்களிலும் பாரிஸ் பிரதேசம் வரையிலுள்ள வடமேற்கு பிரான்ஸ் தேசத்திலும் ஜெர்மானியர்கள் அதிவேகமாக முன்னேறியதற்குப் பல காரணங்களுண்டு. இவைகள் பிரசாரமும், பயமுறுத்தலும், ஐந்தாம் படையின் வேலைத்தனமும்தான்,

டங்கர்க்கிலிருந்து வெளிவந்த பிறகுதான் வேகம், கூட்டமாய்ச் செல்லுதல் என்றவைகளின் முக்கியத்துவத்தை நேச நாடுகள் பூராவும் அறிந்துகொண்டார்கள். பிரிடனுக்காக சென்ற ஆகஸ்டு, ஸெப்டம்பர் மாதங்களில் நடந்த சண்டையிலிருந்துதான் இந்தப் பாடத்தை நாம் நன்ருய்க்கற்றுக் கொண்டோம். நம்முடைய சண்டை விமானங்களின் உயர்வான வேகத்தினுலும், அவைகளிலுள்ள எட்டு யந்திர பீரங்கிகளின் கூட்டமான சுடுகையினுலும் நம்மைவிடக் குறைச்சலான வேகமுள்ள ஜெர்மன் விமானங்களின் அதிக சங்கியைக்கூட நாம் துரத்தியடிக்க முடிந்தது.

இதிலிருந்து அதிகப் பயிற்சிபெற்ற பிரிடிஷ், போலீஷ், ஸெகோஸ்லவாக்



விமானிகளையும், பீரங்கிகளில் வேலை செய்பவர்களையும் நான் குறைவாய்ப் பேசுகிறேனென்று நினைக்கவேண்டாம். இவர்கள்தான் நம்மைக் காப்பாற்றினவர்களில் சிலர். புதிதாக அமைக்கப்பட்ட விமானங்களின் பிரயோஜனம் இருந்திராவிட்டால் சரித்திரத்தில் கியாதியுள்ள இந்த வெற்றிகளை அவர்கள் அடைந்திருக்கவேமுடியாது.

கூட்டமாகச்செல்லுதல் என்ற விஷயமானது ராணுவ ஏற்பாடுகளில் ஒரு அம்சமாக எப்பொழுதும் கருதப்பட்டு வந்திருக்கிறது. நெபோலியன் ஒரு சிறு வாக்கியத்தில் இதைப்புகட்டினுன் "சங்கியை தான் எதிராளியை நாசம் செய்யக்கூடும்".

ராணுவ திட்டப்படி வேகமென்பது காலாட், படைகள் பாதசாரியாகக் கடந்து செல்ல வேண்டிய தூரத்தைப் பொறுத்தது. குதிரைப்படைகள் துரத்தியடிப்பதில் அதிகவேகமாகச் செல்லக்கூடும். ஆகிலும் வேகத்தின் அளவை காலாட்படையும் அவர்களுடைய மெதுவான நடையும்தான் தீர்மானிக்கக்கூடும்.

சென்ற யுத்தத்தின் கடைசி பாகத்தில் இரும்பு மோட்டார்கள்தான் விசேஷமாக உபயோகப்படுத்தப்பட்டன. அப்பொழுதே டாங்கிகளைவிட வேகமாகச் செல்ல வேண்டுமென்ற அவசியமேற்பட்டது. பிறகு கவசம் பூண்ட மோட்டார்கள் உபயோகப்படுத்தப்பட்டன. காலாட்படைகளையும் குதிரைப்படைகளையும் கொண்டு போகக்கூடிய வண்டிகளில் யந்திர பீரங்கிகள் வைக்கப்பட்டன. இதில் இருந்து யுத்தம் வேகமாக நடப்பதற்கு ஆரம்பம் செய்யப்பட்டது.

யுத்தம் செய்வதும் பின்வாங்குவதும் எல்லாம் கம்பி இல்லாத்தந்தி மூலம் துரிதப்படுத்தப்பட்டன. முன் நாட்களில் தீர்க்கமான ஆலோசனையின் பேரில் முடிவுக்கு வரக்கூடியவைகள் எல்லாம் இந்நாளில் இமை கொட்டுவதற்குள்ளாக முடிவு செய்யவேண்டி இருக்கிறது.

அப்படியானுல், மற்றெல்லோரையும் விட ஜெர்மனியானது எவ்விதம் அதிக வலுவடைந்திருக்கிறதென்றும், யதேச்சாதிகாரிகளின் பக்கம் இருப்பதுபோல் ஜன நாயக நாடுகள் பக்கத்தில் வேகமும், கூட்டமும் ஏன் இல்லை என்றும் நீங்கள் கேட்கலாம்.

இவைகளுக்கு நான் சொல்லும் பதில் ஜனநாயகத்துக்கு முற்றிலும் அபகீர்த்தியை அளிக்கக்கூடியதல்ல. அவர்கள் யுத்தத்துக்குத் தயார்செய்து கொண்டிருக்கவில்லை, ஆகிலும் பூராவாக பலத்தை தயார் செய்துகொண்டு தான் யுத்தத்தில் இறங்குவதாக உத்தேசம். தாக்குதல்கள் ஏற்படுமென்று அவர்கள் நினைக்கவில்லை. ஒருச்கால் எதிர்ப்புகள் ஏற்பட்டால் அவைகளில் இருந்து பாதுகாத்துக்கொள்ள சாவதானமாகவும் கொஞ்சம் கொஞ்சமாகவும் அவர்கள் தயார் செய்து வந்தார்கள். அவர்களுடைய புத்திகளைக்காட்டிலும் அவர்களுக்கு சுத்தமான ஹிருதயம் உண்டு. அவர்கள் மற்றவர்களைப் பற்றிக் கெடுதலான அபிப்பிராயம் கொள்ளுகிறதில்லை, அவர்களைப் போலவே மற்றவர்களும் பிறர்களைப் பற்றி நல்ல எண்ணமுள்ளவர்களாகவே இருப்பார்களென்று நம்பக்கூடியவர்கள்.

யுத்தம் ஆரம்பமாயிற்று. அதன் பிரயோஜனங்களை நீங்கள் நன்ருய் அறிந்து கொண்டிருக்கிறீர்கள். இவை

களில் விசேஷமானவைகளைப் பால்கன் நாடுகளில் நடந்தவைகளிலிருந்து கற்றுக்கொள்ளலாம். இங்கே வேகமும் கூட்டமும்தான் எதிரிக்கு லாபகரமாக முடிவை உண்டுபண்ணியிருக்கிறது. இதை நாம் குறைத்துச் சொல்லவே முடியாது. ஆகிலும் இந்தப் பலன்கள் முடிவானதென்று நாம் சொல்ல முடியாது. லிபியாவில் ஜெர்மனி, இதாலி இவர்களின எதிர்ப்பு யுத்தத்தைப்பார்த்தாலும் சங்கியையின் அதிகத்தினாலும் வேகத்தினாலும் தான் பிரிடிஷ் துருப்புகள் வேகமாகக் கைப்பற்றிக்கொண்டதும், அமைதி வேண்டியதற்காக அதிகமாக பாதுகாப்புகள் ஏற்படுத்திக்கொள்ளாததுமான இடங்களைத்திரும்பக் கைப்பற்றிக்கொள்ளும்படியான சந்தர்ப்பம் வாய்த்ததென்று சொல்லலாம். வேகத்தின் முக்கியத்துவத்தைப்பற்றிய பாடமானது பிரிடன், ஆபிரிக்கா, தென் ஆபிரிக்கா, இந்தியா, பெல்ஜியம், சுயேச்சை பிரான்ஸ் இவைகளின் துருப்புகள் தெற்கே கினியாவிலிருந்து வடக்கே அடிஸ் அபாபாவுக்கும், ஸூடானிலிருந்தும் செங்கடல் கடற்கரையிலிருந்தும் கெரன், அஸ்மாரா, மஸாவா முதலிய இடங்களுக்கும் அதிவேகமாக முன்னேறியதிலிருந்தும் நன்றாய்க் கற்பிக்கப்படுகிறது. வேகத்தினால்தான் அபிஸீனியாவின் மழைகளையும் அலக்ஷியம் செய்துவிட்டோம்.

ஐந்து வருஷங்களுக்கு முன் அபிஸீனியாவை இதாலியர்கள் முறியடித்து சீக்கிரம் கைப்பற்றியது ரொம்பவும் ஆச்சர்யகரமாகக் கருதப்பட்டது. அப்பொழுது அபிஸீனியர்களிடம் முஸ்தீப்புகள் இல்லை என்றும் இதாலியர்களின் வெடிகுண்டு விமானங்களையும் விஷப்புகைகளையும் எதிர்க்க அவர்கள் சக்தியற்றவர்களாக இருந்தார்களென்றும் தெரிகிறது. இன்று தளகர்த்தர் கன்னிங்ஹாம், ப்ளாட் இவர்களுக்கு, நன்றாய் ஆயுதம் பூண்டதும், விஸ்தாரமான பிரதேசங்களில் சேனைப்பகுதிகள் வைத்துக்கொண்டிருக்கும் ஒரு சத்துருவின் பேரில் கொஞ்ச காலத்துக்குள் வேகமாக ஏற்பட்டிருக்கும் வெற்றிகளை கவனித்தால் இதாலிக்கு ஏற்பட்ட வெற்றியானது ஒரு அல்பமானதென்று தோன்றுகிறது.

அபிஸீனியாவை திரும்பக் கைப்பற்றியதிலிருந்தும் எரிட்ரியாவை ஜயித்ததிலிருந்தும் சத்துருக்கள் மதித்திராதபடி ஒரு முக்கியமான பிரயோஜனம் ஏற்படப்போகிறது.

ரூஸ்வெல்ட் தலைவர், செங்கடல் பிரதேசம் யுத்த ஸ்தலத்துக்கு வெளியேயுள்ளதென்றும், ஐக்கிய நாடுகளின் வியாபாரக் கப்பல்கள் போகக்கூடிய ஜாகாவென்றும், இந்தக் கப்பல்களில் வட ஆபிரிக்காவிலும் கிழக்கு மத்திய தரைக்கடல் பிரதேசத்திலுமுள்ள பிரிடிஷ், நேசதேசப்படைகளுக்கு சாமான் ஏற்றிச் செல்லக்கூடுமென்றும் விளம்பரம் செய்ய முகாந்திரமிருக்கிறது (இப்பொழுது அதே பிரகாரம் கூறிவிட்டார்). எவ்விடத்திலும், எல்லா சமயத்திலும், கூடிய அளவு வேகமாகவும் உதவியளிக்க ஐக்கிய நாடுகள் தீர்மானித்துவிட்டார்களென்பது நிச்சயம். கிரீன்லாந்து ஒரு பாதுகாக்கப்பட்ட நாடாக பாவிக்கப்படுமென்று அமெரிக்கா வெளியிடுவதிலிருந்து ஐக்கிய நாடுகளின் கொள்கைகளின் போக்கு என்னவென்று வெளியாகிறது.



ஏப்ரல்௴ ஆரம்பத்தில் காமன்ஸ் சபையில் பேசுகையில் மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் அமெரிக்காவின் இந்த அபிப்பிராயத்தைப் பற்றியும்,எடுத்துச் சொன்னார். அவைகளில் மூன்று மிகவும் அவசியமானவை. நான்காவது குரூரமான ஒரு காரியத்தை முன்காட்டுகிறது.

முதலாவது, அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் யுத்தம். நாம் முடிவாக வெற்றிபெறுமுன் இந்தக்கடல் யுத்தத்தில் வெற்றிபெறவேண்டும். நம்முடைய கப்பல் நஷ்டங்கள் வியசனிக்கத்தக்கவையாயிருந்தாலும், நஷ்டங்கள் இன்னும் ஏற்படக்கூடியதாகயிருந்தாலும், இந்த அட்லாண்டிக் யுத்தத்தில் நாம் ஜயமடைந்து வருகிறோம். பூராவாகவும் வெற்றி பெறப்போகிறோமென்பதில் எனக்கு நிச்சயமாய் நம்பிக்கையிருக்கிறது.

ஜெர்மன் நீர்மூழ்கிகளிலிருந்து அநேகம் நபர்கள் கைது செய்யப்பட்டிருப்பதும் அவைகளிலிருந்து கைது செய்யமுடியாமற்போய் மூழ்கடிக்கப்பட்ட அநேக நீர் மூழ்கிகளும், இந்த அட்லாண்டிக் யுத்தத்தின் ஒரு நிகழ்ச்சி. மற்றொரு முக்கியமான பாகமானது, கீல்வாய்க்காலிலுள்ள நீர்மூழ்கி கட்டும் நிலயங்களிலும் மற்ற இடங்களிலும் கோரமான வெடிகுண்டுகளை எரிந்தும் ப்ரெஸ்ட் என்னும் இடத்தில் நாம் சேதம் விளைவித்திருப்பதும்தான். நாம் மேன்மேலும் சண்டைசெய்துகொண்டும் சகித்துக்கொண்டுமிருக்கும் பொழுது, ஐக்கிய நாடுகளில் வியாபாரக் கப்பல்கள் கட்டுவதற்கு வேண்டிய ஏராளமான ஏற்பாடுகள் நடைபெற்று கடலுக்கு அப்பாலிலுள்ள நாடுகளிலிருந்து நமக்கு வரும் சாமான்கள் நம்மிடம் பத்திரமாக வந்து சேரும்படி செய்வதாகவும் அவர்கள் வாக்குறுதி செய்கிறார்கள்.

இரண்டாவது விஷயம் அவ்வளவு வ்யக்தமாகயில்லாதபோனாலும் இதுவும் ஐக்கிய நாடுகள் சம்பந்தமாகத்தான் ஏற்படுகிறது. அனுக்கிரமிப்பு பிரான்ஸிலுள்ள அதிகாரிகளில் சிலருடைய மனமில்லாதவோ அல்லது மனப்பூர்ணமாகவோ, ஒத்தாசையானது ஜெர்மானியர்களுக்கு சந்தேகமன்னியில் கிடைத்துவருகிறதென்பதை அறிவிக்கிறது.

இது சம்பந்தமாக, மிஸ்டர் சர்ச்சில் ஒரு எச்சரிக்கை விடுத்திருக்கிறார். பிரெஞ்சுச் சண்டைக் கப்பல்கள் ஆபிரிகாவிலிருந்து பிரான்ஸுக்கு நகருவதைப் பார்த்தால், கடல் பலத்தின் நிலைமை மாறக்கூடுமென்றும், நம்முடையவும் ஐக்கிய நாடுகளுடையவும் அக்கரைகள் விசேஷமாக பாதிக்கப்படக்கூடுமென்றும் அவர் அறிவித்தார். இம்மாதிரியான கட்டுப்பட்ட அசைதலை நிறுத்தாவிட்டால், இதிலிருந்து என்ன விபரீதங்கள் நேரிடக் கூடுமென்று பிரெஞ்சுதேசம் நன்றாய் அறியும் என்றும் அவர் சொன்னார். இதைவிட வெளிப்படையான ஒரு எச்சரிக்கை ஒருவராலும் விடுக்கமுடியாது.

மூன்றாவதாக, ருஷ்யாவிற்கு ஒரு எச்சரிக்கை கொடுத்ததுபோல் ஹிட்லர் யுக்ரேனிலுள்ள தானியங்களுள்ள பிரதேசங்களையும் காகஸஸ் மலைகளிலுள்ள எண்ணெய்க் கிணறுகளையும் கைவசப்படுத்திக்கொண்டு, இதன் மூலமாய் பொருளாதாரங்களை அபிவிருத்தி செய்து இங்கிலீஷ் பேசும் உலகத்தை பங்கப்படுத்த உத்தேசிக்கிறானென்றும் துலக்கினார்.

நான் ஏற்கனவே ஒலிபரப்பியதில் இவைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். ஆகையால் இதை மறுபடியும் சொல்லுவதினின்றும் இதைக் கேட்பவர்களுக்கு இது விந்தையாகயிருக்காது. தென்மேற்கு ருஷ்யாவையும் காகஸஸ், பாகு என்னுமிடங்களிலுள்ள எண்ணெய் ஸ்தானங்களையும் பிடித்துக் கொள்ளவேண்டிய ஜெர்மன் ஏற்பாட்டில் 1936-ம் வருஷம் முதற்கொண்டே ருமேனியாவை ஆக்கிரமிக்க வேண்டுமென்றும் பால்கன் நாடுகளை ஜயித்துவிடவேண்டுமென்றும் யோசனைகளுண்டென்று நான் சொல்லியிருக்கிறேன்.

ஆகையால் பால்கன் யுத்தத்தின் அந்தரங்க தாத்பர்யத்தை இந்த ஏற்பாட்டுடன் சம்பந்தப்படுத்திப் பார்க்க வேண்டும்.

யோசனைகள் எவ்விதமிருந்தாலும் சரி, அவைகளை எந்த முறையில் நடத்தினாலும் சரி, அவைகள் மிஸ்டர் சர்ச்சில் நிகழ்த்திய வாக்குறுதியை பாதிக்காது. அவர் தீர்மானமாய்ச் சொன்னதாவது:—"ஹிட்லருக்கு எவ்வளவு ஜயம் கிடைத்தாலும், எவ்வளவு லக்ஷக்கணக்கான ஜனங்களை ஹிட்லர் துன்பத்தில் வீழ்த்தினாலும், பழிக்குப் பழி வாங்கக்கூடிய நியாயமென்னும் வாளை ஆயுதமாகக் கொண்ட நாம் அவனைத் துரத்தியடிக்கப் போகிறோம். ஆகாயத்திலும் மற்றவிடங்களிலும், வேகமும் கூட்டமும் ஜெர்மனியில் தனக்கு விரோதமாகவே கிளம்பிவிட்டனவென்று ஹிட்லர் காணப்போகிறான். சமீபத்திலோ அல்லது காலக்கிரமத்திலோ, கடைசியில் இவைகள் தான் ஹிட்லருடைய முடிவுக்கு காரணமாக ஆகப்போகின்றன."

---

## அடுப்பங்கரையில் அமளி.

## பால்கன் நாடுகளில் நாஸிகளின் நோக்கம்.

(வியோநாட் இங்குரும் பேசியது).

ஹிட்லர் விரும்பாதது பால்கன் நாடுகளில் கலவரமும் அதனால் ஏற்பட்ட போக்குவரத்து சாதனங்களின் குறைவுமே.

ஹிட்லர் முகாண்மையாக வந்த உடன்காலத்திலிருந்தே ஜெர்மனி யுத்தத்துக்குத் தயாராக்கிக்கொள்ள ஆரம்பித்தது. யுத்தம் துவக்க நினைக்கும் ஒரு நாடானது, உலகத்தையே ஜயித்து தன் ஆளுகைக்குட்படுத்த நினைக்கும் நாடானது, தனது போர் வீரர்களுக்கு ஆயுதங்களை தயார் செய்து கொடுக்கும், ஆயுத சாலைகளில் வேலை செய்யும் ஜனங்களுக்கு, போதுமான ஆகார சாமான்களும், யுத்த மூஸ்தீப்புக்கு தேவையான சரக்குகளும், தடைப்படாமல் சீருக எப்போதும், தன் தேசத்துக்கு வருவதற்கான வழியை கவனிக்கவேண்டியது அவசியம்.

இது காரணம் பற்றியே வியாபார தூதுகோஷ்டி அங்கத்தினர்களாய், கருப்பு உடையணிந்த ஜெர்மானியர் பால்கன் நாடுகளுக்குச்சென்று அங்கங்கு அந்தந்த தேசங்களுடன் வியாபார உடன்படிக்கைகளைச் செய்துகொண்டு தங்கள் தேசத்துக்குத் திரும்பினர்.



இந்த உடன்படிக்கைகளின் ஷரத்துகளின்படி எந்தந்த பால்கன் நாடுகள், ஜெர்மனியின் அவசியத்துக்காக, எவைகளை விளைவிக்கவேண்டுமென்றும், எவைகளை ஜெர்மனிக்கு அனுப்பிவிக்க வேண்டுமென்றும், ஜெர்மனியிலிருந்து எவ்வளவு தொகை கிரயமாக பெறவேண்டுமென்றும் நிருவப்பட்டன. ஜெர்மனியினுடைய பொருளாதார முறைப்படி நல்ல கிரயத் தொகையே அவைகளுக்குக் கொடுக்கும் படிக்கும் ஏற்பட்டது.

அது இவ்வளவு ஜாஸ்தியாக கிரயம் கொடுக்கவேண்டியிருந்தது என்பதில் எவ்வித விஷயமுமில்லை. ஏனென்றால் இவ்விதம் கொடுக்கப்பட்ட ஜெர்மன் நாணயங்களைக்கொண்டு அத்தேசங்கள் தங்களுக்கு அவசியமான சரக்குகளை எங்கும் வாங்க முடியாது. ஏனெனில் அவைகளின் செலாவணி பிரயோஜனமற்றது.

இவ்விதமாக காக்கையின் கூண்டில் கக்கு பக்ஷி முட்டை இடுவதுபோல் இந்த கருப்பு உடையணிந்தவர்கள் காரியங்கள் செய்துவிட்டார்கள். அந்தந்த பால்கன் நாட்டினரும் காக்கை போல் முதலெடுப்பில் தன் கூண்டில் முட்டைகள் ஏராளமாயிருப்பதை எண்ணி முட்டாள்தனமாக இருமாப்பை அடைந்தார்கள். எவ்விதம் கக்குவின் முட்டையிலிருந்து வெளிப்பட்ட குஞ்சானது தன் குஞ்சுகளுக்கு இரை அகப்படாதபடி அதுவே தின்றுவிடுமோ அவ்விதமே இந்த உடன்படிக்கைகளில் தங்கள் நாடுகளுக்கு எவ்வித நன்மைகளும் ஏற்படாமல் பாடுபட்டு ஜெர்மானியருக்கு தங்கள் சர்வ சொத்துக்களைக் கொடுக்கும்படி ஏற்பட்டிருப்பதை, பிறகுதான் உணர்ந்தார்கள்.

செழிப்பான பிராந்தியங்களைக்கொண்ட ஹங்கேரி தேசத்தினர் மாமிசம் உண்ணாத நாட்கள் ஏற்பட்டு விட்டது. ருமேனியா நாட்டினர் ரொட்டிகளுக்காக காததூரம் நடக்க நேர்ந்தது.

ஜெர்மனிக்கு இதனால் திருப்தியே. தன் யுத்த நோக்கங்களில் பால்கன் நாடுகளை பயன்படுத்திக்கொண்டது. நடக்க வேண்டியது என்னவென்றால், இவ்விதமே அந்நாடுகள் தன் சௌகரியத்திற்காக பரிசிரமப்பட்டு தன் தேவைக்காக விளை பொருள்களையும், நூல் முதலிய சாமான்களையும், தங்கு தடையின்றி மேன்மேலும் அனுப்பிக்கொண்டிருக்கும்படி அவைகளை திட்டப்படுத்த வேண்டியதுதான்.

இவ்விதம் செய்து விட்டால் பிரிடிஷாரினால் ஏற்படுத்தப்பட்ட முற்றுகை தன்னை ஒன்றும் செய்ய முடியாது என்பதைக் காட்டிவிடலாம் என்பது ஹிட்லரின் உத்தேசம்.

பால்கன் நாடுகளில் ஏற்பட்டிருக்கும் கலவரம் சமயலறையில் ஏற்பட்டிருக்கும் அமளிக்கு சமானமாகும். மறுபடியும் சமையல் சாமான்களை சேகரம் செய்ய இயலாத தருணத்தில் இவ்வித அமளி ஏற்பட்டால் என்ன கதியோ அதுதான் தற்போது நேர்ந்திருக்கிறது.

## பால்கன் நாடுகளில் நடக்கும் சம்பவங்களைப்பற்றி துருக்கியின் அபிப்பிராயம்.

## தற்சமயம் யுத்தத்தில் கலந்து கொள்ளாமலே இருக்கும் கொள்கையை அனுசரித்தல்.

## இந்தத் தீர்மானத்திற்கு ராஜ்ஜீய தந்திரங்கள்தான் காரணம்.

(இந்தப் பிரசுரம் சமயோசிதமாக இல்லாவிட்டாலும், பால்கனில் யுத்தம் எவ்விதமானாலும் சரி, துருக்கியின் அபிப்பிராயத்தைப்பற்றித் தெளிவான ஒரு சுருக்கமிதிலிருப்பதால் இதை இங்கு பிரசுரிக்கிறோம்—பத்திராதிபர்).

இஸ்தான்பூலிலுள்ள டைம்ஸ் பத்திரிகையின் நிருபர் எப்ரல் 8-ம் தேதியில் தந்தி மூலம் அறிவிக்கிறார்.

இராக்கிலிருந்தும், லிபியாவிலிருந்தும், விசேஷமாக கிரீஸிலிருந்தும் வெளிவரும் செய்திகள் ரொம்பவும் அதைரியப்படுத்தக் கூடியவையென்று துருக்கி ஜனங்கள் அறிகிறார்கள். ஆகிலும் யுத்தத்தின் முடிவு எவ்வாறாகுமோ என்று யோசிக்கிறார்கள். பால்கன் நாடுகள் பூராவையும் ஜெர்மானியர்கள் முறியடித்து கைவசப்படுத்திவிட்டாலும், அது ஒரு சிறிய சம்பவமென்றும் அமெரிக்காவினால் ஒத்தாசை செய்யப்பட்ட பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்துக்கும் ஜெர்மனிக்கும் நடந்துவரும் யுத்தத்தின் போக்கை அது ஒருவிதமாகவும் பாதிக்காதென்றும் துருக்கி அபிப்பிராயப்படுகிறது.

பெரும்பாலும் இந்த அபிப்பிராயத்தைக்கொண்டுதான் துருக்கி அரசாங்கத்தார் தற்சமயம் அவர்கள் இதுவரையில் சண்டையில் கலந்துகொள்ளாத நாடா இருந்தது போலவே பின்னும் இருக்கவேண்டுமென்று தீர்மானம் செய்திருக்கிறார்கள். பொது ஜனங்களில் பெரும்பான்மையோர் இப்பொழுதே கிரேக்கர்களோடும், யூகோஸ்லாவியர்களோடும் சேர்ந்து துருக்கி யுத்தம் செய்ய வேண்டுமென்றும், ஜெர்மானியர்கள், கிரேக்கர்களையும், யூகோஸ்லாவியர்களையும் தோற்கடித்துவிட்டு தங்கள் பூரா பலத்தையும் துருக்கியின் பேரில் திருப்பும் வரையில் துருக்கி காத்திருக்கக்கூடாதென்றும் நினைக்கிறார்கள்.

ஜெர்மனியின் தூதனான வான் பேபன் துருக்கிக்குக் கொடுத்த வாக்குறுதிகளின் அர்த்தத்தைப்பற்றி துருக்கி ஜனங்களுக்கு நல்ல பகுத்தறிவு உண்டாகியிருக்கிறது. ஒரு கியாதிபெற்றவர் சொன்ன பிரகாரம், துருக்கியைத் தாக்க ஜெர்மனி இச்சமயம் தயாராகயில்லை என்றுதான் விளங்குகிறது.

ஜெர்மன் வாக்குறுதிகளைப்பற்றி, சாதாரண ஜனங்கள் நினைப்பதுபோல, துருக்கி அரசாங்கமும் ராணுவ, ராஜீய தந்திர நோக்கங்களையும் கவனிக்கவேண்டியது அவசியம்.



## சேர்ந்து யுத்தம் செய்யும் பிரச்னை.

யூகோஸ்லாவியாவுடன் சேர்ந்து போர் முனையில் நிற்பது என்ற யோசனையானது ஜெர்மனி பல்கேரியாவுக்குள் நுழைந்த உடன்காலத்திலேயே அற்றுவிட்டது. பிரிடிஷ், கிரேக்க, யூகோஸ்லாவிய சைனியமானது ஜெர்மானியர்களை பால்கன் நாடுகளிலுள்ள மலைப் பிரதேசங்களுக்கு அப்பால் விரட்டியடித்துவிட்டால் இந்த யோசனை மறுபடியும் உண்டாகக்கூடும். பல்கேரியாவுக்குள் துருக்கி சைனியம் மட்டும் புகுந்து சண்டை செய்வதென்றால், ஜெர்மனி, பல்கேரியா இவர்களின் பலமான சைனியங்களை எதிர்ப்பதோடு, நஷ்டங்களுக்கு உள்ளாகவேண்டிய அபாயம நேரிடும். இந்த நஷ்டங்களால் ஜலசந்தியைப் பாதுகாக்கக்கூடிய சக்திக்குக் குறைவு ஏற்படும். துருக்கியின் முக்கியமான அமைப்பினின்றும், துருக்கியின் நேச நாடுகள், இம்மாதிரியான அபாயகரமான ஒரு ஏற்பாட்டை துருக்கி ஏற்றுக்கொள்ளுவதற்கு சம்மதிப்பார்களாவென்பதில் சந்தேகமேற்படுகிறது.

நேசநாடுகளுக்கு வெற்றி ஏற்பட்டுவிட்டால், பால்கன் நாடுகளிலிருந்து ஜெர்மானியர்களைத் துரத்தியடிப்பதற்கு ஏராளமான ஒத்தாசை செய்வதற்கு துருக்கிக்கு நல்ல சந்தர்ப்பம் வாய்க்கும். நேச நாடுகளுக்கு அபஜயம் ஏற்பட்டால், துருக்கியும் துருக்கியின் ஆயுதம் கொண்ட சைனியங்களும் ஜெர்மனிக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மத்தியில் ஒரு வலுவான கொத்தளமாக நிற்கக்கூடும். பால்கன் நாடுகளில் ஜெர்மனிக்கு ஏற்படக்கூடிய வெற்றிகளிலிருந்து, பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்தில் சில முக்கியமான ஸ்தலங்களுக்குப் போகும் பாதைகள் திறக்கப்படுவதைத் தவிர, ஜெர்மனிக்கு வேறு பிரயோஜனம் ஏற்படாது. இவைகள்தான் துருக்கியின் ஜாக்கிரதையான மனோநிலைக்கு முக்கிய காரணங்கள். துருக்கியானது ராணுவ எதிர்ப்பு இல்லாமலே யுத்த பேரிமுழக்கிவிடுமென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனாலும் அனுபவத்திலிருந்து இது ரொம்பவும் சந்தேகாஸ்பதமான ஒரு பிரயோகமென்று சொல்லலாம். துருக்கியின் தற்காப்புகள் ஒவ்வொரு நாளும் வலுவடைந்து வரும்பொழுது துருக்கியைத் தாக்கும்படி ஜெர்மனியை ஏன் நாம் அழைக்கவேண்டுமென்று கூட நாம் கேழ்க்கலாம்.

தற்சமயம் துருக்கி அரசாங்கத்தார் சண்டை செய்யாத நாடாகவே இருந்துவரவேண்டுமென்ற எண்ணத்துடனிருந்து வந்தாலும், இஸ்தான்பூலில் எவ்வித ஆபத்துக்கும் தற்காப்புக்கு வேண்டிய தயாரிப்புகள் நடந்து கொண்டேயிருக்கின்றன. இவைகளை நாம் வெளியிட வேண்டியதில்லை. சிலவற்றைச் சொல்லுவதினாலும் பாதகமில்லை. பாஸ்பரஸ், கோல்டன் ஹார்ன் ஜலசந்திகளிலிருக்கும் அழகிய சிறு படகுகளிலுள்ள வெள்ளைப் பூச்சுகளை அழித்துவிட்டு அவைகளுக்கு சண்டைக் கப்பல்கள்போல் சாம்பல் வர்ணமான வர்ணங்கள் பூசுகிறார்கள்.

# இரண்டு போர்முனைகளில் தோல்வி.

(ஒரு சுருக்கம்).

## I. கிரீஸில் யுத்தம்.

(ஏப்ரல்மீ 27-ந் தேதியன்று மிஸ்டர் சர்ச்சில் ஒலிபரப்பியதிலிருந்து).

ஜெர்மானியப் படையெடுப்பின் வேகத்தை நாம் கிரீஸுக்கு அனுப்பக்கூடிய சேனைகள் மட்டும் தடுக்கப்போதுமானதல்லவென்று நமக்குத் தெரியும். ஆகிலும் நம்முடைய சிபார்சினால் கிரீஸுக்குப் பக்கங்களிலுள்ள நாடுகளெல்லாம் ஒன்று சேர்ந்து நின்றுவிடுமென்று நாம் பூர்ணமாய் நம்பியிருந்தோம்.

இது எப்படி முடிந்தது என்று நாம் ஒரு நாள் தெரிந்துகொள்ளுவோம். யூகோஸ்லாவியாவுக்குக் கஷ்டமான நிலை ஏற்பட்டதற்குக் காரணம் அங்கேயுள்ள வீரம்பொருந்திய ஜனங்களை நாஸிகள் அபிப்பிராயப்படி நடந்துகொள்ள கேவலமான காரியத்தைச் செய்யக்கூடிய ஒரு அரசாங்கமானது ஆண்டுவந்தது. கடைசியில் ஜனங்களைப் படுகுழியில் தள்ள ஏற்பாடு நடந்துவிட்டதென்று தெரிந்த உடன் யூகோஸ்லாவியாவிலுள்ள ஜனங்கள் எல்லோரும் ஒரே மனதாகக் கலகம் செய்தார்கள். தங்களுடைய கௌரவத்தையும், தங்கள் நாட்டின் வருங்காலப் புகழையும் அவர்கள் காப்பாற்றிவிட்டார்களாகிலும் தங்கள் தேசத்தைக் காப்பாற்றிக்கொள்ள அவர்களுக்கு அவகாசம் இல்லாமல் போயிற்று.

தங்களுடைய சேனைகளை ஒன்றுகூட்ட அவர்களுக்கு அவகாசமில்லை. அவர்களுடைய சைனியங்களை யுத்த களத்துக்குக் கொண்டுவந்து சேர்க்குமுன்னமே ஜெர்மானியர்கள் அவர்களுடைய கவசம் பூண்ட சைனியங்களால் இரக்கமன்னியில் அவர்களை அடித்துவிட்டார்கள். ஆகையால், பால்கன் நாடுகளில் கெடுதல் நேர்ந்துவிட்டது. யூகோஸ்லாவியா விழுந்துவிட்டது. இனிமேல் மலைப்பிரதேசங்களில்தான் யூகோஸ்லாவியர்கள் எதிர்த்து நிற்கமுடியும். கிரேக்கர்களும் தங்களைவிட அதிகமான படைகளால் தோற்கடிக்கப்பட்டுவிட்டார்கள். ஜயமுள்ளதாகயிருந்த அல்பேனியாவிலுள்ள கிரேக்க சைனியமானது பிரத்தியேகமாக்கப்பட்டு சரண்புகும்படி நேர்ந்துவிட்டது. அங்கிருந்த ஆஸ்திரேலியத் துருப்புகளும், நியூஸீலாந்து துருப்புகளும் அவர்களோடு யுத்தம்செய்த பிரிடிஷ் சகோதரர்களும் பின்வாங்கி கடற்கரைக்கு வரவேண்டியதாயிற்று. இதில் இடையூறு செய்தவர்களுக்கு சரியானபடி மரியாதையும் செய்துவந்தார்கள்.

### பலன்கள்.

ஏப்ரல் 27-ந் தேதியன்று பிலிப் நோயல் பேக்கர், M. P. ஒலிபரப்பியதிலிருந்து:—

கிரேக்க சைனியமானது 10 டிவிஷன்கள்கொண்ட இதாலியர்களுக்கு சேதம் விளைவித்து, நூற்றுக்கணக்கான பீரங்கிகளையும், அநேகம் இரும்பு மோட்டார்களையும், ஆயிரக்கணக்கான யந்திர பீரங்கிகளையும் நாசமாக்கியும், கைவசப்படுத்தியுமிருக்கிறது. கிரேக்க விமானப்படையும், பிரிடிஷ் விமானப்படையும்,



தரையிலிருக்கும் கிரேக்க பாதுகாப்பு அமைப்புகளும், நூற்றுக்கணக்கான இதாலிய விமானங்களைச் சுட்டு வீழ்த்திவிட்டன. கிரேக்க கடற்படையானது இரண்டு இதாலிய நீர்மூழ்கிகளையும், இதர சண்டைக் கப்பல்களையும், பெரிதும், சிறிதுமான சாமான் கப்பல்களையும் மூழ்கடித்துவிட்டது. ஏட்ரியாடிக் சமுத்திரத்தில் 15 அல்லது 20 பெரிய இதாலிய சாமான் கப்பல்கள் அமுங்கிக்கிடக்கின்றன............

யாதொரு சண்டையுமில்லாமல் பால்கன் நாடுகளை ஆக்கிரமித்துவிடலாமென்று எண்ணிய ஹிட்லர் இரண்டு பெரிய சண்டைகள் போடும்படியாக நேர்ந்தது. நமக்குக் கிடைத்திருக்கும் விசேஷமான தகவல்களிலிருந்து யுத்தம் ஆரம்பிக்குமுன் ஹிட்லர் 40 வகுப்புகளுள்ள சேனையைத் தயாரித்து வைத்திருந்தானென்றும், இவைகளில் 5 பகுதிகள் பூராவும் ஆயுதபாணிகளென்றும், வெற்றியினாலில்லாவிட்டாலும், கொடுமையாலாவது, யூகோஸ்லாவியா, கிரீஸ், துருக்கி முதலிய நாடுகளை ஆக்கிரமிக்க 1,200 அல்லது 1,500 விமானங்களையும் சேமித்து இருந்தானென்றும் தெரியவருகிறது.

அவர்களுக்கு யூகோஸ்லாவியர்கள் எவ்வளவு சேதம் விளைவித்தார்களென்று ஒருவரும் அறியமுடியாது. ஆகிலும் கடுமையாக யுத்தம் ஒரு வாரம் நடந்தது. ஆகையால் கொலையுண்டவர்களும், காயம்பட்டவர்களும் குறைந்தபக்ஷம் அநேக சேனைப்பகுதிகளடங்கியிருக்கக்கூடும். ஸ்ட்ருமா பள்ளத்தாக்கிலும், மாஸிடோனியாவிலும், ஒலிம்பஸ் மலையிலும், தெர்மாபிலேயிலும் 16 பாகங்களுக்குப் பெரும் நஷ்டம் உண்டாகியிருக்கிறது. அவைகளிலும் ஆயுதம் தாங்கிய இரண்டு பாகங்கள் ரொம்பவும் கெடுதியடைந்துவிட்டன. அவைகள் சண்டை செய்யும் நிலைமையை அடைய அநேக மாதங்களாகும். ஜெர்மனிக்கு 500 விமானங்களாவது சேதமேற்பட்டிருக்கும். ஏனெனில் யூகோஸ்லாவியர்களே 300 விமானங்களை சுட்டுத்தள்ளியிருக்கிறார்கள். ஹிட்லருடைய கிரீஸ் போரில் விரசு போட்டதில் இதுதான் ஹிட்லருக்கு ஏற்பட்ட ராணுவ லாபம்.

இதுவரையில் பால்கன் நாடுகளிலிருந்து கட்டாயத்தின்பேரில் எல்லாவிதமான சாமான்களும், அதாவது உணவுப் பொருள்கள், உலோகங்கள், எண்ணெய், மரம், ஹிட்லருக்குக் கிடைத்துவந்தன. இப்பொழுது ஆதென்ஸிலிருந்து ஸலோனிகாவுக்கும், ஸலோனிகாவிலிருந்து பெல்கிரேடுக்கும் செல்லும் இருப்புப் பாதைகள் அநேக இடங்களில் சீர்கெட்டுவிட்டன. ருமேனியாவிலிருந்து ஜெர்மனிக்குப் படகுகள்மூலம் டான்யூப் நதிமார்க்கமாய்ப் போய்க்கொண்டிருந்த சாமான்கள் அந்த நதி தாத்காலிகமாக அடைக்கப்பட்டிருப்பதால் நின்றுவிட்டது. யூகோஸ்லாவியாவிலுள்ள பயிர்களெல்லாம் நாசமாகிவிட்டன. சண்டைபோடுவதற்காக ஹிட்லர் ஏராளமான அளவு எண்ணெய் உபயோகித்திருக்கவேண்டும்.

நாம் கிரீட் தீவிலுள்ள துறைமுகங்களிலும், விமான நிலயங்களிலும் பலமாக நிலைநாட்டிக்கொண்டுவிட்டோம். இது முதல் ஹிட்லர் புதிதான பெரிய இரண்டு

எதிரிகளின் ராஜ்ஜியத்தைக் காபந்துசெய்யவேண்டியிருக்கிறது. இவைகளுக்கு அநேக சேனுபாகங்கள் தேவையாயிருக்கும்:

மிஸ்டர் மென்ஸீஸ் சொல்லுவதுபோல் கிரேக்கர்களுக்கு நாம் உதவியளிக்காமலிருந்திருந்தால், சரித்திரத்திலேயே ஒரு பெரும் அபக்யாதி நமக்கு உண்டாகியிருக்குமென்று நான் நினைக்கிறேன்...........அது அபக்யாதியாகமட்டுமிருந்திராது. பெரிய முட்டாள்த்தனமான காரியமாகவுமிருந்திருக்கும்!

## II. லிபியாவில் யுத்தம்.

ஏப்ரல்மீ 27-ம்தேதி செய்த ஒலிபரப்பில் திரு. சர்ச்சில், லிபியாவிலுள்ள எதிர்பாராத ஒரு பெரிய ஜெர்மன் படையினிடத்தில், பிரிடிஷ் படைகள் விசனிக்கத்தகுந்ததும், அபக்யாதியுள்ளதுமான ஒரு தோல்வி பெற்றார்களென்று பேசினார்.

நியூயார்க்கிலுள்ள **ஹெரால்ட் ட்ரிப்யூன்** என்னும் பத்திரிகை எழுதுவதாவது.—"சர்ச்சிலின் பேச்சில் இரண்டு முக்கியமான விஷயங்கள் உள. அதாவது, பிரிடிஷ் மக்களின் மனோதைரியத்தை அது எப்படி பாதித்தது. அமெரிக்காவின் அபிப்பிராயம் எவ்விதம் மாறுதலடைந்தது. பிரசாரத்திலேயே மூழ்கிக்கிடக்கும் யூதச்சாதிகாரக் கொள்கையுள்ள ஜனங்கள், பேச்சின் தாத்பர்யத்தை அந்த சமயம் அறிந்திருக்க முடியாது. பிரிடிஷ் மக்கள் அதை நன்ருய் அறிந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமே இல்லை."

பிரதம மந்திரியின் முக்கியமான கருத்துகள் யாதெனில்:—

(i) ஜெர்மானியர்கள் தாக்கியபொழுது, ஸிரெனைகாவில் இருந்த சதுரவ்யூகமானது, ஒரு ஆயுதம்பூண்ட படை வகுப்பும், ஒரு காலாட்படை வகுப்பும் அடங்கியது.

(ii) எகிப்தில் ஜெர்மானியர் படையெடுத்தால், அவர்களுக்குப் பக்கத்திலிருக்கும் டொப்ருக் நம் வசமிருக்கிறது. அங்கே அநேக எதிர்ப்புகளை நாம் பின்னோட்டிவிட்டதுமல்லாமல், சத்ருக்களுக்குப் பெருத்த சேதம் விளைவித்து அநேகர்களைக் கைது செய்துமிருக்கிறோம்.

(iii) இப்பொழுது யுத்தமானது மத்யதரைக்கடலிலும், சமுத்திரத்திலும், பாலைவனத்திலும், விசேஷமாக, ஆகாயத்திலும், கொரேமாயும், பலவகையாயும், விரிவாகவும் நடக்கக்கூடும். ஸிரெனைகாவிலிருந்த இதாலியர்களை நாம் விரட்டிவிட்டோம். இனிமேல் அங்கிருக்கும் ஜெர்மானியர்களை அப்புறப்படுத்துவதுதான் நம்முடைய வேலை. ஆகிலும் இதை உடன்காலத்திலேயே நாம் செய்யமுடியாது.

(iv) கிழக்கு, மத்தியக் கிழக்கு, அல்லது தூரக்கிழக்கு நாடுகளில் பழிக்குப்பழிவாங்குதல் என்ற நியாயமானது ஹிட்லரைத் துன்புறுத்தப்போகிறது. இந்த யுத்தத்தில் ஜெர்மனி வெற்றிபெறவேண்டுமானால், இந்தத் தீவின்பேரில் படையெடுத்து அதை ஜயிக்கவேண்டும்; அல்லது நமக்கும் ஐக்கிய நாடுகளுக்கும் உயிர் நாடிபோலிருக்கும் மஹா சமுத்திரத்தில் யுத்தம் செய்யவேண்டும்.



### அச்சு நாடுகளின் ஒப்புதல்கள்.

வேவலின் வெற்றிகளுக்கு எதிராக சென்ற ஜனவரிமீத்தில் அவசர அவசரமாக பிரசாரத்தின் மூலம், மேற்குப் போர்முனையில்தான் இந்த யுத்தம் முடிவடையப்போகிறதென்று அச்சு நாடுகள் ஒப்புக்கொண்டார்கள்.

வட ஆபிரிக்காவின் பாலைவனத்திலுள்ள சில கோட்டைகளைக் கைப்பற்றியது ஜெனரல் வேவலுக்கும், அவருடைய துருப்புகளுக்கும் கியாதியை அளித்தாலும், இது, ஆகாயத்திலிருந்து பிரிடன்மேல் ஜெர்மனி பொழியும் வெடிகுண்டுமாரிகளின் கோரத்தையும் அல்லது கப்பல்களின் முற்றுகை என்னும் குறவளைப்பிடிப்பையாவது பாதிக்கமுடியாது என்று ஜனவரிமீ 26-ம் தேதியன்று ஜெர்மனியில் ஒலிபரப்பப்பட்டது.

ஆகையால், அந்தக் கோட்டைகளை ஜெர்மனி திரும்பப்பிடித்ததிலிருந்து ஜெர்மனி பேரில் ஒவ்வொரு மாதமும் வலுவடைந்துகொண்டும் அமெரிக்காவின் பொருளாதார சக்தியால் உதவப்பட்டும்வருகிற பிரிடிஷ் விமானங்கள் வெடிகுண்டு போடுவதையும் முற்றுகை ஏற்பாட்டை நடத்துவதையும் இந்த வெற்றி தடுத்துவிட முடியுமா?

---

# விஷயங்களைச் சேர்த்துப் பார்த்தல்.

---

## வியாபாரக் கப்பல்களுக்கு ஐக்கிய நாடுகள் கொடுக்கும் துணை ரக்ஷிப்பு.

(இது "மதராஸ் யுத்த ரிவியூ" என்ற பத்திரிகையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது).

கடைசியாகக் கொடுபட்ட எச்சரிக்கையால் விசேஷமான தீர்மானங்கள் செய்து கொள்ளவேண்டுமென்று விழித்துக்கொண்டு, அமெரிக்காவும், பிரிடனும் பிடிவாதத்தையும், உறுதியையும் மேல் கொண்டுவிட்டது.

ஏப்ரல்மீ பிரிடனுக்கும் நேசதேசங்களுக்கும் செல்லும் கப்பல்களுக்குத் துணை கொடுக்கப்போகிறோம் என்று கர்னல் நாக்ஸ் (அமெரிக்கக் கடற்படை காரியதரிசி) அடியில் சொன்ன பிரகாரம் கண்டிப்பாய் சூசிப்பித்தார். "இது வரையும் போனவர்களாக இனியும் நாம் மேலே போவோம். பிரிடனுக்கு நாம் உதவி செய்வோம் என்ற வாக்குறுதியை நிறைவேற்றுவோம்"—அவர் இதையே வற்புறுத்திச் சொல்லும்போது "ஹிட்லர், நாம் பிரிடனுக்கு அனுப்பும் யுத்த சாமான்களை, அங்கு போய்ச் சேர அனுமதிக்கமாட்டான். ஏனெனில், அப்படிப் போகும் பக்ஷத்தில் அவன் நிச்சமாய் தோற்றுப் போவான். அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் அந்தப் பொருள்களை மூழ்கும்படிக்கு நாம் விடக்கூடாது". அப்படி மூழ்கடிக்கப்படும் பக்ஷத்தில் நாம் முறிபட்டுப் போவோம். "எந்த யுத்த சன்னத்த நாடுகளின் நோக்கங்களும், அதன் அமைப்புகளும், அதன் காரிய தோரணைகளும், நமது நாட்டின் லக்ஷியங்களுக்கும் முரண்பாடாக இருக்கின்றனவோ, அந்த நாடுகள் நம்மை நாலா

பக்கத்திலும் மெதுவாய் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள்" என்று அவர் எச்சரித்தார். "தவிரவும், இந்த வல்லரசுகள் நமக்கு சத்துருக்கள் தான் என்று பகிரங்கமாய் பிரகடனப்படுத்தியிருப்பதுடன், நம்மைக் குறித்துத்தான் என்று சொல்லுவதில் தயங்காமல், நமக்கு எதிரிடையாக அவர்கள் முக்கூட்டு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்கள்" என்று தெளிவாக்கினார்.

அச்சு தேசத்தார்களுக்கு எப்பொழுது நல்ல சமயம் வாய்த்தது என்று தோன்றுமோ அந்த சமயத்தில் நிச்சயமாய் நம் பேரில் போர்தொடுத்து விடுவார்கள். நாம் பூரா சரணாகதி செய்துவிட்டோம் என்றால் தான் போர் தொடுக்கவேண்டாம் என்று தங்கள் எண்ணத்தை மாற்றிக்கொள்ளுவார்கள். நாம் முன்வைத்த கால்களை பின்னாடி இழுக்கமுடியாது. நாம் பின்னுக்கு இழுத்துவிட்டால் இங்கிலாந்து ஒரு பிரளயம் போலுள்ள தோல்வியையடைந்து கீழே போய்விடும். நமக்கு எதிரில் உலகத்தையே ஜயித்த தேசங்களைப் பார்ப்போம். நாம் அவர்களை தனிமையில் எதிர்க்கும்படியாகப் போய்விடும். அக்ரம, ஆக்கிரமிப்பு செய்து வரும் நாடுகள், ஜயிக்கக்கூடாது என்று நாம் உறுதி செய்துவிட்டோம். அவர்கள் ஜயிக்கா வண்ணம் தடுக்கவேணுமென்று நாம் கங்கணம் கட்டிக்கொண்டு விட்டோம். எப்படி இந்த யுத்தம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினுடையவும், ஜயிக்கப்பட்ட நாடுகளான ஹாலண்டு, பெல்ஜியம், நார்வே, பிரான்ஸ், பால்கன் சமஸ்தானங்கள் இவைகளுடைய இறுதியான விதியை நிஷ்கரிக்குமோ அம்மாதிரியே தான் நம்முடைய இறுதிப் போக்கையும் நிஷ்கரிஷிக்கும்.

இப்படி வெளிவிட்டுச் சொன்ன விஷயங்களை ஐக்கிய நாட்டு காரியதரிசி கார்டல் ஹல் ஒலிபரப்பு மூலம் ஸ்திரப்படுத்தினார். இப்பொழுது சமாதானம் செய்யக்கூடாது என்று வெகு பலமாய் அபிப்பிராயப்படுவதாய்ச் சொன்னார். அப்படிச் செய்யும் பக்ஷத்தில் நாம் "ஒரு பொறியில்" அகப்பட்டுக் கொள்வது நிச்சயம். "ஆதலால் மிச்சம் மீதாரியாயுள்ள ஸ்வயர்ச்சி தேசங்கள் உடனடியாக யுத்த சன்னத்தமாகி தங்களைக் காப்பாற்றிக்கொள்ள ஏற்பாடுகள் செய்ய வேணும்" என்றார். "உலக ஆதிக்கம் என்று போடப்பட்ட அச்சு திட்டத்தில் அமெரிக்காவையும்தான் சேர்க்கப்பட்டிருக்கிறது" என்று குறிப்பிட்டுச் சொன்னார். எவர் ஜயித்தால் என்ன என்று இருக்க முடியாது. நாம் அமைதியான உலக சமுதாயத்திலிருப்பதா? அல்லது நான்கு கண்டங்களும் ஒன்று திரட்டி நமக்கு எதிரிடையாக நின்று நாம் எந்த விஷயங்கள் அடிப்படையான ஜீவாதாரங்கள் என்று கருதுகிறோமோ அவைகள் நாசம் செய்யப்பட்டு நம்மை ஒரு மூலையில் தள்ள தாக்கப்படுவதா? இதுதான் அவர் ஜயிப்பதால் உண்டாகும் வித்தியாசம்.

ஜெர்மானியர்கள் இங்கிலீஷ் சானலையே கடக்க முடியவில்லையே நமது பெரிய அரணுள்ள அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தை எப்படி கடக்கப் போகிறார்கள் என்று சொல்வதும், நினைப்பதும் பிசகு என்றும், கேலிக்கூத்து என்றும் சொன்னார். "ஏன் இங்கிலீஷ் சானலைக் கடக்க முடியவில்லை என்றால் ஹிட்லருக்கு எதிரிடையாக நிற்பது அந்த 20 மைல் அகலமுள்ள ஜலமல்ல, அதற்கப்பால் வசிக்கும் 40 லக்ஷம் ஜனங்களும்; அவர்களின் ஆத்மபலமும்



அவைகளை உருவாக்கி அனுப்பப்படும் ஆகாய விமான பலமும், கப்பற்படை பலமும் தான். ஹிட்லரை நிறுத்தியிருப்பது ஜலமல்ல பிரிட்டிஷாரின் மன உறுதி. இப்பொழுது எதிர்த்துப் போராடும் இங்கிலாந்து சமுத்திரங்களை காபந்து செய்ய முடியாமல் போகும் பக்ஷத்தில் அட்லாண்டிக் மஹா சமுத்திரமானது அச்சு நாட்டுப்படைகள் வெகு சுலபமாக மேற்கு நோக்கிச் செல்ல ஒரு மகத்தான சுலப சாதனமாக அமைந்து விடும். அந்த சமுத்திரம் அவர்களுக்கு ஒருக்காலும் இடராகயிருக்காது" என்றார். காரியதரிசி முடிவாக, "நம்மால் எவ்வளவு ஜாஸ்தியாக அளிக்க முடியுமோ அவ்வளவு ஜாஸ்தியாகவும், எத்தகைய குறுகிய காலத்திற்குள் அனுப்ப முடியுமோ அத்தகைய குறுகிய காலத்திற்குள் நாம் இங்கிலாந்துக்கு நம்முடைய உதவியை அளிக்கவேண்டும்" என்று கூறினார்.

ஐக்கிய நாட்டு பிரஸிடெண்ட் கடைசியாக ரக்ஷிப்புத்துணை சம்பந்தமான பிரச்னையைத் தீர்த்து வைக்காமல் "ஏழு சமுத்திரங்களிலும், எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் வரை அமெரிக்கக் கப்பல்கள் சென்று ரோந்து பார்க்கும் என்று" உறுதி கூறுகிறார். "மேல கோளத்தின் தற்பாதுகாப்புக்கு அத்தியாவசியமாயிருக்கும் பக்ஷத்தில் அமெரிக்க யுத்தக் கப்பல்கள் யுத்த பிராந்தியங்களுக்குக்கூட செல்லும்" என்று சொன்னார். அச்சு நாட்டாருக்கு விட்டுக் கொடுக்கும் கொள்கையை அறவே ஒழிக்கவேண்டுமென்று வற்புறுத்திய போது "அட்லாண்டிக் மஹா சமுத்திரக்கரையிலிருந்து சுமார் 1,000 மைல் வரை சென்ற ஒன்றரை வருஷங்களாய் அமெரிக்கக் கப்பல்கள் பாராக் கொடுத்துக் கொண்டிருந்து வருகிறது" என்று வெளியிட்டார். அந்த மாதிரி ரோந்துகளின் ஒன்றான "மேரிலாண்டு ரோந்து" என்ற ஒரு பாரா விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது, இன்னமும் விஸ்தரிக்கப்படும் என்று தெளிவாக்கினார். ரோந்து என்றால் என்ன என்று பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் வியாக்கியானம் செய்திருக்கிறார். "அதன்படி ஆக்கிரமிப்பு தேசக் கப்பல்கள் மேல கோளத்தை நோக்கி வரும் பக்ஷத்தில், முன்காட்டி அறிந்து தெரிவிக்கிறது" என்றார். இதை நடுநிலைமை ரோந்துக்கும், அமெரிக்காவில் முதல் முதலில் குடியேறிய வெள்ளையர்கள், அவர்களுக்கு எதிரிடையாய் அவ்வூரில் வசித்த சிவப்பு இந்திய ஜாதியார்களுக்கு எதிர்க்காக கையாண்ட "wagon caravan patrol"க்கு உள்ள ஒத்துமையை உபமானமாகக் காட்டினார். "ரக்ஷிப்புத்துணை" சம்பந்தமாய் பிரஸிடெண்ட் மௌனம் சாதித்தார். இருப்பினும் இதை ரோந்து கொடுப்பது என்ற உடமையை மேல் கொண்டு அதை அட்லாண்டிக்கில் உபரி விரிவாக்குவதாகப் பொருள்படும்படி பேசினார். "ஜெர்மானியரால் யுத்த அரங்கம் என்று பிரிடனைச் சுற்றியுள்ள சமுத்திரங்களை பாவிப்பதாய்ச் சொல்லிக்கொண்டாலும், அமெரிக்கன் யுத்தக் கப்பல்களுக்கு இந்தப் பிரதேசமும் தன் பாராவில் சேர்ந்தது தான்" என்றார். இதன் பொருள் யாதெனில், மேற்கு கண்டப் பாதுகாப்பிற்கு அவசியம் வரும் பக்ஷத்தில் இந்த பிரதேசத்திற்குள் யுத்தக் கப்பல்கள் பிரவேசிக்கும். ஆனால், இதுவரை அவைகள் செல்லவில்லை. சில ராஜீய காரணங்களை முன்னிட்டு இதில் வெகு ஸ்பஷ்டமாய் சொல்லாமல் இருக்கிறார் என்று யாவரும் நன்றாய் அறிந்தது தான்.

அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் தற்பொழுது நடக்கும் விதமாய் கப்பல்கள் அமிழ்த்தப்படுவதையும், அமிழ்த்தப்படும் விகிதத்தையும் தடுக்க வேணும் பக்ஷத்தில் நாம் "convoy" திட்டத்தைக் கையாளத்தான் வேண்டும் என்று அமெரிக்கர்கள் யாவரும் உணர்ந்திருக்கிறார்கள். ஆர்ஜென்டைன் என்ற தென் அமெரிக்க நாட்டிற்கு அனுப்பப்பட்ட ஐக்கிய நாட்டு ராஜாங்க தூதப்பிரதிநிதி தெளிவாகச் சொன்னதைப் பார்ப்போம். "நாம் நம்முடைய பூர்ண சக்தியையும், திரவியங்களை உபயோகித்து ஆகாய விமானங்களையும், கப்பல்களையும், யுத்த தளவாடங்களையும் உற்பத்தி செய்து விட்டு ஐக்கிய நாட்டுக் கரையிலேயே அவைகள் துருப்பிடித்துப்போகும்படி விடப்போகிறதில்லை. அல்லது அவைகள் அட்லாண்டிக் சமுத்திரத்திற்குள் அமிழ்ந்து போகும்படியும் விடப்போகிறதில்லை."

---

# அது எவ்வளவு நல்லது?

---

## ருஷ்யாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தால் ஜப்பானில் ஏற்பட்ட அதைப்பு.

## "பெரிய கீழ் ஆசியா" ஏற்பாட்டின்பேரில் உண்டாகிய விளைவு.

## சுங்கிங்கைக் குறித்து ஸோவியட் நிலை.

டைம்ஸ் டோகியோ நிருபர் ஏப்ரல் மீ 15உயில் தந்தியடித்தது:—

பிரிட்டன், ஐக்கிய ஸமஸ்தானங்கள், சைனா இந்த தேசங்கள் பேரில் ஜப்பானிய பத்திரிகைகள் ஒரு புதிய அதிர்ச்சிப்பிரசாரம் ஆரம்பித்திருக்கின்றன. இந்த ருஷ்ய ஜப்பானிய ஒப்பந்தம் ஒரு புதிய நிலையை ஏற்படுத்தியிருக்கிறதாம். அதில் ருஷ்யாவும் ஜப்பான், ஜெர்மனி, இதாலி இவைகளுடன் சேர்ந்துகொள்ளுமாம். அதன்படி இந்த உலகத்தை அவரவர்களுக்குள்ள செல்வாக்கு மண்டலங்களாக பிரிவினை செய்துகொள்வார்களாம். ஆகையால் ஜப்பானியர் ஸ்தாபிக்க முற்பட்டிருக்கும் பெரிய கீழ் ஆசியா க்ஷேமவிருத்தி ஏற்பாட்டை எதிர்க்க முயற்சிப்பது வீண். ஆகையால் அமெரிக்காவும் பிரிட்டனும் தங்கள் கொள்கைகளை திருத்தி அமைத்துக்கொண்டு ஜப்பான் போனவழி விடவேண்டுமென்றெல்லாம் ஜப்பான் வீசுகிறது. சுங்கிங் ஸர்க்கார் துப்பாக்கியை கீழே போடவேண்டும் என்று ஜப்பானிய பத்திரிகைகள் கூறுகின்றன.

இந்த வீச்சுகளுக்கு ஆதாரமாக ஜப்பானிய யுத்த மந்திரி சேனாபதி டோகோவும், கடற்படை மந்திரி கடற்பதி ஐகாவாவும் பேசுகிறார்கள். ஏற்படப்போகும் முட்டுப்பாட்டில் தேசத்தை கைவிடாமல் நிற்பதற்காக ஜப்பானிய யுத்த அணிகள் அல்லும் பகலும் தயார் செய்துகொள்ளுகின்றன. தேசத்தில் தனத்தை மீதப்படுத்த கட்டுச்செட்டாகச் செலவு செய்யவேணுமென்றும், செல்வ மந்திரி கவாடா சொல்லுகிறார். சமதர்மக்காரர்களையும், உளவர்களையும், சதியாலோசனை செய்பவர்களையும், அடக்கிவிடுவதாக நியாயமந்திரி யனகாவா



சொல்லுகிறார். கீழ் ஆசியா பிரதேசத்தில் ஜப்பானிய ப்ரவிருத்தியை வளர்ப்பதாக வெளிநாட்டு மந்திரி அகிடா என்பவர் உறுதி சொல்லுகிறார்.

### இந்த ஏற்பாடு கேவலம் பொருளாதாரத்தைப்பற்றியது.

ஜப்பானியர் ஆரம்பித்திருக்கும் ஏற்பாடும் பொருளாதாரத்தைப்பற்றியதென்று பிரதம மந்திரியான கோமகன் கொனோயே வற்புறுத்திச் சொல்லும் சொற்களையே பத்திரிகைகளும் திருப்பிச் சொல்லுகின்றன. பிரிட்டன், அமெரிக்கா முதலிய தேசங்களின் பைத்தியகாரத்தனமான பிரயத்தனங்களால் ஜப்பானியரின் தென்போக்கும் அதனுடைய இஷ்டத்துக்கு விரோதமாக, அமைதியற்ற விதத்தில் முடிவதைத் தடுக்க முடியாமல் போன நிலையை அடைந்திருக்கிறது என்று **கொகுமின்** என்ற பத்திரிகை கூறுகிறது.

வெளிநாட்டு இலாகா பத்திரிகையான **ஜப்பான் டைம்ஸ் அண்டு அட்வர்டைஸர்** என்ற பத்திரிகை சொல்லுகிறதாவது:

"நில யுத்தத்திலாவது, கடல் யுத்தத்திலாவது, ருஷ்யா ஜப்பானுடைய வலப்பக்கத்திலாவது, பின்புறமாவது, தாக்குமென்ற சந்தேகமேயில்லாது. ஜப்பான் ஒரு தற்காப்பு யுத்தத்திலாவது முன்னேறித்தாக்கும் யுத்தத்திலாவது இப்பொழுது இறங்கலாம். ஆனால் பின் சொன்ன யுத்தம் ஆரம்பத்தில் ஜப்பானுக்கு அபாயகாரமாகயிருக்கும். ஜப்பானுக்கு முன்னேறித் தாக்கும் எண்ணம் கிடையாது. ஆனால் அதை இதர அரசுகள் லேசாகத் தாக்கமுடியாதென்ற உணர்ச்சியில் ஒரு சக்தி இருக்கிறது."

"உண்மையான முன்னறிவுள்ள பிரிட்டன் ஜப்பானுடனுள்ள தன் சம்பந்தத்தை அபிவிருத்தி செய்துகொள்ளச் செய்த முயற்சிகளும் வாஷிங்டனுடன் நட்புசெய்துகொள்வதில் அவசியமிருப்பதாக அதற்கு ஏற்பட்ட அபிப்பிராயத்தால் வீணாக்கப்பட்டன."

சுங்கிங்கைப்பற்றிச் சொல்லும்போது ஒரு ஜப்பானியஸர்க்கார் அறிவிப்பாளர் சொல்லுகிறதாவது. "சைனா விஷயத்தில் ருஷ்யா ஜப்பானுக்கு சாதகமாகயிருக்குமென்று ஜப்பான் நம்புகிறது. அந்தப் பிரச்னை விலகரிக்கப்படவேண்டும்.' '

**அஸாஹி ஷிம்பன்** என்ற பத்திரிகை இன்னும் வெளிப்படையாகச் சொல்லுகிறது. "இந்த ஒப்பந்தப்படி கவனித்தால் ஜப்பானுக்கும் ருஷ்யாவுக்குமுள்ள நட்பை நசுக்குவதற்காகவே ருஷ்யா சியாங்கைஷேக்குக்கு உதவியளிக்கிறதென்பது தெளிவு."

### விசால நோக்காளர்களின் அபிப்பிராயம்.

ஆனால் விசால நோக்கமுள்ள ஜப்பானியர்களோ, இந்த ஒப்பந்தத்தின் பிரயோஜனத்தைப்பற்றி அவநம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அதனால் என்ன ஜப்பானுக்குக் கிடைத்திருக்கிறதென்று அவர்கள் கேட்பதுடன் அதனால் பரபரப்புள்ள ஆசாமிகளைக் கிளப்பிவிடுவதைத்தவிர வேறில்லை என்றும் சொல்லுகிறார்கள்.

இதர ராஜ்ஜியங்கள் யுத்தம் செய்து களைத்துப்போனால்தான் ஆதீனத்தை ஸ்தாபித்துக்கொள்ளலாமென்பதற்காக இந்த யுத்தத்தை நீடிப்பதற்காக ருஷ்யா

இவ்வாறு ஒப்பந்தம் செய்திருக்கிறது என்று ஷாங்காய்ஷோகியோ ஷிம்போ என்ற பத்திரிகை கூறுகிறது.

ருஷ்யா பத்திரிகைகளின் வியாக்யானங்களும், மத்ஸூவோகாவும் மாலடோவும் பரஸ்பரம் பரிமாறிக்கொண்ட வந்தனோபசாரங்களும் சேவலம் சிநேக பாந்தவ்வியத்தை உண்டாக்கவும், சிறிய எல்லைப்புற சம்பவங்களைத் தடுக்கவும், பொருளாதார சம்பந்தமான பிரச்னைகளைப் பிரிக்கவும் ஏற்பட்டனவேயொழிய வேறல்லவென்று டோகியோ நன்கு குறிப்பிட்டு அறிந்திருக்கிறது.

செல்வ வட்டாரங்களிலுள்ள அபிப்பிராயமோ நாணய மாற்று சாலைகளில் வெகு அமைதியாகயிருப்பதுடன், இந்த ஒப்பந்தத்தில் ஜப்பானுக்கும், பிரிடன், ஐக்கிய மாகாணங்கள் முதலிய தேசங்களுக்குமுள்ள சம்பந்தத்தில் நெருக்கடியும் பரபரப்பும் அதிகப்படும் என்றும் நினைக்கிறது.

---

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

---

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### ஜெர்மன் பிரதிநிதி சபையோர்கள் ஹிட்லர் சொன்னதைக் கேட்கவேண்டியதுதான்.

பிரிடிஷ் பார்லிமெண்டைப்போல நாம் வெறும் பேச்சைப்பேசி, தர்க்கித்துவிட்டு சபைக்கு உரித்தான விதிகள் அநுசரிக்கப்பட்டதைப்பற்றி வாக்குவாதம செய்துவிட்டு, எடுத்தகாரியத்தை முடிவு செய்யாமல், பிரிடிஷ்காரர்களைப்போல வீண்பொழுது நாம் போக்கமாட்டோம். நமது தலைவர் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளவே கூடுவோம்' என்று ஒரு சமயம் நாஸிக் கக்ஷிக்காரர்களின் கூட்டமொன்றில் டாக்டர் லே சொன்னது இப்பொழுது பிரஸித்தமாய்விட்டது. இதை ஜெர்மன் ரீச்ஸ்டாக் சபையோர்களனைவரும் அறிவார்கள்.

ஜெர்மனிக்குக் கிழக்கேயுள்ள நாடுகளை ஜெர்மானியருக்கு வாசஸ்தலமாக ஆக்கிக்கொள்ள பிடித்துக்கொள்ளவேண்டுமென்று மெயின்காம்ப் புஸ்தகத்தில் எழுதிவிட்டு, இப்பொழுது, அதாவது மே 5-ல் ரீச்ஸ்டாக் சபையில் பால்கன் நாடுகளைக்கவரும் எண்ணமில்லையென்று ஹிட்லர் சொல்லியிருக்கிறார். இதேமாதிரி 26—9—38-ல் ஸெக்கியர்கள்மேல் படையெடுக்கவில்லையென்று சொல்லிவிட்டு, அவர்களைப் படையெடுத்தார். ஆகையால் ஆக்கிரமிக்கவில்லையென்று சொல்லும்போது ஹிட்லர் வார்த்தைகளுக்கு எவ்வளவு மதிப்புவைக்க வேண்டுமென்று புலப்படுகிறது. பால்கன் விஷயத்தில், அதைப்பிடித்துக்கொண்டதுமல்லாமல், தான் நிரபராதியென்று பாசாங்கு செய்கிறார்.

### சக்கரை தடவின கசப்பு மாத்திரை.

முதலில் இதாலியரோடும், பிறகு, இதாலி, ஜெர்மனியோடும் கிரேக்கியர்கள் கடும்போர் செய்தது யாவரும் அறிந்தது. ஆனால் சிற்சில தேசவாதிகள்மட்டும்



கிரீஸில் கூடிக்கொண்டு சண்டை செய்ததாக அவர்களை இகழ்ந்துவிட்டு, கிரேக்கியர்களுடைய வீரத்தையும் ஹிட்லர் மகிழ்ந்து கொள்ளுகிறார். இவருக்கு இந்த கிரேக்கிய யுத்தத்தில் அதிக நஷ்டமேற்பட்டிருக்கிறது. இந்த வருஷத்திலேயே யுத்தத்தை முடித்துவிடுவதாக ஏற்கனவே சொல்லிவிட்டு, இப்பொழுது மறு வருஷம் சண்டை நீடிக்குமென்று சொல்லி, ஆண், பெண் அனைவரையும், ஜெர்மனியில் யுத்த தளவாடங்களை அதிகமாகச் செய்யச்சொல்லுகிறார்.

### நடப்பதற்கு முன்னேயே அறிக்கை.

கிரேக்கியர்கள் வெளியேறுவதற்கு இரண்டு நாள் முன்னமேயே, அதாவது ஏப்ரல் 22-ல், 'பிரிடிஷ் துருப்புகள் கிரீஸைவிட்டு படுஓட்டமாக ஓடுகின்றன என்றார்கள். ஏப்ரல் 21-ல் 25,000 டன் நிறைகொண்ட சாமான்கள் நிறைந்த 5 கப்பல்கள் அமிழ்த்தப்பட்டன. துருப்பேற்றிச்சென்ற இரண்டு கப்பல்கள் பழுதாக்கப்பட்டன' என்றும் பெர்லின் ரேடியோ ஒலிபரப்பிற்று.

இந்த ஒலிபரப்பு செய்யப்பட்ட சமயத்தில் ஒரு பிரிடிஷ் கப்பலாவது கிரீஸிலிருந்து வெளிப்போகவில்லை. இதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பேயே பிரியூஸ் துறைமுகத்தில் பிரிடிஷ் துருப்புகள் கப்பலேறிவிட்டதாக தருக்கியில் பிரஸ்தாபமென்று ஜெர்மனி சொல்லிக்கொண்டது. 'கப்பலேறிய பிரிடிஷ் துருப்புகளில் 30,000 பேர்கள் மாண்டனர்; 1,22,000 டன் நிறையுள்ள பிரிடிஷ் கப்பல்கள் அமிழ்த்தப்பட்டன: மற்றும் சில பழுதுபட்டன; ஏஜியன் கடலில் பிரிடிஷ் துருப்புகளின் பிரேதங்கள் மிதந்து வருகின்றன" என்றும் துருப்பு வெளியேறுவதற்கு இரண்டு நாள் முன்னதாக, மறுபடியும், ஏப்ரல் 23-ல் பொய்யைச்சொல்லிற்று.

இத்தப் பொய்யைக் கட்டும்போது ஏஜியன் கடலுக்கருகாமையில் ஜெர்மானியர்கள் வரவேயில்லை. இத்தக்கடைசி ஒலிபரப்பில் 20,000 டன் கொண்ட மற்ற 6 கப்பல்களையும் அமிழ்த்திவிட்டதாகச் சொல்லிக்கொண்டார்கள்.

### மற்றொரு பொய்.

கிரேக்கர்களை பிரிடன் கைவிட்டுவிடுமென்று இதாலியர் படையெடுத்தபோது ஜெர்மானியர் சொன்ன பொய்யானது மறுமுறை இப்பொழுதும் சொல்லப்படுகிறது. கிரீஸுக்குள் ஜெர்மானியர் புகுந்ததிலிருந்து பிரிடன் கைவிட்டுவிடுமென்று ஜெர்மன் ரேடியோ கூசிக்கொண்டிருந்தது. இதற்குச் சற்றுமுன் பிரிடன் வந்த நிமித்தியத்தால் ஜெர்மனியும் பிரவேசித்ததாக சொல்லிக்கொள்ளப்பட்டது. யந்திர சாதனங்களைக்கொண்டு ஜெர்மானியர் எதிர்த்தபோது, கொஞ்சம் கொஞ்சமாக பின்வாங்கநேரிட்டது. அப்பொழுது பிரிடிஷ் துருப்புகள் கிரேக்கியர்கள் மறைவில் ஓடுவதாகப் பொய் சொன்னார்கள்.

கிரேக்கிய கவர்ன்மெண்டு கேட்டுக்கொண்டபடி பிரிடிஷ் துருப்புகள் வெளியேறின. இதைப்பற்றிய கடிதமொன்றை மிஸ்டர் ஈடன் காமன்ஸ் சபையில் வாசித்தார். அதில், 'இப்போதிய நிலைமையில், சண்டையை இன்னும் நடத்துவதினால் கிரேக்கிய சைனியம் சரணடைந்து, கொலைபடுவதைத் தவிர வேறில்லை. ஆகையால் இனி பிரிடிஷ் துருப்புகள் வெளியேறுவதே நலம்' என்று வரைந்திருந்தது.

### விமானப் போரைப்பற்றிய பொய்

கொலோன், டஸல்டார்ப், எஸ்ஸன் என்ற இடங்கள் மே, 3 அன்று பலமாய் தாக்கப்பட்டன. அப்பொழுது புது மாதிரியான, அபாயகரமான குண்டுகள் வீசப்பட்டன. இவைகளில் ஒன்று விழுந்து ப்ரமன் நகரம் சில தினங்களுக்குமுன் தவுடுபொடியாய் விட்டது. மேற்சொன்னவிடங்களையும், மற்றும் நார்வே, ஹாலண்ட், பிரான்ஸ் முதலியவிடங்களையும் மே, 3-ல் எதிர்த்த போது பிரிடிஷ் விமானங்களுக்குச் சேதமேதுமில்லையாது. அன்று பிரிடனில் மெர்ஸி பிராந்தியத்தில் 16 ஜெர்மன் விமானங்களழிந்ததையும் சொல்லாது, ஜெர்மனி மேல் ஒரு சிறுபடையெடுப்புமட்டும் ஏற்பட்டதாகவும், அப்பொழுது ஏதோ சில வெடிகள்தான் விழுந்ததாயும் ராணுவ-ஸ்தலங்களுக்கு பழுது தோன்றுமில்லையென்றும், வந்த பிரிடிஷ் விமானங்களை சுட்டுத்தள்ளிவிட்டதாயும் சொல்லிக்கொள்ளுகிறது,

---

## B.—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

---

### பிரிடனுக்கு அமெரிக்காவின் உதவி.

அமெரிக்கா சாமான்கள் பிரிடனுக்கு வந்துசேர முடியாதென்றும் ஒரு போர்ச்சுகீஸ் பத்திரிகைசொல்லுவதாக, பாரஸீக பாஷையில் ஜெர்மனி ஏப்ரல் 27-ல் ஒலிபரப்பியிருக்கிறது. ஆனால், 'சீக்கிரத்தில் அதிக சாமான்கள் பிரிடனுக்கு வந்துசேர ஏற்பாடு செய்யவேண்டுமென்று', அமெரிக்கக் காரியதரிசி மிஸ்டர் கார்டல் ஹல் சொல்லியிருக்கிறார். 'நடுநிலைக் கப்பல்களை காக்க அட்லாண்டிக்கில், வரவர, வெகு தூரங்களுக்குக் காவல் போடப்படும்', என்று ரூஸ்வெல்ட் சொல்லிவிட்டார். போனஸ் ஏரிஸிலிருக்கும் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஸ்தானிகர், இந்தச் சாமான்கள் பிரிடனுக்கு வந்துவிடும் என்று ரூஸ்வெல்ட் சொல்லிவிட்டார், அது நடந்தே தீரும், என்றார். ஜெர்மானியரும் இதைத் தெரிந்துகொண்டு பயப்படுகிறார்கள். ரூஸ்வெல்ட் சண்டைக்கிழுக்கிறார், தான் சாதுவைப்போலவும், ஜெர்மனியும், இதாலியும், அனியாயக்காரர் போலவும் பேசிக்கொள்ளுகிறார்; என்கிறது. இதுவே உண்மை. ரூஸ்வெல்ட்தான் சமாதானத்தைத்தேடுகிறவர்.

### இராக்கில் பலிக்கவில்லை.

பிரிடிஷ்-இராக் உடன்படிக்கையை பிரிடன் மீறிவிட்டதாகவும், அராபிய நாடுகளெல்லாம் பிரிடனை எதிர்ப்பதாயும் இந்துஸ்தானிலும், பாரஸீகத்திலும் மே 4-ல் ஒலிபரப்பி, தனது சூழ்ச்சி இராக்கில் பலிக்காதுபோன அவமானத்தை ஜெர்மனி மறைக்கிறது. பிரிடிஷ் துருப்புகளின் முதல் அணி வர இடங்கொடுத்து விட்டு அடுத்த அணியைத் தடுப்பது அக்கிரமத்தோடு உடன்படிக்கைக்கும் விரோதமாகும். 'ஹிட்லரின் கீழ் அராபியர்களுக்கு க்ஷேமம் ஏற்படாதென்று யுனைடெட் ஸ்டேட்ஸிலிருக்கும் அராபியத் தலைவர் சொல்லிவிட்டார். பிரிடனோடுகூடி வாழ்ந்து, மனஸ்தாபங்களை நேரே தீர்த்துக்கொள்ளவேண்டுமென்றும் இவர் புத்தி சொல்லியிருக்கிறார்.



## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

---

### பிரஸங்கம் XLIV.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1941— | | | | | மணி. |
| மே | ...17, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 18, | ஞாயிற்றுக்கிழமை. | திருவப்பூர் ... | ,, | 5.00 |
| | | | வயலோகம் ... | ,, | 6.00 |
| | | | குடுமியாமலை ... | ,, | 6.30 |
| | 19, | திங்கட்கிழமை ... | நச்சாந்துபட்டி ... | ,, | 6.00 |
| | | | விராச்சிலை ... | ,, | 6.30 |
| | 20, | செவ்வாய்க்கிழமை. | பனையப்பட்டி ... | ,, | 6.00 |
| | | | ராங்கியம் ... | ,, | 6.30 |
| | 21, | புதன்கிழமை ... | ராஜகிரி ... | ,, | 6.00 |
| | | | விராலிமலை ... | ,, | 6.30 |
| | 22, | வியாழக்கிழமை .... | திருமயம் ... | ,, | 6.00 |
| | | | கோனாபட்டு ... | ,, | 6.30 |
| | 23, | வெள்ளிக்கிழமை... | புதுப்பட்டி (பொன்னமராவதி).. | ,, | 6.00 |
| | | | வேந்தம்பட்டி ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் XLV.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 24, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 25, | ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி ... | ,, | 6.00 |
| | | | ராசியமங்கலம் ... | ,, | 6.30 |
| | 26, | திங்கட்கிழமை ... | குழிபிறை ... | ,, | 6.00 |
| | | | சுந்தரம் ... | ,, | 6.30 |
| | 27, | செவ்வாய்க்கிழமை. | கோட்டைக்காடு ... | ,, | 6.00 |
| | | | கரம்பக்குடி ... | ,, | 6.30 |
| | 28, | புதன்கிழமை | பிலியூர் ... | ,, | 6.00 |
| | | | கண்ணன்குடி ... | ,, | 6.30 |
| | 29, | வியாழக்கிழமை. | அன்னவாசல் ... | ,, | 6.00 |
| | | | கீழக்குறிச்சி ... | ,, | 6.30 |
| | 30, | வெள்ளிக்கிழமை... | வாளரமாணிக்கம் ... | ,, | 6.00 |
| | | | ஏம்பல் ... | ,, | 6.30 |

புதுக்கோட்டை ஸமஸ்தானம்

யுத்த நிதிக்காக போடப்படும்

# அதிர்ஷ்டச் சீட்டு.

(ஶ்ரீ-தர்பாரவர்கள் உத்தரவின்பேரிலும் ஆதரவின் பேரிலும் புதுக்கோட்டை யுத்தநிதி எண்டெர் டெயின்மெண்ட் கமிட்டியாரால் நடத்தப்படுகிறது.)

## இந்த யுத்த நிதியை ஆதரியுங்கள்

டிக்கெட்டுகளை வாங்குங்கள்

முடிவு தேதி 15—6—41

சீட்டு குலுக்கும் தேதி 23—6—41

நமது மன்னர் அவர்களின் வருஷவர்த்தனை தினத்தன்று அதிர்ஷ்டசாலிகளுக்கு ஏராளமான பரிசுகள்.

300 பரிசுகள்.

| | | |
|---|---|---|
| 1-வது பரிசு | ரூபாய் 7,500 | |
| 2-வது பரிசு | ,, 5,000 | |
| 3-வது பரிசு | ,, 2,500 | |
| 2 பரிசுகள் | ,, 1,000 | வீதம் |
| 5 ,, | ,, 500 | ,, |
| 90 ,, | ,, 100 | ,, |
| 100 ,, | ,, 50 | ,, |
| 100 ,, | ,, 15 | ,, |


Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—17-5-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் வருஷம் மேமீ 24உ [நெ. 45.

பிரஸங்கம் XLV.

## அட்லாண்டிக் மஹா சமுத்திர யுத்தம்.

"எதிரி ஒரு போதும் எதிர்பாராத நீர்மூழ்கிப்போர் ஒன்று மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் ஆரம்பமாகும்" என்று ஹிட்லர் சென்ற பிப்ரவரி மாதம் 26-ம் தேதி யன்று சொன்னான். உடன் காலத்திலேயே அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் பரமவேகத்துடனும், வெகு தீவிரமாயும் ஒரு பெரிய கொள்ளைப்போர்த்தொடுப்பு துவங்கிற்று. மேற்கு கோளார்த்தத்திலிருந்து பிரவாஹம் செய்யும் ஆகார வெள்ளத்தையும் யுத்த தளவாட வெள்ளத்தையும் அணைகோலி தடுத்து பிரிடன் கரைகளை அடைய வொட்டாமல் அடித்தாலொழிய பிரிடனைத் தோற்கடிக்க முடியாதென்று ஹிட்லர் நன்கு அறிந்திருக்கிறான். மேலும் ஜெர்மனியைச்சுற்றி பிரிடன் ஸ்தாபித்திருக்கும் கடற்தடைக்குப் பிரதித்தடை போடவேணுமென்பது ஜெர்மனியின் பிரயத்தனம். அவன் கையிலிருக்கும் ஒவ்வொரு உபாயத்தாலும் நீர்மூழ்கியாலும், வெடி விமானத்தாலும், கடற்கண்ணியாலும், கடல்மேல் செல்லும் கொள்ளைக் கப்பலாலும் உலகத்திலிருந்து அடிப்படைச் சரக்குகள் பிரிடனுக்குப் போய்ச்சேராமல் அடிக்க தன்னால் முடிந்தவரை முயலுகிறான். பிரிடனுடைய கப்பல்களை மூழ்கடிக்கிறான். அவ்வாறு பல கப்பல்கள் போய் விட்டன. ஆயினும் அவன் மூழ்கடித்தவையைக் காட்டிலும் ஜாஸ்தியாகவே பிரிடனுடைய கரைக்கு வந்து சேருகின்றன.

### எதிரியின் பலனற்ற வெற்றி.

பிரிடிஷ் கப்பல்களை மூழ்கடித்ததால் ஜெர்மனிக்கு உபரியாக ஒன்றும் கிடைத்துவிடவில்லை. பிரிடிஷ் எண்ணெய்க் கப்பலை மீன்வெடியால் உடைத்தால்

ஜெர்மனியின் எண்ணெய்க் கிடங்குகள் நிரம்பிவிடவில்லை. ஐரோப்பா தன்னைத் தான் தாங்கக்கூடிய பொருள் நிலையில் இல்லை. அதற்கு ஆசியா, ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா முதலிய தேசங்களிலிருந்து சரக்குகள் வரவேணும். ஆயினும், நிசப்தமாய், கண்ணுக்குப் புலப்படாமல், கொஞ்சம்கூடத் தளராது பிரயோகித்துவரும் பிரிடிஷ் கடற்படை பலமானது ஐரோப்பாவை உலகத்திலிருந்து தனித்து துண்டித்துவிட்டது.

## மூன்று பிரமாணங்களில் யுத்தமும் சில நிர்ப்பந்தமும்.

ஹிட்லருடைய இந்த அட்லாண்டிக் பிரயத்தனம், மூன்று பிரமாணங்களில் பெரிய விமரிசையான அளவில் துவக்கப்பட்டிருக்கிறது—நீர்மூழ்கியாலும், கடல் மேல் கப்பல்களாலும், ஆகாயத்தில் விமானத்தாலும் தாக்குகிறான். அதற்காக அருகிலுள்ள பிரெஞ்சுக் கரைகளிலிருந்து சென்று தாக்கக்கூடிய சிறிய நீர்மூழ்கிகளை ஏராளமாகச் செய்திருக்கிறான். ஆனால் கடற்கலம் செப்பனிடும் சாலைகள் ஜெர்மனியில் வெகு சொற்பம் என்பதை மறத்தலாகாது. மேல் சிறிய நீர்மூழ்கிகள் செய்வதற்கு அதிஸூக்ஷ்மமான கருவிகள் தேவையாகையால் மொத்தம் மொத்தமாகச் செய்வதென்பது முடியாது. மேலும் நீர்மூழ்கிகளில் மூன்றில் ஒரு பாகம்தான் கடலில் ஒரே காலத்தில் இருக்கமுடியும். ஏனெனில் அவைகளைச் செப்பனிட்டுச் சீர்செய்யவும், சிப்பந்திகள் இளைப்பாறவும் சிறிது அவகாசம் கொடுக்கவேண்டியிருக்கிறது. பொதுவாக ஜனங்களை காபருபடுத்துவதற்காக ஜெர்மனி தான் ஏராளமான நீர்மூழ்கிகளைச் செய்து விடுத்திருப்பதாகச் செய்திகளைப் பரப்பியிருப்பினும் "ஸண்டே டைம்ஸ்" பத்திரிகையின் கடற்படை நிருபர்போன்ற நம்பத்தக்க நிபுணர்களுடைய மதிப்பிலிருந்து சுமார் 150 நீர்மூழ்கிகள் ஸ்வந்தமாகயிருப்பதாகவும் அவைகளில் 50 தான் இப்பொழுது ஒரு வாரத்தில் தாக்கிக்கொண்டிருக்க வேணுமென்றும் ஊகிக்கவேண்டியிருக்கிறது. மற்றொரு 50 இளைப்பாற்றிக் கொண்டிருக்கவேண்டும். மற்றொரு 50 செப்பனிடப் படவேண்டும்.

ஹிட்லருடைய அட்லாண்டிக்போரில் மற்றொரு ஆயுதமாகயிருப்பது வெகு தூரம் செல்லும் விமானம். பிரான்ஸ் தேசம் விழுந்ததிலிருந்து அட்லாண்டிக் சமுத்திர பாகங்களிலுள்ள பிரெஞ்சு துறைமுகங்களிலிருந்து தூரசாரிகளான விமானங்கள் வேலை செய்ய ஹேதுவாகயிருக்கிறது. மேலும் பிரிடனுடைய மேல்புறத்துக்கப்பாலுள்ள அட்லாண்டிக் சமுத்திரத்தில் வெகுதூரம் ஜெர்மானிய விமானப்படை வேலை செய்ய முடியும். நீர்மூழ்கிகளைக்காட்டிலும் லாகவமாய் தப்பித்துக்கொள்ளும் தந்திரம் வாய்ந்த விமானம் கொலை வேலையில் குறைந்ததில்லை. அதனால் அதைத் தடுப்பதென்பதும் வெகுசிரம சாத்தியமானது. காலநிலையும் பார்வை நிலையும் தெளிவாயிருந்தால் அதன் சேஷ்டைகள் நாசம் விளைவிக்கக்கூடியதே.

தற்காப்பற்ற கப்பல்களை "சமவெளி கொள்ளைக்காரர்கள்" அழித்துவிடலாம். ஆனால் அதில் அக்கொள்ளைக்காரர்களுக்கு சில சங்கடங்கள் இருக்கின்றன. சமவெளி கொள்ளைக்காரர்கள் என்ற பதத்தில் யுத்த சஞ்சாரிகள்



முதல் (battle cruisers) யுத்தத்திற்காக பிரத்தியேகமாக பலப்படுத்தப்பட்ட பிரயாணிக் கப்பல்களுள்பட அடங்கியுள்ளது. அவைகள் அடிக்கடி எண்ணெய் போட்டுக்கொள்ளவும் செப்பனிடவும் கரை சேரவேண்டியிருக்கிறது. மேலும் அவர்கள் வானொலிவிடுக்கமுடியாது. ஏனெனில் அவர்களின் இருப்பிடம் பிறருக்குத் தெரிந்துவிடும். ஒரு வியாபாரக் கப்பல் அதற்கு இரையானாலும், அதிலிருந்து அதன் இருப்பிடம் வெளியாகி, அதை வேட்டையாடும் கலங்களுக்குக் குறியாகிறது. அவை வெகு அதிகமான கெடுதி அடையக்கட்டாது. ஆகையால் தாக்கிவிட்டு ஓடும் தந்திரத்தைத்தான் கொள்ளவேணும். அது ஒரு யுத்தக் கப்பலைக்கூட மனந்தளரச் செய்யும் வேலையாகும்.

## பிரிடன் எடுத்துகொள்ளும் பிரதி முறைகள்.

இந்த மூன்று விதமான தாக்குதல்களைத் தடுக்க் பிரிடிஷார் எடுத்துக்கொள்ளும் பிரதி முறைகளாவன:—

(1) துணைக்காவல் ஏற்பாடு: இதன் வெற்றி காத்துவரும் யுத்தக் கப்பல்களின் எண்ணிக்கையைப் பொருத்தது.

(2) நீர்மூழ்கி எதிர்ப்பு சூழ்ச்சிகளைக் கண்டுபிடித்து பிரயோகிப்பது: சென்ற யுத்தத்திற்குப் பிறகும், முக்கியமாக சென்ற பனிரெண்டு மாதங்களில் வெகு நூதன முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு கையாளப்படுவதில் அதிக குணமிருக்கிறது.

(3) கரைகாவல்படையை அதிகப்படுத்தி நம் கவனத்தை அதிகரிப்பது.

(4) கண்ணியள்ளும் கப்பல்களை அதிகப்படுத்துவது. இப்படையைச் சேர்ந்த சிறுகப்பல்கள் கனக்கடலிலும் காற்றிலும் பிரதி நிமிஷமும் அபாயத்திற்குள்ளாயினும் பொருள்படுத்தாது கண்ணிகளை பெரியமீன்களைப்போல் பிடித்துக்கொண்டு திரிகின்றன.

## பிரிடிஷ் கடற்படையின் அபிவிருத்தி.

இந்த முட்டுப்பாடான காலங்களில் பிரிடிஷ்கடற்படையின் வளர்ச்சியும், அதன் வெற்றிகளும் நாகரீகஉலகத்தின் நெஞ்சையள்ளக்கூடிய அளவுக்கு இருந்திருக்கிறது. பிரிடனுக்கு வரும் கடல் வீதிகள் தடங்கலற்றிருக்க வேண்டுமானால் அதற்கு அவசியமான கப்பல்களும் விமானங்களும் வேண்டும். ஆஸாமிகளுக்குக் குறைவில்லை. சமீபத்தில் வெளியானதிலிருந்து சென்ற மார்ச்சுமீ முடிய ஒரு வருஷத்தில் 480 யுத்தக்கப்பல்கள் பிரிடிஷ் கடற்படைக்குச் சேர்க்கப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. இந்தப் பெரும் கடற்படையை பலப்படுத்த ஆரம்பித்தது முதல் எந்த வருஷத்திலுள்ளதைக் காட்டிலும் ஐந்து பங்கு அதிகம் என்பதை அறியவேண்டும். இவை முதல்தர யுத்தக்கப்பலான "ஐந்தாம் ஜார்ஜு" முதல் "கொசுப்படகு" என்ற விசைப்படகு வரை யுள்ள கலங்கள் சேர்ந்தவை. அவைகளின் யந்திரங்களும் வெளி கட்டடங்களும் வெகு ஜாக்கிரதையாக பலப்படுத்தப் பட்டிருக்கிறபடியால் அவைகளைச் செய்தவர்கள்கூட எதிர்பாரா வண்ணம் வெகு கடினமான வேலைகளில் கூட தாங்கி நிற்கின்றன.

புகழ்பெற்ற கடல் வீரர் நெல்ஸனுடைய மகிமை இன்னமும் பிரிடிஷ் கடற்படைக்கு இருக்கிறதென்று பிளேட்நதி, நார்விக்கு, டாரண்டோ, ஜெனோவா, லபோடன், மடபான் முதலிய இடங்களில் பிரிடிஷ் கடற்படை நிரூபித்திருக்கிறது. இருபது வருஷங்கள் ஓயாமல் நெபோலியனுடைய ஐரோப்பாவைச் சுற்றி கடற்தடைப்பாடு ஏற்படுத்தி நடத்திய பிடிவாதம் தன்னைவிட்டு அகலவில்லையென்று பல வெளிவராத வீரச் செயல்களால் பிரிடன் காட்டுகிறது. அச்சு ஆதீனத்துக்குட்பட்ட விஸ்தாரமான கடற்கரையிலுள்ள எல்லா லக்ஷியங்களையும் அழுத்தமாய் தாக்குகிறது. ஜெர்மன் யந்திரப்படகுகளை விரட்டியடித்து பலவற்றை சேதப்படுத்தி பலவற்றை மூழ்கடித்துமிருக்கிறது. பிரிடிஷ் நீர்மூழ்கிகள் எதிரியின் துருப்புவாகி கப்பல்களையும், ஸாமக்கிரியை கப்பல்களையும் மூழ்கடித்துக் கொண்டிருக்கின்றன.

பிரிடிஷ் கடற்படையின் பரம நூதன உபகரணமான கடற்படை விமான அங்கம் என்பது (Fleet Air Arm) வெகு ஏராளமாக விருத்தி செய்யப்பட்டிருக்கிறது. அது ஒரு எதிரி யுத்தக் கப்பல், ஒரு சஞ்சாரி, மூன்று நாசகாரிகள், நான்கு நீர்மூழ்கிகள், நான்கு இதர கடற்படை கப்பல்கள், பதின்மூன்று ஸாமக்கிரியைக் கப்பல்கள் இவைகளை அழித்திருப்பதுடன், இரண்டு யுத்தக் கப்பல்கள், இரண்டு சஞ்சாரிகள், நான்கு நாசகாரிகள், நான்கு இதர யுத்தக் கப்பல்கள், இருபது ஸாமக்கிரியைக் கப்பல்கள் ஆகிய இவைகளுக்குச் சேதம் விளைவித்திருக்கின்றது.

கால்வாய் துறைமுகங்கள் விழுந்தவுடனே ஜெர்மன் ஆசை மேலோங்கிற்று. தான் பிரான்ஸை ஜயித்ததோடு, பிரிடனையும் ஜயிக்கப்போகிறேன் என்று ஹிட்லர் நினைத்தான். ஆனால் அவன் ஏமாந்துபோனான். பிரிடிஷாருடைய சேனை நார்வேயிலிருந்தும், பிரான்ஸிலிருந்தும் விரட்டப்பட்டாலும் கடைசி வெற்றி தன்னுடையதென்பதைப்பற்றி பிரிடன் நம்பிக்கையிழக்கவில்லை. தன் சரித்திரத்தில் நேர்ந்திருக்கிற ஒவ்வொரு யுத்தத்தையும் எந்தக் கருவியைக் கொண்டு ஜயித்து வந்திருக்கிறதோ அக்கருவியான கடற்படையுள்ள வரை பிரிடன் நம்பிக்கையைக் கைவிடாது. பிரிடன் சமுத்திரத்தை இன்னும் ஆண்டு வருகிறது. சமுத்திர வழிகளை ஜெர்மனிக்கு உபயோகப்படாமல் அடைத்து, தனக்கு மட்டும் திறந்துவைத்துக்கொள்ளும் வரை பிரிடன் வெற்றியடைந்தே தீரும் என்று ஒவ்வொரு பிரிடிஷாரும் உணர்ந்தான். அவர்களின் உணர்ச்சியும் சரியே. உலகத்தின் வருங்காலமும், நாகரீகத்தின் வருங்காலமும் இந்த ஒரே விஷயத்தைச் சார்ந்ததாகயிருக்கிறது—அதாவது பிரிடிஷ் கடற்பலம். கடல் பலம் குன்றாது பிரிடன் நிர்வகித்துக்கொள்ளும் வரை ஹிட்லர் தன் அணிகளில் எத்தனை லக்ஷம் சிப்பாய்களைச் சேர்த்துக்கொண்டாலும் அக்கரையில்லை. ராக்ஷஸாகிருதியுள்ள வண்டுக் கூட்டங்களைப்போல் ஜெர்மன் மோட்டார் பீரங்கிகள் ஐரோப்பிய சமவெளிகளை வியாபித்தாலும் அக்கரையில்லை. ஏனெனில் ஹிட்லர் விழுவது நிச்சயம்.



## ஹிட்லரின் காலதிட்டம் பொய்யாயிற்று.

ஆகையால், அவனுக்கு முன் வந்த நெப்போலியனின் கடற்படை காலதிட்டம் பொய்யானதுபோல ஹிட்லருடைய காலதிட்டமும் பொய்யாகிவிட்டது. ஹிட்லருடைய தற்புகழ்ச்சிகளுக்கிடையே, நமக்கு மனிதர்களிலும், சாமான்களிலும் எவ்வளவு சொல்ப நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதென்பது வெகு ஆச்சர்யகரமானது. தூரவீச்சு விமானப்படையுடனும், அதற்கு அநுசரணையான அட்லாண்டிக், கால்வாய், நார்வே முதலிய பிரதேசங்களிலுள்ள விமானத் தளங்களுடனும், கெய்ஸர் 1917-ஆம் ஏப்ரல்மீ"த்தில் வரம்பற்று நடத்தின நீர்மூழ்கி பிரயத்தினத்தின் வெற்றி சிகரத்தின் பாதியைக்கூட ஹிட்லர் இன்னமும் அடையமுடியவில்லை. அட்லாண்டிக் போரை நாம் இழந்தால், நாம் பிரிடனுக்காகச் செய்யும் போரை இழக்கவேண்டுமென்பது தெளிவாயினும், இந்த அட்லாண்டிக் போரை ஜெர்மனி ஆரம்பித்திருப்பதே ஜெர்மனியின் பலஹீனத்தைக் காட்டுகிறது. திடீரென ஒரே அடியில் பிரிடனை நசுக்க முடியாதென்று ஹிட்லர் தெரிந்துகொண்டிருக்கிறானென்று அது காட்டுகிறது. கோட்டை தற்பொழுது அதிக பலமாகயிருக்கிறது. ஆகையால் அதை பலஹீனப்படுத்த முதலில் அதற்கு ஸாமக்கிரியைகள் போகாமல் தடுக்கப் பிரயத்தனம் செய்யவேண்டும். பிரிடனுக்குச் செல்லும் கடல்வழிகளை ஹிட்லர் அடைக்கமுடியுமானால், பிரிடனுடைய வெகு சக்திவாய்ந்த நண்பனான ஐக்கிய அமெரிக்காவைத் தனித்துவிடுவதோடு பிரிடனிலிருந்து இதர போர்க்களங்களுக்குத் தளவாடங்கள் அனுப்பமுடியாமல் தடுக்கமுடியும்.

## வியாபாரக் கப்பல்கள்.

இந்தக் கொள்கையால் ஜெர்மனி நமக்கு பெருத்த நஷ்டம் சந்தேகமில்லாமல் விளைவித்துக்கொண்டிருக்கிறது. ஆயினும் தளவாடங்கள் அனுப்பப்படாமல் நிறுத்துவதால் பிரிடனுக்கு அபாயம் நேரிடும்படி செய்வதற்கு இன்னும் ஏராளமாகக் கப்பல்களை மூழ்கடித்தாலொழிய முடியாது. நிலைமை கவலைக்கிடமாயிருக்கிறது. ஏனெனில் கப்பல்களை சீக்கிரமாக முழுக்கிவிடலாம். கட்டுவதென்றால் வெகு நாள்கள் செல்லும். ஆனால் தற்சமயம் கணக்கு கொடுத்ததில் பிரிடனுக்கு வேண்டியதெல்லாம் ஸர்பரா செய்வதற்குப் போதிய அளவுக்கு மேலேயே கப்பல்களிருப்பதாகத் தெரிகிறது.

## அட்லாண்டிக்போரும்—ஐக்கிய அமெரிக்காவின் பேரில் அதனால் ஏற்படும் விளைவுகளும்.

இந்த பிரச்னையின் மற்றொரு முக்கியமான பாகமிருக்கிறது. பிரிடிஷ் கப்பல்களையும் நேசதேசக் கப்பல்களையும் இவ்வாறு வேண்டுமென்று முழுக்குவதால் அமெரிக்காவில் ஒரு பலனை உண்டாக்கியிருக்கிறது.

(i) ஜனாதிபதி ரூஸ்வெல்ட் 20 லக்ஷம் டன்கள் நிறையுள்ள கப்பல்களுக்கு ஒப்பந்தம் கொடுத்து சீக்கிரம் பிரிடனுக்கு உதவியளிக்கும்படி செய்திருக்கிறார். ஏற்கனவே ஐம்பது எண்ணெய்க் கப்பல்கள் பிரிடனுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன.

(ii) அமெரிக்க யுத்தக் கப்பல்கள் அமெரிக்கக்கரையிலிருந்து 2,000 மைல்கள் பாரா கொடுக்கலாமென்றும் பிரிடிஷ் தீவுகளைச் சுற்றியிருக்கும் யுத்த மண்டலங்களுக்குள் அமெரிக்கக் கப்பல்கள் பிரவேசிக்கலாமென்றும் ஏற்படுத்தி ஜெர்மனியின் கொள்ளைக் கப்பல்களின் சேஷ்டைகளை அடக்குவதற்காகவேண்டிய பிரதி முறைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பாராக்கள் ஜெர்மன் கொள்ளைக் கப்பல்கள் இருக்குமிடத்தை வியாபாரக் கப்பல்களுக்குத் தெரிவித்து எச்சரிக்கை செய்யும். ஜெர்மனியின் இப்பெரிய கொள்ளை பிரயத்தனத்திற்கு இது ஒரு பெரிய முட்டுக்கட்டைதான். இந்த பிரயத்தனத்தின் வெற்றிக்குக் காரணமான ரகசியத்தை இது ஒழித்து விடுவதோடு, அபாயமுள்ள மண்டலங்களில் அதாவது பிரிடனைச் சுற்றியுள்ள ஒடுக்கமான கடல்களில் பிரிடிஷ் கடற்படை ஒரு முகமாக வேலை செய்ய ஹேதுவாகயிருக்கிறது.

(iii) தங்கள் சொந்த யுத்தக் கப்பல்களைக் கொண்டு துணைக்காவல் கொடுக்க வேண்டுமென்ற அமெரிக்க அபிப்பிராயம் முற்றுகிறது. இந்த உத்தேசத்தைப்பற்றி ஜெர்மனி சொல்லும் பொருளுறையென்னவென்றால் அமெரிக்கக் கப்பல்கள் உடனே முழுக்கப்படும் என்பதே. நாஸிகள் உண்மையில் அவ்வாறு செய்வதாக நினைத்தால் 1917-ம்௵த்தில் கெயிஸரின் ஜெர்மனி என்ன தவறு செய்ததால் அமெரிக்கா யுத்தத்தில் இழுக்கப்பட்டதோ அதே தவறை இப்பொழுதும் செய்யப்போகிறார்கள். வரம்பற்ற நீர்மூழ்கி யுத்தத்தால் அமெரிக்கா பகிரங்கமாக மஹா யுத்தத்தில் கலந்து கொள்ளும்படி நேர்ந்தது.

(iv) வேறு இடங்களுக்கு பிரிடிஷ் கப்பல்களை அனுப்பக்கூடிய விதமாய் பஸிபிக் சமுத்திரத்தில் அமெரிக்கக் கடற்படை தன் பூரு கவனத்தையும் செலுத்தப்போகிறது. அமெரிக்கா யுத்தத்தில் சேரப்போகிறதென்றால் இந்த நீர்மூழ்கி வேட்டையில் அமெரிக்கக் கடற்படையும் கலந்துகொள்ளும். அப்படியானால் ஹிட்லர் அட்லாண்டிக் யுத்தத்தை இழப்பான் என்று சொல்லலாம்.

## பிரிடிஷாருக்கு வெற்றிகள்.

பிரிடன் தன்னுடைய சொந்த முயற்சிகளால் குறிப்பிடத்தக்க வெற்றிகளை அடைந்துகொண்டு இருக்கிறது. தன் சொந்த பலத்தைமட்டும் சார்ந்திருந்தால், பிரிடன் தோல்வியடையுமென்று நினைத்தல்கூடாது. ஷான்ஹாஸ்டு, நீஸ்னௌ என்ற இரண்டு சஞ்சாரிகளை மட்க்கிவைத்து அவைகளை ஓயாமல் விமானங்களிலிருந்து தாக்கி, அவைகள் கடல்களில் சென்று நாசவேலையில் கலந்துகொள்ள முடியாமல் செய்ததே ஒரு பெரிய வெற்றியாகும். பிரான்ஸிலுள்ள லோரியான் முதலிய நீர்மூழ்கித் தளங்களையும் ஜெர்மனியின் துறைமுகங்களையும் அடிக்கடி



வெடிகுண்டுகளால் தாக்குகிறது. ஆகையால் யுத்தம் ஒருபக்கமாயில்லை. இந்த முட்டுப்பாடான காலத்தில் எவ்வளவு நீர்மூழ்கிகள் முழுக்கப்பட்டன வென்று உடனே பிரசுரிக்கப்படாவிடினும், நீர்மூழ்கிகளில் பல முழுக்கப்பட்டிருக்கின்றனவென்று தெரிகிறது. ஆகையால் பிரிடன் பழிக்குப்பழி வாங்குவதற்கு மேலேயே செய்துகொண்டிருக்கிறது.

சென்ற ஏப்ரல் மாதம் 9-ம் தேதியன்று திரு. சர்ச்சில் அவர்கள் காமன்ஸ் சபையில் அதிகார தோரணையில் சொன்னதாவது. எல்லாவற்றையும் கவனிக்க எல்லா விளைவுகளும் அட்லாண்டிக் போரைப் பொறுத்திருக்கிறது. உபயதரப்புகளிலும் அதன் வேகம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. கப்பல்களின் எண்ணிக்கையிலும் நிறையிலும் நம்முடைய நஷ்டம் அதிகமே. ஆயினும் நம்முடைய கப்பல் ஆஸ்தி வெகு விஸ்தாரமானது. நம்முடைய யுத்தப்பிரயத்தனத்திற்கு ஹானி விளைவிக்காமல் இம்மாதிரியான நஷ்டங்கள் தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டிருக்க முடியாது. யுத்தத் துவக்கத்திலிருந்து நாளது வரை 40 லக்ஷம் டன் நிறையுள்ள பிரிடிஷ் கப்பல்களை நாம் இழந்திருக்கிறோம். புதிதாகக் கட்டியுதாலும், அன்னியக் கப்பல்களைப் பிடித்ததாலும் 30 லக்ஷம் டன் நிறையுள்ள கப்பல்களை பிரிடிஷ் துவஜத்தின் ஆதீனத்தின் கீழ் கொண்டுவந்திருக்கிறோம்.

ஆனால் நஷ்டங்கள் இந்த விகிதத்தில் ஏற்பட்டுக் கொண்டிருந்தால் என்ன செய்கிறது? அவைகளை ஈடு செய்து 1942-ம் வருஷம் வரை நாம் நிர்வகித்துக் கொள்ள மற்றொரு 30, 40, லக்ஷம் டன்களுக்கு எங்கு செல்லுகிறது? நாம் ஏராளமான அளவிற்கு வியாபாரக் கப்பல்களைக் கட்டுகிறோம். இழந்ததை ஈடு செய்ய நாம் பிரமர்தமான பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறோம். மொத்தத்தில் நம்முடைய யுத்தப்பிரயத்தனங்கள் அதிகமாக பங்கப்படாமல் 1942-ம் வருஷம் முடிய நாம் நிர்வகித்துக் கொள்ள ஒரே வழியுண்டு. அதாவது 1918-ம் வருஷத்தில் அமெரிக்கர்கள் செய்த ஒரு அசுரப்பிரயத்தனத்தைப்போல இப்பவும் மற்றொரு பூதாகாரமான ஒரு கப்பல் உண்டாக்கும் முயற்சியாலேயே. இந்த உலகத்தின் வருங்காலத்தை நாசம் செய்வதற்கு பிரவர்த்தித்து இருக்கும் இந்தக் குற்றவாளிகளின் கையிலிருந்து இந்த உலகத்தை மீட்பதற்கு பொறுத்து நிற்கும் சக்தி வேண்டும். அச்சக்தியை நமக்குக் கொடுக்க அமெரிக்கா நிச்சயித்திருக்கிறது.

## அமெரிக்கா யுத்தத்தில் கலந்துகொள்ளும்.

திரு. சர்ச்சில் அவர்களுடைய மனோரதங்களை பிரதி ஒலிப்பதுபோல அமெரிக்காவிலுள்ள அமெரிக்கர்கள் எல்லோரும் ஹிருதய பூர்வமாக அபயம் சொல்லுகிறார்கள். வெகு சீக்கிரம் அமெரிக்கா யுத்தத்தில் பிரவேசித்து பிரிடன்பக்கம் சேர்ந்து வெற்றிகரமாகச் செய்யும். குடியரசு தலைவர் தேர்தலின்பொழுது ஒதுங்கியிருந்த திரு. கர்னல் நாக்ஸ் என்பவர், இப்பொழுது கப்பற்படை இலாகாவுக்கு காரியதரிசியாக இருப்பவர் கூர்மையாக கவனித்து உள்ளதை உள்ளபடி எடுத்துரைக்கும் உலகநிலைமை விரிவை வெளிப்படுத்தியபின், ஏப்ரல்மீ 24உ வாஷிங்டனில் கீழ்க்கண்டவாறு வெளியிட்டார். "நம்முடைய யுத்த தளவாடங்களையும், உணவுப் பொருள்களையும் இங்கிலாந்தை சென்று அடைய ஹிட்லர்

விடமாட்டான். இவைகள் இங்கிலாந்தைச்சென்று அடைந்தால் ஹிட்லருக்கு தோல்வி நிச்சயம். அநாவசியமாக நம்முடைய பொருள்களை அட்லாண்டிக்கில் மூழ்கவிடக்கூடாது. அவற்றின் சேதம் நமக்கு ஹிதக்கேடு. பிரிட்டனுக்கு வாக்களித்திருக்கும் உதவியை நாம் கட்டாயம் செய்யவேண்டும்." இம்மாதிரி அமெரிக்கா தன்னுடைய சொந்தச் சரக்குக் கப்பல்களையே கூடிய சீக்கிரத்தில் இங்கிலாந்திற்கு அனுப்பும் என்பதை அவர் குறிப்பாக உணர்த்தினார். இதே மாதிரி சென்ற மே மாத "நியூ யார்க் காலியர்ஸ்" வாரப்பத்திரிகையில் எல்லோராலும் படிக்கப்பட்ட திரு. வெண்டல் 'வில்கியின் கட்டுரையிலும் இதேமாதிரி அமெரிக்காவிலிருந்து பிரிட்டனுக்கு கப்பல்களையும் நாசகாரிகளையும் அவசியமானால் அட்லாண்டிக்தாண்டும் துணைக்காவல் கப்பல்களையும் அளிக்கவேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது. பிரிட்டனுக்கு வெடிகுண்டு சாமான்களை கொண்டுபோய் கொடுப்பதற்காக கடலில் தடை ஒன்றும் ஏற்படாதிருக்க காவலுக்கு கப்பற் படையை உடனே உபயோகிக்கவேண்டும் என்பதை யுத்தக் காரியதரிசியான ஸ்டிம்ஸன் வாஷிங்டனில் மே மீ 6வ அமெரிக்கர்களுக்கு செய்த பிரசங்கத்தில் வற்புறுத்தியிருக்கிறார்.

## டாக்கர்.

அட்லாண்டிக் போரைப் பற்றிய ஒரு வியாஸமானது மேற்காப்பிரிக்கத் துறைமுகமான டாக்கரைப்பற்றி குறிப்பிடாவிடில் சம்பூர்ணமாகாது. சென்ற யுத்தத்தில் டாக்கர் ஒரு முக்கியமான கடற்படைத் தளமாகவிருந்தது. அப்பொழுதைவிட இப்பொழுது அது முக்கியமாகவிருக்கிறது. பிரெஞ்சுக்காரரிடம் அது உள்ளவரை அல்லது சரியான நடு நிலைமையில் அது நின்றாலும்கூட அமெரிக்க வியாபார வழிகளுக்கு அது ஒரு வெருட்டும் தடையாகாது. ஆனால் விஷி ஆசாமிகளை ஹிட்லர் பிரிட்டனுக்கு எதிராக யுத்தத்திற்கு அழுத்திவிட்டால் ஹிட்லர் ஒருக்கால் டாக்கரையும் அதற்கு 350 மைல் மேற்கேயுள்ள வெர்ட் முனைத் தீவுகளையும், அஜோர்ஸ் தீவுகளையும் பிடித்துக்கொண்டு யுத்தமாகச் செய்து, அட்லாண்டிக் பிரதேசங்களில் அமெரிக்காவிற்குள்ள ஜீவாதாரமான அக்கரைகளுக்கு ஆபத்து விளைவித்து விடுவானோ என்று அமெரிக்காவில் பெருத்த கவலை வெளியிடப்படுகின்றது.

## இந்தியாவின் தெளிவான கடமை.

மொத்தத்தில் அட்லாண்டிக் நிலை இவ்வாறு உள்ளது. அது பயங்கரமாகத்தான் இருக்கிறது. சீர்தூக்கிப் பார்க்குமளவில் பிரிட்டனும் அமெரிக்காவும் ஒத்து உழைத்துச் செய்யும் பிரயத்தனங்களால் இந்த ஜெர்மானியர், கடல் பயமுறுத்தலை ஒழிப்பதோடும் கூட நாஸி ஏற்பாட்டைச் சுற்றி சுருக்கிழுத்துக் கொன்று விடும் என்பதில் ஐயமில்லை. ஆனால் இது ஒரு மகத்தான காரியம். நஷ்டங்கள் பெரிதாக விருக்கலாம். விக்கினங்களும் விசாரங்களும் நம் பொறுமையையும் மீறலாம். இந்த நிலையில் இந்தியாவின் கடமை இன்ன தென்பது சந்தேகமற அறியலாம். சுதந்திரத்தைப் பாதுகாக்க, பண்பாட்டின் நன்மையையும், கிழக்கு



மேற்கு நாகரீகங்களின் நலத்தையும், காக்கவேண்டுமானால் பிரிட்டனின் யோக க்ஷேமங்களுடன் இந்தியாவுடைய வருங்காலமும் இணைக்கப்பட்டிருப்பதால் இந்தியா கைகட்டிக்கொண்டிருக்கமுடியாது. அது முன்வந்து, பிரிட்டனுக்கு படையுதவியும், பொருளுதவியும் செய்வதால் தனக்கும் உதவிக்கொள்ளவேண்டும். "இப்போராட்டம் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் நடக்கும் சாதாரண சண்டையே என்றும், அது முடிந்ததும் வெற்றியடைந்தோர், நஷ்ட ஈடுகளைப்பெற்று, தோற்ற நாடுகளை முன்னிருந்த நிலைமையிலேயேவிட்டு விடுவார்களென்றும் நமக்குள் பலர் பகற் கனவு காண்கிறார்கள். ஆனால் வலுவில் வந்து ஆக்கிரமிக்கும் நாடுகள் ஜயித்தால் இக்கனவு ஒரு ஆபத்தான தவறாகும். இவ்வாக்கிரமிப்பாளர் ஜயமடைந்தால், தோல்வியுற்ற நாடுகளை அடிமைப்படுத்தவும், அவர்களுடைய உரிமைப் பேறுகளைக் கவரவும், அவர்களுடைய மதம் சட்டம் முதலியவைகளை அழிக்கவும் தீர்மானித்துள்ளார். வாழ்க்கையின் உயர்ந்த இனிய அழகான அம்சம் முழுவதையும் வேரோடுகளைந்தெறிய திட்டம் செய்திருக்கிறார்கள்." ஏப்ரல் மாதம் 24-ஆம் தேதி, திரு. கார்டெல் ஹல் அவர்களின் மேற்கண்ட ஆவேச மூட்டும் உரையை நேயர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். இம்மொழிகள் மிகைபடக் கூறியவையுமல்ல, உண்மைக்குச் சிறிதும் குறைய உரைத்ததுமல்ல. ஒவ்வொரு இந்தியனும் கவனித்தல் நலம். இச் சுதந்திரப் போரில் பிரிட்டன் வெற்றி பெற வேண்டிய உதவியைச் செய்ய ஒவ்வொரு இந்தியனும் தன்னாலியன்றளவு முயலுவானாக.

சுபம்.

## சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேச தேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**12—5—41.** (திங்கட்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| இரவில்.-தொழிற்சாலைகள் நிறைந்திருக்கும் பிரதேசம்—மான்ஹீம் (Mannheim). | ... | பெருந்தீக்கள் கிளம்பின. |
| ராணுவ முக்கியமான இடங்கள்-கொலோன் (Cologne), காப்லென்ஸ் (Coblenz). | ... | ...... |
| கப்பல் துறைகள்—ஆஸ்டெண்ட் (Ostend), டங்கர்க் (Dunkirk), ஸெண்ட் நாஸேர் (St. Nazaire). | 1 விமானம். | சேதமாயின. |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| கப்பல்கள், துறைமுகம்—பெங்காஸி (Benghazi). | ...... | ஒரு கப்பல் தீக்கிரையாகியது. |
| விமான நிலயங்கள்—எல்கஸாலா (El-Gazala), டெர்ணு (Derna), காம்பூதி (Gambut). | ...... | பல விமானங்கள் சேதமாயின. |
| ஒரு கப்பல்.—டெர்ணு (Derna). | ...... | மூழ்கடிக்கப்பட்டது. |
| கோட்டை—அம்பா அலாகி (Amba Alagi). | ...... | துருப்புகள் சுடப்பட்டன. |

**13—5—41.** (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—சைனியங்கள் வசிக்கும் இடங்கள், பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கும் இடங்கள், இன்னும் இதர முக்கியமான இடங்கள்—ஹெலிகோலாண்டு (Heligoland). | ...... | எங்கு பார்த்தாலும் ஒரே அமர்க்களம். பலத்த சேதம். பெருந்தீக்கள் கிளம்பின. |
| கப்பல்கள்—ஹாலந்து (Holland), பிரான்ஸ் (France) கடற்கரைகள். | ...... | பல கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டோ சேதமாகவோ போயின. |
| கப்பல் துறைகள், கப்பல்கள்.—ஸெண்ட் நாஸேர் (St. Nazaire). | ...... 2 விமானங்கள். | 2 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. |
| இரவில் விமான நிலயம்.—ஆஸ்டெண்ட் (Ostend). | ...... | ...... |

இராக் (Iraq).

| | | |
|---|---|---|
| ராணுவ முக்கியமுள்ள இடங்கள்.—இராக் (Iraq). | ...... | பலத்த சேதம். |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**13—5—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| ரயில்வே, ராணுவதலைமைக் காரியாலயங்கள், இராஜாங்ககட்டடங்கள்.-பெங்காஸி (Benghazi). மெண்டி (Mendi)க் கோட்டை. | ...... | கட்டடங்கள் இடிந்தன. |
| சைனியங்கள் துப்பாக்கிகள்.—ஸியாஸியாமன்ணு (Sciasciamanna) கயாப்பாஸர்ரே (Giabbassiroe). விமான நிலயம்.—கோண்டார் (Gondar). | ...... நஷ்டமில்லை. | சைனியத்தில் பலருக்குக் காயம். சேதமாயின. |

**14—5—41.** (புதன்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| இன்று விமானப்படையெடுப்பு இல்லை. | ...... | ...... |

இராக் (Iraq).

| | | |
|---|---|---|
| கலகக்காரச் சைனியங்கள் இருக்கும் இடங்கள், விமான நிலயங்கள், ரயில் பாதைகள், மோட்டார் வண்டிகள்.—இராக் (Iraq), அமாரா (Amara) ரஷீத் (Rashid), மோஸுல் (Mosul). | ...... | ...... |
| ரயில்பாதை.—பாக்தாத் (Baghdad). | ...... | ...... |

**15—5—41.** (வியாழக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—ஒரு துணைக்காவல் கப்பல் படை.—ப்ரிஸியன் (Frisian) தீவுகள். | 1 விமானம். | 3 கப்பல்கள் தீக்கிரையாயின, |
| படையெடுப்புகள்.-இங்கிலீஷ் (English) கால்வாய், வட பிரான்ஸ் (France). | 1 விமானம். | தரையிலிருக்கும் பல விமானங்கள் நாசம். ஒரு விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது. |
| கப்பல்கள்.—பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland) கடற்கரைகள். | ...... | ...... |
| இரவில்.—தொழிற்சாலைகள்—ஹானோவர் (Hanover). பேர்லின்.—(Berlin). ஹாம்பர்க் (Hamburg), கக்ஸ்ஹாவன் (Cuxhaven). கப்பல் துறைகள்.—கலே (Calais), புலாயின் (Boulogne), டியெப் (Dieppe). | ...... 4 விமானங்கள். | பெருந் தீ கிளம்பிற்று. பலத்த சேதம். தகர்க்கப்பட்டன. |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 15—5—41. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.** | | |
| | கப்பல் துறைகள், கப்பல்கள்.—ஸெண்ட் நாஸேர் (St. Nazaire), லோரியான் (Lorient). கப்பல் துறைகள்—இஜ்ம்யூடன் (Ijmuiden). | ...... நஷ்டமில்லை. | ...... ...... |
| | **இராக் (Iraq).** | | |
| | கலகக்காரச் சைனியங்கள் இருக்கும் இடங்கள், விமான நிலயங்கள்—இராக் (Iraq). | ...... | ...... |
| | **ஸிரியா (Syria).** | | |
| | விமான நிலயங்கள், ஜெர்மன் விமானங்கள்—பால்மைரா (Palmyra). | ...... | ...... |
| | டமாஸ்கஸ் (Damascus), ரேயாக் (Rayak). | ...... | தரையிலிருக்கும் விமானங்களில் 10 நாசமாயின. |
| 16—5—41. (வெள்ளிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—கப்பல்கள்.—நார்வே (Norway)க் கடற்கரை. | ...... | ஒரு சாமான் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. |
| | இரவில்.—தொழிற்சாலைகள்—கொலோன் (Cologne). | ...... | பெருந் தீ சூழ்ந்தது. |
| | துறைமுகங்கள், கடற்கரைப் பிரதேசங்கள்—டங்கர்க் (Dunkirk) குக்கும் புலாயினு (Boulogne)க்கும் மத்தியில். | ...... | தகர்க்கப்பட்டன. |
| | ஜெர்மன் பீரங்கிகள்—காப்க்ரீனே (Cap Gris Nez), கலே (Calais). | ...... | உடைத்தெறியப்பட்டன. |
| | **இராக் (Iraq).** | | |
| | விமான நிலயம்.—மோஸுல் (Mosul). | 2 விமானங்கள். | ...... |
| | பெட்ரோல் எண்ணெய்த் தொட்டிகள்—அமாரா (Amara). | | தீப்பிடித்தன. |
| | **ஸிரியா (Syria).** | | |
| | ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் விமான நிலயங்கள்.—ஸிரியா (Syria). | ...... | ...... |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 16—5—41. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | கவசமணிந்த மோட்டார்படைகள் சைனியங்கள்.—எகிப்தி (Egypt)ன் எல்லை. விமான நிலயம்.—அக்ரோமா (Akroma), பெங்காஸி (Benghazi), டெர்ளு (Derna), எல் கஸாலா (El Gazala), பார்கி (Barge). | ... ... | பலருக்குக் காயம். பலத்த நஷ்டம். பலத்த சேதம். பல விமானங்கள் நாசம். எங்கும் ஒரே தீ மயம். |
| | வேவுபார்த்தல் விரோதி சைனியங்கள்.—அபிஸீனியா (Abyssinia). | 4 விமானங்கள். | ...... |
| 17—5—41. (சனிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | இரவில்—தொழிற்சாலைகள்.—கொலோன் (Cologne). கப்பல் துறைகள்—ராட்டர்டாம் (Rotterdam), புலாயின் (Boulogne). ராணுவ முக்யத்வமுள்ள இடங்கள்—விரோதி ஆக்கிரமித்துள்ள இடங்கள். துறைமுகங்கள்—பிரெஞ்சு (French), டச்சு) Dutch)க் கடற்கரைகள். | ... ... ... ... 2 விமானங்கள். | பலத்த சேதம். சேதமாயின. ...... |
| | **இராக் (Iraq).** | | |
| | விமான நிலயங்கள், சைனியங்கள் வசிக்கும் விடுதிகள், மோட்டார் வண்டிகள், பெட்ரோல் தொட்டிகள், சைனியங்கள். கலகக்காரர்கள் வசமிருக்கும் இராக் (Iraq). | ...... ...... | ...... பலத்த சேதம். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | மோட்டார் வண்டிகள்—பார்டியா (Bardia), டொப்ருக் (Tobruk) ரஸ்தா. | ...... | போக்குவரத்து நின்றுபோய்விட்டது. 20 வண்டிகள் நாசமாயின. |
| | பெட்ரோல் தொட்டி—பார்டியா (Bardia)விற்கு சமீபத்தில் | ...... | வெடித்தது. |
| | விமான நிலயங்கள்—மெனஸ்டர் (Menastir) பிர்க்ளீடா (Birchleta). | ...... | ...... |
| | பெங்காஸி (Benghazi), டெர்ளு (Derna). | ...... | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **18—5—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | இரவில்.—மேற்கு ஜெர்மனி (Germany). | ...... | ...... |
| | இராக் (Iraq). | | |
| | பல்லூஜா, (Fallujah). | ...... | ...... |
| | ரஷீத் (Rashid), விமான நிலயம். | ...... | ...... |
| | ஸிரியா (Syria). | | |
| | விமான நிலயங்கள்.—பால்மைரா (Palmyra), டமாஸ்கஸ் (Damascus), ரேயக் (Rayak). | ... | பல விமானங்கள் நாசமாயின. |
| | ரோட்ஸ் (Rhodes) தீவு. | | |
| | விமான நிலயம்.—கலாடோ (Calato). | ... .. | சேதமாயிற்று. |
| | இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| | விரோதி டாங்கிகள் (tanks)—கபுஸ்ஸோ (Capuzzo)க் கோட்டைக்கும், ஹல்பயா (Halfaya), விற்கும் மத்தியில். | ...... | ...... |
| | வேவு பார்த்தல்.—ஸிரினேகா (Cyrenaica). | ...... | ...... |

---

## *விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.*

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **13—5—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | பிரிடன் (Britain). | | |
| | இரவில்,—சில இடங்கள் இங்கிலாந்தி (England)ன் கிழக்குக் கடற்கரை. | ...... | சேதமுமில்லை. ஒருவரும் சாகவுமில்லை |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | |
| | மால்டா (Malta). | ...... | சில பொதுஜனங்கள் கொல்லப்பட்டனர். |



| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **14—5—41.** (புதன்கிழமை). | | | |
| | பிரிடன் (Britain). | | |
| | பகலில்—இடங்கள், கிழக்கு மிட்லண்ட்ஸ் (Midlands), கிழக்கு இங்கிலாந்து (England). | ... | சொற்பச் சேதம், சிலருக்குத்தான் காயம். |
| | இரவில்.—விமானப்படையெடுப்பேஇல்லை. | ...... | ...... |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | |
| | மால்டா (Malta). | ...... | சேதமேயில்லை. |
| **15—5—41.** (வியாழக்கிழமை). | | | |
| | பிரிடன் (Britain). | | |
| | இரவில்.—தென்மேற்கு இங்கிலாந்து (England), ஸ்காத்லாந்தி (Scotland)ன் கிழக்குக் கடற்கரை இவைகளில் சில பிரதேசங்கள். | 2 விமானங்கள். | சொற்பச் சேதம். சிலருக்குக் காயம். |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | |
| | மால்டா.—(Malta). | ...... | சொற்பச் சேதம். |
| | பட்டணங்கள்.—க்ரீட் (Crete). சில இடங்கள்.—ஸிப்ரஸ் (Cyprus). | ... | 3 பேர்களுக்குக் காயம். சேதம் சொற்பம். |
| **16—5—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | பிரிடன் (Britain). | | |
| | பகலில்.—தென்கிழக்குக் கடற்கரை. | 7 விமானங்கள். | 1 விமானம், விமானி பத்திரமாயிருக்கிறார். |
| | இரவில்.—லண்டன் (London). | ...... | குண்டுகள் விழவில்லை. |
| | மேற்கு மிட்லண்ட்ஸ் (Midlands), இன்னும் சில இடங்கள். | ... ... | பலத்த படையெடுப்பு. காயம் பட்டவர்கள் அதிகம். |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | |
| | மால்டா (Malta). | ...... | சேதமேயில்லை. |
| **17—5—41.** (சனிக்கிழமை). | | | |
| | பிரிடன் (Britain). | | |
| | பகலில்.—இங்கிலாந்தி (England)ன் தெற்குக்கடற்கரை. | 1 விமானம் | ...... |
| | இரவில்.—கிழக்கு இங்கிலாந்தி (England)ல் சில இடங்கள். | ...... | சேதமுமில்லை. ஒருவருக்கும் காயமுமில்லை. |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 17—5—41. (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **பிரிடிஷ் இராக் (Iraq).** | | |
| | பிரிடிஷ் விமான நிலயம்:—ஹப்பானியர் (Habbaniyah). | ...... | சேதமும், காயம் பட்டவர்களும் சொற்பம். |
| | ஆம்புலென்ஸ் (Ambulance)—ஹப்பானியா பீடபூமியில். | ...... | சுடப்பட்டது. |
| 18—5—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | படையெடுப்பே இல்லை. | ...... | ...... |
| | **மத்தியதரைக் கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | ...... | ...... |
| | **ஆபிரிக்கா (Africa).** | | |
| | டொப்ருக் (Tobruk). | 3 விமானங்கள். | சேதமேயில்லை. |
| 19—5—41. (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்:—(English) கால்வாய் இங்கிலாந்தி (England)ன் தெற்கு, தென் கிழக்குக் கடற்கரைகள். | 5 விமானங்கள். | சேதமேயில்லை. |
| | இரவில்:—சில இடங்கள்—கிழக்கு ஆங்கிலியா (Anglia) கிழக்கு மிட்லண்ட்ஸ் (Midlands). | ...... | ...... |
| | தென்மேற்கு இங்கிலாந்து (England). | ...... | மிகச் சொற்பச் சேதம். |
| | **மத்தியதரைத்கடல் (Mediterranean).** | | |
| | ஸிப்ரஸ் (Cyprus) ஸூயஸ் (Suez) கால்வாய் பிரதேசம். | 3 விமானங்கள். ...... | விமானங்கள் துறத்தியடிக்கப் பட்டன. |



# யுத்தக் குறிப்புகள்.

## "ஆயுதங்கள் கொடுத்தீர்களானால்."

கடைசி இரண்டு பிரசங்கங்களுக்கு முன் Mr. வின்ஸ்டன் சர்ச்சில் செய்த பிரசங்கத்திலிருந்து எடுக்கப்பட்ட இந்தப் பெயர்போன வாக்கியமானது, விஷயம் தெரியாத பேர்வழிகள் என்ன சொன்ன போதிலும், அமெரிக்கர்களால் செவ்வனே கையாளப்பட்டுவருகிறது. இது திருப்பிதிருப்பிச்செல்லவேண்டிய விஷயம்; ஏனென்றால், அமைதியான காலங்களில் தூரதிருஷ்டியுடன் கைத்தொழில் நடத்தி வந்தவர்கள் திடீரென்று யுத்த காலத்தில் கேட்டது கேட்டவுடன் சாமான்கள் செய்து கொடுப்பதானால் எவ்வளவு சிரமமென்று தெரியாதவர்கள் துரிதமாக வேலை செய்யவில்லையென்று குறைகூறக்கூடும். அப்படிப்பட்ட பேர்வழிகள் ஹிட்லர் மே 4-ம் தேதி செய்த பிரசங்கத்தைப் படித்தால் நலமாகவிருக்கும். Mr. நூட்ஸன் (Mr. Knudsen) "ஜெர்மனியுள்பட எந்த இரண்டு ஐரோப்பிய தேசங்களை எடுத்துக்கொண்டாலும் அவர்களை ஒத்த யுத்த தளவாடங்கள் நாங்கள் தயாரிக்கிறோம்" என்று சொன்னதில், ஹிட்லர் அடுத்த கிறிஸ்துமஸ் காலத்தில் அடைவதாகச் சொன்ன வெற்றியை 1942-ம் வருஷத்திற்கு ஒதுக்கிவிட்டார். மறுபடியும், நேற்று சர்க்கரை, நாளை சர்க்கரை என்கிறாரே ஒழிய, இன்று சர்க்கரை என்ற பேச்சே கிடையாது. சர்க்கரை அலமாரிக்குச் சாவி அமெரிக்காவில்தான் இருக்கிறதென்று ஹிட்லருக்குத் தெரியும்.

## அலமாரி காலியல்ல.

Mr. நூட்ஸன் சும்மா பேசவில்லை. விமானங்கள் சென்ற சில மாதங்களாக ரொம்ப ஜாஸ்தியாகிவிட்டது. 1940-ம் வருஷ டிஸம்பரில், அமெரிக்காவில் 800 விமானங்கள் செய்யப்பட்டன; இவை பூராவும் ராணுவ விமானங்களல்ல. ஜனவரி மாதத்தில் 1,036 விமானங்களும், மார்ச்சு மாதத்தில் 1,216 விமானங்களும் செய்யப்பட்டன. சென்ற மாதம் 1,427 ராணுவ விமானங்கள் தான் செய்யப்பட்டன. ஜூன் மாதத்திற்குள் மாதம் 1-க்கு 1,500 விமானங்களும் இந்த வருஷம்முடிவிற்குள் 18,000 விமானங்களும் தயார்செய்ப அமெரிக்கர்கள் ஏற்பாடு செய்தார்கள். மேலே கண்ட கணக்கிலிருந்து, ஏற்பாட்டை அதிகரித்தே மாதாந்திர தயாரிப்பு இருக்கிறதென்றும், 1941-ம் வருஷக் கணக்கில் 3-ல் 1-பாகம் ஏற்கனவே தயாரித்தாகிவிட்டதென்றும், கணக்கிற்கு மேலேயே வருஷ முடிவிற்குள் விமானங்கள் தயாராகுமென்றும் தெரியவரும்.

ஒரு பெரிய காரியத்தைத் துவக்குவதென்றால் அமெரிக்காவில் முதலில் ரொம்ப பேச்சும், பெருங்கணக்குகள் போடுவதும், சிறிது காலம் ஒன்றும் நடைபெறாமலிருப்பதும் வழக்கமென்று அனுபோகத்தில் நமக்குத் தெரியும். இது ஏராளமாகத் தயார் செய்வதற்கு செய்யவேண்டிய ஏற்பாட்டிற்குத் தேவையான சாவகாசம். பிறகு வரும் வெள்ளம்; சாமான்கள் பிரவாகமாகத் தயாரிக்கப்படும். இந்த நிலையை அமெரிக்கா அடையும் சமயம் நெருங்கிவிட்டது.

வியாபார இலாகாவும் பிரிடனுக்கு அனுப்பப்பட்ட சாமான்கள் கணக்கை வெளியிட்டிருக்கிறார்கள். பிப்ரவரி மாதம் 258 விமானங்களும், மார்ச்சில் 414-ம் டச்சு கீழ்நாட்டாருக்கு 35-ம் அனுப்பப்பட்டன. ஜெர்மனியில் மாதம் 2,000 விமானங்களும் பிரிட்டனில் மாதம் 1,500 விமானங்களும் தயாராவதாக அமெரிக்காவில் மதிக்கிறார்கள். ஆகையால் நேசதேசத்தார் தயாரிப்பு ஜெர்மனியை அணுகிவிட்டதென்றும், அதிசீக்கிரத்தில் மேலேதூக்கிப்போய்விடுமென்றும் தெரியும். இது ஜெர்மனிக்கு சங்கடம்தான். ஜெர்மனிக்கு நடுக்கமெடுத்துவிட்டதென்பதற்கு பிரான்ஸிலுள்ள மோட்டார்கார் நிலயங்களை விமானங்கள் செய்ய எடுத்துக் கொள்ளப்போகிறார்கள் என்ற பேச்சே அடையாளம்.

அமெரிக்கர்கள் அளவுகடந்து பேசுவதைப்பற்றி, அதாவது நல்ல சமாசாரத்தைக் கேட்டு குதிப்பதையும் கெட்ட சமாசாரம் கேட்டால் தலையை சாய்ப்பதையும் பற்றி நமது சிநேகிதர் ஒருவர் புரளியாகப் பேசுகிறார். பிரான்ஸ் யுத்தத்திற்கு பிறகு நாம் விழுந்து விட்டோம் என்றார்கள். பிரிடன் யுத்தத்திற்கு பிறகு புலவர்கள் போல் போற்றினார்கள். மடபான் (Matapan) யுத்தம், டிராபால்கரை (Trafalgar) ஒத்தது என்றார்கள். கிரீஸை விட்டகன்றதில் மறுபடியும் தலை சாய்ந்தார்கள்! நமது சிநேகிதர் குறைத்துப் பேசும் பிரிடிஷ் சுபாவமுள்ளவராதலால் முழுப்போடாய் போடும் அமெரிக்கர்கள் பேச்சு முறையை மறந்து விடுகிறார்; அவர்கள் உபயோகிக்கும் வார்த்தைகளைப்போல் சலன புத்தியுள்ளவர்களல்ல; இருகண்டங்களிலுள்ள பொதுமக்கள் ஆதரவை அடையவேண்டி யாருடனும் கலவாமல் தனித்திருக்கவேண்டுமென்றும் இன்னும் விகல்பமாகவும் எண்ணுபவர்களை எதிர்த்து, கொஞ்சம் கொஞ்சமாக தங்கள் எண்ணத்தை Mr. ரூஸ்வெல்டும் அவர் சகபாடிகளும் நிறைவேற்றி வந்திருக்கிறார்கள்; ஊர் முழுதும் சம்பந்தப்பட்ட குத்தகை-கடன்மசோதா சர்ச்சையில், தயங்கினால் 18 மாதமாக செய்து வந்த வேலையெல்லாம் வியர்த்தமாகி, பெரும் பணம் நஷ்டமேற்பட்டுமென்று அமெரிக்கர் எல்லாரும் நிச்சயப்டுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற விஷயங்களையெல்லாம் மேலேகண்ட சிநேகிதர் மறந்துவிடுகிறார்.

இச்சமயம், ஜெர்மன் அருப்புகளைத் தோற்கடிக்க முடியாதென்றும், அட்லாண்டிக் சமுத்திரத்தில் நேர்ந்த கப்பல்சேதங்களைப்பற்றியும், Mr. நை (Mr. Nye) யும், Mr. வீலரும் (Mr. Wheeler) பதுங்கிக் கொண்டு மாஜி-கர்னல் லிண்ட்பர்க்கும (Ex-Col. Lindbergh) பிரசாரம் செய்கிறார்கள்; ஆனால் அவர்களை Mr. ரூஸ்வெல்ட் அளந்து வைத்திருக்கிறாரென்று நினைக்கிறேன். அவர் அரசியலில் நிபுணர்; தன் அபிப்பிராயங்களையே மெதுவாக அனுஷ்டிப்பவராதலால், அவர் ஒன்றுமே செய்யவில்லையென்று தோன்றும்; அதனால் அவரை சிலர் குற்றங்கூறுவார்கள்; ஆனால இப்படிச்செய்வது அவரது சமத்காரம். இப்படிப்பட்ட பேச்சு ஓங்கினால், அவர் உடனே ஏராளமான பணம் செலவழித்து போர்முனைகளுக்கும் போர்முனையல்லாத இடங்களுக்கும் நமக்குத்தேவையான இடங்களுக்கு அமெரிக்கக் கப்பல்களும், கப்பற்படைகளும் அனுப்பியும், கிரீன்லண்டை (Greenland)



தன முக்கிய அக்கரை நாடாக பாவித்து, தனது கடலாதிக்க எல்லையை 300 மைலிலிருந்து 2,000 மைலுக்கு விஸ்தரித்து பல வழிகளில் பெரிய காரியங்கள் செய்து விடுகிறார்.

சரி, இப்பொழுது என்ன? ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஒரு பிரசங்கம் ஒன்று சர்வ அமெரிக்கா சங்கத்தில் நடத்தமுடியாமல், தலைவர் கொஞ்சம் தேக அசௌகரியமாக இருக்கிறதாகத் தெரிகிறது. ஆனால் ஏதோ பெரிய விஷயம் ஏற்பாடாய்க்கொண்டிருக்கிறதென்பதில் யாருக்குத்தான் சந்தேகம். Mr ரூஸ்வெல்டின் சிப்பந்திகள் இதற்குப்பூர்வமாய்ச் செய்யவேண்டியவைகளைச் செய்து வந்திருக்கிறார்கள். அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் 900 மைல் தூரத்திற்கு அமெரிக்கக் கப்பற்படையின் சகாயம் வேணும் என்கிறார். கர்னல் நாக்ஸ் (Colonel Knox) இதற்கு மேல் போகிறார். பிரிடன் வரை நெடுகிலும் சாமான்கள் கொண்டுபோக கப்பற்படை துணையாய்ச் செல்லவேண்டுமென்று ஜாடை காண்பித்திருக்கிறார். சட்டசபையைச் சேர்ந்த ஸால் புளும் (Sol Bloom) என்பவர் பால்கனில் ஏற்பட்ட தடையைக் குறித்து, “இது பிரிடனுக்கு நாம் உதவிபுரிவதை வேகப்படுத்தும்” என்கிறார். மத்திய மேல் மாகாணத்திலுள்ளவரும், முன்னே ஒன்றிலும் தலையிடக்கூடாதென்று வாதித்தவருமான சட்டசபை மெம்பர் காப்பர் (Capper) என்பவர், “இதனால் பாதகமில்லை; நமது ஏற்பாட்டின்படி நாம் செய்வோம்” என்கிறார். இம்மாதிரியான சில செல்வாவணியுள்ள வாசகங்கள் சொல்லப்பட்டால், மிஸ்டர் ரூஸ்வெல்ட் தனது கக்ஷி வெகு பலமுள்ளது என்று உணர்வார். அதன்பேரில்........?

கர்னல் நாக்ஸ் (Colonei Knox) என்பவர் இரண்டொரு நாட்களுக்கு முன் சொன்னதாவது, “அமெரிக்கர்களுக்கு அவசியமான வெற்றியை பிறர் அடைந்து தரவேண்டும் என்ற பயங்காளித்தனமான ஸ்திதியில் அமெரிக்கர்கள் இனி இருக்கமுடியாது.” யுத்தத்தில் புகுந்துவிட்டோம் என்று ஸ்பஷ்டமாக தலைவர் சொல்லவேண்டியிருக்கிறதோ என்பதில் எனக்குக் கொஞ்சம் சந்தேகம் உண்டு. சில மாதங்களுக்கு முன் ஒரு அமெரிக்கப் பத்திரிகை சொன்ன பிரகாரம் “நாம் சண்டைக்குப் போவதா என்ற பேச்சில்லை. நாம் சண்டையில் சேர்ந்து விட்டோம்.”

## புது பிரசார வேலி.

இது எப்படிக்கிருந்தாலும், ஹிட்லர் கைவசம் சில நல்ல சீட்டுகள் இருக்கின்றன; அதை அவன் சீக்கிரம் ஆடவேணும்; நாள் ஆக ஆக அவனுக்குத் தோல்வி நெருங்கும். இந்தச் சீட்டுகள் என்னவென்று ஸ்பெயின், பிரான்ஸ், போர்ச்சுகல் பத்திரிகைகளிலிருந்தும் மிஸ்டர் சர்ச்சிலின் ஸ்பஷ்டமான பேச்சிலிருந்தும் தெரியவருகின்றன; ஆனால், ஹிட்லரின் முக்கிய நோக்கங்கள் என்னவென்று முதலில் கவனிப்போம். அவையாவன :—

1. பிரிடனையே படையெடுக்க உதவும் விதமாக ஒரு ஸ்தானம் அடைய வேண்டுமென்பது.

2. மனோபாவத்திலாவது, சொத்து சுதந்திரத்திலாவது பிரெஞ்சுக்காரர்கள் பழய ஸ்திதிக்கு வருவதை எவ்வகையிலும் தடுப்பது.
3. பிரெஞ்சுக் கப்பற்படையை பிரிடனுடன் வம்பில் மாட்டிவிடுவது.
4. வட ஆபிரிக்காவிலுள்ள பிரெஞ்சு மாஜி இதாலிய ஸ்தலங்களில் ஆழ்ந்து புகுந்து, அதன் பயனாக வேகாண்டு (Weygand) ராணுவ ஆக்கிரமணம் செய்யும்படிக்கும், காஸாபிளாங்கா (Casablanca) பைஸர்டா (Bizerta) என்ற நிலயங்களை உபயோகப்படுத்திக் கொள்ளும்படிக்கும் செய்வது.

இவைகளில் கடைசி மூன்றும் முதலாவது நோக்கத்திற்கு உள்ளடங்கியது; அட்லாண்டிக் யுத்தத்தை மறக்கக்கூடாது. அவன் ஆடவேண்டிய சீட்டு களாவன:—

1. எவ்வளவு செலவாயிருந்தபோதிலும், முடிவில்லாதபோதிலும் கிரீஸிலும், ஆபிரிக்காவிலும் அவன் சைனியங்களுக்குக் கிடைத்திருக்கும் மதிப்பு.
2. அவனுடைய சைனியம், விமானப்படை, தளவாட தயாரிப்பு ஓங்கி நிற்கின்றன; பிரிடிஷ் சாம்ராஜ்ஜியமும், அமெரிக்காவும் அவர்களால் செய்யக்கூடிய அளவிற்கு இன்னும் நெருங்கவில்லை.
3. சில நடுநிலைமை நாடுகள் செயலற்று, அநீதமான காரியங்களுக்கும் உட்படும்விதமாக நடுங்கியோ சோற்றிற்கு வகையில்லாமலோ கிடப்பது.
4. ஜப்பான் செய்யும் அமர்க்களம்; இதைக்கொண்டு அமெரிக்காவின் கவனத்தைக் கலைத்து பிரிடிஷ் கப்பற்படைகளை கலைப்பது.

ஆகையால்தான் தினசரி சில சில பேச்சுகள் கிளம்புகின்றன; லிஸ்பன் முதல் டமாஸ்கஸ் வரை ரிப்பன்டிராப்பாணியில் சூழ்ச்சிகள், ஸ்பெயின் ஸ்வீடன், ஸ்விட்ஸர்லண்ட் பத்திரிகைகளில் பயந்த பேச்சு, அதாவது போர்ச்சுகல், ஸிரியா, அஸோர்ஸ் தீவுகள், ஈராக் போன்ற நடுநிலைமை நாடுகளில் ஏதேனுமொன்றைப் பொருக்கி, அதை நேசதேசத்தார் தாக்கப்போவதாக புரளி செய்து, அச்சு தேசத்தார் வழக்கம்போல் ஏதேனும் அடாத அக்கிரம காரியம் செய்வதை எச்சரிப்பது இவைபோன்ற பேச்சுக்கள் கிளம்புகின்றன.

## துறப்புத்தேடுவது.

மேலேகண்ட தந்திரமெல்லாம் இதற்காகத்தான். ஹிட்லரிடம் சீட்டுகள் இருக்கின்றன. அவைகளில் ஜயிப்பவைகளை அவன் உடனே போட்டு ஆடவேணும். ஆகையால்தான் எங்கே துறப்பு இருக்கிறது, எங்கே சுலபமாகத் தாக்கலாமென்று தேடுகிறான்; உலகத்தார் அவன் பேச்சில் எள்ளளவும் நம்பிக்கை வைக்காமல் போனாலும், அவன் உலகத்தையே சர்வாதிகாரியால் ஆளவேணுமென்று எண்ணுகிறான் என்று நம்பியிருந்தபோதிலும், இதையெல்லாம் கவனிக்காமல் அவன்



துறப்புத்தேடுகிறான். முதலில், அச்சைச் சேராதபோனால் ருஷ்யாவை எதிர்ப்பதாக யோசனை; பிறகு பட்டினி பயத்தாலும் கஷ்ட நிவாரணம் செய்வதாக ஜெர்மானியர் சொன்ன வாக்காலும், இல்லையேல் பிரனீஸ் மலைவரை பிரான்ஸ் வழியாக ஜெர்மன் படைகள் பிரவேசிக்குமென்ற பயத்தாலும் வாட்டப்பட்ட பிரான்ஸை படையெடுப்பதான யோசனை; பிறகு, துருக்கி; பிறகு, போர்ச்சுகல்; இந்த மாதிரி பற்பல யோசனை. கடைசியாக, இப்போது, பிரெஞ்சு மேல்பார்வையிலிருந்த ஸிரியா (Syria) தேசத்தில் விமான நிலயங்களை உபயோகித்துக் கொண்டு ஜெர்மன் விமானப்படையானது கிழக்கம் இரானை (Iran) நோக்கி அளப்பரிய பறக்கிறது. அத்துடனில்லை, நாளைவில்........இந்தியா!

நல்ல வேலையாக, இந்த 'திறந்த இடம்' என்று நினைக்கப்பட்ட பிரதேசத்தில் பிரிடிஷ்படைகள் இருக்கின்றன. தாமதமன்னியில் பிரிடனுக்கும் இராக்கிற்குமுள்ள உடன்படிக்கைப்படி நாம் நடவாமலிருந்திருந்தால் ரஷீத்அலி கிளப்பிய கிளர்ச்சி கோளாராக முடிந்திருக்கும். நேற்று Mr. ஈடனும் பார்லிமெண்டில் பின்வருமாறு சொன்னார்:—

நமது விமானப்படை ஆத்திரம் தீர்த்துக்கொள்ள ஸிரியாவிலுள்ள விமான நிலயங்களிற்குச்சென்று ஒரு கைபார்த்தால், ஏன் போனீர்களென்று கேள்வி கேட்கமாட்டோம். (2) ஆசியா மைனரிலும், இராக்கிலும் ஜெர்மன் துருப்புகளுக்கு விரோதமாக வேலைசெய்ய பிரிடிஷ் எதிர்ப்பை துருக்கியார் அபேக்ஷித்தால் வேண்டிய அளவுக்கு சகாயம் செய்ய தயாராக இருக்கிறோம்.

இந்தியா யுத்தத்தில் சம்பந்தப்படவில்லையென்று யார் இப்போது சொல்லுவார்கள் !!?"

---

# இன்றைய லண்டன் மா நகர்.

---

## ஸ்திரீ ஊழியரின் ப்ரத்யக்ஷ அனுபவங்கள்.

லண்டன் மா நகரிலுள்ள புருஷர்கள், ஸ்திரீகள், குழந்தைகள் எல்லோரும், ஜெர்மனியின் விமானப்படையெடுப்பினால் ஏற்படும் கஷ்டங்களை, பொருட்படுத்தாமல், தைரியத்துடன் இருந்துவருவதுபற்றி ஆச்சரியப்பட்டு பல நடுநிலைமை தேசத்தினரும் கூறுகிறார்கள். எல்லோருக்கும் பொதுவாக நேர்ந்திருக்கும் இந்தக் கஷ்டம், அவர்களிடத்தில் சிநேகபான்மையையும், சமூக ஒற்றுமையையும் ஏற்படுத்தியிருக்கிறது. கீழே குறிக்கப்படும் விஷயங்கள் இங்கிலாந்தில் தற்போது இருக்கும், ஒரு ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தரின் சம்சாரத்தின் அனுபவங்கள் இங்குள்ள அவருடைய சிநேகிதரின் அனுமதியின்பேரில் அவருக்கு வந்த கடிதத்தில் கண்டவைகளை பிரசுரிக்கப்படுகின்றன.

"இங்கு நடந்துவரும் விஷயங்களைப் பற்றிச் சொல்ல எதிலிருந்து ஆரம்பிக்கிறது? உனக்கு நடப்புகள் பூரவும் ரேடியோ மூலம் தெரிந்திருக்கும்.

"அது அநேக சமாசாரங்களை தெரியப்படுத்துமானாலும் பூராவும் தெரிவிக்க முடியாது. அது உண்மையான நடப்புகளைத் தெரிவிக்கிறது. ஆனால் எதை வெளிப்படுத்தினால் சத்துருக்களுக்கு பயன்படுமோ அவைகளைத் தெரிவிக்காது. நமக்கு நேர்ந்திருக்கும் நஷ்டங்களை ஒளிக்காது. ஒளித்து நம்மை ஏமாறச் செய்யாது. இதை நான் நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்.

"இங்கு எங்களுக்கு சென்ற 4 மாத காலமும் எவ்விதம் வருத்தியிருக்கிறது என்றும் அந்தக் காலமுழுவதும் எப்படி ஒவ்வொருவரும் பொறுத்துக்கொண்டிருந்தார்கள் என்பதையும் அது தெரிவிக்காது. சென்ற நான்கு மாதகாலமும் லண்டன் நகரின் துறைமுகத்தில் பணிசெய்துவந்த நான் இதற்குப் பிறகு, இந்தப் பெரிய மன அதிர்ச்சியை சஹித்துக்கொண்ட நாம் ஒருவர்கூட மீதியில்லாதபடி நசிக்கப்பட்டால் அல்லாது எவருலும் தோற்கடிக்கப்படமாட்டோம் என்று தீவிரமாக சொல்லுவேன். இவ்விதமான ஜீவிய வாழ்க்கையை அனாயாசமாக தழுவிக்கொண்டுவிட்டோம். ஆகாயப்படையெடுப்புக்குத் தற்காப்புக்கான ஸ்தலங்களிலும், கட்டடங்களின் தரை மட்ட ஸ்தலங்களிலும் படுத்து உறங்குவது என்றும், கிடைத்த இடத்திலும் நேரத்திலும் போதுமான உணவை உட்கொள்ளவேண்டும் என்றும்; ஒவ்வொருநாளும் முன்னதைவிட தீவிரமாக வேலைகள் செய்துவரவேண்டுமென்றும்; சிநேகிதர்களைக் காணமாட்டோம், வேறு ஆடல் பாடல் அனுபவிக்கமாட்டோம், மறுநாள் விடிந்தவுடன் தான் தனது தொழிலைச் செய்ய முயற்சிப்போம், இப்போது தங்குவதற்கான இடங்களை அடைந்து கண் அயர்வோம்; என்ற விதம் வாழ்க்கையைக் கைக்கொண்டிருக்கிறோம். ஆகாயத்தில் கும்பல் கும்பலாக விமானங்கள் பெரிய சப்தங்கள் செய்வதும், நம்மைச்சுற்றி எந்தவிடமென்று எதிர்பாராத இடத்தில் குண்டுகள் விழுந்து வெடிப்பதும் பக்கத்திலுள்ள பீரங்கிகளின் சப்தங்களும் இரவு பூராவும் கேட்கின்றன. ஆனால் இவைகள் இப்போது என் தூக்கத்தைக் கெடுக்கவில்லை. நமக்கு வெகு சமீபத்தில் விழுந்த குண்டின் வெடி சப்தம் நம்மை விழிக்கச்செய்தாலும் "அம்மா தெய்வச் செயலால் இது நம் பேரில் விழவில்லை" என்று சொல்லிக்கொண்டு மறுபடி தூங்குகிறோம். ஆகாயப் படையெடுப்பு எச்சரிக்கை செய்யப்படாத நாள்தான் நமக்கு ஏதோ மாதிரி திகிலை கொடுக்கிறது. இது ஏதோ எழுதுவதற்காக ஏற்படுத்திக்கொண்ட கற்பனையல்ல. நாங்கள் எவ்விதம் அனுபவிக்கிறோம் என்பதே. எவரும் அதிர்ஷ்டமில்லாமல் குண்டுக்கிறையானால்—சரி. அது பற்றி நாம் என்ன செய்வது!

## ஸ்திரீகளின் ஊழியம்.

"தேர்ச்சியில்லாத நர்சுகள் லண்டனில் தேவையில்லை. நான் பதிவுசெய்துகொண்டவுடனேயே, ஆகாயப்படையெடுப்பினால் முதன் முதலாகவும், மிகவும் கொடுமையாகவும் பாதிக்கப்பட்டிருந்த "பாப்லர்" என்ற பிராந்திய ஜனங்களின் ஒத்தாசைக்கு அனுப்பப்பட்டேன். அந்தப் பிரதேசத்து ஜனங்களுக்கு துணிகள் வழங்குவதற்கான அலுவல்களில் புகுந்தேன். எல்லாம் அல்லோல கல்லோலமாக இருந்ததும், துணிகள் அவசியமானவர்களும், பேராசையானவர்களும் போட்டியிட்டுக்கொண்டு கும்பலாக வந்தார்கள். துணிகள் பலவகைகளும்



ஏராளமாக பார்சல் பார்சலாக வந்து குவிந்தன. அவைகளைச் சரிபார்க்கவும் துணிகளை விதம் விதமாகச் சேர்க்கவும் கந்தல் கிழிதல் அழுக்கு இவ்விதம் தனிப்படுத்தவும் எவ்வித ஏற்பாடும் செய்திருக்கவில்லை, சிலது ஏராளமாகவும் சிலது குறைவாகவும் இருந்தன. போர்த்திக்கொள்ளக்கூட ஒன்றுமில்லாதவர்களுடன், தக்க உடை அணிந்தவர்களும் அதிகமான உடைகள் வேணுமென்று வந்த யூதர்களும் ஹிம்சித்தார்கள். 7, 8 நபர்கள் உள்ள குடும்பங்களுக்காகவும், திரும்பத் திரும்ப அடையாளங்கண்டுகொள்ளமாட்டார்கள் என்று கருதி வந்த மோசக்காரர்களும் கூடியிருந்தார்கள்.

"ஒரு விதமாக அமளி அடங்கினதும் நான் சர்வ அதிகாரத்தையும் ஏற்றுக்கொண்டேன். வருவதும் கொடுப்பதுமான எல்லா உருப்படிகளுக்கும் கணக்கு திட்டங்கள் ஏற்படுத்தினேன். உற்சாகமுள்ளவர்களானாலும் உபயோகமில்லாதவர்களை விலக்கினேன். மீதியுள்ள தக்க தேர்ச்சியுள்ளவர்களுடன் இப்போது நன்கு நடத்தப்படுகிறது. அதிக சேதம் ஏற்படும் காலத்திலும் தக்க முறையில் ஒத்தாசை செய்ய சித்தமாகவிருக்கிறது. டவுன் ஹாலுக்கு வருகிறவர்களுக்கு மட்டுமன்னியில் வெடிகுண்டு விழாத இடங்களில் போயிருக்கும் ஜனங்களுக்கும் துணிகள் வழங்கி வருகிறோம். எனக்கு ஒத்தாசைக்காக உற்சாகமுள்ளவர்களும், உழைப்பாளிகளுமான இப்பிரதேச ஸ்திரீகளில் சிலரை சேர்த்துக்கொண்டிருக்கிறேன். ஒருவள் வெடிகுண்டு பயத்தினால் தன்னை வேறு இடத்துக்கு கூட்டிப் போகும்படி தன் கணவனை தான் வற்புறுத்தினதாகவும் சொன்னாள். ஆனால் அவள் இப்பொழுது பயம் தெளிந்து மிகவும் தீவிரமாக இவ்வேலையில் ஈடுபட்டிருக்கிறாள். மிகுந்த உழைப்பாளி. அவள்தான் எனக்கு அடுத்தபடியாக இங்கு தலைமையாய் இருக்கிறாள். இதில் பெருமைகொண்டிருக்கிறாள். இது விஷயத்தில் எனக்கு ஒரு பிசகுதான் தெரியவருகிறது. இதில் சேவைக்கு வரும் ஸ்திரீகள் தங்களைப்பற்றி செறுக்குக்கொள்ளுகிறார்கள். அங்கங்குள்ள ஸ்திரீகளுடன் ஒத்துக்கொள்கிறதில்லை. துணிகளைப்பற்றியது என் பொறுப்பு. ஆனால் இதர விஷயங்களிலும் நான் கூடுமானவரை ஒத்தாசைசெய்கிறதுண்டு. கவர்ன்மெண்டின் ஒத்தாசையைத் தவிர "லார்ட் மேயரின்" நிதியிலிருந்து "பாப்லர்"க்கு கொடுக்கப்படும் பங்கை விநியோகப்படுத்துவதிலும் நாங்கள் வேலைசெய்கிறோம். ஜனங்களுக்கு வேலை பார்த்துக்கொடுத்தும், வேலைசெய்ய பழக்கியும் கொடுக்கிறோம். பிரிந்துபோயிருக்கும் குடும்பத்தினர்களை சேர்த்துவைப்பதிலும் இன்னும் இதுபோன்ற பல ஊழியங்களையும் செய்துவருகிறோம். ஆகாய விமானப்படையெடுப்பின் பாதுகாப்பாளர்களுக்காக இரவுகளில் சாப்பாட்டுக் கடைகள் நடத்துகிறோம். படையெடுப்பு காலங்களில் ஜனங்கள் தங்குவதற்கான வசதிகள் ஏற்பாடுசெய்தும் அங்கங்கு சாப்பாடு கிடைக்கும்படிக்கும் ஏற்பாடுசெய்து வருகிறோம்.

## அமெரிக்க செஞ்சிலுவை.

"அமெரிக்க செஞ்சிலுவையினர் எங்களுக்கு மிகவும் ஒத்தாசையாக இருக்கிறார்கள். கீழ் லண்டனிலுள்ளவர்கள் உபயோகிக்க இஷ்டமில்லாத மிகவும்

உன்னதமாக உடுப்புகளைக் கட்டவும், உடுப்புகள் தயாரித்துக் கொள்வதற்கான கம்பளி நூல் வகையரா சாமான்களையும் கொடுத்து வருகிறார்கள்.

"பண ஒத்தாசையிலும் அவர்கள் தாராளமாகவே யிருக்கின்றனர். எங்கள் 'பாப்லர்' பிரதேசம் சம்பந்தமான ஒரு கதை சொல்லுகிறேன். அமெரிக்க செஞ்சிலுவை அங்கத்தினர் சிலர் எங்கள் வேலையைப் பார்வையிட வந்து எங்களுக்கு நன்கொடை கொடுக்க இச்சைப்பட்டார்கள். எங்கள் "ஸ்திரீகள் சுயேச்சை ஊழிய சங்கம்" தனிமையாக பொருள்வைத்துக் கொண்டிருக்கவில்லை (எங்கள் சங்கம் கவர்ன்மெண்டாரின் உதவியைக்கொண்டு உள் நாட்டு இலாகாவின் கீழ் வேலை செய்வதாகும்) என்றும், இஷ்டப்பட்டால் 'பாப்லர்' பிராந்திய மேயர் நிதிக்கு நன்கொடை கொடுத்தால் அதை நாங்கள் பயன்படுத்துகிறோம் என்றும் சொல்லும்படிக்காயிற்று. அவர்கள் உங்களுக்கு எவ்வளவு தொகை வேண்டும் என்றார்கள். மென்று முழுங்கிக்கொண்டு எதற்கும் தைரியமாகவே ஆயிரம் பவுன் வேண்டுமென்றோம். அவர்கள் அலக்ஷியம் செய்யாமல் உடனே சரி என்று சொல்லிவிடவும் எங்களுக்கு அதிக சந்தோஷமும் வியப்பும் உண்டாயிற்று. உடனேயே அந்தத் தொகைக்கு செக்கும் கிடைத்தது. அதற்கு வந்தனம் செய்து பதில் எழுதினோம். இதற்கு உடனே ஒரு பதில் கிடைத்தது. அதாவது அந்த செக் ஆயிரந்துந்த அல்லவென்றும் ஏழாயிரந்துந்த கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் கவனமுண்டாக்கியது !!

## "அமெரிக்கரின் அனுதாபமும் உதவியும்.

தற்போது 'ரூஸ்வெல்டின்' சொற்பொழிவு மிகவும் ஒத்தாசையானது. நாட்டினரை வற்புறுத்தாமலும், அவர்கள் நோக்கம் போல் நடந்து மிகவும் விசேஷமாக நடவடிக்கைகளை கையாண்டுவருகிறார். 'ரூஸ்வெல்டின்' பிரியத்தையும், அனுதாபத்தையும்பற்றி நமக்கு சந்தேகமே இருந்ததில்லை. அவரால் தன் தேசத்தினரை வழிக்குக் கொண்டுவர முடியுமா என்றுதான் யோசனையாக விருந்தது. அவர் தேர்தலில் வெற்றிபெற்றது இங்கு பெரிய சந்தோஷத்தை உண்டாக்கியது. ஏனெனில் என்னதான் 'வில்கி' இருந்தாலும் 'ரூஸ்வெல்ட்'ஐ நாம் நன்கு அறிவோம். நமது நம்பிக்கைக்கும் பாத்திரமாகவே இருந்து வந்திருக்கிறவர். அவர் நம் சிநேகிதர். அமெரிக்கா யுத்த அரங்கத்தில் கக்ஷியாளராக வரவேண்டாமென்று நான் விரும்புகிறேன். தற்போது நமக்கு ஆயுத களஞ்சியமாக வெகுவாக ஒத்தாசை செய்கிறது. நமக்கு, தற்போது அவருடைய சொற்பொழிவினால் சந்தோஷமேற்படுவதற்குக் காரணம், அவர்கள் (அமெரிக்கர்) நாம் அவர்களுக்காகவும் இச்சண்டையிலீடுபட்டிருக்கிறோம் என்றும், அவர்கள் செய்யும் கொடைகளுக்கு நாம் திரும்ப பொருள் கொடுக்காவிட்டாலும் நம்முடைய உயிர்களையும், பொருள்களையும், நாடு நகரங்களையும் அவர்களுக்காக தியாகம் செய்து வருகிறோம் என்று அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்று நாம் கண்டுகொண்டிருப்பதேயாம். தற்காப்புக்காக அமெரிக்கா நமக்கு அளித்து வரும் பல பொருள்களுக்கும் பதிலாக நாம் நாசமாக்கப்பட்டிருக்கும் பெரும் பெரும் நகரங்களையும், அங்க



உருப்புகளை இழந்தும், வாழ்க்கையின் அவசியங்களை யிழந்தும் நெடுநாள் கஷ்டப்பட்டு ஏற்படுத்திக்கொண்ட சமூக வாழ்க்கைகளை ஒரே குண்டினால் இழந்தும் (சென்ற ஒரு நாள் இரவு ஒரே குண்டு 500 கிரகங்களை அழித்தது) இது போன்ற தியாகங்களைத்தான் சமர்ப்பிக்கிறோம். பதிலுக்கு பொருள் கொடுப்பதைவிட இது மேலானதல்லவா?. தெய்வ சங்கல்பத்தில்தான் அமெரிக்கா இவைகளை உணர்ந்து நமக்கு தன்னால் ஆன உதவிசெய்து வருகிறதென்று சந்தோஷமடைகிறோம்.

## மன உற்சாகம்.

"எவ்வளவு கோரமானதும், பயங்கரமானதுமாயும் இது இருப்பினும் இதனால்தான் உலகத்துக்கே க்ஷேமம் உண்டாகும் என்று நீ அறிவாய். கேவலம் பணத்திமிரிலிருந்தும், சோம்பித்திரிவதிலிருந்தும், மற்றும் பலவித அபசார விருத்திகளிலிருந்தும் தற்போது இங்கிலாந்திலுள்ள எங்கள் எல்லோரையும் இது விழிப்பு மூட்டிவிட்டது. இங்கு 'பாப்லரி'லுள்ளவர்களில் தங்கள் சொத்துக்களை இழந்தவர்களிடம் "சொத்துக்கள் இருந்து என்ன பிரயோஜனம்? உயிரும் திடகாத்திரமும் மட்டில் இருந்தால் மறுபடியும் சொத்தை சேர்க்கத்தக்க ஒத்தாசை செய்வோம்" என்று நான் கூறுகிறேன். பயத்தினால் வேறு இடத்துக்குப் போக உத்தேசமில்லாதவர்களிடம் "வேறு இடங்களுக்குச் சென்று என்னென்ன காண சந்தர்ப்பம் இருக்கிறது. எவ்வளவு பேர்களிடம் நடந்த விருத்தாந்தங்களை சொல்லலாம்" என்றெல்லாம் சொல்வேன். இதனால் அவர்கள் அபாயத்தினிடையே வசிப்பது ஒரு பெரிய வீரச்செயல் என்று எண்ணுவார்கள். இதில் ஒரு உற்சாகம் ஏற்பட்டிருக்கிறது. குண்டுக்கு தப்பினால் வீரச்செயலாகும், குண்டுபட்டு மாண்டால் உயர்ந்த சாவாகும், எல்லாம் உன்னதமான நோக்கத்துக்காக உட்பட்டதான காரியமாகும் என்றே உணர்ச்சி இருக்கிறது. இதனால் தேசத்திலுள்ளவர்கள் எல்லாருக்கும் புத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் எதற்கும் அஞ்சவில்லை. ஒருவர்கூட இல்லாமல் சகலரும் நசிக்கப்பட்டால் அல்லாமல் நாங்கள் கீழே விழோம். இவ்விதம் கஷ்டமனுபவிப்பதில் எங்களுக்கு பெருமையாகத்தான் நாங்கள் எண்ணுகிறோம். எங்களிடம் பச்சாத்தாபப்பட வேண்டாம். எங்களுக்காக நீங்கள் பயப்படவும்வேண்டாம். எங்களுக்கு பயம் இல்லை. இங்கு எங்கள் மத்தியில் கஷ்டத்துக்குட்படாமலிருந்து வரும் ஏனையோரிடமே நீங்கள் பச்சாத்தாபப்படவேண்டும்.

"வெகுதூரத்துக்கப்பால் இந்தியாவிலிருந்துகொண்டு இங்கு நடப்பதாக கேள்விப்பட்ட வீண் நாசங்களினாலும், சேதங்களினாலும், சண்டை என்ன என்பதே அறியாமலும், நாம் அடைந்த பீதிக்கும், மனத்தாங்குதலுக்கும், மன நிம்மதி குறைவுக்கும், இப்போது நாம் அனுபவிக்கும் மன நிம்மதிக்கும், சந்துஷ்டிக்கும், பயமின்மைக்கும், என்ன வித்தியாசம். கிருஸ்து பகவான் தன்னைக் கொடுத்து உலகத்தைக் காத்ததின் ரகசியத்தை இப்போது உணர்கிறேன். சுய நலத்தினால் நமக்குண்டான மரியாதை, மட்டு இவைகளைப் பிறர் அபகரிக்கப்போவதாக பயந்து பொறுமையில் ஈடுபட்டிருந்தோம். கட்டாயம் இப்பான்மையழிந்து நன்மை

ஏற்படத்தான் செய்யும். எனினும் அதற்குமுன் தக்க காயகல்ப பிராயச்சித்தங்கள் செய்துதான் ஆக வேண்டும். இது கேவலம் வெறும் பேச்சாகாது. என் அனுபவத்திலிருந்தே தெரிகிறது. கஷ்டம்தான் ஆத்ம சுத்திக்கு காரணமாகும். கேவலம் கஷ்டத்துக்குட்பட்டிருப்பது மட்டும் போதாது. அது நன்மையான மார்க்கத்தில் பிரவேசிக்கச் செய்யவேண்டும். நானே உறக்கப் பேசிக்கொள்வதுபோல் இதை எழுதி இருக்கிறேன்."

---

## பிரிடிஷ் ஆயுத ஆயத்தமான ராணுவ வகுப்புகளில் சீர்திருத்தம் நடந்தேறிவிட்டது.

பிரிடிஷ் ஆயுத ஆயத்தமான ராணுவ வகுப்புகளில் சீர்திருத்தம் செய்தாகிவிட்டது. அவற்றை ஒத்த விரோதி வகுப்புகளை எதிர்த்து எவ்விதத்திலும் வெற்றி பெறக்கூடிய வலுத்த யுத்த தளவாடங்களாக அவைகள் இப்போது மாறிவிட்டன.

யுத்த முஸ்தீப்புகளோடு கூடின வண்டிகளில் ஒவ்வொரு தினுசு வண்டிகளிலும், அவைகள் நமது ராணுவ இயக்கத்தில் இதுவரை கண்டறியாதபடி கடுமையாகத் தாக்குவதற்கு ஏற்றவாறு மாறுதல்கள் செய்தாகிவிட்டது. அவைகளின் அங்கங்களும் ஒன்றுக் கொன்று ஏர்வையாகவே அமைந்திருக்கின்றன.

இவ்வாறு பரிபூர்ணமாகவுள்ள அங்கங்கள் ஒவ்வொன்றிலும், நாளதுவரை நூதனமாகவுள்ள அமைப்போடு கூடின டாங்கியும், விரைவில் இடம்விட்டு பெயரக்கூடிய பீரங்கியும், ஆகாயப்படை எதிர்ப்பு பீரங்கிகளும், டாங்கி எதிர்ப்பு பீரங்கிகளும், வெட்டவெளிப்படைத்திரளும், யுத்தகால இஞ்சினீயர்களும், லாரிகளில் ஏற்றப்பட்ட ஆட்படைகளும், நிர்வாகத்திற்கும், பாதுகாப்பிற்கும் தேவையான அங்கங்களும் அடங்கி இருக்கின்றன.

**யுத்த வண்டிகளில் திட்டமானது** க்ரூயிஸர் டாங்கி. அதற்கு வேகமாகச் செல்லும் சக்தியும், சுடும் சக்தியும் அதிகம் உண்டாகையால், அதற்கு சகஜமாக ஏற்பட்ட அலுவலைச் செய்வதுடன் நெருங்கி வேவு பார்ப்பதற்கு அது உபயோகப்படுகிறது. அதிக தூரம் சென்று வேவு பார்ப்பதற்கும் அதில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இதாலியர் அணிவகுப்பில் உள்ளவைகளைக்காட்டிலும் நமது ஆயுத ராணுவ வகுப்புகள் பீரங்கி சக்தியிலும், கவச ஏற்பாடுகளிலும் ஒப்பிட முடியாத அளவு மேம்பாடானவை. அவற்றை இதுவரை தோன்றியுள்ள ஜெர்மன் 'பான்ஸர்' வகுப்புகளோடு ஒப்பிட்டுப்பார்த்தால் ஆயுத சக்தியில் அவை கொஞ்சமும் பின் வாங்கமாட்டாவென்று நம்பிக்கையாய் கூறப்படுகிறது.



ஜெர்மன் 'பான்ஸர்' வகுப்புகளில் பல விதமான தோரணைகளிலும், பலவித பரிமாணங்களிலும் 300 முதல் 400 டாங்கிகள் வரை வைக்கப்பட்டு இருக்கின்றன; ஆனால் அவைகளின் இயக்கத்திற்கு முடிவு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. லேசான டாங்கிகளைவிடக் கனமான டாங்கிகளையே நாஜிகள் சலுகையுடன் ஆதரிப்பதாக நினைக்கவேண்டியிருக்கிறது. வேவு பார்ப்பதில் இலேசான டாங்கிகளை விட்டுவிட்டு அவற்றிற்கு பதிலாக மோட்டார் சைக்கிளை அவர்கள் உபயோகப்படுத்த ஆரம்பித்து விட்டார்கள்.

---

## பிரிடனுக்கு உதவி செய்வதுதான் சாவதானமென்று அமெரிக்கர்கள் நினைக்கிறார்கள்.

## முடிவில் வெற்றிபெறுவதற்கு பிரிடனின் வலிமை அதிகரித்து வருகிறது.

## பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டின் ராணுவப் புஸ்தகம்.

நியூஸ் கிரானிகிள் பத்திரிகையின் நியூ யார்க்கிலுள்ள நிருபர் ஏப்ரல்மீ 24-ம் தேதியன்று தந்தி மூலம் அறிவிக்கிறார்.

ஜிப்ரால்டர் உள்பட ஐரோப்பா கண்டத்திலிருந்து பிரிடனை அப்புறப் படுத்திவிட்டாலும், சமீபக் கிழக்கு நாடுகளிலுள்ள எண்ணெய் வெளிகளை பிரிடன் இழந்தாலும், வட ஆபிரிக்கா தேசத்தை காலிசெய்துவிடும்படியாக நேரிட்டாலும், முடிவில் வெற்றிபெறுவதற்குத் தேவையான அதிகவலுவான நிலைமையை பிரிடன் அடைந்துவிடும்.

நியூ யார்க் டைம்ஸ் பத்திரிகையின் வாஷிங்டன் நிலயத்தின் தலைவரான ஆர்தர் கிராக் என்பவர் இந்த நம்பிக்கையைப்பற்றி எழுதுகிறார். மேலும், இதிலிருந்து, அமெரிக்காவின் உதவியால் பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்தின் இருப்பு நிலை நாட்டப்படுமென்று பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் சொல்லுவதற்கு வலுவான ராணுவ உதவி ஏற்படுகிறதென்றும் சொல்லுகிறார். தனிப்பட்ட சண்டைகளுடையவும், எதிர்ப்புகளுடையவும் பலன்கள் எப்படியிருந்தபோதிலும் இந்த உதவி அளிக்கப்படலாம்.

கிராக்கின் அபிப்பிராயப்படி, பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் வாஷிங்டனில் முக்கிய ஆதாரமான ராணுவப் புஸ்தகத்தின் ஆதாரவைக்கொண்டுதான் பேசுகிறார்.

அமெரிக்காவில் யுத்த தளவாடங்களின்—விசேஷமாக விமானங்களின், கப்பல்களின்—உற்பத்தியை அதிகப்படுத்தவும், அவைகளைக் கொண்டுவந்து சேர்ப்பதற்கும் ஏற்பாடுகள் நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுவதால், அட்லாண்டிக் மஹா சமுத்திரத்திலும், செங்கடலிலும், சிங்கப்பூர் வெளிகளிலும், பிரிடிஷாரின் கடலாதிக்கம் வலுவடையும் என்பது நிச்சயம்.

வலுக்குறைவான அம்சங்கள் யாதெனில் அமெரிக்காவிலுள்ள தொழிற்சாலைகளும் அவைகளினின்றும் உற்பத்தியாகும் சாமான்களை ஒப்படைக்கும் நிர்வாகமும் தான்.

அமைதியுள்ள தொழிலாளர்களிருந்து, வாஷிங்டனிலிருந்து திடஸ்தமான நாயகமும் ஏற்பட்டால் இந்தப் பகுதியும் தேவையான வலுவடைந்துவிடும்.

பால்கன் நாடுகளின் யுத்தம் முடிவடைந்ததின் பயனாக மத்தியதரைக் கடலிலிருக்கும் பிரிடிஷ் கடற்படையின் பகுதிகளும், வியாபாரக் கப்பல்களில் அநேகமும் மற்ற இடங்களுக்கு அனுப்பப்படலாம்.

இவைகளை அட்லாண்டிக் மஹா சமுத்திரத்திலும், செங்கடலிலும் உபயோகித்தால், முற்றுகைகளும், ரோந்துகளும் அதிகமாகவலுவடைந்துவிடும் முன்போலவே, பிரிடிஷாருக்கு வரும் சாமான்களை வரவொட்டாமல் எப்படித் தடுப்பது என்றபிரச்னையானது ஜெர்மனிக்கு மறுபடியும் அதிகமாக ஏற்படக் கூடும்.

---

## யுத்தத்தில் ஸ்பெயினின் மனோநிலை.
## தேசத்தை வசப்படுத்திக்கொள்ள ஜெர்மனியின் முயற்சிகள்.
## ஜெர்மனியோடு பிரெஞ்சு தேசத்தின் ஒத்துழைப்பு.

டைம்ஸ் பத்திரிகையில் ராஜீய தந்திர நிருபர் எழுதுகிறார்.—

ஸ்பெயின் தேசத்தைத் தங்கள் கக்ஷியில் சேர்ந்துவிடும்படி ஜெர்மானியர்கள் ஏராளமாகப் பிரயத்தனம் செய்து வருகிறார்கள். தங்களுடைய உண்மையான தேவைகளை மறைத்துக் காட்டுவதற்காக தோல்வி யுற்ற நாடுகளிலிருக்கும் ரேடியோ ஸ்தாபனங்களையும் பத்திரிகைகளையும் ஒரு கட்டுக்கதை என்று சொல்லக்கூடிய புகைமறைவை உபயோகப்படுத்துகிறார்கள்.

ஸ்பெயினிலிருக்கும் ஜனங்களெல்லோரும் மறுபடியும் யுத்தம் ஆரம்பிக்கக் கூடாதென்று நினைக்கிறார்கள். சிலருக்குச் சில மாதங்களாக தேவையான உணவுப்பொருள்கள் கிடைத்துவந்தன. நாட்டுப்புறங்களில் அநேக கிராமவாஸிகள் அடுத்த வேளை சாப்பாடு எங்கிருந்து தங்களுக்கு வரப்போகிறதோ என்று கூடத்தெரிந்துகொள்ளவில்லை. மாட்ரிட் நகரத்திலும் மற்ற இடங்களிலும் விஷ சுரம் உண்டாகிவிட்டது. அமெரிக்காவிலிருந்து பிரிடிஷ் அரசாங்கத்தார் கப்பல்களில் எடுத்து வந்த கோதுமையும் மற்ற உணவுப்பொருள்களும் கொஞ்சம் ஒத்தாசை செய்திருக்கின்றன.

ஆகிலும் தங்களுக்கு கிரீஸிலும் லிபியாவிலும் ஏற்பட்ட ராணுவ வெற்றிகளினின்றும், தங்கள் கக்ஷியில் சேர்ந்துகொள்ளும்படி ஸ்பானியர்களுக்கு உத்ஸாகமேற்படுமென்று ஜெர்மானியர்கள் மதிக்கிறார்கள். சண்டை செய்யவேண்டிய



அவசியமே ஏற்படாது என்று ஸ்பானியர்களிடம் ஜெர்மானியர்கள் அறிவிக்கிறார்கள். ஜெர்மானியர்களின் ஆயுத பலத்தின் ஆதிக்கத்தினால்தான் ஜெர்மனிக்கு வெற்றிகள் ஏற்பட்டிருக்கிறதென்று ஸ்பெயினில் சில வகுப்பாளர்கள் அறிந்திருக்கிறார்கள். கடல் ஆதிக்கத்தின் சக்தியைப் பற்றி அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். நிராயுதபாணிகளாக வான அநேக வருஷங்களுக்குப் பிறகு இப்பொழுதுதான் பிரிடிஷ் ஜனங்கள் பூர்ணமான ஆயுத பலத்தை அடைந்து வருகிறார்களென்று அவர்கள் அறிகிறார்கள். பிரிடனிலும் சாம்ராஜ்ஜிய நாடுகளிலும் உற்பத்தியை அதிகப்படுத்தியும், அமெரிக்காவிடமிருந்தும் இன்னும் ஏராளமான உதவியும் உண்டாகிவிட்டதால், நேச நாடுகளுக்கு, ஜெர்மானியரிடமிருப்பவைகளைவிட அதிக வலுவாக அடிக்கக்கூடிய சக்தி வாய்ந்த யந்திரங்களை உண்டாக்குவதற்கு சக்தியுண்டாகிவிட்டது.

## ஸ்பெயினில் ஜெர்மன் புரட்சி.

இதை அறிந்துகொண்டு, ஜெர்மானியர்கள் தங்களுக்கு லாபம் ஏற்படும் போல் தோன்றும் தருணத்தில் ராஜ்ய தந்திர வெற்றிகளையடைய ஏற்பாடுசெய்து வருகிறார்கள். பிரிடனுக்கு எதிரிடையாகக் கிளம்பும்படி பிரான்ஸையும் ஸ்பெயினையும் தூண்டிவிடுகிறார்கள். கடைசியாக வந்த செய்திகளில் கடற்பதி டார்லானும் அவனுக்கு த்வேஷியாக மாறிவிட்டானென்று வெளியாகுகிறது. ஆனால் இவையெல்லாம் அவனை பயமுறுத்தி இன்னும் அதிக விசுவாசமுள்ளவனாகச் செய்யவேண்டியதற்கான ஜெர்மன் சூழ்ச்சிகள். இதே சமயத்தில் பாரிஸில் இருக்கும் விஷி அரசாங்கத்தாரின் தூதரான பிரினனென்பவனையும், ஏற்கனவே இருந்த பர இலாகா மந்திரியான பானட் என்பவனையும் விஷி அரசாங்கத்தில் பெரிய ஸ்தானங்களிலமர்த்தும்படி ஜெர்மானியர்கள் வற்புறுத்துகிறார்கள். அவர்கள் பிரினனுக்குப் பதிலாக பாரிஸ் நகரத்தில் லவால் தூதராகயிருக்க வேண்டும் என்றும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

## பிரிடிஷாரின் முற்றுகையைப் பற்றிய பிரச்னை.
## பிரிடன் உணவுப்பொருள்களை அனுப்புகிறது.

ஏப்ரல் 21-ம் தேதியன்று டைம்ஸ் பத்திரிகையின் மாட்ரிட்டிலுள்ள நிருபர் தந்தி மூலம் அறிவித்ததாவது:—

கிரீஸிலும் யூகோஸ்லாவியாவிலும் ஜெர்மனி படையெடுத்தபிறகு பாலாங்கிஸ்டு பத்திரிகையான அர்ரிபா முதல் மாட்ரிட்டிலுள்ள பத்திரிகைகளில் அச்சு நாடுகளின் ஏற்றத்தைப்பற்றி அடிக்கடி வெளிவருகின்றன. யுத்தம் நீடிக்க, நீடிக்க சமயவாதிகளுக்கு மாட்ரிட் நகரத்தில் அதிக ஆவேசமுண்டாகுகிறது.

பத்திரிகைகளில் அழகான தலையங்கங்களில் கிரீஸிலிருந்து பிரிடிஷ் துருப்புகள் வெளியேறியதையும், போர்ச்சுகலில் பிரிடிஷாரின் சூழ்ச்சிகளையும் பற்றிய

கதைகளும் வெளிவந்தன. பிரசார சம்பந்தமான எந்தக் கதையையும் சொல்லலாம். இந்த பூபாகத்தில் ஜெர்மனியின் கட்டுக்கதைகளுக்கு வியாபாரஸ்தலமான சமுத்திரத்திற்கு அப்பாலிருக்கும் வியாபாரிகள் ஏராளமாகப் புளுக ஆரம்பித்துவிட்டார்கள். வெருட்டலினால் செய்யும் காரியங்களுக்கு முடிவாக, புதிதான ரக்ஷண சட்டத்தையும்மீறி புளுகானதும், பிறர் சார்பாயுள்ளதுமான கதைகளை எவரேனும் பரவச்செய்தால் அவர்களுக்கு மூன்று முதல் பத்துவருஷம் வரை காவல் சிக்ஷை விதிக்கப்படுமென்று பயமூட்டும்படியான ஒரு ஊர்வதந்தி உலாவுகிறது.

ஸ்பானியர்கள் தங்கள் அலுவல்களில் ஈடுபட்டவர்களாகயிருப்பதால் இந்த ராணுவ அஹம்பாவத்திற்கு பயப்படுகிறதில்லை. ஸ்பெயினின் ஏழ்மைத்தனத்துக்கு பிரிடிஷாரின் முற்றுகைதான் முக்கியகாரணமென்று சொல்லும் அச்சு நாடுகளின் பிரசாரம் பொய்யென்று வெளியாகுகிறது. பிப்ரவரி மாதம் முதல் கொண்டு ஏப்ரல் 10-ம் தேதி வரையில் ஸ்பெயினுக்கும் பிரிடிஷ் அரசாங்கத்தாருக்கும் ஏற்பட்டுள்ள உடன்படிக்கைப்படி 16 கப்பல்களில் பிரிடிஷாரிடமிருக்கும் சேமிப்புகளிலிருந்து 67,000 டன் எடைமானமுள்ள கோதுமையும் மற்ற தானியங்களும் ஸ்பெயினுக்கு வந்திருக்கின்றன. ஜீவாதாரத்துக்கு லாயக்கான இதர உணவுப்பொருள்களும் வழியில் வந்து கொண்டிருக்கின்றன. ஆர்ஜன்டைனாவிலிருந்து பிரிடிஷாருக்குச் சொந்தமான 1,00,000 டன்கள் எடைமானமுள்ள கோதுமையும் ஸ்பெயினுடைய உபயோகத்துக்கு பிரிடன் அனுப்பிவிட்டது. ஸ்பெயினுக்குச் சாமான்கள் குறைவன்னியில் பிரிடிஷார்கள் அனுப்புவதாக வாக்குத் தத்தம் செய்திருப்பதற்கு இவைகள்தான் பிரமாணங்கள்.

---

## பிரெஞ்சு வட ஆபிரிக்காவில் நிலைமை.
## ஜெர்மன் கண்காணிப்பு பரவுதல்.
## மொராக்கோவில் தளங்கள் ஸ்தாபிக்கப்படுகின்றன.

(ஏப்ரல் 17வ லிஸ்பனிலிருந்து டேவிட் ஸ்காட் "நியூஸ் கிரானிகள்" பத்திரிகைக்கு "கேபிள்" தந்தி மூலம் அனுப்பியது.)

பிரெஞ்சு வட ஆபிரிக்காவிலிருந்து நேராடியாக வரும் சங்கதிகளை கவனித்தால், அடியில் கண்ட விஷயங்கள் உண்டென்று நிச்சந்தேகமாய் தெரியவரும்.

1. நாஸிகள் பிரெஞ்சு மொராக்கோவில் பூரண ராணுவ ஆதிக்கத்தை அமுல் செய்கிறார்கள்.

2. மொராக்கோவிலுள்ள அட்லாண்டிக்கரைத் துறைமுகங்களை தளங்களாக ஏற்பாடு செய்து பிரிடிஷ் கப்பல்களை எதிர்க்கவும், கடைசியாக ஐக்கியநாட்டு அட்லாண்டிக் தளங்களின்பேரில் எதிர்ப்புத் தொடுக்கவும் உபயோகப்படும்படி செய்கிறார்கள்.



3. ஜெர்மானியரின் உத்தரவுப்படிக்கும் ஸ்பெயினுக்கும் விஷி சர்க்காருக்கும் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் ஒப்பந்தப்படிக்கும், பெருவாரியான கப்பல் போக்குவரத்துகள், பிரெஞ்சு ஆபிரிக்காவுக்கும், பிரான்ஸுக்குமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

4. சேனாதிபதி வேகான்டு ஜெர்மானியரின் ஆதிக்கத்தை கவனியாதுபோல் நடந்துகொள்ளுகிறார். ஜெர்மானியர்களுக்கு மொராக்கோவில் தளங்கள் இருப்பதை மறுக்கிறார்.

### அச்சுதேச கமிஷன்கள்.

பிரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் ஏற்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தப்படி பைஸர்டா, அல்ஜியர்ஸ், ஓரான், கெனித்ரா, கஸபிளாங்கா இந்த இடங்களில் அச்சுதேசக் கமிஷன்கள் ஏற்படுத்தப்பட்டன. முதலில் அந்தக் கமிஷன்கள் இதாலியரடங்கியதாகயிருந்தது. பிறகு டிஸம்பர் மாதத்தில் ராணுவமல்லாத மேற்படி கமிஷன்களில் இதாலியர்களை எடுத்துவிட்டு ஜெர்மானியர்கள் ஸ்தாபிதம் செய்துகொண்டார்கள். பிப்ரவரி மாதத்துவக்கத்தில் அந்தக் கமிஷன்களை ராணுவ மயமாய் மாற்றிக்கொண்டார்கள்.

பிப்ரவரி௴ 8வ ஜெர்மானியரின் மெஷர்ஷிமிட் சண்டையிடும் விமானங்களால் ரக்ஷிக்கடபட்ட துருப்பு ஏற்றிச்செல்லும் டார்னியர் விமானங்களில் 200 ஜெர்மன் ஆபீஸர்கள் அடங்கிய அபக்யாதி பெற்ற ஜெர்மன் கமிஷன் கஸாபிளங்காவிற்கு வந்துசேர்ந்தார்கள்.

இந்த ஆகாய விமானங்கள் கஸாபிளங்கா விமான நிலயத்தில் ஸ்தாபித்துக் கொண்டு அந்த நகரத்தின்மேல் அடிக்கடி பறக்கின்றன.

கஸாபிளங்காவிற்கு அருகேயுள்ள அல்பா, ஐந்தியாப் என்ற ஊர்களிலுள்ள ஹோட்டல்களை ஜெர்மானியர் தங்கள்வசம் எடுத்துக்கொண்டுவிட்டார்கள். அந்த ஊர்களில்தான் கப்பல்கள் தேவையால் ஜலத்தை எடுத்துக்கொள்ளும். ராணுவ உடையில் ஜெர்மானியர்கள் மேற்படி டவுன்களுக்குள் நுழைகிறதில்லை. ஆனால் இவர்கள்தான் மேற்படி துறைமுகத்தையும், விமான நிலயங்களையும், தங்கள் ஹவாலில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். யாவருக்கும் இது நன்றாய் தெரிந்த விஷயம்.

ரபே, சாபி, அகாதீர், மராகேஷ் என்ற இடங்களுக்கும் இதிலிருந்து பிரிவுகள் அனுப்பப்பட்டு இம்மாதிரியே அந்த இடங்களையும் ஜெர்மானியர் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

சமீபத்தில் கஸாபிளாங்காவிற்கு அருகேயுள்ள பங்களா சொந்தக்காரர்களை அவைகளைக் காலிசெய்யும்படிக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அவைகளில் ஜெர்மானிய உத்தியோகஸ்தர்களுடைய குடும்பங்களை குடிவைக்கப்போகிறார்கள்.

துறைமுகங்களின் முற்றுகை ஸ்திதி :—

பிரிடிஷார்களிடமிருந்தும் டிகாலே கோஷ்டியாரிடமிருந்தும் கஸாபிளாங்காவை பாதுகாத்துக்கொள்ளப்போவதாக வியாஜம் வைத்துக்கொண்டு, துறைமுகங்களை முற்றுகை ஸ்திதியில் ஜெர்மானியர்கள் வைத்துவிட்டார்கள். சமுத்திரக் கரை ஓரத்தில் துறைமுகங்களில் ஸ்தூல கட்டங்களையும் அளாவி முள்ளுக்கம்பியால் வளைத்திருக்கிறார்கள். அதற்கு அப்பால் 6 அடி உயரத்தில் கெட்டிக்கு சிமெண்டு காங்கிரீட் சுவர் எடுத்து அந்த சுவற்றின்பேரில் ஹைடென்ஷன் மின்சாரக்கம்பிகளால் தடங்கலுக்கு உபாயம் செய்திருக்கிறார்கள். அதற்கப்பால் மறுபடியும் முள்ளுக்கம்பி போட்டிருக்கிறார்கள். இந்தப் பாதுகாப்பு ஸ்தலங்களில் எப்பொழுதும் பாராச்செய்கிறார்கள்.

இராக்காலங்களில் அந்தத் துறைமுகத்திற்குள் நடக்கும் காரியங்களிலிருந்து அந்தத் துறைமுகத்தை நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு ஒரு தளமாக ஏற்பாடு செய்துவிட்டார்கள் என்பதற்கு மச்சங்கள் காணப்படுகின்றன.

சமீபத்தில் சேனாதிபதி வேகாண்டு சுற்றுப்பிரயாணம் செய்து பார்வையிட்டார். ஆனால் இந்த கஸாபிளாங்காப் பிரதேசத்தை பார்வையிடவில்லை. ஜெர்மானியர்கள் அவ்விடம் வியாபித்திருப்பது மறைக்கக்கூடாத காரியம். அவர் ஏன் இதை தன் பார்வையிலிருந்து ஒதுக்கிவிட்டார்.

**மர்மம் !**

சென்ற மார்ச்சு 22, 23 தேதிகளில் சேனாதிபதி வேகாண்டு மாராகேஷ் என்ற இடத்தில் தங்கியிருந்தபோது, அவ்வூரிலுள்ள ஜெர்மன் ராணுவங்கள் அப்பிரதேசத்தைச் சேர்ந்த மலைப் பிரதேசங்களுக்குள் மாயமாக மறைந்தது. அவைகள் "யுத்தப்பயிற்சி" என்ற வியாஜத்தால்தான் அவர் கண்களுக்குத் தென்படாமல் செய்துகொண்டது. மார்ச்சு மாதத்துவக்கத்தில் இதே சேனாதிபதி வேகாண்டு மொராக்கோவில் ஜெர்மானியர்களுக்கு யாதொரு ராணுவ தளங்களும் கிடையாது என்று ஒரு மறுப்புரை செய்திருந்தார்.

---

# மிதியடியின் கீழே.

---

## ஜெர்மானியர் தாங்கள் குடியேறிய நாடுகளை நடத்தும் விதம். அவர்களுடைய திரவிய ஸ்தானங்களை அதிகாரத்தோடும் கேட்டல்.

## "ஜனங்களுடைய சக்தியை தின்னும் யுத்தங்கள்."

ஜெர்மானியர் தாங்கள் குடியேறிய தேசங்களில் அடிக்கும் கொள்ளையைப்பற்றி டைம்ஸ் பத்திரிகை தான் பிரசுரித்த சமாசாரத்தைப்பற்றி வியாக்கியானம் செய்யும்காலத்து சொல்வதாவது :—

வெட்டுக்கிளிக் கூட்டங்கள் மேல கனடா (West Canada) புல் மைதானங்களில் இறங்கி அவைகளை பாலைவனம் ஆக்குதல்போல ஜெர்மானியர் தாங்கள்



நுழைந்த தேசங்களில் அவைகளின் செல்வத்தையும் இயற்கை வளப்பு செல்வம் முதலியவைகளையும் நாசம் செய்து அந்த தேசங்களை வறுமைக்கும் கொடிய துன்பங்களுக்கும் ஆளாக்குகிறார்கள். இது அவர்கள் பிரவேசித்த சில மாதங்களிலே நடக்கிறது. அவர்கள் நுழைந்தும், மிதமிஞ்சி உண்டு நாசம் செய்தும், சொத்துக்களை எடுத்துக்கொண்டும் போய்விட்டார்கள். இப்பொழுது அவர்கள் செய்த அட்டகாசத்தால் அந்த தேசங்களின் களஞ்சியங்கள் காலியாகி, ஒவ்வொருவருக்கும் ஆகாரத்தை அளந்து கொடுக்கவேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டது. ஆனால் ஜெர்மானியர்கள் வரும்பொழுது யாதொன்றும் கொண்டுவருவதில்லை. ஜெர்மனிக்கு உணவுப்பொருள்களையும், யந்திரம், எண்ணெய் வகைகள், மியூஸியங்களில் உள்ள உன்னதமான சாமான்கள், வித்தியாசாலை வஸ்துக்கள் இவைகளை எடுத்துக்கொண்டுபோகிறார்கள்." ஜெர்மானியர் கொள்ளையடிப்பதின் அளவே அவர்களுடைய பேராசையின் அளவைக் குறிக்கும்.

ஜெர்மானியர் நுழைந்த தேசங்களில் ஜனங்கள் சந்தோஷமாக இருப்பது என்பது மிகவும் துர்லபம். அப்படி இருப்பதற்கும் அசாதாரணமான தைரியம் வேண்டும். கொள்ளையடிப்பதுடன், வெறுக்கத்தக்கவிதமான உளவு பார்த்தலும், லெஞ்சம் கொடுப்பதும், ரகஸ்ய கைதுசெய்வதும், ஜனங்களை ஈடாக வைத்துக் கொள்ளுதலும், கோரமான தூக்கிடுதல் இவைகளும் சேர்ந்து, உயிர்வாழ்க்கையை நித்திரையில் நெஞ்சுக் கனதி உண்டாக்கும் நீண்ட இரவுகள்போல ஆக்கின்றது— நுழைந்த காலம் முதல் ஜனங்களின் நம்மை ஒடிக்கக்கூடிய விதமாக யுத்தமும் செய்யப்படுகிறது.

அச்சுநாட்டுடன் (Axis power) சேர்க்கப்பட்ட ஆல்சாஸ் (Alsace) என்னும் தேசத்தில் ஆண் பெண் அடங்கிய கூட்டம் ஒன்று தடுக்கப்பட்ட மத ஊர்வலத்தில் சில மாதங்களுக்குமுன் கலந்து கொண்டதற்காக அரஸ்ட் செய்யப்பட்டு லாரிகளில் கொண்டுபோகப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது முதல் மேற்படி ஆண் பெண்கள் இதுவரை யாதொரு ஆக்ஷேபகரமான வார்த்தையும் சொல்லவில்லை. அதுமுதல்கொண்டு அவர்களுடைய சொந்தக்காரர்கள் கைதுசெய்யப்பட்டவர்களுடைய பேப்பர்களும், சட்டையில் குத்திக் கொள்ளும் பின்களும் (brooches) பாக்கெட் புஸ்தகங்கள் இவைகளைப் பெற்றுக் கொண்டு கைதியானவர்களின் கதி என்ன ஆயிற்று என்பதை அவர்கள் நிர்ணயித்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. ஜெர்மானியர்கள், பிரான்ஸ், போலந்து தேசங்களின் செழிப்பான விவசாய பிரதேசங்களையும், செல்வமுள்ள கைத்தொழில் பிரதேசங்களையும் தங்களுடைய ஆட்சிக்குள்ளும் அதிகாரத்துக்குள்ளும் வரும் வண்ணம் பிரித்து எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும் தாங்கள் குடியேறிய ஆறு தேசங்களிலும் ஜனங்களை பாப்பர்கள் ஆக்குவதிலும், அவர்கள் ஜெர்மானியருடைய க்ஷேமத்திற்கு உழைக்கும்படிக்கு செய்வதிலும், முனைந்து வேலைசெய்து வருகிறார்கள்.

# கிரேக்கர்களின் ஊக்கம்.

(ஒரு ஞாபக விளக்கம்).

[கீழே வரைந்திருப்பது, இதாலிய-கிரேக்க யுத்தம் துவங்கினபொழுது பணி செய்வதற்கு முன் வந்த புத்திகூர்மையுள்ள, வாலிப கிரேக்கக் கட்டுக்கதை எழுதுகிறவர் எழுதிய கடிதத்தின் மொழிபெயர்ப்பு.

இந்தக் கடிதம் மார்ச்சுமீ 25 தேதியன்று—அதாவது, ஜெர்மானியர்களின் படையெடுப்பு தினத்தன்று—சுயேச்சையடையவேணுமென்று கிரேக்கர்கள் சண்டை துவக்கிய தினத்தின் 12-வது வருஷாந்திரக் கொண்டாட்ட தினத்தன்று—ஆதென்ஸிலிருந்து அனுப்பப்பட்டது.

இச்சமயம் கடிதம் எழுதியவர் காயமடைந்திருக்கலாம், அல்லது கைது செய்யப்பட்டிருக்கலாம், அல்லது பைத்தியம் பிடித்தவராயிருக்கலாம். ஆகிலும், அவருடைய அறிய சொற்கள், கிரேக்க வாலிபர்களின் ஊக்கத்தைப்பற்றி விஸ்தரிக்கின்றன. இந்த ஊக்கத்தின் மேன்மையை வெட்கமற்ற எதிரியானவன் ஒரு சமயம் உணரப்போகிறான். காலி செய்ததில் ரக்ஷிக்கப்பட்ட கிரேக்கத் துருப்புகளைத் தவிர, மத்தியக் கிழக்கு தேசங்களில் நம்முடைய படைகளோடு ராணுவப் பயிற்சி அடைந்துகொண்டு 50,000 வாலிப கிரேக்கர்கள் இருந்து வருகிறார்கள்].

"ஆதென்ஸ்.
25—3—41.

"அன்பார்ந்த.......

உங்கள் கடிதம் கிடைத்தபொழுதும் இங்கேதானிருந்தேன். நான் முற்றிலும் பயிற்சி பெற்றிருக்கவில்லை. நான் நினைக்காத வண்ணம் முன்னணிச் சண்டைக்கு லாயக்காகத் தயாரித்துக்கொள்ள வெகு நாட்களாயிற்று.

கிரீஸில் முக்கியமான ஒரு இடத்திற்கு எங்கள் ராணுவ வகுப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. கடைசி உத்தரவு எப்பொழுது வருமென்று பகலும், இரவும் நான் காத்துக்கொண்டிருக்கிறேன். இந்தக் கடிதம் உங்களுக்குக் கிடைக்கும்பொழுது நானும் மற்ற கிரேக்கர்கள் போல் யுத்தத்தில் கலந்துவிடுவேன்.

உங்களிடமிருந்து தகவல்கள் தெரிந்து கொள்ளுவதில் ரொம்பவும் ஆசை உண்டு. நீங்கள் சரியாகச் சொல்லுகிறீர்கள். நாங்கள் ரொம்பவும், நீண்டதும், கஷ்டமுமான நாழிகளைக் கழித்தோம். நாங்களே எதிர்பார்க்க முடியாதபடி குதூகலத்துடனும், அமைதியுடனும், நாங்கள் அந்தக் காலத்தை கழித்தோம். தேசமுழுவதும், வலுவானதும், ஒன்றுகூட்டக்கூடியதுமான நட்பு என்கிற உணர்ச்சியானது பரிபூர்ணமாயிருக்கிறது, யுத்த காலத்தில் நட்பு என்பது மிகவும் அழகான தன்மை!



கிரேக்கத் துருப்புகள் எவ்வளவு காம்பீர்யமுள்ளவர்களென்று உனக்குச் சொல்லுவது சிரம சாத்தியம். என்ன கல்வி, என்ன அழகு, என்ன மனுஷ்ய பாவம், என்ன வீரம், இவையெல்லாம் அவர்களுடைய மனோக்யமான அமைதியின் கீழ் மறைந்திருக்கின்றன. ஆதென்ஸிலிருந்து வந்த சிறுவர்கள் புத்திக்கூர்மையும், நல்லொழுக்கமுமுள்ளவர்கள். கிராமங்களிலிருந்து வந்த மனிதர்கள் தங்கள் ஓய்வு நேரங்களில் மற்றவர்களைத் தொந்தரவு செய்கிறார்கள். கலாசாலைகளிலிருந்து வந்த படிப்பாளிகள் யுத்தத்தின் போக்கைப்பற்றிய விவரங்களை தினசரி இடைவிடாது குறித்து வருகிறார்கள். சிறிய உத்தியோகஸ்தர்கள் தங்களுக்கு உண்டான பொறுப்பினால் திடிரென்று தேர்ச்சி பெற்றுவிட்டார்கள். இவைகளெல்லோரும் மனதைக் கவரக்கூடியவர்கள்.

நாங்கள் ஒவ்வொரு நாளும் பெரும் புயல் காற்று நாடி வருவதை எதிர்பார்க்கிறோம். அதற்கு அவசியமானவைகளை ரொம்பவும் அமைதியோடு செய்வோம். நாங்கள் சிலாகிக்கக்கூடிய விதமாக ஒரு யுத்தத்தைச் செய்வோமென்று நம்புகிறோம். இதைத் தவிர வேறு கவலை எங்களுக்கில்லை.

உங்களை மறு சமயம் பார்க்கும் பொழுது இன்னும் அநேகவற்றைச் சொல்லுவேன்.

உங்களுக்கு சந்தோஷமும், சுகமும் உண்டாகட்டும்.

ஜார்ஜ்."

---

# "ருடால்ப் ஹெஸ் (Rudolph Hess)."

ஹெஸ் நாட்டைவிட்டு ஓடியதை மறைக்க முதலிலேயே பெர்லின் ஒலிபரப்பு ஹெஸ்ஸுக்கு புத்தி மாறுட்டமாய் இருக்கிறது என்று கூறிற்று. "அவர் பலவருஷங்களாகவே வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தார். அவருக்கு புத்தியும் சற்று மாறுட்டமாயிருந்தது."

ஆனால் இப்படி புத்தி சரியாயில்லாதவரை அவர் ஊரைவிட்டு ஓடினவரை வேலையைவிட்டு நீக்கவில்லை. ஒரு மாதத்திற்கு முந்திதான் ஹிட்லரின் பிறந்த தினக்கொண்டாட்டத்தன்று ஹிட்லருக்கு வாழ்த்துச் செய்திகள் ரேடியோ மூலம் ஒலிபரப்பினார்.

ஏப்ரல் மாதம் 20-ம் தேதி யன்று அவர் சொன்னதாவது "நீங்கள் (ஹிட்லர்) ஜெர்மன் சர்வாதிகாரியானதிலிருந்து ஜெர்மானியர்கள் எப்பொழுதும் க்ஷேமமாகவும், கடவுளின் கிருபையால் சௌக்யமாகவும் இருந்து வருகிறார்கள். கடவுளின் கிருபை, ஜெர்மானியருக்கு எப்பொழுதும் நிரந்தரமாயிருக்கும்."

## குறிப்பிடத்தக்க புத்திமாருட்டமான பேச்சுக்கள்.

மேற்சொன்ன பேச்சு அவர் புத்திமாருட்டத்தினால்தான் பேசியிருக்க வேண்டும்! அவர் "பல வருஷங்களாக வியாதியால் பீடிக்கப்பட்டிருந்ததாக" சொல்லப்படும் சமயங்களில் அவர் பேசியிருப்பதிலிருந்து எடுத்த சிலவற்றை கீழே எழுதியிருக்கிறது.

**ஆகஸ்டு 30, 1937.**

"நம்முடைய மனதுக்கே துரோகமன்னியில் நாம் நிச்சயமாய்ச் சொல்லலாம். "நாஷனல் ஸோஷியலிஸம்" என்னும் தத்வத்தை நாங்கள் மற்ற தேசத்தினருக்கு விஷம் ஏறுவதைப்போல் கொஞ்சம் கொஞ்சமாக புகுத்த வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்குக் கிடையவே கிடையாது. அதைக்கட்டாயத்தின்பேரில் பிரதேசங்களில் பரவச்செய்யவும் போவதில்லை."

**ஸெப்டம்பர் 7, 1938.**

"ஹிட்லர் செய்வதெல்லாம் நியாயமானதுதான். அவர் செய்யும் ஒவ்வொரு காரியமும் கட்டாயம் செய்யவேண்டியதுதான். அவர் என்ன செய்தாலும், வெற்றியாகவே முடிப்பார். உதாரணமாக ஆஸ்திரியா (Austria) வில் வெற்றியுடன் திரும்பினார். இதெல்லாம் கடவுளின் அனுக்கிரகமில்லாமல் முடியவே முடியாது. நமது தலைவருக்கு கடவுளின் கடாக்ஷம் பூரணமாயிருக்கிறது."

**மே 1, 1940.**

"ஜெர்மானியர்கள் தங்களுக்குத்தான் ஜயம் என்று நிச்சயமாயிருக்கிறார்கள். நம் ஜெர்மன் மக்களினிடையே ஒற்றுமை இருக்கும் வரையிலும், ஹிட்லர் நமது தலைவராயிருக்கும் வரையிலும் முடிவு வெற்றி நம்முடையதுதான் என்பதைப்பற்றி சந்தேகமே வேண்டியதில்லை."

**டிஸம்பர் 25, 1940.**

"நம்முடைய சைனியங்களுக்கும், நமது விரோதிக்கும் நடுவில் இரும்பினாலும், கல்லினாலும் செய்த கோட்டைகள் இருந்தாலும்சரி, சமுத்திரம் இருந்தாலும்சரி இந்தச் சண்டையின் இறுதியில் ஜெர்மன் சைனியங்கள் தாங்களே வெற்றிபெறப் போகிறோம் என்று நிச்சயமாயிருக்கிறார்கள்."

இவைகள் தான் புத்திமாருட்டமாயிருக்கும் ஒருவரின் பேச்சு.

"ஒற்றுமை, ஒற்றுமை" என்று இம்மாதிரி பெருமை அடித்துக் சொல்லும் நயவஞ்சகக் கொள்ளைக்காரர்களின் உண்மையான மானக்கேடான ஸ்திதி என்ன? அவர்கள் கொலைக்காரர்கள், நயவஞ்சகம் செய்து நாட்டைவிட்டு ஓடுகிறவர்கள், புத்திமாருட்டமாய் திரிகிறவர்கள்.



# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### "உள்ளது வெளிப்பட்டுவிட்டது."

"பிரிடனில் ஜெர்மன் விமானங்கள் செய்யும் நாசத்தைவிட ஜெர்மனியில் பிரிடிஷ் விமானங்கள் செய்யும் நாசம்தான் அதிகம்" என்று பிரிடிஷ் ஒலிபரப்பு இலாகா ஒலிபரப்பியதாக பெர்லின் ரேடியோ அறிவிக்கிறது. மே மாதம் 6-ம் தேதியன்று "அம்மாதிரி சொல்வது சுத்த அதிகப்பிரசங்கித்தனம்" என்று சீறி விழுந்தது. ஜெர்மனியிலிருந்து வெளிவரும் அறிவிப்புகளில் இது மிகவும் முக்கியமானது. இதன் முக்கியத்வம் இது பொய் என்பதினாலல்ல—ஏனென்றால் ஜெர்மன் ஒலிபரப்பு இலாகாத் தலைவர் கோயபல்ஸ் பிறர் சொல்வதை தனக்கு சாதகமாக மாற்றிச் சொல்வதில் மஹா கெட்டிக்காரர், அவருக்கு இது புதிதல்ல. ஆனால் இதில் ஒரு பெரிய உண்மை வெளிப்பட்டுவிட்டது. ஜெர்மனியில் பிரிடிஷ் விமானப் படையெடுப்பு வரவர அதிகமாய்க்கொண்டு வருவதில் நாஸிகளுக்கு கலவரமேற்பட்டிருக்கிறது என்று தெரிகிறது.

ஆனால் ஒரு விஷயம். ஜெர்மன் ரேடியோ அறிவித்தது பொய் என்று சொல்லவே வேண்டியதில்லை. பிரிடிஷ் ஒலிபரப்பு இலாகாவோ, பிரிடிஷ் அதிகாரிகளோ பிரிடனில் விட ஜெர்மனியில் தான் விமானப் படையெடுப்பால் சேதம் அதிகம் என்று சொன்னதில்லை. "ஜெர்மனிக்குத் தான் விமானங்கள் எண்ணிக்கையில் அதிகம். ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் நாடுகளில் இருக்கும் விமான நிலயங்களால் ஜெர்மனிக்கு மிகவும் சௌகர்யம். ஆனால் ஜெர்மனி இம்மாதிரி ஒலிபரப்பியதிலிருந்து ஒரு விஷயம் வெளியாகிறது. ஜெர்மன் விமானிகள் காட்டுமிராண்டித்தனமாக குறியில்லாமல் குண்டுகள் போட்டு அதனால் பிரிடனுடைய யுத்த காரியங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இடைஞ்சலைவிட பிரிடிஷ் விமானிகள் குறி தவறாமல் போடும் குண்டுகள் ஜெர்மனியின் யுத்த தளவாட உற்பத்திக்கு அதிக நஷ்டத்தை விளைத்திருக்கவேண்டும்.

### பெரிதானதும், அதிக சக்தி வாய்ந்ததுமான பிரிடிஷ் வெடி குண்டுகள்.

இதுவரையில் வெளியிடப்படாவிட்டாலும் ஒன்று நிச்சயம். பிரிடனில் வெகு சமீபத்தில் நூதனமாகக் கண்டுபிடித்து உற்பத்தி செய்யப்பட்டிருக்கும் வெடிகுண்டுகள் இதுவரையில் விரோதிகள் உபயோகித்து வந்திருக்கும் வெடிகுண்டுகளைவிட மிக அதிகச் சக்திவாய்ந்தவை. இது பின்வரும் சமாசாரங்களினால் ருஜுப்படுத்தப்படுகிறது.

1. போனமாதம் பெர்லின் (Berlin)ல் பிரிடிஷ் விமானப் படையெடுப்பால் ஏற்பட்ட அதிகச் சேதத்தால் ஜெர்மன் அதிகாரிகளுக்கு வந்த கோபம்.

2. அடிக்கடி பிரிடிஷ் விமானங்கள் சென்று படையெடுத்து சேதத்தை விளைவித்துவரும் இடங்களில் ப்ரெஸ்ட் (Brest) துறைமுகம் ஒன்று. அங்கு

கப்பல் துறைகளில் வேலை செய்யும் ஆட்களில் கல்யாணமானவர்களுக்கு கப்பற் படை இலாகத் தலைவர் அட்மிரல் டார்லான் (Admiral Darlan) அளித்த வெகுமதி (உண்மையில் அங்கு வேலை செய்பவர்களுக்கு ஆபத்து அதிகமாகையால் லஞ்சம்).

3. ஹாம்பர்க் (Hamburg), கீல் (Kiel), ப்ரமன் (Bremen), எம்டன் (Emden), முதலிய இடங்களில் ஏற்பட்ட பிரமாதமான சேதத்தை ஜெர்மன் அதிகாரிகள் எவ்வளவோ முயன்றும் மறைக்க முடியவில்லை.

4. கடைசியாக மிகவும் முக்கியமானது போன வாரத்தில் ஹிட்லர் வாயாலேயே வெளியானது. "யுத்த தளவாடம் தயார் செய்வது என்கிற மிகக்கஷ்டமான வேலையில் ஜெர்மன மக்கள் அனைவரும் வந்து சேரவேண்டும்" என்று கூறினர். இவைகளையெல்லாம் சேர்த்துப்பார்த்தால் 1940-ம் வருஷத்தைவிட இவ்வருஷத்தில் ஜெர்மன் யுத்த காரியங்களுக்கு பிரிடிஷ் விமானங்கள் கொடுக்கும் உதை சரியான உதை என்று தெரிகிறது.

**ஒரு பிரமாதமான ஜயம்.**—(அச்சு நாடுகளுடைய மனக்கோட்டையில்) மே மாதம் 8-ந்தேதி மேற்கு மத்தியதரைக்கடலில் (Mediterranean) அச்சு நாடுகளுடைய விமானங்கள் பிரிடிஷ் துணைக்காவலுடன் கூடிய கப்பற்படையை தாக்கின. அதைப்பற்றி இதாலி ஒரு யுத்த அறிக்கை ஒன்று வெளியிட்டிருந்தது. மே மாதம் 10-ந்தேதியன்று அதை நிஜமா பொய்யா, என்று கூட தெரிந்து கொள்ளாமல் ஜெர்மன் ஒலிபரப்பு மூல்யமாய் அதை வாசித்தார்கள். இந்த பொய்யின் படி "கப்பல்களுக்கு துணைக்காவலாகஇரண்டு யுத்தக்கப்பல்கள், ஒரு விமானம் ஏற்றிச் செல்லும் கப்பல், சரியான படி எண்ணிக்கை தெரியாத க்ரூயிஸர் கப்பல்கள், நாசகாரிகள் சென்றன."

ரோமி (Rome)-ல் வெளியிடப்பட்ட யுத்த அறிக்கையின்படி பெர்லினி (Berlin)லிருந்து வெளியானது "பிரிடிஷ் யுத்தக் கப்பல்களை முதன் முதலில் இதாலிய டார்பிடோ (Torpedo) குண்டுகள் ஏற்றிச் செல்லும் விமானங்கள் (சண்டை விமானங்கள் புடைசூழ) தாக்கின. இரண்டு க்ரூயிஸர் கப்பல்கள், ஒரு நாசகாரி, ஒரு பெரிய கப்பல் இவைகள், டார்பிடோ, குண்டுகளுக்கு இலக்காயின. பிற்பாடு இதாலிய வெடிகுண்டெறியும் விமானங்கள் ஒரு யுத்தக் கப்பல், ஒரு விமானம் ஏற்றிச்செல்லும் கப்பல், இரண்டு பெரிய கப்பல்கள் இவைகளின் மேல் குறிதவறுமல் குண்டுகளை வீசின. அதற்கும் பிற்பாடு டார்பிடோ குண்டுகளை வீசும் விமானங்கள் மறுபடியும் திரும்பிவந்து மற்றொரு பெரிய யுத்தக் கப்பலையும், விமானங்கள் ஏற்றிச்செல்லும் கப்பலையும் பழுதாக்கின. இதாலிய யுத்த விமானங்களுக்கும், பிரிடிஷ் யுத்த விமானங்களுக்கும் நடந்த சண்டையில் டிபயண்ட் (Defiant) ஹரிகேன் (Hurricane) ரகங்களைச் சேர்ந்த 14 பிரிடிஷ் விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 5 இதாலிய விமானங்கள் நிலயம் திரும்பிவரவில்லை. மூன்று இதாலிய விமானங்களுக்குச் சிறிது சேதம். மற்றும் 3 பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மன் விமானங்களால் சுட்டுத் தள்ளப்பட்டன".



இந்த அதி அற்புதமான கற்பனு சக்தியால் எழுதப்பட்ட கதையின்படி இருதரப்பின் நஷ்டங்களும் பின்வருமாறு:—

**பிரிடிஷ்:**—இரண்டு பெரிய யுத்தக்கப்பல்கள்:
ஒரு விமானமேற்றிச் செல்லும் கப்பல்.
ஒரு நாசகாரி.
குண்டுகளாலோ, டார்பிடோ குண்டுகளாலோ சேதமான மூன்று வியாபாரக் கப்பல்கள்.
17 விமானங்கள் நாசமாயின.

**இதாலிக்கு:**—5 விமானங்கள் நாசமாயின;
மூன்று விமானங்கள் சேதமாயின.

வழக்கப்படி பிரிடிஷ் கப்பல் இலாகா அறிக்கை சிலநாட்கள் கழித்துத் தான் வெளிவருமென்று நினைத்து பெர்லின் தன்னுடைய கூட்டாளியின் கற்பனுசக்தி அறிக்கையை வெளியிட்டுவிட்டது. துரதிருஷ்டவசத்தால் அன்று இரவே பிரிடிஷ் கடற்படை இலாகாவின் அறிக்கை வெளிவந்துவிட்டது. "மேற்கு மத்தியதரைக்கடலில் (Mediterranean) ஜெர்மன், இதாலிய விமானங்கள் பிரிடிஷ் யுத்தக்கப்பல்களை மே மாதம் 8-ந்தேதி தாக்கின. ஒரு பிரிடிஷ் கப்பலாவது சேதமாகவில்லை. 7 எதிரி விமானங்கள் நாசமாயின. 2 பிரிடிஷ் விமானங்கள் நாசமாயின. அதில் ஒரு விமானி தப்பிப்பிழைத்தார்". ஒலிபரப்புவதால் மட்டும் பிரிடிஷ் கப்பல்களை மத்தியதரைக்கடலில் செல்வதை நிறுத்தமுடியாது. செய்கையால் மட்டும் முடியுமே ஒழிய, வாய்ப்பேச்சால் ஒரு நாளும் முடியவே முடியாது.

## ஜெர்மானியர் நீதியும், அமைதியும் அளிக்கப்போகிருர்களாம்.

மே மாதம் 7-ந்தேதியன்று ஜெர்மன் ஒலிபரப்புமூலம் கோயபல்ஸ் மகா கேவலமான ஒரு சங்கதியை வெளியிட்டார்.

"வெடிகுண்டுகளால் நாசமான பெல்கிரேட் (Belgrade) நகரத்திற்கு ஜெர்மன் சைனியங்கள் நீதியும், அமைதியும் அளிக்கிருர்கள். மின்சாரவசதிகள், தண்ணீர்வசதிகள் எல்லாம் முன்போல் சரியான நிலைமைக்கு வந்துவிட்டன" என்று பெருமை அடித்துக்கொண்டனர்.

அவர் மேலும் சொன்னதாவது "எப்படி ஜெர்மன் சைனியம் மின்னல்போல் வேகமுள்ள சண்டையை சரியானபடி வெற்றிகரமாகநடத்துமோ, அதேமாதிரி அவ்வளவு சீக்கிரத்தில் நாட்டில் அமைதியும், நீதியும் நிலவும்படி செய்வார்கள்".

ஆனல் ஜெர்மானியர்கள் ஒன்று மறந்து விட்டனர்கள் போலும், அவர்களால் ஒன்று மாத்திரம் முடியவேமுடியாது. அது என்னவென்ருல் ஏப்ரல் மாதம் 6, 7 தேதிகளில் ஹிட்லரின் சுழல் விமானங்களில் மாண்ட 30,000 ஆண், பெண், குழந்தைகளுடைய உயிர்களை மாத்திரம் அவர்களால் திரும்ப வரவழைக்க முடியாது.

## B.—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

### ரஷீத் ஆலிக்கு முஸ்லீம் ஆதரவு இல்லை.

இராக்கில் பிரிடிஷார் தற்காப்புக்காக எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளில் முஸ்லீம்களுக்கு ஏகமனதாக எதிர்ப்பு ஏற்பட்டிருப்பதாகவும், பிரிடிஷாருக்கு விரோதமாக ஒவ்வொரு ஊக்கமான முஸல்மானும் சண்டைபோட வேண்டும் என்று இந்திய உலேமாக்கள் பாத்வாக்களை அனுப்பி இருப்பதாகவும் நம்பச் செய்யவேண்டுமென்று நாஸிகள் கவலை கொண்டிருப்பதாக மேமீ 7வ ஹிந்துஸ்தானியிலும், பாரஸீகத்திலும், மேமீ 6வ அராபியிலும் நாஸிகள் ஒலி பரப்பியதின் மூலம் தெரியவருகிறது. ஆனால் நடப்பு என்னவென்றால் இஸ்லாமிய நன்மைக்கு முற்றிலும் விரோதமாகவே ரஷீத் ஆலி இராக்கில் துரோகச் செய்கைகள் செய்து இருப்பதாகவும் இந்தியாவில் மட்டுமல்ல உலகமெங்கும் முஸல்மான்கள் கண்டித்து வருகிறார்கள் என்பது நடப்பு.

உதாரணமாக யேனிஸபா என்னும் துருக்கி பத்திரிகையில் "தங்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் தலைமைக்காரர்களை இராக்கியர்கள் தொலைக்க வேண்டு" மென்றும், வாதன் பத்திரிகையில் "இப்போது இராக்கில் தலைமை கொண்டாடுபவர்களால்தான் அங்கேயுள்ள சம்பவங்கள் நடந்திருக்கின்றன, அவர்கள் இராக்கைக் காண்பித்துக் கொடுத்துவிட்டார்கள்" என்றும் கூறுகின்றன.

ரஷீத் ஆலிக்கும் அவருடைய ஜண்டாக்களுக்கும் எகிப்து பத்திரிகைகளும் அதேபோல் விரோதமாக இருக்கின்றன. இபின் ஸாத் அரசனும், மற்ற அராபிய தலைவர்களும் ரஷீத் ஆலியின் செய்கைகளையும், அவர்கள் அச்சுதேசப் பொன்னுக்கு ஆசைப்பட்டு இராக்கின் நன்மையை தாரைவார்த்துவிட்டது. அராபிய நாடெல்லாம் பயங்கரத்தை உண்டாக்கி இருப்பதாகவும் ஆல்மோகட்டம் வெளிப்படுத்தி இருக்கிறது. அதே மூச்சாக, ஆல் ஆரம் என்றும் மற்றொரு எகிப்து தேசப் பத்திரிகையும், ரஷீத் ஆலி என்ன, அவருடைய நான்கு தளகர்த்தர்களென்ன இவர்கள் அச்சு நாட்டுக்கு தங்களை விற்றுக்கொண்டு கையாளும் முறைகளால் இராக் தேசத்தவர்களுக்கே துக்கம் விளைவிப்பது ஒழுங்கல்லவென்று தெரிவிக்கிறது. இராக்கிற்கு பூரண சுதந்திரம் கிடைக்கப்பெற்றிருந்தது என்றும், ராஜ்ஜியத்தைத் தலைகீழாகக் கவிழ்த்த காலத்திலும் உள்நாட்டு செய்கைகளில் பிரிடன் தலையிடுவதில்லை என்றும் அந்த பேப்பர் அறிவுறுத்துகிறது.

### இந்திய அபிப்பிராயம்.

இவ்விஷயத்தில் இந்திய முஸ்லீம்களும் சந்தேகப்படாமல் அபிப்பிராயம் கூறியுள்ளனர். (நாஸிகள் சந்தோஷத்துடன். எதிர்பார்ப்பது போல்) பிரிடிஷாருக்கு விரோதமாக பாத்வாக்கள் எழுதப்படாதது மட்டுமன்றி வடமேற்கு எல்லை மாகாணத்தின் பிரமுகமான மதத் தலைவர்களில்; ஒருவர் ரஷீத் ஆலியின்



செய்கைகளைக் கண்டித்து ஒரு தந்தி அனுப்பி இருக்கிறார். ஏஹ்ஸான் என்னும் ஒரு லாகூர் முஸ்லீம் பத்திரிகையில் "ஜெர்மனியுடன் எந்த முஸ்லீம் நாடும் அனுதாபப்பட முடியாதென்றும் இராக்கில் ஜெர்மானியர் அடிவைத்தால் என்ன விளையுமென்று இராக் ஜனங்களுக்கு எச்சரிக்கவேண்டுமென்றும்" எழுதப் பட்டிருக்கிறது. மதருஸ் யுனிவர்ஸிடி வைஸ்-சான்சலரான ஸர். மகம்மது உஸ்மான், மதருஸில் மேமீ 8உ பேசுகையில் "நாஸி சேவகத்தில் ஊதியம் பெறும் கீழறுப்பாளர்கள், கேவலம் பணம் ஒன்றே பெரிதென்று எப்பக்கமும் சேரக் கூடியவர்கள் வெகுநாட்களாக பொல்லாப்புச் செய்ததன் முடிவாகவே இராக்கின் நிலைமை ஏற்பட்டுவிட்டது என்பது எனக்குத் தெளிவாகத் தோன்றுகிறது. கிரேட் பிரிடனின் அனுதாபமும் ஆதரவும் இல்லாவிட்டால் இராக் என்ற தேசமே தோன்றியிருக்காது" என்று சொன்னார்.

நாஸிகள் எதை பிரிடன் தாக்ஷண்யமின்றி இராக்கை எதிர்த்து விட்டதென்று சொல்லுகின்றார்களோ அது சரியான கண்கொண்டு பார்த்தால் எப்படி இருக்கிறதென்று இஸ்லாம் நாடுகளில் இவ்வாறு தெரிவிக்கிறார்கள். இஸ்லாம் மதசம்ரக்ஷகராக ஜெர்மானியர்கள் தோன்றிஇருப்பதாக ஜெர்மானியர்கள் பெருமை பேசுவதும் இப்படியே ஆதாரமற்றது. லிபியாவில் முஸல்மான்களை ஒன்றுக்குப் பத்தாகக் கண்டதுண்டமாக்கி, ஸென்னூஸியை துரத்தி, அல்பேனியாவென்ற முஸல்மான் ராஜ்ஜியத்தைப்பிடித்துக்கொண்ட இதாலியர்களைவிட அவர்களுடன் குற்றத்தொழிலில் தோழமைபூண்ட ஜெர்மானியர்கள் அவர்களுக்குமிஞ்சி திருவதாகாஸ்பம் இல்லாமல் இருப்பார்களே ஒழிய வேறுவிதமாக இருக்கமாட்டார்களென்று முஸல்மான்களுக்குத்தெரியும். நியூயார்க் பத்திரிகையில் சரியாகச் சொன்னார்கள் "தம் கைகளில் 14-தேசங்களின் ரத்தம் தோய்ந்துஇருக்க இஸ்லாமிய மதத்தவர்களைத் தங்களுடன் தர்மயுத்தம் புரியும்படி அழைக்கிறானே அந்தச்சண்டாளனுடைய தோற்றத்தைவிட இந்தயுத்தத்தில் விபரீதத்தோற்றம் வேறெதுவும் இல்லை."

### பிரிடனும் எகிப்தும்.

மே-மீ 4-ம் தேதி ஒலிபரப்பப்பட்ட தப்புவழிகாட்டும் நாஸி வாக்கியத்தில் எகிப்து தேசத்தை பிரிடன் அமர்க்களம் ஆக்கிக்கொண்டதென்றும், பிரிடிஷாருக்கு ஏற்பட்ட செலவை எகிப்து கொடுக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தி விட்டதாகவும் காணப்பட்டது. நடப்பென்னவென்றால் யுத்தம் ஏற்பட்டால் பிரிடிஷ் கவர்ன்மெண்டார் எகிப்து தேசத்தைப் பாதுகாக்க வேண்டுமென்றும் எகிப்து தேச கவர்ன்மெண்டாரும் தங்களால் இயன்ற ஒத்தாசையை அளிக்க வேண்டுமென்றும் ஆங்கில-எகிப்து ஒப்பந்தம் கூறுகிறது.

பிரிடிஷாருக்கு ஏற்படும் செலவை எகிப்து கொடுக்குமென்று நாஸிகள் சொல்லுவது ஆதாரமற்றது. எகிப்து தேசம் செல்வம் படைத்தது. சென்ற வருஷம் எகிப்து தேசத்தில் விளைந்த பருத்தியில் மூன்றில் ஒரு பாகம் மட்டுமே கிரேட் பிரிடனுக்குத் தன் உபயோகத்திற்கு தேவையாக இருந்ததென்றும் பாக்கி

பருத்தியை சேமித்துவைப்பதிலும் விற்பதிலும் கஷ்டம் அதிகம் இருந்திருக்குமென்றும் ஞாபகத்தில் வைத்துப்பார்த்தால், நம்முடைய நேசதேசத்திற்கு ஒத்தாசை செய்வதைவிட வேறு எண்ணம் கிரேட்பிரிடனுக்கு இருந்திராது என்பது யாரும் சொல்லுவார்கள்.

## சமாதான குரு.

மேமீ 5உ ஹிந்துஸ்தானியிலும் பாரஸீகத்திலும் ஒலிபரப்புவதற்கு டாக்டர் கோயபல்ஸ், "அமைதியும் ஒழுங்கும் நிலைநாட்டத்தோன்றிய மஹா குருவானவர் ஹிட்லர்" என்று ஒரு அமெரிக்க வர்த்தமான ஏஜன்ஸி சொன்னதாக தேடிப்பிடித்துவிட்டார். 1936-ம்வருஷம் ஜனவரிமீ 30உ ஹிட்லரே உலகத்திற்கு தெரிவித்து தேசங்களுக்குள் சமாதானம் விரும்பும் தேசமாக இருக்கவேண்டுமென்பதே எனக்கு ஆசை. அதை அடிக்கடி திருப்பிச் சொல்ல வேண்டுமா? அது போகட்டும். தாம் அதிகாரத்திற்கு வந்த பிறகு அடுத்த 14 தேசங்களை எதிர்த்ததும் போதாதென்று நாஸிகளுடன் சமாதானம் ஏற்பட வேண்டுமானால் என்ன நிலைமை ஏற்பட வேண்டுமென்று அவரே தெரிவித்துள்ளார். மெயின் காம்பில் அவர் இதை விஸ்தரிக்கையில் சொல்லுவது "மானிடப்பூண்டில் எல்லாவற்றிற்கும் மேலானது மற்றவற்றை கீழே அமுக்கிக்கொண்டு ஓங்கி வளர்ந்து தாமே உலகமெங்கும் தலைமையாய் நின்றால், காருண்யமும் சமாதானமும் என்ற எண்ணம் தோன்றுவது மிகவும் பொருத்தமாக இருக்கும்.



# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

---

## பிரஸங்கம் XLV.

1941—

| | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| மே | ...24, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 25, | ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி ... | ,, | 6.00 |
| | | | ராசியமங்கலம் ... | ,, | 6.30 |
| | 26, | திங்கட்கிழமை ... | குழிபிறை ... | ,, | 6.00 |
| | | | சுந்தரம் ... | ,, | 6.30 |
| | 27, | செவ்வாய்க்கிழமை. | கோட்டைக்காடு ... | ,, | 6.00 |
| | | | காரம்பக்குடி ... | ,, | 6.30 |
| | 28, | புதன்கிழமை ... | பிலியூர் ... | ,, | 6.00 |
| | | | கண்ணன்குடி ... | ,, | 6.30 |
| | 29, | வியாழக்கிழமை. | அன்னவாசல் ... | ,, | 6.00 |
| | | | கீழக்குறிச்சி ... | ,, | 6.30 |
| | 30, | வெள்ளிக்கிழமை... | வாளரமாணிக்கம் ... | ,, | 6.00 |
| | | | ஏம்பல் ... | ,, | 6.30 |

## பிரஸங்கம் XLVI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மே | ...31, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| ஜூன் | ... 1, | ஞாயிற்றுக்கிழமை. | நீர்ப்பழனி ... | ,, | 6.00 |
| | | | ஆலூர் ... | ,, | 6.30 |
| | 2, | திங்கட்கிழமை ... | காரையூர் ... | ,, | 6.00 |
| | | | கீழத்தானியம் ... | ,, | 6.30 |
| | 3, | செவ்வாய்க்கிழமை. | அண்டக்குளம் ... | ,, | 6.00 |
| | | | கிள்ளனூர் ... | ,, | 6.30 |
| | 4, | புதன்கிழமை ... | நார்த்தாமலை ... | ,, | 6.00 |
| | | | உப்பிலியக்குடி ... | ,, | 6.30 |
| | 5, | வியாழக்கிழமை ... | செம்மட்டிவிடுதி ... | ,, | 6.00 |
| | | | மழையூர் ... | ,, | 6.30 |
| | 6, | வெள்ளிக்கிழமை... | கொன்னையூர் ... | ,, | 6.00 |
| | | | மேல வேகுபட்டி ... | ,, | 6.30 |

புதுக்கோட்டை ஸமஸ்தானம்

யுத்த நிதிக்காக போடப்படும்

# அதிர்ஷ்டச் சீட்டு.

(ஸ்ரீ-தர்பாரவர்கள் உத்தரவின்பேரிலும் ஆதரவின் பேரிலும் புதுக்கோட்டை யுத்தநிதி எண்டெர்டெயின்மெண்ட் கமிட்டியாரால் நடத்தப்படுகிறது.)

## இந்த யுத்த நிதியை ஆதரியுங்கள்

டிக்கெட்டுகளை வாங்குங்கள்

**முடிவு தேதி 15—6—41**

**சீட்டு குலுக்கும் தேதி 23—6—41**

நமது மன்னர் அவர்களின் வருஷவர்த்தனை தினத்தன்று அதிர்ஷ்டசாலிகளுக்கு ஏராளமான பரிசுகள்.

**300 பரிசுகள்.**

| | | |
|---|---|---|
| 1-வது பரிசு | ரூபாய் 7,500 | |
| 2-வது பரிசு | ,, 5,000 | |
| 3-வது பரிசு | ,, 2,500 | |
| 2 பரிசுகள் | ,, 1,000 | விதம் |
| 5 ,, | ,, 500 | ,, |
| 90 ,, | ,, 100 | ,, |
| 100 ,, | ,, 50 | ,, |
| 100 ,, | ,, 15 | ,, |


Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—25-5-41.


புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் வருஷம் மேமீ 31உ [ந. 46.


பிரஸங்கம் XLVI.

## ஐந்தாம்படை கீழ்திசை நோக்கி நகர்கிறது.

ஹிட்லருடைய ஐந்தாம்படை நிபுணர்களின் செய்கைகள் சகஜமாக பேசப்படுபவையானாலும், அவற்றில் புதியதான ஒவ்வொன்றும் பொதுமக்களுக்கு தொந்தரவைக்கொடுத்து கிலேசத்தை உண்டாக்கக்கூடியதாகவும் ... ஹிட்லருடைய ஐந்தாம்படை நிபுணர்களின் செய்கைகள் சகஜமாக பேசப்படுபவையானாலும், அவற்றில் புதியதான ஒவ்வொன்றும் பொதுமக்களுக்கு தொந்தரவைக்கொடுத்து கிலேசத்தை உண்டாக்கக்கூடியதாகவும் இருக்கிறது.

ஐந்தாம்படையின் கொப்பும் கிளைகளும் எங்கே அளாவிச் செல்கின்றனவென்பதையும், எவனுக்கும் அவனுக்குள்ள மதிப்புண்டென்னும் பழைய மொழியில் அவர்களுக்குள்ள குறும்பான நம்பிக்கையையும் காட்டுகிறது. அந்த நம்பிக்கைக்கு கொஞ்சமும் ஆதாரமில்லாமல் போகவில்லை. என்றாலும், நல்லவேளையாக ஜெர்மானியர்கள் மறுமுறையும் மனோபாவத்தை அறிவதில் தவறிவிட்டார்களென்பதும், முந்தின சில காரியங்களில் பிரிடிஷ் அதிகாரிகள் கண் அயர்ந்துவிட்டதுபோல இந்த விஷயத்தில் அவர்கள் கண்மூடிக்கொண்டிருக்கவில்லை என்பதும் சம்பவங்களிலிருந்து தெரியவருகிறது. இதைப் பற்றி பிற்பாடு விவரிப்போம்.

முஸ்லீம் லக்ஷியக்கொள்கைகளுக்கும், பொதுவுடமைக் கொள்கைகளுக்கும் அடிப்படையான விரோதமிருக்கிறது என்பதை அறியாதவர்களாய் (அவர்களுக்கு மனோபாவம் அறிவதென்ற விஷயம் பூஜ்யமாகையால்) இரான், இராக் இவைகளிலுள்ள எண்ணெய்ச் சுரங்கங்களிலேயே நோக்கமாய் அச்சு நாடுகள் இருந்துவிட்டன. எகிப்திலிருந்து துருக்கி வரையிலும், பாலஸ்தீனத்திலிருந்து இந்தியா வரையிலும் வியாபித்திருக்கும் முஸல்மான் நாடுகளுக்கும் பிரிடனுக்கும் பிரிடிஷ் நோக்கங்களுக்கும் இருந்து வரும் ஒற்றுமைப் பான்மையைக் கவிழ்க்க அச்சு நாடுகள் விரும்புகின்றன. சில இராக்கி உத்தியோகஸ்தர்களுக்குக் கைக்கூலி கொடுத்தும் பாஸ்ரா பாக்தாத், மோஸுல் ஆகிய இடங்களில் கடைவீதியில் பிரிடிஷுக்கு விரோதமான பிரசாரத்தை ஒருங்குபடுத்தியும், அவர்கள் பூலோகத்திலுள்ளவர்களுடைய மனதைக் கலைத்து, அநேக முறையிலுள்ள முஸல்மான் நாட்டின் குறல்வளையை பிரிடிஷ் ஏகாதிபத்தியக்காரர்கள் பிடிப்பதாக நம் காண்பிக்க முயற்சி செய்கிறார்கள்.

அவர்கள் நினைத்தபடி அந்தத் தோற்றம் புலப்படாமல் போனாலும், ரஷீத் ஆலியின் கலகம் புகைச்சலுடன் நின்று கொண்டது என்றாலும், Mr. வின்ஸ்டன் சர்ச்சில் காமன்ஸ் சபையில் சொன்னது போல, பிரிடிஷாருக்கு விரோதமாக முஸல்மான் ஆத்திரத்தை எவ்வளவேனும் கொந்தளிக்கவைத்தால் அது உப்புப் புளிக்காவது ஆகாதாவென்று அவர்களுடைய எண்ணம். அதனால் தான் இராக்கி சிப்பாய்கள் பெருவாரியாக உயிர் இழக்கவும், அவர்களின் விமானப்படை அற்றுப் போகவும் நேர்ந்தது! யார் என்ன சொன்ன போதிலும் பிரிடிஷார் யாதொரு முஸ்லீம் அதிகாரத்துடனும் சண்டை போடவில்லை. (சென்ற 44-ம் அறிக்கையில் உள்ள யுத்தக் குறிப்பைப் பார்த்தால்) பிரிடன், தனக்கு ஒப்பந்தப்படிக்கு ஏற்பட்ட உரிமைக்கு சற்றும் மாறுபட்டமில்லாமல், தனக்கு நேசமான துருக்கி எகிப்து என்ற இரண்டு முஸ்லீம் நாடுகளுக்கும் பரஸ்பரமாக போக்கு வரவு சாதனங்களை நிலை நிறுத்திக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறது. அச்சு நாடுகளிடம் கைக்கூலி பெற்று அடிமைப் பட்டிருப்பவர்களும் கீழ் பாகத்திலுள்ள முகமதிய நாடுகளை ஜெர்மனிக்கு விற்றுவிட நினைப்பவர்களும் குவிஸ்லிங்கை ஒத்தவர்களுமாகிய சிலர் வேண்டுமென்றே பிரிடனைத் தாக்கி இருக்கிறார்கள்.



ஹபானியில் இருந்த சாம்ராஜ்ஜியத் துருப்புகளின்மீது சுடும்படி இராக்கிய துருப்புகளுக்கு ரஷீத் ஆலி கலியானி உத்தரவிட்டதைப்போல் நாம் இதுவரை கண்டறிந்த, ராஜீயக் காரியங்களில் கொடுமையான நன்றிகெட்ட செய்கைகள் வெகு சிலவே இருந்திருக்கின்றன. நெபுஸத் நெஸார் காலம் முதல் சென்ற இருபது வருஷ காலத்திற்குள் பிரிடிஷ் பெருந்தன்மையின் கீழ் இராக்குக்கு ராஜ்ஜிய அந்தஸ்து கொடுக்கப்படும் காலம்வரையில் அந்த நாட்டுக்கு சுயேச்சை என்ற நாமதேயமே தெரியாது. அதன் சேனைக்கு பயிற்சி அளித்தது பிரிடிஷ் உத்தியோகஸ்தர்கள். அதற்கு தண்ணீர், எண்ணெய் முதலிய ஆதாரங்களை அபிவிருத்திசெய்து கொடுத்ததும் பிரிடிஷாருடைய பிரயத்தனமே. இதனால் அந்நாட்டிற்கு விளைந்த வியாபார மேம்பாட்டிற்கும் செல்வ வளமைக்கும் பிரிடிஷாரே காரணம். அந்நாடு தற்காப்புக்குக்கூட வகையறியாமல் தளர்வுற்று இருந்த காலத்தில் அதைப் புறங்காத்து வளர்த்து வந்ததும் பிரிடிஷாருடைய ராஜ்ஜிய தூத நிபுணத்துவத்தாலேயே. அந்த நாடு அமைதியுள்ளது. அதை எங்கே அச்சுநாடுகள் பயமுறுத்திவிடுமோவென்று அதைப் பாதுகாப்பதற்காக ஒன்றிரண்டு மாதங்களுக்கு முன்னால்தான் நாம் முன்பின் ஆராய்ந்து வேண்டுமென்றே சேனைகளை அனுப்பி உதவினோம். அப்படியிருக்க கைசுத்தமில்லாதவனும் துணிவுகாரனுமான இவன், தன்னைச்சூழ்ந்த தன்வயமான சில ராணுவ சகாயத்தைத் துணைகொண்டு பெர்லினிலிருந்து உத்தரவும்—கைக்கூலியும்—பெற்றுத் தன்னைப்பெற்று வளர்த்த கையைத் தானே கடிக்கின்றான். துருக்கியிலும், இரானிலும், எகிப்திலும் அவனை இடித்துப் பேசுகிறார்கள். பாலைவனத்தில் அந்தஸ்துள்ள ஷேக்குமாரெல்லாம் அவனை விட்டோமா பாருங்கள் என்று சதி செய்கிறார்கள். தெற்கு மெஸபடோமியாவில் அவனைப்பற்றிய அபிப்பிராயம் அவனுக்கு முற்றிலும் விரோதமானது.

இதிலிருந்து நாமறிந்துகொள்ளவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. எகிப்து, துருக்கி, டிரான்ஸ் ஜோர்டானியா முதலிய முஸ்லீம் நேசதேசங்களுடன் போக்குவரத்து வைத்துக்கொள்ளவும் அவர்களைப் பின்தாங்கி ரக்ஷிப்பதற்காகவும் நாம் பாஸ்ராவுக்குத் துருப்புகளை அனுப்பினோம். இப்படி நாம் காலாகாலத்தில் செய்தது எவ்வளவு அவசியமான காரியம் என்பதை ரஷீத் ஆலியின் புரட்சி நிரூபித்துவிட்டது—அதுவும் முன்னர் நம்முடன் நேசமாக இருந்துவந்த பிரான்ஸ் தேசம் நமக்கு ஸிரியாவின் விமான நிலயங்கள் சம்பந்தமாக துரோக சிந்தனை கொண்டுள்ளதென்பதையும் யோசித்துப் பார்த்தால், முன்னெச்சரிக்கையுடன் இருக்காத தேசங்களில் ஒவ்வொன்றிலும், துறைமுகங்களிலும், கைத்தொழில் ஸ்தலங்களிலும், சமூகத்தலைவர்களிலும் தொடர்ச்சியாய் ஒவ்வொருவராகவும், சிறு கூட்டங்களாகவும் சிறுதுளி பெருவெள்ளமாக யாத்திரீகர்களென்றும், கைத்தொழில் நிபுணர்களென்றும், வர்த்தகர்களென்றும் பெர்லின் தேசத்திலிருந்து ஒழுகிக்கொண்டே, அறியாதவர்களைப் பணத்தாலும், அதிருப்தியடைந்தவர்களைத் தங்கள் தத்துவபோதனையாலும், வீணாசைக்காரர்களை ஆசைகாட்டுவதாலும் (தங்களிடம் வைத்துள்ள வசீகர சக்தியுள்ள பெண்களைக்கொண்டு ஆசை ஊட்டுவது அதிகமாகவும்) இப்படியாக நம்மிடம் உப்பும் தண்ணீரும் உண்டவர்களிடையே அளவுக்கடங்காத துயரத்தை விளைவிக்கக்கூடும்: விளைவித்தும்

வருகிறார்கள். இந்த துஷ்டர்கள் ஹிம்ஸை செய்யத்துணிந்தும், கைசுத்தமில்லாமலும் ராணுவ சதி செய்துகொண்டு இராக்கில் தங்கள் குடிப்பெயருக்கே ஹானி உண்டாக்கக்கூடிய விதமாய் நடந்துவருவதை அறிந்த முஸல்மான் யாரும் இந்தியாவிலும் சரி வெளியிலும் சரி இதைக்கண்டு மனம் சகிப்பாருண்டோ!

---

## வார யுத்தச் செய்திகள்.

(22—5—41-லிருந்து 28—5—41-வரை).

---

இந்த வாரத்தில் எடுத்த எடுப்பில் இருக்கக்கூடிய விஷயம் என்னவென்றால் "பிஸ்மார்க்" கப்பல் மூழ்கடிக்கப்பட்டதே. அது 35,000 டன் எடையுள்ளது. ஜெர்மனியில் உள்ள சண்டைக் கப்பல்களில் மிகப்பெரியது. சென்ற நவம்பர்மீ தில் தான் தண்ணீரில் ஏற்றப்பட்டது. கப்பல்களை மூழ்கடிப்பதிலும் மற்ற துறைகளிலும் அது தீவிரமாக வேலை செய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது, அந்தப்படியே "ஹுட்" (Hood) என்ற பெரிய கப்பலை அது போய் மூழ்கடித்ததும் சரி, அதைப்பற்றி நாம் எதிர்பார்த்ததெல்லாம் பூர்ணமாக முடியுமென்று தோன்றினது. ஆனால் நட்டதெல்லாம் பயிராகுமா? பிரிடிஷ் கடற்படைக்கு சௌகரியமில்லையா? "ஹுட்"(Hood)டின் நஷ்டத்துக்கு பழிக்குப்பழி வாங்கவேண்டும் என்றுஅது நிச்சயித்துக்கொண்டது. அந்தப்படியே சபதத்தை திறமையுடனும் நொடிப்பொழுதில் நிறைவேற்றி காண்பித்தது. இந்த காரியத்தைப்போல் பெருமையான காரியமும் சரியான கால்த்தில் செய்யப்பட்டதும் பலர் ஒரே நோக்கத்தில் ஈடுபட்டு நிறைவேற்றினதும் இல்லை. அது ஆச்சரியகரமானது. அப்படிக்கும் எளிதான காரியமல்ல. "ஹுட்."(Hood)டை அமுக்கிவிட்டு அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் உள்ள மற்ற பிரிடிஷ் கப்பல்களுக்கு சாவுமணி அடிக்கலாமென்று அது முதுகு திரும்பி ஓடினது. ஆனால் கைகாவலாக வைத்திருந்த கப்பற்படை அதை கண்பார்வையிலேயே துறத்திச் சென்று பனியையும், துவானையும் கம்மலையும் சமாளித்துக்கொண்டு முடிவில் செவ்வாய்க்கிழமை காலையில் எதிர்த்து போட்டுக்கொண்டது. கப்பல்கள் சூழநடுவில் அகப்பட்டுக்கொண்டு நின்ற அந்த குற்றவாளியின் பேரில் 'ஆர்க் ராயல்' கப்பலிலிருந்து ஒரு இடிமீன் போய்பாய்ந்தது. அது முதல் முடிவுகாலம் குறுகினது. குறுகவே, சுருண்டு இரண்டு சுற்றுச் சுற்றினது அந்த பிஸ்மார்க். துரத்திச் சென்ற கப்பற்படையின் பாக்கி கப்பல்கள் அதன்மேல் பாயவே அது சமுத்திரத்தின் அதோ பாதாளத்துக்குப் போய்ச் சேர்ந்தது.

பலே வேலை. பிரிடிஷ் கப்பற்படையை அடிக்கமுடியாது என்பதற்கு இதைவிட ருஜு வேண்டுமா. நாளது வரையில் இந்தச் சண்டையில் நாம் தெரிந்து கொள்ளக்கூடிய விஷயம் இதுவே. பிரிடிஷ் கப்பற்படை தோற்காது. நாளது வரை தோற்றதில்லை. முன்னும், 'கிராப் ஸ்பி' தானே மூழ்கடித்துக்கொண்டது. 'கோனிஸ்பர்க்கும்' மற்றக் கொள்ளைக் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன. இப்போது ஜெர்மனியின் பரிசு பெற்ற யுத்தக் கப்பல் "பிஸ்மார்க்கும்" அமுங்கி



விட்டது. கடற்படையென்றால் அதற்குச் சாமானியவேலையா? ஏழு கடல்களையும் பந்தோபஸ்து செய்யவேண்டியது. எம்மாத்திரமான வேலை! எவ்வளவாய் இருந்தால் என்ன. அவசியம் நேர்ந்த காலத்தில் பலே வேட்டைநாயைப்போல பிரிடிஷ் கடற்படை பிடித்த பிடியை விடாது. அந்தக் குணம் எப்பொழுதும் இருக்கும். 'ஹுட்' (Hood) என்பது மிக மேதாவியான கப்பல். அதன் மாலுமிகள் மேதாவியானவர்கள். அது அமுங்கும் பொழுது கண் குஷியாகவே அமுங்கினது. அதை இழந்தது கஷ்டமே ஆனாலும் பிரிடிஷாருக்கு அச்சு நாடுகளால் காட்டக்கூடியதைவிட அதிகமான கடல் சஞ்சாரிகள் இருக்கின்றன. இதாலிய கப்பற்படை கால் முறிந்துபோனது. 'விடாரியோ' இனத்தைச் சேர்ந்த அதன் சஞ்சாரிகள் சீர் குலைந்து போயின. (இது வெகு நாளைக்கு முன்னாலேயே பிரிடிஷ் கப்பற்படை செய்த வேலை). 'நீஸ்னௌ' 'ஷான்ஹாஸ்ட்' என்ற இரண்டு ஜெர்மன் சஞ்சாரிகளும் 'ப்ரெஸ்ட்' துறைமுகத்தில் ஒளிந்துகொண்டு ராயல் விமானப்படையின் கையில் இரவு தவராமல் அடி வாங்குகின்றன. 'பிஸ்மார்க்' உடன் இரட்டையாகத் தோன்றின. 'டிர்பிட்ஸ்'க்கும் வெடி வைத்துவிட்டால் நமது கப்பல்களுக்கு ஏற்படக்கூடிய ஜெர்மன் விபத்து தடைபட்டுப்போகும். இது நல்ல செய்தி உற்சாகமானது. ஏனென்றால் மிஸ்டர் ரூஸ்வெல்ட் நமக்கு அறிவித்திருக்கிறது பாருங்கள். சமீபத்தில் கப்பல் சேர்மானத்தைவிட அழிவே அதிகம். ஆகவே, நாம் தன்னைக்கட்டிக்கொண்டு போகவேண்டும். இன்னும் சில கப்பல்களை அமுக்கிவிட்டால் சரியாகப்போய்விடும். அமெரிக்கர்கள் கச்சம் கட்டிக்கொண்டுவருவார்கள் போலிருக்கிறது. வந்து விட்டால் ஜெர்மனி சிரிப்பாய் சிரிக்கவேண்டும்.

## மிஸ்டர் ரூஸ்வெல்டின் திண்ணை பேச்சு.

சமீபத்தில் Mr. ரூஸ்வெல்ட் பேசியிருப்பதில் அமெரிக்காவின் கொள்கையை வரையறுத்துச் சொல்லி, அந்த தேசத்துக்கே அளவு கடந்த நெருக்கடி வந்திருப்பதாகவும் சொல்லியிருக்கிறார். அந்தப் பேச்சுக்கு ராஜதந்திர சமத்காரத்தில் முதல் பாக்கு வெற்றிலை கொடுக்கலாமென்றாலும் அன்பாக வஞ்சகம் அன்னியில் நேராடி முகத்துக்கு முகம் வைத்து பேசுவது போலிருக்கிறது. இந்த ஜோரெல்லாம் செய்ததை இனி அவர் பொறுக்கமாட்டர். ஜன நாயகத்துக்கு அபயம் கொடுக்காமல் காக்கவைக்கமாட்டார். சென்ற யுத்தத்தைப் போல சாகும் காலத்தில் ஒத்தாசை செய்யலாமென்று காத்துக்கொண்டிருக்க மாட்டார். கால தாமதம் இல்லாமல் அமெரிக்காவை இழுத்து விடுவார். எப்பாடு பட்டும் ஹிட்லரையும் அவன் கொள்கையையும் ஒழித்துவிடுவார். இதற்காக பிரிடனுக்கு அதிவேகமாக தளவாடங்களைத் தயாரித்து அனுப்பப்போகிறார். கடற்படைக்கும் மற்றபடி ராணுவத்துக்கும் தேவையான ஒத்தாசை எல்லாவகையிலும் தாராளமாக, இரண்டு கையாலும் மனம் உவந்துகொடுக்கபோகிறார். "இதை செய்ய வேண்டும்; இதை செய்ய முடியும்; இதை செய்தே தீருவேன்" என்று அவர் சொன்னது ஞாபகமிருக்கட்டும். இப்படி ஊக்கம் கொடுக்கும் வார்த்தைகள் அவர் வாயிலிருந்து விழுவதை நாம் நேராடி காண்பது போலிருக்கிறது.

Mr. ரூஸ்வெல்டின் வார்த்தைகள் வெறும் ஒத்தாசைப் பேச்சு மட்டுமல்ல. அவற்றில் அர்த்த விசேஷம் உண்டு. இந்த யுத்தத்தில் வலுத்த கை எது என்பதை அறிந்து எடுத்துச் சொல்லும் மதிப்பு அவைகளுக்கு உண்டு. ஜெர்மானியரின் ராணுவ வெற்றிகள் அவரை அசைக்கமுடியாது. அட்மிரல் ரீடருடைய பயமுறுத்தல்களும், டாக்டர் கோயபெல்ஸின் மகாக்கொடிய பேச்சுக்களும் அவரை அசைப்பதில்லை. சில பிரிடிஷ் கப்பல்களை அமுக்கி கண்கொண்டு விரட்டி அமெரிக்க பிரஸிடெண்டின் மனதை நடுக்கிவிடுவது என்ற நோக்கமாய் பிஸ்மார்க் சென்றதாக சொல்லப்படுகிறது. ஆனால் அந்த ஏற்பாடு பிட்டுக் கொண்டுபோய் விட்டது. சகுணம் நன்குபலிக்கும் என்றால் மிஸ்டர் ரூஸ்வெல்ட் யுகம் புரண்டு போகின்ற பேச்சுத்வனிக்கும் தருவாயில் பிஸ்மார்க் அமுங்கிப் போனது ஹிட்லருக்கும் அவருடைய பாளயங்களுக்கும் கவலை வாரி விட்டதுபோலாகும்.

இந்த யுத்தத்தில் கடற்பலமே வெற்றி கொடுக்கும் என்பது பற்றி Mr. ரூஸ்வெல்டுக்கு சந்தேகம் கிடையாது. புராணங்களிலும் கண்டறியாத விதமாய் இங்கிலாந்து தாங்கி கொண்டுவருவதையும் சைனு உருதியுடன் தற்காத்து வருவதையும் அவர் குதூஹலத்துடன் எடுத்துக்காட்டுகிறார். ஹிட்லர் சக்கரம் எவ்வளவு நாள் ஓடும். அதற்கு இரண்டு முட்டுக்கட்டைகள் இருக்கின்றன. அவைகள் இரண்டு கண்டங்களால் பிரிக்கப்பட்டு இங்கும் அங்குமாக இருந்தாலும் முட்டுக்கட்டைகள் முட்டுக்கட்டைகள்தான். நாஸிகள் உலகத்தை தன் வசப்படுத்த வேண்டுமானால் பிரிடனை தொலைக்கவேண்டும்; பிரிடனைத் தொலைக்க வேண்டுமானால் அவர்களுடைய கடல் ஆதிக்கத்தைத் தொலைக்கவேண்டும். தன்னுடைய கடற்படையின் மேன்மையை நிலைநிறுத்துவது பிரிடனுக்கு தனிமையில் சிரமமான காரியமாக இருந்தாலும் அடுத்தாற்போல் வந்துகொண்டிருக்கும் அமெரிக்காவின் ஒத்தாசையுமிருந்தால் அச்சு நாட்டின் கடற்படையை வைத்த இடத்தில் கைக்கலாகும்.

அவருடைய பிரசங்கத்தின் மதிப்பு என்னவென்றால் உள்ள நிலையை உள்ளபடி சொல்வது மட்டுமல்ல. ஒரு பொருட்டல்லாத இழவுகளை நினைத்து நெஞ்சு ஒடிந்து கீழே விழும் கோழை நெஞ்சுகளுக்கு தெம்பு கொடுக்கவும் பிரிடிஷ் ராணுவத் தோல்விகளினால் மனம் கலையாதவர்களுடைய பௌருஷத்தை மெச்சவும் அது உபயோகப்படுகிறது.

**கிரீட்.**—இதை அச்சில் இடும் சமயம் வரையில் கிரீட்டின் நிலைமை அத்தியாவஸ்தைக்கு வந்துவிடவில்லை. மெலாமியைச் சுற்றி வலுவாக ஜெர்மானியர்கள் ராவம் பட்டிக்கொண்டு உயிர் சேதத்தையும் பொருள்நஷ்டத்தையும் கவனியாமல் ஒரே குழப்பமாக விழுந்துகொண்டிருக்கிறார்கள். பிரிடிஷாரை தாக்குபவர்கள் பயங்கரமான அளவாக இருந்தபோதிலும், அவர்கள் பாச்சாப் பலிக்கவில்லை. இடைவிடாது விமானங்கள் பாய்ந்து குண்டுபோட்டாலும் பாரூட்டில் துருப்புகள் இறங்கினாலும் பிரிடிஷார் எதிரிகளின் உயிர்களை பெருவாரி கொள்ளை கொண்டிருக்கிறார்கள். எதிரியின் விமானங்கள் சேதப்பட்டு கிரீட் விருக்ஷங்களில் சிக்கிக்கொண்டு ஊஞ்சலாடுகின்றன. எதிரியை திரும்ப விரட்டக்கூடிய



அளவு சைனியங்களை ஒத்தாசைக்கு அனுப்பி வருவதாக கருதப்படுகிறது. சில முனைகளில் பிரிடிஷ் துருப்புகள் பின்வாங்க வேண்டியிருந்தாலும் இதனால் நிலை குலைந்துவிட்டது என்று சொல்லமுடியாது. மேலும் மேலும் சைனியம் ஒத்தாசைக்கு வருவதால் நமது நிலை வலுவுக்கு வரும். எப்படி இருந்தாலும் இதுவரை பிரிடிஷார் சமாளித்துவருவதே புராணத்தில் எழுதக்கூடியது. நாஸி பட்டாளங்களை கிரேக்கர்கள் எதிர்த்ததைப் பார்க்கவும் நமக்கு 'லியோனிடாஸின்' ஞாபகம் வருகிறதென்றால் பிரிடிஷ் தைரியத்தை பார்த்தால் 'லைட்பிரிகேடின்' முன்னேற்றம் ஞாபகம் வருகிறது.

யுத்த சம்பந்தமாக கிரீட்டின் நிகழ்ச்சி ஒரு சில்லரை விஷயம். அதைப் பிடிப்பதால் ஹிட்லருக்கு நன்மை ஏற்படாது. அவனுடைய துருப்புகளை தூக்குத் தூக்காய் அப்புறப்படுத்த வேண்டிய அவசியத்தினால் அவனுக்கு வீண் கவலை ஏற்படுமேயொழிய வேறில்லை. அந்த இடம் அவன் வசத்திலிருந்தால் மத்தியதரைக்கடலில் நமது கப்பல்களை அவன் சீண்டலாம். அலெக்ஸாண்டிரியாவுக்குப் போய் ஒன்று இரண்டு வெடிகுண்டுகளை அவன் எறியலாம். ஆனால் முடிவில் அவன் தலைக்கே ஆபத்து. எவ்வளவுக்கெவ்வளவு பிரிடிஷார் அவ்விடத்தில் எதிர்ப்பை தாங்குகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு வட ஆபிரிக்கா, ஆஸியா இவ்விடங்களில் நடக்கக்கூடிய யுத்தங்களுக்கு அவகாசம் கிடைக்கும்.

**இராக்.**—இராக்கின் நிலைமை திருப்திகரமாகவே இருக்கிறது. ரஷீத் ஆலி சூதாடி தோற்றுவிட்டான். காலம் தப்பி காலம் கலகம் ஏற்படுத்தினதற்காக அவனை நாஸிகள் ஆதரிக்கவில்லை. நாஸிகள் தனக்கு சரியானபடி ஒத்தாசை அளிக்கவில்லையென்றும் அளித்த ஒத்தாசையும் பலன் படாததாக இருந்ததென்றும் அவன் அவர்களை குறைகூறுகிறான். எப்படியாயினும் அவர்கள் இருவருமாக விஷயத்தைக் கெடுத்துவிட்டார்கள். நாட்டைவிட்டு ரஷீத் ஆலி ஓடிவிடவேண்டியதாயிற்று. ஸிரியா, இராக் எல்லையை கலகக்காரர்கள் கடக்கக்கூடாதென்று சொன்னது அவர்களுக்கு மறுபுறம் நேர்ந்த ஆபத்து. ரஷீத் ஆலிக்கு விரோதமாக முஸல்மான்கள் எல்லோரும் சேர்ந்துகொண்டார்கள். அவன் மூடத்தனமாக துணிந்துவிட்டான் என்று அவனை அவர்கள் கண்டிக்கிறார்கள்; இராக்கின் ரீஜெண்டான எமீர் அப்துல் இல்லா திரும்பிவந்து ராஜ்ஜியத்தை நடத்துகிறார். அச்சுநாடுகளின் சேஷ்டையை அடக்கி அமைதியை நிலைநிறுத்துவதாக கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார். பாஸராவைச் சுற்றிலும் அமைதியாக இருக்கிறது. பல்லூஜாவுக்கும், பாக்தாத்துக்கும் இடையில் பிரிடிஷ் துருப்புகள் ஏறிவிட்டன. போக்குவரவு சாதனங்களை வெட்டி விடுவதற்கு கலகக்காரர்கள் பிரயத்தனப்பட்டார்கள். ஆனால் அவர்களால் நெருக்கடி தாங்க முடியவில்லை.

**அபிஸீனியா.**-சென்ற வாரத்தில் அம்பா அலாகியின் வீழ்ச்சியும், அயோஸ்டா பிரபு சரண் அடைந்ததும், ஆபிரிக்கா பாகத்திய யுத்தம் முடிவடைந்ததாகச் சொல்லலாம். ஆங்காங்கே தங்கி நிற்கும் எதிரிகளை வசைப்படுத்துவது தான் பாக்கி. எதிரி இருக்கக்கூடிய பாக்கி இடங்கள் சிலவும் வெடி குண்டுகளுக்கும்,

யந்திர துப்பாக்கி வெடிக்கும் இரையாகிவிட்டது. ஏராளமான பண்டங்களும் ராணுவ தளவாடங்களும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அம்பா அலாகிக்குப் பிறகு 20,000 கைதிகளைப் பிடித்திருக்கிறோம்.

**மேற்குப் பாலைவனம்.**—எகிப்து எல்லையைக் கடந்து நாஸிகள் முன்னேற முயல்கின்றனர். சொலூம் அவர்கள் வசமானது. ஜெர்மனியைச் சேர்ந்த ஆயுத முஸ்தீப்புகளோடு கூடிய படை வரிசைகளில் நான்கு எகிப்தில் முன்னேற முயற்சி செய்கின்றன. ஆனால் தீவிரமாக எதிர்க்கப்படுகிறார்கள். அதிகமாக எதிரிச் சேனைகள் கூடி இருந்தாலும் பிரிடிஷ் துருப்புகள் அவர்களை இறுதி எதிர்ப்பாகத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

மத்தியதரைக் கடலிலும் கப்பற்படை சும்மா இருக்கவில்லை. 18,000 டன் லயனர் உள்பட நான்கு பெரிய விரோதிக் கப்பல்களை அவர்கள் மீன் குண்டு போட்டு இருக்கிறார்கள். அந்தக் கப்பல்கள் லிபியாவுக்கு துருப்புகள் ஏற்றிச் சென்றுகொண்டிருந்தன. பிரிடிஷ் முற்றுகை பலமானது. பின்வரும் புள்ளி விவரங்களைப் பார்த்தாலே தெரியும்.

சண்டை துவக்கினது முதல் மேமீ நடுவு வரையில் ஜெர்மனிக் கப்பல்களும், இதாலியக் கப்பல்களும், பிடிக்கப்பட்டதும், தானே மூழ்கிக்கொண்டதும், மூழ்க்கப்பட்டதுமான மொத்தம் 28,73,000 டன்கள். இவைகளில் ஜெர்மன் கப்பல்கள் பிடிபட்டவை 61, எடை 2,74,000 டன்கள். ஜெர்மன் கப்பல்கள் மூழ்கினவை அல்லது மூழ்கடிக்கப்பட்டவை 285, எடை 1,49,000 டன்கள். இவைகளோடு சேர்க்கவேண்டியவை, ஜெர்மன் காரியத்திற்காக உபயோகப் படுத்தப்பட்டு வந்ததும், மற்ற தேசத்திற்குச் சொந்தமானவையுமான கப்பல்கள் 38, எடை 67,000.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேச தேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **19—5—41.** (திங்கட்கிழமை). | | | |
| | **இராக் (Iraq).** | | |
| | விமான நிலயம்.—மோஸுல் (Mosul). | ...... | சேதமாயிற்று. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விரோதி மோட்டார் வண்டிகள், கவசம் அணிந்த மோட்டார் படைகள்.—மேற்கு பாலைவனம். | ...... | பல வண்டிகள் எரிந்துபோயிற்று. பல சேதமாயின. |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **19—5—41.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa)—தொடர்ச்சி.** | | |
| | பெங்காஸி.—(Benghazi). | | 3 விமானங்கள். கட்டடங்களுக்குச் சேதம். |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் விமான நிலயங்கள்.—கிரீஸ் (Greece). | ...... | ...... |
| | விமான நிலயங்கள்.—ஹஸ்ஸானி (Hassani), எல்யூஸிஸ் (Eleusis). | ...... | கட்டடங்கள் இடிந்தன. எங்கும் தீப் பிடித்தது. |
| **20—5—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **இராக் (Iraq).** | | |
| | ரஷீத் விமான நிலயம்.—பாக்தாத் (Bagdad)க்கு அருகில். | ...... | ...... |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | தரையிலிருக்கும் விமானங்கள்.—எல்யூஸிஸ் (Eleusis). | ...... | தீப்பிடித்தன. |
| | விமான நிலயங்கள்.—மெனிடி, (Menidi), மலாய் (Malaoi), தொபோலியா (Topolia). | ...... | வெடிகளும் தீயும் கிளம்பிற்று. |
| | **ஸிரியா (Syria).** | | |
| | தரையிலிருக்கும் விமானங்கள்.—பால்மைரா (Palmyra), டமாஸ்கஸ் (Damascus). | ...... | 2 துருப்பேற்றும் விமானங்கள் நாசம் பல விமானங்களுக்குச் சேதம். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | படையெடுப்புகள்.—ஸிரெனைகா (Cyrenaica). | ...... | ...... |
| | விமானநிலயம்.—மெகெல்லி (Mechelli). | ...... | 2 விமானங்கள். |
| | மோட்டார் வண்டிகள்.—எல் கஸாலா (El-Gazala), டொப்ருக் (Tobruk), பிர தேசங்கள். | ...... | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **21—5—41.** (புதன்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—கடற்படை நிலயம்.—ஹெலிகோலாண்டு (Heligoland). | ...... 1 விமானம். | பெருத்த சேதம். 1 விமானம். |
| | மின்சாரசக்தி உற்பத்திசெய்யும் ஆலை, எண்ணெய் சுத்தி செய்யுமிடம்.—பிரான்ஸி (France)ல் பெத்யூனு (Bethune)க் கருகே. | ...... | ...... தீப்பிடித்தது. |
| | விமானச் சண்டைகள்.—ஆக்கிரமிக்கப் பட்டிருக்கும் பிரான்ஸ் (France). | 7 விமானங்கள். | 6 விமானங்கள். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | மோட்டார் துணைக் காவல்படை.—கபுஸ்ஸோ (Capuzzo) பிரதேசம். | ...... | பல லாரிகள் சேதமாயின. |
| | சைனியங்கள் தங்குமிடம், பீரங்கிகள் வைக்கப்பட்டிருந்தும் இடங்கள்.—கபுஸ்ஸோ (Capuzzo). | ...... | ...... |
| | பார்ஸி.—(Barce). | ...... | சேதமாயிற்று. |
| | விரோதி சைனியங்கள்.-செல்கா(Chelga) வுக்கருகே ரஸ்தாவில். | ...... | சுடப்பட்டனர். |
| **22—5—41.** (வியாழக்கிழமை). | | | |
| | **இராக் (Iraq).** | | |
| | விரோதி சைனியங்கள், டாங்கிகள்.—பல்லூஜா (Falluja) வுக்கருகில். | ...... | லாரிகளும் டாங்கிகளும் பல பிடிபட்டன. |
| | எண்ணெய்த் தொட்டி.—பாக்தாத்து (Bagdad)க்கு வடக்கே. | ...... | தீப்பிடித்தது. 3 விமானங்கள் சேதமாயின. |
| | **கிரீட் (Crete).** | | |
| | விமான நிலயம்.—மாலிமி (Malemi). | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | ...... | பெரும் சேதம்; வெடிச்சத்தம் கிளம்பிற்று. |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **23—5—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | கொலோன் (Cologne). | ...... | சேதமாயிற்று. |
| | விமான நிலயம், கப்பல் துறைகள்.—ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகள். ஒரு பெரிய கப்பல்.—டச்சு (Dutch)க் கடற்கரை | ...... | மூழ்கடிக்கப்பட்டது. |
| | ஒரு எண்ணெய்க் கப்பல்.—பிரான்ஸி (France)ன் மேற்குக் கடற்கரை. | நஷ்டமில்லை. | ...... |
| | **இராக் (Iraq).** | | |
| | வேவு பார்த்தல்.—கலக இராக் (Iraq). | ...... | ...... |
| | **கிரீட் (Crete).** | | |
| | விமான நிலயம், தரையிலிருந்தும் விமானங்கள், கடற்கரை.—மாலிமி (Malemi). | ...... | பல விமானங்கள் முழுவதும் நாசமாயின. பல விமானங்கள் சேதமாயின. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விரோதித் துருப்புகள், மோட்டார் வண்டிகள்.—மத்திய அபிஸீனியா (Abyssinia). | ...... | பலத்த நஷ்டம். |
| | துறைமுகம், கப்பல்கள்.--பெங்காஸி(Benghazi). | ...... | வெகு பலத்த சேதம். |
| **24—5—41.** (சனிக்கிழமை). | | | |
| | **இராக் (Iraq).** | | |
| | விரோதித் துருப்புகள், சைனியங்கள் பதுங்கும் குழிகள், ரஸ்தாக்கள்.-குர்மெடாலி (Qurmetali). | ...... | ...... |
| | மோட்டார் வண்டிகள்.—ஹப்பானியா (Habbaniyah) பிரதேசம். | ...... | ...... |
| | **ஸிரியா (Syria).** | | |
| | துண்டு பிரசுரங்கள் போடுதல்.—ஸிரியா (Syria). | ...... | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்: படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **24—5—41.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ஸிரியா (Syria)—தொடர்ச்சி.** | | |
| | ஜெர்மன் விமானங்கள்.—அலெப்போ (Aleppo) விமான நிலயம். | ...... | 1 விமானம் நாசம்; பலசேதமாயின. தீயும், வெடிகளும் கிளம்பின. |
| | **கிரீட் (Crete).** | | |
| | விமான நிலயம்.—மாலிமி (Malemi). | ...... | 1 விமானம்; பெருந் தீ கிளம்பியது. |
| | சைவியங்களிறக்கும் விமானங்கள்.—மாலிமி (Malemi) பிரதேசம். | 1 விமானம். | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | இதாலியத் துருப்புகள், கோட்டை.—கோஆங் (Goang). | ...... | பலருக்குக் காயம். |
| | இதாலிய சைவியங்கள், மோட்டார் வண்டிகள்.—அபிஸீனியா (Abyssinia)வில் பல இடங்கள். | ...... ...... ...... | பல மோட்டார் வண்டிகள் சேதமாயின. |
| | விமானம் சுடும் பீரங்கிகள்.—ஓமோ (Omo) நதி. | நஷ்டமில்லை. | ...... |
| **25—5—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **வடகடல் (North Sea).** | | |
| | விரோதிக் கப்பல்கள்.—வடகடல் (North-Sea). | 1 விமானம். | 2 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. |
| | **இராக் (Iraq).** | | |
| | ராணுவ முக்கியமுள்ள இடங்கள்.—ராமாடி (Ramadi) பிரதேசம். | ...... | பல இடங்களில் தீப்பிடித்தது. |
| | விமானங்கள்.—மோஸூல் (Mosul), விமான நிலயம், பாகுபா (Baquba). | ...... | பல நாசமாயின. 2 விமானங்கள் தீக்கிறையாயின. |
| | **ஸிரியா (Syria).** | | |
| | விமான நிலயம்.—பலாங்ரா (Palangra) | ...... | சேதமாயிற்று. |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **25—5—41.** (ஞாயற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **கிரீட் (Crete).** | | |
| | விரோதி சைனியங்கள், விமானங்கள்.—கிரீட் (Crete). | ...... | 24 விமானங்கள். |
| | விமான நிலயம், பக்கத்திலிருக்கும் வயல்கள்.—மாலிமி (Malemi). | ...... | ...... |
| | துருப்பு ஏற்றும் விமானங்கள்.—ஸூடா (Suda Bay) வளைகுடா. | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விரோதியின் தற்காப்புச் சாதனங்கள், மோட்டார் வண்டிகள்.—ஓமோ (Omo) நதிக்கு, அருகே. | ...... | வண்டிகள் நாசமாயின. |

---

## *விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.*

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **20—5—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—சில இடங்கள்—கிழக்கு ஆங்கிலியா (Anglia), தென் வேல்ஸ் (Wales). | ...... | சொற்பச் சேதம்; சிலருக்குக் காயம். |
| | **கிரீட் (Crete).** | | |
| | விமான நிலயங்கள்.—கிரீட் (Crete), ஆஸ்பத்திரி—கானீயா (Canea). | ...... | சேதமேயில்லை. ஆஸ்பத்திரி ஆட்களுக்குக் காயம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta) ... | ...... | சேதமில்லை. |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **21—5—41.** (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | விமான நடவடிக்கையே இல்லை. | ...... | ...... |
| | **இராக் (Iraq).** | | |
| | பிரிடிஷ் சைனியங்கள்.—பல்லூஜா (Fulluja). | விரட்டியடிக்கப்பட்டன. | ...... |
| | விமான நிலயம்.—ஹப்பானியா (Habbaniyah). | 2 விமானங்கள். | ...... |
| **22—5—41.** (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—ஸஸ்ஸெக்ஸ் (Sussex) கிராமம், | 1 விமானம். | சேதமுமில்லை; ஒருவருக்கும் காயமுமில்லை. |
| | இங்கிலீஷ் (English) கால்வாய். | 1 விமானம். | |
| | இரவில்.—படையெடுப்பே இல்லை. | ...... | ...... |
| | **கிரீட் (Crete).** | | |
| | சுழல்விமானத் தாக்குதல்.—பிரிடிஷ் துருப்புகள். | ...... | பல சுட்டுத்தள்ளப்பட்டன. |
| **23—5—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—ஒரு பிரதேசம்—மிட்லண்ட்ஸ் (Midlands). | ...... | சொற்பச் சேதம். சிலருக்குக் காயம். |
| | **இராக் (Iraq).** | | |
| | விமான நிலயம்.—ஹாப்பானியா (Habbaniyah). | ...... | கட்டடங்களுக்குச் சொற்பச் சேதம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | கப்பல்கள்.—மத்தியதரைக்கடல் (Mediterranean). | 3 விமானங்கள். | சேதமேயில்லை. |
| | ஸூயஸ்.—(Suez) கால்வாய்ப் பிரதேசம். | 3 விமானங்கள். | சேதமேயில்லை. |
| **24—5—41.** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—கிழக்கு ஆங்கிலியா (Anglia)வின் கடற்கரை. | ... | சொற்பச் சேதம்; |
| | இரவில்.—மேற்கு இங்கிலாந்தி (England)ல் ஒரு இடம். | ... | சிலருக்குக் காயம். |



| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **25—5—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | விமான நடமாட்டமே இல்லை. | ...... | ...... |
| | **இராக் (Iraq).** | | |
| | சைனியங்களிருக்கும் இடம்.—ஹப்பானியா (Habbaniyah). | ...... | சொற்பச் சேதம். |
| | **கிரீட் (Crete).** | | |
| | பட்டணங்கள்.—கானியா (Canea), ரெதிம்னோ (Rethymno), ஹெராக்லியான் (Heraklion). | ...... | பொது ஜனங்களில் சிலருக்குத்தான் காயம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | பல விமானங்கள் சேதம். | சொற்பச் சேதம். |
| **26—5—41.** (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—பட்டணம்.—இங்கிலாந்தி (England)ல் கிழக்குக் கடற்கரை. | ...... | சொற்பச் சேதம். |
| | ஆகாய பலூன் கோட்டை.—டோவர் (Dover). | ...... | ...... |
| | இங்கிலீஷ் (English) கால்வாய். | 1 விமானம். | ...... |
| | இரவில்.—தெற்கு, கிழக்கு ஆங்கிலியா (Anglia). | ...... | சொற்பச் சேதம். |
| | **இராக் (Iraq).** | | |
| | பிரிடிஷ் விமான நிலயம்.—ஹப்பானியா (Habbaniyah). | ...... | ...... |
| | **கிரீட் (Crete).** | | |
| | பல பட்டணங்கள்.—கிரீட் (Crete). | ...... | ...... |

# யுத்தக் குறிப்புகள்.

---

## தெரிந்தவர் பேச்சு!

இந்தியாவில் இரண்டு வகைப்பட்ட மனிதர்கள் இருக்கிறார்கள். பக்கத்து நாடுகளில் நடைபெறும் மகத்தான சம்பவங்களில் யாதொரு அக்கரையும் கொள்ளாதவர்கள் ஒரு வகை; எதிரிக்கு ஏற்படும் வெற்றிகளைக் கண்டும் எதிரி இந்தியாவை நெருங்கி நெருங்கி வருவதையும் கண்டு காபராப்படுபவர்கள் வகை மற்றொன்று. இவ்விருவகையார்களையும் உத்தேசித்து விஷயங்களைச் சற்று கவனிப்போம்.

எகிப்தையும் ஸூயெஸ் கால்வாயையும் தற்போது ஜீவநாடியாகக் கருதலாம்; அத்துடன் ரஷீத் ஆலி நேசதேசத்தாரை காட்டிக்கொடுத்து ஜெர்மானியர் இந்தியா பேரில் படையெடுக்க வழிதிறந்து விட்டாரென்று கருதலாம். இதற்கு எதிரிடையாக கவனிக்கவேண்டிய விஷயங்களாவன:—

(a) தற்போதிருக்கும் இராக் கவர்ன்மெண்டை எந்த இஸ்லாம் தேசத்தாரும் அங்கீகரிக்கவில்லை.

(b) இராக் வம்பை இழுத்தது; இப்போதிருக்கும் கவர்ன்மெண்டு அரசியல் முறைப்படியுள்ள கவர்ன்மெண்டல்ல; ஆகையால் பரஸ்பர உதவி சம்பந்தமான ஸாதாபாத் (Saadabad) உடன்படிக்கையின் ஷரத்தின் பிரயோகத்திற்கு இடமில்லை.

(c) ரஷீத் ஆலியின் கிளர்ச்சிக்கு அச்சு தேசத்தார் பணம் கொடுத்து உதவினார்களென்று முஸ்லீம்கள் பெரும்பாலாரும் நம்புகிறார்கள்; அத்துடன் இந்தக் கிளர்ச்சி பலித்துவிட்டால் முன்னுக்கு வர வேண்டிய இந்த இராக் தேசம் ருமேனியா மாதிரி நாஸிகளிடம் சிக்கிக்கொண்டு விடுமென்ற பயம் இருக்கிறது.

எகிப்தை கவனிப்போம். சென்ற குளிர் கால யுத்தத்தில் இதாலியரிடம் மாட்டிக்கொள்ளாமல் எகிப்தை பிரிடிஷ் துருப்புகள் காப்பாற்றினவென்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேணும்; லிபியாவில் ஜெர்மானியர் கை தூக்கியிருப்பதால் தளகர்த்தர் வேவல் (General Wavell)சோபை கொஞ்சம் மங்கினதுபோல் காணப்பட்டாலும், சென்ற 10 நாட்களில் ஜெர்மன் கைவரிசை மாறுபட்டதிலிருந்து அவர்கள் எகிப்தை தாக்குவதில் அதைரியப்படுகிறார்களென்று விளங்கும். எதிர்த்துச் செல்லாமல் டொப்ருக்கின் முன் தேக்கப்பட்டுக் கிடக்கிறார்கள்; வலுப்படுத்தப்பட்ட நீல நதி சைனியத்தின் திறமையைக் கண்டு மனங்கலங்கி சோலம் (Sollum) என்ற ஊரைச்சுற்றியும், லிபியா எகிப்து எல்லைப்புற முள்ளுக்கம்பி வேலியைச்சுற்றியும் வாணங்கள் வெட்டிக்கொண்டிருக்கிறார்கள்.



இதையெல்லாம் கவனிக்க, புனருத்தாரணம் செய்யப்பட்ட 'கொறடா வேலை' யானது சுலபமாக நடைபெறவில்லையென்று தெரிகிறது; ஆகையால் இந்தியாவிற்கு மேல் பக்கத்து அரண் என்று மதிக்கப்பட்ட எகிப்து காபந்தாயிருக்கிறது என்பதை நினைத்து தைரியப்படுகிறார்கள் என்றால் அதற்கு போதுமான காரணம் இருக்கிறதென்று சொல்லலாம்.

ஆனால்............இந்தியாவிற்கு மேல்புறம் காபந்து எகிப்தை மட்டுமா பொறுத்திருக்கிறது? விமானங்கள் வருவதற்கும், கவசம்போட்ட யுத்த யந்திர வாகனங்கள் வருவதற்கும் தூரம், கடல்கள், பாலைவனங்கள், இன்னும் மற்ற இயற்கை இடைஞ்சல்கள் எல்லாம் முன்போல முற்றிலும் தடையாகாது; எகிப்து நன்றாகப் பாதுகாக்கப்படலாம். ஆனால் இந்தியாவிற்கு வர வேறு மார்க்கங்கள் இருக்கின்றன. அவை இரண்டும் (ருஷ்யா நடுநிலைமையிலேயே இருப்பதாக வைத்துக்கொண்டால்) பால்கன் நாடுகளிலிருந்து கிளம்புகின்றன. அவையாவன:—

பால்கன் நாடுகள்—1. துருக்கி—இராக்—இரான்—ஆப்கானிஸ்தானம்.
2. ஸிரியா—இராக்—இரான்—ஆப்கானிஸ்தானம்.

மேலே சொன்னவைகளில் இரண்டாவதாகச்சொன்ன வழிதான் சம்பாவிதமாகத் தோன்றுகிறது. பிரிடிஷ் உதவியிலிருந்து துருக்கி விலக்கப்பட்டிருப்பதாகக் காணப்படுகிறதென்பது நிஜம்; ஆயினும் படையெடுக்கப்பட்டால் துருக்கி எதிர்த்து போராடுமென்பது அநேகமாக நிச்சயம். மற்றொரு வழி பாக்கி இருக்கிறது. ரஷீத் ஆலியின் கலகம் இப்பொழுது மிகவும் பிரமாதமாக இல்லாமல் போனாலும் சமீபத்தில் இந்தியாவின் அடுத்த மேல் நாடுகளான இராக் பர்ஸியா, ஆப்கனிஸ்தான், இவைகள் ஜெர்மானிய "யாத்திரீகர்கள்" தொழிலாளிகள் முதலிய ஐந்தாம் படைக்காரர்கள். அச்சுநாட்டுப் பணங்களால் நிரப்பப்பட்டிருப்பதை நாம் வாசித்திருக்கிறோம். ஆகையால் ஸிரியா இராக்கில் நடக்கும் விஷயங்களை கவனித்து இந்தியாவுக்கு எகிப்து மூலம் எவ்வளவு பயம் உண்டோ அவ்வளவு பயம் இந்நாடுகள் மூலம் உண்டு என்பதை தீர்மானித்துக்கொள்ளுங்கள். மேலும் பிரிடிஷ் ராஜாங்கத்தார் மேலேசொன்ன நடவடிக்கைகள் பூரவும் நன்றாகத் தெரிந்துகொண்டிருந்தாலும் இப்பொழுது விரோதிகளுக்கு ஒன்றும் சாதகமாக இருப்பதாக தெரியாமல் இருந்தாலும் சரியான இந்து தேசத்தான் செய்யவேண்டிய காரணம் என்னவென்றால் தன்னால் முடிந்த மட்டில் பிரிடனுக்கு இரண்டு நதிப் பிரதேசத்தில் தீவிரமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதற்கு சகாயம் செய்யவேண்டியது.

**கிரீட்**—அநேகமாக இந்தக் குறிப்புகள் என்ன அடுத்த வாரக் குறிப்புகள் என்ன இவைகளுக்குப்பிறகு தான் சரித்திர பிரசித்திபெற்ற மத்தியதரைக்கடல் தீவின் வடகரையில் நடக்கும் கோரமான யுத்தத்தின் முடிவு தெரியவரும். ஜெர்மானியர்களுக்கு கிரீட் வேண்டியது தான் என்று இருக்க முடியாது. கிரீஸ் தேசத்தால் ஈஜியன் கடலின் பக்கத்திலிருக்கும் இடங்களென்ன டோடிக்கனிஸ் தீவுகள் என்ன இவைகள் 200 மைலுக்குள் இருக்கும்பொழுது ஆசியாமைனருக்குள் குதிப்பதற்கு அடிகன இடம் இருக்கிறது. ஆனால் மற்றொருவர் அதாவது

இம்பீரியல் துருப்புகளும் கிரேக்க ஸைனியங்களும் கிரீட்டை வைத்திருக்கின்றன என்பது தான் அவர்களுக்கு சகிக்க முடியவில்லை. இதுதான் அவர்களுக்கு முள் குத்துவது போல் இருக்கிறது. அவர்கள் தங்களுடைய மனோரதங்களை பூர்த்தி செய்வதற்கு நம்மை வெளிகிளப்பத்தான் வேண்டுமென்று தீர்மானித்துவிட்டார்கள். அதே சமயத்தில் பிரதம மந்திரி சர்ச்சில் அவர்கள் அந்த இடத்தைவிட்டு போவதாக கொஞ்சமேனுமில்லை என்ற அழுத்திச் சொல்லியிருக்கிறார். ஆகையால் மூன்று இடங்களில் நடக்கக்கூடிய ஒரு பெரிய சண்டை நடக்கப்போகிறது.

ஆசிரியன் எச், ஜி. வெல்ஸின் புஸ்தகங்களில்கூட இம்மாதிரி சண்டைகளை சித்திரிக்கமுடியாது என்று பிரதம மந்திரி சர்ச்சில் சொல்லுகிறார். ஆகாயம் நிரம்ப துருப்புக்கொண்டு போகும் கப்பல்கள் முதலிய அநேகவித ஆகாயக்கப்பல்கள், சமுத்திரத்தின் மேல் செம்படவக் கப்பல் முதலிய அநேகக் கப்பல்கள், சாம்ராஜ்ஜியக் கப்பற்படையின் ஒளி தெரிந்த உடன் இங்குமங்கும் மறைவு தேடி ஓடுகின்றன. நாசகாரிகள், நீர்மூழ்கிகள், புகைத் திரைகள், பீரங்கிகள் இடிமுழக்கம், எரியும் கப்பல்களின் பிரகாசம், சப்தமில்லாத கிளைடர் என்னும் ஆகாயக் கப்பல்களும் அதனடியிலிருந்து குடை தாங்கி இறங்கும் சிப்பாய்கள் இவைகளைத்தொடாமல் இருப்பதற்கு குண்டு வீசும் விரோதிகளின் ஆகாயக் கப்பல்கள், இறக்கப்பட்டிருக்கும் துருப்புகள் ஓடி தங்களுடைய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு நழுவுவதும் இவைகளை விரட்டிக் கொண்டுபோகும் அழகிய ஆண்களும் பெண்களும் இவைகள் எல்லாம் பயங்கரமாகவும் அற்புதமாகவும் இருக்கின்றன. பிரதம மந்திரி சர்ச்சில் சொல்லுகிற மாதிரி ஒருவரும் விட்டுக்கொடுக்கமுடியாது. நவீன யுத்தமுறைப்படிக்கு ஏதாவது ஒன்றைப் பிடிப்பது அவசியமாக விருந்தால் அதற்காக எதை வேணுமானாலும் கொடுக்கலாம். இம்மாதிரிதான் ஜெர்மானியர்கள் எண்ணுகிறார்கள்போல் இருக்கிறது. ஆனால் அவர்களுடைய தேசத்தார்களில் இறந்தவர்கள் சங்கியைத் தெரிந்தால் என்ன எண்ணுவார்களோ?

## தூரதிருஷ்டியை விடாதீர்கள்.

தினசரி சமாசாரக்குறிப்புகள் இவ்விதமிருக்கும் நிலைமையில் அநேகர்களுக்கு உண்மை விஷயம் எளிதில் மனதிற்குப்புலப்படவில்லையென்றால் அது இயல்புதான். நாம் போகும் மார்க்கமோ முடிவாக வெற்றியடையும்வரை போர்புரிவது என்ற மார்க்கம். இந்த மார்க்கத்தில் உயர்ந்த ஆகாயமளாவிய பெரு விருக்ஷங்கள் இருக்கின்றன; அவைகள் கண்ணிற்படாவண்ணம் சமீபபார்வையில் பளிச்சென்றிருக்கும் சிறு மரங்கள் இருக்கின்றன. அவைதான் ஸிரெனைகா (Cyrenaica) பால்கன் நாடுகள், கிரீஸ், இராக், மகத்தான விருக்ஷங்கள்தான் அட்லாண்டிக் சமுத்திர யுத்தம், மேல் ஐரோப்பாவில் ஆகாய ஆதிக்கம் என்றவை.

இந்த உபமானத்தை விட்டுவிட்டு அடிப்படையான விஷயங்களைக் கவனிப்போம்.

(1) ஜெர்மனி பிரிடன் பேரில் படையெடுப்பதென்றும், அதேசமயத்தில் இதாலியர்கள் எகிப்தின் பேரிலும் ஸூயஸ் பேரிலும் படையெடுக்கவேண்டுமென்பதுமே ஆதி ஜெர்மானிய ஏற்பாடு. இது நடைபெறமுடியவில்லை; அதன் பயன், பிரிடனும் அமெரிக்காவும் தயாராகவேண்டிய சாவகாசம் கிடைத்தது.



(2) இந்த யுத்தம் 3 பிரகிருத சம்பந்தமானது, இவைகளில் இரண்டு பிரகிருதிகளில் யார் கைதூக்குகிறதோ, அவர்களுக்குத்தான் வெற்றி.

சென்றவருஷம் தரையில் ஜெர்மனியின் கை தூக்கியது, ஆனால் ஆகாயத்தில் அப்படியில்லை; அங்கே ஜெர்மனி கொஞ்சங்கொஞ்சமாக கீழே விழுந்து வருகிறது.

பிரிடனுக்கு எக்காலத்திலும் சமுத்திரத்தில் ஆதிக்கமுண்டு; அதில் அதன் பலம் அதிகரித்துக்கொண்டு வருகிறது. வெகுசீக்கிரத்தில் ஆகாயத்தில் விமான சங்கியையிலும் யோக்கியதையிலும் ஜெர்மனிக்குமேல் சென்றுவிடும் இவ்விதம் இரண்டு பிரகிருதிகளில் கை ஓங்கியஉடன், ஜெர்மனியை தரையிலும் கீழே தள்ளுவது சுலபமாகிவிடும்.

(3) தரையில் வெற்றிகிடைப்பதால் தாத்காலிகமாக ஜெர்மனிக்கு செல்வாக்கும் பொருளாதார வசதிகளும் ஏற்பட்டபோதிலும் உபத்திரவங்களும் அதிகரிக்கின்றன. சைனியங்கள் பரப்பவேண்டும், ரகசிய போலீஸ், அதிகார வர்க்கம் எங்கும் வியாபிக்கவேணும் முடிவில் பிடித்தநாடுகள் ஜாஸ்தியாகி, ஜெர்மானியர் பலம் நாலாபக்கத்திலும் சிதரப்பட்டு வலுக்குறைவடையும். ஜெர்மானியர் தரை ஆக்கிரமணங்கள் ஊதிப்போய், வலுவடைந்த பிரிடிஷ் ஆகாய பலம், சமுத்திரபலம், இவைகளால் தாக்கப்பட்டு ஒரு நொடிப்பொழுதில் சிதரியடிக்கப்படும்.

## பால்கன் விஷயசாரம்.

தெற்கு பால்கன் நாடுகளில் பிரிடிஷ் போர் செய்ததைப்பற்றி, கிண்டலாகப் பேசும் எனது சிநேகிதர் ஒருவர், "கிரீஸ் செத்த சமயம் புதைகுழி உபசாரமாக துப்பாக்கி சுட சில துருப்புகள் அனுப்பப்பட்டது" என்று சொன்னார். அப்படி செய்வதில் ஸிரெனைகா (Cyrenaica)வை இழந்ததாலும், கிரீஸ் தேசத்தை நாம் காப்பாற்ற முடியாமற் போனதாலும், நமது இருப்பிடமான நிலயங்களை நாம் நழுவ விட்டதாலும் இவர் பேச்சில் ஒரு அளவிற்கு விஷயம் இருக்கிறது. ஆனால், அது மட்டுமல்ல; கவனிக்கவேண்டியவைகள் வேறு இருக்கின்றன.

(*a*) கிரேக்க வீரர்களை நாம் கை விட்டிருந்தால், அரசியல் முறையிலும் சரி, ஸைனிய முறையிலும் சரி, அது பெரிய பிசகாக விருந்திருக்கும். நாம் உதவி புரியாதிருந்தால் ஜாஸ்தியான கேட்டை வருவித்துக் கொண்டவர்களாக கருதப்பட்டிருப்போம்.

(*b*) போர் முறையில், இரண்டு முக்கிய சரக்கு நம்மிடம் இருப்பதாக மறுபடியும் நிரூபித்தோம். ஒன்று, சமுத்திர ஆதிக்கம் நம்மிடமிருப்பதால், டங்கர்கில் செய்ததுபோல் தரைப்பட்டாளங்களில்

ஏராளமானவைகளை நிலை நாட்டிக்கொள்ள முடியாத இடங்களில் இருந்து அப்புறப்படுத்த முடியுமென்பதை விளக்கினோம். இரண்டாவது, ஜெர்மன் துருப்புகளை நமது சாம்ராஜ்ஜிய துருப்புகள் படுத்திவைத்த பாட்டிலிருந்து நமது துருப்புகள் எதிரியின் துருப்புகளைக் காட்டிலும் மேலானவையென்று உலகத்தாருக்கும் நமது சைனியத்திலுள்ள ஒவ்வொரு ஆளுக்கும் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது, சம சங்கியையும் சம தளவாட பலமும் இருந்தால், சுயேச்சைக்காக போர்புரியும் சைனியங்களை எதிர்த்தால் தங்கள் கதியென்னவாகுமென்று ஜெர்மானியருக்கே தெரியும்.

(c) சில நடுநிலைமை தேசத்தார் தலையை ஆட்டிக்கொண்டு, "அது சரிதான், ஆனால் வெற்றியென்றால் வெற்றிதான், தோல்வி யென்றால் தோல்விதான்" என்று சொல்லலாம். ஆயினும் பால்கன் போரின் பயன் பிரிடனுக்கு லாபகரமானதுதான் என்று Mr. வின்ஸ்டன் சர்ச்சில் ஒருவர் மட்டும் சொல்லவில்லை. இந்த பத்திரிகையின் வேறொரு இடத்தில் நடப்புகளை கவனித்துக்கொண்டிருக்கும் ஸ்காண்டிநேவிய தேசத்தார் என்ன நினைக்கிறார்கள் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. மேலும், அமெரிக்க நிருபர் மேஜர் எலியட் (Major Eliot) ஏப்ரல் கடைசியில் "ஹெரால்ட் ட்ரிப்யூன்" (Herald Tirbune) என்ற பத்திரிகையில் எழுதியிருப்பதைப் பாருங்கள்.

## அமெரிக்க அபிப்ராயம்.

அவர் எழுதுகிறார் "பால்கன் நாடுகளில் நடைபெற்றதை கவனிக்க மொத்தத்தில் பிரிடனுக்கு லாபந்தான். தன் இஷ்டத்தின்படியில்லாமல் பிரத்தியேகமாக ஏற்படுத்தப்பட்ட சந்நிவேசத்தில் ஹிட்லர் யுத்தம் புரியும்படி செய்விக்கப்பட்டான். ஜெர்மன் ராணுவத் தலைவர்களுக்கு தென்கிழக்கே போர் புரிவதில் இஷ்டமேயில்லை. இந்த யுத்தத்தில் தீர்மான ஸ்தானம் பிரிடனுக்கும் அதைச்சுற்றியிருக்கும் கடலுமேயென்று எல்லோரையும்போல் அவர்களுக்கும் தெரியும்.

தீர்மான ஸ்தானத்திலிருந்து தீர்மான மேற்படவேண்டிய காலத்தில் துருப்புகளும் தளவாடங்களும் மாற்றப்படவேண்டியதாக நேரிட்டது. இதன் பயனாக ஜெர்மானியர் காலவரை திட்டம் தடைபட்டதுடன், பிரிடன் காபந்து வேலைகளைச் சீர்திருத்தவும் குத்தகை—கடன் மசோதா சர்ச்சை யெல்லாம் அமெரிக்காவில் நடந்தேறவும், யுத்த தளவாட தயாரிப்புத் தொடங்கவும் சாவகாசம் ஏற்பட்டது. இவ்வளவு பெரிய பிரதேசத்தை காபந்துசெய்ய வேண்டிய பொறுப்பு ஜெர்மனிக்கு ஏற்பட்டுவிட்டது. ஜெர்மன் உணவுப்பொருள் தளவாடத் தொழிற்சாலைகளில் ஜீவனானவைகளை முழுவதும் நாசமாக்காவிட்டாலும் காலையொடித்ததுபோலாக்கிவிட்டோம். ஜெர்மனியின் துணைவர்



இதாலியர்கள் தலைசாய்க்கும்படி நேர்ந்துவிட்டது; சென்ற மகாயுத்தத்தில் ஆஸ்திரியா ஹங்கேரியும்போல கைகால் ஒடிந்துபோன துணைவனை நிறுத்திவைக்கப் பார்ப்பதில் ஜெர்மனி வீண்கால ஹரணம் செய்ய நேர்ந்தது.

---

## யுத்தப்படைக்கு கடற்படையின் ஒத்துழைப்பினால் ஏற்படும் விசேஷங்கள்.

## எதிரியின் கடல் மீது கொண்டுபோகப்படும் பொருள்களை தாக்குவதின் மதிப்பு.

## எப்படி இந்தியா, டொமினியன் இவைகளின் கடற்படைகள் உதவி செய்கின்றன என்பதுபற்றி.

H. C. Forraby என்பவரால் சமீபத்தில் B. B. C. யில் சொல்லப்பட்டதாவது.

சென்ற சில தினங்களாக பெரும்பாலோர் பிரிடிஷ் கடற்படை இதாலிய உதவிப்படைகளை அழித்த சந்தோஷிக்கத்தக்க வேலையைப்பற்றி சிலாகித்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் பேசிக்கொண்ட காலமானது நமக்கு சிறிது உற்சாகம் உண்டுபண்ணக்கூடியதாக இருந்தது. அந்த சமயம் அந்த உற்சாகமான வார்த்தைகள் அவசியமாகவும் இருந்தது. ஏனென்றால் அவ்வாரத்தில் ஒரு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருப்பதாக உத்தியோக முறையில் சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தரால் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் மேலே சொல்லப்பட்ட பிரகாரம் இதாலிய உதவிக் கப்பல்கள் நாசம் செய்யப்பட்டதானது நாம் வட ஆபிரிக்காவிலுள்ள எதிரியின் சப்ளை படைகளையும் பலப்படுத்தும் படைகளையும் நாசம் செய்வதுபற்றிய ஒரே உதாரணமாகாது. ஏனென்றால் சென்ற 4 மாச காலமாக நம்முடைய கடற்படை நிலயத்திலிருந்து வெளியாகும் பிரசுரங்களிலிருந்து நம்முடைய தண்ணீர் மூழ்கிக்கப்பல்களில் ஒன்று அல்லது மற்றொன்று எதிரியின் சப்ளை கப்பல்களில் ஒன்று அல்லது இரண்டைத்தாக்கி தண்ணீரில் அமுக்கியதாகத் தெரிகிறது.

இந்தப் பிரசுரங்கள் எல்லாம் சாதாரண ஜனங்களின் கவனத்துக்கு வரவில்லை. வியாபாரக் கப்பல்கள் மாதத்துக்கு லக்ஷக்கணக்கான டன்களாக நாசம் செய்யப்படுவதில் ஒரு கப்பல் நாசம் செய்யப்படுவதினால் பொது ஜனங்களுக்கு, யுத்த ஆரம்பத்தின் முதல் ஒன்று, இரண்டு வாரங்களில் இருந்த பிரமிப்பும் ஆச்சரியமும்போல் இப்பொழுது இல்லை. ஆனால் கடல் யுத்தத்தில் தனித்த சம்பவங்களை கூர்மையாகக் கவனித்து குறித்து வைத்திருக்கும் நபர்களுக்கு இதாலிக்கும் ட்ரிப்போலிக்கும் மத்தியிலுள்ள கடல் பாதையில் எதிரிகள் சப்ளைகளைக் கொண்டுபோவதற்கு பத்திரமற்றதாகச் செய்துவிட்டோம் என்று தெரிந்திருக்கும்.

ஜெர்மானியர் தங்கள் படைகளை வட ஆபிரிக்காவுக்கு விடுத்தபோது குறைந்த பக்ஷம் 1,09,000 டன் எடை

யுள்ள கப்பல் சாமான்களை நம் நீர்மூழ்கிக்கப்பல்கள் தண்ணீரில் அமுக்கி விட்டன. இது விஷயம் சமுத்திர யுத்த நிலய பிரசுரங்களில் அறிவிக்கப்பட்டிருக்கும் எண்ணிக்கைகளை கூட்டினால் தெரியும்—மேலே "குறைந்த பக்ஷம்" என்று சொல்லி இருப்பதைக் கவனிக்கவும்.

மேலே சொல்லப்பட்டது நீர்மூழ்கிக் கப்பல்கள் செய்யும் நாசம். மேலும் விமானப் போரும் அதிகமாகவே இருந்தது. அவைகளின் பூரா முடிவும் நமக்கு தெரியாது. ஆனால் அவ்விடங்களில் உள்ள சமுத்திர பாகங்களில் சுரங்கக் கன்னிகள் இருப்பதால் அவ்விடங்களை அபாயகரமானதாக பகிரங்கப்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படிச்சொல்வதால் பூரா சமுத்திர பாகங்களிலும் சுரங்கக் கன்னிகள் இருப்பதாக நினைக்கக்கூடாது. ஒருக்கால் அது வழியாக கப்பல்கள் போனால் புதிதாக வைக்கப்பட்ட சுரங்கக் கன்னிக்கு அருகாமையில் வரலாம். உடனே ஜெர்மானியர்கள் நம் கப்பல்கள் அமுக்கப்பட்டு கண்டுபிடிக்கமுடியாவண்ணம் நாசம் அடைந்ததாக ரிகார்டு உண்டு பண்ணிக்கொள்வார்கள். உண்மையில் கவனிக்க அவைகள் காணாமல் போயிற்று என்று சொல்லலாமே ஒழிய நமக்கோ அவர்களுக்கு அது சம்பந்தமாக வேறு யாதொன்றும் தெரிய மார்க்கமில்லை. நம் படைகள் எதிரியின் 1,09,000 டன் எடையுள்ள கப்பல் சாமான்களை அழித்தன என்று சொல்வதிலிருந்து கப்பல்கள் அதிகமாகக்கொண்டு செல்லும் சக்தியுள்ளவை என்று நன்கு விளங்கும்.

அது நம்முடைய நீர்மூழ்கிக்கப்பல்களின் ஒத்துழைப்பினால் உண்டாகிய ஒரு முக்கியமான உபயோகமாகும். இவ்வருஷத்தின் ஆரம்ப மாதங்களில் ஏன் தண்ணீரின் மேல் விரோதியின் சப்ளைக் கப்பல்களுடன் யுத்தம் இல்லை என்பதற்கு நமக்குக் காரணம் தெரியாது. ஆனால் பல்வேறு காரியங்களுக்கு கப்பல்கள் தேவையிருந்தபடியால் நம்மிடம் இந்தக் கப்பல்கள் போதாமல் இருந்தனவென்றும் அதனால் அந்தக் காரியத்திற்கு அவைகளை உபயோகப்படுத்த முடியவில்லை என்றும் சொல்லலாம்.

நம் சமுத்திர யுத்த ஆலயத்து பிரசுரங்கள் நம் கப்பல்களின் சிறிய காரியங்களையும் ஜயத்தையும் தெரிவிப்பதிலிருந்து நம் படைகள் எவ்வளவு பரவியதாக யிருக்கிறது என்று தெரியும்.

சென்ற சில மாதங்களில் செங்கடலிலிருந்த நிலைமையைக் கவனிப்போம். இதாலியர்களுக்கு அங்கு 7 நாசகாரிகளும், 2 டார்பிடோ போட்டுகளும் (Torpedo boats) 6 நீர்மூழ்கிகளும் இருந்தன. அவைகள் எரிடிரியா (Eritrea) ஸோமாலிலாந்து (Somaliland) இந்த துறைமுகங்களின் வெளியில் வேலை செய்துகொண்டிருந்தன. அதனால் நமக்கு ஆஸ்திரேலியா நியூஸிலண்டு இந்தியா இவ்விடங்களின் தொழிற்சாலைகளிருந்துவரும் யுத்த தளவாடங்கள் இதர சாமான்கள் இவைகளை தளகர்த்தர் வேவல் (General Wavell) படைகள் கொண்டுவரும் மார்க்கமான அப்பிரதேசங்களில் பயம் இருந்தது.

செங்கடலில் இத்தாலிய கப்பற்படைகளின் அடிவாரத்துக்கு அப்பாலுள்ள துணைக்கப்பல்கள் போகும் மார்க்கங்களில் நம் ராஜாங்க கப்பற்



படைகளை நிருவிவைக்கவேண்டி இருந்தது. இக்காரியத்தில் ராயல் இந்திய கப்பற்படை, ராயல் ஆஸ்திரேலிய கப்பற்படை, நியூஸிலண்டு படை பிரிடிஷ் கிழக்கு இந்திய படை இவைகள் எல்லாம் அபாரமாக உழைத்திருக்கின்றன என்று உத்தியோக அறிக்கைகளிலிருந்து தெரிகிறது.

சென்ற ஜூன் மாதத்திலிருந்து இதாலியரின் சிறிய படையை செங்கடலில் அடக்கிவைத்திருப்பதில் நம் கப்பற்படைகள் அதிகமான பலத்தை உபயோகிக்கவேண்டியதாக இருந்தது. ஆனால் இந்த யுத்த விஷயம் பற்றி சொற்ப ஜனங்களே கவனித்து இருப்பார்கள்.

இப்பொழுது இதாலியரின் கிழக்கு ஆபிரிக்காவின் எதிர்ப்பு விழுந்துவிட்டபடியாலும், நாம் அவர்களுடைய துறைமுகங்களை பிடித்துக்கொண்டபடியாலும் இனிமேல் செங்கடலில் துணைக்கப்பல்களை காப்பாற்றுவது பற்றி நம் படைகளுக்கு அதிகமான வேலை இல்லை. இனிமேல் மற்ற காரியங்களைக் கவனிப்பதற்கு அவைகளை அனுப்பலாம்.

சமுத்திரத்தில் ஏகாதிபத்தியம் இருப்பதின் ஒரு முக்கிய அம்சம் மேலே சொல்லப்பட்ட பிரகாரம் கப்பற்படைகளை குறைக்கவோ கூட்டவோ உள்ள தன்மையாகும். ஒரு தேசத்துக்கு கடலில் ஆட்சி இருக்கும் பக்ஷத்தில் படைகளை ஒரு போர்க்களத்திலிருந்து மற்றொன்றுக்கு சீக்கிரமாக மாற்றலாம்.

நான் சமீபத்தில் ஒரு பிரிடிஷ் சண்டைக் கப்பலில் இருந்தேன் :— அது பன்னிரெண்டு மாதத்துக்குள் இந்துமகாசமுத்திரம், ஆர்க்டிக் சர்க்கிள், மேல் அட்லாண்டிக்கின் அப்புறம் இவைகளில் உழைத்து இருக்கிறது. மேலும் மத்தியதரைக்கடலிலும் நுழைந்து சற்று தூரத்திலிருந்து இதாலிய முக்கிய படையுடனும் சண்டை செய்தது.

மேலே சொன்னது நம் கப்பற்படையின் பெருமைக்கு ஒரு அறிதாகாது. வார்ஸ்பயிட் (Battle-ship Warspite) ஒரு சமயம் நார்வேயின் கடைசி வடக்கு கடற்கரையிலும், மற்றொரு சமயம் கிழக்கு மத்தியதரைக் கடலிலும் எகிப்துதேச எல்லையில் நம் சிறிய தரைப்படை போர் புரியும் பொழுது அட்மிரல் கன்னிங்காம் (Admiral Cunningham) படையுடன் சேர்ந்து உதவிபுரிந்து சண்டை செய்ததாகவும் கடல் யுத்த நிலய அறிக்கைகளில் பலதடவைகள் சொல்லப்பட்டிருக்கிறது.

கடற்படைகளின் ஒத்துழைப்பினால் விரோதிகளின் முக்கியமான கடற்கரையிலுள்ள யுத்த ஸ்தாபனங்களையும் தகர்த்து நாசம்செய்ய அனுகூலமாக இருந்தது. அவ்வொத்துழைப்பானது போன யுத்தத்தைவிட இந்த யுத்தத்தில் சிரேஷ்டமாக இருக்கிறது. ஏனென்றால் சென்ற யுத்தத்திற்கு பிறகு நம், கப்பற்படை, ஆகாயப் படை, தரைப்படை தளகர்த்தர்கள் ஒன்றாக சேர்ந்து உழைத்து அவ்வப்போது அவர்கள் சேர்ந்து யுத்தம் செய்யும்பொழுது ஏற்படும் கஷ்டங்களை நன்கு தெரிந்து இருக்கிறார்கள். அதிலிருந்து மீளவும் பழகி இருக்கிறார்கள்.

முன்காலத்தில் மேலே சொல்லப்பட்ட வகையாக அவர்கள் பயிலாதபடியால், கப்பற்படைக்கு தரைப்

படையின் கஷ்டங்கள் தெரியாமலும் தரைப்படைக்கு கப்பற்படையின் சக்தி தெரியாமலும் இருந்தார்கள்.

யுத்த திட்டங்கள் தேவை ஏற்பட்ட உடன்காலத்திலே அடிக்கடி போட நேரிடும். நம் பிரிடிஷார்கள் அவ்விதம் எதிர் பார்த்து செய்வதில் சமர்த்தர்கள் என்று நினைக்க விரும்பலாம். ஒழுங்கு வாய்ந்த படைகள் உள்ள ஜெர்மானியர்களை ஒத்தவர்களுடன் போர் புரியும் காலத்து அவ்விதம் நினைப்பது யுத்தம் செய்வதின் நல்ல வயையாகாது.

சென்ற 12௵ காலமாக மூன்று வகைப்படைகளின் சிரேஷ்டமாக கருதப்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கு ஒரு வருஷ காலம், புதிதாக ஏற்படுத்தப்பட்ட (Imperial Defence College)ல் பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறது.

மேலும் யுத்த தளவாடங்கள் சப்ளை செய்யும் இலாகாவின் ஸீனியர் ஸிவில் உத்தியோகஸ்தர்களில் சிலரும் மேலே சொல்லப்பட்ட உத்தியோகஸ்தர்களுடன் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்; இல்லையேல் சப்ளை இலாகா சரிவர உழைக்க முடியாது. அவசரமாகவும் முன் யோசனையுடனும் செய்யும் காரியங்களின் அவசியமும் தேவையும் அவர்களுக்குத் தெரியாது. நம் பிளான்கள் நிறைவேற சிரமமாகும்.

நம் கப்பல் யுத்தப் படையின் இப்பொழுதுள்ள தலைவர்கள் தாங்கள் ஒத்துழைக்க வேண்டிய விமானப்படை, தரைப்படை, உத்தியோகஸ்தர்களுடன் விசேஷம் பயிற்சியும் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்குள் ஒவ்வொருவரையும் நன்கு தெரியும். பிரசங்கம் செய்யப்படும் அறைகளிலும், சாப்பிடும் பொழுதும், ஒரு படை யுத்தத்தில் ஈடுபடும்பொழுது மற்ற படைகள் எவ்விதமாக நன்கு உழைக்கலாம் என்பது பற்றி தர்க்கம் செய்து கொள்வாகள்.

இது நாம் கெட்டிக்காரர்கள் என்று நினைத்துக் கொண்டிருப்பதை விட மேலானதாகும். இதனுடைய நற்பலன் சென்ற பனி காலத்தில் நடந்த மத்தியதரைக்கடல் யுத்தத்தின் ஜயத்திலிருந்து நன்கு தெரியும். மூன்று படைகளும் ஒத்துழைப்பதின் பலன் இனி நாம் புரியப்போகும் பெரிய யுத்தங்களில் தெரியும். யுத்தத்துக்கு இறுதியான போரை ஹிட்லரால் தாண்டவம் செய்யப்படும். ஐரோப்பாவின் மீது நாம் புரியும் பொழுது இந்த மூன்று படைகளும் ஒத்துழைக்க வேண்டியிருக்கும். அப்பொழுது அதன் விசேஷம் தெரியும்.

சில சமயங்களில் நாம் "கடல்போர், விமானப் போர், தரைப்போர் என்று தனித்தனி இல்லை எல்லாம் சேர்ந்தே ஒரே யுத்தம் ஆகிறது" என்று நினைக்கிறோம். அவைகள் தனித்தனிதான் ஆகும். ஆனாலும் அவைகள் ஒரு சாதுர்யமான யோசனையுடன் ஒன்றுடன் ஒன்று ஒரு காரணம் பற்றி பிணைக்கப்பட்டிருப்பதால் ஒரே யுத்தமாகத் தெரிகிறது எனினும் பிரிடனுக்கு கடலின் ஏகாதிபத்தியம் இருப்பதால் மூன்று படைகளையும் ஒத்துழைக்கச் செய்யச் சாதகமாகயிருக்கிறது.



# மூன்று மறுக்கமுடியாத் தீர்மானங்கள்.

### கிரேக்க சைனியத்தின் பலஹீன மர்மம்.

### கிரீஸிலிருந்து வெளியேறின வழி.

உலகத்தையே ஜயிப்பதற்கு வேண்டிய சில குணங்கள், ஜெர்மனிக்கு கிடையாதென்று சில சம்பவங்கள் நிரூபிக்கின்றன. துவக்கின யுத்தத்தை முடிப்பதில் அதற்கு அதிக சாமர்த்தியம் கிடையாது. அதனால்தான் ஜெர்மனி பல போர்களில் வெற்றியடையலாமே ஒழிய மஹாயுத்தங்களை ஜயகரமாக முடிக்க முடியாது என்று சொல்லப்படும் பொதுவான பேச்சும் உண்மையை ஒட்டியதே.

கிரீஸிலிருந்து பிரிடிஷ் சேனைகளை வெளியேற்றியதை கவனிப்போம். இந்த வியாசம் எழுதுகையில் பிரிடிஷாரின் வெளியேற்றம் முடிவடையவில்லை. ஆனால் இதற்குள்ளேயே அநேகமாய் முக்காலுக்குமேல் வெளியேற்றியாகிவிட்டது என்று எல்லோருக்கும் தெரியும். இதை ஒரு உரைகல்லாக வைத்து சோதிப்போம்.

பிரிடிஷ் சைனியங்களை பிடித்துவிடவேண்டும் அல்லது நசுக்கிவிடவேண்டுமென்று பதினைந்து நாட்களுக்குமேல் முயற்சிசெய்தார்கள். யூகோஸ்லாவியா, கிரீஸ், பிரிடன் ஆகிய மூன்று தேசங்களின் சேனைகளை எதிர்த்து பல்கேரியாவில் மட்டும் 25 அணி வகுப்புகள் சேகரித்திருந்தார்கள். ஆனால் எதிரியின் மொத்த சேனை பன்னிரெண்டு கவசபலம் கொண்ட வகுப்புகளையும்சேர்த்து 50 பகுதிகள் இருந்தனவென்று மதிக்கப்படுகிறது. ஏராளமான ஜெர்மன் விமானங்கள் இச்சேனைக்கு ஆதரவளித்தன. முதலில் யூகோஸ்லாவிய சேனையும் பிறகு எபிரஸ் பிரதேசத்திலிருந்து கிரேக்க சேனையும் அழிந்தபிறகு, சிறிய பிரிடிஷ் சேனையையும் எஞ்சிமிஞ்சிக்கிடந்த கிரேக்கசேனையையும் எதிரி வெகு கோரமாகத்தாக்க இயன்றது. நேசதேசங்களின் அணி வெகுசிறியதாகயிருந்ததாலும், அவைகளை எதிர்ப்பதற்கு வேண்டிய அளவிற்குமேல் வெகு அதிகமாக ஜெர்மானிய சேனையிருந்ததே அச்சேனைக்கு ஒரு இடையூறாகயிருந்ததென்று நம்பிக்கைக்குப் பாத்திரமான நிருபர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

### வெளியேற்றும் காலத்திலிருந்த சந்தர்ப்பங்கள்.

இவ்வாறாக நம் சேனைகளை வெளியேற்றும் காலத்தில், நம் சேனைகள் குறைந்துகொண்டேயிருந்தது. நிமிஷத்திற்கு நிமிஷம் நமது நிலை க்ஷீணித்துக் கொண்டேயிருந்தது. எதிரியின் தாக்குதல் அதிகரித்துக்கொண்டேயிருந்தது. முக்கியமாக எதிரி விமானங்கள் அதிகரித்துக் கொண்டிருந்ததையும் நம் விமானங்கள் க்ஷீணித்து கொண்டிருந்ததையும் பற்றி நிருபர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது பூராவும் உண்மையென்று சொல்வதற்கில்லை. எதிரி விமான எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. நம் படைகளின்மீது தாக்கின எதிரி விமானங்கள் அதிகரித்தன. கிரேக்க விமானத் தளங்கள் எதிரி கையில் சிக்கியதால் நம் விமானங்கள் அங்கு வேலைசெய்ய முடியாமல் போயிற்று.

நம் சேனையை நசுக்கவோ அல்லது பிடிக்கவோ எதிரி யத்தனித்தான் என்பது தெளிவு. டன்கர்க்கில் சுற்றிவளைத்துக்கொண்டு நாசம் செய்ததுபோல் இச்சமயமும் செய்வதாக அவர்கள் பெருமை பேசிக்கொள்ளவில்லை. ஏனெனில் அவர்கள் பிரும்மபிரயத்தனம் செய்தும், சேனையின் பெரும்பகுதி தப்பித்துக் கொள்வதை அவர்கள் தடுக்கமுடியவில்லை. இச்சமயம் நம் சேனை சிறியதாகை யாலும், அச்சிறியசேனை அவர்களுக்கு பெரிய சேதத்தை விளைவித்திருப் பதாலும், எப்படியாவது அதை நசுக்குவதற்கு எவ்வளவோ பிரயத்தனம் செய்தார்கள். பலிக்கவில்லை.

## பரமகடினமான செய்கை.

யுத்தத்தில் பரம கடினமான வேலை என்னவென்றால், எதிரி சைனியம் ஓயாமல் தாக்கும் காலத்தில் வெளியேறுவதே என்று ராணுவ சாஸ்திரங்களில் சாதாரணமாகக் கூறப்படுகிறது. மேற்கொண்டு எதிரி சைனியத்தின் எண்ணிக் கையும் தளவாடங்களும் விமானங்களும் வெகு அதிகமாக இருந்ததென்பதைச் சேர்த்துப் பார்த்தால் வெகு சிறிய பகுதிக்குமேல் தப்பித்துவிடமுடியும் என்று எந்த பெரிய போர்வீரனும் சொல்லி தன்னுடைய கீர்த்தியை இழப்பதற்குத் தயாராக இருக்கமாட்டான்.

நூற்றுக்கு எண்பது பேர்கள் தப்பினார்கள் என்றால் அதிலிருந்து மூன்று மறுக்கமுடியா முடிவுகள் கட்டப்பெறும்:—

(1) போரின் முடிவான காலங்களில் ஜெர்மன் சேனை பலஹீனமடைகிறது.

(2) பிரிடிஷ் சேனாபதியின் சாமர்த்தியம் புகழத்தக்கது.

(3) பிரிடிஷ் சேனையின் பொறுமையும் ஒழுக்கமும் புகழத்தக்கது.

மேற்கண்ட விஷயங்கள் கடைசியில் பலிதமாகக்கூடிய வெகு முக்கிய மான விஷயங்கள். பிரிடிஷ் சேனையை நசுக்குவதற்கோ பிடிப்பதற்கோ வேண்டிய சகலவிதமான வசதிகளும் எதிரிக்கு இருந்தும் அவன் தவறினது இது இரண்டாவது தபா. இந்தத் தபாவில் நம் சேனையோ வெகு சிறிது.

ஒரு ஆஸ்திரேலிய அணியையும் நியூஸிலாண்டு அணியையும் சேர்த்து 60,000 துருப்புகள் தான் அங்கு அனுப்பமுடிந்தது. சுமார் பாதி பிரிடிஷ் துருப்புகள். இச்சிறிய சேனை எண்ணிக்கைகளிலும் தளவாடங்களிலும் அதிகம் படைத்த எதிரியை 15 நாட்களுக்குமேல் தொடர்ச்சியாக எதிர்த்துப் போர்புரிந்தது. பல சம யங்களில் பல நாட்கள் ஜெர்மானியர் ஸ்தம்பித்து நிறுத்தப்பட்டார்கள். எதிரிக்கு ஏராளமான சேதத்தை விளைவித்தார்கள். நமக்கு 3,000 தான் இறந்ததிலும் காயமடைந்ததிலும் நஷ்டம்.

கீழ் பிரதேசத்தில் ஜெர்மானியப் படையெடுப்புத் தயாராகயிருப்பதால் இவ்விஷயங்களை வற்புறுத்துவது நலம்.



## பிரிடிஷ் போர் விமானப்படையின் வேலைகள்.
## ஒரு பகுதி கமாண்டர் ப்ரேஸரின் பரிசீலனை.
## ஆர். ஏ. எப். (R. A. F.) போர் விமானங்கள் இப்பொழுது தாக்குகின்றன.

(ஒரு பகுதி கமாண்டர் எல். வி. ப்ரேஸர் எழுதியது).

[இந்த வருஷத்தின் முதல் மூன்று மாதங்களில் பிரிடிஷ் போர் விமானப் படையின் வேலைகளை பரிசீலனை செய்வது இப்பொழுது சாத்தியமாய் இருக்கிறது. பிரிடன் யுத்தத்தில் பாதுகாப்பு சம்பந்தமாய் மகத்தான வெற்றியடைந்த பிறகு ஆர். ஏ. எப். போர் விமானப்படை ஜெர்மனியை எதிர்த்து தாக்க ஆரம்பித்து விட்டது என்று தெரியவருகிறது.]

**இந்த தாக்குதல் முக்கியமாய் 4 தலைப்புகளாக பிரிக்கப்படும். அவைகளில் இரண்டு பகல் போர் சம்பந்தமானது :—**

(1) வழிகாட்டிச் செல்லும் பாம்பர்கள் ஆகாய விமானத் தளங்களையும் படையெடுப்புத் துறைமுகங்களையும் எதிர்க்கின்றன.

(2) ஏராளமான போர் விமானங்களடங்கிய எதிர்த்துத் தாக்கும் படைகள். தங்கள் கண்ணில்பட்ட விரோதிகளின் ஆகாய விமானத் தளங்களையும், துருப்புக் கப்பல்களையும், இன்னும் இதர ராணுவ இலக்குகளையும் அடித்து நாசம் செய் கின்றன. அவைகள் சத்துருவைத் தேடிப்பிடிக்கின்றன.

தன்னுடைய ஆகாயத் தாக்குதலுக்கு எதிரியால் முக்கியமாய் கையாளப் பட்டுவருகிற இரவு தாக்குதல், நமது போர் விமானப்படையால் இரண்டு வகை களில் தடுக்கப்பட்டு வருகிறது.

(a) மிகவும் தேர்ச்சி பெற்ற முறைகளில் குறுக்கிடுவது. இதனால் அதிக மான கொள்ளை விமானங்கள் நாசம் செய்யப்படுகின்றன. ஒவ் வொரு வகையிலும் நாசம் செய்யப்படும் விமானங்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது.

(b) தன் இரவுக்கொள்ளைக்குப் பிறகு தன்னுடைய விமானத் தளத் துக்குத் திரும்பிவரும் எதிரி சம்பந்தமாய் ஆர். ஏ. எப். விமானங்கள் "பதுங்கிக் காத்திருத்தல்" என்ற தந்திரத்தை அனுஷ்டிக்கின்றன. பகலில் காவல் வேலையும் எப்பொழுதும் போல தொடர்ச்சியாய் நடத்தப்பட்டுவருகிறது ; எதிரியின் அநேக விமானங்கள் சமுத்திரத் தில் சுட்டு வீழ்த்தப்படுகின்றன.

## நஷ்டத்தின் புள்ளி விவரம்.

கிரேட்பிரிடனை பாதுகாப்பதிலும், ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் ஆர். ஏ. எப். போர் விமானங்கள் செய்த தாக்குதல்களில் எதிரியின் 155 விமானங்கள் நாசம் செய்யப்பட்டன. 94 போர் விமானங்களாலும், 51 விமான எதிர்ப்பு பீரங்கிகளாலும், 10 மற்றமுறைகளிலும் (இந்த முறைகளில் பலூன் தடைகளும் சேர்ந்தது). ஆர். ஏ. எப் படையின் நஷ்டம் 41 விமானங்கள்.

சென்ற கோடையைவிட அதிகமான சதவிகிதம்தான். ஆனால் இது நாம் எதிர்த்துத் தாக்க ஆரம்பித்ததின் விலக்க முடியாத பலன். இருந்தாலும் எதிரியின் நஷ்டத்தைக்காட்டிலும் ரொம்ப குறைவானது.

ஜனவரி மாதம் அமைதியாக இருந்தது. பருவகாலம் சரியாக இல்லாததால் உபயதரப்புப் படைகளும் தரையிலேயே இருக்க வேண்டியதாகி விட்டது. பிப்ரவரியில் வேகம் அதிகரித்தது. மார்ச்சு மாதத்தில், பூர்ண சந்திரன் பிரகாசமாயிருந்த காலத்தில் நமக்கு இரையானது 79 விமானங்கள். அவைகளில் ஆர். ஏ. எப். போர் விமானங்கள் வீழ்த்தியது 51. மார்ச்சு மாதம் 13-ம் தேதி இரவு நாசம் செய்யப்பட்ட 13 விமானங்களில் இரவு போர் விமானங்கள் எதிரிகளின் கொள்ளை விமானங்களில் 11-ஐ வீழ்த்தி ரிகார்டு ஏற்படுத்தின. அநேக தடவைகளில் ஆர். ஏ. எப். பாம்பர்கள் 100 போர் விமானங்கள் வழிகாட்டிச் செல்ல இங்கிலீஷ் கால்வாயைத் தாண்டிச் சென்றிருக்கின்றன. தீர்மானமான எதிர்ப்பு ஒன்றும் செய்யப்படவில்லை. ஒரு சமயத்தில் **போலோன், டங்கர்க், கலே** முதலிய இடங்களில் எதிர்த்ததில் குறித்த லக்ஷியங்கள் எல்லாம் அடிக்கப்பட்டன. சென்ற வருஷத்தில் ஜெர்மானியர் ஒவ்வொரு நாளும் கால்வாயின் இங்கிலாந்து பக்கத்துக்கு என்ன தீங்குகள் இழைத்துவந்தார்களோ அதே போன்ற கஷ்டத்தை இப்பொழுது ஜெர்மானியர்கள் அனுபவிக்கிறார்கள்.

அவர்கள் தடைகள் ஆர். ஏ. எப். படையின் தடைக்கு சமானமாகமாட்டாது. அவர்களுடைய போர் விமானங்கள் பிரிடிஷ் பாம்பர்களை அவைகளின் வேலையில் இருந்து ஒரு பொழுதும் திருப்ப முடியவில்லை. அதற்குப்பதிலாக அநேக போர் விமானங்கள் ஆர். ஏ. எப். வழிகாட்டிகளால் சுட்டுத்தள்ளப்பட்டிருக்கலாம்.

எதிர்த்துத் தாக்கும் படைகள் எப்பொழுதும் ஜயித்துக்கொண்டேயிருக்கின்றன. கீழாகப்பறந்து சென்று, தீர்மானமாகவும் குறிதவறாமலும் எதிர்க்கும் விமான எதிர்ப்பு பீரங்கிகளுக்கு மத்தியிலும், அவைகள் பலவிதமான இலக்குகளை தேடிக்கண்டுபிடித்தன. சில சமயங்களில் எதிர்ப்புப்படையின் பைலட் அதை குண்டுகளால் தகர்ப்பதற்கு அநேகமாய் சமுத்திரமட்டம் வரையில் கூட இறங்கி வந்திருக்கிறான். எதிரிப் படையின் ஒவ்வொரு அம்சமும்—ஆகாயவிமான தளங்கள், துருப்புகள், போக்குவரத்து சாதனங்கள்—நன்றாய் தாக்கப்பட்டு இருக்கின்றன.

## மூன்று பைலட்டுகளின் செயல்.

நாம் எதிர்பார்க்கும் விதமாகவே, புத்திசாலிகளும் தைரியம் வாய்ந்தவர்களுமான நேச தேச விமானப்படை பைலட்டுகள் இவ்வாறு போய் எதிர்ப்பதில் ஒரு அசாதாரணமான உத்ஸாகத்தையடைகிறார்கள். ஜனவரி மாதத்தில் ஒரு நாள் வடபிரான்ஸில் புயல் காற்றுப்போன்ற அவர்களது எதிர்ப்புக் காலத்தில் மூன்று பைலட்டுகள் என்ன செய்தார்களென்பதை கீழே அறிவிக்கிறோம்.

ஒரு பைலட்டு, கரைக்கு அப்பால், மூன்று எம். ஈ. 109 களுள்ள இரண்டு வகுப்புகளை விலக்கிக்கொண்டு, காட்டுக்கு சமீபத்தில் ஒதுக்கி நிறுத்தப்பட்டிருந்த



5 எம். ஈ 109-கள் பேரில் பாய்ந்து, பீரங்கிகளால் ஒரேயடியாய் தாக்கப்பட்ட போதிலும் அந்தக் கப்பலில் உள்ள ஜனங்களை ஓடி ஒளியும்படி பிடித்து, சைனியங்களை ஏத்தி வந்த லாரிகளையும் எதிர்த்து அதிலுள்ள ஜனங்களையும் சிதற அடித்து, இரண்டு மிஷின் பீரங்கிகள் ஸ்தானங்களையும் எதிர்த்து படகுகளையும் சுட்டுத்தள்ளினார்.

இரண்டாவது பைலட்டு மேகத்தில் மறைந்து விமான தளத்தின் மேலே வந்து அப்பொழுது புறப்பட்டுக்கொண்டிருந்த இரண்டு எம். ஈ. 109-கள் பேரில் சுட்டு, ஒன்று கீழே தலைகுப்புற விழுவதையும் கண்டான். தன் பாய்ச்சலில் அவன் பீரங்கி ஸ்தானத்திலேயே தன்னால் முடிந்த வரை நின்றான். அவன் விமானத்தின் இறக்கைகள் காப்பாற்றுவதற்காகவைக்கப்பட்டிருக்கும் மணல் மூட்டைகளில் மாட்டிக்கொண்டது; அவன் கப்பலின் முன் கண்ணாடி அவர்கள் திரும்பச் சுட்டதால் தவிடு பொடியாக்கப்பட்டது. ஆனால் அவன் மறுபடியும் உயரே கிளம்பி மேகத்தில் மறைந்து, மறுபடியும் கீழே வந்து தன்னிடம் மிஞ்சியிருந்த வெடி குண்டுகளையும் ஒரு போர் வீரர்களின் வகுப்பின்மேல் வீசி ஒழித்தான்.

மற்றொருவன் மரங்களுக்கு இடையில் எம். ஈ. 109-கள் தூக்குத் தூக்காயிருப்பதைப் பார்த்தான். உடனே அவைகளின் பேரில் பாய்ந்து பீரங்கிப் பிரயோகம் செய்தான். அதற்காக அந்த பைலட்டு ரொம்ப கீழாக பாய்ந்ததில் அதிகமான மின்சார சக்தியுள்ள மின்சாரக் கம்பிகளில் சிக்குண்டு 25 கஜம் மின்சாரக் கம்பிகள் தன் விமானத்தின் திருகாணிகளில் சுத்திக்கொண்டு அந்த மின்சார வேகத்தால் விமானத்தின் கண்ட்ரோல்கள் வேலை செய்யாமல் போயும், இங்கிலீஷ் கால்வாயையும் தாண்டி திரும்பி வந்து சேர்ந்தான்.

## நூதனமான அபிவிருத்தியின் பயன்.

ஜெர்மன் பாம்பர்கள் இரவில் போர் விமானங்களாலும், விமான எதிர்ப்பு பீரங்கிகளாலும், மற்றுமுள்ள தினசரி அபாயகரமாய் விருத்தியடைந்துவரும் பாதுகாப்பு முறைகளாலும் ஏற்படும் ஆபத்துகளை அனுபவித்துவிட்டு, தங்களுடைய சொந்தமான தளங்களுக்குத் திரும்பிவந்தவுடன் "அப்பாடா சௌக்கியமாய் வந்துசேர்ந்தோம்." என்று பெருமூச்சுவிடலாம் என்று எதிர்பார்க்கப்படும். ஆனால் அதற்குப் பதிலாக ஆர். ஏ. எப். போர் வெடிகுண்டு விமானங்கள் அவைகளின் கொடுக்கைப் பிடித்துக்கொண்டே சென்று வட்டாரமிட்டு, அவைகளை அவைகளுடைய ஸ்தானத்திலேயே அமுக்கிவிடுவது சகஜமாய்ப் போய்விட்டது. ஆர். ஏ. எப். போர் விமானப்படையின் வேலைகளில் ஏற்பட்டுள்ள இந்த நூதன அபிவிருத்தி மிகவும் வெற்றிகரமாகவே இருந்திருக்கிறது. அதனால் வாஸ்தவத்தில் ஜெர்மானியர்களுக்கு ஏற்படும் நஷ்டத்தைக்காட்டிலும் அதனால் அவர்களுக்கு ஏற்படும் மனோ அதைரியம் ரொம்பவும் அதிகம்.

இந்த இரவுத் தாக்குதலில் எதிரி வெடிகுண்டு விமானங்கள் கீழே இறங்கப் போகும் சமயத்தில் ஆர். ஏ. எப். போர் விமானங்கள் ரொம்பவும் கீழாக அவை

களைத் தயார்த்து வருகின்றன. சில வெடிகுண்டு விமானங்கள் பீரங்கிப் பிரயோகத்தினால் ஆகாயத்திலே நாசம் செய்யப்படுகின்றன. மற்றவைகள் வந்து இறங்கும் காலத்தில் வெடிகுண்டுகளால் நாசமாக்கப்படுகின்றன. விமான எதிர்ப்பு பீரங்கிகளின் சமீபகாலத்தில் வெற்றியின் பயனாய் இந்த யுத்தத்தில் அவைகள் 500 விமானங்களுக்கு மேல் தங்களுக்கு இரையாக்கிக்கொண்டன. மார்ச்சு மாதத்தில் அவைகள் 22 கொள்ளை விமானங்களை நாசமாக்கின. அவைகளில் இரவில் நாசம் செய்யப்பட்டவை 20. அவைகளுக்கு ரொம்பவும் வெற்றிகரமான இரவுகள் ஜனவரி 19, மார்ச்சு 4, மார்ச்சு 12. அந்த நாட்களில் ஒவ்வொரு இரவும் அவைகள் 4 விமானங்களைச் சுட்டு வீழ்த்தின.

---

## "பிரிடனுக்கு நாசகாரிகளை ஏராளமாகக் கொடுத்து உதவிக்கொண்டேயிருங்கள்."

## அமெரிக்க வியாக்யாதாரின் வேண்டுகோள்.

## யுத்தத்தை எப்படி சீக்கிரத்தில் முடிக்கலாம்.

["ரீடர்களின் டைஜஸ்டு" என்ற பத்திரிகை 42 லக்ஷத்தி ஐம்பதாயிரம் பேர்களுக்குப் போகிறது. அந்தப் பத்திரிகை சர்வதேச பிரக்யாதி உடையது. அதில், பொருளாதார மேதாவியும் ராஜீய விஷயங்களை எடுத்துச் சொல்லும் வியாக்யாதாவுமான வில்லியம் ஹார்ட் என்பவர் நீர்மூழ்கிக் கப்பல்களின் வேட்டையைப் பற்றியும் பிரிடிஷாரின் கப்பல் போக்குவரத்து நிலைமையைப் பற்றியும் விவரித்திருக்கிறார்.]

"நாம், பாதுகாப்புடனிருக்க வேண்டியதற்கு, ஜயித்துக்கொண்டே போகும் பிரிடன் தான் அத்யாவசியம்; நமது அவசியமான அக்கரையை உத்தேசித்து, பிரிடன் வெகு வேகமாய் ஜயிக்கவேண்டியது நமது அவசரத்தேவை." அதற்கு நாம் என்ன செய்யவேண்டும்?

இந்தக் காரியத்தை சாதிப்பதற்கு இரண்டு வித வழிகளுண்டு. முதல் வழியாதெனில்: சென்ற மகாயுத்தத்தின் இறுதி மாதங்களில், நாம் உற்பத்திசெய்த அளவு புது வியாபாரக் கப்பல்களை உற்பத்தி செய்து, உபயோகத்திற்கு அனுப்புவது, அதற்காக நமது கடற்கரை முழுதும் ஏராளமான கப்பல் கட்டுத் துறைகள் மயமாக்குதல்.

ஆனால் ஜெர்மானியர்கள், ஏராளமான நீர்மூழ்கிக் கப்பல்களை அனுப்பலாம். ஒரு மில்லில் தானியங்களை எலிகள் தின்றுகொண்டேயிருப்பின், அதைத் தடுப்பதற்கு ஏராளமாக தானியங்களை சேகரிக்கிறோமா? இல்லை. நாம், எலிகளைக் கொல்லப் பிரயத்தனப்படுகிறோம்.

சென்ற யுத்தத்தில் நாம் செய்தது இதுதான். நாசகாரிகளால் நீர்மூழ்கிகள் நாசம் செய்யப்பட்டது. எப்படி நீர்மூழ்கிகளை நாசம் செய்வதென்பதை கற்றுக் கொண்டார்கள்.



சென்ற யுத்த முடிவில் பிரிடனுக்கு 435 நாசகாரிகளிருந்தன. இப்பொழுது அதனிடம் 220 இருக்கின்றன. 1918-ம் வருஷத்திய வேலையைவிட இந்த யுத்தத்தில் வேலை வெகு அதிகரித்திருக்கின்றது.

## பிரிடனுடைய பேரவலம்.

தற்காலத்தில், சத்துருக்களின் நீர்மூழ்கிகளுக்கு உதவியாக ஆகாச விமானங்கள், கப்பல் செல்லும் சங்கதியை அவைகளுக்கு அறிவிக்க உபயோகப் படுத்தப்படுகின்றன. தவிரவும் சுமார் 2,000 மைல் விஸ்தீர்ணமுள்ள நார்வே கடற்கரையிலுள்ள நார்விக் துறைமுகம் முதல், ஸ்பெயின் கரையிலுள்ள செயின்ட் ஜீன்டிலஸ் வரையிலுள்ள கடற்கரையை பிரிடிஷ் கப்பல்கள் முற்றுகை போடுகிறது.

சென்ற யுத்தத்தில் பிரிடனுக்கு இருந்த 439 நாசகாரிகளுடன், 229 அமெரிக்க, பிரெஞ்சு, இதாலிய, ஜப்பானிய தேசத்திற்குச் சொந்தமான நாசகாரிகள் ஒத்துழைத்தன.

இந்த நேசதேச நாசகாரிகள், மத்யதரைக்கடல், பசிபிக் மஹா சமுத்திரம் இந்தப் பிராந்தியங்களைப் பாதுகாத்து வந்தன. ஆனால், இப்பொழுதோவெனில், பிரிடிஷார்கள், அவர்கள் வசமுள்ள 220 நாசகாரிகளைக் கொண்டு, வட அட்லாண்டிக் சமுத்திரத்தை ரோந்து சுற்றி பாதுகாப்பதுடன் மத்யதரைக் கடலையும், பசிபிக் மஹா சமுத்திரத்தையும் கவனித்துக்கொள்ளவேண்டும். இத்தனைவேலையும் பலனளிக்கும் விதமாய்ச் செய்வது சாத்தியமில்லை. வேண்டியது நாசகாரிகள்; உபரி நாசகாரிகள்; இன்னும் உபரியான நாசகாரிகள்தான் தேவை.

### "ஹிட்லர் இதை யுத்தமென்றே கூறலாம்."

நம்மிடம் கைவசமிருப்பது 159 நாசகாரிகள். தயாரிலிருப்பது உபரியாக 205; நாம் எவ்வளவு சீக்கிரம் தயார் செய்ய முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் அவைகளை பிரிடனுக்கு அளித்தால்தான் யுத்தத்தை குருகிய காலத்திற்குள் முடிக்கலாம் இப்படி முடிப்பதற்கு இந்த வழிதான் நிச்சயவழி. ஹிட்லர் இதை "அமெரிக்கர்கள் யுத்தத்தில் இறங்கிவிட்டார்கள்" என்று சொல்லலாம். ஆனால் ஹிட்லருக்கும், நமக்கும் மத்தியில் பிரிடனிருக்குமளவில் நாம் அவன் வார்த்தைகளை லக்ஷியம் செய்யவேண்டியதில்லை. நாம் பிரிடனுக்கு 50 நாசகாரிகளைக் கொடுத்தோமே அப்பொழுது அதை யுத்த ஆரம்பமென்று மதித்தானா? நாம் ஐம்பது ஐம்பதாக நாசகாரிகளை பிரிடனுக்கு அளித்துக்கொண்டே வந்தால், அது "யுத்தம்" என்றும் பாவிக்கமுடியுமோ? "யுத்தம்" என்றோ வேறு என்னவென்றோ சொல்லிக்கொண்டாலும், அதில் நாம் இறங்கிவிட்டோம்" முடிவு வரை, நாம் இறங்கிய காரியத்தில் விடாமுயற்சியைக் காட்டி வேலைசெய்யவேணும். தியோடார் ரூஸ்வெல்ட் ஒரு தடவை அடியிற்கண்டவாறு பேசியது எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது.

"ஒரு காரியத்தை ஆரம்பித்துவிட்டு, மனமில்லாமல் போனால் அதே நிர்மூலமாய்ப் போவதற்கு வழி."

இப்பொழுதிருக்கும் நிலைமையில், முன்னேறிச் செல்வதைவிட பின்னே காலடி வைப்பது மிகவும் அபாயகரம்.

ஆதலால், நம்முடைய பத்திரத்திற்கும் பாதுகாப்பிற்கும், செய்ய வேண்டியது என்னவெனில், கொஞ்சம்கூட தளராமல், அதிவேகத்துடன் நாம் முன்னேறிச் செல்லவேண்டும். ஆம் வியாபாரக் கப்பல்கள் ஏராளமாய் கட்ட வேணும். ஆனல் இதைவிட ஓயாமல் ஒழியாமல் நாசகாரிகளை உற்பத்தி செய்ய வேணும்.

---

## யுத்தத்தைக் குறித்து அமெரிக்காவிலுள்ள பத்திரிகைகளின் அபிப்பிராயம்.

13-4—41-உயில் **வாஷிங்டன் மேர்ரிகோ** எழுதுகிறது :—

ஸிக்வ்ரீட் பெக்ஹோல்ட் என்பவர் பவேரியாவில் பிறந்தவர். அமெரிக்காவில் வளர்ந்தவர். ஜெர்மனியில் 22 வயது வரை வசித்து வந்தார். கவசம் பூண்ட பீரங்கி மோட்டார்கள் தயார் செய்யும் ஒரு பெரிய கம்பெனியின் தலைவர். குதூஹலம் ததும்பின நேத்ரங்களுடன் அவர் கூறுகிறார். "இவ்வருஷம் முடிவிற்குள் **நாம்** இந்த யுத்தத்தை திண்ணமாக ஜயிப்போம்." "நாம்" என்று சொல்லும்பொழுது அவர் இங்கிலாந்தும், அமெரிக்காவும் என்று தான் நினைக்கிறார்.

மேலும் அவர் சொல்லுகிறதாவது :—"நாம் ஜயிப்பதற்கு ஒரு முக்கியமான காரணம் என்னவெனில், ஜெர்மானியர்களுடைய மனோதைரிய நிலைமையானது சீக்கிரம் தளர்ந்துவிடும். நானே ஜெர்மனாகச்சே அதை நான் நன்கறிவேன். ஜெர்மானியர்களை ஒருவராலும் தோற்கடிக்க முடியாதென்றும், ஜெர்மன் பிரதேசத்தின் பேரில் சத்துரு ஆகாய விமானம் ஒன்றும் பறக்க முடியாதென்றும் ஜெர்மானியர்கள் நம்பும்படியாய் செய்யப்பட்டுவிட்டார்கள். ஆனல், இப்பொழுதோ ஒவ்வொரு தினமும் ஏராளமான ஆகாய விமானங்கள் ஜெர்மனியின் பேரில் பறந்து வருவதை அந்த ஜெர்மானியர்களே அறிகிறார்கள் அல்லவா. இங்கிலாந்தை வெகு சீக்கிரமாக ஜயித்து விடுவது என்கிற மனோநிலைமையும் மாறி விட்டது. சீக்கிரமாக மனத்தளர்ச்சியும் அடைந்து விடுவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

## ஸ்வீடன் இஞ்ஜினியர் சொல்லும் வரலாறு.

**நியூ யார்க் போஸ்டு** என்னும் பத்திரிகை 19—4—41-ல் எழுதுவதாவது :—

ஆண்டர்ஸன் என்பவர் ஒரு ஸ்வீடன் தேசத்து இஞ்ஜினியர். ஜெர்மானியர் நார்வே தேசத்தை ஜயித்த பிறகு நார்வேயை தங்கள் வசமாக்கின பிறகு, பல தடவை நார்வேயில் பிரயாணம் செய்திருக்கிறார். முக்கியமாக சென்ற பிப்ரவரி மாதத்தில் தான் கவனித்ததைத் தெரிவிக்கிறார். "ஜெர்மானியர்களுடைய பிரயாணிகள் ஏற்றிப்போகும் ஸ்டட்கார்டு முதலிய கப்பல்கள், இப்பொழுது சிகிச்சைக் கப்பற்களாக உபயோகப்பட்டுவருகின்றன. நார்வேயின்பேரில் படையெடுத்தகாலம் முதல் மேற்படி ஸ்டட்கார்ட் அங்கேயே இருந்து வருகிறது.



"பர்கன், டிராண்ஜின், முதலிய இடங்களில் இருந்து ஏராளமான அடிபட்ட ஜெர்மன் சிப்பாய்கள் ஆஸ்பத்திரி ரயில்வண்டிகளில் தினம் தினம் வந்துகொண்டு இருக்கிறார்கள். ஆனல் அப்படி வருவதை பொது ஜனங்கள் பார்க்க இயலாது.

"ஆகர்ஷ-யிஸ் என்னும் ஊரில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. அதுதான். நார்வேயில் மிகவும் பெரிதானது. ஒரே சமயத்தில், யுத்தத்திற்கு முன்னல் 1,000 நோயாளிகளைச் சிகிச்சை செய்ய வசதி உண்டு. இப்பொழுது இரண்டாயிரம் நோயாளிகளுக்கு இடம் தயார் செய்யுமாறு ஜெர்மானியர்கள் திட்டம் செய்து இருக்கிறார்கள். இந்த ஸ்திதியில்கூட அடிபட்டுவரும் சிப்பாய்களைக் கவனிக்க மேற்படி ஆஸ்பத்திரியில் முடியவில்லை: இதிலிருந்தே கோபம் கொண்ட நார்வே தேசத்து ஜனங்கள் ஜெர்மானியர்களை எப்படி எதிர்க்கிறார்கள் என்று தெரியவரும்.

"வின்டேரன் என்னும் புதைகுழி ஸ்தலத்தில் இறந்தவர் ஒவ்வொருவருக்கும் பிரத்தியேகமாய் இடம்கிடைக்காமல் கூட்டம் கூட்டமாய்ப் போட்டுப் புதைக்கிறார்கள்.

"ஜெர்மானியர்களை கொலைசெய்வது நார்வே தேசத்து ஜனங்கள் மட்டும் அல்ல. சுமார் 4,000 சிப்பாய்கள் இருந்த ஒரு இடத்திற்கு நான் போனேன். அவர்கள் தலைவரைச் சந்தித்தேன். அப்பொழுது 14 கோணிகளைத்தூக்கிக் கொண்டு சில சிபாய்கள் வெளிச்சென்றார்கள். கொஞ்சநேரத்திற்கு எல்லாம் அதேமாதிரி மற்றொரு கூட்டம் வெளிக்கடந்தது. விசாரித்ததில் மேற்படி கோணிகளில் இறந்துபோன ஜெர்மானிய சிப்பாய்களைக் கட்டி தூக்கிப்போனார்கள் என்று தெரியவந்தது. மேலும் மேற்படி காரீஸனில் ஆஸ்திரியன் சிப்பாய்களும், ஜெர்மன் சிப்பாய்களும் இருந்தார்களென்றும், அந்த இருகூட்டத்தார்களுக்கும், அடிக்கடி கோரமான சண்டை நடந்து வந்ததென்றும், அதில் ஏராளமாக ஜெர்மானியர்கள் இறந்தார்களென்று தெரியவந்தது.

## "ஹிட்லர் அற்ற உலகம்தான் தேவை."

**சாடர்டே ஈவினிங் போஸ்டு** சென்ற ஏப்ரல் மாதம் 12-ம் தேதி மேற்கண்ட மகுடம் இட்டு எழுதுவதாவது :—

"லோக சரித்திரமும் இப்பொழுது மறைந்து கிடக்கிறது. அதை நாம் முற்றிலும் அறிந்த பின்னர்தான் நாம் எக்காரணத்தினல் பிரகிருத யுத்தத்தில் ஈடுபட்டோம் என்பது விளங்கும். நாம் யுத்தத்தில் பூருவாகக் கலந்து கொண்டுவிட்டோம் என்பது நிச்சயம். நமக்குள் அபிப்பிராய பேதங்கள் பல இருக்கலாம். நிச்சயமாக நாம் எல்லோரும் ஏக மனதாய் ஒன்றை இச்சிக்கிறோம். அதாவது "ஹிட்லர் அற்ற உலகம்". பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் ஒருவர்தான் தத்வம் அறிந்தவர். கோர யுத்தம் நடந்து கொண்டு இருக்கும் பொழுதே சண்டையில் நம்முடைய லக்ஷியங்கள் என்ன என்பதையும் புதிதாக ஏற்படுத்தப்படும் நிர்வாக முறையின் ரூப லக்ஷணங்கள் இவைகளின் அமைப்பையும், இப்பொழுதே தெரிவித்துவிடவேண்டும் என்று கூறுபவர்களின் புத்தி கூர்மையை என்னவென்று சொல்வது. ஹிட்லரை ஒழிப்பதுதான் இந்த யுத்தத்தில் நம்முடைய ஒரே எண்ணம்."

## அயர்லாந்தின் யுத்த ஸ்தாபனங்களைப்பற்றிய பிரச்னைகள்.

சென்ற ஏப்ரல் மாதம் 15-ம்தேதி நியூ யார்க் தினசரிப் பத்திரிகையில் மேற்கண்ட மகுடம் இட்டு எழுதுவதாவது :--

"ஜெர்மானியர்கள் அயர்லண்டு மீது படையெடுத்தால், ஆங்கிலேயருடைய கப்பற்படை, தரைப்படை, வட அயர்லாந்து தரைப்படை இவைகளுடைய ஒத்தாசை அன்றியில் ஜெர்மானியர்களைத் தோற்கடிக்க ஐரிஷ்காரர்களால் முடியாது.

"ஒருக்கால் அயர்லாந்தை ஹிட்லர் ஜயித்தால் அவர்களுக்குள் 'ஒக்கு மத்து' என்பது மிகவும் கேவலமாக இருக்கும். பிரான்ஸ் தேசத்தில் 'பிடேன்' ஒத்து உழைப்பது போல் தான் நேரிடும். 'உன்னுடைய கெடியாரத்தை எனக்கே கொடுத்துவிடு, உனக்கு வேண்டும் காலத்தில் நான் மணி சொல்லி ஒத்து உழைக்கிறேன்' என்கிற விதமான ஒத்துழைப்புதான் ஜெர்மானியர்கள் அவர்கள் ஜயித்த தேசங்களில் அனுஷ்டானம் செய்து வருகிறார்கள்.

"அமெரிக்காவில் உள்ள ஐரிஷ் தேசத்தார்கள் விஷயம் தெரிந்தவர்கள். அவர்களுடைய அபிப்பிராயம் அயர்லாந்தில் ஒப்புக்கொள்ளப்பட்டு நன்கு மதிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் புத்திக்கு எட்டிய வரையில் அயர்லாந்தில் உள்ள யுத்த ஸ்தாபனங்களை ஆங்கிலேயர்களுக்கு கொடுத்துவிடுவதுதான் உபய தரப்பார்களுக்கு க்ஷேமம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அயர்லாந்தினுடையவும், இங்கிலாந்தினுடையவும் தற்காப்புக்கு மேற்கண்ட ஏற்பாடு மிகவும் முக்கியமான ஒரு சாதகம்."

---

## மத்யதரைக் கடலில் ஆதிக்கம்பெற ராஜீய முறை (ஜெர்மன்) அனுஷ்டிப்பு.

## ருஷ்யாவுடன் புதிய உடன்படிக்கை.

டைம்ஸ் பத்திரிகையின் ராஜீய நிருபர் எழுதுவது.—

கிரீஸ்பேரிலும், வட ஆபிரிக்காவிலும், இங்கிலாந்துபேரிலும் நிகழ்த்தப்பட்டு வரும் படையெடுப்புகள் மட்டிலும் ஜெர்மன் வஸந்தகால யுத்த முயற்சிகள் ஆக மாட்டாது. மத்யதரைக்கடல் ராணுவ எதிர்ப்பின் இருபுறங்களிலும், ஸ்பெயின், துருக்கி, ருஷ்யா இவைகள்பேரில் ராஜீய சதிகள் நடத்தப்பட்டு வருகின்றன, தங்களுடைய ஜயங்களின் காரணமாக புத்திசாலியான வியாபாரிகள்போல் சமயம் இதுதான் என்று தங்கள் வேலைப்பாடுகளை நடத்திவருகிறார்கள் ஜெர்மன் ராஜீய நிபுணர்கள். தற்போது ஜெர்மனியுடன் நெருங்கின உறவு கொண்டாடுவதற்கு இதுதான் சமயம் என்று கூறுகிறார்கள்,



சென்ற சில தினங்களுக்குள் ஸ்பெயின் தேசத்து மந்திரி சபை—இரண்டு இரவுகள் வெகுநேரம் வரையிலும், அடிக்கடி கூடியிருக்கிறது. இந்த நடவடிக்கைகள், ஜெர்மன் ராஜீய நிபுணர்களுடையவும், ஸ்பெயின்தேச 'பாலாஞ்சு' கக்ஷியினருடையவும், மெப்புப் பேச்சுகள் காரணமாக, வெளியாயிருக்கின்றன. அவர்கள், ஸ்பெயின் அச்சு நாடுகளுடன் சேரவிருக்கிறது என்று கூறுகிறார்கள். ஆனால் கவர்ன்மெண்ட் தரப்பில், "அந்நிய நாட்டு மந்திரி தற்போதைய யுத்த நிலைமையையும் அதனால் ஸ்பெயினுக்கும் மற்ற தேசங்களுக்குள்ளும் ஏற்பட்டிருக்கும் விஷயங்களையும் எடுத்துக் கூறினார்," என்று மட்டும் அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் 'பாலாஞ்சு' கக்ஷியின் பத்திரிகைகள் மட்டிலும் பிரிடன் பேரில் விரோதபான்மையையே வெளியிட்டும் கூடிய சீக்கிரமே ஸ்பெயின் தேசத்தினுடைய அந்நிய தேச விடங்கள் கிடைக்கப்பெறும் என்று கூறுகின்றன. ஜெர்மனியின் பலவந்தத்துக்குட்பட்டிருக்கும் இவர்கள் 'போர்ச்சுகல்' தேசத்தை பலவந்தப்படுத்த முயற்சிக்கின்றனர். 'அரிபா' கூறுகிறதாவது பிரிடனுடனுள்ள சிநேகத்தை ஒழித்து 'போர்ச்சுகல்' ஸ்பெயினுடன் சேர்ந்து எதிர்காலத்தில் ஐக்கிய ஐரோப்பாவின் நோக்கங்களைக் கைக்கொள்ள வேண்டுமென்பதே.

ஸ்பெயினை தன்னுடன் கூட்டுறவு கொள்ளச் செய்வதாகவும், திரும்பத் திரும்ப தமாஷ் பிரயாணக்காரர்களை அனுப்பிவைத்து 'விஷி' கவர்ன்மெண்டை மேலும் பலவந்தப்படுத்தி வருவதாகவும்—இது காரணமாக பிரான்ஸ் சர்வதேச சங்கத்திலிருந்து விலகியது—புதிய நிகழ்ச்சிகளிலிருந்து இந்த ஜெர்மன் நோக்கம் அறியக் கூடுகிறது.

மத்யதரைக் கடலின் கீழ் பாகங்களை பலாத்காரமாகவும், மேல்கரை நாடுகளை ஏமாற்றியும் ஆதிக்கம்பெற ஜெர்மனியால் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. கூடிய சீக்கிரமே ஜிப்ரால்டரிலும், ஸூயஸிலும் புகுவோம் என்று பெருமை அடித்துக்கொள்கிறார்கள்.

இதாலியர்களைப்போல் தங்களையும் கூப்பிட்ட குரலுக்கு ஆடும்படிக்கு, ஜெர்மானியர் வசமாக இஷ்டப்படவில்லை. இத்தேசத்தில், பிரிடிஷாரின் பலம், தரையிலும், ஆகாயத்திலும், கடலிலும், அதிகரித்து வருகிறதென்ற நம்பிக்கை இருக்கிறது. இருந்தாலும் ஜெர்மனியின் நோக்கங்களையும் நாம் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம்.

ஜெர்மனியில், எதிர்காலத்தில் கிழக்கு ஐரோப்பாவில் எவ்விதம் நடந்து கொள்ளவேண்டுமென்று, அங்காராவிலிருந்து அழைக்கப்பட்டிருக்கும் வான் பேபனும், ருஷ்யாவிலிருந்து தருவிக்கப்பட்டிருக்கும் வான் ஸ்கூலன்பர்க்கும், கற்பித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றனர். ஜெர்மன் பிரசாரகர்கள் எவ்விதமும் துருக்கி ஜெர்மனியுடன் பரஸ்பர உடன்பாட்டை செய்துகொள்ளும் என்று கூறுகிறார்கள். துருக்கிக்கு தென்கிழக்கு தேசத்தில் ரஷீத் ஆலியின் எதேச்சாதிகார முயற்சிகள், துருக்கிக்கு மனக்கலவரத்தையும் பீதியையும் உண்டுபண்ணும் என்று

ஜெர்மனி அறியும். பிரிடிஷ் படைகள் அங்கு வந்து சேர்ந்திருப்பதிலும், ரஷீத் ஆலியும் பிரிடிஷாரிடம் தன் விசுவாசத்தை அறிவித்திருப்பதிலும் கொஞ்சம் கவலை நீங்கி இருக்கிறது. இருந்தாலும் துருக்கர்களை ஏமாற்றக்கூடுமென்று ஜெர்மனி பிரயத்தனங்கள் செய்து வருகிறது. பரஸ்பரம் ஒத்தாசை செய்து கொள்ளுகிறதென்ற உடன்படிக்கை ஏற்படவிருக்கிறதென்ற பிரஸ்தாபம் ஜெர்மன் சூழ்ச்சி என்றும், எது நேரிட்டாலும் அதற்கு தயாராகவே துருக்கி இருக்கவேண்டுமென்றும் "டான்" என்ற துருக்கிப் பத்திரிகை இதை ஆக்ஷேபித்துக் கூறுகிறது.

துருக்கியில் ஜெர்மன் சூதுகளும் சூழ்ச்சிகளும் அதிகரிக்கின்றன. ஏனென்றால் தனது 'த்ரேஸ்' பிராந்தியப் பாதுகாப்பு காரணமாக துருக்கியும் மிதமாகத் தான் இருக்கிறது. துருக்கியின் வழியாகத் தான் கிழக்கே உள்ள எண்ணெய் ஊற்றுகளுக்கு ஜெர்மனி போகக்கூடும்.

ருஷ்யா சம்பந்தப்பட்ட மட்டில் புது முறை அனுஷ்டிக்கப்படுகிறது. ருஷ்யாவின் வடக்கு பிரதேசங்களிலும், மத்திய பிரதேசங்களிலும் தாங்கள் ருஷ்யாவை எதிர்க்கப் போவதாக ஜெர்மானியர் கூறுகிறார்கள். துருக்கியிலும் பல்கேரியாவிலும் ருஷ்யாதான் துருக்கியை எதிர்க்கப் போகிறது என்று சொல்லுகிறார்கள். பெர்லின் நகரத்தில் வாஸ்தவமாகவே ருஷ்யாவை ஜெர்மனி எதிர்க்கத்தான் வேண்டும் என்ற நோக்கம் உள்ளவர்கள் பலர் இருக்கிறார்கள். ருஷ்யா இந்த விபத்தை அறிந்து அவ்விதம் ஏற்படக்கூடாதென்று தன்னால் ஆன பொருளாதார ஒத்தாசை செய்ய ருஷ்யா முன்வரும் என்ற காரணத்தால் இந்தப் பேச்சை ஹிட்லர் தடுக்காமல் விட்டிருக்கிறார். பெர்லினிலும் மாஸ்கோவிலும் வான் ஸ்கூலன்பர்க் புதிய உடன்படிக்கை ஷரத்துக்களுடன் கூடிய சீக்கிரம் அவர் ருஷ்யாவுக்கு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்காவிலிருந்து அட்லாண்டிக் சமுத்திர மார்க்கமாகவும், செங்கடல் பாதையாகவும் தாதுப் பொருள்கள் பிரிடனின் தேவைக்காக அனுப்பப்பட்டு வருவது அதிகரித்தவுடன், ருஷ்யாவிலிருந்து விளைபொருள்கள் ஜாஸ்தியாக பெற ஜெர்மனி விரும்பும்.

'ப்ரவாடா' பத்திரிகை, இதுவரை கேவலம் பூதி பிரஸ்தாபமாக விருந்த செய்திகளை பலப்படுத்தி முதன்முதலாக தற்போதுதான், ஜெர்மனி ருஷ்யாவை 'புதிய முறையில்' சேரும்படி கேட்டிருக்கிறது, என்று கூறுகிறது. இது பெர்லினில் "மாலடோ"வின் விஜயம் காரணமாகும். மூன்று அச்சு நாடுகளுடன் ருஷ்யா உடன்படிக்கை செய்து கொள்வதின் மூலம் நாலு அச்சு நாடுகளும் விளங்க வேண்டுமென்று கூறப்படுவதாகத் தெரியவருகிறது. அக்காலத்தில் ருஷ்யா இதை ஒத்துக்கொள்ள தயாராக இருக்கவில்லை.

உண்மையை சொல்லுமிடத்தில், கடந்த காலத்தில் பெர்லினுக்கும் மாஸ்கோவுக்கும் பல பேச்சுகளும், சூழ்ச்சிகளும் நடைபெற்று இருக்கின்றன. இவைகள் எதிர்காலத்தில் பலப்படுத்தப்படுமென்று அறியக் கூடுகிறது.



## அனுக்கிரமிப்பு பிரான்ஸ் தேசத்தின் வழியாய் ஸ்பெயினுக்குள் சரக்கு வரக்கூடாதுஎன்று ஜெர்மனி தடுப்பதாய் வந்த செய்தி.

## முதல் தடவையாக ஹிட்லர் முற்றுகையை ஒரு ஆயுதமாகக் கையாளுதல்.

(ஏப்ரல் 27௳ லிஸ்பனிலிருந்து "டெய்லி டெலிகிராப்"புக்கு மார்ட்டி மூர் தந்திமூலம் அறிவித்தது.)

தன்னுடன் ஸ்பெயின் தேசம் பூராவாக ஒத்துழைக்கும்படி செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் ஜெர்மனி அந்த தேசத்தின் பேரில் பொருளாதார கஷ்டத்தைக்கொடுத்து பிரயத்தனப்படுகிறது.

நடு ஐரோப்பாவைச்சேர்ந்த ஒரு தேசத்திலிருந்து ஸ்பெயினுக்கு வரவேண்டியவும், அப்படி அனுப்பப்பட்டதுமான ஒரு சரக்கு ஏற்றுமதிக்கு ஜெர்மானியர் அனுமதிச்சீட்டுக்கொடுக்க மறுக்கிறார்கள். இதுவும் அந்த நோக்கம் தான்.

இந்தச் சரக்கு முழுமையும் ஸ்பெயின் ஸர்க்கார் விலைக்கு வாங்கிவிட்டார்கள். ரொக்கவிலையும் கொடுத்துவிட்டார்கள். அந்தச் சரக்கு இன்னதுதான் என்று நான் சொல்ல முடியாதவனாகயிருக்கிறேன். ஆனால் அந்தச்சரக்கு ஸ்பெயின் தேசத்தின் பொருளாதார நலத்திற்கு மிகவும் ஜீவாதாரமாயுள்ளது.

இந்த ஒரு சரக்கு ஏற்றுமதியைப்பற்றிய சங்கதி மட்டில் எனக்கு நேராடியானதகவல் தெரிந்திருந்தும், இம்மாதிரி அநேக ஐரோப்பா கண்ட தேசங்களிலிருந்து ஸ்பெயினுக்கு வரும் சரக்குகள் விஷயமாயும் ஜெர்மானியர் இம்மாதிரியான தடங்கல் ஏற்படுத்தியிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஸ்பெயின் தேசம், ஜெர்மானியர் சொல்லுக்கு அடங்கும்வரை, இம்மாதிரி, தடைகள் நிவர்த்திக்கப்படமாட்டா.

ஹிட்லர் இந்தப் பொருளாதார முற்றுகையை முதல் தடவையாக உபயோகப்படுத்துவதால் நிச்சயமாய் ஹிட்லருக்கு மிகவும் அவசரத்தேவை ஏற்பட்டு விட்டதென்று வெளிப்படையாகிறது.

இதுவரையில் "பிரிடனுடன் சேரவேண்டாம், போதுமான உணவுப்பொருள் நாங்கள் உமக்கு கொடுக்கிறோம். கொடுக்க முடியும்" என்று ஜெர்மானியர் சொல்லி ஸ்பெயினை தங்கள் ஏமாற்றவலையில் விழும்படி எத்தனம் செய்து வந்தார்கள். ஆனால் இந்தக் கக்ஷி கேவலம் அடித்துப்பேசும் பேச்சாத்தானிருந்தது அதற்கு ஒருமதிப்பும் கொடுக்கப்படவில்லை.

## ஸீனர் ஸூனரின் மனப்பான்மை.

இந்தப் பொருளாதாரத்தடங்கல் ஏற்படுத்தியதுகூட, ஒருக்கால் நாஸிக்காரருக்கு வேண்டியவரும் ஸ்பானிய அயல்நாட்டு மந்திரியான ஸீனர் ஸூனருக்கு

நன்றாய்த் தெரியும். ஒருக்கால் அவனுடைய தூண்டுதலின்பேரில்கூட ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். அவனுக்கு ஜெர்மானியர்கள் பக்கம் சேரவேண்டுமென்ற கொள்கை வெகு பலமாக யிருந்தது, காரணமாய்த்தான் இங்கிலாந்து அமெரிக்கா இந்த தேசங்களிடமிருந்து பொருள்கள் பெற்றுக்கொள்ளக்கூடாதென்று ஒரே வண்ணமாய்ச் சொல்லிக்கொண்டே வந்திருக்கிறான்.

பிரிடன் ஸ்பெயினுக்கு சமீபத்தில் கொடுத்த கடன் சம்பந்தமான ஸ்பெயின் மந்திரிசபைக் கூட்டத்தில் கூட, ஸீனர் ஸுனர் கடனைப் பெற்றுக்கொள்ள வேண்டாம், தான் ஜெர்மனியுடன் ஒத்துழைக்கும் கொள்கைக்கு இது அசந்தர்ப்பமாயிருக்கும், என்று சொன்னதாகத் தெரிகிறது.

## ஒரு மந்திரி ராஜினாமாச் செய்வதாய் பயமுறுத்துதல்.

இதில் ஸீனர் ஸுனர் ஜயித்திருப்பான். ஆனால் வியாபார மந்திரி ஸீனர் கார்ஸேல்லர் பிரிடிஷ் உதவியை ஸ்பெயின் கவர்ன்மெண்டார் நாடத்தான் வேண்டும்; அந்த உதவியன்னியில் ஸ்பெயின் முழுமையும் பட்டினி கிடக்கும்படி நேரிடும். பிரிடிஷ் உதவி பெறுவிட்டால் நான் மந்திரி பதவியை ராஜினாமாச் செய்யப்போகிறேன் என்று பயமுறுத்தினார்.

ஸ்பெயின் சர்க்கார் ஒத்துமை வெளிப்படையாய்த் தெரியும்படி நடந்து கொள்ள வேண்டுமென்ற ஒரே நோக்கம் கொண்ட ஜெனரல் பிராங்கோ, ஸீனர் ஸுனர் சொன்ன யோசனையை நிராகரித்தார்.

ஸ்பெயின் பேரில் ஜெர்மனி போட்டிருக்கும் பொருளாதாரத் தடையானது பெருத்த சங்கடம் விளைவிக்கக் கூடியதாயிருந்தாலும், நாஸிகள் தங்களுடன் ஸ்பெயின் பூரண ஒத்துழைப்பு செய்யவேண்டுமென்ற கோரும் கோரிக்கையை, ஜெனரல் பிராங்கோவும், யுத்த மந்திரி வாரல்லாவும் இன்னும் சில மந்திரிகளும், நிராகரித்து வருகிறதிலிருந்து அச்சுதேசத்தார்களுடன் ஸ்பெயின் ராணுவ ஒத்துழைப்பு செய்து கொண்டால் தங்களுக்கு படுகுழியில் விழுந்து போராபத்தாய் முடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள் என்று ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது.

பிரிடிஷார் ஸ்பெயினுக்கு கடன் கொடுக்கும் விஷயத்தில் ஸ்பெயின் மந்திரி சபையில் ஏற்பட்ட சச்சரவையும் நாஸிகளின் கோரிக்கையை மறுதலிப்பதையும் சேர்த்து கவனிப்போமானால், ஸீனர் ஸுனருக்கு செல்வாக்கு உச்சஸ்தானத்திற்கு வந்துவிடவில்லை என்றே தெரிகிறது.



## மேல பாலைவனத்தில் ஜெர்மானியரின் கஷ்டம்.
## சென்ற வருஷத்தின் இதாலியரின் நிலைமைக்கு நேர்விரோதம்.
## சாம்ராஜ்ஜிய சைனியங்களின் எதிர்கால நிலைமை.
## பலமாக்கப்பட்ட தற்காப்பு.

சென்ற மேமீ 4-ம் தேதி மேலப்பாலைவனத்திலிருந்து "டெய்லி டெலகிறுப்" என்ற பத்திரிகைக்கு ஆர்தர் மெர்டன் என்பர் விடுத்த தந்தி.

ஜெர்மானியர் முன்னேறு முன்பே "ஸிரெனேகன்" பிராந்தியம் பூராவும் அழிக்கப்பட்டு விட்டது. எதிரிகளுக்கு உபயோகமாகக் கூடியதான பெங்காஸியிலும் சோலத்திலுமுள்ள எண்ணெய்க் கிடங்குகளும், தளவாடக் கிடங்குகளும், நாசம் செய்து விடப்பட்டன.

இதாலியரின் நிலைமையோடு ஒத்திட்டுப்பார்த்தால் ஜெர்மானியரின் முன்னேற்றம் இதாலியருக்கு இருந்த ஜலவசதியும் ஆகாரம் இதர சாமான்கள் வசதியும் இல்லாததால், மிகவும் தடைப்பட்டிருக்கிறது.

தங்களுக்கு அத்தியாவசியமான எண்ணெய், ஆகாரம் இன்னும் இதர சாமான்களையும் ஐரோப்பாவிலிருந்து ஜெர்மானியர் தம்முடன்கூட கொண்டுவரவேண்டியிருக்கிறது. இவைகள் 'ட்ரிபோலி'யில் இறக்க வேண்டியிருக்கிறது. 'ட்ரிபோலி' யுத்தரங்கத்துக்கு—ஸோலத்திலிருந்து 1,000 மைல்கள் அப்பால்—வெகு தூரத்திலிருப்பதால் 'பெங்காஸி' மார்க்கமாகத்தான் எல்லாம் இறக்குமதியாக வேண்டும்.

இதன் பேரில் இடைவிடாது தொடரப்பட்டுவரும் சாம்ராஜ்ஜிய விமானப் படையெடுப்பின் காரணமாக இந்த துறைமுகம் பெரிதும் பலனற்றதாக செய்யப்பட்டு வருகிறது.

ஜெர்மானியரும் உள்நாட்டு பாலைவனப் பாதை வழியே சாமான்களைக் கொண்டுவர எத்தனிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சந்தோஷிக்கக் கூடியதான தமாஷ் பிரயாணமல்ல.

சைனியத்தை ஏற்றிச் செல்லக்கூடியதான விமானங்கள் மூலம் அல்லது சமுத்திரக்கரையோரமுள்ள பாதை வழியாகத்தான் எல்லா தளவாடங்களும் கொண்டுவர வேண்டியிருப்பதால் அவைகள் சாம்ராஜ்ஜிய விமானப்படையெடுப்புக்கும், கடற்படைக் கஷ்டத்துக்கும் உள்பட்டன.

தமாஷ் பிரயாணங்கள் செய்வதில் ஜெர்மானியர் பிரசித்தி பெற்றவர்கள் அல்லவா? அவர்கள் எவ்விதம் இப்பிரயாணங்களை கிரீஸிலும், இதாலியிலும், ரைன்லாண்டிலும் அனுபவித்தார்கள் என்பது தெரியும். எதேச்சாதிபதிப் பூரரால் அனுப்பப்பட்டிருக்கும் தமாஷ் பிரயாணம் செய்யும் ஜெர்மானியர் லிபியாவில் சௌகரியம் அடையவில்லை.

மணல் காற்றாலும், அதிக உஷ்ண வெயிலாலும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இச் சீதோஷ்ணம் மேலும் அவர்களைத் துன்பப்படுத்துகிறது.

இதை விறு கைதிகளாக்கப்பட்டிருக்கும் ஜெர்மானியர் வசமிருந்து கிடைத்திருக்கும் கடிதங்களிலிருந்து அவர்கள் ஜலக் குறைவாலும், நல்ல ஆகாரம் இல்லாமையாலும், கடலிலிருந்தும் ஆகாயத்திலிருந்தும் சரமாரியாக பொழியப்பட்ட வெடிகுண்டுகளினாலும், பெரிதும் அவதிப்பட்டிருப்பதாக அறியக் கூடுகிறது.

அவர்களில் ஒருவர் "இந்நரகத்திலிருந்து தப்பினால் என் வாழ்கை பூராவும் கடவுளின் சேவைக்கு அற்பணம் செய்வேன்" என்று தன் கஷ்டத்தை குறித்து எழுதியிருந்தான்.

## ஆஸ்திரேலிய சைனியம் செய்வதாவது.

முக்கியமான தற்காப்பு ஸ்தானத்திலிருந்த ஆஸ்திரேலிய படையைப்பார்த்து நான் திருப்தி அடைந்தேன். தற்போது அவர்களுக்கு எதிரியாக வந்திருப்பவர்கள் இந்தப் பிராந்தியத்தில் இதற்கு முன் எதிர்ப்பட்ட எதிரிகளைப் போன்றவர்கள் அல்ல என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

இவர்கள் எந்த நேரத்திலும் எதிர்க்ககூடுமென்றே தற்காப்புக்கான வசதி ஸ்தாபனங்களை மிகவும் கண்காணித்து வருகிறார்கள். இவர்கள் அங்கு வந்ததிலிருந்து அவைகள் முன்னிலும் அதிகமாக பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

தன் பொறுப்பானதும் தான் வேவுபார்க்க வேண்டிய ஸ்தானமுமான தரை மட்டத்துக்கு அதிக ஆழத்திலிருந்த அறையிலிருந்த ஒருவன் என்னிடம் சொன்னதாவது 'ஜெர்ரீ' (ஜெர்மானியன்) யைப்பற்றி நாங்கள் கேள்விப்பட்டிருக்கும் சங்கதிகள் எங்களை அச்சமுறச் செய்யவில்லை. அவர்கள் எங்களுடன் கைகலக்கட்டும். தற்காப்பு ஸ்தலங்களில் வீணில் முட்டிக்கொண்டு மண்டைகளை உடைத்துக்கொள்ளுவார்கள்."

சென்ற படையெடுப்பில் இவ்வித பாதுகாப்பு முஸ்தீப்புகள் கிடையாது. இப்போதோ மிகவும் பலமுள்ளதாயும், விமானப்படை யெடுப்பை துரத்தியடிப்பதற்கான பீரங்கி வசதிகளுடன் இருக்கிறது.

சென்ற வருஷ மிங்கிருந்த எதிரியைவிட தற்போது இருக்கும்எதிரியின் வைரத்தையும் முயற்சியையும் அறிந்து கொண்டிருப்பதாகவே இதிலிருந்து வெளியாகிறது. அதுவுமன்றி படைத்தலைவர்கள் என்ன நேரும் என்று அறிந்து கொண்டிருப்பதாகவும் தெரியக்கூடுகிறது.

இந்த முஸ்தீப்புகள், சாம்ராஜ்ஜிய சைனியங்களின், எதிரிகளை முறியடிக்கக் கூடிய, யோக்கியதையில் நமக்கு நம்பிக்கையை எற்படுத்துகின்றன.

சென்ற ஜூன் மாதத்திலிருந்ததைவிட இப்போது சைனியத்தினுடையவும் தளவாடங்களினுடையவும் சன்னிவேசங்கள் பெரிதும் மாறுபட்டிருக்கின்றன.



எத்தனை சிறியசைனியத்தைக்கொண்டும், அதிலும் சிறிய விமானப்படையைக் கொண்டும், ஜெனரல் வேவலும், ஏர் சீப் மார்ஷல் லாங்மோரும், தங்களைவிட மிகப்பெரியதான இதாலியப் படைகளை, தோற்கடித்தனர் என்பதை மிகச் சிலர் தான் அறிவார்கள்.

'ஸிரெனைகா' ஆக்கிரமிப்பு காலத்திலிருந்ததைவிட பதின்மடங்கு முஸ்தீப்புகள்கொண்ட பெரும்படை தற்போது இருக்கிறது.

கிழக்கு ஆபிரிக்கா யுத்தம் நன்கே முடிவு பெற்றதின் காரணமாகவும், மிக ஸ்வல்ப நஷ்டத்துடன் கிரீஸிலிருந்து திரும்பி வந்தபெரும் படை கிடைத்திருப்பதிலும், இந்த பாலைவன பிராந்தியத்திலுள்ள சைனியம் ஆள் மாகாணத்திலும் தளவாடங்களிலும் மிகவும் பலமாக்கப்பட்டிருக்கிறது. மத்திய கிழக்கு பிராந்தியத்துக்கே பலமேற்பட்டிருப்பதாகக் கூறவேண்டும்.

---

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

---

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### பிரிடிஷ், ஜெர்மன் விமான நஷ்டங்கள்.

மேற்கு ஐரோப்பாவிலும், பிரிடனி (Britain)லும் ஜெர்மனிக்கு விமான நஷ்டம் அதிகமாய்த்தானிருக்கவேண்டும். இல்லாவிட்டால் அதைப்பற்றி டாக்டர் கேயபெல்ஸ் கூட இப்படி கொஞ்ச நாளாக மௌனம் சாதிக்கமாட்டார். திடீரென்று மே மாதம் 12-ம் தேதி அன்று ஜெர்மனியிலிருந்து ஒரு புளுகு வெளியாயிற்று. அது என்னவென்றால் மே மாதம் 9-ம் தேதியிலிருந்து 11-ம் தேதி வரை பிரிடனுக்கு 36 விமானங்கள் நஷ்டமாம். ஜெர்மனிக்கு அதே டயத்தில் 18 விமானங்கள் தானாம். இது ஒரு மகா புளுகு என்று சொல்லவேண்டியதில்லை. உண்மையில் மே மாதம் 9-ம் தேதி விடியற்காலையிலிருந்து மே 11-ம் தேதி நடுநிசிவரை பிரிடனுக்கு 16 விமானங்கள்தான் நஷ்டம் (ஜெர்மனியிலிருந்து வெளியானதைவிட 20 குறைச்சல்); ஜெர்மனிக்கு 58 விமானங்கள் நஷ்டம் (அவர்கள் சொல்லிக்கொண்டதைவிட 40 கூட).

தெரியாத்தனமாக இரண்டு நாளைக்கு முன்னால் ஜெர்மனியின் விமான விமர்சகரான வால்ட் மிட்லர் (Walt Mittler) என்பவர் உண்மையை வெளியிட்டுவிட்டார். "பிரிடிஷார்கள் சமீபத்தில் ஜெர்மனிக்கு விமான நஷ்டம் அதிகமென்று சொல்லுகிறார்கள். எவ்வளவு ஜெர்மன் விமானங்களை அவர்கள் சேதப்படுத்தினார்கள் என்பதைப்பற்றி அவர்களோடு சண்டைபோட நான் தயாராயில்லை" என்று கூறியிருக்கிறார்.

## நாஸிகளுக்கு பிரதேசங்களில் பங்கு வேண்டுமென்கிற அபிலாஷையே இல்லையாம்.

“ஜெர்மனிக்கு பால்கன் (Balkans) நாடுகளில் ஒரு அடிகூட பூமிவேண்டிய தில்லை” என்று “பேயர்ஸென் ஸீடங் (Boersen Zeitung)” என்னும் ஜெர்மன் பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருந்தது. அதை மே மாதம் 12-ம் தேதி ஜெர்மன் ரேடியோ திருப்பித்திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தது. இந்த மாதிரி அதில் எழுதியிருந்ததே ஒரு பெரிய அபாயம் வருவதை காட்டுவது போலிருந்தது. ஏனென்றால் ஹிட்லர் (Hitler) இம்மாதிரி ஒவ்வொரு தேசத்தையும் படையெடுப்பதற்கு முந்தி பறைசாற்றுவது வழக்கம். ஆகையால் இம்மாதிரி ஜெர்மன் ரேடியோ அலறுவதைக்கேட்டுவிட்டு பால்கன் நாடுகளின் ஜனங்கள் பயந்தார்கள் என்றால் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

ஆஸ்திரியா (Austria)வை ஜெர்மனியோடு சேர்த்தபிறகு தனக்கு இனிமேல் ஐரோப்பாவில் மண்ணாசை கிடையவே கிடையாது என்று ஹிட்லர் (Hitler) பறை சாற்றினார். ஆனால் என்ன நடந்தது. ஸெகோஸ்லோவாகியா (Czechoslovakia)வில் ஒரு பாகம்; போலந்தி (Poland)ல் ஒரு பாதி; அல்ஸாஸ் (Alsace), லொரேன் (Lorraine) என்னும் தேசங்கள்; பெல்ஜிய (Belgium)த்திலுள்ள யூபன் (Eupen), மால்மிடி (Malmedy) என்னும் ஜில்லாக்கள் இவைகளை எல்லாம் கபளீகரம்செய்து ஜெர்மனியோடு சேர்த்துவிட்டார். பார்க்கப்போனால் பல்கேரியா (Bulgaria) என்ன, ஹங்கேரி (Hungary) என்ன இவைகளும் ஜெர்மனியைச் சேர்ந்தவைகள்தான். அக்கம்பக்கத்து தேசங்களைத் திருப்தி செய்து தன்னோடு சேர்த்துக்கொள்வதற்காக ருமேனியா (Rumania)வை கொஞ்சமேனும் ஈவிரக்கமில்லாமல் பங்கு போட்டு தானம் செய்தாகி விட்டது. யூகோஸ்லாவியா (Yugoslavia)வின் ஒரு பாகமான க்ரோயேஷியா (Croatia)வை ஒரு சுதந்திர நாடு என்று பெயரைக்கொடுத்து இதாலியின் ராஜ வம்சத்தைச்சேர்ந்த ஒருவரை பொம்மை ராஜாவாகவும் செய்துவைத்திருக்கிறது. கடைசியில் இதாலியின் முகத்தில் கரியைப்பூசிவிட்டு ஜெர்மனி அதையும் கபளீகரம் செய்தாலும் செய்யக்கூடும்.

## B.—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

### பிரிட்டனில் விமானத்தாக்குதல்.

ஜெர்மனியின் விமானத் தாக்குதல்களால் பிரிட்டனில் சேதம் அதிகமாகிக்கொண்டு வருவதைப்பார்த்து சில பிரிடிஷ் ராஜதந்திரிகளுக்கு கவலை அதிகமாகிக்கொண்டு வருகிறது என்று ஏதோ ஒரு ஸ்வீடிஷ் பத்திரிகையில் எழுதியிருப்பதாக ஜெர்மன் ரேடியோவில் மே மாதம் 16-ம் தேதி அன்று ஹிந்துஸ்தானி பாஷையிலும், பர்ஸியன் பாஷையிலும் ஒலிபரப்பினார்கள். உண்மையில் “ஸ்வென்ஸ்கா டாக்ப்ளாடெட் (Svenska Dagbladet)” என்னும் ஸ்வீடிஷ் பத்திரிகை அதனுடைய லண்டன் நிருபர் சொன்னதாக பின்வருமாறு எழுதியிருந்தது. “இப்பொழுது போடுவதைப்போல் இனிமேலும் ஜெர்மானியர் பிரிட்டன்மேல் குண்டுகளைப் போட்டாலும் கூட இங்கிலாந்தின் தொழிற்சாலைகளை அழிக்க சுமார் 100 வருஷமாவது செல்லும். இம்மாதிரி வியாபார ஸ்தலங்களிலும், தொழிற்சாலைகள் இருக்குமிடங்களிலும் குண்டுகள் போடுவதால் பிரிடிஷாரின் மன உறுதி தளராமல் அதிகமாகிக்கொண்டுவருகிறது. யுத்தத்தில் வெற்றிபெற இன்னும் எந்தக் கஷ்டங்களையும் சகிக்க சித்தமாயிருக்கிறார்கள்.”



### “எஃகு.”

மே மாதம் 16-ம் தேதி ஜெர்மனியிலிருந்து வரும் இந்துஸ்தானி ஒலிபரப்பில் பின்வரும் விஷயம் சொல்லப்பட்டது. “அமெரிக்காவில் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் வரவர அதிகமாகிக்கொண்டுவருகிறது. ஜெனரல் மோட்டார் கம்பெனி (General Motors' Company)யில் 35,000 தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்துவிட்டார்கள்.” உண்மையில் மேற்சொன்ன கம்பெனியின் முதலாளிகளுக்கும், வேலையாட்களுக்கும் மனஸ்தாபம் தீர்ந்து, சமாதானமாய் போய்விட்டார்கள். அமெரிக்காவில் நாஸிகளின் சதிவேலை இருந்தாலும்கூட ஜெர்மனியைவிட அதிகமாகவே எஃகு (கெட்டி இரும்பு) உற்பத்தி செய்யப்படுகிறது. 35,000 டன் நிறையுள்ள மிகவும் சக்தி வாய்ந்த “வாஷிங்டன் (Washington)” என்னும் அமெரிக்க யுத்தக் கப்பல் கட்ட திட்டம் போட்டபடி அதற்கு 6 மாதத்திற்கு முந்தியே கட்டி முடிந்தாய்விட்டது.

### நாஸிகளும், முஸ்லிம்களும்.

பாலஸ்தீன (Palestine)த்திலிருக்கும் பிரிடிஷாருக்கும் அராபியர்களுக்குமிடையே கலகமுண்டுபண்ண நாஸிகள் தங்களால் இயன்றவரையில் பொய் பிரசாரம் செய்து பார்க்கிறார்கள். ஒரு நாள் அதாவது மே 13-ந்தேதி பாலஸ்தீனத்திலிருந்து 7,000 மைல்களுக்கு அப்பாலிருக்கும் உருகுவே (Uruguay) என்ற தென் அமெரிக்க நாட்டிலிருந்து வெளியானதாக ஒரு புளுகை ஜெர்மன் ரேடியோவில் இந்துஸ்தானியிலும், அரபிக் பாஷைகளிலும் ஒலிபரப்பினார்கள். “பிரிடிஷ் விமானங்கள் முன்னைவிட அதிகமாக பாலஸ்தீனத்தைத் தாக்குகின்றன.” பிரிடிஷ் விமானங்களோ ஒரு நாள்கூட பாலஸ்தீனத்தின், மேல் படையெடுத்ததில்லை. அப்படியிருக்க எப்படி படையெடுப்பை அதிகமாக்க முடியும்.

அதேமாதிரி மே 17-ந்தேதியன்று பிரிடிஷார்கள் பாலஸ்தீனத்தில் செய்யும் கற்பனை அக்கிரமங்களைப்பற்றி ஜெர்மன் ரேடியோ மூலம் எடுத்துச்சொல்லி முதலைக் கண்ணீர் விட்டார்கள். அதற்கு அனுசரணையாக முஸ்லீம்களுக்கு ஹிட்லரின் சாம்ராஜ்ஜியத்தில் வரப்போகும் சௌகரியங்களைப்பற்றி க்ரோயேஷியா (Croatia)வின் முஸ்லீம் பிரமுகர் சொன்னதாக சிலவற்றை ஒலிபரப்பினார்கள். பிரிடிஷாருக்கும், பாலஸ்தீனியர்களுக்கும் ஏதோ சில விஷயங்களில் வித்யாஸமான மனோபாவம் இருந்தாலும் எதிரியை எதிர்த்துத் தோற்கடிப்பதில் ஒரு விதமான விரோதமான மனோபாவமும் கிடையாது. “அராபியர்களே—நமக்குள்

இருக்கும் வித்தியாசங்களை ஒதுக்கிவையுங்கள். உள்நாட்டு பிரச்னையை ஒதுக்கிப்போடுங்கள். இந்த உலக மகாயுத்தத்தில் உங்கள் பங்கை எடுத்துக் கொள்ளுங்கள். உலகத்தில் நியாயம் என்பது வெற்றிபெற்று நிலைபெற்று நிற்கும்பொழுது நமக்கும் அதில் பங்கெடுத்துக்கொண்டதற்காக பலன் கிடைக்கும்" என்று "பாலஸ்தீன் (Palestine)" என்ற பத்திரிகை எழுதிற்று. அச்சு நாடுகளின் கீழ் முஸ்லீம்களின் கதி என்னவாகும் என்பதைப்பற்றி, லிபியா (Libya), அல்பேனியா (Albania), அபிஸீனியா (Abyssinia) என்னும் தேசங்களில் இதாலியின் கொடுங்கோலால் முஸ்லீம்கள் அனுபவித்ததை நினைத்துப் பார்த்தாலே தெரியும். இதற்கு எதிரிடையாக பிரிடிஷார்கள் எகிப்து (Egypt) இராக் (Iraq), ட்ரான்ஜோர்டானியா (Transjordania), ஸாடி அரேபியா (Saudi, Arabia) முதலிய நாடுகளுக்குச் செய்திருக்கும் நன்மைகளைப் பாருங்கள். அவைகளில் சில முழுவதும் சுயேச்சை நாடுகளாய் விட்டன. சில அந்நிலைமையை எய்தும் நிலைமைக்கு அநேகமாக வந்துகொண்டிருக்கின்றன.

## ஒரு பெரிய ஜெர்மன் தவறு.

கிரீஸி (Greece)ல் பிரிடன் தோல்வியடைந்ததால் துருக்கியர்கள் பிரிடனை கேவலமாக எண்ணுகிறார்கள் என்று ஜெர்மனியிலிருந்து மே மாதம் 13-ம் தேதி துருக்கியிலிருந்து ஏதோ வெளியானதாக இந்துஸ்தானியிலும், பர்ஸியனிலும் ஒலிபரப்பினார்கள். பால்கனில் ஜெர்மனி நடத்திய யுத்தத்தைப் பற்றி துருக்கியர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதற்கு துருக்கிய பத்திரிகையான கும்குரியத் (Cumhuriyet) தில் வெளியான கட்டுரையே போதுமான அத்தாக்ஷியாகும். "பிரிடிஷ் ஜனங்களை நேரடியாக நின்று எதிர்த்து ஜயிக்க முடியாததால் ஜெர்மனி பால்கனி (Balkans)ல் சண்டையை ஆரம்பித்திருக்கிறது. ஜெர்மனி யூகோஸ்லாவியா (Yugoslavia) விலும் கிரீஸி(Greece)லும் இழக்கும் ஒவ்வொரு ஜெர்மானியனும், ஒவ்வொரு விமானமும், ஒவ்வொரு குண்டும் ஜெர்மனிக்கு ஒரு பெரிய நஷ்டம். ஏனென்றால் கடைசியாக பிரிடிஷ் தீவுகளின் அருகே நடக்கப்போகும் முடிவான போரில் ஜெர்மனிக்கு இவைகள் மிகவும் அத்யாவசியமாக இருக்கும்."

---



# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

---

## பிரஸங்கம் XLVI.

| 1941— | | | | | | மணி. |
|---|---|---|---|---|---|---|
| மே | ...31, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| ஜூன் | ... 1, | ஞாயிற்றுக்கிழமை. | கீரப்பழனி | ... | ,, | 6.00 |
| | | | ஆலூர் | ... | ,, | 6.30 |
| | 2, | திங்கட்கிழமை ... | காரையூர் | ... | ,, | 6.00 |
| | | | கீழத்தானியம் | ... | ,, | 6.30 |
| | 3, | செவ்வாய்க்கிழமை. | அண்டக்குளம் | ... | ,, | 6.00 |
| | | | கிள்ளனூர் | ... | ,, | 6.30 |
| | 4, | புதன்கிழமை ... | நார்த்தாமலை | ... | ,, | 6.00 |
| | | | உப்பிலியக்குடி | ... | ,, | 6.30 |
| | 5, | வியாழக்கிழமை ... | செம்மட்டிவிடுதி | ... | ,, | 6.00 |
| | | | மழையூர் | ... | ,, | 6.30 |
| | 6, | வெள்ளிக்கிழமை... | கொன்னையூர் | ... | ,, | 6.00 |
| | | | மேல வேகுபட்டி | ... | ,, | 6.30 |

## பிரஸங்கம் XLVII.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| 8, | ஞாயிற்றுக்கிழமை. | திருவரங்குளம் | ... | ,, | 6.00 |
| | | வம்பன் | ... | ,, | 6.30 |
| 9, | திங்கட்கிழமை ... | குளவாய்ப்பட்டி | ... | ,, | 6.00 |
| | | கீழையூர் (தெற்கு) | ... | ,, | 6.30 |
| 10, | செவ்வாய்க்கிழமை. | வெள்ளனூர் | ... | ,, | 6.00 |
| | | புத்தாம்பூர் | ... | ,, | 6.30 |
| 11, | புதன்கிழமை ... | மேலூர் | ... | ,, | 6.00 |
| | | பில்லமங்கலம் | ... | ,, | 6.30 |
| 12, | வியாழக்கிழமை. | கடயக்குடி | ... | ,, | 6.00 |
| | | மிரட்டுநிலை | ... | ,, | 6.30 |
| 13, | வெள்ளிக்கிழமை... | ஒடுக்கூர் | ... | ,, | 6.00 |
| | | நாங்குப்பட்டி | ... | ,, | 6.30 |

புதுக்கோட்டை ஸமஸ்தானம்

யுத்த நிதிக்காக போடப்படும்

# அதிர்ஷ்டச் சீட்டு.

(ஸ்ரீ-தர்பாரவர்கள் உத்தரவின்பேரிலும் ஆதரவின் பேரிலும் புதுக்கோட்டை யுத்தநிதி எண்டெர் டெயின்மெண்ட் கமிட்டியாரால் நடத்தப்படுகிறது.)

---

## இந்த யுத்த நிதியை ஆதரியுங்கள்

டிக்கெட்டுகளை வாங்குங்கள்

## முடிவு தேதி 15—6—41

## சீட்டு குலுக்கும் தேதி 23—6—41

---

நமது மன்னர் அவர்களின் வருஷவர்த்தனை தினத்தன்று அதிர்ஷ்டசாலிகளுக்கு ஏராளமான பரிசுகள்.

## 300 பரிசுகள்.

| | | | |
|---|---|---|---|
| 1-வது பரிசு | ரூபாய் | 7,500 | |
| 2-வது பரிசு | ,, | 5,000 | |
| 3-வது பரிசு | ,, | 2,500 | |
| 2 பரிசுகள் | ,, | 1,000 | விதம் |
| 5 ,, | ,, | 500 | ,, |
| 90 ,, | ,, | 100 | ,, |
| 100 ,, | ,, | 50 | ,, |
| 100 ,, | ,, | 15 | ,, |

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—1-6-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ௵ ஜூன்௴ 7௳ [ந. 47.

பிரஸங்கம் XLVII.

## ஒரு தெளிவான யோசனை.

---

[கீழே சொல்லப்படும் விஷயம், அமெரிக்காவின் ஐக்கிய சமஸ்தானங்களின், சமஸ்தான காரியதரிசியான மிஸ்டர் கார்டல் ஹல் என்பவரால் (Mr. Cordell Hull, Secretary of State) ஏப்ரல்௴ 24௳ அமெரிக்கர்களுக்கு ரேடியோ மூலமாக சொல்லப்பட்டது. மிஸ்டர் ஹல் சாதாரண மனிதரல்ல. அவர் கூர்மையான புத்தியும் அனுபோகமும் வாய்ந்த ஒரு ராஜ்ஜிய காரிய நிபுணர். எது ஆபத்திலிருக்கிறது என்று அவர் சொல்லிய விஷயமானது எவ்விதமாக அமெரிக்கர்களின் கவனிப்புக்கு வந்ததோ அவ்விதமே இந்தியாவிலும் கவனிக்கப்படவேண்டும்.]

தற்கால உலகநிலைமையின் சிற்சில கடினமான அம்சங்களைப்பற்றியும் அவை எவ்விதமாக நமக்கு ஜீவாதாரமாக இருக்கிறது என்பது பற்றியும் நான் இப்பொழுது தர்க்கம் செய்கிறேன்.

உலகத்தின் எல்லா ஜாதியாரையும், எல்லா ஜனங்களையும் ஆகர்ஷித்துக் கொண்டும், இனிமேல் ஆகர்ஷித்துக்கொள்ளவும், இருக்கக்கூடிய மிகவும் துணிகரமான கொடுமையான காலத்தில் நாம் இருக்கிறோம். துரதிர்ஷ்டவசமாக அநேகருக்கு இவ்வுலகம் பூராவும் பரவியிருக்கிற ஆபத்தின் ஸ்வபாமும் நம் தேசத்துக்கு அதன் விசேஷமும் தெரிந்து கொள்ளமுடியவில்லை.

அநேகர் இந்த யுத்தம் ஒரு தேசமும் மற்றொன்றும் சம்பந்தப்பட்ட சாதாரணமானதென்றும், அது முடிவடைந்தவுடன் வெற்றியடைந்த தேசம் தோல்வியுற்றதிடமிருந்து நஷ்ட ஈடுபாடு செய்து கொண்டு அதை யுத்தத்துக்கு முன் இருந்த நிலைமையிலே ஒரு ஹானியுமன்னியில் அவர்களிடமே விட்டுவிடும் என்றும் நினைக்கிறார்கள். தற்சமயம் கொடுமைத் தொழிலில் இறங்கி இருக்கும் அரசாங்கங்கள் (The Axis powers) வெற்றியடையும் பக்ஷத்தில் மேலே சொன்ன பிரகாரம் நினைப்பது பிழையாகும். அவர்கள் புரியும் யுத்தம் சாதாரணமானது அல்ல, அவர்களின் யுத்த முறை அநாகரீகமானதும் மிருகத்தனம் படைத்ததாகவும் இருப்பதுடன், ஜனங்கள் தங்கள் சுய உரிமைப்படி சுயேச்சையாய் வாழ்வதையும், தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்வதையும், வேருடன் அறுக்கும் உத்தேசத்துடன் செய்வதாகும்.

தாங்கள் ஜயிப்பதாக நினைப்பவர்கள் அவ்வாறு வெற்றி அடைந்தவுடன் தோல்வியடைந்த ராஜ்ஜியங்களின் ஒவ்வொன்றின் ஒவ்வொரு பாகத்தையும் ராஜாங்கத்தையும், அவர்களின் சகல சொத்துக்களையும் தாங்களே எடுத்துக் கொள்ள நினைக்கிறார்கள். மேலும் அவர்களை சின்னாபின்னமாகப் பிரிப்பதுடன், அவர்களுடைய சுயேச்சை, பாத்தியங்கள், சட்டதிட்டங்கள், மதம் முதலியவைகளை ஒழிக்கவும் உத்தேசித்திருக்கிறார்கள். வாழ்கையின் உன்னதமும் கேர்த்தியுமான அம்சங்களையும் வேருடன் பிடுங்கிவிடுவார்கள்.

மேலே சொன்னவகையாக பிரஸ்தாப யுத்தம் உலகம் முழுதும் பரவிக் கொண்டுவருகிறது.

கொள்ளைக்கூட்டத்தார் ஒரு நகரத்தைத் தாக்கினால் எவ்விதம் அந்நகரத்தின் செல்வந்தனர்கள் அதினின்று தப்பமுடியாதோ அதுபோல உலகத்திலுள்ள எந்த ராஜ்ஜியமும் இந்த யுத்தத்தில் எதிரி தாக்குவதினின்றும் தன்னை விலக்கி விடுவான் என்று நினைக்க யாதொரு காரணமும் இல்லை என்று அனுபோகத்திலிருந்து தெரிகிறது.

தற்சமயம் தோல்வியுற்ற ராஜ்ஜியங்கள் எதிரிகள் கையில் படும் பாட்டையும், அவர்கள் அடிமைத்தனத்தை ஒழிக்கவும், அவர்கள் மீண்டும் நாகரீகத்தின் நன்மைகளை அடையவும் வேண்டுமானால், எதிரிகள் தோல்வியடையவேண்டியது அவசியம் என்பது ஒவ்வொரு அறிவாளிக்கும் தெரியும். இத்தன்மையதாகவே ஆஸ்திரியா, ஸெக்கோஸ்லவோக்கியா, போலந்து, நார்வே, டென்மார்க், ஹாலந்து, பெல்ஜியம், அல்பேனியா, லக்ஸம்பர்க், பிரான்ஸ், ருமேனியா, ஹங்கேரி, பல்கேரியா, யூகோஸ்லாவியா முதலிய நாடுகள் இருக்கிறது. சரிவர நினைக்கக் கூடிய அநேகரும் இது நடக்குமென்று தெரிந்துகொள்ள முடியாதிருக்கிறார்கள். அவர்களுக்கு அது நம்பத்தக்கதாக இல்லை. இருந்தபோதிலும் நடப்புகள் பிரத்யக்ஷமாக நமக்குத் தெரிகின்றன. உலகம் ஒரு நெருக்கடியிலிருக்கிறது என்பது பயங்கரமான யுத்த நடப்புகளிலிருந்து தெரிகிறது. எதிரிகளின் சைனியங்கள் ஒரு தேசத்தில் நுழைந்ததும் வீடுகள் நாசமாக்கப்படுகின்றன. குடும்பங்கள் வெளியே விரட்டப்பட்டு பசிப்பிணியால் வாடுகிறார்கள். சாதாரண



ஜனங்கள் (civilians) யுத்தகளத்தில் மாழ்கிறார்கள். சண்டை முடிந்தபிறகும் எதிரியின் அரசாங்க நிர்வாகமும் சகிக்கமுடியாதபடி இருக்கிறது. யாதொரு பரிகாரத்துக்கும் இடமில்லாமலிருக்கிறது. என்ன நடக்கிறதென்றால், வீடுகள் கொள்ளையடிக்கப்படுகின்றன, பிரிக்கப்படுகின்றன, கோவில்கள் மூடப்படுகின்றன, ஜனங்களுக்கு ஆகாரம் மறுக்கப்படுகிறது, அரைவாசி அடிமைத்தனமும் ஏற்படுத்தப்படுகிறது. யுத்தப் படைகளின் அகோரத்துக்குப் பதிலாக சாதாரண மனிதர்களின் (civilians) கொடுமை மாற்றப்படுகிறது. எல்லாவிதமான சாத்தானின் மார்க்கங்களையும் உபயோகித்து ஜனங்கள் ஆழ்த்தப்பட்டு தோல்வி அடைந்த ராஜ்ஜியத்தை வெற்றியாளர் தங்களுக்காக உபயோகித்துக்கொள்கிறார்கள்.

முடிவு என்னவென்றால், எப்பொழுது 15 தேசங்கள் தங்கள் வாழ்க்கையின் இன்பத்தை இழந்தார்களோ இனி மற்ற ராஜ்ஜியங்கள் கூடுமானவரை சீக்கிரம் தங்கள் முழுபலத்துடன் யுத்தபாணிகளாக தங்களைக் காப்பாற்றிக்கொள்வதில் இறங்கவேண்டும்.

நம்மவர்களில் சிலர், நல்லெண்ணத்துடன், எதிரி நம்தேச எல்லையை கடவாதவரை நாம் எதிர்க்க வேண்டியதில்லை என்று சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்வது, எதிரி மற்ற நான்கு கண்டங்களையும் பிடித்து, சமுத்திரங்களைத் தன் வசப்படுத்தி எல்லா முக்கிய இடங்களையும் தன் வசப்படுத்திக்கொண்டு நம் எதிர்ப்பின் பலத்தையும் குறைத்தபிறகு யுனைடெட் ஸ்டேட்ஸ் தான் அடங்கிய மேல அர்த்தகோளத்தை எதிர்க்கலாம் என்பது ஆகும். அது ஒரு எதிர்ப்பு ஆகாது. இது முன்யோசனை இல்லாததும் அபாயகரமான எண்ணமுமாகும்.

நடந்த சம்பவங்களிலிருந்து மேல அர்த்தகோளத்தையும் இந்த தேசத்தையும் பத்திரப்படுத்த வேண்டுமானால் நாம் எதிரியை எதிர்த்தலைக் கையாளுவதுடன் எங்கெங்கு அது பயனுற்றதாகுமோ அங்கெல்லாம் கையாளப்படவேண்டும். என்னுடைய அபிப்பிராயத்தில் நம்முடைய அபாயமில்லாத நிலைமையும் பயமின்மையும் ஏற்படுவதற்கு, நம்முடைய சட்டசபையும், நிர்வாக இலாகாவும் ஏற்கனவே தீர்மானித்து பகிரங்கப்படுத்தியிருக்கிற பிரகாரம், நாம் தாமதமன்னியில் பிரிட்டனுக்கும் அதன் சகாக்களுக்கும் உதவிபுரிதல் அவசியமாகும்: அவ்விதமான உதவி சொற்பகாலத்தில் மிகுதியாக அந்த நாடுகளுக்குப் போய்ச்சேரவேண்டும். ஆகையால் இதற்கு வழிகள் கண்டுபிடிக்கப்படவேண்டும்.

இந்த உதவிபுரியும் சம்பந்தமாக, சில சமயங்களில் கிளம்பும் வினாக்கள் உங்களுக்கும் எனக்கும் நன்கு தெரியும். அந்த வினாவாவது "ஏன் மற்ற தேசங்கள் தங்களை யுத்தத்தில் தடுத்துக்கொள்வதில் நாம் அக்கரை காட்டவேண்டும்"? இதற்குப்பதில் நன்கு தெரிந்ததே.

தங்களைத் தாங்களே தடுத்துக்கொள்ளும் தேசங்களின் நோக்கம் தங்களுடைய சுயேச்சையையும், வீடுகளையும் காப்பாற்றிக்கொள்ளவே. உதாரணமாக, கிரேட் பிரிடன் முக்கியமாக இந்த நோக்கத்துடன்தான் வேலைசெய்கிறது. யுனைடெட் ஸ்டேட்ஸும், தன்னுடைய ரக்ஷணை, பிரதேசங்களுக்கு உதவிபுரிதல் இவைகளை தன்னுடைய பத்திரநிலைமைக்காகவே செய்துகொள்ளுகிறது. எதிரியுடன் போர்புரியும் தேசங்களின் க்ஷேமமானது நம்முடைய ரக்ஷணம் ஆகும். அதனால் தான் நாம் அவர்களுக்கு உதவி செய்வது நம்முடைய எதிர்ப்பின் ஒரு முக்கிய பாகமாகும். எதிரியின் ஒவ்வொரு வெற்றியும் அவன் மற்ற தேசங்களுடன் போர் புரிவதற்கு உதவியாக இருக்கிறது. விரோதியுடன் எதிர்க்கும் நாடுகளுக்கு நாம் அளிக்கும் உதவியினால் நாம் லோக உபகாரி என்பது மட்டுமல்ல. ஒரு சுயேச்சையான தேசம் மற்ற சுயேச்சையான தேசங்களுக்கு ஒரு கொத்தளம் ஆகும். இக்கருத்தினால்தான் உதவிபுரிய வேண்டியது அவசியம்.

சில சமயங்களில் மேலே சொல்லப்பட்ட பிரமையுற்ற எண்ணத்தையே வேறொரு கேள்வியாகக் கேட்பதுண்டு. அதாவது "ஏன் நாம் யார் ஜயிக்கிறார்களென்று கவனிக்கவேண்டும்? இந்த யுத்தம் பாரம்பரியமாய் அதிகாரத்தைக் கவர்வதற்காக மீண்டும் மீண்டும் நடத்தும் யுத்தத்தில் ஒன்றுதானே? இதனால் அமெரிக்காவிற்கு ஏதாவது லாப நஷ்டம் உண்டா? அப்படியானால் என்ன?"

அதில் வித்தியாசம் உண்டு. முன்பு உலகம் சமாதானத்தில் ஈடுபட்டு இருந்தது. ஒரு தேசத்துக்கும் மேல அர்த்த பூகோளத்தின்மீது கண் இல்லை. அப்படி இருந்தால் நாம் யுத்தத்தில் கலந்து கொள்ளாமல் தனியாக இருக்கலாம். ஆனால் சென்ற பல ஆண்டுகளில் நடந்த சம்பவங்களிலிருந்து சிலதேசங்கள் அடங்கிய ஒரு கும்பலுக்கு புது உலகத்தின்பேரிலும், அதனுடைய செல்வநிலையிலும், நோக்கங்களிலும், வாழ்விலும் கண் இருந்துகொண்டிருக்கிறது என்று நாம் நிச்சயமாய் நினைக்க நமக்கு சாக்ஷியம் இருக்கிறது. அந்த சில தேசங்கள் அடங்கிய கும்பலின் ராணுவ போக்கிலிருந்தும், உத்தியோக அலுவல்களிலிருந்தும், அதன் பேச்சிலிருந்தும், அவர்கள் உலகத்தை வியாபிப்பதில் நம்மையும் உட்படுத்த வேண்டிய நாடுகளில் ஒன்றாகச் சேர்த்திருக்கிறார்கள் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. ஏனென்றால் நம்முடைய சுயேச்சையும், செல்வமும் அவர்களைக் கவர்ந்து படையெடுப்புக்குக் காரணமாக இருக்கிறது.

இருந்தாலும் யார் ஜயிக்கிறார்கள் என்பதில் நமக்கு வித்தியாசம் இருக்கிறது. அந்த வித்தியாசமாவது என்னவென்றால் நாம் நம்முடைய முதுகுகளை சுவர் பக்கம் காட்டிக்கொண்டு, உலகத்தின் 4 கண்டங்களும் நமக்கு விரோதமாக, சமுத்திரங்களை இழந்து, நாம் மட்டும் உலகத்தில் ஜயிக்கப்படாத ஒரே தேசமாகிய நம் அமெரிக்காவைக் காப்பாற்றிக்கொண்டு இருக்கிறோமா என்பதும் அல்லது நாம் சமாதானமும் அமரிக்கையும் பொருந்திய உலகத்தில் நம்மைக் கார்த்துக்கொண்டு இருக்கிறோமா என்பதுமே.

மேலும் எந்த வகையில் நாம் ஆபத்திலிருக்கிறோமென்றும் கேட்கப்படுகிறது. நம் பயம் எல்லாம் அகாரணமானது என்றும் சொல்லப்படுகிறது. யுத்தத்தில்



இறங்கியுள்ள ஒரு தேசம் இங்கிலீஷ் சானலுக்கு குறுக்கே 20 மைல்களிலுள்ள பிரிடனைத்தாக்க முடியாமலிருக்கும் பொழுது அட்லாண்டிக் மஹாசமுத்திரத்துக்குக் குறுக்கே 3,000 மைலிலுள்ள நம்மை எப்படி எதிர்க்கமுடியும் என்று சொல்லப்படுகிறது. ஏன் இங்கிலீஷ் சானலை எதிரி கடக்கமுடியவில்லை என்பதற்குக் காரணம் பிரிடிஷார் அந்தச் சானலை பூராவும் தங்கள் ஆதிக்கத்தில் வைத்திருப்பதே ஆகும். மேலும் பிரிடனிலுள்ள 4 கோடி ஜனங்களும் வீரர்களாகவும் மனத்தீர்மானத்துடனும் எதிரியை தீவிரமாக எதிர்க்க முன்வந்து தங்களுடைய தீவை ஒரு ராணுவ தீரமாக்கி அதிலிருந்து ஆகாயப்படை, கப்பற்படை என்ற ரூபமாக போர்க்களங்களுக்கு சென்று கொண்டு இருக்கிறார்கள். நடுவில் தண்ணீர் இருப்பதால் மட்டும் எதிரிக்குத் தடையில்லை. பிறகு யாது தடையென்றால் பிரிடிஷாரின் கப்பற்படையினுடையவும் ராணுவப்படையினுடையவும் அசைக்க முடியாத தீர்மானமுமே ஆகும். எதிர்த்துப் போராடும் தேசங்களுக்கு கடல்களிலுள்ள பிடி போய்விடும் பக்ஷத்தில் அட்லாண்டிக் எதிரிக்கு ஒரு தடையாகாது. அது விரிவான வழியாவதுடன் எதிரி மேற்கே தாராளமாகச் செல்ல வழியும் ஆகும். நம்முடைய பாதுகாப்பும் குறைந்துவிடும்.

பிரிடன் தோற்றால் நமக்கு ஒன்று மில்லை என்று சொல்லும் அமெரிக்கர்களுக்கு எதிரிவசம் கடல்கள் உள்ளாவது நம்முடைய எதிர்ப்புக்கும் பாதுகாப்புக்கும் ஹானி ஆகும் என்பது தெரியாததாகும். கடல் அகலமாக இருப்பதால் எதிரியின் படை எடுப்பு சற்று நீண்டகாலமாகுமே ஒழிய அது நமக்குப் பாதுகாப்பைக் கொடுக்காது. பாதுகாப்புக்கு வழி நாம் சமாதானத்தை பிரியப்படும் நாடுகளுடன் சேர்ந்து எதிரி கடல்களை தன் வசப்படுத்தாமல் செய்வதே.

ஐரோப்பிய யுத்தத்தை இறுதிக்குக்கொண்டுவரவும் நாம் நம்முடைய காரியங்களை வழக்கம்போல் செய்யவும் இப்பொழுது உலகத்திலிருக்கும் ஆபத்தை சமாதானமூலம் நீக்கமுடியாதா என்று கேட்கிறார்கள். நானும் கூடுமானால் அவ்விதம் ஏற்படலாம் என்று விரும்புகிறேன். இதற்கு ஒரு தடை இருக்கிறது. ஆனால் போர்புரியும் நாடுகளில் ஒன்று நாம் நினைக்கும் வகையான சமாதானத்தில் பிரியமில்லை. சமாதானத்திலும் நம்புகிறதில்லை. 1938 ௵த்தில் ம்யூனிச் உடன்படிக்கையில் எதிரியால் சொல்லப்பட்ட சமாதானத்தைபோல் இதுவும் சொல்கிறது. அந்த தேசத்துக்கு சமாதானமென்பது சண்டை யென்று சொல்லப்படாத ரகஸ்ய யுத்தம் என்று தெரிகிறது. பிரான்ஸாலும் இன்னும் சில தேசங்களாலும் அவர்கள் அனுபோகத்தில் இது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. சமாதானம் என்ற பெயரின் பின்னால் எதிரி தேசங்கள் யுத்த முஸ்தீப்புகள் செய்துகொள்கிறார்கள். அவர்கள் இவ்விதமாக வர்த்தகர்கள் போலவும், பிரயாணிகள் போலவும் மாறுவேடம் பூண்டு திடுக்கிடும் வகையான சைனியங்களைத் தயாரிக்கிறார்கள். அவர்கள் உளவுபார்க்கவும், பிரசாரத்துக்கும் அமைப்புகள் ஏற்படுத்துகிறார்கள். அவர்கள் வெறுப்பையும் புறக்கணித்தலையும் காட்ட எத்தனிக்கிறார்கள். அவர்கள் தாங்கள் சமாதானமாக இருக்கும் தேசங்களில் சிக்கன எதிர்ப்பு, லஞ்சம், நல்வழியினின்று கெடுத்தல், உள்நாட்டுக் கலகம் முதலியவைகள் மூலம் மேற்படி தேசங்களை பலஹீனமாக்கி கடைசியாக படையெடுப்பின் மூலம் அந்த

தேசங்களை தனக்குக் கீழ் கொண்டுவருகிறார்கள். இவ்வகையான சமாதானம் ஒரு பரியாகும். இந்த சூழ்ச்சியில் யுத்த ஆரம்பத்தில் அநேக தேசங்கள் விழுந்து அறியாமையால் இரையாயின. சர்வாதிகார நாடுகள் தங்களுடைய யுக்திகளை ரகஸ்யமாக வைத்துக்கொள்கிறதில்லை. அவர்கள் வெறுக்கத்தக்கவிதமாக அவைகளை வெளியிடுகிறார்கள். மேலும் அந்த யுக்திகளை எதிர்க்க சாவகாசமில்லாத காலம் வரை சட்டதிட்டத்துக்கு ஒடுங்கி நடக்கும் தேசங்கள் அவைகளை நிஜமானதாக நம்பமாட்டாது என்றும் அவர்கள் சொல்லுகிறார்கள்.

நாம் சுயேச்சை விரும்பும் நாடுகளுக்கு உதவி செய்வதாலும், நம்மை நாமே காப்பாற்றிக்கொள்ள வகை தேடுவதாலும் எதிரிக்கு கோபம் உண்டாகி நம் பேரில் போர்புரியமாட்டானா என்று சிலர் ஆச்சரியப்படுகிறார்கள். ஆனால், விரோதி, தான் எதிர்க்கவேண்டுமென்று உத்தேசித்திருக்கும் தேசம் தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ள ஏற்பாடுகள் செய்துகொள்வதால் சட்டமற்ற எதிரி கோபம் அடைகிறான் என்ற வாதத்தை அனுமானித்துக் கொள்வதாகவும் அவ்வித அனுமானத்தில் எதிரிக்கு கோபம் கொடுக்காமலிருப்பதற்கு மார்க்கம் நாம் எதிரிக்கு அடங்கிப்போவதாகும்.

நம்மை நாம் காபந்து செய்துகொள்வதற்காக ஒரு தேசம் நம்பேரில் யுத்தம் தொடராது. அதற்காகவும் எதிரி நம்மை சும்மாவிட்டுவிடுவதும் இல்லை. தேசங்களைப் பிடிக்க நோக்கம் உள்ளவர்களுக்கு எப்பொழுது யுத்தம் செய்வது சுலபமாகவும் சௌகரியமாகவும் தங்கள் நன்மைக்காவும் இருக்கிறதோ அப்பொழுது யுத்தம் புரிய முன்வருவார்கள். நாம் ஏகோபித்து ஒரே மனதுடனும் பலத்துடனும் எவ்வெப்போது பலனுள்ளதாக இருக்குமோ அவ்வப்போது நம் சக்தியை உபயோகிக்கவேண்டும். இல்லையேல் நாம் நம்மை காப்பாற்றிக்கொள்ளமுடியாது.

யுத்த சம்பந்தமாக சந்தேகமும், பயமும், வினாக்களும் தொடுத்துக் கொண்டு இருப்பவர்களை சரிப்படுத்துவதற்கு மார்க்கம் 13 கோடி ஜனங்கள் அடங்கிய நாம் (அமெரிக்கர்கள்) ஒத்துமையுடன் யுத்தத்துக்குப் புறப்பட்டுச் சென்று நம் நாட்டுக்கு எதிர்ப்புக்குவேண்டிய ஆயுதங்கள் பூர்ணமாக செய்து கொள்வதுதான். இதுவே நம் கடமை ஆகும். இவ்வித எதிர்ப்பு ஆயத்தங்கள் ஒரு மாதத்துக்கல்ல, ஒரு வருஷத்துக்குமட்டும் அல்ல, நம் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படுத்த எதிரி எண்ணும் வரையாகும்.

உலகத்தை பூராவும் ஜயிக்கவேண்டுமென்று கிளம்பி இருக்கும் தேசங்கள் எல்லாம் சமாதான காலவாழ்வு, தொழில் இவைகளைவிட்டுவிட்டன. படைகள் தேவையென்று கனவு கண்டார்கள். உடனே அவைகளை உண்டுபண்ணினார்கள். இப்பொழுது அவைகளைப் பூராவும் உபயோகிக்கிறார்கள். யுத்த தயாரிப்பிலும், யுத்தத்திலும் தங்கள் பிரஜைகளிடமிருந்து அவர்கள் சகல உதவிகளையும் பெற்றிருக்கிறார்கள். சாதாரண குடும்பவாழ்வு, ஓய்வு, தன் சுகஅனுபவம், தன் நன்மை முதலியவை எல்லாம் புறக்கணிக்கப்பட்டது. இவைகள் எல்லாம், தேசத்தின் பலத்துக்கும் உபயோகத்துக்கும் கொடுக்கப்பட்டன.



நாம் நம் பயமின்மையைக் காபந்து செய்துகொள்வதற்கு நம் ஒவ்வொருவருடைய இடைவிடாத, தேசாபிமான தூண்டுதலுள்ள முயற்சிவேண்டும். நம் கைத்தொழிற்சாலைகளை பராமரிஷை செய்துவருபவர்களும் அதில் வேலை செய்பவர்களும், யந்திரங்களை ஓட்டுபவர்களும் அதிகமான யுத்த தளவாடங்கள் செய்வதில் ஈடுபடவேண்டும். அதில் உள்ள ஒவ்வொருவரும், எல்லோரும் தாங்கள் செய்யும் வேலையும், செய்யாதவேலையும் நம் நாடு பயமின்மையில் இருப்பதற்கு அவசியம் என்று அறிந்துகொள்ளவேண்டும். நம்முடைய உற்பத்தி செய்யும் ஒவ்வொரு யந்திரங்களும் ராணுவ தளவாடங்கள் செய்வதற்கு உபயோகிக்கப்படவேண்டும். அவைகள் சாதாரண காலத்து வேலைசெய்வதினின்று ஆபத்துக்காலத்துக்குத் தேவைக்கு உபயோகப்படுத்தவேண்டும். தனி மனிதனோ, அல்லது ஜனத்தொகுதியோ இச்சமயம் தன் அல்லது தங்கள் நன்மையை நினைப்பதற்கோ அல்லது செய்யவோ பாத்யமில்லை. எல்லாம் தேச நன்மைக்காக இருக்கவேண்டும்.

நமக்கும் சுயேச்சை நாடுகளுக்கும் தேவையான யுத்த தளவாடங்கள் செய்வதில் நாம் எவ்வளவு முன் வருகிறோமோ அந்த அளவிற்கு நம் புத்தி கூர்மையும் வெளியாகும்.

சிலர், தாத்காலியமாக நமக்கு பிரதிகூலமான சமாசாரங்களைக்கண்டு அதைரியம் அடைகிறார்கள்.. எதிரியின் பலமுள்ள பிரசாரக்கூட்டங்கள் இந்த அதைரியத்தை விருத்திசெய்கின்றன. அதைரியத்துக்கு உள்ளாவது சுயேச்சையை விரும்பும் நாட்டின் ஐதீகம் ஆகாது, அதுவும் அமெரிக்கரின் ஐதீகம் அல்ல. ஆபத்திலும் கஷ்டத்திலும் நாம் பின்வாங்காது உறுதியோடு தைரியமாக இருந்ததால்தான் நம் தேசத்தின் பெயர் தேச சரித்திரத்தில் வந்தது.

தேசங்களின் உரிமையையோ, ஜனங்களின் பாத்யதையையோ பாராட்டாத சட்டதிட்ட மற்ற வகுப்பினரோடு நாம் ஈடுபட்டு ஒத்துப்போவதென்பது கூடாத காரியம்.

நாம் செய்யவேண்டிய காரியம் பெரிதாக இருந்தாலும், அவகாசம் அதிகமில்லாமலிருந்தாலும், இந்த யுத்தம் நீண்டகாலம் நடந்தாலும் இறுதியில் நல்ல காலம் இருக்கிறது என்பதில் நான் நம்புகிறேன். நாம் நம் பயமின்மையைப் பலப்படுத்த உழைக்கிறோம் என்பதோடும் இறுதியாக நியாயத்தோடுகூடிய சமாதானத்தை உண்டுபண்ணவும் உழைக்கிறோம். அநேக தேசங்கள் அடங்கிய ஒரு குடும்பத்தின் நபர்களுக்கு சுதந்திரம், பயமின்மை, க்ஷேமம் இவைகளைக் கொடுக்க ஒரு அஸ்திபாரம் நாட்டவும் நாம் உதவி செய்யலாம். சட்டம் ஒழுங்குக்கு அடங்கிய மானிடத்தன்மையே கடைசியில் வெற்றிஅடையும் என்பதில் எனக்கு முழுநம்பிக்கை இருக்கிறது. அதன் மூலமே சுயேச்சை, நியாயம், பயமின்மை மறுபடியும் மேல்வரும்.

# வார யுத்தச் செய்திகள்.

(29—5—41-லிருந்து 4—6—41-வரை).

---

**கிரீட்.**—நாம் கிரீடில் (Crete) போராடி இழந்து விட்டோம். அது சிறிது பெரிய சங்கடம்தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் துக்கப்படுவதற்கு ஒன்றும் இடமில்லை. ஏனெனில் பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்திற்கு கடல் மார்க்கங்கள் பிரிடன் வசமே இருக்கின்றன. ஸூயஸ் (Suez) கால்வாயும் ஜிப்ரால்டர் (Gibraltar) ஜலசந்தியும் சிங்கப்பூரும் (Singapore) தாக்கப்படாத வரை பிரிடனைத் தோற்கடிக்க முடியாது.

போதுமான தயாரிப்பில்லாததால் நாம் கிரீட்டில் இழந்தோம். இப்படித் தயார் குறைவாக இருந்தது ஞாயமாகயிருக்கலாம். ஆனால் பிரிடனுக்கு வேறு கவனங்கள் அதிகமாய் இருந்ததால் கிரீட் ஒன்றின்மேல் மட்டும் கவனம் செலுத்துவது சாத்யமில்லை என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டும். எதிரி பிரிடனை ஒருவாறு தாக்கினால் அவர்களை எதிர்க்க பிரிடனில் வேண்டிய ஏற்பாடுகளைப் பூர்த்திசெய்து வந்திருக்கிறார்கள். கரைப் பக்கத்திலும் உள் பக்கத்திலும் காபந்துவேலை உறுதியாய் செய்யப்பட்டு வந்திருக்கின்றன; ஜெர்மானியர் வெகுகாலமாய் விமானத் தாக்கலுடன் படையெடுக்கச் செய்து வந்திருக்கிற ஏற்பாடு நிறைவேறினால் பிரிடிஷார் அவர்களை சரியான கொட்டுக் கொட்டிவிடுவார்கள்.

பிரிடிஷார் கிரீட்டில் செய்த வேலை வெர்த்தமாகவில்லை. அதில் கிடைத்த அனுபவமே ஏராளம்; அதில் நமக்கு தெரிந்த அனுபவத்தைப் பூர்ணமாக எதிர் காலத்தில் உபயோகிப்போம். யாரோ ஒருவர் சொன்ன பிரகாரம், "கிரீட்டில் நடந்த சண்டையானது பிரிடனில் நடக்கப்போகிற சண்டைக்கு ஒத்திகை யானது." இந்த ஒத்திகையில் சம்பந்தப்பட்ட எல்லோரும் அதனால் லாபம் அடைவார்கள்.

எதிரிக்கு வேண்டிய நஷ்டம் செய்திருக்கிறோம் என்பதே ஒரு லாபகரமான விஷயம். நன்றாகத் தயாரான ஜெர்மன் அதிகாரிகளையும் விசேஷமான தளவாடங்களையும் நாசமாக்கி விட்டோம். ஜெர்மன் கையிருப்பு மிகவும் குறைந்திருக்கவேண்டும். ஆசியாவிலும் வடஆபிரிக்காவிலும் இனி நடக்கவேண்டிய வேலைகளுக்கு நாம் தயாராவதற்குப் போதுமான சாவகாசமும் கிடைத்திருக்கிறது.

ஆஸ்திரேலிய பிரதம மந்திரியான மிஸ்டர் மென்ஸீஸ் (Mr. Menzies) சொன்ன சில வார்த்தைகள் கவனிக்கத்தக்கன. "கிரீட்டிலிருந்து விடுவிக்கப் பட்ட துருப்புகளின் சங்கியையானது நாம் எதிர்பார்த்ததைக்காட்டிலும் அதிக மாகவே இருக்கிறது. நமது காரியத்தால் ஜெர்மானிய நிகழ்ச்சி காலவரை உடைபட்டது; எகிப்து ஸூயஸ் முதலிய ஜீவாதாரமான ஸ்தலங்களை வலுப் படுத்த சக்தி கொடுத்தும்; இராக்கில் நேர்ந்த கிளர்ச்சியை அமர்த்தவும்; துருப்புக் களை இங்குமங்கும் கொண்டுபோகவும் இடங்கொடுத்தது. ஆயினும் அபாயம்



அதிகம் தான். நாம் அதை தைரியத்துடன் எதிர்க்கவேண்டும். ஆயினும் மனம் தளர்ச்சியடைய கொஞ்சம்கூட இடமில்லை." Mr. மென்ஸீஸும் விஷயம் நன்றாய்த் தெரிந்தவர்.

**இராக்.**—இராக்கில் எல்லாம் சாவதானமாகிவிட்டது. கொஞ்ச காலம் பைத்தியம் பிடித்து பிறகு புரட்சிக்காரருக்கு நல்ல புத்தி வந்துவிட்டது. சென்ற வெள்ளிக்கிழமை புரட்சிக்காரரின் தலைவர் பிரிடிஷ் ஸ்தானிகரிடம் தஞ்சமானார். பிரிடிஷ் ஸ்தானிகரும் பிரிடிஷ் ராணுவத் தலைவர்களுடன் சமாதானம் செய்யும்படி அவர்களுக்கு புத்தி சொன்னார். புரட்சிக்காரரும் சமாதானம் தேடி திருப்திகரமாக சமாதானமும் ஏற்பட்டது. புரட்சித் தலைவரான ரஷீத் ஆலி (Rashid Ali) நாட்டைவிட்டு ஓடிவிட்டார். அவருடன் இதாலிய மந்திரியும் ஓடி இரானில் தஞ்சம் புகுந்தார். இராக் ரீஜெண்டான அமீர் அப்தல் இலாஹியும் நாட்டிற்குத் திரும்பிவிட்டார். அவர் நாட்டிற்குத் திரும்பிவரும் பொழுது ஜெர்மானியர் அவர் பேரில் விடாமல் குண்டுகள் பிரயோகம் செய்தார்கள். அப்படியிருந்தும் சாவதானமாய் வந்துசேர்ந்தார். ஒரு புதிய மந்திரி சபையும் கூட்டப்பட்டிருக்கிறது. அதன் தலைவரான ஜமால் மட்பாய் பொது ஜனங்களால் மதிக்கப்பட்டவர், பிரிடிஷாருக்கு வேண்டியவர், அவர் சபையிலுள்ள மந்திரிகளும் பிரிடிஷார் சார்பானவர்கள்.

பிரிடன் இராக்குடன் யுத்தத்திலில்லை என்பது ஞாபகம் இருக்கவேண்டும். சிலர்களை நாஸிகள் கைவசம் செய்துகொண்டார்கள்; கொஞ்ச காலம் இவர்கள் கை தூக்கிநின்றது. பிரிடிஷார் தங்கள் பாத்தியங்களை ஸ்தாபித்துக்கொள்ளவும் அமைதி உண்டு பண்ணவும் ஏற்பாடு செய்தார். இதில் இனஸ்தர்களுடைய சகாயம் உண்டு. இராக் ராணுவம் பலமாய் சேதப்படுத்தப்பட்டது. நாஸிகளாலாவது நாஸி வலையில் மாட்டிக்கொண்ட இராக்கிகளாலாவது இனி கலகங்கள் ஏற்படாது.

சமாதானத்தால் துருக்கியர்களுக்கு வெகு சந்தோஷமாம். இல்லாமல் போனால் ஜெர்மானியர் இராக்கில் இருந்துகொண்டு துருக்கிக்கு இடையூராக இருப்பார்கள். இந்தியா உடனும் அமெரிக்காவுடனும் வியாபார வசதி குறைந்துவிடும்.

பிரிடிஷ் துருப்புகள் மோஸூலைப் பிடித்துக்கொண்டன, பாக்தாத் அமைதி ஆகி வருகிறது. இந்தக் கலகம் அடக்கப்படாமல் இருந்தால் வெகு இடையூராக இருக்கும். எல்லாம் இனிது முடிவடைந்தது.

**ஸிரியா.**—நமது கவனம் ஸிரியா பக்கம் மாறிவிட்டது. நாஸிப் பிரயாணிகள் வந்து கொண்டிருந்தார்கள். பிரெஞ்சு துருப்புகள் தங்கள் "லைன்"களை காலி செய்யவே ஜெர்மன் துருப்புகள் வரப்போகின்றன என்று வெளியாகிவிட்டது. இதனால் பிரிடனுக்கு ஆபத்து விளையக்கூடியதாய் இருந்தது; ஆகையால் பிரிடன் தயாராகி தங்கள் நடவடிக்கையில் பிரான்ஸுக்கு விரோதம் எந்த அளவிற்கு வருமென்று மிகவும் கணக்குப் பார்க்காமல் முன்னமேயே தயாராக இருக்க வேண்டியது அவசியம் என்று பட்டது. பிரிடிஷார் தயாராக இருக்கிறார்.

என்று கேட்க வெகு திருப்திகரமாக இருக்கிறது. ஸிரியாவில் பிரிடன் ஜயித்தால் ஜெர்மனி கீழ்நாட்டுப் பக்கம் போகமுடியாது; அகஸ்மாத்தாய் ஜெர்மனி ஜயித்து விட்டால் எகிப்தையும் துருக்கியையும் ஜயிப்பது சுலபமாகும். இந்தியாவிற்கு வருவதும் சுலபமாகும். பிரிடன் வசம் உள்ள எண்ணெய்ப் பிரதேசங்களும் ஜெர்மனி வசம் போய்விடும். இப்பொழுது நடக்கும் காரியம் துருக்கிக்கு திருப்தியாக இருக்காது. ஸிரியா ஜெர்மானியர் வசமானால் துருக்கிக்கு ஆபத்து. துருக்கி என்ன செய்யப்போகிறது. நாஸிகள் தாஜாவிற்காவது மெறட்டலுக்காவது இணங்குமா அல்லது போர் செய்யுமா? வான் பேபன் பெர்லினுக்குப்போய் திரும்பிவந்து இருக்கிறார். என்னவாயிற்று என்று தெரியவில்லை. முஸ்லிம்கள் வெகு கவலைப்படுகிறார்கள் என்று தெரிகிறது.

மோஸுலும் எண்ணெய்ப் பிரதேசமும் பிரிடிஷார் வசம் இருக்கின்றன. மோஸுல் ஸிரியாவின் எல்லைப்புறத்திலிருந்து 65 மைலில் இருக்கிறது. அதை ஜெர்மானியர் பிடிக்கப்பார்ப்பார்கள். பிரிடிஷார் தயாராக இருக்கிறார்கள். ஜெர்மானியர் வசமான பெய்ரூட்டானது பிரிடிஷ் விமானத்தால் தாக்கப்பட்டது. பிரிடிஷார் செய்யும் வேலையும் பிரிடிஷ் விமானத் தாக்கலையும் ஸிரியாவிலுள்ள பிரஞ்சுக்காரர்கள் பாராட்டுகிறார்களாம். அவர்களுக்கு ஜெர்மானியர் பேரில் வெறுப்பு அதிகமாக இருக்கிறது.

**விஷியின் அவமானமான தலைவணக்கம்.**—1940-ம் வருஷம் ஜூன் மாதத்தில் பிரான்ஸ் ராணுவ முறையில் விழுந்ததானது இந்த வருஷம் ஜூன் மாதத்தில் நீதி முறையில் நிலைதவறியதை கவனிக்கும் பொழுது பொருட்படுத்தக்கூடியதாக வில்லை. இந்தச் சமயத்தில் அதிகாரம் வகிப்பவன் கடற்பதி டார்லான் என்பவர். தன்னையும் தன்னுடைய தேசத்தையும் ஜெர்மனிக்கு அற்பணம் செய்வதில் அவருக்குக் கொஞ்சம்கூட வெட்கமில்லை போலும். லவாலைப் போலவே இவருக்கும் அழுக்கு ஏற்பட்டுவிட்டது. இருவருமாக வயது முதிர்ந்த மார்ஷல் பிடேனை பங்கப்படுத்திவிட்டார்கள். யாதொரு மனக் கவலையன்னியில் பிரிடனைத் தொலைப்பதற்கு ஜெர்மனியோடு இவர்கள் சதியாலோசனை செய்து விட்டார்கள். சென்ற 1914—18வரை நடந்த யுத்தத்தில் பிரிடனுடைய ஒத்தாசை இருந்திராவிட்டால் தேசபடத்தினின்றும் பிரான்ஸ் தேசம் அழிக்கப் பட்டிருக்கக்கூடும்.

நாம் கண்ணார இந்தக் காக்ஷியைப் பார்க்கும்படி நேர்ந்திராவிட்டால், இம் மாதிரி நடக்கக்கூடுமென்று ஒருவரும் நம்பமாட்டார்கள். சில நாட்களாக தளகர்த்தர் வேகாண்டு அவர்கள் விஷிக்கு வந்திருக்கிறார். அவரும் டார்லானும் அவருடைய பரிவாரங்களும் கலந்து பேசி வருகிறார்கள். கடைசியாக வந்த செய்திகளில் பிரெஞ்சு மேற்கு ஆபிரிக்கா, மொராக்கோ, இவைகளின் அதிபதிகளும், ட்யூனிஸியாவின் சேனாதிபதியும் விஷிக்கு வரும்படி அழைக்கப்பட்டிருக்கிறார்கள். தளகர்த்தர் வேகாண்டை ஸிரியாவுக்கு அனுப்பி பிரெஞ்சு சாம்ராஜ்ஜியத்தின் தற்காப்பை ஒருங்கு சேர்க்கும்படி செய்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் பிரிடிஷார்களென்றும் அவர்கள்தான் அகாரணமாய் யுத்தம் ஆரம்பித்து விட்டார்களென்றும் ஜெர்மானியர்கள் சொல்லிவருகிறார்கள். தளகர்த்தர்



டெண்ட்ஸ் என்பவர் பல பிரயோகத்தை பலத்தினால் நிராகரிப்போமென்று உலகத்திற்கு அறிவித்திருக்கிறார். விஷியிலுள்ள வயது முதிர்ந்தவர்களெல்லாம் தங்கள் கௌரவத்தையெல்லாம் மறந்து பிரான்ஸை விட்டுவிடுவதற்குத் தீர்மானம் செய்துவிட்டார்களென்று புலப்படுகிறது. இவர்களை விஷியின் விஷப் பாம்புகளென்று சொல்லுவதில் யாதொரு விந்தையுமில்லை.

தன் செய்கையை நிலைநாட்டிக்கொள்ள டார்லான் பிரிடன்பேரில் அகாரணமாகப்பாய ஆரம்பித்தான். பிரிடனுக்கு எதிராக டார்லான் ஜோடித்துவரும் கேஸை பிரெஞ்சு ஜனங்கள் எளிதில் நம்பமாட்டார்கள், ஆமோதிக்கவும் மாட்டார்கள். பிரிடிஷார்கள் தந்திரமுள்ள பிசாசுகளென்றும் பிரான்ஸுதேசத்தை தன்னைவிட்டு விலகும்படி ஏற்பாடுசெய்துவிட்டார்களென்றும் வர்ணிக்கப்படுகிறார்கள். பிரிடனானது ஜெர்மனியிடம் கொஞ்சம் தயவு செய்யும்படி வேண்டிற்று. தாங்களும் ஜீவித்திருக்க வேண்டுமென்று தங்களுக்கு அவகாசம் கொடுக்கும்படி விரும்பிற்று. பிரிடனுக்கு அவர்கள் செய்யவேண்டிய கடமையை ஜெர்மனி மறந்தது. பிரான்ஸும் அதைப் பின்பற்றிற்று. பிரிடனிடம் டார்லானுக்குள்ள வெறுப்பு யாதெனில் பிரெஞ்சு தேசத்தின் எல்லையை ரைன் நதி வரையில் விஸ்தரிக்க தனக்கு உள்ள பாத்தியதையை பிரிடன் ஆதரிக்கவில்லையென்பதுதான். சென்ற யுத்தத்திற்குப் பிறகு பிரெஞ்சுக்காரர்கள் ஏற்றுவந்த நடவடிக்கைகளின் அக்கிரமங்களை பிரிடன் ஆதரிக்க மறுத்து விட்டது.

லிண்ட்லி பிரேஸர் என்பவர் ஓரான் சம்பவம் சம்பந்தமாக பிரிடனை மன்னிக்காத காரணம்தான் டார்லானின் மனோநிலைக்குக் காரணமென்று சொல்லுகிறார். பிரான்ஸ் சரணடைந்த பிறகும் பிரிடிஷ்காரர்கள் தைரியமாகச் சண்டை செய்து வருகிறார்களென்பது டார்லானுக்குப் பிடிக்கவில்லை. அவர் அபிப்பிராயப்படி டார்லானுடைய மனப்பான்மைக்கு இதுதான் காரணம்.

இருந்தபோதிலும் கருமேகத்தினிடையே மின்னல்கொடி தோன்றுகிறது. ஜெர்மனியுடன் ஒத்துழைக்கவேண்டுமென்று பிரெஞ்சு அதிகார வர்க்கத்தாரின் அபிப்பிராயம். ஆனால் தளகர்த்தர் டி காலியைச் சேர்ந்த சுயேச்சை பிரெஞ்சுக் காரர்களுடையவும் பிரான்ஸின் ஜனங்களின் பெரும்பாகத்தினுடையவும் மனோநிலை அம்மாதிரியல்ல. வரவர பிரெஞ்சு ராஜீய நிலையானது கலவரமடைந்திருக்கிறது. சில ராஜீய வர்க்கத்தார்கள் ஜனநாயகத்தை வெறுத்து நாஸிக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டால் ராஜீய வியவகாரங்களில் முகாண்மையான ஒரு நிலையை அடையலாமென்று கருதினார்கள். ஆகையால்தான் அந்நாட்டின் நிலை அழுக்கடைந்திருக்கிறது.

நாளுக்கு நாள் அமெரிக்காவின் மனோநிலை வலுவடைந்துவருகிறது. மிஸ்டர் கார்டல் ஹல் என்பவர் ஸ்பஷ்டமாக பிரெஞ்சு ஜனங்களுக்கு ஒரு சொற்பொழிவு நிகழ்த்தியிருக்கிறார். ஜெர்மனியின் அக்ரம எதிர்ப்புக்கு பிரான்ஸ் உடந்தையாகிவிடக்கூடுமென்று பலமான சொற்களால் கடிந்து பேசியதோடு, ஐக்கிய நாடுகள் பிரான்ஸின் சங்கடங்களை நன்கு அறிகிறார்களென்றும்,

பிரிட்டனுடைய நிலையானது பிரெஞ்சுக்காரர்களின் நடத்தையால் யாதொரு விதமாகவும் பாதிக்கப்படாதபடி பார்த்துக்கொள்ள உத்தேசித்து விட்டதென்றும் அவர் அறிவிக்கிறார்.

**அபிஸீனியா.**—தென் அபிஸீனியாவில் ஏரிகளில் சண்டை என்று சொல்லக் கூடிய இடத்தில் ஒரு கோரமான சண்டை நடந்துவருகிறது. 18,000-க்கு மேலான துருப்புகள் கைது செய்யப்பட்டும், ஏராளமான யுத்த தளவாடங்கள், 14 இரும்பு மோட்டார்கள், 7 கவசம் பூண்ட மோட்டார்கள், 85 பீரங்கிகள் எல்லாம் பிரிடிஷ் வசமாகிவிட்டன.

டெபரெக் என்னும் தேசம் பிரிடிஷ் வசமாகி விட்டது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேச தேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **26—5—41.** (திங்கட்கிழமை). | | | |
| | **இராக் (Iraq).** | | |
| | விமான நிலயம்.—மோஸுல் (Mosul). | ...... | சேதமாயிற்று. |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | வியாபாரக் கப்பல்கள்.—வட ஆபிரிக்க (Africa)க் கடற்கரை. | ...... | பல மூழ்கடிக்கப்பட்டன. |
| | விமான நிலயம்.—ஸ்கார்பாண்டோ (Scarpanto)த் தீவு. | ...... | ...... |
| | **ஸிரியா (Syria).** | | |
| | தரையிலிருக்கும் விமானங்கள்.—அலெப்போ (Aleppo). | ...... | பல சேதமாயின. |
| | **கிரீட் (Crete).** | | |
| | துருப்புகள் ஏற்றிச் செல்லும் விமானங்கள், சண்டை விமானங்கள்.—மாலிமி (Malemi). | ...... | 5 துருப்பேற்றிச் செல்லும் விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன. |
| | தரையிலிருக்கும் விமானங்கள்.—மாலிமி (Malemi) விமான நிலயம். | ...... | பல விமானங்கள் சேதமாயின. |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **26—5—41.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| | விமான நிலயம்.—கோண்டார் (Gondar). | ...... | ...... |
| | விரோதி சைனியங்கள்.—ஓமோ (Omo), கிப்பீ (Gibbe) நதிகளுக்கருகே. | ...... | தகர்க்கப்பட்டன. |
| | ராணுவக் கட்டடங்கள்.—டெபரெக் (Debarech). | ...... | சேதமாயிற்று. |
| **27—5—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—விமான நிலயம், தரையிலிருக்கும் விமானங்கள்—பிரிடனி (Brittany)யிலிருக்கும் லான்னியான் (Lannion). | ...... | விமானக்கூடம் சேதமாயிற்று. 7 விமானங்கள் சேதமாயின. தீப்பிடித்தது. |
| | விரோதிக் கப்பல்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரை. பிஸ்கே (Biscay) வளைகுடா. | ...... | இரண்டு கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. |
| | இரவில்.—தொழிற்சாலைகள்.—கொலோன் (Cologne). | ...... | பெருந்தீக்கள் கிளம்பின. |
| | கப்பல் துறைகள்.—புலாயின் (Boulogne). | ...... | ...... |
| | விமான நிலயம்.—கேய(Caen)னுக்கருகில். | 1 விமானம். | ...... |
| | **இராக் (Iraq).** | | |
| | விரோதி சைனியங்கள்.—மோஸுல் (Mosul)க்கருகில். | ...... | ...... |
| | **கிரீட் (Crete).** | | |
| | ஜெர்மன் சைனியக் கூட்டங்கள், விமானங்கள்.—கிரீட் (Crete) கடற்கரைகள். | ...... | பலருக்குக் காயம். |
| | விமான நிலயம்.—மாலிமி (Malemi). | ...... | ...... |
| | தரையிலிருக்கும் விமானங்கள்.—கொல்முவாரி (Kolmuari), இர்லேஜு (Irlage)க்கும் ஸ்பெலியாகாஸு (Speliakos)க்கும் மத்தியில். | ...... | பல சேதமாயின. |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 27—5—41. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **டோடிகானீஸ் (Dodecanese).** | | |
| | விமான நிலயம்.—ஸ்கார்பாண்டோ (Scarpanto). | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| 28—5—41. (புதன்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—விமான யுத்தம்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | 2 விமானங்கள். | 1 விமானம். |
| | விரோதிக் கப்பல்கள்.—டச்சு (Dutch), பெல்ஜியன் (Belgian) கடற்கரைகள். | 1 விமானம். | 1 கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. |
| | இரவில்.—ராணுவ முக்கியமுள்ள இடங்கள்—வடமேற்கு ஜெர்மனி. | 1 விமானம். | ...... |
| | **இராக் (Iraq).** | | |
| | கலகக்கார சைனியங்கள்.—இராக் (Iraq). | ...... | ...... |
| | **கிரீட் (Crete).** | | |
| | கானீயா (Canea), ஸூடா பே (Suda bay). | ...... | ...... |
| | **ஸிரியா (Syria).** | | |
| | விமான நிலயம்.—பால்மைரா (Palmyra). | ...... | சேதமாயிற்று. |
| | **பிரெஞ்சு ஆபிரிக்கா (Africa).** | | |
| | இதாலியக் கப்பல்கள்.—டுனிஸியா (Tunisia) வின் துறைமுகமான ஸ்பாக்ஸ் (Sfax). | ...... | இரண்டு கப்பல்கள் குண்டுகளால் தாக்குண்டன. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | ராணுவ முக்கியமுள்ள இடங்கள்.—கோண்டார் (Gondar), டெபரெக் (Debarech), வுல்சிபிட் (Wolchefit). | ...... | ...... |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 29—5—41. (வியாழக்கிழமை). | | | |
| | **இராக் (Iraq).** | | |
| | ஒத்தாசை.—முன்னேறும் பிரிடிஷ் சைனியங்கள். | ...... | ...... |
| | விமானச் சண்டை.—கன்னுக்தா (Khannuqta). | ...... | 1 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. |
| | இதாலிய விமானம் (தரையிலிருக்கும்).—பாகுபா (Baquba), விமான நிலயம். | ...... | பல இதாலிய விமானங்கள் உபயோகமில்லாமல் போயின. |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | காவல் காத்தல்.—கிரீட் (Crete) டுக்கும் வட ஆபிரிக்க (Africa) க் கடற்கரை. | ...... | ...... |
| | **ஸிரியா (Syria).** | | |
| | விமான நிலயம்.—டீரெஸ் ஸார் (Deirezzor). | ...... | ...... |
| | **டோடிகானீஸ் (Dodecanese).** | | |
| | ஸ்கார்பாண்டோ (Scarpanto). | ...... | தீயும், வெடிகளும் கிளம்பின. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | ரஸ்தாக்கள், கட்டடங்கள், இதாலிய சைனியங்கள்.—ஜிம்மா (Jimma) பிரதேசம். | ... (2 விமானங்கள்.) | தீப்பிடித்தன. |
| | மோட்டார் வண்டிகள்.—ஆல்கி (Alghe) க்கு வடக்கே. | ... (2 விமானங்கள்.) | பல சேதமாயின. |
| | கோட்டைகள்.—அஸோஸோ (Azozo), டிக்யா (Digya). | 2 விமானங்கள். | ...... |
| 30—5—41. (வெள்ளிக்கிழமை). | | | |
| | **கிரீட் (Crete).** | | |
| | ஜெர்மன் துருப்புகள்.—கானீயா (Canea), ஸூடா பே (Suda bay) பிரதேசங்களையும் அவைகளைச் சுற்றியும். | ...... | பலருக்குக் காயம். |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 30—5—41. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |

## இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | பாதுகாத்தல்.—டொப்ருக் (Tobruk) விரோதி சைனியங்கள்—அஸோஸோ (Azozo), திக்யா (Digya), டெபரெக் (Debarech), டெபாட் (Debat), செல்கா (Chelga) விற்கும், கோண்டாரு (Gondar) க்கும் மத்தியில். | ...... | 4 விமானங்கள். |

31—5—41. (சனிக்கிழமை).

## கிரீட் (Crete).

| | | | |
|---|---|---|---|
| | தரையிலிருக்கும் விரோதி விமானங்கள்.—மாலெமி (Malemi). | ...... | 3 விமானங்கள் நஷ்டம். |
| | விமான நிலயம்.—ஹெராக்லியான் (Heraklion). | ...... | ...... |
| | பாது காத்தல், வெடி குண்டு வீசுதல்.—பிரிடிஷ் சைனியங்களை கிரீட்டிலிருந்து வெளியேற்றும் பொழுது. | ...... | ...... |

## மத்தியதரைக்கடல் (Mediterranean).

| | | | |
|---|---|---|---|
| | பாதுகாத்தல்.—கிரீட் (Crete) டிலிருந்து பிரிடிஷ் சைனியங்களை திருப்பி வெளி யேற்றும் காரியத்தில் ஈடுபட்டிருக்கும் யுத்தக் கப்பல்கள், வியாபாரக் கப்பல்கள். | ...... | பல விமானங்கள் சுட்டுத் தள்ளப் பட்டன. |

## இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | விரோதி சைனியங்கள், மோட்டார் வண்டிகள்.—கிம்மா (Gimma) பிரதேசம். | ...... | பலத்த நஷ்டம் |
| | கட்டடங்கள்—கிம்பி (Gimbi) துறை முகம்—பெங்காஸி (Benghazi). | 4 விமானங்கள். | தீப்பிடித்தன. |

## பிரெஞ்சு ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | இதாலியக் கப்பல்கள்.—ஸ்பாக்ஸ் (Sfax). | ...... | ...... |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 1—6—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | |

## கிரீட் (Crete).

| | | | |
|---|---|---|---|
| | தரையிலிருக்கும் விரோதி விமானங்கள்.—மாலெமி (Malemi), ஆல்மைரோ (Allmyro). | ...... | மாலெமியில் 4 விமானங்களும் ஆல்மைரோவில் பல விமானங்களும் நாசமாயின. |
| | விமான நிலயம்.—ஹெராக்லியான் (Heraklion). | ...... | ...... |
| | பாதுகாத்தல், குண்டுகள் வீசுதல்.—பிரிடிஷ் துருப்புகள் கிரீட் (Crete) டை விட்டு வெளியேறும் டயம் முழுவதும். | ...... | ...... |

## மத்தியதரைக்கடல் (Mediterranean).

| | | | |
|---|---|---|---|
| | பாதுகாத்தல்.—பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள், வியாபாரக் கப்பல்கள் இவைகள் கிரீட் (Crete) டிலிருந்து பிரிடிஷ் சைனியங்களை வெளியேற்றிக் கொண்டிருக்கும்பொழுது. | ...... | ...... |

## இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | விரோதி சைனியங்கள், மோட்டார் வண்டிகள்.—கிம்மா (Gimma) பிரதேசம். | ...... | பலத்த நஷ்டம். |
| | கட்டடங்கள்.—டெபரெக் (Debarech). | ...... | ...... |
| | மோட்டார் வண்டிகள்.—செல்கா (Chelga) விற்கும், அஸோஸோ (Azozo)விற்கும் மத்தியில். | ...... | ...... |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ...... | தீப்பிடித்தது. |
| | விமானச் சண்டை.—டொப்ருக் (Tobruk). | ...... | 1 விமானம். |
| | ராணுவக் கட்டடங்கள்.—மொனாஸ்டிர் (Monastir). | நஷ்டமில்லை. | ...... |

## ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பிரான்ஸ் (France).

| | | | |
|---|---|---|---|
| | வேவு பார்த்தல்.—பிரெஞ்சு (French)க் கடற்கரை. | ...... | 1 விமானம். |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 27—5—41. (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | விரோதி விமானப்படையெடுப்பேயில்லை. | ...... | ...... |
| | **இராக் (Iraq).** | | |
| | விமான நிலயம்.—ஹப்பானியா (Habbaniyah). | ...... | சேதமுமில்லை; ஒருவருக்கும் காயமுமில்லை. |
| | **(கிரீட் Crete).** | | |
| | குண்டு வீசுதல்.—பிரிடிஷ் சைனியங்கள். | ...... | பலருக்குக் காயம். |
| | பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள்.—கிரீட் (Crete)டைச் சுற்றி. | ...... | க்ரூயிஸர்களும், நாசகாரிகளும் சேதமாயின. |
| 28—5—41. (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—தென் கிழக்கு ஸ்காத்லாந்து (Scotland), கெண்ட் (Kent). | 1 விமானம். | மிகச்சொற்பச் சேதம். |
| | இரவில்.—லிவர்பூல் (Liverpool), மர்ஸிஸயிட் (Merseyside)டில் சில பட்டணங்கள். | ...... | சொற்பச்சேதம். சிலருக்குக் காயம். |
| 29—5—41. (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பிரிடன் முழுவதும் விமான நடமாட்டமே இல்லை. | ...... | ...... |
| | **(கிரீட் Crete).** | | |
| | பட்டணங்கள்.—ஹெராக்லியான் (Heraklion), கானீயா (Canea), ரெதிமோ (Rethymo). | ...... | ...... |
| | குண்டு வீழ்ச்சு.—பிரிடிஷ் சைனியங்கள். | ...... | ...... |
| | **ஆபிரிக்கா (Africa).** | | |
| | டொப்ரூக் (Tobruk). | 4 விமானங்கள் நாசம். பல சேதமாயின. | 3 விமானங்கள். |



| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 30—5—41. (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—ஒரு சிறியகப்பல், ஒரு நாசகாரி—இங்கிலீஷ் (English Channel). | 2 விமானங்கள். | சேதமேயில்லை. |
| | இரவில்.—சில இடங்கள்—மேற்கு இங்கிலாந்து (England), தென்வேல்ஸ் (Wales). | ...... | ...... |
| | அங்குமிங்கும் சில இடங்கள்.—மர்ஸிஸயிட் (Merseyside). | 1 விமானம். | சொற்பச் சேதம். சிலருக்குக் காயம். |
| | டப்ளின் (Dublin)—அயரி (Eire)ன் தலைநகர். | ...... | பொதுஜனங்கள் கொல்லப்பட்டனர். கட்டடங்கள் இடிந்தன. |
| 31—5—41. (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—லிவர்பூல் (Liverpool), மர்ஸிஸயிட் (Merseyside), வடவேல்ஸ் (Wales), தெற்கு, மேற்கு இங்கிலாந்துகளில் சில இடங்கள். | 3 விமானங்கள். | காயம்பட்டவர்களும், சேதமும் மிகச் சொற்பம். |
| | **கிரீட் (Crete).** | | |
| | பிரிடிஷ் சைனியங்கள்.—கிரீட் (Crete)டிலிருந்து வெளியேறும் சைனியங்கள். | ...... | ...... |
| 1—6—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—மான்செஸ்டர் (Manchester), இங்கிலாந்தி (England)ல் அங்குமிங்கும் சில இடங்கள். | ...... | தீப்பிடித்தது. சொற்பச் சேதம். சிலர் மாண்டனர். சேதமேயில்லை. |
| | **கிரீட் (Crete).** | | |
| | பிரிடிஷ் சைனியங்கள், யுத்தக் கப்பல்கள்.—கிரீட் (Crete) வெளியேற்றத்தில் ஈடுபட்டிருந்தவைகள். | ...... | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 2—6—41. (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—இங்கிலீஷ் (English) கால்வாய், வடகிழக்குக் கடற்கரை. | 2 விமானங்கள். | ...... |
| | இரவில்.—சில இடங்கள்.—இங்கிலாந்து (England), வடகிழக்கு இங்கிலாந்து (England), மேற்கு மிட்லண்ட்ஸ் (Midlands). | ...... | சொற்பச் சேதம். சிலருக்குக் காயம். |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

## ஒரு இஸ்லாமிய துரோகி.

இராக்கில் ஏற்பட்ட புரட்சி முடிவடைந்து விட்டதாகக் காணப்படுகிறது. ஜெர்மானிய ராணுவ தூதகோஷ்டிகளும் வேலை நிபுணர்களும் இராக்கில் பிரயோஜனப்படவில்லை; தேசத்துரோகியான ரஷீத் ஆலியும் தண்டனைக்குப் பயந்து ஓடிவிட்டார். பிரிடிஷ் கவர்ன்மெண்டாரின் தாமதமற்ற நடவடிக்கையால் இதெல்லாம் சரிவர முடிந்தது. ஆனால் நாமும் நல்லவர்களான இஸ்லாம் மதஸ்தர்களும் ரஷீத் ஆலி செய்த அக்ரமங்களுக்காகப் படவேண்டிய பாடுகளை ஒரு காலத்திலாவது அனுபவிப்பான் என்று எதிர்பார்க்கவேண்டும். பால்கன் கவர்ன்மெண்டுகளைக்காட்டிலும் இவர் நடவடிக்கை மிகவும் துரோஹகரமானது; ஏனெனில் பால்கன் கவர்ன்மெண்டுகள் தங்கள் தங்கள் நாடுகளில் உள்ளவர்களின் கண்யத்தையும் சுகத்தையும் சின்னாபின்னமாக்கினார்கள். இந்த துஷ்டனோவெனில், கேவலம் பணத்தாசையால் தன் தேசத்திற்கு நன்மை விளைவித்த துணைவர்களான பிரிடிஷாருக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை மீறினது மட்டும் அல்லாமல் நாஸித்துவம் இஸ்லாமிய நாடுகளுக்குள் பிரவேசிக்கும்படி முதல் முதலில் இடம் கொடுத்தான். இதன் பயன் என்னவென்றால் இஸ்லாமிய நாடுகளுக்கு வெளியே உள்ள ஸ்தலங்களை பிரிடிஷார் காத்துவந்தது போக இஸ்லாமிய நாடுகளுக்குள்ளேயே சண்டைசெய்யும்படி நேர்ந்துவிட்டது. இவ்விதம் நேரும்படி செய்த மனிதனை சரித்திர ஆராய்ச்சி செய்பவர்கள் ஒரு நாளும் மன்னிக்கமாட்டார்கள்,



## இஸ்லாமிய மனோபாவம்.

துருக்கியின் ஆளுகையிலிருந்தோ, பிரிடிஷாரின் ஆளுகையிலிருந்தோ இஸ்லாம் ஆனவர்களை விடுவிக்கவேண்டும் என்று தத்தம் வேலைகளைப்பற்றி ஜெர்மானிய பிரசாரவர்க்கமும் இதாலிய பிரசாரவர்க்கமும் வெகுநாளாய் ஆட்டம் போட்டுவருகிறார்கள். ஆனால் மேமீ 3உ யுள்ள நியூயார்க் டைம்ஸ் (New York Times) சொன்னபிரகாரம், "இந்த யுத்தத்தில் பற்பல விசித்திரங்கள் காணப்பட்டிருக்கின்றன; ஆயினும் 14 தேசத்தாரை ஹிம்ஸித்து அவர்கள் ரத்தம் கைநிறம்ப இருக்கும் நவநாகரீக நாஸ்திகன் ஒருவன் முஸ்லீம்களை ஒரு தர்ம யுத்தத்திற்கு அழைக்கிற காக்ஷியைக்காட்டிலும் அதிக விசித்திரமான காக்ஷியைக் கண்டிருக்கமாட்டோம்!"

காலிப் (Caliph) ஸ்தானம் போனதிலிருந்து யாருமே முஸ்லீம்களை தர்ம யுத்தம் செய்ய அழைக்கமுடியாது. இதிலிருந்து ஒரு ஞாயமான கக்ஷிக்காக இதரர்களுடன் சேர்ந்து பொது நடவடிக்கைக்கு முஸ்லீம்களை 'இழுக்கமுடியாது' என்று அர்த்தமல்ல. ஆனால் 'அச்சுதேசத்தாரால் அப்படிச் செய்யமுடியாது! சென்ற மூன்று வாரங்களில் இராக்கிற்கு சமீபமுள்ள நாடுகளில் பொறுப்புவாய்ந்த முஸ்லீம்கள் மேலே சொன்னதை நிரூபித்து விட்டார்கள். தன் கதையை அளந்தவுடன் ரஷீத் ஆலி ஈரானி (Iran)லிருந்து வெளியே விரட்டப்பட்டான். அவனுக்கு சரீர ரக்ஷணம்கூட கொடுக்கமுடியாதென்று சுல்தான் இபின் ஸாட் (Ibn Saud) பகிரங்கமாகச் சொன்னார். விரோதியாய் இருந்தாலும் தஞ்சமென்று வந்தவனை விட்டுவிடுவது சரியல்ல என்ற உணர்ச்சி பலமாயுள்ள முஸ்லீம்களின் சித்த விருத்தி தெரிந்தவர்களுக்கு இபின் ஸாடின் செய்கை எவ்வளவு அர்த்த புஷ்டி உள்ளது என்று விளங்கும்.

**பிரிடிஷாரின் கீர்த்தியும் அச்சின் கீர்த்தியும்.**—ஜெர்மன் அல்லது இதாலிய சிநேகத்தின் பிரயோஜனம் எவ்வளவு சொல்பம் என்பதைப்பற்றி விஷயம் தெரிந்த எந்த முஸ்லீமும் ஏமார வேண்டியதில்லை. மனிதரில் பெரும்பாலாரும், அதிலும் கீழ் நாட்டிலுள்ளவர்கள், தளர்ந்த மனதுள்ளவர்கள் என்றும் நாசப்படுத்த வேண்டியவர்கள் என்றும் மேயின் காம்பில் (Mein kampf) ஒளிவு மறைவின்றி சொல்லப்பட்டிருக்கிறது. ஜெர்மன் பிரசார இலாகா 1934-ல் அடியில் வருமாறு பிரஸ்தாபித்தது. "டான்யூபிற்கு (Danube) கிழக்கே பாஸ்ரா (Basra) வரை உள்ள நாடுகளை ஜெயித்தால் ஐரோப்பா (இங்கிலாந்தால்) கட்டுப்பட்டுள்ள சங்கிலியை தெறித்து விட்டதாகும்." இவை மத்தியதரைக்கடலை சுற்றியுள்ள முஸ்லீம் நாடுகளிடம் சிநேகபாவம் காட்டும்.

அபிப்பிராயங்கள்! இத்தாலியரோவென்றால்—துருக்கியரிடமிருந்து ட்ரிபோலி (Tripoli)யை வஞ்சித்துப் பிடித்துக்கொண்டதும் ஸென்யூஸிகளை (Senussi) கிரேஸியானி (Graziani) படுத்திய பாட்டையும், ஹைபா (Haifa) பேரில் வெடிகுண்டுகள் போட்டதையும் நினைத்துப் பாருங்கள்; அதிலிருந்து ஹிட்லரின் கையாலாகாத பங்காளியிடம் நல்ல முஸ்லிம்களுக்கு எவ்வளவு அன்பு இருக்கும் என்று யோசித்துக்கொள்ளுங்கள். பிரிடிஷார் நடவடிக்கைகள்

கவனார்கமானது. இராக்கில் அவர்கள் எவ்வளவு மகத்தான வேலை செய்திருக்கிறார்களென்று வேறொரு இடத்தில் சொல்லியிருக்கிறோம். இருபத்தைந்து வருஷகாலமாக மத்திய ஆசியாவில் முஸ்லீம் நாடுகளிடம் சுயநலம் கருதாமல் உதவி புரிந்து வந்திருக்கிறார்கள். முன்னே துருக்கியின் கீழிருந்த எகிப்து, இராக், டிரான்ஸ் ஜார்டானியா, ஸாடி அரேபியா முதலிய நாடுகளெல்லாம் சுயேச்சையடைந்தோ, அல்லது அடையக்கூடிய நிலைமையிலோ இருக்கின்றன. சென்ற யுத்தத்திற்கு பிறகு பிரிட்டன் அந் நாடுகளை எல்லா தேசத்தார் அனுமதியுடன் தன் வசமாக்கிக்கொண்டிருக்கலாம்; தன் தாராளத்துவத்தாலும் அரசியலில் விசால புத்தியாலும் தான் அப்படிச் செய்யவில்லை.

## கவலைகொண்ட துருக்கி.

இத்தருவாயில், முஸ்லீம் நாடுகளில் உயர்ந்ததும் நவீனமுறையில் ஈடுபட்டதுமான துருக்கி நடுங்கிக்கொண்டிருக்கிறது. பிரெஞ்சுக்காரர் சம்மதத்தின் பேரில் ஸிரியாவில் ஜெர்மன் துருப்புகள் இறக்கப்பட்டதிலிருந்து அத்தேசம் சீக்கிரம் அவர்களால் ஆக்கிரமிக்கப்படுமென்று தோன்றுகிறது. (அவர்கள் நினைத்தபடி நடைபெறாது. கொஞ்சகாலமாக நாம் ஆசியாமைனரில் நமது சைனியங்களை பலப்படுத்தி வந்திருக்கிறோம். அந்த நாடுகளை ஒரு வருஷகாலமாக உபத்திரவம் செய்துவந்த அச்சு கவர்ன்மெண்டார்கள் வெறுக்கப்படுகிறார்கள்; அங்கிருக்கும் தளகர்த்தர் டெண்ட்ஸ் (General Dentz) என்ன அவர் சாம்ராஜ்ஜிய துருப்புகளில் 3 வகைகளும், மற்ற இடங்களிலுள்ள சாம்ராஜ்ஜிய துருப்புகளும், அட்மிரல் டார்லான் (Admiral Darlan) நோக்கங்களில் அனுதாபமற்றவர்களாய் இருக்கிறார்கள்). ஜெர்மானியர்கள் ஸிரியா பேரில் படையெடுத்து ஜயிப்பார்களேயானால் துருக்கியைச் சுற்றி அச்சு வகையார் சுற்றிக்கொண்டு, அதற்கு இராக் வழியொன்று தவிர போக்குவரத்திற்கிடமில்லாமல் போய்விடும். அந்த மார்க்கமும் சற்று முன்பு ஆபத்தில் மாட்டிக்கொள்ளும் போலிருந்தது!!

இக்காலத்தில் நடுநிலைமையால் பயன் என்னவென்று பல துருக்கியர் கேட்கிறார்கள். துருக்கி யூகோஸ்லாவியாவைப் போலாய்விடும். அதாவது, பெருத்த விரோதி சைனியங்களுடன் போராடுவதா, இளப்பமாய் தஞ்சமடைகிறதாவென்று யோசிக்கவேண்டிவரும். முஸ்லீம் நாடுகள் பேரில் ஐரோப்பாவிலிருந்து படையெடுப்பு நேரிடாவண்ணம் பார்த்துக்கொள்ள துருக்கிதான் முதல் அணியென்பதை இந்தியாவில் நாம் ஞாபகம் வைத்துக்கொள்ளுவது நலம்.

இப்படி நினைத்துத்தான் ஜெர்மானியர்கள் திருப்திப் பட்டுக்கொண்டு இருக்கிறார்கள் போலும்; ஆனால் கைக்கு எட்டினது...............! கியாஸ், மைடிலீனியிலிருந்து, சமுத்திர பலமில்லாமல் ஸிரியா, பாலஸ்தீனம், இராக் இவைகள் பேரில் சேர்ந்து ஜெர்மானியர் படையெடுப்பது சாத்தியமென்றாவது, சம்பாவிதம் என்றாவது எனக்குத்தோன்றவில்லை. ஸூயஸிற்கு வரவேண்டுமானால் நேரே துருக்கி வழியாகவோ அல்லது நேரே ருஷ்யா வழியாகவோ வந்து தெற்கேயுள்ள மைதானம் வழியாகவும், காகஸஸ் மலைச்சாரல் வழியாகவும்



வரலாம். இதுவே சிரம சாத்தியமானது. ஆனால் பித்துப்பிடித்த ஒரு வெறிகொண்ட பேர்வழிக்கு லிவாண்டு நாடுகளுக்கு ஆகாய மார்க்கமாக ஒரு பெரும் சைனியத்தை அனுப்புவதைக் காட்டிலும் இது சுலபமாகத்தோன்றலாம். ருஷ்யாவினுடைய ராணுவ பலத்தையும், துருக்கியின் ராணுவ பலத்தையும், ஹிட்லர் அவமதிக்கலாம். ஆனால் இவைகளை எதிர்த்தானால் பசையற்ற நடுநிலைமைக் கொள்கைகளை வைத்துக்கொண்டு காரியம் ஒப்பேறிவிடும் என்று நம்பலாம்.

பாட்ஸ்டாமிலிருந்து அங்காராவிற்கு சில தினங்களுக்குமுன் திரும்பி வந்த வான் பேபன், என்ன பேச்சுப் பேச தயாராக வந்தானென்று அறிய நாம் என்னதான் கொடுக்கமாட்டோம்.

## பிரான்ஸின் தாழ்ந்த நிலை.

ஆங்கிலப்-பிரெஞ்சு உடன்படிக்கையின் பலத்தை அறியுமாறு மொராக்கோ பக்கம் ஜெர்மானியர் 1904-ல் வட்டாரம் போட்டுக்கொண்டிருந்தபோது பிரான்ஸை போரில் தோற்கடித்த பின் அத்தேசத்தை ஆக்கிரமித்துக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக போரிலிருந்து விலகியதுடன் தங்கள் நவீன சிநேகிதர்களிடமிருந்தும் விலகும்படி அடிப்போமென்று ஜெர்மன் பத்திரிகைகளில் சில அப்பட்டையாய் பிரஸ்தாபித்தன!

நாஸி ஜெர்மனியும் அதேவழி செய்கிறது. பிரான்ஸுக்குப் போரில் தோல்வி கிடைத்தபின் 2 வழிகள் இருந்தன. கிரீஸ் அல்லது யூகோஸ்லாவியாவைப்போல் சகித்து பொறுத்து சண்டை செய்து நேசதேசத்தாரின் வெற்றியில் நம்பிக்கையுடன் இருந்திருக்கலாம்; அல்லது கீழே விழுந்து “இதோ கிடக்கிறேன். என்னை தயவு செய்து உதையுங்கள்” என்று சொல்லியிருக்கலாம். படக்கூடாத இடங்களில் உதைக்கமாட்டார்கள் என்று ஜெர்மன் கண்ணியத்தில் நம்பிக்கை இருந்ததுபோல் தளகர்த்தர் பிடேன் பாசாங்கு பண்ணினார். பயன் ஒரே விதந்தான். இக்கிழவருடைய சரீர சக்தி, மனோதிடம், எல்லாம் லவால், டார்லான் கோஷ்டியாருடைய தந்திர மந்திரங்களால் அழிபட்டன. புத்தி தடுமாறிப்போன இந்த தளகர்த்தன் கையிலிருக்கும் துருப்புச் சீட்டை ஜெர்மானியர்கள் பலாத்காரமாகப் பிடுங்க நினைக்கிறார்கள். விஷி கவர்ன்மெண்டாருக்கும், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கும் விவகாரங்களை இழுத்து விடுவதிலும் தனது பழைய நண்பனுக்கு விரோதமாக சில காரியங்களைச் செய்யும்படி பிரிடனை செய்து, அரைப்பட்டினியாயிருக்கும் பிரெஞ்சுக்காரரை நம்மள் பேரில் ஆத்திரப்படும்படி செய்வதிலும், ஜெர்மானியர் தங்கள் முழுகவனத்தையும் செலுத்தி வருகிறார்கள். மத்தியதரைக்கடலில் காபந்து கப்பல்களைத் தாக்கியது ஒரு உதாரணம்; ஸிரியா, பிரெஞ்சு-ஸிரியா விமான நிலயங்களை ஜெர்மன் விமானிகள் உபயோகிப்பது இன்னொரு உதாரணம். இதாலிய தளவாடக் கப்பல்கள் (பிரெஞ்சு கப்பல்களில்லாத போனாலும்) ஸிரெனைகாவில் ஜெர்மன் துருப்புகளுக்கு சாமான்கள் கொண்டுபோகையில் ஸ்பாக்ஸ் என்ற ட்யூனிஸிலுள்ள பிரெஞ்சுத் துறைமுகத்தை உபயோகித்ததும் மற்றொரு உதாரணம்.

பிரிடிஷ் கவர்ன்மெண்டார் பின்வாங்கவில்லை. பிரெஞ்சு துறைமுகங்களாய் இருக்கட்டும், அல்லது பிரெஞ்சுக் கடல்களாக இருக்கட்டும், அல்லது பிரெஞ்சு அதிகாரமுள்ள நாடுகளாக இருக்கட்டும், எங்கேயானாலும் சரி, எதிரியைக்கண்டு விட்டால் போர் புரிவோம் என்று அவர்கள் அழுத்தமாகச் சொல்லிவிட்டார்கள். இதுவரை சண்டை ஒன்றையும் காணோம். ஸிரியாவிலுள்ள தளகர்த்தர் டெண்ட்ஸ் "என்ன உத்தரவு" என்று விஷி கவர்ன்மெண்டாரைக் கேட்டார். பதிலைக்காணோம். மற்ற விஷயங்களைப்பற்றி விஷிக் கிழவர்கள் செய்த ஆக்ஷேபனை எல்லாம் நமது பார்லிமெண்ட் சபையிலும் அந்நிய இலாகா ஆபீஸிலும் நிராகரிக்கப்பட்டன. அரட்டலும் தாஜாவும் ரிப்பன்டிராபும், ஆபெட்ஸும், இவ்வருஷம் பிடேனைச் செய்ததை நினைத்துக்கொண்டு "ஏன் அப்படி" என்று நாம் விசாரிக்கலாம்.

## கசப்பும் தித்திப்பும்.

பிரான்ஸ் விழுங்கவேண்டிய கசப்பு சாமான்களாவன:—

(1) ஆக்கிரமண பிரான்ஸ், அனாக்கிரமண பிரான்ஸ் என்று பிரிக்கப்பட்டதால் சமூக வாழ்விலும் பொருளாதாரநிலையிலும் இருவகைபட்டுப்போவது.

(2) 20-லக்ஷம் துருப்புகள் ஜாமீனாக ஜெர்மனியில் இருப்பது.

(3) பூர்ணமாக ராணுவ காரியங்களில் ஜெர்மனியுடன் பிடேன் ஒத்துழைத்தால் பிரான்ஸ் முழுமையும் ஆக்கிரமிக்கப்பட்டு, 18 முதல் 48-வரை வயதுள்ள பிரெஞ்சுக்காரரெல்லாம் ஜெர்மன் சுரங்கங்களிலும் தொழிற்சாலைகளிலும் வேலைசெய்யும்படி நேர்தல்.

## இந்தக் கசப்பை மறைக்கும் சர்க்கரையாவன.

(1) புதுமுறையில், கைத்தொழில் அபிவிருத்தி சம்பந்தமாயும் அத்துடன் சேர்ந்த அபேதவாதம், நாஸ்திகம், தொழிலாளிகள் வேலை நிறுத்தல், ஆபாச தேசீயவாதம் இவைகளைப் பற்றியெல்லாம் பிரான்ஸ் கவலைப்படவேண்டிய அவசியமில்லாதிருக்கலாம். தன்புதிய துணைவனுடைய விவசாயக்கூட்டாளியாகி, கடல்களிலிருந்து பிரிடிஷ்க் கப்பல்கள் ஸ்தானத்தை பிரெஞ்சுக் கப்பல்கள் எடுத்துக்கொண்டு பிரிடனுக்கு பதிலாக உலகத்திற்கு ஏற்றுமதி இறக்குமதி கொண்டுபோகும் தேசமாகலாம்.

(2) பிரான்ஸ் தன் ஆபிரிக்க நாடுகளை இழக்காமலிருக்கலாம். "புதியதும் ஒத்துமைபட்டதுமான ஐரோப்பாவின் சாதகார்த்தம்" ஜெர்மனியுடனும் ஒரு வேளை இதாலியுடனும் சேர்ந்து ஆபிரிகாவைக் கொள்ளையடிக்கலாம்.

பாருங்கள், 18-வது நூற்றாண்டில் பிரான்ஸ் அடைந்திருந்த மகிமையை அடையலாம் (அந்த அயோக்கியர்கள் பிரிடிஷார் பிரான்ஸிடமிருந்து பிடுங்கிய மகிமையான அந்தஸ்தை) அடையலாம்! அல்லது அவர்கள் மென்னி முறிபடலாம்!!



லவால்களும் டார்லான்களும் டிப்ரையன்களும், ஒருவாறு, புரளி மரியாதை செய்கிறார்களே. அந்த கூறுகெட்ட கிழவனும், இப்போ சொல்லுகிறார்களே, "ஒத்துழைப்பு" என்று, அதில் சேர்ந்துவிடுவோர்களென்று தெரிகிறது. இருந்தபோதிலும் அவன் நினைக்கிறபடி, ஏதோ சிக்கல் இருக்கிறது. ஏன் அப்படி?

(1) தான் செய்வது என்னவென்று பிரெஞ்சுக்காரருக்கு மனதிற்கு வந்துவிட்டால், தனக்கு ஆபத்து வந்துவிடுமென்று டார்லானுக்குத்தெரியும்.

(2) பிரெஞ்சுப் பொதுமக்களுக்கு இந்த "ஒத்துழைப்பில்" நம்பிக்கையில்லையென்று ஜெர்மானியருக்குத்தெரியும். டார்லான், ஆபெட்ச் போன்ற சில துரோகிகள் மூலம்தான் ஜெர்மனி வேலை செய்யலாம்.

(3) டி கால் கட்சி வெளிநாடுகளில் மட்டுமில்லாமல் பிரான்ஸிலும் பரவுகிறது.

(4) நாடோடி பிரெஞ்சுக்காரர்களுக்கு கண்ணியமும் சுயேச்சையும் பகுத்தறிவும் உண்டு. இந்த ஸ்திதியில், புது உடன்படிக்கையை அமுலுக்குக் கொண்டுவருவதில் தாமதம் எவ்வளவு ஆத்திரமுண்டாக்கினாலும், மேற்கொண்டும் ஜெர்மனி நிர்ப்பந்தப்படுத்தினால் பிரான்ஸில் பெரும் புரட்சி கிளம்பிவிடக்கூடும். இல்லையேல், ஜூரிக் பத்திரிகையான "வோல்க்ஸ் ரெக்ட்" டில் சொல்லியிருக்கிறபடி ஒவ்வொரு வீதியிலும் வீடுகளில் "நெவார் சிலுவை" (Cross of Navarre) படம் காணப்படுவானேன்? ஏன் மத்தியான உணவுகாலத்தில், பிரிடிஷ் ரேடியோ அறிக்கைகளுக்கு தடை உண்டாகுமென்று டெலிபோனில் பேசுகிறார்களில்லை? பிரிட்டிஷ் விமானங்கள் வட பிரான்ஸ் மேல் பறந்தால் ஆரவாரத்துடன் வரவேற்கிறார்கள்.

பிரான்ஸ் இளப்பப்படலாம்; ஆயினும் அந்த டிராமாவில் முடிவான பேச்சு அட்மிரல் டார்லானுடையதாக இராது.

---

## "யுத்தத்தில் பிரிடன்தான் ஜயிக்கும்."
## ஒரு அமெரிக்கருடைய காரணங்கள்.
## பிரிடனுடைய கடற் பலமே முக்கிய காரணம்.

[நியூ யார்க் ஹெரால்டு ட்ரிபியூன் (New York Herald Tribune) பத்திரிகையின் ராணுவம் கடற்படை இவைகளைப்பற்றி எழுதுபவரான மேஜர் பீல்டிங் எலியட் (Major Fielding Eliot) என்பவர் அமெரிக்காவிலிருந்து ரேடியோ மூலம் பேசும்பொழுது பிரிடன்தான் ஜயிக்கும் என்பதற்கு சில காரணங்களை வெளியிட்டார்.]

அவையாவன:—

1. பிரிடனுடைய கடல் ஏகாதிபத்தியம் ஐரோப்பாவிற்கு வெளியேயிருக்கும் பல நாடுகளிலிருந்து பல முக்கியமான யுத்தத்திற்குத் தேவையான சாமான்கள் ஜெர்மனிக்கு கிடைக்காதபடி பிரிடிஷ் கடற்படை செய்துவிடுகிறது.

பிரிடனுக்கோ வென்றால் பிரிடிஷ் சாம்ராஜ்ஜியமென்ன அதற்கு வெளியேயிருக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்ன இவைகளில் கிடைக்கும் முக்கியமான யுத்த சாமான்கள் பிரிடனுக்கு சுலபமாக கிடைக்கின்றன.

2. ஜெர்மனியிலிருக்கும் தொழிற்சாலைகளென்ன, யுத்த தளவாடங்கள் உற்பத்திசெய்யுமிடங்களென்ன இவைகள் பிரிடிஷ் விமானத் தாக்குதலினின்று தப்பமுடியவில்லை. அதேமாதிரி பிரிடனிலிருக்கும் ஏராளமான தொழிற்சாலைகள் ஜெர்மன் விமானங்களுக்கு இலக்கானாலும் பிரிடிஷ் சாம்ராஜ்ஜியமென்ன, அமெரிக்க ஐக்கிய நாடுகளென்ன இவைகளின் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் சாமான்கள் பிரிடனுக்கு வந்துகொண்டேயிருக்கிறது. வெகுதூரத்திலுள்ள பிரிடிஷ் சாம்ராஜ்ஜிய நாடுகளையும் அமெரிக்க ஐக்கிய நாடுகளையும் ஜெர்மன் விமானங்களால் ஒன்றும் செய்யமுடியாது.

3. ஜெர்மனியின் உற்பத்தி செய்யும் சக்தி உச்சஸ்தாயியை அடைந்துவிட்டது. அதனுடைய தொழிற்சாலைகளால் இப்பொழுது உற்பத்தி செய்வதற்கு மேல் அதிகம் உற்பத்தி செய்யமுடியாது. பிரிடனுடைய ஆயுதக்களஞ்சியமான அமெரிக்காவிலோ இப்பொழுதுதான் யுத்த சாமான்கள் செய்யத்தொடங்கி இருக்கிறார்கள். அதனுடைய முழுபலமும் வருவதற்கு கொஞ்சகாலம் செல்லும். ஆகவே ஜெர்மனிக்கு யுத்த ஆரம்பத்திலிருக்கும் சில சௌகரியங்கள் எப்பொழுதும் நிலைத்திருக்காது.

## இறுதிப்போர் நடக்கப்போகும் இடம்.

இறுதியாக முக்கியமான போராட்டம் நடக்கப்போகுமிடம் பிரிடிஷ் தீவுகளும், அவைகளைச் சுற்றியிருக்கும் வட அட்லாண்டிக் சமுத்திரமும். அமெரிக்காவிலிருந்து டாங்கிகள் (tanks), விமானங்கள், வெடிமருந்துகள், கப்பல்கள், ஆகாராதிகள் பிரிடனுக்கு வந்துகொண்டிருக்கின்றன. ஜெர்மனியால் ஏற்படும் நஷ்டத்தை கூடியவரையில் குறைத்து, சாமான்களும் வர வர அதிகமாக வரத்தொடங்கினால் பிரிடனால் ஜெர்மன் படையெடுப்பை நிச்சயம் சமாளித்து நிற்கமுடியும். ஏன், ஜெர்மனியையே தாக்கவும் முடியும்—முதலில் ஆகாய மூல்யமாய், பிற்பாடு மற்ற யுத்த சாதனங்களாலும் கூடத்தான்.

1917-ம் வருஷம் இருந்ததைப்போல் இப்பொழுதும் அமெரிக்காவிடம் கப்பற்பலம் அதிகமாக இருக்கிறது. அந்த பலத்தையும் நம்முடைய பலத்தோடு சேர்த்து உபயோகித்தால் இப்பொழுது பிரிடனுடைய கப்பல்கள் வரும் மார்க்கத்தில் ஜெர்மனியால் நடத்தப்படும் போரை பிரிடன் நிச்சயமாக ஜயித்துவிடும்.

அமெரிக்காவின் விமான உற்பத்தி, முக்கியமாக, குண்டுகள் வீசும் விமானங்களின் உற்பத்தி அதிகமாகிக்கொண்டு வருகிறது. அவைகளை பிரிடனில் பத்திரமாகக் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டால் பிரிடன் ஜெர்மனியினுடைய மனோபலத்தை சீர்குலைக்கமுடியும்.

யந்திர சாதனங்களை உபயோகித்து நடத்தும் போரில் அமெரிக்காவை வேறெந்ததேசமும் வெல்லமுடியாது. ஏனென்றால் யந்திரங்கள் தயார் செய்வதில் அமெரிக்கா தேசம்தான் முதல் ஸ்தானம் வகிக்கிறது.



ராணுவ சமாசாரங்களைவிட ஒரு தேசத்தின் மனோபாவம்தான் முக்கியமானது. "நடக்கமுடியாது" என்று சொல்லுவதைப்பற்றி ஜாக்கிரதையாக இருக்கும்படி பிஸ்மார்க் (Bismarck) ஜெர்மன் ஜனங்களை எச்சரித்திருக்கிறார். அதை நாமும் கடைப்பிடித்தால் நமக்கும் க்ஷேமம்.

---

## ரூஸ்வெல்டின் பிரயத்தனங்கள்.
## வியாபார விமானங்கள் பிரிடனுக்குக் கொடுக்கப்படும்.

ஏப்ரல் 29உ டெயிலி மெயில் பத்திரிகைக்கு வால்டர் பார் விடுத்த தந்தியில் கண்டது.

பிரிடனுடன் நெருக்கமான நேசபான்மையுடன், அச்சுநாடுகளுக்கு எதிர்ப்பாக, ராணுவ, ராஜீய, பொருளாதார ஒத்தாசை பிரிடனுக்குச் செய்ய ரூஸ்வெல்ட் தயார் செய்திருக்கிறார்.

நம்பிக்கைக்கு ஆதாரமான செய்திகளிலிருந்து கீழ்க்கண்டவைகள் உள்பட பலவிதம் ஒத்தாசை செய்ய தயார் செய்திருக்கிறார்.

(1) இதாலிக்கும், ஜெர்மனிக்கும், ஐக்கிய நாட்டிலுள்ள நாணய மதிப்பைக் குலைப்பது.

(2) ஜப்பானுக்கு ஏற்றுமதியாகும் எண்ணெயைப் பொறுத்து பலத்த கண்காணிப்பு. (சைனா தேசத்துக்கு அன்னிய நாட்டு மந்திரி டாக்டர் கோடேசேயுடனும் உள்நாட்டு தாத்காலிக மந்திரி சம்மர் வெல்சுடனும் ரூஸ்வெல்ட் பலமான சர்ச்சைகள் செய்திருக்கிறார்).

(3) ஏற்கனவே பிரிட்னுக்கு வெள்ளம்போல் அனுப்பப்பட்டுவரும் அமெரிக்கக் கப்பல்களை—முக்கியமாக காவலுக்கு உபயோகப்படக்கூடியவைகளை—அதிகப்படுத்துவது. கோஸ்ட் கார்டு மாகசீன் (கடற்கரைக் காவலைப் பற்றிய பத்திரிகை) கூறுவதாவது: கூடிய சீக்கிரத்தில் குத்தகை ஒப்பந்தப்படி அமெரிக்காவிலிருந்து மற்றொருதரம் அமெரிக்கக் கப்பல்கள் வர விருக்கிறது.

(4) அச்சு நாடுகளின் ஆபிரிக்கா கண்ட படையெடுப்பு சமயத்திலேயே பஸிபிக் மாஹா சமுத்திரத்திலும் ஜப்பானிய யுத்தக் கப்பல்கள் படையெடுப்பு நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக 'மானில்லா' விலிருந்து ரூஸ்வெல்ட்டுக்கு செய்திகிடைத்திருக்கிறது. ஜப்பானால் புதிதாக ஏதேனும் விரோதமுறை அனுஷ்டிக்கப்படுமோ என்று கருதி அமெரிக்காவும் பிரிடனும் பரஸ்பரம் நெருக்கங்கொண்டு தங்கள் தங்கள் ராணுவ, ராஜீய தயாரிப்புகளைப் பரமாரிக்கொண்டிருக்கின்றன.

(5) சென்ற மஹாயுத்தத்தில் அமெரிக்கர் யுத்த தளவாட தயாரிப்புகளை அதிகப்படுத்த யுக்தி சொல்லிய பனார்ட் பாருச்சுடனும், தற்போது யுத்த தளவாட தயாரிப்பு நிலைய அதிகாரியான நூட்சன்னுடனும் ரூஸ்வெல்ட் மந்திராலோசனை செய்திருக்கிறார்.

(6) விமானங்கள் செய்யும் எல்லாத் தொழிற்சாலைகளும், அவைகளில் செய்யப்படும் எல்லா விமானங்களையும் பிரிடனுக்கும், நேச நாடுகளுக்கும் அனுப்பிவைப்பது என்ற கருத்துடன் அவைகளை கவர்ன்மெண்டில் எடுத்துக் கொள்வது என்ற நோக்கத்துடன், தனிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

இதை வெளியிடும் துவாராக ரூஸ்வெல்ட் இதனால் ஏராள விமானங்கள் தயாராகும் என்று சொல்லியிருக்கிறார்.

தற்போது இந்த யந்திரசாலைகளிலிருந்து எவ்வளவு விமானங்கள் தயாராக்கக் கூடும் என்று நான் உண்மையாய் எடுத்துரைத்தேனானால், அது உலகத்தையே பிரமிக்கச்செய்யும்.

சென்ற மாரிகாலத்தில் ஊக்கமாக எதிர்பார்த்ததைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக இப்போது விமானங்கள் செய்யப்படுகின்றன.

---

## ஜப்பானியர் முன்னேற்றத்தைத் தடுக்க கடற்படைகளைத் திரட்டுதல்.
## ஜப்பானியப் பத்திரிகையின் விருத்தாந்தம்.
## தூரக் கிழக்கு நாடுகளின் தற்காப்பு அமெரிக்காவிடம் ஒப் படைக்கப்பட்டிருக்கிறதா ?

எப்ரல் 30 தேதியன்று டைம்ஸ் பத்திரிகையின் டோகியோவிலுள்ள நிருபர் தந்தி மூலம் அறிவிக்கிறார்.

ஜப்பான் தெற்கு நோக்கிச் செல்ல யோசிப்பதைத்தடுக்க பிரிடிஷ் சாம்ராஜ்யம், ஐக்கிய நாடுகள், நெதர்லாந்து கிழக்கு இந்தீஸ், சைனா, இவைகளுடைய ராணுவ, கடற்படைகளைத் திரட்டுவதற்காக யாதொரு விதமான ஒப்பந்தமும் ஏற்படவில்லையென்று, ஜப்பான் உள்பட எல்லா நாடுகளும் சொன்ன போதிலும், ஜப்பானியப் பத்திரிகைகளில் அநேக வரலாறுகளில் ஒப்பந்தத்தின் ஷரத்துகளின்படி நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள 'ஆரம்பித்துவிட்டார்களென்று வெளியாகுகின்றன.

நிஷி நிஷி என்னும் பத்திரிகையில் பிரிடிஷ் அரசாங்கத்தார் தூரக் கிழக்கு நாட்டிலுள்ள கடற்படையை மத்தியதரைக்கடலுக்குக் கொண்டுபோகப்போவதாகவும் தூரக் கிழக்கு நாடுகளின் தற்காப்பை அமெரிக்கக் கடற்படைக்கு ஒப்படைத்துவிட்டதாகவும் அறிவிக்கிறது. ஒரு செய்திப் பிரகாரம் ஆஸ்திரேலியாவுக்கும், நியூஸிலாந்துக்கும் நல்ல எண்ணத்துடன் சென்ற நான்கு அமெரிக்க சண்டைக் கப்பல்கள் திடீரென்று சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. இன்னும் அநேக கப்பல்களும் ஹவாய், மானிலா தீவுகளிலிருந்து சிங்கப்பூருக்குப் போய்க்கொண்டிருக்கின்றன.



ரினௌன், ஈகிள் போன்ற கப்பல்களுள்ள பிரிடிஷ் கடற்படையின் முக்கியமான பாகமானது மத்தியதரைக்கடலுக்கு மார்ச்சுமீ்த்தில் அனுப்பப்பட்டபொழுது மலேயா நாட்டின் சமுத்திரப் பிராந்தியத்தைக் காப்பாற்றுவதற்காக அமெரிக்காவின் நீர்மூழ்கிகள் அனுப்பப்பட்டன. ஆசியாவிலுள்ள அமெரிக்கக் கடற்படையின் கடற் பதியான ஹார்ட் என்பவர் சிங்கப்பூருக்கு வந்து பிரிடிஷ் ராணுவ அதிகாரிகளோடு கலந்து பேசப்போவதாக வதந்தி உலாவுகிறது. இதைப்பற்றி ஜப்பானியப் பத்திரிகைகள் சொல்லுவதாவது. வெளிப்படையாக ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிராவிட்டாலும் உத்தியோகஸ்தர்களாகவே முடிவுசெய்து ஒரு ஏற்பாடு செய்துவிடலாமென்று. சமீபகாலத்தில், பிரிடன், ஐக்கிய நாடுகள், இந்தியா, ஆஸ்திரேலியா, நெதர்லாந்து கிழக்கு இந்தீஸ், சுங்கிங் அரசாங்கம் இவைகளின் 'பிரதிநிதிகள் கூடி ஆலோசித்து ஹாங்காங், சிங்கப்பூர் இவைகளைப் பாதுகாத்துவரும் அமெரிக்கக் கடற்படைக்கு உணவுப்பொருள்களும் மரக்கரியும் கொடுப்பதாக ஏற்பாடுசெய்துவிட்டார்களென்றும் அறிவிக்கிறது.

டாக்டர் ஹெல்மத் வால்டாய் தலைமையின்கீழ் ஒரு ஜெர்மானிய பொருளாதார கோஷ்டி டோக்கியோவுக்கு வந்துசேர்ந்துவிட்டது.

---

## பின்லாண்டில் ஜெர்மன் சைனிய இறக்குமதி.
## இம் முயற்சியின் மர்மம் தெளிவாகப் புலப்படவில்லை.
## ருஷ்யாவின் பேரில் துடரப்படும் நரம்புத் தளர்ச்சி செய்யும் யுத்த முறையா ?

['ப்ரவாடா' பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருப்பதான, பின்லாண்டின் தென் பாகத்திலுள்ள ஏபோவில் 12,000 ஜெர்மன் துருப்புகள் டாங்கிகள் உள்பட இறக்கப்பட்டிருக்கின்றன, என்ற செய்தியைப்பற்றி 'டைம்ஸ்' பத்திரிகையின் ராஜீய நிருபர் கூறுவதாவது.]

பிரிடனுக்கு வருத்தத்தையும், ருஷ்யாவுக்குத் திகைப்பையும் மூட்டியதான ஹெல்சின்கியுடன் ஜெர்மனிக்கு ஏற்பட்ட உடன்படிக்கையைப் பற்றி யாவரும் அறிவோம். பின்லாண்டு மூலம் நார்வேயின் வடக்குபாகத்துக்கு ரஜா முடிந்து போகும் சைன்யத்தின் கணிக்கை அங்கிருந்து ரஜாவில் திரும்பும் கணிக்கைக்கு ஏற்றல் தாழ்வு இல்லாமல் இருக்கவேண்டும் என்று ஒரே கண்டிப்பான ஷரத்துக்குட்பட்டு ஹெல்சின்கி ஜெர்மன் ராணுவப்படைகளுக்கு போக்குவரவு சாதனம் அளித்திருப்பது நாம் அறிந்ததே.

இதைத் தவிர பிரத்தியேகமாக செய்தி இவ்விதம் 12,000 ஜெர்மன் துருப்புகள் பின்லாண்டில் இறக்கப்பட்டிருப்பதாக, பிரிடனுக்கு கிடைக்கவில்லை. ரஜாவில் செல்லும் துருப்புகள் சாதாரணமாக டாங்குகளையும், பீரங்கிகளையும், எடுத்துச் செல்வதில்லை. ஒன்று இந்தக் கணிக்கை வெகுபுளுகாக இருக்கவேண்டும்—

பின்லாண்டு ஜனங்கள் 1,300 துருப்புகள்தான் இறங்கியிருப்பதாகக் கூறுகிறார்கள்—அல்லது ஜெர்மானியர் தங்கள் வழக்கப்படி ஏதோ சிறிது இடங்கொடுக்கப்பட்டதை அந்த உடன்படிக்கையையே நிராகரித்து தங்கள் நோக்கப்படி ஏராளமான சைனியத்தை அனுப்புவதாக இருக்கவேண்டும். நன்றாக பரிசீலனை செய்யப்பட வேண்டியதாகவே இது இருக்கிறது. இதன் மத்தியில் இச் செய்தியை பிரசுரப்படுத்தச் செய்ததின்மூலம் சோவியத் ருஷ்யா தான் விழித்திருப்பதாக காட்டியிருக்கிறது.

ருஷ்யாவுக்கு அடிமையாகியிருக்கும் தங்கள் நாட்டை விடுவித்துக்கொள்ள வேண்டுமென்ற நோக்கம்கொண்ட பல பின்லாண்ட் தேசத்தார்கள் இதில் ஜெர்மானியருடன் மிக்க நெருக்கமாக உழைத்து ஒத்தாசை செய்கிறார்கள் என்று ஸ்வீடன் தேசத்து பத்திரிகைகள் கூறுகின்றன. இதில் எவ்வளவு உண்மை என்று கண்டுபிடிப்பது சிரமசாத்தியமானது—பின்லாண்ட் கவர்ன்மெண்ட் தரப்பில் இது விஷயம் பலமாக ஆக்ஷேபிக்கபட்டுவருகிறது—அல்லது ருஷ்யாவின் பேரில் ஜெர்மனியால் துடரபட்டிருக்கும் நரம்புத் தளர்ச்சி முறைகளில் இது சேர்ந்தது என்றும் கண்டுகொள்ளக்கூடவில்லை. உதாரணமாக கடைசியாக வந்த ஜெர்மன் ‘வீர்மாக்’ என்ற பத்திரிகை, ஹிட்லர்தான் முதன்முதலில் “போல்ஷிவிசத்தை” எதிர்த்தார் என்றும், 10 வருஷத்தில் அதையும் வென்றார் என்றும் கூறுகிறது.

சோவியத் ருஷ்யாவிடமிருந்து தனக்குப்போதுமான சௌகரியங்களை வற்புறுத்திப்பெற ஜெர்மனி எதிர்பார்க்கிறது. மாட்ரிட்டுடனும், விஷியுடனும், லிஸ்பனுடனும் ஒப்பந்தம் பேசிக்கொண்டிருக்கும் இந்தத் தருவாயில், ருஷ்யாவுக்கு விரோதமான எந்த பாவமும் நடவடிக்கையும் ஹிட்லருக்கு தற்போது மிகவும் பிரயோஜனப்படுகின்றன.

---

## ஸ்காண்டிநேவிய தேசத்தில் எதிர்பார்க்கும் சம்பவங்கள். ஒரு ருசிகரமான விஷயதானம்.

[மேமீ 7ல ஸ்டாக்ஹாம் கிருபர் கடல் தந்திமூலம் அனுப்பிய செய்தி.]

இராக் தேசத்திலும், மேலப்பாலைவனப் பிரதேசங்களிலும் நடந்துவரும் சம்பவங்களின் போக்குகளைத் தங்கள் தேச எல்லைகளில் நடந்துவரும் விஷயங்கள் போல் அவ்வளவு உற்று ஸ்வீடனும், பின்லாந்தும் கவனித்துவருகின்றன.

அந்த இராக், மேலப்பாலைவனப் பிரதேசங்களில் உடனடியாக ஏற்படும் கதிதான் இனி ஜெர்மனி, அடுத்தபடியாய் கருங்கடலுக்கு வடக்கில் போர் தொடருமா, தெற்கில் போர் தொடருமா, அல்லது கீழ மத்தியதரைக்கடல் பிரதேசம், மேஸூல் எண்ணெய்க் கிணறுப் பிரதேசம் இவைகளுள் பாயுமா அல்லது ருஷ்யா அதைச் சேர்ந்த காகஸஸ் எண்ணெய்க் கிணறுப் பிரதேசங்கள் இவைகள்மேல் கண்வைத்து அடிக்குமா என்ற கேள்விகளுக்கு, சரியான உத்தரம் கொடுக்கும் என்று புலமாய் அபிப்பிராயப்படுகிறார்கள்.



பல மாதங்கள் முன்பே, ஸ்டாக்ஹோமிலுள்ள தெரிந்தவருள் சிலர், 1941-ம் வருஷத்தில் ஹிட்லர் இரண்டில் ஒன்றுதான் செய்வார் என்று அபிப்பிராயப்பட்டார்கள். ஒன்று, ஹிட்லர் பிரிடனுக்கு தோல்விக்குமேல் தோல்வி கொடுக்கலாம். மற்றொன்று ருஷ்யாவை ஜயிக்கப் பார்ப்பான். வேறு எந்தவிதமான ஜயமும் ஜெர்மானியர்கள் யுத்த ஆவேசத்திற்கும், வெறிக்கும் ஆகாரம் கொடுக்காதாம்.

ஆரம்ப வசந்தகாலத்தில் ஆகாச விமானங்களாலும், நீர்மூழ்கிகளாலும் ஓடி அடிக்கும் யுத்தக் கப்பல்களாலும், பிரிடனை சமுத்தில் சுருக்கிடுவதுபோல் இருக்கி நெருக்குவதென்றும், அவர்கள் எடுக்கும் மேற்படி எத்தனங்கள் திருப்தியாகயிருந்தால், நடுக்கோடையில் பிரிடனைப் படையெடுப்பதென்றும் திட்டம் போடப்பட்டது.

ஏதன் மத்தியில், அட்லாண்டிக் மஹா சமுத்திரத்திலும், பிரிடன்பேரில் தொடுக்கப்பட்ட போரிலும், ஏற்படக்கூடிய போக்கிலிருந்து பிரிடன்பேரில் படையெடுப்பது உசிதமல்ல என்றுபட்டால், மே, ஜூன் மாதங்களில் ஜெர்மானியர் வேறு ஒரு மாற்றுத்திட்டத்திற்குப்போக இயலும்படி ஏற்பாடு தயார் செய்யப்பட்டிருந்தது.

ஒருக்கால் ருஷ்யாவை ஜெர்மனி படையெடுத்தால், அதற்கனுகுணமாக ஜெர்மனி சேனையின் பின் பக்கங்களின் பாதுகாப்புக்காக ஸ்லாவ் ஜாதியாரடங்கிய பல்கேரியா, யூகோஸ்லாவியா இந்த இரண்டு தேசங்களையும் நடுநிலைமையில் நிறுத்திவைக்கும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இத்தருணத்தில் பால்கன் நாடுகளில், யுத்தம் நடக்கவே கூடாது என்ற நோக்கம் இருந்தது. இப்பொழுது அவர்களுக்கு சித்தித்த ஜயம் வந்தால்கூட யுத்தம் வேண்டாம் என்றே ஜெர்மானியர் நினைத்தார்கள்.

## ஜெர்மானிய கால அட்டவணையை யூகோஸ்லாவியா கவிழ்த்துவிட்டது.

யூகோஸ்லாவியா எதிர்த்து நின்றது. இதனால் அதன்பேரில் அவசரத்துடன் முஸ்தீப்புகள் செய்யவேண்டிவந்தன. ஆதலால் கால அட்டவணைப்படி நடக்க முடியாமல் போய்விட்டது. தவிரவும் கீழ மத்தியதரைக்கடல் பிரதேசங்களில் புகும்படி ஜெர்மானியர்களை ஆசைகாட்டித் தூண்டியது.

அச்சு நாடுகளுக்கு வெகு சாதகமானவிதமாய், மேலப்பாலைவனப் பிரதேசத்திலும், இராக், ஸிரியா தேசங்களிலும் நிலைமை மாறினாலொழிய ஆதியில் போட்ட திட்டங்களில் இரண்டாவதையே ஜெர்மானியர் உடனடியாக மேற்கொள்வார்கள் என்று நம்பப்படுகிறது. இதுதான் ருஷ்யாவைத் தாக்குவது என்ற யோசனை.

ஆர்க்டிக் சமுத்திர வட்டத்திலுள்ள நார்வே, ஸ்வீடன் எல்லைகளிலிருந்து ஆரம்பித்து, பால்டிக் கடலோர சிறு தேசங்கள், போலந்து, ருமேனியா, இவைகளின் வழியாய் கருங்கடல்வரை நீட்டிய ஒரு மகத்தான எல்லைப்புறத் தாக்குதல்

ருஷ்யாவின்பேரில் ஜெர்மானியர் செய்யலாம். தவிரவும், கருங்கடலுக்குக் குறுக்கு மார்க்கமாய் ருஷ்யாவின்பேரில் படையெடுப்பும் செய்யும் என்று நம்பப்படுகிறது.

ருமேனியா, பல்கேரியா துறைமுகங்களில் ஜெர்மானியர்கள் ஏராளமான வேகமாய்ச் செல்லும் படகுகளும், நீர்மூழ்கிகளும் சேகரம் செய்துவைத்திருக்கிறார்கள். இத்துடன்கூட பல்கேரியா தேசத்தில் ஒரு படையெடுப்புச் சேனை தயார் செய்திருக்கிறார்கள். அந்தச் சேனையின் தனிப்பட்ட ஆடை, கவசங்களைப் பார்த்தால், அது கருங்கடல் மார்க்கத்தை ஆசியா-மைனர் தேசத்திற்குப் போகும் உபவழியாக உபயோகித்து படையெடுக்க உத்தேசம் என்பதைக் குறிக்கின்றது.

பிரிடிஷ் கடற்படை கையில் சிக்காமல், ஜெர்மானியர்கள் அன்டோலியா (துருக்கி)வில் எங்கேயோ ஒரு இடத்தில் இறங்கக்கூடும், அல்லது கிரீஸிலிருந்து நேராடி ஸிரியாவுக்கு யுத்த சன்னத்தமாகவே போக எத்தனிக்கலாம்.

இந்தப்படை ருஷ்யாப் படையெடுப்புக்காக உபயோகப்படுத்துவதாகயிருந்தால், ஏன் இந்தப்படையில் ஒட்டகை பலம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று புரியவில்லை. ஒருக்கால் படையெடுக்கும் பிரதேசம், காஸ்பியனுக்கு அப்பாலுள்ள பாலைவனங்களையும் உள்கொண்டிருக்கலாம்.

## அகண்டமான முஸ்தீப்புகளுக்கு ஏற்ற நிலைமை :—

பால்டிக் கடலுக்கும், கருங்கடலுக்கும் மத்தியப் பிரதேசங்களில், இத்தனைத் துருப்புகள் சென்ற யுத்தத்திற்குப் பிறகு இப்பொழுதுதான் குழுமியிருக்கின்றன என்று பிரயாணிகள் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ருஷ்ய எல்லையோரப் பிரதேசங்கள், பனிக்குப்பிறகு உலர்ந்துவருவதால், யுத்த முஸ்தீப்புகளுக்கு லாயக்காக ஆகின்றது. ருஷ்யத் தலைவர்கள், யுத்தம்போட நேர்ந்தால், அயல்தேசத்திற்குள்ளேயே தாங்கள் படையெடுத்து போர் நடத்துவார்கள் என்று அடிக்கடி சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால், செஞ்சேனை முதலெடுப்பிலேயே இதரரைத் தாக்கும்படியான வலுப்படைத்திருக்கின்றது என்று, ஒருவரும் நம்புகிறார்களில்லை. ஏன்! வெகுவாய் விட்டுக்கொடுக்கத்தான் வேணுமென்று கட்டாயப்படுத்தப்பட்டால், ருஷ்யா சண்டைக்குக்கூட வராது என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் இப்படி விட்டுக்கொடுப்பது என்றால், யுக்ரைன் பிரதேச தானியத்தைப் பூராவும், ஜெர்மானியர் தங்கள் மனம்போனபடி விநியோகிக்க ருஷ்யா சம்மதிக்குமா? பாகு தேச எண்ணெயைத்தான் ஜெர்மானியரின் ஆதிக்கத்தில் ருஷ்யா விட்டுவிடுமா? இப்படி ருஷ்யா விட்டுக்கொடுத்துவிடுமென்று எண்ணுவதற்கு சாத்தியமில்லை.

## மாஸ்கோவின் மனப்பான்மையில் மாறுதல்.

இதுவரை ருஷ்யா ஒரு நெருப்புக்கோழி மாதிரி மனோபாவம் படைத்திருந்தது. ஜெர்மனி, தன் சேனைகளை பின்லாந்து மூலம் அனுப்ப யோசனைசெய்த டயத்தில் ருஷ்யா, ஜெர்மானியரின் ராணுவ ஆயத்தங்களைப்பார்த்து; அனுமதிக்க



மறுத்ததிலிருந்து, மாறுதல் வெளிப்படையாகத் தெரிகிறது. பின்லாந்து வழியாய்ச் சென்ற ஜெர்மன் துருப்புகள் 12,000-மோ, அல்லது பின்கள் சொல்லுகிறபடி 1,200 மட்டிலும்தானோ. இந்தச் சேனையைப்பற்றி ருஷ்ய பேபர்கள் குறித்து முக்கியமாய் எழுதுவது அர்த்தபுஷ்டியாகயிருக்கிறது.

யுக்ரேன் தேசத்தில் முன் எச்சரிக்கையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தேவைக்கு மேலுள்ள தானியங்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன என்றும் ஜெர்மனிக்கு ஆகாரம் கிடைக்காதென்றும் பிரயாணிகள் சொல்லுகிறார்கள் வசந்த காலத்தில் தொடுக்கும் யுத்த அலுவல்களால் சாகுபடியை நாசம் செய்யப்பட்டுவிடும். 1941-ம் வருஷத்திய மகசூலும் சூன்யமாகிவிடும்.

ஜெர்மன் பாமர ஜனங்களும், ருஷ்யாபேரில் போர் தொடுப்பதை சந்தோஷமாய் ஏற்றுக்கொள்வார்கள். ஏனெனில் யுக்ரேன் 'தானியம் முழுமையும்' தங்கள் வசமாகிவிடும். வசமானால் பிரிடிஷ் பிரதம மந்திரி சர்ச்சிலுக்கு எதிரிடையாய் நிமிர்ந்து நின்று கர்வத்துடன் நீடித்து போர்புரியமுடியும் என்று எண்ணுகிறார்கள். ஆனால், ஜெர்மானியர் இன்னும் முக்கியமான சங்கதியை உணர்கிறார்களில்லை.' ஹிட்லர் இங்கிலாந்தைப் படையெடுப்பதைவிட்டு ருஷ்யா மேல் கண்ணோக்கினால், தனக்கு முழுவெற்றி கிடையாது என்று அவன் எண்ணிவிட்டான் என்று ஏற்பட்டுவிடும். ஏதோ யுத்தத்தை முடிவுக்கு வராமல் ஒரு முட்டுக்கட்டையான நிலைமையே அவன் ஏற்படுத்திவிடுவான். இப்படி ஏற்படுவது ஹிட்லர் யோஜித்தோ, யோஜிக்காமலோ—சம்பவிக்கும். இம்மாதிரி ஸ்டாக்ஹோம் யுத்த நிருபர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

---

## ஸ்பெயினில் ஜெர்மன் விமான தளங்களா?
## ஜிப்ரால்டருக்கருகே கேந்திர ஸ்தானங்கள்.
## திரு. ஸூனர் என்பவருடன் அமெரிக்க ஸ்தானிகரின் பேச்சு.

டெயிலி டெலிகிராப் பத்திரிகையின் ராஜதந்திர நிருபர் எழுதினார் :—

ஸ்பெயின் தேசத்தின் நடுநிலைமை தகர்க்கப்பட்டுவிடுமோ வென்று வெகு மதிப்புக்குரிய இடத்திலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. ஜிப்ரால்டர் ஜல சந்தியை மூடிவிடுவதற்கு ஸாங்கோபாங்கமான உபாயங்கள் நாஸிகள் தேடியிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன்.

நாஸி விமானங்கள் பல அங்கு சேகரிக்கப்பட்டிருப்பதாகவும், அவைகளில் பல இப்பொழுதே பறப்பதற்கு ஸந்நத்தமாக இருப்பதாகவும் எனக்குச் செய்திகிடைத்திருக்கிறது. விமான எதிர்ப்பு பீரங்கிகள் ஏற்றப்பட்டிருக்கின்றன. ஜுதல சிப்பந்திகளும் பீரங்கித் தாரர்களும் வந்துவிட்டார்கள்.

ஜிப்ரால்டரிலிருந்து முறையே 60 மைல்களும், 120 மைல்களும் வட மேற்கேயுள்ள காடிஸ், ஹுயல்வா என்ற இடங்களில் விமான கானுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஜிப்ரால்டருக்கருகே இன்னும் சில கேந்திர ஸ்தானங்களிருக்கின்றன.

கொஞ்ச காலத்திற்கு முன் இந்த விதமான ஸ்தாபனங்களைக் கட்ட ஆரம்பித்தார்கள். லிபியாவில் நாஸிகள் வியாபிக்க ஆரம்பிக்கவே, உபரியாக சிற்பிகள் வந்து சேர்ந்திருக்கிறார்கள். வெகு துரிதமாக வேலை நடக்கிறது.

இந்தப் பிரயத்தனங்களை இப்பொழுதெல்லாம் நாஸிகள் அவ்வளவு ரகஸியமாக வைத்துக்கொள்ள முயற்சிப்பதில்லை.

ஏப்ரல்மீ 17உயிலிருந்து பிரெஞ்சு-ஸ்பானிய எல்லை மூடப்பட்டதும் ஜெர்மன் முஸ்தீபுகளுக்கு உபரி ருஜுவாகும்.

திரு. ஸுனெர் என்ற ஸ்பானிய அயல் நாட்டு மந்திரி ஜெர்மானியரிடம் திடமான நட்புக்கொண்டவர். ஜெர்மானியரை தேசத்திற்குள் அனுமதிக்கவேண்டிய தருணம் வந்தவுடனேயே சேனாதிபதி பிராங்கோவின் கையொப்பத்தைப்பெற்று விடுவதாக நம்புகிறார். அப்படியானால் மந்திரி சபையின் மற்ற அங்கத்தினர் நடந்தேறின காரியத்திற்கு ஆக்ஷேபனை சொல்லமுடியாது.

அமெரிக்க ஸ்தானிகரான திரு. வெட்டல் என்பவரிடம் சிறிது காலத்திற்கு முன் திரு. ஸுனெர் சொன்னார்: "ஜெர்மானியர் வெற்றிபெறுவார்கள் என்று நம்புவதோடும், அதை எதிர்பார்க்கிறேன். அதற்கு வேண்டிய உதவிசெய்து துரிதப் படுத்துவதற்கு வேண்டிய எல்லாக்காரியமும் செய்வேன்."

இந்த வாக்குமூலம் வாஷிங்டனுக்கு அனுப்பப்பட்டது. வெட்டல் ஸுனெரை பேட்டிகாணவேணுமென்ற உத்தரவுகிடைத்தது.

வெகுகாலம் தாமதித்து வெட்டல் ஸுனெரைப் பார்த்தார். ஜனநாயகம் வெற்றிபெற வேண்டியதற்கான காரியங்களைச்செய்ய அமெரிக்கா கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறதை தெளிவாய் உறுதியாய் எடுத்துரைத்தார்.

மத்தியதரைக்கடலில் தற்பொழுதோ பின்னரோ நடக்கும் சம்பவங்கள் கடைசி முடிவைத்தொடமாட்டாது என்று வற்புறுத்தினர்.

ஸ்பெயின் அயல் நாட்டுக்கொள்கைகளை நிர்த்தாரிப்பதில் இக்கடைசி முடிவை மனதில் பதியவைத்துக்கொண்டு தன்தேசக்ஷேமத்தைத் தேடுவார் என்று அமெரிக்கா நம்புவதாகச்சொன்னார்.

ஸ்பானிய அயல் நாட்டுமந்திரிக்கு அதிகப் படபடப்பு ஏற்பட்டது. அவர் அதிக உஷ்ணத்துடனே பேட்டியைமுடித்துக் கொண்டார்.

ஜெர்மானியருக்கு உதவக்கூடிய ஸ்பானியப்பொருள், நிதிகள் விஷயமாய் கிடைத்திருக்கிற செய்தியிலிருந்து அங்கு ஏராளமான பெட்ரோல் சேகரம் இருக்கிறதென்று தெரிகிறது.



இப்பொழுது ஸ்பெயின் சேகரித்து வைத்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு பெட்ரோல் சேகரிக்கப்பட்டுவிட்டதாக ஒரு ஸர்கார் அதிகாரி ஒரு பேட்டியில் தனது ஹோதாவில் சொன்னார்.

ஏராளமான ரப்பர் சேகரமும் இருப்பதாக மற்றொரு தகவலிலிருந்து தெரிகிறது.

---

## நராசுமுனை இருபக்கமும் ஆடுகிறது.

## ஜெர்மனியின் இரண்டாவது ஜூலீ சண்டைகள் அதிகம், உணவுப் பொருள்கள் குறைவு.

1940-ம் வருஷம் ஜூன்மீ ஜெர்மனிக்கு ஏராளமான வெற்றிகள் ஏற்பட்டது பிரிடன் மட்டுந்தான் ஜயிக்கப்படவேண்டியிருந்தது. பிரிடிஷ் தீவின் விதியை முடிவு செய்வதற்காக இதாலியும் யுத்தத்தில் இறங்கிவிட்டது. ஜெர்மனி பூராவும் கொடிகள் போடப்பட்டும், மாதாக் கோவில்களில் மணிகள் கோஷம் செய்யப்பட்டுமிருந்தன. நாய்களையெல்லாம் அடித்து ஜெர்மானியர்களுக்கு உணவுப் பொருள்களுக்காக உபயோகப்படுத்தப்பட்டது.

இரண்டாவது ஹிதிய ஜூன்மீ வந்துவிட்டது. ஜெர்மானியர்களின் தலைவர்களின் உறுதிமொழிக்கு முரணாக, ஜெர்மனியானது இன்னும் யுத்தம் செய்யவேண்டியிருக்கிறது. ஒரு வருஷத்திற்குப் பிறகு இதாலியின் நிலைமை மாறுபாடடைந்திருக்கிறது. அதேமாதிரியாக, பிரிடனிலும், அமெரிக்காவிலும் நிலை மாறிவிட்டது. கஷ்டப்படும் ஜனங்களிடம் ஹிட்லர் இன்னும் புதிதான அநேக சண்டைகள் போடப் போவதாக பீத்திக்கொள்ளுகிறான். அவர்களை அதிகமாக வேலை செய்யும்படி தன்புறுத்துகிறான். நீடித்த யுத்தத்துக்கு அவர்களை உள்ளாக்குகிறான். 1941-ம்ஹு ஜூன்மீத்தில் ஜெர்மனியில் உலாவும் செய்தி யாதெனில் சாப்பாடு பங்கிடுவதில் விசேஷமாகக் குறைக்கப்பட்டிருப்பது தான். வாரா வாரம் அளிக்கப்படும் கசாயானது 100-க்கு 20 வீதம் குறைக்கப்பட்டு ஆள் ஒன்றுக்கு 400 கிராமுகள் (சுமாராக 14 அவுன்ஸ்) ஆக அளிக்கப்படுகிறது.

### நாஸிகள் தங்கள் சொற்களை விழுங்குகிறார்கள்.

போலந்தை ஜெர்மனி தாக்கியபொழுது கோயரிங் சொன்னான். "ஜெர்மனியின் விமான இலாகா மந்திரியாகிய எனக்கு ரூர் பிரதேசத்துக்கு விமானங்களால் ஏற்படக்கூடிய தாக்குதலிலிருந்து தற்காப்புச் செய்யப்போதுமான ஏற்பாடுகள் செய்திருக்கிறேமென்று தோன்றுகிறது. எதிரிகளின் விமானங்களிலிருந்து ஒரு வெடிகுண்டுபோட ரூர் பிரதேசத்தில் விழாதபடி நாம் பார்த்துக் கொள்ளுவோம்."

இப்பொழுது கோயரிங் வாய் மூடிவிட்டது, மற்றவர்கள் பேச ஆரம்பித்து விட்டார்கள். ஜெர்மனியின் விமானப்படையின் இன்ஸ்பெக்டர் ஜெனரலான,

மில்ச் என்பவர் சமீபத்தில் "யுத்த ஏற்பாட்டிற்கு முக்கியமான தொழிற்சாலைகளுக்கும், ஆயுதம் பூண்ட துருப்புகளுக்கு ஆயுதங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கும், அல்லது சாமான்கள் சேமித்துவைத்திருக்கும் அல்லது உண்டுபண்ணப்படும் நிலயங்களுக்கும் நாசம் ஏற்படுவதை நாம் பொறுத்துக்கொள்ள முடியாது. நாம் எதிர்ப்புக்கு உள்ளாகி விட்டோம்" என்று கூறினர்.

கோயபெல்ஸும்கூட பகிரங்கமாக நமது தாய்நாட்டிற்கும் போர்முனைக்குமுள்ள வித்யாசங்கள் இப்பொழுது அற்று விட்டன என்று ஒப்புக்கொண்டு விட்டார்.

## ஹூட் கப்பலின் நஷ்டம்.

பிரிடனுடைய சண்டை க்ரூயிஸரான ஹூட் என்னும் கப்பல், பிஸ்மார்க் உள்பட அநேக சத்துருவின் கப்பல்களுடன் கிரீன்லாந்துக்குச் சமீபத்தில் நடந்த யுத்தத்தில் நாசமாகிவிட்டது. இதைக் கட்டுவதற்கு 60 லக்ஷம் பவுன்கள் செலவாயிருக்கிறது.

ஒரு வாரத்திற்குள்ளாக யுத்த ஆயுதங்கள் தயாரிப்பதற்காக, பிரிடனில் 1,080 லக்ஷம் பவுன்களுக்கு மேலாகவே நன்கொடைகள் மூலம் பொருள் சேமிக்கப்பட்டிருக்கிறது. இதைக்கொண்டு ஹூட்போன்ற 18 கப்பல்கள் கட்டிவிடலாம்.

ஆகிலும் பிரிடிஷ் கடற்படைக்கு ஹூட் போன்ற பெரிய கப்பல்களை இனிமேல் கட்டுவதாக பிரிடனுக்கு உத்தேசமில்லை.

## சண்டை க்ரூயிஸர்கள்.

சண்டை க்ரூயிஸர்கள் என்னும் கப்பல்கள் சென்ற மஹா யுத்தத்துக்கு முன்னால்தான் கட்ட ஆரம்பமாயிற்று. இந்த வகுப்புக் கப்பல்களில் சண்டைக் கப்பலிலுள்ள கனமான பீரங்கிகளின் சங்கியையும், க்ரூயிஸரின் வேகத்தையும் சேர்த்து அமைத்திருக்கிறது. இவைகளைக்கொண்டு சமுத்திரங்களில் வியாபாரக் கப்பல்களை மூழ்கடிக்கும் க்ரூயிஸர்களைத் தாக்கி அழித்துவிடலாம். வேகம் இருக்க வேண்டுமானால் கவசங்களைத் தியாகம் செய்யவேண்டிவரும். ஆகையால் சண்டை க்ரூயிஸர் என்பது வேகமாக அசையக்கூடிய கனமான பீரங்கி மேடைகளுள்ளதென்றும், அநேக குண்டுகள் போடக்கூடியதென்றும், ஆனால் குண்டுகளை ஏற்றுக்கொள்ள இயல்பற்றதென்றும் விவரிக்கலாம். எந்த அபாயத்திலிருந்து தப்பிக்க சண்டை க்ரூயிஸர்கள் கட்டப்பட்டன என்பது 1914-ம் ஹு நவம்பர் மீ த்தில் நடந்த காரனெல் சண்டையில் வெளியாயிற்று. 1914-ம் ஹு டிஸம்பர் மீ த்தில் பாக்லாந்து தீவுகளில் நடந்த யுத்தத்தில் இரண்டு க்ரூயிஸர்கள் வான்ஸ்வீயின் பெரிய க்ரூயிஸர்களை நாசமாக்கியதன் மூலம், க்ரூயிஸர்களின் பிரயோசனம் நிலைநாட்டப்பட்டது.

சண்டைக் கப்பல்களுக்கு எதிராக இவைகள் பலஹீனமுள்ளவை என்பது 1916-ம் ஹுத்தில் ஜட்லாந்தில் நடந்த யுத்தத்தில் வெளிப்பட்டது. அந்த சமயம் மூன்று சண்டை க்ரூயிஸர்கள் தொடர்ச்சியாய் நஷ்டமாயின. ஹூட் நாசமாகிய பிரகாரமே க்யூன் மேரி என்னும் க்ரூயிஸர் தூளாகிவிட்டது.



1939-ம் ஹு டிஸம்பர் மாதத்தில் கிராப்ஸ்பீ என்னும் கப்பாலனது மூன்று க்ரூயிஸர்களால் பிரயோசன மற்றதாக அடிக்கப்பட்ட பொழுது, இம்மாதிரியான சண்டை க்ரூயிஸர்களின் தற்காப்பின் பலஹீனத்தை வெளியாக்கிவிட்டது. இந்த் ஜெர்மன் சிறிய சண்டைக் கப்பலானது, அதனுடைய அதிக வேகத்தினாலும், கவசங்களின் பாதுகாப்புக் குறைவினாலும் ஒரு சிறிய சண்டை க்ரூயிஸர் என்றே பாவிக்கப்படலாம்.

யந்திரங்களில் உண்டாகியிருக்கும் நவீன மாறுதல்களில் சண்டை க்ரூயிஸர்கள் போல வேகமும், கனமான கவசங்களுமுள்ளதான சண்டைக் கப்பல்களைக் கட்ட சாத்தியமுண்டு. ஹூட் கப்பலின் வேகம் 31 நாட். கிங் ஜார்ஜ் V என்னும் கப்பலின் வேகம் 30 நாட்டுகளுக்குமேல்.

ஷார்ன்ஹார்ஸ்ட், நீஸ்நௌ என்ற ஜெர்மன் சண்டை க்ரூயிஸர்கள் கிங் ஜார்ஜ் V கப்பலைவிட சிறியதாயிருந்தாலும் வாஸ்தவத்தில் வேகமாகச் செல்லக்கூடிய சண்டைக் கப்பல்கள்தான். ஆகையால் யந்திரங்களின் மாறுதல்களினின்றும், கப்பலின் கனபாகத்தைக் குறைத்து கவசத்தை அதிகப்படுத்துவதன் மூலம் 30 வருஷங்களாக சண்டைக் கப்பலுக்கும் சண்டை க்ரூயிஸர்களுக்கும் உள்ள வித்யாசங்கள் எடுபட்டுவிட்டன.

## விசேஷக் குறிப்பு.

தன்னுடைய கடற்படையின் எண்ணங்களைத் திருப்திசெய்துகொள்ள ஏற்பாடு செய்து கட்டப்பட்ட ஜெர்மனியின் சண்டைக் கப்பலான பிஸ்மார்க் சமுத்திரத்தில் முதல் முதலில் சென்றபொழுது ஹிட்லர் இதை ஒருபொழுதும் மூழ்கடிக்கமுடியாதென்று பிதற்றினன். ஆனால் அதுவும் பிரிடனுடைய கடற்படையோடு ஏற்பட்ட முதல் யுத்தத்திலேயே மூழ்கடிக்கப்பட்டுவிட்டது.

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

---

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### ராஜாவாக ஆக்கினாலும் ஆக்குவார், எடுத்தாலும் எடுத்து விடுவார்—ஹிட்லர்.

இப்பொழுது ராஜாக்களை ஏற்படுத்துவதிலும், எடுப்பதிலும் ஹிட்லர் (Hitler) முனைந்திருப்பது மிகவும் பரிகசிக்கக்கூடிய தன்மையாயிருக்கிறது. அவருடைய உத்தரவின்பேரில் பல சிறு ராஜ்ஜியங்கள் தோற்கடிக்கப்பட்டு துவம்சம் செய்யப்படுகின்றன. அந்த தேசங்களிலிருக்கும் அரசர்களையோ அல்லது தலைவரையோ காட்டுமிருண்டித்தனமாக ஹிம்சை செய்கின்றனர். ராஜாக்களை ஏற்படுத்துவது, அழிப்பது இவைகளை ஹிட்லர் ஒரு தொழிலாகக் கொண்டுவிட்டார் போலிருக்கிறது. "க்ரோஷியாவின் பொம்மை அரசாங்க" ஸ்போலிடோ (Spoleto) கோமகனுக்கு ரோமி (Rome)ல் குரினல் (Quirinal) அரண்மனையில் மகுடாபிஷேகம் இதாலிய ஹோதாவில் நடந்தேறியது. ஆனால் எல்லாம் ஜெர்மன் கண்காணிப்பில்தான் நடந்தது. இதைப்பற்றி மறுநாள் அதாவது மே மாதம் 19-ம் தேதி பெர்லின் (Berlin) ரேடியோ மூலம் தடபுடலாக என்னென்ன நடந்தது என்பதைப்பற்றி ஒலிபரப்பப்பட்டது.

ஒரு பொம்மை ராஜ்ஜியத்தின் (க்ரோஷியாவின்) கொலைக்கார பொம்மைப் பிரதம மந்திரி மற்றொரு பொம்மை ராஜ்ஜியத்தின் பொம்மை அரசரை தன் பொம்மை ராஜ்ஜியத்திற்கு ஒரு பொம்மை அரசரைத் தரும்படி வேண்டினார். அதுவும் அவ்விதமே அளிக்கப்பட்டது. ஆனால் இந்த எல்லா பொம்மைகளையும் ஆட்டிவைக்கும் எஜமான் (ஹிட்லர்) மாத்திரம் இந்த உத்ஸவத்தில் காணப் படவில்லை.

### பெத்யூன் (Bethune) நகரத்தின் மேல் பிரிடிஷ் விமானங்கள் பகல் வேளையில் படையெடுத்தன.

சமீபத்தில் ஒரு நாள் பெர்லின் (Berlin) ரேடியோ பின் வருமாறு ஒலி பரப்பியது: (1) "இங்கிலீஷ் கால்வாயின் அருகேயிருக்கும் ஜெர்மனி ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் பிரதேசத்தில் மே மாதம் 21-ம் தேதி பகலில் பிரிடிஷ் விமானங்கள் உட்புக முயற்சித்தன. (2) ஏழு பிரிடிஷ் விமானங்கள் நாசமாயின. (3) பிரிடிஷ் வெடிகுண்டெறியும் விமானங்கள் விமானஞ்சுடும் பீரங்கிகளால் அங்குமிங்குமாகக் கலைந்து போயின. பிரிடிஷ் சண்டை விமானங்களும் நாஸிகளுடைய சண்டை விமானங்களால் கலைக்கப்பட்டன. (4) ஜெர்மன் விமானம் ஒன்றுகூட சேதமாகவில்லை."



ஆனால் உண்மையில் என்ன நடந்ததென்றால் (1) பிரிடிஷ் விமானங்கள் விரோதி ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் பிரதேசத்திற்குள் 50 மைல்கள் தூரம் உட்புகுந்து பெத்யூன் (Bethune) நகரத்தை அடைந்தன. (2) பிரிடிஷாருக்கு 7 விமானங்கள் நஷ்டம். (3) பிரிடிஷ் விமானங்கள் கலைக்கப்படவில்லை. பிரிடிஷ் சண்டை விமானங்களின் விடாமுயற்சியால் கொஞ்சம் கூட சீர் குலையாமல் ஒரு மின்சாரம் உற்பத்தி செய்யும் இடம், எண்ணெய் சுத்தி செய்யும் இடம் இவைகளின்மேல் குறி தவறாமல் குண்டுகளைப்போட்டுவிட்டுத் திரும்பின. (4) 6 ஜெர்மன் விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன.

### ஹெலிகோலாந்தி (Heligoland)ன் மேல் படையெடுப்பு.

மே மாதம் 21-ம் தேதி பகலில் பிரிடிஷ் விமானங்கள் படையெடுத்தது ஜெர்மனியின் கடற்படை நிலயமான ஹெலிகோலாந்து (Heligoland). அதைப் பற்றியும் ஜெர்மனி ஒரு பெரும்புளுகை வெளியிட்டது. "(1) பிரிடிஷார்கள் போட்ட வெடி குண்டுகள் எல்லாம் சமுத்திரத்திலேயே விழுந்தன. (2) ராணுவ முக்கியமுள்ள ஒரு இடமும் பிரிடிஷ் குண்டுகளால் சேதமாகவில்லை. ஒரு பள்ளிக் கூடந்தான் இடிந்தது. சில பொது ஜனங்கள்தான் உயிர் துறந்தனர். (3) 2 பிரிடிஷ் வெடிகுண்டெறியும் விமானங்கள் நாசமாயின. உண்மையிலோ ஹெலிகோலாந்து (Heligoland) என்பது மிகவும் அதிகமான ராணுவ ஸாதனங்கள் நிறைந்த ஒரு தீவு. அதில் ஜெர்மனியின் கடற்படை, ராணுவம் இவைகளைச் சேர்ந்தவர்களே வசிக்கின்றனர். பிரிடிஷ் விமானங்கள் மிகவும் கீழே பறந்து கப்பல் துறைகள், பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கும் இடங்கள் இவைகளின் மேல் குறி பிசகாமல் குண்டுகளை வீசின. ஒரு பிரிடிஷ் வெடிகுண்டெறியும் விமானந் தான் நஷ்டம்."

நாஸி ரேடியோ மேலும் புளுகினதாவது: "மே மாதம் 21-ம் தேதி பகலில் ஜெர்மன் வெடிகுண்டெறியும் விமானங்கள் மிகவும் துணிகரமாக இங்கிலாந்தி (England)ற்குள் புகுந்து பல ராணுவ முக்கியமுள்ள இடங்களை வெற்றிகரமாகத் தாக்கின. எப்பொழுதும்போல் இந்த ஜெர்மன் அறிக்கை தடபுடலாக இல்லாமல் சாதாரணமாக இருப்பதிலிருந்து இது பொய் என்பது விளங்கும். உண்மையில் மேமாதம் 21-ம் தேதி பகலிலோ, இரவிலோ பிரிடனில் ஒரு இடத்திலாவது ஒரு ஜெர்மன் வெடிகுண்டாவது விழவில்லை.

### ஸோலமு (Sollum)க்கருகே அச்சு நாடுகளின் கூட்டுமுயற்சி.

ஸோலம் (Sollum) இன்னும் ஜெர்மன் சைனியங்களிடமேதானிருக்கிறது என்று ருஜூப்படுத்த படாதபாடு படுகிறார். ஆனால் மே மாதம் 23-ம் தேதியன்று குட்டு வெளிப்பட்டுவிட்டது. நேரடியாக ஒத்துக்கொள்ளாமல் சுத்திச் சுழட்டி ஒப்புக்கொண்டார். "பிரிடிஷார்களுக்கு ஸோலமி (Sollum)ல் ஆகாரம் கிடைப்பது சிரமமாயிருக்கிறது. உணவுப்பஞ்சம் வந்து விட்டது." மறுநாள் அவர் சொன்னதாவது. "ஸோலமி (Sollum) லிருந்து ஸிடிபாரானி (Sidi Barrani)

வரை இருக்கும் பிரிடிஷ் துருப்புகளை ஜெர்மன் விமானங்கள் தாக்கின". அதற்கடுத்தபடியாக வெளியான ஜெர்மன் அறிக்கையில் ஸோலம் (Sollum) ஜெர்மன் கைவசந்தானிருக்கிறது என்று சாதித்தார்கள்.

### பிரிடிஷ் வெற்றியில் சைனாவுக்கு நம்பிக்கை குறைகிறதாம்.

மே மாதம் 20-ம் தேதியன்று பெர்லின் ரேடியோவிலிருந்து பின்வரும் செய்தி வெளியாயிற்று "பிரிடிஷாருக்கு இறுதியில் தோல்விதான் கிட்டுமென்று சைனாவில் அபிப்பிராயப்படுகிறார்கள். பிரிடிஷ் பக்கம் அனுதாபமுள்ள சுங்கிங் (Chungking) நகரத்திலேயே இம்மாதிரி அபிப்பிராயப்படுகிறார்கள்.

பெர்லினின் துரதிருஷ்டவசத்தால் மலேயா (Malaya) வை சுற்றிப்பார்த்துக் கொண்டிருந்த சைனா ராணுவ கோஷ்டியாரில் ஒருவர் அன்றையதினமே தானும், தன்னுடன் வந்திருக்கும் கோஷ்டியாரின் இதரர்களும் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை ரேடியோ மூலம் வெளியிட்டார். "பிரிடனுடைய இப்பிராந்தியத்திலுள்ள தற்காப்பு சாதனங்களுடைய பலத்தைப்பார்த்து நாங்கள் தைரியமடைகிறோம். இம்மாதிரி எங்களுக்கு ஒரு பலம்வாய்ந்த தேசம் சிநேகமாயிருப்பதில் நாங்கள் பரம சந்தோஷமடைகிறோம்".

---

## B.—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

---

### நாஸிகள் முகமதிய மதத்தின் தலைவரைக் கண்டுபிடித்து விட்டார்கள்.

துரோக ரஷீத் ஆலி (Rashid Ali)யின் கக்ஷியை பலப்படுத்துவதற்காக மே மாதம் 21-ம் தேதி பெர்லின் ரேடியோ மூலம் ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பியபொழுது அடிக்கடி மொராக்கோ (Morocco) சுல்தானை "மதகுரு (Caliph)" என்று சொல்லிக்கொண்டே இருந்தார்கள். அந்த சுல்தான் எல்லா முஸ்லிம்களையும் பிரிடிஷாருக்கு விரோதமாகக் கிளம்பி சண்டைபோடும்படி அறைகூவுகிறாராம். ப்ராபட் (Prophet)டினுடைய மாப்பிள்ளையான ஹாஸ்ரத் ஆலி (Hazrat Ali)யினுடைய வம்சத்தில் பிறந்தவராம் அந்த மொராக்கோவின் சுல்தான். ஆனால் அவரை ஒரு முஸ்லிம் நாடாவது குருவாக ஏற்றுக்கொள்ளவில்லை. முக்கியமாக மொராக்கோவிலிருக்கும் அரபியர்களுக்கு முஸ்லிம் சட்டப்படிக்கும், வழக்கப்படிக்கும் யார் மதகுருவாயிருக்கலாம் என்று தெரியும். அவர்களே அந்த சுல்தானை மதகுருவாக ஏற்கவில்லை. பிரான்ஸி (France)ன் சரணாகதியால் மொராக்கோ (Morocco) சுல்தான் நாஸிகளின் ஆதிக்கத்தின் கீழ்வந்துவிட்டார். அவரை "மதகுரு" வாக நாஸிகள் பறைசாற்றுவது "ஸ்விட்ஸர்லாந்தி (Switzerland) லுள்ள முஸ்லிம்கள்" ரஷீத் ஆலியின் வெற்றிக்காக கடவுளைப் பிரார்த்திக்கிறார்கள் என்று சொல்வதைவிட விந்தையிலும் விந்தையாக இருக்கிறது.



### பிரிடனின் எண்ணெய் நிலைமையைப்பற்றி ருஷ்யா (Russia).

பெர்லினிலிருந்து மே 20-ம் தேதி வெளியான அரபி, இந்துஸ்தானி ஒலிபரப்பில் இராக் (Iraq)கிலிருந்து இனிமேல் பிரிடனுக்கு எண்ணெய் கிடைக்காது என்று பிரிடிஷார்கள் பயப்படுகிறார்களாம்.

பிரிடிஷார்கள் சண்டையை நடத்துவதற்கே இது மிகவும் இடைஞ்சலாக இருக்கும். ரெட் ஸ்டார் (Red Star) என்னும் ருஷ்யப் பத்திரிகை இதைப்பற்றி கீழ்கண்டவாறு எழுதுகிறது. "இரான் (Iran), பாஹ்ரீன் (Bahrein), ஸாடி அரேபியா (Saudi Arabia) முதலிய இடங்களில் உள்ள எண்ணெய் ஊற்றுகள் பிரிடன், அமெரிக்கா (America) இவைகளின் ஆதிக்கத்தில் இருக்கின்றன. அவைகளிலிருந்து வருஷமொன்றுக்கு 125 லக்ஷம் டன் நிறையுள்ள எண்ணெய் உற்பத்தியாகிறது. ஆகவே இராக் (Iraq)கிலிருந்து எண்ணெய் வராதது பிரிடனுக்கு ஒரு பெருத்த நஷ்டமாயிருந்தாலும், பிரமாதமாக பிரிடனுக்கு ஒன்றும் ஆபத்து வந்துவிடவில்லை".

உலக நாடுகளின் கூட்டுறவு சங்கத் (League of Nations)தின் வருஷா வருஷ கணக்குகளின்படி, 1939-ம் வருஷத்தில் இராக் (Iraq)கில் சுமார் 40 லக்ஷம் டன்கள் எண்ணெய் உற்பத்தியாயிற்று. இரானி (Iran)ல் அதே வருஷத்தில் 100 லக்ஷம் டன்கள் எண்ணெய் உற்பத்தியாயிற்று. நெதர்லண்ட்ஸ் (Netherlands) கிழக்கு இந்திய தீவுகளில் 80 லக்ஷம் டன்களும், பஹ்ரீனி (Bahrein)லும் பிரிடிஷ் வட போர்னியோ (Borneo)விலும், பர்மாவி (Burma)லும் ஒவ்வொன்றிலும் 10 லக்ஷம் டன்களும், இந்தியாவிலும், எகிப்தி (Egypt)லும் சேர்த்து 10 லக்ஷம் டன்களும் எண்ணெய் உற்பத்தியாகியிருக்கின்றன. ஆகவே தூரக் கிழக்குப் பிரதேசத்திலும், மத்திய கிழக்குப் பிரதேசத்திலுமாகச் சேர்ந்து உற்பத்தியாகும் எண்ணெயில் இராக்கில் உற்பத்தியாவது 100-க்கு 15பங்குகள் தான்.

### பிரிடிஷ் விமானங்களின் உக்கிரமான படையெடுப்பு.

மே மாதம் 21-ம் தேதி டாக்டர் கோயபெல்ஸ் (Goebbels) ஹிந்துஸ்தானியில் ஒலிபரப்பும்பொழுது ஒரு விசேஷ நிருபர் அறிவித்ததாக பின்வருமாறு ஔரிக் கொட்டினார். "ஜெர்மனி (Germany)யில் பிரிடிஷ் விமானங்கள் படுசேதத்தை விளைவித்ததாகக் கூறும் பிரசாரமெல்லாம் வெறும் பொய்".

டாக்டர் கோயபெல்ஸி (Geobbels)னுடைய "விசேஷ நிருபர்" சொன்னது பொய்படும்படியாக மற்றொருவர் சொன்னது ஜெர்மனியின் மஹா பெரிய துரதிருஷ்டந்தான். அப்படிச் சொன்னவர் சாதாரண மனிதர் அல்ல, ஜெர்மன் விமானப்படையின் தலைமை உத்தியோகஸ்தரான ஜெனரல் மில்ச் (General Milch)தான் அப்படிக் கூறியவர். அவர் பெர்லி (Berlin)னில் மே மாதம் 20-ம் தேதி விமான அபாயத்தைத் தடுப்பதைப்பற்றி செய்த ஒரு பெரிய பிரசங்கத்தில்

சொன்னதாவது. "யுத்த சாதனங்களின் உற்பத்திக்கு அவசியமான தொழிற்சாலைகள் தீக்கிரையாவதையும் சேதமாவதையும் நாம் ஒன்றும் செய்யாமல் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. நாமெல்லாருமே ஆகாயத்திலிருந்து வரும் இந்த ஆபத்துக்கு இலக்காயிருக்கிறோம்."

### "பிரிடிஷ் ரகசிய போலீஸ்".

எகிப்தி (Egypt)ன் சைனியத்தின் முக்கியமான உத்தியோகத்திலிருந்த (Ex-Chief of the Egyptian General Staff) அஸீஸ்-எல்-மிஸ்ரி பாஷா (Aziz-El-Misri Pasha) காணமற்போனதைப்பற்றி மே மாதம் 22-ம் தேதி பெர்லினிலிருந்து ஹிந்துஸ்தானியில் அறிவிக்கப்பட்டது. பிரிடிஷ் ரகசிய போலீஸே அவரை எங்கேயோ கொண்டுபோய்விட்டதாக பெர்லின் ரேடியோ வழக்கம்போல் குற்றம் சாற்றிற்று. எகிப்திய கவர்ன்மெண்டு அவரை தேசத்துரோகி என்றும், அவர் செய்துகொண்டிருந்த காரியமெல்லாம் தேசத்துக்கு விரோதமானவை என்றும் வெளிப்படுத்தி அவரைப் பிடித்துத் தருகிறவர்களுக்கு ஆயிரம் பவுன்கள் இனும் தருவதாகவும் அறிவித்திருக்கிறது.

நாஸிகளுடைய பொய்யானதும் வெட்கித் தலைகுனியும்படியானதுமான பிரசாரம் எவ்வளவுதூரம் போகக்கூடுமென்று கீழ்கண்ட விஷயங்களால் தெரியவரும். அமெரிக்காவில் பிரிடிஷ் ராஜதூதராக இருந்த லோதியன் (Lothian) பிரபுவை பிரிடிஷார்கள்தான் கொன்றார்களாம். இதாலி கிரீஸை (Greece)ப் போருக்கிழுத்தபொழுது அச்சுநாடுகளுக்குப் பயப்படாமல் திடமனதுடன் எதிர்த்தவரும், கிரீஸி (Greece)ன் பிரதம மந்திரியுமான ஜெனரல் மெடாக்ஸாஸை (General Metaxas)யும் பிரிடிஷார்கள்தான் கொலை பண்ணினார்களாம். இதைவிட மானக்கேடான பிரசாரம் வேறென்ன இருக்கிறது.

---



## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

---

### பிரஸங்கம் XLVII.

1941—

| | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| ஜூன் | ...7, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 8, ஞாயிற்றுக்கிழமை. | திருவரங்குளம் | ... | ,, | 6.00 |
| | | வம்பன் | ... | ,, | 6.30 |
| | 9, திங்கட்கிழமை ... | குளவாய்ப்பட்டி | ... | ,, | 6.00 |
| | | கீழையூர் (தெற்கு) | ... | ,, | 6.30 |
| | 10, செவ்வாய்க்கிழமை. | வெள்ளனூர் | ... | ,, | 6.00 |
| | | புத்தாம்பூர் | ... | ,, | 6.30 |
| | 11, புதன்கிழமை ... | மேலூர் | ... | ,, | 6.00 |
| | | பில்லமங்கலம் | ... | ,, | 6.30 |
| | 12, வியாழக்கிழமை. | கடயக்குடி | ... | ,, | 6.00 |
| | | மிரட்டுநிலை | ... | ,, | 6.30 |
| | 13, வெள்ளிக்கிழமை... | ஒடுக்கூர் | ... | ,, | 6.00 |
| | | நாங்குப்பட்டி | ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் XLVIII.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 14, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | ,, | 6.30 |
| | 15, ஞாயிற்றுக்கிழமை. | பூவரசகுடி | ... | ,, | 6.00 |
| | | வேங்கடக்குளம் | ... | ,, | 6.30 |
| | 16, திங்கட்கிழமை ... | ஒடையாளிப்பட்டி | ... | ,, | 6.00 |
| | | கிள்ளுகோட்டை | ... | ,, | 6.30 |
| | 17, செவ்வாய்க்கிழமை. | பெருங்களூர் | ... | ,, | 6.00 |
| | | ஆதனக்கோட்டை | ... | ,, | 6.30 |
| | 18, புதன்கிழமை ... | அரிமளம் | ... | ,, | 6.00 |
| | | கீழாநிலைக்கோட்டை | ... | ,, | 6.30 |
| | 19, வியாழக்கிழமை ... | கீரனூர் | ... | ,, | 6.00 |
| | | நாஞ்சூர் | ... | ,, | 6.30 |
| | 20, வெள்ளிக்கிழமை... | நல்லூர் | ... | ,, | 6.00 |
| | | மண்டையூர் | ... | ,, | 6.30 |

## புதுக்கோட்டை ஸமஸ்தானம்

## யுத்த நிதிக்காக போடப்படும்

# அதிர்ஷ்டச் சீட்டு.

(ஸ்ரீ-தர்பாரவர்கள் உத்தரவின்பேரிலும் ஆதரவின்
பேரிலும் புதுக்கோட்டை யுத்தநிதி என்டெர்
டெயின்மெண்ட் கமிட்டியாரால்
நடத்தப்படுகிறது.)

## இந்த யுத்த நிதியை ஆதரியுங்கள்

டிக்கெட்டுகளை வாங்குங்கள்

**முடிவு தேதி 15—6—41**

**சீட்டு குலுக்கும் தேதி 23—6—41**

நமது மன்னர் அவர்களின் வருஷவர்த்தனை தினத்தன்று
அதிர்ஷ்டசாலிகளுக்கு ஏராளமான பரிசுகள்.

**300 பரிசுகள்.**

| | | | |
|---|---|---|---|
| 1-வது பரிசு | ரூபாய் | 7,500 | |
| 2-வது பரிசு | ,, | 5,000 | |
| 3-வது பரிசு | ,, | 2,500 | |
| 2 பரிசுகள் | ,, | 1,000 | வீதம் |
| 5 ,, | ,, | 500 | ,, |
| 90 ,, | ,, | 100 | ,, |
| 100 ,, | ,, | 50 | ,, |
| 100 ,, | ,, | 15 | ,, |

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—8-6-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ௵ ஜுன் ௴ 14௳ [ந. 48.

பிரஸங்கம் XLVIII.

## புராதன கொடுங்கோல் மன்னர்களும், நவீன கொடுங்கோல் மன்னர்களும்.

உள் நாட்டுக் கலவர காரணமாகவோ, வெளிநாட்டு எதிரிகளின் கஷ்டத்தி
னின்றோ, உள் நாட்டுக் கொடுங்கோல் அரசர்களின் ஹிம்சையினாலோ, அவ்வப்
போது, தன் நாட்டாரால் காப்பாற்ற வந்தவராக பாவிக்கப்பட்ட பல பிரமுகர்
கள் இருந்துவந்தார்கள் என்று சரித்திரங்கள் கூறுகின்றன. பழைய கிரீஸ்
தேசத்தையோ, ஸிஸிலியையோ, ரோமன் சாம்ராஜ்ஜியத்தையோ, மத்திய
காலத்து ஐரோப்பாவையோ, தற்போதைய தென் அமெரிக்காவையோ, பார்த்தோ
மானால் இவ்விதம் முன்அணிக்கு வந்த பிரமுகர்கள் முதன் முதலில் தங்கள்
விரோதிகளை ஒழித்தும் அடுத்தபடியாக தங்களுக்கு விரோதமாகக் கிளம்பக்கூடிய
வர்களை ஹதம் செய்தும், பிறகு முட்டாள்தனமாக தங்களிடம் மூட நம்பிக்கை
வைத்த ஜனங்களை அந்தப் பிசகுக்குத் தக்கபடி தண்டித்தும் இருப்பது விளங்கும்.

அவர்கள் தங்கள் குடிகளை அவர்களுடைய நன்மைக்காக பரிபாலிக்கப்பட
வேண்டிய "குழந்தை"களாகக் கருதவில்லை. தங்கள் புகழுக்கு அனுசரணை
யாக்கிக்கொண்டோ, தங்களுக்கு வேண்டிய பொருளை ஈட்ட உபகருவிகளாக
ஆக்கிக்கொண்டோ, அல்லது தங்கள் கொரேத்தைக் காட்ட அவசியமான
பாத்திரங்களாகவோ தான் மதித்தார்கள். 'யதேச்சாதிகாரி' என்ற பதத்துக்கு
விசேஷ பொருள் கொடுப்பது (ஹிம்சை) அவர்களின் குடிகளின் அனுபவத்தைக்
காட்டுகிறது. இவர்களைக் குடிகளின் தகப்பன் என்று, தன் குடும்பத்தினரைக்
கேவலம் தாங்கள் வினியோகிக்கூடிய ஆடு மாடுகள் என்று நினைப்பவனை ஒத்தக்
கூறலாம். இதில் தற்கால நாகரீக பிதா தன் குழந்தைகளிடம் அன்பு பாராட்டி,

அவர்கள் தக்க நிலைமைக்கு வரவேண்டுமென்ற கருத்துடன் பரிபாலித்து வருவது போன்றது, கிடையாது. இவ்வித யதேச்சாதிகாரிகளின் குடிமக்கள் ஒவ்வோர் சமயம் அவர்களை வெறுத்து எதிர்த்தனர். ரோம் தேசத்தினருக்கு 'அகஸ்டஸ்' காலத்திற்குப் பிறகு மிகவும் சந்தோஷத்தை அளித்த சமயம் என்னவென்றால் ரோம் சக்ரவர்த்திகளில் ஒருவன் இறந்தான் என்ற சந்தர்ப்பமேயாம்.

## நல்ல அரசர்கள்.

ஐரோப்பாவிலோ, ஆசியாவிலோ, தென்கடல் தீவுகளிலோ, எந்த தேசத்து அரசராயிருந்தாலும் எவன் தன் குடிகளின் நன்மையையே கருதினானோ அவனே நல்ல அரசன். அமைதியை நிருவச்செய்வதே தன் முதல் கடமையாகக் கொண்டவன். ஏனெனில் எத்தேசத்தாரும் அமைதிக்குறைவை விரும்பார்கள். அவர்கள் எககாலத்திலும் பலாத்காரத்தைக் கைகொண்டதில்லை. பிறர் சௌகரியத்தை கவனிக்கவேண்டியது அவசியமென்றும், அவ்விதமில்லாவிட்டால் கட்டாயம் கலவரம் ஏற்படுமென்றும் வற்புறுத்தியவர்கள்.

சென்ற சச்சரவுகளில் மனதைச் செலுத்தாமல், தங்கள் பரஸ்பர விரோத பாவத்தை ஒழித்து சிநேகத்துவத்தைக் கைகொண்டு, எதிர்கால வாழ்வை சிந்திக்கும்படிக்கு தங்கள் குடிகளுக்கு, தங்கள் ஜீவியத்தாலேயே, நடத்திக் காட்டினார்கள். அவர்களில் ஏனையோரும் வெளிநாட்டுடனும் சமாதானமாய் இருந்தார்கள் என்று கூறுவது மிகையாகும்—எவனும் அவசியத்துக்குள்பட்டவன் அல்லவா—ஆனால், நெபோலியன், அலெக்ஸாண்டர்போல் யுத்தம்தான் செய்ய வேணுமென்ற எண்ணம் படைத்தவர்கள் அல்ல. பிரெஞ்சு தேச மன்னர் 14-வது லூயி போல் அல்ப காரணத்துக்காகவாவது, 2-வது நெபோலியன் போல் தன் கியாதி பரவ வேணுமென்றாவது யுத்தம் தொடுக்கமாட்டார்கள். அவர்கள் அரசர்களுக்கு யுத்தம் என்பது அணிகலம் என்று எண்ணவில்லை. ஏதோ பரம ஹிம்சை செய்துவிட்டதாக மார்தட்டிக்கொள்ளமாட்டார்கள். ஆல்பர்ட்டும், அகஸ்டஸ் ஸீஸரும் பராக்ரம சேனாதிபதிகளாயினும், கூடுமான காலத்தில் பிறரை ஜயிக்க வேணுமென்ற கொள்கையை விட்டுவிட்டார்கள். அமைதியான ராஜரீகத்தை அனுஷ்டித்தார்கள்.

## யாவருக்கும் ஒரே நீதி.

அடுத்ததாக உலகில் கியாதியடைந்த ஒவ்வொரு நல்ல அரசனும் தன் குடிகளினிடையே சமத்துவமாய் நீதிவழங்க ஏற்பாடு செய்தார்கள். அந்தந்தப் பிராந்தியத்தில் நீதி வழங்கப்பட்ட வழக்குகளை பரிசீலனை செய்யவும், நீதி தவறாமல் வழக்குகள் முடிவுசெய்யப்படுகின்றனவா என்று மேல்பார்க்கவும் நீதிபதிகளை பிரதி வருஷமும் ஒவ்வொரு பிராந்தியத்திலும் 4 தடவைகளாவது நேரில் சென்று பார்வையிட்டு கவனிக்கும்படிக்கும் சார்லிமேன் என்ற அரசர் ஏற்படுத்தியிருந்தார்.



ஆல்பர்ட் அரசரைப் பற்றி அவர் சரித்திரக்காரர் கூறுவதாவது. அவர் தினந்தோறும் தன் குடிகளில் பணக்காரருக்கும் ஏழைகளுக்கும் வித்யாசமின்றி ஒரேவிதமான நீதி வழங்கிவரப் பாடுபட்டார். ஏனென்றால் அக்காலத்தில் ஏழை மக்களுக்கு அரசனை அன்றி வேறு துணைகிடையாது.

எர்ல் ஹாரல்டைப் பற்றி ஜே. ஆர். க்ரீன் "சமாதானம் எங்கும் நிறைந்திருந்தது. நீதி வழங்கப்பட்டது. தேசம் சுபிக்ஷமாகவிருந்தது" என்று கூறும் வார்த்தைகள் பொதுவாக எல்லா நல்ல அரசர்களின் ஆட்சிகளைப் பற்றி கூறக்கூடியதாகும். 'நீதி வழங்கப்பட்டது' என்பது ஜனங்களை தம் வழிக்கு கொண்டுவர நீதி ஸ்தலங்கள் அரசர்களால் பிரயோஜனப்படுத்திக்கொள்ளப்பட்டன என்று பொருள், என்று எந்த சரித்திராசிரியரும் கூறவில்லை. ஒவ்வொருவரும் அரசருடைய நீதி மார்க்கத்தின் மூலம்தான் தனது பாத்தியங்கள் பாதுகாக்கப்பட்டனவென்றே மதித்தார்.

## கலைகளுக்கு அபிவிருத்தி.

மேலும் நல்ல அரசர்கள் கல்வியையும் பலகலைகளையும் அபிவிருத்தி செய்தார்கள். நல்லவர்கள் என்று கூறப்படாத 14-வது லூயி போன்ற அரசர்கள்கூட, தங்களுக்கு பெரும் புகழ் கிட்டும் என்று கருதி பண்டிதர்களையும், கவிகளையும் கலை நிபுணர்களையும் ஆஸ்தானத்தில் வைத்து போஷித்தார்கள்.

கீர்த்திபெற்ற 'லாரென்ஸோ'வின் புகழும் இவ்விதமாகத்தான் ஏற்பட்டது. அவனுடைய ஏராள செலவினால் புகழ் ஏற்படவில்லை. இதனால்தான் அவன் தன் மக்களிடையே உயிர் பயமின்றி உலாவி வந்தான். (துணையில்லாமல் பயமின்றி குடிகளின் மத்தியில் இருப்பதுதான் 'நல்ல' அரசன் என்பதைக் காட்டும்).

நாகரீகம் ஏற்பட்ட நல்ல அரசர்கள் தங்கள் தேசத்தில் பல கல்வி நிலயங்களை ஏற்படுத்தி அவைகளில் ஏழை மக்கள்கூட பயன்படும்படிக்கும், இதர தேசத்திலிருந்தும்கூட பண்டிதர்களைத் தருவித்து தங்கள் ஜனங்களுக்குப் போதிக்க ஏற்பாடு செய்தார்கள்.

நல்ல அரசர்கள் ஜனநாயக முறைகளை அனுஷ்டித்தார்கள் என்று கூற முடியாது. ஏழைகளுக்கு அன்னமிடல், தர்ம வைத்தியசாலைகள் அமைத்தல் என்பதுபோலொத்த காரியங்களுக்குமேல் குடிகளிடம் தயைகாட்டுவதான முறைகளை அனுஷ்டிக்காவிட்டாலும் பொதுவில், இறக்கமுள்ளவர்களாகவே இருந்தார்கள். பொது மக்களுக்கு ராஜீய உரிமையென்பது இல்லாவிட்டாலும், அங்கங்கு பெரிய நகரங்களுக்குச் சுயேச்சாதிகாரத்தையும், கல்வி நிலயங்கள் ஒத்தஸ்தாபனங்களுக்கும் பல பெரும் உரிமைகளையும் வழங்கியிருக்கிறார்கள். மேலும் தம் மக்களில் பிரமுகர்களையும், பொதுமக்களின் பிரதிநிதிகளையும் கூட்டி ஆலோசனை செய்தும், இவ்விதம் மக்களை ராஜீய நடவடிக்கைகளில் பழக்கியுமிருக்கிறார்கள்.

முடிவாக நல்ல அதிகாரிகள் தங்கள் குடிகளைக் கெடுக்காமல் முன்னேறச் செய்திருக்கிறார்கள். மேலும் தங்கள் காலத்துக்குப் பிறகும் தேசம் க்ஷேமமாக இருக்கவேண்டுமென்றும், தங்களுக்குப் பின் வரக்கூடிய கொடுங்கோல் மன்னர்களின் சூழ்ச்சிகளுக்கு உள்படாத வகையில், அவைகள் நன்கு நடத்தப்பட வேண்டிய விதமும், தங்கள் பெயர் வழங்கும் விதமும் காரியங்களை நடத்தியிருக்கிறார்கள்.

அவர்கள் தங்கள் வேலைகளும், தங்கள் குடிகளின் க்ஷேமமும், சுயநலத்துக்கு மேற்பட்டதாகக் கருதினவர்கள். சிலர் இக்காரியம் செய்து முடிந்தவுடன் தங்கள் அதிகாரங்களைத் துறந்தும் இருக்கிறார்கள். இவர்கள் நடத்தையிலிருந்து, அரசர்களுடைய ஆக்ஞைக்கு மேம்பட்ட ஆக்ஞை இருக்கிறதென்பதும் பூவுலக அரசர்களின் யதேச்சாதிகாரங்களுக்குத் தடை உண்டு என்பதும் நமக்கு அறியக் கூடுகிறது.

## ‘பாஸிஸம்’.

ஏகாதிபத்ய ராஜ்ஜியங்களின் நோக்கம் முன் கூறியதற்கு நேர்விரோதமானதாகும். இவைகளை உதறித்தள்ளுவதைப்பற்றி ‘பாஸிஸ்ட்’ பிரமுகர்கள் ஒளிமறைவு செய்யவில்லை. “நீங்கள் எக்காலத்திலும் நாஸி கக்ஷியினரால் பரிபாலிக்கப்படவேண்டும்” என்று நியூரன்பர்க் என்ற ஊரில் குழுமிய ‘ஹிட்லர் யுவர்கள்’ கோஷ்டிக்கு 1937-ல் ஹிட்லர் எடுத்துரைத்தார். இப்போதைய ‘பாஸிஸம்’ என்ற கொள்கை அழியாது என்று பிரமுகர்களுள் கூறப்படுகிறது. ஒரு ராஜீய நிபுணரின் யோக்கியதையை அவன் செய்கைகளைக்கொண்டுதான் அறிய வேண்டும் என்ற விதிப்படி இவர்களை ஆராய்வோமாகில் இவர்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையும் சுயநலம் கருதி தன் வாழ்க்கையை ஸ்திரப்படுத்திக் கொள்ள செய்யப்பட்டுவருவதாக நாம் அறிகிறோம். ஜெர்மனியில் ‘வோல்க்’ என்பது சர்வ அதிகாரத்தையும் வகிப்பதாக சொல்லப்பட்டாலும் உண்மையில் எல்லா நடவடிக்கைகளும் ‘பியூரர்’ மூலமும் அவனாலேயேதான் நடத்தப்படுகிறது.

## யதேச்சாதிகாரிகளின் பாவம்.

குழந்தைகள் (குடிகள்) எப்போதும் சுய அறிவு வளர்த்திக்கொள்ளக் கூடாது. முதிரவும் கூடாது. அவர்களின் உடல் நலம் மட்டில் குன்றாமல் போஷிக்கப்படவேண்டும். ஆனால் புத்தி விசாலமாக்கப்படக்கூடாது. ‘கோயரிங்’கின் எண்ணப்படி குடிகள் கொழுத்த பொலிகாளைகளாகச் செய்யப்படவேண்டும். கம்பீரமான சிப்பாய்களாகவும், படிமானமான குடிகளாகவும் ஆக்கப்படவேண்டுமென்று வேண்டுமானாலும் கூறலாம்: ஆனால் சிலாக்கியமான மனிதர்களாக்கப்படவேண்டுமென்று கூறக்கூடாது.

பிரஜைகள் குழந்தைகள்போல் விசுவாசிக்கவேண்டும், கீழ்ப்படிய வேண்டும். ஆனால், அவர்களுடைய அதிகாரிகள் நல்ல தகப்பன்மார்களைப் போல் இரார்கள்.



இதுவரை நல்ல அரசர்கள் என்று கூறும்படி “பாஸிஸ்ட்” அதிகாரிகள் நடந்துகொள்ளவில்லை. குறிப்பிடும் காலத்தில் அவர்களில் எவனும் தன்னை தன் தேசத்தவரின் தகப்பன் என்று சொல்லிக்கொண்டதாகக்கூட இல்லை. அவர்கள், தங்கள் தேசத்தினுடையவோ, சாம்ராஜ்ஜியத்தினுடையவோ எண்ணத்தை நிறைவேற்றிவைப்பதாகமட்டில் செய்கிறார்கள். அவர்களைப்பற்றி பிரசாரகர்கள், உள்நாட்டில் அவர்கள் நீதி தவறாதவர்கள், பலிஷ்டர்கள் என்றும், வெளி நாடுகளில், அவர்கள் வல்லமையுள்ளவர்கள் என்றும் கூறுகிறார்கள்.

யதேச்சாதிபத்யத்தின் வல்லமைதான் அதனுடைய மர்மம். பிரசாரகர்கள் யதேச்சாதிபதிகள் துரிதமாகவும், நினைத்த உடனும் காரியங்களை வெற்றிபெறும்படி நடத்த வல்லவர்கள், ஜனநாயக ராஜ்ஜியங்கள் காலஹரணம் செய்பவை என்றும், நினைத்த மாத்திரத்தில் எந்தக் காரியத்தையும் செய்யமுடியாதவை என்றும் கூறுகிறார்கள். மேலும் ஜனநாயக நாடுகளின் மந்திராலோசனைகள் வெளிப்பட்டுவிடும், பகிரங்கமாகவேதான் நடத்தப்படவும் வேண்டியிருக்கிறது. ஆனால், யதேச்சாதிபதி தன் கருத்தை மறைத்துவைத்திருக்கக்கூடும். நினைத்தவுடன் எவரும் அறியுமுன் சடக்கென்று பாயமுடியும்.

இதில் சில சந்தர்ப்பங்களில் உண்மை இருப்பது விளங்கும். ஒரு யதேச்சாதிபதி தான்வேண்டுவதை சடக்கென்று பாய்ந்தால் கைப்பற்றிவிடலாமென்று அறிந்தானானால், அவ்விதம் கைப்பற்ற அவனால் கூடும். மேலும் கூறுவதானால் யுத்தத்தில் வேகமாகவும், எதிர்பாராத வழிகளிலும் காரியங்கள் நடத்தப்பட வேண்டியது அவசியம். நெபோலியனும், கான்ஸ்டன்டைனும், தங்கள் எதிரிகள் நம்பமுடியாதபடியும், எதிரிகள் எதிர்பாராதவிதமும், அவர்கள் தயாராய் இல்லாத சந்தர்ப்பங்களிலும், திடீரென்று அவர்கள்மேல் பாய்ந்து வெகு வேகமாக சைனியங்களை நடத்தி போர்செய்தார்கள். சைனிய ஆதிக்கம் கொண்ட சாம்ராஜ்ஜியங்கள் தேர்ச்சிபெற்ற சேனாதிபதிகளால் நிருவப்பட்டிருக்கின்றன. அவைகள் நெடுங்காலம் நிலைபெற்று நிற்குமா என்பதுதான் கேள்வி.

## நிலையற்ற தன்மை.

வெற்றிகிடைக்கும் விதம் யுத்தம் செய்வது என்பதும், நிலைநிற்கக்கூடிய தான துரைத்தனத்தையும், சாம்ராஜ்ஜியத்தையும் ஏற்படுத்துவது என்பதும் வெவ்வேறு. ‘பாஸிஸ்ட்’ துரைத்தனம்போல், ஏதோ ஒரு கக்ஷியினரோ, ஒருவனோ சகல அதிகாரத்தையும் கைப்பற்றிக்கொள்வது என்பது நிலையற்றது என்று சரித்திரம் கூறுகிறது.

ரோமன் சாம்ராஜ்ஜியத் தலைவர்கள் பலரும் இவ்விதம் தலைமை வகிக்கவந்தவர்கள் என்று கூறக்கூடும். பக்கத்திலுள்ள தேசங்களைக்காட்டிலும் நாகரீகம் பெற்றும், அயல் நாட்டு அநாகரீகர்களுடன் போர் செய்தும், பாலங்கள், பாசன வசதிகள், சலவைக்கல் கோவில்கள், கல்வி, எழுதப்பட்ட சட்டதிட்டங்கள் இவைகளை அடைந்திருந்ததாலும், மிகவும் கியாதிவாய்ந்ததாகவும், அதை ஒத்த நாகரீக சாம்ராஜ்ஜியம் பிற்பட்டு ஏற்பட்டதில்லை என்றும் கூறப்படுகிறது.

ஆனால், 'டைபேரியஸ்'க்குப் பிறகு ரோம் தேசம் ஒருவருக்கொருவர் படையெடுத்த சேனாதிபதிகளால் கலவரம் செய்யப்பட்டு நாகரீகம் இழந்தது. "கான்ஸ்டன்டைன்" எதேச்சாதிகாரியாகவரும் சமயம் ரோம் தேசம் 6 'ஸீஸர்'களின் சச்சரவுகளுக்குட்பட்டிருந்தது. ரோமாபுரி பேரில் அட்டில்லா படையெடுக்கு முன், அது உள்நாட்டுக் கலகக் கக்ஷிகளாலும், வெளிப்பிரதேசங்களிலிருந்த கக்ஷிகளாலும், சக்கிரவர்த்திகளாலும் பலமுறை பிடிக்கப்பட்டுவந்தது. முதல் 12 'ஸீஸர்'களில் எண்மர் எதிரிகளுக்குப் பயந்து தற்கொலை செய்துகொண்டோ, அல்லது கொல்லப்பட்டோ உயிர் துறந்தார்கள்.

அகஸ்டஸ் தலைமைக்கு வந்தவுடன்தான், விலை உயர்ந்ததாக கருதிய கலைகள், கல்வி, பொதுஜன சுத்தம், நாணயம், சாம்ராஜ்ஜிய நாடுகளின் ஒற்றுமை, இவைகளை நாசமடையும் விதம், ரோமாபுரியின் சுயேச்சையை ஒழித்ததில் ஏற்படுத்திவிட்டான். 'கான்ஸ்டன்டைன்' தன் ஞாபகார்த்தம் ஆதென்ஸ் நகரில் கட்டடம் கட்ட நினைத்தபோது தக்க தொழிலாளிகள் கிடைக்கவில்லை. ரோமன் சாம்ராஜ்ஜியம் 'ரோம்' குடியரசைவிட மிகவும் விசாலமானதே. இருந்தும் சிலர் ஆட்சிகளுக்குப் பிறகு வல்லமை குன்றிவிட்டது.

## கலவரமும், கஷ்டமும்.

அநாகரீகக் கூட்டங்களுக்கும், சிறந்த படையைக்கொண்ட ஸ்திரமான ஆட்சியுள்ள தேசத்துக்கும் நேர்ந்த சண்டைகளில்லாமல், இரண்டு யதேச்சாதிபதிகளுக்குள் ஏற்பட்ட சண்டைகளானால் அதனால் பொது ஜனங்களுக்கு கஷ்டமும், தேசத்தில் கலவரமும் ஏற்படுகிறது. போதுமான பலத்தைக்கொண்டு எவனும் எந்த சமயமும் பூர்ண அதிகாரத்தை அடைந்துவிட்டால், அவனைச் சக்தியற்றவனென்று கூறுவதில்லை.

மேலே கூறப்பட்ட காலங்களிலும், தேசங்களிலும் இருந்த மக்களின் நிலைமையைப்பற்றி சிந்தித்தால் திகைக்கும்படியானதாகவே இருக்கும். அவ்வப்போது இவர்களில்—சிலர் 50-ல் 1 விகிதம் பல நூற்றாண்டுகளுக்கு 1, 2 விகிதம்—சில வருஷங்கள் வரை நல்ல முறையில் ராஜ்ஜியபாரம் செய்திருக்கிறார்கள். அவனும் இறந்தோ, அடுத்த யதேச்சாதிகாரியாலோ அல்லது அதற்கு அடுத்தவனாலோ அல்லது எதிரிகளாலோ கொல்லப்பட்டு இருக்கிறான். அதனால் அவனால் ஏற்பட்ட பல நன்மைகளும் வீணாக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாராய்ச்சியிலிருந்து எல்லாவித துரைத்தன முறைகளிலும், 'யதேச்சாதிபதித்துவம்' என்பது மிக்க கொடுமையானதும் ஸ்திரமற்றதென்பதும் விளங்கும்.

இந்த யதேச்சாதிகாரிகள் சகலரும் தங்கள் நாட்டின் மதம், பொருளாதாரம், பலம் இவைகளில் மனதைச் செலுத்தியிருந்திருக்கிறார்கள். நாகரீகத்தை விருத்தி செய்யவோ, நிலைநாட்டவோ எவனாலும் கூடாதபடி எவ்விதமும் சமாதானம் இல்லாமல் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய பிரத்தியேக



இச்சைக் குறைவுதான் அவர்களுக்குத் தடையாயிருந்தன. எந்தச் சமயம் எதில் இச்சை ஏற்படுமோ, எதைப் பறித்துக்கொள்வார்களோ என்றே நினைக்கவேண்டியிருந்தது.

## இக்கஷ்டங்கள் பன்மடங்கு அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

தற்கால யதேச்சாதிபத்தியம் இக்கஷ்ட நிலைமையை அதிகரித்ததாய் இருக்கின்றன. கொடுங்கோல் மன்னர்கள், இளைஞ, விருத்த, மதிகெட்ட, மூட அரசர்கள் எந்தவிதமான அரசர்களுக்குக் கீழ் இருப்பினும் தன் தேச, நாகரீக, பொதுஜன அனுஷ்டான, நீதிமுறைகளால் நன்கு நிருவப்பட்டதான துரைத்தனங்களில் கலவரங்களினால் ஏற்படக்கூடிய கஷ்டங்கள், யதேச்சாதிபத்திய நாடுகளில்போல் அவ்வளவு பெரும் கஷ்டங்களை விளைவிக்காது. தன்னையொத்தவர்கள்கொண்ட சபையொன்றை ஏற்படுத்தினால் அல்லாமல் நிரந்தரமான துரைத்தனத்தை ஏற்படுத்தமுடியாது என்று நெபோலியனிடம் "டாலிராண்ட்" சொன்னதாக ஒரு செய்தி உண்டு. ஆனால் 'லோட்டா' ஆசாமிகளான சிலரைத் தவிர எவரும் யதேச்சாதிபதிகளுடன் பழகக்கூட முடியாது. ஏனென்றால் அத்தேசத்தில் நடக்கும் ஒவ்வொரு விஷயமும் அவன் உத்தரவின்பேரிலேயே அவன் இஷ்டப்படிக்கே அவனுடைய ஆக்ஞைக்குட்பட்டே நடக்கின்றன.

பழையகாலத்து யதேச்சாதிபதிகள் தங்கள் கஜானா நிரப்புவதிலும், சைனியங்களைப் போஷிப்பதிலும் தங்கள் இச்சைகளைப் பூர்த்தி செய்துகொள்வதிலும் திருப்திகொண்டார்கள். மற்ற விதங்களில் தங்கள் பிரஜைகளிடத்தில் தலையிடுவதில்லை. ஏதோ ஒரு சில குடிகள் ஆங்காங்கு கொல்லப்பட்டும், உரிமைகளையும், சொத்துக்களையும் அபகரிக்கப்பட்டவர்களாய் இருந்தார்கள். ஆனால், பொதுவில் ஜனங்களின் பிரத்தியேக வாழ்க்கைக்கு ஹிம்சை நேரவில்லை.

ஆனால் தற்கால யதேச்சாதிபதிகளின் தன்மை இதுவல்ல. இவர்களைப்போல் இதுவரை வேறு எந்த அதிபர்களும் தங்கள் குடிகளின் பிரத்தியேக வாழ்க்கைகளிலும், மதாபிமானங்களிலும், நோக்கங்களிலும், தொழில்முறைகளிலும் தலையிட்டது கிடையாது. வேறு எவரும் தங்கள் ஆதிக்கத்தைத் தவிர வேறு ஆதிக்கம் கிடையாது என்று, இவர்கள்போல் தீவிரமாகக் கூறினதும் இல்லை. ஆகையால், வேறு அதிபர் வந்தாலொழியவும் அல்லது அதிபரின் மனப்பான்மை மாறினாலொழியவும், இருக்கப்பட்ட ஒழுங்கீனம் மாறுதலடையமுடியாதென்பது இவர்கள் காலத்திலன்றி எப்போதும் இருந்தது கிடையாது.

இவர்களுக்கு ஒன்றுதான் அவசியம். அதாவது கீழ்ப்படிந்த ராணுவம் (சைனியமும், விமானப்படையும்) இதை விட எதுவும் நிச்சயமில்லை. எதுவும் அபாயத்துக்குட்பட்டதே—எந்தக்கொள்கை நிராகரிக்கப்படமாட்டாது, எந்த அரசியல் திட்டம் நழுவவிடப்படமாட்டாது, எந்தக் கக்ஷி ஜனங்கள் உயிருக்குப் பயப்படாமல் இருக்கமுடியுமென்று நிச்சயமாய்க் கூறமுடியாது.

# வார யுத்தச் செய்திகள்.

(5—6—41-லிருந்து 12—6—41-வரை).

## ஸிரியாவின் படையெடுப்பு.

ஜூன்மீ 8உ ஞாயிற்றுக்கிழமையன்று காலை 2-மணிக்கு நேச தேசத்தாரின் துருப்புகள் ஸிரியாவின் எல்லைப்புரத்தைத்தாண்டிச்சென்றன. இந்த படையெடுப்பும் ஆழ்ந்த யோசனையின்பேரில்தான் தீர்மானிக்கப்பட்டது. ஜெர்மானியரின் அபிப்பிராயங்களைப்பற்றி நாளுக்கு நாள் சமாசாரம் தெரிய வந்தது. இனிமேலும் சும்மா இருப்பது பேதமை என்று வெளியாயிற்று. ஸிரியாவையும், லெபானனையும் பிடித்துக்கொண்டு அவைகளை ஆதாரமாக வைத்து மத்திய ஆசியாவை படையெடுக்க வேண்டுமென்பது ஜெர்மானியர் யோசனை. ஜெர்மனியிலிருந்து பிரயாணிகளும், யந்திர வேலைக்காரர்களும் வந்து ஏறினார்களென்றால் அதன் அர்த்தம் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஜெர்மானியாருக்கு முன் பிரிடிஷார் ஸிரியாவை வசமாக்க வேண்டியது அவசியமாயிற்று. அவ்விதம் செய்யாது இருந்தால் ஜெர்மானியர் அங்குபோய் ஸ்தாபித்துக்கொண்டு பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்தின் ஜீவனான நிலயங்களைத் தாக்கியிருப்பார்கள். ஸைபிரஸ், பாலஸ்தீனம், இராக், முதலிய நாடுகளின் ஸாவதானமானது ஸிரியாவும் அதிலுள்ள விமான நிலயங்களும் நமது வசமாவதைப் பொருத்தது. ஆகையால் நமது காபந்தை உத்தேசித்து ஸிரியாவையும், லெபானனையும் நாம் வசப்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாயிற்று.

இதனால் தான் பிரிடிஷ் துருப்புகள் ஸிரியாவுக்குள் போகத்துடங்கின. ஸிரியாவையும் லெபானனையும் விரோதிகள் ஆக்கிரமித்துக்கொண்டு மத்திய ஆசியாவிலுள்ள நாடுகளைத் தாக்கவிடமாட்டோம் என்று பிரிடிஷ் கவர்ன்மெண்டார் 1—7—40-ல் பிரகடனம் பண்ணியிருந்தார்கள். அது ஞாயமென்று விஷி (Vichy) கவர்ன்மெண்டார் அறிந்து பிரிடிஷாருக்கு விரோதமாக ஒன்றும் செய்வதில்லை ஏன்று வாக்களித்தார். அப்படியிருந்தும் ஸிரியாவிலுள்ள தங்கள் சொத்து சுவந்திரம் எல்லாவற்றையும் ஜெர்மானியர் வசமும் இதாலியர் வசமும் ஒப்படைத்து இராக் புரட்சிக்காரர்களுக்கு யுத்த தளவாடங்கள் கொடுத்து பேச்சுக்குப் புரம்பாக நடந்தார்கள்.

இந்தப் பிரதேசத்தில் நாடுகள் அடையவேண்டுமென்ற எண்ணம் பிரிடிஷார்களுக்கு கிடையாது. ஸிரியா லெபானன் உடைய சுயேச்சையைப் பாதுகாக்க பிரிடிஷார் தயாராகயிருக்கிறார்கள். தர்போதய படையெடுப்பும் ராணுவ நிர்ப்பந்தத்தால் ஏற்பட்டதென்று வாக்களித்தார்கள். சுயேச்சைப் பிரெஞ்சு துருப்புகளின் தலைவரான தளகர்த்தர் காட்ரூவும் இதே அர்த்தத்தில் ஒரு விளம்பரம் வெளியிட்டார். "பிரான்ஸ் ஜீவித்திருக்கவும், உலகம் முழுமையும் சுயேச்சாதிகாரத்துடன் இருக்கவும் போராடி வரும் பிரெஞ்சு மக்கள் வாயிலாக



நீங்கள் சுயேச்சை உள்ளவர்களென்று பிரான்ஸ் தாய் ஸ்தாபிக்கிறது என்று சொன்னார். ஜெர்மானியருக்கு அடிமைகளாய்ப்போன கூருகெட்ட விஷி கவர்ன்மெண்டாரைக் காட்டிலும் சுயேச்சையைப் பற்றி பேச இவர்கள் யோக்கியதை உடையவர்கள்.

ஸிரியா படையெடுப்பும் ஏற்பாட்டின்படி நடக்கிறது. எதிர்ப்பு அவ்வளவாக இல்லை. பேரளவிற்குத்தான். ஜனங்களும் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களும் தங்களை விடுவிக்க வந்த சைனியமாகக் கருதி நமது துருப்புகளை வரவேற்கிறார்கள். டெயிர் எஸ்ஸார் என்ற மத்திய ஸிரிய கேந்திர ஸ்தானம் பிரிடிஷார் வசமாகிவிட்டது. அதிலிருந்து அலப்போ, பால்மைரா, ஹமா, ஹோம்ஸ், முதலிய ஊர்களுக்குப் போகலாம். ஸிரிய-துருக்கி எல்லைபுரத்தை ஒட்டி நமது படை மற்றொன்று செல்லுகிறது. இரண்டு படைகளும் அலப்போவைப் பிடிக்கச் செல்கின்றன.

ஜெர்மானியர் அபிப்பிராயம் சரியாகத் தெரியவில்லை. பிரிடிஷார் இச்சமயம் விழிப்பாய் இருந்தார்கள் என்று ஜெர்மானியர் கண்டிருப்பார்கள். ஆனால் அதை ஒன்றும் பொருட்படுத்தாததுபோல் பாசாங்கு செய்கிறார்கள். அந்தப் பழம் புளிக்கும் என்ற கதை. கடைசியாக வந்த செய்திகளிலிருந்து அது என்னமோ பிரிடிஷாருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் தனிப்பட்ட வியவகாரமென்றும் தங்களுக்கு அதில் யாதொரு சம்பந்தமும் இல்லைபோலும் பேசுகிறதாகத் தெரிகிறது. இதை எல்லாம் கேட்டு ஏமாரக்கூடாது. பிரிடனையும் பிரான்ஸையும் சண்டையில் மாட்டிவிட வேணுமென்பது அச்சு தேசத்தாரின் நோக்கமென்று எல்லோருக்கும் தெரியும். இது நடைபெற்றால் ஜெர்மானியர் கை கொட்டி சிரிப்பார்கள். உடனே ஸிரியாவிற்கு ஜெர்மானியர் படையெடுத்து வரமுடியாது. ஆயினும் பின்னால் அவர்கள் வரக்கூடும். சிரம சாத்தியந்தான். ஆயினும் ஒரு கை பார்க்கக்கூடும். வெகுதூரம் ஏராளமான துருப்புகளும் தளவாடங்களும் கொண்டுபோக வேண்டியது சிரமமான காரியம். இன்னுமொரு செய்திப்படி ஜெர்மானியர் நோக்கம் எகிப்து, ஸிரியா இல்லை.

அல்லது, மால்டா அல்லது ஸைப்ரஸ்ஸாகவிருக்கலாம். இரண்டும் வெகு சிரமமான வேலை. அவைகள் நல்ல பாதுகாப்பு நிலைமையிலிருக்கிறது. மால்டா கவர்னர், தளகர்த்தர் டாபி சொன்னதை கவனியுங்கள். "எதிர்ப்பை தடுக்க கிரீடைக் காட்டிலும் அளவு கடந்த நல்ல ஸ்திதியில் மால்டா இருக்கிறது. இது பொறுப்பு வாய்ந்த எல்லா உத்தியோகஸ்தர்களாலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. மால்டாவை நாம் விடமாட்டோம். ஜெர்மானியராயிருக்கட்டும் இதாலியராய் இருக்கட்டும் அதை எங்களிடமிருந்து பிடுங்க முடியாது. நான் விஷயமறிந்து சொல்லுகிறேன்."

இவ்வளவு மாதகாலமாக போர் நடந்துவந்ததை கவனித்து ஐந்துகை போட்டால் ஒரு விஷயம் வெளியாகிறது. மத்தியதரைக்கடலானது ஐரோப்பாவுக்கு எல்லையாகவிருந்ததுபோக அதன் மத்தியபாகத்திலுள்ள ஏரியாக மாறி

விட்டது. அதில் பிரிடனுக்கு ஆதிக்கம். பிரெஞ்சு, ஈக்வடோரியல் ஆபிரிக்கா பிரிடிஷ் வசமாகிவிட்டது; எகிப்து சிநேகத்தால் கட்டுப்பட்டிருக்கிறது; பாலஸ்தீனமும் இராக்கும் கீழ்புர மதில் சுவர்களாகவிருக்கின்றன; ஸிரியா அநேகமாக பிரிடிஷார் வசமே; துருக்கியும் ஸாடி அர்ராபியாவும் அவர்களுக்கு சிநேக கட்டுப்பாட்டுடன் இருக்கின்றன. ஸைப்ரஸ், மால்டா, ஜிப்ரால்டர் அசைக்க முடியாது. அது அர்த்த புஷ்டியானது; ஹிட்லர் ஐரோப்பாவில் ஜம்பமாக நடமாடலாம்; ஆனால் அவனைச் சுற்றி நாலா பக்கத்திலும் பிரிடன் வளைத்துக் கொண்டுவருகிறது; கடைசியாக எலிப்பொறியில் மாட்டிக்கொண்ட எலி நிலைமைக்கு வந்துவிடுவான்.

## இரண்டு சொற்பொழிவுகள்.

ஒன்று Mr. சர்ச்சிலுடையது. காமன்ஸ் சபையில் அவர் பதில் சொன்னது. அது நேரான பேச்சு, ஐயங்கொண்டவர்களுக்கு நம்பிக்கை கொடுத்தது. பிரிடன் வெற்றிகாலத்தை நெருங்குகிறது என்று காட்டியது.

மற்றொன்று Mr. ரூஸ்வெல்டின் பேச்சு. தங்களாலியன்ற அளவு பிரிடனுக்கு உதவிபுரிய சங்கல்பம் செய்துகொண்டிருப்பதை மறுமுறை சொன்னது. இரண்டு வாரங்களுக்குமுன் அவர் வேண்டிய உதவி முழுமையும் தருவதாகச் சொன்னார். "இது செய்யமுடியும், செய்யவேணும், செய்யப்படும்" என்றார். இந்த வாரம் "எதிரியை தோற்கடிக்குமாறு தளவாடங்கள் எங்குபோனால் செம்மையாக உபயோகப்படுத்தலாமோ, அங்கெல்லாம் போய்ச்சேரும்படி பார்த்துக்கொள்ளுவோம்". சமுத்திர மார்க்கங்களை பந்தோபஸ்து செய்தோ, துணைக்கப்பல்கள் அனுப்பியோ, அக்காரியத்தை முடிப்பார்.

விஷயந்தெரிந்த பெரும் புத்தியுடைய இருவர் திடசித்தத்தைக் காட்டும் பிரசங்கங்கள்.

## நேசதேச மந்திரிகள் மகாநாடு.

நேற்று ஸெண்ட் ஜேம்ஸ் அரண்மனையில் கூட்டப்பட்ட மகாநாடு. 50 கோடி ஜனங்கள் சார்பாக நடந்த மகாநாடு. பிரிடிஷார் கோஷ்டிக்கு Mr. சர்ச்சில் தலைவர். மூன்றுபாகங்களடங்கிய தீர்மானம் நிறைவேறியது. அவையாவன:—

(1) போரில் வெற்றியடைய தீர்மானம். இதற்காக ஒருவருக்கொருவர் உதவி புரிவது.

(2) சுயேச்சையுள்ள ஜனங்களை நிர்ப்பந்தப்படுத்தி ஜெர்மனிக்கு கீழ்ப்படியும்படி செய்வது ஒழிந்தாலொழிய நிரந்தரமான சமாதானம் ஏற்படாது.

(3) அக்கிரம எதிர்ப்பு இல்லாதவண்ணமும் பொருளாதார துறையிலும் சமூக வாழ்விலும் சாவதானம் உண்டாகும் வண்ணமும் பாடுபட வேண்டியது.



## அபிஸீனியா.

தேச சுபாவத்தாலும் சீதோஷ்ண ஸ்திதியிலும் பெருங்கஷ்டங்களிலிருந்தும் பிரிடிஷ் துருப்புகள் ஓமோ நதியை இரண்டு இடங்களில் தாண்டிச்சென்று அபால்டியை பிடித்தன. 4,000 பேர் கைது செய்யப்பட்டார்கள். 20 பீரங்கிகள், 200 லாரிகள், ஏராளமான யுத்த தளவாடங்கள் கைவசப்படுத்தப்பட்டன. தென் ஆபிரிக்கா விமானப்படை நல்ல வேலை செய்தது. விரோதித் துருப்பு நிலயங்களை விடாமல் வெடிகுண்டு போட்டு தாக்கின. ஏரிகள் யுத்தத்தின் பயனாகவும் ஓமோ நதி யுத்தத்தின் பயனாகவும் 45,000 சதுர மைல் உள்ள நாடு நமது வசமாயிற்று.

ஜிம்மாவை நோக்கி பிரிடிஷ் படை போய்க்கொண்டிருக்கிறது.

## மேற்குப் பாலைவனம்.

லிபியாவில் விசேஷமில்லை. டோப்ருக்கைச் சுற்றி பீரங்கி வேலை இடைவிடாது நடந்துவருகிறது. ஸோலம் பக்கமும் மும்முரமாக கவனித்து வருகிறோம்.

விமானப்படை பெங்காஸியை விடாமல் தாக்கி வந்திருக்கிறது.

## எரிட்ரியா.

இந்த மாகாணத்தில் **அஸ்ஸாப்** என்ற துறைமுகமானது பிடிபட்டது. பிரிடிஷ் கப்பற்படை, தரைப்படை, விமானப்படை, இவைகளின் ஒத்துழைப்பால் பிடிபட்டது. ஏராளமான துருப்புகள் கைது செய்யப்பட்டார்கள்.

2 பீரங்கிகளும் கிடைத்தன.

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேச தேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**2—6—41.** (திங்கட்கிழமை).

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—கப்பல்கள்—கீல் (Kiel) கால்வாய். | ...... | ஒரு கப்பலின் மேல் குறி தவருமல் குண்டு வீழ்ந்தது. |
| விரோதி சாமான் கப்பல்.—நார்வே (Norway)ச் கடற்கரை. | ...... | மூழ்கடிக்கப்பட்டது. |
| ராணுவ முக்கியமுள்ள இடங்கள்.—ஸ்க்லீஸ்விக் ஹோல்ஸ்டீன் (Schleswig Holstein). | 2 விமானங்கள். | ...... |
| இரவில்.—கப்பல் துறைகள்—ஸெயிண்ட் நாஸேர் (St. Nazaire). | ...... | ...... |
| ஜெர்மனியின் தலை நகரமான பேர்லின் (Berlin). | ...... | எங்கு பார்த்தாலும் ஒரே தீமயம். |
| டஸ்ஸல்டார்ப் (Dusseldorf) உள்நாட்டுத் துறைமுகம்—டூயிஸ்பர்க் (Duisberg). | ...... | ...... |
| ராணுவ முக்கியமுள்ள இடங்கள்.—ரூர் (Ruhr). | 4 விமானங்கள். | சேதமாயின. |
| கப்பல் துறைகள்.—ஆஸ்டெண்ட் (Ostend). | ...... | ...... |

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| கப்பல்கள் துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |

**3—6—41.** (செவ்வாய்க்கிழமை).

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—ராணுவ முக்கியமுள்ள இடங்கள்—லாஹாவ்ர் (Lehavre) துறைமுகம். | ...... | ...... |
| விமான நிலயம்.—ஆக்டிவில் (Octeville). | 1 விமானம். | சேதமாயிற்று. |

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| தரையிலிருந்தும் விரோதி விமானங்கள்.—காம்பூத் (Gambut). | ...... | 3 விமானங்கள். சேதமாயின. |
| விரோதி சைனியங்கள் இருக்கும் இடங்கள்.—டெபராக் (Debarech). | ...... | ...... |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**3—6—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.

### இதாலிய ஆபிரிக்கா (Africa)—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ...... | வெடிகளும், தீயும் கிளம்பின. |
| விமான நிலயம்.—மாரிட்ஸா (Maritza). | ...... | 1 விமானம். |
| விமானப் பாதுகாப்பு.—சமுத்திரத்தை பாதுகாக்கும் கப்பல்களுக்கு. | ...... | ...... |

### ரோட்ஸ் (Rhodes) தீவு.

| | | |
|---|---|---|
| விமான நிலயம்.—மாரிட்ஸா (Maritza). | ...... | தரையிலிருக்கும் பல விமானங்கள் நாசமாயின. |

### மத்தியதரைக்கடல் (Mediterranean).

| | | |
|---|---|---|
| விரோதி துணைக் காவல் கப்பற்படை.—டூனிஸியா (Tunisia) வின் கடற்கரை. | ...... | 1 கப்பல் வெடித்து மூழ்கிற்று, ஒன்று எரிந்துபோயிற்று. பல சேதமாயின. |
| வேவுபார்த்தல்.—அயோனியன் (Ionian) தீவுகளில் மிகப்பெரிதான ஸெபலோனியா (Cephalonia) த்தீவு. | ...... | ...... |

**4—6—41.** (புதன்கிழமை).

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்—துறைமுகம் கப்பல்.—ஸீப்ரக்கே (Zeebrugge). | 2 விமானங்கள். | கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. |
| சாமான் கப்பல்.—நார்வே (Norway)க் கடற்கரை. | ... | கப்பல் தீக்கிரையாகியது. |
| கப்பல் துறைகள், கப்பல்கள்.—புலாயின் (Boulogne) | 2 விமானங்கள். | ...... |
| பாதுகாத்தல்.—இங்கிலீஷ் (English) கால்வாய். | ...... | 4 விமானங்கள். |

### ஸிரியா (Syria).

| | | |
|---|---|---|
| எண்ணெய்த் தொட்டிகள், துறைமுகம்.—பீரட் (Beirut). | ...... | பெருந்தீக்கள் கிளம்பின. |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**4—6—41.** (புதன்கிழமை)—தொடர்ச்சி.

ரோட்ஸ் (Rhodes) தீவு.

| | | |
|---|---|---|
| விமானமிறங்குமிடங்கள், விமான நிலயத்தைச் சேர்ந்த கட்டடங்கள்—கடாவியா (Katavia). | ...... | கட்டடங்கள் இடிந்தன. தீ கிளம்பியது. |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| விமான நிலயம்.—டெர்ணு (Derna) துறைமுகம்—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |

**5—6—41.** (வியாழக்கிழமை).

ஸிரியா (Syria).

| | | |
|---|---|---|
| இதாலிய விமானங்கள்—அலெப்போ (Aleppo) விமான நிலயம். | ...... | பல விமானங்கள் சேதமாயின. |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| விரோதி சைனியங்கள், மோட்டார் வண்டிகள்.—அபிஸீனியா (Abyssinia). | ...... | அபரிமிதமான நஷ்டம். |
| துறைமுகம்—பெங்காஸி (Benghazi) ... | ...... | ...... |
| விரோதி விமானங்கள்—மார்டுபா (Martuba). | ...... | பல சேதமாயின. |

ஐரோப்பா (EUROPE).

| | | |
|---|---|---|
| படையெடுத்தல்—பிஸ்கே (Biscay) வளைகுடா. | ...... | 1 விமானம். |

**6—6—41.** (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பிரெஞ்சு (French) படையெடுப்புத் துறைமுகங்கள்—கலே (Calais) பிரதேசத்தில். | ...... | ...... |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| படையெடுப்பு—பெங்காஸி (Benghazi) துறைமுகம். | ...... | ...... |
| விரோதி சைனியங்கள்—வாகோ (Vaco), அபால்டி (Abalti), ஓமோ (Omo), பெகானோ (Becano) பிரதேசங்கள், | ...... | ...... |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**7—6—41.** (சனிக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.——ஒரு துணைக் காவல்படையுடன் கூடிய கப்பல்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரை. | ...... | இரண்டு கப்பல்கள் தீக்கிரையாகின. இன்னும் பல சேதமாயின. |
| சாமான் கப்பல்.—நார்வே (Norway)க் கடற்கரை. | ...... | மூழ்கடிக்கப்பட்டது. |
| சமுத்திரத்தில் மூழ்கிப்போன கப்பல்களை வெளியிலெடுக்கும் கப்பல்.—டெர்ஸ்செல்லிங் (Terschelling). | ...... | தீக்கிரையாகியது. |
| விமானச் சண்டை.—விரோதிப் பிரதேசம் | 4 விமானங்கள். | 1 விமானம். |
| இரவில்.—ஜெர்மன் கடற்படை நிலயம்.—ப்ரெஸ்ட் (Brest). | ...... | தகர்க்கப்பட்டது. |
| கப்பல் துறைகள், கப்பல்கள்.—பெர்கன் (Bergen). | ...... | சேதமாயிற்று. |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| விமான நிலயம், சைனியங்கள் வசிக்கும் விடுதிகள்.—டெர்ணு (Derna). | ...... | சேதமாயிற்று 2 விமானங்கள். |
| அபிஸீனியா (Abyssinia)வில் ஜிம்மா (Gimma) பிரதேசம். | ...... | ...... |
| காப்பாற்றுதல்.—மத்தியதரைக் கடலிலுள்ள கப்பல்கள். | ...... | 1 விமானம். |
| விமான நிலயம்.—காம்பூத் (Gambut). | ...... | பலத்த சேதம். |
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |

**8—6—41.** (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| தொழிற்சாலைகள், கப்பல் துறைகள், ரயில் பாதைகள்.—மேற்கு ஜெர்மனியில் ரூர் (Ruhr)ல் அங்குமிங்கும். | ...... | ...... |
| பட்டணம், கப்பல் துறைகள், ரயில் பாதைகள்.—டார்ட்மண்ட் (Dortmund). | ...... | வெகு பலத்த சேதம். |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **8—6—41.** (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | |

## ஸிரியா (Syria).

| | | | |
|---|---|---|---|
| | ஒத்தாசை.—ஸிரியா (Syria)வில் முன்னேறும் பிரிடிஷ் (British) சாம்ராஜ்ஜிய, நேசநாட்டுத் துருப்புகளுக்கு. | ...... | ...... |
| | பீரட் (Beirut). | ...... | ...... |
| | மெஸ்ஸி (Mezzie) விமான நிலயம்.—டமாஸ்கஸ்(Damascus)ஸுக்கு அருகே. | ...... | ...... |

## இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | படையெடுப்பு.—ஸிரினெகா (Cyrenaica) பிரதேசம் முழுவதும். | ...... | ...... |
| | துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | ...... | தீப்பிடித்தது. |
| | தரையிலிருந்தும் விமானங்கள்.—டெர்னு (Derna). | ...... | 8 விமானங்கள். இன்னும் பல சேதமாயின. |
| | எல்கஸாலா (El Gazala). | ...... | 6 விமானங்கள். |
| | சைனியங்கள் தங்குமிடம், மோட்டார் வண்டிகள்.—மார்டுபா (Martuba). | 2 விமானங்கள். | ...... |

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **3—6—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |

### பிரிடன் (Britain).

| | | | |
|---|---|---|---|
| | இரவில்.—இங்கிலாந்தி (England)ன் வட கிழக்கு, கிழக்குப் பாகங்கள். | 4 விமானங்கள். | சொற்பச் சேதம். சிலருக்குக் காயம். |

### மத்தியதரைக்கடல் (Mediterranean).

| | | | |
|---|---|---|---|
| | மால்டா (Malta). ... | 1 துருப்பேற்றும் விமானம் சுட்டுத்தள்ளப் பட்டது. | நஷ்டமேயில்லை. |



| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **4—6—41.** (புதன்கிழமை). | | | |

### பிரிடன் (Britain).

| | | | |
|---|---|---|---|
| | இரவில்.—மிட்லண்ட்ஸ் (Midlands), இங்கிலாந்தி (England)ன் தென் கிழக்கு, வடமேற்குப் பாகங்கள். | ...... | சொற்பச் சேதம். சிலர் மாண்டனர். |
| | சில இடங்கள்.—கிழக்கு ஆங்கிலியா (Anglia), லண்டன் (London), பிரதேசம். | 5 விமானங்கள். | சிலருக்குக் காயம். |

### எகிப்து (Egypt).

| | | | |
|---|---|---|---|
| | அலெக்ஸான்டிரியா (Alexandria) ... | ...... | 140 ஜனங்கள் கொல்லப்பட்டனர். துறைமுகத்திற்கு சேதமில்லை. |

| | | | |
|---|---|---|---|
| **5—6—41.** (வியாழக்கிழமை). | | | |

### பிரிடன் (Britain).

| | | | |
|---|---|---|---|
| | இரவில்.—சில இடங்கள்—இங்கிலாந்தி (England)ல் அங்குமிங்கும். | 1 விமானம். | சேதமுமில்லை. ஒருவருக்கும் காயமுமில்லை. |

| | | | |
|---|---|---|---|
| **6—6—41.** (வெள்ளிக்கிழமை). | | | |

### பிரிடன் (Britain).

| | | | |
|---|---|---|---|
| | பகலில்.—இரண்டு இடங்கள்—வட கிழக்கு இங்கிலாந்து (England). | ...... | சேதமேயில்லை. |
| | இரவில்.—லண்டனி (London)ல் ஒரு பிரதேசம்; தென் கிழக்கு இங்கிலாந்தி (England)ல் ஒரு பட்டணம். | ...... | சொற்பச் சேதம்; சிலருக்குக் காயம். |

### மத்தியதரைக்கடல் (Mediterranean).

| | | | |
|---|---|---|---|
| | மால்டா (Malta). ... | 1 விமானம். | சேதமேயில்லை. |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **7—6—41.** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—வடஸ்காத்லாந்து (Scotland). | ...... | ...... |
| | **எகிப்து (Egypt).** | | |
| | ஜனங்கள் வசிக்குமிடங்கள்.—அலெக்ஸாண்டிரியா (Alexandria). | ...... | 100 பொதுஜனங்கள் மாண்டனர், பல கட்டடங்கள் இடிந்தன. |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | ... ...... | மிகச் சொற்பச் சேதம். |
| **8—6—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—ஒரு பட்டணம்—கார்ன்வால் (Cornwall) கடற்கரை. | ...... | சொற்பச் சேதம் சிலர் மாண்டனர். |
| | இரவில்.—சில இடங்கள்—இங்கிலாந்தி (England)ல் அங்குமிங்கும். | ...... | ...... |
| **9—6—41.** (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—தென் கிழக்குக் கடற்கரை | 2 விமானங்கள். | சேதமேயில்லை. |
| | இரவில்.—அங்குமிங்கும் சில இடங்கள்—தென்கிழக்கு இங்கிலாந்து. | ..... | மிகச் சொற்பச் சேதம். |

---



# யுத்தக் குறிப்புகள்.

---

## ராக்ஷஸர்களின் போர்.

யானைக்கும் திமிங்கலத்துக்கும் சண்டை நடந்ததென்ற கதை நெபோலியன் சக்கிரவர்த்தியின் நாளில் கட்டப்பட்டதென்று தெரிகிறது. நெபோலியன் ஐரோப்பாவை வியாபித்து ஆண்டுவந்த சுமார் ஒன்றரை நூற்றாண்டுக்குப் பின்னர் ஸர்வ சமுத்திரங்களையும வியாபித்து கொட்டா விழியுடன் காத்துவரும் பிரிடனுடைய கடல் சக்தியையும், சமுத்திரங்களுக்குள் அகப்பட்டிருக்கும் ஒரு பெரிய நிலப்பகுதியை ஜெர்மனி வியாபித்துக்கொண்டு ஸ்தாபித்திருக்கும் நிலப்படை சக்தியையும் கவனித்தால் அன்று நெபோலியன் தன் பரமசத்ருவான பிரிடனை தோற்கடிக்க யத்தனம் செய்து வீணாகப் போன காலத்திலிருந்த நிலைமைபோலவே தற்பொழுதும் ஏற்பட்டிருப்பது வியக்கத்தக்கது. இன்று மதயானை தான் தோன்றிய விதமாய் கண்டங்களிலும் உபகண்டங்களிலும் வியாபித்து கபளீகரித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அதன் சஞ்சாரம் ஐந்து பூதங்களில் ஒன்றான தண்ணீரால் தடைப்பட்டிருக்கிறது. தண்ணீரில் திமிங்கலம் தன் குறியைக் கைவிடாது வெகுவேகமாக சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது. உலகத்தை ஆட்ட வந்த அரக்கனை அழிக்க எண்ணிக்கையற்ற சேனைகளை அனுப்பிக்கொண்டிருக்கிறது.

## மத்தியில் சற்று இடையூறுகள்.

தற்சமயத்தில் நமக்குச் சற்று காரியத் தளர்ச்சி யென்பதை நாம் மறைப்பதில் பயனில்லை. கிரீட் தீவு வெகுமுக்கியமானது, அதை நாம் இழந்தோம். நாம் அங்கு இருந்தவரை மத்திய கிழக்குப் பிரதேசங்களில் வைத்து ஜெர்மனி வியாபிக்க முடியாமல் நாம் கட்டைபோட முடிந்தது. இப்பொழுது கிரீட் நம்மிடமில்லாததால், நம் மத்திய கிழக்கு அக்கரைகளுக்குச் சற்று அபாயம்தான். ஈஜியன் கடலில் நம் கடற்படை பிரவேசிக்க முடியாமல் போய்விட்டது.

ஆனால் கிரீட் தீவை ஜெர்மானியர் படையெடுத்து வெற்றி பெற்றதால் பிரிடனைப் படையெடுப்பது ஸம்பாவிதமாகயிருக்கும் என்றாவது சுலபமாக இருக்குமென்றாவது நினைப்பது பெருந்தவறு. அவ்விரண்டு தீவுகளைப் படையெடுக்கும் விதம் ஒரே மாதிரியாக யிருக்க முடியாது. வெகுகோரமான யுத்தத்திலிருந்து வெளியேற்றப்பட்ட வெகு களைப்புற்ற சேனை கிரீட் தீவிலிருந்தது. அதற்கு மற்ற இடங்களிலிருந்து போதிய அளவுக்கு தளவாடங்கள் அனுப்ப முடியவில்லை. பிரிடனிலோ எதிரியைத்தாக்க 40-லக்ஷம் சேனை நன்றாகப் பயிற்சி செய்யப்பட்டு வெகு ஊக்கத்துடன் நிற்கிறது. கிரீட் தீவில் நம் விமானங்களை வைத்துக்கொள்ள நல்ல விமான தளங்கள் கிடையாது. அதனால் நம் விமானங்கள் எதிரி விமானங்களைக் காட்டிலும் இரட்டிப்புக்கு மேல் தூரத்திலிருந்து பறந்து செல்ல வேண்டியிருந்தன. ஆனால் பிரிடனிலோ எதிரிகளைக்

காட்டிலும் அருகாமையிலிருந்து தாக்கக்கூடிய உயர்தர விமான தளங்கள் குவிந்து கிடக்கின்றன. பீரங்கிகள், யந்திரங்கள், தற்காப்பு நிலயங்கள் இவைகளில் இவ்விரு தீவுகளுக்கும் ஒன்றுக்கொன்று ஸாம்யமேயில்லை. சென்ற மே மாதம் 23 தேதியில் ஒரு டில்லிப் பத்திரிகையில் பிரிடனைப்போல் கிரீட்டிலும் தற்காப்புகள் வெகு பலமாக விருக்கின்றன என்று சொன்ன சமாசாரம் பிசகு.

## திருப்பி வற்புறுத்துகிறோம்.

நாம் சென்றவாரம் எழுதியதை இச்சமயம் மறுபடி எழுதுகிறோம். கிரீட், இராக் சமாசாரங்கள் எல்லாம் உண்மையில் மத்தியதரைக்கடல் யுத்தமே தந்திரங்களே ஒழிய பெரிய யுத்தோபாயமல்ல. உபாயம் என்றால் யுத்தத்தின் அடிப்படைகளைப் பற்றியது. யுத்தத்தின் அடிப்படைகளாவன :—

(1). இப்போர் ப்ரத்வீ, அப்பு, வாயு என்ற மூப்பூதப் போராகையால், இவைகளில் இரண்டில் ஆதிக்கம் எந்தப் பக்கத்தில் ஸ்தாபித்துக் கொள்ளுகிறார்களோ அப்பக்கத்துக்குத்தான் வெற்றி.

(2) பிரிடனுக்கு கடலாதீனம் இருக்கிறது. அமெரிக்காவும் சேர்ந்து விட்டால், இன்னும் சில மாதங்கள் ஆவதற்குள் ஆகாயத்திலும் நேசதேசத்தார் ஆதீனம் பெறுவார்கள்.

(3) அட்லாண்டிக் யுத்தத்தில் மேலுக்கு மேல் நேசதேசத்தார் வெற்றி பெற்றுக்கொண்டு வருகிறார்கள்.

பிரிடிஷாரை முறியடித்தாலொழிய ஹிட்லருக்கு வெற்றி கிடையாது. அந்த பிரிடன் யுத்தம் நாளுக்கு நாள் அஸம்பாவிதம் என்று கருதக் கூடியதாகயிருக்கிறது.

அவனுடைய அந்தரங்கத்தில் ஹிட்லருக்கு இந்த விஷயம் தெரியும். அவன் சென்ற ஜூன் மாதம் வெற்றியளிப்பதாய் ஜெர்மானியருக்கு வாக்களித்தான். மறுபடி ஸெப்டம்பர் மாதம் வாக்களித்தான். இவ்வருஷம் மே மாதம் அவனுடைய குடிகளிடம் சென்றும் இன்னும் உபரியான பிரயத்தனம் செய்து யுத்த தளவாடங்கள் செய்து 1942-ம் வருஷத்தில் வெற்றி பெறவேணும் என்று தன் குடிகளிடம் மன்றாடுகிறான். இது 1914-ம் வருஷத்திய கதைதான். அப்பொழுது ஒவ்வொரு ஜெர்மன் ராணுவ அதிகாரியும் ஒரு சீக்கிரமான யுத்தத்தில் சீக்கிரமான வெற்றியைப் பெறலாமென நம்பினான். ஜெர்மன் சமூகமே நிலைகுலைந்து சிதற ஆரம்பிக்கவே வெற்றியும் பறந்து போயிற்று. அதற்குப் பிறகும் எந்த ஜெர்மானிய ராணுவசாஸ்திரியும், ஒரு நீண்ட யுத்தத்தைப் பற்றி நினைக்கவில்லை. நிச்சயமாக ஹிட்லராவது அவனுடைய கக்ஷியினராவது நினைத்ததில்லை. இச்சமயத்தில் ஒரு நீண்ட யுத்தத்தைப்பற்றி ஜெர்மன் தலைவர் சொல்லிக்கொள்ள துவங்குவதே தோல்வியை ஒப்புக்கொண்டதாகும்.

## அடுத்தது என்ன ?

பல் டாக்டரிடம் சிகிச்சைக்காக காத்துக்கொண்டிருப்பவர்கள்போல எப்பொழுது நம்முடைய முறை வரப்போகிறதோவென்று நடுங்கிக்கொண்டு



ருஷ்யா, துருக்கி, இரான், எகிப்து, ஸ்பெயின் முதலிய தேசங்கள் நிற்கின்றன. நார்வே, யூகோஸ்லாவியா, கிரீஸ் முதலியவை ஜெர்மன் டாக்டர் கொடுத்த சுரணைகொல்லி மருந்தைத் தள்ளிவிட்டு அதனால் வந்த விளைவை வீரத்துடன் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

பல்கேரியா, ருமேனியா, க்ரோஷியா முதலிய தேசங்கள் ஜெர்மன் டாக்டர் கொடுத்த குளோரபார்ம் விஷயத்தை ஆழ்ந்து உருஞ்சின. ஆகையால் அவர்களுக்கு இழைத்த நாசத்தை அவர்கள் மூன்றும் அறிந்தாரில்லை. விஷி ஸர்க்காருக்கு ஜெர்மன் உருதி வந்தக்ஷணமே பயத்தினால் நடுநடுங்கி அவர்கள் மேல் கை வைப்பதற்கு முன் தண்டனிட்டு விட்டார்கள். காத்திருக்கும் ஜாபிதாவில் எஞ்சியிருக்கும் ருஷ்யா, துருக்கி தேசங்களைப்பற்றி என்ன ?

## ருஷ்யா.

சென்ற சிலகாலமாக ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் உள்ள சம்பந்தங்கள் முற்றிலும் சரியாகயில்லையென்பது தெரிந்த விஷயம். 1940-ம் ஆண்டில் ருஷ்யா அனுப்பிய எண்ணெய் ஒப்பந்தப்படி அனுப்பவேண்டியதற்குக் குறைச்சலாகவேயிருந்தது. பால்டிக் சமுத்திரத்திற்கும் கருங்கடலுக்கும் உள்ள எல்லைக்கு இரு பக்கத்திலும் துருப்புகள் சேமிக்கப்பட்டிருக்கின்றன என்று சென்ற வாரத்தில் சொன்னோம். ருஷ்யா யூகோஸ்லாவியாவுக்கும் பல்கேரியாவுக்கும் துருக்கிக்கும் தந்திரமாக தைரியம் கொடுத்தது. மேலும் ஜெர்மனியிலிருந்து ஜப்பானுக்கு தங்கள் ராஜ்ஜியத்தின் வழியாக தளவாடங்கள் கொண்டுபோவதையும் ருஷ்யா தடை செய்துவிட்டது.

மற்றொரு பக்கத்தில் ரஷீத் அலியின் செய்கையை வெளிப்படையாய் ஒப்புக் கொள்ளாததுபோல், இராக்கை ராஜதந்திர முறையில் அங்கீகாரம் செய்து விட்டது. யூகோஸ்லாவியா, ஹாலந்து, பெல்ஜியம், நார்வே இவைகளிலுள்ள சுயேச்சை அரசாங்கங்களை சுயேச்சை சமஸ்தானங்களுக்குப் பிரதிநிதிகளாக மதிப்பதை வாபஸ் வாங்கிவிட்டது.

இப்பொழுது, ஹிட்லர் வெகு காலம் யுத்தம் செய்யவேண்டி ஏற்பட்டுவிட்டதென்று தெரிந்துகொண்டும், அதற்காக ருஷ்யா நீடித்தகாலம் ஜெர்மனிக்கு சாமான்கள் சப்ளை வேண்டியதைப்பற்றிய பிரச்னை முக்கியமாக ஏற்படக்கூடுமென்றும் ஞாபகப்படுத்திக்கொண்டால், சமீப காலத்தில் ஸ்டாலினின் நடத்தையைப் பற்றி நாம் என்ன அபிப்ராயப்படவேண்டும் என்று அறியலாம்.

## ஸ்டாலின் எப்படி நினைக்கிறான் ?

ருஷ்யா ஜெர்மனியிடம் அதிகமாக பயப்படுகிறது. இதுதான் ஒரு முக்கியமான விஷயம். நவீன முறையில் கவசம் பூண்ட சேனைகளுக்கு யூக்ரேன் ஒரு நல்ல யுத்தரங்கம். லெனின் ஒரு கலவரம் ஏற்படுத்தியபொழுது ருஷ்யர்கள் பேசாமலிருந்ததுபோல், இப்பொழுதும் ருஷ்யாவின் பொதுமக்கள் சும்மாவிருந்து விட்டு வெற்றியடைந்திருக்கும் நாஸி தத்வமானது போல்ஷிவிஸத்தை விரட்டி

விட சாதகம் செய்துவிடுவார்கள். ஸ்டாலினின் கதியென்ன. ஸ்டாலின் கீழ்தேசத்தைச்சேர்ந்தவன். அதிக தந்திரமும் பொருமையும் வாய்ந்த குணசீலன். அவனுடைய சமயோசிதமான தேசிய முறையால், ஜனநாயகமும் நாஸி தத்வமும் ஒன்றோடொன்று சண்டை போடும்படி செய்து, அவர்களுடைய சோர்வினின்றும் தான் லாபமடையவேண்டுமென்ற முக்கியமான நோக்கத்தை அவன் ஏற்கனவே வெளிக்காட்டியிருக்கிறான். இம்மாதிரி நடுநிலைமையில் எவ்வளவு நாள் ஸ்டாலினை ஹிட்லர் வைத்திருப்பானென்பது யோசிக்கவேண்டியதாயிருக்கிறது. ஜெர்மனி அப்படி விடாமல், ருஷ்யாவிடம் ஏராளமானவைகளை ஜெர்மனி வேண்டினால் (இம்மாதிரி கேட்டிருக்கிறது, கேட்டுக்கொண்டுமிருக்கிறது) ஸ்டாலினுக்கு இரண்டு மார்க்கங்களுண்டு. அவன் எதிர்க்கலாம், அதன்மூலம் பெரிய கெடுதல் ஏற்படலாம். அல்லது லாபகரமான ஒரு கொள்முதல் செய்யலாம். அப்படி ஒப்பந்தத்தினால் தன்னுடைய அதிகாரத்தை ஸ்டாலின் காப்பாற்றிக்கொண்டால், யுத்தத்தில் ஜெர்மனி ஜயமடைந்தால்தான் அவனுடைய ஒப்பந்தம் நிறைவேறும். ஜெர்மனியினுடையவும் நேசநாடுகளுடையவும் சோர்வினால் ஓய்வு ஏற்பட்டால் ஸ்டாலினுக்கு ஒப்பந்தத்தின் லாபம் நிலைப்பதோடு, இருதரப்பாருக்கும் கட்டளைகள் பிறப்பிக்க ஸ்டாலினுக்கு அவகாசமேற்படும்.

ஜெர்மனியின் தேவைகள் ரொம்பவும் அதிகமானவையல்ல என்று வைத்துக் கொண்டால் ஸ்டாலின் நிச்சயமாய் லாபமான வியாபாரம் செய்துவிடுவானென்றும் தோன்றுகிறது.

## மற்றொரு போக்கு.

ருஷ்யாவை தீவிரமாக பயமுறுத்த ஜெர்மானியர்கள் நிச்சயமாய் ஏற்பாடு செய்து வருகிறார்கள். போலந்திலும் யூக்ரேன் எல்லைப்புறங்களில் மேற்கேயும், தெற்கேயும் துருப்புகளை ஏராளமாக வைத்திருப்பதிலிருந்து இது நன்கு விளங்கும். யூக்ரேனிலுள்ள ஜனங்கள் ஜெர்மனியைவிட ருஷ்யாவிடத்தில்தான் பற்றுள்ளவர்களாக இருக்கிறார்களென்பது சந்தேகமில்லை. ஜெர்மனி கவரக் கூடிய தேசங்களில் ஒன்றாகிய யூக்ரேனை ஜெர்மனியிடம் ஸ்டாலின் ஒப்படைத்து விடுவானாவென்றும் அப்படிச்செய்தால் அவனுடைய அதிகாரத்தையும் அவன் இழந்துவிடவேண்டியதாக ஆகாதாவென்றும் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. ஆகையால் மூன்று மாதங்களுக்குமுன் ஜெர்மனியானது தனக்குக் கிழக்கேயுள்ள தேசங்களை எந்த வரிசையாக தாக்கக்கூடுமென்று சொல்லமுடியாமலிருந்தது. நிச்சயமாக முதலிலாவது, இரண்டாவதாகவாவது ருஷ்யாவைத் தாக்குவதாக உத்தேசமில்லை. இந்த விசேஷ கௌரவம் துருக்கிக்கு ஏற்படலாம். மத்திய தரைக்கடலில் ஏற்பட்ட மகத்தான முயற்சிக்கு சமாதானமாக யுத்தத்தில் இறங்கும்படியான நிலைமைக்குப் போகாதவண்ணம் ஸ்டாலினிடம் எவ்வளவு தூரம் தேவைகளைப் பெற்றுக்கொள்ளலாமென்று ஹிட்லர் யோசனை செய்து வருகிறான்.

ஆகையால் கொஞ்சகாலத்துக்குமுன் இருந்ததைவிட இப்பொழுது ஸ்டாலினுக்கு நல்ல சமயம் வாய்த்திருக்கிறது. மற்றொரு தூர்நாற்றம் வீசும் ராஜ தந்திர ஏற்பாடானது உண்டாகப்போகிறது.



## பயங்கரமான சுருக்கம்.

அம்மாதிரியான ஏற்பாடு ஏற்கனவே முடிவடையவில்லையா என்று நான் கேட்கிறேன். துருக்கி சம்பந்தமாக ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் ஒரு ஒப்பந்தமும், பெர்ஸியாவிலுள்ளவர்களைக் கலக்கும்படியாக இரானியாவின் எல்லைப்புறங்களில் காஷ்கண்டுக்குச் சமீபத்தில் ஏராளமான ருஷ்யத் துருப்புகளின் அணிவகுப்பும், துருக்கியை எல்லா பக்கங்களிலும் சூழ்ந்துகொள்வதும், ஹிட்லர் எகிப்துக்குப் போகும்வழியில் லெவாண்டு பக்கத்தில் தீவிரமாய்த் தாக்குதலும், இந்த ஏற்பாடின் அம்சங்கள். பயந்து தலைகுனிந்து நிற்கும் ஜனங்களுக்கும், மத்திய கிழக்குப்பிரதேசத்திலுள்ள முகமதிய நேச நாடுகள் விழுந்து விடாதபடி காப்பாற்றவேண்டியதற்காக சாம்ராஜ்ஜியத் துருப்புகள் ஏராளமாக வருவதிலிருந்து, ருஷ்யாவுக்கு ஏற்படக்கூடிய சங்கடத்தை ஒத்திவைக்கப்படுகிறதென்று ஸ்டாலின் சொல்லுகிறான். முக்கியமாக அவன் வெருட்டிக்கொண்டிருக்கும் ராஜ்ஜியங்களில் ஒன்றை, அதாவது இரானிலுள்ள எண்ணெய்க் கிணறுகளைக்கவர அவனும் ஆசைப்படுகிறான்.

## நம்முடைய நிலை என்ன.

இரானில் ருஷ்யா அணிவகுப்பதும், ஸிரியா முதலிய இடங்களில் ஜெர்மனி சஞ்சாரம் செய்வதும் இந்தியாவிலுள்ள நமக்கு ஆபத்தை உண்டுபண்ணக் கூடியவையென்று நாம் அறிந்து கொள்ளாமலிருக்கமுடியாது. வேணுமென்று இல்லாவிட்டாலும் ஜெர்மனியானது இராக்கிலுள்ள எண்ணெய் நிலயங்களைக் கொள்ளையடிப்பதற்குப் பதிலாக ருஷ்யா இரானை அடக்க முயலும்பொழுது ஜெர்மனியோடு பகிரங்கமாக யுத்தம் செய்யாமலிருப்பதற்காக இந்தியாவை ராணுவ வெருட்டலுக்குட்படுத்துவதாக ஸ்டாலின் சொல்லலாம். என்னுடைய அபிப்பிராயப்படி ஸ்டாலினுக்கு இரானிலும், ஆப்கானிஸ்தானத்திலும், இந்தியாவிலும் மனதார ஆசையிருக்கிறதென்று நினைக்க முடியாது. ஆகிலும் ஜெர்மனியாகிய மலைப்பாம்பின் குறவளைப்பிடிப்பில் ருஷ்யா முழுவதும் அகப்படாமலிருப்பதற்கு, ஸ்டாலின் தெற்கு பக்கம் படையெடுப்பதன் மூலமாக சுருக்கைக் கழட்டிவிட்டு, அதை ஹிட்லருடன் செய்த ஒப்பந்தப்படி செய்ததாகக் காட்டிவிடுவான்.

## மன்னிப்பு.

இம்மாதிரி பயப்படும்படியான ஒரு பகுதியை நான் எழுதியதைப்பற்றி மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன். நான் சம்பந்தப்பட்டமட்டில் கொஞ்சம் கூட கவலைப்படவில்லை. வஸந்த காலத்தில், சென்ற வருஷம் யுத்தத்தில் வெற்றியடைய முடியாதபொழுது ஜெர்மானியர்களின் அபிப்பிராயங்களை வேறு வழியில் திருப்ப ஜெர்மன் படைகளை வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பும்படி நேரிட்டபொழுது, புத்திசாலிகளெல்லோரும் இந்த வஸந்த காலத்திலும் வேனிற் காலத்திலும் சரித்திரப்போக்கு ரொம்பவும் கடுமையாகயிருக்குமென்று நினைத்தார்கள். எல்லாவிதமான சிக்கல்களும் பீதிகளும் இவைகளிலிருந்து ஏற்பட்ட நஷ்டங்களும் அற்பமான சம்பவங்களென்று நமக்குத் தெரியும். இவை

யெல்லாம் ஒரு பயித்தியக்காரனுடைய பிதற்றல்களென்றே சொல்லலாம். அவனுக்கு மனதில் நிரந்தரமாயும் விருத்தியடைந்து கொண்டுமிருக்கும் பீதியானது உண்டாகிவிட்டது. அதாவது, இவ்வருஷம் நம்மை சமாதானத்துக்கு வரும்படி கட்டாயப்படுத்தினாலொழிய. அவனும், அவனுடைய கக்ஷியாரும் அவனுடைய குரூரமான பரிவாரங்களும், இப்பொழுது அதிவேகமாக முஸ்தீபுகளைத் தயாரித்துவரும் இரண்டு பெரிய ஜனநாயக ஆக்ஷியுள்ள தேசங்களின் உண்மையான கோபத்துக்கும் அளவிடமுடியாத ஐச்வர்யங்களுக்கும் முன்னால் சீர் கேடடைய வேண்டியதுதான் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றிவிட்டது.

## ஹூட் கப்பலின் நஷ்டம்.

சண்டை க்ரூயிஸரான ஹூட் கப்பலைக் கட்டுவதற்கு 60 லக்ஷம் பவுன்கள் செலவாயிருக்கிறது. அது சமுத்திரத்தில் மூழ்கடிக்கப்பட்டுவிட்டது. ஆகிலும் ஒரு வாரத்திற்குள்ளாக யுத்த ஆயுதங்கள் தயாரிப்பதற்காக பிரிடனில் 1,080 லக்ஷம் பவுன்கள் சேமித்து ஹூட் போன்ற 18 கப்பல்கள் கட்டப்போதுமான தனம் வைத்திருக்கிறோம். நாம் அப்படி கட்டப்போவதில்லை. ஏனென்றால் இம்மாதிரியான கப்பல்களை பிரிடிஷ் கடற்படை நிராகரித்துவிட்டது.

சண்டை க்ரூயிஸர்கள் சென்ற மஹா யுத்தத்துக்கு முன்னால்தான் கட்ட ஆரம்பமாயிற்று. இந்த வகுப்புக் கப்பல்களை சண்டைக் கப்பல்கள்போல் தயாரித்து க்ரூயிஸரின் வேகத்தையும் சேர்த்து சமுத்திரங்களில் வியாபாரக் கப்பல்களை மூழ்கடிக்கும் க்ரூயிஸர்களைப் பிடித்து அவைகளை நாசமாக்குவதாக உத்தேசம். ஆகையால் இவைகளில் வேகமாக அசையக்கூடிய பீரங்கி மேடைகளிருக்கின்றன. இவைகளிலிருந்து அநேக குண்டுகள் போடக்கூடும். ஆனால் குண்டுகளை ஏற்றுக்கொள்ள இயல்பற்றவைகள். ஏனென்றால் கவசங்களின் கனத்தைக் குறைத்து வேகத்தை ஜாஸ்தி செய்திருக்கிறது. இது காரணத்தினால் தான் ஜட்லாந்தில் நடந்த யுத்தத்தில் மூன்று சண்டை க்ரூயிஸர்கள் தொடர்ச்சியாய் நஷ்டமாயின.

யந்திரங்களில் உண்டாகியிருக்கும் நவீன மாறுதல்களில் சண்டை க்ரூயிஸர்கள்போல வேகமுள்ள சண்டைக் கப்பல்களைக் கட்ட சாத்தியமுண்டு. ஹூட் கப்பலின் வேகம் 31 நாட். கிங் ஜார்ஜ் V கப்பலின் வேகம் 30 நாட்டுகளுக்கு மேல். ஷார்ன்ஹார்ஸ்ட், நீள்நௌ என்ற ஜெர்மன் சண்டைக் க்ரூயிஸர்கள், கிங் ஜார்ஜ் V கப்பலைவிட சிறியதாகயிருந்தாலும், வாஸ்தவத்தில் வேகமாகச் செல்லக்கூடிய சண்டைக் கப்பல்கள். ஆகிலும் அவைகள் ப்ரெஸ்ட் துறைமுகத்தில் அடைபட்டுக்கிடக்கின்றன.

## விஷியின் அவமானமான நிலை.

துரோக புத்தியுள்ள ஒரு அரசாங்கமானது பிரிடனுக்கு உதவி செய்யும் அமெரிக்காவை நாங்கள் ஜெர்மனியுடன் பூராவும் ஒத்துழைப்போமென்று சொல்லி பயமுறுத்த முயற்சி செய்வதை வாஷிங்டனில் ஹென்ரி ஹே என்பவர்



மழுப்பி விட்டாலும், பிரெஞ்சுக்காரர்களின் கட்டுப்பாட்டுக்குள்பட்ட சில பத்திரிகைகளில் ஸ்பஷ்டமாக வெளியிடப்பட்டிருக்கிறது. லாநோவா டெம்ஸ் என்னும் பத்திரிகையில் விசேஷமான ஒரு பகுதியைப் பாருங்கள். "ஐரோப்பாவை அமெரிக்கா தாக்கினால் ஜெர்மன் அரசாங்கத்தோடு ஒத்துழைக்க பிரான்ஸ் தயாராயிருக்கிறது" என்று. இது தலையங்கத்துக்கு உரிதான விஷயமா? அந்த சுருக்கத்தில் இன்னும் சொல்லப்படுகிறது. "நிலைமை எப்படி இருக்கிறதென்று அமெரிக்கர்களுக்கு நன்றாய்த் தெரியும். ஐக்கிய நாடுகள் ஐரோப்பாவில் தலையிட்டால் நாடுகளின் பாதுகாப்புக்காக ஜெர்மனியுடன் பிரான்ஸ் சேர்ந்துகொள்ளும்".

சரித்திரக் கதைகளில் இம்மாதிரியான ஒரு பெரிய தேசமானது, யுத்த களத்தில் தோல்வியுற்ற பிறகு, இவ்வளவு இழிவாக ஏமாற்றப்பட்டும் தாஜா செய்யப்பட்டும் தன்னுடைய பழைய ஸ்நேகிதனைக் காட்டிக்கொடுத்துமிருந்ததே கிடையாது.

## ஸிரியா.

ஸிரியாவில் ஜெர்மானியர்களின் ஆதிக்கம் வேகமாக அதிகரித்து வருகிறது என்பது இராக்குக்கும் ஸூயஸுக்கும் உள்ள அவசியத்தைக் காட்டிலும் துருக்கி சம்பந்தமாக முக்கியமானதென்று பிரிடிஷ் அரசாங்கத்தார் அறிந்துவிட்டார்களென்று வெளியாகி விட்டது. இந்தப்பகுதியில் இதற்கு முன் பார்ஸியன் வளைகுடாவுக்காவது எகிப்துக்காவது யூப்ரடீஸ், டைக்ரீஸ் நதிகள் வழியாக ஒரு பெரிய ராணுவத்தை அனுப்புவதென்பது கிரீஸிலும், மத்தியதரைக்கடலிலுள்ள கிழக்குத் தீவுகளிலிருக்கும் ஜெர்மானியர்களுக்கு சாத்யமான காரியமில்லை என்று சொல்லியிருக்கிறேன். அவர்களுக்கு சாத்யமானதென்னவென்றால் ஸிரியாவுக்குள் யுத்தமில்லாமல் புகுதலும் பிரெஞ்சுக்காரர்களின் அதிகாரத்துக்கு உட்பட்ட ஸிரியாவையும் லெபானனையும் கைப்பற்றுவதன் மூலம் துருக்கியை நான்கு பக்கங்களிலும் சுற்றி வளைத்துக்கொள்ளுவதும்தான். அப்பொழுது துருக்கியானது ஹிட்லரும் ஸ்டாலினும் ஏற்படுத்தக்கூடிய பந்தோபஸ்துக்கு உட்படவேண்டிய நிலைமைக்கு வந்துவிடும். நான் மதிக்கிற பிரகாரம், இராக்கிலிருந்தும் பாலஸ்தீனத்திலிருந்தும் பேரூத், அலெப்போ, டமாஸ்கஸ் ஆகிய இடங்களுக்கு சாம்ராஜ்ஜியத் துருப்புகள் செல்லுவதிலிருந்து புதிதாக நம்பிக்கை யேற்படக்கூடிய நாடு துருக்கிதான். மற்றவர்களில், முக்கியமாக ஸிரியா தேசத்தவர்களும் சந்தோஷப்படுவார்களென்பதில் விந்தையில்லை. இத்துடன் ஜெனரல் டெண்ட்ஸ் அதிகாரத்துக்குட்பட்ட ஆயிரக்கணக்கான ஐரோப்பிய பிரெஞ்சுத் துருப்புகளுக்கும் புதிய நம்பிக்கையேற்படும்.

## முக்கியமான விஷயம்.

நான் முன்பு சொன்னபடி, துருக்கியையும், இரானையும் அல்லது இரண்டையும் பங்குபோட, அச்சு நாடுகளும் ருஷ்யாவும் சேர்ந்து உழைக்க வெகுகாலம் நீடிக்கக்கூடிய ஏற்பாடுகள் செய்யப் பேச்சுகள் நடந்து வருகின்றன என்று சொல்லுகிறேன். ஆகிலும், ருஷ்யாவைத் தாக்க ஏராளமான முஸ்தீபுகளை ஹிட்லர்

தயார்செய்து வருகிறானென்பது சந்தோஷகரமானது. இவைகளை ஜூன்மாதம் முடிவுக்குள் தயார் செய்துவிடுவான். ருமேனியாவில் துருப்புகள் ஆரவாரத்துடன் போகின்றன. பெர்லினில் யூக்ரேனுக்கும் காகஸஸ் மலைப்பிரதேசத்துக்கும் பொருளாதார முறையிலும் ராஜீய சம்பந்தமாயும் தூது கோஷ்டிகள் தயார் செய்யப்படுகின்றன. இந்த இரண்டு இடங்களுக்கும், லாட்வியாவுக்கும், லித்வேனியாவுக்கும் ஜனங்களின் சார்பாக பொதுக்கமிட்டிகளும் ஏற்பாடாகின்றன. இதிலிருந்து ருஷ்யாவும் ஜெர்மனியும் ஒன்றை ஒன்று எவ்வளவு நோக்கின்றனவென்று கவனியுங்கள். ஆகிலும், ருஷ்யா யுத்தத்துக்குத் தயாராக இல்லாத நிலைமையில், ஸ்டாலின் இழிவான, பொருளாதார ராஜீய ஒத்துழைப்பு வழியைக் கைக்கொள்வதுபோல் பாசாங்கு செய்வான். நாய்களை கடிவாளம் போட்டு நடத்துவதுபோல் நடத்திவரும் முஸோலினி, டார்லான் இவர்களுடன் சேர்ந்து, ஹூணர்களின் தலைவரை பின்பற்றி ஸ்டாலின் செல்லுவானா என்பதை நாம் வருங்காலத்தில்தான் தெரிந்து கொள்ளவேண்டும்.

---

# அடால்ப் ஹிட்லர்(Adolf Hitler)ரைப் பற்றி ஒரு குறிப்பு.

---

**கீழ்க்கண்டவாறு மனோபாவம் இருக்கும் மனுஷ்யனை பின்பற்றி அவனை தெய்வமாக பாவிக்க சம்மதிக்கும் ஒரு தேசத்தின் மனப்பான்மைதான் என்ன—**(பத்திராதிபர்).

"ஹிட்லர் (Hitler) பேசுகிறார்" என்ற புஸ்தகத்தில் அதன் ஆசிரியரான ஹெர்மான் ராஷ்னிக் (Hermann Rauschnigg) ஹிட்லரோடு தான் பேசிக் கொண்டிருந்ததை வெளியிட்டிருக்கிறார்.

ஹிட்லர் (Hitler) சொன்னதாவது, "ஜெர்மன் சமுதாயத்தைப் பாதுகாப்பதற்காக நாம் ஜன சங்கியையை குறைக்கவேண்டும். ஜன சங்கியையைக் குறைப்பதென்றால் சில இனத்தாரையே அடியோடு ஒழிப்பதுதான். நான் அதைச் செய்வதாகக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறேன். பிரபஞ்சமே மிகவும் பொல்லாததாயிருக்கிறது. ஆகையால் நாமும் கொடூரங்கள் செய்யலாம்".

அவர் பேசினது இத்துடன் முடிந்துவிடவில்லை. பின்வரும் அவர் கூறியவைகளை நீங்கள் கூர்மையாக கவனித்தால் அவைகள் எவ்வளவு பயங்கரம் என்பது தெரியவரும்.

அவர் மேலும் சொன்னதாவது "கொஞ்சம்கூட மனதில் பச்சாதாபமில்லாமல் ஜெர்மனியின் வாலிபர்களை கோரமான சண்டைக்கனுப்பி மிகவும் புனிதமான ஜெர்மன் ரத்தம் சிந்தும்படி நான் செய்யும்பொழுது, புழுக்கள் மாதிரி லக்ஷக்கணக்கில் உற்பத்தியாகும் கீழ் இனத்தினரை ஒழிக்க எனக்கு உரிமையுண்டு.



ஒழிப்பதென்றால் அழித்துவிடுவது என்று அர்த்தமல்ல. அந்த இனத்தார்கள் செழிக்காவண்ணம், பிரஜைகளை உற்பத்தி செய்யும் சக்தியை நாளடைவில் மங்கச் செய்துவிடுவது. உதாரணமாக அந்த இனத்தார்களின் ஆண்களையும், பெண்களையும் பல வருஷங்களுக்குப் பிரித்துவைத்துவிடுவேன். போன உலக மஹா யுத்தத்திற்குப்பிறகு குழந்தைகள் பிறப்பது குறைந்துகொண்டே வந்ததை நீங்கள் நினைவில் வைத்திருப்பீர்கள். நீடித்த யுத்தத்தின் விளைவால் ஏற்படும் இந்தக் காரியத்தை நாமேன் நம்முடைய பிரயத்தனத்தால் சில வருஷங்களில் செய்யக்கூடாது. நமக்கு இஷ்டமில்லாத இனத்தார்களை அறவே அழிக்க ரத்தம் சிந்தாமல், கொஞ்சம்கூட சிரமமில்லாத, படிப்படியாகச் செய்யக்கூடிய பல வழிகள் இருக்கின்றன".

அவர் சொல்லியது இவ்வளவுதான். இவ்வளவே போதும் என்று நான் நினைக்கிறேன்.

---

## சமயோஜிதம்

ஹிட்லர்(Hitler)ரிடம் ஹெஸ்(Hess)ஸுக்கு விச்வாஸம் குறைந்துவிட்டது என்று நாம் ஊஹிக்க இடமிருக்கிறது.

ஹெஸ்(Hess)ஸிடம் ஹிட்லர்(Hitler)ருக்கு இருக்கும் அன்போ இதைவிடக்குறைவு.

# அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் யுத்தத்தின் ஸ்திதி.

## தீர்மானமான அனுகூலம்.

## மேற்கு உலகின் பாதுகாப்பு விஷயமாய் ஐக்கிய நாடுகளின் தீர்மானம்.

## இப்பொழுது இருக்கும் ஸ்திதியும் சென்ற யுத்தத்தில் இருந்த ஸ்திதியும்.

(H. C. பெர்ராபீ என்பவர் சமீப காலத்தில் பி. பி. ஸி. ரேடியோ நிலயத்தில் பேசியது.)

அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் உள்ள ஸ்திதியைப் பற்றி ஒருவாரத்துக்கு முன் இருந்ததைக் காட்டிலும் இப்பொழுது நமக்கு தெளிவாகத் தெரியவருகிறது. நீர்மூழ்கிகள் மூலம் நடக்கும் யுத்தத்தைப் பற்றியும், விசேஷமாய் வியாபாரக் கப்பல்களை மூழ்கடிக்கும் நீர்மூழ்கிகளைப் பற்றியும் உள்ள ரகசியங்களை நாம் வெளியிடுவதானால் அதில் ஒரு அபாயம் இருக்கிறது. அதாவது நமது சத்ருக்கள் அவைகளை அறிய ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள்; நாம் அந்த ரகசியங்களை அவர்களுக்கும் சொல்லிவிட்டதாகும்.

"யூ படகுகளை" நாம் எதிர்ப்பதிலும், வழிகாட்டிக் கப்பல்களின் வழியை சாவதானப்படுத்துவதிலும் நமக்கு உண்டாகும் வெற்றிகளெல்லாம் அந்த ரகசியங்கள் சத்ருக்களுக்குத் தெரியாமலிருப்பதால்தான். மேற்கு பிரான்ஸில் உள்ள தளங்களிலிருந்து ஆகாய விமானங்கள் மூலம் வேவுபார்ப்பதால் சென்ற யுத்தத்தில் தெரிந்துகொண்டதைக் காட்டிலும் அவன் இந்த யுத்தத்தில் அதிகமாகத் தெரிந்துகொண்டிருக்கிறான். ஆனால் இன்னமும் அவன் ஒரு அடர்ந்த இருட்டுக்குள்தான் போர் புரிந்து வருகிறான். என்ன நடந்துகொண்டிருக்கிறது, நாம் என்னமாய் இருக்கிறோம் என்று தெரிந்துகொள்ள வேண்டுமென்று நமக்கு சகஜமாய் ஏற்படக்கூடிய ஆசையால் அந்த இருளை விலக்கி, அவனுடைய புதிய முயற்சிகளுக்கு நாம் உதவிசெய்யக்கூடாது.

### ஒரு முக்கியமான நடவடிக்கை.

நாம் சமீபத்தில் ஒரு முக்கியமான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதனால் சத்ருவுக்கு கஷ்டங்கள் அதிகரிக்கும் என்று நாம் எண்ணுகிறோம். அட்லாண்டிக் யுத்தத்திலும் இன்னும் இதர இடங்களிலும் இழக்கப்பட்ட வியாபாரக் கப்பல்களின் புள்ளி விபரங்களை முன்போல் வாரத்துக்கு ஒருதரம் வெளியிடாமல் மாதத்துக்கு ஒரு தரம் தான் வெளியிடவேண்டுமென்று ஆலைத்தனத்தார் தீர்மானித்திருக்கிறார்கள். இதனால் சமாசாரங்கள் அறியும் ஜெர்மன் உத்தியோகஸ்தர்களுக்கு எந்த எந்த இடங்களில் தங்களுடைய எதிர்ப்பு வெற்றிகரமாய் இருக்கிறது என்று தெரிந்துகொள்வது கஷ்டமாய்விடுகிறது. இந்தப் புள்ளி விபரங்களை ஆராய்ந்து, நம்முடைய யுத்த முறைகளில் உள்ள பல குறைவுகளைக் கண்டுபிடித்து அந்த இடத்தில் அதிக பலத்துடன் தாக்குதல் என்பது அவர்களுக்கு கஷ்டத்திலும் கஷ்டமாகிவிடும்.

ஆனால் இந்த உலகத்தின் எல்லா பாகங்களிலும் உள்ள நாம் அடுத்த



தடவை நஷ்டப்புள்ளிகள் அறிவிக்கப்படுவதற்கு முன், இந்த முறையில் ஏற்பட்ட மாறுதலால் இப்பொழுது நமக்கு கொடுக்கப்படும் நஷ்டப்புள்ளி விபரங்கள் ஏழு நாட்களுக்கு அல்ல, ஆனால் 30 நாட்களில் ஏற்பட்ட நஷ்டங்களின் விபரங்கள் ஒரே மொத்தமாய் கொடுக்கப்படுகிறதென்பதை நன்றாய் அறியவேண்டும். அதாவது, இதுவரை நாம் வாரா வாரம் கேட்டுவந்த புள்ளிகளின் கூடுதலைக் காட்டிலும் இப்பொழுது சொல்லப்படும் கூடுதல் அதிகமாகவேதான் இருக்கும்.

இந்த விஷயத்தை நாம் அறிந்துகொள்ளவேண்டியது முக்கியமென்று நான் கருதுகிறேன். இல்லாதவரை இப்பொழுது புதிதாய் கொடுக்கப்படும் மாதாந்திரப்புள்ளி விபரம் நாம் இதுவரை கேட்டுவந்த வாரா வாரப் புள்ளிகளைப்போல் நாலுமடங்கு இருக்குமாகையால், நமக்கு திடீரென்று நஷ்டம் அதிகரித்துவிட்டதென்றும், அட்லாண்டிக்கில், யுத்தத்தின் கதி நமக்கு முற்றிலும் விரோதமாகவே இருக்கிறதென்றும் நினைக்கும் படியான தப்பு அபிப்பிராயங்களுக்கு இடங்கொடுத்துவிடும்.

### யுத்தம் அனுகூலமாய் திரும்பிவிட்டது.

அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் விஷயங்கள் நமக்கு விரோதமாய் இருக்கின்றன என்று சொல்ல இடமில்லை. நமக்கு அனுகூலமாகவே இருக்கின்றன என்று நிச்சயமாய், சாவதானமாய் சொல்லலாம். இதுவரை யுத்தத்தில் நடந்திராத கலவிக்கத்தக்க விஷயம் மேற்கத்திய உலகத்துக்கு ஐக்கிய நாடுகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற ரோந்துதான் கடல் யுத்தத்தின் சரித்திரத்திலேயே இதுவரை இதுபோன்றதை நான் காணமுடியவில்லை.

அது ஜெர்மானியர்களை ஒரு தர்ம சங்கடத்தில் கொண்டுவந்து விட்டுவிட்டது. ஒன்று அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் ஜெர்மானியர்களின் அட்டகாசங்கள் அமெரிக்கன் ரோந்துப்படைகள் தெளிவான எச்சரிக்கையால் தடைப்பட்டு குறையவேண்டும், அல்லது ஜெர்மானியர்கள் இந்த ரோந்து முறையையே அடக்கவேண்டும். தங்கள் யுத்தக் கப்பல்களில் ஒன்றேனும் முழுகடிக்கப்படுமேயானால் அமெரிக்கர்கள் அதைப் பார்த்துக்கொண்டு அதற்கு பதில் செய்யாமல் சும்மா இருந்துவிடுவார்களா?

இந்த மேற்கத்திய ரோந்து முறை நிலத்திலுள்ள அநேகர் நினைத்துக்கொண்டிருப்பதைக்காட்டிலும் மிகப் பெரியது. அநேகர் அதை போலீஸ்காரர்கள் நகர வீதிகளில் கொடுக்கும் ரோந்தை ஒத்ததென்று நினைத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அது ஒரு ரொம்ப பெரிய முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ரோந்துக்குள் அடங்கிய எல்லையின் விஸ்தீரணத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால் அது நம்பக்கூடாத அளவுக்கு எட்டிவிட்டது.

### ஐக்கிய நாடுகளின் ரோந்தின் எல்கை.

வடக்கே வெகு தூரத்திலிருந்து ஆரம்பித்து தெற்கே அட்லாண்டிக் மஹாசமுத்திரம் வரை அதாவது தென்மடலில் சுமார் 10,000 மைல் விஸ்தீரணத்துக்கு இந்த ரோந்து நடத்தப்படுமென்று ரோந்து முறைகளின் தலைமை அதிகாரி அட்மிரல் ஸ்டார்க் உலகத்துக்கு அறிவித்திருக்கிறார். ரோந்துக் கப்பல்களின் உயர்ந்த வேகமான மணிக்கு 15 நாட்டுகள் வீதம் செல்லும்

ஒரு கப்பலுக்கு இந்த ரோந்து எல்லையின் ஒரு கடாசியிலிருந்து மற்றொரு கடாசிக்குச் செல்ல 30 நாள்கள் பிடிக்கின்றன. அந்த ரோந்தின் கிழ மேல் எல்லை வட அமெரிக்காவின் கரைகளிலிருந்து 2,000 மைல்கள் வரை உள்ளது. ஒரு ரோந்து கப்பலுக்கு அவ்வளவு தூரம் செல்வதற்கு 5 நாள்கள் 13 மணிகள் பிடிக்கின்றன.

ஆகையால் இந்த மேற்கத்திய உலகத்தின் ரோந்தானது நகர தெருப் போலீஸ் ரோந்துகள் 8 மணிகளுக்கு ஒரு தரம் மாத்திக்கொள்ளக்கூடியதல்ல. இந்த ரோந்தின் பூரண விஸ்தீர்ணம் 200 லக்ஷம் சதுர மைல்கள் ஆகிறது. இந்த எல்லைக்குள் எவ்விடத்திலேனும் நாஸிக் கொள்ளைக் கப்பல்களோ, நீர் மட்டத்தில் செல்லக்கூடிய க்ரூயிஸர்களோ, வியாபாரக் கப்பல்களாயிருந்து யுத்தக் கப்பல்களாகக் கட்டப்பட்டவைகளோ, "யூ படகு" களோ வெகுதூரத்திலிருந்து வெடிகுண்டுகளை வீசும் கப்பல்களோ இருந்து வேலைசெய்து கொண்டிருக்கலாம். அட்மிரல் ஸ்டார்க் தன்னுடைய வேலைதிட்டத்தில் தென்அட்லாண்டிக் முழுவதையுமே சேர்த்துக்கொண்டு இருக்கிறார் என்பது கவனிக்கத் தக்க விஷயம்.

நேச தேசத்தாருக்காக கடல் மூலம் நடக்கும் ஐக்கிய நாடுகளின் அனுப்புவரவுகள் வட அட்லாண்டிக் மூலம்தான் நடக்கிறதென்று அநேக ஜனங்கள் நினைக்கக்கூடும். ஆனால் எகிப்து துறைமுகங்களிலும் கிழக்கு மத்திய தரைக் கடலிலுள்ள இதர மத்யஸ்த நாடுகளின் துறைமுகத்திலும் வியாபாரம் செய்வதற்காக அமெரிக்க வியாபாரக் கப்பல்கள் செங்கடல் வழியாய் போகலாமென்று சமீபத்தில் பிரஸிடெண்ட் தீர்மானம் செய்திருக்கிறார்.

அங்கு செல்வதற்கு, அமெரிக்கக் கப்பல்கள், அநேகமாய் நன்னம்பிக்கை முனையை (Cape of Good Hope)ச் சுற்றிக்கொண்டு போகலாம். அது அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தின் இருபாகங்களிலும் 7,000 மைல் பிரயாணமாகும். மேல ஆபிரிக்காவின் கரையில் காஸாப்ளாங்கா (Casablanca)வுக்கும் டாக்கருக்கும் (Dakar) மத்தியில் எங்கேயாவது நாஸிகளின் கடல் தளங்கள் அமைக்கப்படுவது சாத்தியம் என்பதையும் நாம் ஒருவரும் கவனிக்காமலிருக்க முடியாது.

## சத்துருவின் நீர்மூழ்கி பலம்.

கடற்படையைத் தெரிந்துகொண்டவனும் டாகரின் முக்கியத்வத்தை கவனிக்காமல் இல்லை. சென்ற யுத்தத்தில் அது நமது காவல் கப்பல்களுடைய சந்திப்பு ஸ்தானமாயிருந்தது. ஜாவா, போனஸ் அயர்ஸ் முதலிய தூர தேசங்களிலிருந்து பிரிடனுக்கு வந்து கொண்டிருந்த கப்பல்கள் நீர்மூழ்கிக் கப்பல்களால் ஆபத்து நேரக்கூடிய இடங்கள் வழியாய் பிரிடனுக்கு சாவதானமாய் வந்து சேருவதற்காக இந்த இடத்தில் ஒருங்கு சேர்க்கப்பட்டன. ஆனால் அப்பொழுது அது பிரிடனுக்கு நண்பர்களாயும் ஐக்கிய நாடுகளுடன் ஒத்துழைத்தவர்களுமான பிரெஞ்சுக்காரர் கையில் இருந்தது. அந்த இடத்தை ஜெர்மானியர்கள் பிடித்துக்கொள்வார்கள் என்று நினைக்க கொஞ்சங்கூட இடமில்லாமல் இருந்தது. இன்றோ, ஸ்வல்பமாயிருந்தாலும் கூட, ஜெர்மானியர்கள். அதைக் கைப்பற்றி விடக்கூடும் என்று நினைக்க ஹேஷ்யங்களிருக்கின்றன.



காவல்படை தெற்கே அண்டார்டிக் சமுத்திரம்வரை வேலை செய்ய வேண்டும் என்று அட்மிரல் ஸ்டார்க் திட்டம் செய்தபோது இதை மனதில் வைத்துக் கொண்டுதான் திட்டங்கள் போட்டார்.

என்னை எல்லோரும் அடிக்கடி கேழ்கும் கேழ்வி ஒன்றுண்டு. அதாவது, அட்லாண்டிக்கில் எவ்வளவு யூ படகுகள் இருக்கின்றனவென்று. இதே கேள்வியை ஜனங்கள் 1917, 1918-லும் கேட்டார்கள். அப்பொழுது அந்த நாவாய சண்டைகளின் தலைமை ஸ்தானமான க்வீன்ஸ் டவுனில் பிரிடிஷாரின் உளவறியும் ஆபீஸில் இருந்தேன். அப்பொழுது இந்த கேழ்விக்குப்பதில் எனக்குத் தெரியும். அப்பொழுது அவைகளின் மொத்த எண்ணிக்கை வெளியிலுள்ளோர் நினைத்திருந்ததைக் காட்டிலும் ரொம்பக் குறைவு.

அந்த யூ படகுகளை த்வம்சம் செய்ய நாம் உபயோகப்படுத்தும் முறைகளைப் பார்த்தால் நூற்றுக்கணக்கான யூ-படகுகள் வேலை செய்து கொண்டிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. ஆனால் உண்மையில் சென்ற யுத்தத்தில் சமுத்திரத்தில் ஒரு மாதத்தில் வேலை செய்த யூ படகுகளின் உயர்ந்த எண்ணிக்கை 31; அதுவும் ஒரே ஒரு தடவைதான் அப்படி நேர்ந்தது. யூ படகுகள் ரொம்ப மும்முரமாக வேலை செய்த காலத்தில் அவைகளின் மாதாந்திர சராசரி எண்ணிக்கை 21.

இந்த யுத்தத்தில் அவைகளின் எண்ணிக்கை எனக்குத் தெரியாது; எனக்குத் தெரிந்திருந்தாலும் அசட்டுத்தனமாய் அதை வெளிவிட்டு விடுவேன் என்று ஒருவரும் எதிர்பார்க்கமாட்டார்கள். ஆனால் சென்ற யுத்தத்தில் செய்ததுபோல் அவ்வளவு யூ படகுகள் கட்ட ஜெர்மனிக்கு முடியவில்லை. தங்களுடைய சொந்த துறைமுகங்களிலிருந்து வெகுதூரத்தில் அவைகளை அவிழ்த்து விடுவதற்கு, அவைகளில் சாமார்த்தியம் வாய்ந்த இதாலியரின் எண்ணிக்கை ரொம்பக் குறைவாயிருக்கிறது. ஜெர்மானியர்களுக்கு அட்லாண்டிக்கில் அவர்கள் செய்யும் உதவியானது லண்டனைத்தாக்க ஆகாயப் படையால் அளிக்கப்படும் உதவிக்கு சமமானது.

## அட்லாண்டிக் யுத்தம்.

இதனால் அட்லாண்டிக் யுத்தம் ரொம்ப பலமானதல்லவென்று நாம் சொல்லவில்லை. அதுபலமானதுதான், பலமாக நடந்துகொண்டேதானிருக்கும். 1939-ம் ௵ இலையுதிர்காலத்தில் யூ படகுகளின் முதல் தாக்குதலை நாம் சமாளித்தோம். அப்பொழுது நாம் வாரத்துக்கு 2 முதல் 4 வரை படகுகளை மூழ்கடித்தோம்.

இன்று ஜெர்மானியர்களின் நஷ்டங்கள் அந்த அளவுக்கிருக்கின்றனவென்று சொல்லிக்கொள்ளப்படவில்லை. அவர்களின் நஷ்டத்தை நாம் ஆரம்பத்திலிருந்த அளவுக்குக் கொண்டுவராதவரை அட்லாண்டிக் யுத்தத்தில் நாம் ஜயித்துக்கொண்டு வருகிறோமென்று சொல்லமுடியாது. ஜனங்களுக்குத் தெரிகிறதைக் காட்டிலும் ரொம்ப அதிகமாகவே காவல் கப்பல்கள் நமக்கு வந்துகொண்டிருக்கின்றன. சமீபத்தில் ஸர்க்காராலேயே சில புள்ளி விபரங்கள் வெளியிடப்பட்டன. அவைகள் கவனிக்கத் தக்கவை. யுத்தம் ஆரம்பித்ததுமுதல் இந்தக் காவல் கப்பல்களின் பாதுகாப்பில் கொண்டுவரப்பட்ட கப்பல்களில் வந்த சாமான்களின் எடை 300

லக்ஷம் டன்கள் என்றும், அவைகளில் பெரும்பாலும் சத்ருக்களால் கொஞ்சங்கூட பீடிக்கப்படாமல் துறைமுகங்களுக்கு வந்து சேர்ந்தனவென்றும் அப்பொழுது அறிவிக்கப்பட்டது. அது ரொம்ப ஸாரமான விஷயம். அதாவது சத்ருக்களின் ஹிம்சையின் ஒரு அம்சம் கூட கண்ணால்கூட பார்க்காமல் எவ்வளவு கப்பல்கள் சமுத்திரங்களில் சஞ்சரிக்கின்றன.

ஆனால், அட்லாண்டிக் யுத்தத்தில் இப்பொழுது கவனிக்க வேண்டிய மற்றொரு அம்சம் உண்டு. கப்பல்கள் (Shipping), போக்குவரத்து சாதனங்கள் (Transport) இவைகள் சம்பந்தமான மந்திரி சபைகளை ஒன்றுபடுத்தி இரண்டுக்கு ஒரே ஆளை ஜவாப்தாரியாகச் செய்வதாய் இப்பொழுது தீர்மானித்திருக்கிறோம். துறைமுகங்களில் சாமான்களை கொண்டுவந்து சேர்ப்பதில் காலதாமதம் ஏற்படுவதாய் வந்த புகார்களை அரசாங்கத்தார் கவனித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள் என்பதும், நமது கரைகளில் உள்ள நாடுகள் சம்பந்தமாய் ஸப்ளைகளில் ஏற்படும் காலதாமதத்தை பரிகரிக்க முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றனவென்பதும் இதிலிருந்து தெரியவருகிறது.

சென்ற யுத்தத்திலும் நமக்கு இதே கஷ்டம் இருந்தது. நமக்கு கப்பல்களின் வேலைகள் சம்பந்தமான சரியான சரித்திரத்தைப் படிக்கும் எவனும் இப்பொழுது சென்ற சில மாதங்களாய் செய்யப்படும் புகார்களைப் போன்ற புகார்கள் முந்தியும் இருந்திருக்கிறதென்பதைக் காணலாம். சரித்திரம் ரொம்ப ஸ்வாரஸ்யமான விஷயம் என்பதை வெகு சிலரே தான் அறிந்திருக்கிறார்களென்பது வருந்தத்தக்க விஷயமல்லவா? முன்பே அநேகர் பிசகுகள் செய்திருக்கிறார்கள் என்பதை நாம் தெரிந்து கொண்டால் நாம் மறுபடியும் அதேபோன்ற பிசகுகளை செயயாமலிருக்கலாமே!

---

## ஸ்வல்ப கால யுத்தம் செய்ய உபாயங்கள்.
## ஹிட்லரின் மௌனமான ஏற்கை.
## தயாரிப்பின் அஸ்திவார மாறுதல்.
## சேனைப்பந்தியத்தின் தளர்வை முடிப்பதுபற்றிய விசாரணை.

ஒரு யுத்த மாணவன் "டெய்லி டெலிகிராப்பில்" எழுதுகிறதாவது :—

யுத்தத்தைப்பற்றி தனியான எண்ணம் நாம் கொள்வது மிகவும் கஷ்டமானதாக இருந்தால் நமக்கு தெரியும் காக்ஷிகளிலிருந்து யுத்தத்தைப்பற்றி நாம் தெரிந்துகொள்ளும் விஷயங்கள் முற்றிலும் தவறுதலாகும். சில தினங்களுக்கு முன், யுத்தத்தில் ஜெர்மன் பக்கத்தைப்பற்றி நாம் தெரிந்துகொள்ள ஹிட்லர் அவகாசம் கொடுத்தார். அப்படி அவர் பேசிய பேச்சானது எதிரிகள் தற்கால யுத்த நிலைமையை எவ்வாறு கருதுகிறார்கள் என்று நாம் தெரிந்துகொள்ள ஏதுவாயுள்ள ஒரு முக்கியமான பேச்சாகும்.



யுத்த களங்களை கவனிக்கும் காலத்து, லிபியாவின் அதிகமான உஷ்ணமோ, தெற்கு அபிஸீனியாவின் மழையோ, அம்பா அலகியின் செல்ல முடியாத பிரதேசங்களோ நம் யுத்த நடவடிக்கைகளை தடைசெய்ய முடியவில்லை, என்று ஹிட்லருக்கு தெரிந்திருக்கும். இராகிலும் ரஷீத் ஆலியின் அட்டகாசத்தை ஒழிக்க நாம் எடுத்திருக்கும் முயற்சிகளுக்கு தடை இருந்தபோதிலும் நமக்கு சாதகமாகவே அங்கு சம்பவங்கள் இருக்கின்றன.

ஆனால் ஹிட்லர் தன் பேச்சில் சொன்ன ஒரு விஷயத்தில் முக்கியமான அம்சங்கள் இருக்கின்றன. இந்த வருஷத்தில் தான் ஜயிப்பதாக சொன்ன வாக்குறுதியை புதுப்பித்துக்கொள்ளாமல், அடுத்த வருஷம் தங்களுக்கு யுத்த முஸ்தீபு இருக்குமென்று உறுதிசொல்லுகிறார். ஆனால் அதற்குப் பிறகு அவருடைய பிரதி வாசகனே தங்களுக்கு ஜயம் நிச்சயம் என்றும் அது எப்பொழுது ஏற்படும் என்பது பற்றிய பிரச்னை அவசியமில்லை என்றும் சொன்னார்.

## லாபகரமாக இருக்கவேண்டுமானால் சுருக்கமானதாக இருக்கவேண்டும்.

யுத்தத்தைப்பற்றி எழுதும் யாரும் நீண்டகால யுத்தம் பயனுள்ளதாக இருக்கும் என்று சொன்னதில்லை. ஆனாலோ அன்னார்களில் முக்கியமானவர்கள் யுத்தம் லாபகரமாக இருக்கவேண்டுமானால் சுருக்கமானதாக இருக்கவேண்டும் என்று சந்தேகமன்னியில் சொல்லி இருக்கிறார்கள். போச் (Foch) என்பவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால் "யுத்தம் உக்கிரமாகவும் தீவிரமாகவும் நடத்தப்பட்டு முடிவை சீக்கிரம் அடையவேண்டும். இல்லையேல் அது முடிவற்றதாக இருக்கும்". எவ்விதமான முயற்சிகளும், தந்திரங்களும், கோரமும் உபயோகித்தும் தங்களுடைய உபாயங்கள் தவறிவிட்டன என்று யூகிக்கும் வகையாக ஹிட்லர் சொல்லுகிறார். நாம் யுத்த தளவாடங்கள் செய்வதையும் நம் அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தின் போக்குவரத்தையும் அழிப்பதில் தான் கொஞ்சம்கூட ஜயம் அடைய முடியவில்லை என்பதை ஹிட்லர் ஒளிக்கமுடியாது. இக்காரணத்தால் நாம் யுத்த தளவாடங்கள் சேமிப்பது பலப்படுகிறது. எதிரிகளுடைய கொடுமைக்கும் உபாயங்களுக்கும் நாம் ஆளாகவில்லை. இதனால் நமக்கு ஆதாயம் என்னவென்றால் நம்முடையவும், யுனைடெட் ஸ்டேட்ஸ் உடையவும் யுத்த தளவாடங்களை பூராவாக உபயோகிக்க நமக்கு அவகாசமிருக்கிறது.

மேலே சொன்ன முடிவை எதிரி தவிர்த்தல் முடியாது. அது சரியானதாக இருந்தால் அது ஒரு முக்கியமான சம்பவமாகும். ஏனென்றால் நாம் யுத்தத்தின் ஒரு பாகத்தில் வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதற்கு அது ஒரு ஒப்புதலாக இருக்கும்.

## ஜெர்மானியர்கள் என்ன செய்ய எத்தனித்தார்கள்.

இதுவரை பிரிடிஷ் சேனைபத்திய திறனே பிரபலமாக வெற்றியாக இருந்திருக்கிறது. ஜெர்மானியர்களுக்கு ஒவ்வொரு வழியிலும் சாதகமான நிலைமையிலேயே நாம் அவர்களுடன் யுத்தம் செய்திருக்கிறோம். அலைகளில் அவர்கள்,

அபஜயம் அடைந்தார்கள். இப்பொழுது நமக்கு சாதகமான வகையில் அவர்கள் நம்முடன் யுத்தம் செய்ய நேரிட்டிருக்கிறது.

நம்முடைய ஆகாயப்படையின் தாக்கல் வர வர பயங்கரமாகவும் பலமானதாகவும் இருக்கிறது. அவர்கள் நமக்கு நஷ்டம் விளைவிக்கக்கூடுமானாலும், நாம் திருப்பி நஷ்டம் விளைவிக்கும் காலம் சமீபித்து வருகிறது. அமெரிக்க உதவியினால் லாபம் அடைய நாம் இது பரியந்தம் எதிர்பார்த்திருந்தோம். ஹிட்லருடைய கபடமான, விஸ்தரிக்க முடியாத பேச்சிலிருந்து மேலே சொன்ன விஷயம் ஜெர்மனியால் ஒப்புக்கொள்ளப்படுகிறது என்று நான் விவாதம் செய்து இருந்த விஷயத்தை உறுதியாகச் சொல்லவில்லை.

இதனால் என்ன தெரிகிறது? ஜெர்மானியர்கள் நம் பாதுகாப்பையும், சுயேச்சையையும் அழிக்க பயமுறுத்துவது நாம் இதுவரை எதிர்த்து போராடியதில் பாரமும் ஆழ்ந்த கருத்துள்ளதுமாகும். அவர்களுடைய பயங்கரமான செய்கைகள் அவர்கள் ஐரோப்பாவில் ஜயித்த நாடுகளிலும் அவ்வளவு தெரியாது. ஆனால் அவர்கள் சென்ற வேனிற்காலத்தில் இன்னும் ஒரு பருவ கால யுத்தம் அவசியம் என்றும் அதற்காக ஐரோப்பாவில் யுத்த தளவாட தயாரிப்புகள் செய்யவேண்டுமென்று உடனே தெரிந்துகொண்டதானது அவர்களுடைய அட்டகாசத்தை நன்கு விளக்கும்.

## ருஷ்ய-ஜெர்மனி.

ஆகையால் ஹிட்லர் ஒரு நீண்ட யுத்தத்துக்கு தயார் செய்து வருகிறார் அதற்கு ஆகாரமும் எண்ணெய் வகையறுக்களும் ஒரு திசையிலிருந்து கிடைக்க வேண்டுமென்று நன்கு தெரியும். ருஷ்யா அவைகளை ஸப்ளை செய்ய ஹிட்லர் நாடுவார். இல்லையேல் ஜெர்மானிய மெஷின்கள் ஆகாரமற்றதாக அழிந்து போய்விடும்.

அவ்விதம் ஸப்ளை செய்வதென்றால், ருஷ்யா தானாகவே அவர்கள் எடுத்துக் கொள்வதற்கு ஒப்புக்கொள்ளவேண்டும், அல்லது ஜெர்மானியர்கள் அந்த இரண்டு தேசங்களையும் பலாத்காரமாக தன் வசப்படுத்திக்கொள்ளவேண்டும். இந்த இரண்டில் எது அசூசியானது என்று ருஷ்யாவே தெரிந்துகொள்ளவேண்டும். மேலே சொன்னதில் இரண்டாவது அல்லது இரண்டும் ருஷ்யா ஒப்புக்கொள்ளத் தக்கதில்லையானால் பிறகு யுத்தம் சம்பவிக்கும். ஜெர்மனி தனக்குத் தேவையானதை சீக்கிரமாகவும், சுலபமாகவும் தேடிக்கொள்ளவேண்டுமென்றாலும் ஜெர்மானிய படைவீரர்களுக்கு ருஷ்யாவுடன் போர்புரிவது ஒரு சமுத்திரத்துடன் போர்புரிவதை ஒக்கும் என்று தெரியும்.

பிரதி கிருத்தியங்கள் மனதில் பதிந்திருக்க வேண்டுமென்பது யுத்த விதியாகும். சமீப சம்பவங்களிலிருந்து யுத்த உபாயங்கள் படியுந்தன்மையாக இருக்கவேண்டும் என்று சேனாதிபதிகளுக்கு நன்கு தெரிந்திருக்கும். ஜெர்மானியர்கள் இந்த படிப்பினையைக் கற்றுக்கொண்டார்கள் என்று நமக்கு நன்கு



தெரியும். ஜனரல் ரோமல் என்பவர் (General Rommel) பிரிடிஷ் படையை மெர்ஸா பிரகா (Mersa Brega) என்ற இடத்தில் தோல்வி அடையச் செய்து பிறகு ஸோலம் (Sollum) என்ற இடத்துக்கு நேரே படையை செலுத்தியது அவருடைய சமயோஜித தைரியத்திற்கு ஒரு அறிகுறியாக இருக்கும்.

## உத்தேச உபாயங்களை எதிர்த்தல்.

வேறு இடத்தில் தாக்க மார்க்கம் இருப்பின் அங்கே ஜெர்மனி நிச்சயமாக யுத்தம் செய்யும்—ஸூயெஸ் கெனாலை மேற்கு பக்கம் இருந்து தாக்கி கபளீகரம் செய்ய ஜெர்மனி எத்தனிக்கும் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. மேலும் இராக்கை அவர்கள் தாக்குவதை சொல்பகாலத்தில் நாம் எதிர்த்து அவர்களை துரத்திவிட்டால் ஜெர்மனியர் ஆகாய மார்க்கமாக அங்கு யுத்த தளவாடங்களை சேமித்துக்கொண்டு அங்கிருந்து எதிர்க்க ஆரம்பிப்பார்கள். ஏனென்றால் இராக்கில் யுத்த சாதகம் அதிகமில்லாவிட்டாலும் அங்கிருந்து பல திசைகளிலும் நமக்கு கஷ்டங்களை உண்டுபண்ணலாம்.

நாலு திசைகளிலும் நாம் அவர்களுடன் கை கலக்க வேண்டியது அவசியமாக இருக்கும். ஆனால் இப்பொழுது அந்த இடம் நமக்கு ஹிம்சைகள் கொடுக்கக் கூடிய விரோதிக்கு பிரயோஜனமுள்ளதாக இருக்காது.

நாம் பாதுகாக்க வேண்டிய க்ரேட்டை ஜெர்மனி பக்கம் விடுவது அபாயகரமானதாக முடியும். எதிரி ஸிரியாவை நேரில் தாக்குவதென்றால் ஸைப்ரஸூம் முக்கோண வடிவமுள்ளதும் யுத்த பலம் வாய்ந்ததுமான அலெக்ஸாண்டிரியாவும் தடையாக இருக்கும். கஷ்டங்கள் இருந்தபோதிலும் கெனாலின் வலது பக்கம் எதிரி தாக்காமலிருப்பான் என்று நாம் நம்பமுடியாது. விஷியிலும், மாட்ரிட்டிலும் படை பெயர்ச்சி இருக்கிறது. ஆனால் இவைகளில் பலன் ஒன்றுமில்லை.

ஆகையால் எதிரி படையெடுக்கலாம் என்று நினைக்க காரணம் இருக்கிறது. அதுவும் சமீபத்தில் நிலைமை சாதகமாக இருக்கும் பக்ஷத்தில் ஹிட்லர் படையெடுப்பதற்கு அனுசரணையாக இருக்கும். சந்தர்ப்பம் வாய்க்கும் பக்ஷத்தில் ஹிட்லர், (Schlieffen) சொல்லுகிற "சேனாதிபத்திய தளர்வி" லிருந்து தப்பித்துக் கொள்ள எத்தனிப்பார் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்கமுடியாது.

(Schlieffen) சொல்கிற சொல்ப கால லாபகரமான யுத்தத்தை கொடூரமாகவும் நிச்சயத்துடனும் ஹிட்லர் எங்கு பொறுதுவார் என்று துலங்கவில்லை. ஹிட்லருடை யுத்தக் கஷ்டங்கள் எல்லாம் நம்மைவிட பெரிதாக இருக்கின்றன. இது அவர்கள் ஒப்புவதாகவுமிருக்கிறது.

## ஸிரியாவின் நிலை நடஸ்தமாகயில்லை.

## பிரிடிஷ் விமானப்படையின் வெடிகுண்டு வீச்சைப்பற்றி அபிப்பிராய பேதங்கள்.

## பீரட் துறைமுகத்தில் சுயேச்சைப் பிரெஞ்சுக்காரர்களின் துண்டுப் பிரசுரங்கள் போடப்பட்டன.

*[பாலஸ்தீனம் லெபானன் எல்லைச்சரகத்தில் நாகுரா என்னுமிடத்திலிருக்கும் டெயிலி டெலகிராபின் விசேஷ நிருபரான ஆர்தர் மார்டன் மேமீ 19-ம் தேதியன்று தந்தி மூலம் அறிவித்தது].*

இன்றிரவு கெயிரோவிலிருந்து கிடைத்த விளம்பரத்திலிருந்து இராக்குக்குச் செல்லுவதற்காக வழியிலுள்ள ஸிரியாவிலுள்ள மூன்று விமான நிலயங்களை— அதாவது, பீரட்டுக்கு கிழக்கே ஏழு மைலிலிருக்கும் ரயாக், வடகிழக்கில் 160 மைல் தூரத்திலிருக்கும் பால்மைரா, தென் கிழக்கில் 60 மைல் தூரத்திலிருக்கும் டமாஸ்கஸ்—ஜெர்மானியர் உபயோகப்படுத்துவதை பிரிடிஷ் விமானப்படை பலமாகத் தாக்கி வருகிறது.

பல்மைராவில் துருப்புகள் ஏற்றிச்செல்லும் ஜெர்மன் விமானமும் இன்னும் அநேக விமானங்களும் நாசமாக்கப்பட்டன. டமாஸ்கஸிலும், ரயாக்கிலும் அநேக விமானங்கள் மீது வெடிகுண்டுகளும் யந்தர பீரங்கிகளிலிருந்து குண்டுகளும் போடப்பட்டன.

ஸிரியாவிலிருந்து பாலஸ்தீனத்துக்கு வந்த பிரயாணிகள், ரயாக்கில் இராக்குக்கு டாங்கிகள் ஏற்றச்செல்லும் மூன்று ரயில் வண்டிகளில் குண்டுகளை பிரிடிஷ் வெடிகுண்டு வீசும் விமானங்கள் போட்டனவென்று தகவல் கொடுத்தார்கள். எல்லைச்சரகங்களில் சதா காலமும் என்ன நேரிடுமோ என்று எதிர் பார்த்துவரப் படுகிறது. ஸிரியாவிலுள்ள முக்கியமான பிரெஞ்சு சைனியமானது அப்புறப்படுத்தப்பட்டுவிடப்பட்டது. மொராக்கோவைச் சேர்ந்த துருப்புகள் ரோந்து சுற்றிவருகிறார்கள்.

பிரிடிஷாரும், அமெரிக்கர்களும், பாலஸ்தீனியர்களும் தங்கள் மந்திரிகளின் யோசனையின் பிரகாரம் ஸிரியாவை விட்டு அகலுகிறார்கள்.

நான் இந்த எல்லைச்சரகத்திற்கு வந்து மத்தியதரைக்கடலை நோக்கிக்கொண்டு இருக்கும் உன்னதமான ஒரு மலையின் உச்சியிலிருந்து கவனித்தபொழுது என் முன்னால் ஆச்சரியகரமான ஒரு தோற்றம் புலப்பட்டது.

அலெக்ஸாண்டிரியாவிலிருக்கும் பிரெஞ்சுக் சண்டைக் கப்பல்களிலுள்ள மாலுமிகள் தங்கள் வேலையின் காலம் முடிந்தவுடன் நகரத்தைவிட்டு மோட்டார்களில் புறப்பட்டனர். அவர்கள் பெட்டிகள் கொண்டுபோனார்கள். இவைகளில் பிரான்ஸிலுள்ள லேனுக்கும் பினிஸ்டெருக்கும் நாஸிகள் சாமான்கள் அனுப்பியிருந்தார்கள். இவைகளைக் கவனித்தால் முற்றுகையானது வாஸ்தவமாக உபயோகமுள்ளதாக நடத்தப்பட்டு வருகிறதா என்று கூட நினைக்கக்கூடும்;



ஸிரியாவிலிருந்தும் தொடர்ச்சியாக அநேக மோட்டார்கள் போய்க்கொண்டு இருந்தன. இரண்டு நாட்களாக இம்மாதிரி போய்க்கொண்டிருக்கின்றனவென்றும் இவைகளில் எல்லாவிதமான அந்நிய நாட்டு வாசிகளும் வருங்காலத்தில் நேரிடக் கூடியவைக்கு பயந்து ஓடுவதாகவும் உத்தியோகஸ்தர்கள் என்னிடம் அறிவித்தார்கள்.

இவர்களில் அநேக பாலஸ்தீனியர்களும், துருக்கியர்களும் எகிப்தைச் சேர்ந்த படிப்பாளிகளும் சில அமெரிக்கர்களுமிருந்தார்கள்.

ஸிரியாவில் எங்கேயும் நிலைமையானது நடஸ்தமாக இல்லையென்று பிரயாணிகள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். பிரிடிஷ் விமானப்படையின் குண்டு வீச்சைப் பற்றி அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தளகர்த்தர் டென்ட்ஸ் வெளியிட்ட பிரசுரமானது அநேக ஜனங்களுக்கு திருப்திகரமாகயில்லை. ஆகிலும் பகிரங்கமாக அபிப்பிராயங்களை வெளியிட ஜனங்கள் சங்கோஜப்படுகிறார்கள்.

தளகர்த்தர் காட்ரூவின் கையொப்பமிட்ட சுயேச்சைப் பிரெஞ்சு துண்டுப் பிரசுரங்கள் பீரட் துறைமுகத்தில் போடப்பட்டன. அவைகளில் நாஸிகள் ஸிரியாவில் புகுர ஆரம்பித்துவிட்டார்களென்றும், சமாதான உடன்படிக்கையின் ஷரத்துக்களை அவர்கள் மீறி விட்டார்களென்றும், சொல்லப்பட்டிருக்கிறது. இதிலிருந்து வாலிப உத்தியோகஸ்தர்களுக்கு விசேஷமான உணர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது. தங்களுடைய பெரியோர்கள் தங்களை ஜெர்மனியிடம் காட்டிக் கொடுத்து வருகிறார்களென்று பயந்து அச்சிறுவர்கள் மனம் நிலைகொண்டிருக்கவில்லை.

இரண்டு பிரெஞ்சு விமானங்கள் நாகுரா வழியாக கீழாகப்பறந்து பாலஸ்தீனத்துக்குத் தப்பி ஓடிவிட்டன. இது நல்ல சூசகம்.

நான் சந்தித்துப் பேசியவர்களெல்லாம் பிரெஞ்சு அதிகாரத்துக்குள்பட்ட ராஜ்ஜியத்தை ஜெர்மானியர் ஆக்கிரமணம் செய்யாதபடி பிரிடன் செய்து விடுமென்று எங்கு பார்த்தாலும் நம்பிக்கை பரவியிருக்கிறதென்று சொல்லுகிறார்கள்.

## பீரட்டுக்குப் போகும் ரஸ்தாவில் கண்ணிகள்.

பீரட்டுக்குக் கடற்கரை வழியாகச் செல்லும் ரஸ்தாவில் கண்ணிகள் போடப்பட்டிருக்கின்றன. தூக்குத் தூக்கான சில துருப்புகளைத் தவிர மற்றவை எல்லாம் மலைப்பிரதேசங்களுக்குக் கொண்டுபோகப்பட்டுவிட்டன. அங்கே அவர்கள் குழிகள் தோண்டுவதும் பீரங்கிகள் வைப்புஸ்தானங்களை ஏற்பாடு செய்வதுமாக வேலைசெய்கிறார்கள்.

பிரிடன் பக்கத்திலும் சுறுசுறுப்பு உண்டாகியிருக்கிறது. ஆகாயத்திலும், தரைப் பிரதேசத்திலும் தீவிரமான கவனிப்பு இடைவிடாது நடந்துவருகிறது.

ஜெர்மனி, அல்பேனியா சிக்கலிலிருந்து இதாலியத் துருப்புகளை விடுவித்ததிலிருந்து ஒரு ஆச்சரியகரமான பிரயோஜனம் ஏற்பட்டிருப்பதாக பிரயாணிகள்

அறிவிக்கிறார்கள். அதாவது, இதாலிய சமாதான தூது கோஷ்டியார்கள், ஜனங்களின் விரோதத்தினால், இது வரையில் பொது ஜனங்களைப்போல் ஆடை அணிந்திருந்தவர்கள், இப்பொழுது ஆடம்பரமாக உடுப்புகள் போட்டுக்கொண்டு ரொம்பவும் கர்வம் கொண்டவர்களாக அங்குமிங்கும் உலாவுகிறார்கள்.

துருக்கியிலிருந்து வரும் ஒவ்வொரு ரயில் வண்டியிலும் நூற்றுக்கணக்கான ஜெர்மானியர்கள், பொது ஜனங்களின் உடைதரித்துக்கொண்டு, அலெப்போ அல்லது டமாஸ்கஸுக்குச் செல்லும் உத்தேசத்துடன் வந்துகொண்டிருக்கிறார்கள்.

பீரட்டில் லெபானனில் துருப்புகளை சேமிப்பதன் மூலம் ஜெர்மானியர்களின் ஆக்கிரமணத்தை எதிர்ப்பதற்காக ஏற்பாடுகள் நடந்துவருகின்றன.

---

## ஜெர்மனி துருக்கிக்கு கஷ்டம் உண்டுபண்ண முயலுகிறது.
## ஜெர்மானியர்களை ஸிரியாவுக்குள் புகும்படி விஷி அனுமதிக்குமா?
## மத்திய கிழக்குப் பிரதேசத்தில் நேச தேசத்தாரின் வலுவான படைகள்.
## பிரிடிஷாருக்கு ஏற்பட்ட இரண்டு முக்கியமான வெற்றிகள்.

(யார்க்ஷயர் போஸ்டு பத்திரிகையின் ராணுவ நிருபர் எழுதியது.)

ஜெர்மனிக்கு துருக்கி சம்பந்தமாக நல்ல எண்ணங்கள் தானிருக்கிறதென்று துருக்கி நம்பும்படியாகச்செய்ய ஜெர்மனி விடாது முயற்சி செய்துவருகிறது. அத்துடன் ஐரோப்பா கண்டத்திலிருந்து அதை எடுத்துவிட்டு ஆசியா கண்டத்தின் ஒரு பாகமாகச் செய்யத் தருணம் வாய்க்கும் வரையில் துருக்கியைச் சும்மாவிருக்கும்படிக்கும் வற்புறுத்துகிறது.

பால்கன் நாடுகளின் ஒப்பந்தத்துக்கு ஆதிபுருஷரான, துருக்கி, கடைசி காலம் வரையிலும் நடுநிலைமை வகித்து வந்துவிட்டது. துருக்கியின் பரராஷ்டிர மந்திரியின் அபிப்பிராயப்படி துருக்கியின் நடுநிலையானது ஜெர்மனியின் சூழ்ச்சிகளுக்கு இணங்காது என்றும் அவைகளை நிராகரித்து நிலைநிற்குமென்றும் நம்பப்படுகிறது. பல்கேரியாவின் எல்லைகளைத் தாண்டி துருக்கிக்குள் ஜெர்மனி புகுந்தால் துருக்கியர்கள் கடைசிவரையில் யுத்தம் செய்தே தீருவார்கள்.

ஆகிலும் இதுகாலம் கடந்ததாக ஆகிவிடும். ஏனென்றால் ஹிட்லர் துருக்கியையும் பிரிடிஷ் படைகளையும் ஒன்று சேரவிடாதபடி செய்து துண்டாக்கி நமக்கு விலாப் பக்கத்து அரணாகயிருக்கும் ஒரு நிலையை அழித்துவிட ஏற்பாடுசெய்து வருகிறான்.



ஸிரியாவைக் கைப்பற்றிக்கொண்டு அதன் மூலம் துருக்கிக்கும் மத்திய கிழக்கிலுள்ள பிரிடிஷ் சைனியத்திற்கும் மத்தியில் ஒரு ஸ்தானத்தை பலப்படுத்துவதுதான் ஹிட்லருடைய முயற்சியென்று வெளிப்படையாய்த் தெரியவருகிறது. ஈஜியன் கடலிலுள்ள தீவுகளை ஆக்கிரமித்ததும் இராக்கில் ஏற்பட்ட கலகமும் இதன் முதல் நிகழ்ச்சிகள். ரஷீத் ஆலிக்கு உதவிகொண்டுபோக ஸிரியாவில் மார்க்கம் வேண்டுமென்று விஷி அரசாங்கத்தாரை ஜெர்மனி கேழ்க்கக்கூடும். மற்ற அம்சங்களில் கடற்படை டார்லானுக்கு சகாயம் செய்திருப்பதாகச் சொல்லுவதெல்லாம் ஸிரியாவில் பிரவேசிப்பதற்காக ஜெர்மானியர்கள் கொடுத்த லஞ்சம் என்று சொல்லலாம்.

துருக்கியின் சம்பந்தமில்லாதபடி நமது விலாப்பக்கங்களில் புகுந்து விடுவது ஒரு முக்கியமான விளையாட்டுத்தான். ஆகிலும் இராக்கில் ஜெர்மானியர்களின் வருகையை நாம் எதிர்பார்த்து விட்டோம். ஸிரியாப் பிரதேசமானது ஜெர்மானியர்கள் கருதியபடி, நாஸிகள் நோக்கங்களுக்கு உள்பட்டதாகக் காணப்படவில்லை.

ஜெர்மனியானது தன் வசமுள்ள சேனையின் முக்கிய பாகத்தை பால்கன் நாடுகளில் சேமித்து அதைக்கொண்டு ஆசியா மைனருக்குள் புகுந்து, எண்ணெய் நிலயங்களைக் கைப்பற்றுவது, எகிப்திலுள்ள தற்காப்புகளுக்குப் பின்பக்கம் அடைவது, என்ற இரண்டு நோக்கங்களையும் பூர்த்திசெய்து விடலாமென்று நினைத்தது.

ஆகிலும் படைகளின் சாமான்யம் இப்பொழுது சரிபட்டுவருகிறது. திரு. சர்ச்சில் சமீபக் கிழக்கு நாடுகளில் 5 லக்ஷம் துருப்புகள் இருக்கின்றன என்று சொல்லுகிறார். இதிலிருந்து வட ஆபிரிக்காவிலும் மற்ற இடங்களிலும் சிறிய படையை வைத்துக்கொண்டு வேலைசெய்வது அற்றுவிட்டதென்று வெளியாகிறது.

கிழக்கு ஆபிரிக்காவிலிருந்து மனிதர்களும் யந்திரங்களும் சரளமாக வந்துகொண்டிருப்பதினின்றும் யுத்தரங்கம் தயாரிக்கப்பட்டுவருகிறது. கௌரவ நியாயங்களைப் பார்க்கவேண்டிய அவசியம் இனி ஏற்படாது. நம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது தான் முக்கியம். கௌரவ புத்திக்கு எவ்வளவு மதிப்பு ஏற்பட்டதென்று கிரீஸிலும், இதியோபியாவிலும் நாம் நன்றாய் அறிந்துவிட்டோம்.

இனிமேல் வெடிமருந்துகளுக்குள் ஏற்படும் ஒரு யுத்தமாக முடியப்போகிறது. நமக்குத் தேவையான முஸ்தீப்புகளை உலகத்திலேயே பெரிய தொழிற்சாலைகளுள்ள நாடு தயாரித்து வருகிறது. கொஞ்சம் கொஞ்சமாக நமக்கு உதவிசெய்ய யுத்த முறையில் பூர்ணமாக உற்பத்திசெய்ய ஐக்கிய நாடுகள் தயாராகி வருகின்றன. இம் மாதிரியான தொழிற்சாலைகளின் உற்பத்தியால் ஏற்படக்கூடிய யுத்தத்துக்கும் வாஸ்தவமான யுத்தத்திற்கும் அதிக வித்தியாசங்களில்லை.

சிறிது வித்தியாசமும் கொஞ்ச நாளில் அழிந்துபோய்விட்டு அமெரிக்காவானது யுத்தத்திலேயே இறங்கிவிடும்.

ஐக்கிய நாடுகளின் ஜனங்கள் இம்மாதிரி ஏற்படக்கூடிய ஒரு இயல்பை தைரியமாக எதிர் பார்க்கிறார்கள். ஏனென்றால் அச்சு வல்லரசர்களுக்கு எதிராக ஏராளமாக் முஸ்தீப்பு உற்பத்திசெய்வது என்பதானது கஷ்டங்களோடு கூடிய ஒரு தீவிரமான கொள்கை என்று அமெரிக்காவுக்குத் தெரியும்.

அமெரிக்காவின் சைனியமானது ஒரு பெரிய யுத்தம் செய்யத் தயாராக வில்லை. ஆனாலும் அதன் விமானப்படையும் கடற்படையும் தயாராகவிருக்கின்றன. இவைகள்தான் ஐக்கிய நாடுகளின் யுத்தத்திற்கு வேண்டிய முக்கிய கருவிகள்.

துணைக் கப்பல்களோடு உண்டாகும் ஜெர்மன் எதிர்ப்புகளில் வெற்றிபெரும் படியாக யுத்தம் செய்ய அமெரிக்கக் கடற்படைக்குப் போதுமான வலிமையுண்டு மற்றொரு மார்க்கத்தில் தொந்தரவு விளைவிக்க ஜப்பான் முயன்றாலும் அதையும் அடக்கியாளப் போதுமான சக்தியும் பெற்றிருக்கிறது.

நம்முடைய ஜனங்களுடையவும் அந்நிய நாட்டு ஸ்தாபனங்களிலுள்ளவர்களுடையவும் அபிப்பிராயம் என்னவென்றால், சென்ற வருஷம் பிரிடனுக்காக நடந்த யுத்தத்தில் நமது தீவைச் சுற்றிலுமுள்ள ஜெர்மனியின் முக்கியமான எண்ணம் பலிக்கவில்லை. இதை விட்டுவிட்டு ஹிட்லர் தென் கிழக்குப் பிராந்தியங்களில் மற்றொரு நோக்கத்துடன் யுத்தம் செய்ய ஆரம்பித்துவிட்டான். இங்கேயும் அவனுக்கு முடிவான ஒரு ஜயம் ஏற்படப்போகிறதில்லை.

இந்தப் பிராந்தியத்திலும் ஹிட்லருக்கு வெற்றியேற்பட்டாலும், அடுத்த வருஷம் மேற்குப் பிரதேசத்தில் பிரிடன், அமெரிக்கா இவ்விரண்டு தேசங்களையும் ஜயிக்கவேண்டிய ஒரு பெரிய வேலை இருக்கிறது. ஒரு வருஷத்திற்குள் நம் இரு தேசங்களின் வலிமையானது உன்னத ஸ்திதியை அடைந்துவிடும். ஆகிலும் சாமர்த்தியசாலிகளில் சிலர், சமீபக் கிழக்கில் பிரிடனுக்கு வெற்றி ஏற்பட்டால் ஜெர்மனியின் வலிமையும் ஜெர்மனியின் சைனியங்களின் மனோதைரியமும் மீள முடியாதபடி அழிந்துவிடுமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஏராளமான நாடுகளில் விபாகம் செய்திருப்பதினின்றும் ஹிட்லருக்கு தன்னுடைய பலத்தை அதிகப்படுத்தவோ ஒன்று கூட்டவோ சாத்தியப்படாது. ஆனால் கிழக்குப் போர்முனையில் ஒரு பெரிய சேனையும், நம்முடைய தீவில் எதிர்ப்பு ஏற்பட்டால் அதைத் தடுக்க ஒரு பெரிய சேனையும் வைத்துக்கொண்டு நம்முடைய வலிமையை அபிவிருத்தி செய்வதற்கு நமக்கு சாத்தியமுண்டு. அவ்விதமாகவும் செய்து விடுவோம்.

நமக்கு அவகேடுகள் ஏற்பட்டிருக்கின்றன. நாமும் இரண்டு பெரிய வெற்றிகள் பெற்றிருக்கிறோம். இவைகள் நம்முடைய வருங்கால யுத்தப் போக்கை வலுப்படுத்தக்கூடியவை—அதாவது ஜெர்மனியின் விமானப்படையை தோற்கடித்துவிட்டோம். இதாலியின் பலத்தை நசுக்கிவிட்டோம்.



## ஆங்கிலோ—ருஷ்ய உறவுகள்.

## இருவர்களுடைய நலன்களும் ஒன்றுதான்.

## இந்த இரண்டு தேசங்களிடையே நட்பு ஏற்படுவதின் அவசியம்.

[ஸர் பெர்னார்டு பாரீஸ்(Sir Bernard Pares)என்பவர் பின்வரும் கட்டுரையை எழுதினவர். மான்செஸ்டர் கார்டியன் (Manchester Guardian) என்னும் இங்கிலீஷ் பத்திரிகையில் வெளியாகி இருக்கிறது.]

ருஷ்யாவில் பல காரியங்கள் நிகழ்ந்தேறுகின்றன. அவைகள் இன்னும் பின்னால் நடக்கப்போகும் பல காரியங்களுக்கு அறிகுறி. ருஷ்ய—ஜெர்மன் எல்லையில் தடபுடலாக தற்காப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அந்த எல்லையின் இருபுறங்களிலும் அந்தந்த தேசங்களின் சைனியங்கள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. இம்மாதிரி ஏற்பாடுகள் நார்வே (Norway)யின் வடக்குக் கோடியிலிருந்து செய்யப்படுகின்றன. ஜெர்மனி, எவ்வளவு சாமர்த்தியமாக மறுத்தாலும், பின்லாந்தி (Finland)ல் ஜெர்மன் சைனியங்களின் இரண்டு அணிகள் இருப்பதாக நம்பத்தகுந்த இடங்களிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது.

லிதுவேனியா (Lithuania)வில் இரு தேசங்களுக்கும் பகைமை அதிகமாயிருப்பது தெரியும். ஆனால் ருஷ்யாவின் சைனியத்தின் பெரும்பாகம் யூக்ரேன் (Ukraine) பிரதேசத்தில் தான் கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருக்கிறது. யூக்ரேன் (Ukraine) பிரதேசம் பூராவும் ருஷ்யாவோடு தேச சரித்திரத்திலேயே முதன் முதலாக ஐக்கியப்பட்டிருக்கிறது. யூக்ரேன் (Ukraine) பிரதேசத்தை படையெடுப்பதற்காக வேண்டிய ஏற்பாடுகளை ஜெர்மனி மிகவும் மும்முரமாக செய்துகொண்டிருக்கின்றது.

இவைகள் எங்கே கொண்டுபோய்விடும்? தூரக் கிழக்குப் பிரதேசங்களில் நடக்கும் சம்பவங்களை கவனிப்போம். ருஷ்யாவின் நடத்தையோ ஒருவரும் அறிந்துகொள்ள முடியாமல் சந்தேகத்துக்கு இடமாகவே இருக்கிறது. சமீபத்தில் கையெழுத்திடப்பட்ட ருஷ்ய—ஜப்பானிய ஒப்பந்தம் இம்மாதிரி நடத்தைகளில் ஒன்று. இந்த ஒப்பந்தத்தைப்பற்றி மிஸ்டர். மத்ஸுவோகா நினைக்கும்படி அவ்வளவு திருப்திகரமாக ருஷ்யாவில் ஒருவரும் நினைக்கவில்லை, "பலாத்காரத்தை எதிர்த்துப் போராடும் நியாயமான போரில்" சைனாவுக்கு ருஷ்யா ஒத்தாசை செய்யுமாம்.

## ருஷ்ய—ஜப்பானிய ஒப்பந்தம்.

வெகுநாளாக திட்டம் போட்டுக்கொண்டு தெற்கு சமுத்திரத்தில் துராகிருதமாய் பிரவேசிக்க எண்ணங்கொண்டிருக்கும் ஜப்பானை ருஷ்யா (Russia) தடுக்காதாம். அதாவது அமெரிக்கா (America) ஜப்பானை சண்டைக்கிழுத்தால் ருஷ்யா அமெரிக்காவோடு சேராதாம். இந்த ஒப்பந்தத்தில் ஒன்றுமட்டும்

தெளிவாகத் தெரியவில்லை. அதாவது ருஷ்யாவின்மேல் ஜெர்மனி படையெடுத்தால் ஜப்பான் ஜெர்மனியை ஆதரிக்குமா என்று ஒப்பந்தத்திலிருந்து தெளிவாகத் தெரியவில்லை. ருஷ்யாவின் எண்ணத்தைப் பார்த்தால் கிழக்குத் திசையில் ஜப்பானால் ஒரு ஆபத்தும் வராமல் பார்த்துக்கொண்டு மேற்கே தன் படைகளை முஸ்தீப்பு செய்வதுதான் என்று தோன்றுகிறது.

ஆம், இனிமேல் ருஷ்யா எச்சரிக்கையாய் இருக்கவேண்டியதுதான். பால்கன் (Balkans) நாடுகளில் இதுவரையில் நடந்த சமாசாரங்கள் ருஷ்யாவிற்கு பிடிக்காததுதான். அவைகளுக்குக் காரணம், ருஷ்யாவின் அரைகுறையான ஏற்பாடுகளும், பிரிட்டனும், ருஷ்யாவும் சேர்ந்து ஒத்துழையாததுந்தான். துருக்கியை நாலாபக்கங்களிலும் சூழ்ந்துகொள்ளும் கொள்கையை ஜெர்மனி ஆரம்பித்திருக்கிறது. அதற்கு ருஷ்யா ஒன்றும் செய்யாமல் பேசாமலிருக்கிறது. ஜெர்மனி இராக்கு (Iraq)க்குள் தன் பலத்தை அதிகரித்துக்கொள்வது மிகவும் ஆபத்தான காரியம். ஆனால் அங்கு ருஷ்யாவின் செல்வாக்கு அதிகமாயிருப்பது தான் ஒரு நல்லகாலம். டெஹிரான் (Teheran) உள்பட வடக்கு பர்ஸியா (Persia) முழுவதிலுமே, ராஜீயத் துறையிலும் சரி, வியாபாரத் துறையிலும் சரி, ருஷ்யாவிற்கு செல்வாக்கு அதிகம். பாகு (Baku), பர்ஸியா (Persia), இராக் (Iraq) இவைகளிலெல்லாம் எண்ணெய் அதிகமாகக் கிடைக்கிறது. ஹிட்லருக்கோ (Hitler) அவ்வளவு எண்ணெயும் வேண்டியது அத்யாவசியம். அம்மாதிரி ஹிட்லரு (Hitler)க்கு அங்கு உற்பத்தியாகும் அவ்வளவு எண்ணெயும் வேண்டுமானால், அவைகளை நடத்தும் சர்வ அதிகாரமும், அதற்குவேண்டிய போக்கு வரவு ஸாதனங்கள் அனைத்தும் அவர் அதிகாரத்தின் கீழ் இருந்தால்தான் முடியும்.

முக்கியமான முடிவிற்கு ருஷ்யா (Russia) சீக்கிரம் வந்தாகவேண்டும். அதனால் தானோ என்னமோ ஸ்டாலின் (Stalin) தன்னையே தன்தேசத்திற்கு பிரதம மந்திரியாக நியமித்துக் கொண்டிருக்கிறார். ஐக்கிய அமெரிக்க நாடுகள் யுத்தத்தில் எப்பொழுது சேரப்போகிறது என்று காத்துக் கொண்டிருக்கிறார் போலும்.

பல கஷ்டமான காரியங்களுக்கு நாம் பொறுப்பெடுத்துக்கொண்டிருக்கிறோம். சமீபக் கிழக்குப் பிரதேசத்தில் மிகவும் பலம் பொருந்திய சைனியங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. நாம் ஸூய (Suez) ஸையும், எகிப்தை (Egypt)யும் பாதுகாப்பதற்கு இவைகளைச் செய்துதான் ஆகவேண்டும். ருஷ்யாவும் சமீபக் கிழக்குப் பிரதேசங்களைப் பாதுகாத்துத்தான் ஆகவேண்டும். அங்கு ருஷ்யாவின் பொறுப்பும், நம் பொறுப்பும் ஒன்று. ஆகையால் நம் இரண்டு தேசங்களும் ஒன்று சேர இது தான் தருணம். நாம் இருவரும் ஒன்று சேர்ந்துதான் ஆகவேண்டும். நாமிருவரும் ஒன்று சேர்ந்தால்தான் இரு தேசங்களுக்கும் நலம், க்ஷேமம்.

---



## ஹிட்லர் ருஷ்ய சர்வாதிகாரியுடன் பேட்டி செய்வாரா?
## ஸ்டாலின் பிரதம மந்திரித்வத்தை ஏற்றதற்குக் காரணம்.
## ஹிட்லருடன் பேச பூர்ண அதிகாரம்.
## நாஸிகளை ஜப்பான் ஏமாற்றி விட்டதா?

(ந்யூஸ் க்ரானிகிளின் ராஜ தந்திர நிருபர் எழுதுகிறார்.)

ஜெர்மனியின் வியவகாரங்களில் பழக்கமுள்ள நம்பத்தகுந்த ஆதாரங்களிலிருந்து லண்டனுக்குக் கிடைத்திருக்கும் செய்திகளில் வருகிற சில வாரங்களில் ஹிட்லர் தானாகவே ஸ்டாலினை பேட்டிகாண ஏற்பாடு செய்துவருகிறான் என்று தெரியவருகிறது.

ஜனங்களின் நகரசபைக்குத் தலைமை வகிக்கும் (அதாவது பிரதம மந்திரி பதவிக்கு சமத்வமான) உத்தியோகத்தை ஸ்டாலின் வகிக்கும்படி ருஷ்ய அரசாங்கத்தில் சமீபத்தில் மாறுதல்கள் ஏற்பட்டதற்கு இது ஒரு காரணம். இதே சமயத்தில் மாலடோவ் என்பவருக்கு பிரதம மந்திரிக்கு அடுத்த பதவி அளித்தும் ஆகிலும் ருஷ்ய பரஇலாகா மந்திரி பதவியையும் வகிக்கும்படிக்கும் செய்திருக்கிறார்கள்.

வான்டெர் ஷூலன்பர்க் என்னும் மாஸ்கோவிலிருக்கும் ஜெர்மானிய தூதர், பெர்லினிருந்து மே தினத்தன்று ருஷ்யாவுக்குத் திரும்பி வந்து, இரண்டு சர்வாதிகாரிகளுக்குள் பேட்டி ஏற்பாடு செய்வதற்காக, மாஸ்கோவில் உளவுகள் பார்க்கும்படி உத்தரவு பெற்றிருக்கிறாரென்றும் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பில் ஹிட்லர் வெகுகாலம் வரையில் ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் உள்ள சம்பந்தங்களை நீடிக்கும்படி செய்ய விரிவான ஏற்பாடுகளைக் கொண்டு வரக்கூடும்.

இந்த ஏற்பாடுகளின்படி, இந்தியா, ஜப்பான் உள்பட ஆசியா கண்டம் பூராவிலும் ருஷ்யாவுக்கு யதேச்சாதிகாரம் கொடுத்துவிடுவதென்றும் இரான் வழியாக பர்ஸியன் வளைகுடாவுக்கு ஒரு மார்க்கத்தை ஏற்பாடு செய்வதென்றும், இவைகளுக்குப் பதிலாக ஐரோப்பாவில் ருஷ்யாவுக்கு தற்காலமுள்ள ராஜ்ஜியங்களை அழியாது பாதுகாப்பது என்றும் தீர்மானித்திருக்கிறார்கள்.

பொருளாதாரம் சம்பந்தப்பட்ட மட்டில், ஜெர்மனியானது, தனக்கு ருஷ்யாவிலிருக்கும் சாமான்கள், முக்கியமாக, யூக்ரேனியாவிலிருந்து கோதுமையும் காகேஸியாவிலிருந்து எண்ணெயும், ஏராளமாகக் கிடைக்கவேண்டுமென்றும், அதற்குப் பதிலாக ருஷ்யாவுக்கு ஜெர்மன் யந்திரங்களும் கனமான தொழிற் சாமான்களும் அளிக்கப்படுமென்றும் ஏற்பாடு செய்திருக்கிறது.

ஜப்பானோடு ருஷ்யா இஷ்டப்படி ஏற்பாடு செய்து கொள்ளலாமென்பதற்குக் காரணம் பெர்லினுக்கு மிஸ்டர் மத்ஸூவோகா விஜயம் செய்துவிட்டுப் போன

பிறகு தூரக்கிழக்கில் உபயோகப்படும்படியாக சண்டையை ஆரம்பிக்க ஜப்பானுக்குப் போதுமான சக்தியில்லை என்று ஜெர்மானியர்கள் மதிப்பதுதான். எதிர்பாராதபடி பெர்லினிலிருந்து மாஸ்கோவுக்கு மத்ஸுவோகா வந்தபொழுது ருஷ்யாவுடன் அவன் நடுநிலைமை ஒப்பந்தம் செய்துகொண்டதுபற்றி ஜெர்மானியர்களுக்கு ஒரு கலக்கமுண்டாகிவிட்டதென்றும் சொல்லப்படுகிறது.

கூடிய சீக்கிரம் அமெரிக்காவானது தீவிரமாக யுத்தத்தில் கலந்து கொண்டுவிடும் என்பதில் ஜெர்மனியும் ருஷ்யாவும் கவலை கொண்டிருக்கிறார்களென்றும் தெரியவருகிறது. பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் எதிரி தன்னுடைய ஆதிக்கத்துக்குள்ளுள்ள ஐரோப்பா கண்டம் பூராவையும் கிளப்பிவிடவும் ருஷ்யாவின் விளைவு சாமான்கள் பூராவும் தன் வசமிருப்பதாகவும் காண்பிக்கவும் ஹிட்லர் யோசித்திருக்கிறான்.

இதிலிருந்து வெகு வருஷங்கள் கொண்ட ஒரு யுத்தத்தை நடத்த தான் தயாராகவிருப்பதாக உலகத்திற்குக் காண்பிக்கவும், சமாதானம் செய்வதின் பிரயோசனங்கள் எவ்வளவு என்று வெளிக்காட்டவும் ஹிட்லக்கு சாதகம் ஏற்படக்கூடும்.

ஆனால், ஜெர்மனியிடமிருந்து தாக்குதல் ஏற்படக்கூடும் என்று அடிக்கடி வெருட்டிக்கொண்டிருக்கும் ஜெர்மனியின் கட்டாயத்திற்கு இணங்கி ஸ்டாலின் விசேஷமான லாபங்களை ஜெர்மனிக்குக் கொடுத்துவிடமாட்டான். ஆகையால் ஹிட்லர், உபயோகமற்ற யோசனைகளுடனும், பாதுகாப்பு உறுதிமொழிகளுடனும் ஸ்டாலினிடம் பேச ஆரம்பிப்பான்.

எதிர்பார்க்கப்படும் ராஜ்ஜிய மாறுதல்களில் ஹிட்லருக்கு சமமான அந்தஸ்துடனிருக்கவும், ருஷ்யாவின் அரசாங்க அமைப்பில், ரெக்கின் சான்ஸலரும், ஜெர்மானியர்களின் ப்யூரருமான ஹிட்லர் போன்ற பூர்ண அதிகாரமுள்ள ஸ்தானத்தை வகிக்கவுந்தான் இது வரையில் உத்தியோகப்பற்று இல்லாத ஸ்டாலின், பிரதம மந்திரிக்கு உரித்ததான பூர்ண சம்பாரத்தையும் கௌரவத்தையும் வகிக்க ஆரம்பித்து விட்டான்.

முக்கியமாக இந்த அதிகாரத்தின் பயனாக ஹிட்லருடன் ருஷ்யாவுக்கு சாதகமாக வியவகாரம் செய்ய ஸ்டாலினுக்கு அவகாசம் ஏற்படும். நாம் எதிர்பார்க்கிறபடி இருவர்களுக்குள் சந்திப்பு ஏற்பட்டால் இருபக்கத்திலும் அதிகமான கசகல் ஏற்படக்கூடுமென்பது நிச்சயம்.

ருஷ்யாவின்பேரில் படையெடுப்புக்கு ஜெர்மானியர்கள் வேண்டிய அளவு தயார் செய்துவிட்டார்களென்று ஸ்டாலினுக்கு நன்றாய்த் தெரியும். ஹிட்லரின் யோசனைகளை ஸ்டாலின் ஒப்புக்கொள்ளுவானா இல்லையா என்பது ஹிட்லர் ருஷ்யாவின் க்ஷேமத்திற்கும் முன்னேற்றத்திற்கும் எவ்வளவு தூரம் வாக்குறுதி



செய்யப்போகிறானென்பதைப் பொறுத்திருக்கிறது. ஹிட்லர் அம்மாதிரி செய்தால் ஸ்டாலின் அவைகளை ஒப்புக்கொள்ளுவானென்று கருதப்படுகிறது. இல்லாவிடில், ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் உள்ள சம்பந்தங்களை யுத்தத்தில் இறங்கி முடிவாக தீர்த்துக் கொள்ளுவதைத் தவிர வேறு மார்க்கமில்லை.

என் நிலைமையிலும், ஸ்டாலின் சமீபகாலத்தில் முக்கியமான முடிவுக்கு வரவேண்டிய நிலைமைக்கு வந்துவிடுவதோடு அதே மாதிரி நிறைவேற்றியும் விடுவான். தற்சமயம் ஸ்டாலின் பிரதம மந்திரி பதவியை ஏற்றதற்கு இதுவும் ஒரு காரணம்.

---

## நசுக்கப்பட்ட பிரெஞ்சு சமாசாரப் பத்திரிகை.
## ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் நாஸிகள் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே சுற்றி வழங்கப்படுதல்.
## பாரிஸ் நகரில் ஜெர்மானியர்களுக்கு விரோதமான பிரசாரங்கள்.

[ஹென்ரி ஸ்டோன் என்பவரால் "ந்யூஸ் க்ரானிகிள்" என்ற பத்திரிகையில் எழுதியது.]

ஆக்கிரமிப்பு பிரான்ஸில் ஒரு ஊரில், ஜெர்மானிய ரகஸ்ய போலீஸாரும், ஜெர்மானிய அதிகாரிகளும் அதிகாரம் செலுத்திக்கொண்டிருக்கும் பொழுதே, பிரிட்டனுக்குச் சார்பாயுள்ள ஒரு தேசாபிமானப் பத்திரிகை பிரசுரிக்கப்பட்டு, சுற்றிலும் வழங்கப்பட்டுவருகிறது.

அந்தப் பத்திரிகைக்கு "பெண்டா க்ரூயெல்" என்று பெயர் வைக்கப்பட்டு இருக்கிறது. "ரெபெலெ" யின் எக்காலத்திலும் பிரக்யாதியுள்ள கதாநாயகன் பெயரையே அந்தப் பத்திரிகைக்கு வைத்திருக்கிறார்கள். பிரான்ஸில் இராக்காலங்களில் அநேக ஊர்களில் சுவர்களில் சில பிரசுரங்கள் ஒட்டப்படுபவை போன்றதல்ல இந்தப் பத்திரிகை.

அது வாஸ்தவமான தினசரிப் பத்திரிகை—சமாசாரத்தை விவரணை செய்யும் பேபர் என்றே அது தன்னை வர்ணித்துக் கொள்ளுகிறது. அதைப் பிரசுரிப்பவர்கள் எத்தனை ஆபத்துக்கு உள்ளாகிறார்கள் (பாரிஸில் ஒரு ரஸாயன வேலைக்காரரும், வேர்ஸெயில்ஸில் ஒருவரும் தீவாந்திர சிக்ஷை காளானார்கள்). "பெண்டா க்ரூயெல்" பத்திரிகையை சிநேகிதர்களுக்கு சுற்றி வழங்குங்கள் என்றார்கள். கடிதாசி கிடைப்பதில் ஏற்பட்ட சிரமத்தால் அதன் விரிவான வழங்குதல் தடங்கல்பட்டிருக்கிறது.

சாத்தியமானவரையில், அந்தப் பத்திரிகை வாராவாரம் பிரசுரிக்கப்படுகிறது. 4 பக்கங்கள் அச்சடிக்கப்பட்டு, சாத்தியமான சாதன முறைகள்படி விநியோகிக்கப்படுகின்றன. டெலிபோன் டிரெக்டரிகளிலும், இன்னும் இதர புஸ்தகங்களிலும்

காணப்பட்டிருக்கும் மேல்விலாசங்களுக்கு அவைகள் சாதாரண போஸ்டு மூலம் அனுப்பப்படுகின்றன—இது ஒரு முறை.

அதை நீர் வாசித்துப் பார்த்தால், ஒருக்கால் ஸ்வயர்ச்சி பிரெஞ்சுத் தலைவர் 'டிகாலே' யின் பிரசார ஆபீஸர்கள் பிரசுரிக்கிறார்களோ என்று நீர் நினைக்கலாம். அது அல்ல. பிரான்ஸிலிருந்து வந்த ஒருவர் இந்தப் பேபரை அவர்களுக்குக் காண்பித்த பிறகுதான், இம்மாதிரியான அசாதாரணமுறையில் பிரசுரிக்கப்படும் ஒரு பத்திரிகை ஒன்று இருக்கிறதென்றே டிகாலேயின் ஆபீஸர்களுக்குத் தெரியவந்தது. ஒவ்வொரு பதிப்பிலும் முதல் பத்தியின் தலைப்பில், கொட்டை எழுத்துக்களில் தலைப்புக் குறிப்பு அச்சடிக்கப்பட்டிருக்கின்றது. அது பின் வருமாறு :—

"ஜாக்கிரதை" இந்தப் பத்திரிகை பிரிடிஷாரின் துண்டுப்பிரசாரமல்ல. எவரேனும், இதை இங்கிலாந்திலுள்ள ஸ்வயர்ச்சி—பிரஞ்சு ஜனத்தின் கையில் போய்ச்சேரும்படி செய்வாரானால் அவர் நம்முடைய விடுதலைக்குப் போராடி உயிரையே தியாகம் செய்யும் நபர்களுக்கு உத்சாகமும், முக்கியமான ஆஸ்வாஸமும் அளிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை."

"பெண்டா க்ருயெல்" பேபரிலிருந்து கம்பீர ரஸமும் ஹாஸ்ய ரஸமும் பொருந்திய சில வாக்கியங்கள் தந்திருக்கிறது. கவனியுங்கள் "நமது நோக்கம் ஆக்கிரமிப்பு அதிகாரிகளுக்கு எதிர்த்துப் போராடுவதும், கலகம் கிளப்புவதும் அல்ல. யுத்தத்தில் நாம் தோல்வியடைந்தோம் என்று நமக்குத் தெரிந்திருக்கிறது. நாம் நடந்துகொள்ளவேண்டிய புத்திசாலித்தனம் என்னவென்றால், அவர்களுடன் விஸ்வாஸமான ஒத்துழைப்பு. ஆனால் அந்த ஒத்துழைப்பு ஒருக்காலும் ஜெர்மானியர்களுடன் மனப்பூர்வமான ஒத்துழைப்பாக மாறாது.".

"இந்தக் கொள்கையின்படி "டிகாலு" க்கு மரணதண்டனை விதிக்கும் படியும், நமது நேச தேசமான இங்கிலாந்தை கேவலமாய் இழிவுப்படுத்தும்படியும் நம்மை எவரும் கட்டாயப்படுத்தமுடியாது. இங்கிலாந்து நம்மைக் காட்டிக் கொடுக்கவில்லை. அது இன்னும் நமது நேச தேசமாகவேயிருந்து வருகிறது. அதுதான் நம்மைக் காப்பாற்ற முடியும். இதை நாம் மறக்கக்கூடாது.

"ஜெர்மன் ஆகாச விமானத் தாக்குதலால் லண்டன் வெகு அவஸ்தைக்குள்ளாக்கப்படுகிறது. ஆனால் பிரிடிஷார்கள் இந்தக் கஷ்டங்களை விளையாட்டுகளில் ஜயாபஜயம் ஏற்பட்டால் எப்படி கர்வமில்லாமலும், பொறுமையாயும் நல்ல குணங்களைக் காட்டுவார்களோ அதே தோரணையில் அவ்வளவு கஷ்டங்களையும் சகிக்கிறார்கள். பிரெஞ்சு பாமர ஜனங்கள் இதை நிச்சயமாய் அறியட்டும். ஆங்கிலேயர்கள் எதிர்ப்பு மனோபாவமும் சக்தியும் ஒருவிதமாயும் குன்றவில்லை. உடையாது விரியாது சேகரமாகயிருக்கிறது."

அந்த "பெண்டா க்ருயெல்" பேப்பரின் ஒரு பதிப்பில், பிரெஞ்சு ஜாதியார்களுக்கு, பிரதம மந்திரி **வின்ஸ்டன் சர்ச்சில்** விடுத்த ரேடியோ செய்தியிலிருந்து நீண்ட வாக்கியங்களை எடுத்து எழுதி, அடியில் கண்ட வியாக்கியானமும் கொடுபட்டிருக்கிறது :



"நீங்கள் எங்களுக்கு உதவி செய்யமுடியாத பக்ஷத்தில், எங்களுக்கு இடைஞ்சல் செய்யாமலாவது இருங்கள்" என்று **சர்ச்சில்** முடிவில் சொன்னதுதான், நாம் உறுதியாய் கைக்கொள்ளவேண்டிய யுத்தக் கூச்சல். யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு நாம் மரியாதை கொடுக்கவேண்டியது தான். ஆனால் பிரிடனுக்கு விரோதமாய் ஜெர்மனியுடன் நேச தேசமாக போகும்படி கேட்காதேயுங்கள். பிரிடனிடம் அந்தரங்க விஸ்வாசமும் மரியாதையும் நாம் காட்டுவதற்கு உரிமையுண்டு. பிரிடன் ஜயிக்கவேணுமென்று பிரார்த்திப்பதற்கும் எங்களுக்கு உரிமை உண்டு."

அதன் பின்பக்கத்தில், தனி சமாதானம் கோரும் **லவாலை** உக்கிரமாய்க்கண்டித்து எழுதியிருக்கின்றது.

ஆக்கிரமிப்பு பிரெஞ்சுப் பிரதேசத்திலும், அனாக்கிரமிப்புப் பிரஞ்சு தேசத்திலேயும் வழங்கப்பட்டு வரும், நாஸிக்கு எதிரிடையானவும், பிரிடன் சர்பானவுமான துண்டுப் பிரசுரச் சங்கதிகள் எடுத்துக் கொடுப்பதென்றால் பத்தி பத்தியாக எழுதலாம்.

டிசம்பர் மாதம் 7வையில் பாரிஸில் வழங்கின ஒரு துண்டுப் பிரசுரத்தில் கண்ட விஷயம். பிரிடனுக்கு எதிரிடையாக ஜெர்மானியர்கள் எடுத்த பகிரதப் பிரயத்தனங்கள்யாவும் அபஜய மடைந்தன. பிரிடன் சமுத்திர ஆதிக்கம்!வகித்து கொண்டு தான் வருகிறது. ஸ்பெயினும் போர்சுகலும், படையெடுப்புக்கு கீழ்படியமாட்டோம் என்று மறுதளித்துவிட்டன. ஜிப்ரால்டரைத் தாக்கவும் பிரெஞ்சு மொராக்கோவைத் தாக்கவும், இணங்கவில்லை. துருக்கி ராணுவப் படையை யுத்த சன்னத்தமாக்கிக் கொண்டுவருகிறது. அல்பேனியாப் பிரதேசத்தில் இதாலியருக்கு சேர்ந்த அபஜயமான்து படுதோல்வியாக ஏற்பட்டுவிட்டது.

அச்சு தேசத்தாருக்கு எங்கே பார்த்தாலும் ஒரேபதில்தான். "உன்னால் இனிமேல் போகமுடியாது". "பொய்ச் சங்கதிகளைக் கேட்டு ஏமாந்து விடாதீர்கள். பிரான்ஸ், தற்சமயத்தில் இருளில் இருந்துவருகிறது. ஒரு நாள்-வன்! அதிசமீபத்தில் நல்ல சூரிய வெளிச்சத்தில் புத்துயிர் பெற்றுவிடும்."

சென்ற நவம்பர் மாதத்தில் ஒரு நாள் பாரிஸ் நகரத்தில் சில பாகங்களில் நாஸிகள் சுவற்றில் கொட்டை எழுத்தடங்கிய பெரும் மஞ்சள் காகிதங்களை ஒட்டினார்கள். அதில் "இங்கிலாந்துதான் ஐரோப்பா கண்டத்தின் சத்துரு" என்று கண்டிருந்தது.

அடுத்த நாள் காலை அந்த ஒவ்வொரு பேபர்களுக்கு அடியில் வெள்ளை போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. அதில் கீழ்க்கண்டபடி அச்சடிக்கப்பட்டிருந்தன.

"நான் இங்கிலாந்தின்பேரில் குற்றம் சாட்டுகிறேன்.

"1914-ம்வருஷத்தில் இங்கிலாந்துதான் பிரான்ஸ் தேசத்தின் பேரில் படையெடுத்தது.

"அகில ஜெர்மானிய திட்டத்தை ஏற்படுத்தியது இங்கிலாந்துதான்.

"ஆஸ்திரியாவை தன்னுடன் ஐக்கியப்படுத்திக் கொண்டது இங்கிலாந்துதான்.

"தளபதிகள் **மாங்கின், மாகிநா, பார்தோ,** அரசர் அலெக்ஸாண்டர் இவர்களின் கொலைக்கு இங்கிலாந்துதான் ஜவாப்தாரி.

"தன்னைப் பூராவும் கடும் ஆயுதபாணியாகவும், அடிமையுள்பட யாவரையும் யுத்த சன்னத்தமாய்த் திரட்டியது இங்கிலாந்துதான்.

"ஸெக்கோஸ்லோவாக்கியா, போலந்து, ஹாலந்து, பெல்ஜியம், இந்த தேசங்களின் பேரில் படை யெடுத்தது இங்கிலாந்துதான்.

"ஒரு அதிசய ஸ்வரத்திற்கு நம்மை "நாட்டியம்" ஆடும்படி செய்கிறதும் இங்கிலாந்துதான்.

"ஆ ஓ. ஹோ. அந்த ஆங்கிலேயர்கள்!"

---

# அமெரிக்காவின் அபிப்பிராயங்கள்.

---

(அமெரிக்கப் பொது ஜனங்களின் அபிப்பிராயத்தின் போக்கு எப்படி என்பதற்காக அமெரிக்கப் பத்திரிகைகளிலிருந்து சில அம்சங்களை சில சமயம் பிரசுரித்திருக்கிறோம். இங்கு 1941-ம் ௵ மே ௴ 8-ம் தேதி முதல் 15-ம் தேதி வரையுள்ள வாரத்தில் ஐரோப்பாவின் நிலை எப்படி இருந்தது என்பது பற்றி சில ஸ்வாரஸ்யமான பாகங்களை பிரசுரிக்கிறோம். ப.)

மே ௴ 8-ம் தேதி வெளியான **நியூ யார்க் டைம்ஸ்** பத்திரிகை வெளியிட்டது.

ஐக்கிய நாடுகளில் யுத்த முயற்சிகளை துரிதப்படுத்துவதுதான் யுத்தத்தின் போக்கில் புதிய அம்சம். ஆகையால்தான் பிரிடன் தைரியத்தோடும் நம்பிக்கையோடும் எதிரியை நிராகரிக்கிறது. திரு. சர்ச்சிலும் யுத்தத்தில் வெற்றி பெருவோமென்று பந்தயம் போடத்தயாராகயிருக்கிறார்.

நேற்று நிகழ்த்திய சொற் பொழிவில் திரு. சர்ச்சில் ரொம்பவும் சிலாக்கியமாய்ப் பேசினார். இதிலிருந்து பிரிடன் அவரைப் பூராவும் பின்பற்றி நிற்பதற்குக் காரணம் என்னவென்றும், புல்டாக்கைப்போல் கிளம்பக்கூடியவும், ஊக்கமுள்ளவும், பட்டாக் கத்தியைப்போல் விஷமமும், பளபளப்புமுள்ள சர்ச்சில் போன்ற சத்துருவைக் கண்டு ஹிட்லருக்கு அதிகக் கோபம் ஏன் உண்டாகிறது என்பதும் சுலபமாய் அறிந்துகொள்ளலாம்.

மே 9-ம் தேதி வந்த **ஹூஸ்டன் போஸ்டு** எழுதியது.

பிரெஞ்சுக் கடற்படையின் பாக்கியை அழித்துவிடுவதா, அல்லது அவைகளை ஹிட்லரிடம் ஒப்புவிக்க பிடேனையும் டார்லானையும் அனுமதிப்பதா என்று ஆலோசித்தால் முதலில் சொல்வதுதான் உத்தமம். இது துக்ககரமாகயிருந்த போதிலும் பாதகமில்லை. பிரெஞ்சுக் கடற்படையை உபயோகப்படாதபடி செய்யவும், தனக்கு எதிராக அதை ஹிட்லர் உபயோகப்படுத்தாமலிருக்கும்படி செய்யவும் பிரிடிஷாருக்கு உதவிவேண்டுமானால், அந்த ஒத்துழைப்பு அமெரிக்கக் கடற்படையிலிருந்து கிடைக்கக்கூடும்.



## லோக குருவின் அபிப்பிராயம்.

**போஸ்டன் டிராவெலர்** என்னும் பத்திரிகையில் லோக குரு எமெரிட்ஸ் லாரென்ஸின் அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறது.

யுத்தம் ஏற்பட்டால் ராஜ விசுவாசமுள்ள ஜனங்களின் மனதார்ந்த ஆதரவு ஏற்படக்கூடும். யுத்தம் செய்யாமல் ஒத்தாசை செய்வது அமெரிக்காவுக்கு உரித்ததான காரியமல்ல. கொல்லுவதென்பது ஏசுநாதரின் சட்டத்துக்கு விரோதமானது. ஆகிலும் ஒரு கொள்ளைக்காரன் உன்னுடைய மனைவியையும் குழந்தைகளையும் அடிக்கும்பொழுது நீ என்ன செய்வாய்?

சிகாகோ ட்ரிப்யூனின் சஞ்சார நிபருரான காப்டன் மாக்ஸ்வெல் கார்பெனங்க் யுத்த பிராந்தியங்களில் 16 மாதம் பிரயாணம் செய்துவிட்டுத் திரும்பியதும் சொல்லுகிறார்.

டன்கர்க்குக்குப் பிறகு யுத்த தளவாடங்களை மறுபடியும் சேமித்ததில் பிரிடிஷார் நல்ல வேலை செய்திருக்கிறார்கள். அவர்களுடைய அரண்களும் கடற்படையும் ரொம்பவும் வலுவடைந்திருக்கிறது. ஜெர்மனியின் எதிர்ப்பு அதிக அபாயத்தோடு கூடியதோடு, ஹிட்லரின் தளகர்த்தர்கள் யுத்தம் செய்வதின் பிரயோஜனம் சந்தேகமுள்ளதாகவுமாகும். அவர்களிடமிருக்கும் ஏராளமான சேனை, படையெடுப்பை நன்றாய் தடுத்துவிடும். சண்டை செய்யக்கூடும் விமானங்களில் ஸ்பிட்பைர் என்பது சிலாக்கியமானது. பிரிடிஷ் வெடிகுண்டு விமானங்கள் ஜெர்மன் விமானங்களைப்போல் நல்ல சக்தியுள்ளவைகள்.

12-ம் தேதி வெளிவந்த **நியூ யார்க் போஸ்டில்** யுத்த பத்திராதிபரால் பின்வருமாறு வெளியிடப்பட்டிருக்கிறது.

வெஸ்ட்மினிஸ்டர் கோவிலையும் பார்லிமெண்ட் கட்டடங்களையும் வெடிகுண்டுகளால் தகர்த்ததானது, 1914 முதல் உலகம் அறிந்த பிரகாரம் அநாகரீக மற்ற ஒரு செய்கையாக ஆகும். அவைகள் வெறுப்பை உண்டாக்குகின்றன. இவைகளில் ராணுவ முக்யத்வம் ஒன்றுமில்லை.

## முறியடிக்கப்பட்ட ஜனங்களின் மனோநிலை.

மே ௴ 11-ம்தேதியுள்ள **சார்லட்டி அப்ஸர்வர்** எழுதியது.

ஐரோப்பாவில் முறியடிக்கப்பட்ட ஜனங்கள் எல்லோரும் முதல் முதலாக பச்சாதாபமும் ஒத்துழைப்பும் உள்ள நோக்கங்கள் கொண்டிருக்கிறார்கள். இந்த எண்ணம் உலகத்திலுள்ள ஜனங்களின் 5-ல் 4 பாகத்தாரிடம் குடிகொண்டிருக்கிறது. இது முக்கியமானது. அவர்களுடைய ஜெர்மானிய சகோதரர்களைத்தான் அவர்கள் தூஷிக்கிறார்கள். ஹிட்லரும் அவனுடைய பரிவாரங்களும் ஜூலியஸ் ஸீஸர் நாள் முதல் கொடுங்கோல் மன்னர்கள் சென்ற வழியே செல்லப் போகிறார்கள். ஜெர்மானியர்கள் மறுபடியும் கௌரவம் வாய்ந்தவர்களாக ஆகிவிடுவார்கள்.

மே ௴ 13 தேதியுள்ள **பிட்ஸ்பர்க் போஸ்டு கேஜெட்டில்** பின்வருமாறு வெளியிட்டிருக்கிறது.

வெஸ்ட்மினிஸ்டர் கோவிலை வெடிகுண்டுகளால் தாக்கியது பிரிடிஷ் மனோதைரியத்தைக் குலைத்துவிடாது. ஆனால் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் கஷ்டங்

களை தைரியமாய் அனுபவிக்க அதிக ஊக்கமும், இந்த அக்கிரமமாய் யுத்தம் செய்பவனை ஒரு சமயம் ஒரு இடத்தில் சந்தித்து அதே வகையில் யுத்தம் செய்து வெற்றிபெற நோக்கமுள்ள எண்ணத்தை பலப்படுத்தவும் உபயோகமுள்ளதாக விருக்கும்.

ஹிட்லரைக் குறித்து எல்லா தேசங்களிலும் ஏற்பட்டிருக்கும் பகையானது வலுவடைந்து வருகிறது. இந்த பாரத்தை வகிக்கும் எவனும் ஒரு நாள் அதன் பளுவினால் நசுங்கிவிடுவான்.

---

## பிரகிருதம் ஜெர்மனியில்.

"ஜெர்மானியர்களே! முன்பைவிட கடினமாமக வேலை செய்யவேண்டும்; குறைத்து சாப்பிடவேணும். ஜயத்திற்கு பொருமையுடன் காத்திருக்கவேண்டும்" என்று ஹிட்லர் அவர்களுக்குச் சொல்லுகிறான். அவன் எதிர்பார்க்கும் ஜயம், பின்னுடி நகர்ந்துகொண்டே போகிறது.

தங்கள் தேச எல்லைக்கு வெளியிலிருந்து உண்மைச் சங்கதியை ஜெர்மானியர்கள் கேழ்க்கவேகூடாது. 49-வயதுள்ள ஜோஷான் வைல்ட என்பவன் அயல்நாட்டு ஒலிப்பரப்பைக் கேட்டானும். தான் கேட்டதை மற்றவர்களுக்குப் பிரசடனப்படுத்தினன் என்று குற்றம் சாட்டப்பட்டான். ந்யூரம்பர்க் என்ற பட்டணத்தில் மேமீ 18உ தூக்கிடப்பட்டான்.

ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் நாஸிக்காரர்கள் என்ன செய்கிருர்கள் என்று நமக்குத் தெரிகிறது. தங்களைவிட "கீழ்ப்பட்ட" ஜாதியார்களாம். அவர்களை நடத்தும் விதத்திற்கு என்ன திட்டம் போடுகிருர்கள் என்றும் நமக்குத் தெரிகிறது. "நியூ யார்க் போஸ்டு" என்ற பேபரின் மேமீ 1உ வெளியீட்டில், தங்கள் தேசத்திய கிழவர்களையும், பலஹீனர்களையும், திக்கற்றவர்களையும் எம் மட்டில் வைத்திருக்கிருர்கள் என்று வெளியாக்கியிருக்கிறது. இவர்கள் ஜெர்மானியர்கள். யஹூதியர்களல்ல, ராஜீய விரோதிகளுமல்ல:—

1940 ளு செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில், 85,000 ஜெர்மானியர்களை குருடர்களென்றும், வயோதிகர்களென்றும், தீரா நோய்வாய்ப்பட்டவர்களென்றும் சொல்லி நாஸிகள் கொன்றிருக்கிருர்கள்.

மதஸ்தாபனங்கள் மூலம், நாஸிகள் செய்த ஷெ அட்டூழியம் வெளிக்குவந்தது. வயோதிகர்களும், சீக்காளிகளும் நாஸி யுத்த யந்திரத்திற்கு உதவாதவர்களாம். துருப்புகளின் உணவுகளை இவர்கள் தீர்த்துவிடுகிருர்களாம். சீக்காளிகள் காயம்பட்ட துருப்புகளுக்கு வேண்டிய சிகித்ஸாப் படுக்கைகளை வியாபிக்கிருர்களாம். அதனுல் அவர்களைக் கொல்லுவதுதான் உசிதமாம். இம்மாதிரி நாஸிகளின் கொள்கை என்று ஒரு காதோலிக் மதப்பாதிரி சொல்லுவது மூலம் தெரிகிறது.



ஹூர்டெம்பர்க் ஆஸ்பத்திரியைப் பார்க்கச் சென்ற காதோலிக் பாதிரிமார்கள் மேற்படி ஆஸ்பத்திரிகளில் குறிப்பிட்ட சில தினங்களில் கிழவர்கள் அநேகர் மறிப்பதை கவனித்தார்கள். ஜெர்மன் ரகஸ்யப் போலீஸ் விஷத்தாலோ விஷப் புகையாலோ இம்மாதிரி மறிக்கும்படி செய்கிருர்களென்று கண்டுகொண்டார்கள்.

காதோலிக் பாதிரிகள், இந்தக் கடுங்கொலையைக் கண்டித்தார்கள். ஜெர்மானியர்கள், சிலர்களை வலுவந்தமாய் ஆண்மை இழக்கும்படி செய்கிறதையும் கண்டித்தார்கள். இந்தக் கண்டனத்திற்கு கைகண்ட பலன் 300 பாதிரிகளை ஒண்ணடி மண்ணடியாய்ச் சேர்த்து ஜெயிலில் தள்ளினுர்கள். இதை ஒரு சாக்ஷி பார்த்து வர்ணித்ததைக் கேளுங்கள். "நாஸிக் கொள்கையின் முடிவான சித்தாந்தம் இதுதான்."

இந்த சித்தாந்தத்தை எதிர்த்து போர்புரியக்கூடும், போர்புரியவேண்டும், போரிட்டே தீருவார்கள்.

---

## மொத்தமாக யுத்தத்தின் ஐந்தொகை.

ஜெர்மானியர்களின் படையெடுப்பின் அபாயத்தைப் பற்றியும், அவன் முக்கியத்வத்தைப்பற்றியும் குறைத்துச் சொல்லாமல், ஜெர்மானியர்கள் சென்ற வருஷத்தில் சாதித்துக்கொண்டதையும் இவ்வருஷத்தில் சாதித்துக்கொண்டதையும் ஒப்பிட்டுப்பார்த்தால் பிரயோஜனத்தை அளிக்கும்.

1. சென்ற வருஷத்தில் இந்த டயத்திற்குள் ஜெர்மனியானது நார்வே, டென்மார்க், ஹாலண்டு, பெல்ஜியம், இந்த தேசங்களை வளைத்து அமுக்கிவிட்டது. டங்கர்க்.காலிசெய்யப்பட்டது. பிரிடிஷ் சைனியங்களுக்கு யுத்தம் செய்ய ஆயுதங்கள் இல்லை. கடாசி வீழ்ச்சி நெருங்கிவர, பிரான்ஸ் தேசம் தள்ளாடிக்கொண்டு இருந்தது. இதாலியும் யுத்தம் ஆரம்பிக்கச்சித்தம் செய்துகொண்டிருந்தது. (10—6—40) இவைகள் எல்லாவற்றிற்கும் எதிரிடையாய் 4 ஜெர்மன் "க்ருயிஸர்" சண்டைக் கப்பல்களும், 12 ஜெர்மன் நாசகாரிகளும், நார்வே யுத்தத்தில் அமிழ்த்தப்பட்டன.

இவ்வருஷம் ஜெர்மானியர்கள்; யூகோஸ்லாவியா, கிரீஸ், ஸிரினைகா இவைகளை பிடித்துவிட்டார்கள். கிரீட்டையும் கைப்பற்றிவிட்டார்கள். பிரிடிஷ் கப்பல் "ஹூட்" அவர்களால் அமிழ்த்தப்பட்டது. நமது வியாபாரக் கப்பல்களில் அநேகத்தைத் தாக்கி நாசமாகிவிட்டார்கள். இதற்கு எதிரிடையாய் நாம் 5 லக்ஷம் பேர்களடங்கிய இரண்டு இதாலிய சேனைகளை படுநாசம் செய்திருக்கிறோம். இராக் தேசத்திலிருந்து கலக்கார ராஷீத் ஆலியை அப்புறப்படுத்திவிட்டோம்; இதாலிய கடற்படையை செத்த பாம்பு மாதிரி, நடைமுதலில்செய்துவிட்டோம் அமெரிக்கர்களின் உதவியைப் பெற்றோம். "பிஸ்மார்க்" என்ற ஜெர்மன் யுத்தக் கப்பலை அமிழ்த்தினோம்,

| | |
|---|---|
| 2. சென்ற வருஷத்தில் ஆகாசத்திலும் கவசம் தாங்கிய தரைப்படைகளில் மிகுந்த பலத்தையுடையவர்களாய் ஜெர்மானியர்கள் காண்பித்துக் கொண்டார்கள். ஏன்! நாம். இவர்களுக்கு இத்தனை வலு இருக்குமோ என்று கூட சந்தேகித்தோம். | இவ்வருஷத்தில் நேசக் கக்ஷியார்களின் ஆகாச விமான பலம் ஜெர்மானியர்களின் பலத்துடன் சமநிலையடைந்துவிட்டது. நேசதேசத்தாரின் கவசம் தாங்கிய படையின் வலுவும் வெகுவேகமாய் விருத்தியடைந்து வருகிறது. |
| 3. சென்ற வருஷம் பளுவான கவசம் தாங்கிய மோட்டார்களையும், "ஸ்துகா" முக்குணத்துப் பாயும் வெடிகுண்டு விமானங்களையும் போலுள்ள சில ரகஸ்ய ஆயுதங்களால் ஜெர்மானியர்கள் ஜயமடைந்தார்கள். | இவ்வருஷமோவெனில் ஜெர்மானியர்கள் ஒருவிதமான ஆச்சரிய சாதனத்தையும் கிளப்பிவிடவில்லை. நேசதேசத்தார்களில் புதிய சக்திவாய்ந்த வெடிகுண்டு விமானங்களும், இரவில் போர் புரியும் எதிர்ப்பு விமானங்களும் ஜெர்மானியர்களிடையே பரபரப்பைக் கொடுத்திருக்கின்றன. |
| 4. சென்ற வருஷத்தில் நேசக் கக்ஷியில் பிரிடன் ஒன்றைத் தவிர்த்து, மற்ற யாவருக்கும் மனோதிடம் குறைந்திருந்தது என்றே சொல்லவேண்டும். ஜெர்மானியர்களின் யுத்தங்களில் பாதிக்குமேல் ஐந்தாம்படையின் சூழ்ச்சியால் ஜயிக்கப்பட்டன. குண்டுப் பிரயோகம் ஏற்படுமுன்னே இந்த ஜயங்கள் அவர்களுக்குக்கிட்டின. | இவ்வருஷத்தில் ஐந்தாம்படை வேலை கிடையாது. எப்பொழுதும் இருந்ததைக் காட்டிலும் நேசக் கக்ஷியாரிடம் ஐக்கியபாவமும், திடசித்தமும் காணப்படுகின்றது. |
| 5. சென்ற வருஷத்தில் நேசக் கக்ஷியாரின் யுத்த தளவாட உற்பத்தி ஜெர்மானியரின் உற்பத்தியைவிட வெகு குறைவு என்று சொல்லவேண்டும். பிரிட்டிஷ் யுத்த யந்திரம், பூராவுக்கும் அமைக்கப்படவில்லை. | இவ்வருஷத்திலோவெனில் ஜெர்மானியர் எவ்வளவு ஜாஸ்தியாக உற்பத்தி செய்யக்கூடுமோ அவ்வளவு உற்பத்திசெய்துவிட்டது. பிரிடனும் தன் உற்பத்தியில்மகத்தான நிலைமைக்கு வந்துகொண்டிருக்கிறது. அமெரிக்காவின் உற்பத்தி சக்தியானது அபாரமாகிக்கொண்டுவருகிறது. அடுத்த வருஷத்தில்தான் உற்பத்திசெய்வதெப்படி என்று கவலைப்படுகிறான் ஹிட்லர். இந்தக் கவலையை பகிரங்கமாய் ஹிட்லர் ஒப்புக்கொண்டுவிட்டான். |



| | |
|---|---|
| 6. சென்ற வருஷத்தில் அமெரிக்காவானது ஒதுங்கி நின்றது; சந்தேக மனோபாவத்துடனிருந்தது; தன் நம்பிக்கையற்றுமிருந்தது. | இவ்வருஷம் பிரிடனுக்கு யாவற்றுதவியும் செய்கிறதென்று உறுதிசெய்துகொண்டிருப்பதுடன் அவசியமானால் யுத்தத்திற்கும் பிணைப்பட்டிருக்கிறது. |

பிரிடன் இன்னும் யுத்தத்திற்கே ஒரு திலகம் போல் விளங்குகிறது. ஜெர்மனிக்கு ஜயம் வரவேண்டுமானால் பிரிடனை பிரிடிஷ் பிரதேசத்தில் தோல்வியுறச் செய்யவேண்டும்; பிரிடன்பேரில் படையெடுப்பு எடுக்கப்போவதில் ஏற்படும் ஒவ்வொரு நாள் தவக்கமும் ஜெர்மனிக்கு அபஜயத்தைத் தரும் அறிகுறி.

---

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

---

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### "மிகவும் மகத்தான ஜூன் மாதம் முதல்தேதி."

மே மாதம் 27-ம் தேதி, நாஸி ஒலிபரப்புகளில் வியாக்கியானம் செய்யும் வால்ட் மிட்லர் (Wait Mitler) என்பவர் "பிரிடிஷ் சரித்திரத்திலேயே பிரசித்திபெற்ற ஜூன்மாத முதல்தேதி சண்டை என்பது ட்ரபால்கர் (Trafalgar) சண்டையில் நெல்ஸன் (Nelson) வெற்றிபெற்ற ஜூன்மாதம் முதல்தேதியைக் குறிக்கிறதென்று சொன்னார்.

பாவம், கடல் யுத்தங்களைப்பற்றி வால்ட் மிட்லரு (Walt Mitler)க்கு என்ன தெரியும். அவர் தேசமாகிய ஜெர்மனி ஏதாவது ஒரு பெரிய கடல் யுத்தத்தில் ஜயித்திருந்தாலல்லவா அவைகளைப்பற்றி அவருக்குத் தெரியப்போகிறது. 1794-ம் வருஷத்தில் அட்லாண்டிக் (Atlantic) மஹா சமுத்திரத்தின் நடுவில் ஒரு பெரிய கடற்போர் நடந்தது. அதற்குப் பெயர் வைக்க பக்கத்தில் ஒரு தீவோ, பூமியோ இல்லாததால் "மகத்தான ஜூன் மாதம் முதல் தேதி கடற்சண்டை" என்று பெயருண்டாயிற்று. அந்தக் கடல் யுத்தத்தில் ஹோ பிரபு (Lord Howe)வின் தலைமையின் கீழ் பிரிடிஷ் கடற்படையின் ஒரு பகுதி பிரெஞ்சுக் கடற்படையை சின்னாபின்னமாக்கி சிதற அடித்தது. அதற்கப்பால் ஐந்து வருஷங்களுக்கு பிரெஞ்சுக் கடற்படை தலை தூக்கவேயில்லை. ட்ரபால்கர் (Trafalgar) கடல் யுத்தம் நடந்தது 1805-ம் வருஷம் அக்டோபர் மாதம் 5-ம் தேதி.

### பெர்லினிலிருந்து மே மாதம் 27-ம் தேதி ரேடியோ மூலம் ஒலிபரப்பு.

ஸால்வடார் மாரினோ (Salvador Marino) என்னும் ஸ்பெயின் தேச உத்தியோகஸ்தர் ஒருவர் பெர்லினு (Berlin)க்கு வந்து சுற்றிப் பார்த்துவிட்டு ஸ்பெயினு (Spain)க்கு திரும்பி இருக்கிறாரும். அவர் எல்லா ஜெர்மானியர்களும் ஒற்றுமையுடன் ஹிட்லரி (Hitler)ன் ஆக்ஞைக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறார்கள்

என்றும், இறுதி வெற்றி தங்களுக்குத்தான் என்று உறுதியுடன் இருக்கிறார்கள் என்றும் சொன்னாராம்.

சொற்ப காலத்திற்கு முந்திதான் ருடால்ப் ஹெஸ் (Rudolp Hess) என்னும் பிரபல ஜெர்மானியர் ஸ்பெயினு (Spain)க்குச் சென்றிருந்தார். பாவம், ஸீனர் ஸால்வடார் மாரினோ (Senor Salvador Marino)வை வரவேற்கும் ருடால்ப் ஹெஸ் (Rudolp Hess) இல்லாதது மிகவும் வருந்தத்தக்கதே. இருந்திருந்தால் நாஸிகளிடம் இருக்கும் பரஸ்பர ஒற்றுமையைப் பற்றி ஸீனர் ஸால்வடார் மாரினோவுக்கு தெரியப்படுத்தியிருப்பார்.

## "கோபம் வந்துவிட்டது."

தென் ஆபிரிக்க (Africa) பிரதம மந்திரி பீல்டு மார்ஷல் ஸ்மட்ஸ் (Field-Marshal Smuts) "பிரிடன் (Britain) தான் இறுதியில் வெற்றிபெறும்" என்று தான் திடமாய் நம்புவதாகச் சொன்னது, பெர்லினுக்குப் பிடிக்கவில்லை. கோபம் வந்து விட்டது "சமயத்துக்குத் தகுந்தபடி பேசுகிறவர்" என்று வாயாரத் திட்டினார்கள்.

தன்னுடைய மனசாக்ஷிக்கு விரோதமன்னியில் நேர்வழியில் நடக்கும் அரசியல் வாதிகள் உலகத்தில் மிகச் சிலரே. அவர்களில் தென் ஆபிரிக்க பிரதம மந்திரி ஜான் கிரிஸ்டியன் ஸ்மட்ஸு (Jan Christian Smuts)ம் ஒருவர். அவர் ஜன நாயக நாடான டிரான்ஸ்வால் (Transvaal) தேசத்தைச் சேர்ந்தவர். போயர் (Boer) சண்டையில் பிரிடனுக்கு விரோதமாகச் சண்டை நடத்தினார். அந்த யுத்தத்தின் அந்தியில் ஆங்கிலேயரும், டச்சுக்காரர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்னும் கொள்கையை கடைபிடித்தார். அந்தக் கொள்கைக்கு விரோதமன்னியில் 40 வருஷமாக நடந்து வந்திருக்கிறார். இன்றைக்கும் அவர் தன் நாடு பிரிடனோடும், பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்திலிருக்கும் மற்ற நாடுகளுடனும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும் என்னும் கொள்கையையே கடைபிடிக்கிறார்.

## "இராக் (*Iraq*) ரீஜெண்ட் எங்கேயோ ஓடிவிட்டார்."

இராக்கி (Iraq)ல் ஜெர்மனியின் ஜம்பம் ஒன்றும் பலிக்காமல் போகவே, டிரான்ஸ் ஜார்டானியா (Transjordania)வில் ஏதாவது குறும்பு செய்யலாமா என்று பார்க்கிறது. "ஒரே அடியில் இரண்டு" என்னும் பழமொழிக் கிணங்க மே மாதம் 31-ம் தேதி பெர்லின் ரேடியோவிலிருந்து பின் வரும் செய்தி வெளியாயிற்று. "டிரான்ஸ் ஜார்டானியா (Transjordania)வில் உள்நாட்டு நிலைமை சரியாயில்லை என்று பீரட் (Beirut)டிலிருந்து வரும் செய்திகளிலிருந்து தெரிகிறது. இது வரையில் அதன் தலைநகரமாகிய அம்மானி (Amman)லிருந்த இராக்கி (Iraq)ன் ரீஜெண்ட் அப்துல் இல்லா (Abdul Illah) எங்கேயோ ஓடி விட்டார்."

பெர்லினி (Berlin)லிருந்து இந்தச் செய்தி வெளி வருவதற்கு மூன்று நாட்களுக்கு முந்தியே இராக்கி (Iraq)ன் நியாயமான ரீஜெண்ட் தன் சொந்த ஊருக்குத் திரும்பி வருகிறார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஜெர்மனிக்கு



அவர் எங்கே போகிறாரென்று தெரியாதாம். உலகம் முழுவதற்கும் அவர் தன் சொந்த ஊரின் தலைநகரமான பாக்தாத் (Bagdad)துக்கு போகிறாரென்று தெரியுமே. ஹிட்லரின் சதிகாரர்களான ரஷீத் ஆலி (Rashid Ali)யும் அவருடைய பொம்மை அரசாங்கத்தின் மந்திரிகளும் ஊரைவிட்டு ஓட்டம் பிடித்ததும் எமீர் அப்துல் இல்லா (Emir Abdul Illah) ஜயகோஷத்துடன் ஜூன் மாதம் முதல் தேதி தலைநகருக்குள் பிரவேசித்தார்.

---

## B.—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

---

### தலைவர் ரூஸ்வெல்டி (*Roosevelt*)ன் வாக்குறுதி.

பெர்லினிலிருந்து வாராவாரம் பெங்காலியில் ஒலிபரப்புவதில் மே மாதம் 29-ம் தேதி பிசகாக சில சமாசாரங்களை வெளியிட்டார்கள். இதுவரையில் பிரிடனுக்கு சாமான்கள் அனுப்புவித்துக்கொண்டிருந்த அளவு சாமான்கள் இனிமேல் அனுப்பமுடியாது என்று தலைவர் ரூஸ்வெல்ட் (Roosevelt) சொன்னது இங்கிலாந்தில் ஏக்கத்தை விளைவித்திருக்கிறது என்று ஜெர்மன் ரேடியோ பெங்காலியில் அறிவித்தது.

தலைவர் ரூஸ்வெல்ட் (Roosevelt) அம்மாதிரி ஒருக்காலும் சொல்லவே இல்லை. உண்மையில் அவர் சொன்னதாவது "நாங்கள் எங்கள் சாமான்கள் உற்பத்தி செய்யும் சக்தியை பன் முறை பெருக்கி இருக்கிறோம். மாதாமாதம் சாமான்கள் யுத்தத்திற்கு தேவையான ஆயுதங்கள், அதிகமாக உற்பத்தியாகி குவிந்துகொண்டே வருகின்றன. நமக்கு மாத்திரமன்று. பிரிடனுக்கும், சைனாவுக்கும் கூடத்தான். என் சகல ஜனநாயக நாடுகளுக்குந்தான் சாமான் கள் அதிகமாக அனுப்பிக் கொண்டேயிருப்போம். யுத்த சாமான்கள் அனுப்புவது இனி குறையாது. வரவர அதிகமாகிக்கொண்டே போகும்."

யுத்த சாமான்களை பிரிடனுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதைப் பற்றி ரூஸ்வெல்ட் குறிப்பிடுகையில், "இங்கு செய்யப்படும் சாமான்களை பிரிடனுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தும் செய்வோம். நம்மால் செய்ய முடியும். செய்தாக வேண்டும், செய்தே தீருவோம்" என்று வீர கர்ஜனை செய்தார்.

### ரஷீத் ஆலியின் ஓட்டம்.

### பெர்லினிலிருந்து மே மாதம் 29-ம் தேதி இந்துஸ்தானி பாஷையில் ஒலிபரப்பு.

ஹிட்லரின் கையாளான சதிகார ரஷீத் ஆலி பிரிடனை எதிர்த்து இராக் (Iraq) தேசம் முழுவதும் போர்தொடுக்க தயாராயிருக்கிறதென்று சொன்னாரும். மே மாதம் 31-ம் தேதி லண்டனி (London)ல் கிடைத்த செய்திகளின்படி ரஷீத் ஆலி ஊரைவிட்டு ஓடினது எல்லாவற்றையும் வெட்ட வெளிச்சமாக்கிவிட்டது. 14 சிறிய தேசங்களை சித்ரவதை செய்து ரத்தந்தோய்ந்த கையுடனிருக்கும்

ஜெர்மனியை சிநேகமாகக்கொண்ட தேசத்துரோகி ரஷீத் ஆலியை இராக் தேச மக்கள் ஊரை விட்டு அடித்து விரட்டினார்கள். தங்களுடைய சிநேக நாடான பிரிடனின் சைனியத்தை வரவேற்றார்கள். அது மாத்திரமல்லாமல் இராக் (Iraq)கின் நியாயமான ரிஜெண்டான அப்துல் இல்லா,(Abdul Illah)வை குதூஹலத்துடன் இராக் (Iraq)குக்குள் வரவேற்றார்கள். வட இராக் (Iraq)கில் இருக்கும் குர்டிஷ் (Kurdish) ஜாதியாரின் தலைவரான தாட் பாஷா ஹைதரி (Daud Pasha Haidari) பின்வருமாறு சொன்னார். "அராபியர்கள் எப்பொழுதும் பிரிடனுடைய தோழர்களாகவே இருப்பார்கள் என்ற ஒரு கண்டிஷன் (condition)பேரிலேயே குர்ட்ஸ் (Kurds) ஜாதியார் அராபியர்களோடு சேர்ந்து இராக் (Iraq)கில் ஒத்துழைக்க ஒத்துக்கொண்டார்கள். இந்தமாதிரி தேசத்துக்கு துரோகம் செய்து காட்டிக்கொடுத்தவர்களை நாம் எல்லோரும் ஒரே முகமாக நின்று எதிர்ப்போம்."

## *விஷி (Vichy) அரசாங்கம் ஸிரியன் (Syrian) முஸ்லீம்களுக்கு துரோகம் செய்துவிட்டது.*

மே மாதம் 28-ம்தேதி நாஸிகளின் இந்துஸ்தானி ஒலிபரப்பில் பிரிடிஷார்கள் ஸிரியாவையும் யுத்த கோரங்களுக்கு இழுத்துவிட்டார்களென்றும், ஸிரியாவின் முஸ்லீம்கள் பிரிடனுக்கு விரோதமாக போர் தொடுக்க தயாராயிருக்கிறார்களென்றும் அறிவித்தார்கள். உண்மையில், "ஆல் மொகட்டம் (Al Mokattam)" என்னும் எகிப்திய பத்திரிகை கூறுகிற மாதிரி ஜெர்மனியை ஸிரியா (Syria)வின் விமான நிலயங்களை உபயோகப்படுத்தும்படி அனுமதித்ததினால் பிரான்ஸ் (France) ஸிரியாவின் ஜனங்களை யுத்தத்தினுடைய கோரங்களுக்கு ஆளாக்கி இருக்கிறது. அப்பத்திரிகை மேலும் சொல்வதாவது "ரஷீத் ஆலியின் செய்கையையே கண்டித்த சகல முஸ்லீம், அராபிய தேசங்களெல்லாம், இம்மாதிரி ஸிரியாவின் ஜனங்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்த விஷி (Vichy) அரசாங்கத்தைக் கண்டிக்காமலிருக்குமா. ரஷீத் ஆலிக்கு ஜெர்மனியிடமிருந்து ஒத்தாசை போகா வண்ணமும், தன் சுயநலத்தைப் பாதுகாத்துக்கொள்வதின் பொருட்டும் பிரிடன் எந்த காரியங்களைச் செய்தபோதிலும் அவை மிகையாகாது."

## *ஸோல்ஜர்கள் கொல்லப்பட்டனராம்!*

மே மாதம் 25-ம் தேதி பெர்லினிலிருந்து "லாகூரி (Lahore)ல் ஒரு பட்டாளத்தில் இருக்கும் துருப்புகள் பூராவும் கொல்லப்பட்டனர்" என்று ஒரு கட்டுக்கதை வெளியாயிற்று. இம்மாதிரி 15நாட்களுக்கு முந்திதான் ஒரு தரம் ஒலிபரப்பினார்கள். லாகூர் (Lahore)வாஸிகளிடையே பயங்கரத்தை உண்டுபண்ண எண்ணி இம்மாதிரி அடிக்கடி சொல்லுகிறார்கள் போலும்.

லாகூரி (Lahore)ல் வஸிக்கும் ஜனங்களுக்கு இது எவ்வளவுதூரம் உண்மையென்றும், நாஸிகள் உண்மையை கலப்பில்லாத பொய்களை எப்படி பிரசாரம் செய்கிறார்களென்றும் இதிலிருந்து தெரிந்திருக்கும்.



# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் XLVIII.

| | | | | |
|---|---|---|---|---|
| 1941— | | | | மணி. |
| ஜுன் ...14, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... ,, | 6.30 |
| 15, | ஞாயிற்றுக்கிழமை. | பூவரசகுடி | ... ,, | 6.00 |
| | | வேங்கடக்குளம் | ... ,, | 6.30 |
| 16, | திங்கட்கிழமை ... | ஒடையாளிப்பட்டி | ... ,, | 6.00 |
| | | கிள்ளுகோட்டை | ... ,, | 6.30 |
| 17, | செவ்வாய்க்கிழமை. | பெருங்களூர் | ... ,, | 6.00 |
| | | ஆதனக்கோட்டை | ... ,, | 6.30 |
| 18, | புதன்கிழமை ... | அரிமளம் | ... ,, | 6.00 |
| | | கீழாநிலைக்கோட்டை | ... ,, | 6.30 |
| 19, | வியாழக்கிழமை ... | கீரனூர் | ... ,, | 6.00 |
| | | நாஞ்சூர் | ... ,, | 6.30 |
| 20, | வெள்ளிக்கிழமை... | நல்லூர் | ... ,, | 6.00 |
| | | மண்டையூர் | ... ,, | 6.30 |

### பிரஸங்கம் XLIX.

| | | | | |
|---|---|---|---|---|
| 21, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... மாலை | 6.30 |
| 22, | ஞாயிற்றுக்கிழமை. | வயலோகம் | ... ,, | 6.00 |
| | | குடுமியாமலை | ... ,, | 6.30 |
| 23, | திங்கட்கிழமை ... | நச்சாந்துபட்டி | ... ,, | 6.00 |
| | | விராலிமலை | ... ,, | 6.30 |
| 24, | செவ்வாய்க்கிழமை. | திருமயம் | ... ,, | 6.00 |
| | | கோனாபட்டு | ... ,, | 6.30 |
| 25, | புதன்கிழமை ... | பனையப்பட்டி | ... ,, | 6.00 |
| | | ராங்கியம் | ... ,, | 6.30 |
| 26, | வியாழக்கிழமை. | ராஜகிரி | ... ,, | 6.00 |
| | | விராலிமலை | ... ,, | 6.30 |
| 27, | வெள்ளிக்கிழமை... | (பொன்னமராவதி) புதுப்பட்டி | ,, | 6.00 |
| | | வேந்தம்பட்டி | ... ,, | 6.30 |

புதுக்கோட்டை ஸமஸ்தானம்

யுத்த நிதிக்காக போடப்படும்

# அதிர்ஷ்டச் சீட்டு.

(ஸ்ரீ-தர்பாரவர்கள் உத்தரவின்பேரிலும் ஆதரவின் பேரிலும் புதுக்கோட்டை யுத்தநிதி எண்டெர் டெயின்மெண்ட் கமிட்டியாரால் நடத்தப்படுகிறது.)

## இந்த யுத்த நிதியை ஆதரியுங்கள்

டிக்கெட்டுகளை வாங்குங்கள்

**முடிவு தேதி 15—6—41**

**சீட்டு குலுக்கும் தேதி 23—6—41**

நமது மன்னர் அவர்களின் வருஷவர்த்தனை தினத்தன்று அதிர்ஷ்டசாலிகளுக்கு ஏராளமான பரிசுகள்.

**300 பரிசுகள்.**

| | | | |
|---|---|---|---|
| 1-வது பரிசு | ரூபாய் | 7,500 | |
| 2-வது பரிசு | ,, | 5,000 | |
| 3-வது பரிசு | ,, | 2,500 | |
| 2 பரிசுகள் | ,, | 1,000 | விதம் |
| 5 ,, | ,, | 500 | ,, |
| 90 ,, | ,, | 100 | ,, |
| 100 ,, | ,, | 50 | ,, |
| 100 ,, | ,, | 15 | ,, |

V2:1944:19(3m),N39 JL
N41
69400

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—14-6-41.